Vol. 2

Gita vyakhyanam (9-12)

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

கீதா வ்யாக்யானம்

(9 முதல் 12 அத்தியாயங்கள்)

[ப4க4வத்3 கீ3தையும், அதற்கு ஸ்ரீராமாநுஜ பா4ஷ்யமும், ஆளவந்தார் அருளிய் கீ3தார்த்த2 ஸங்க்3ரஹமும், வாதி3கேஸரி ஜீயர் அருளிய பகவத்கீதை வெண்பாவும், ஸ்ரீவேத3ாந்ததே3சிகர் அருளிய கீதார்த்தசங்கிரகமும், 'ஸுத3ர்ஶனம்' ஆசிரியர் இயற்றிய கீ3தார்த்த2விவரணம் என்னும் தமிழ் வியாக்கியானமும், கீ3தாஶ்லோகார்த்த2ச் சுருக்கமும் அடங்கியது.]

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ உ. வே.

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (ஸுதர்சனர்),

'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.

ஸ்ரீ. ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப
தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்பெற்றது.

விலை ரூ. 20-00] 1985. [தபாற்கூலி 3-00

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

உரையாசிரியரின் முன்னுரை

[9-12 அத்தியாயங்கள்]

கண்ணன் அருளிய கீ3தையும், அதன் செம்மைப்பொருள் தெரியப்பாரினில் சொன்ன இராமாநுசர் அருளிய பா4ஷ்யமும், இவற்றை அனுஸரித்து ஸ்ரீவாதிகேஸரி ஜீயர் தமிழில் ஒவ்வொரு கீ3தா ஶ்லோகத்தையும் வெண்பாவாகப்பாடிய பகவத் கீதை வெண்பாவும், கீ3தாபா4ஷ்யத்துக்கு வழிவகுத்துக் கொடுத்த ஆளவந்தாரின் கீ3தார்த்த2ஸங்க்3ரஹமும், அதைத் தமிழ்ப் பாட்டாக்கிய ஸ்ரீவேத3ாந்த தே3ஶிகரின் கீதார்த்தசங்கிரகமும் பத்3யங்களுக்குப் பதவுரைகளோடு, இவை அனைத்தின் ஆழ்பொருள்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் கீ3தா வியாக்கியானமொன்றும் 'ஸ்ரீவைஷ்ணவ ஸுத3ர்ஶனம்' மாதப்பத்திரிகையில் சார்வரி வருஷம் மார்கழி மாதத்திலிருந்து தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது. அந்நூலில் முதல் ஆறு அத்தியாயங்கள் அடங்கிய ப்ரத2மஷட்கம் சுமார் ஆயிரம் பக்கம் கொண்டதாக பிரமாதீச வருஷம் சித்திரை ரேவதியில் (1—5—73) தனிப்புத்தகமாக வெளியிடப் பெற்றது. கீ3தை ஏழு, எட்டு அத்தியாயங்களுக்கு இவையனைத்தையும் கொண்ட நூலின் இரண்டாம் பாகம் (23—3—79) அன்று தனிப் புத்தகமாக வெளியிடப் பெற்றது. கீ3தை ஒன்பது முதல் பன்னிரண்டு முடிய உள்ள நாலு அத்தியாயங்களுக்கு இவையனைத்தையும் கொண்ட கீ3தாமத்4யமஷட்கத்தின் எஞ்சிய பகுதி குரோதன வருஷம் ஐப்பசித் திருமூலம் (15—11—85) அன்று தனிப்புத்தகமாக வெளியிடப்படுகிறது.

முதல் ஷட்கத்திற்போலவே ஒவ்வோரத்தியாயத்தின் முக்கிய விஷயங்கள் கீ3தாஶ்லோகார்த்த2ச் சுருக்கம்

என்ற தலைப்பில் அந்தந்த அத்தியாயத்தின் கடைசியில் மத்₄யம ஷட்கத்தின் இரண்டு பாகங்களிலும் கொடுக்கப் பட்டுள்ளன. இந்த மூன்றாவது பாகத்தில் நமது கீ₃தார்த்த, விவரணம், பெரும்பாலும் தாத்பர்ய சந்த்₃ரிகையில் காட்டப் பட்ட அர்த்த₂ங்களை உள்ளடக்கியதாகவே அமைந்துள்ளது. முதல் ஷட்கத்திற் போலே இவ்விரண்டாவது ஷட்கத்திலும் ஸ்ரீப₄க₃வத்₃கீ₃தையின் பாத₃ாநுக்ரமணிகை மூன்றாவது ப₄ாக₃த்தின் இறுதியில் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வண்ணமே மூன்றாவது ஷட்கமும் வெளிவரும் படியாக கீ₃தாசார்யனும் எம்பெருமானாரும் அருள் புரிவார்களாக.

குரோதன
ஐப்பசி-திருமூலம்.
(15—11—85)

இங்ஙனம்,
ஸ்ரீவைஷ்ணவதாஸாநுதாஸன்,
ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
(ஸுதர்சனர்)
ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் ஆசிரியர்.

இராமாநுசநூற்றந்தாதி—68

ஆரெனக்கின்று நிகர்சொல்லில்
மாயனன் றைவர்தெய்வத்
தேரினிற்செப்பிய கீதையின் செம்மைப்
பொருள்தெரியப்
பாரினிற் சொன்ன விராமாநுசனைப்
பணியும் நல்லோர்
சீரினிற் சென்று பணிந்தது
என்னுவியும் சிந்தையுமே.

பிழைதிருத்தம்

—: :—

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
423	5	तष्वव	तेष्वव
428	11	பூத$_{4}$ாநி	பூ$_{4}$தாநி
445	2	परिववेते	परिवर्तते
454	27	சைதந்யத்தைச்	சைதந்யத்தைக்
486	12	தே$_{3}$வர்	தம்போகத்தை — தே$_{3}$வர்
486	13	தம்போகத்தை— லோகத்தில்	லோகத்தில்
512	22	க$_{3}$ணங்கன்	க$_{3}$ணங்கள்
524	19	ஆஶ்ரயிக்குஞ	ஆஶ்ரயிக்கும்
568	21	க$_{2}$ணு:	க$_{3}$ணு:
580	15	அத்தியில்பில்	அத்தியல்பில்
587	14	மக்லேம்	க்லேஶம்
657	6	ஶங்கர	ஶங்கர:
701	13	யதையும்	வதையும்
701	14	வாலே	யாலே
845	27	இத$_{4}$ம்	இத$_{3}$ம்
850	2	दष्ट्रा	दृष्ट्वा
865	5	ादश	द्वादश
877	34	எடுந்து	எடுத்து
919	7	து$_{3}$ல்ய	துல்ய
920	1	शत्रु मित्रदिषु	शत्रुमित्रादिषु

—❋—



ஸுதர்சனம் காரியாலயத்தில் கிடைக்கும் புத்தகங்கள் :-

ஆழ்வார் அருளிச்செயல்களுக்குப் பூர்வாசார்யர்களின் வ்யாக்யானங்கள்

(பதவுரை அரும்பதவுரை ப்ரமாணத்திரட்டுகளோடு கூடியவை)

க்₃ரந்த₂ங்கள்	விலை	தபால்
1. முதல் திருவந்தாதி வ்யாக்யானம்	2-50	-50
2. திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம்	1-50	-40
3. பகவத்விஷயம் *I* (முதலிரண்டு திருவாய்மொழிகள்)	37-00	5-00
ஷை *II* பாகம் (முதற்பத்து 3-10 ,,)	42-00	6-00
ஷை *III* பாகம் (இரண்டாம்பத்து முழுவதும்)	52-00	7-00

II **ஆழ்வார்களின் அருளிச்செயல்களுக்கு எளியநடை விவரணத்துடன் கூடிய பூர்வாசார்யர்களின் வ்யாக்₂யானங்கள்**

1. சிறியதிருமடல் வ்யாக்யானம்	4-50	-75
2. பெரியதிருமடல் வ்யாக்யானம்	7-50	1-50
3. இரண்டாந்திருவந்தாதி வ்யாக்யானம்	6-00	1-00
4. மூன்றுந்திருவந்தாதி வ்யாக்யானம்	6-00	1-00
5. நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம்	7-50	1-00
6. திருவெழுகூற்றிருக்கை வ்யாக்யானம்	1-50	-40
7. திருமாலை வ்யாக்யானம்	16-00	2-00

III **அருளிச்செயல்களுக்கு எளியநடை விவரணம் மாத்திரம்**


1. திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	3-00	-60
2. சங்கத் தமிழ்மாலை முப்பது—திருப்பாவை விளக்கவுரை	1-50	-40

IV **நமது மற்ற வெளியீடுகள்**

1. ஸ்தோத்ரரத்நசதுஃஶ்லோகீஜிதந்தேவ்யாக்யானங்கள்	12-00	1-00
2. சதுஃஶ்லோகீ வ்யாக்யானம் [நாயனாராச்சான்பிள்ளை]	3-75	-75
3. கத்ய வ்யாக்யானங்கள்	6-75	1-25
4. ஸ்ரீராமாயண தனிச்லோகம் [விவரணத்துடன்] *I Part*	5-25	1-00
ஷை இரண்டாம் பாகம் [விவரணத்துடன்]	10-50	2-00
5. பாசுரப்படி ராமாயணம்	0-25	—
6. முமுக்ஷுப்படி வ்யாக்யானம்	4-50	-75
7. ஆறுயிரப்படி கு₃ருபரம்பராப்ரப₄ாவம் முதலியவை	18-00	2-50
8. ஸ்ரீவசநபூ₄ஷண வ்யாக்யானம்		
4-அரும்பதவுரைகளுடன் முதல்பாகம்	9-00	1-50
9. சாரீரககாரிகாவளீ [இரண்டாம் பாகம்]	7-50	1-50
10. ஆறுவார்த்தை	0-50	
11. உப₄யவேதா₃ந்த ஐககண்ட்₂யம்	3-00	-60
12. வடுகநம்பி அருளிய யதிராஜவைப₄வம் [விவரணத்துடன்]	1-50	-40
13. திருக்குறள் ஸம்ஸ்க்ருதஶ்லோக மொழிபெயர்ப்புடன்	10-00	2-00
14. [போதாயந] ஸந்த்யாவந்தநம் பதவுரையுடன்	1-00	-30
15. [போதாயந] உபாகர்மவிதி	0-75	-30
16. அருளிச்செயல் ரஹஸ்யம் [வரதாசார்யஸ்வாமி		
தொகுத்த பூ₄ஷணத்துடன்]	3-75	-75
17. புருஷஸூக்த வ்யாக்யானம்	2-25	-40
18. நாராயணஸூக்த வ்யாக்யானம்	1-50	-40
19. ஸ்ரீஸூக்த வ்யாக்யானம்	3-00	-75
20. பூ₄நீளா விஷ்ணுஸூக்த வ்யாக்யானங்கள்	2-50	-50

21.	தே₃ஹளீம ஸுப்ரபா₄தம்	0.50	.25
22.	சாதிமத ஆராய்ச்சி [முதல்பாகம்]	6.00	1.00
23.	ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹஸ்தவம்	0.75	.25
24.	விஷ்ணுசித்தவிஜயம் [முதல் பாகம்]	7.50	1.25
	ஷை [இரண்டாம் பாகம்]	10.00	1.50
	ஷை [மூன்ரும் பாகம்]	16.00	2.00
25.	ஸாத்விகவிஜய ஸர்வஸ்வம்	1.25	.40
26.	ஸந்த்₄யாவந்த₃நபா₄ஷ்யம்	4.50	.75
27.	மகரநெடுங்குழைக்காதர் பாமாலையந்தாதி	2.25	.50
28.	ஸ்ரீகேசவமணிமாலை	1.25	.40
29.	அறுபதுக்கு அறுபது (ஸுதர்சனர் வைபவம்)	1.25	.40
30.	ஸித்₃தோ₄பாயவிஜயம் & [ஸ்ரீரங்கராஜவிஜயம்]	4.50	.75
31.	திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி மூலம்மட்டும்	0.75	.25
32.	திருவாய்மொழி நூற்றந்தாதி—மூலம்மட்டும்	0.50	.25
33.	கீ₃தா வ்யாக்₂யானம் முதல்பாகம் (ஆறு அத்தியாயம்)	15.00	5.00
	ஷை இரண்டாவது பாகம் (7,8 அத்தியாயம்)	12.00	2.00
	ஷை மூன்ருவது பாகம் (9 முதல் 12 அத்தியாயங்கள்)	20.00	3.00
34.	அக்₃நிஹோத்ரியும் வைணவமும்	3.75	.75
35.	சோலைமலைக்குறவஞ்சி	5.25	1.00
36.	ஸ்ரீவைஷ்ணவ மகாநாடுமலர்	1.50	.40
37.	ஸுதர்சனர்பதில் (ஏழு சதகங்கள்)	25.50	3.00
38.	What is Visishtadvaita System of Philosophy? (English)	1.50	.45
39.	பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்திரம்	4.50	.75
40.	இராமலிங்க ப்ரதிஷ்டை		0.75
41.	ஆண்டாள் சந்திரகலாமாலை	3.00	.60
42.	யதீந்த்ரமததீபிகை—ஸந்மதகாரிகாவளீ விவரணம்	10.00	1.50
43.	சங்ககாலத் தமிழர் சமயம்	1.50	.40
44.	ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம்	1.50	.40
45.	சரமகுருநிர்ணயம் [ப்ரமாணத்திரட்டுடன் கூடியது]	1.50	.40
46.	மோக்ஷோபாய ப்ரதீ₃பிகை— வைகாநஸ ஸித்₃த₄ாந்த ஸாரம்	10.00	1.50
47.	நித்யாநுசந்தானம்—சாதா ரூ. 6.00 பைண்டு 7.00		.75
48.	வார்த்தாமாலை (விவரணத்துடன்)	20.00	2.50
49.	ப்ரபந்நாம்ருத தர்ப்பணம்	25.00	3.00
50.	கோதையும் சங்கத்தமிழும்	0.75	.25
51.	பரப்பிரம விவேகம்	5.00	.75
52.	ஸ்ரீவைகுண்டஸ்தவவுரை [ஸ்ரீ P.B.A. ஸ்வாமி இயற்றியது]	8.00	1.50
53.	சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம்	8.00	1.00
54.	ஸ்ரீவைஷ்ணவமத விஜயம்	1.50	.30
55.	புருஷகாரம்—சிறையிருந்தவள் ஏற்றம்	1.50	.30
56.	மணிவிழா மலர் (மலிவுப் பதிப்பு)	10.00	2.00
57.	கத்யத்ரயம் (மூலம் மட்டும்—தமிழ்)	1.00	.25
58.	கத்யத்ரயம் (மூலம் மட்டும்—தமிழ், ஸம்ஸ்கிருதம்)	2.00	.40

கிடைக்குமிடம்: — ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், அட்வகேட்,
'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.



எம்பெருமானார் — ஸ்ரீபெரும்பூதூர்

(தாமுகந்த திருமேனி)

ஸ்ரீ:

ஆளவந்தார் அருளிய
கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹம்

[ஒன்பதாவது அத்தியாயத்தின் சுருக்கம்]

स्वमाहात्म्यं मनुष्यत्वे परत्वं च महात्मनाम् ।
विशेषो नवमे योगो भक्तिरूपः प्रकीर्तितः ॥ १३ ॥

13. ஸ்வமாஹாத்ம்யம் மநுஷ்யத்வே பரத்வம் ச
மஹாத்மநாம் ।
விஶேஷோ நவமே யோகோ₃ ப₄க்திரூப: ப்ரகீர்த்தித:॥

ஸ்வமாஹாத்ம்யம் — தன்னுடைய பெருமை, **மநுஷ்யத்வே பரத்வம்** — மனிதனாயிருக்கும்போதே மேன்மையை உடைத்தாயிருக்கை, **மஹாத்மநாம் விஶேஷ:** — ஜ்ஞானிகளுக்குள்ள சிறப்பு, (ஆகியவற்றோடு கூடிய) **ப₄க்திரூப: யோக₃: ச**—ப₄க்தியோக₃ம் எனப்படும் உபாஸனம், **நவமே**— ஒன்பதாவது அத்தியாயத்தில், **ப்ரகீர்த்தித:** — நன்றாகச் சொல்லப்பட்டது.

ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி தாஸன் இயற்றிய
கீ₃தார்த்த₂ விவரணம்—ஒன்பதாம் அத்தியாயம்

முன் இரு அத்தியாயங்களோடு ஸங்க₃தியும், இவ்வத்தியாயார்த்த₂ச் சுருக்கமும்.

முன் இரு அத்தியாயங்களிலும் "தன்னைப் பற்றிய உண்மையறிவே சேதனனைத் தன்னுடைய நிர்ஹேதுக க்ருபைக்கு விஷயமாக்கி, பரம மோக்ஷத்தை எளிதில் பெற்றுக் கொடுத்துவிடும்" என்னும் பரம ரஹஸ்யார்த்த₂த்தைக் கண்ணன் வெளியிட்டருளினன். அந்த உண்மையறிவு நிறைவடையப் பெறாதவர்களுக்கு, அதை நிறைவடையச் செய்வதற்காக, அவரவர் பெறவிரும்பும் ஐஸ்வர்யம், கைவல்யம், ப₄க₃வத் ப்ராப்தி ஆகிய ஸ்வார்த்த₂ ப₂லன்களுக்கு ப₄க்தியை ஸாத₄னமாக விதி₄த்து, அவரவர் அறியவேண்டியவற்றிலும், கைக்கொள்ளவேண்டியவற்றிலும் உள்ள வேறுபாடுகளை எட்டாம் அத்தியாயத்தில் காட்டினன். இரு அத்தியாயங்களின் ஸாரார்த்த₂மான 'எம்பெருமானே ப்ராப்யம், ப்ராபகம், தா₄ரக போஷக போ₄க்₃யங்கள் முதலான எல்லாமாயிருப்பவன்' எனும்

வாதிகேஸரி ஜீயர் அருளிய

பகவத்கீதை வெண்பா—அத்தியாயம் 9

ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்

உன்னப் படும்பர ஞெண்சீர் மருவுயர்த்தி
மன்னப் பயில்ஞானி வாசிதான்—றன்னமர்ந்து
நின்றியலும் பத்தி நிகழ்ந்துரைத்த நற்கீதை
யொன்றியசீ ரொன்பதா மோத்து.

உன்னப்படும்—உபாஸிக்கப்படும், *பரன்*—பரமாத்மாவினுடைய, *ஒண்சீர் மருவு*—ஸௌலப்₄ய ஸௌஶீல்யங்களோடு கூடிய, *உயர்த்தி*—மேன்மையை; *மன்னப் பயில்ஞானி வாசி தான்*—எப்போதும் சிந்திக்கும் ஜ்ஞானியின் சிறப்போடு, *தன் அமர்ந்து நின்று இயலும் பத்தி*—தன்னிடத்தில் பொருந்தி நிலையாக உபாஸிப்பதாகிற ப₄க்தியோக₃த்தை, *நல் கீதை சீர் ஒன்றிய ஒன்பதாம் ஒத்து*—நல்ல கீ₃தையின் சிறப்புப் பொருந்திய ஒன்பதாம் அத்தியாயம், *நிகழ்ந்து உரைத்த*—நன்கு உரைத்தது.

உண்மையறிவை அர்ஜுனன் பரிபூர்ணமாகப் பெற்றிருந்தால், "ஸ்தி₂தோऽஸ்மி க₃தஸந்தே₃ஹ: கரிஷ்யே வசநம் தவ" [கீ₃தை 18-73] [நான் ஐயம் நீங்கப்பெற்றவனாயிருக்கிறேன். நீ சொன்னபடி போர் புரிகிறேன்.] என்னும் வார்த்தையை அப்போதே சொல்லி யிருப்பான். அது சொல்லாமையாலே, இவனுக்குத் தன்னைப் பற்றிய உண்மையறிவு நிறைவடையவில்லை என்பதை உணர்ந்து, அதை நிறைவடையச் செய்வதற்காகத் தன்னைப் பற்றிய ப₄க்தி ரூபமான உபாஸனத்தின் ஸ்வரூபத்தை இவ்வத்தியாயத்தில் ப்ரதா₄னமாகக் கூறுகிறான். அதற்கு உறுப்பாக—உபாஸிக்கப்படும் பரமபுருஷனாகிற தனது பெருமையையும், மஹாத்மாவான ஜ்ஞானிகளுடைய சிறப்பையும் இவ்வத்தியாயத்தில் விவரிக்கிறான். ஆக, ஆளவந்தார் அருளிய கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் இவ்வத்தியாயத்தின் ப்ரமேயமாக (1) ஸர்வேஶ்வரனின் பெருமை, (2) மனிதனாயிருக்கும்போதே மேன்மை, (3) மஹாத்மாக்களின் சிறப்பு, (4) ப₄க்தியோக₃த்தின் ஸ்வரூபம் ஆகிய நாலு விஷயங்கள் சொல்லப்பட்டபோதிலும், ப₄க்தியோக₃ ஸ்வரூபமே இவ்வத்தியாயத்தின் ப்ரதா₄ன ப்ரமேயம் என்றும், மற்ற மூன்றும் அதற்கு உறுப்பாகச் சொல்லப்பட்டன என்றும் அறியத்தக்கது.

श्रीः

अथ नवमोऽध्यायः ॥

॥ भा ॥ उपासकभेदनिबन्धना विशेषाः प्रतिपादिताः। इदानीमुपास्यस्य परमपुरुषस्य माहात्म्यं, ज्ञानिनां विशेषं च विशोध्य भक्तिरूपस्योपासनस्य स्वरूपमुच्यते।

श्रीभगवानुवाच—

इदं तु ते गुह्यतमं प्रवक्ष्याम्यनसूयवे।
ज्ञानं विज्ञानसहितं यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥ १ ॥

ஸ்ரீ ப₄க₃வாநுவாச—

1. இத₃ம் து தே கு₃ஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே ।
ஜ்ஞாநம் விஜ்ஞாநஸஹிதம் யஜ்ஜ்ஞாத்வா
மோக்ஷ்யஸேऽஶுப₄ாத் ॥

யத் ஜ்ஞாத்வா—எதை அறிந்து, அஶுப₄ாத் மோக்ஷ்யஸே—(என்னை அடைவதற்குத் தடையான) புண்யபாபங்களினத்திலிருந்தும் விடுபடுவாயோ, இத₃ம் கு₃ஹ்யதமம் ஜ்ஞாநம்—இந்த அதிரஹஸ்யமான உபாஸன ரூபமான அறிவை, விஜ்ஞாந ஸஹிதம்—அவ்வுபாஸனத்தின் வகைகளைப்பற்றிய அறிவோடு கூட, அநஸூயவே தே—என் விஷயத்தில் பொறுமையற்ற உனக்கு, ப்ரவக்ஷ்யாமி—நன்கு கூறுகிறேன்.

---

1. இந்த மறைபொருளை யென்பாற் பொறுமையிலாச்
சிந்தை திகழுனக்குச் செப்புகே—னெந்த
வறிவை யறிவகைசேர்ந் தவ்வறிவு தப்பாச்
செறிவில் வினைவிடுதி தீர்ந்து.

எந்த அறிவை—எந்த உபாஸனரூபமான அறிவை, அறிவகை சேர்ந்து—அவ்வுபாஸனத்தின் வகைகளைப்பற்றிய அறிவோடு கூட அறிந்து, அவ்வறிவு தப்பாச் செறிவில்—

॥भा॥ इदं तु ते गुह्यतमं, भक्तिरूपमुपासनाख्यं ज्ञानं

அவ்வறிவு நழுவாதபடி அனுஷ்டாநமீருக நிறைவடைந்த தாகில், வினை தீர்ந்து விடுதி — (என்னை அடைவதற்குத் தடையான) புண்யபாபங்களினைத்திலிருந்தும் விடுபடு வாயோ, இந்த மறைபொருளை—இந்த அதிரஹஸ்யமான அர்த்தூத்தை, என்பால் பொருமையிலா சிந்தை திகழ் உனக்கு—என்னிடம் பொருமையில்லாத மனத்தோடுகூடிய உனக்கு, செப்புகேன்—சொல்லுவேன்.

---

1. சென்ற இரு அத்தியாயங்களில், தானே ப்ராப்யமும், ப்ராபகமுமாயிருப்பவன் என்னும் மூலையிலே கிடந்த வேதாந்தார்த்தத்தை முற்றத்திலே இட்டபின்பும், அர்ஜுனன் 'நீ சொன்னபடி செய்கிறேன்' என்று கூருமையாலே, இவனுக்கு அத்யந்த பாரதந்த்ர்ய ஜ்ஞானம் ஏற்படவில்லை என்று உணர்ந்து. அதை ஏற்படுத்துவதற்காக வேதாந்த ரஹஸ்யமாய், மோக்ஷஸாதநமான பக்தியோகத்தை அர்ஜுனன் கேளாமல் இருக்கச்செய்தேயும், தன்னுடைய பரமகருணையாலே மேல்விழுந்து உபதேசிக்கத் தொடங்குகிருன் கண்ணன். (இதம் குஹ்யதமம் ஜ்ஞாநம்) வேதாந்தங்களில் அதிரஹஸ்யமாகப் போற்றப்படுவதாய், வேதநம், ஜ்ஞாநம், த்யாநம், உபாஸநம் என்று ஓதப்படும் பக்திரூபமான ஜ்ஞாநத்தை. இங்கு தொடக்கத்தில் 'குஹ்யதமம் ஜ்ஞாநம்' என்று எடுக்கப் பட்டதையே இவ்வத்தியாயத்தின் இறுதியில் 'மந்மநா பவ மத்பக்த:' [9.34] என்று எடுக்கையாலும், இடையிலேயும் ''பஜந்த்யநந்ய மநஸ:'' [9-13] ''நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே'' [9-14] ''யஜந்தோ மாம் உபாஸதே'' [9-15] 'யே ஜநா: பர்யுபாஸதே'' [9-22] ''யோ மே பக்த்யா ப்ரயச்சதி'' [9-26] ''யே பஜந்தி து மாம் பக்த்யா''[9-29] 'பஜதே மாம் அநந்யபாக்'' [9-30] ''ந மே பக்த: ப்ரணஶ்யதி'' [9-31] என்று பக்திரூபமான உபாஸநத்தையே பலகால் சொல்லுகையாலும், ப்ரத்யக்ஷமாயிருப்பது, மிகவும் இனியதாயிருப்பது, கீர்த்தனம், உபாயாநுஷ்டாந ப்ரயத்னம், நமஸ்காரம் முதலானதாகப் பரிணமிப்பது முதலான அபூர்வமான பக்தியின் தன்மைகளைக் கூறுகையாலும், தானே மிகச்சிறந்த பலமாயிருந்துகொண்டு, பரமமோக்ஷமாகிற தலைசிறந்த பலனை ஸாதித்துக்கொடுப்பதாகவும் இருக்கிறது என்று இதற்கு

विज्ञानसहितम्—उपासनगतविशेषज्ञानसहितम्, अनसूयवे ते प्रवक्ष्यामि ;

ஒப்பற்ற பலனைக் கூறுகையாலும், "ராஜவித்யா ராஜகுஹ்யம்" [9-2] முதலான இடங்களில் இதைப் புகழுகையாலும், இவ்வர்த்தங்களை நிலைநிறுத்துவதற்குப் பலவகையான உபபத்திகளை (யுக்திகளை)க் காட்டுகையாலும், "உபக்ரமோபஸம்ஹாரௌ அப்யாஸ: அபூர்வதா பலம் । அர்த்தவாதோபபத்தீ ச லிங்கம் தாத்பர்ய நிர்ணயே ॥" [(1) உபக்ரமோபஸம்ஹாரங்கள் (முதலும் முடிவும்) (2) அப்யாஸம் (அடிக்கடி படித்தல்) (3) அபூர்வதை (அபூர்வமானதைச் சொல்லுதல்) (4) பலம் (பலத்தைச் சொல்லுதல்) (5) அர்த்தவாதம் (சொல்ல வந்த விஷயத்தைப் புகழுதல்) (6) உபபத்தி (சொல்லவந்ததை நிலைநிறுத்த யுக்திகளைக் காட்டுதல்) என்னும் ஆறும் ஒரு ப்ரகரணத்தின் தாத்பர்யத்தை நிஷ்கர்ஷிக்கும் அடையாளங்களாகும்.] எனும் ஆறுவிதமான தாத்பர்ய லிங்கங்களாலே இவ்வத்தியாயத்தின் ப்ரதானமான ப்ரமேயம் பக்தியே என்றும், மற்ற விஷயங்கள் அதற்கு உறுப்பாகச் சொல்லப்படுகின்றன என்றும் விளங்குகிறது. 'இதம்' (இது) என்று இவ்வத்தியாயத்தில் தான் சொல்லவேண்டும் என்று நினைவிற்கொண்டவற்றை நிர்த்தேசிக்கிறான். 'ஏஷ து வா அதிவததி ய: ஸத்யேந அதிவததி' [சாந் 7-16-1] [ஸத்யம் எனப்படும் பரம்பொருளின் மேன்மையைக் கூறுபவனே உண்மையில் அதிவாதம் செய்பவனவான்] என்று ப்ராணன் எனப்படும் ஜீவனை ப்ராப்யமாக உபாஸிக்கும் கைவல்ய நிஷ்டனைக் காட்டிலும், பரமாத்மாவை ப்ராப்யமாக உபாஸிக்கும் ஜ்ஞாநிக்கு 'து' ஶப்தத்தாலே சிறப்பைக் கூறியதுபோலே, இங்கு 'து' என்று முதல் ஷட்கத்தில் சொல்லப்பட்ட கர்மயோக ஜ்ஞாநயோகங்களைக் காட்டிலும் இந்த பக்திக்குள்ள சிறப்பு உணர்த்தப்படுகிறது. அதுவே 'குஹ்யதமம்' [மிக மிக ரஹஸ்யமானது] என்னும் பதத்தால் விவரிக்கப்படுகிறது. கர்ம யோகமானது குஹ்யம் (ரஹஸ்யமானது); ஜ்ஞாந யோகம் குஹ்யதரம் (மிக ரஹஸ்யமானது); பக்தியோகம் குஹ்யதமம (மிக மிக ரஹஸ்யமானது) என்று கண்டுகொள்வது. இப்படி இதை குஹ்யதமமாகக் கூறுவது, இதைக்கேட்பதிலே அர்ஜுனனுக்கு விருப்பத்தை உண்டாக்குவதற்காகவும், இதை அநதிகாரிகளுக்கு உபதேசித்துவிடக்கூடாது என்று உணர்த்துவதற்காகவும் ஆகும். (ஜ்ஞாநம்) வேதாந்த வாக்யங்களிற்போலே இங்கும் 'ஜ்ஞாந' ஶப்தம் பக்தி என்னும் நிலையை

मद्विषयं सकलेतरविसजातीयमपरिमितप्रकारं माहात्म्यं श्रुत्वा एवमेव संभवतीति मन्वानाय ते प्रवक्ष्यामीत्यर्थः। यज्ज्ञानमनुष्ठानपर्यन्तं ज्ञात्वा मत्प्राप्तिविरोधिनः सर्वस्मादशुभान्मोक्ष्यसे॥ १॥

அடைந்த ஜ்ஞானத்தைக் காட்டுகிறது. (விஜ்ஞாந ஸஹிதம்) உபாஸநத்தைப்பற்றிய முறைகளை விளக்கும் அறிவோடு கூடியது. ''ஜ்ஞாநம் தேऽஹம் ஸவிஜ்ஞாநம்'' [7-2] என்னுமிடத்தில், உபாஸிக்கப்படும் பரமபுருஷனைப்பற்றிய ஜ்ஞான விஜ்ஞானங்களைப் பேசிற்று. இங்கு உபாஸனத்தைப்பற்றிய ஜ்ஞான விஜ்ஞானங்களைக் கூறுகிறது என்று வாசி கண்டுகொள்வது. (அநஸூயவே தே ப்ரவக்ஷ்யாமி) அஸூயையற்றவனான உனக்கு நன்கு கூறுகிறேன். கு₃ணங்களையே தோ₃ஷமாக நினைக்கும் மனநிலையே அஸூயை எனப் படும் பொறாமையாகும். அதற்கு நேர் எதிர்த்தட்டாக, கு₃ணங்களை கு₃ணங்களாகவே அறுதியிடுகையாகிற அநஸூயையை (பொறாமை யின்மையை) உடையவன் நீ. அதாவது—ஏழாம் அத்தியாயத்தில், ''மற்ற சேதநாசேதநங்கள் அனைத்தைக் காட்டிலும் அளவற்ற பெருமையை உடையவன் நான்'' என்று நானே கூறிக்கொண்ட போதிலும், 'இது பொருத்தமானதே' என்று நீ நினைக்கிறவன்; ஆகை யாலே, இதையே உனக்குத் தகுதியாகக்கொண்டு நான் பின்வரும் ரஹஸ்யார்த்த₂த்தை நன்கு விளக்குகிறேன். முன் இரு அத்தியா யங்களில் சொல்லப்பட்ட விஷயங்களைப் பூர்ணமாகப் புரிந்து கொண்டு 'நீ சொன்னபடி செய்கிறேன்' என்று பதிலுரைக்கக் கூடிய அத்யந்த பாரதந்த்ர்ய ஜ்ஞாநம் அர்ஜுனனிடம் இல்லா விடிலும், அவனிடமிருக்கும் பொறாமையின்மையையே தகுதியாகக் கொண்டு, அந்த அத்யந்த பாரதந்த்ர்ய ஜ்ஞாநத்தை விளைப்பதற் காக வேதா₃ந்த ரஹஸ்யமான ப₄க்தியோக₃த்தை அர்ஜுனனுக்கு உபதே₃ஶிக்கிறான் பரமகாருணிகனான கண்ணன். (அநஸூயவே) 'அஸூயகாய மாம் மாத₃ா:' [ப₄ார-மோக்ஷ 328-49] [அஸூயை யுடையவனுக்கு என்னை உபதே₃ஶிக்காதே] 'ந ச மாம் யோऽப்₄ய ஸூயதி' [கீ₃தை 18-67] [என்னிடம் பொறாமையுள்ளவனுக்கு இதை உபதே₃ஶிக்காதே] என்று மற்ற பலவிடங்களிலும் கூறப் பட்ட ஶிஷ்ய லக்ஷணம் உணர்த்தப்படுகிறது. (ப்ரவக்ஷ்யாமி) த்₃ரௌபதி₃ படும் எளிவரவு காணமாட்டாமையாலே, அவளுடைய மநோரத₂ம் ஈடேறுவதற்காக, வேதா₃ந்தங்களின் மூலைமுடுக்குகளில் இருக்கும் ரஹஸ்யார்த்த₂ங்களையெல்லாம் இந்த யுத்₃த₄ பூ₄மியிலே

राजविद्या राजगुह्यं पवित्रमिदमुत्तमम्।
प्रत्यक्षावगमं धर्म्यं सुसुखं कर्तुमव्ययम्॥ २॥

2. ராஜவித்3யா ராஜகு3ஹ்யம் பவித்ரமித3முத்தமம்।
ப்ரத்யக்ஷாவக3மம் த4ர்ம்யம் ஸுஸுக2ம் கர்த்துமவ்யயம்॥

இத3ம்—இந்த ப4க்தியோக3ம், ராஜவித்3யா—வித்3யைகளுக்குள் சிறந்ததாய், ராஜகு3ஹ்யம்—ரஹஸ்யங்களுக்குள் சிறந்ததாய், உத்தமம் பவித்ரம்—பாபங்களைப் போக்கடிப்பவற்றுள் உயர்ந்ததாய், ப்ரத்யக்ஷாவக3மம்—(என்னை) நேரில் காட்டுவதாய், த4ர்ம்யம்—என்னை அடைவிக்கும் ஸாத4னமாகவுமிருப்பதாய், ஸுஸுக2ம் கர்த்தும்—அநுஷ்டி2ப்பதற்கு மிகவும் இனியதாய், அவ்யயம் — (ப2லத்தைக் கொடுத்த பின்பும்) அழியாததாயிருப்பது.

உனக்கு எளிய சொற்களால் தெளிவாக முழுவதும் விளக்குகிறேன். (யத் ஜ்ஞாத்வா அஶுப4ாத் மோக்ஷ்யஸே) இந்த ப4க்தியோக3த்தை அறிந்து அநுஷ்டி2த்தால், என்னை அடைவதற்கு விரோதி4யான எல்லாப் பாபங்களிலிருந்தும் நீ விடுபடுவாய். 'ஜ்ஞாத்வா' என்று ப4க்தியோக3த்தை அறிவதே இங்கு சொல்லப்பட்டிருந்தபோதிலும், அநுஷ்ட2ானமில்லாத ஸாத4ந ஜ்ஞானத்தால் மாத்திரம் ஸாத்4யம் ஸித்3தி4க்காதாகையாலே 'அநுஷ்ட2ாநபர்யந்தம் ஜ்ஞாத்வா' [அநுஷ்ட2ானபர்யந்தமாக அறிந்து] என்று பா4ஷ்யம் இடப்பட்டது. (அஶுப4ாத் மோக்ஷ்யஸே) கர்மஜ்ஞான யோக3ங்கள் ப4க்தியோக3ம் உண்டாவதற்குத் தடையான பாபங்களையே போக்கும்; ப4க்தியோக3மோவெனில் என்னை அடைவதற்குத் தடையாயிருக்கும் எல்லாப் பாபங்களையும் போக்கும் என்று கருத்து. (அஶுப4ாத்) இந்த 'அஶுப4' பத3ம் நரகத்தை விளைக்கையாலே இரும்பு விலங்கு போன்ற பாபங்களைமாத்திரம் குறிக்காமல், ஸ்வர்க்க3த்தில் இவனைச் சிறையிட்டு, ஸம்ஸாரத்திலேயே இருத்திவைக்கும் பொன்விலங்கு போன்ற புண்ணியங்களையும் குறிக்கும். ஆக, இந்த ஶ்லோகத்தால்—ஸம்ஸாரத்திலிருந்து விடுவிக்கும் ப4க்தியோக3த்தை ஸப்ரகாரமாக உபதே3ஶிக்கிறேன் என்று ப்ரதிஜ்ஞை செய்தானாயிற்று. 1.

2. இதிராச வித்தை யிதிராச குய்ய
மதியாம் பவித்திர மிதாகு—மெதிர்காணு
மாட்சிதருந் தன்மத்து மன்னுஞ் சுகத்தியலு
மேட்சிதரும் வீயா திது.

இது இராச வித்தை—இந்த ப4க்தியோக3ம் வித்3யைகளுள் தலைசிறந்தது; இது இராச குய்யம்—இது ரஹஸ்யங்களுள் தலைசிறந்தது; இது அதியாம் பவித்திரம் ஆகும்—இது பாபங்களைப் போக்கும் பவித்திரங்களில் மிகச்சிறந்ததாகும். எதிர் காணும் மாட்சி தரும் — (என்னை) நேரே காணும் பெருமையைத் (தன்னை அனுஷ்டி2ப்பவனுக்குத்) தரும். தன்மத்து மன்னும்—(என்னை ஸாதி4த்துக்கொடுக்கும்) த4ர்மமாகவும் நிலைபெறும். மேட்சிதரும் சுகத்து இயலும்—செய்வதற்கு மிகவும் இனியதாயிருக்கும்; இது வீயாது—(ப2லனைக் கொடுத்த பின்பும்) இது அழியாமலிருக்கும்.

---

2. கர்மயோக3ம், ஜ்ஞாநயோக3ம் முதலான மற்ற உபாயங்களைக் காட்டிலும் இந்த ப4க்தியோக3த்திற்குள்ள சிறப்பைக் காட்டுகிறான். இந்த ச்லோகத்தை அடிப்படையாகக்கொண்டே இவ்வத்தியாயத்திற்கு "ராஜவித்3யா ராஜகு3ஹ்யயோக3ம்" என்று பெயர் ஏற்பட்டுள்ளது. (ராஜவித்3யா) வித்3யைகளுக்கு அரசனாயிருப்பது. கற்கப்படும் கல்விகளுக்குள் தலைசிறந்தது என்றபடி. ராஜசப்3த3த்திற்கு க்ஷத்ரியர்களே முக்2யார்த்த2மாயினும், 'க்ஷத்ரியர்களின் வித்3யை' என்று இங்கு பொருள் கொண்டால், "விசேஷவிதி4: சேஷநிஷேத4ம் க3மயதி" [குறிப்பிட்டு ஒன்றுக்கு ஒரு விஷயத்தை விதி4ப்பது மற்றவைகளுக்கு அவ்விஷயம் இல்லை என்று காட்டும்] என்னும் நியாயப்படி, ப்3ராஹ்மணர் முதலான மற்ற வர்ணத்தார்களுக்கு இவ்வித்3யையில் அந்வயமில்லை என்று தோன்றிவிடுமாகையால், அப்படிப் பொருள்கொள்ளாமல் ராஜசப்3த3த்திற்குச் சிறந்தது என்னும் ஔபசாரிகப் பொருள் கொள்ளப்படுகிறது. ராஜாவாய் (சிறந்ததாய்) இருக்கும் வித்3யை ராஜவித்3யை என்றபடி. வித்3யைகளுக்கு அரசன் என்று விக்3ரஹம். அப்படியாகில் 'வித்3யாராஜ:' என்று இருக்கவேண்டாமோ? எனில், "ராஜத3ந்தாதி3ஷு பரம்" [அஷ்டாத்4யாயீ 2-2-31] என்னும் பாணினி ஸூத்ரத்தின்படி த3ந்தங்கட்கு அரசன் த3ந்தராஜ: என்று வராமல் ராஜத3ந்த: என்று வருவதுபோல் ராஜவித்3யா என வருகிறது என்று கண்டுகொள்வது.

॥ भा ॥ राजविद्या—विद्यानां राजा, राजगुह्यं—गुह्यानां राजा। राज्ञां विद्येति वा राजविद्या; राजानो हि विस्तीर्णागाधमनसः; महामनसामियं विद्येत्यर्थः। महामनस एव हि गोपनीयगोपनकुशला इति तेषामेव गुह्यम्। इदमुत्तमं पवित्रं—मत्प्राप्तिविरोध्यशेषकल्मषापहम्। प्रत्यक्षावगमम्—अवगम्यत इत्यवगमो विषयः; प्रत्यक्ष-

---

(ராஜகு₃ஹ்யம்) மறைக்க வேண்டிய ரஹஸ்யங்களுள் தலைசிறந்தது இந்த ப₄க்தியோக₃மே. இப்படி ராஜ ஶப்₃த₃த்திற்குச் சிறந்தது எனும் ஔபசாரிகப் பொருளைக் கொள்ளாமல், ''விஸ்தீர்ணாகா₃த₄ மநஸோ ஹி ராஜாந:'' [மிக விரிந்ததும், ஆழ்ந்ததுமான நெஞ்சக் கருத்தை உடையவர்களன்றோ அரசர்கள்] என்னும் ப்ரஸித்₃தி₄யையிட்டு அத்தகைய அரசர்களையும், அஜஹல்லக்ஷணையாலே அத்தகைய தன்மையையுடைய மற்றவர்களையும் இங்கு 'ராஜ'ஶப்₃த₃ம் முக்கியமாகக் குறிப்பதாகவோ, அல்லது அத்தகைய தன்மையுடைய அனைவரையும் கு₃ணத்தையிட்டு கௌ₃ணமாகக் குறிப்பதாகவோ கொள்ளலாம். (ராஜவித்₃யா) இப்படி விரிந்து ஆழ்ந்த கருத்துடையவர்களைத் தவிர மற்றவர்களால் இந்த ப₄க்தியோக₃ம் அறியத்தக்கதன்று என்றபடி. ''ராஜ்ஞாம் வித்₃யா ராஜ வித்₃யா'' [ராஜாக்களின் வித்₃யை ராஜவித்₃யை] என்று விக்₃ரஹம். பரந்த நெஞ்சை உடையவர்களுடைய வித்₃யை என்று கருத்து. (ராஜகு₃ஹ்யம்) முற்கூறிய விரிந்த ஆழ்ந்த நெஞ்சக் கருத்தை உடையவர்களுடைய ரஹஸ்யமாயிருப்பது இந்த ப₄க்தி யோக₃ம். பரந்து ஆழ்ந்த நெஞ்சையுடையவர்களே மறைக்கவேண்டியதை மறைப்பதில் வல்லவர்களாகையாலே இது அவர்களுடைய ரஹஸ்யம் என்று சொல்லப்படுகிறது. (இத₃ம் உத்தமம் பவித்ரம்) இது பாபங்களைப் போக்கும் பவித்ரங்களுள் தலைசிறந்ததாயிருப்பது. மற்ற புண்யங்கள் சிற்சில பாபங்களைப்போக்கும். கர்மயோக₃ம், ஜ்ஞான யோக₃ம் எனும் ப₄க்தியோகா₃ங்க₃ங்கள் உபாயமான ப₄க்தியோக₃த்துக்குத் தடையாயிருக்கும் பாபங்களையே போக்கும். இந்த ப₄க்தி யோக₃மோவெனில் என்னை அடைவதற்குத் தடையாயிருக்கும் அத்தனை பாபங்களையும் போக்கும் என்று கருத்து. (ப்ரத்யக்ஷாவக₃மம்) என்னை நேரில் காட்டுவது இந்த ப₄க்தியோக₃ம். ''அவக₃ம்யதே இத்யவக₃ம:'' [எது அறியப்படுகிறதோ அது 'அவக₃ம:' எனப்படுகிறது] என்கிற வ்யுத்பத்தியாலே 'அவக₃ம' ஶப்₃த₃ம் அறிவுக்கு விஷயமாயிருப்பதைக் குறிக்கிறது. ப்ரத்யக்ஷமான விஷயத்தை

भूतोऽवगमो विषयो यस्य ज्ञानस्य तत्प्रत्यक्षावगमम्; भक्तिरूपेणोपासनेनोपास्यमानोऽहं तदानीमेवोपासितुः प्रत्यक्षतामुपगतो भवामीत्यर्थः।

உடையது எந்த ஜ்ஞானமோ அது ப்ரத்யக்ஷாவகமம் ஆகிறது. பக்திரூபமாக முதிர்ந்த ஜ்ஞானமான இந்த உபாஸனத்தினால் உபாஸிக்கப்படும் விஷயமான நான் அப்போதே (விரைவில்) உபாஸிப்பவனுக்கு ப்ரத்யக்ஷமாகத் தோன்றுகிறேன் என்று கருத்து. இத்தால் தன்னை நேரில் காட்டுவது இந்த பக்தியோகம் என்றதாயிற்று. ஜ்ஞானத்தைச்சொல்லும் 'அவகம' ஶப்தம் புல்லிங்கமாகையாலே, 'ப்ரத்யக்ஷாவகமம்' என்னும் பதத்திற்கு 'ப்ரத்யக்ஷமான அவகமமாகிற ஜ்ஞானம்' என்று பொருள்கொண்டால் 'ப்ரத்யக்ஷாவகம:' என்று புல்லிங்கமாக வரவேண்டுமேயொழிய 'ப்ரத்யக்ஷாவகமம்' என்று நபும்ஸக லிங்கமாக வரக்கூடாது. இதைத் தவிர்ப்பதற்காக ''ப்ரத்யக்ஷ: அவகம: யஸ்ய தத் ப்ரத்யக்ஷாவகமம்'' [ப்ரத்யக்ஷமான ஜ்ஞானம் எதைப்பற்றி உள்ளதோ அது ப்ரத்யக்ஷாவகமம்] என்று பஹுவ்ரீஹியாகக் கொள்ளப்பார்த்தால் விஶேஷணமான ப்ரத்யக்ஷமும், விஶேஷ்யமான ஜ்ஞானமுமாகிற இரண்டும் ஜ்ஞானமாயிருப்பது ஒட்டாது. அதனால் முற்கூறியபடி 'அவகம' ஶப்தத்துக்குக் கர்மணிவ்யுத்பத்தியாலே 'விஷயம்' என்று பொருள்கொண்டு 'ப்ரத்யக்ஷமான விஷயத்தை உடையது ப்ரத்யக்ஷாவகமம்' என்று பொருளுரைப்பதே பொருந்தும். உபாஸனத்துக்கு விஷயமான பரம்பொருள் ப்ரத்யக்ஷமானதல்ல என்று ஶாஸ்த்ரங்கள் கூறும்போது, இந்த அதை பக்தியால் நேரே காணப்படுவதாகக் கூறுவது எப்படி ஒட்டும்? எனில், ''ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா'' [முண்டக 3-1-8] [பரம்பொருள் கண்ணாலும் வாக்காலும் அறியப்படுவதில்லை] என்று கண் முதலான வெளி இந்த்ரியங்களால் அறியமுடியாததாகச் சொல்லப்படும் பரமாத்மஸ்வரூபமே பக்திக்கு இருப்பிடமான பரிஶுத்தமான நெஞ்சென்னும் உட்கண்ணால் உணரப்படும் என்று ''மநஸா து விஶுத்தேந'' [பரிசுத்தமான நெஞ்சாலேயே காணப்படுவது பரம்பொருள்] முதலான வேத வாக்யங்களும், ''பக்த்யா த்வநந்யயா ஶக்ய: அஹமேவம்விதோऽர்ஜுந! ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப!!'' [கீதை 11-54] [வீரனான அர்ஜுனனே! இத்தகைய நான் அநந்யபக்தியினாலேயே உள்ளபடி அறிவதற்கும், காண்பதற்கும், நுழைவதற்கும் தக்கவன்] முதலான கீதா வாக்யங்களும் முழங்கினவாகையாலே பொருந்தும். ''இப்படி உன்னை நேரே காட்டுவதாயிருக்கையாலே

अथापि धर्म्यं—धर्मादनपेतम्; धर्मत्वं हि निश्श्रेयससाधनत्वम्; स्वरूपेणैवात्यर्थप्रियत्वेन तदानीमेव मद्दर्शनापादनतया च स्वयं निश्श्रेयसरूपमपि निरतिशयनिश्श्रेयसरूपात्यन्तिकमत्प्राप्तिसाधनमित्यर्थः। अत

ஸ்வயம்ப்ரயோஜனமாயிருக்கும் இந்த ப₄க்தி மோக்ஷஸாத₄னமாயிருக்க முடியுமோ? உலகில் ஸ்வயம்ப்ரயோஜனமானவை ஒரு ப₂லத்துக்கு ஸாத₄னமாயிருப்பதாகக் காணப்படுவதில்லையே?'' எனும் கேள்விக்கு பதிலுரைக்கிருன் மேலே—(த₄ர்ம்யம்) த₄ர்மத்தை விட்டு விலகாததாகவும் இருப்பது. 'த₄ர்மபத்₂யர்த்த₂ந்யாயாத₃நபேதே' [அஷ்டா 4-4-92] ['விலகாதது' எனும் பொருளில் த₄ர்ம, பதி₂ந், அர்த்த₂, ந்யாய எனும் பத₃ங்களின்மேல் 'ய' எனும் விகுதி சேரும்] என்னும் பாணினி ஸூத்ரத்தின்படி த₄ர்மத்தைவிட்டு விலகாதது த₄ர்ம்ய மாகிறது. தலைசிறந்த ப₂லனுக்கு ஸாத₄னமாயிருப்பது த₄ர்மம். இந்த ப₄க்தியானது தானே மிக இனிதாயிருக்கையாலும், என்னையே நேரில் காட்டுகையாலும் ஸ்வயம்ப்ரயோஜனமாயிருந்தபோதிலும், தலைசிறந்த ப₂லனை என்னை அடைவதாகிற மோக்ஷத்திற்கும் ஸாத₄னமாயிருப்பது என்று கருத்து. த்₄ருதி எனப்படும் ப்ரீதியைக் குறிக்கும் தா₄துவிலிருந்து தோன்றிய இந்த 'த₄ர்ம' ஶப்₃த₃ம், தானே ஆனந்த₃ரூபமாகவும், ஆனந்த₃த்திற்குக் காரணமாகவும் இருப்பதைக் காட்டுமன்றோ. ''த₄ர்ம இத்யுபஸம்ஹார்யே யச்ச்₂ரேயஸ்கர ப₄ாஷணம்। தத்₃த₄ர்ம பத₃ வாச்யார்த்த₂ நிரூபண விவக்ஷயா ॥'' [மீமாம்ஸா ஶ்லோகவார்த்திகம் 2-190] [''சோத₃நாலக்ஷண: த₄ர்ம:'' என்று ஸூத்ரத்திற்போலே த₄ர்மஶப்₃த₃த்தையிட்டு முடிக்காமல், ''சோத₃நாலக்ஷண: ஶ்ரேயஸ்கர:'' என்று பா₄ஷ்யகாரர் த₄ர்மபத₃ ஸ்தா₂னத்தில் ஶ்ரேயஸ்கர ஶப்₃த₃த்தை இட்டிருப்பது த₄ர்மபத₃த்தின் பொருளைத் தெரிவிப்பதற்கேயாகும்.] என்று மீமாம்ஸகர்களும் நன்மையைத் தருவது த₄ர்மம் என்று லக்ஷணமுரைத்தார்களன்றோ. ''முக்தி: கைவல்யநிர்வாணஶ்ரேயோநிஶ்ஶ்ரேயஸாம்ருதம்'' [அமரகோஶம் 1-5-6] என்று நிக₄ண்டுக்களிலும் தனக்கு மேலில்லாத நன்மையாயிருக்கும் ப₂லன் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலையடைவதாகிற மோக்ஷமே என்று கூறப்பட்டது அநுஸந்தி₄க்கத்தக்கது. (த₄ர்ம்யம்) ''நம்மைக் காண்கை ஒருதலையானால், அத₄ர்ம்யமானாலும் மேல்விழ வேணும். இது அங்ஙனன்றிக்கே த₄ர்மாத₃நபேதமுமாயிருக்கும்'' என்று ஈட்டில் (1-7 ப்ரவேஶம்) அருளியபடியே தகாத கார்யத்தைச் செய்தாவது பெறவேண்டியதான தலைசிறந்த இப்புருஷார்த்த₂த்தைப் பெறுவதற்கு த₄ர்மத்தை மீருத வழியாகவும் இருப்பது இந்த ப₄க்தி

एव सुसुखं कर्तुं — सुसुखोपादानम्। अत्यर्थप्रियत्वेनोपादेयम्। अव्ययम्—अक्षयं; मत्प्राप्तिं साधयित्वाऽपि स्वयं न क्षीयते। एवंरूपं उपासनं कुर्वतो मत्प्रदाने कृतेऽपि न किंचित्कृतं मयाऽस्येति मे प्रतिभातीत्यर्थः॥ २॥

யோக₃ம் என்றும் பொருள்கொள்ளலாம். இந்த ப₄க்தியோக₃ம் அநுஷ்டி₂க்கும் காலத்தில் மிகவும் ஆயாஸத்தை விளைக்குமோ? எனில்: (ஸுஸுக₂ம் கர்த்தும்) இவ்வண்ணமாக ப₄க்திதானே ஸ்வயம்ப்ரயோஜநமாயிருக்கையாலும், பரமபுருஷார்த்த₂ஸாத₄நமாயிருக்கையாலும், அநுஷ்டி₂க்கும்போது ஆயாஸமில்லாமலிருப்பதோடன்றியில், மிக இனிதாகவுமிருப்பது. ''செய்வதற்கு மிக எளிதாயிருப்பது'' என்று பொருள்கொள்வதைக் காட்டிலும், ''அநுஷ்டி₂க்கும்போது மிக இனிதாயிருப்பது'' என்று பொருள்கொள்வதே ஸ்வரஸமாகவும், ப்ரகரணத்திற்குப் பொருத்தமாகவுமிருக்கையால், அப்படியே பா₄ஷ்யமிடப்பட்டது. (ஸுஸுக₂ம்) அன்புருவாயிருப்பதால் இதுதானே இனியது; அதற்குமேலே இந்த ப₄க்தியோக₃த்தால் நினைக்கப்படும் நான் மிகவும் இனியவனாகையாலும் இது மிக இனிதாயிருப்பது என்று கருத்து. ''மற்ற ஸாத₄னங்கள் அனைத்தும் ப₂லன் உண்டானவுடன் அழிந்துவிடுமே; அதுபோல் இதுவும் ப₂லன் உண்டானவுடன் அழிந்துவிடுமோ?'' எனில் (அவ்யயம்) ப₂லன் விளைந்த பின்பும் அழியாதது. ஸாத₄நத₃ஶையிலேயே ''அச்சுவை பெறினும் வேண்டேன்'' [திருமாலை 2] என்று சொல்லும்படி இனிதான ப₄க்தியானது ப₂லத₃ஶையிலும் ஸ்வயம்ப்ரயோஜநபுருஷார்த்த₂மாகத் தொடர்கையாலே, மற்ற ஸாத₄னங்களைப்போலிராமல் ப₂லத₃ஶையிலும் அழிவில்லாமல் தொடர்வதாயிருப்பது. ஸ்வதந்த்ரனான ஸர்வேஶ்வரன் இதைத் தொடரவிடாமல் செய்துவிட்டால் என் செய்வது? எனில்: ''உன்னடியார்க்கு என்செய்வனென்றே இருத்தி நீ'' [பெரியதிருவ 53] ''ருணம் ப்ரவ்ருத்₃த₄மிவ மே ஹ்ருத₃யாந்நாபஸர்ப்பதி'' [பா₄ர-உத்₃ 47-39] [த்₃ரௌபதி₃ 'கோ₃விந்த₃ா' என்று கூறியது வட்டியால் வளர்ந்த கடன்போல் என் நெஞ்சைவிட்டு அகல்கின்றதில்லை] என்கிறபடியே அடியார்க்கு எத்தனைசெய்தாலும் ஒன்றும் செய்யவில்லையென்று நினைப்பவனாக நானிருக்கையால், இது ப₂லத₃ஶையிலும் அழிவற்றதாகவேயிருக்கும் என்று கருத்து. ஆக, கர்மஜ்ஞாநயோக₃ங்கள் முதலான மற்ற உபாயங்களைக் காட்டிலும் ப₄க்தியோக₃த்திற்குள்ள சிறப்புகள் விவரிக்கப்பட்டன. 2.

अश्रद्दधानाः पुरुषा धर्मस्यास्य परन्तप! ।
अप्राप्य मां निवर्तन्ते मृत्युसंसारवर्त्मनि ॥ ३ ॥

3. அஶ்ரத்₃த₃தா₄நா: புருஷா த₄ர்மஸ்யாஸ்ய பரந்தப! ।
அப்ராப்ய மாம் நிவர்த்தந்தே ம்ருத்யு ஸமஸார வர்த்மநி ॥

பரந்தப — எதிரிகளைத் தவிக்கச்செய்பவனே! அஸ்ய த₄ர்மஸ்ய அஶ்ரத்₃த₃தா₄நா: புருஷா:—ப₄கதி யோக₃மாகிற இந்த உபாயவிஷயத்தில் ஶ்ரத்₃தை₄யில்லாத மனிதர்கள், மாம்—என்னை, அப்ராப்ய—அடையாமல், ம்ருத்யு ஸம்ஸார வர்த்மநி—ஆத்ம விநாஶத்தைச் செய்யும் ஸம்ஸாரவழியில், நிவர்த்தந்தே—மிகவும் உழல்கிறார்கள்.

---

3. இத்தருமந் தன்னை யியல்வான் விரும்பாத
மத்தரவ ரென்னை மருவாதே—யத்த
முடிவியற்று மிப்பவத்து மூளுமவர் மூள்வர்
படிமதிக்கும் வில்லாய் பகை.

படி பகை மதிக்கும் வில்லாய்!—உலகத்தவர் அனைவரும், பகைவர்களுங்கூடக் கொண்டாடும் வில்வீரனே! அத்த!—அப்பா அர்ஜுந! இத்தருமம் தன்னை—மோக்ஷோபாயமான இந்த ப₄க்தி யோக₃த்தை, இயல்வான் விரும்பாத மத்தரவர்—அநுஷ்டி₂க்க இசையாத அறிவிலிகள், என்னை மருவாதே—என்னை அடையாமல், மூளுமவர் முடிவு இயற்றும் இப் பவத்து — தன்னிடம் உழல்கின்றவர்களுடைய ஆத்ம நாஶத்தை விளைக்கும் இந்த ஸம்ஸாரத்தில், மூள்வர்—உழல்வார்கள்.

---

3. முற்கூறிய ப₄க்தி யோக₃த்தை அநுஷ்டி₂க்காவிடில் மோக்ஷம் ஸித்₃தி₄க்காது என்று காட்டிக்கொண்டு, தானே தலைசிறந்த ஸுக₂ ரூபமாய், தலைசிறந்த ஸுக₂மான மோக்ஷத்தை விளைப்பதான இந்த ப₄க்தியோக₃த்தை அனைவரும் அநுஷ்டி₂க்காமைக்குக் காரணம் ஶ்ரத்₃தை₄யின்மையே என்று தெளிவு படுத்திக்கொண்டு, ''நாந்ய: பந்தா₂ அயநாய வித்₃யதே'' எனும் புருஷஸூக்த மந்த்ரத்தை விளக்குகிறான் இந்த ஶ்லோகத்தில். (அஸ்ய த₄ர்மஸ்ய) தலைசிறந்த ஸுக₂ரூபமான என் விஷயமாயிருப்பதால் தானே தலைசிறந்த ஸுக₂

॥भा॥ अस्य-उपासनाख्यस्य धर्मस्य निरतिशयप्रियमद्विषयतया स्वयं निरतिशयप्रियरूपस्य परमनिःश्रेयसरूपमत्प्राप्तिसाधनस्याऽव्ययस्य उपादानयोग्यदशां प्राप्य अश्रद्दधानाः— विश्वासपूर்वकत्वरारहिताः पुरुषाः

ரூபமாயிருப்பதாய், என்னையடைவதாகிற தலைசிறந்த பலனுக்கு ஸாதனமாகவும் இருப்பதான இந்த பக்தியோக விஷயத்தில். (அஸ்ய தர்மஸ்ய) "அஸ்ய தர்மஸ்ய என்றுனிறே தனக்கும் இனிதாயிருக்கையாலே" என்ற ஈடு (1-7 ப்ரவேஶம்) ஸ்ரீ ஸூக்தி அநுஸந்திக்கத்தக்கது. (அஸ்ய தர்மஸ்ய அஶ்ரத்தததாநா:) இந்த மோக்ஷோபாயமாகிற பக்தியைக் கைக்கொள்ளத் தகுதிபெற்றிருந்தும். அதில் நம்பிக்கையோடுகூடிய த்வரையில்லாதவர்கள். இந்த பக்தி யோகத்தை அநுஷ்டிக்கத் தகுதியில்லாத ஸ்த்ரீஶூத்ரர்களும் "வாஸுதேவ: ஸர்வம்" [கீதை 7-19] [எல்லாம் கண்ணன்] என்றிருக்கும் மஹாத்மாக்களும் இதை அநுஷ்டிக்காவிடில் குறையில்லையாகையாலே, அவர்களைத் தவிர்ந்த மற்றவர்களையே இங்கு இகழ்வதாகக் கொள்ளவேண்டும். 'தர்மஸ்ய' என்கிற ஆறுவது வேற்றுமை ஸம்பந்த ஸாமாந்யே ஷஷ்டியாகையாலே, 'இந்த தர்மவிஷயத்தில் ஶ்ரத்தையில்லாதவர்கள்' என்று பொருள்படுகிறது. இந்த பக்தி யோகத்தில் நம்பிக்கைகொண்டு த்வரையுடன் அநுஷ்டிக்காதவர்கள் என்றபடி. 'கர்மணி ஷஷ்டியாகவும் கொள்ளலாம்' என்று முற்கூறிய ஈட்டின் [1-7 ப்ரவேஶம்] அரும்பதவுரையில் காட்டப்பட்டது. (மாம் அப்ராப்ய) என்னை அடையாமல். (ம்ருத்யு ஸம்ஸார வர்த்மநி நிவர்த்தந்தே) ஆத்மாவையே அஸத்ஸமமாக்க வல்லதாகையாலோ, பிறப்பிறப்புக்களையே இயல்வாகக்கொண்டதாகையாலோ ம்ருத்யு எனத்தக்க ஸம்ஸாரவழியிலேயே மிகவும் உழல்கின்றுர்கள். 'நிவர்த்தந்தே' என்பதற்கு நிதராம் வர்த்தந்தே (மிகவும் உழல்கின்றுர்கள்) என்றே பொருள்கொள்ளவேணும். 'எதிலிருந்து மீள்கின்றுர்கள்' என்று குறிப்பிடாமையால் 'மீள்கின்றுர்கள்' எனும் ப்ரஸித்தமான பொருள் இங்கு பொருந்தாது. 'ம்ருத்யு ஸம்ஸார வர்த்மநி' என்னும் பதமும் ஒரு வினைச்சொல்லை எதிர்பார்த்து நிற்கிறது. ஆகையால் ம்ருத்யுரூபமான ஸம்ஸாரவழியில் மிகவும் உழல்கின்றுர்கள் என்று பொருள்கொள்வதே இங்கு பொருந்தும். (மாம் அப்ராப்ய ம்ருத்யு ஸம்ஸார வர்த்மநி நிவர்த்தந்தே) "செய்த குற்றங்களையடையப் பொறுத்துத் தங்களை நல்வழிப் போக்கும் என்னைவிட்டு, தந்தாமுடைய விநாஶத்தைச் சூழ்ப்பதான ஸம்ஸாரத்தை விரும்பி அவ்வழியே போகாநிற்பர்கள்" என்று

सामप्राप्य मृत्युरूपे संसारवर्त्मनि नितरां वर्तन्ते। अहो महदिदमाश्चर्य-मित्यर्थः ॥ ३ ॥

॥ भा ॥ शृणु तावत्प्राप्यभूतस्य ममाचिन्त्यमहिमानम् —

मया ततमिदं सर्वं जगदव्यक्तमूर्तिना।
मत्स्थानि सर्वभूतानि न चाहं तेष्ववस्थितः ॥ ४ ॥
न च मत्स्थानि भूतानि पश्य मे योगमैश्वरम्।
भूतभृन्न च भूतस्थो ममात्मा भूतभावनः ॥ ५ ॥

4. மயா ததமித₃ம் ஸர்வம் ஜக₃த₃வ்யக்தமூர்த்திநா ।
மத்ஸ்த₂ாநி ஸர்வபூ₄தாநி ந சாஹம் தேஷ்வவஸ்தி₂த: ॥
5. ந ச மத்ஸ்த₂ாநி பூ₄தாநி பஶ்ய மே யோக₃மைஶ்வரம் ।
பூ₄தப்₄ருந்ந ச பூ₄தஸ்தே₂ா மமாத்மா பூ₄தபா₄வந: ॥

ஈட்டில் (1-7ப்ரவேஶம்) அருளிச்செய்யப்பட்டது இங்கு அநுஸந்தி₄க்கத் தக்கது. (புருஷா: நிவர்த்தந்தே) "ஸ்வயம் ப்ரயோஜனமாயும், தலைசிறந்த புருஷார்த்த₂ஸாத₄னமாயும், மிக எளியதாயும் இருக்கும் இந்த ப₄க்தி யோக₃த்தையறிந்தும், புருஷார்த்த₂ங்களின் வாசியை அறியவல்ல அறிவுடைய புருஷர்கள் தலைசிறந்த புருஷார்த்த₂மான என்னைவிட்டு மிகத்தாழ்ந்ததான ஸம்ஸாரத்தை மிகவிரும்பி மண்டுகிறார்களே. என்னே அவர்களுடைய பாபத்தின் வலிமை இருக்கும்படி!" என்று தன்னுடைய ஆஶ்சர்யத்தை "புருஷா: மாம் அப்ராப்ய நிவர்த்தந்தே" முதலான ஒவ்வொரு பத₃த்திலும் காட்டுகிறான். "'இதுதான் இருந்தபடி பாராய்' என்கிறான்" என்பது ஈடு. (பரந்தப!) எதிரிகளைத் தவிக்கச் செய்யுமவனே! வெளியிலுள்ள எதிரிகளைத் தவிக்கச் செய்வதோடு நில்லாமல், இந்த ஶ்ரத்₃தை₄யின்மைக்குக் காரணமான உட்பகைகளையும் நீ வெல்ல வேணும் என்று கருத்து. "விரோதி₄வர்க்க₃த்தை உதறவல்லாய் நீயன்றோ" என்று ஈட்டில் இப்பத₃ம் விவரிக்கப்பட்டது. ஆக, இந்த ஶ்லோகத்தால் "தமேவம் வித்₃வாந் அம்ருத இஹ ப₄வதி நாந்ய: பந்தா₂ அயநாய வித்₃யதே" [புருஷஸூ] [அந்தப் பரம புருஷனை இப்படி உபாஸிப்பவனே மோக்ஷமடைகிறான்; மோக்ஷமடைய வேறு வழியில்லை] என்னும் வேத₃வாக்யத்தின் பொருள் விவரிக்கப்பட்டதாயிற்று. 3.

இத$_3$ம் ஸர்வம் ஜக$_3$த்—(சேதநாசேதநாத்மகமான) இவ்வுலகனைத்தும், **அவ்யக்தமூர்த்திநா மயா**—வெளிப்படாத ஸ்வரூபத்தையுடைய அந்தர்யாமியான என்னால், **ததம்**—வியாபிக்கப்பட்டுள்ளது. **ஸர்வபூ$_4$தாநி**—எல்லாப் பொருள்களும், **மத்ஸ்தா$_2$நி** — (அந்தர்யாமியான) என்னிடம் உள்ளன. **அஹம் தேஷு ந ச அவஸ்தி$_2$த:**—நான் (அவற்றால் தாங்கப்பட்டு) அவற்றில் நிற்பவனல்லன். **பூ$_4$தாநி**—பொருள்கள், **மத்ஸ்தா$_2$நி ந ச**—(குடம் முதலானவற்றால் ஜலம் முதலானவை போல் தாங்கப்பட்டு) என்னிடம் இருப்பதில்லை. (என் ஸங்கல்பத்தால் த$_4$ரிக்கப்பட்டே என்னிடம் உள்ளன). **ஐஶ்வரம்**—ஈஶ்வரனான எனக்கே உரியதான, **மே யோக$_3$ம்** — எனது ஸங்கல்பத்தை, **பஶ்ய**—பாராய்! (அது யாதெனில்:) **பூ$_4$தப்$_4$ருத்** — எல்லா பூ$_4$தங்களையும் த$_4$ரிப்பவன் நானே; **பூ$_4$தஸ்த$_2$: ந ச**—(நான்) பூ$_4$தங்களால் தாங்கப்படுபவனல்லன்; **மம ஆத்மா ஏவ** — எனது ஸங்கல்பமே, **பூ$_4$தபா$_4$வந:** — பூ$_4$தங்களுக்கு ஸத்தாகாரணமாகவும், தா$_4$ரகமாகவும், நியமிப்பதாகவும் இருப்பது.

---

4. நானிவ்வுலகெல்லா நான்பரந்தங் குட்கரந்து
தானியலு மேனியனாய்த் தான்றரிப்ப—னானமையா
லென்னாற் றரித்திருக்கு மெப்பூ தமுமவற்றின்
மன்னாது நானிருப்பன் மற்று.

இவ்வுலகெல்லாம்—(சேதனம் அசேதனம் என்று இருவகைப்பட்ட) இவ்வுலகனைத்தும், **உட்கரந்து தான் இயலும் மேனியனாய்**—உள்ளே மறைந்து அந்தர்யாமியாய் விளங்கும் ஸ்வரூபத்தை உடையவனாய், **நான் தான் பரந்து தரிப்பன்**—நானேதான் வியாபித்து த$_4$ரிப்பேன். **ஆனமையால்**—இக்காரணத்தால், **எப்பூதமும்**—எந்தப் பொருளும், **என்னால் தரித்திருக்கும்** — என்னால் த$_4$ரிக்கப்பட்டிருக்கும். **நான் மற்று அவற்றில் மன்னாது இருப்பன்**—நானோவெனில் அவற்றால் தாங்கப்படாதவனாயிருப்பேன்.

॥ भा ॥ इदं—चेतनाचेतनात्मकं कृत्स्नं जगत्, अव्यक्तमूर्तिना—अप्रकाशितस्वरूपेण मया अन्तर्यामिणा, ततम्—अस्य जगतो

---

5. அத்தன்மை யாற்பூதத் தாங்கெனக்கோர் தொத்தில்லை
யித்தன்மை யென்னைச்சேர் யோகங்காண்—மெய்த்தன்மை
யீங்கிதனைத் தாங்கியிதில் வேறுநின்றே யென்னினைவா
லாங்கதனைத் தானளிப்ப னூர்ந்து.

பூதத்து ஆங்கு — அந்தப் பொருள்களிடத்தில், **அத்தன்மையால்**—அவை ஒன்றையொன்று தாங்குவதுபோலே, **எனக்கு ஓர் தொத்து இல்லை**—எனக்கு ஒரு தொடர்பில்லை. **இத்தன்மை என்னைச்சேர் யோகம் காண்**—இப்படி ஈஶ்வரத் தன்மையையுடைய எனக்கேயுரியதான எனது ஸங்கல்பத்தைப் பாராய். **ஈங்கு இதனை** — இங்கு இவ்வுலகை, **மெய்த்தன்மை தாங்கி** — உண்மையாகவே த₄ரித்துநின்று, **இதில் வேறு நின்றே** — இதனால் நான் த₄ரிக்கப்படாமலே, **என் நினைவால்**—எனது ஸங்கல்பத்தால், **ஆங்கு அதனைத் தான் ஆர்ந்து அளிப்பன்** — அப்பொருள்களனைத்தையும் நன்றாகப் படைப்பேன்.

4,5. இதுவரையில் இவ்வத்தியாயத்தின் முக்₂யார்த்த₂மான ப₄க்தியோக₃மாகிற உபாயத்தின் பெருமை சொல்லப்பட்டது. இனி இதனாலடையப்படும் ப்ராப்யமாகிற எம்பெருமானின் அளவிடவொண்ணாத பெருமையைக் கூறுவதன்மூலமும் அவ்வுபாயத்தின் பெருமை வலியுறுத்தப்படுகிறது. (இத₃ம் ஸர்வம்) சேதநங்களும், அசேதநங்களும் அடங்கிய இவ்வுலகனைத்தும். (அவ்யக்தமூர்த்திநா மயா ததம்) வெளிப்படாத ஸ்வரூபத்தையுடைய அந்தர்யாமியான என்னால் வ்யாபிக்கப்பட்டுள்ளது. இந்த ப்ரகரணம் ஸ்வரூப வ்யாப்தியைச் சொல்லுவதாகையாலே, மூர்த்தி ஶப்₃த₃ம் ஶரீரத்தைக் குறிப்பது உசிதமன்று. ஆகையால் 'அவ்யக்த மூர்த்திநா' என்றதற்கு 'வெளிப்படாத ஸ்வரூபத்தையுடைய அந்தர்யாமியால்' என்று பொருள்கொள்ளப்பட்டது. மூர்த்தி ஶப்₃த₃ம் ஸ்வரூபத்தை உபசார வழக்காலே குறிக்கிறது. (மயா ததம்) வேதா₃ந்தங்கள் இவனுடைய

धारणार्थं नियमनार्थं च शेषित्वेन व्याप्तमित्यर्थः। यथाऽन्तर्यामिब्राह्मणे * यः पृथिव्यां तिष्ठन्...यं पृथिवी न वेद (बृ. ५. ७. ३) * य आत्मनि तिष्ठन्...यमात्मा न वेद (बृ. ५. ७. २२. मा) इति चेतनाचेतनवस्तुजातैरदृष्टेनान्तर्यामिणा तत्रतत्र व्याप्तिरुक्ता। ततो मत्स्थानि सर्वभूतानि-सर्वाणि भूतानि मय्यन्तर्यामिणि स्थितानि। तत्रैव

வ்யாப்தியானது ஆகாஶம்போல் வெறும் வ்யாப்தியன்று; அனைத்திலும் உள்நுழைந்து நியமிப்பதற்கான வ்யாப்தியேயாகும் என்று முழங்குகையாலே 'அந்தர்யாமியான என்னால் வ்யாபிக்கப்பட்டுள்ளது' என்று பொருள்கொள்ளப்பட்டது. எதற்காக, எக்காரணத்தால் இப்படி வ்யாபித்திருக்கிறான்? எனில், இவ்வுலகை த₄ரிப்பதற்காகவும் நியமிப்பதற்காகவும் வ்யாபித்திருக்கிறான். இவ்வுலகிற்கு ஸ்வாமியாயிருக்கையாலே இதை ரக்ஷிக்கவேண்டியது இவன் பொறுப்பாகையாலே வ்யாபித்திருக்கிறான். வ்யாப்தியின் பயனான த₄ாரணம் அடுத்த அர்த்த₄த்தில் சொல்லப்படுகிறது. நியமனம் அதிலிருந்தே அர்த்த₂ஸித்₃த₄மாகக் கிடைக்கிறது. ''ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கா₃ர்க்கி₃ ஸூர்யாசந்த்₃ரமஸௌ வித்₄ருதௌ திஷ்ட₂த:'' [ப்₃ருஹ 5-8-9] [கா₃ர்க்கி₃! இந்தப் பரம்பொருளின் நியமனத்தாலேயே ஸூர்யசந்த்₃ரர்கள் த₄ரிக்கப்படுகிறார்கள்.] என்று த₄ாரணம் நியமனாதீ₄னமாக ஓதப்படுகிறதன்றோ. வ்யாப்திக்குக் காரணமான ஶேஷித்வம் (ஸ்வாமித்வம்) ஏழாமத்தியாயத்திலேயே சொல்லப்பட்டது. இங்கு சொல்லப்படும் ஶரீரித்வத்தாலும் அர்த்த₂ஸித்₃த₄மாகக் கிடைக்கும். அந்தர்யாமிப்₃ராஹ்மணத்தில் ''ய: ப்ருதி₂வ்யாம் திஷ்ட₂ந்......யம் ப்ருதி₂வீ ந வேத₃'' [ப்₃ருஹ 5-7-3] ''ய ஆத்மநி திஷ்ட₂ந்......யமாத்மா ந வேத₃'' [ப்₃ருஹ 5-7-22] [எந்தப் பரமாத்மா பூ₄மியில் நிற்கின்றானோ...எவனை பூ₄மி அறியவில்லையோ... எவன் ஆத்மாவில் நிற்கிறானோ...எவனை ஆத்மா அறியவில்லையோ] என்று 'சேதநாசேதநவஸ்துக்களாலே காணப்படாமலே எம்பெருமான் அவற்றில் அந்த்ர்யாமியாய் வ்யாபித்திருக்கிறான்' என்று உபநிஷத்தும் ஓதிற்று. இந்த அந்தர்யாமி ப்₃ராஹ்மண வாக்யங்களில் பூ₄மி முதலான எல்லா அசேதநப்பொருள்களிலும், சேதநப்பொருள்களிலும் எம்பெருமானுக்கு அந்தர்வ்யாப்தியும், ப₃ஹிர்வ்யாப்தியும் உத்₃கோ₄ஷித்திருப்பது ப்ரஸித்₃த₄ம். (மத்ஸ்த₂ாநி ஸர்வ பூ₄தாநி) முற்கூறிய காரணத்தினாலேயே எனக்கு ஶரீரமான எல்லாப்பொருள்களும் அந்தர்யாமி

ब्राह्मणे * यस्य पृथिवी शरीरं...यः पृथिवीमन्तरो यमयति, * यस्यात्मा शरीरं...य आत्मानमन्तरो यमयतीति शरीरत्वेन नियाम्यत्वप्रतिपादनात्तदायत्ते स्थितिनियमने प्रतिपादिते, शेषित्वं च। न चाहं तेष्ववस्थितः—अहं तु न तदायत्तस्थितिः, मत्स्थितौ तैर्न कश्चिदुपकारः

யான என்னிடத்தில் நிற்கின்றன. அந்த அந்தர்யாமி ப்₃ராஹ்மணத்திலேயே ''யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம்......ய: ப்ருதி₂வீமந்தரோ யமயதி......யஸ்யாத்மா ஶரீரம்......ய ஆத்மாநமந்தரோ யமயதி'' [ப்₃ருஹ 5-7-3...22] [எந்தப் பரமாத்மாவுக்கு பூ₄மி ஶரீரமோ .... எவன் பூ₄மியை உள்நுழைந்து நியமிக்கிறுனே........எவனுக்கு ஆத்மா ஶரீரமோ......எவன் ஆத்மாவை உள்நுழைந்து நியமிக்கிறுனே] என்று பரமாத்மாவுக்கு மற்ற எல்லாச் சேதநாசேதநப்பொருள்களும் ஶரீரமாயிருந்துகொண்டு அவனுல் நியமிக்கப்படுகின்றன என்று முழங்கப்படுகையாலே எல்லாப்பொருள்களுடைய ஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளும் பரமாத்மாவுக்கு அதீ₄னமாயிருப்பவை என்று சொல்லப்பட்டதன்றே. இதனுல் தனிப்பட்டு நிற்கும் உலகமானது தூணுல் உத்தரம் த₄ரிக்கப்படுவதுபோலே எம்பெருமானுல் த₄ரிக்கப்படுகிறது என்னும் எண்ணம் தவிர்க்கப்படுகிறது. ஶ்லோகத்தின் முற்பாதியாலே எம்பெருமானின் வ்யாப்தி சொல்லப்பட்டது. மூன்ருவது பாத₃மான இதனுல் எம்பெருமானுடைய த₄ாரணநியமனங்கள் சொல்லப்படுகின்றன. ஶரீரஶரீரிபா₄வம் சொன்னபோதே எம்பெருமானுடைய த₄ாரகத்வமும், ஶேஷித்வமும் அர்த்த₂ஸித்₃த₄மாகக் கிடைக்கும். (ந சாஹம் தேஷ்வவஸ்தி₂த:) 'நான் அவற்றில் நிற்பதில்லை' என்று மேலெழுந்தவாரியாக இதற்குப் பொருள்கொண்டால், ஶ்லோகத்தின் முற்பாதியில் 'மயா ததம்' [என்னுல் வ்யாபிக்கப்பட்டுள்ளது] என்று கூறியிருப்பதோடும், 'ய: ப்ருதி₂வ்யாம் திஷ்ட₂ந்'' [எவனொருவன் பூ₄மியில் நிற்கிறுனே] முதலான முன்னெடுத்த வேத₃வாக்யங்களோடும் முரண்படும். ஆகையால் இதற்கு ''என் இருப்பு அவற்றுக்கு அதீ₄னம் என்று சொல்லும்படி நான் அவற்றில் இல்லை'' என்று பொருள்கொள்ளவேண்டும். என் இருப்பிற்கு அப்பொருள்களால் எவ்வித உதவியுமில்லை என்று கருத்து. முந்தின பாத₃த்தில் 'எல்லாப் பொருள்களும் என்னிடம் இருக்கின்றன' என்று சொன்னவிடத்தில் எனக்கு அவற்றைக் குறித்து த₄ாரண நியமனுதி₃கள் ஸித்₃தி₄த்ததுபோலே 'நான் அவற்றிலிருக்கிறேன்' என்று சொல்லும்போது அவற்றுக்கு என்னைக்குறித்து த₄ாரணநியம

इत्यर्थः। न च मत्स्थानि भूतानि—न घटादीनां जलादेरिव मम धारकत्वम्; कथम्? मत्सङ्कल्पेन। पश्य ममैश्वरं योगम्—अन्यत्र कुत्रचिदसंभावनीयं मदसाधारणमाश्चर्यं योगं पश्य। कोऽसौ योगः?

நாதி3களைக் கொண்டுவிடக்கூடாது என்பது தேர்ந்தபொருள். ''ஸ ப4க3வ: கஸ்மிந் ப்ரதிஷ்டி2த:......ஸ்வே மஹிம்நி யதி3 வா ந மஹிம்நி'' [சா2ந் 7-24-1] [ஆசார்யரே! அந்தப் பரமாத்மா எதிலே நிலை நிற்கிறான்? தன் மஹிமையிலே நிலைநிற்கிறான் அல்லது வேறு எந்த மஹிமையிலும் நிலைநிற்பதில்லை.] என்று உபநிஷத் ஓதியது இங்கு அநுஸந்தி4க்கத்தக்கது. 4.

5. முந்தின ஶ்லோகத்தில் சொன்னதையே மேலும் விவரிக்கிறான் இந்த ஶ்லோகத்தில். (ந ச மத்ஸ்தா2நி பூ4தாநி) பூ4தங்கள் என்னிடமில்லை. முந்தின ஶ்லோகத்தில் பூ4தங்கள் என்னிடமிருக்கின்றன என்று கூறிவிட்டு அதையே இங்கு மறுப்பதுபோலத் தோன்றுகிறதே எனில், குடம் முதலானவை ஜலம் முதலானவற்றைத் தாங்குவதுபோலே என்னால் மற்ற பொருள்கள் தாங்கப்படுவதில்லை என்பதே இங்கு கருத்தாகையாலே முன்னுக்குப்பின் முரணில்லை. அதாவது — உலகில் குடம், தூண் முதலான ஸ்தூ2லப்பொருள்கள் ஜலம், உத்தரம் முதலான மற்ற பொருள்களைத் தம் ஸம்யோக3த்தினால் கீழே விழாதபடி தாங்குகின்றன. நான் மற்ற பொருள்களைத் தாங்குவது அப்படியல்ல என்று கருத்து. பின் எப்படியெனில், 'ஆத்மா தன் ஶரீரத்தைத் தன் ஸங்கல்பத்தால் தாங்குவதுபோலே என் ஸங்கல்பத்தாலேயே எல்லாப் பொருள்களையும் தாங்குகிறேன்' என்று அடுத்த பாத3த்தில் விவரிக்கிறான் — (மே ஐஶ்வரம் யோக3ம் பஶ்ய) வேறு எவர்க்கும் இல்லாததாய், ஈஶ்வரனான எனக்கே உரியதான என்னுடைய யோக3ம் எனப்படும் ஸங்கல்பத்தைக் காண்பாய். ''யோக3ஸ்ஸந்நஹநோபாய த்4யாந ஸங்க3தி யுக்திஷு'' [அமரம் 3 நா 109] [ஸந்நஹநம் (ஸந்நாஹம்), உபாயம், த்4யாநம், ஸங்க3தி, யுக்தி என்னும் பொருள்களையுடையது யோக3ஶப்3த3ம்] என்கிற நிக4ண்டுவின்படி, யோக3ஶப்3த3ம் இங்கு த்4யாநரூபமான ஸங்கல்பத்தைக் குறிக்கிறது. அல்லது 'மே யோக3ம்' என்றதுக்கு 'என்னோடு சேர்த்தியையுடைய என் ஸ்வபா4வமான ஸங்கல்பம்' என்றும் பொருள்கொள்ளலாம். அந்த ஸங்கல்பம் எத்தகையது என்பதை இந்த ஶ்லோகத்தின் பிற்பாதியாலே விளக்குகிறான். (பூ4தப்4ருத் ந ச பூ4தஸ்த2:) எல்லாப் பொருள்களையும் தாங்குபவன்

भूतभृन्न च भूतस्थो ममात्मा भूतभावनः—सर्वेषां भूतानां भर्ताऽहं, नच तैः कश्चिदपि ममोपकारः। ममात्मैव भूतभावनः—मम मनोमयस्सङ्कल्प एव भूतानां भावयिता धारयिता नियन्ता च॥४॥५॥

நானே. ஆனல் அவற்ருல் எனக்கு எவ்வித உதவியுமில்லேயாகை யாலே நான் அவற்றில் இல்லே என்றும் சொல்லலாம். 'மத்ஸ்தா₂நி ஸர்வபூ₄தாநி' என்று ஏற்கனவே சொன்ன அர்த்த₂த்தை 'பூ₄த ப்₄ருத்' என்றும், 'ந சாஹம் தேஷ்வவஸ்தி₂த:' என்றதை 'ந ச பூ₄தஸ்த₂:' என்றும் அநுவதி₃க்கிருன். 'அஹம்' (நான்) என்னும் பத₃த்தை வருவித்துக்கொள்ளவேண்டும். அல்லது அடுத்தபடியுள்ள 'மமாத்மா' என்பதையே இதற்கும் விஶேஷ்யமாகக்கொண்டு 'எனது ஸங்கல்பமே பூ₄தங்களேத் தாங்குகிறது. அதற்கு அவற்ருல் எவ் வுதவியுமில்லே' என்றும் கொள்ளலாம். தாத்பர்யம் இரண்டுக்கும் ஒன்றே. (மமாத்மா பூ₄தப₄ாவந:) எனது ஸங்கல்பமே எல்லாப் பொருள்களேயும் படைப்பது என்று கூறியது முன்னும் பின்னும் கூறப்படும் த₄ாரகத்வத்துக்கும், நியந்த்ருத்வத்துக்கும் உபலக்ஷணம். ''பஞ்ச பஞ்சநகா₂ ப₄க்ஷ்யா:'' [ரா.கி. 17-37] [ஐந்து நக₂ங்களுடைய ம்ருக₃ங்களில் ஐந்துவகை ம்ருக₃ங்களே பு₄ஜிக்கத்தக்கவை.] என்றவிடத்தில் ஐந்து என்றது பரிஸங்க்₂யாந்யாயத்தாலே ஐந்துவகை தவிர மற்றவை பு₄ஜிக்கத்தகாதவை என்று உணர்த்துவதுபோலே இங்கும் 'என் ஆத்மா எல்லாப் பொருள்களேயும் படைப்பதும், த₄ரிப்பதும், நியமிப்பதுமாகும்' என்றது — மற்ற பொருள் எதுவும் எல்லாப்பொருள்களேயும் படைப்பதும், த₄ரிப்பதும், நியமிப்பதுமாகாது என்னும் கருத்துடையதாகும். 'மமாத்மா' என்னுமிடத்தில் 'ஆத்ம'ஶப்₃த₃ம் மனத்தைக்குறித்து, அந்த மனத்தினல் செய்யப்படும் ஸங்கல்பத்தை இங்கு காட்டுகிறது. அல்லது ஸங்கல்பத்தோடு கூடிய மனத்தையே ஆத்மஶப்₃த₃ம் குறிக்கிறது என்றும் கொள்ளலாம். ''மனோऽகுருத ஸ்யாமிதி'' [ப்₃ருஹ 1-2-1] [நான் எல்லாமாக ஆகக்கடவேன் என்று பரம்பொருள் மனத்தால் ஸங்கல்பித்தது] என்று உபநிஷத்திலும், ''மநஸைவ ஜக₃த்ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரஞ்ச கரோதி ய:'' [வி-பு 5-22-15] [எந்தப் பரமாத்மா இவ்வுலகின் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களே மனத்தாலேயே செய்கிருனே] என்று உபப்₃ரும்ஹணங்களிலும் மனத்தாலேயே ஜக₃த்ஸ்ருஷ்டி முதலானவற்றைச் செய்வதாகச் சொல்லப் பட்டது இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கது. இத்தால், ''கத₂ம் நு புந: உச்யதே 'அஸௌ மம ஆத்மா' இதி? விப₄ஜ்ய தே₃ஹாதி₃ ஸங்க₄ாதம், தஸ்மிந் அஹங்காரம் அத்₄யாரோப்ய லோகபு₃த்₃தி₄ம்

॥ भा ॥ सर्वस्यास्य स्वसङ्कल्पायत्तस्थितिप्रवृत्तित्वे निदर्शनमाह—

यथाऽऽकाशस्थितो नित्यं वायुस्सर्वत्रगो महान्।
तथा सर्वाणि भूतानि मत्स्थानीत्युपधारय॥ ६॥

6. யத₂ாSSகாஶஸ்தி₂தோ நித்யம் வாயுஸ் ஸர்வத்ரகே₃ா மஹாந் ।
தத₂ா ஸர்வாணி பூ₄தாநி மத்ஸ்த₂ாநீத்யுபத₄ாரய ॥

ஸர்வத்ரக₃:-எல்லாவிடத்திலும் ஸஞ்சரிப்பதாய், மஹாந்· பெரியதாய், நித்யம் ஆகாஶஸ்தி₂த:—(எதற்கும் ஆத₄ாரமாயிராத) ஆகாஶத்தில் எப்போதும் இருக்கும், வாயு:—வாயுவானது, யத₂ா — எப்படி என்னையே த₄ாரகனுகவும், நியந்தாவாகவும் கொண்டதாயுள்ளதோ, தத₂ா—அப்படியே ஸர்வாணி பூ₄தாநி—எல்லாப் பொருள்களும், மத்ஸ்த₂ாநி இதி—என்னையே த₄ாரகனுகவும், நியந்தாவாகவும் கொண்டவை என்று, உபத₄ாரய—அறிவாய்.

---

6. வாயுவிசும் புற்றெழுந்து மன்னுமுல கெவ்விடத்தும்
போயுலவுந் தன்மையது போலவே—யேயுமுல
கென்னிடையி லெல்லா மினிதிருக்கு மென்பதனை
நின்னிடையே சால நினே.

அநுஸரந் வ்யபதி₃ஶதி 'மம ஆத்மா' இதி'' [' இது என் ஆத்மா ' என்று எப்படிச் சொல்லப்படுகிறது? தே₃ஹம் முதலான பூ₄தேந்திரியச் சேர்த்தியைப் பிரித்து, அதில் அஹங்காரத்தை ஏறிட்டு உலக அறிவையொட்டி 'என் ஆத்மா' என்கிருன் கண்ணன்] என்று ஶங்கரர் ப₄ாஷ்யமிட்டது பரமாத்மாவான கண்ணனிடம் பொருந்தாதாகையால் ஆத₃ரிக்கத்தக்கதன்று என விளங்குகிறது. ஆக, இவ்விரண்டு ஶ்லோகங்களாலும் மற்ற பொருள்களால் அறியப்படாமலே அவற்றை எம்பெருமான் வியாபித்திருக்கிருன் என்றும், எல்லாவற்றையும் த₄ரிப்பவனுய், நியமிப்பவனுய், படைப்பவனுய், அனைத்துக்கும் ஶரீரியாய், ஶேஷியாயிருக்கிருன் என்றும், ஸங்கல்பத்தாலேயே அனைத்தையும் படைத்தல், த₄ரித்தல், நியமித்தல் முதலானவற்றைச் செய்கிருன் என்றும், மற்ற எப்பொருளுக்கும் இப்பெருமைகள் கிடையா என்றும் சொல்லப்பட்டதாயிற்று. 4,5.

॥ भा ॥ यथा आकाशे अनालम्बने महान् वायुस्स्थितस्सर्वत्र गच्छति ; स तु वायुर्निरालम्ब[स्थितो]नो मदायत्तस्थितिरित्यवश्याभ्यु-

---

விசும்பு உற்று எழுந்து — (எதற்கும் ஆத₄ாரமாயிராத) ஆகாயத்தில் இருந்து எழுந்து, **மன்னும் உலகு எவ்விடத்தும் போய் உலவும் தன்மையது** — காட்சியளிக்கும் உலகத்தில் எல்லாவிடத்திலும் சென்று ஸஞ்சரிக்கும் தன்மையை உடைய, **வாயுபோலவே** — வாயு (என்னையே த₄ாரகனுகவும், நியந்தாவாகவும் கொண்டிருப்பது) போலவே, **ஏயும் உலகு எல்லாம்** — (என்னிடம்) பொருந்திநிற்கும் உலகனைத்தும், **என்னிடையில் இனிது இருக்கும் என்பதனை** — என்னிடத்தில் த₄ரிக்கப்படுவதாய், நியமிக்கப்படுவதாய் இருக்கும் என்னும் விஷயத்தை, **நின்னிடையே சால நினை** — உன் நெஞ்சில் நீ நன்ருக நினைப்பாய்.

---

6. எல்லாப் பொருள்களும் தன் ஸங்கல்பத்தாலேயே ஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளை அடைகின்றன என்று சென்ற ஶ்லோகத்தில் நிரூபிக்கப்பட்டது. அவ்விஷயத்தில் ஒரு த்₃ருஷ்டாந்தத்தைக் காட்டுகிருன் இந்த ஶ்லோகத்தில். (மஹாந் நித்யம் ஆகாஶஸ்தி₂த: ஸர்வத்ரக₃: வாயு: யதா₂) பெரியதாய், எப்பொருளுக்கும் பற்ருயிராத ஆகாஶத்தில் எப்போதுமிருப்பதாய், எங்கும் ஸஞ்சரிப்பதான வாயுவானது எப்படியோ, அதாவது—எப்படி என்னையே தனது ஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளுக்குக் காரணமாகக் கொண்டதாயிருக்கிறதோ; இதற்கு மேலெழுந்தவாரியாகப் பொருள்கொண்ட சிலர், 'எப்படி வாயு ஆகாஶத்திலிருக்கிறதோ அப்படியே எல்லாப் பொருள்களும் என்னிடம் இருக்கின்றன' என்று ஆகாசத்தில் வாயு இருப்பதைத் தன்னிடம் எல்லாப் பொருள்களுமிருப்பதற்கு த்₃ருஷ்டாந்தமாக்கினுர்கள். எல்லாப் பொருள்களுக்கும் ஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளுக்குக் காரணமாயிருக்கும் எம்பெருமானுக்கு வாயுவினுடைய ஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளுக்குக் காரணமல்லாத ஆகாசத்தை த்₃ருஷ்டாந்தமாகக் கூறுவது பொருந்தாதாகையாலே, அப்பொருள் ஒட்டாது. ஆகாஶமானது எந்தப் பொருளுக்கும் ஆத₄ாரமாயிருக்கத் தகாததொன்று. அதிலே வாயு இருக்கிறது. ஆகாஶம் வாயுவை நியமிக்க வல்லமையுடையதன்று. ஆயினும் மிகப்பெரிய தத்துவமான வாயு அதில் எங்கும் ஸஞ்சரிக்கிறது.

पगमनीयः [मयैव धृत इति विज्ञायते]; एवमेव सर्वाणि भूतानि तैरदृष्टे मयि स्थितानि, मयैव धृतानि इत्युपधारय।

ஆகையால் இந்த வாயுவினுடைய ஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளுக்கு ஸர்வ ஶக்தியுடைய பரமாத்மாவே காரணமாயிருப்பவன் என்று ஒப்புக் கொண்டே தீரவேண்டும் என்பது ஶ்லோகத்தின் முற்பாதியின் கருத் தாகும். இங்கு மற்றொரு த்₃ருஷ்டாந்தமும் காணலாம். எதற்கும் ஆத₄ாரமாயிராத ஆகாஶத்தில் பக்ஷிஶரீரம் பறப்பதைக் காண்கிறோம். அந்தப் பக்ஷிஶரீரத்திற்கு ஆகாஶம் ஆத₄ாரமல்ல என்பதையும், அப்பக்ஷியின் ஆத்மாவே ஆத₄ாரம் என்பதையும் உணர்கிறோம். சிறியதான அப்பக்ஷிஶரீரத்திற்கு அதன் ஆத்மா ஆத₄ாரமாயிருப் பதுபோலே, ஆகாஶத்திலிருப்பதாய் அதில் ஸஞ்சரிக்கும் மிகப்பெரிய தான வாயுவுக்கு மிகப்பெரிய ஶக்தியுடைய பரமாத்மாவே காரணமா யிருக்கவேண்டும் என்னும் இந்த த்₃ருஷ்டாந்தத்தைக்கொண்டும் உணரலாம். பக்ஷிஶரீரத்தில் ஆத்மா இருந்து செயல்படுகிறது என்பதை ப்ரத்யக்ஷாநுமானங்களால் அறிகிறோம். வாயுவின் உள்ளி ருந்து அப்படிப் பரமாத்மா நியமிப்பதை நாம் அறியமுடியவில்லையே ? எனில், ''யோ வாயௌ திஷ்ட₂ந் யம் வாயுர் ந வேத₃ யோ வாயும் அந்தரோ யமயதி'' [எவன் வாயுவில் நிற்கிறானோ, எவனை வாயு அறியவில்லையோ, எவன் வாயுவை உள்நுழைந்து நியமிக்கிறானோ.] என்று முன்னெடுத்த ப்₃ருஹதா₃ரண்யக ஶ்ருதியிலிருந்து இவ்வர்த்த₂ம் ஸித்₃தி₄க்கிறதாகையாலே. ப்ரத்யக்ஷாநுமானங்களால் காணுவிடிலும் ஶாஸ்த்ரஸித்₃த₄மான இதை ஒப்புக்கொள்ளத் தட்டில்லை. (தத₂ா ஸர்வாணி பூ₄தாநி மத்ஸ்தா₂நி இத்யுபதா₄ரய) முற்கூறியபடி வாயு வானது தனது ஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளுக்கு என்னையே காரணமாகக் கொண்டதாயிருப்பதுபோலே, எல்லாப் பொருள்களுமே தமது ஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளுக்கு என்னையே காரணமாகக் கொண்டவை என்று அறி வாய், 'மத்ஸ்தா₂நி' என்று இங்கு ஸ்தி₂தியைச் சொன்னது ப்ரவ்ருத்திக் கும் உபலக்ஷணம். த்₃ருஷ்டாந்தத்தில் 'ஆகாஶஸ்தி₂த:' என்று ஸ்தி₂தி யும் 'ஸர்வத்ரக₃:' என்று ப்ரவ்ருத்தியும் சொல்லப்பட்டதாகையால், தா₃ர்ஷ்டாந்திகமான இங்கும் அவ்விரண்டையும் கொள்ளவேண்டு மன்றோ. 'ஈஶ்வரனை அனுமானத்தால் ஸாதி₄க்க இயலாது' என்பது ஶாஸ்த்ரயோநித்வாதி₄கரணத்தில் சொல்லப்பட்டுள்ளது ; அப்படி யிருக்க, இங்கு த்₃ருஷ்டாந்தத்தைக்கொண்டு அநுமானத்தால் ஈஶ் வரனை ஸாதி₄க்கலாமோ? எனில் ஶ்ருதி ஸ்ம்ருதிகளால் தேறிய அர்த் த₂த்தைத் தர்க்கத்தால் உறுதிப்படுத்தலாமாகையாலே குறையில்லை.

यथाऽऽहुर्वेदविदः--* मेघोदयस्सागरसन्निवृत्तिरिन्दोर्विभागः स्फुरितानि वायोः। विद्युद्विभङ्गो गतिरुष्णरश्मेर्विष्णोर्विचित्राः प्रभवन्ति

வேத₃த்தை விளக்கவந்த ரிஷிகளும் இப்படி ஶ்ருதி ஸ்ம்ருதிகளால் தேறிய அர்த்த₂த்தைத் தர்க்கத்தால் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். "மேகோ₄த₃யஸ் ஸாக₃ரஸந்நிவ்ருத்திரிந்தோ₃ர் விபா₄க₃: ஸ்பு₂ரிதாநி வாயோ:। வித்₃யுத்₃விப₄ங்கோ₃ க₃திருஷ்ணரஶ்மேர்விஷ்ணோர்விசித்ரா: ப்ரப₄வந்தி மாயா:॥" [மேக₄ம் தோன்றுவது, கடல் கரைகடக்காமலிருப்பது, சந்திரன் வளர்ந்து தேய்வது, காற்று வீசுவது, மின்னல் மின்னுவது, ஸூர்யனின் ஸஞ்சாரம் ஆகியவையெல்லாம் விஷ்ணுவினுடைய விசித்ரஶக்தியினால் உண்டாகின்றவையேயாகவேண்டும்.] என்னும் ப்ரமாணம் இங்கு அநுஸந்தே₄க்கத்தக்கது. இதன் கருத்தாவது— (1) நம்மால் அறியவொண்ணாத உபாதா₃நம், உபகரணம், ஆஶ்ரயம் முதலானவற்றையுடையவையாய் ஒரு கணநேரத்தில் எத்திசைகளிலும் வ்யாபிக்கின்றவையான நீர்கொண்ட மேக₄ங்கள் உண்டாவது. (2) எல்லா உலகையும் மூழ்கடித்து அழிக்கவல்ல ஶக்தியையுடைய கடலில், ஆகாஶம் அளாவும் அலைகள் கிளம்பி, கரையில் வந்து மோதித் திரும்பிச்செல்வது. (3) ஒரு கணக்கின்படி வளர்வதும் தேய்வதுமாய், கோடு (முனை) உயர்வதும் தாழ்வதுமாயிருக்கும் சந்திரனின் வேறுபாடுகள். (4) எங்கிருந்து எந்தத் திசையில் வருகின்றது என்று அறியமுடியாமல் புல், குன்றுகள், மரங்கள் முதலானவற்றை வாசியறப் பெயர்த்துக்கொண்டுவரும் புயற்காற்று முதலானவை வீசுவது. (5) அக்₃நி, ஸூர்யன், சந்திரன் முதலானவற்றின் ஒளிகளெல்லாம் ஒடுங்கியிருக்கும் மழைகாலத்தில் நடுநிசியிலும் முன்பின் கணங்களில் என்ன ஆகிறது என்று அறியப்படாமல் கணநேரமே மின்னல்கள் மின்னுவது. (6) எதற்கும் பற்றுயிராத ஆகாயத்தில் மிகப்பெரியதான ஸூர்யமண்ட₃லம் காலக் கணக்கிற்குக் கட்டுப்பட்டு, பகல், இரவு, மாஸம், அயனம், வருஷம் முதலானவற்றைக் காட்டிக்கொண்டு ஸஞ்சரிப்பது. இதுபோலவே, (7) ஸூர்ய சந்திரர்களுக்குப் பரிவேஷங்கள் (சூழ்ந்திருக்கும் ஒளி வட்டங்கள்) ஏற்படுவது. (8) ஸூர்யசந்திரர்களுக்கு க்₃ரஹணம் ஏற்படுவது. (9) பல நிறமுடைய இந்திரன்வில் ஆகாயத்தில் தோன்றுவது. (10) ஆலங்கட்டி மழை விழுவது. (11) இடி இடிப்பது, விழுவது. (12) ஆங்காங்கு பூ₄கம்பம் ஏற்படுவது. (13) சுழற்காற்று வீசுவது முதலான பேராச்சரியமான வகைகளையுடைய

मायाः॥ इति ; विष्णोरनन्यसाधारणानि महाश्चर्याणीत्यर्थः। श्रुतिरपि * एतस्य वा अक्षरस्य प्रशासने गार्गि सूर्याचन्द्रमसौ विधृतौ तिष्ठतः (बृ. ५-८-९) * भीषास्माद्वातः पवते, भीषोदेति सूर्यः, भीषास्मादग्निश्चेन्द्रश्च (आ. ८) इत्यादिका॥६॥

॥ भा॥ सकलेतरनिरपेक्षस्य भगवतस्सङ्कल्पात्सर्वेषां स्थितिः प्रवृत्तिश्चोक्ता; तथा तत्सङ्कल्पादेव सर्वेषामुत्पत्तिप्रलयावपीत्याह—

सर्वभूतानि कौन्तेय! प्रकृतिं यान्ति मामिकाम्।
कल्पक्षये पुनस्तानि कल्पादौ विसृजाम्यहम्॥७॥

7. ஸர்வபூ₄தாநி கௌந்தேய! ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்।
கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ₃ விஸ்ருஜாம்யஹம்॥

இவையெல்லாம் எங்கும் வியாபித்திருப்பவனாய், எல்லாம் வல்லவனை விஷ்ணுவினுடைய ஆச்சர்யமான ஶக்தியால் ஏற்படுகிறவையாகவே இருக்கவேண்டும் என்பது இந்தப் பிரமாணத்தின் கருத்து. 'விஷ்ணுவின் விசித்திரமான பொய்களாகவே இருக்கவேண்டும்' என்பது பொருந்தாதாகையாலே, மாயா ஶப்₃த₃ம் வருமிடமெல்லாம் 'பொய்' என்று சிலர் பொருள் கொள்வது முறையற்றது என்றும் இதிலிருந்து விளங்குகிறது. "ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கா₃ர்க்கி₃ ஸூர்யாசந்த்₃ரமஸௌ வித்₄ருதௌ திஷ்ட₂த:" [ப்₃ருஹ 5-8-9] [கா₃ர்க்கி₃! அழியாத இப்பரம்பொருளின் நியமனத்தாலேயே ஸூர்யசந்த்₃ரர்கள் த₄ரிக்கப்பட்டு நிற்கிறார்கள்.] "பீ₄ஷாஸ்மாத்₃வாத: பவதே, பீ₄ஷோதே₃தி ஸூர்ய: பீ₄ஷாஸ்மாத₃க்₃நிஶ்சேந்த்₃ரஶ்ச" [தை-ஆந 8] [இப்பரம்பொருளிடம் ப₄யத்தாலே காற்று வீசுகிறது. ஸூர்யன் உதி₃க்கிறான். அக்₃நி இந்திரன் முதலான தே₃வதைகளும் தத்தம் தொழில்களைச் செய்கிறார்கள்] என்று வேத₃மும், எம்பெருமானே அனைத்தையும் நியமித்து, த₄ரித்து, ஆட்டிவைக்கிறான் என்று முழங்கிற்று. ஆக, இவ்வளவால், எல்லாப் பொருள்களின் ஸ்தி₂திப்ரவ்ருத்திகளும் தனக்கு அதீ₄னமானவை என்று கண்ணன் த்₃ருஷ்டாந்தம் காட்டி நிரூபித்தானாயிற்று. 6.

கௌந்தேய ! — குந்தீபுத்ரனே !, கல்பக்ஷயே—நான்முகனின் ஆயுள் முடிவில், ஸர்வபூ₄தாநி—எல்லாப் பொருள்களும், மாமிகாம்—எனக்கு ஶரீரமான, ப்ரக்ருதிம்—மூல ப்ரக்ருதியை, யாந்தி—அடைகின்றன; தாநி—அவற்றையே, அஹம்—நான், கல்பாதௌ—ஸ்ருஷ்டி காலத்தின் தொடக்கத்தில், புந: விஸ்ருஜாமி—மறுபடியும் படைக்கிறேன்.

7\. முன்னசித்தா மென்னுருவின் முற்றுமிப் பூதங்க
டன்னசிப்பா மூழிச் சமைவிலு—மன்னவற்றை
யாதிகா லத்தே யடையப் படைத்திடுவன்
மீதியான் ருனே விரித்து.

ஊழிச் சமைவிலும் — ஊழிகாலத்தின் முடிவில், இப் பூதங்கள் முற்றும்—இந்த எல்லாப் பொருள்களும், முன் அசித்தாம் என் உருவில்—மூல ப்ரக்ருதியான எனது ஶரீரத்தில், தன் நசிப்பாம்—தன்னடையே லயமடையும்; மீது யான் தானே—அக்காலத்தில் எஞ்சிநிற்கும் யானே, ஆதி காலத்தே—ஆதி ஸ்ருஷ்டி காலத்தில், அன்னவற்றை—அப்பொருள்களை, விரித்து—வெளிப்படுத்தி, அடைய படைத்திடுவன்—முழுவதும் ஸ்ருஷ்டிக்கிறேன்.

7\. வேறு எவரையும் எதிர்பாராத ஜ்ஞாநாதி₃கு₃ணபரிபூர்ணனான எம்பெருமானுடைய ஸங்கல்பத்தால் எல்லாப் பொருள்களுடையவும் ஸ்தி₂தி ப்ரவ்ருத்திகள் நடக்கின்றன என்று இதுவரை சொல்லப்பட்டது. இந்த ஶ்லோகத்தில் அவனுடைய ஸங்கல்பத்தாலேயே எல்லாப்பொருள்களுடைய உத்பத்தி ப்ரளயங்களும் நடக்கின்றன என்று சொல்லப்படுகிறது. (ஸர்வபூ₄தாநி) அசையாத ஸ்த₂ாவரங்களாகவும், அசையும் ஜங்க₃மங்களாகவும் இருக்கும் எல்லாப் பொருள்களும். (மாமிகாம் ப்ரக்ருதிம்) எனக்கு ஶரீரமான மூலப்ரக்ருதியை. 'மாமிகாம்' என்றதால் 'தன்னுடையது' என்று காட்டப்படுகிறது. 'யஸ்ய தம: ஶரீரம்' [ப்₃ருஹ 5-7-13] [எவனுக்குத் தமஸ் எனப்படும் மூலப்ரக்ருதி ஶரீரமோ] என்னும் வேத₃வாக்யத்திலிருந்து, மூலப்ரக்ருதியானது இவனுக்கு ஶரீரமாயிருந்து கொண்டே உடைமையாயுள்ளது என்று ஓதுகையாலே 'மாமிகாம்' என்றதற்கு 'எனக்கு ஶரீரமான' என்று பொருள் கொள்ளப்பட்டது.

॥भा॥ स्थावरजङ्गमात्मकानि सर्वाणि भूतानि, मामिकाम्—मच्छरीरभूताम्, प्रकृतिं — तमश्शब्दवाच्यां नामरूपविभागानर्हां, कल्पक्षये—चतुर्मुखावसानसमये मत्सङ्कल्पाद्यान्ति ; तान्येव भूतानि कल्पादौ पुनर्विसृजाम्यहम् ; यथाऽऽह मनुः—* आसीदिदं तमोभूतं...

(ப்ரக்ருதிம்) எல்லாப் பொருள்களும் லயமடையும் இடமாகக் குறிப்பிடுகையாலே, இங்கு 'ப்ரக்ருதி' என்று நாமரூபப்பிரிவுகளுக்குத் தகுதியற்றதாய், 'தமஸ்' எனப்படுவதான மூலப்ரக்ருதியையே குறிக்கிறது. ''தம: பரே தே₃வ ஏகீப₄வதி'' [ஸுபா₃லோபனிஷத்] [தமஸ் பரமபுருஷனிடத்தில் ஒன்றுகிறது] என்று தமஸ்ஸானது நாமரூபப் பிரிவற்றதாய், ப₄க₃வத்ஸ்வரூபத்தில் ஒன்றுவதாகச் சொல்லப்பட்டதன்றோ. (கல்பக்ஷயே) நான்முகனின் ஆயுள் முடிவான ப்ராக்ருத ப்ரளயகாலத்தில். 'ஸர்வபூ₄தாநி' என்று எல்லாப் பொருள்களும் லயமடைவதாக எடுக்கையாலும், மூலப்ரக்ருதியில் லயமடைவதாகச் சொல்லுகையாலும் இங்கு பிரமனின் ஆயுள் முடிவில் உண்டாகும் ப்ராக்ருத ப்ரளயமே கருதப்படுகிறது என விளங்குகிறது. 'கல்ப' ஶப்₃த₃ம் பிரமனின் கடைசி நாளைக் குறிப்பதாகக் கொள்ளலாம்; அல்லது 'கல்பங்களின் முடிவில்' என்று ப்ராக்ருத ப்ரளயத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அல்லது கல்பஶப்₃த₃ம் பிரமனின் ஆயுளைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். (யாந்தி) அடைகின்றன. ''ஸம்ஹர்த்தா ச ஸ்வயம் ப்ரபு₄:'' [வி-பு 1-2-67] [எம்பெருமான் தானே அனைத்தையும் ஸம்ஹரிக்கிறான்] ''மநஸைவ ஜக₃த்ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரம் ச கரோதி ய:'' [வி-பு 5-22-15] [எந்தப் பரமாத்மா தன் மனத்தாலேயே (ஸங்கல்பத்தாலேயே) உலகைப் படைப்பதையும், அழிப்பதையும் செய்கிறானோ] என்று ப்ரமாணங்கள் கூறுகையால், 'என் ஸங்கல்பத்தால் நானே எல்லாப் பொருள்களையும் மூலப்ரக்ருதியில் லயமடையும்படி செய்கிறேன்' என்று பொருள்சொள்ளவேண்டும். அவை தாமே லயமடைவதாகப் பொருள்கொள்ளக்கூடாது. இந்த ஶ்லோகத்திலேயே பிற்பாதியில் 'அஹம் விஸ்ருஜாமி' என்று தானே இவற்றைப் படைப்பதாகக் கூறுகையாலே, ஸம்ஹரிப்பவனும் இவனே என்று தன்னடையே விளங்கும். (தாநி) லயமடைந்த அந்தப் பொருள்கள் போன்ற பொருள்களையே. ''யதர்த்துஷ்வ்ருதுலிங்கா₃நி நாநாரூபாணி பர்யயே। த்₃ருஶ்யந்தே தாநி தாந்யேவ ததா₂ பா₄வா யுகா₃தி₃ஷு॥'' [வி-பு 1-5-66] [அந்தந்த ருதுக்களில் அந்தந்த ருதுக்களுக்குரிய

सोऽभिध्याय शरीरात्स्वात् (१. ५) इति। श्रुतिरपि * यस्याव्यक्तं शरीरम् (सु. ७) इत्यादिका, * अव्यक्तमक्षरे लीयते, अक्षरं तमसि लीयते (सु. २) * तम आसीत्तमसा गूढमग्रे प्रकेतम् (अष्ट. २·८·९) इति च॥ ७॥

பலவகைப்பட்ட அந்தந்த அடையாளங்கள் மாறி மாறி வருவது போலே ஸ்ருஷ்டி காலத்திலும் பொருள்கள் ஒரே ரீதியில் மாறிமாறி வருகின்றன] என்று சொல்லப்பட்டதன்றோ. (கல்பாதௌ அஹம் விஸ்ருஜாமி) ஸ்ருஷ்டி காலத்தின் தொடக்கத்தில் நானே இப் பொருள்களைப் படைக்கிறேன். (கௌந்தேய !) குந்தீபுத்ரனே ! குந்திக்குப் பிள்ளையாய் நீ தோன்றியவன் என்று உனக்கு நினைவில்லாவிடிலும், ஆப்தர்களுடைய வாக்யத்தால் நீ உறுதியாக அறிவதுபோலே, என் ஶரீரத்திலிருந்து இவ்வுலகம் உண்டாகிறது என்று என் வாக்யத்தாலே அறிவாயாக என்று கருத்து இவ்விஷயம் எம்பெருமான் சொல்லுவது மாத்திரமல்ல; ''யத்₃வை கிஞ்ச மநுரவத₃த் தத்₃பே₄ஷஜம்'' [யஜுர்வேத₃ம்] [மநு சொன்னதெல்லாம் மருந்தாகும்] என்று வேத₃த்தாலும் புகழப்பட்ட ப₄க₃வான் மநுவும் தமது ஸ்ம்ருதியின் தொடக்கத்தில், '' ஆஸீதி₃த₃ம் தமோபூ₄தம் '' என்று ப்ரளயகாலத்தில் இவையெல்லாம் மூலப்ரக்ருதியில் லயித்திருந்தன என்று காட்டி '' ஸோபி₄த்₄யாய ஶரீராத் ஸ்வாத் '' என்று நாராயணன் தன் ஶரீரத்திலிருந்து ஸங்கல்பம்செய்து எல்லாப் பொருள்களையும் படைத்தான் என்று காட்டும் ஏழு ஸ்லோகங்களிலே முழங்கினானன்றோ. இப்படி ப்ரளயகாலத்தில் ஸூக்ஷ்மமாயிருக்கும் ப்ரக்ருதியும் எம்பெருமானுக்கு ஶரீரமாய், அவனைக் காட்டிலும் வேறுபட்டதாயிருக்கிறது என்பதை ' யஸ்யாவ்யக்தம் ஶரீரம்'' [ஸுபா₃ல 7] [எவனுக்கு அவ்யக்தம் ஶரீரமாயுள்ளதோ] '' அவ்யக்தம் அக்ஷரே லீயதே. அக்ஷரம் தமஸி லீயதே'' [ஸுபா₃ல 2] [அவ்யக்த நிலையிலுள்ள அசித்து அக்ஷர நிலையிலுள்ள அசித்தில் லயிக்கிறது. அக்ஷர நிலையிலுள்ள அசித்து தமஸ் எனப்படும் மூலப்ரக்ருதியில் லயிக்கிறது] ''தம ஆஸீத் தமஸா கூ₃ட₄மக்₃ரே ப்ரகேதம்'' [யஜு அஷ்ட 2-8-9] [அப்போது தமஸ எனப்படும் மூலப்ரக்ருதியே இருந்தது. பரம்பொருள் தமஸ்ஸாகிற ஶரீரத்தால் மூடப்பட்டிருந்தது.] என்று இந்த மநுஸ்ம்ருதிக்கு மூலமான வேத₃வாக்யங்களும் ஓதினவன்றோ. ஆக இத்தால் எல்லாப் பொருள்களுக்கும் உத்பத்தி லயங்கள் (ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்கள்) தன்னாலேயே ஏற்படுகின்றன என்று உரைத்தானாயிற்று. 7.

परिणमय्य इमं चतुर्विधं देवतिर्यङ्मनुष्यस्थावरात्मकं भूतग्रामं मदीयाया मोहिन्या गुणमय्याः प्रकृतेर्वशादवशं पुनःपुनः काले काले विसृजामि ॥८॥

விஷயத்தில் பொருந்தாதாகையாலே, 'பூ4தக்3ராம' ஶப்3த3ம் இங்கு பலவித4மான ஶரீரங்களையுடைய ஜீவஸமூஹத்தைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். 'க்ருத்ஸ்நம்' என்று, ஒவ்வொன்றும் பல வகைப்பட்ட தே3வர், மனிதர், திர்யக், ஸ்த2ாவரம் எனும் நாலு வகைப்பட்ட ஶரீரங்களையுடைய ஜீவர் அனைவரையும் காட்டுகிறது. 'இமம்' என்று ப்ரத்யக்ஷம், அநுமானம், ஶாஸ்த்ரம் எனும் ப்ரமாணங்களால் இவர்கள் அறியப்படுகிருர்கள் என உணர்த்தப்படுகிறது. மேலே சொல்லப் போகிறபடி இவர்கள் அனைவரும் ப்ரக்ருதி வஶப் பட்டவர்களாகவும், படைக்கப்படுபவர்களாகவும் ப்ரமாணங்களால் அறியப்படுகிருர்கள் என்று கருத்து. (ப்ரக்ருதே: வஶாத் அவஶம்) ''த்ரிபி4ர் கு3ணமயைர் பா4வை:'' [கீ3தை 7-13] என்னும் ஸ்லோகத்தில் ஏழாம் அத்தியாயத்திலும், ''ப்ரக்ருதிம் மோஹிநீம் ஶ்ரிதா:'' [கீ3தை 9-12] [மயக்கும் ராஜஸதாமஸ ஸ்வபா4வத்தை அடைந்தவர்கள்] என்று அடுத்துள்ள ஸ்லோகத்திலும் கூறியபடி முக்குணங்களாலே மயக்கும் என்னுடைய மூலப்ரக்ருதிக்கு வஶப்பட்டிருக்கையாலே, தன் வஶமிழந்ததாம்படி. (புந: புந: விஸ்ருஜாமி) ஆயிரம்சதுர்யுக3ங்களை ஒரு நாளாகக்கொண்ட நூறு வருடங்களையுடைய பிரமனின் ஆயுளான ஒவ்வொரு கல்பத்திலும் மறுபடியும் மறுபடியும் பலவித4மாகப் படைக்கிறேன். அநாதி3யாய், அனந்தமான காலத்தில் உள்ள ஒவ்வொரு ப்3ரஹ்மகல்பத்திலும், விசித்திரமான நாமம், ரூபம், தே3ஶம், காலம், போ4க3ம் முதலானவற்றை உடையதாம்படி படைக்கிறேன். (ப்ரக்ருதேர் வஶாத் அவஶம் விஸ்ருஜாமி) ப்ரக்ருதிக்கு வசப்பட்டிருக்கையாலே தன் வசமிழந்ததாம்படி என் லீலைக்கு உறுப்பாகப் படைக்கிறேன் என்று க்ரியாவிஶேஷணமாகக் கொள்ளும் போது பொருள். (ப்ரக்ருதேர் வஶாத் அவஶம் பூ4தக்3ராமம்) என்று பூ4தக்3ராமவிஶேஷணமாகக் கொள்ளும்போது, ''புந: புந: விஸ்ருஜாமி'' என்றது—விசித்திரமான ஶரீரேந்திரியங்கள் முதலானவற்றை உடையதாம்படி ஜீவஸமூஹத்தை, 'இவர்கள் எப்போதாவது நம்மை அடையமாட்டார்களா' என்னும் நப்பாசையாலே மறுபடியும், மறுபடியும் படைக்கிறேன்—என்று பொருள்படுகிறது. ''சோம்பாது இப்பல்லுருவையெல்லாம் படர்வித்த வித்தா'' [பெரியதிருவ 18] ''ஒன்றியொன்றி உலகம் படைத்தான்'' [திருவாய் 3-9-10] முதலான அருளிச்செயல்கள் இங்கு அநுஸந்தி4க்கத்தக்கவை. 8.

॥ भा ॥ एवं तर्हि विषमसृष्ट्यादीनि कर्माणि नैर्घृण्याद्यापादनेन भ[ग]वन्तं बध्नन्तीत्यत्राह—

न च मां तानि कर्माणि निबध्नन्ति धनञ्जय।
उदासीनवदासीनमसक्तं तेषु कर्मसु ॥ ९ ॥

9. ந ச மாம் தாநி கர்மாணி நிப₃த்₄நந்தி த₄நஞ்ஜய !।
உதா₃ஸீநவதா₃ஸீநமஸக்தம் தேஷு கர்மஸு ॥

த₄நஞ்ஜய ! — அர்ஜுநா !, தாநி கர்மாணி — அந்த (ஸ்ருஷ்டி முதலான) கர்மங்கள், உதா₃ஸீநவத் ஆஸீநம்— உதா₃ஸீநனைப்போலே இருப்பவனாய், தேஷு கர்மஸு அஸக்தம் — அந்த (ஸ்ருஷ்டி முதலான) கர்மங்களால் ஏற்படும் வைஷம்யத்தில் பற்றில்லாதவனான, மாம் — என்னை, ந ச நிப₃த்₄நந்தி —(வைஷம்யம், நைர்க்₄ருண்யம் முதலான தோ₃ஷங்களை ஏற்படுத்தி) கட்டுப்படுத்துவதில்லை.

---

9. அந்தக் கருமங்க ளாங்கவற்றிற் றொத்தற்ற
சந்தத் தெனைமுயலான் றன்படிபோ—லிந்தப்
பெருந்தகைமை யாலிருக்கும் பெற்றியின னுங்கு
வருந்தவிறை யும்பிணியா வாய்ந்து.

அந்தக் கருமங்கள் — (ஸ்ருஷ்டி முதலான) அந்தச் செயல்கள், ஆங்கு அவற்றில் தொத்து அற்ற சந்தத்து— அத்தகைய அச்செயல்களில் பற்றற்றவனாய், ஸங்கல் பத்தை உடையவனாய், முயலான் தன் படிபோல் இந்தப் பெரும் தகைமையால் இருக்கும் பெற்றியினன் — (ஒரு கார் யததில்) உதா₃ஸீநனாய் இருப்பவனைப்போலே, (ஜீவர்களின் வைஷம்யத்துக்கு முக்கிய காரணமாய் இராமலிருக்கை யாகிற) இந்தப் பெரிய தன்மையோடு இருக்கும் பெரு மையை உடையவனான, எனை—என்னை, ஆங்கு—இந்தச் செயல்களால் ஏற்படும் வைஷம்யத்தால், வாய்ந்து— (தோ₃ஷங்கள்) ஏற்பட்டு, வருந்த—(நான்) தாழ்வுறும்படி யாக, இறையும் பிணியா—சிறிதும் கட்டுப்படுத்தமாட்டா.

॥ भा ॥ न च तानि—विषमसृष्ट्यादीनि कर्माणि मां निबध्नन्ति—मयि नैर्घृण्यादिकं नापादयन्ति; यतः क्षेत्रज्ञानां पूर्वकृतान्येव कर्माणि

---

9. ''முன் ஶ்லோகங்களில் சொன்னபடி, பல வகையான ஏற்றத் தாழ்வுகளை உடைய ஜீவர்களை நீயே ஸ்ருஷ்டித்து, ரக்ஷித்து, ஸம்ஹரிப்பவனானால், அந்த ஸ்ருஷ்டி முதலான செயல்கள் உனக்குக் கருணையின்மை, பக்ஷபாதம் முதலான தாழ்வுகளை விளைத்து, எல்லையற்ற உன் பெருமையைக் குலைத்து விடுமே'' என்று அர்ஜுநனுக்குக் கருத்தாகக் கொண்டு, அந்த தோ3ஷங்கள் தனக்கு ஏற்படமாட்டா என்பதை விவரிக்கிறான் கண்ணன் இந்த ஶ்லோகத்தில். 'ந ச மாம்' என்றவிடத்தில் 'ச'காரம் 'து'காரப்பொருளை உடையதாய், முன் ஶ்லோகத்தின் மேல் எழும் இந்த ஶங்கையைத் தவிர்க்கிறது. (தாநி கர்மாணி) முன் ஶ்லோகங்களில் சொன்ன ஏற்றத் தாழ்வுள்ள ஸ்ருஷ்டி, ஸ்தி2தி, ஸம்ஹாரம், நிக்3ரஹம், அநுக்3ரஹம் அவை காரணமாக நரகமளிப்பது, மோக்ஷமுள்ளிட்ட உயர்பதவிகளை அளிப்பது முதலான செயல்கள். புண்ய பாப கர்மங்களைப் பற்றி முன் ஶ்லோகங்களில் ப்ரஸ்தாவம் இல்லாமையாலே, இங்கு 'தாநி கர்மாணி' (அந்தக் கர்மங்கள்) என்று அவற்றைச் சொல்லுவது பொருத்தமற்றது. ஆகையால் முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம் முதலிய செயல்கள் இங்கு 'தாநி கர்மாணி' என்று எடுக்கப்படுவதாகக் கொள்வதே உசிதம். (மாம் ந நிப3த்4நந்தி) கருணையின்மை, பக்ஷபாதம், நிலைநில்லாத நெஞ்சை உடையவனாயிருக்கை முதலான தோ3ஷங்களை விளைத்து என்னைக் கட்டுப்படுத்துவதில்லை; என் பெருமையைக் குலைப்பதில்லை என்று கருத்து. (ந நிப3த்4நந்தி) இங்கு 'ஸம்ஸார ரூபமான ப3ந்த4த்தை விளைப்பதில்லை' என்று பொருள் கொள்வது பொருந்தாது. ஏனெனில், ஜக3த்ஸ்ருஷ்டி முதலான பரமாத்மாவின் கார்யங்கள் அவனுக்கு ஸம்ஸாரத்துக்குக் காரணமாகின்றன என்று எந்த ஶாஸ்த்ரத்திலும் சொல்லப்படவில்லை. ஶாங்கர பா4ஷ்யத்தில் சொல்லப்பட்டபடி, த4ர்மாத4ர்ம ஸம்ப3ந்த4ம் ஏற்படுவதாக ஐயமுறுவதற்கும் இடமில்லை. அத4ர்மமாகத் தோன்றும் காரியங்களை ஈஶ்வரன் செய்தாலும் அவனைக் கட்டுப்படுத்துவதற்கு எவராலும் முடியாது என்பது தெளிவு. ஆகையால், 'ஏற்றத்தாழ்வுள்ள ஸ்ருஷ்டி முதலியவற்றால் கருணையின்மை முதலான தோ3ஷங்களேற்பட்டு, ஸர்வேஶ்வரனுடைய பெருமை குலைந்துவிடுமே' என்னும் ஶங்கையே இங்கு தவிர்க்கப்படுகிறது என்று கொள்ளவேண்டும். (த4நஞ்ஜய!) க்ஷத்ரிய

देवादिविषमभावहेतवः ; अहं तु तत्र वैषम्ये असक्तः तत्र उदासीनव-

---

த₄ர்மத்தையொட்டி, நீ பல அரசர்களை ஜயித்து, அவர்களுடைய செல்வங்களையும் உனதாக்கிக் கொண்டாலும், ஸ்வத₄ர்மமான இச் செயல் உனக்குப் பாபத்தை அளிக்காதது போலே, நான் செய்யும் ஸ்ருஷ்டி முதலானவையும் எனக்கு தோ₃ஷத்தையளிக்கமாட்டா என்று கருத்து. வைஷம்யம் முதலான தோ₃ஷங்கள் ஏற்படாமல் இருப்பது எப்படி? என்பதை உத்தரார்த்த₄த்தில் விவரிக்கிறான். (தேஷு கர்மஸு அஸக்தம் மாம்) அந்த ஸ்ருஷ்டி முதலான செயல்களால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளில் பற்றற்றிருக்கும் என்னை ; அந்த ஏற்றத் தாழ்வுகளுக்கு முக்கிய காரணமாய் இல்லாமலிருக்கும் என்னை என்று கருத்து. தே₃வர், மனிதர் முதலான ஏற்றத் தாழ்வு களுக்கு அவரவர் முற்பிறவிகளில் செய்த புண்ய பாப கர்மங்களே முக்கிய காரணமாகின்றமையால், அவற்றுக்கு நான் முக்கிய காரண மல்ல என்றபடி. ''நிமித்தமாத்ரமேவாஸௌ ஸ்ருஜ்யாநாம் ஸர்க்க₃ கர்மணி। ப்ரதா₄நகாரணீபூ₄தா யதோ வை ஸ்ருஜ்ய ஶக்தய:॥ ....நீயதே தபதாம் ஶ்ரேஷ்ட₂! ஸ்வஶக்த்யா வஸ்து வஸ்து தாம்॥'' [வி பு 1-4-51,52] [ஸ்ருஷ்டிக்கப்படும் தே₃வர் முதலான வர்களை ஸ்ருஷ்டிக்கும் விஷயத்தில் எம்பெருமான் நிமித்த மாத்ர மாகவே (ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்ரதா₄ன காரணமாகவே) இருக் கிறான். ஜீவர்களுடைய முன் வினைகளும் வாஸனைகளுமே ஏற்றத் தாழ்வுகளுக்கு ப்ரதா₄னகாரணமாயிருக்கின்றன. முனிஶ்ரேஷ்ட₂ரே! தே₃வர் முதலான ஜீவர்கள் தத்தம் முன்வினைகளாகிற ஶக்தியாலேயே அந்தந்த தே₃வாதி₃ரூபத்தை அடைகின்றனர்.] ''கர்மபி₄ர்பா₄விதா: பூர்வை:.........ஸ்தா₂வராந்தா: ஸுராத்₃யாஸ்து ப்ரஜா ப்₃ரஹ்மந்! சதுர்வித₄ா:॥'' [வி-பு 1-5-28,29] [அந்தணரே! தத்தம் பூர்வ கர்மவாஸனைகளோடு கூடியவர்களான தே₃வர், மனிதர், திர்யக், ஸ்தா₂வரம் என்னும் நாலுவகைப்பட்ட ஜீவர்களும் (ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்கு விஷயமாகின்றனர்.] ''ஆப்₃ரஹ்மஸ்தம்ப₃பர்யந்தா ஜக₃த₃ந்தர்வ்யவஸ்தி₂தா:। ப்ராணிந: கர்மஜநிதஸம்ஸாரவஶவர்த்திந:॥'' [விஷ்ணுத₄ர்மம் 104-23] [பிரமன் முதல் புல் ஈறாக இவ்வுலகிலுள்ள எல்லா ஜீவர்களும் தமது முன்வினைகளாலே ஏற்பட்ட ஸம்ஸார வாழ்க்கையிலேயே உழல்கின்றார்கள்.] ''வாசிகை: பக்ஷிம்ருக₃தாம் மாநஸை: அந்த்யஜாதிதாம்। ஶரீரஜை: கர்மதோ₃ஷை: யாதி ஸ்தா₂ வரதாம் நர:॥'' [மநு 12-9] [மனிதன் மனத்தால் செய்த பாபத்தி னால் மறுபிறப்பில் தாழ்ந்த ஜாதி மனிதனாகப் பிறக்கிறான், வாக்கா

दासीनः ; यथाऽऽह सूत्रकारः — * वैषम्यनैर्घृण्ये न सापेक्षत्वात् (२. १. ३४) *न कर्माविभागादिति चेन्नानादित्वात् (३५) इति ॥ ९ ॥

லும் பாபம் செய்தானுகில், மறுபிறப்பில் பக்ஷி, ம்ருக₃ம் முதலான திர்யக்குகளாகப் பிறக்கிருன். உடம்பினுல் ஏற்படும் செயல்களாலும் பாபம் செய்தானுகில், மறுபிறப்பில் மரம், செடி முதலான ஸ்த₂ாவ ரங்களாகப் பிறக்கிருன்.] ''அவித்₃யா கர்மஸம்ஜ்ஞாऽந்யா த்ருதீயா ஶக்திரிஷ்யதே । யயா க்ஷேத்ரஜ்ஞஶக்திஸ்ஸா வேஷ்டிதா ந்ருப ! ஸர்வகா₃ ॥ ஸம்ஸாரதாபாநகிலாநவாப்னோத்யதிஸந்ததாந் । தயா திரோஹிதத்வாச்ச ஶக்தி: க்ஷேத்ரஜ்ஞஸம்ஜ்ஞிதா ॥ ஸர்வபூ₄தேஷு பூ₄பால! தாரதம்யேந வர்த்ததே ॥'' [வி-பு 6-7-62 63] [அரசனே! எல்லா ஶரீரங்களிலும் பரவியிருக்கும் ஜீவர்களாகிற விஷ்ணுஶக்தி, அவித்₃யை என்றும், கர்மம் என்றும் சொல்லப்படும் ஶக்தியினுல் சூழப்பட்டுள்ளது. (அதனுல்) மிகவும் கடுமையான ஸம்ஸார தாபங்கள் அனைத்தையும் அநுப₄விக்கிறது. அந்தக் கர்மத்தினுல் மறைக்கப்பட்டிருக்கிறபடியால் ஜீவர்களாகிற ஶக்தி, தே₃வர் முத லான ஶரீரங்களில் இருப்பதாய், ஜ்ஞாநாநந்த₃ங்களில் ஏற்றத் தாழ்வுகளை உடையதாகக் காணப்படுகிறது.] முதலான ப்ரமாணங் களில் ஏற்றத்தாழ்வுகளுக்குக் கர்மமே முக்கிய காரணம் என்று விளக்கப்பட்டதன்ருே. அந்த ஏற்றத்தாழ்வுகளில் தான் பற்றற்றிருக்கைக்கு த்₃ருஷ்டாந்தம் காட்டுகிருன் — (உதா₃ஸீநவத் ஆஸீநம் மாம்) அந்த ஏற்றத்தாழ்வுகள் விஷயத்தில் உதா₃ஸீநனைப் போலேயிருக்கும் என்னை, ஸ்ருஷ்டி முதலான கர்மங்கள் வைஷம்ய நைர்க்₄ருண்யாதி₃களை விளைத்துக் கட்டுப்படுத்துவதில்லை என்று பூர்வார்த்த₄த்தோடு கூட்டிக்கொள்வது. ஒரு காரியத்தில் உதா₃ஸீநனுயிருப்பவன், அக்காரியத்திற்கு எப்படி முக்கிய காரணமா யிராமல் இருக்கிருனே, அப்படியே ஜக₃த்ஸ்ருஷ்டி முதலானவற்றைச் செய்யுமவனுயினும், நான் உதா₃ஸீநனைப்போலே ஏற்றத்தாழ்வுகள் விஷயத்தில் முக்கியகாரணமாயிராதவனுய் உள்ளேன் என்று கருத்து. ஸ்ருஷ்டி முதலானவற்றுக்கு ப்ரதா₄நகாரணம் எம்பெருமானேயானு லும், அவற்றிலுள்ள ஏற்றத்தாழ்வுகளுக்கு அந்தந்த ஜீவர்கள் செய்யும் புண்யபாபகர்மங்கள் ப்ரதா₄ன காரணமாகின்றனவே யொழிய, எம்பெருமான் ப்ரதா₄னகாரணமாவதில்லை என்று கண்டு கொள்வது. இவ்விஷயத்தை ஸூத்ரகாரரும் பின்வரும் ஸூத்ரங்க ளில் காட்டினுர் :— 1. ''வைஷம்யநைர்க்₄ருண்யே ந ஸாபேக்ஷ த்வாத் ததா₂ ஹி த₃ர்ஶயதி'' [ப்₃ர-ஸூ 2-1-34] [(தே₃வர் முதலான

मयाऽध्यक्षेण प्रकृतिः सूयते सचराचरम्।
हेतुनाऽनेन कौन्तेय! जगद्धि परिवर्वते॥ १०॥

10. மயாऽத்$_4$யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் ।
ஹேதுநாऽநேந கௌந்தேய ! ஜக$_3$த்$_3$தி$_4$ பரிவர்த்ததே ॥

கௌந்தேய!—குந்தீபுத்ரனே! **ப்ரக்ருதி:**—(என்னுடையதான) மூலப்ரக்ருதி, **அத்$_4$யக்ஷேண மயா** — தலைவனான என்னால் (தூண்டப்பட்டதாய்), **ஸசராசரம் ஜக$_3$த்**—அசைவனவும், அசையாதனவும் அடங்கிய உலகத்தை, **ஸூயதே**—(ஜீவர்களின் கர்மாநுகு$_3$ணமாக) ஸ்ருஷ்டிக்கிறது; **அநேந ஹேதுநா**—(ஜீவர்களின் கர்மாநுகு$_3$ணமான என் ஸங்கல்பமாகிற) இந்தக் காரணத்தால், **ஜக$_3$த்**—முற்கூறிய உலகம், **பரிவர்த்ததே ஹி** — ஆவதும், வளர்வதும், அழிவதுமாக ஆகிறதன்றோ.

---

10. என்னோக்கம் பெற்றங் கசித்துச் சராசரத்தை
முன்னோக்கி நின்று முயன்றுபெறு—மிந்நோக்கா
மேதுவினாற் கௌந்தேயா வெவ்வுலகுந் தன்கரும
மீது வளர்தருமே மிக்கு.

கௌந்தேயா!—குந்தீபுத்திரனே! **முன் நோக்கி நின்று**—முன்னதாகவே இதன் ஸத்தையை நோக்கி நின்று,

---

ஏற்றத்தாழ்வுள்ள ஸ்ருஷ்டியினால்) பக்ஷபாதமும், கருணையின்மையும் (ப்$_3$ரஹ்மத்திற்கு) ஏற்படமாட்டா; (ஏற்றத்தாழ்வுள்ள ஸ்ருஷ்டி) கர்மத்தை எதிர்பார்த்திருக்கையால். ஶ்ருதியும் இவ்விஷயத்தைக் காட்டுகிறதன்றோ.] 2. ''ந கர்மாவிப$_4$ாகா$_3$தி$_3$தி சேந்நாநாதி$_3$த்வாது$_3$பபத்$_3$யதே சாப்யுபலப்$_4$யதே ச'' [ப்$_3$ர-ஸூ 2-1-35] [''(ஸ்ருஷ்டி காலத்தில் கர்மமில்லை, (அக்காலத்தில்) ப்$_3$ரஹ்மம் தவிர்ந்த வேறொன்றில்லையென ஶ்ருதி கூறுவதிலிருந்து (ஜீவனில்லை என்று தேறுகிறபடியால்)'' என்று கூறினால் அது சரியல்ல; ஜீவன் அநாதி$_3$யாகையால். (அநாதியாயினும், ப்$_3$ரஹ்மம் ஒன்றே இருந்தது என்ற ஶ்ருதியும்) பொருந்தும். (ஜீவன் அநாதி$_3$ என்று) ஶ்ருதியிலும் காணப்படுகிறது.] ஆக, ஏற்றத்தாழ்வுள்ள ஸ்ருஷ்டி முதலான தன் செயல்கள் கருணையின்மை பக்ஷபாதம் முதலான தாழ்வுகளை விளைத்துத் தன் பெருமையைக் குறைக்கமாட்டா என்று அருளிச்செய்தானாயிற்று. 9.

॥भा॥ तस्मात् क्षेत्रज्ञकर्मानुगुणं मदीया प्रकृतिस्सत्यसङ्कल्पेन मयाऽध्यक्षेण ईक्षिता सचराचरं जगत्सूयते। अनेन क्षेत्रज्ञकर्मानुगुण-

---

முயன்று — இதை ஸ்ருஷ்டிப்பதில் முயன்றுநிற்கும், **என் நோக்கம் பெற்று**—என்னுடைய ஸங்கல்பத்தைப் பெற்று, **அங்கு**—ஸ்ருஷ்டி காலத்திலே, **அசித்து**—அறிவற்றதான மூலப்ரக்ருதி, **சராசரத்தை**—அசைவனவும், அசையாதனவுமடங்கிய இவ்வுலகத்தை, **பெறும்** — ஸ்ருஷ்டிக்கும்; **இந் நோக்காம் ஏதுவினால்**—என்னுடைய ஸங்கல்பமாகிற இந்தக் காரணத்தினால், **எவ்வுலகும்** — எல்லா ஜீவஸமூஹமும், **தன் கருமம் மீது** — தன் புண்ய பாப கர்மம் காரணமாக, **மிக்கு வளர்தருமே** — ஆவதும், வளர்வதும், அழிவதுமாயிருக்கும்.

---

10. ''முன் ஶ்லோகத்தில் சொன்னபடி, கர்மாநுகு$_3$ணமாகவே ஏற்றத் தாழ்வுள்ள ஸ்ருஷ்டி ஏற்படுகிறதாகில், பரிணாமத்தையே இயல்வாகக்கொண்ட மூலப்ரக்ருதியே கர்மாநுகு$_3$ணமாகப் பரிணாமத்தை அடையட்டுமே? ஈஶ்வரனால் உனக்கு என்ன வேலை?'' என்று அர்ஜுனன் ஶங்கிப்பதாக வைத்து இந்த ஶ்லோகத்தை அருளிச்செய்கிறான். (அத்$_4$யக்ஷேண மயா ப்ரக்ருதி: ஸூயதே) என் உடைமையான ப்ரக்ருதி ஜீவர்களுடைய கர்மாநுகு$_3$ணமாகவே பரிணமித்தபோதிலும், தடையற்ற ஸங்கல்பத்தை உடைய தலைவனை என்னால் தூண்டப்பட்டதாய்க்கொண்டே படைக்கிறது. ''கர்மாத்$_4$யக்ஷ: ஸர்வபூ$_4$தாதி$_4$வாஸ:'' [ஶ்வே 6-11] [ஸ்ருஷ்டி முதலான செயல்களுக்குத் தலைவனாய், எல்லாப் பொருள்களிலும் வியாபித்திருப்பவனாயுள்ள பரமாத்மா] ''யோ அஸ்யாத்$_4$யக்ஷ: பரமே வ்யோமந்'' [யஜுர்-அஷ்ட 2-8-9-66] [எவன் இந்த லீலாவிபூ$_4$திக்குத் தலைவனாய், நித்யவிபூ$_4$தியான பரமபத$_3$த்தில் எழுந்தருளியிருக்கிறானோ] ''த்$_4$யாயதே அத்$_4$யாஸிதா தேந தந்யதே'' [மந்த்ரிக 1-4] [அந்தப் பரமாத்மாவால் அதி$_4$ஷ்டி$_2$க்கப்பட்ட மூலப்ரக்ருதி அவனது ஸங்கல்பத்தால் அறியப்பட்டு விரிவுபடுத்தப்படுகிறது] முதலான ப்ரமாணங்கள் இங்கு அநுஸந்தி$_4$க்கத்தக்கவை. 'அத்$_4$யக்ஷ' ஶப்$_3$த$_3$ம் 'தலைவன்' என்று பொருள்படுகிறது. 'அதி$_4$கம் அஶ்நுதே இதி அத்$_4$யக்ஷ:' [மிகுதியான பா$_4$க$_3$த்தை அடைபவன் எவனோ அவன் அத்$_4$

मदीक्षणेन हेतुना जगत्परिवर्तत इति मत्स्वाम्यं सत्यसङ्कल्पत्वं

யக்ஷனுகிருன்] என்று சிலர் பொருள் கொள்ளுகிருர்கள். ப்ராக்ருதி எதைப் படைக்கிறது? எனில், (ஸூயதே ஸசராசரம் ஜகத்) அடுத்த பாதியிலுள்ள 'ஜகத்' என்னும் பதத்தை இங்கும், இங்குள்ள 'ஸசராசரம்' என்னும் பதத்தை அங்கும் கூட்டிக்கொள்ள வேண்டும். அசைவனவும், அசையாதனவும் அடங்கிய உலகை மூலப்ரக்ருதி படைக்கிறது என்றபடி. 'ஸூயதே' எனும் ஶப்தத்தால் ''ஸூயதே புருஷார்த்தம் ச தேனைவாதிஷ்டிதம் ஜகத்'' [மந்த்ரிகோபநிஷத் 1-4] [இந்தப் பரமாத்மாவால் அதிஷ்டிக்கப்பட்ட மூலப்ரக்ருதி—பொருள், இன்பம் ஆகிய புருஷார்த்தங்களையும், (இவற்றை அளிக்கும்) உலகையும் படைக்கிறது.] என்னும் உபநிஷத் வாக்யம் நினைவுறுத்தப்படுகிறது. இந்த பகவத்ஸங்கல்பமே உலகின் ஸம்ஹாரம் முதலானவற்றுக்கும் காரணமாகிறது என்று ஶ்லோகத்தின் பிற்பாதியில் காட்டுகிருன் இனி — (அநேந ஹேதுநா) ஜீவர்களின் கர்மாநுகுணமான எனது ஸங்கல்பமாகிற முற்கூறிய காரணத்தாலேயே. முன்பாதியில் ப்ரக்ருதியினுல் செய்யப்படும் ஸ்ருஷ்டியே ப்ரதானமாகச் சொல்லப்பட்டதாயினும், அந்த ஸ்ருஷ்டியானது ஸம்ஹாரத்திற்கு ஹேது அல்லாமையாலே, அந்த ஸ்ருஷ்டிக்குக் காரணமான ஸங்கல்பமே இங்கும் ஸம்ஹாரத்திற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது என்று கொள்ளவேண்டும். இவ்வண்ணமாக இந்த ஶ்லோகத்தில் உலகின் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்கு மூலகாரணனுயிருப்பவனே அத்யக்ஷனுகிற பரமாத்மா என்று சொல்லப்படுகிறபடியால், விகாரமற்றதாய், கேவலஜ்ஞாநமாத்ரமாயிருப்பது 'அத்யக்ஷ' ஶப்தத்தால் சொல்லப்படுகிறது என்று கூறும் அத்வைதிகளின் பக்ஷம் இங்கு அநாதரிக்கப்பட்டதாயிற்று. (ஜகத் பரிவர்த்ததே ஹி) உலகம்—ஸ்திதி, ஸம்ஹாரம் முதலிய மற்ற நிலைகளையும் மாறிமாறி அடைகிறதன்ருே. ஏழாவது ஶ்லோகத்தில் 'ஸர்வபூதாநி...' என்று ''தன் ஸங்கல்பாதீனமாகவே ப்ரக்ருதியின் ஸ்ருஷ்டி ஸம்ஹாராதிகள் நடக்கின்றன'' என்று தொடங்கப்பட்ட விஷயம் இத்துடன் நிறைவுபெறுகிறது. ஐந்தாவது ஶ்லோகத்தில் ''பஶ்ய மே யோகமைஶ்வரம்'' [ஈஶ்வரனை எனக்குரிய பெருமையைப்பாராய்] என்று தொடங்கப்பட்ட பெருமைகளின் நிரூபணமும் இந்த ஶ்லோகத்துடன் நிறைவடைகின்றது. அவையாவன—கர்மாநுகுணமாக உலகம் படைத்தளித்தழிக்கப்பட்டபோதிலும், இவனே மூலப்ரக்ருதிக்கு அத்யக்ஷனுயிருந்து இவற்றைச் செய்கையால் இவனுடைய ஸ்வாமியா

नैर्घृण्यादिदोषरहितत्वमित्येवमादिकं मम वसुदेवसूनोः ऐश्वरं योगं पश्य। यथाऽऽह श्रुतिः—* अस्मान्मायी सृजते विश्वमेतत्तस्मिंश्चान्यो मायया सन्निरुद्धः। मायां तु प्रकृतिं विद्यान्मायिनं तु महेश्वरम्॥ (श्वे ४. ९) इति॥ १०॥

யிருக்கும் தன்மைக்கும், தடையற்ற ஸங்கல்பத்தை உடையவனுயிருக்கும் தன்மைக்கும் எக்குறையுமில்லை. கர்மாநுகுணமாகவே இவன் ஏற்றத்தாழ்வுள்ள ஸ்ருஷ்டிகளைச் செய்வதால் கருணையின்மை முதலான தோஷங்களும் இவனுக்கு உண்டாகமாட்டா, அடுத்த ஶ்லோகத்தில் சொல்லப்படுவதாய், வஸுதேவனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தமையான அவதாரஸௌலப்யமும் இங்கு சொல்லப்படும் பரத்வத்தோடு சேர்ந்து இவனுக்கு நிறமளிப்பதாகிறது. 'இந்த குணங்களனைத்தையும் பாராய்' என்று இந்த ஆறு ஶ்லோகங்களாலே கண்ணன் அர்ஜுநனுக்குக் காட்டினானாயிற்று. "யுஜ்யதே இதி யோக:" [எது ஸ்வரூபத்தோடு சேர்ந்திருக்கிறதோ அது யோகமாயிற்று] என்னும் வ்யுத்பத்தியினால் யோகஶப்தம் குணங்களைக் காட்டுகிறது. (ஹி) மூலப்ரக்ருதியானது ஈஶ்வரனால் தூண்டப்பட்டே பரிணாமத்தை அடைகிறது என்றும், ஜீவர்கள் கர்மாநுகுணமாக ப்ரக்ருதி வசப்பட்டிருக்கிறார்கள் என்றும் இங்கு சொல்லப்படும் அர்த்தம் ஶ்ருதி ப்ரஸித்தம் என்று 'ஹி' ஶப்தம் காட்டுகிறது. "அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத் தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்த:! மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநம் துமஹேஶ்வரம்" [ஶ்வே 4-9] இந்த மூலப்ரக்ருதியிலிருந்து மாயோனாகிற பரமாத்மா இந்த உலகைப் படைக்கிறான். அந்த உலகில் பரமாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவனான ஜீவன் மாயையாகிற அந்த ப்ரக்ருதியினால் கட்டப்பட்டு நிற்கிறான். மாயை என்பது ப்ரக்ருதியே என்று அறியவேண்டும். மாயையை உடையவனான மாயோனே பெரிய ஈஶ்வரன் என்று அறியவேண்டும்] என்று உபநிஷத்தில் சொல்லப்பட்டதன்றோ. (கௌந்தேய !) நீ பாண்டுபத்னியான குந்தியின் புத்திரன் என்பது எப்படி உண்மையோ, அப்படியே என்னை அத்யக்ஷனாகக் கொண்ட ப்ரக்ருதியினால் இவ்வுலகனைத்தும் படைக்கப்பட்டது என்பதும் உண்மை என்று கருத்து. ஆக, இந்த ஶ்லோகம் ஈறாக "ஸ்வமாஹாத்ம்யம் மநுஷ்யத்வே பரத்வம் ச" [கீதார்த்தஸங்க்ரஹம் 13] என்று ஆளவந்தாரால் அநுஸந்திக்கப்பட்ட எம்பெருமானின் பெருமை அநுஸந்திக்கப்பட்டதாயிற்று. 10.

अवजानन्ति मां मूढा मानुषीं तनुमाश्रितम्।
परं भावमजानन्तो मम भूतमहेश्वरम्॥११॥

11. அவஜாநந்தி மாம் மூட₄ா மாநுஷீம் தநுமாஶ்ரிதம்।
பரம் ப₄ாவமஜாநந்தோ மம பூ₄தமஹேஶ்வரம்॥

மூட₄ா: — அறிவிலிகள், **மம** — என்னுடைய, **பரம் ப₄ாவம்** — மேலான தன்மையை, **அஜாநந்த:** — அறியாதவர்களாய், **பூ₄தமஹேஶ்வரம்**—எல்லாப் பொருள்களுக்கும் பெரிய ஈஶ்வரனாய், **மாநுஷீம் தநும் ஆஶ்ரிதம்**—மனித உருவை எடுத்துக்கொண்டிருப்பவனான, **மாம்** — என்னை, **அவஜாநந்தி**—அவமதிக்கின்றனர்.

---

11. எந்தவுல குக்கு மிறையாகு மென்பெருமை
சந்தமதி னின்றுணர்வு சாராதார்—மந்தராய்
மானிடமா மிவ்வுடலில் வந்துதித்த வென்னையது
தானிடமா நின்றிகழ்வர் தாம்.

மந்தராய்—அறிவிலிகளாய், **எந்த உலகுக்கும் இறையாகும் என் பெருமை சந்தமதில் நின்று உணர்வு சாராதார்**—எல்லாப் பொருள்களுக்கும் இறைவனாயிருக்கும் என்னுடைய பெருமையைத் தங்கள் நெஞ்சில் நிறுத்தி அறிவு பெறாதவர்கள், **மானிடமாம் இவ்வுடலில் வந்து உதித்த என்னை** — மனித உருப்போலிருக்கும் இந்த உருவோடு வந்து அவதரித்திருக்கும் என்னை, **அதுதான் இடமா**—அதுவே காரணமாக, **நின்று இகழ்வர்தாம்** — நிலையாக அவமதிக்கிறார்கள்.

---

11. "ஸ்வமாஹாத்ம்யம் மநுஷ்யத்வே பரத்வம்" [கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹம் 13] [தன்னுடைய பெருமையும், மனிதனாயிருக்கும் போதே பரத்வத்தோடு இருக்கும் தன்மையும்] என்று ஆளவந்தாரால் அநுஸந்தி₄க்கப்பட்டவை சென்ற ஶ்லோகம் ஈருக விவரிக்கப் பட்டன. இவ்விரண்டில், மநுஷ்யத்வே பரத்வத்தை மேலும் விவரிக்கிறன் இந்த ஶ்லோகத்தில். பதின்மூன்ருவது ஶ்லோகம் தொடங்கி "மஹாத்மநாம் விஶேஷ:" [கீ₃தார்த்த₂ 13] என்று ஆளவந்தாரால்

॥ भा ॥ एवं मां भूतमहेश्वरं—सर्वज्ञं सत्यसङ्कल्पं निखिलजगदेककारणं परमकारुणिकतया सर्वसमाश्रयणीयत्वाय मानुषीं तनुमाश्रितं स्वकृतैः पापकर्मभिर्मूढा अवजानन्ति—प्राकृतमनुष्यसमं मन्यन्ते। भूत-

---

அநுஸந்தி4க்கப்பட்ட மஹாத்மாக்களின் சிறப்பை வர்ணிப்பதற்கு உறுப்பாக மஹாத்மாக்களுக்கு எதிர்த்தட்டாயிருக்கும் மூட4ர்களின் தன்மையை இந்த ஶ்லோகத்தாலும், அடுத்த ஶ்லோகத்தாலும் காட்டுகிறான். (பூ4தமஹேஶ்வரம் மாம் அவஜாநந்தி) எல்லாப் பொருள்களுக்கும் தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தாவாயிருக்கும் என்னை அவமதிக்கிறார்கள். இங்கு 'பூ4த' ஶப்3த3ம் 'பூ4-ஸத்தாயாம்' என்னும் தா4துவிலிருந்து உண்டானதாகையாலே, ஸத்தையுடைய எல்லாப் பொருள்களையும் குறிக்கிறது. பூ4தங்களுக்கெல்லாம் பெரிய ஈஶ்வரன் பூ4தமஹேஶ்வரனாகிறான். வெறும் மஹேஶ்வர ஶப்3த3த்தை இட்டால் சிவனைக்குறிப்பதாகச் சிலர் மயங்கக் கூடுமாகையால் 'பூ4தமஹேஶ்வரம்' என்கிறான். "யத்3வேதா3தௌ3" [தை-நா 10-24] என்று தொடங்கும் தைத்திரீய நாராயணவல்லி மந்திரத்தில், வேத3த்தின் ஆதி3யிலும், அந்தத்திலும் ஓதப்படும் ஓங்காரத்திற்குக் காரணமான அகாரத்திற்குப் பொருளாயிருக்கும் விஷ்ணுவே மஹேஶ்வரன் என்று அறுதியிட்டு, அடுத்ததான 11-வது அநுவாகத்தில் அவனே பிரமன், சிவன், இந்திரன் முதலானார்க்கு அந்தர்யாமியாய், பரப்3ரஹ்மமாய், பரதத்வமாய், பரமாத்மாவான நாராயணன் என்று நிர்ணயிக்கப்பட்டதன்றோ. அனைத்துலகுக்கும் தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தாவாக இங்கு தன்னைக் குறிக்கையாலே, பரத்வத்துக்கு உறுப்பான ஸர்வஜ்ஞத்வம் (எல்லாம் அறிந்தவனாயிருக்கை), ஸத்யஸங்கல்பத்வம் (தடையற்ற ஸங்கல்பத்தை உடையவனாயிருக்கை), எல்லாவுலகிற்கும் ஒரே காரணனாய் இருக்கை முதலான கு3ணங்கள் இங்கு உணர்த்தப்படுகின்றன. "பூ4தமஹேஶ்வரம்" என்னும் த4ர்மியைச் சொல்லும் ஶப்3த3த்தை "பரம் பா4வம்" என்னும் த4ர்மத்தைச் சொல்லும் ஶப்3த3த்தோடு கூட்டிப் பொருள்கொள்ளமுடியாதாகையாலே, முற்பாதியிலுள்ள 'மாம்' என்னும் ஶப்3த3த்தோடு கூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது. (மாநுஷீம் தநும் ஆஶ்ரிதம் மாம் மூடா4 அவஜாநந்தி) பரம காருணிகனாகையாலே இந்த லீலாவிபூ4தியிலுள்ளவர்களும் ஆஶ்ரயிப்பதற்காக மனித உருவைப்போன்ற உருவோடு பிறந்திருக்கும் என்னைத் தம்முடைய பாபகர்மங்களாலே அறிவிலிகள் அவமதிக்கிறார்கள்; ப்ராக்ருதமனிதர்களோடு ஒத்தவனாக நினைக்கிறார்கள்.

महेश्वरस्य मम अपारकारुण्यौदार्यसौशील्यवात्सल्यनिबन्धनं मनुष्यत्वसमाश्रयणलक्षणमिमं परं भावमजानन्तो मनुष्यत्वसमाश्रयणमात्रेण मामितरसजातीयं मत्वा तिरस्कुर्वन्तीत्यर्थः॥ ११॥

(மூட₄ா: அவஜாநந்தி) பொற்குடத்தையும், மண்குடத்தையும் குடமாயிருக்கும் தன்மையையிட்டு ஒன்ருய் நினைப்பதுபோலே, எனது அப்ராக்ருத ஶரீரத்தையும், மற்ற மனிதர்களுடைய ப்ராக்ருத ஶரீரத்தையும் அமைப்பில் ஒற்றுமையைப் பார்த்து ஸமமாக நினைக்கிருர்கள். இங்கு 'மாநுஷீம் தநும்' என்றது "மீனேடு ஆமை கேழல் அரி" [பெரிய-திரு 8-8-10] என்று சொல்லப்பட்ட மீன், ஆமை, வராஹம், சிங்கம் முதலான உருவங்களுக்கும் உபலக்ஷணம். 'மூட₄ா:' என்று சொல்லப்பட்ட இவர்களது அறிவின்மைக்கும் இவர்களைப் படைத்த ஸர்வேஶ்வரனை இவன்தானே காரணம் எனில், இவர்களுடைய முற்பிறவிப் பாவங்களையொட்டியே இவர்களை இப்படிப் படைத்திருக்கிருனுகையாலே, இவர்களுடைய அறிவின்மைக்கு இவர்கள்செய்த பாபங்களே காரணமாகும். ஆகையால் இவன்மேல் குற்றமில்லை. இனி, இவர்கள் இப்படி மயங்குவதற்குக் காரணத்தைச் சொல்லுகிறது ஶ்லோகத்தின் மூன்ருவது பாத₃ம்—(மம பரம் ப₄ாவம் அஜாநந்த:) ஏழுலகும் தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தாவாய், எல்லையற்ற கருணை, வண்மை, தாழ்ந்தவர்களோடு ஒரு நீராகப் புரையறக் கலந்து பரிமாறும் நீர்மை, அடியார் குற்றம் காணுமலிருக்கை, கண்டாலும் கு₃ணமாகக் கொள்ளுகை முதலான லக்ஷணங்களையுடைய வாத்ஸல்யம் ஆகிய என்னுடைய கு₃ணங்களினுல் நான் மனித உருவை ஏற்றுக் கொண்டிருக்கையாகிற இந்தப் பெருமையை அறியாதவர்கள் இவர்கள். இதனுலேயே மற்ற மனிதர்களின் உருவிற்கும், என்னுடைய அப்ராக்ருதத் திருமேனிக்கும் வாசி அறியாமல் மயங்குகிருர்கள் என்று கருத்து. இந்த மயக்கத்தாலே—நான் மனித உருவை எடுத்திருப்பதை மட்டும் கண்டு, பரத்வத்தோடு கூடிய எனது இந்த ஸௌலப்₄யம் எனக்குச் சிறப்பையே அளிப்பது என்று அறியாமல் என்னை மற்ற ப்ராக்ருத மனிதர்களோடு ஒத்தவனுக எண்ணி அவமதிக்கிருர்கள் என்பது ஶ்லோகத்தின் பரமதாத்பர்யம். "பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநௌ நாவேத₃விந்மநுதே தம் ப்₃ருஹந்தம்" [யஜு-காட₂கம் 3.9.55] [அனைத்துலகுக்கும் தந்தையாயிருப்பவன் தன்பிள்ளைகளில் ஒருவனைத் தந்தையாகக்கொண்டு ஒவ்வொரு யோனியிலும் பிறக்கிருன். வேத₃மறியாதவன், அவனே பரமாத்மா என்று அறியமாட்டான்.] என்னும் வேத₃வாக்யத்தின் பொருள் இந்த ஶ்லோகத்தால் விவரிக்கப்பட்டதாயிற்று. 11.

मोघाशा मोघकर्माणो मोघज्ञाना विचेतसः।
राक्षसीमासुरीं चैव प्रकृतिं मोहिनीं श्रिताः॥१२॥

12. மோக₄ாஶா மோக₄கர்மாணோ மோக₄ஜ்ஞாநா விசேதஸ: ।
ராக்ஷஸீமாஸுரீம் சைவ ப்ரக்ருதிம் மோஹிநீம் ஶ்ரிதா: ॥

மோஹிநீம்—(என்னுடைய பெருமையை) மறைக்கும், **ஆஸுரீம் ராக்ஷஸீம் ப்ரக்ருதிம்** — அஸுர ராக்ஷஸ ஸ்வப₄ாவத்தை, **ஶ்ரிதா:** — அடைந்திருப்பவர்களாய், **மோக₄ாஶா:**– பயனற்ற விருப்பங்களையுடையவர்களாய், **மோக₄கர்மாண:**– பயனற்ற செயல்களையுடையவர்களாய், **மோக₄ஜ்ஞாநா:**— பயனற்ற (விபரீத) ஜ்ஞானத்தையுடையவர்களாய், **விசேதஸ: ச ஏவ (ப₄வந்தி)**—உண்மையறிவற்றவர்களாகவே ஆகின்றனர்.

---

12. பழுதான வாசை பழுதான கன்மம்
பழுதான ஞானம் படைத்தார்—பழுதான
நெஞ்சினராய் மோகமுறு நேரசுர ராக்கதமாம்
வஞ்சத் தகப்படுவர் வந்து.

மோகம் உறு — மோஹத்தை அடைவிக்கும், **நேர் அசுரராக்கதமாம் வஞ்சத்து வந்து அகப்படுவர்**–அஸுர ராக்ஷஸ வஞ்சக ஸ்வப₄ாவங்களைப் பூர்ணமாக அடைந்திருக்கும் இவர்கள், **பழுதான நெஞ்சினராய்** — நெஞ்சில் உண்மையறிவு இல்லாதவர்களாய், **பழுதான ஆசை** — பயனற்ற விருப்பங்களையும், **பழுதான கன்மம்** — பயனற்ற செயல்களையும், **பழுதான ஞானம்**—பயனற்ற (விபரீத) ஜ்ஞானத்தையும், **படைத்தார்**—பெற்றிருக்கிறார்கள்.

---

12. முன் ஶ்லோகத்தில், மனித உருவை எடுத்திருப்பதையிட்டுத் தன்னை அறிவிலிகள் அவமதிப்பதாகக் கூறினான். அதற்குக் காரணம் யாதென்பதையும், அப்படி அவமதிப்பதால் ஏற்படும் ப₂லனையும் இந்த ஶ்லோகத்தில் விவரிக்கிறான். (ராக்ஷஸீம் ஆஸுரீம் ச மோஹிநீம் ப்ரக்ருதிம் ஶ்ரிதா:) ஸர்வேஶ்வரனான நான் பரமகருணையினாலேயே மனித உருவை எடுத்திருக்கிறேன் என்பதை மறைக்கும் ராக்ஷஸ ஸ்வப₄ாவமான தமோகு₃ணத்தையும், ஆஸுரஸ்வப₄ாவமான ரஜோகு₃ணத்தையும் அடைந்திருப்பவர்கள். தமோகு₃ணத்தை மிகுதி

॥ भा ॥ मम मनुष्यत्वे परमकारुण्यादिपरत्वतिरोधानकरीं राक्षसीमासुरीं च मोहिनीं प्रकृतिमाश्रिताः, मोघाशाः — मोघवाञ्छिताः-निष्फलवाञ्छिताः, मोघकर्माणः — मोघारम्भाः, मोघज्ञानाः — सर्वेषु

யாகவும், ரஜோகு₃ணத்தை அதற்கடுத்தபடியாகவும் கொண்டிருப்பது ராக்ஷஸஸ்வப₄ாவம். ரஜோகு₃ணத்தை மிகுதியாகவும், தமோகு₃ணத்தை அதற்கடுத்தபடியாகவும் கொண்டிருப்பது ஆஸுரஸ்வப₄ாவம். இருவர்க்குமே ஸத்வகு₃ணம் மிகக்குறைந்து, ரஜஸ்தமோகு₃ணங்களால் அமுக்கப்பட்டு வெளிப்படாமலிருக்கும். "யஜந்தே ஸாத்த்விகா தே₃வாந் யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸா:। ப்ரேதாந் பூ₄தக₃ணாம்ஶ்சாந்யே யஜந்தே தாமஸா ஜநா:॥" [கீ₃தை 17-4] [ஸாத்விகர்கள் தே₃வர்களையும், ராஜஸர்கள் யக்ஷர்களையும், ராக்ஷஸர்களையும், இவர்களிலும் வேறுபட்ட தாமஸர்கள் பூ₄தக₃ணங்களையும், ப்ரேதங்களையும் ஆராதி₄க்கிறார்கள்.] என்றும், "மந்யே த்வாம் ராக்ஷஸம் க்ரூரமத₃வா தாமஸாத்மகம்। யஸ்மாத் க்ஷிபஸி கோ₃விந்த₃ம் பாண்ட₃வம் ச த₄நஞ்ஜயம்॥" [பா₄ர.பீ₄ஷ்ம 66-31] [நீ கோ₃விந்த₃னையும், பாண்டு₃புத்ரனை அர்ஜுனனையும் எதிர்க்கிறபடியால் தமோகு₃ணத்தையுடைய கொடிய ராக்ஷஸனாகவே உன்னை எண்ணுகிறேன்.] என்றும் உத்₃கோ₄ஷிக்கும் ப்ரமாணங்கள் இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கவை. இவ்வண்ணமாக அறிவின்மையை விளைக்கும் தமோகு₃ணத்தையும், காமக்ரோத₄ லோப₄ மோஹ மத₃ மாத்ஸர்யங்களை விளைக்கும் ரஜோகு₃ணத்தையும் அடைந்தவர்களாகையாலே ஸர்வேஶ்வரனான நானே பரமகருணையினாலே மனித உருவை அடைந்திருக்கிறேன் என்பதை அறியாமல், காமம், க்ரோத₄ம் முதலான து₃ர்கு₃ணங்களாலே என்னை அவமதிக்கிறார்கள் என்று கருத்து. ஆக, உத்தரார்த்த₄த்தாலே, முன் ஶ்லோகத்தில் சொன்ன அவமதிப்புக்குக் காரணம் விளக்கப்பட்டது. இனி பூர்வார்த்த₄த்தாலே, இவ்வவமதிப்பினாலே எனையும் ப₂லன் விளக்கப்படுகிறது. (மோகா₄ஶா:) பயனற்ற விருப்பத்தை உடையவர்கள். எல்லா விருப்பங்களையும் நேரேயும், ஒவ்வொருவர் மூலமாகவும் நிறைவேற்றும் இவனை அவமதிக்கையாலே, இவர்களது விருப்பங்கள் நிறைவேறாமலே போய்விடுகின்றன என்று கருத்து. "ஜ்யோதிஷ்டோமம் முதலான அந்தந்தக் கர்மங்களை முறைப்படி செய்தால் ஸ்வர்க்க₃ம் முதலான அந்தந்த விருப்பங்கள் நிறைவேறியே தீரவேண்டுமன்றோ" எனில்— (மோக₄கர்மாண:) எல்லாக் கர்மங்களுக்கும் நேராகவோ அல்லது ஒவ்வொரு தே₃வதை மூலமாகவோ ப₂லனளிக்கும் இவனை அவமதிக்கையாலே இவர்கள்

मदीयेषु चराचरेष्वर्थेषु विपरीतज्ञानतया निष्फलज्ञानाः, विचेतसः—तथा सर्वत्र विगतयाथात्म्यज्ञानाः, मां सर्वेश्वरमितरसमं मत्वा मयि यत्कर्तुमिच्छन्ति, यदुद्दिश्यारम्भान् कुर्वते, तत्सर्वं मोघं भवतीत्यर्थः ॥ १२ ॥

செய்யும் ஜ்யோதிஷ்டோமம் முதலான எந்தக் கர்மமும் தொடக்கம் முதல் முறையற்றதாகி ஸித்3தி4க்காமல் போய்விடும். ஆகையால் அந்தக் கர்மப2லமான விருப்பங்களும் ஸித்3தி4க்கமாட்டா. "அறிவுடைய மனிதனுக்கு அவனுடைய அறிவே விருப்பங்களை ஸாதி4த்துக்கொடுக்குமே" எனில்—(மோக4ஜ்ஞாநா:) என் உடைமையான சராசரப் பொருள்களனைத்திலும் விபரீத ஜ்ஞாநத்தையே உடையவர்களாகையாலே பயனற்ற அறிவை உடையவர்களாகிறார்கள் இவர்கள். விபரீதஜ்ஞாநமாகையாலே இவர்களுடைய அறிவு இவர்கள் விருப்பத்தை ஸாதி4த்துக்கொடுக்காது என்று கருத்து. பொதுவாக 'மோக4ஜ்ஞாநா:' என்கையாலே எல்லா விஷயத்திலும் விபரீதஜ்ஞாநத்தை உடையவர்கள் இவர்கள் என்றுகொள்ளவேண்டும். எம்பெருமானை அவமதிக்கையாலே இவர்களது அறிவு இப்படிக் கெட்டுவிடுகிறது என்று கருத்து. அதனால் இவர்கள் ஸ்வதந்த்ரமல்லாத சேதநாசேதநங்களை ஸ்வதந்த்ரப் பொருள்களாகவும், என் உடைமையான அவற்றைத் தம்முடையவையாகவும், ஜட3மல்லாத அப்ராக்ருதமாய், நித்யமான என் தி3வ்யமங்க3ளவிக்3ரஹத்தை ஜட3மான ப்ராக்ருதமாய், அநித்யமாகவும், அஸ்தி2ரமான ப்ராக்ருதப் பொருளை ஸ்தி2ரமாகவும் மயங்கி, முயற்சிகளில் ஈடுபட்டு, விருப்பம் நிறைவேறப் பெறாதவர்களாகிறார்கள் என்று கண்டுகொள்வது. (விசேதஸ:) முற்கூறியபடி விபரீதஜ்ஞாநமே நிறைந்தவர்களாகையாலே உண்மையறிவு அடியோடு இல்லாதவர்களாகிறார்கள். சேதஶ் ஶப்3த3ம் நெஞ்சைக் குறிப்பதாகக்கொண்டால் 'நெஞ்சற்றவர்கள்' என்று ப3த்3த4சேதனரைக் கூறுவது பொருந்தாது. சேதஶ் ஶப்3த3ம் சைதந்யத்தைச் குறிப்பதாகக் கொண்டால் விபரீத ஜ்ஞாநமாகிற சைதந்யம் இவர்களுக்கு இருப்பதாலே சைதந்யமற்றவர்கள் என்று இவர்களைக் கூறுவது பொருந்தாது. ஆகையால் சேதஶ் ஶப்3த3ம் உண்மையறிவைக் குறிப்பதாகக்கொண்டு, 'விசேதஸ:' என்பதற்கு உண்மையறிவற்றவர்கள் என்று பொருள்கொள்ளுவதே பொருந்தும். இவர்களுக்கு உண்மையறிவு இல்லாமையாலே எல்லா விஷயங்களிலும் விபரீதஜ்ஞானமே ஏற்பட்டு, இவர்கள் செய்யும் கர்மங்கள் பயனற்றவையாகி, விருப்பங்களும் நிறைவேறாமல் போகின்றன என்பது பூர்வார்த்த4த்தின் திரண்ட பொருள்.

महात्मानस्तु मां पार्थ दैवीं प्रकृतिमाश्रिताः ।
भजन्त्यनन्यमनसो ज्ञात्वा भूतादिमव्ययम् ॥ १३ ॥

13. மஹாத்மாநஸ்து மாம் பார்த்த₂! தை₃வீம் ப்ரக்ருதிமாஶ்ரிதா: ।
ப₄ஜந்த்யநந்யமநஸோ ஜ்ஞாத்வா பூ₄தாதி₃மவ்யயம் ॥

பார்த்த₂!—குந்தீபுத்ரனே!, **தை₃வீம் ப்ரக்ருதிம் ஆஶ்ரிதா:**- தே₃வஸ்வப₄ாவத்தை அடைந்திருப்பவர்களான, **மஹாத்மாந: து**—மஹாத்மாக்களான ஜ்ஞாநிகளோவெனில், **மாம்** — என்னை, **பூ₄தாதி₃ம்** — எல்லாப் பொருள்களுக்கும் ஆதி₃ காரணமாய், **அவ்யயம்** — அழிவற்றவனாக, **ஜ்ஞாத்வா** — அறிந்து, **அநந்யமநஸ:** — (ப₄க்தி தவிர) வேறொன்றில் நெஞ்சு செலுத்தாதவர்களாய், **ப₄ஜந்தி** — (என்னிடம்) ப₄க்தி செலுத்துகிறார்கள்.

---

13. **மிக்கமனத் தாருலகில் வீயா முதலாகி**
யொக்கமனத் துன்னிவே றொன்றறியாத்—தக்கமனத்
தான்றவரென் னைப்பணிவ ராங்கவர்க டிவ்வியமா
யேன்றவியல் பெற்றியல்வா ரிங்கு.

திவ்வியமாய் ஏன்ற இயல் பெற்று இங்கு இயல்வார்— தெய்வத்தன்மை பொருந்திய ஸ்வபா₄வத்தைப் பெற்று, இவ்வுலகில் வாழ்பவர்களாய், **மிக்க மனத்தார்** — சிறந்த நெஞ்சையுடையவர்களான, **தக்க மனத்து ஆன்றவர் அவர்கள்**-நன்னெஞ்சையுடைய மஹாத்மாக்களான அவர்களோ வெனில், **ஆங்கு உலகில் வீயா முதலாகி** — இவ்வுலகிற்கு அழியாத முதற்காரணமாகி நிற்கும், **என்னை** — என்னை, **வேறொன்று அறியா ஒக்க மனத்து**—(ப₄க்திதவிர) வேறொன்று

ஆக. ஸர்வேஶ்வரனை என்னை மற்றவர்களோடு ஒத்தவனாக எண்ணி, இவர்கள் எந்தச் செயலைத் தொடங்கினாலும் அவையனைத்தும் பயனற்றதாகி இவர்கள் விருப்பம் எதுவும் நிறைவேறாமலே போகிறது என்றதாயிற்று. **12.**

॥ भा ॥ ये तु स्वकृतैः पुण्यसञ्चयैः मां शरणमुपगम्य विध्वस्तसमस्तपापबन्धाः दैवीं प्रकृतिमाश्रिताः महात्मानः,

---

அறியாத தங்களுக்குத் தகுந்த நெஞ்சாலே, **உன்னி**—நினைத்து, **பணிவர்**—ப4க்திசெய்வார்கள்.

---

13. அர்ஜுனனுக்கு ப4க்தியோக3த்தில் ருசி உண்டாவதற்காக ப4க்தர்களில் தலைசிறந்தவர்களாய், ஸ்வயம் ப்ரயோஜன ப4க்தியை யுடையவர்களாய், "வாஸுதே3வஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா" [7-19] என்று சொல்லப்பட்டவரான தலைசிறந்த ஜ்ஞானிகளின் பெருமையை இந்த ஶ்லோகத்தில் கூறுகிறான்; மேல் ஶ்லோகங்களில் மஹாத்மாக்களாவதற்கு முந்திய நிலையிலுள்ள உபாஸகஜ்ஞாநிகளின் பெருமையையும் விவரிக்கிறான். முன்னிரண்டு ஶ்லோகங்களில் காட்டப்பட்ட அறிவிலிகளே நிறைந்திருக்கும் இவ்வுலகில் உன் அவதாரம் பயனற்றதாகுமே? என்னும் ஶங்கை எழ, அவதாரத்தைப் பயனடையச் செய்யும் மஹாத்மாக்களின் பெருமையை வர்ணிக்கிறான். "நாவேத3விந்மநுதே தம் ப்3ருஹந்தம்" [யஜு காட2கம் 3-9-55] [எல்லா யோனிகளிலும் அவதரிப்பவன் ஸர்வ லோக பிதாவான பரம்பொருளே என்று உணரமாட்டான் வேத3 மறியாதவன்] என்னும் ஶ்ருதியின் அர்த்த2த்தை முன்னிரு ஶ்லோகங்களும் விளக்கின. "தஸ்ய தீ4ரா: பரிஜாநந்தி யோநிம்" [புருஷஸூ 2-3] [அறிவாளிகளில் சிறந்தவர்களே அவனுடைய அவதார ரஹஸ்யத்தை அறிகிறார்கள்.] என்ற ஶ்ருதியின் அர்த்த2த்தை இனிவரும் ஶ்லோகங்களில் விவரிக்கிறான். (மஹாத்மாநஸ்து) மஹாத்மாக்களோவெனில்: 'து' ஶப்3த3ம் முன்னிரு ஶ்லோகங்களில் சொல்லப்பட்டவர்களுக்கு நேர் எதிர்த்தட்டானவர்கள் இவர்கள் என்று காட்டுகிறது. "து3ஷ்க்ருதிந:" [கீ3தை 7-15] என்று சொல்லப்பட்ட நாலுவகைப்பட்ட பாபிகளில் உச்சநிலையிலிருப்பவர்கள் அவர்கள். "ஸுக்ருதிந:" [7-16] என்று சொல்லப்பட்ட புண்ய சாலிகளில் உச்சநிலையிலிருப்பவர்கள் இவர்கள். ஸர்வேஶ்வரனை அவமதிக்கும் பாபிகள் அவர்கள். "வாஸுதே3வஸ்ஸர்வம்"[7-19] "மாமேவ யே ப்ரபத்3யந்தே" [7-14] என்கிறபடியே ஸர்வேஶ்வரனையே எல்லாமாகப்பற்றி எல்லாப் பாபங்களும் நீங்கப்பெற்றவர்கள் இவர்கள். மயங்கவைக்கும் அஸுர ராக்ஷஸ ஸ்வபா4வத்தை யுடையவர்கள் அவர்கள். மயர்வற மதிநலம் அருளப் பெற்ற தே3வஸ்வபா4வத்தை உடையவர்கள் இவர்கள்.

ते भूतादिमव्ययम्—वाङ्मनसागोचरनामकर्मस्वरूपं परमकारुणिकतया साधुपरित्राणाय मनुष्यत्वेनावतीर्णं मां ज्ञात्वाऽनन्यमनसो मां भजन्ते;

(தைவீம் ப்ரக்ருதிமாஶ்ரிதா: பஜந்தி) தேவர்களுக்குரிய ஸாத்விக ஸ்வபாவத்தின் உச்சநிலையையடைந்தவர்களாகையாலே என்னிடமே பக்தி செலுத்துகிறார்கள். இந்த பக்தியை மோக்ஷோபாயமாக நினைத்து அநுஷ்டிக்கிறார்களோ? எனில்— (அநந்யமநஸ:) பக்தி தவிர வேறெதிலும் நெஞ்சு செலுத்தாதவர்கள். நானே அவர்களுக்கு மிகவும் இனியவனாகையாலே, என்னிடம் அன்பு செலுத்தாவிடில் தம்முடைய மனமும், ஆத்மஸ்வரூபமும், வெளி இந்திரியங்களும் தரிக்கமாட்டாவாகையாலே என்னுடைய பக்தியையே ஸ்வயம் ப்ரயோஜனமாகக்கொண்டு. அதை மோக்ஷோபாயமாகவும் கருதாமல் என்னிடம் பக்தி செலுத்துகிறார்கள் என்று கருத்து. 'ஸ மஹாத்மா' [7-19] என்று சொல்லப்பட்ட 'மஹாத்மா' என்னும் பதத்தை ப்ரயோகித்திருக்கையாலும் 'அநந்ய மநஸ: பஜந்தி' என்று பக்தி தவிர வேறு பயனைக் கருதாதவர்கள் என்று கூறியிருக்கையாலும், ஆழ்வார்களைப் போன்ற ஸாத்யபக்திநிஷ்டர்களே இங்கு கூறப் படுகிறார்கள் என்று விளங்குகிறது. அதனாலேயே பாஷ்யகாரரும் "மத்ப்ரியத்வாதிரேகேண மத்பஜநேந விநா மநஸஶ்சாத்மநஶ்ச பாஹ்யகரணாநாம் ச தாரணமலபமாநா மத்பஜநைகப்ரயோஜநா பஜந்தே" [நானே அவர்களுக்கு மிகவும் இனியவனாகையாலே, என்னிடம் அன்பு செலுத்தாவிடில் தம்முடைய மனமும், ஆத்மஸ்வரூபமும், வெளி இந்திரியங்களும் தரிக்கமாட்டாவாகையாலே என்னுடைய பக்தியையே ஸ்வயம்ப்ரயோஜனமாகக்கொண்டு (அதை மோக்ஷோபாயமாகவும் கருதாமல்) என்னிடம் பக்தி செலுத்துகிறார்கள்.] என்று அருளிச்செய்தார். "சிவனொடு பிரமன் வண் திருமடந்தை சேர் திருவாகம் எம்மாவியீரும்" [திருவாய் 9-9-6] "வேம் எமதுயிர் அழல் மெழுகில் உக்கே" [திருவாய் 10-3-6] "வேட்கை நோய் மெல்லாவி உள்ளுலர்த்த" [திருவாய் 2-1-10] என்று ஆழ்வாரும் எம்பெருமானைப் பெருவிடில் தம் ஆத்மஸ்வரூபம் சேதிக்கப்பெறுவதுபோலும், நெருப்பிலிடப்பட்டு உருகுவதுபோலும், உலர்வதுபோலும் துடித்தார். "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" [பெரியதிருவ 34] "காலுமெழா கண்ணநீரும் நில்லா உடல் சோர்ந்து நடுங்கி, குரல் மேலுமெழா மயிர்க்கூச்சுமறா என தோள்களும் வீழ் வொழியா, மாலுகளா நிற்கும் என் மனனே" [பெரியாழ்திரு 5-3-5] என்றும், "முடியானே" [3-8] என்னும் திருவாய்மொழிப் பாசுரங்களி

मत्प्रियत्वातिरेकेण मद्भजनेन विना मनसश्चात्मनश्च बाह्यकरणानां च धारणमलभमाना मद्भजनैकप्रयोजना भजन्ते ॥ १३ ॥

லும் நெஞ்சும், வெளி இந்திரியங்களும் எம்பெருமானிடம் ப₄க்தி செலுத்தாவிடில் த₄ரிக்கமாட்டாமையைப் பேசினார்கள் ஆழ்வார்கள். இப்படி ப₄க்தி செலுத்தத்தக்க பெருமை உன்னிடம் உண்டோ? எனில் கூறுகிறான்—(பூ₄தாதி₃ம் அவ்யயம் மாம் ஜ்ஞாத்வா) எல்லாப் பொருளுக்கும் ஆதி₃காரணமாய், அழிவற்றவனாய், கண்ணனாய் அவதரித்திருக்கும் என்னை அறிந்து. 'பூ₄தாதி₃ம்' என்று காரணத்வத்தைச் சொல்லுவதன்மூலம் தன்னுடைய பரத்வத்தைக் காட்டுகிறான். 'மாம்' என்று தன் திருமேனியைத் தொட்டுக் காட்டி, அவதார ஸௌலப்₄யத்தைக் காட்டுகிறான். இந்த அவதாரமானது கருணையைக் காரணமாகக் கொண்டதாய், கர்மம் காரணமாக ஏற்படாததாயிருக்கையாலே, கர்மம் காரணமாகப் பிறக்கும் மற்றவர்களுக்குப்போலே தன்னுடைய அறிவு பிறக்கப் பிறக்க மழுங்காது என்பதை 'அவ்யய' ஶப்₃த₃த்தாலே காட்டுகிறான். 'ப₃ஹுதா₄ விஜாயதே' [பு-ஸூ 2] [பலபடியாகச் சிறப்புறப் பிறக்கிறான்] 'ஸ உ ஶ்ரேயாந் ப₄வதி ஜாயமாந:' [யஜுர்-அஷ்டகம் 3-6-1-3] [அவன் பிறந்த பின்பே பெருமை பெறுகிறான்] என்று வேத₃மும், "ஜந்ம கர்ம ச மே தி₃வ்யம்" [கீ₃தை 4-9] [என் பிறப்பும் செயல்களும் அப்ராக்ருதமானவை] என்று இக்கண்ணனும், "பலபிறப்பாய் ஒளிவருமுழுநலம்" [திருவாய் 1-3-2] என்று ஆழ்வார்களும் இப்பெருமையை அருளிச்செய்தார்களன்றோ. ஆக, வாக்குக்கும், மனத்துக்கும் எட்டாத திருநாமங்களையும், செயல்களையும், ஸ்வரூபத்தையும் உடையவனாயிருக்கையாகிற பரத்வத்தைக்கொண்டிருந்தபோதிலும், பரம கருணையுடையவனாகையாலே நல்லோர்களைக் காப்பதற்காக மனிதனாய் அவதரித்திருக்கும் ஸௌலப்₄யத்தையுடையவன் என்றும், உடையவனாகையாலே உடைமையை விடமாட்டாமல் நாட்டில் பிறந்து படாதன படுமவன் என்றும் உணர்ந்து என்னிடம் ஸ்வயம்ப்ரயோஜனமான அன்பைச் செலுத்துகிறார்கள் என்று கருத்து. இந்த ஶ்லோகம் உபாஸக ஜ்ஞாநிகளையே குறிப்பதாகக்கொண்டு "ஆர்த்தாத்₃யதி₄கார்யந்தரவ்யவச்சே₂த₃ார்த்த₂த்வாத் அநந்யப்ரயோஜநத்வவிவக்ஷா அத்ர உசிதா" [ஆர்த்தன், அர்த்தா₂ர்த்தி₂, ஜிஜ்ஞாஸு என்னும் மற்ற மூன்று அதி₄காரிகளையும் தவிர்ப்பதற்காகவே 'அநந்ய மநஸ:' என்று கீ₃தையிலும், "மத்₃ப₄ஜநைக ப்ரயோஜநா:" என்று பா₄ஷ்யத்திலும் உள்ள பத₃ங்கள் எழுந்தனவாகையாலே (உபாஸனத்தைச் சொல்லும் இந்த ப்ரகரணத்தையொட்டி) எம்

सततं कीर्तयन्तो मां यतन्तश्च दृढव्रताः।
नमस्यन्तश्च मां भक्त्या नित्ययुक्ता उपासते॥ १४॥

14. ஸததம் கிர்த்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்$_3$ருட$_4$வ்ரதா:।
நமஸ்யந்தஶ்ச மாம் ப$_4$க்த்யா நித்யயுக்தா உபாஸதே॥

மாம்—என்னை, **ப$_4$க்த்யா**—ப$_4$க்தியோடு, **ஸததம்**—எப்போதும், **கிர்த்தயந்த:**—ஸங்கீர்த்தனம் செய்கிறவர்களாய், **த்$_3$ருட$_4$வ்ரதா:** — உறுதியான ஸங்கல்பத்தையுடையவர்களாக, **யதந்த: ச**—(என் விஷயமான அர்ச்சனம் முதலிய செயல்களில்) முயல்கின்றவர்களாய், **மாம் நமஸ்யந்த: ச**—என்னை வணங்குகின்றவர்களாய், **நித்யயுக்தா:**—என்னோடு என்றும் சேர்ந்திருப்பதை விரும்புகின்றவர்களாய், **உபாஸதே**—உபாஸிக்கிறார்கள்.

---

14. எந்நாளு மென்னைத் துதித்தே யியற்றியுடன்
மெய்ந்நா மனத்தான் மிகப்பணிந்து—தன்னார்ந்த
பத்தியுட னென்னைப் பயிலுறுவார் தாமென்றுஞ்
சித்தியினைச் சேர்ந்தார் செறிந்து.

எந்நாளும்—எப்போதும், **என்னை துதித்தே** — என்னை ஸங்கீர்த்தனம் செய்து, **இயற்றியுடன்** — முயற்சியோடும், **தன் ஆர்ந்த பத்தியுடன்**—நிறைந்த அன்புடனும், **மெய்ந்நா மனத்தால் மிகப் பணிந்து** — பொய்யில்லாத நாவாலும், மனத்தாலும் மிகவும் வணங்கி, **என்றும் சித்தியினை செறிந்து சேர்ந்தார்தாம்** — என்னோடு எப்போதும் கூடியிருக்கும் பேற்றை விரும்புகின்றவர்களாய், **என்னை பயிலுறுவார்**—என்னை உபாஸிக்கிறார்கள்.

பெருமானைத் தவிர வேறு எவரையும் பயனாகக் கொள்ளாத உபாஸக ஜ்ஞானிகளை இங்கு குறிப்பதாகக் கொள்ளுவதே உசிதம்.] என்று தாத்பர்யசந்த்$_3$ரிகையில் அருளினார் தே$_3$ஶிகன். (பார்த்த$_2$!) என் அத்தையான ப்ருதை$_2$ எனப்படும் குந்திக்கு இந்திரனின் அநுக்$_3$ரஹத்தாலே பிறந்த நீ தே$_3$வப்ரக்ருதியேயாகையாலே, நீயும் இத்தகைய மஹாத்மாவான ஜ்ஞானியாகவேணும் என்று கருத்து. ஆக, இந்த ச்லோகத்தால் ஜ்ஞானிகளில் தலைசிறந்த மஹாத்மாக்களின் பெருமையைப் பேசினாரயிற்று. 13.

14. உபாஸகர்களின் பரிபக்குவநிலையான ஸ்வயம் ப்ரயோஜன பக்தியையுடைய மஹாத்மாக்களின் பெருமை சென்ற ஶ்லோகத்தில் வர்ணிக்கப்பட்டது. இனி இரண்டு ஶ்லோகங்களாலே ஸாதன பக்திநிஷ்டர்களான உபாஸகர்களின் பெருமை விவரிக்கப்படுகிறது. இந்த ஶ்லோகத்தில் ''யதந்த: த்ருடவ்ரதா: உபாஸதே'' என்னும் பதங்கள் இவர்கள் ஸாதனபக்திநிஷ்டர்கள் என்பதையும், அடுத்த ஶ்லோகத்திலுள்ள 'அந்யே' என்னும் பதம்—13-வது ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஸ்வயம்ப்ரயோஜன பக்திநிஷ்டர்களைக் காட்டிலும் வேறுபட்டவர்கள் என்பதையும் காட்டுகிறது. இந்த ஶ்லோகம் உபாஸகர்களையே குறிக்கிறது என்று தெளிவாகையால், அடுத்த ஶ்லோகத்திலுள்ள 'அந்யே' என்னும் பதத்தை இங்கும் வருவித்துக் கொள்ளவேணும். இந்த ஶ்லோகத்தில் உபாஸனத்தின் தொடக்க நிலையிலுள்ளவர்களையும், அடுத்த ஶ்லோகத்தில் உபாஸனத்தின் முற்றிய நிலையிலுள்ளவர்களையும், முந்திய ஶ்லோகத்தில் உபாஸனம் பரிபக்குவமடைந்து, ஸ்வயம் ப்ரயோஜன (ஸாத்ய) பக்திநிஷ்டர்களானவர்களையும் குறிப்பிடுகிறான் என்பது குறிக்கொள்ளத்தக்கது. 'வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா' [7-19] [வாஸுதேவனே எல்லாம் என்று நினைப்பவனே மஹாத்மா.] என்று ஏழாமத்தியாயத்தில் கண்ணனால் கொண்டாடப்பட்டவனாய், ஸித்தோபாயநிஷ்டனாய், ஸ்வயம் ப்ரயோஜனபக்திநிஷ்டனான அதிகாரியே 'மஹாத்மா' எனும் ஶப்தத்துக்கு முக்யார்த்தமாகையாலே, சென்ற ஶ்லோகத்தில் 'மஹாத்மாந:' என்று அவர்களை எடுத்தான். இவ்விரு ஶ்லோகங்களிலும் எடுக்கப்பட்ட ஸாதனபக்திநிஷ்டர்கள், அவர்களைக் காட்டிலும் வேறுபட்டவர்கள் என்பது தோற்ற அடுத்த ஶ்லோகத்தில் 'அந்யே' என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டது. ஆயினும், அவர்களும் மஹாத்மாக்களாவதற்கு முந்திய நிலையிலிருப்பவர்களாய், விரைவிலேயே மஹாத்மாக்களாகக் கூடியவர்களாய், இக்காரணத்தாலேயே மஹாத்மகல்பர்களாயிருக்கையாலே அடுத்த ஶ்லோகத்தின் பாஷ்யத்தில் 'அந்யேऽபி மஹாத்மாந:' என்று பாஷ்யகாரர் அருளிச்செய்தார். உபாஸகர்களுக்குச் சொல்லப்படும் கீர்த்தன நமஸ்காராதிகள் அவர்களுடைய பரமபரிபக்குவநிலையான ஸ்வயம் ப்ரயோஜன பக்தியையுடைய மஹாத்மாக்களான ஆழ்வார்களுக்கும் மிகப் பொருந்துமாகையால், இந்த ஶ்லோகங்களிலெல்லாம் ஆழ்வார்களைத் திருவுள்ளத்தில் கொண்டே எம்பெருமானார் பாஷ்யமிட்டருளியிருக்கிறார் என்பது குறிக்கொள்ளத்தக்கது. ஆகையாலேயே ஸாதனபக்திநிஷ்டர்களான உபாஸகர்களல்லாதபோதிலும் ஆங்காங்கு பாஷ்யகாரர் திருவுள்ளத்தில்கொண்ட ஆழ்வார்களின்

ஸ்ரீஸூக்திகளை எடுத்துக் காட்டுகிறோம். பட்டர் தம் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் உத்தரஶதகத்தில் ''நித்யம் காம்யம்'' [84] என்று தொடங்கும் ஶ்லோகத்தில் கர்மயோகநிஷ்டர்களையும், ''ப்ரத்யஞ்சம் ஸ்வம்'' [85] என்று தொடங்கும் அடுத்த ஶ்லோகத்தில் ஜ்ஞானயோகநிஷ்டர்களையும் வர்ணித்தபின்பு, இந்த கீதாஶ்லோகத்தையும், இவ்வத்தியாயத்தின் 29-வது ஶ்லோகத்திலுள்ள 'மயி தே தேஷு சாப்யஹம்' என்னும் பகுதியையும் திருவுள்ளத்திற்கொண்டு,

''அத ம்ருதிதகஷாயா: கேசிதாஜாநதாஸ்ய-
த்வரித ஶிதிலசித்தா: கீர்த்திசிந்தாநமஸ்யா: |
விதததி நநு பாரம் பக்திநிக்நா லபந்தே
த்வயி கில ததமே த்வம் தேஷு ரங்கேந்த்ர! கிம் தத் ||''[86]

[ஸ்ரீரங்கநாதரே! (கர்ம ஜ்ஞாந யோகங்களாலே பக்தி யோகம் தொடங்குவதற்குத் தடையாயிருக்கும்) பாபங்கள் நீங்கப்பெற்றவர்களாய், இயற்கையான அடிமையில் பதற்றத்தை உடையவர்களாய், உள்ளம் நைந்தவர்களாயிருக்கிற பக்தியோகநிஷ்டர்களான சிலர் ஸங்கீர்த்தனம், சிந்தனம், நமஸ்காரம் ஆகியவற்றைச் செய்கிறார்கள். அவர்களும் (இதன் பலனைப்) பரமபதத்தை அடைகிறார்கள். அவர்கள் தேவரீரிடத்திலே இருக்கிறார்களன்றோ; (இது பொருத்தம்). தேவரீர் அவர்களிடத்தில் இருப்பதாக (கீதையில்) அருளிச்செய்திருக்கிறீரே; அது எப்படிப் பொருந்தும்?] என்னும் அடுத்த ஶ்லோகத்தில் பக்தியோக நிஷ்டர்களை வர்ணித்தது இங்கு அநுஸந்திக்கத்தக்கது. (ஸததம் மாம் கீர்த்தயந்த:) எப்போதும் என்னுடைய குணசேஷ்டிதங்களை வர்ணிக்கும் நாராயணன், கிருஷ்ணன், வாஸுதேவன் முதலான திருநாமங்களை ஸங்கீர்த்தனம் செய்கின்றவர்களாய். இங்கு 'கீர்த்தயந்த:' என்னும் பதத்திற்கு விஶேஷணமாயுள்ள 'ஸததம்' என்னும் ஶப்தத்தை அடுத்துள்ள 'யதந்த:' 'நமஸ்யந்த:', 'நித்யயுக்தா:', 'உபாஸதே' என்னும் ஒவ்வொரு ஶப்தத்தோடும் கூட்டிப் பொருள்கொள்ளவேண்டும். 'பக்த்யா' என்னும் பதமும் இதுபோல் ஒவ்வொரு பதத்தோடும் சேரும். பக்தியோடு எப்போதும் என்திருநாமங்களை ஸங்கீர்த்தனம் செய்கிறவர்களாய், எப்போதும் என் விஷயமான முயற்சிகளைச் செய்கின்றவர்களாய், எப்போதும் என்னை வணங்குகின்றவர்களாய், என்னோடு என்றும் சேர்ந்திருப்பதை எப்போதும் விரும்புகின்றவர்களாய், எப்போதும் என்னை உபாஸிக்கிறார்கள் என்று கருத்து. ஏன் இப்படிச் செய்கிறார்கள்? எனில், பக்தியாலே என்னை மிகவும் இனியவனாகக் கொண்டிருக்கையாலே, என்னைப்பற்றி ஸங்கீர்த்தனம் செய்வது,

॥भा॥ अत्यर्थमत्प्रियत्वेन मत्कीर्तनयतननमस्कारैर्विना क्षणाणुमात्रेऽप्यात्मधारणमलभमानाः, मद्गुणविशेषवाचीनि मन्नामानि स्मृत्वा

முயல்வது, நமஸ்கரிப்பது முதலானவற்றைச் செய்யாவிடில்— ''த்ருடி யுக₃ாயதே த்வாமபஶ்யதாம்'' [ப₄ாக₃வதம் கோ₃பிகாகீ₃தம்] [உன்னைக் காணாவிடில் ஒருகணம் ஒரு யுக₃மாகிறது] 'ஒருபகல் ஆயிரம் ஊழியாலோ'' [திருவாய் 10-3-1] என்கிறபடியே ஒரு கணத்தின் திவலையான நேரங்கூடத் தம் ஸ்வரூபம் த₄ரிக்கப்பெறாத வர்களாய், கீர்த்தனம் முதலானவற்றைச் செய்கிறார்கள் என்று கண்டு கொள்வது. (ஸததம் கீர்த்தயந்த:) என்னுடைய ஸ்வரூபம், ரூபம், கு₃ணம், விபூ₄தி, சேஷ்டிதங்கள் முதலானவற்றைச் சொல்லும் திருநாமங்களை நினைத்து எல்லா அவயவங்களிலும் மயிர்க்கூச்செறியப் பெற்றவர்களாய், ஆனந்த₃த்தாலே தழுதழுத்த குரலை உடையவர்களாய், நாராயணன் முதலான பரத்வத்தைச் சொல்லும் திருநாமங்களையும், க்ருஷ்ணன், வாஸுதே₃வன் முதலான ஸௌலப்₄யத்தைச் சொல்லும் திருநாமங்களையும், முற்கூறிய ஸ்வரூப ரூப கு₃ண விபூ₄தி சேஷ்டிதங்களைச் சொல்லும் திருநாமங்களையும், அத்திருநாமங்களின் ஶப்₃த₃மாத்ரமே மிக இனியதாயிருக்கையாலே திருப்பித் திருப்பி அவற்றைச் சொல்லுவதே யாத்திரையாயிருக்கிறார்கள் என்று கருத்து. 'ஸததம்' என்றதால் தனியேயிருக்கும்போது ஸங்கீர்த்தனம் செய்வதுபோலே, பல ஜனங்களுக்கு நடுவிலேயிருக்கும்போதும், லஜ்ஜையில்லாமல் ''ஆடிப்பாடி அரங்கவோ'' [பெரு-திரு 2-2] என்று அழைக்கவேண்டும் என்று உணர்த்தப்படுகிறது. இவ்விடத்தில் ''தந்நாமஸ்மரணோத்₃பூ₄தபுலகஶ்சேதி₃புங்க₃வ:'' [விஷ்ணுத₄ர்மம் 74-48] [எம்பெருமானுடைய திருநாமங்களை நினைப்பதினால் மயிர்க்கூச்செறியப்பெற்ற சேதி₃நாட்டுத் தலைவன்]

மத்₃ப₄க்தஜநவாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோத₃நம் ।
ஸ்வயமப்₄யர்ச்சநஞ்சைவ மத₃ர்த்தே₂ ட₃ம்ப₄வர்ஜநம் ॥
மத்கதா₂ஶ்ரவணே ப₄க்தி: ஸ்வரநேத்ராங்க₃விக்ரியா ।
மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி ॥
ப₄க்திரஷ்டவித₄ா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சே₂ऽபி வர்த்ததே ।
ஸ விப்ரேந்த்₃ரோ முநி: ஶ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டி₃த: ॥
தஸ்மை தே₃யம் ததோ க்₃ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா₂ ஹ்யஹம் ।
[க₃ாருட₃ம் 219-6...9]

[(1) என் ப₄க்தர்களிடத்தில் வாத்ஸல்யம், (2) என்னை ஆராத₄னம் செய்வதை ஆமோதி₃த்தல், (3) தானே என்னைப் பூஜித்தல், (4) என்

पुलकाञ्चितसर्वाङ्गाः, हर्षगद्गदकण्ठाः, नारायणकृष्णवासुदेवेत्येवमादीनि

விஷயத்தில் ஆட₃ம்ப₃ரமற்றிருத்தல், (5) என் கதைகளைக் கேட்பதில் அன்பு (6) (என் கதைகளைக் கேட்கும்போது) குரல் தழதழத்தும், கண்ணீர் மல்கியும், உடம்பு மயிர்க்கூச்செறிந்துகொண்டுமிருக்கை, (7) எப்போதும் என்னை நினைத்திருக்கை, (8) என்னிடம் வேறு ஒரு ப்ரயோஜனத்தையும் கேளாதிருக்கை என்னும் இந்த எட்டு விதமான ப₄க்தியானது எந்த மிலேச்ச₂னிடமும் காணப்படுகிறதோ, அவனே ப்₃ராஹ்மண ச்ரேஷ்ட₂ன்; அவனே முனிவன்; அவனே த₄னவான்; அவனே யதி; அவனே பண்டி₃தன்; அவனுக்கு ஞானத்தை உபதே₃சிக்கலாம், அவனிடமிருந்து ஞானோபதே₃சமும் பெறலாம். அவன் என்னைப்போல் பூஜிக்கத்தக்கவன்.] ''யஜ்ஞேசாச்யுத கோ₃விந்த₃ மாத₄வாநந்த கேசவ। க்ருஷ்ண விஷ்ணோ ஹ்ருஷீகேச வாஸுதே₃வ நமோऽஸ்து தே। இதி ராஜாऽऽஹ ப₄ரதோ ஹரேர் நாமாநி கேவலம்॥'' [வி-பு 2-13-9, 10] [''யஜ்ஞநாத₂னே! அச்யுதனே! கோ₃விந்த₃னே! மாத₄வனே! அநந்தனே! கேசவனே! கிருஷ்ண! விஷ்ணுவே! ஹ்ருஷீகேசனே! வாஸுதே₃வனே! உனக்கு வணக்கம்'' என்று ராஜாவான ப₄ரதன் ஹரியின் திருநாமங்களை மாத்திரம் சொல்லிக்கொண்டிருந்தான்.] 'நாம்நஸ்தே யாவதீ சக்தி: பாபநிர்ஹரணே ஹரே:। ச்வபசோऽபி நர: கர்த்தும் க்ஷமஸ்தாவந்ந கில்பி₃ஷம்॥'' [ஹரியாகிற உன் திருநாமங்களுக்குள்ள பாபத்தைப் போக்கும் சக்தியின் அளவுக்குப் பாபத்தைச் செய்ய நாய்மாம்ஸம் தின்பவனாலும் முடியாது.] ''கமலநயந வாஸுதே₃வ விஷ்ணோ த₄ரணித₄ராச்யுத சங்க₂ சக்ரபாணே'' [வி-பு 3-7-33] [தாமரைக் கண்ணா! வாஸுதே₃வனே! விஷ்ணுவே! பூ₄மியை த₄ரிப்பவனே! அச்யுதனே! சங்குசக்கரக் கையனே!] ''ஏதாவதாऽலமக₄நிர்ஹரணாய பும்ஸாம் ஸங்கீர்த்தனம் ப₄க₃வதோ கு₃ணகர்மநாம்நாம்। விக்ருச்ய புத்ரமக₄வாந் யத₃ஜாமிளோऽபி நாராயணேதி ம்ரியமாண உபைதி முக்திம்॥'' [ப₄க₃வதம் 6-3-24] [எம்பெருமானுடைய கு₃ணம், செயல்கள் ஆகியவற்றைச் சொல்லும் திருநாமங்களை ஸங்கீர்த்தனம் செய்வதொன்றே மனிதர்களின் பாபத்தைப் போக்கடிப்பதற்குப் போதுமானது. மஹா பாபியான அஜாமிளனும் சாகும்போது 'நாராயணா' என்று தன் பிள்ளையைக் கூப்பிட்டதன்மூலம் முக்தியையே அடைந்தானன்றோ.] ''ஆர்த்தா விஷண்ணா: சிதி₂லாச்ச பீ₄தா: கோ₄ரேஷு ச வ்யாதி₄ஷு வர்த்தமாநா:। ஸங்கீர்த்ய நாராயண சப்₃த₃மாத்ரம் விமுக்த து₃:க்கா₂: ஸுகி₂நோ ப₄வந்தி॥'' [ஸஹஸ்ரநாமாத்₄யாயம்] [தே₃ஹத்தைப் பற்றிவரும் ஆத்₄யாத்மிகம், தீ நீர் முதலானவற்றால் வரும் ஆதி₄பௌ₄திகம், தெய்வச்செயலாக வரும் ஆதி₄தை₃விகம் என்னும் மூன்று

सततं कीर्तयन्तः, तथैव यतन्तः—मत्कर्मस्वर्चनादिकेषु तदुपकारकेषु

வகையான தாபங்களால் வருந்துகின்றவர்களும், விரோதி₄களைக் கண்டு ப₄யப்படுகிறவர்களும், மிகக்கொடிய நோய்களால் வாடுகின்றவர்களும் நாராயண ஶப்₃த₃த்தைக் கீர்த்தனம் செய்த மாத்திரத்தாலேயே துன்பம் நீங்கப்பெற்று இன்புறுகிறுர்கள்] ''ஆஹ்லாத₃ ஶீதநேத்ராம்பு₃: புளகீக்ருத கா₃த்ரவாந் ! ஸதா₃ பரகு₃ணுவிஷ்ட: த்₃ரஷ்டவ்ய: ஸர்வதே₃ஹிபி₄: ||'' [விஷ்ணுதத்வம்] [ஆனந்த₃த்தாலே குளிர்ந்த கண்ணீரை விடுபவனுய், உடம்பில் மயிர்க்கூச்செறியப்பெற்றவனுய், எப்போதும் எம்பெருமானுடைய கு₃ணங்களால் ஆட்கொள்ளப்பட்டவனுயுள்ள ப₄க்தன் உடம்பு படைத்த அனைவராலும் காணத்தக்கவன்.] முதலான ரிஷி வாக்யங்களும், '' உள்ளஞ்சோர உகந்தெதிர் விம்மி உரோம கூபங்களாய், கண்ண நீர்கள் துள்ளம்சோரத் துயிலணைகொள்ளேன் சொல்லாய் யானுன்னைத் தத்துறுமாறே '' [பெரியாழ்திரு 5-1-7] '' காலுமெழா கண்ணநீரும் நில்லா உடல்சோர்ந்து நடுங்கி, குரல் மேலுமெழா மயிர்க்கூச்சுமறு என தோள்களும் வீழ்வொழியா மாலுகளாநிற்கும் என் மனனே '' [பெரியாழ்திரு 5-3-5] '' உள்ளெலாமுருகிக் குரல்தழுத்தொழிந்தேன் உடம்பெலாம் கண்ணநீர் சோர, நள்ளிருளளவும் பகலும் நானழைப்பன் நாராயணு என்னும் நாமம் '' [பெரியதிரு 1-1-5] '' மழைபெய்தாலொக்கும் கண்ணநீரினெடு அன்று தொட்டும் மையாந்து இவள், நுழையும் சிந்தையள் அன்னைமீர் தொழும் அத்திசை உற்று நோக்கியே'' [திருவாய் 6-5-5] ''கெடுமிடராயவெல்லாம் கேசவா என்ன'' [திருவாய் 10-2-1] ''நாரணன் தம்மன்னை நரகம் புகாள்'' [பெரியாழ்திரு 4-6-1] '' எம்மானைச் சொல்லிப்பாடி எழுந்தும் பரந்தும் துள்ளாதார் தம்மாற்கருமமென்? '' [திருவாய்3-5-1] ''தலையினேடாதனம் தட்டத் தடுகுட்டமாய்ப் பறவாதார் அலைகொள் நரகத்தழுந்திக் கிடந்துழைக்கின்ற வம்பரே'' [ஷை 3-5-3] ''கும்பிடு நட்டமிட்டாடிக் கோகுகட்டுண்டு உழலாதார் தம் பிறப்பால் பயன் என்னே'' [ஷை 3-5-4] ''வேதமுதல்வனைப்பாடி வீதிகள்தோறும் துள்ளாதார் ஓதியுணர்ந்தவர் முன்னு என் சவிப்பார் மனிசரே'' [ஷை 3-5-5] ''வடதிருவேங்கடத்தெந்தை பேர்பல சொல்லிப்பிதற்றிப் பித்தரென்றே பிறர்கூற ஊர்பலபுக்கும் புகாதும் உலோகர் சிரிக்க நின்றுடி ஆர்வம் பெருகிக் குனிப்பார் அமரர் தொழப்படுவாரே '' [ஷை 3 5-8] '' உள்ளம் குழைந்து எழுந்தாடிப் பெருமையும் நாணும் தவிர்ந்து பிதற்றுமின் பேதைமை தீர்ந்தே '' [ஷை 3.5-10] முதலான ஆழ்வார்களின் அருளிச்செயல்களும் இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கன.

भवननन्दनवनकरणादिकेषु च दृढसङ्कल्पा यतमानाः, भक्तिभारावनमितमनोबुद्ध्यभिमानपदद्वयकरद्वयशिरोभिरष्टाङ्गैरचिन्तितपांसुकर्दमशर्क -

---

(ப4க்த்யா ஸததம் மாம் யதந்தஶ்ச) அன்போடு எப்போதும் என்னைக் குறித்து முயல்கின்றவர்களாய். இங்கு சொல்லப்படும் முயற்சி "த்4ருவா ஸ்ம்ருதி:" [சா2ந் 7-26-2] [நிலையான நினைவு] என்று உபநிஷத்துக்களில் ஓதப்படுவதாய், எண்ணெய்த் தாரைபோலே இடைவிடாததான அன்போடு கூடின நினைவேயாகும். இதுவே ப4க்தி யோக3ம் என்று சொல்லப்படுகிறது. அதனாலேயே "கீர்த்தி சிந்தா நமஸ்யா: வித3த4தி" [ர-ஸ்த 2-86] என்று 'யதந்த:' என்னும் பத3த்திற்கு 'சிந்தா' என்று விவரணம் அருளினார் ப4ட்டர். இந்த ப4க்திரூபமான நினைவு — எம்பெருமானைப்பற்றிய அர்ச்சனம், ஸ்தோத்ரம் முதலானவற்றிலும், அதற்கு உறுப்பான ஆலயம் சமைத்தல், நந்த3வனம் அமைத்தல் முதலான முயற்சிகளிலும் மூட்டுமாகையாலே அவற்றையும் 'யதந்த:' என்பதற்குப் பொருளாக பா4ஷ்யகாரர் அருளினார். (த்3ருட4வ்ரதா:) முற்கூறிய கீர்த்தன யத்னங்களிலும், பின்சொல்லப்போகும் நமஸ்காரத்திலும் உறுதியான ஸங்கல்பமுடையவர்களாயிருப்பார்கள். எத்தனை பெரிய ஆபத்து வந்தாலும் இந்த ஸங்கல்பம் தளராது. அத்தகைய ஆபத்துக்களிலும், எத்தனை பெரிய செல்வம் மற்றவர்களிடமிருந்து வருவதாயிருந்தாலும் இவர்கள் இந்த உறுதி தளர்ந்து மற்றவர்களை ஆஶ்ரயிக்கமாட்டார்கள் என்றபடி. செல்வங்களில் தலைசிறந்ததான மோக்ஷச்செல்வத்தையடைவதே இவர்களுடைய குறிக்கோளாகையாலே, அதை அடைவிக்கும் ஸாத4னாநுஷ்டா2னத்திலிருந்து எத்தகைய ஆபத்தும், ஸம்பத்தும் இவர்களைத் தளரவைக்கமுடியாது என்று கருத்து. எம்பெருமானைப்பற்றிக் கேட்டாலும் நினைத்தாலும் "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" [பெரியதிருவ 34] என்கிறபடியே ஸர்வாங்க3ங்களும் தளரும்படியான ப4க்திபாரவஶ்யமுடைய ஆழ்வார்களுக்கு இத்தகைய த்3ருட4ஸங்கல்பம் கைகூடாதாகையாலே, அவர்கள் அக்காரணத்தாலேயே ப4க்திநிஷ்டா2ர்களாயிராமல் ப்ரபத்திநிஷ்டா2ர்களாயுள்ளனர் என்பது குறிக்கொள்ளத்தக்கது. (ப4க்த்யா ஸததம் மாம் நமஸ்யந்தஶ்ச) அன்போடு என்னைக் குறித்து எப்போதும் நமஸ்கரிக்கின்றவர்களாய். "மநோபு3த்3த்4யபி4மாநேந ஸஹ ந்யஸ்ய த4ராதலே। கூர்மவச்சதுர: பாத3ாந் ஶிரஸ்தத்ரைவ பஞ்சமம் ॥" [ஸாத்வதஸம்ஹிதை 6-187] [மனம், அறிவு, அபி4மானம் ஆகியவற்றோடு கூட, நான்கு கால்களை ஆமை வைத்துக்

रादिके धरातले दण्डवत्प्रणिपतन्तः, सततं मां नित्ययुक्ताः—नित्ययोगं काङ्क्षमाणा आत्मान्तं मद्दास्यव्यवसायिन उपासते॥ १४॥

ज्ञानयज्ञेन चाप्यन्ये यजन्तो मामुपासते।
एकत्वेन पृथक्त्वेन बहुधा विश्वतोमुखम्॥ १५॥

15. ஜ்ஞாநயஜ்ஞேந சாப்யந்யே யஜந்தோ மாமுபாஸதே ।
ஏகத்வேந ப்ருதக்த்வேந பஹுதா விஶ்வதோமுகம் ॥

கொள்வதைப்போலே, கால்களேயும், கைகளேயும், தலேயையும் சேர்த்து பூமியில் வைத்துக்கொண்டு வணங்குவதே அஷ்டாங்க ப்ரணும மாகும்.] என்கிற ப்ரமாணத்தின்படி ப்ராப்தமான பகவத்விஷயத் தில் வணக்கமாகையாலே, மிகுந்த பக்தியினுலே மனம், புத்தி, அபிமானம், இருகால்கள், இரு கைகள், தலே ஆகிய எட்டு அங்கங் களும் தன்னடையே வணக்கத்தையடைந்து, தரையிலிருக்கும் புழுதி யையோ, சேற்றையோ, கற்களேயோ கணிசியாமல் தரையிலே தண்டம்போல் விழுந்து வணங்குகிருர்கள் என்று கருத்து. (பக்த்யா ஸததம் மாம் நித்யயுக்தா:) அன்போடு எப்போதும் என்னேடு என் றும் சேர்ந்திருப்பதை விரும்புகின்றவர்களாய். பரமபதத்தில் என் றும் என்னேடு சேர்ந்திருப்பதை இவர்கள் எப்போதும் விரும்புகிருர்கள் என்று கொள்ளுவதே ப்ரகரணத்திற்குப் பொருந்துமாகையாலே, 'நித்யயுக்தா:' என்ற இடத்தில் "ஆஶம்ஸாயாம் க்த:" என்கிற இலக்கணவழக்கின்படி 'க்த'ப்ரத்யயம் விருப்பத்தைக் காட்டுவதாகக் கொள்ளப்பட்டது. (பக்த்யா ஸததம் மாம் உபாஸதே) அன்போடு என்னே எப்போதும் உபாஸிக்கிருர்கள். "தாஸபூதா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:। அதோऽஹமபி தே தாஸ இதி மத்வா நமாம்யஹம் ॥" [மந்த்ரராஜபதஸ்தோத்ரம்] [எல்லா ஆத்மாக்களும் பரமாத்மாவிற்கு இயற்கையிலே அடிமைப்பட்டவர்களாகையாலே நானும் உனக்கு அடிமைப்பட்டவன் என்று எண்ணி உன்னே நான் வணங்குகிறேன்] என்கிறபடியே ஆத்மா உள்ளவரையில் அடையும் பரமபுருஷார்த்தமான தாஸ்யத்தில் விருப்பமுடையவர்களாய், அதைப் பெறுவதற்கு ஸாதனமாக பக்தியோகமாகிற உபாஸனத் தைச் செய்கிருர்கள். இதையே பட்டரும் 'ஆஜாநதாஸ்ய த்வரித ஶிதிலசித்தா:' [ர-ஸ்த 2-86] [இயற்கையான அடிமையில் த்வரையையுடையவர்களாய், உள்ளம் நைந்திருப்பவர்கள்] என்று அருளிச்செய்தார். ஆக இந்த ஶ்லோகத்தில் உபாஸனத்தின் தொடக்கநிலேயிலுள்ளவர்களின் தன்மைகள் விவரிக்கப்பட்டன. 14.

அந்யே அபி — மற்றும் சில மஹாத்மாக்கள், **ஜ்ஞாந யஜ்ஞேந ச** — (முற்கூறிய கீர்த்தனம் முதலானவற்றேடு) ஜ்ஞானம் எனும் யஜ்ஞத்திஞலும், **யஜந்த:**—ஆராதி₄ப்ப வர்களாய், **ப₃ஹுதா₄ ப்ருத₂க்த்வேந**—தனித்தனிப் பொருள்க ளாகப் பலவகைப்பட்டிருக்கும் இவ்வுலகை உருவமாகக் கொண்டவஞகையாலே, **விஶ்வதோமுக₂ம் மாம்**—எல்லாப் பொருள்களேயும் ப்ரகாரமாகக் கொண்டவஞன என்னே, **ஏகத்வேந** — (காரணநிலேயில்) ஒன்ருயிருப்பவஞக, **உபா ஸதே**—உபாஸிக்கிருர்கள்.

---

15. **வேறுசிலர் ஞானமெனும் வேள்வியான் மெய்த்தன்மை**
தேறியென்னே யேமருவிச் சேவிப்பர்—கூறுபடும்
பல்வகையா லெங்கும் பரந்தவென்னே யேகமா
நல்வகையா லென்னே நயந்து.

வேறுசிலர் — மற்றும் சில மஹாத்மாக்கள், **ஞான மெனும் வேள்வியால்** — (முற்கூறிய கீர்த்தனம் முதலான வற்றேடு) ஜ்ஞானமெனும் யஜ்ஞத்திஞலும், **மெய்த் தன்மை தேறி**—நானே காரணமாகவும், காரியமாகவும் இருப்பவன் எனும் உண்மையை அறிந்து, **என்னேயே மருவி**— என்னேயே ஆராதி₄ப்பவர்களாய், **கூறுபடும் பல்வகையால் எங்கும்**—தனித்தனியாயிருக்கும் பலவகைப்பட்ட எல்லாப் பொருள்களிலும், **பரந்த என்னே**—ஆத்மாவாக உள் நுழைந்து வியாபித்திருக்கும் என்னே,**நல்வகையால்**—(இந்த ஶரீராத்மத் தன்மையாகிற) நல்ல வழியாலே, **என்னே ஏகமா நயந்து**— என்னேக காரணநிலேயில் ஒருவஞக அறிந்து, **சேவிப்பர்**— உபாஸிப்பார்கள்.

---

15. **உபாஸனத்தின் தொடக்கநிலேயில் கீர்த்தனம், நினேத்தல், வணங்குதல் முதலானவற்ருலே ப₄க்தி செய்கிருர்கள் என்று சென்ற ஶ்லோகத்தில் கூறப்பட்டது. இதோடு ஒருவகையான ஜ்ஞானத் தோடும் கூடி உபாஸிக்கும் உபாஸனத்தின் முற்றிய நிலேயில் உள்ளவர்களின் தன்மைகள் இங்கு விவரிக்கப்படுகின்றன. அன் றிக்கே, சென்ற ஶ்லோகத்தில் உபாஸனத்தின் அங்க₃ங்களும் இந்த ஶ்லோகத்தில் உபாஸிக்கப்படும் ப₄க₃வத்ஸ்வரூபமும் விவரிக்கப்படுவ**

॥ भा ॥ अन्येऽपि महात्मानः पूर्वोक्तैः कीर्तनादिभिः ज्ञानाख्येन यज्ञेन च यजन्तो मामुपासते। कथम्? बहुधा पृथक्त्वेन—जगदाकारेण, विश्वतोमुखम्—विश्वप्रकारमवस्थितं मामेकत्वेनोपासते। एतदुक्तं

தாகக் கொண்டு, இரண்டு ஸ்லோகங்களும் ஒரே வகையான அதி$_4$
காரிகளைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அப்போது 'அந்யே'
என்ற பத$_3$ம் இரு ஸ்லோகங்களுக்கும் பொதுவாய், பதின்மூன்ருவது
ஸ்லோகத்தில் சொல்லப்பட்ட ஸ்வயம்ப்ரயோஜன ப$_4$க்திநிஷ்ட$_2$ர்க
ளான தலைசிறந்த மஹாத்மாக்களைக் காட்டிலும் வேறுபட்ட ஸாத$_4$ன
ப$_4$க்திநிஷ்ட$_2$ர்களைக் குறிக்கிறது. இந்த ஸ்லோகம் முதலாக
பத்தொன்பதாவது ஸ்லோகம் ஈருக, உபாஸிக்கப்படும் ப$_4$க$_3$வத்ஸ்வ
ரூபம் விவரிக்கப்படுகிறது. (அந்யே஽பி) மற்றும் சில மஹாத்
மாக்கள். பதின்மூன்ருவது ஸ்லோகத்தில் சொல்லப்பட்ட ஸ்வயம்
ப்ரயோஜன ப$_4$க்திநிஷ்ட$_2$ர்களான ஸித்$_3$தோ$_4$பாயநிஷ்ட$_2$ர்களே
'மஹாத்மாக்கள்' என்னும் ஶப்$_3$த$_3$த்திற்கு முக்$_2$யார்த்த$_2$மாக இருப்ப
வர்களானுலும், முந்தின ஸ்லோகத்திலும், இந்த ஸ்லோகத்திலும்
சொல்லப்படும் உபாஸகர்களும் இத்தகைய மஹாத்மாக்களாவதற்
குரியவர்களாய், மஹாத்மகல்பர்களாய் (பெரும்பாலும் மஹாத்
மாக்களையொத்தவர்களாய்) இருப்பவர்களாகையாலே இவர்களும்
பா$_4$ஷ்யத்தில் மஹாத்மாக்களாகவே வழங்கப்பட்டனர். (ஜ்ஞாந
யஜ்ஞேந ச) முற்கூறிய கீர்த்தந யத்ந நமஸ்காராதி$_3$களோடல்லாமல்,
ஜ்ஞாநமாகிற யஜ்ஞத்தாலும் உபாஸிக்கிருர்கள். 'ச அபி' என்னும்
பத$_3$ங்களை ஒரே இடத்தில் கூட்டினுல் ஒரு பத$_3$ம் பயனற்றதாகு
மாகையாலே 'அந்யே' என்பதோடு 'அபி'யும், 'ஜ்ஞாநயஜ்ஞேந'
என்பதோடு 'ச'காரமும் கூட்டப்பட்டது. (ஜ்ஞாநயஜ்ஞேந யஜந்த:)
ஜ்ஞாநமாகிற யஜ்ஞத்தினுல் என்னை உகப்பிப்பவர்களாய். (ப$_3$ஹுதா$_4$
ப்ருத$_2$க்த்வேந விஸ்வதோமுக$_2$ம் மாம்) கார்யநிலையில் ஸமஷ்டிப்
பொருள்களாகவும், வ்யஷ்டிப்பொருள்களாகவும், அவற்றின் வகை
களாகவுமிருக்கும் எல்லாப் பொருள்களையும் உருவமாகக்கொண்ட
என்னை. (ஏகத்வேந உபாஸதே) காரணநிலையில் ஒருவனுயிருப்பவனுக
உபாஸிக்கிருர்கள். இங்கு சில கேள்விகள் எழுகின்றன—(1) காரணநிலை
யில் ஒருவனுயிருப்பவன் காரியநிலையில் எப்படிப் பலவாக ஆகமுடியும்?
(2) அப்படியாவதாக ஒப்புக்கொண்டால் பரம்பொருள் விகாரமுடைய
தாகவும், ஸம்ஸாரவசப்பட்டதாகவும் ஆகவேண்டிவருமே? (3) பலவாக
இருப்பவனை ஒன்ருக உபாஸிப்பது மயக்கமல்லவா? (4) அந்வயத்தை
முன்னும் பின்னுமாக மாற்ருமல் "ஏகத்வேந ப்ருத$_2$க்த்வேந ப$_3$ஹுதா$_4$

भवति—भगवान् वासुदेव एव नामरूपविभागानर्हातिसूक्ष्मचिदचिद्वस्तु-शरीरस्सन् सत्यसङ्कल्पो विविधविभक्तनामरूपस्थूलचिदचिद्वस्तुशरीरः स्यामिति संकल्प्य स एक एव देवतिर्यङ्मनुष्यस्थावराख्यविचित्रजगच्छरी-रोऽवतिष्ठत इत्यनुसंदधानाश्च मामुपासते—इति ॥ १५ ॥

விஶ்வதோமுக$_2$ம் உபாஸதே'' என்று கொண்டு ஒன்றாகச் சிலரும், தனித்தனியாகச் சிலரும், பலபடியாக நிற்பவன் விஶ்வரூபனான ப$_4$க$_3$வானே என்று சிலரும் உபாஸிப்பதாக ஶங்கரர் பா$_4$ஷ்யமிட்டது பொருத்தமாகத் தோன்றுகிறதே.(5)பரநிலையில் ஒன்றாயிருக்கும் எம்பெருமான் வ்யூஹம், விப$_4$வம், அந்தர்யாமி, அர்ச்சை ஆகிய நிலைகளில் பலவாக ஆவதையும் இங்கு குறிப்பதாகக் கொள்ளலாமே—என்பவை அக்கேள்விகள். இக்கேள்விகளுக்கு பதில் பின்வருமாறு:—(1) நாமரூபப் பிரிவுகளற்ற அதிஸூக்ஷ்மமான சேதந வஸ்துக்களடங்கிய மூலப்ரக்ருதியைக் காரண நிலையில் ஶரீரமாகக் கொண்டிருக்கிறான் எம்பெருமான். ஜ்ஞாநம் ஶக்தி முதலான கு$_3$ணங்களைக் கொண்ட ப$_4$க$_3$வானை அவன் எல்லாப் பொருள்களிலும் வஸிப்பதாலும், அவற்றைப் படைத்தளித்தழிப்பதை விளையாட்டாகக் கொண்டிருப்பதாலும் வாஸுதே$_3$வன் என்றும் சொல்லப்படுகிறான். காரணநிலையில் முற்கூறியபடி ஒன்றாயிருக்கும் அவன் தன்னுடைய தடையற்ற ஸங்கல்பத்தாலே, 'பலவகைப்பட்டவையாய், வெவ்வேறு நாமரூபங்களுடையவையான ஸ்தூ$_2$ல சேதநாசேதநப் பொருள்களை ஶரீரமாகக் கொண்டவனாக ஆகக் கடவேன்' என்று ஸங்கல்பித்து, ஒருவனாயிருந்த தானே தே$_3$வர், திர்யக், மனிதர், ஸ்தா$_2$வரம் என்று பலபடிப்பட்டிருக்கும் உலகத்தை ஶரீரமாக உடையவனாக ஆகிறான். இவ்வண்ணமாகக் காரண நிலையில் ஒருவனாயிருந்த பரமாத்மாவே காரிய நிலையில் பலவாகத் தடையில்லை. (2) பரம்பொருளினுடைய ஶரீரமாயிருக்கும் சேதநாசேதநங்களுக்கே விகாரத்தை ஒப்புக்கொள்வதால், விகாரமுடையதாயிருக்கை, ஸம்ஸாரியாகவேண்டிவருகை முதலான தோ$_3$ஷங்கள் பரம்பொருளுக்கு ஏற்படமாட்டா. (3) முற்கூறியபடி ஸ்ருஷ்டிகாலத்தில் பலபொருள்களை ஶரீரமாகக் கொண்டிருப்பவனே ப்ரளயகாலத்தில் ஒன்றான ஸூக்ஷ்ம ஜக$_3$த்தை உருவமாகக் கொண்டிருப்பதன் மூலம் ஒருவனாகிறனாகையால், இப்படி உபாஸிப்பதில் மயக்கம் எதுவுமில்லை. (4) ஶங்கரர் கொண்ட பொருளில் ஒன்றாக உபாஸிப்பது ஒன்றே மெய்யாகும். மற்ற இரண்டு உபாஸனங்களும் பொய்யாகும். ஆகையால் இப்படிப் பொருள் கொள்ளுவதைக் காட்டிலும், அந்வயக்ர

॥भा॥ तथा हि विश्वशरीरोऽहमेवावस्थित इत्याह—

अहं क्रतुरहं यज्ञः स्वधाऽहमहमौषधम् ।
मन्त्रोऽहमहमेवाज्यमहमग्निरहं हुतम् ॥ १६ ॥

16. **அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ: ஸ்வதா₄ऽஹமஹமௌஷத₄ம் ।
மந்த்ரோऽஹமஹமேவாஜ்யமஹமக்₃நிரஹம் ஹுதம் ॥**

அஹம்—நான், **க்ரது:**—(ஜ்யோதிஷ்டோமம் முதலான) யாக₃மாகிறேன்; **அஹம் யஜ்ஞ:**—நான் பஞ்சமஹாயஜ்ஞங்களாகிறேன்; **அஹம் ஸ்வதா₄**—நானே (பித்ருக்களுக்குப் புஷ்டியளிக்கும்) ஸ்வதை₄யாகிறேன்; **அஹம் ஔஷத₄ம்**—நானே ஹவிஸ்ஸாகிறேன், **அஹம் மந்த்ர:**—நானே மந்திரமாகிறேன்; **அஹம் ஏவ ஆஜ்யம்**—நானே நெய் முதலான ஹவிஸ்ஸாகவும் ஆகிறேன்; **அஹம் அக்₃நி:** — நானே (ஆஹவநீயம் முதலான) அக்₃நியாகிறேன்; **அஹம் ஹுதம்**—நானே ஹோமமுமாகிறேன்.

---

16. **நான்கிருது நான்வேள்வி நான்சுவதை நான்மருந்து
நான்கருது மந்திரநெய் நான்ருனே—நான்கனலு
மங்கி யதுவு மதிற்சிறந்த வோமமுமாய்
தங்கியது மைவென்ன (மெய்வண்ண?) நான்.**

மத்தை முன் பின்னுக மாற்றினாலும். மெய்யான உபாஸநத்தையே சொல்லுவதாகக் கொள்வதே பொருத்தம். நாம் ப்ரத்யக்ஷமாகப் பல பொருள்களைக் காண்கிறோம். அப்பல பொருள்களையும் ஶரீரமாகக் கொண்ட பரம்பொருளே காரண நிலையில் மூலப்ரக்ருதி ஒன்றையே ஶரீரமாகக் கொண்டதாயிருக்கிறது என்று கூறும் வேத₃வாக்கியங்களுக்கும் இப்பொருள் பொருத்தமாயுள்ளது. ஆகையால் மூன்று வித₄மான உபாஸனத்தைக் கூறுவதாக ஶங்கரர் உரையிட்டதும், பே₄தா₃பே₄த₃த்தைச் சொல்லுவதாகச் சிலர் பா₄ஷ்யமிட்டதும் ப்ரமாணயுக்திகளுக்குப் பொருந்தமாட்டாவாகையாலே இங்கு பா₄ஷ்யத்தில் உரைத்ததே பொருத்தமான பொருளாகும். (5) 'ஏகத்வேந ப்ருத₂க்த்வேந' என்பதை விவரிக்கும் மேல் ஶ்லோகங்களில் பரவ்யூஹாதி₃களைக் கூருமல் கார்யகாரணநிலைகளையே கூறியிருப்பதால் பரவ்யூஹாதி₃களை இங்கு பொருளாகக்கொள்ளமுடியாது. ஆக, காரண நிலையிலும். காரிய நிலையிலும் எல்லாப் பொருள்களையும் ஶரீரமாகக் கொண்டிருப்பவன் பரம்பொருளே என்னும் ஜ்ஞாநமாகிற யஜ்ஞத்தினாலும் பரிபக்குவமடைந்த உபாஸகர்கள் உபாஸிக்கிருர்கள் என்றதாயிற்று. 15.

॥ भा ॥ अहं क्रतुः—अहं ज्योतिष्टोमादिकः क्रतुः ; अहमेव महायज्ञः ; अहमेव पितृगणपुष्टिदा स्वधा ; औषधम्—हविश्चाहमेव; अहमेव

நான் கிருது—(ஜ்யோதிஷ்டோமம் முதலான) யாகங்களும் நானே; **நான் வேள்வி**-(அவற்றுக்கு அங்கமான) ஐந்து மஹாயஜ்ஞங்களும் நானே; **நான் சுவதை**-(பித்ருக்களுக்குப் புஷ்டியளிக்கும்) ஸ்வதா பிண்ட ஶப்தங்கள் நானே; **நான் மருந்து**—ஓஷதி விகாரமான ஹவிஸ்ஸும் நானே; **நான் கருதும் மந்திரம்**—(யஜமானன்) நினைத்து உச்சரிக்கும் மந்திரமும் நானே; **நெய் நான் தானே**—நெய்யாகிற ஹவிஸ்ஸும் நானேயாவேன; **நான் கனலும் அங்கி அதுவும்**-(ஆஹவனீயம், கார்ஹபத்யம், தக்ஷிணாக்நி என்று) ப்ரஸித்தி பெற்ற மூன்றுவகைப்பட்ட எரியும் அக்நியும் நானே; **அதில் சிறந்த ஓமமுமாய் தங்கியதும்**—அந்த அக்நியில் ஹவிஸ்ஸை இடுதலாகிற சிறந்த ஹோமமாய் இருப்பதும், **மெய் வண்ணன் நான்**—(இவையனைத்தையும்) மெய்யான ப்ரகாரமாகக் கொண்டிருக்கும் நானே.

16. கார்ய நிலையில் பலபடிப்பட்டிருக்கும் இப்பரம்பொருளே காரண நிலையில் ஒன்றாயிருப்பதென்று ஸாதந பக்திநிஷ்டர்கள் உபாஸிக்கிறார்கள் என்று சென்ற ஶ்லோகத்தில் கூறப்பட்டது. ஒருவனை தானே கார்யநிலையில் இவ்வுலகிலுள்ள பல பொருள்களை ஶரீரமாகக்கொண்டிருப்பதை இனி நான்கு ஶ்லோகங்களாலே விவரிக்கிறான். அதில் உபாஸகர்களுக்கு மிகவும் அவஶ்யமான யாகங்களோடு ஸம்பந்தப்பட்டிருப்பவையெல்லாம் தனக்கு ப்ரகாரமே என்கிறான் இந்த ஶ்லோகத்தில். (அஹம் க்ரது:) ஸ்வர்க்கம் முதலான பலன்களை ஸாதித்துத் தரவல்ல ஜ்யோதிஷ்டோமம் முதலான யாகங்கள் நானே. அவையும் என்னைவிட்டுப் பிரியாத ப்ரகாரமே என்றபடி. (அஹம் யஜ்ஞ:) ப்ரஹ்மயஜ்ஞம், தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பூதயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம என்று [தைத்-ஆர 2-10 முதலான] ஶாஸ்த்ரங்களில் ஓதப்படும் ஐந்து மஹாயஜ்ஞங்களும் நானே. அவையும் எனக்கு ப்ரகாரமாய் என் வசப்பட்டவையே என்றபடி. சிலர் க்ரது யஜ்ஞ ஶப்தங்கள் ஶரீரத்தால் செய்யப்படும் யஜ்ஞங்களையும், மனத்தால் செய்யப்படும் யஜ்ஞங்களையும் குறிப்பதாகவும், மற்றும் சிலர் ஶ்ருதியில் சொல்லப்பட்ட யஜ்ஞங்களையும், ஸ்ம்ருதியில் சொல்லப்பட்ட யஜ்ஞங்களையும் குறிப்பதாகவும் கொண்டார்கள். க்ரதுயஜ்ஞ ஶப்தங்கள் அவற்றைக் குறிப்பதாக எங்கும்

च मन्त्रः; अहमेव चाज्यम्; प्रदर्शनार्थमिदम्; सोमादिकं च हविरहमेवेत्यर्थः; अहमाहवनीयादिकोऽग्निः; होमश्चाहमेव ॥ १६ ॥

ப்ரஸித்₃தி₄யில்லே. ஆகையால் க்ரதுஶப்₃த₃மும் அந்த ஶப்₃த₃த்தால் ப்ரஸித்₃த₄மாக வழங்கப்படும் ஜ்யோதிஷ்டோமாதி₃ யாக₃ங்களேயும், யஜ்ஞஶப்₃த₃ம் பஞ்சமஹாயஜ்ஞங்கள் என்று ப்ரஸித்₃தி₄பெற்ற ஐந்து மஹாயஜ்ஞங்களேயும் குறிப்பதாகக் கொள்வதே பொருந்தும். ஒன்றுக்கொன்று வாசியில்லாமையால், ஶ்லோகத்தின் பிற்பாதியில் உள்ள ஏவகாரத்தை ஒவ்வொரு 'அஹம்' ஶப்₃த₃த்தோடும் கூட்டிக் கொள்ளவேண்டும். (அஹம் ஸ்வத₄ா) பித்ருக₃ணங்களுக்குப் புஷ்டியை அளிக்கும் ஸ்வத₄ாபிண்ட₃மும், ஶப்₃த₃மும் நானே; (அஹம் ஔஷத₄ம்) ஓஷதி₄விகாரமான ஹவிஸ்ஸும் நானே. இவையும் என்ன தீ₄னமே என்றபடி, சங்கரர் 'ஸ்வத₄ா' என்று அந்நமும், 'ஔஷத₄ம்' என்று மருந்தும் குறிக்கப்படுவதாகக் கொண்டார். யாக₃ங்களேயும் அவற்றின் அவயவங்களேயும் குறிப்பதாகத் தெளிவாக விளங்கும் இந்த ஶ்லோகத்தில் அவற்றைச் சொல்லுவது பொருந்தாது. ஆகையால், ஸ்வத₄ா ஶப்₃த₃ம் அப்பெயரில் யாக₃ங்களில் வழங்கப்படும் ஸ்வத₄ா பிண்ட₃ ஶப்₃த₃ங்களேயும், அதோடு கூடப்படிக்கப்படும் ஔஷத₄ஶப்₃த₃ம் ஸ்வத₄ாஶப்₃த₃த்தைச் சொல்லி ஹோமம் செய்யப்படும் ஓஷதி₄ விகாரமான ஹவிஸ்ஸையும் குறிப்பதாகக் கொள்வதே பொருந்தும். (அஹம் மந்த்ர:) யாக₃ங்களில் பயன்படும் மந்த்ரமும் என்னதீ₄னமே. (அஹமேவ ஆஜ்யம்) நெய்யாகிற ஹவிஸ்ஸும் என்னதீ₄னமே. ஸர்வவஸ்துக்களும் தனக்கு ப்ரகாரம் என்று கூறும் ப்ரகரணமாகையால், இங்கு ஔஷத₄ம், ஆஜ்யம் என்று இரு வகையான ஹவிஸ்ஸுக்களேச் சொன்னது ஸோமரஸம் முதலான மற்ற ஹவிஸ்ஸுக்களுக்கும் உபலக்ஷணம்; "விஶேஷவிதி₄: ஶேஷநிஷேதா₄ர்த்த₂:" [குறிப்பிட்டுச் சிலவற்றை விதி₄ப்பது மற்றவற்றை விலக்குவதற்காக] என்னும் நியாயம் இங்கு செல்லாது. (அஹம் அக்₃நி:) ஆஹவநீயம், கா₃ர்ஹபத்யம், த₃க்ஷிணாக்₃நி எனப்படும் மூவகைப்பட்ட யாக₃ாக்₃னியும் என்னதீ₄னமே. ப்ரகரணத்தில் யாகோ₃பகரணங்களேயே எடுக்கையால், இது மூன்ருவது பூ₄தமான தீயைப் பொதுவாகக் குறிக்கமாட்டாது. (அஹம் ஹுதம்) யாக₃த்தில் ஹோமரூபமான கிரியையும் என்னதீ₄னமே. ஹுதஶப்₃த₃ம் ஹோமம் செய்யப்படும் ஹவிஸ்ஸைக் குறிக்கலாமாயினும், ஔஷத₄ாஜ்ய ஶப்₃த₃ங்களால் அவை சொல்லப்பட்டுவிட்டபடியால் "ஹூயதே—இதி ஹோம:" என்னும் வ்யுத்பத்தியாலே ஹோமரூபக்ரியையைக் குறிப்பதாகக் கொள்வதே உசிதம். ஆக உபாஸகர்களுக்கு மிகவும் அவஶ்யமான யஜ்ஞங்களும், அவற்றின் அவயவங்களும் தன்னதீ₄னமே என்று விவரிக்கப்பட்டதாயிற்று. 16.

पिताऽहमस्य जगतो माता धाता पितामहः।
वेद्यं पवित्रमोङ्कार ऋक्साम यजुरेव च॥ १७॥

17. பிதாऽஹமஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ: ।
வேத்யம் பவித்ரமோங்கார ருக் ஸாம யஜுரேவ ச ॥

அஸ்ய ஜகத:—இந்த ஜீவராஶிகளுக்கு, **பிதா**—தந்தையாகவும், **மாதா**—தாயாகவும், **தாதா**-உண்டாக உதவும்(மற்ற) சேதநனுகவும், **பிதாமஹ:**-பாட்டனுகவும், **வேத்யம் பவித்ரம்**—வேதத்திலிருந்து அறியத்தக்க பாவனப்பொருளாகவும், **ஓங்கார:**—(அறிவையளிக்கும்) ஓங்காரமாகவும், **ருக் ஸாம யஜு: ச** — ருக்யஜுஸ்ஸாமவேதங்களாகவும் இருப்பவன், **அஹம் ஏவ**—நானே.

---

17. **இந்தவுல குக்குநா னேலும் பிதாவாவன்
பந்தநிகழ் மாதா பயில்விதாதா—முந்தையுமாம்
பாட்டனறி தன்மை பவித்திரநல் லோங்கார
மீட்டமுறும் வேதங்கள் யான்.**

இந்த உலகுக்கு—இந்த ஜீவராஶிகளுக்கு, **நான்**—நான், **ஏலும் பிதா ஆவன்**—ஹிதத்தைச் செய்யும் பிதாவாயிருக்கிறேன்; **பந்தம் நிகழ் மாதா** — அன்புடைய தாயாகவும் இருக்கிறேன், **பயில் விதாதா**—உண்டாக உதவும் (மற்ற) சேதநனுகவும் இருக்கிறேன், **முந்தையுமாம் பாட்டன்**—தந்தையின் தந்தையான பாட்டனுகவும் இருக்கிறேன், **அறிதன்மை பவித்திரம்**—(இந்த ஜீவராஶிகளுக்கு) வேதத்திலிருந்து அறியத்தக்க பாவனப்பொருளாகவும், **நல் ஓங்காரம்** — அறிவையளிக்கும் ஓங்காரமாகவும், **ஈட்டமுறும் வேதங்கள்**—ருக்யஜுஸ்ஸாமங்கள் என்று மூன்று வகைப்பட்ட வேதங்களாகவும் இருப்பவன், **யான்**—நானே.

---

17. **இவ்வுலகிலுள்ள ஜீவராஶிகளுக்குப் பலவகைகளில் உதவி புரியும் பொருள்கள் எல்லாவற்றுக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் தானே என்று காட்டுகிருன் இந்த ஶ்லோகத்தில். ஶ்லோகத்தின்**

॥भा॥ अस्य—स्थावरजङ्गमात्मकस्य जगतः, तत्र तत्र पितृत्वेन, मातृत्वेन, धातृत्वेन, पितामहत्वेन च वर्तमानोऽहमेव। अत्र धातृशब्दो मातापितृव्यतिरिक्ते उत्पत्तिप्रयोजके चेतनविशेषे वर्तते।

முற்பாதியில் ஒவ்வொரு ஜீவனுக்கும் உத்பத்தி முதலானவற்றைச் செய்து பேருதவிபுரியும் தாய் தந்தை முதலான சேதனர்களுக்கு அந்தர்யாமியாயிருப்பவன் தானே என்று காட்டுகிறான். (அஹமேவ அஸ்ய ஜக3த: பிதா) இவ்வுலகில் அசைவனவும், அசையாதனவுமாயுள்ள ஜீவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிறப்பிலும் பிறப்பிக்கும் தந்தையாக நின்று ஹிதத்தைச் செய்பவன் நானே. தந்தைக்கும் நானே அந்தர்யாமியாயிருப்பவன் என்று கருத்து. இக்கருத்தைப் பின்வரும் வாக்யங்களிலும் கொள்வது. ''அஹமேவ'', ''அஸ்ய ஜக3த:'' என்னும் பத3ங்கள் இந்த ஶ்லோகத்தில் மேலேயுள்ள ஒவ்வொரு பத3த்தோடும், அடுத்த ஶ்லோகத்திலுள்ள ஒவ்வொரு பத3த்தோடும் அந்வயிக்கின்றன. (மாதா) இந்த ஜீவர்கள் ஒவ்வொருவருக்கும் பெற்ற தாயாயிருந்து பிரியத்தைச் செய்பவனும் நானே. ஸ்தா2வர ஜீவர்களுக்கும் அவ்வக்காரணங்கள் எம்பெருமானை ஆத்மாவாகக்கொண்டிருக்கையால் 'மாதா' 'பிதா' என வழங்கத்தக்கவை. (தா4தா) இந்த ஜீவர்கள் ஒவ்வொருவரும் க3ர்ப்ப4த்தில் த4ரித்துநிற்பதற்கும் வளர்வதற்கும், பிறப்பதற்கும் உதவுவதன்மூலம் இவர்கள் உண்டாகக் காரணமாயிருக்கும் சேதனரும் நானே. (பிதாமஹ:) இந்த ஜீவர்கள் ஒவ்வொருவருக்கும் தந்தையைப் படைத்த தந்தையாய், உத்பத்தி காரணனான பாட்டனாயிருப்பவனும் நானே. இது ப்ரபிதாமஹர் முதலானார்க்கும் உபலக்ஷணம். 'தா4த்ரு' ஶப்3த3மும், 'பிதாமஹ' ஶப்3த3மும் பிரமனைக் குறிக்குமாயினும், அவ்விரண்டு பத3ங்களிடையே புநருக்தி வாராமைக்காகவும், 'அஸ்ய ஜக3த:' என்னும் பத3த்திற்கு பிரமன் ஈறாக உள்ள எல்லா ஜீவர்களும் பொருளாகையாலும், 'பிதாமஹ:' என்று பாட்டனையும், 'தா4தா' என்று மாதா பிதாக்களைப்போலே முற்கூறியபடி வேறுவகையில் உத்பத்திக்குக் காரணமாய் நிற்கும் மற்ற சேதனர்களையும் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது. உருத்திரன் இந்திரன் முதலான பத3ங்களோடு சேர்த்துப் படிக்காமல், மாதா பிதா என்னும் பத3ங்களோடு சேர்த்துப் படிக்கையாலும், தா4த்ரு பிதாமஹ ஶப்3த3ங்கள் பிரமனைக் குறிக்காமல் முற்கூறியபடி உத்பத்திகாரணர்களையே குறிக்கும் என்று விளங்குகிறது. இவ்வர்த்த2த்தையே ''பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தை நீ, மற்றையாராவாரும் நீ பேசில்'' [பெரியதிருவ 5]

यत्किञ्चिद्वेदवेद्यं पवित्रम्—पावनम्, तदहमेव। वेदकश्च वेदबीजभूतः प्रणवोऽहमेव। ऋक्सामयजुरात्मको वेदश्चाहमेव॥ १७॥

"தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாய் அவையல்லனாய்" [திருவாய் 3·6-9] 'தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்'' [திருவாய் 7-8-1] என்று நம்மாழ்வார் அருளினர். இவையனைத்துக்கும் மூலமான ஸுபா₃லோபநிஷத்திலும் மாதாவாகவும், பிதாவாகவும், த₄ாதாவாகவும் இருப்பவன் நாராயணனே என்று ஓதப்பட்டது. இனி, ஶ்லோகத்தின் பிற்பாதியாலே, இவ்வுலகினருக்கு வேத₃ங்களிலிருந்து அறியத்தக்க பாவனமான பொருள்களும், அவற்றை அறிவிக்கும் வேத₃ஸாரமான ஓங்காரமும், வேத₃ங்களனைத்துமே நான் என்கிருன். (வேத்₃யம் பவித்ரம்) இவ்வுலகினருக்கு வேத₃ங்களிலிருந்து அறியப்படுவனவாய், இவர்களைப் பரிஶுத்₃த₄ப்படுத்துவனவான பாவனப்பொருள்களும் நானே. 'வேத்₃யம்' என்னும் பத₃த்தைத் தனியாகக்கொண்டு அறியப்படும் பொருள்களைக் கூறுவதாகக் கொண்டால், எல்லாப் பொருள்களையுமே கூறுவதாக ஆகிவிடும்; சிலசில பொருள்களை வகைப்படுத்திக் கூறும் இந்த ப்ரகரணத்திற்குப் பொருந்தாது. ஆகையால், வேத்₃யம், பவித்ரம் என்னும் இரு பத₃ங்களையும் விஶேஷண விஶேஷ்யங்களாகக் கூட்டிக்கொண்டு பொருள் கொள்ளப்பட்டது. 'வேத்₃யம்' என்று பொதுவாக விஶேஷணமிட்டிருந்தபோதிலும், மேலே வேத₃ங்களைச் சொல்லியிருப்பதை ஒட்டியும், 'பவித்ரம்' என்னும் விஶேஷ்யத்திற்குப் பொருந்தியிருக்கையாலும், வேத்₃ய ஶப்₃த₃த்திற்கு 'வேத₃த்திலிருந்து அறியத்தக்க' என்று பொருள்கொள்ளப்பட்டது. 'வேத்₃யம், பவித்ரம்' என்று நபும்ஸக லிங்க₃ப்ரயோக₃ம் செய்திருக்கையால், ''ஸாமாந்யே நபும்ஸகம்'' என்னும் நியாயத்தாலே வேத₃த்திலிருந்து அறியத்தக்க பாவனப் பொருள் ஒவ்வொன்றையும் இப்பத₃ம் குறிக்கின்றது. பவித்ர ஶப்₃த₃ம் த₃ர்ப்ப₄ பவித்ரத்தில் ரூடி₄யுடையதாயிருந்தபோதிலும், இங்கு அப்படிப் பொருள் கொள்வதில் பயனில்லையாகையால், வேத்₃ய ஶப்₃த₃த்துக்குப் பொருத்தமாகப் பாவனப்பொருள்களைக் குறிப்பதாகப் பொருள் கொள்ளப்பட்டது. (ஓங்கார:) உலகினருக்கு அறிவையளிக்கும் வேத₃வித்தான ஓங்காரமும் நானே. முன்னும் பின்னும் ஒன்றோடொன்று தொடர்புடைய பொருள்களை வகைப்படுத்திச்சேர்த்துச் சொல்லும் ப்ரகரணமாகையாலே, வேத₃த்திலிருந்து அறியத்தக்க பொருள்களைச் சொன்னவுடன் அவற்றை அறிவிக்கும் பொருள்களைச் சொல்லுவதே உசிதமாகையாலே, ஓங்காரத்திற்கும் வேத₃ங்

गतिर्भर्ता प्रभुस्साक्षी निवासश्शरणं सुहृत्।
प्रभवप्रलयस्थानं निधानं बीजमव्ययम् ॥ १८ ॥

18. க₃திர் ப₄ர்த்தா ப்ரபு₄: ஸாக்ஷீ நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத்।
ப்ரப₄வப்ரளயஸ்த₂ாநம் நித₄ாநம் பீ₃ஜமவ்யயம் ||

(அஸ்ய ஜக₃த:—இந்த உலகினர்க்கு) க₃தி:—அடையுமிடமாகவும், ப₄ர்த்தா—த₄ரிக்கும் சேதனராகவும், ப்ரபு₄:—நியமிக்கும் சேதனராகவும், ஸாக்ஷீ—நேரே காணும் சேதனராகவும், நிவாஸ:—வஸிக்குமிடமான வீடு முதலானவையாகவும், ஶரணம்—இஷ்டத்தை அளித்து, அனிஷ்டத்தைத் தவிர்க்கும் சேதனராகவும், ஸுஹ்ருத்—ஹிதத்தை விரும்பும் சேதனராகவும், ப்ரப₄வப்ரளயஸ்த₂ாநம்—(இவ்வுலகிற்குத்) தோன்றி ஒடுங்குமிடமாகவும், நித₄ாநம்—(இவ்வுலகிலிருந்து) தோன்றி, (அதில்) ஒடுங்கும் பொருள்களாகவும், அவ்யயம் பீ₃ஜம்—(இவ்வுலகிற்கு) மாருமலுள்ள காரணமாகவுமிருப்பவன் (அஹம் ஏவ—நானே.)

---

18. பற்ருய்ப் பரிப்பவனுய்ப் பாங்கிறையாய்ப் பார்ப்பவனுய்
மற்றுங் கிருப்பிடமாய் வன்சரணுய்—உற்ருனுய்
தோற்றமுடி வுக்கிடமாய்ச் சூழ்நிதியாய் வீயாத
வேற்றமுடை வித்தாவேன் யான்.

களுக்கும் 'வேத₃கமான' (அறிவையளிக்கும்) என்னும் விஶேஷணம் வருவிக்கப்பட்டது. (ருக் ஸாம யஜு: ச அஹமேவ) உலகினருக்கு அறிவையளிக்கும் ருக்₃யஜுஸ்ஸாம வேத₃ங்களும் நானே. ''மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே'' [திருவாய் 3-1-10] என்ருர் ஆழ்வாரும். ருக்₃யஜுஸ்ஸாம வேத₃ங்களைத் தனியாகச் சொல்லியிருக்கும்போது, அவற்றில் அடங்கிய ஓங்காரத்தைத் தனித்துக் கூறியதற்குக் காரணம்—அது வேத₃மனைத்துக்கும் வித்தாய், வேத₃த்தில் சொல்லியிருக்கும் ஸாரார்த்த₂த்தைத் தன்னுள் கொண்டிருக்கையேயாகும். ஆக, 'உலகிலுள்ள ஜீவராஶிகளின் உத்பத்திக்கு உதவும் சேதனர்களுக்கும், அறிவையளித்து உதவும் வேத₃ங்களுக்கும், அவற்றில் அறியத் தக்கவையாய், சேதநனைப் பரிஶுத்₃த₄ப்படுத்தி உதவும் பொருள்களுக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் நானே' என்றதாயிற்று. 17.

(இவ்வுலகினர்க்கு) **பற்றுய்**—அடையுமிடமாகவும், **பரிப் பவனுய்**—த₄ரிக்கும் சேதனராகவும், **பாங்கு இறையாய்**—நியமிக்கும் சேதனராகவும், **பார்ப்பவனுய்**—நேரே காணும் சேதனராகவும், **மற்று ஆங்கு இருப்பிடமாய்**—மேலும் அங்கங்கு உள்ள வஸிக்குமிடங்களாகவும், **வன் சரணுய்**—இஷ்டத்தை அளித்து, அனிஷ்டத்தைத் தவிர்க்கும் சேதனராகவும், **உற்றுனுய்**—நன்மையை விரும்பும் சேதனராகவும், **தோற்றம் முடிவுக்கு இடமாய்** — (இவ்வுலகிற்கு) தோன்றி ஒடுங்குமிடமாகவும், **சூழ் நிதியாய்** — (இவ்வுலகிலிருந்து) தோன்றி (அதில்) ஒடுங்கும் பொருள்களாகவும், **வீயாத ஏற்றமுடை வித்தாவேன்**—(இவ்வுலகிற்கு) மாருமலிருக்கும் சிறப்புடைய காரணமாகவும்இருப்பவன், **யான்**—நானே.

---

18. இவ்வுலகிலுள்ள சேதநாசேதநங்கள் அனைத்தோடும் பல வகைகளில் தொடர்புகொண்ட சேதநாசேதநப்பொருள்கள் அனைத்துக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் நானே என்கிருன் இந்த ஶ்லோகத்தில். இதன் முற்பாதியில் சேதனர்களோடு பல வகைகளில் தொடர்புகொண்ட சேதநாசேதநப்பொருள்கள் அனைத்துக்கும் அந்தர்யாமி நானே என்கிருன். (க₃தி:) இவ்வுலகினருக்கு ஆங்காங்குள்ள ப்ராப்யஸ்த₂ானம், அதாவது அடையுமிடமாயிருப்பவன் நானே. இந்த ப்ரகரணம் முழுவதும், உலகினரோடு தொடர்புடைய பல த்₃ரவ்யங்களைப் பற்றியே கூறிவருகையால், இங்கு 'க₃தி' ஶப்₃த₃ம் நடத்தலாகிற க்ரியாரூபமான அத்₃ரவ்யத்தைக் கூருமல், 'க₃ம்யத இதி க₃தி:'' [அடையப்படுகிறதாகையால் அடையுமிடம் 'க₃தி' எனப் படுகிறது.] என்னும் வ்யுத்பத்தியாலே அடையுமிடமாகிற த்₃ரவ்யத்தைக் கூறுகிறது. (ப₄ர்த்தா) உலகிலுள்ள அவரவரை த₄ரிக்கும் சேதநராயிருப்பவனும் நானே. ''அஸ்ய ஜக₃த:'' [இவ்வுலகினருக்கு] என்று சென்ற ஶ்லோகத்திலுள்ள பத₃ங்களை இங்கு ஒவ்வொரு பத₃த்தோடும் கூட்டிக்கொள்ளவேண்டியிருக்கையாலே, 'ப₄ர்த்ரு' ஶப்₃த₃த்திற்கு ஒரு ஸ்த்ரீயை மாத்திரம் தாங்கும் கணவனைப்பொருளாகக் கொள்ளாமல், உலகிலுள்ள அவரவரைத் தாங்கும் சேதநர் அனைவரும் பொருளாகக் கொள்ளப்பட்டனர். சென்ற ஶ்லோகத்தில், 'தா₄த்ரு' ஶப்₃த₃த்தாலே—தா₄ரணம் முதலானவற்றுலே உத்பத்திகாரணமாயிருப்பவர்களைக் கூறுகையாலே, இங்குள்ள 'ப₄ர்த்ரு' ஶப்₃த₃த்தோடு புநருக்தியில்லை. (ப்ரபு₄:) இவ்வுலகிலுள்ள அவ

॥भा॥ गम्यत इति गतिः—तत्रतत्र प्राप्यस्थानमित्यर्थः, भर्ता—धारयिता, प्रभुः—शासिता, साक्षी—साक्षाद्द्रष्टा, निवासः—वासस्थानं वेश्मादि, शरणम्—इष्टस्य प्रापकतयाऽनिष्टस्य निवारणतया च समाश्र-

---

ரவரை நியமிக்கும் சேதநராயிருப்பவனும் நானே. 'ப்ரபு₄' ஶப்₃த₃த்துக்கு 'மிகுதியுடையவன்' என்று பொருள்கொண்டால், இவ்வுலகினருக்குப் பிரபு₄ என்பது பொருந்தாதாகையால், பிரபு₄க்களுக்கு உலகில் பிரஸித்₃த₄மான நியமிப்பவராயிருக்கும் பெருமை பொருளாகக் கொள்ளப்பட்டது. (ஸாக்ஷீ) இவ்வுலகிலுள்ள அவரவரை நேரே காணும் சேதநனுயிருப்பவனும் நானே. "ஸாக்ஷாத்₃ த்₃ரஷ்டரி ஸம்ஜ்ஞாயாம்" [அஷ்டா 5-2.91] ['ஸாக்ஷி' ஶப்₃த₃ம் ஸம்ஜ்ஞையாலே (ரூடி₄யாலே) நேரே காண்பவனைக் குறிக்கிறது.] என்னும் பாணினி ஸூத்ரம் காணத்தக்கது. (நிவாஸ:) உலகினருக்கு வஸிக்குமிடமான வீடு முதலானவையாயிருப்பவனும் நானே. க₃தி ஶப்₃த₃வ்யாக்₂யானத்தில் சொன்ன ரீதியில், நிவாஸ ஶப்₃த₃மும் வஸித்தலாகிற க்ரியாரூபமான அத்₃ரவ்யத்தைச் சொல்லாமல் வஸிக்குமிடமாகிற த்₃ரவ்யத்தைச் சொல்லுவதாகக் கொள்ள வேண்டும். க₃தி ஶப்₃த₃த்தோடு புநருக்தி (கூறியதுகூறல்) வாராமைக்காக, வஸிக்குமிடமான வீடு முதலானவை நிவாஸ ஶப்₃த₃த்தாலும், ஸ்வர்க்க₃ம் முதலான ப்ராப்ய ஸ்த₂ானங்கள் (அடையுமிடங்கள்) க₃திஶப்₃த₃த்தாலும் கூறப்படுவதாகக் கொள்ளப்பட்டது. க₃தி ஶப்₃த₃த்தாலே ஸ்வர்க்க₃ம் முதலானவற்றில் அநுப₄விக்கப்படும் போ₄க்₃யப் பொருள்களாகிற ப்ராப்யங்கள் சொல்லப்படுவதாகவும் கொள்ளலாம். (ஶரணம்) இவ்வுலகிலுள்ள அவரவரால் இஷ்டங்களைப் பெறுவதற்கோ, அநிஷ்டங்களைத் தவிர்ப்பதற்கோ அல்லது இரண்டுக்குமோ உறுப்பான உபாயமாக ஆஶ்ரயிக்கத்தக்க சேதநராயிருப்பவனும் நானே. "ஶரணம் க்₃ருஹரக்ஷித்ரோ:" [அமரம் 3-3-53] [ஶரண ஶப்₃த₃ம் வீட்டையும், ரக்ஷிக்கும் சேதநனையும் குறிக்கும்.] என்னும் இரண்டு அர்த்த₂ங்களில், வீடாகிற அர்த்த₂ம் நிவாஸ ஶப்₃த₃த்திற்குப் பொருளாகக் கொள்ளப்பட்டுவிட்டபடியால், இங்கு ரக்ஷிக்கும் சேதநன் பொருளாகக் கொள்ளப்பட்டான். (ஸுஹ்ருத்) உலகில் அவரவர்க்கு ஹிதத்தை விரும்பும் சேதநராயிருப்பவனும் நானே. 'ஹ்ருத்' என்பது ஹ்ருத₃யத்தையும், அதற்கு விஶேஷணமான 'ஸு'ஶப்₃த₃ம் ஶோப₄நத்தையும் குறிப்பவை. ஆகையால் ஶோப₄நமான ஹ்ருத₃யத்தையுடையவன் 'ஸுஹ்ருத்' ஆகிறான். ஹ்ருத₃யம் ஶோப₄நமாயிருக்கையாவது—பிறர்க்கு நன்மையை

यणीयश्चेतनश्शरणम्, स चाहमेव; सुहृत्—हितैषी, प्रभवप्रलयस्थानम्—यस्यकस्यचिद्यत्रकुत्रचिदुत्पत्तिप्रलययोर्यत् स्थानम्, तदहमेव, निधानं

விரும்புகை. ஆக, பிறர்க்கு நன்மையை விரும்புமவன் ஸுஹ்ருத்தாகிறான். சென்ற ஶ்லோகத்தில் மாதா பிதாக்கள் முதலானோரையும், இந்த ஶ்லோகத்தில் நிவாஸ:, ஶரணம், ஸுஹ்ருத், கதி: முதலான பொருள்களையும் எடுத்து 'எல்லாம் நானே' என்று இங்கு கண்ணன் கூறியது—''மாதா பிதா ப்ராதா நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:'' என்னும் ஸுபாலோபநிஷத்வாக்யத்தின் உபப்ருஹ்மணம் (விளக்கம்) என்பது வெளிப்படை. ஆக முற்பாதியால், 'சேதநர்களோடு பலவகைகளில் தொடர்புகொண்ட சேதநாசேதநப் பொருள்களனைத்துக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் நானே' என்றான். இனி பிற்பாதியால், 'இவ்வுலகிலுள்ள சேதநாசேதநப்பொருள்கள் அனைத்தோடும் பலவகைகளில் தொடர்புகொண்ட சேதநாசேதநப் பொருள்கள் அனைத்துக்கும் அந்தர்யாமி நானே' என்கிறான். சென்ற ஶ்லோகம் தொடங்கி இந்த ஶ்லோகத்தின் முற்பாதி ஈறாக ஒவ்வொரு பதத்தோடும் கூட்டிக்கொள்ளும்போது, 'அஸ்ய ஜகத:' என்னும் தொடருக்கு இவ்வுலகிலுள்ள சேதநர் பொருள்; இந்த ஶ்லோகத்தின் பிற்பாதியிலுள்ள ஒவ்வொரு பதத்தோடும் கூட்டிக்கொள்ளும் போது அத்தொடருக்கு இவ்வுலகிலுள்ள சேதநாசேதநங்கள் அனைத்துமே பொருள். (ப்ரபவப்ரளயஸ்தாநம்) பிரமன் முதலாக, புல், எறும்பு ஈறாகவுள்ள எல்லாச் சேதநர்க்கும், அவ்யக்தம் முதலாக கடபடாதிகள் ஈறாகவுள்ள எல்லா அசேதநப்பொருள்களுக்கும், அவை எங்கிருந்தபோதிலும், யாதொன்று உண்டாகும் இடமாக இருக்கிறதோ, யாதொன்று லயிக்குமிடமாக இருக்கிறதோ அவையனைத்துக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் நானே என்று கருத்து. இங்கு ''ப்ரபவ: ப்ரளய: ஸ்தாநம்'' என்னும் வ்யஸ்தமான பாடம் ஶங்கரரால் கொள்ளப்பட்டது. 'அப்பாடம் ப்ரஸித்தமன்றாகையாலும், அப்படி அப்ரஸித்தபாடத்தைக் கொண்டு உரையிடுவது நேர்மையல்லவாகையாலும், ப்ரஸித்தமான (பலரால் கையாளப் பட்ட) ஸமஸ்தபாடத்தை பாஷ்யகாரர் கைக்கொண்டார்' என்று தாத்பர்யசந்த்ரிகையில் காட்டப்பட்டது. (நிதாநம்) இவ்வுலகிலுள்ள சேதநாசேதநப்பொருள்களில் ஒவ்வொன்றிலிருந்து தோன்றி, அவ்வவற்றில் ஒடுங்கும் ஒவ்வொரு பொருளுக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் நானே என்று கருத்து. இவ்வுலகிலுள்ள பொருள்கள் தோன்றி மறையுமிடங்களை முன்பதத்தால் சொல்லுகையால், அந்தந்த இடங்க

निधीयत इति निधानम्, उत्पाद्यमुपसंहार्यं चाहमेवेत्यर्थः; अव्ययं बीजम्—तत्र तत्र व्ययरहितं यत्कारणम्, तदहमेव॥ १८॥

ளில் தோன்றுகின்றவையும், லயமடைபவையும் இங்கு சொல்லப்படுவதாகக்கொள்வது உசிதம். ''நிதீ₄யத இதி நித₄ாநம்'' என்னும் வ்யுத்பத்தியாலே, உண்டாவதற்கு முன்னும், லயமடைந்த பின்னும் காரணப்பொருளில் அடங்கியிருப்பவையாய், ஸ்ருஷ்டிகாலத்தில் அக்காரணப்பொருளிலிருந்து உண்டாகின்றவையாய், ப்ரளயகாலத்தில் அதில் ஒடுங்குகின்றவையான பொருள்களைக் காட்டுகிறது இது. (அவ்யயம் பீ₃ஜம்) இவ்வுலகிலுள்ள அவ்வப்பொருள்களுக்கு அழியாத காரணமாயிருக்கும் பொருள்களுக்கும் நானே அந்தர்யாமி என்று கருத்து. ''ப்ரப₄வப்ரளயஸ்த₂ாநம்'' என்னுமிடத்தில் உபாத₃ாந காரணமும், ''அவ்யயம் பீ₃ஜம்'' (அழியாத காரணம்) என்னும் இவ்விடத்தில் நிமித்தம், ஸஹகாரி என்னும் மற்ற இருவகை ஸாமாந்ய காரணங்களும் சொல்லப்படுகின்றனவாகையாலே புநருக்தி இல்லை. உபாத₃ாந காரணமான மண் முதலானவை க₄டம் முதலான கார்யம் உண்டாகும்போது மாறுபாட்டை அடைகின்றன. குயவன் முதலான நிமித்தகாரணமும், த₃ண்ட₃ம் சக்ரம் முதலான ஸஹகாரிகாரணங்களும் க₄டம் முதலான கார்யம் உண்டாகும்போது மாறுபாட்டையடைவதில்லை. அதனாலேயே இவற்றைக் குறிக்கும். 'பீ₃ஜ' ஶப்₃த₃த்துக்கு 'அவ்யயம்' என்று விஶேஷணம் இடப்பட்டது. பீ₃ஜம் (விதை) என்னும் ஶப்₃த₃ஸ்வாரஸ்யத்தையொட்டி, இங்கு உபாத₃ாநகாரணம் சொல்லப்படுவதாகக் கொண்டால், அந்த பீ₃ஜத்திற்கு ஆத₄ாரமான பூ₄மி முதலான தே₃ஶங்களை 'ப்ரப₄வப்ரளயஸ்த₂ாநம்' என்னும் ஶப்₃த₃ம் குறிப்பதாகக் கொள்ளவேணும். பீ₃ஜ ஶப்₃த₃த்திற்கு 'அவ்யயம்' என்று விஶேஷணமிட்டது—விதையிலிருந்து மரமும், மரத்திலிருந்து விதையும் மாறி மாறி உண்டாகையாகிற பீ₃ஜாங்குர ந்யாயத்தாலே விதைகள் முதலான உபாத₃ான காரணங்கள் ப்ரவாஹ ரூபேண அழியாமலிருப்பதையிட்டு என்று கொள்ளவேண்டும். ஆக, ''இவ்வுலகிலுள்ள சேதநாசேதநங்கள் அனைத்தோடும் பல வகைகளில் தொடர்புகொண்ட சேதநாசேதநப்பொருள்களனைத்துக்கும் அந்தர்யாமியாயிருப்பவன் நானே'' என்று இந்த ஶ்லோகத்தில் கூறப்பட்டது. பதினாறுவது ஶ்லோகம் தொடங்கி பதினெட்டாவதான இந்த ஶ்லோகம் ஈறாக சில முக்கியமான பொருள்களை எடுத்துக் காட்டுவதன் மூலம் உலகிலுள்ள எல்லாப்பொருள்களின் ஸத்தா (உத்பத்தி) ஸ்தி₂திகளும் தன் அதீ₄னம் என்று சொல்லப்பட்டதாயிற்று. 18.

तपाम्यहमहं वर्षं निगृह्णाम्युत्सृजामि च।
अमृतं चैव मृत्युश्च सदसच्चाहमर्जुन! ॥ १९॥

**19. தபாம்யஹமஹம் வர்ஷம் நிக்₃ருஹ்ணும்யுத்ஸ்ருஜாமி ச ।
அம்ருதம் சைவ ம்ருத்யுஶ்ச ஸத₃ஸச்சாஹமர்ஜுந ! ||**

அர்ஜுந!—அர்ஜுன!, **அஹம்**—நான், **தபாமி**—(அக்₃நி, ஸூர்யன் முதலானவர்களை ஶரீரமாகக் கொண்டு) வெப்பத்தையளிக்கிறேன்; **அஹம்**—நான், **வர்ஷம் நிக்₃ருஹ்ணுமி**-(கிரணங்கள் முதலானவற்றை ஶரீரமாகக்கொண்டு கோடையில்)மழை நீரை இழுத்துக் கொள்கிறேன்;**(வர்ஷம்) உத்ஸ்ருஜாமி ச**—(மழைக் காலத்தில் மேக₄ம் முதலானவற்றை ஶரீரமாகக் கொண்டு) மழையைப் பொழியவும் செய்கிறேன். **அஹம்**—நான், **அம்ருதம் சைவ**—உலகினரைப் பிழைக்க வைக்கும் பொருள்களாகவும், **ம்ருத்யு: ச**—உலகினரை அழிக்கும் பொருள்களாகவும் இருக்கின்றேன். **ஸத்**—நிகழ்காலத்திலுள்ள எல்லாப் பொருள்களாகவும், **அஸத் ச**—இறந்த காலத்திலும், எதிர்காலத்திலுமுள்ள எல்லாப் பொருள்களாகவும் இருக்கிறேன்.

**19. தாவமது செய்வேனுன் பார்த்தா தடுத்துமழை
மேவவது தன்னை விடுவேனுன்—சாவவிடாத்
தெள்ளமுது நானே செறுங்கூற் றமுநானே
யுள்ளதில தானதுநா னுற்று.**

பார்த்தா—குந்தீ புத்ரனே! **நான்**—நான், **தாவம் அது செய்வேன்**—(அக்₃நி, ஸூர்யன் முதலானவற்றை ஶரீரமாகக் கொண்டு) வெப்பத்தையளிக்கிறேன்; **நான்**—நான், **மழை தடுத்து**—(கோடையில் கிரணம் முதலானவற்ருல்) மழையை இழுத்துக் கொண்டு, **அது தன்னை மேவ விடுவேன்**—(மழை காலத்தில் வருணன், மேக₄ம் முதலானவற்றை ஶரீரமாகக் கொண்டு) அந்த மழையைப் பொழிவேன். **நானே**—நானே, **சாவவிடாத் தெள்ளமுது**—உலகி

॥भा॥ अग्न्यादित्यादिरूपेणाहमेव तपामि; ग्रीष्मादावहमेव वर्षं निगृह्णामि। तथा वर्षासु चाहमेवोत्सृजामि। अमृतं चैव

னரை அழியாமல் காக்கும் த₄ாரகப் பொருள்களாயிருப்பவன்; **நானே**—நானே, **செறும் கூற்றமும்**—உலகினரை அழிக்கும் ப₃ாத₄கப் பொருள்களாகவும் இருப்பவன்; **உற்று**—அந்தர்யாமியாய் இருந்து, **உள்ளது**—நிகழ் காலத்திலுள்ள பொருள்களாகவும், **இலதானது**—மற்ற காலங்களிலுள்ள பொருள்களாகவுமிருப்பவன், **நான்**—நானே.

19. உலகிலுள்ள எல்லாப் பொருள்களின் ப்ரவ்ருத்தியும் தனக்கு அதீ₄னமானதே என்று சொல்லி, பதினைந்தாவது ஶ்லோகத்திலிருந்து விவரிக்கப்பட்ட உபாஸ்யமான ப₄க₃வத் ஸ்வரூபத்தின் ஸர்வாத்மகத்வவர்ணனத்தை நிறைவுபடுத்துகிறுன். (அஹம் தபாமி) அக்₃நி, ஆதி₃த்யன், விளக்கு முதலானவற்றை ஶரீரமாகக்கொண்டு உலகிற்கு வெப்பத்தையளிப்பவன் நானே. அவர்களுடைய வெப்பத்தையளிக்கும் ப்ரவ்ருத்தி என் அதீ₄னமே என்றபடி. இயற்கையில் எம்பெருமானுடைய ஸ்வரூபத்திற்கு வெப்பத்தையளிக்கும் தன்மை இல்லையாகையால், அக்₃நி, ஆதி₃த்யன், விளக்கு முதலானவற்றின் மூலம் வெப்பத்தை அளிக்கிறுன் என்று கொள்ளப்பட்டது. (அஹம் வர்ஷம் நிக்₃ருஹ்ணாமி உத்ஸ்ருஜாமி ச) நானே கோடைக் காலம் முதலானவற்றில் கிரணம் முதலானவற்றை ஶரீரமாகக்கொண்டு மழையை வெளிவிடாமல் இழுத்துக்கொள்கிறேன்; நானே வருணன், மேக₄ம் முதலானவற்றை ஶரீரமாகக்கொண்டு மழையைப் பொழியச்செய்கிறேன். ஒருவனே மழையை இழுத்துக் கொள்வதும், பொழிவதும் ஒரே தே₃ஶகாலங்களில் கூடாதாகையாலே, காலபே₄த₃த்தினுலே இரண்டும் பொருந்தவைக்கப்பட்டது. ' அஹம் க்ரது:' என்று தொடங்கும் பதினுருவது ஶ்லோகத்தில் யஜ்ஞ ஸம்ப₃ந்தி₄களான அதி₄யஜ்ஞங்களும், 'பிதாஹம்' என்று தொடங்கும் பதினேழாவது ஶ்லோகத்தின் முற்பாதியில் ப்ரஜாஸம்ப₃ந்தி₄களான அதி₄ப்ரஜங்களும், 'வேத்₃யம் பவித்ரம்' என்று தொடங்கும் பிற்பாதியில் வேத₃ஸம்ப₃ந்தி₄களான அதி₄வேத₃ங்களும், 'க₃திர் ப₄ர்த்தா' என்று தொடங்கும் பதினெட்டாவது ஶ்லோகத்தில் ஆத்மஸம்ப₃ந்தி₄களான அத்₄யாத்மங்களும், 'தபாம்யஹம்' என்னும் இந்த ஶ்லோகத்தின் முற்பாதியில் தே₃வஸம்ப₃ந்தி₄களான அதி₄தை₃வதங்களும் தன்னதீ₄னமே என்று நிருபிக்கப்பட்டன என்பது சிலர் வ்யாக்₂யானம்

मृत्युश्च—येन जीवति लोको येन च म्रियते, तदुभयमहमेव। किमत्र बहुनोक्तेन ; सदसच्चाहमेव—सद्यद्वर्तते, असद्यदतीतमनागतं च, सर्वावस्थावस्थितचिदचिद्वस्तुशरीरतया तत्तत्प्रकारोऽहमेवावस्थित इत्यर्थः। एवं बहुधा पृथक्त्वेन विभक्तनामरूपावस्थितकृत्स्नजगच्छरीरतया तत्प्रकारोऽहमेवावस्थित इत्येकत्वज्ञानेनानुसन्दधानाश्च मामुपासते॥ १९॥

என்று தாத்பர்யசந்த்3ரிகையில் காட்டப்பட்டது. ஆக, இதுவரையில் முக்2யமான சில பொருள்களை எடுத்து, அவைகளுடைய ஸத்தாஸ்தி2தி ப்ரவ்ருத்திகள் தன்னதீ4னம் என்று காட்டினன். அடுத்த பாத3த்தில் ஸாத4கப்பொருள்களும், பா3த4கப் பொருள்களும் தன்னதீ4னமாயிருப்பவையே என்று காட்டுகிறான்—(அம்ருதம் சைவ ம்ருத்யுஶ்ச) உலகினரைச் சாவாமல் பிழைக்கவைக்கும் ஸாத4கப்பொருள்களும், அழிக்கும் பா3த4கப் பொருள்களும் நானே; அவற்றின் ஸத்தாஸ்தி2தி ப்ரவ்ருத்திகளும் என்னதீ4னமே என்றபடி. மரணத்தை விளைக்கும் பொருளைக் காட்டும் ம்ருத்யு ஶப்3த3த்திற்கு எதிர்த்தட்டாக அம்ருத ஶப்3த3த்தை ப்ரயோகி3த்திருப்பதால், இங்கு அம்ருத ஶப்3த3ம் சாவாமல் காக்கும் ஸாத4கப் பொருள்களைக் குறிக்கிறது. விஷத்துக்கு எதிர்த்தட்டாகப் படி2க்காமையாலே தே3வாம்ருதத்தைக் குறிக்காது. அம்ருத ஶப்3த3த்துக்கு எதிர்த்தட்டாகப் படி2க்கப்பட்டிருக்கையாலே, ம்ருத்யு ஶப்3த3மும் யமன் முதலானவர்களைக் குறிக்காமல், அழிக்கும் பா3த4கப் பொருள்களைப் பொதுவாகக் குறிக்கிறது. இனி, கடைசி பாத3த்தால் 'இப்படி முக்கியமான பொருள்கள் பலவற்றைச் சொல்லுவானேன்? எல்லாக் காலங்களிலுமுள்ள எல்லாப் பொருள்களும் என்னதீ4னமே' என்கிறான்—(ஸத் அஸத் ச அஹம்) நிகழ்காலத்திலுள்ள எல்லாப் பொருள்களும், நிகழ்காலமல்லாத இறந்த காலத்திலும், வருங்காலத்திலுமிருக்கும் எல்லாப் பொருள்களும் நானே. எல்லா தே3ஶங்களிலும், எல்லாக்காலங்களிலும் எல்லா நிலைகளிலுமுள்ள எல்லாச் சேதநாசேதநப் பொருள்களையும் ஶரீரமாகக் கொண்டிருக்கையால், அவையனைத்தையும் விட்டுப் பிரியாத ப்ரகாரங்களாகக் கொண்டிருப்பவன் நானே என்று கருத்து. பொதுவாக ஸச்ச2ப்3த3ம் சேதநத்தையும், அஸச்ச2ப்3த3ம் அசேதனத்தையும் குறிக்குமாயினும், முக்காலத்திலுமுள்ள எல்லாச் சேதநாசேதநப் பொருள்களும் தன்னதீ4னமே என்று காட்டுவதில் ஸ்வாரஸ்யம் அதி4கமாகையால் ஸச்ச2ப்3த3த்தால் நிகழ்காலத்திலுள்ள எல்லாச் சேதநாசேதநப்பொருள்களும், அஸச்ச2ப்3த3த்தால் நிகழ்காலத்தைக் காட்டி

॥भा॥ एवं महात्मनां ज्ञानिनां भगवदनुभवैकभोगानां वृत्तमुक्त्वा तेषामेव विशेषं दर्शयितुमज्ञानां कामकामानां वृत्तमाह—

त्रैविद्या मां सोमपाः पूतपापाः यज्ञैरिष्ट्वा स्वर्गतिं प्रार्थयन्ते।
ते पुण्यमासाद्य सुरेन्द्रलोकमश्नन्ति दिव्यान्दिवि देवभोगान्॥ २०॥

20. த்ரைவித்₃யா மாம் ஸோமபா: பூதபாபா:
யஜ்ஞைரிஷ்ட்வா ஸ்வர்க்க₃திம் ப்ரார்த்த₂யந்தே।
தே புண்யமாஸாத்₃ய ஸுரேந்த்₃ரலோகம்
அஶ்நந்தி தி₃வ்யாந் தி₃வி தே₃வபோ₄கா₃ந்॥

ते तं भुक्त्वा स्वर्गलोकं विशालं क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति।
एवं त्रयीधर्ममनुप्रपन्नाः गतागतं कामकामा लभन्ते॥ २१॥

21. தே தம் பு₄க்த்வா ஸ்வர்க்க₃லோகம் விஶாலம்
க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஶந்தி।
ஏவம் த்ரயீத₄ர்மமநுப்ரபந்நா:
க₃தாக₃தம் காமகாமா லப₄ந்தே॥

த்ரைவித்₃யா: — (வேத₃ாந்தத்திலல்லாமல்) மூன்று வேத₃ங்களில்* (பூர்வப₄ாக₃த்தில்) சொல்லப்பட்ட த₄ர்மங்களில் மாத்திரம் ஊன்றிநிற்பவர்களாய், **ஸோமபா:**— (இந்த்₃ரன் முதலானவர்களையே குறித்துச் செய்யப்பட்ட யாக₃ங்களின் ஶேஷமான) ஸோமரஸத்தைப் பருகுகின்ற

லும் வேறுபட்ட இறந்தகாலத்திலும் எதிர்காலத்திலுமுள்ள எல்லாச் சேதநாசேதநப்பொருள்களும் குறிக்கப்படுவதாகக் கொள்ளப்பட்டது. இவ்வண்ணமாக, பலவகைகளில் தனித்தனியாகப் பிரிந்து நிற்கும் நாமரூபங்களோடுகூடிய பொருள்களடங்கிய உலகனைத்தையும் ஶரீரமாகக்கொண்டவனுயிருக்கையால், அவ்வப்பொருள்களை ப்ரகாரமாகக் கொண்டவனுயிருப்பவன் நானே என்னும் காரணத்தால் பதினைந்தாவது ஶ்லோகத்தில் சொன்னபடி, என்னைக் காரியநிலையில் பலவாகவும், காரணநிலையில் ஒன்ருகவும் இருப்பவனுக அநுஸந்தி₄த்து உபாஸிக்கிருர்கள் என்று கருத்து. (அர்ஜுந!) வெள்ளைநிறத்தவனே! வெள்ளைநிறத்தால் குறிக்கப்படும் ஸத்வகு₃ணமுடைய நீ இத்தகைய உபாஸகனுகவேண்டும் என்று கருத்து. 19.

வர்களாய், **பூதபாபா:** — (ஸ்வர்க்க₃ம் முதலானவற்றை அடையத் தடையாயிருக்கும்) பாபங்களிலிருந்து நீங்கப் பெற்றவர்களாய், **யஜ்ஞை:**—(இந்த்₃ரன் முதலான தே₃வர்களை மாத்திரம் குறித்த) யஜ்ஞங்களாலே, **மாம் இஷ்ட்வா**— (அந்த தே₃வதைகளுக்கு அந்தர்யாமியாயிருக்கும்) என்னைக் குறித்தே (உண்மையில்) யாக₃ம்செய்து, **ஸ்வர்க்க₃திம் ப்ரார்த்த₂யந்தே**—(இந்திரன் முதலானரிடம்) ஸ்வர்க்க₃த்தை வேண்டுகிருர்கள். **தே**—அவர்கள், **புண்யம்**—இவ்வுலகத் துன்பங்களில்லாத, **ஸுரேந்த்₃ரலோகம்** — தே₃வேந்த்₃ர லோகத்தை, **ஆஸாத்₃ய**—அடைந்து, **தி₃வி**—அங்குள்ள பல இடங்களில், **தி₃வ்யாந்**—இவ்வுலக அநுப₄வங்களைக் காட்டிலும் சிறந்த, **தே₃வபோ₄கா₃ந்** — தே₃வர்களுடைய போ₄க₃ங்களை, **அஶ்நந்தி**—அநுப₄விக்கிருர்கள். **தே**—அவர்கள், **விஶாலம்**—பரந்ததான, **தம் ஸ்வர்க்க₃லோகம்**—அந்த ஸ்வர்க்க₃த்திலுள்ள போ₄க₃ங்களை, **பு₄க்த்வா**—அநுப₄வித்து, **புண்யே க்ஷீணே** — (அந்த அநுப₄வத்திற்குக் காரணமான) புண்யம் அழிந்தவளவில், **மர்த்யலோகம் விஶந்தி** — (மறுபடியும்) மனித உலகிற்கு வருகிருர்கள். **ஏவம்**—இவ்வண்ணமாக, **த்ரயீத₄ர்மம் அநுப்ரபந்நா:**—(வேத₃ாந்த ஜ்ஞாநமில்லாமல்) மூன்று வேத₃ங்களின் பூர்வபா₄க₃த்தில் சொன்ன யாக₃ாதி₃த₄ர்மங்களையே அநுஷ்டி₂ப்பவர்களாய், **காமகாமா:**- (அவற்றில் சொன்ன) விரும்பப்படும் ஸ்வர்க்க₃ாதி₃களிலேயே விருப்பமுடையவர்களாய், **க₃தாக₃தம் லப₄ந்தே**— (அல்பமும், அஸ்தி₂ரமுமான) ஸ்வர்க்க₃ாதி₃களையே அடைந்து மறுபடியும் மறுபடியும் திரும்பி வருகிருர்கள்.

---

20. இந்தவினை வேதத் தியல்கின்ற ரெச்சத்தால்
வந்திறைஞ்சித் தம்வினைபோய் வானிரப்ப—ரந்தவவர்
சென்றமரர் நாடணைந்து தேவர்தம் போகத்தை
நின்றமர்ந்து துய்ப்பார் நிகழ்ந்து.

வேதத்து இயல்கின்றுர் — (வேத₃ாந்தத்திலல்லாமல்) மூன்று வேத₃ங்களில் (பூர்வபா₄க₃த்தில்) சொல்லப்பட்ட

த₄ர்மங்களில் மாத்திரம் ஊன்றிநிற்பவர்களாய், **தம் வினை போய்**-(ஸோமபானம்செய்து அதனுல் ஸ்வர்க்கம் முதலானவற்றை அடையத்தடையாயிருக்கும்) பாபங்களிலிருந்து நீங்கப்பெற்றவர்களாய், **எச்சத்தால்**—(இந்த்₃ரன் முதலான தே₃வர்களை மாத்திரம் குறித்த) யஜ்ஞங்களாலே, **இந்த எனை வந்து இறைஞ்சி**—(அந்த தே₃வதைகளுக்கு அந்தர்யாமியாயிருக்கும்) என்னைக் குறித்தே(உண்மையில்) யாக₃ம்செய்து, **வான் இரப்பர்** — (இந்திரன் முதலானுரிடம்) ஸ்வர்க்க₃த்தை வேண்டுகிறுர்கள். **அந்த அவர்**—அத்தகைய அவர்கள், **அமரர் நாடு** — (இவ்வுலகத் துன்பங்களில்லாத) தே₃வலோகத்தை, **சென்று அணைந்து**—சென்று அடைந்து, **தேவர்** தே₃வர்களுக்குரிய ஸுக₂ாநுப₄வங்களை, **நின்று** — தே₃வ **தம் போகத்தை**—லோகத்தில் ஆங்காங்கு இருந்து,**அமர்ந்து** — (சிறந்த அவ்வநுப₄வங்களில்) பொருந்தி நின்று, **நிகழ்ந்து துய்ப்பார்**--ஈடுபட்டு அநுப₄விப்பர்கள்.

21. **பொன்னகரில் வாழ்வெய்திப் புண்ணியத்தின் றன்குறை-**
பன்னினவ ரிவ்வுலகிற் பாடழிந்தே—பின்னடைவர் [யைப்
காக்குமறைத் தன்மைக் கதியடைந்தார் காமத்தாற்
போக்குவரத் தேபெறுவர் பூண்டு.

பொன்னகரில் வாழ்வெய்தி-ஆசைப்படத்தக்க ஸ்வர்க்க₃ லோகத்தில் அநுப₄வங்களை அடைந்து, **புண்ணியத்தின் தன் குறையைப் பன்னினவர்**—(அங்கிருக்கும்போதும் ஸ்வர்க்க₃ாநுப₄வத்திற்குக் காரணமான) புண்ணியம் குறைவதை அநுஸந்தி₄த்து வருந்துகின்றவர்களாய், **பின் பாடு அழிந்தே**-கடைசியில் புண்ணியம் முழுவதும் அழிந்தவுடன், **இவ்வுலகில் அடைவர்**—இந்த மனுஷ்யலோகத்தில் (பிறவியை) அடைகிறுர்கள். **காக்கும் மறை தன்மை கதி அடைந்தார்**—(வேத₃ாந்த ஜ்ஞாநமில்லாதவர்களாய் யாக₃ம் முதலானவற்றுல்) ரக்ஷிக்கும் வேத₃ங்களில் சொன்ன த₄ர்மங்களை அநுஷ்டி₂ப்பவர்களாய், **காமத்தால்**—(அவற்றில் சொன்ன ஸ்வர்க்க₃ாதி₃களில்) விருப்பத்தால், **பூண்டு போக்குவரத்தே பெறுவர்**-(அல்பமும், அஸ்தி₂ரமுமான) ஸ்வர்க்க₃ாதி₃களையே அடைந்து மறுபடியும் மறுபடியும் திரும்பிவருகிறுர்கள்.

॥भा॥ ऋग्यजुस्सामरूपास्तिस्रो विद्यास्त्रिविद्यम्; केवलं त्रिविद्यनिष्ठास्त्रैविद्याः, न तु त्रय्यन्तनिष्ठाः। त्रय्यन्तनिष्ठा हि महात्मानः

20. ''மஹாத்மாந: மாம் ஜ்ஞாத்வா அநந்யமநஸ: ப4ஜந்தி'' [கீ3தை 9-13] [மஹாத்மாக்கள் என்னையறிந்து வேறு எதிலும் நெஞ்சு செலுத்தாதவர்களாய் என்னிடம் ப4க்தி செலுத்துகிறார்கள்] என்று தொடங்கி, ஜ்ஞாநிகளாய், ப4க3வத3நுப4வத்தையே பயனாகக் கொண்டவர்களான மஹாத்மாக்களின் ப4ஜனம், கீர்த்தனம் முதலான ஸ்வரூபநிரூபகத4ர்மங்களை (தனித்தன்மைகளை) இதுவரையில் விவரித்தான். இனி, 22-வது ஶ்லோகம் தொடக்கமாக அவர்களுடைய நிருபிதஸ்வரூபவிஶேஷணங்களை (மற்ற பெருமைகளை)ச் சொல்லப்புகுகிறவனாய். அவர்களுக்கு நேர் எதிர்த்தட்டாயிருப்பவர்களாய். தாழ்ந்த ப2லன்களை விரும்புகிறவர்களான அறிவிலிகளின் தனித்தன்மைகளை இங்கு கூறுகிறான். 'பரம் பா4வம் அஜாநந்த:''[கீ3தை 9-11] என்று எடுக்கப்பட்ட அறிவிலிகளில் ஒருவகையான இவர்களுடைய அறிவின்மையை விளக்குகிறான் இந்த ஶ்லோகத்தில். (த்ரைவித்3யா:) வேதா3ந்தத்தில் ஊன்றிநில்லாமல் ருக்3யஜுஸ் ஸாமங்களாகிற மூன்று வேத3ங்களின் பூர்வபா4க3த்தில் சொல்லப்பட்ட த4ர்மங்களில்மாத்திரம் ஊன்றிநிற்பவர்கள். மூன்று வேத3ங்களாகிற த்ரிவித்3யைகளின் ஸமாஹாரம் (கூட்டரவு) த்ரிவித்3யமாகிறது. த்3விகு3ஸமாஸமாகையால் த்ரிவித்3யம் என்று ஒருமையும், நபும்ஸகலிங்க3மும் வருகிறது. ''அகாராந்தோத்தரபதே3ா த்3விகு3: ஸ்த்ரியாம் இஷ்ட:'' [அஷ்டா 2-4-17. வா. 1556] [அகாராந்தத்தை மேற்பத3மாகக்கொண்ட த்3விகு3ஸமாஸத்தில் ஸ்த்ரீலிங்க3ம் வரும்] என்கிற வார்த்திகத்தின்படி, 'த்ரிவித்3யா' என்று ஸ்த்ரீலிங்க3ம் வரவேண்டுமேயெனில், இந்தப் பொதுவிதி4க்கு விதி4விலக்கைக் காட்டும் ''பாத்ராத்3யந்தஸ்ய ந'' [வார் 1559] [பாத்ரம் முதலானவற்றைக் கடைசியில்கொண்ட பத3ங்களுக்கு ஸ்த்ரீலிங்க3ம் வராது. நபும்ஸகலிங்க3மே வரும்] என்னும் வார்த்திகத்தின்படி, பஞ்சபாத்ரம், சதுர்யுக3ம், த்ரிபு4வநம் முதலான பத3ங்களைப்போலே த்ரிவித்3யம் என்று வந்திருக்கிறது. த்ரிவித்3யத்தில்மாத்திரம் ஊன்றிநிற்பவர்கள் த்ரைவித்3யர்கள். ''தத3தீ4தே தத்3வேத3'' [அஷ் 4-2-59] என்னும் ஸூத்ரத்தின்படி, த்ரிவித்3யத்தை அறிந்து அத்4யயனம்செய்து அதின் அர்த்த2த்தில் ஊன்றிநிற்பவன் என்னும் பொருளில் 'அண்' ப்ரத்யயம் வந்து த்ரைவித்3ய: என்று ஆகிறது. மூன்றுவேத3த்தில்மாத்திரம் ஊன்றிநிற்பவர்கள் என்றதாலே, வேதா3ந்தத்தில் ஊன்றிநில்லாதவர்கள் என்றும் தேறுகிறது. வேதா3ந்தநிஷ்ட2ர்களான மஹாத்மாக்களோவெனில், முற்கூறிய முறையில் வேத3த்தின் பூர்வபா4க3த்தோடு உத்தரபா4க3த்தோடு வாசியற எல்லாப்பகுதிகளாலும் அறியப்

पूर्वोक्तप्रकारेण निखिलवेदवेद्यं मामेव ज्ञात्वाऽतिमात्रमद्भक्तिकारितकीर्तनादिभिर्ज्ञानयज्ञेन च मदेकप्राप्या मामेवोपासते। त्रैविद्यास्तु वेदप्रतिपाद्यकेवलेन्द्रादियागशिष्टसोमान् पिबन्तः, पूतपापाः—स्वर्गादिप्राप्तिविरोधिपापात्पूताः, तैः केवलेन्द्रादिदेवत्यतयाऽनुसंहितैर्यज्ञैर्वस्तुतस्तद्रूपं मामिष्ट्वा, तथावस्थितं मामजानन्तः स्वर्गतिं प्रार्थयन्ते। ते पुण्यम्—

படுபவன் நானே என்று அறிந்து, என்னிடம் எல்லையற்ற ப₄க்தியினாலேற்படுவதாக 14-வது ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட கீர்த்தனம், நமஸ்காரம் முதலானவற்றாலும், 15-வது ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஜ்ஞாநயஜ்ஞத்தாலும் என்னை ஒருவனையே ப்ராப்யமாகக் கொண்டு என்னையே உபாஸிக்கிறார்கள். த்ரைவித்₃யர்களைப்போலே என்னையறியாமல் ஸ்வர்க்க₃ாதி₃களை ப்ராப்யமாகக்கொண்டு அதன் பொருட்டு இந்திரன் முதலிய தே₃வதைகளைமாத்திரம் உபாஸிப்பதில்லை என்று கருத்து. மேற்பத₃ங்களில் இக்கருத்தை விவரிக்கிறான். இப்படி வேத₃த்தில் ஸ்வர்க்க₃ாதி₃ஸாத₄னமான பூர்வபா₄க₃த்தை மாத்திரம் த்ரிவித்₃யம் என்று குறிப்பதுபோலே, மோக்ஷஸாத₄னமான உத்தரபா₄க₃த்தை (வேதா₃ந்தபா₄க₃த்தை) "சதுர்த்தீ₂ வித்₃யா" [நான்காவது வித்₃யை] என்று குறிப்பதுண்டு. "ஏஷா தேऽந்வீக்ஷிகீ வித்₃யா சதுர்த்தீ₂ ஸாம்பராயிகீ" [பா₄ரதம். மோக்ஷ 319-46] "சதுர்த்தீ₂ ராஜஶார்தூ₃ல! வித்₃யைஷா ஸாம்பராயிகீ" [பா₄ரதம். மோக்ஷ 319-35] என்னும் ப்ரமாணங்கள் காண்க. (ஸோமபா:) இந்த்₃ரன் முதலானவர்களையே குறித்துச் செய்யப்பட்ட—பூர்வபா₄க₃த்தில் சொன்ன யாக₃ங்களின் ஶேஷமான ஸோமரஸத்தைப் பருகுகின்றவர்கள், மஹாத்மாக்களான உபாஸகர்களுக்கும் ப₄க்திக்கு அங்க₃மாக யாக₃ங்களைச் செய்வதும், ஸோமரஸத்தைப் பருகுவதும் உண்டு. ஆனால் அவர்கள் 'இந்த யாக₃ங்கள் அந்தர்யாமியான நாராயணனுக்கு ஆராத₄னமாயிருப்பவை' என்று நினைத்துச் செய்வார்கள்; த்ரைவித்₃யர்களோவெனில், இந்திரன் முதலானவர்களுக்கே ஆராத₄னம் என்று நினைத்துச் செய்வார்கள். வெறும் ஸோமபாநம் அத₄ர்மமாயினும், த்₃ரைவித்₃யர்கள் இந்த்₃ரன் முதலானோர்க்கு ஆராத₄னமாக நினைத்துச்செய்யும் யாக₃ங்களில் வேத₃விஹிதமாகையாலே அது ஸ்வர்க்க₃ஸாத₄னமாக ஆகிறது. (பூதபாபா:) இந்த ஸோமபானத்தாலே ஸ்வர்க்க₃த்தையடையத் தடையாயிருக்கும் பாபங்கள் நீங்கப்பெற்றவர்கள். அடுத்துச்சொல்லுகிறபடி, இவர்கள் பிரார்த்தி₂ப்பது ஸ்வர்க்க₃மேயாகையாலே அதற்கு ஸாத₄னமான யாக₃ங்களில் இவர்கள் செய்யும் ஸோமபானம் ஸ்வர்க்க₃த்திற்குத் தடையாயிருக்கும் பாபங்களையே போக்குகிறது என்று கொள்ளவேண்டும்.

दुःखासंभिन्नं सुरेन्द्रलोकं प्राप्य तत्र तत्र दिव्यान् देवभोगानश्नन्ति। ते तं

(யஜ்ஞை;) இந்திரன் முதலான தே₃வர்களைமாத்திரம் குறித்துச் செய்யப்பட்ட வேதோ₃க்தமான யஜ்ஞங்களாலே. (மாம் இஷ்ட்வா) என்னை ஆராதி₄த்து. இவர்கள் அறியவில்லையாயினும் அந்த யாக₃ங்கள் அந்த தே₃வதைகளுக்கு அந்தர்யாமியான எனக்கே உண்மையில் ஆராத₄னமாயிருக்கின்றன என்று கருத்து. இவ்வுண்மையை அறியாமையாலேயே இவர்களுக்குத் தாழ்ந்த ப₂லன் கிடைக்கிறது. இவ்விஷயத்தை அடுத்தபடி 23, 24, 25-வது ஶ்லோகங்களில் வெளிப்படுத்தப்போகிருன் கண்ணன். (ஸ்வர்க₃திம் ப்ரார்த்த₂யந்தே) இந்த்₃ரன் முதலானரிடம் ஸ்வர்க்க₃த்தை வேண்டுகிருர்கள். ஸ்வர்க்க₃ம் வேண்டும் என்னும் எண்ணம் யாக₃த்தை அநுஷ்டி₂ப்பதற்கு முன்பே இருந்தபோதிலும், யாக₃த்தைச்செய்த பின்பே 'ஸ்வர்க்க₃த்தைக் கொடுக்கவேணும்' என்று வாயாலே வேண்டுவது பொருந்துமாகையாலே "இஷ்ட்வா ப்ரார்த்த₂யந்தே" [யாக₃த்தைச் செய்து வேண்டுகிருர்கள்] என்று சொல்லப்பட்டது. இங்கு ஶ்லோகத்திலும், பா₄ஷ்யத்திலும் ஸ்வர்க்க₃ம் என்றது அது போன்ற தாழ்ந்த மற்ற ப₂லன்களுக்கும் உபலக்ஷணம். (தே புண்யம் ஸுரேந்த்₃ரலோகம் ஆஸாத்₃ய) அவர்கள் இவ்வுலகத் துன்பங்கள் கலக்காத தே₃வேந்த்₃ரலோகத்தை அடைந்து. புண்யகர்மத்தையோ அதனலேற்படும் தே₃வதாப்ரீதியையோ தே₃வேந்த்₃ரலோகத்தோடு ஒரேவேற்றுமையில் படிப்பது ஒட்டாது. தே₃வேந்த்₃ரலோகம் ஜீவனைப் பரிஶுத்₃த₄ப்படுத்துவது என்று ஶாஸ்த்ரங்களில் ப்ரஸித்₃தி₄யில்லாமையால் இங்கு புண்யஶப்₃த₃த்துக்கு 'பாவனம்'(பரிஶுத்₃த₄ப்படுத்துவது) என்று பொருள்கொள்ளவும் முடியாது. ஆகையால். இங்கு புண்யஶப்₃த₃ம் புண்யத்தின் ப₂லமான இவ்வுலகத் துன்பமின்மையைக் குறிக்கிறது என்று கொள்ளவேண்டும். அன்றிக்கே, புண்யஶப்₃த₃ம் புண்யத்தின் ப₂லமான ஸுக₂த்தைக் குறித்து, ஸுக₂மயமான தே₃வேந்த்₃ரலோகம் என்று பொருள்பட்டு, இவ்வுலத்துன்பமில்லாதது என்பது அர்த்த₂ாத் ஸித்₃தி₄க்கிறது என்றும் கொள்ளலாம். இந்த ஶ்லோகத்தின் முற்பாதியில் 'யஜ்ஞைரிஷ்ட்வா' என்று புண்யகர்மங்கள் குறிக்கப்பட்டுவிட்டபடியாலே, இங்கு புண்யம் என்றது லக்ஷணையாலே "புண்யஸாத்₄யம்" என்று பொருள்படுகிறது என்று கொண்டால், முற்பாதியில் சொன்ன அர்த்த₂த்தையே திருப்பிக் கூறுதலாகிற புநருக்தி தோ₃ஷம் ஏற்படும். (தி₃வி தி₃வ்யாந் தே₃வபோ₄கா₃ந் அஶ்நந்தி) தே₃வேந்த்₃ரலோகத்தில் ஆங்காங்குள்ள பிர

தே₃ஶங்களில் மிகச்சிறந்த ஆச்சரியமான தே₃வபோ₄க₃ங்களை அநுப₄விக்கிறார்கள். "ஸுரேந்த்₃ரலோகம் ஆஸாத்₃ய" [தே₃வேந்த்₃ர லோகத்தையடைந்து] என்று கூறியபின்பு, மறுபடியும் 'தி₃வி' என்றது அந்த லோகம் முழுவதையும் குறிக்காமல் அதிலுள்ள பிரதே₃ஶங்களையே குறிப்பதாகவேண்டும். இந்த 'தி₃வ்யாந்' என்றது 'தி₃வி ப₄வாந்' என்று பிரிந்து, இவ்வுலக போ₄க₃ங்களைக்காட்டிலும் அதிகமயக்கத்தைத் தரும் தே₃வலோக போ₄க₃ங்களைக் குறிக்கிறது. 'தே₃வபோ₄கா₃ந்' என்றது 'தே₃வர்களுக்கு போ₄க்₃யமானவைகளை' என்று பொருள்படுகிறது. பூ₄மியிலுள்ள யாக₃பசு ஹவிஸ்ஸு முதலானவையும் தே₃வர்களுக்கு போ₄க்₃யமானவையாகையாலே, அவற்றைத் தவிர்த்து, தே₃வலோகத்திலுள்ள போ₄க்₃யப்பொருள்களையே குறிப்பதற்காக 'தி₃வ்யாந் தே₃வபோ₄கா₃ந்' என்று விஶேஷிக்கிறது. ஏற்கனவே தே₃வர்களுக்கு போ₄க்₃யமாயிருக்கும் பொருள்களை, புதிதாக அங்கு சென்றவர்கள் எப்படி அநுப₄விக்கமுடியும்? எனில், ஸ்வரூபத்தாலும், காலத்தாலும் அளவுபட்டிருந்தபோதிலும் மிக விரிவான போ₄க₃ங்களாகையாலே, தம்மை ஆராதி₄த்து, தே₃வலோகத்திற்கு வந்தவர்களுக்கு தே₃வர்கள், தங்களது போ₄க₃ங்களில் சிலவற்றைப் பிரித்துக்கொடுக்கிறார்கள் என்று கொள்ளவேண்டும். (அஶ்நந்தி) சாப்பிடுகிறார்கள் என்று நேரே பொருளானாலும், அநுப₄விக்கிறார்கள் என்றே கொள்ளவேணும். அடுத்த ஶ்லோகத்தில் 'பு₄க்த்வா' (அநுப₄வித்து) என்றல்லவோ இது எடுக்கப்படுகிறது. "அன்னவர்தம் மானேக்கம் உண்டு ஆங்கு அணிமுறுவல், இன்னமுதம் மாந்தியிருப்பர்" [பெரியதிருமடல்] என்றவிடத்தில் திருமங்கையாழ்வாரும், 'அநுப₄வித்து' என்னும் பொருளிலே 'உண்டு' என்று வழங்கினாரன்றோ. (தி₃வி தே₃வபோ₄கா₃ந் அஶ்நந்தி) இவ்விடத்தில் பெரியதிருமடலிலே "அறத்தின் வழிமுயன்ற அன்னவர்தாம் கண்டீர்கள், ஆயிரக்கண் வானவர்கோன்" [கண்ணி 19] என்று தொடங்கி "இன்னமுதம் மாந்தியிருப்பர், இதுவன்றே அன்ன அறத்தின் பயனாவது" [கண்ணி 36, 37] என்பதீறாகவுள்ள பெரியதிருமடல் கண்ணிகள் அநுஸந்தி₄க்கத்தக்கவை. 20.

21. இனி, அடுத்த ஶ்லோகத்தில் இவர்கள் படும் எளிவரவைக் காட்டுகிறான். (தே தம் விஶாலம் ஸ்வர்க்க₃லோகம் பு₄க்த்வா) அவர்கள் அந்த விஸ்தாரமான ஸ்வர்க்க₃லோகத்தில் ஏற்படும் போ₄க₃ங்களை அநுப₄வித்து. 'விஶாலம்' என்றது இவ்வுலக போ₄க₃ங்களைக்

विशन्ति। एवं त्रय्यन्तसिद्धज्ञानविधुराः काम्यस्वर्गादिकामाः केवलं

காட்டிலும் விரிவாயிருப்பதைக் காட்டுகிறது. 'ஸ்வர்க்க₃லோகம்' என்றது ஸ்வர்க்க₃லோகத்தில் ஏற்படும் அநுப₄வங்களைச் சொல்லுகிறது. (புண்யே க்ஷீணே மர்த்யலோகம் விஶந்தி) ஸ்வர்க்கா₃நுப₄வத்துக்குக் காரணமான புண்யம் அழிந்தவளவில், மனிதர் வாழும் பூ₄லோகத்திற்குத் திரும்பி வருகிறார்கள். ஸ்வர்க்கா₃நுப₄வத்தால் இவனுடைய எல்லாப் புண்யங்களும் அழியும் என்று எந்த ஶாஸ்த்ரமும் கூறவில்லை. நேர்மாறாக, ஸ்வர்க்க₃த்தை அநுப₄வித்தபின் எஞ்சிய புண்யகர்மத்துடன் பூ₄மிக்கு வந்து நற்குடியில் பிறக்கிறான் என்று ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஆகையால், புண்யம் அழிந்தவளவில் என்று இங்கு கூறியது, 'ஸ்வர்க்க₃த்தை அநுப₄விப்பதற்குக் காரணமான புண்யம் அழிந்தவளவில்' என்றே பொருள்படும். இப்படி புண்யம் அழிந்தவுடன் ஸ்வர்க்கா₃நுப₄வம் முடிந்துவிடும் என்பது ஸ்வர்க்கா₃நுப₄வம் செய்பவனுக்கே தெரியுமாகையால் ''ஸ்வர்க்கே₃ऽபி பாதபீ₄தஸ்ய க்ஷயிஷ்ணோர் நாஸ்தி நிர்வ்ருதி:'' [வி-பு 6-5-50] [ஸ்வர்க்க₃த்திலும் 'புண்யம் குறைந்தவுடன் ஸ்வர்க்க₃த்தைவிட்டு விழுந்துவிடுவோமே' என்று ப₄யப்படும் ஸ்வர்க்கா₃நுப₄வம் செய்பவனுக்கும் ஆனந்த₃ம் இல்லை] என்கிறபடியே ஸ்வர்க்க₃த்தில் இவன் அநுப₄விக்கும் ஆனந்த₃மும் ஓர் ஆனந்த₃மாகத் தோன்றுவதில்லை என்பதும் இதனால் உணர்த்தப்படுகிறது. 'மர்த்யலோகம்' என்றதால் மரணமடைவதையே இயல்வாகக்கொண்ட பூ₄லோகத்திலும் நிலையான வாழ்வில்லை என்று உணர்த்தப்படுகிறது. (ஏவம் த்ரயீத₄ர்மம் அநுப்ரபந்நா:) இவ்வண்ணமாக வேதா₃ந்தஜ்ஞானமில்லாமல், வேத₃த்தின் பூர்வபா₄க₃த்தில் சொன்ன யாகா₃தி₃ த₄ர்மங்களை மாத்திரம் அநுஷ்டி₂ப்பவர்கள். 'ஏவம்' என்றது 'த்ரைவித்₃யா:' என்று முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்டபடி, வேதா₃ந்த ஜ்ஞானமில்லாமல் வேத₃த்தில் பூர்வபா₄க₃த்தில் சொன்ன கர்மங்களை மாத்திரம் பற்றிநிற்பவர்கள் என்று காட்டுகிறது. இந்தக் கர்மங்களையே ப₄க₃வதா₃ராத₄னமாயிருப்பவை என்னும் வேதா₃ந்தஜ்ஞானத்தோடு செய்தால், அவை திரும்பி வருதலில்லாத மோக்ஷத்துக்குக் காரணமாகின்றன. இந்த ஶ்லோகத்தில் பூ₄லோகத்துக்குத் திரும்பி வருவதாகக் கூறுகையாலே, இவர்கள் வேதா₃ந்த ஜ்ஞானமில்லாதவர்கள் என்பது ஸித்₃த₄ம். (காமகாமா: க₃தாக₃தம் லப₄ந்தே) தாங்கள் விரும்பும் ஸ்வர்க்க₃ம் முதலான அல்பாஸ்தி₂ரப₂லன்களிலே ஈடுபாடுடையவர்களாய், அந்த ஸ்வர்க்க₃ம் முதலான ப₂லன்களை அநுப₄வித்துவிட்டு, மறுபடியும்

त्रयीधर्ममनुप्रपन्नाः गतागतं लभन्ते—अल्पास्थिरस्वर्गादीननुभूय पुनः पुनर्निवर्तन्त इत्यर्थः ॥ २० ॥ २१ ॥

॥ भा ॥ महात्मानस्तु निरतिशयप्रियरूपमच्चिन्तनं कृत्वा मामनवधिकातिशयानन्दं प्राप्य न पुनरावर्तन्त इति तेषां विशेषं दर्शयति—

மறுபடியும் இந்த பூ₄லோகத்துக்குத் திரும்பி வருகிறார்கள். 'காம காமா:' என்றதில் முதல் காம ஶப்₃த₃ம் 'காம்யந்த இதி காமா:' [விரும்பப்படுகின்றனவாகையாலே ஸ்வர்க்க₃ம் முதலானவை காமம் எனப்படுகின்றன.] என்கிற கர்மணிவ்யுத்பத்தியாலே, விரும்பப்படும் ப₂லனைக் குறிக்கிறது. இங்கு இவர்கள் விரும்புவது ஸ்வர்க்க₃ம் முதலானவற்றையேயாகையாலே அவற்றைக் குறிக்கிறது. 'க₃தாக₃தம்' என்னும் ஶப்₃த₃ம் போக்குவரத்தைக் குறிப்பதாயினும், இங்கு தாழ்வைக் குறிக்கும் ப்ரகரணமாகையாலே இவர்களுடைய ப₂லன்கள் அஸ்தி₂ரமாகவும், அல்பமாகவும் இருக்கின்றன என்று காட்டுகிறது. 'புண்யம் ஸுரேந்த்₃ரலோகம்' என்று முந்தின ஶ்லோகத்தில் சொன்னபடி, ஸ்வர்க்கா₃நுப₄வத்தில் இவ்வுலகத்துன்பங்கள் இல்லை என்றும், ஸுக₂மே உள்ளது என்றும் தேறும்போது, இதை அல்பம் என்பது எப்படி? எனில்: இந்த ஸ்வர்க்க₃ம் முதலானவற்றை அநுப₄விக்கும்போதும் ''யதா₂ பஶுரேவம் ஸ தே₃வாநாம்'' [ப்₃ரு ஹ 3-4-10] [ஸ்வர்க்க₃த்துக்குச் சென்றவன் தே₃வர்களுக்குப் பஶுவைப்போலே அடிமைத் தொழில் செய்பவன்.] என்கிறபடியே தே₃வர்களுக்கு அடங்கி நடக்கவேண்டியிருக்கையாலும், தன் ஸுக₂த்துக்கு மேலான ப்₃ரஹ்மாதி₃ ஸுக₂த்தை அநுஸந்தி₄க்கையாலும் இந்த ஸ்வர்க்க₃ஸுக₂ம் துன்பமாகவே உள்ளது. அதுவும் நிலை நில்லாதது என்று நினைக்கும்போது மிகவும் துன்பமாகிறது. அது அழியும்போது மிக மிகத் துன்பமாகிறது. ஏற்றச்சால்போலே ஸ்வர்க்க₃த்துக்கும், பூ₄மிக்குமாக மாறிமாறிவந்து, மறுபடியும் மறுபடியும் க₃ர்ப்ப₄வாஸம், நோய், நரகம் முதலானவற்றையடைந்து, பொறுக்கவொண்ணாத பல துன்பங்களை அநுப₄விப்பதற்குக் காரணமாகவும் ஆகிறது. இப்படி ப்ரவாஹமாக ஏற்படும் துன்பங்களைக் காணும்போது இந்த ஸ்வர்க்க₃ஸுக₂ம் அல்பம் என்பதில் தடையுண்டோ? 'க₃தாக₃தம் காமகாமா லப₄ந்தே' என்னும் பகுதி இவ்வளவையும் உணர்த்துகிறது. ஆக, ஜ்ஞாநிகளுக்கு நேர் எதிர்த்தட்டாயிருப்பவர்களாய், தாழ்ந்த ப₂லன்களை விரும்புகிறவர்களான அறிவிலிகளின் தன்மைகள் விவரிக்கப்பட்டனவாயிற்று. 20, 21.

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम्॥ २२॥

22. அநந்யாஶ்சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே |
தேஷாம் நித்யாபி₄யுக்தாநாம் யோக₃க்ஷேமம்
வஹாம்யஹம் ||

அநந்யா:—(என்னை நினைப்பது தவிர) வேறு பயனில்லாதவர்களாய், **மாம் சிந்தயந்த:**—என்னை நினைப்பவர்களாய், **யே ஜநா:**—எந்த மஹாத்மாக்கள், **(மாம்) பர்யுபாஸதே**—என்னை (எல்லாக் கல்யாண கு₃ணங்களோடும், எல்லா விபூ₄திகளோடும்) முழுமையாக உபாஸிக்கிறார்களோ, **நித்யாபி₄யுக்தாநாம் தேஷாம்**—என்னோடு எப்போதும் சேர்ந்திருக்கையை விரும்பும் அவர்களுக்கு, **அஹம்**—நான், **யோக₃க்ஷேமம்**—(என்னை அடைவதாகிற) யோக₃த்தையும், (மறுபடியும் ஸம்ஸாரத்துக்குத் திரும்பி வராமையாகிற) க்ஷேமத்தையும், **வஹாமி**—அளிக்கிறேன்.

---

22. **வேறின்றி யென்னையெவர் மெய்ந்நினைந்து சேவிப்பார்
பேறொன்றி யென்றும் பிரியாதே—தேறுமவர்
தம்பேறும் யோக மிதுபிரியாச் சேமநான்
வன்பேறுச் செய்வன் மகிழ்ந்து.**

வேறின்றி—(என்னை நினைப்பது தவிர) வேறு பயனில்லாதவர்களாய், **என்னை மெய் நினைந்து**—என்னை உள்ளபடி நினைப்பவர்களாய், **எவர்**—எந்த மஹாத்மாக்கள், **பேறு ஒன்றி சேவிப்பார்**—எல்லாக் கல்யாண கு₃ணங்களோடும், எல்லா விபூ₄திகளோடும் முழுமையாகப் பொருந்தி உபாஸிக்கிறார்களோ, **என்றும் பிரியாதே தேறும் அவர் தம்**—என்னோடு எப்போதும் பிரியாமல் சேர்ந்திருப்பதை விரும்பும் அவர்களுடைய, **பேறும் யோகம்**—(என்னை அடைவதாம்) பயனாகிற யோக₃த்தையும், **இது பிரியாச் சேமம்**—(மறுபடியும் ஸம்ஸாரத்துக்குத் திரும்பி வராமையாலே) இப்பேறு அழியாமையாகிற க்ஷேமத்தையும், **நான்**—நான், **வன் பேறு**—(எனக்குப்) பெரிய பேறாக, **மகிழ்ந்து செய்வன்**—மகிழ்ச்சியோடு செய்வேன்.

।। भा ।। अनन्याः—अनन्यप्रयोजनाः, मच्चिन्तनेन विनाऽऽत्मधारणालाभात् मच्चिन्तनैकप्रयोजनाः मां चिन्तयन्तो ये महात्मानो जनाः

---

22. முன் இரண்டு ஶ்லோகங்களில் கூறப்பட்ட அறிவிலிகளுக்கு நேர் எதிர்த்தட்டானவர்களாய், அறிவாளிகளில் தலைசிறந்தவர்களான மஹாத்மாக்களின் பெருமையை இந்த ஶ்லோகத்தில் மறுபடியும் தொடர்கிறான். "அவர்களுக்கு ஒப்பற்ற இனிமையையுடைய எனது நினைவாகிற ப₄க்தியே உபாயமாயுள்ளது. அவ்வுபாயத்தினால் பெறும் பயனும் எல்லையற்ற மேன்மையையுடைய ஆநந்த₃ஸ்வரூபியாயிருக்கும் என்னை அநுப₄விப்பதாயுள்ளது. அவ்வநுப₄வமும், இந்த ஸம்ஸாரமண்ட₃லத்துக்குத் திரும்பிவருதலில்லாதபடி நித்யவிபூ₄தியிலேயே நடைபெறுகிறதாகையாலே அழிவற்றதாயுள்ளது. ஆக இப்படி உபாயத₃ஶையோடு ப₂லத₃ஶையோடு வாசியில்லாமல் தலைசிறந்த பெருமை பெற்றிருக்கிறார்கள் இந்த மஹாத்மாக்கள்" என்று இந்த ஶ்லோகத்தில் கூறுகிறான். (அநந்யா: சிந்தயந்த:) என்னை நினைப்பது தவிர வேறு பயன் எதையும் கருதாதவர்களாய், என்னை நினைப்பதாகிற ப₄க்தியைச் செய்பவர்கள் "அநந்யமநஸ: ப₄ஜந்தி" [கீ₃தை 9-13] என்றவிடத்தில் சொல்லப்பட்டபடியே தம்முடைய ப₄க்தியையும் மோக்ஷஸாத₄னமாக நினையாமல் ஸ்வயம்ப்ரயோஜனமாக நினைக்கும் ஸித்₃தோ₄பாயநிஷ்ட₂ர்கள் இங்கும் அநந்யசிந்தக ஶப்₃த₃த்துக்கு முக்₂யார்த்த₂மான மஹாத்மாக்களாவர். அந்த நிலையை அடைவதற்காக மோக்ஷஸாத₄னமாக விதி₄க்கப்பட்ட ப₄க்தியோக₃த்தை ஸாத்₄யோபாயமாகப்பற்றிநிற்கும் உபாஸகர்களை அநந்யசிந்தக ஶப்₃த₃த்துக்குப் பொருளாகக் கொள்ளும்போது 'என்னைத்தவிர வேறு பயனை அறியாதவர்கள்' என்று பொருள்கொள்ள வேண்டும். இவர்களும் காலக்ரமத்தில் "உலகு படைத்துண்ட எந்தை. அறைகழல் சுடர்ப் பூந்தாமரை சூடுதற்கு, அவாவாருயிர் உருகியுக்க, நேரிய காதல் அன்பிலின்பீன்தேறல், அமுதவெள்ளம்" [திருவாசிரியம் 2] எனப்படும் ப₄க்தி வெள்ளத்தில் ஆழ்ந்து "உலகம் மூன்றினொடு நல்வீடு பெறினும், கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே" [திருவாசிரியம் 2] என்கிறபடியே ப₄க்தியை மோக்ஷஸாத₄னமாக நினைப்பதினின்றும் நீங்கி, ஸ்வயம் ப்ரயோஜனமாக நினைக்கத் தொடங்கிவிடுவார்களாகையாலே. "என்னை நினையாமலிருந்தால் ஆத்மதா₄ரணத்தைப் பெறாதவர்களாய், எனது நினைவாகிற ப₄க்தியையே பயனாகக்கொண்டவர்கள்" என்று அநந்யஶப்₃த₃த்திற்கு பா₄ஷ்யத்தில் பொருள்கொள்ளப்பட்டது. அநந்யஶப்₃த₃த்தால்

पर्युपासते—सर्वकल्याणगुणान्वितं सर्वविभूतियुक्तं मां परित उपासते, अन्यूनमुपासते, तेषां नित्याभियुक्तानाम्—मयि नित्याभियोगं काङ्क्ष-

---

விசேஷிக்கப்பட்டிருக்கையால் சிந்தனமாகிற ப$_4$க்தி, தன்னைத்தவிர வேறொன்றைப் பயனாகக்கருத இயலாதபடி ஒப்பற்ற ஸுக$_2$ரூபமானது என்று தேறுகிறது. அடுத்த ஶ்லோகத்தில் "யே த்வந்ய தே$_3$வதா ப$_4$க்தா:" என்று தே$_3$வதாந்தரப$_4$க்தர்களை எடுக்கையாலே, இங்கு 'அநந்யா:' என்றது அவர்களுக்கு ப்ரதிகோடியைக் குறிக்கிறதாய். வேறு தெய்வங்களைத் தொழாதவர்களைக் கூறுவதாகத் தோன்றுகிறதே எனில்: வரப்போகிற ஶ்லோகத்தில் சொல்லப்போகிறவர்களைக் காட்டிலும் வேறுபட்டவர்களை இங்கு குறிக்கிறது என்று கூறுவதைக் காட்டிலும், முந்தின இரு ஶ்லோகங்களில் சொல்லப்பட்டவர்களைக் காட்டிலும் வேறுபட்டவர்களை இங்கு குறிக்கிறது என்று கொள்ளுவதே ஸ்வரஸமாகும். ஆகையால்—கடுமையான காயக்லேஶரூபமான உபாயங்களை அநுஷ்டி$_2$த்து, க்ஷுத்$_3$ரப$_2$லன்களாகிற ஸ்வர்க்க$_3$ம் முதலானவற்றைப் பெறும் அவர்களைப்போலல்லாமல், ஸாத$_4$னமாகிற ப$_4$க்தியே ஒப்பற்ற ஸுக$_2$ரூபமாய். ப்ராப்யமும் எல்லையற்ற ஆனந்த$_3$ரூபமாய் லபி$_4$க்கப்பெற்றவர்கள் இவர்கள் என்று அநந்யஶப்$_3$த$_3$த்துக்குப் பொருள்கொள்ளுவதே ஸ்வரஸமாகும். முன்பின் ப்ரகரணங்களுக்கு ஒட்டாதாகையாலே அநந்யசிந்தன ஶப்$_3$த$_3$த்தால் ஜீவப்$_3$ரஹ்ம ஐக்யாநுஸந்த$_4$ானம் சொல்லப்படுவதாகக் கொள்வது பொருந்தாது. ஆகையால், 'சிந்தனத்தையே பரமப்ரயோஜனமாகக்கொண்டவர்கள்' என்று பொருள்கொள்வதே பொருந்தும். (யே ஜநா:) பிறவிப் பயன் பெற்ற எந்த மஹாத்மாக்கள். இது மஹாத்மாக்களைக் கூறும் ப்ரகரணமாகையாலே ஜநஶப்$_3$த$_3$ம் ஜனனமடையும் அனைவரையும் குறிக்காமல் ஜந்மஸாப$_2$ல்யமாகிற பிறவிப்பயன்பெற்ற மஹாத்மாக்களையே குறிக்கிறது. "அன்றுநான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" [திருச்சந்த 64] என்பவர்களன்றோ இவர்கள். (யே மாம் பர்யுபாஸதே) எந்த மஹாத்மாக்கள் என்னைப் பரிபூர்ணமாக உபாஸிக்கிறார்களோ. "பரித: உபாஸதே—பர்யுபாஸதே" அதாவது, எல்லாக் கல்யாணகு$_3$ணங்களோடு கூடினவனாகவும், எல்லாச் செல்வங்களும் நிறைந்த உப$_4$யவிபூ$_4$திநாத$_2$னாகவும் என்னை உபாஸிக்கிறார்கள் என்று கருத்து. எம்பெருமானுடைய விபூ$_4$திகளில் ஏகதே$_3$ஶமான ஓர் அசேதனத்தையோ, சேதனப்பொருளையோ ப்ராப்யமாக உபாஸிக்கும் ப்ரதீகோபாஸகர்களைப்போலல்லாமல் பரிபூர்ணமான பரப்$_3$ரஹ்மத்தையே ப்ராப்யமாக உபாஸிக்கிறார்கள்

माणानाम्, अहं मत्प्राप्तिलक्षणं योगं, अपुनरावृत्तिरूपं क्षेमं च वहामि ॥ २२ ॥

ये त्वन्यदेवताभक्ता यजन्ते श्रद्धयाऽन्विताः ।
तेऽपि मामेव कौन्तेय ! यजन्त्यविधिपूर्वकम् ॥ २३ ॥

என்று கருத்து. (நித்யாபி₄யுக்தாநாம் தேஷாம்) என்னோடு எப்போதும் சேர்ந்திருக்கையை விரும்பும் அவர்களுக்கு. இவ்விபூ₄தியிலிருக்கும் வரையில் இவர்களை எப்போதும் எம்பெருமானோடு சேர்ந்திருப்பவர்களாகக் கூறமுடியாதாகையாலே ''ஆபீ₄க்ஷ்ண்யே ணமுல் ச'' என்னும் இலக்கண வழக்கையொட்டி, எம்பெருமானோடு எப்போதும் சேர்ந்திருப்பதை விரும்புகிறவர்கள் என்று பொருள்கொள்ளப்பட்டது. (அஹம்) மேலான ஔதா₃ர்யம் (வண்மை), ஸௌஶீல்யம் (நீர்மை), ஸௌலப்₄யம் (எளிமை), வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஜ்ஞாநம், ஶக்தி முதலான கு₃ணங்களையுடைய நான். (யோக₃க்ஷேமம் வஹாமி) என்னை அடைவதாகிற யோக₃த்தையும், மறுபடியும் என்னைப் பிரிந்து ஸம்ஸாரமண்ட₃லத்துக்குத் திரும்பி வராமையாகிற க்ஷேமத்தையும் அளிக்கிறேன். கிடையாத பயன் கிடைப்பது யோக₃மாகும். கிடைத்த அதை நிலையாக்குவது க்ஷேமமாகும். இங்கு எம்பெருமானையே பயனாகக்கொண்ட மஹாத்மாக்களைப்பற்றிய ப்ரகரணமாகையாலே, எம்பெருமானை அடைவது அவர்களுக்கு யோக₃மாகிறது. ஸம்ஸார மண்ட₃லத்துக்குத் திரும்பி வந்துவிட்டால் அந்த யோக₃ம் நிலைநில்லாமல் போய்விடுமாகையாலே, அப்படித் திரும்பிவராமலிருக்கச்செய்வது க்ஷேமமாகிறது. ஆகையால், இங்கு யோக₃க்ஷேம ஶப்₃த₃த்தால் இவ்வுலகப் ப₂லன்கள் கிடைப்பதையும், அவற்றை நிலையாக்குவதையும் பொருளாகக் கொள்வது பொருந்தாது. ஆநுஷங்கி₃கமாக இவ்வுலகப் ப₂லன்களை எம்பெருமான் அளித்தானாகிலும், இவர்கள் அவற்றை ப்ராப்யமாகக் கருதமாட்டார்களன்றோ. (வஹாமி) அளிக்கிறேன் என்று கருத்து. (அஹம் வஹாமி) இது உண்மையில் தனக்கே பேறு என்று உணர்த்துகிறான். ஆக, தன்னை நினைப்பது தவிர வேறொன்றறியாத மஹாத்மாக்களுக்கு, தானே தன் பேறாகத் தன்னை அடைவித்து, மறுபடியும் ஸம்ஸார மண்ட₃லத்துக்குத் திரும்பி வாராதபடி செய்து, நித்யமான ப்₃ரஹ்மாநந்த₃த்தை அளிப்பதாகக் கூறுவதன்மூலம், முன் இரு ஶ்லோகங்களில் கூறப்பட்டவர்களுக்கும், இவர்களுக்குமுள்ள நெடுவாசியைக் காட்டினானாயிற்று. 22.

23. **யே த்வந்யதே₃வதாப₄க்தா யஜந்தே ஶ்ரத்₃த₄யாऽந்விதா:।
தேऽபி மாமேவ கௌந்தேய! யஜந்த்யவிதி₄பூர்வகம்॥**

கௌந்தேய! — குந்தீபுத்ரனே!, **யே து** — எவர்கள், **அந்யதே₃வதாப₄க்தா:**—(இந்திரன், சிவன், பிரமன் முதலான) மற்ற தே₃வதைகளிடம் ப₄க்தியுடையவர்களாய், **ஶ்ரத்₃த₄யா அந்விதா:**—ஶ்ரத்₃தை₄யோடு கூடியவர்களாய், **யஜந்தே**—(அந்த தே₃வதைகளையே ஆராதி₄க்கத் தக்கவர்களாக நினைத்து) யாக₃ம் முதலானவற்றால் ஆராதி₄க்கிறார்களோ, **தே அபி**—அவர்களும், **மாம் ஏவ**— (அவர்களுக்கு அந்தர்யாமியாயுள்ள) என்னையே, **அவிதி₄பூர்வகம்**— (எம்பெருமான் அந்தர்யாமியாயிருக்கிறான் என்னும் உணர்வுடன் யாக₃ம் முதலானவற்றைச் செய்யவேண்டும் என்று) வேத₃ விதி₄களில் சொன்னபடியல்லாமல், **யஜந்தி**—யாக₃ம் முதலானவற்றைச் செய்கிறார்கள்.

---

23. **மற்றான தெய்வத்தை மன்னி விருப்புற்றுப்
பற்று மெனவிறைஞ்சும் பண்பினரு—முற்றான
வென்னையே யேத்திறைஞ்சி யெல்லாவே தாந்தவிதி
தன்னையே யேய்ந்துணரார் தாம்.**

மற்றான தெய்வத்தை மன்னி — என்னைக் காட்டிலும் வேறுபட்ட தெய்வங்களிடம் ப₄க்தர்களாகப் பொருந்தி ஈடுபட்டு, **விருப்புற்று**—ஶ்ரத்₃தை₄யோடு கூடியவர்களாய், **பற்றும் என இறைஞ்சும் பண்பினரும்**—அவர்களே அடையத்தக்கவர்கள் என்று ஆராதி₄க்கும் கு₃ணமுடையவர்களும், **முற்றான என்னையே ஏத்தி இறைஞ்சி**—அனைவர்க்கும் அந்தர்யாமியாகையாலே அனைவருமான என்னையே துதித்து ஆராதி₄த்து, **எல்லா வேதாந்த விதி தன்னையே ஏய்ந்து உணரார்தாம்**—(நான் அந்தர்யாமியாயிருக்கிறேன் என்னும் அறிவுடனேயே மற்ற தெய்வங்களைக் குறித்து யாக₃ம் முதலானவற்றைச் செய்யவேணும் என்னும்) எல்லா வேதா₃ந்த விதி₄களையும் நன்கு அறியாதவர்களாயிருக்கிறார்கள்.

॥ भा ॥ ये त्विन्द्रादिदेवताभक्ताः केवलत्रयीनिष्ठाः श्रद्धयाऽन्विताः इन्द्रादीन् यजन्ते ; तेऽपि पूर्वोक्तेन न्यायेन सर्वस्य मच्छरीरतया मदात्मकत्वेनेन्द्रादिशब्दानां च मद्वाचित्वाद्वस्तुतो मामेव यजन्ते, अपि त्वविधिपूर्वकं यजन्ते। इन्द्रादीनां देवतानां कर्मस्वाराध्यतया

---

23. ''எல்லா தே3வதைகளும் உனக்கு ஶரீரமாகையாலே 20-வது ஶ்லோகத்தில் சொன்னபடி உண்மையில் உனது ஆராத4னம் என்று அறிந்த நீ இந்த்3ராதி3களைக் குறித்து யாக3ம் செய்பவர்களுக்கும் மோக்ஷரூபமான யோக3க்ஷேமத்தை ஜ்ஞானிகளுக்குப் போலே ஏன் அருளுவதில்லை?'' என்னும் அர்ஜுனனின் கருத்தை யறிந்து, அதற்கு பதிலுரைக்கிருன் இனி வரும் இரண்டு ஶ்லோகங்களாலே. (யே து) 'து'ஶப்3த3ம் அர்ஜுனனுக்கு எழுந்த ஶங்கையைப் போக்குவதற்காக ஏற்பட்டது இந்த ஶ்லோகம் என்று காட்டுகிறது. அன்றிக்கே, சென்ற ஶ்லோகத்தில் எடுக்கப்பட்ட ஜ்ஞானிகளைக் காட்டிலும் மிகவும் வேறுபட்ட கேவல கர்மநிஷ்டா2ர்களைப் பற்றி இந்த ஶ்லோகம் பேசுகிறது என்பதைக் காட்டுவதாகவும் கொள்ளலாம். (அந்யதே3வதா ப4க்தா:) என்னைத் தவிர்ந்த இந்திரன், சிவன் முதலான மற்ற தே3வதைகளுக்கு ப4க்தர்களாயிருந்துகொண்டு. இதிலிருந்தே இந்த தே3வதைகளுக்கு அந்தர்யாமி நாராயணன் என்பதை அறியாத வேத3பூர்வபா4க3மாத்ர நிஷ்டா2ர்கள் இவர்கள் என்று விளங்குகிறது. (ஶ்ரத்3த4யா அந்விதா: யஜந்தே) கீ3தை 7-21,22 ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட ரீதியில், அந்த தே3வதைகளை ஶ்ரத்3தை4யோடு கூடினவர்களாய், யாக3ம் முதலானவற்ருல் ஆராதி4க்கிருர்களோ. வேதா3ந்தார்த்த2ஜ்ஞானமில்லாத இந்த்3ராதி3ப4க்தர்களாகையாலே இந்த யாக3ங்கள் இந்த்3ராதி3களுக்கே ஆராத4னமாயிருப்பவை என்னும் நினைவோடு அவற்றைச் செய்கிருர்கள் என்று இதிலிருந்து விளங்குகிறது. (தேऽபி மாமேவ யஜந்தி) அவர்களும்—கீ3தை 7-7, 9-4 முதலானவிடங்களில் சொல்லப்பட்டபடி, எல்லாச் சேதநாசேதநங்களும் என்னுடைய ஶரீரமாகையாலே அந்த இந்த்3ரன் முதலான தே3வதைகளும் என்னை அந்தர்யாமியாகக் கொண்டவர்களாகையால், இந்த்3ரன் முதலான ஶப்3த3ங்களும் அந்தர்யாமியான என்னையே குறிப்பவையாகையால் உண்மையில் என்னையே ஆராதி4க்கிருர்கள். ஆக இது வரையில் அர்ஜுனனுடைய ஶங்கை அநுவாத3ம் செய்யப்பட்டது. இனி, 'அப்படி உன்னையே ஆராதி4க்கும் அவர்களுக்கு நீ ஏன் மோக்ஷத்தை

अन्वयं यथा वेदान्तवाक्यानि * चतुर्होतारो यत्र संपदं गच्छन्ति देवैः (य. आ. ३. ११. २१) इत्यादीनि विदधति; न तत्पूर्वकं यजन्ते। वेदान्तवाक्यजातं हि परमपुरुषशरीरतयाऽवस्थितानामिन्द्रादीनामाराध्यत्वं विदधत् आत्मभूतस्य परमपुरुषस्यैव साक्षादाराध्यत्वं विदधाति। चतु-

---

அருளுவதில்லை?' என்னும் கேள்விக்கு பதிலுரைக்கிருன் கடைசி பத₃த்தாலே—(அவிதி₄பூர்வகம்) வேத₃விதி₄ப்படியல்லாமல் அவர்கள் என்னை ஆராதி₄க்கையாலேயே அவர்களுக்கு ஆராத₄னத்தின் பூர்ண ப₂லன் கிடைப்பதில்லை என்று கருத்து. ''விதி₄: ஸ்வஜ்ஞாநத்₃வாரா யஸ்ய பூர்வ:—காரணம், தத்₃விதி₄பூர்வகம்; தத₃ந்யத₃விதி₄பூர்வகம்'' [வேத₃விதி₄யானது அறியப்பட்டு எதற்குப் பூர்வமாக—காரணமாக ஆகிறதோ அது விதி₄பூர்வகம்; அப்படியல்லாதது அவிதி₄பூர்வகம்] என்பது இதற்கு விக்₃ரஹம். வேத₃ாந்த வாக்யங்கள் இந்திரன் முதலான தே₃வதைகளை யாக₃ம் முதலான கர்மங்களால் ஆராதி₄க்கத் தக்கவர்களாகச் சொல்லும்போது, ஆராத்₄யனை என்னுடைய ஶரீரமாயிருப்பதாலேயே அவர்களுக்கு ஆராத₄னத்தில் அந்வயம் உண்டாவதாகக் கூறுகின்றன. தே₃வதைகளுக்கு அந்தர்யாமியான பரமபுருஷனுக்கே அக்கர்மங்கள் நேரே (இயல்வாக அல்லது முக்கியமாக) ஆராத₄னமாகின்றன என்றும், அந்தப் பரமபுருஷனுக்கு ஶரீரமாயிருக்கையாலே இந்த்₃ராதி₃களுக்கும் ஆராத₄னத்தில் அந்வயம் ஏற்படுகிறது என்றும் வேத₃ாந்த வாக்யங்கள் கூறுகையாலே, பூர்வ ப₄ாக₃த்தில் இந்திரன் முதலான தே₃வதைகளை அந்தந்தக் கர்மங்களால் ஆராதி₄க்கத்தக்கவர்களாகச் சொன்னதோடு விரோத₄மில்லை. பூர்வப₄ாக₃த்தில் இந்த்₃ராதி₃களுக்கு யாக₃ங்களால் ஆராதி₄க்கப்படுகை சொல்லப்படுகிறது. வேத₃ாந்தங்களில் அந்த இந்த்₃ராதி₃கள் பரமபுருஷனை அந்தர்யாமியாகக் கொண்டவர்கள் என்று அவர்களது ஸ்வரூபம் தெளிவுபடுத்தப்படுகிறது. ஆகையால் எந்த முரண்பாடும் இல்லை. ப்ரதர்த்த₃நவித்₃யை முதலானவற்றில் எம்பெருமானே உபாஸிக்கத்தக்கவனாயினும், உபாஸ்யனை அவனுடைய ஶரீரமாக இந்திரன் முதலானோர் அந்வயிப்பதுபோலே, இந்திரன் முதலானோரைக் குறித்த யாக₃ங்களிலும் ஹவிஸ்ஸுக்கு முக்₂யோத்₃தே₃ஶ்யனான பரமபுருஷனுக்கு விஶேஷணமாக இந்திரன் முதலான தே₃வதைகள் அந்வயிக்கின்றனர் என்று கருத்து. இக்கருத்தை வேத₃ாந்த வாக்யங்கள் எங்கே சொல்லியிருக்கின்றன? எனில்: ''அந்த: ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா'' [யஜுர் ஆரண்யகம்

होतारः—अग्निहोत्रदर्शपूर्णमासादीनि कर्माणि, यत्र—परमात्मन्यात्मतयाऽवस्थिते सत्येव तच्छरीरभूतैरिन्द्रादिदेवैः, संपदं गच्छन्ति — इन्द्रादिदेवतानामाराधनान्येतानि कर्माणीतीमां संपदं (इमं संबन्धं)? गच्छन्तीत्यर्थः ॥ २३ ॥

॥भा॥ अतस्त्रैविद्या इन्द्रादिशरीरस्य परमपुरुषस्याराधनान्येतानि कर्माणि; आराध्यश्च स एवेति न जानन्ति, ते च परिमितफलभागिनः च्यवनस्वभावाश्च भवन्ति ; तदाह —

अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च ।
न तु मामभिजानन्ति तत्त्वेनातश्च्यवन्ति ते ॥ २४ ॥

24. அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போ₄க்தா ச ப்ரபு₄ரேவ ச ।
ந து மாமபி₄ஜாநந்தி தத்த்வேநாதஶ்ச்யவந்தி தே ॥

3-10-2] [ஸர்வவ்யாபியான பரமாத்மா ஜீவர்களை உள்நுழைந்து நியமிக்கிறுன்.] ''யஸ்ய ஆதி₃த்யஶ்ஶரீரம்'' [ப்₃ருஹ 7-7-9] [எவனுக்கு ஆதி₃த்யன் ஶரீரமோ] முதலான வேத₃ாந்த வாக்யங்கள் ஆதி₃த்யன் முதலான எல்லா தே₃வர்களுக்கும் பரமாத்மாவே அந்தர்யாமி என்று காட்டுகின்றன. இவ்வாக்கியங்களையெல்லாம் உட்கொண்டு ''சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பத₃ம் க₃ச்ச₂ந்தி தே₃வை:'' [யஜு ஆரண்யகம் 3-11-21] [அக்₃னிஹோத்ரம், த₃ர்ஶபூர்ணமாஸம் முதலான கர்மங்கள்—பரமாத்மாவானவன் அந்தராத்மாவாயிருக்கையிலேயே அவனுக்கு ஶரீரமான இந்த்₃ராதி₃ தே₃வதைகளோடு 'இந்த்₃ராதி₃ தே₃வதைகளுக்கு ஆராத₄னமாயிருப்பவை இக்கர்மங்கள்' என்னும் ஸம்ப₃ந்த₄த்தை அடைகின்றன.] என்னும் வேத₃வாக்யம், 'பரமபுருஷன் அந்தர்யாமி' என்னும் அறிவோடேயே இந்த்₃ராதி₃ தே₃வதைகளைக் குறித்து யாக₃ங்களைச் செய்ய வேண்டும் என்று விதி₄த்ததன்றே. (கௌந்தேய!) மஹாஜ்ஞானியான குந்தியின் புத்ரனை நீ இந்த வேத₃ாந்த ஜ்ஞானத்துடன் ஸ்வத₄ர்மத்தை அநுஷ்டி₂க்கவேண்டும் என்று கருத்து. ஆக, வேத₃ாந்த விதி₄ப்படி எம்பெருமானை தே₃வதைகளுக்கு அந்தர்யாமியாக அநுஸந்தி₄க்காமையாலேயே அந்த யாக₃ங்களுக்குப் ப₂லமாக அவர்களுக்கு எம்பெருமான் மோக்ஷத்தை அருளுவதில்லை என்றதாயிற்று 23.

அஹம் ஏவ ஹி — நானேயன்றோ, **ஸர்வயஜ்ஞாநாம்** — எல்லா யாகங்களுக்கும், **போ₄க்தா ச**—(அவற்றை) அநுப₄விப்பவனாகவும், **ப்ரபு₄: ச**—(அவற்றிற்கு) ப₂லனளிப்பவனாகவும் இருப்பவன், **மாம்**—(இத்தகைய) என்னை, **தே து**—பூர்வபா₄க₃மாத்ரநிஷ்ட₂ர்களோவெனில், **ந தத்த்வேந அபி₄-ஜாநந்தி**—உள்ளபடி (அந்தர்யாமியாக) அறிவதில்லை. **அத: ச்யவந்தி**—ஆகையால் முக்கிய ப₂லனிலிருந்து நழுவி விடுகிறார்கள்.

---

24 **ஆங்கனைத்து வேள்விக்கு மாராத் தியனானே**
பாங்கதனி னானே பலங்கொடுப்பே—னீங்கென்னை
யிவ்வா றறியா ரிதனாலத் தத்துவத்தின்
அவ்வா நழுவுவர்சார் வற்று.

ஆங்கு—வேத₃த்தில் சொல்லப்படும், **அனைத்து வேள்விக்கும்**—எல்லா யாகங்களுக்கும், **ஆராத்தியன் நானே**—ஆராதி₄க்கப்படுபவன் நானே. **அதனில்** — அவ்வேள்விகளுக்கு, **நானே** — நானே, **பாங்கு பலன் கொடுப்பேன்**—நன்றாகப் ப₂லன் கொடுப்பேன்; **ஈங்கு**—இவ்விஷயத்தில், **என்னை** — என்னை, **இவ்வாறு அறியார்** — இவ்வண்ணம் (உள்ளபடி) அறியாதவர்கள், **இதனால்** — இதனால், **அத் தத்துவத்தின் சார்வற்று**—முற்கூறிய மோக்ஷத்தை அடையாமல், **அவ்வா(று) நழுவுவர்** — 21 வது ஶ்லோகத்தில் சொன்னபடி நழுவும் ப₂லன்களையே பெறுவர்.

---

24. 'அவிதி₄பூர்வகம்' என்று சென்ற ஶ்லோகத்தில் சொன்னதை இந்த ஶ்லோகத்தில் விவரிக்கிறான். கேவலபூர்வபா₄க₃நிஷ்ட₂ர்கள் 'இந்த்₃ராதி₃தே₃வதைகளுக்கு அந்தர்யாமியான பரமபுருஷனுக்கு ஆராத₄னமாயிருப்பவை இக்கர்மங்கள்; இவற்றால் ஆராதி₄க்கப்படுபவனும் அப்பரமபுருஷனே' என்று அறியாமையாலே அளவுள்ள அல்பாஸ்தி₂ரப₂லன்களை அடைபவர்களாய், அநந்தஸ்தி₂ரப₂லனான மோக்ஷத்தினின்றும் நழுவுகின்றனர் என்கிறான் இந்த ஶ்லோகத்தில். (அஹமேவ ஹி ஸர்வயஜ்ஞாநாம் போ₄க்தா) நானேயன்றோ இந்திரன் முதலானோரைக் குறித்து, பூர்வபா₄க₃ங்களில் விதி₄க்கப்படும்

॥भा॥ प्रभुरेव च—तत्र तत्र फलप्रदाता चाहमेवेत्यर्थः॥२४॥

எல்லா யாகஙங்களையும் அநுபவிப்பவன். (போக்தா) அந்த யாகங்க ளால் இயல்பாகவும், முக்கியமாகவும் ஆராதிக்கப்படுபவன் இந்த் ராதிகளுக்கு அந்தர்யாமியான நானேயாகையாலே, நானே அவற்றை அநுபவிப்பவன் என்று கருத்து. "செய்கைப்பயன் உண்பேனும் யானேயென்னும் ... செய்யகமலக்கண்ணன் ஏறக்கொலோ" [திருவாய் 5-6-4] என்று பாவநாப்ரகர்ஷத்தாலே பேசும்போது நம்மாழ்வார் இதை விவரித்தார். (அஹமேவ ஹி ப்ரபு: ச) நானேயன்றோ அந்த எல்லா யாகங்களுக்கும் பலனளிக்கும் ப்ரபுவாகவும் இருக் கிறேன். "கதிர் பர்த்தா ப்ரபு:" [கீதை 9-18] முதலானவிடங் களிற்போலே, 'நியமிப்பவன்' என்று 'ப்ரபு' ஶப்தத்துக்குப் பொருள் கொண்டால் 'எல்லா யஜ்ஞங்களையும் நியமிப்பவன்' என்று கூறுவதில் ப்ரகரண ஸ்வாரஸ்யமில்லாமையாலே 'எல்லா யஜ்ஞங்களுக்கும் பலனளிப்பவனுயிருப்பதன் மூலம் ப்ரபுவாயிருப்ப வன்' என்று பொருள் கொள்ளுவதே பொருந்தும்: (தே து மாம் ந தத்த்வேந அபிஜாநந்தி) முற்கூறிய கேவல பூர்வபாகநிஷ்டர் கள் இவ்வண்ணமாக என்னை எல்லா யஜ்ஞங்களுக்கும் ஆராத்யனு கவும், பலப்ரதனுகவும் உள்ளபடி அறிவதில்லை. (அத: ச்யவந்தி) ஆகையால் அக்கர்மங்களுக்கு முக்கிய பலனுன மோக்ஷத்தினின்றும் நழுவிவிடுகிறுர்கள்; அல்பாஸ்திர பலன்களையே பெற்றுவிடுகிறுர் கள். உண்மையில் அவர்கள் செய்யும் கர்மங்கள் என்னையே ஆரா திப்பவையாயினும், அவர்கள் அதை அறியாமையாலே முக்ய பலனுன மோக்ஷத்தைப் பெறுவதில்லை. என் பரமகருணையினுலே அவர்கள் விரும்பும் அல்பாஸ்திர பலன்களை அந்த தேவதைகள் மூலமாக நானே அளிக்கிறேன்—என்று முன் ஶ்லோகத்தின் அவதாரி கையில் எழுப்பப்பட்ட அர்ஜுனனின் ஐயத்திற்கு பதில் கூறினுு யிற்று. "அத: தத்த்வேந ச்யவந்தி" என்று அந்வயித்து, தத்த் வேந என்பது மோக்ஷத்தைக் குறிப்பதாகவும், ஐந்தாம் வேற்று மையின் அர்த்தத்தில் மூன்ரும் வேற்றுமை வந்துள்ளதாகவும் கொண்டாலும் இப்பொருளே ஸித்திக்கும். "பலமத உபபத்தே:" [3-2-37] [போகமோக்ஷ பலன்கள் பரமாத்மாவிடமிருந்தே கிடைக் கின்றன; அப்படிக் கொள்வதே பொருந்தியிருக்கையால்.] என்று இவ்விஷயம் ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் சொல்லப்பட்டது. 'அஹ மேவ போக்தா ச ப்ரபு:' என்ற ஏவகாரத்திற்கு—இந்த்ராதிகளைக் குறித்த யாகம் முதலானவற்றிற்கு ஆராத்யனுயிருந்து பலனளிப் பவன் நானுயிருப்பது போலே என்னைக் குறித்த ஆராதனங்க

॥भा॥ अहो महदिदं वैचित्र्यम्, यदेकस्मिन्नेव कर्मणि वर्तमानास्सङ्कल्पमात्रभेदेन केचिदत्यल्पफलभागिनश्च्यवनस्वभावाश्च भवन्ति; केचनानवधिकातिशयानन्दपरमपुरुषप्राप्तिरूपफलभागिनोऽपुनरावर्तिनश्च भवन्तीत्याह—

यान्ति देवव्रता देवान् पितॄन् यान्ति पितृव्रताः।
भूतानि यान्ति भूतेज्याः यान्ति मद्याजिनोऽपि माम्॥ २५॥

25. யாந்தி தே₃வவ்ரதா தே₃வாந் பித்ரூந் யாந்தி பித்ருவ்ரதா:।
பூ₄தாநி யாந்தி பூ₄தேஜ்யா: யாந்தி மத்₃யாஜிநோऽபி மாம்॥

தே₃வவ்ரதா:—'(இந்திரன் முதலான) தே₃வர்களைக் குறித்து யாக₃ம் செய்வோம்' என்னும் ஸங்கல்பமுடையவர்கள், தே₃வாந்—தே₃வர்களை, யாந்தி—அடைகிறார்கள்; பித்ருவ்ரதா:—'பித்ருக்களைக் குறித்து யாக₃ம் செய்வோம்' என்னும் ஸங்கல்பமுடையவர்கள், பித்ரூந்—பித்ருக்களை, யாந்தி—அடைகிறார்கள்; பூ₄தேஜ்யா:—'பூ₄தங்களைக்குறித்து யாக₃ம் செய்வோம்' என்னும் ஸங்கல்பமுடையவர்கள், பூ₄தாநி—அந்த பூ₄தங்களை, யாந்தி — அடைகிறார்கள்; மத்₃யாஜிந: அபி—(அந்த யாக₃ங்களாலேயே) என்னை ஆராதி₄ப்பவர்கள், மாம் யாந்தி—என்னை அடைகிறார்கள்.

---

25. தேவர் தமையணைந்தார் சென்றடைவ ராங்கவரை
யாவர் பிதுக்கள்பா லாங்கணைந்தார்—மேவுவரப்
பூதத்தை யாங்கணைந்தார் பொன்றுது சேர்வரென்னைப்
பாதத் தணைந்தாரென் பால்.

னுக்கு ஆராத்₄யனுயிருந்து ப₂லனளிப்பவன் வேறெருவனில்லை என்று கருத்து. 'ஹி' என்னும் ஶப்₃த₃த்தாலே முன் ஶ்லோக வ்யாக்₂யானத்தில் எடுக்கப்பட்ட வேதா₃ந்த வாக்யங்களில் இவ்வர்த்த₂ம் ப்ரஸித்₃த₄மாயிருப்பது என்று காட்டுகிறான். ஆக, இந்த்₃ராதி₃ தே₃வதைகளைக் குறித்த யாக₃ங்கள் பரமபுருஷனுக்கு ஆராத₄னமாகின்றன என்று அறிந்தவர்களுக்கே மோக்ஷப₂லனும், அப்படி அறியாதவர்களுக்கு அல்பாஸ்தி₂ர ப₂லன்களும் கிடைக்கும் என்று கூறப்பட்டதாயிற்று. 24.

॥भा॥ व्रतशब्दस्सङ्कल्पवाची ; देवव्रताः—दर्शपूर्णमासादिभिः कर्मभिः इन्द्रादीन्यजामह इति इन्द्रादियजनसङ्कल्पा ये, त इन्द्रादीन्

தேவர் தமை அணைந்தார் — தே₃வர்களை யாக₃ங்களால் ஆராதி₄ப்பவர்கள், **ஆங்கு சென்று அவரை அடைவர்**— அத்தேவருலகம் சென்று அவர்களை அடைவர்; **யாவர் பிதுக்கள் பால் ஆங்கு அணைந்தார்**—எவர்கள் பித்ருக்களை (அவர்களுக்குரிய) யாக₃ங்களால் ஆராதி₄க்கிறார்களோ, (**ஆங்கு சென்று அவரை அடைவர்**—அவர்கள் அப்பித்ருக்களின் உலகம் சென்று அப்பித்ருக்களை அடைவர்;) **பூதத்தை அணைந்தார்**—பூ₄தங்களைக் குறித்து யாக₃ம் முதலானவை செய்து ஆராதி₄ப்பவர்கள், **அப்பூதத்தை ஆங்கு மேவுவர்**—அந்த பூ₄தங்களை பூதலோகத்தில் அடைவர்; **என் பால் அணைந்தார்**—(அதே யஜ்ஞம் முதலானவற்றால்) என்னை ஆராதி₄ப்பவர்கள், **பொன்றாது**—(அவர்களைப்போல்) அழியாமல், **எனை பாதத்து சேர்வர்**—என் திருவடிகளை அடைவர்.

---

25. ஒரே கர்மம் அல்பாஸ்தி₂ரமான பே₄ாக₃ங்களுக்கும், அநந்த ஸ்தி₂ரப₂லமான மோக்ஷத்திற்கும் எப்படி ஸாத₄னமாக முடியும்? என்னும் கேள்வியெழ, அவரவர் ஸங்கல்பத்தின் வாசியினாலே இப்படிப் ப₂லனில் நெடுவாசி ஏற்படுகிறது என்று காட்டுகிறான் இந்த ஶ்லோகத்தில், "ஆகா! இது எவ்வளவு பெரிய விசித்திரமாயுள்ளது! ஒரே வித₄மான கர்மத்தை அனுஷ்டி₂ப்பவர்களில்— தங்களுடைய ஸங்கல்பம் ஒன்று மாத்திரம் வேறுபடுவதாலே சிலர் மிக அற்பமான ப₂லனை அடைந்து ஸம்ஸாரத்தில் உழல்பவர்களாகவும், வேறுசிலர் எல்லையற்ற ஆனந்த₂ஸ்வரூபியான பரமபுருஷனை அடைவதாகிற பேரின்பத்தைப்பெற்று, ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வராதவர்களாய் மோக்ஷஸாம்ராஜ்யத்தில் நித்யானந்த₂மடைபவர்களாகவும் ஆகின்றனரே!" என்று தன் வியப்பைக் காட்டுகிறான் கண்ணன் இந்த ஶ்லோகத்தில். ஜ்யோதிஷ்டோமம், காரீரி முதலான யாக₃ங்களில்—ஸ்வர்க்க₃த்தை அடைவது, மழையை அடைவது முதலிய ப₂லனில் விருப்பத்தில் வேறுபாட்டால் ஏற்படும் ஸங்கல்பத்தின் வேறுபாட்டால் நெடுவாசிபட்ட ப₂லன்கள் கிடைப்பதைக் காண்கிறோமன்றோ. அதுபோல் இதுவும் பொருந்தும் என்று கருத்து.

देवान् यान्ति। ये च पितृयज्ञादिभिः पितॄन् यजामह इति पितृयजनसङ्कल्पाः; ते पितॄन् यान्ति। ये च यक्षरक्षःपिशाचादीनि भूतानि यजामह इति भूतयजनसङ्कल्पाः, ते भूतानि यान्ति। ये तु तैरेव यज्ञैः देवपितृभूतशरीरकं परमात्मानं भगवन्तं वासुदेवं यजामह इति

(தே3வவ்ரதா: தே3வாந் யாந்தி) ''த3ர்ஶபூர்ணமாஸம் முதலான யஜ்ஞங்களால் இந்திரன் முதலான தே3வர்களைக் குறித்து யாக3ம் செய்கிறோம்'' என்று இந்த்3ராதி3களைக் குறித்து யாக3ம் செய்வதாக ஸங்கல்பிப்பவர்கள் இந்திரன் முதலான அந்த தே3வர்களையே அடைகிறார்கள். இங்கு இப்படி ஸங்கல்பிப்பதில் வேறுபாட்டாலேயே பலனில் வேறுபாடு ஏற்படுகிறதாகையால் 'வ்ரத' ஶப்3த3ம் ஸங்கல்பத்தைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். 'தே3வவ்ரதா:' என்பதற்கு 'தே3வேஷு வ்ரதம் யேஷாம் தே-தே3வவ்ரதா:' என்று விக்3ரஹம். மேலேயுள்ள 'பூ4தேஜ்யா:' என்பதற்கு ''பூ4தாந் உத்3தி3ஶ்ய இஜ்யா: யேஷாம் தே-பூ4தேஜ்யா:'' [பூ4தங்களைக்குறித்து யாக3ம் செய்பவர்கள் பூ4தேஜ்யர்கள்] என்று விக்3ரஹம். நாலு பாத3த்திலும் ஏகரூபமாயிருக்கவேண்டுமாகையாலே முதலிரண்டு பாத3ங்களில் பின்னிரண்டு பாத3ங்களில் உள்ள யாக3த்தையும், பின்னிரண்டு பாத3ங்களில் முதலிரண்டிலுள்ள வ்ரதத்தையும் சேர்த்துப்பொருள் கொள்ளவேண்டும். (பித்ருவ்ரதா: பித்ரூந் யாந்தி) ''பித்ருயஜ்ஞம் முதலானவற்றால் பித்ருக்களைக் குறித்து யாக3ம் செய்கிறோம்'' என்று பித்ருக்களைக் குறித்து யாக3ம் செய்வதாக ஸங்கல்பிப்பவர்கள் பித்ருக்களையே அடைகிறார்கள். (பூ4தேஜ்யா: பூ4தாநி யாந்தி) ''பூ4தயஜ்ஞங்களாலே யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், பிஶாசங்கள் முதலான பூ4தக3ணங்களைக் குறித்து யாக3ம் செய்கிறோம்'' என்று பூ4தக3ணங்களைக் குறித்து யாக3ம் செய்வதாக ஸங்கல்பிப்பவர்கள் பூ4தங்களை அடைகிறார்கள். யாக3ம் செய்யத்தக்கவர்களைப் பற்றியதாகையாலே இங்கு 'பூ4த' ஶப்3த3ம் பஞ்சபூ4தங்களையோ, ஜீவராஶிகளையோ குறிக்காமல், ராஜஸ தாமஸ ஜனங்களால் உபாஸிக்கப்படும் முற்கூறிய பூ4தக3ணங்களைக் குறிக்கிறது. (மத்3யாஜிந: அபி மாம் யாந்தி) ''அந்த தே3வயஜ்ஞங்களாலும், பித்ருயஜ்ஞங்களாலும், பூ4தயஜ்ஞங்களாலும் அந்த தே3வர்கள், பித்ருக்கள், பூ4தங்களுக்கு அந்தர்யாமியாயுள்ளவனாய், பரமாத்மாவாய், ஜ்ஞாநாதி3கு3ணபூர்ணனாயிருக்கும் வாஸுதே3வனைக் குறித்து யாக3ம் செய்கிறோம்'' என்று

मां यजन्ते, ते मद्याजिनो मामेव यान्ति। देवादिव्रताः देवादीन् प्राप्य तैस्सह परिमितं भोगं भुक्त्वा तेषां विनाशकाले तैस्सह विनष्टा भवन्ति। मद्याजिनस्तु मां—अनादिनिधनं सर्वज्ञं सत्यसङ्कल्पं अनवधिकातिशयासंख्येयकल्याणगुणगणमहोदधिं अनवधिकातिशयानन्दं प्राप्य न पुनर्निवर्तन्त इत्यर्थः॥ २५॥

என்னைக் குறித்து யாக₃ம் செய்வதாக ஸங்கல்பிப்பவர்கள் என்னையே அடைகிறார்கள். நாலு பாத₃ங்களிலும் முறையே 'தே₃வர்களை அடைகிறார்கள்' 'பித்ருக்களை அடைகிறார்கள்' 'பூ₄தங்களை அடைகிறார்கள்' 'என்னையே அடைகிறார்கள்' என்று கூறியிருப்பது — "தே₃வ பித்ரு பூ₄தங்களைக் குறித்து யாக₃ம் செய்பவர்கள் அவரவர்களை அடைந்து. அவரவர்களுக்குரிய அளவுள்ள போ₄க₃த்தை அவர்களோடு அநுப₄வித்து, அவர்கள் அழியும்போது அவர்களோடு அழிந்துவிடுகிறார்கள். என்னைக்குறித்து யாக₃ம் செய்பவர்களோவெனில் அப்படியல்ல; நான் ஆதி₃யும். அந்தமும் அற்றவனாகையாலும், அடியார்களுடைய விரோதி₄களை அறியும் ஸர்வஜ்ஞனாகையாலும், அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற வல்ல ஶக்தியுடையவனாய், பரமபத₃த்தில் தன்னையடைந்த அவர்களை 'ஒருபோதும் திருப்பியனுப்பமாட்டேன்' என்று ஸங்கல்பித்திருப்பவனான ஸத்யஸங்கல்பனாகையாலும், எல்லையற்ற மேன்மையையுடையவையாய், கணக்கற்றவையான கல்யாண கு₃ணஸமூஹங்களுக்கு ஓர் கடலாயுள்ளவனாகையாலும், எல்லையற்ற மேன்மையையுடைய ஆனந்த₃ஸ்வரூபியாகையாலும் என்னைக் குறித்து யாக₃ம் செய்பவர்கள் எக்காரணத்தாலும் திரும்பிவருவதில்லை. தலைசிறந்த ப்₃ரஹ்மானந்த₃த்தை அநுப₄விக்கையாலே தாங்களாகத் திரும்பிவரவும் மாட்டார்கள்" என்னும் கருத்துடையது. இந்த ஶ்லோகமும், முந்திய இரு ஶ்லோகங்களும் மஹாபா₄ரதத்தில் ஶாந்திபர்வத்தில் மோக்ஷத₄ர்மத்திலுள்ள "சதுர்வித₄ா மம ஜநா:" என்று தொடங்கும் மூன்றரை ஶ்லோகங்களாலே விளக்கப்பட்டுள்ளன என்பது எட்டாவது அத்தியாயத்தின் 23, 24 ஶ்லோக அவதாரிகையில் கைவல்ய ஸித்₃த₄ாஞ்ஜனத்தில் 75-வது பாராவில் (த்₃விதீயஷட்கம் பக்கம் 332-334) விரிவாக நிரூபிக்கப்பட்டது இங்கும் அநுஸந்தி₄க்கத் தக்கது. ஆக, இந்த ஶ்லோகத்தால் ஸங்கல்பத்தின் வேறுபாட்டாலே ப₂லனில் நெடுவாசி ஏற்படுகிறது என்று நிரூபிக்கப்பட்டது. 25.

॥भा॥ मद्याजिनामयमपि विशेषोऽस्तीत्याह—

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति।
तदहं भक्त्युपहृतमश्नामि प्रयतात्मनः॥ २६॥

26. பத்ரம் புஷ்பம் ப₄லம் தோயம் யோ மே ப₄க்த்யா ப்ரயச்ச₂தி।
ததஹம் ப₄க்த்யுபஹ்ருதமஶ்நாமி ப்ரயதாத்மந: ॥

ய:—எவனொருவன், பத்ரம்—இலையையாவது, புஷ்பம்—பூவையாவது, ப₄லம்—பழத்தையாவது, தோயம்—நீரையாவது, மே—எனக்கு, ப₄க்த்யா—அன்போடு, ப்ரயச்ச₂தி—ஸமர்ப்பிக்கிருனே, ப்ரயதாத்மந:—பரிஶுத்₃த₄மான நெஞ்சுடைய அவனுடைய, ப₄க்த்யுபஹ்ருதம் தத்—அத்தகைய அன்பாலிடப்பட்ட அப்பொருளை, அஹம்—நான், அஶ்நாமி—உண்கிறேன்.

---

26. பத்திரமும் பூவும் பழமும் புனலுமெனக்
கொத்தியலும் பத்தி யுடனுதவி—சுத்திய
தூமனத்தான் றந்ததனைத் துய்ப்பனவ னப்பத்தி
யாமனத்த தென்றுநா னார்ந்து.

பத்திரமும்—இலையையாவது, பூவும்—பூவையாவது, பழமும்—பழத்தையாவது, புனலும்—நீரையாவது, எனக்கு ஒத்து இயலும் பத்தியுடன் உதவி—எனக்குத் தகுதியாகச் செய்யப்படும் அன்போடு ஸமர்ப்பித்து, சுத்திய தூமனத்தான் அவன்-நினைவில் ஶுத்₃தி₄யோடு கூடிய தூயநெஞ்சையுடையவன், தந்ததனை—அளித்த பொருளை, நான்—நான், அப்பத்தியாம் மனத்ததென்று — அத்தகைய ப₄க்தியோடு கூடிய நெஞ்சினல் அளிக்கப்பட்டதென்று, ஆர்ந்து துய்ப்பன்—ஆசையோடு உண்பேன்.

---

26. சென்ற ஶ்லோகத்தில் ஒரே வித₄மான முயற்சியைச் செய்பவர்களுக்கு ஸங்கல்பத்தின் வேறுபாட்டாலே ப₄லன்கள் மிகவும் வேறுபட்டிருப்பதைக் காட்டினன். இந்த ஶ்லோகத்தில் "என்னை ஆராதி₄ப்பதற்கு யஜ்ஞம் முதலான பெரிய முயற்சிகளைச் செய்யவேண்டி

॥भा॥ सर्वसुलभं पत्रं वा पुष्पं वा फलं वा तोयं वा यो भक्त्या मे प्रयच्छति—अत्यर्थमत्प्रियत्वेन तत्प्रदानेन विनाऽऽत्मधारणमलभ-

யதுமில்லை. நான் ஆராத₄னைக்கு மிக எளியவன்'' என்று காட்டு கிறன் 'பரிவதிலீசனைப்பாடி' [திருவாய் 1-6] என்று தொடங்கும் திருவாய்மொழியில் நம்மாழ்வார் இந்த ஶ்லோகத்தை விவரித்தருளி ஞர். (பத்ரம் புஷ்பம் ப₂லம் தோயம்) இலையையாவது, பூவையா வது, பழத்தையாவது, நீரையாவது. எம்பெருமானால் படைக்கப் பட்ட இவ்வுலகில் இவையெல்லாம் எல்லாக் காலங்களிலும் யதே₂ஷ்ட மாகக் கிடைக்கையாலே எவனும் எம்பெருமானை ஆராதி₄ப்பதற்கு இவற்றை எளிதில் பெறலாம் என்று கருத்து. மரம் முதலில் தளிர் விட்டு, பிறகு பூத்து, பிறகு பழுக்கிறதாகையாலே 'பத்ரம் புஷ்பம் ப₂லம்' என்று சொல்லப்பட்டது. ஸமாஸமாக்காமையாலும், 'ச'கா ரத்தை இடாமையாலும், இலையாவது, பூவாவது, பழமாவது ஏதே னும் ஒன்று போதும் என்று உணர்த்தப்படுகிறது. ''அந்யத் பூர்ணாத₃பாம் கும்ப₄ாத் அந்யத்பாதா₃வநேஜநாத்। அந்யத் குஶல ஸம்ப்ரஶ்நாந்ந சேச்ச₂தி ஜநார்த்த₃ந:॥'' [ப₄ாரதம். உத்₃யோக₃பர்வம் 87-13] [ஒரு பூர்ணகும்ப₄த்தையோ, திருவடியை விளக்குவதையோ, குஶலப்ரஶ்னம் செய்வதையோ தவிர வேறு எதையும் கண்ணன் எதிர்பார்ப்பதில்லை] என்று சொல்லப்பட்டதன்றே. இன்ன இலை, இன்ன பூ, இன்ன பழம் என்று விஶேஷியாமையாலே இவனுக்கு ஆகாத இலையில்லை, பூவில்லை, பழமில்லை; எது கிடைக்கிறதோ அதை இடலாம் என்று உணர்த்தப்படுகிறது. ''புரிவதுவும் புகை பூவே'' [திருவாய் 1-6-1] என்றார் நம்மாழ்வாரும். இவ்விடத் தில் ஈட்டில் உள்ள ஐதிஹ்யம் இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கது. அதா வது:—''கூளத்தையிட்டுப் புகைத்தாலும் போதும்; கண்டங்கத்திரிப் பூவை இட்டாலும் போதும்'' என்று ப₄ட்டர் அருளிச்செய்ய, ''ந கண்டகாலிகா புஷ்பம் தே₃வாய விநிவேத₃யேத்' [கண்டங்கத்திரிப் பூவை எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கலாகாது] என்று ஶாஸ்த்ரம் நிஷேதி₄த்திருக்கிறதே'' என்று நஞ்ஜீயர் கேட்க, ''எம்பெருமா னுக்கு ஆகாது என்னும் நினைவினால் தள்ளிற்றல்ல; பறிக்கிற அடிய வர்கள் கையில் முள் குத்தும் என்னும் காரணத்தினால் முள்ளுடைய கண்டங்கத்திரிப்பூவை ஶாஸ்த்ரம் தவிர்த்தது'' என்று ப₄ட்டர் அருளிச்செய்தாராம். (தோயம்) முற்கூறிய மூன்றுக்குப்பின் நீரை எடுத்தது இது அனைவர்க்கும் மிக எளிதில் கிடைக்கும் என் பதைக் கருதி. இதைப் பெறுவதற்குப் பணச்செலவோ, ஶரீர

ச்ரமமோ படவேண்டாமாகையாலே, 'பரம த₃ரித்₃ரனும் ஶக்தியற்ற வனுங்கூட நீரையாவது இடலாம்' என்று கருத்து. ''பத்ரேஷு புஷ்பேஷு ப₂லேஷு தோயேஷு அக்ரீதலப்₄யேஷு ஸதை₃வ ஸத்ஸு | ப₄க்த்யேகலப்₄யே புருஷே புராணே முக்த்யை கிமர்த்த₂ம் க்ரியதே ந யத்ந: || '' [க₃ருட₃ம் பூர்வக₂ண்ட₃ம் 219-34] [இலை, பூ, பழம், நீர் ஆகியவை விலையில்லாமல் ஏராளமாக எப்போதும் கிடைக்கும்போது, ப₄க்தி ஒன்றினாலேயே அடையத்தக்க புராணபுருஷனைக் குறித்து (இவற்றை ஸமர்ப்பிப்பதன் மூலம்) மோக்ஷத்தின் பொருட்டு ஸம்ஸாரி களால் ஏன் யத்னம் செய்யப்படுவதில்லை?] என்று சொல்லப்படுகிற தன்றோ. (ய:) எவனொருவன். இப்படி பொதுப்படையாக 'எவ னொருவன்' என்று கூறுகையால், குற்றம் செய்தவன், குற்றமற்ற வன், அறிவிலி, அறிவாளி முதலான வாசியில்லாமல் எவனும் இவனை இவ்வெளிய பொருள்களை ஸமர்ப்பித்து ஆஶ்ரயிக்கலாம் என்று உணர்த்தப்படுகிறது. 'மாம் ஹி பார்த்த₂' என்று தொடங்கும் 32-வது ஶ்லோகத்தில் இதைக் கண்ணனே அடுத்தபடி சொல்லப் போகிறானன்றோ. ''புனத்தினைக்கிள்ளிப் புதுவவிகாட்டி உன் பொன் னடி வாழ்கவென்று, இனக்குறவர் புதியதுண்ணும் எழில் மாலிருஞ் சோலை எந்தாய்'' [பெரியாழ்-திரு 5-3-3] என்று ஜாதியில் தாழ்ந்த குறவர்கள் விரும்பி ஸமர்ப்பிக்குமவற்றையும் ஆசையோடு ஏற்றுக் கொள்ளுமவன் மாலிருஞ்சோலையெந்தை என்று பெரியாழ்வாரும் காட்டினாரன்றோ. து₃ர்வாஸர் ஶிஷ்யர்களோடு உண்ணவந்த சமயத் தில் த்₃ரௌபதி₃ இவனுக்கு ஒரு கீரை இலையை இட்டாள். வேதப் பயன் கொள்ளவல்ல விட்டுசித்தன் வியன்கோதை சூடிக் களைந்த மாலைகளைக் கொடுத்தாள். பட்டர்பிரானும், தொண்டரடிப்பொடிக ளும், பூவைவிற்று வயிறு வளர்க்கும் மாலாகாரரும் மாலைகளைக் கொடுத்தனர். விலங்கான க₃ஜேந்த்₃ராழ்வானும் பூவையிட்டான். குயவரான குறும்பறுத்தநம்பி மணமற்ற மண்பூவையும் இட்டார். வேடுவிச்சியான சபரி கனியை உண்பித்தாள். விது₃ரர் ஸம்யக்₃ போ₄ஜனம் செய்வித்தார். ப₄ரத்₃வாஜர் விருந்திட்டார். பரம த₃ரித்₃ரனான குசேலன் அவலையிட்டான். நீரையாவது தூவி இவ னுக்கு அன்புடன் திருவாராத₄னம் செய்து தலைசிறந்த பேறுபெற்ற வர்கள் கணக்கிலடங்கார். (யோ மே ப₄க்த்யா ப்ரயச்சதி₂) எவனொரு வன் எனக்கு அன்புடன் அளிக்கிறானோ. இடும் திரவ்யத்தில் ஏற்றத் தாழ்வைப் பார்ப்பதில்லை. இடுகிறவனுடைய ஜந்மவ்ருத்தஜ்ஞானங் களில் ஏற்றத்தாழ்வையும் பார்ப்பதில்லை இடுகிறவனுடைய நெஞ் சில் ஈரத்தையே பார்க்கிறேன் என்று கருத்து. (ப₄க்த்யா ப்ரயச்ச₂தி)

मानतया तदेकप्रयोजनो यो मे पत्रादिकं ददाति ; तस्य प्रयतात्मनः— तत्प्रदानैकप्रयोजनत्वरूपशुद्धियुक्तमनसः, तत्—तथाविधभक्त्युपहृतम् ,

---

என்னிடம் மிகவும் ப்ரீதியுடையவனுகையாலே. ஏதாவது ஒன்றை எனக்கென்று இட்டாலொழியத் தன் உயிர் த₄ரிக்கமாட்டாமையாலே அப்படி இடுவதையே பயனுகக்கொண்டு என் திருவடிகளில் ஏதாவது ஒன்றை ஸமர்ப்பிக்கிருன் என்று கருத்து. இதனுல் இவ்வுலகப் ப₂லன்களேயோ, மோக்ஷமுள்ளிட்ட மறுமைப் ப₂லன்களேயோ, தன் பாபபரிஹாரத்தையோ ப₂லனுகக் கருதி ஒன்றையளிப்பவனல்லன் இவன் என்றும், ஸ்வயம் ப்ரயோஜன ப₄க்திநிஷ்ட₂னுன மஹாத்மாவே இங்கு கருதப்படுபவன் என்றும் விளங்குகிறது. மோக்ஷோபாயமான ப₄க்தியை விதி₄க்கும் இந்த ப்ரகரணத்தில், இப்படி ஸ்வயம் ப்ரயோஜன ப₄க்தியையே வலியுறுத்திச் செல்வதிலிருந்து, உபாஸகர்களுக்கு, மோக்ஷத்துக்கு உபாயமாக ப₄க்தியை விதி₄ப்பதும், அவர்களேயும் ஸ்வயம்ப்ரயோஜனப₄க்திநிஷ்ட₂ர்களாக ஆக்குவதற்கே என்று விளங்குகிறது. (ப்ரயதாத்மந: ப₄க்த்யுபஹ்ருதம் தத்) பரிஶுத்₃த₄மான நெஞ்சையுடைய அவனுலே அப்படி அன்பாலே இடப்பட்ட இலே முதலான அந்தப் பொருளே. (ப்ரயதாத்மந:) 'ப₄க்த்யா' என்று ஶ்லோகத்தின் முற்பாதியில் நெஞ்சில் ஈரத்தை வலியுறுத்திய படியாலே, இங்கு ஆத்மஶப்₃த₃ம் நெஞ்சைக் குறிப்பது உசிதம். அந்த நெஞ்சுக்கு 'ப்ரயத' ஶப்₃த₃த்தால் காட்டப்படும் பரிஶுத்₃தி₄ யாவது—தன்னுல் அளிக்கப்பட்ட பொருளுக்குப் பயனுக ஒன்றைக் கணிசியாமல், தாய் தந்தை முதலான எல்லா உறவும் உடைய இவனது திருவடிகளில் ஒன்றை இடுவது ஸ்வயம்ப்ரயோஜனமாகும் என்று நினேத்திருக்கையேயாகும். ''தஸ்ய தாம்ரதலௌ தாத! சரணௌ ஸுப்ரதிஷ்டி₂தௌ। ஸுஜாதம்ருது₃ரக்தாபி₄: அங்கு₃லீபி₄ரலங்க்ருதௌ। ப்ரயதேந மயா மூர்த்₄நா க்₃ருஹீத்வா ஹ்யபி₄வந்தி₃தௌ ॥'' [பா₄ரதம் வநபர்வம் 188-133] [அப்பா! நன்கு நிலே நிற்பவையாய், சிவந்த உள்ளங்கால்களே உடையவையாய், அழகிய வெண்மைமிக்க சிவந்த விரல்களால் அலங்கரிக்கப்பெற்றவையான அவனுடைய இரு திருவடிகளும் (நெஞ்சில் ஒரு பயனே எதிர்பாராமையாகிற) ஶுத்₃தி₄யோடு கூடிய என்னுல் தலேயாலே தாங்கி வணங்கப்பெற்றன.] முதலான இடங்களில் ப்ராப்தமானது என்றும், மிக இனியது என்றும் ஈடுபடாமல், ஒரு பயன் கருதி ப₄க₃வத்₃ விஷயத்தில் ஈடுபடுவதே அஶுத்₃தி₄ என்று சொல்லப்பட்டதன்றே. இதனுல்

புண்யகாரியங்களைச் செய்யும்போது ஸ்வர்க்கம் முதலான பலன்களில் ஈடுபடுவதும், கர்ம ஜ்ஞான பக்திகளையும், வேலைசெய்து கூலி பெறுவதுபோலே மோக்ஷத்துக்கு உபாயமாயிருப்பவை என்று நினைத்து அவற்றில் ஈடுபடுவதுங்கூட நெஞ்சுக்கு அஶுத்தி என்று உணர்த்தப்படுகிறது. ''தபோ ந கல்க: அத்யயநம் ந கல்க: ஸ்வாபாவிகோ வேதவிதிர் ந கல்க:। ப்ரஸஹ்ய வித்தாஹரணம் ந கல்க: தாந்யேவ பாவோபஹ்ருதாநி கல்க: ॥'' [பாரதம் ஆதிபர்வம் 1-301] [தவம் குற்றமுடையதன்று. அந்தணர்க்கியல்வான வேதத்தைக் கற்பது குற்றமுடையதன்று; வேதங்களைக் கற்பிப்பதும் குற்றமுடையதன்று. முயன்று பணம் ஸம்பாதிப்பதும் குற்றமுடையதன்று. ஆனால் இக்காரியங்களே நினைவில் ஶுத்தியில்லாமல் செய்யப்பட்டால் குற்றமுடையவையாகும்.] என்று சொல்லப்பட்டதன்றோ. (பக்த்யுபஹ்ருதம் தத்) அத்தகைய ஸ்வயம் ப்ரயோஜன பக்தியினாலே அளிக்கப்பட்ட அப்பொருளை. 'பக்த்யா' என்று முற்பாதியில் சொன்னதையே 'பக்த்யுபஹ்ருதம்' என்று மறுபடியும் சொல்லுகையாலே, எம்பெருமான் இவனிடம் ஈடுபடுவதற்குக் காரணம் இந்த பக்தியே என்று உணர்த்தப்படுகிறது. ''அண்வப்யுபஹ்ருதம் பக்தை: ப்ரேம்ணா பூர்யேவ மே பவேத்। பூர்யப்யபக்தோபஹ்ருதம் ந மே தோஷாய ஜாயதே'' [பாகவதம் 10-81-2] [என்னுடைய பக்தர்களால் ஸமர்ப்பிக்கப்பட்டது அணுவானாலும், அவர்களுடைய அன்பைக் காணும்போது அது எனக்கு மிகப்பெரிதாக ஆகின்றது. பக்தியற்றவர்கள் மிகப் பெரியதையிட்டாலும் எனக்கு அது திருப்தியளிப்பதில்லை.] என்று சோதிவாய் திறந்து தானே அருளிச்செய்தானன்றோ. 'ப்ரயதாத்மந: பக்த்யுபஹ்ருதம் தத்' என்று விஶேஷிக்கையாலே, ஒரு பயனைக் கருதி அளிக்கப்பட்ட பொருள்களில் இவனுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை என்று விளங்குகிறது. ''கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும், முள்ளார் முளரியும் ஆம்பலும் முன் கண்டக்கால் புள்ளாயோரேனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென்று. உள்ளாதாருள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே'' [பெரியதிரு 11-7-6] என்று திருமங்கையாழ்வாரும் 'நல்லது கண்டால் நாராயணனுக்கே' என்று நினையாதார் நெஞ்சு நெஞ்சேயல்ல என்று அருளினாரன்றோ. (அஹம் அஶ்நாமி) எல்லாவிதமான பெருமைகளை உடையவனாயிருந்தபோதிலும் நான் இத்தகைய பக்தியுடையவன் இட்ட அல்பத்ரவ்யத்தை, பத்து நாள் பட்டினி கிடந்தவன், பெருஞ்சோற்றைக் கண்டவுடன் வாரி வாரி உண்பதுபோலே மேல் விழுந்து அநுபவிக்கிறேன். (அஹம்)

॥भा॥ यस्मात् ज्ञानिनां महात्मनां वाङ्मनसागोचरोऽयं विशेषः, तस्मात्त्वं च ज्ञानी भूत्वा, उक्तलक्षणभक्तिभारावनमितात्मात्मीयः कीर्तनयतनार्चनप्रणामादिकं सततं कुर्वाणो लौकिकं वैदिकं (च) नित्यनैमित्तिकं कर्म चेत्थं कुर्वित्याह—

களும், த3ானவர்களும், ராக்ஷஸர்களும், நாக3ர்களும், க3ருட3ர்களும், க3ந்த4ர்வர்களும், ஸித்3த4ர்களும், ராஜரிஷிகளும் இப்பெருமானைக் குறித்து எப்போதும் முறைப்படி ஹவ்ய கவ்யங்களை அளிக்கிறார்கள். (பயனைக் கருதி அளிக்கையாலே) அவையனைத்தும் எம்பெருமானுடைய திருவடிகளையே அடைகின்றன. (எம்பெருமான் அவற்றைக் காற்கடைக் கொள்ளுகின்றான் என்கை). அவனைத்தவிர வேறொரு பயனைக் கருதாத பரமைகாந்திகளால் அன்போடு செய்யப்பட்ட சிறு காரியங்களனைத்தையுங்கூட எம்பெருமான் தானே தன் தலையாலே ஏற்றுக்கொள்ளுகிறான்.] என்னும் மஹாபா4ரத ஶ்லோகங்களில் முழங்கப்பட்டதன்றோ. ஈடு 1—6 ப்ரவேஶத்தில் 'யா: க்ரியா:' என்று தொடங்கும் ஶ்லோகம் பின்வருமாறு விளக்கப் பட்டது இங்கு அநுஸந்தி4க்கத்தக்கது:— (யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யு:) காதலியின் செய்கையெல்லாம் காதலனுக்கு மிக இனியவையாயிருப்பதுபோலே இவன் செய்வதெல்லாம் எம்பெருமானுக்கு உத்3தே3ஶ்யமாய்த் தோற்றுகிறது. (ஏகாந்தக3தபு3த்3தி4பி4:) அவனையும் உத்3தே3ஶ்யமாக நினைத்து, மற்றொன்றையும் அப்படி நினையாமையொன்றே இவனுக்கு வேண்டுவது. (தா: ஸர்வா:) இவனுடைய செயல்களில் ஒன்றையும் அவன் விடமாட்டான். (ஶிரஸா ப்ரதிக்3ருஹ்ணாதி) இவன் (ப4க்தன்) காலாலே இட்டவற்றையும் அவன் தலையாலே சுமக்கும். (தே3வ:) பிறர் தலையாலே இட்டதையும் காலாலே ஏற்றுக்கொள்ள இட்டுப்பிறந்தவன் கிடீர் இது செய்வது! (ஸ்வயம்) ஐஸ்வர்யச் சிறப்பு இருப்பதனால், அரசன் தன் பட்டமஹிஷியின் வியர்வை மணத்தை அநுப4விப்பதற்கு ஆளிடமுடியாதே! அதுபோல் பரமைகாந்திகள் இட்டவற்றைத் தானே தலையால் சுமக்கிறான் என்று கருத்து. ஆக, இந்த ஶ்லோகத்தால் "ஆட்டை அறுத்துத் தா; கோழியை அறுத்துத் தா; உன் பையனை அறுத்துத் தா" என்று தம் அடியார்களிடம் அரிய கொடிய தகாத செயல்களைச் செய்யச் சொல்லி உகக்கும் மற்ற தெய்வங்களைப் போலல்லாமல், அடியார்கள் செய்யும் எளிய இனிய செயல்களைத் தலையாலே ஏற்று உகக்கும் எம்பெருமானுடைய ஸ்வாராத4த்வம் (ஆராத4னைக்கு எளியனாயிருக்கும் தன்மை) விளக்கப்பட்டதாயிற்று. 26.

यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत्।
यत्तपस्यसि कौन्तेय! तत्कुरुष्व मदर्पणम्॥ २७॥

27. **யத்கரோஷி யத₃ஶ்நாஸி யஜ்ஜுஹோஷி த₃தா₃ஸி யத்।**
யத்தபஸ்யஸி கௌந்தேய! தத் குருஷ்வ மத₃ர்ப்பணம்॥

கௌந்தேய!—குந்தீபுத்ரனே!, **யத் கரோஷி**—(உலகில் வாழ்வதற்காக) யாதொரு லௌகிக காரியத்தைச் செய்கிருயோ, **யத் அஶ்நாஸி**—(உயிர்வாழ்வதற்காக) யாதொரு உண்ணும் காரியத்தைச் செய்கிருயோ, (வேத₃த்தில் சொல்லப்பட்டபடி) **யத் ஜுஹோஷி** — யாதொரு ஹோம காரியத்தைச் செய்கிருயோ, **யத் த₃தா₃ஸி**—யாதொரு தா₃னத்தைச் செய்கிருயோ, **யத் தபஸ்யஸி**—யாதொரு தவத்தைச் செய்கிருயோ, **தத்**—அது அனைத்தையும், **மத₃ர்ப்பணம் குருஷ்வ**—எனக்கு அர்ப்பணம் செய்வாயாக.

---

27. **செய்யுமது முண்பதுவுஞ் செந்தீயி லோமத்தாற்**
பெய்யுமதுந் தானமெனப் பேசுமது—மெய்யுணர்வா
லுற்ற தவமுமவை யென்பா லுடனிருத்தி
மற்றதனிற் றொத்தைநீ மாற்று.

செய்யுமதும்—(உலகில் வாழ்வதற்காக) செய்யப்படும் லௌகிக காரியத்தையும், **உண்பதுவும்**—(உயிர் வாழ்வதற்காகச்செய்யப்படும்) உண்ணும் காரியத்தையும், (வேத₃ங்களில் சொன்னபடி) **செந்தீயில் ஓமத்தால் பெய்யுமதும்**—யாக₃ாக்₃னியில் ஹோமம் செய்வதும், **தானம் எனப் பேசுமதும்**—தா₃னம் என்று சொல்லப்படும் காரியமும், **மெய்யுணர்வால் உற்ற தவமும்**—(ஆத்ம பரமாத்மாக்களைப் பற்றிய) உண்மையறிவோடு செய்யப்படும் தவமாகிற காரியமும், **அவை**—ஆகிய இவையனைத்தையும், **என்பால்**—என்னிடம், **உடன் இருத்தி**—ஸமர்ப்பித்து, **மற்றதனில்**—முற்கூறியவற்றில், **தொத்தை**—(உனக்கும் மற்றவர்களுக்கும் உள்ளதாக நீ மயங்கும்) தொடர்பை, **நீ மாற்று** — நீ மாற்றிக் கொள்வாயாக.

॥ भा ॥ यत् देहयात्राशेषभूतं लौकिकं कर्म करोषि, यच्च देहधारणायाश्नासि, यच्च वैदिकं-होमदानतपःप्रभृति नित्यनैमित்तिकं कर्म

27. சென்ற ஸ்லோகம் ஈருக—மஹாத்மாக்களின் ஒழுக்கமும், அவர்களுக்குக் கிடைக்கும் ப₂லனின் பெருமையாகிற ப்ராப்யவை லக்ஷண்யம், ஆஸ்ரயண ஸௌகர்யம் என்னும் இரு விஸேஷங்களும் கூறப்பட்டன. இப்படி மஹாத்மாக்களான ஜ்ஞாநிகளுக்கு என்னுடைய வாக்குக்கும் மனத்துக்குங்கூட எட்டாத சிறப்புக்களிருக்கையால், பரமஜ்ஞாநியான குந்தியின் பிள்ளையான நீயும் ஜ்ஞாநியாகி, அந்த மஹாத்மாக்களுக்குச் சொல்லப்பட்டபடி அன்பின் மிகுதியாலே உன்னையும், உன் உடைமைகளையும் என்னிடம் ஸமர்ப்பித்து என் விஷயமான ஸங்கீர்த்தனம், கும்பிடு நட்டமிட்டு ஆடுதல், பாடுதல் முதலிய செயல் அர்ச்சனம், ப்ரணமம் முதலானவற்றை எப்போதும் செய்பவனாய், லௌகிக கர்மங்களையும், வைதி₃கமான நித்ய நைமித்திக கர்மங்களையும் உனக்காகவும், பிறர்க்காகவும் நீ செய்யுமவையாக நினையாமல், எனக்காக நான் செய்வித்துக் கொள்ளுமவை என்னும் அநுஸந்த₄ானத்துடன் செய்வாயாக என்கிறான். ஜ்ஞாநிகளால் கைக்கொள்ளப்படும் ப₄க்தியோக₃த்தை விவரிப்பதற்கு முன், அதற்கு அங்க₃மான இவ்வநுஸந்த₄ானத்தை இந்த ஸ்லோகத்தில் சொல்லுகிறான். லௌகிக கர்மங்கள் ஸ்வப₄ாவ ப்ராப்தம், அர்த்த₂ப்ராப்தம் என்று இரு பிரிவுடையதாயிருக்கும். இவ்வுலகில் வாழ்வதற்காக ஒவ்வொரு மனிதனும் இயல்வாகச் செய்யும் வியாபாரம் முதலான லௌகிக கர்மங்கள் ஸ்வப₄ாவப்ராப்தம் எனப்படும். உயிர் வாழ்வதற்குத் தவிர்க்கவொண்ணுமல் செய்யும் உணவு உண்பது, நீர் பருகுவது முதலான செயல்கள் அர்த்த₂ப்ராப்தம் எனப்படும். ஶாஸ்த்ரவிதி₄ப்படி செய்யும் வைதி₃ககர்மங்கள் ஶாஸ்த்ரப்ராப்தம் எனப்படும். இவை நித்யம் நைமித்திகம் என்று இரு வகைப்படும். இத்தகைய மூவகைக் கர்மங்களைக் குறித்தும் முற்கூறிய அநுஸந்த₄ானத்தை இங்கு விதி₄க்கிறான் கண்ணன். இந்த அநுஸந்த₄ானம் கர்மயோக₃த்திற்கு அங்க₃மாக கீ₃தை 3-30ல் விதி₄க்கப்பட்டது. ப₄க்தியோக₃த்திற்கு அங்க₃மாக இங்கு விதி₄க்கப்படுகிறது. (யத் கரோஷி) உலகில் வாழ்வதற்கு உறுப்பான யாதொரு லௌகிக கர்மத்தை நீ செய்கிறுயோ. 'கரோஷி' என்னும் பத₃ம் பொதுவாக எல்லாச் செயல்களையும் குறிக்குமானுலும் — மேலே 'அஶ்நாஸி' என்று உயிர்வாழ்வதற்குத் தவிர்க்கவொண்ணுமல் செய்யும் உணவு உண்ணுதல் முதலான அர்த்த₂ப்ராப்தகர்மங்களையும், 'ஜுஹோஷி', 'த₃தா₃ஸி', 'தபஸ்யஸி' என்னும் பத₃ங்களாலே ஶாஸ்த்ரவிதி₄ப்படி

करोषि, तत्सर्वं मदर्पणं कुरुष्व—अर्प्यत इत्यर्पणम्; सर्वस्य लौकिकस्य वैदिकस्य च कर्मणः कर्तृत्वम्, भोक्तृत्वम्, आराध्यत्वं च यथा मयि समर्पितं भवति तथा कुरु। एतदुक्तं भवति—यागदानादिषु

செய்யும் ஹோம தா₃ன தபஸ்ஸுக்கள் முதலான ஶாஸ்த்ரப்ராப்த கர்மங்களையும் தனித்துக் குறிக்கிறபடியால் கோ₃பப₃லீவர்த்த₃ந்யாயத்தாலே இங்கு ஸ்வபா₄வப்ராப்தமான லௌகிககர்மங்களை மாத்திரம் குறிக்கிறது. (யத₃ஶ்நாஸி) தே₃ஹம் தா₄ரித்து நிற்பதற்காக யாதொரு உணவு உண்பதாகிற காரியத்தைச் செய்கிறாயோ. இது உயிர்வாழ்வதற்காகச் செய்யும் நீர் பருகுவது முதலான மற்ற காரியங்களுக்கும் உபலக்ஷணமாய், அர்த்த₂ப்ராப்தமான (தவிர்க்க வொண்ணாமல் செய்யும்) கர்மங்களனைத்தையும் காட்டுகிறது. (யத் ஜுஹோஷி, யத் த₃தா₃ஸி, யத் தபஸ்யஸி) ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டபடி யாதொரு ஹோமத்தையும், யாதொரு தா₃னத்தையும், யாதொரு தவத்தையும் செய்கின்றாயோ. இது ஶாஸ்த்ரப்ராப்தமாய், நித்யம் நைமித்திகம் என்று இருவகைப்பட்டதான வைதி₃ககர்மங்கள் அனைத்துக்கும் உபலக்ஷணம். இங்கு யச்ச₂ப்₃த₃ங்கள் ஐந்தும் 'கரோஷி' முதலான பத₃ங்களால் சொல்லப்பட்ட கிரியைகளையே அநுவதி₃க்கின்றன. (மத₃ர்ப்பணம் குருஷ்வ) என்னிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்டதாகச் செய்வாய். 'அர்ப்பண' ஶப்₃த₃த்தை ப₄ாவப்ரதா₄னமாகக் கொண்டு அர்ப்பணரூப க்ரியையைக் குறிப்பதாகப் பொருள்கொண்டால் 'மத₃ர்ப்பண' ஶப்₃த₃த்திற்கு 'மயி அர்ப்பணம் யத் தத்' என்னும் வ்யதி₄கரண ப₃ஹுவ்ரீஹி ஸமாஸத்தைக் கொள்ளவேண்டிவரும். இது க்லிஷ்டமாகையால், "அர்ப்யத இத்யர்ப்பணம்; மயி அர்ப்பணம் மத₃ர்ப்பணம்" என்று தத்புருஷஸமாஸமாகக் கொள்வது ஸ்வரஸம். 'அர்ப்பண' ஶப்₃த₃த்தில் "க்ருத்யல்யுடோ ப₃ஹுளம்" [அஷ்டாத்₄யாயி 3.3.113] என்னும் ஸூத்ரத்தின்படி கர்மணில்யுட் வந்திருக்கிறது. ஸமர்ப்பணமாவது ஓரிடத்தில் நிலையாயிருக்கும் பொருளை மற்றோரிடத்தில் எடுத்து வைப்பதாகும். இங்கு சேதனனிடத்தில் ஒரு க்ஷணநேரமேயுள்ள கிரியையை ப₄க₃வானிடம் எப்படி ஸமர்ப்பிக்க முடியும்? எனில்: இங்கு அத்தகைய ஸமர்ப்பணம் கூறப்படவில்லை. எல்லா லௌகிக வைதி₃க கர்மங்களுடைய கர்த்ருத்வம், போ₄க்த்ருத்வம், ஆராத்₄யத்வம் ஆகியவை தன்னிடமோ பிறரிடமோ இல்லை. எம்பெருமானிடமே உள்ளது என்று அநுஸந்தி₄ப்பதே இங்கு ஸமர்ப்பணம் எனப்

आराध्यतया प्रतीयमानानां देवादीनां कर्मकर्तुर्भोक्तुः तव च मदीयतया मत्सङ्कल्पायत्तस्वरूपस्थितिप्रवृत्तितया च मय्येव परमशेषिणि परमकर्तरि त्वां च कर्तारं भोक्तारमाराधकम्, आराध्यं च देवताजातम्, आराधनं

படுகிறது. இதன்மேல் ஓர் ஆக்ஷேபம் எழுகிறது. "கர்த்தா ஶாஸ்த்ரார்த்த2வத்த்வாத்" [ப்3ரஹ்மஸூத்ரம் 2-3-33] என்னும் கர்த்ரதி4கரணத்தில் ஜீவனுக்கே கர்த்ருத்வமும், போ4க்த்ருத்வமும் உண்டு என்று நிலைநிறுத்தப்பட்டது. அந்தந்த யாக3ங்களில் இந்த்3ரன் முதலான தே3வதைகளே ஆராதி4க்கப்படுகிறார்கள் என்று அந்தந்த வேத3வாக்யங்களிலேயே ஓதப்பட்டது. தே3வதைகளுக்கிடையே போ4த3மும் தே3வதா காண்ட3த்தில் ஸ்தா2பிக்கப்பட்டது. ஆகையால் ஜீவனுக்குள்ள கர்த்ருத்வ போ4க்த்ருத்வங்களையும், இந்திரன் முதலான தே3வதைகளுக்கு ஓதப்படும் ஆராத்4யத்வத்தையும் எம்பெருமானிடம் உள்ளதாக அநுஸந்தி4ப்பது ப்4ராந்தி (மயக்கம்) ஆகவன்றோ முடியும். ஆகையால் இத்தகைய ஸமர்ப்பணமும் பொருந்தாதே என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாதா4னம் பின்வருமாறு — "யாக3ம், தா3னம் முதலான வைதி3க கர்மங்களில் ஆராதி4க்கப்படுபவர்களாக வேத3வாக்யங்களில் தோன்றும் தே3வர்களும், அந்த யாக3ம், தா3னம் முதலானவற்றைச் செய்யும் சேதனனாகிற நீயும் என்னுடைமையாய், என் அதீ4னமான ஸ்வரூப ஸ்தி2தி ப்ரவ்ருத்திகளை உடையவர்களாயிருக்கையாலே, பரம ஸ்வாமியாய், பரமகர்த்தாவான என்னிடத்திலேயே— (க்ரியைகளின்) கர்த்தாவாய் (அவற்றின் ப2லனை) அநுப4விப்பவனாய், (அப்ப2லனையளிக்கும் இந்த்3ராதி3களுக்கு) ஆராத4கனான உன்னையும், ஆராதி4க்கப்படும் தெய்வங்களையும், ஆராத4கையாகிற கிரியைகளையும், இப்படி அனைத்தையும் ஸமர்ப்பிப்பாயாக" என்பதே இங்குக் கருத்தாகையால் இவ்வாக்ஷேபத்திற்கு இடமில்லை. கர்த்ருத்வாதி4கரணத்திற்கு அடுத்ததான பராயத்தாதி4கரணத்தில் ஜீவனுடைய கர்த்ருத்வம் எம்பெருமானுக்கு அதீ4னமானது என்று நிலைநிறுத்தப்பட்டதும் இதை வலியுறுத்துகிறது. ஜீவன் கர்த்தாவானபோதிலும், எம்பெருமானே பரமகர்த்தாவாயிருந்துகொண்டு அவனைச் செய்விக்கிறானாகையாலே தன்னிடமுள்ள கர்த்ருத்வத்தை அவனிடம் ஸமர்ப்பிப்பது பொருந்தும். ஜீவன் கர்ம ப2லத்தை அநுப4விப்பவனாயிருந்தபோதிலும், இவனை இப்படி அநுப4விக்கச் செய்து லீலா ரஸத்தை அடையும் பரமபோ4க்தா எம்பெருமானே

च क्रियाजातम्, सर्वं समर्पय; तव मन्नियाम्यतापूर्वकमच्छेषतैक-रसतामाराध्यादेश्चैतत्स्वभावगर्भतामत्यर्थप्रीतियुक्तोऽनुसंधत्स्वेति ॥ २७ ॥

யாகையாலே போ₄க்த்ருத்வத்தையும் அவனிடம் ஸமர்ப்பிப்பது பொருந்தும். தே₃வர்கள் ஆராதி₄க்கப்படுபவர்களாயிருந்தபோதிலும், அவர்களுக்கு அந்தர்யாமியான எம்பெருமானுக்கே உண்மையில் அக்கர்மங்கள் ஆராத₄னமாயிருக்கின்றனவாகையாலே தே₃வதைகளிடமுள்ள ஆராத்₄யத்வத்தை எம்பெருமானிடம் ஸமர்ப்பிப்பதும் பொருந்தும் என்று கண்டுகொள்வது. இப்படி கர்த்ருத்வம், போ₄க்த்ருத்வம், ஆராத்₄யத்வம் ஆகியவற்றை—பரமகர்த்தாவாய், பரமஶேஷியான உன்னிடம் ஸமர்ப்பித்துவிட்டால் நேரே காரியங்களைச் செய்யும் என் விஷயமாகவும், ஆராத்₄யனான உனக்கு விஶேஷணமாயிருக்கும் இந்திரன் முதலான தே₃வதைகள் விஷயமாகவும் என்ன அநுஸந்த₄ானத்தைச் செய்வது? எனில்: கர்த்தாவான உன் விஷயத்தில்—ஸர்வேஶ்வரனான என்னால் நியமிக்கப்படுபவனாயிருக்கையையும் எனக்கு ஶேஷபூ₄தனாயிருப்பதையே இயல்வாகக் கொண்டிருக்கையையும் அநுஸந்தி₄க்கவேண்டும்; ஆராதி₄க்கப்படும் இந்திரன் முதலான தே₃வதைகளும் இவ்விரு தன்மைகளை உடையவர்கள் என்று அநுஸந்தி₄க்கவேண்டும்; ப₄க்தியோக₃ம் செய்பவனாகையாலே என்னிடத்தில் மிகுந்த ப்ரீதியோடு இவ்வநுஸந்த₄ானங்களைச் செய்ய வேண்டும் என்று கருத்து. "ஸ்வபா₄வப்ராப்தமாய், அர்த்த₂ப்ராப்தமாய், ஶாஸ்த்ரப்ராப்தமான எல்லாக்கர்மங்களையும் ஸமர்ப்பிப்பதாகக்கூறும் * ஓர் மந்திரம் இந்த ஶ்லோகத்தால் உணர்த்தப்படுகிறது" என்றும், "'யத்கரோமி யத₃ஶ்நாமி யஜ்ஜுஹோமி த₃தா₃மி யத்। யத்தபஸ்யாமி ப₄க₃வந்! தத்கரோமி த்வத₃ர்ப்பணம் ॥' என்று இந்த ஶ்லோகத்தையே ஓர் மந்திரமாக்கிச் சிலர் அநுஸந்தி₄க்கிறார்கள்" என்றும் தாத்பர்ய சந்த்₃ரிகையில் காட்டப்பட்டது. (கௌந்தேய!) பரமஜ்ஞாநியான குந்தியின் பிள்ளையாகையாலே நீயும் ஜ்ஞாநியாகிற ப₄க்தியோக₃நிஷ்ட₂னாகி, அதற்கு அங்க₃மான இவ்வநுஸந்த₄ானத்தைச் செய்யவேண்டும் என்று கருத்து. ஆக, இந்த ஶ்லோகத்தால் ப₄க்தியோக₃த்துக்கு அங்க₃மான அநுஸந்த₄ானம் விவரிக்கப்பட்டது. 27.

* "காயேந வாசா மநஸேந்த்₃ரியைர்வா பு₃த்₃த்₄யாऽऽத்மநா வா ப்ரக்ருதே: ஸ்வபா₄வாத்। கரோமி யத்₃யத்ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்ப்பயாமி ॥" என்று அனைவரும் அநுஸந்தி₄க்கும் ஶ்லோகமே இங்கு கருதப்பட்டதாகலாம்.

शुभाशुभफलैरेवं मोक्ष्यसे कर्मबन्धनैः।
संन्यासयोगयुक्तात्मा विमुक्तो मामुपैष्यसि॥२८॥

28. ஶுபா₄ஶுப₄ப₂லைரேவம் மோக்ஷ்யஸே கர்மப₃ந்த₄நை: ।
ஸந்ந்யாஸயோக₃யுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்யஸி ॥

ஏவம்—இவ்வண்ணமாக, **ஸந்ந்யாஸயோக₃யுக்தாத்மா**–(முற்கூறியபடி என்னிடம் ஸர்வகர்மங்களையும் ஸமர்ப்பிப்பதாக அநுஸந்திப்பதாகிற) ஸங்யாஸயோகத்தோடு கூடிய நெஞ்சையுடையவனாய்க் கர்மத்தைச் செய்வதால், **ஶுபா₄ஶுப₄ப₂லை:** — நல்லதும் தீயதுமான ப₂லன்களைக் கொடுக்கும், **கர்மப₃ந்த₄நை:** — (அளவற்ற) புண்யபாப கர்மங்களாகிற கட்டுக்களிலிருந்து, **மோக்ஷ்யஸே**—விடுபடுவாய்; **விமுக்த:**—அவற்றிலிருந்து விடுபட்டபின்பு, **மாம் உபைஷ்யஸி**—என்னை அடைவாய்.

---

28. **இந்தத் துறவுசேர் யோகத்தை யெய்தியநீ**
முந்தைச் சுபாசுபமாய் மூள்வினையின்—பந்த
மறப்பெறுதி யாதலினு லாங்குவீ டெய்தி
யுறப்பெறுதி யென்னை யுகந்து.

ஆதலினுல் — இவ்வண்ணமாக, **இந்தத் துறவுசேர் யோகத்தை எய்திய நீ**—முற்கூறியபடி என்னிடம் ஸமர்ப்பிப்பதாக அநுஸந்திப்பதாகிற யோக₃த்தை **உடைய நீ, சுபாசுபமாய் மூள் முந்தை வினையின் பந்தம் அறப்பெறுதி**—நல்லது தீயதுமான ப₂லன்களாகப் பரிணமிக்கும் ப்ராசீன கர்மங்களின் கட்டிலிருந்து விடுபடுவாய். **ஆங்கு**–கர்மப₃ந்த₄மற்ற உலகில், **வீடு எய்தி**—கர்மங்களினின்றும் விடுபட்டு, **உகந்து என்னை உறப்பெறுதி**—உகப்புடன் என்னை அடையப் பெறுவாய்.

---

28. **முன் ஶ்லோகத்தில் காட்டிய அநுஸந்த₄ானத்தோடு கூடிய ப₄க்தியோக₃த்திற்குப் ப₂லனை விதி₄க்கிருன் இந்த ஶ்லோகத்தில்.**

॥भा॥ एवं संन्यासाख्ययोगयुक्तमनाः आत्मानं मच्छेषतामन्नियाम्यतैकरसं, कर्म च सर्वं मदाराधनमनुसंदधानो लौकिकं वैदिकं

(ஏவம் ஸந்ந்யாஸ யோக3யுக்தாத்மா) முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஸமர்ப்பணுநுஸந்த4ானத்தோடு கூடிய நெஞ்சை உடையவன். ப்ரகரணப3லத்தாலே முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஸமர்ப்பணத்தை 'ஸந்ந்யாஸ' ஶப்3த3மும், அநுஸந்த4ானத்தை 'யோக3' ஶப்3த3மும் குறிக்கின்றன என்று கொள்ளுவதே உசிதம். அவை ஸந்ந்யாஸாஶ்ரமத்தையோ, கர்மயோக3ம், ஜ்ஞானயோக3ம் முதலானவற்றையோ குறிப்பதாகக் கொள்ளுவது ப்ரகரணவிருத்3த4மாகையாலே பொருந்தாது. 'யோக3' ஶப்3த3ம் அநுஸந்த4ானத்தைக் குறிக்கையால் 'யோக3யுக்தாத்மா' என்றவிடத்தில் 'ஆத்மந்' ஶப்3த3ம் இங்கு அவ்வநுஸந்த4ானத்துக்கு இருப்பிடமான நெஞ்சைக் குறிக்கிறது. ஆக, தன் ஆத்மாவை எனக்கு இயல்வாகவே ஶேஷமாகவும், என்னுல் அசித்தைப்போலே நியமிக்கப்படும் பரதந்த்ரப் பொருளாகவும், யாக3ம் முதலான கர்மங்களை எனக்கு ஆராத4னமாக இருப்பவையாகவும் அநுஸந்தி4த்துக்கொண்டு, ஸ்வபா4வப்ராப்தகர்மம், அர்த்த2ப்ராப்தகர்மம் என்று இரு வகைப்படும் லௌகிககர்மத்தையும், ஶாஸ்த்ரப்ராப்த கர்மமாகிற வைதி3ககர்மத்தையும் செய்பவனை முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட அதி4காரி இந்தப் பத3த்தால் குறிக்கப்படுகிருன் என்றதாயிற்று. (ஶுபா4ஶுப4ப2லை: கர்மப3ந்த4நை: மோக்ஷ்யஸே) அநுகூல ப்ரதிகூலப2லன்களை உடையவையாய், கணக்கற்றவையாய், முன் செய்தமுழுவினைகளாகிற ப3ந்த4ந (ஸம்ஸாரத்தில் கட்டுப்படுத்தும்) கர்மங்களிலிருந்து விடுபடுகிருய். (ஶுபா4ஶுப4ப2லை: மோக்ஷ்யஸே) அநாதி3காலமாகச் செய்துவந்த புண்யபாப கர்மங்களிலிருந்தும், முறையே அவற்ருல் உண்டாகும் ஸ்வர்க்க3ம் முதலான அநுகூலப2லன்களிலிருந்தும், நரகம் முதலான ப்ரதிகூல ப2லன்களிலிருந்தும் விடுபடுகிருய் என்று கருத்து. இத்தால் புண்யப2லமான ஸ்வர்க்க3ம் முதலானவையும் பொன் விலங்குபோலே வெட்டி எறியத்தக்கவையே என்று காட்டப்படுகிறது. 'ப2லை:' என்னும் பன்மையாலே இந்த ப்ரதிகூல அநுகூல ப2லன்கள் கணக்கற்றவை என்றும் உணர்த்தப்படுகிறது. (கர்மப3ந்த4நை: மோக்ஷ்யஸே) அநாதி3காலமாகச் செய்யப்படுகின்றவையாய், புண்யமென்றும், பாபமென்றும் இரு வகைப்பட்டவையாய், சேதனனை ஸம்ஸாரத்தில் கட்டுப்படுத்திவைக்கின்றவையான பண்டை

च कर्म कुर्वन् शुभाशुभफलैरनन्तैः प्राचीनकर्माख्यैर्बन्धनैर्मत्प्राप्तिविरोधिभिः सर्वैर्मोक्ष्यसे; तैर्विमुक्तो मामेवोपैष्यसि॥ २८॥

வினைகள் பற்றேடு அறுக்கப்பெறுவாய். முன் ஶ்லோகத்தில் சொன்ன அநுஸந்தா4னம், ப4க்தியோக3ம் முதலான கர்மங்கள் இவனை ஸம்ஸாரத்திலிருந்து விடுவிப்பவையாகையாலே அவற்றைக் குறிக்காமல், 'கர்மப3ந்த4நை:' என்னும் பத3ம் இவனை ஸம்ஸாரத்தில் கட்டி வைப்பவையாய், எம்பெருமானை இவன் அடைவதற்குத் தடையாயிருப்பவையான ப்ராசீன கர்மங்களைக் காட்டுகிறது. மேலே 'மாம் உபைஷ்யஸி' (என்னை அடைகிருய்) என்று கூறுகையாலே, எம்பெருமானை அடையத் தடையாயிருக்கும் எல்லாக் கர்மங்களும் இங்கு குறிக்கப்படுகின்றன என்றும் விளங்குகிறது. இதனல் ப4க்தியோக3மாகிற உபாயத்துக்குத் தடையாயிருக்கும் கர்மங்களை மாத்திரம் போக்கும் கர்ம ஜ்ஞாந யோக3ங்களைக் காட்டிலும் இவ்வநுஸந்தா4னத்துக்குரிய சிறப்பும் உணர்த்தப்படுகிறது. தன் ஆத்மாவையே ப்ராப்யமாகக் கொண்ட கைவல்யநிஷ்ட2னுக்குப்போலே, கர்மங்களிலிருந்து விடுபடுவதாலேயே ஏற்படும் ஆத்மாநுப4வம் மட்டும் ப2லமல்ல; என்னையே பரமப்ராப்யமாகக் கொண்டு ப4க்தி செலுத்துகையாலே என்னை அடைகையாகிற பரமப2லனையும் பெறுவாய் என்று காட்டுகிருன் மேலே—(விமுக்தோ மாமுபைஷ்யஸி) இவ்வநுஸந்தா4னத்தோடு கூடின ப4க்தியோக3த்தை அநுஷ்டி2ப்பதாலே முற்கூறிய படி கர்மங்களிலிருந்து விடுபட்டவனுய், உனக்கு ப்ராப்யமான என்னையே அடைவாய் என்று கருத்து. 'மோக்ஷ்யஸே' என்றதால் அநிஷ்டநிவ்ருத்தியும் 'மாமுபைஷ்யஸி' என்றதால் இஷ்டப்ராப்தியும் சொல்லப்படுகிறது. ஆகையாலே புநருக்தி இல்லை. ''விமுக்த: ப3ந்த4னை: ஜீவந்நேவ, பதிதே ஶரீரே மாம் ஆக3மிஷ்யஸி'' [நீ இவ்வுலகில் உயிரோடிருக்கும்போதே கர்மங்களிலிருந்து விடுபடுவாய்; ஶரீரம் விழுந்தவுடன் என்னை அடைவாய்] என்று 'மோக்ஷ்யஸே' என்றதற்கு ஜீவந்முக்தி பரமாக ஶங்கரர் பொருள்கொண்டார். அத்3வைதிகளும் உடலோடிருக்கும்போது கர்மங்களிலிருந்து விடுபடுவதாகக் காணுமையால் இது பொருந்தாது. ஆகையால் இங்கு சொல்லப்படும் அநிஷ்டநிவ்ருத்தியும், இஷ்டப்ராப்தியும் ஸூக்ஷ்மஶரீரமும், கழிந்த பின்பு என்றே கொள்ளவேணும். மேலே ப4க்தியை விதி4க்கும் 34-வது ஶ்லோகத்தில் 'மாமேவைஷ்யஸி' என்று ஏவகாரத்தோடு கூடியிருப்பதையொட்டி 'மாம் உபைஷ்யஸி' என்று இங்குள்ளதற்கும் 'மாமேவ உபைஷ்யஸி' என்று ஏவகாரத்தைச் சேர்த்து பா4ஷ்ய

॥भा॥ ममेमं परममतिलोकं स्वभावं शृणु—

समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्योऽस्ति न प्रियः।
ये भजन्ति तु मां भक्त्या मयि ते तेषु चाप्यहम्॥२९॥

29. ஸமோऽஹம் ஸர்வபூ₄தேஷு ந மே த்₃வேஷ்யோऽஸ்தி ந ப்ரிய: ।
யே ப₄ஜந்தி து மாம் ப₄க்த்யா மயி தே தேஷு சாப்யஹம் ॥

மிட்டார் ஸ்ரீபா₄ஷ்யகாரர். கர்த்ருத்வம், உபாயத்வம், ப₂லித்வம் (ப₂லனை அநுப₄விப்பவனுயிருக்கை) ஆகியவை எனக்கே உள்ளதாயிருப்பதுபோலே ப₂லித்வமும் (ப₂லமாயிருக்கையும்) எனக்கே உள்ளதொன்று என்பது ஏவகாரத்தின் கருத்து. அன்றிக்கே, கர்மங்களிலிருந்து விடுபட்டபின்பு சிலகாலம் ஆத்மாநுப₄வம் முதலானவற்றைச் செய்து, பிறகு என்னை அடைவது என்பதுமில்லை. கர்மங்களிலிருந்து விடுபட்ட உடனே என்னை அடைந்து விடுவாய் என்றும் ஏவகாரத்திற்குப் பொருள் கொள்ளலாம். முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட அநுஸந்த₄ானத்துக்கே பரமமோக்ஷமாகிற ப₂லன் ஏற்படும் என்று இந்த ஶ்லோகத்தில் கூறப்பட்டுள்ளது. உண்மையில் இவ்வநுஸந்த₄ானமானது ஸாத₄னப₄க்தி நிஷ்ட₂னை ஸ்வயம் ப்ரயோஜன ப₄க்திநிஷ்ட₂னுகவும், ஸித்₃தோ₄பாயநிஷ்ட₂னுகவும் ஆக்குவதற்காகவே ஸாத₄னப₄க்திக்கு அங்க₃மாக இங்கு விதி₄க்கப்படுகிறது. எம்பெருமானுடைய விருப்பம் ப₂லித்து. இப்படி அநுஸந்தி₄க்கும் உபாஸகன் "ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானும் அவனே" என்று உணர்ந்து, பரார்த்த₂ாநுப₄வ கைங்கர்ய நிஷ்ட₂னுகிற முக்₂ய ப்ரபந்நனுகிவிட்டானுகில், அவனுக்கு இவ்வநுஸந்த₄ானமே பரமமோக்ஷத்துக்கு நேரே காரணமாகி விடுகிறது. அப்படி உணராத உபாஸகனுக்கு இவ்வநுஸந்த₄ானத்தோடு கூடிய ப₄க்தியோக₃ம் சில பல ஜந்மங்களுக்குப் பின் ப்ராரப்₃த₄கர்மம் முடிந்தபின்பு அந்திமஸ்ம்ருதியை விளைத்து, ப₄க₃வத்ப்ராப்தியாகிற ப₂லனுக்குக் காரணமாகிறது. இவன் விஷயத்தில் ப₄க்தியோக₃மாகிற அங்கி₃யின் ப₂லன் இவ்வநுஸந்த₄ானமாகிற அங்க₃த்தில் ஏறிட்டுக் கூறப்படுகிறது என்று கொள்ளவேணும். ஆக, முன் ஶ்லோகத்தில் சொன்ன அநுஸந்த₄ானத்தினுல் இந்த ஜன்மத்தின் முடிவிலேயோ, ப்ராரப்₃த₄கர்மத்தின் முடிவிலேயோ இவன் ப₄க₃வத்ப்ராப்தியை அடைகிருன் என்று காட்டப்பட்டதாயிற்று. 28.

அஹம்—நான், **ஸர்வபூ₄தேஷு** — பலவகைப்பட்டிருக்கும் எல்லா ஜீவராஶிகள் விஷயத்திலும், **ஸம:**—(என்னை ஆஶ்ரயிக்கும் விஷயத்தில்) ஸமமாயிருப்பவன், **மே**—எனக்கு, **ந த்₃வேஷ்ய: அஸ்தி**—(தாழ்ந்தவன் என்னும் காரணத்தால்) ஆஶ்ரயிக்கத் தகாதவன் எவனுமில்லை. **ந ப்ரிய: (அஸ்தி)** — (உயர்ந்தவன் என்னும் காரணத்தால்) ஆஶ்ரயிக்கத்தக்கவன் எவனுமில்லை. **யே து**—எவர்களோவெனில், **மாம்**—என்னிடம், **ப₄க்த்யா ப₄ஜந்தி**—ப₄க்தியையே பயனாகக்கொண்டு அன்புசெய்கிறார்களோ, **மயி தே**—என்னிடத்தில் அவர்கள் வாழ்கிறார்கள். **தேஷு ச**—அவர்களிடத்திலும், **அஹம் அபி**—நானும் வாழ்கிறேன் (என்னிலும் உயர்ந்தவர்களிடத்திற்போலே பரிமாறுகிறேன்.)

---

29. யாவர்க்கு மொப்பனா னென்றனக்கி யாரிடத்து
மேவுவெறுப் போருகப்பு மிக்கில்லை—யாவரென்னை
யன்பதனா லேயடைவா ராங்கவரென் பாலவர்பா
லின்பதனா லேயிருப்பன் யான்.

யாவர்க்கும்—பலவகைப்பட்டிருக்கும் எல்லா ஜீவராஶிகள் விஷயத்திலும், **நான்** — நான், **ஒப்பன்** — (என்னை ஆஶ்ரயிக்கும் விஷயத்தில்) ஸமமாயிருப்பவன். **என்றனக்கு**—எனக்கு, **யாரிடத்தும் மேவு வெறுப்பு** — (தாழ்ந்தவன் என்னும் காரணத்தால்) 'ஆஶ்ரயிக்கத்தகாதவன் இவன்' என்னும் த்₃வேஷமோ, **ஓர் உகப்பு**—(உயர்ந்தவன் என்னும் காரணத்தால்) 'இவன் ஆஶ்ரயிக்கத்தக்கவன்' என்னும் ப்ரீதியோ, **மிக்கு இல்லை**—அடியோடு கிடையாது. **யாவர்**—எவர்கள், **எனை**—என்னிடம், **அன்பதனாலே அடைவார்**—ப₄க்தியையே பயனாகக்கொண்டு அன்புசெய்கிறார்களோ, **ஆங்கவர்**—அவர்கள், **என்பால்**—என்னிடத்தில், வாழ்கிறார்கள். **யான்**—நான், **அவர்பால்**—அவர்களிடத்தில், **இன்பதனாலே இருப்பன்**—(என்னிலும் உயர்ந்தவர்களிடத்திற்போலே) இன்புற்று வாழ்கிறேன்.

॥भा॥ देवतिर्यङ्मनुष्यस्थावरात्मनाऽवस्थितेषु जातितश्चाकारतस्स्वभावतो ज्ञानतश्चात्यन्तोत्कृष्टापकृष्टरूपेण वर्तमानेषु सर्वेषु भूतेषु समा-

---

29. 26-ம் ஶ்லோகத்தில் 'கிடைத்தற்கரிதோ எளிதோ, உயர்ந்ததோ தாழ்ந்ததோ' என்று இடுகிற திரவியத்தின் உயர்வு தாழ்வை ஆராயாமல் ஏற்றுக்கொள்கிருன் என்னும் ஸௌலப்₄யம் (எளிமை) கூறப்பட்டது. அடுத்த ஶ்லோகத்தில்—செய்கின்ற செயல்களெல்லாம் 'கண்ணனுக்கே' என்னும் நினைவுடன் செய்யப்பட்டதாலேயே அவனுக்கு ஆராத₄னமாகும் என்று கூறுவதன் மூலம் அந்த ஸௌலப்₄யம் வலியுறுத்தப்பட்டது. ப₄க்திசெய்யும் அதி₄காரியைப் புகழும் இந்த ஶ்லோகத்தாலும், அடுத்த ஶ்லோகத்தாலும் ஜன்மம், ஆகாரம், ஸ்வபா₄வம், ஜ்ஞானம், ஒழுக்கம் ஆகியவற்ருல் எத்தனை தாழ்ந்தவனுயினும் ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்தியைச் செய்தானுகில் அவனிடத்தில் தன் ஈடுபாட்டைக் காட்டுகிருன். இத்தால் உயர்ந்தவன் தாழ்ந்தவர்களோடு ஒரு நீராகக்கலந்து பரிமாறுகையாகிற ஸௌஶீல்யகு₃ணம் காட்டப்படுகிறது: இது உலகில் வேறெவரிடமும் காணப்படாததாய், எம்பெருமானுக்கே உள்ளதான ஒரு மஹாகு₃ணமாகும். இவ்விரண்டு ஶ்லோகங்களில் இரண்டாவதில் ஒழுக்கத்தில் தாழ்ந்தவர்களைப்பற்றிப் பேசியிருக்கையாலே, இந்த ஶ்லோகத்தில் ஜன்மம் (பிறப்பு), ஆகாரம் (உடலமைப்பு), ஸ்வபா₄வம் (ஆத்மகு₃ணங்கள்), ஜ்ஞானம் (அறிவு) முதலானவற்ருல் தாழ்ந்தவர்களைப்பற்றிப் பேசுகிருன் என்று கொள்ளவேண்டும். (ஸமோऽஹம் ஸர்வபூ₄தேஷு) தே₃வர், திர்யக் (விலங்குகளும், பறவைகளும்), மநுஷ்யர், ஸ்தா₂வரம் (மரம் செடி கொடிகள்) என்னும் நால்வகை யோனிகளிலும் பிறந்திருப்பவர்களாய், ஜாதியாலும், உடலமைப்பாகிற ஆகாரத்தாலும், ஆத்மகு₃ணங்களாகிற ஸ்வபா₄வத்தாலும், அறிவாலும் மிகவும் உயர்வு தாழ்வைப் பெற்றிருக்கும் எல்லா ஜீவராஶிகளிடத்திலும் என்னை ஆஶ்ரயிக்கும் விஷயத்தில் நான் ஸமமாயிருப்பவன். (ஸர்வபூ₄தேஷு) உலகிலுள்ள ஜீவராஶிகள் தே₃வர், மனிதர், திர்யக், ஸ்தா₂வரம் என்று நால்வகைப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொருவகையிலும் பல வேறுபட்ட அவாந்தர ஜாதிகளும் உள்ளன. தே₃வர்களில் வஸுக்கள், ஆதி₃த்யர்கள், ருத்₃ரர்கள் முதலான ஜாதிகளும், மனிதர்களில் ப்₃ராஹ்மணன் க்ஷத்ரியன் முதலான ஜாதிகளும். திர்யக் ஸ்தா₂வரங்களில் ஏராளமான ஜாதிகளும் காணப்படுகின்றன. ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களுக்குள்ளேயும்—பிறப்பினுலும், அழகாயிருப்பது அழகற்றிருப்பது, ஸ்த்ரீயாயிருப்பது புருஷனுயிருப்பது,

श्रयणीयत्वे समोऽहम्; अयं जात्याकारस्वभावज्ञानादिभिर्निकृष्ट इति समाश्रयणे न मे द्वेष्योऽस्ति—उद्वेजनीयतया न त्याज्योऽस्ति। तथा

ஒழுங்கான அங்க₃ங்களை உடையனுயிருப்பது ஒழுங்கற்ற அங்க₃ங்களை உடையனுயிருப்பது முதலான ஆகாரங்களாலும், ஸத்வகு₃ணத்தின் மிகுதியினுல் நல்ல கு₃ணங்களை உடையவனுயிருப்பது, ரஜஸ்தமோ கு₃ணங்களின் மிகுதியினுல் தீய கு₃ணங்களை உடையவனுயிருப்பது முதலான ஸ்வப₄ாவங்களாலும், அறிவாலும் எத்தனையோ ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. இப்படிப் பலவகைப்பட்ட எல்லா ஜீவராமிகள் விஷயத்திலும் நான் ஸமமானவன் என்கிருன். 'இது எப்படிப்பொருந்தும்? கம்ஸன் முதலானவர்களை இவன் நிர ஸிப்பதையும், அக்ரூரன் முதலானவர்களை அநுக்₃ரஹிப்பதையும் காண்கிருேமே; முந்தின ம்லோகத்திலேயே 'மாமுபைஷ்யஸி' என்று இந்த ஜீவராசிகளில் சிலரே தன்னை அடைவதாகக் கூறியிருக்கிருனே' எனில்: இங்கு எல்லாவகையிலும் ஸமமாயிருக்கிறேன் என்று எம் பெருமான் கூறவில்லை. ஆம்ரயிக்கும் விஷயத்தில் ஸமமாயிருக் கிறேன் என்பதே இங்கு எம்பெருமான் திருவுள்ளம் என்பது ''யே ப₄ஜந்தி து மாம் ப₄க்த்யா'' என்னும் பிற்பாதியிலிருந்தே தெளிவா கிறது; ஆகையாலே குறையில்லை. ''மாம் ஹி பார்த்த₂! வ்யபாம்ரித்ய'' என்னும் 32-வது ம்லோகத்திலும் ஸ்த்ரீகள், வைம்யர்கள், மூத்₃ரர்கள் முதலான தாழ்ந்த பிறப்பை உடையவர்களும் தன்னை ஆம்ரயிக்கும் விஷயத்தில் ஸமமானவர்கள் என்று காட்டுகிருனன்றே. தே₃வர்களும் இவனை ப₄க்திசெய்து ஆம்ரயிக்கலாம் என்பது ப்₃ரஹ்ம ஸூத்ரத்தில் தே₃வதாதி₄கரணத்தில் (1-3-7) ஸ்த₂ாபிக்கப்பட்டது. க₃ஜேந்த்₃ரன், ஸுக்₃ரீவன் முதலான திர்யக்குகளும் புண்ணிய மிகுதியினுல் அறிவுபெற்று இவனை ஆம்ரயித்தார்கள் என்பது இதி ஹாஸபுராணப்ரஸித்₃த₄ம். ஆகையால் பூர்வமீமாம்ஸையில் திர்ய க₃தி₄கரணத்தில் திர்யக்குகளுக்கு யாக₃ம் முதலானவற்றை அநுஷ் டி₂த்து உயர்க₃திக்குச் செல்ல இயலாதாகையால் அவற்றில் அதி₄ காரமில்லை என்று கூறியதும் புண்யத்தால் அறிவுபெருத மற்ற திர்யக்குகள் விஷயத்தில் என்று கொள்ளவேண்டும். மாபம் முத லானவற்ருல் ஸ்த₂ாவரமாயிருக்கும் சில சேதனர்க்கு ஜ்ஞானமுண்டு என்று மஹரிஷிகள் கூறுகிருர்கள். ஆகையால் அத்தகைய ஸ்த₂ாவ ரங்களும் தம் மனேவ்ருத்தியாகிற அறிவாலே எம்பெருமானை ஆம்ர யித்து உய்வுபெறலாம். (ந மே த்₃வேஷ்யோऽஸ்தி) ''இவன் ஜாதி, ஆகாரம், ஸ்வப₄ாவம், அறிவு முதலானவற்ருல் தாழ்ந்தவன்'' என் னும் காரணத்தால், என்னை ஆம்ரயிக்கும் விஷயத்தில் எனக்கு

समाश्रितत्वातिरेकेण जात्यादिभिरत्यन्तोत्कृष्टोऽयमिति तद्युक्ततया समाश्रयणे न कश्चित्प्रियोऽस्ति—न संग्राह्योऽस्ति। अपि त्वत्यर्थमत्प्रियत्वेन मद्भजनेन विनाऽऽत्मधारणालाभात् मद्भजनैकप्रयोजना ये मां

எனும் வெறுக்கத்தக்கவனல்லன். இத்தகையவன் என்னை ஆஶ்ரயிக்க வந்தானாகில் நான் அருவருத்து அவனைக் கைவிடமாட்டேன் என்று கருத்து. (ந ப்ரிய:) அதுபோலவே "என்னை ஆஶ்ரயிப்பதற்கு முன்பு ஜாதி முதலானவற்றால் மிகவும் உயர்ந்தவன் இவன்" என்று அந்த உயர்ந்த ஜாதி முதலானவை காரணமாக என்னை ஆஶ்ரயிக்கும் விஷயத்தில் எனக்கு எவனும் ப்ரீதி விஷயமானவனல்லன். ஆஶ்ரயிக்கும்போது ஜாதி முதலானவற்றில் உயர்வு காரணமாக நான் எவனையும் கைக்கொள்ளமாட்டேன் என்று கருத்து. "தே₃வாநாம் தா₃நவாநாம் ச ஸாமாந்யமதி₄தை₃வதம் | ஸர்வதா₃ சரணத்₃வந்த்₃வம்" [தே₃வர்களுக்கும், அசுரராக்கர்களுக்கும் என்றும் பொதுவாயிருக்கும் எம்பெருமானின் திருவடிகள்] என்று ஜிதந்தா ஸ்தோத்ரத்திலும், "ஈடும் எடுப்புமில் ஈசன்" [திருவாய் 1-6-3] என்று நம்மாழ்வாராலும், "பொதுநின்ற பொன்னங்கழல்" [மூன்-திருவ 88] என்று பேயாழ்வாராலும் இவ்வர்த்த₂ம் அருளிச்செய்யப்பட்டது. இனி, இந்த ஶ்லோகத்தின் முற்பாதியில் சொல்லப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பின்வரும் ஆக்ஷேபம் எழுகிறது. அதாவது—"மிகுந்த புண்ணியத்தின் ப₂லனாய், ப்ரீதிக்குக் காரணமாவதாக ஶாஸ்த்ரங்களிலும் உலகிலும் பிரஸித்₃தி₄ பெற்றவையான உயர்ந்த ஜாதி முதலான சிறப்புக்களால் உனக்கு ப்ரீதி ஏற்படுவதில்லையாகில் உனக்கு ப்ரீதி எதனால்தான் ஏற்படும்? ஒன்றினாலும் ஏற்படாது எனில்: 'ஸ ச மம ப்ரிய:' [கீ₃தை 7-17] என்று ஜ்ஞானியை உனக்கு மிகவும் ப்ரியனாகச் சொல்லியிருப்பது பொருந்தாதே" என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு பதில் உரைக்கப்படுகிறது ஶ்லோகத்தின் பிற்பாதியிலே—(யே து) து ஶப்₃த₃ம் ஆக்ஷேபத்துக்குப் பரிஹாரத்தைக் காட்டுகிறது. (யே து மாம் ப₄க்த்யா ப₄ஜந்தி தே மயி) எவர்கள் என்னிடத்தில் மிகவும் ப்ரீதியுடையவர்களாயிருக்கையாலே என்னிடம் ப₄க்தி செலுத்தினாலொழிய உயிர்த₄ரிக்கமாட்டாதவர்களாய், ப₄க்தியையே பயனாகக்கொண்டு என்னிடம் அன்புசெலுத்துகிறார்களோ, அவர்கள் ஜாதி முதலானவற்றால் உயர்ந்தவர்களாயினும் தாழ்ந்தவர்களாயினும் என்னை ஒத்த கு₃ணங்களையுடையவர்களைப்போலே தாம் விரும்பியபடி என்னோடு கலந்து பரிமாறுகிறார்கள். "ப₄க்த்யா ப₄ஜந்தி" என்கையாலே ப₄க்தியை மோக்ஷஸாத₄னமாகக் கருதி உபாஸிக்கும் உபாஸ

भजन्ते ; ते जात्यादिभिरुत्कृष्टा अपकृष्टा वा मत्समानगुणवद्यथासुखं मय्येव वर्तन्ते। अहमपि तेषु मदुत्कृष्टेष्विव वर्ते॥ २९॥

கர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களாய், ப₄க்தியை ஸ்வயம்ப்ரயோஜனமாகக் கருதும் மஹாத்மாக்களையே கண்ணன் திருவுள்ளத்தில் கொண்டிருக்கிறுன் என்றும், உபாஸகஜ்ஞானிகளும் அத்தகைய ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்திநிஷ்ட₂ர்களாக ஆவதற்கே அவர்களுக்கு ஸாத₄னப₄க்தியை விதி₄க்கிறுன் என்றும் விளங்குகிறது. இதைத் திருவுள்ளத்திற்கொண்டே கீ₃தாபா₄ஷ்யத்தில் எம்பெருமானுரும் இந்த ப்ரகரணத்தில் பல ஸ்லோகங்களில் ''ப₄ஜனைக ப்ரயோஜனா:'' [ப₄க்தியையே பயனுகக்கொண்டவர்கள்] என்னும் பத₃த்தை இட்டருளுகிருர். ''உன்னை ஸ்வாமியாக நினைத்து ப₄க்திசெலுத்துகிறவர்கள் உன்னிடத்தில் ஒத்த கு₃ணத்தை உடையவர்கள்போலே விரும்பியபடி எப்படிப் பரிமாறமுடியும்?'' என்னும் கேள்வி எழ, ''நான் அவர்களிடம் பரிமாறும்படியைக் கேளீர்'' என்று பதிலுரைக்கிறுன் மேலே— (தேஷு சாபி அஹம்) ஸௌஶீல்யத்தின் உச்சநிலையிலிருப்பவனுகையாலே, (26வது ஸ்லோகத்தின் பா₄ஷ்ய வ்யாக்₂யானங்களில் எடுத்து விவரிக்கப்பட்ட 'யா:க்ரியா;' என்று தொடங்கும் ஸ்லோகத்தில் சொன்னபடி) என்னைக் காட்டிலும் உயர்ந்தவர்களிடத்திற்போலே நான் அவர்களிடம் பரிமாறுகிறேன். ஆகையால் நான் ஸர்வேஸ்வரன், ஜக₃த்காரணன் முதலான பெருமைகளை அநுஸந்தி₄த்து ப₄யப்படாமல், அவர்களும் என்னேடு ஒத்த கு₃ணங்களை உடையவர்களைப்போலே தாம் விரும்பியபடி என்னேடு பரிமாறுகிருர்கள். நானும் அவர்களும் எங்களுக்கிடையே உள்ள பிதாபுத்ர ஸம்ப₃ந்த₄ம், ப₄ர்த்ருபா₄ர்யா ஸம்ப₃ந்த₄ம் ஆகிய உறவுகளை அறிந்தவர்களாகையாலே ஒருவரோடொருவர் இப்படிக் கலந்து பரிமாறக்குறையில்லை என்று கருத்து. 'மயி தே' என்றவிடத்திலில்லாத சகாரம், 'தேஷு சாபி' என்றவிடத்தில் உள்ளது. இந்த 'ச'காரம் ப்ராதா₄ன்யத்திலேயாய், 'என்னைக்காட்டிலும் உயர்ந்தவர்களிடத்திற்போலே பரிமாறுகிறேன்' என்னும் கருத்தை உணர்த்தி நிற்கிறது. 'யே ப₄ஜந்தி' என்று பொதுவாக யச்ச₂ப்₃த₃த்தால் எடுக்கையாலே ஜாதியினுல் தாழ்ந்தவர்களும் ஸாத₄னப₄க்தியைச் செய்யலாம் என்று உணர்த்தப்படுகிறதாகையால் '' ஜாத்யாதி₃பி₄: உத்க்ருஷ்டா அபக்ருஷ்டா வா '' என்று பா₄ஷ்யமிடப்பட்டது. இப்படிக் கொண்டால் அபஶூத்₃ராதி₄கரண விரோத₄ம் வருமே எனில்: உத்க்ருஷ்ட ஜன்மத்தில் ப₄க்தியோக₃த்தைத் தொடங்கி அடுத்து வரும் தாழ்ந்த ஜந்மத்திலும் அந்த ப₄க்தி தொடரப் பெற்றவர்களுக்குத் தத்தமக்குரிய வர்ணுஶ்ரம த₄ர்மங்களை அநுஷ்டி₂ப்பதன் மூலம் எம்பெருமானிடம் ப₄க்தி செய்யலாமாகையால் விரோத₄மில்லை.

॥ भा ॥ तत्रापि —

अपि चेत्सुदुराचारो भजते मामनन्यभाक्।
साधुरेव स मन्तव्यस्सम्यग्व्यवसितो हि सः॥ ३० ॥

30. அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் ।
ஸாதுரேவ ஸ மந்தவ்யஸ் ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ: ॥

ஆக, ஜன்மம், ஆகாரம், ஸ்வபாவம், ஜ்ஞானம்,ஒழுக்கம் ஆகிய வற்றால் எத்தனை தாழ்ந்தவனாயினும் ஸ்வயம்ப்ரயோஜனபக்தியைச் செய்தானாகில் அவனிடத்தில், தன்னிலும் உயர்ந்தவர்களிடத்திற் போலே பரிமாறுகையாகிற ஸௌசீல்யகுணத்தின் உச்சநிலையைக் காட்டினாயிற்று.

இந்த நீர்மையின் எல்லைநிலத்தை உபாயாந்தரபரர்களான ஸாதனபக்திநிஷ்டர்களிடமும் காட்டுவதைக்கண்டு,

''அத ம்ருதிதகஷாயா: கேசிதாஜாநதாஸ்ய-
த்வரிதசிதிலசித்தா: கீர்த்திசிந்தாநமஸ்யா: ।
விதத்தி நநு பாரம் பக்திநிக்நா லபந்தே
த்வயி கில ததமே த்வம் தேஷு ரங்கேந்த்ர! கிம் தத் ॥''
[ஸ்ரீரங்கராஜஸ்தவம் உத்தரசதகம் 86]

[ஸ்ரீரங்கநாதரே ! (கர்ம ஜ்ஞாந யோகங்களாலே பக்தியோகம் தொடங்குவதற்குத் தடையாயிருக்கும்) பாபங்கள் நீங்கப்பெற்றவர் களாய், இயற்கையான அடிமையில் பதற்றத்தை உடையவர்களாய், உள்ளம் நைந்தவர்களாயிருக்கிற பக்தியோகநிஷ்டர்களான சிலர் ஸங்கீர்த்தனம், சிந்தனம், நமஸ்காரம் ஆகியவற்றைச் செய்கிறார்கள். அவர்களும் (இதன் பலனாகப்) பரமபதத்தை அடைகிறார்கள். அவர்கள் தேவரீரிடத்திலே ஒத்த குணத்தை உடையவர்களைப்போலே விரும்பியபடி பரிமாறுகிறார்களன்றோ. (இது பொருத்தம்;) தேவரீர் அவர்களிடத்தில் தேவரீரைக் காட்டிலும் உயர்ந்தவர்களிடத்திற் போலே பரிமாறுவதாக (கீதையில்) அருளிச்செய்திருக்கிறீரே ; அது எப்படிப் பொருந்தும்? (இந்த நீர்மை ஒருவர்க்கு நிலமல்ல என்று கருத்து)] என்று பட்டர் ஈடுபட்டு அருளிச்செய்தருளினார். 29.

ஸுது₃ராசார: அபி — மிகவும் தாழ்ந்த ஒழுக்கத்தை உடையவனுயிருந்தாலும், **மாம்**—என்னிடம், **அநந்யப₄ாக்**— வேறு பயனை விரும்பாதவனுய், **ப₄ஜதே சேத்**—ப₄க்தி செய்தானுனல், **ஸ:**—அவன், **ஸாது₄: ஏவ**—தலைசிறந்த ஜ்ஞானிகளோடு ஸமமானவனுவான்; **மந்தவ்ய:**—கொண்டாடத்தக்கவனும் ஆவான். (ஏனெனில்) **ஸ:**—அவன், **ஸம்யக்**—நன்கு, **வ்யவஸித: ஹி**—(என்னிடத்தில்) உறுதியான ஈடுபாடு உடையவனன்றோ.

---

30. மிகவுந் துராசார மேவிலும்வே றுன்னுத்
தகவொன்றி யென்றன்னைச் சார்வா—னிகழ்வின்றி
வாலறிவ னென்றே மதிக்கப் படுமவன்றுன்
மேலறிவின் றன்மையான் மிக்கு.

மிகவும் துராசாரம் மேவிலும் — மிகவும் தாழ்ந்த ஒழுக்கத்தை உடையவனுயிருந்தாலும், **வேறு உன்னுத் தகவு ஒன்றி**—வேருெரு பயனை விரும்பாத தன்மையோடு கூடி, **என்றன்னை**—என்னை, **சார்வான்**—ப₄க்திசெய்து அடைபவன், **இகழ்வு இன்றி**—(தாழ்ந்த ஒழுக்கத்தினுல் ஏற்படக்கூடிய) இகழ்ச்சிக்கு இலக்காகாமல், **வாலறிவன் என்றே மதிக்கப்படும்**—சிறந்த ஜ்ஞானி என்றே கொண்டாடப்படுவான். (ஏனெனில்) **அவன்றுன்** — அவன்தான், **மிக்கு**—மிகவும், **அறிவின் மேல் தன்மையான்** — அறிவினுல் உண்டாகும் உறுதிப்பாட்டை உடையவனன்றோ.

---

30. ஜன்மம், ஆகாரம், ஸ்வப₄ாவம், ஜ்ஞானம் ஆகியவற்றுல் எத்தனை தாழ்ந்தவனுயினும், தன்னிடம் ஸ்வயம்ப்ரயோஜனப₄க்தியைச் செய்தானுகில், அவர்களிடம் தன்னைக்காட்டிலும் உயர்ந்தவர்களிடத்திற்போலே தான் பரிமாறுவதைக் காட்டினுன் சென்ற ஶ்லோகத்தில். அதற்கும் மேலே, ஒழுக்கத்தால் எத்தனை தாழ்ந்தவனுயினும், தன்னிடம் ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்தியைச் செய்தானுகில், அவன் தலைசிறந்த ஜ்ஞானிகளோடு ஒரு கோவையாக எண்ணத் தக்கவன் என்கிருன் இந்த ஶ்லோகத்தில். ''கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோள் ஒன்றிலாமையினுல், என்றேனும் இரந்தார்க்கு இனிதாக உரைத்தறியேன், குன்றேய் மேகமதிர் குளிர்மாமலை

॥भा॥ तत्रतत्र जातिविशेषे जातानां यस्समाचार उपादेयः परिहरणीयश्च; तस्मादतिवृत्तोऽप्युक्तप्रकारेण मामनन்யभाक् भजनैकप्रयो-

---

வேங்கடவா! அன்றே வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண் டருளே'' [பெரியதிரு 1-9-3] என்று திருமங்கை ஆழ்வார் இம்மஹா குணத்தைத் தம்மிடத்திலேயே காட்டும்படி ப்ரார்த்தித்தாரன்றோ. (ஸுது₃ராசாரோऽபி) அந்தந்த வர்ணங்களில் (ஜாதிகளில்) பிறந்த வர்களுக்கு ஶாஸ்த்ரங்களில் யாதொரு ஒழுக்கம் கைக்கொள்ளத்தக்க தாகவும், யாதொரு ஒழுக்கம் விலக்கத்தக்கதாகவும் கூறப்பட் டுள்ளதோ அவற்றை மீறினவனாக இருந்தாலும். அந்தணனுக்கு மது₄, மாம்ஸம் முதலானவற்றை உண்பது விலக்கத்தக்கது. க்ஷத்ரியன் முதலான மற்ற வர்ணத்தைச் சேர்ந்தவர்களுக்கு அது விலக்கத்தக்கதன்று. காராம் பசுவின் (கபிலையின்) பாலைப் பருகுவது ஶூத்₃ரனுக்கு விலக்கத்தக்கது. அதுவே அந்தணனுக்குக் கைக் கொள்ளத்தக்கது. இவற்றையெல்லாம் கருதியே ''தத்ர தத்ர ஜாதிவிஶேஷே ஜாதாநாம் யஸ்ஸமாசார உபாதே₃ய: பரிஹரணீயஶ்ச'' என்று பா₄ஷ்யமிடப்பட்டது. (மாம் அநந்யபா₄க் ப₄ஜதே சேத்) வேறொரு பயனைக் கருதாமல் ப₄க்தியையே பயனாகக்கொண்டு, இவ் வத்தியாயத்தின் தொடக்கத்திலிருந்து காட்டிய ரீதியில் என்னிடம் ப₄க்தி செய்தானாகில், 'அபி சேத்' என்னும் பத₃ங்கள் இப்படிப் பிரித்து அந்வயிக்கிறபடியால் புநருக்தியில்லை. (அநந்யபா₄க்) முன் ஶ்லோகங்க ளிற்போலே ப₄க்தியையே பயனாகக்கொண்டு மோக்ஷமுள்ளிட்ட வேறு எப்பயனையும் கருதாமல் ப₄க்தி செய்யும் மஹாத்மாவான ஜ்ஞானி யைக் குறிக்கிறது. வேறு பயன்கள் எதையும் கருதாதவனாகையாலே அப்பயன்களையே தரும் மற்ற தெய்வங்களை இவன் கனவிலும் கருத மாட்டான் என்பது சொல்லாமலே விளங்கும். ''ப்₃ரஹ்மாணம் ஶிதிகண்ட₂ம் ச யாஶ்சாந்யா தே₃வதாஸ் ஸ்ம்ருதா:। ப்ரதிபு₃த்₃த₄ா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் ப₂லம்॥'' [பா₄ரதம்-ஶாந்தி-மோக்ஷ 350-36] [பிரமனையும், சிவனையும், மற்றுமுள்ள தெய்வங்களையும் ஜ்ஞானிகள் ஸேவிக்கமாட்டார்கள். (ஏனெனில்) அவர்களிடமிருந்து கிடைக்கும் பயன் அளவுபட்டதாயிருக்கையால்] என்று இவ்வர்த்த₂ம் சொல்லப்பட்டதன்றோ. (ஸாது₄ரேவ ஸ:) வைஷ்ணவ கோஷ்டியில் முன்நிற்பவர்களோடு ஒருவனாக எண்ணத்தக்கவனே அவன். ''உப மாநம் அஶேஷாணாம் ஸாதூ₄நாம் ய: ஸதா₃ऽப₄வத்'' [வி-பு 1-15-156] [எந்த ப்ரஹ்லாத₃ாழ்வான் எல்லா ஸாது₄க்களுக்கும் உபமாந மானானோ] என்று 'ஸாது₄' ஶப்₃த₃ம் சிறந்த ஜ்ஞானிகளைக் குறிக்கு

जनो भजते चेत्, साधुरेव सः—वैष्णवाग्रेसर एव सः; मन्तव्यः—

மென்று பராஶரர் உணர்த்தினரன்றே. "ஸாத4வ: க்ஷீணதோ3ஷா: ஸ்யு:" [வி-பு 3-11-3] [தோ3ஷமற்றவர்கள் ஸாது4க்களாவார்கள்] "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதி4பி4: । நராணாம் க்ஷீண-பாபாநாம் க்ருஷ்ணே ப4க்தி: ப்ரஜாயதே ।।" [பஞ்சராத்ரம்] [ஆயிரக் கணக்கான பிறப்புகளில் கர்மஜ்ஞாந ப4க்தியோக3ங்களாலே பாபங்கள் நீங்கப்பெற்ற மனிதர்களுக்குக் கிருஷ்ணனிடம் ப4க்தி உண்டாகிறது.] என்கிறபடியே பாபங்கள் நீங்கப் பெற்றவனுக்கன்றே எம்பெருமானிடம் ப4க்தி உண்டாகும். "ஆசாரப்ரப4வோ த4ர்ம: த4ர்மஸ்ய ப்ரபு4ரச்யுத:" [ஸஹஸ்ரநாமாத்4யாயம்] [த4ர்மமானது நல்லொழுக்கத்திலிருந்து உண்டாகிறது. அச்யுதன் த4ர்மத்தின் தலைவனுவான்.] என்று எம்பெருமானும் ஆசாரத்திலிருந்து ஏற்படும் த4ர்மத்திற்குத் தலைவன் எனப்பட்டான். "ஆசாரஹீநம் ந புநந்தி வேதா3:" [வாஸிஷ்ட2 ஸ்ம்ருதி 6-3] [ஆசாரமற்றவனை வேத3ங்கள் பரிஶுத்3த4ப்படுத்த மாட்டா] "ஸந்த்4யாஹீநோऽஶுசிர் நித்யம் அநர்ஹஸ்ஸர்வகர்மஸு" [த3க்ஷஸ்ம்ருதி 2-22] [ஸந்த்4யாவந்த3னம் செய்யாதவன் எப்போதும் அஶுத்3த4னுவான். எந்தக் கர்மமும் செய்யத் தகுதியற்றவனுவான்] என்று ஆசாரமற்றவனை எதற்கும் தகுதியில்லாதவனென்று ஶாஸ்த்ரங்கள் நிந்தித்துமிருக்கின்றன. அப்படியிருக்கும்போது இவனை 'ஸாது4' என்பது எப்படி? எனில்: வேறு பயன் கருதாத ப4க்தி எம்பெருமானுடைய க்ருபையாலே இவனுக்கு ஏற்பட்டிருக்கையாலே இவனிடமுள்ள து3ராசாரம் அஸத்ஸமமாய் இவன் வைஷ்ணவர்களின் முன்னணியில் நிற்பவனுகவே கருதப்படுவான். கர்மஜ்ஞாநப4க்தி யோக3ங்களை அநுஷ்டி2த்து அதனுல் பாபம் நீங்கப்பெற்றவர்களுக்கு ப4க்தி உண்டாவது ஒரு வகை. அந்தக் கர்மஜ்ஞாநப4க்தியோக3ங்களின் ஸ்தா2னத்திலே எம்பெருமானுடைய க்ருபை இருந்து ப4க்தி உண்டாவது இரண்டாவது வகை. இவற்றில் இவன் இரண்டாவது வகையைச் சேர்ந்தவன் என்று கொள்ளவேண்டும். "து3ராசாரோபி ஸர்வாஶீ க்ருதக்4நோ நாஸ்திக: புரா । ஸமாஶ்ரயேதா3தி3தே3வம் ஶ்ரத்3த4யா ஶரணம் யதி3 ।। நிர்த்தோ3ஷம் வித்3தி4 தம் ஜந்தும் ப்ரபா4வாத் பரமாத்மந: ।।" [ஸாத்வதஸம்ஹிதை 16-23, 24] [நெடுங் காலமாக து3ராசாரமுடையவனுயினும், எதையும் உண்பவனுயினும், செய்ந்நன்றி கொன்றவனுயினும், நாஸ்திகனுயினும் ஆதி3தே3வனை நாராயணனை ஶ்ரத்3தை4யுடன் உபாயமாகப் பற்றினுகில் அந்த மனிதனை, பரமாத்மாவின் ப்ரபா4வத்தினுலே தோ3ஷமற்றவ

बहुमन्तव्यः, पूर्वोक्तैस्सम इत्यर्थः। कुत एतत्? सम्यग्व्यवसितो हि सः—यतोऽस्य व्यवसायस्सुसमीचीनः। भगवान् निखिलजगदेक-

---

ஞகக் கருதுவாயாக.] என்று ஶாஸ்த்ரங்களில் முழங்கப்பட்டதன்றோ. ஆகையாலே இவன் சாதுகோட்டியுள் கொள்ளப்படுபவனேயாவான். (ஸாது₄ரேவ) ''விஷ்ணுரேவ பூ₄த்வா'' [யஜு॰ 2-1-3-16] [விஷ்ணுவுக்குச் சமமாக ஆகி] முதலானவிடங்களில் ஏவகாரம் ஸாம்யத்தைக் குறிப்பதுண்டாகையாலே இங்கும் ஸாது₄க்களோடு ஸமானமானவனாகிறான் என்று பொருள். (ஸ: மந்தவ்ய:) இப்படி வைஷ்ணவர்களின் முன்னணியில் நிற்பவனாகையாலே அவன் கொண்டாடத் தக்கவனுமாவான். ஆசாரமற்ற மனிதன் ஸாது₄க்களால் விலக்கத் தக்கவனாயினும், அத்தகையவன் எம்பெருமானையே எல்லாமாகக் கொண்ட ஜ்ஞானியாகிவிட்டானாகில் 'சாதுகோட்டியுள் கொள்ளப் படுவாரே' [பெரியாழ்திரு 3-6-11] என்று பெரியாழ்வார் அருளிய ரீதியில் ஸாது₄க்களால் கொண்டாடத்தக்கவனேயாவான் என்று கருத்து. (மந்தவ்ய:) 'ஸாது₄ என்றே நினைக்கத்தக்கவன்' என்று பொருள் கொண்டால் 'மந்தவ்ய:' என்னும் ஶப்₃த₃ம் பொருளற்றதாய், தேவையில்லாததாகிறபடியால் 'ஸம்மந்தவ்ய:' என்று கொண்டு, ப₃ஹுமந்தவ்யன் (கொண்டாடத்தக்கவன்) என்று பொருள் கொள்ளப்பட்டது. 'ஸம்' என்னும் உபஸர்க்க₃ம் இல்லையே எனில், உபஸர்க்க₃ங்களின் பொருளும் தா₄துவிலேயே அடங்கியிருக்கையாலும், உபஸர்க்க₃ம் அதை வெளிக்காட்டுவதை மாத்திரம் செய்கிறதாகையாலும், அர்த்த₂ ஸ்வாரஸ்யத்தைக் கருதி, உபஸர்க்க₃மில்லாவிடிலும் இப்படிப் பொருள் கொள்ளப்பட்டது. இனி, மேலும் ஓர் ஆக்ஷேபம் எழக்கூடும்: ''நல்ல ஆசாரம் நற்பயனுக்கு உபாயமாகும். து₃ராசாரம் தாழ்ந்த ப₂லன்களையே விளைக்கும். அப்படியிருக்கும்போது, து₃ராசாரமுடையவனும் நற்பயனை அடைகிறான் என்று எப்படிக் கூறமுடியும்?'' என்பது அவ்வாக்ஷேபம், இதற்கு—'இவன் தன்னுடைய து₃ராசாரம் முதலான அநிஷ்டங்களைப் போக்கிக் கொள்வதற்கும், தலைசிறந்த பயனைப்பெறுவதற்கும், தன் முயற்சியை உபாயமாகக்கொள்ளாமல் தன்னோடு தந்தை, ரக்ஷகன், ஶேஷி, ப₄ர்த்தா முதலான எல்லா உறவுகளையும் உடைய எம்பெருமானையே உபாயமாகக் கொள்கிறானாகையாலே இவனுக்குத் தாழ்வுகள் நீங்கி, நற்பயன் விளையத்தடையில்லை.'' என்னும் பரிஹாரத்தைக் கடைசி பாத₃த்தாலே காட்டுகிறான் — (ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ:) இவனுடைய அத்₄யவஸாயம் (உறுதிப்பாடு) மிகச்சிறந்ததன்றோ. அது

कारणभूतः परं ब्रह्म नारायणश्चराचरपतिरस्मत्स्वामी मम गुरुर्मम सुहृत् मम परमं भोग्यमिति सर्वैर्दुष्प्रापोऽयं व्यवसायस्तेन कृतः, तत्कार्यं

எத்தகையது? எனில்: இவன் எம்பெருமானை எல்லாக் கல்யாண கு₃ணங்களும் நிறைந்திருக்கை, தாழ்வுகள் ஒன்றும் இல்லாதிருக்கை என்னும் உப₄யலிங்க₃ங்களையுடைய ப₄க₃வான் என்று உணர்ந்திருக்கிருன். "ஜ்ஞாத்வா பூ₄தாதி₃ம் அவ்யயம்" [கீ₃தை9-13] என்றவிடத்தில் கூறியபடி அனைத்துலகுக்கும் காரணமான பரம்பொருளாகையாலே பிதாபுத்ரஸம்ப₃ந்த₄த்தை உடையவன் என்றும் உணர்ந்திருக்கிருன். "நாராயண பரம் ப்₃ரஹ்ம" [தை-நா11] முதலான வேத₃வாக்கியங்களில் கூறியபடி ஸர்வவ்யாபகத்வம், ஸர்வாத₄ாரத்வம், ப்ராப்யத்வம், ப்ராபகத்வம் முதலான பல பெருமைகளை உணர்த்தும் நாராயணன் என்னும் தனிப்பெயரை உடைய பரம்பொருள் என்றும் உணர்ந்திருக்கிருன். 'பதிம் விஶ்வஸ்ய ஆத்மேஶ்வரம்' [தை-நா 11] [உலகனைத்துக்கும் ஸ்வாமியாய், தனக்குத்தானே ஈஶ்வரனுயிருப்பவன் நாராயணன்] "பதிம் பதீநாம்" [ஶ்வே 6-7] [ஸ்வாமிகளுக்கெல்லாம் ஸ்வாமியாயிருப்பவன்] என்று மறைமுடிகள் முழங்கியபடியே அசைவனவும் அசையாதனவுமான அனைவர்க்கும் ஸ்வாமி என்று உணர்ந்திருக்கிருன். ஆக இப்படி பரத்வத்துக்கு (மேன்மைக்கு) உறுப்பான கு₃ணங்களை உடையவனுக இருப்பதோடன்றியில், ஸௌலப்₄யத்துக்கு (எளிமைக்கு) உறுப்பான கு₃ணங்களை உடையவனுக இருப்பவன் என்றும் உணர்ந்திருக்கிருன். "இவன் எனக்கு ஸ்வாமியன்ருே: என்னை உப₄யவிபூ₄திக்கும் புறம்பானவன் என்று நினைக்கிருனே? உடைமையான என்னை அடைவது இவனுக்கன்ருே பேறு" என்று வழக்குப் பேசலாம்படியான ஸர்வஸ்வாமித்வத்தை உடையவன் என்று உணர்ந்திருக்கிருன். "இப்படி இயற்கை உறவை உடையவனுயிருப்பதோடன்றியில் 'அறியாதன அறிவித்த அத்தா' [திருவாய் 2-3-2] என்கிறபடியே ஒன்றுமறியாத மூட₄னுயிருந்த எனக்கு நல்லறிவை உணர்த்திய மஹோபகாரகனுன ஆசார்யனன்ருே இவன்" என்றும் உணர்ந்திருக்கிருன். " 'ஸுஹ்ருத் நாராயண:' என்கிற படியே, நான் பல்லாயிரம் பிழைகள் செய்வதைப் பார்த்திருந்தும் காணும் கண் இல்லாதவனுய், எனக்கு நன்மையே விரும்பும் நண்பனன்ருே இவன்" என்றும் உணர்ந்திருக்கிருன். மிகத் தாழ்ந்தவையாய், துன்பம் கலந்தவையாய், அழிபவையாயிருக்கும் கணநேர இன்பங்களில் ஈடுபட்ட எனக்கு, எல்லையற்றதாய், குற்றமற்றதாய், நித்யமானதான பேரின்பக் கடலாயிருக்கும் தன்னைத் தானே காட்டிய பரமபோ₄க்₃யப்

चानन्यप्रयोजनं निरन्तरं भजनं तस्यास्ति, अतस्साधुरेव ; बहुमन्तव्यश्च । अस्मिन् व्यवसाये तत्कार्ये चोक्तप्रकारभजने संपन्ने सति तस्य आचार-

---

பொருளன்றோ இவன் என்றும் எண்ணியிருக்கிறான். இவனுடைய உறுதிப்பாடு இத்தகையதாகையாலே மிகச்சிறந்ததன்றோ என்றபடி. ''இப்படி எல்லாவகையான உறவுகளையும் உடையவனாகவும், ப்ராப்ய மாகவும், ப்ராபகமாகவும் என்னை அறிந்திருக்கும் இந்த உறுதிப் பாடு அனைவர்க்கும் கிடைக்க அரிதானது. இந்த உறுதிப்பாட்டினால் வேறு பயன் கருதாமல் எப்போதும் என்னிடம் ப₄க்திசெய்வதாகிற பெருமையும் இவனிடம் உள்ளது. ஆகையால் இவன் வைஷ்ணவர் களின் முன்னணியில் நிற்பவனே, அனைவராலும் கொண்டாடத்தக்க வனே. இத்தகைய உறுதிப்பாடும், அதனாலுண்டாகும் ப₄க்தியும் இவ னிடம் இருக்கும்போது, இவனிடமுள்ள து₃ராசாரம் கணிசிக்கத்தகாத தொரு குறையே. அதைக்கொண்டு இவனை அநாத₃ரிப்பது தகாது. நல்ல ஆசாரம் உடையவர்கள் சிலரிடமும் இத்தகைய உறுதிப்பாடு காணப் படவில்லையே. வயிரச் சுரங்கத்திலிருந்தாலும் கூழாங்கல்லைத் தூர எறிவதும், குப்பையில் கிடந்தாலும் மாணிக்கத்தை ஏற்றுக்கொள்வது மன்றோ சான்றோர்க்கு அழகு. 'ப₃ஹூநாம் ஜந்மநாமந்தே............ ஸ மஹாத்மா ஸுது₃ர்லப₄:' [கீ₃தை 7-19] என்னுமிடத்தில் நானும், இத்தகைய மஹாத்மா எனக்கும் கிடைத்தற்கரியவன் என்று கூறி யிருக்கிறேனே. ஆகையால் இவன் கொண்டாடத்தக்கவனே; இவ னிடம் எவனாவது குற்றம் கண்டானாகில் அவன் மிகத் தாழ்ந்தவ னாகிவிடுவான்'' என்பது எம்பெருமானின் திருவுள்ளம். ''யே ஜந்ம கோடிபி₄ஸ் ஸித்₃த₄ா: தேஷாமந்தே'த்ர ஸம்ஸ்தி₂தி: ||'' [பௌஷ்கர ஸம்ஹிதை 38-305] [எவர்கள் கோடிக்கணக்கான பிறப்புகளில் ஸ்ருதிஸ்ம்ருதிகளிலிருந்து ஜ்ஞான ப₄க்திகள் வளரப்பெற்றிருக்கிறார் களோ அவர்களே (ப்ரபத்தி ஶாஸ்த்ரமான) இப்பஞ்சராத்ரத்தில் நிலைநிற்பார்கள்.] ''அநேக ஜந்மஸம்ஸார சிதே பாபஸமுச்சயே | நாக்ஷீணே ஜாயதே பும்ஸாம் கோ₃விந்தா₃பி₄முகீ₂ ஸ்தி₂தி:'' [இந்த ஸம்ஸாரத்தில் எடுத்த பல பல ஜந்மங்களில் குவித்துவைத்த பாபக் கூட்டங்கள் அழியாதபோது மனிதனுக்கு 'கோ₃விந்த₃னே எல் லாம்' என்னும் உறுதிப்பாடு விளையாது.] '' ஜ்ஞாநம் ச வ்யவஸாயஶ்ச த்₃வௌ பரப்ரதிபாத₃கௌ | வ்யவஸாயாத்₃ருதே ப்₃ரஹ்ம நாஸாத₃யதி தத்பரம் ||'' [ப₄ாரதம் - மோக்ஷதர்மம் - 334-47. சுகரைக்குறித்து ஜனகவாக்யம்] [ஜ்ஞானமும் உறுதிப் பாடும் ஆகிய இரண்டும் பரமாத்மாவை அடைவிப்பவை. (இவற்

व्यतिक्रमस्स्वल्पवैकल्यमिति न तावताऽनादरणीयः, अपि तु बहुमन्तव्य एवेत्यर्थः ॥ ३० ॥

றில்) உறுதிப்பாடில்லாத ஜ்ஞானமாத்ரத்தினுல் பரம்பொருளை அடையமுடியாது] ''ஸ்ம்ருதஸ்ஸம்பா₄ஷிதோ வாபி பூஜிதோ வா த்₃விஜோத்தம'' [இதிஹாஸ ஸமுச்சயம் 32] [அந்தணர் தலைவரே! (து₃ராசாரமுடையவனுயினும் என் ப₄க்தன்) நினைக்கவும், பேசவும், பூஜிக்கவும் தக்கவன்]

''மத்₃ப₄க்தஜநவாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோத₃நம் ।
ஸ்வயமப்₄யர்ச்சநஞ்சைவ மத₃ர்த்தே₂ டம்ப₄வர்ஜநம் ॥
மத்கதா₂ஶ்ரவணே ப₄க்தி: ஸ்வரநேத்ராங்க₃விக்ரியா ।
மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி ॥
ப₄க்திரஷ்டவித₄ா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சே₂பி வர்த்ததே ।
ஸ விப்ரேந்த்₃ரோ முநி: ஶ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டி₃த: ॥
தஸ்மை தே₃யம் ததோ க்₃ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா₂
ஹ்யஹம் । [கா₃ருட₃ம் 219-6...9]

[(1) என் ப₄க்தர்களிடத்தில் வாத்ஸல்யம், (2) என்னை ஆராத₄னம் செய்வதை ஆமோதி₃த்தல், (3) தானே என்னைப் பூஜித்தல், (4) என் விஷயத்தில் ஆட₃ம்ப₃ரமற்றிருத்தல், (5) என் கதைகளைக் கேட்பதில் அன்பு, (6) (என் கதைகளைக் கேட்கும்போது) குரல் தழதழத்தும், கண்ணீர் மல்கியும், உடம்பு மயிர்க்கூச்செறிந்து கொண்டுமிருக்கை, (7) எப்போதும் என்னை நினைத்திருக்கை, (8) என்னிடம் வேறு ஒரு ப்ரயோஜனத்தையும் கேளாதிருக்கை—என்னும் இந்த எட்டுவித₄மான ப₄க்தியானது எந்த மிலேச்சனிடமும் காணப் படுகிறதோ, அவனே ப்₃ராஹ்மணஶ்ரேஷ்ட₂ன்; அவனே முனிவன்; அவனே த₄னவான்; அவனே பண்டி₃தன்; அவனுக்கு ஞானத்தை உபதே₃ஶிக்கலாம்; அவனிடமிருந்து ஞானோபதே₃ஶமும் பெறலாம். அவன் என்னைப்போல் பூஜிக்கத்தக்கவன்.] முதலான ப்ரமாணங்களும், திருமாலையில் ''மேம்பொருள்'' என்று தொடங்கும் 38ம் பாட்டிற்கு மேலேயுள்ள பா₄கவதப்ரபா₄வத்தை விளக்கும் பாட்டுக்களும் இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கவை. ஆக, ஆசாரத்தில் எத்தனை தாழ்ந்தவனுயினும், வேறு பயன் கருதாமல் எம்பெருமானிடம் அன்பு செலுத்துகின்றவன் தலைசிறந்த வைஷ்ணவனே என்று அருளிச்செய்தானுயிற்று. 30.

॥भा॥ ननु *नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः।
नाशान्तमानसो वाऽपि प्रज्ञानेनैनमाप्नुयात्॥ (क. २. २४) इत्यादिश्रुतेः
आचारव्यतिक्रम उत्तरोत्तरभजनोत्पत्तिप्रवाहं निरुणद्धीत्यत्राह—

क्षिप्रं भवति धर्मात्मा शश्वच्छान्तिं निगच्छति।
कौन्तेय! प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति॥३१॥

31. க்ஷிப்ரம் ப₄வதி த₄ர்மாத்மா ஶஶ்வச்சா₂ந்திம் நிக₃ச்ச₂தி ।
கௌந்தேய! ப்ரதிஜாநீஹி ந மே ப₄க்த: ப்ரணஶ்யதி ॥

(என் விஷயமான ஸ்வயம் ப்ரயோஜன ப₄க்தியைச் செய்பவன் து₃ராசாரம் உள்ளவனுயினும்) **க்ஷிப்ரம்**—விரைவிலேயே, **த₄ர்மாத்மா ப₄வதி**—(தடை நீங்கப்பெற்ற) ப₄க்தியோக₃த்திலேயே ஈடுபட்ட நெஞ்சுடையவனுகிருன். **ஶஶ்வச்சா₂ந்திம்** — நிலையான து₃ராசாரநிவ்ருத்தியை, **நிக₃ச்ச₂தி** — நன்கு அடைகிருன். **கௌந்தேய!** — குந்தீ புத்ரனே!, "**மே ப₄க்த:** — (ஸர்வேஶ்வரனுகிற) என்னுடைய ப₄க்தன், **ந ப்ரணஶ்யதி**—அழியமாட்டான்" (என்னும் இந்த அர்த்த₂த்தை) **ப்ரதிஜாநீஹி**—(நீயே) ப்ரதிஜ்ஞை செய்வாய்.

---

31. ஒல்லை யவன்றருமத் துற்ற வொருவனு
மல்லேவினைச் சாந்திதனை மன்னுமே—யெல்லேயில்சீர்க்
கௌந்தேயா வாங்கிதனைக் கட்டறுநீ யென்பத்தன்
போந்தே நசியான் புறத்து.

அவன்—என் விஷயமான ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்தியைச் செய்பவன் (து₃ராசாரமுடையவனுயினும்) **ஒல்லை**—விரைவிலேயே, **தருமத்து உற்ற ஒருவனும்**—(தடைநீங்கப் பெற்ற) ப₄க்தியோக₃த்திலேயே ஈடுபட்ட நெஞ்சையுடையவனுகிருன். **அல்லேவினை சாந்திதனை மன்னுமே**—து₃ராசார நிவ்ருத்தியை நிலையாக அடைவான். **எல்லேயில்சீர் கௌந்தேயா!** — கணக்கற்ற கு₃ணங்களேயுடைய குந்தீ

॥भा॥ मत्प्रियत्वकारितानन्यप्रयोजनमद्भजनेन विधूतपापतयैव समूलोन्मूलितरजस्तमोगुणः क्षिप्रं धर्मात्मा भवति — क्षिप्रमेव विरोधि-

---

புத்ரனே!, "என் பத்தன் — என்னுடைய பக்தன், புறத்துப் போந்தே — ஸதாசாரத்திற்குப் புறம்பாக நடப்பவனாயினும், நசியான் — அழிந்துவிடமாட்டான்" ஆங்கு இதனை — என்னும் இந்த அர்த்தத்தை, நீ கட்டறு — நீ ப்ரதிஜ்ஞை செய்வாயாக.

---

31. முன் ஶ்லோகத்தில் "மிகவும் துராசாரமுடையவனாயினும், எனது பக்தன் அனைவராலும் கொண்டாடத் தக்கவனே" என்று கூறினான். இதற்குமேல் "மற்றவர்களால் கொண்டாடத் தக்கவனாயிருந்தாலும் 'நாவிரதோ துஶ்சரிதாத் நாஶாந்தோ நாஸமாஹித: । நாஶாந்தமாநஸோ வாऽபி ப்ரஜ்ஞாநேநைநமாப்நுயாத் ॥' [கடோபநிஷத் 2-24] [துராசாரத்திலிருந்து நீங்காதவனாய், காமக்ரோதவேகமும் நீங்கப் பெறாதவனாய், (பரமாத்ம விஷயத்தில்) ஒருமுகப்படுத்தப்படாததும், (வெளிவிஷயங்களில் பாயாமல்) கட்டுப்படுத்தப்படாததுமான நெஞ்சை உடையவன் இந்தப் பரமாத்மாவை ஞானத்தின் மூலம் அடையமுடியாது.] என்று துராசாரம் ஜ்ஞானம் உண்டாவதையே தடுத்துவிடும் என்று வேதமும் ஓதுகையாலும், 'பாபம் ப்ரஜ்ஞாம் நாஶயதி க்ரியமாணம் புந: புந: । நஷ்டப்ரஜ்ஞ: பாபமேவ புநராரபதே த்விஜ ॥' [பாரதம் உத் 35-73] [பாபம் மறுபடிமறுபடி செய்யப்பட்டதாகில் அறிவை அழிக்கிறது. அந்தணரே! அறிவழிந்தவன் மறுபடியும் பாபத்தையே தொடங்குகிறான்] என்று ஸ்ம்ருதியும் இதை வலியுறுத்துகையாலும் அவனுடைய துராசாரம் மேலும் மேலும் பக்தி உண்டாகி வளர்வதைத் தடுத்துவிடுமே. ஆகையால் இவன் விரும்பிய பலனாகிற மோக்ஷத்ப்ராப்தியை அடையமுடியாதே" என்னும் கேள்வியெழ, அதற்கு பதில் கூறுகிறான் இந்த ஶ்லோகத்தில். (க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா) முன் ஶ்லோகத்தில் சொன்னபடி என்னிடம் ஈடுபட்டு ஸ்வயம்ப்ரயோஜந பக்தியைச் செய்வதால் பாபம் நீங்கப்பெற்று, ரஜஸ்தமோ குணங்கள் அடியோடு அழியப்பெற்று, விரைவிலேயே தடை நீங்கப்பெற்ற அங்கங்களோடு கூடிய பக்தியோகத்தில் ஈடுபட்ட நெஞ்சையுடையவனாகிறான். (க்ஷிப்ரம்) ஆசாரக் குறைபாடு இவனுடைய பக்தி நிறைவடைவதற்குத் தாமதத்தை ஏற்படுத்தமுடியாது என்று கருத்து. (தர்மாத்மா பவதி) "தர்மஸ்யாஸ்ய பரந்தப!" [கீதை 9-3] என்று இந்த அத்தியாயத்தின் தொடக்கத்திலேயே தர்மஶப்தமும்

रहितसपरिकरमद्भजनैकमना भवति। एवंरूपभजनमेव हि * धर्मस्यास्य परन्तप (३) इत्युपक्रमे धर्मशब्दोदितम्। शश्वच्छान्तिं निगच्छति— शाश्वतीं-अपुनरावर्तिनीं मत्प्राप्तिविरोध्याचारनिवृत्तिं गच्छति। कौन्तेय!

பக்தியைக் குறித்துப் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. முன்பின் ஸ்லோகங்களிலும் பக்தியைப் பற்றிய பேச்சே அடிக்கடி வந்துள்ளது. ஆகையால் இங்கும் 'தர்மஶப்தும்' பக்தியைக் குறிப்பதே உசிதம். வர்ணாஶ்ரமதர்மம் முதலானவற்றைக் குறிப்பதாகக் கொள்வது இந்த ப்ரகரணத்திற்குப் பொருந்தாது. ஆத்மஶப்தமும் இங்கு நெஞ்சைக் குறிக்கிறது. ''அநந்யமாநஸ:'' [கீதை 9-13] ''மந்மநா பவ'' [கீதை 9-34] என்று முன்பின் ஸ்லோகங்களில் பக்தியுடைய நெஞ்சைப் பற்றிப் பேசியிருப்பதால் இதுவே பொருந்தும். 'பக்தி உண்டாகி வளர்வதற்குத் தடையை எப்படி பக்தியே நீக்கும்?' எனில்: பக்தியின் தொடக்கநிலை பக்தி மேலும் வளர்வதற்குத் தடையான பாபங்களை நீக்குவதன் மூலம் பரிபூர்ண பக்தியை விளைக்கிறதாகையாலே குறையில்லை. '' பக்தியின் பெருமையாலே பாபங்கள் நீங்குகின்றன என்பது சரி; அநுதாபம் இல்லாமல் புத்திபூர்வகமாகத் தொடரும் துராசாரங்கள் பக்தியை எப்படித் தடுக்காமலிருக்கும்?'' எனில்: (ஶஶ்வச்சாந்திம் நிகச்சதி) என்னை அடைவதற்குத் தடையாயிருக்கும் துராசாரங்கள் என்றும் மறுபடி திரும்பி வராதபடி நீங்கப்பெறுகிறான். பக்தியின் ப்ரபாவத்தாலே துராசாரங்களும் விரைவில் அடியோடு நீங்கிவிடும் என்று கருத்து. (கௌந்தேய! ப்ரதிஜாநீஹி) குந்தீபுத்திரனே! நீயே பின் வரும் விஷயத்தைக்குறித்துப் பிரதிஜ்ஞைசெய். எவ்விஷயம்? எனில்: (ந மே பக்த: ப்ரணஶ்யதி) ஸர்வேஶ்வரனாகிற என்னிடம் பக்திசெய்யத் தொடங்கியவன் அதற்குத்தடையான ஆசாரமுடையவனாயினும் அழியமாட்டான் என்னும் விஷயத்தை நீயே ப்ரதிஜ்ஞை செய் என்றபடி. ''என் பக்தன் அழியமாட்டான் என்று நீ அறிந்து கொள்'' என்று ஜ்ஞானமாத்ரத்தை விதிப்பதாயிருந்தால் ''ஜாநீஹி'' என்பதே போதும்; 'ப்ரதி' என்னும் உபஸர்க்கம் தேவையில்லை; ''வாஸ்தோஷ்பதே! ப்ரதிஜாநீஹ்யஸ்மாந்''[யஜு 3-4-10-36] [வாஸ்தோஷ்பதியே! எங்களை அறிவாயாக] முதலானவிடங்களில் வேறு வழியில்லாமையாலே ''அறிவாய்'' என்றே பொருள்கொள்கிறோம். விஷயத்தைச் சொன்னாலே தெரிந்துகொள்ளக்கூடிய அர்ஜுனனுக்கு 'அறிந்துகொள்' என்று விதிப்பது பயனற்றதுமாகும். வெளிப்படையாக விளங்கும் ''ப்ரதிஜ்ஞை செய்'' என்னும் பொருள்—இவ்விஷ

त्वमेवास्मिन्नर्थे प्रतिज्ञां कुरु—मद्भक्तावुपक्रान्तो विरोध्याचारमिश्रोऽपि न नश्यति ; अपि तु मद्भक्तिमाहात्म्येन सर्वं विरोधिजातं नाशयित्वा शाश्वतीं विरोधिनिवृत्तिमधिगम्य क्षिप्रं परिपूर्णभक्तिर्भवतीति ॥ ३१ ॥

யம் அசைக்கமுடியாதபடி அறுதியிடப்பட்டது எனக்காட்டுகையால் இவ்விடத்தில் தேவையானதுமாகும். ஆகையால் 'ப்ரதிஜ்ஞை செய்' என்றே பொருள்கொள்ளப்பட்டது. தான் ப்ரதிஜ்ஞை செய்யாமல், "நீயே ப்ரதிஜ்ஞை செய்" என்றது—"நான் சொல்லு வதை நீ உறுதியாகக்கொண்டு, உனக்கு வேண்டியவர்களுக்கெல் லாம் ப்ரதிஜ்ஞைசெய்து வெளிப்படுத்து" என்று கூறுவதன்மூலம் இவ்வர்த்த₂ம் மிகவும் உறுதியானது எனக்காட்டுகிறது; மேலும், " 'கண்ணனை ஆயுத₄மெடுக்கவைப்பேன்' என்று என் அடியானன பீ₄ஷ்மன் சொன்ன வார்த்தையை மெய்யாக்குவதற்காக, 'ஆயுத₄ மெடுக்கமாட்டேன்' என்னும் என் வார்த்தையை இந்த பா₄ரதப் போரிலேயே பொய்யாக்கிக்கொள்ளப்போகிறவன் நான்; ஆகையால், நான் ப்ரதிஜ்ஞை செய்தால் 'பொய்யாகக் கூடியதோ?' என்றும் பலர் ஐயமுறலாம்; இந்த ஐயம் ஏற்படாமலிருப்பதற்காக என்பக்தனை நீயே இவ்வர்த்த₂த்தை ப்ரதிஜ்ஞைசெய்" என்னும் கருத்தையும் உணர்த்துகிறது. "கௌந்தேய!" என்னும் விளி "நீ பரமஞான முடையவளாய், என் அத்தையுமான குந்தியின் பிள்ளையாகையாலும் நீ ப்ரதிஜ்ஞை செய்ததை நான் பொய்யாகவிடமாட்டேன்" என்னும் கருத்தைக் காட்டுகிறது. (மே ப₄க்த: ந ப்ரணஶ்யதி) என் ப₄க்தி யைத் தொடங்கியவன், அதற்குத் தடையான ஆசாரத்தோடு கூடிய வனுயினும் அழியமாட்டான், து₃ராசாரமுடையவனுய் ப₄க்தியைத் தொடங்கியவனைப் பற்றியே முன் ஶ்லோகத்தில் "அபி சேத் ஸுது₃ரா சார:" என்று பேசப்படுகிறதாகையாலும், ப₄க்தி நிறைவடைந்த வனுக்கு அழிவு ஏற்பட இடமில்லாமையாலும் இங்கு ப₄க்தன் என் பது ப₄க்தியைத் தொடங்கியவனைக் காட்டுகிறது. ப₄க்தியைத் தொடங்கியவனையும் 'ப₄க்தன்' என்றழைக்கத் தட்டில்லையன்றே. (ந ப்ரணஶ்யதி) அழிவதில்லை; இங்கு 'ஶரீரம் அழிவதில்லை' என்று கொள்வது அஸம்ப₄விதம்; 'ஆத்மா அழிவதில்லை' என்று கூறுவதும் இப்ரகரணத்திற்குத் தேவையில்லை. ஆகையால், "முற்பாதியில் கூறப் பட்டபடி தடைகள் அழியப்பெறுகிருனுகையால், ப₄க்தி நிறைவடை யாமையாகிற அழிவு இவனுக்கு ஏற்படுவதில்லை" என்றே இதற்குக் கருத்துரைக்கவேண்டும். "என்னிடம் அவன் செய்யும் ப₄க்தியின் பெருமையாலே, து₃ராசாரம் முதலான தடைகள் அனைத்தையும்

அழித்து. தடைகள் மறுபடியும் திரும்பிவராதபடி நீங்கப்பெற்று விரைவிலேயே ப₄க்தி நிறைவடையப்பெறுவான்'' என்று சொல்லிற்றாயிற்று. து₃ராசாரமுடையவனாயினும் ப₄க்தன் ப₄க்திகாரணமாகவே அந்தத் தீயவொழுக்கம் நீங்கப்பெற்று ப₄க்திபூர்த்தியைப் பெற்று உயர்கதியடைவான் என்னும் விஷயத்தைப் பின்வரும் இதிஹாஸ புராணவ்ருத்தாந்தங்கள் விளக்குகின்றன:— (1) மஹாப₄ாரதம்-ஶாந்திபர்வம் (மோக்ஷத₄ர்மம்) 345ம் அத்தியாயத்தில் கூறப்பட்ட உபரிசரவஸுவ்ருத்தாந்தம்:— க்ருதயுக₃த்தில் பாஞ்சராத்ரத₄ர்மத்தை அநுஷ்டி₂க்கும் பரமபா₄க₃வதனான ஓரரசன் ப₄க்தி மஹிமையினால் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் வல்லமைபெற்றிருந்தமையால் உபரிசரவஸு எனப் பெயர்பெற்றிருந்தான். ஒரு சமயம் தே₃வர்களுக்கும் ரிஷிகளுக்கும் யாக₃ம் செய்துகொண்டிருந்தபோது விவாத₃ம் ஏற்பட்டது. 'க்ருதயுக₃த்தில் பிஷ்டபஶு (மாவினால் செய்யப்பட்ட ஆடு) கொண்டே யாக₃ம் செய்யவேண்டும்' என்னும் உண்மையைக் கூறினர் ருஷிகள்; மாம்ஸத்தில் ஆசையாலே '' உயிரோடுள்ள ஆட்டைக்கொண்டே யாக₃ம்செய்யவேண்டும்'' என்றனர் தே₃வர்கள்; இவ்விவாத₃த்தில் இருதரப்பினரும் உபரிசரவஸுவை மத்₄யஸ்த₂னாகவைத்து நியாயம் கேட்டனர். உபரிசரவஸு தே₃வர்களிடம் பக்ஷபாதத்தால் 'உயிருள்ள ஆட்டைக்கொண்டே யாக₃ம் செய்யவேண்டும்' என்று பொய் சொல்லிவிட்டான். 'இப்படிப் பொய் சொன்னதால் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் வல்லமை நீங்கி பூ₄மியில் மஹாத்₃வாரமொன்றில் விழுவாய்' என்று ரிஷிகளால் சபிக்கப்பெற்று அப்படியே விழுந்துவிட்டான். அதற்குப்பின் அவனது விஷ்ணுப₄க்தி மஹிமையினால் விரைவிலேயே எம்பெருமான் க₃ருட₃னை அனுப்பி அவனைக்கொண்டு வஸுவை பூ₄மித்₃வாரத்திலிருந்து தூக்கி ஆகாயத்தில் மறுபடி ஸஞ்சரிக்குமவனாக்கினான் என்னும் வரலாறு. (2) '' உபமாநமஶேஷாணாம் ஸாதூ₄நாம் யஸ்ஸதா₃ப₄வத் '' [வி-பு 1-15-146] [எல்லா நல்லோர்களுக்கும் எப்போதும் உபமானமானான் ப்ரஹ்லாத₃ன்] எனப் புகழ்பெற்ற ப்ரஹ்லாத₃னும் திரிவிக்கிரமன் மாவலியை வஞ்சித்து உலகளந்தபோது அவனோடு போர் புரிந்து. விரைவிலேயே அந்த பா₄க₃வதாபசாரத்திலிருந்து நீங்கப் பெற்றான் என்னும் புராணக்கதை. (3) பரமபாபியான க்ஷத்ரப₃ந்து₄ எம்பெருமானுடைய கோ₃விந்த₃ நாமஸங்கீர்த்தன ப்ரபா₄வத்தால் மறுஜன்மத்தில் பூர்வஜன்மஸ்மரணம் ஏற்பட்டு, அதனால் வைராக்₃யம் விளைந்து எம்பெருமானை ஶரணமடைந்து முக்திபெற்றான் என்று விஷ்ணுத₄ர்மத்தில் விளக்கப்பெற்ற கதை. இது '' மொய்த்தவல்

मां हि पार्थ व्यपाश्रित्य येऽपि स्युः पापयोनयः।
स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यान्ति परां गतिम्॥ ३२॥
किं पुनर्ब्राह्मणाः पुण्या भक्ता राजर्षयस्तथा।
अनित्यमसुखं लोकमिमं प्राप्य भजस्व माम्॥ ३३॥

**32. மாம் ஹி பார்த்த₂! வ்யபாஶ்ரித்ய யேऽபி ஸ்யு: பாபயோநய: ।
ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா₂ ஶூத்₃ரா: தேऽபி
யாந்தி பராங்க₃திம் ॥**

**33. கிம் புநர் ப்₃ராஹ்மணா: புண்யா ப₄க்தா ராஜர்ஷயஸ்ததா₂ ।
அநித்யமஸுக₂ம் லோகமிமம் ப்ராப்ய ப₄ஜஸ்வ மாம் ॥**

பார்த்த₂ — குந்தீபுத்திரனே! **ஸ்த்ரிய:** — ஸ்த்ரீகளும், **வைஶ்யா:**—வைஶ்யர்களும், **ததா₂ ஶூத்₃ரா:** — அவ்வண்ணமே ஶூத்₃ரர்களுமான, **பாபயோநய: யே அபி ஸ்யு:**—பாபத்தினால் தாழ்ந்த பிறப்பை எவர்கள் எடுத்திருக்கிறார்களோ, **தே அபி**—அவர்களும், **மாம்**—என்னை, **வ்யபாஶ்ரித்ய**—சிறப்பாக ஆஶ்ரயித்து, **பராம் க₃திம்**—மேலான க₃தியை, **யாந்தி ஹி**—அடைகிறார்களன்றோ. **புண்யா:**—புண்யம் செய்து சிறந்த பிறப்பெடுத்தவர்களான, **ப்₃ராஹ்மணா:**—அந்தணர்களும், **ராஜர்ஷய: ததா₂**—ராஜரிஷிகளும், **ப₄க்தா:**—என்னிடம் ப₄க்தி செய்தார்களாகில் (மோக்ஷமடைவார்கள் என்பதை) **கிம்புந:**—சொல்லவும் வேண்டுமோ? (ஆகையால்) **அநித்யம்** — நிலையல்லாததாய், **அஸுக₂ம்**—துன்பம் நிறைந்ததான, **இமம் லோகம்**—இவ்வுலகை, **ப்ராப்ய** — அடைந்திருப்பவனாகையாலே, **மாம் ப₄ஜஸ்வ**—என்னிடம் ப₄க்தி செய்வாயாக.

வினையுள்நின்று மூன்றெழுத்துடைய பேரால் கத்திரபந்துமன்றே பராங்கதி கண்டு கொண்டான்" [திருமாலை 4] என்னும் பாசுரத்தின் வியாக்கியானத்தில் விரிவாக எடுக்கப்பட்டுள்ளது. ஆக, இம்மூன்று (29,30,31) ஶ்லோகங்களால் ஜாதி, ஆகாரம், ஸ்வப₄ாவம், ஞானம், ஒழுக்கம் ஆகியவற்றால் உயர்ந்தாரோடு தாழ்ந்தாரோடு வாசியற அனைவரும் தன்னை ஆஶ்ரயித்து மோக்ஷஸித்₃தி₄ பெறலாம் என நிரூபித்தானாயிற்று. 31.

32. பார்த்தவெனைப் பற்றினுற் பாவம் பயில்பிறவிச்
சோர்த்தபெண் வைச்சியருஞ் சூத்திரரும்—பேர்த்து
வினையடையார் வீடெய்தி மேற்கதியா மின்பந்
தனையடைவர் சென்று தழைத்து.

33. ஆனுத புண்ணியத்த ரன்பரா மந்தணர்கள்
ஞானு திகவரசர் நண்ணெளிது—தானுமால்
மாயுமித் துன்புலகை மன்னியநீ யென்னையடைந்
தாயுமித் தன்மையறி யாங்கு.

பார்த்த-குந்தீபுத்திரனே! **பாவம் பயில் பிறவி சோர்த்த**-பாவத்தினுல் ஏற்பட்ட பிறப்பையடைந்து சோர்வுற்ற, **பெண்**—ஸ்த்ரீகளும், **வைச்சியரும்**—வைஶ்யர்களும், **சூத்திரரும்**—ஶூத்ரர்களும், **எனை**—என்னை, **பற்றினுல்**—ஆஶ்ரயித்தால், **பேர்த்து**—மறுபடியும், **வினை அடையார்**—பாபத்தையும், அதுகாரணமாக ஏற்படும் ஸம்ஸாரத்தையும் அடையாமல், **சென்று**—(அப்ராக்ருத லோகத்திற்குச்) சென்று, **தழைத்து**—சிறப்புற்று, **வீடு எய்தி**—மோக்ஷத்தை அடைந்து, **மேற்கதியாம் இன்பம் தனை**—பரமாத்மாநுபவமாகிற பேரின்பத்தை, **அடைவர்**—அடைவார்கள். **ஆனுத புண்ணியத்தர்**—அழியாத புண்ணியம் செய்து சிறந்த பிறப்பெடுத்தவர்களாய், **அன்பராம்**—என்னிடம் பக்தியையும் செய்யும், **அந்தணர்கள்**—பிராம்மணர்களும், **ஞானுதிக அரசர்**—அறிவிற் சிறந்த அரசர்களான ராஜரிஷிகளும், **நண்ணெளிது தானுமால்**—என்னை அடைவது மிக எளிதன்றோ; **மாயும்**—நிலைநில்லாததாய், **இத்துன்புலகை**—துன்பமயமான இவ்வுலகை, **மன்னிய நீ**—அநாதிகாலமாகச் சேர்ந்திருக்கும் நீ, **ஆங்கு**—மோக்ஷத்தின் பொருட்டு, **என்னை அடைந்து ஆயும் இத்தன்மை**—என்னை ஆஶ்ரயித்து பக்தி செய்வதாகிற இத்தன்மையை, **அறி**—அறிவாயாக.

32,33. "அபி சேத் ஸுதுராசார:" என்னும் ஶ்லோகத்தில்—பிறவியெடுத்தபின் பாபபலமாகத் தீயவொழுக்கமுடையவனை வனைப் பற்றிச் சொல்லப்பட்டது. அடுத்த ஶ்லோகத்தில் அவன்

॥ भा ॥ स्त्रियो वैश्याश्शूद्राश्च पापयोनयोऽपि मां व्यपाश्रित्य परां गतिं यान्ति; किं पुनः पुण्ययोनयो ब्राह्मणा राजर्षयश्च मद्भक्तिमास्थिताः।

விரைவிலேயே பக்திவைபவத்தால் நல்லொழுக்கமுடையவனுகிவிடு வான் என்று சொல்லப்பட்டது. இவ்விரு ஶ்லோகங்களிலும்—முன் பிறப்புக்களில் மிகுந்த பாபம் செய்து, அதனுல் தாழ்ந்த பிறப்பையெடுத்திருப்பவர்களும் என்னை ஆஶ்ரயிப்பதாலேயே முற் கூறிய தலைசிறந்த மோக்ஷமாகிற பலனை அடைவார்கள் எனக் கூறி, இப்படியிருக்கும்போது புண்ணியமான பிறப்பையெடுத்த வர்கள் பூர்ணபக்தி செய்தார்களாகில் தலைசிறந்த பலனைப் பெறுவார்கள் என்பது சொல்லாமலே விளங்கும் என விளக்கி, பிறப்பு ஒழுக்கம் முதலானவற்றுல் தலைசிறந்து விளங்கும் நீ பலனில் ஐயமற்றவனுய் என்னிடம் பக்தி செய்வாயாக என்கிருன். (ஸ்த்ரியோ வைஶ்யா: ததா ஶூத்ரா: யே பாபயோநயோऽபி ஸ்யு:) முற்பிறவியில் செய்த பாபம் காரணமாக, வேதத்தில் முழுவதுமோ ஓரளவுக்கோ அதிகாரமில்லாத ஸ்த்ரீகள், வைஶ்யர்கள், ஶூத்ரர்கள் ஆகிய தாழ்ந்த பிறவிகளை எடுத்திருப்பவர்களும். ஸ்த்ரீ ஶூத்ரர்களுக்கு வேதம் முழுவதிலும், அதில் விதிக்கப்பட்ட பக்தி யோகத்திலும் அதிகாரமில்லை; முதல் மூன்று வர்ணங்களில் ஒன்றில் பிறந்தவனுகையாலே வேதத்திலும், பக்தியோகத்திலும் அதிகாரமுள்ளவனுயினும், ஸத்ரயாகத்தில் வைஶ்யனுக்கு அதி காரமில்லையாகையாலே, அவனும் ஓரளவுக்குத் தாழ்ந்தவனுகையால் பாபயோனிகளோடு கூடப் படிக்கப்படுகிருன். ருத்விக்குகளுக்கே ஸத்ரயாகம் செய்ய அதிகாரமுண்டு; ப்ராஹ்மணர்களே ருத்விக்குக ளாயிருக்கமுடியும்; "தஸ்மாத்வாஜபேயயாஜீ ஆர்த்விஜீந:" [யஜு 1-3-2-14] என்னும் வேதவாக்யத்தில் க்ஷத்ரியனுக்கும் ஸத்ர யாகத்தில் அதிகாரம் உண்டென்று கூறப்பட்டதாகையால் ப்ராஹ்மண க்ஷத்ரியர்களுக்கே ஸத்ரயாகத்தில் அதிகாரமுண்டு என்பது இங்கு குறிக்கொள்ளத்தக்கது. (மாம் வ்யபாஶ்ரித்ய) என்னைச் சிறப்பாக ஆஶ்ரயித்து; பக்தியோகம் செய்ய அதிகாரமுள்ள வைஶ் யர்கள் அதைச் செய்வதன்மூலமும், அனைவருமே ஸ்வயம் ப்ரயோஜன பக்தியில் ஈடுபட்டு எம்பெருமானையே உபாயமாக உறுதிகொள்வ தாகிற ப்ரபத்தியின் மூலமும் ஆஶ்ரயிப்பது இங்கு சிறப்பாக ஆஶ்ர யிப்பது எனப்படுகிறது. (தேऽபி பராம் கதிம் யாந்தி) அவர்களும் மேலான மோக்ஷத்தை அடைவார்கள். "கத்திரபந்துமன்றே பராங்கதி கண்டு கொண்டான்" [திருமாலை 4] என்ருர் தொண்டரடிப்பொடிகளும்.

अतस्त्वं राजर्षिरस्थिरं तापत्रयाभिहततया असुखं चेमं लोकं प्राप्य वर्तमानो मां भजस्व॥३२॥३३॥

(யாந்தி ஹி) பாபயோநிகளில் பிறந்தவர்களும் என்னைப்பற்றினார்களாகில் பரமபத₃த்தை அடைகிறார்கள் என்பது சபரி, அஜாமிளன், த₄ர்மவ்யாத₄ன், க₄ண்டாகர்ணன், த₃தி₄ப₄ாண்ட₃ன், க₃ஜேந்த்₃ரன், க்ஷத்ரப₃ந்து₄ முதலானவர்கள் விஷயத்தில் இதிஹாஸபுராணப்ரஸித்₃த₄மன்றோ என்று கருத்து. (பார்த்த₂!) குந்தீபுத்ரனான நீ புண்ணிய யோனியிலே பிறந்தவனாகையாலே என்னைப்பற்றி, பரமபத₃த்தைப் பெறுவது எளிது என்று கருத்து.

இரண்டாவது ஶ்லோகத்தில் இக்கருத்தை விவரித்துக்கொண்டு, தன்னிடம் ப₄க்திசெய்யும்படி விதி₄க்கிறான். (கிம் புநர் ப்₃ராஹ்மணா: புண்யா ப₄க்தா ராஜர்ஷயஸ் தத₂ா) இப்படி பாபயோனிகளே என்னை ஆஶ்ரயித்து, பரமபத₃த்தையடையும்போது ப்₃ராஹ்மணர்களும் ராஜரிஷிகளுமான புண்யயோனிகள் (புண்யத்தால் ஏற்பட்ட பிறப்பையுடையவர்கள்) என்னிடம் ப₄க்தி செய்தார்களாகில் பரமபத₃த்தையடைவார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? 'பாபயோநய:' என்று முன் ஶ்லோகத்தில் சொன்னதற்கு எதிர்த்தட்டாகையாலே இங்குள்ள புண்யஶப்₃த₃ம் புண்யயோனிகள் என்று பொருள்படுகிறது. 'கிம்புந:' (சொல்லவும் வேண்டுமோ) என்றது அவர்கள் மிக எளிதில் தன்னையடைவார்கள் என்று காட்டுவதற்காக. 'ராஜர்ஷய:' என்று ராஜரிஷிகளை எடுத்தது—ராஜரிஷியான அர்ஜுனனும் புண்ய யோனிகளில் சேர்ந்தவனாகையாலே, தன்னிடம் ப₄க்திசெய்து எளிதில் தன்னை அடையலாம் என்று உணர்த்துவதற்காக. ஆக இதுவரையில் ஸ்வயம்ப்ரயோஜனமாக ப₄க்தி செய்பவர்களின் பெருமையையும், ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்தியின் பெருமையையும் விரிவாக விளக்கிய பின்பும், அர்ஜுனனும் ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்தியில் ஈடுபட்டு "உன்னிடம் ப₂லனை எதிர்பாராத ப₄க்தியைச் செய்ய விரும்பும் நான் நீ சொன்னபடி போர்புரிய இசைகின்றேன்" என்று சொல்லக் காணாமையாலே, இவனுக்கு ஸாத₄னப₄க்தியை உபதே₃ஶித்து, அதற்கு அங்க₃மாய், க்ஷத்ரியத₄ர்மமான யுத்₃த₄த்திலே இழியும்படி செய்யலாம் என்று எண்ணி ஸாத₄னப₄க்தியை விதி₄க்கிறான் ஶ்லோகத்தின் பிற்பாதியாலே. (அநித்யம் அஸுக₂ம் லோகமிமம் ப்ராப்ய) ஆகையால் ராஜரிஷியான நீயும் நிலைநில்லாததாய், ஆத்₄யாத்மிகம் (சரீர ஸம்ப₃ந்த₄த்தால் வருவது), ஆதி₄பௌ₄திகம்

॥ भा ॥ भक्तिस्वरूपमाह —

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु।
मामेवैष्यसि युक्त्वैवमात्मानं मत्परायणः॥ ३४॥

॥ इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु राजविद्याराजगुह्ययोगो नाम नवमोऽध्यायः॥ ९॥

(பஞ்சபூ₄தங்களால் வருவது), ஆதி₄தை₃விகம் (தெய்வச் செயலால் வருவது) என்னும் மூன்று வகைப்பட்ட தாபங்களால் பீடிக்கப்பட்டிருக்கையாலே துன்பமயமாயிருப்பதாய், மிகத் தாழ்ந்ததான இந்த உலகத்தில் பிறவி எடுத்திருப்பவனாகையாலே. ராஜரிஷி ஶப்₃த₃த்தாலே ஸாத₄னப₄க்தியைச் செய்வதற்கு இவனுக்கு ஸாமர்த்₂யம் (தகுதி) உண்டென்று உணர்த்தப்பட்டது. 'அநித்யம்...... ப்ராப்ய' என்னும் தொடராலே ப₄க்தியின் ப₂லமான மோக்ஷத்தைப் பெறுவதற்கு அர்த்தி₂த்வம் உண்டென்று காட்டப்படுகிறது. அர்த்தி₂த்வ ஸாமர்த்₂யங்களை உடையவனன்றோ ஸாத₄னத்தில் இழிய முடியும். (அநித்யம் இமம் லோகம்) "ஸததவிக்ரியா" [வி·பு] என்கிறபடியே எப்போதும் விகாரத்தை அடைந்துகொண்டிருக்கையாலே நிலைநில்லாததான இந்த லோகத்தை. (அஸுக₂ம் இமம் லோகம்) ஸுக₂த்துக்கு எதிர்த்தட்டான துன்பமயமான இவ்வுலகை. ந ஸுக₂ம் — அஸுக₂ம். விரோதி₄ என்னும் பொருளில் 'நஞ்' வந்துள்ளது. இங்கு அநுப₄விக்கப்படும் சிறு சிறு இன்பங்களும் துன்பத்தை விளைப்பவையாகையாலே துன்பமேயாகின்றன என்று கருத்து. (இமம் லோகம்) நம் கண்ணெதிரே காட்சியளிக்கும் மிகத் தாழ்ந்ததான இவ்வுலகத்தை. (ப்ராப்ய) இதையடைந்து, இதில் இருந்துகொண்டு துன்பத்தை அநுப₄விக்கிறவனாகையாலே என்று கருத்து. (மாம் ப₄ஜஸ்வ) என்னிடம் ப₄க்தியைச் செய்வாயாக. இவ்வண்ணமாக, நிலைநில்லாததாய், துன்பமயமானதாய், மிகத்தாழ்ந்ததான இவ்வுலகைக் காணுந்தோறும் என்னிடம் உறுதியான ஈடுபாடு இல்லாதிருந்த நிலைநீங்கி, நீ ப₄க்திசெய்யத் தொடங்குவாய் என்று கருத்து. ஆக, 'பாபப்பிறவியை எடுத்தவர்களே என்னைப்பற்றிப் பரமபத₃த்தையடைந்திருக்கும்போது, புண்யப்பிறவியை எடுத்த ராஜரிஷியான நீ, நிலைநில்லாததாய், துன்பமயமானதாய், மிகத்தாழ்ந்ததான இவ்வுலகைவிட்டு நீங்கி, பரமபத₃த்தையடைவது எளிதாகையால், அதற்காக என்விஷயமான ஸாத₄னப₄க்தியைச் செய்யவேண்டும்' என்று ப₄க்தி விதி₄க்கப்பட்டதாயிற்று. 32,33.

34. மந்மநா ப₄வ மத்₃ப₄க்தோ மத்₃யாஜீ மாம் நமஸ்குரு।
மாமேவைஷ்யஸி யுக்த்வைவம் ஆத்மாநம் மத்பராயண: ||

மந்மநா ப₄வ—என்னிடத்தில் இடைவிடாமல் நெஞ்சு செலுத்தியவனுக ஆவாயாக. **மத்₃ப₄க்த: ப₄வ**—(அதிலும்) என்னிடம் மிகவும் பிரீதியுடையவனுக ஆவாயாக. **மத்₃யாஜீ ப₄வ**—(அதிலும்) என்னே ஆராதி₄ப்பவனுக ஆவாயாக. **மாம்**—என்னே, **நமஸ்குரு**—வணங்குவாயாக. **மத்பராயண:**—என்னேயே மேலான ஆஶ்ரயமாகக் கொண்டவனுய், **ஏவம்**—இவ்வண்ணமாக, **ஆத்மாநம் யுக்த்வா**—நெஞ்சைப் பழக்குவதன்மூலம், **மாம் ஏவ ஏஷ்யஸி**—என்னேயே அடைவாய்.

---

34. என்னலஞ்செய் தென்மனனு யென்னேயிறைஞ்
சென்னேவணங்
கென்னலஞ்சேர்ந் துன்னேயெழில் யோகத்தின்—மன்ன
தென்பற்றே மீபயனு வேய்ந்தநீ யென்னேயே [வமைத்
வன்பற்றுய் வந்தடைதி வாய்ந்து.

என் நலம் செய்து—என்னிடம் அன்பு பூண்டவனுய், **என் மனனுய்**-என்னிடம் இடைவிடாமல் நெஞ்சு செலுத்தி, **என்னே இறைஞ்சு** — என்னே ஆராதி₄ப்பாயாக. **என்னே வணங்கு**—என்னே வணங்குவாயாக. **என் பற்றே மீபயனு ஏய்ந்த நீ**—என்னேப் பற்றியிருப்பதையே மேலான பயனுகக் கொண்டிருக்கும் நீ, **உன்னே**—உன்னே, **என் நலம் சேர்ந்து எழில்யோகத்தின்** — என்னிடம் ப₄க்தியோடே சேர்ந்து அழகியதாயிருக்கும் ப₄க்தியோக₃த்தில், **மன்ன அமைத்து**—நிலேயாக ஈடுபடுத்தி, **என்னேயே வன்பற்றுய்** — என்னேயே வலிய ஆஶ்ரயமாகக்கொண்டு, **வாய்ந்து வந்தடைதி** — பொருந்தி வந்தடைவாய்.

---

34. சென்ற ஶ்லோகத்தின் இறுதியில் 'ப₄ஜஸ்வ' என்று விதி₄க்கப்பட்ட ஸாத₄னப₄க்தியின் தனித்தன்மைகளே விவரிக்கிருன் இந்த ஶ்லோகத்தில். (மந்மநா ப₄வ) என்னிடத்தில் நெஞ்சு செலுத்தியவனுக ஆவாயாக. ப₄க்தியை விவரிக்கும் இந்த ஶ்லோ

॥भा॥ मन्मना भव—मयि सर्वेश्वरेश्वरे, निखिलहेयप्रत्यनीककल्याणैकताने, सर्वज्ञे, सत्यसङ्कल्पे, निखिलजगदेककारणे, परस्मिन्

கத்தில் ஆறு இடங்களில் 'மாம், மத்' என்னும் பத3ங்களின்மூலம் தன்னைக் குறித்துக்கொள்கிருன் எம்பெருமான். ஆகையால் வேதா3ந்தங்களில் ஸாத4னப4க்தியை விதி4க்கும் பரவித்3யைகளில் நூற்றுக் கணக்கான வாக்யங்களில் உபாஸிக்கத்தக்கவையாகவும், அதற்கு உறுப்பானவையாகவும் ஓதப்படும் தனது ஸ்வரூபம், ரூபம், கு3ணங்கள், விபூ4திகள் முதலானவையனைத்தையும் இந்த ஆறு அஸ்மச்ச2ப்33ங்களாலே உணர்த்துகிருன் என்று விளங்குகிறது. அப்படி உணர்த்தப்படும் பெருமைகள் எவையெனில்: (1) ''தமீஸ்வராணும் பரமம் மஹேஸ்வரம்'' [ஶ்வே 6-7] [ஈஸ்வரர்களுக்கெல்லாம் மேலான மஹேஸ்வரனை அவனை] ''ந தஸ்யேஶே கஸ்சந'' [தை·நா 1-9] [அப்பரம்பொருளை நியமிக்கும் ஈஸன் எவனுமில்லை] முதலான ப்ரமாணங்களில் சொல்லப்படும் ஸர்வேஸ்வரனை என்னிடமே ப4க்திசெலுத்தவேண்டும். இப்படி அனைவரையும் நியமிக்கவல்லவனுயிராதவனால் தலைசிறந்த ப2லனை அளிக்க இயலாதன்ருே. இந்த அண்ட3த்தை நியமித்தபோதிலும் மற்ற அண்ட3ங்களையும் நித்யவிபூ4தியையும் நியமிக்கவல்லமைபெருத பிரமன் சிவன் முதலானவர்களாலும் மோக்ஷத்தை அளிக்கமுடியாதன்ருே. இதனுல் தானே ''க்ஷேத்ரஜ்ஞஸ்யேஶ்வரஜ்ஞாநாத்3விஶுத்3தி4: பரமா மதா'' [யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி 3.94] [ஜீவனுக்கு ஈஸ்வரனை அறிவதாலேயே மேலான பரிஶுத்3தி4யாகிற மோக்ஷம் ஏற்படுகிறது] என்று சொல்லப்படுகிறது என்று கருத்து. (2) எல்லாத் தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாயிருப்பவனுய், நற்கு3ணங்களுக்கெல்லாம் ஒரே கொள்கலனுயிருப்பவனை என்னிடமே ப4க்திசெலுத்த வேண்டும். தாழ்வுகளை உடையவன் மற்றவர்களைக் கடைத்தேற்ற முடியாது. நற்கு3ணங்களற்றவனும் நற்பயனையளிக்க முடியாது. ஆகையால் இவர்கள் ப4க்தி செலுத்தத் தகாதவர்களாவர். உப4யலிங்க3ங்கள் எனப்படும் இவ்விருதன்மைகளை உடைய பரம்பொருளே உபாஸிக்கத்தக்கது என்று ஶாஸ்த்ரங்கள் முழங்குகின்றன. இவ்விரு பெருமைகளே — தாழ்வுடையவர்களும், நற்கு3ணங்கள் அனைத்தையும் பெற்றிராதவர்களுமான பிரமன், சிவன் முதலான மற்ற தே3வர்களைக் காட்டிலும் ஸ்ரீமந்நாராயணனை வேறுபடுத்தித் தருகின்றன. ஶாஸ்த்ரங்களில் பரம்பொருளைப் பற்றிக்கூறும்போது எல்லாக் கல்யாணகு3ணங்களையும் உடையவனுகப் பல வாக்யங்கள்

கூறுகின்றன. நிர்குணம் (குணமற்றவன்) என்றும் சில வாக்யங்கள் பொதுவாகச் சொல்லுகின்றன. வேறு சில வாக்யங்கள் தாழ்ந்த குணங்களும், ப்ராக்ருத குணங்களான ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்க ளும் பரமாத்மாவிடமில்லை என்று கூறுகின்றன. முதலிரண்டுவகை வாக்யங்களில் மேலெழத் தோன்றும் முரண்பாட்டைப் பரிஹரிக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. வேதமும் பரம்பொரு ளிடம் இருப்பதாகத் தானே சொன்ன கல்யாணகுணங்களை நிர்குண வாக்யங்களாலே தானே தள்ளுகிறது என்று அத்வைதிகள் கூறுவது பொருந்தாது. ஆகையால் நிர்குணம் என்று இரண்டாவது வகை வாக்யங்களில் பொதுவாகத் தள்ளப்படும் குணங்கள் மூன்றுவது வகை வாக்யங்களில் குறிப்பிட்டுத் தள்ளப்படும் தாழ்ந்த குணங்க ளும் ப்ராக்ருத குணங்களுமே ஆகவேண்டும் என்பது ஸாமான்ய விசேஷந்யாயத்தைக்கொண்டு பார்க்கும்போது விளங்கும். ஆகை யால்தான் தாழ்வுகள் அற்றிருப்பதோடன்றியில் பிறருடைய தாழ்வு களையும் போக்கக்கூடியவனும், கணக்கற்ற கல்யாணகுணங்களை உடையவனுகையாலே அளவற்ற இனிமையை உடையவனுமான இவனே உபாஸிக்கத்தக்கவன் என்று கருத்து. (3, 4) எல்லாமறிந்த ஸர்வஜ்ஞனும், தடையற்ற ஸங்கல்பத்தையுடைய ஸத்யஸங்கல்பனு மான என்னிடமே பக்தி செலுத்தவேண்டும். ஸர்வஜ்ஞத்வம், ஸத்யஸங்கல்பத்வம் ஆகிய இரண்டும் கணக்கற்ற கல்யாணகுணங்க ளனைத்துக்கும் உபலக்ஷணமாகும். சேதனனுடைய அநிஷ்டங்களைப் போக்குவதற்கு எல்லாமறிந்த ஸர்வஜ்ஞனாயிருந்தால்தான் முடியும். தலைசிறந்த மோக்ஷத்தை அளிப்பதற்குத் தடையற்ற ஸங்கல்பத்தை யுடைய ஸத்யஸங்கல்பனாயிருந்தால்தான் முடியும். ஆகையால் உபாஸிக்கத்தக்க பரம்பொருளுக்கு இந்த இரு குணங்களும் இருந்தே தீரவேண்டும். மேலும் 'ஜகத்காரணப்பொருளே உபாஸிக்கத் தக்கது' என்று வேதங்கள் முழங்குகின்றன. ஸர்வஜ்ஞனாகவும், ஸத்யஸங்கல்ப னாகவும் இருந்தாலொழிய ஜகத்காரணப் பொருளாகமுடியாது. அதனா லேயே ''யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித் யஸ்ய ஜ்ஞாநமயம் தப:। தஸ்மா தேதத்ப்ரஹ்ம நாமரூபமந்நம் ச ஜாயதே'' [முண்டகம் 1-1-9] [எந்தப் பரமாத்மா எல்லாப் பொருள்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களை அறிந்திருக்கிறானோ, எவனுடைய ஜகத்ஸ்ருஷ்டி முதலான தவம் ஸங்கல்பமயமாயிருக்கிறதோ அவனிடமிருந்து — போக்யமாகவும் போக்தாவாகவுமிருக்கையாலே அந்நம் எனப்படுவதாய், மிகப்பெரிதா யிருக்கையால் 'ப்ரஹ்ம' எனப்படுவதான இவ்வுலகம் நாமரூபங் களையுடையதாயிற்று] ''ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:'' [சாந் 8-7-1] [மெய்யான கல்யாணகுணங்களையும், தடையற்ற ஸங்கல்பத்தை

ब्रह्मणि, पुरुषोत्तमे, पुण्डरीकदलामलायताक्षे, स्वच्छनीलजीमूतसङ्काशे,युग-

யும் உடையவன்] என்று உபநிஷத்துக்கள் ஓதுகின்றன. (5) எல்லா உலகிற்கும் ஒரே காரணமாயிருக்கும் என்னிடமே ப₄க்திசெலுத்த வேண்டும். ''யதோ வா இமாநி பூ₄தாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யதப்ரயந்த்யபி₄ஸம்விஶந்தி, தத்₃விஜிஜ்ஞாஸஸ்வ, தத்₃ப்₃ரஹ்மேதி'' [தை ப்₄ருகு₃] [எதனிடமிருந்து இந்த ஜீவராஶிகள் உண்டாகின்றனவோ, எதனால் உண்டான இவை வாழ்கின்றனவோ, பிரளய காலத்தில் எதை இவை அடைகின்றனவோ அதையே ப்₃ரஹ்மம் என்று அறிவாய்] ''காரணந்து த்₄யேய:'' [அத₂ர்வஶிகை₂] [காரணவஸ்துவே தியானிக்கத்தக்கது] என்று உபநிஷத்துக்கள் ஜக₃த்காரணவஸ்துவையே உபாஸிக்கத்தக்கதாக ஓதின. ஆனால் ஓரண்ட₂த்துக்குக் காரணமான பிரமன் முதலானவர்களோ, உபாத₃ான காரணமாத்ரமான மூலப்ரக்ருதி முதலானவையோ எல்லாவுலகிற்கும் ஒரே காரணம் என்னும் பெருமை பெற்றவையல்லவாகையால் உபாஸிக்கத்தக்கவையாகமாட்டா. பிரமன் சிவன் முதலானுரை உள்ளடக்கிய எல்லாவுலகிற்கும் உபாத₃ானம், நிமித்தம், ஸஹகாரி என்னும் மூவகைக் காரணமுமாகின்ற நாராயணன் ஒருவனே உபாஸிக்கத்தக்கவனுவான் என்று கருத்து. (6, 7) பரப்₃ரஹ்மமாகவும், புருஷோத்தமனுகவுமிருக்கும் என்னிடமே ப₄க்திசெலுத்தவேண்டும், பரப்₃ரஹ்மம் என்றதால் இவன் எல்லாப் பொருள்களையும் வியாபித்திருக்கையாலே 'எல்லாம் இவனே' என்று சொல்லலாம்படி மிகப்பெரியவனுயிருப்பவன் என்று உணர்த்தப்படுகிறது. அப்படியானுல் எல்லாப்பொருள்களிலுமிருக்கும் தோ₃ஷங்கள் இவனிடம் சேருமே என்னும் ஐயம் எழ, இவன் சேதநர்களனைவரைக் காட்டிலும் சிறந்தவனுகையாலே உலகிலுள்ள தோ₃ஷங்கள் இவனைத் தொடமாட்டா என்று காட்டுகிறது புருஷோத்தம ஶப்₃த₃ம். பரப்₃ரஹ்ம ஶப்₃த₃த்தால் ''நாராயண பரம் ப்₃ரஹ்ம'' என்று ஓதும் நாராயணுநுவாகமும், புருஷோத்தம ஶப்₃த₃த்தால் புருஷஸூக்தமும் ஓதுகின்ற பரம்பொருள் இவனே என்று காட்டப்படுகிறது. அதனுல், அந்தந்த ஶாகை₂களில் ஓதப்படும் ஸாமாந்யஶப்₃த₃ங்கள் புருஷோத்தமன், நாராயணன் எனப்படும் இவனையே குறிக்கின்றன என்றும் உணர்த்தப்படுகிறது. இவ்விரண்டு ஶப்₃த₃ங்களும் மிகப்பெரியவன் இவனே என்று காட்டுகையாலே இவனைக்காட்டிலும் பெரியவன் ஒருவன் உண்டு என்று கூறும் ஶைவர்களின் வ்யோமாதீதவாத₃ம் தள்ளப்பட்டதாகிறது.

இவ்விரண்டு ஶப்தங்களும் குணங்களாலும் மிகப்பெரியவன் இவனே என்று காட்டுகையால் நிர்குணவாதமும் நிரஸிக்கப்பட்டதாகிறது. ஆக, பக்திநிஷ்டர்கள் உபாஸிக்கவேண்டிய கல்யாண குணங்களோடு கூடிய ஸ்வரூபத்தின் பெருமைகள் விவரிக்கப்பட்டன. இனி, எல்லா வேதங்களிலும் படிக்கப்பட்ட புருஷஸூக்தம் முதலானவற்றிலிருந்து தேறுகின்றதாய், ஶுபாஶ்ரயமாயிருப்பதான திவ்யமங்கள விக்ரஹமும், அதன் குணங்களும், திருவாபரணங்களும் உபாஸிக்கத் தக்கவையாகையாலே அவற்றின் பெருமை அடுத்தபடி அநுபவிக்கப் படுகிறது. (8) தாமரையிதழ்போன்று நீண்டு பரந்த இரு திருக் கண்களையுடைய என்னிடமே பக்திசெலுத்தவேண்டும். "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவமக்ஷிணீ" [சாந் 1-6-7] [அந்தப் பரமாத்மாவுக்கு ஸூர்யனால் மலர்ந்த தாமரைபோன்ற இரு கண்கள் உள] என்று அந்தராதித்ய வித்யாப்ரகரணத்தில் தாமரைக்கண்ணனை இவனே உபாஸிக்கத்தக்கவன் என்று உபநிஷத் உத்கோஷித்ததன்றோ. இதனால் எண்கண்ணனான பிரமனும், முக்கண்ணனான சிவனும், பன்னிருகண்ணனான முருகனும் மோக்ஷத்தை விரும்புகிறவர்களால் உபாஸிக்கத்தக்கவரல்லர் என்று விளங்குகிறது. (9) மிகத் தெளிந்த நீலமேகம்போன்ற திருமேனியை உடைய என்னிடமே பக்தி செலுத்தவேண்டும். "நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா" [தை-நா-11] [நீலமேகத்தையுட்கொண்ட மின்னற்கொடிபோல் ஒளிவீசுவது பரம்பொருளின் திருமேனி] என்று நாராயணாநுவாகத்தில் இத்திருமேனி எல்லா வித்யைகளிலும் உபாஸிக்கத்தக்கதாக எடுக்கப்பட்டது. நீலமணி, கண்ணாடி, நீர், முத்துச்சிப்பி முதலானவற்றைப்போலே ஒளியையுடையதாயும், பிறவற்றைப் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்கையாலே இத்திருமேனி ஸ்வச்சமாக (மிகத்தெளிந்ததாக) இருப்பது. அதனாலேயே 'நீல மேகத்தையுட்கொண்ட மின்னற்கொடி போன்றது' என்று உபய வேதங்களிலும், "சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி பரந்தெங்கும்" [பெரியாழ்திரு 1-4-3] என்று பெரியாழ்வாராலும் வர்ணிக்கப்பட்டது. (10) ஒரே சமயத்தில் ஆயிரம் ஸூர்யர்கள் உதித்தாற்போன்ற ஒளியோடு கூடிய திருமேனியையுடைய என்னிடமே பக்தி செலுத்த வேண்டும். "ஆதித்ய வர்ணம்" என்று புருஷஸூக்தத்திலும், "தமேவ பாந்தம் அநுபாதி ஸர்வம், தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி" [முண்டக 2-2-10] [ஒளிவிடும் அவனைப் பின்பற்றியே ஒளியுடைய எல்லாச் சோதிகளும் ஒளிர்கின்றன.] என்று முண்டகோபநிஷத்திலும், "திவி ஸூர்யஸஹஸ்ரஸ்ய பவேத்யுகபதுத்திதா। யதி பாஸ்ஸத்ருஶீ ஸா ஸ்யாத்பாஸஸ்தஸ்ய மஹாத்மந:॥" [கீதை

पदुदितदिनकरसहस्रसदृशतेजसि, लावण्यामृतमहोदधौ, उदारपीवरचतुर्बाहौ,

11-12] [ஆகாயத்தில் ஒரே சமயத்தில் ஆயிரம் ஸூர்யர்கள் உதித்ததுபோலிருந்தது மஹாத்மாவான அந்தக் கண்ணனின் ஒளி] என்று கீ3தையிலும் இவ்விஷயம் சொல்லப்பட்டதன்றோ. இத்தால், திருமேனியின் மிகுந்த தேஜஸ்ஸும், எதிரிகளால் காணவொண்ணுமலிருக்கும் தன்மையும் உணர்த்தப்படுகிறது. (11) லாவண்யாம்ருதக் கடலாயிருக்கும் என்னிடமே ப4க்தி செலுத்தவேண்டும். இத்தால் அனைவருடைய கண்ணேயும், நெஞ்சையும் ஈர்ப்பதாகவும், அநுகூலர்களுக்குப் பரமபோ4க்3யமாயும் இருப்பது திருமேனி என்று உணர்த்தப்படுகிறது. லாவண்யமாவது — திருமேனியின் ஸமுதா3ய ஶோபை4. அதாவது — திருமேனி முழுவதும் பரவியுள்ளதாய், கண்ணுக்குப் பேரானந்த3த்தை விளைப்பதான ஒளிவெள்ளமே லாவண்யம் எனப்படுகிறது. ''லோசனைரநுஜக்3முஸ்தே தமாத்3ருஷ்டிபதா2த் புந:। மனோபி4ரநுஜக்3முர்ச க்ருஷ்ணம் ப்ரீதிஸமந்விதா:॥ அத்ருப்தமநஸாமேவம் தேஷாம் கேஶவத3ர்ஶநே। க்ஷிப்ரமந்தர்த3தே4 ஶௌரிஶ்சக்ஷுஷாம் ப்ரியத3ர்ஶந:॥'' [பா4ரத ஸபா4 2-26] [கண்ணனிடம் அன்புடையவர்களான அவர்கள், பார்வைக்கு அவன் மறையும் வரையில் கண்களாலே அவனைப் பின்தொடர்ந்தனர். (மறைந்த பின்பும்) மனத்தாலும் அவனைப் பின்தொடர்ந்தனர். மிக இனிய காட்சியையுடைய கண்ணன் இவ்வண்ணமாக அவனைக் காண்பதில் திருப்தியற்ற நெஞ்சுடையவர்களான அவர்களுடைய கண்களுக்கு விரைவில் மறைந்தான்] என்றும், ''அம்ருதஸ்யேவ நாத்ருப்யந் ப்ரேக்ஷமாணா ஜநார்த்த3நம்'' [ஜநார்த்த3நனைக் காண்கின்ற அவர்கள் அமுதம் உண்டவர்களைப்போலே திருப்தியடையவில்லை] என்றும், ''ந ஹி தஸ்மாந்மந: கஶ்சித் சக்ஷுஷீ வா நரோத்தமாத்। நரஶ்ஶக்நோத்யபாக்ரஷ்டும் அதிக்ராந்தேऽபி ராக4வே॥'' [ரா-அ-17-14] [ராக4வன் சென்ற பின்பும் புருஷோத்தமனுகிற அவனிடமிருந்து நெஞ்சையோ கண்களையோ எவனும் திருப்பமுடியவில்லை.] என்றும் லாவண்யம் படுத்துகிற பாடு இதிஹாஸங்களிலே வர்ணிக்கப்பட்டதன்றோ. (12) வண்மைமிக்கதாய், உருண்டு திரண்டு நீண்டதான நான்கு திருக்கைகளையுடைய என்னிடமே ப4க்தி செலுத்தவேண்டும். ''சதுர்ணாம் புருஷார்த்தா2நாம் தா3தா தே3வ: சதுர்பு4ஜ:'' [நாலு திருக்கைகளையுடைய நாராயணன் நாலு புருஷார்த்த2ங்களையும் அளிப்பவன்] என்கிறபடியே நாலு புருஷார்த்த2ங்களையும் அளிப்பதற்காகவே இவன் நாலு திருக்கைகளைக் கொண்டிருக்கிறுன் என்பது ஸுப்ரஸித்3த4ம். இத்திருக்கைகள் உருண்டு திரண்டு நீண்டிருப்பவையாய், வண்மைமிக்கவையாயிருக்கையாலே இவன் அடியார்களுடைய விரோதி4களைப்போக்கி, மோக்ஷமுள்ளிட்ட எல்லாப் ப2லன்களையும் அளிக்கவல்லவன் என்று விளங்குகிறது.

अत्युज्ज्वलपीताम्बरे, अमलकिरीटमकरकुण्डलहारकेयूरकटकभूषिते, अपार-

சில சமயங்களில் இரண்டு திருக்கைகளைக் கொண்டிருப்பதும், விஶ்வரூபம் காட்டும்போது ஆயிரம் திருக்கைகளைக் கொண்டிருப்பதும் உண்டானாலும், கண்ணனுக்குப் பரரூபத்திற்போலே நாலு திருக்கைகளைக் கொண்டிருப்பதே இயல்வானது. ''அத₂வாऽபி சதுர்பு₄ஜம்'' என்றும், ''பு₄ஜைஶ்சதுர்பி₄ஸ்ஸமுபேதமேதத்₃ரூபம் விஶிஷ்டம் தி₃வி ஸம்ஸ்தி₂தம் ச। பூ₄மௌ க₃தம் பூஜயதாப்ரமேயம் ஸதா₃ ஹி தஸ்மிந் நிவஸாமி தே₃வா: ॥'' [பா₄ர-மௌஸல 5-34] [நான்கு திருக்கைகளோடு கூடியதாய், பூ₄மியிலிருக்கும் இந்த ரூபமே பரமபத₃த்திலும் உள்ளது. தே₃வர்களே ! அளத்தற்கரிய இந்த ரூபத்தை ஆராதி₄ப்பீர்களாக. நான் அதில் எப்போதுமே வாழ்கிறேன்] என்றும் சொல்லப்பட்டதன்றோ. (13) மிகவும் பிரகாஶிக்கும் பீதாம்ப₃ரத்தை உடைய என்னிடமே ப₄க்தி செலுத்த வேண்டும். '' மாஹாரஜநம் வாஸ: '' என்று ஶ்ருதியிலும், ஆயிரக் கணக்கான இதிஹாஸபுராண வசனங்களிலும் பரமாத்மா பீதாம்ப₃ரத்தை த₄ரித்தவன் என்று உணர்த்தப்பட்டதன்றோ. (14) குற்ற மற்ற கிரீடம், மகரகுண்ட₃லம், ஹாரம், தோள்வளை, கைவளை முதலான கணக்கற்ற திருவாப₄ரணங்களால் அலங்கரிக்கப்பட்ட என்னிடமே ப₄க்தி செலுத்தவேண்டும். திருவடியிலிருந்து திருமுடி வரையில் கணக்கற்ற திருவாப₄ரணங்களால் அலங்கரிக்கப்பெற்றிருப்பதால் இவனே ஸர்வலோக சக்ரவர்த்தி என்று விளங்குகிறது. அத்தகைய இவனிடம் ப₄க்தி செலுத்தினால்தான் தலைசிறந்த பயன் கிடைக்கும் என்றும் தேறுகிறது. இதனாலேயே ''த்₄யேய: ஸதா₃ ஸவித்ருமண்ட₃லமத்₄யவர்த்தீ, நாராயணஸ் ஸரஸிஜாஸநஸந்நிவிஷ்ட:। கேயூரவாந் மகரகுண்ட₃லவாந் கிரீடீ ஹாரீ ஹிரண்மயவபு: த்₄ருத ஶங்க₂சக்ர: ॥'' [நாரஸிம்ஹபுராணம் 62-17] [தோள்வளைகளையுடையவனாய், மகரமீன்போன்ற ஆகாரமுள்ள குண்ட₃லங்களையுடையவனாய், கிரீடத்தையும், ஹாரத்தையும் உடையவனாய், பொன்மயமான திருமேனிகொண்டவனாய், ஶங்க₂சக்ரங்களை த₄ரித்தவனாய், தாமரையாகிற ஆஸனத்தில் வீற்றிருப்பவனான நாராயணன் ஸூர்யமண்ட₃லத்தின் நடுவில் எப்போதும் தியானிக்கத் தக்கவன்] என்று எல்லாத் திருவாப₄ரணங்களோடு கூடியவனாகத் தியானிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. (15) எல்லையற்ற காருண்யம், ஸௌஶீல்யம் (நீர்மை), ஸௌந்த₃ர்யம் (அவயவங்களின் அழகு), மாது₄ர்யம் (இனிமை), கா₃ம்பீ₄ர்யம் (ஆழ்ந்த

कारुण्यसौशील्यसौन्दर्यमाधुर्यगाम्भीर्यौदार्यवात्सल्यजलधौ, अनालोचित-विशेषाशेषलोकशरण्ये सर्वस्वामिनि तैलधारावदविच्छेदेन निविष्टमना भव।

நெஞ்சினனாயிருக்கை), ஔத3ார்யம் (வண்மை), வாத்ஸல்யம் முதலான கு3ணங்களுக்குக் கடலாயிருக்கும் என்னிடமே ப4க்தி செலுத்தவேண்டும். கருணை, நீர்மை, வாத்ஸல்யம், ஸௌலப்4யம் முதலான ஆத்மகு3ணங்கள் இவன் ஆஶ்ரயிப்பதற்கு எளியவன் என்று காட்டுகின்றன. கா3ம்பீ4ர்யம், ஔத3ார்யம் முதலான ஆத்ம கு3ணங்கள்—அடியார்களுடைய ருசியை அறிந்து அவர்களுக்கு எல்லாப் ப2லன்களையும் கொடுக்கவல்லவன் என்று காட்டுகின்றன. ஸௌந்த3ர்யம், மாது4ர்யம் முதலான திருமேனி கு3ணங்கள் இவன் உபாஸிப்பதற்கு மிகவும் இனியவன் என்று காட்டுகின்றன. இத்தகைய கணக்கற்ற கு3ணங்களையுடைய இவனிடமே ப4க்திசெலுத்த வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். (16) உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் ஏற்றத்தாழ்வுபாராமல் அனைத்துலகினருக்கும் புகலிடமாயிருக்கும் என்னிடமே ப4க்திசெலுத்தவேண்டும். காருண்யம் முதலான முற்கூறிய கு3ணங்களிலிருந்து எம்பெருமானுக்கு இப்பெருமை ஸித்3தி4க்கிறது. "நிவேத3யத மாம் க்ஷிப்ரம் விபீ4ஷணமுபஸ்தி2தம் | ஸர்வலோகஶரண்யாய ராக4வாய மஹாத்மநே ||" [ரா-யு 17-15] [எல்லா உலகினராலும் ஶரணமடையத்தக்கவராய், பெருங்குணவாளரான ஸ்ரீராமபிரான் பொருட்டு (அவரை) வந்தடைந்திருக்கிற விபீ4ஷணனென்னும் பெயரையுடைய என்னை விரைவில் அறிவியுங்கள்] "ஸுது3ஷ்டோ வாப்யது3ஷ்டோ வா கிமேஷ ரஜநீசர: | ஈத்3ருஶம் வ்யஸநம் ப்ராப்தம் ப்4ராதரம் ய: பரித்யஜேத் || கோ நாம ஸ ப4வேத்தஸ்ய யமேஷ ந பரித்யஜேத் ||" [ரா-யு 18-5] [மிகுந்த தோ3ஷத்தை உடையவனாகிலும், தோ3ஷமற்றவனாகிலும் யாவனொரு இந்த அரக்கன் இப்படிப்பட்ட துன்பத்தைத் அடைந்த ஸஹோத3ரனை அடியோடு கைவிட்டானோ, (அவனால்) என்ன பயன்? அப்படிப்பட்ட இவ்விபீ4ஷணன் எவனைத்தான் கைவிடமாட்டான்?] "ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட2! த3த்தமஸ்யாப4யம் மயா | விபீ4ஷணோ வா ஸுக்3ரீவ | யதி3 வா ராவண: ஸ்வயம் ||" [ரா-யு 18-34] [வானரர் தலைவரே! என்னாலே இந்த விபீ4ஷணனுக்கு அடைக்கலம் அளிக்கப்பட்டது. சுக்கிரீவனே! விபீ4ஷணனாகிலும், ராவணன்தானேயாகிலும் இவனை அழைத்துவாரீர்] முதலான ப்ரமாணங்கள் இங்கு அநுஸந்தி4க்கத் தக்கவை. (17) ஸர்வஸ்வாமியான என்னிடமே ப4க்தி செலுத்த வேண்டும். எல்லாச் சேதனர்களும் இவனுக்கு உடைமையாகை

யாலும், இவன் அவர்களை உடையவனாகையாலும், சேதனர்களைப் பெறுவது இவனுக்கே பேறாகையாலே இவர்கள் அநுஷ்டிக்கும் பக்தியோகத்தை இவனே நிறைவுபடுத்தித் தன்னைப் பெறும்படி செய்வான் என்று கருத்து. ''க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதமிதம் விஶ்வம் சராசரம்'' [பார-ஸபா 42-23] [அசைவனவும், அசையாதனவும் அடங்கிய இவ்வுலகம் கிருஷ்ணனுக்காகவே ஏற்பட்டதன்றோ.] என்னும் பிரமாணம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. ஆக, இந்தப் பதினேழு பெருமைகளையும் உடைய ரூபகுணவிபூதிகளோடு சேர்ந்த ஸ்வரூபம் இங்குள்ள ஆறு மச்சப்தங்களாலும் யதோசிதம் குறிக்கப்படுகிறது. (மந்மநா பவ) என்னும் தொடராலே ''இத்தகைய என்னிடம் எண்ணெய்த்தாரையைப்போலே, இடைவிடாமல் நெஞ்சு செலுத்துவாயாக'' என்கிறான். ''த்ரஷ்டவ்ய:... நிதித்யாஸிதவ்ய:'' [ப்ருஹ 3-5-6] [(பரமாத்மா) நேரே காண்பது போலே தியானிக்கத்தக்கவன்] ''த்யாயீத'' [முண்டக 2-2-2] [(பரமாத்மாவை) தியானிக்கக்கடவன்.] ''ஸத்த்வ ஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:'' [சாந் 6-26-2] [மனம் ஶுத்தியடைந்தவுடன் (பரமாத்மவிஷயத்தில்) நிலையான நினைவாகிற தியானம் ஏற்படுகிறது.] ''ஆவ்ருத்திரஸக்ருதுபதேஶாத்'' [ப்ரஹ்மஸூத்ரம் 4-1-1] [(பரமாத்மவிஷயமான வேதநம் எனப்படும் அறிவு) பலமுறை செய்யப்படவேண்டும். (அதையே தியானம் என்றும், உபாஸனம் என்றும் ஶ்ருதி) உபதேஶிக்கையால்] என்னும் பிரமாணங்களிலிருந்து தியான ரூபமான அறிவே மோக்ஷஸாதனம் என்று விளங்குகிறதன்றோ. இவ்விஷயத்தையே கண்ணனும் மேலே ''மய்யேவ மந ஆதத்ஸ்வ'' [கீதை 12-8] [என்னிடமே மனத்தை ஸமாதி நிலையில் நிலைநிறுத்து] என்று ஏகாரத்தைச் சேர்த்துச்சொல்லப் போகிறான். இங்கும் 'மாமேவ ஏஷ்யஸி' என்று ஸாத்யத்தில் ஏகாரத்தைச் சேர்த்துப் படிக்கிறான். ஆகையால் ஸாதனத்தைச் சொல்லும் 'மந்மநா பவ' முதலான தொடர்களிலும் ''ஸர்வம் வாக்யம் ஸாவதாரணம்'' [எல்லா வாக்யமும் பொதுவாக ஏகாரத்தோடு கூடியது] என்கிற ரீதியில் ஏகாரம் இருப்பதாகக்கொள்ள வேண்டும். ஆக, என்னிடமே நெஞ்சைச் செலுத்துவாய் என்று கூறியதாகத் தேறுகிறது. இதிலிருந்து எப்போதும் வேறு எதிலும் நெஞ்சு செலுத்தக்கூடாது என்பதும் தேறும். அதனாலேயே ''எண்ணெய்த்தாரையைப்போல என்னிடமே நெஞ்சு செலுத்த வேண்டும்'' என்று பாஷ்யம் இடப்பட்டது. இது வெறும் தியானமாக இருக்கக்கூடாது; அன்புகலந்த தியானமாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுக் காட்டுகிறான் மேலே—(மத்பக்த: பவ) என்

तदेव विशिनष्टि—मद्भक्तः-अत्यर्थमत्प्रियत्वेन युक्तो मन्मना भवेत्यर्थः। पुनरपि विशिनष्टि—मद्याजी — अनवधिकातिशयप्रियमदनुभवकारितमद्यजनपरो भव। यजनं नाम परिपूर्णशेषवृत्तिः। औपचारिक-

---

னிடம் அன்புசெலுத்துகின்றவனாக ஆவாயாக. தியானம் என்பது இடைவிடாத நினைவாயிருக்கும் ஜ்ஞானமாகும். அதில் அன்பு கலந்தால் அது ப₄க்தியாகிறது. ஆக, என்னிடம் மிகவும் அன்போடு கூடியவனாய், நெஞ்சினால் என்னைத் தியானம் செய்வாயாக என்று கூறியதாயிற்று. வேதா₃ந்தங்களில் ஜ்ஞானம், வேத₃னம், உபாஸனம் என்னும் ஶப்₃த₃ங்களால் கூறப்பட்டபோதிலும், ப₄க்திஶப்₃த₃த்தால் இந்த ஸாத₄னம் கூறப்படவில்லையே எனில்: "நாயமாத்மா ப்ரவசநேந லப்₄ய: ந மேத₄யா ந ப₃ஹுனா ஶ்ருதேந। யமேவைஷ வ்ருணுதே தேந லப்₄ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் ||" [முண்ட₃கம் 3-2-3] [இந்தப் பரமாத்மா கேவல ஶ்ரவண மநந த்₄யானங்களாலே அடையத்தக்கவனல்லன். எவனை இந்தப் பரமாத்மா வரிக்கிறானோ, அவனாலேயே அடையத்தக்கவன். அவனுக்கே இந்தப் பரமாத்மா தன் ஸ்வரூப ரூபங்களைக் காட்டுகிறான்] என்னும் உபநிஷத்₃வாக்கியத்திலிருந்து மோக்ஷஸாத₄னமான த்₄யானம ப₄க்தி ரூபமாகவே உள்ளது என்று தேறுகிறது. எப்படியெனில்: எவன் இப்பரமனுக்கு மிகவும் இனியவனோ அவனே இவனால் வரிக்கத் தக்கவனாகிறான். எந்த ஜீவனுக்கு இந்தப் பரமன் மிக இனியவனோ அவனே இப்பரமனுக்கு மிகவும் இனியவன் என்பது சொல்லாமலே விளங்கும். ஆகையால் மோக்ஷஸாத₄னமான தியானம் ப₄க்திரூபமானது என்று இந்த ஶ்ருதியிலிருந்து தேறுகிறது. 'மத்₃ப₄க்த:' என்று இந்த ஶ்ருதியையே உபப்₃ரும்ஹணம் செய்கிறான். இந்த ப₄க்திரூபமான தியானமானது தன்னுடைய ஆராத₄னமாகப் பரிணமிக்கவேண்டும் என்று காட்டுகிறான் மேலே—(மத்₃யாஜீ ப₄வ) என்னை ஆராதி₄ப்பவனாக ஆவாயாக. எல்லையற்ற ப்ரீதியோடு என்னை த்₄யானம் செய்தால் என்னை ஆராதி₄ப்பதில் ஈடுபடாமல் இருக்கமுடியாதன்றோ என்று கருத்து. 'யஜ — தே₃வபூஜாயாம்' என்று தா₄துவாகையாலே, இங்கு ஸாத₄னப₄க்தி ஸ்வரூபத்தை நிஷ்கர்ஷிக்கும் ப்ரகரணத்தையொட்டி, தே₃வதே₃வனான இவனை பாஞ்சராத்ரம் முதலான ஶாஸ்த்ரங்களில் சொன்ன முறையில் நேரே ஆராதி₄ப்பதைக் காட்டுகிறது. ஆகையால் இந்த்₃ராதி₃களுக்கு அந்தர்யாமியாக இவனை ஆராதி₄க்கும் யாக₃ங்கள் இங்கு பொருளாகமாட்டா. இங்கு சொல்லப்படும் யாக₃மாவது

सांस्पर्शिकाभ्यवहारिकादिसकलभोगप्रदानरूपो हि यागः। यथा मदनुभवजनितनिरवधिकातिशयप्रीतिकारितमद्यजनपरो भवसि, तथा मन्मना भवेत्युक्तं भवति। पुनरपि तदेव विशिनष्टि-मां नमस्कुरु-अनवधि-

பரிபூர்ண ஶேஷ வ்ருத்தியாகிற கைங்கர்யம். "பத்ரம் புஷ்பம் ப₄லம் தோயம்" [கீ₃தை 9-26] முதலானவிடங்களில் இந்த கீ₃தையிலும் இந்தத் திருவாராத₄னம் விளக்கப்பட்டது. யாக₃ ஶப்₃த₃த்தால் பிரஸித்₃தி₄பெற்ற அக்₃னிஹோத்ரம் முதலானவற்றைக் காட்டிலும் வேறுபட்ட பஞ்சமஹாயஜ்ஞம் முதலானவை யாக₃ம் என்று வழங்கப் படுகையாலும், "தே₃வதாம் உத்₃தி₃ஶ்ய த்₃ரவ்யத்யாகோ₃ யாக₃:" [ஒரு தே₃வதையை உத்₃தே₃ஶித்து ஒரு த்₃ரவ்யத்தைக் கொடுப்பது யாக₃மாகிறது] என்று யாக₃லக்ஷணம் சொல்லப்படுகையாலும், "க்ருஷ்ணோ வாக்யைரிஜ்யதே ஸம்ம்ருஶானை:" [பா₄ர-ஆநு 28-6] [கிருஷ்ணன் அவனைப் புகழும் வாக்யங்களாலே ஆராதி₄க்கப்படுகிறான்] முதலானவிடங்களில் வார்த்தைகளால் புகழ்வதும் வாக்₃யஜ்ஞம் என்று சொல்லப்படுகிறதாகையாலும் பாஞ்சராத்ரம் முதலான ஶாஸ்த்ரங்களில் கூறிய முறையில் ஆராதி₄ப்பதையும் யஜ்ஞம் என்று கூறத் தடையில்லை. அதாவது— (1) ஔபசாரிகம் எனப்படும் திருவந்திக்காப்பு முதலான உபசாரங்களை ஸமர்ப்பிப்பது, (2) ஸாம்ஸ்பர்ஶிகம் எனப்படும் தொடுவதற்கினிய மாலை, சந்த₃னம் முதலானவற்றை ஸமர்ப்பிப்பது, (3) ஆப்₄யவஹாரிகம் எனப்படும் உண்பதற்கினிய தளிகை, திருப்பணியாரம் முதலானவற்றை ஸமர்ப்பிப்பது. (4) ஸாந்த்₃ருஷ்டிகம் எனப்படும் காண்பதற்கினிய தீ₃பம் முதலானவற்றை ஸமர்ப்பிப்பது முதலிய எல்லாவித₄ போ₄க₃ங்களையும் அளிக்கும் பரிபூர்ணமான திருவாராத₄னமே யாக₃ஶப்₃த₃த்துக்கு முக்₂யார்த்த₂மாகும் என்று கருத்து. (மத்₃ப₄க்தோ மத்₃யாஜீ மந்மநா ப₄வ) என்னை அநுப₄விப்பதாலுண்டான எல்லையற்ற அன்பினால் விளைந்த எனது திருவாராத₄னத்திலேயே ஈடுபட்டவனும் படியாக என்னிடம் நெஞ்சைச் செலுத்து என்பது திரண்டபொருள். இத்தால் "யாக₃ம் எனப்படும் பா₃ஹ்யக்ரியை (வெளிச்செயல்) ஆகிற திருவாராத₄னம் நெஞ்சு செலுத்துவதாகிற மனோவ்ருத்திக்கு எப்படி விஶேஷணமாக முடியும்?" என்னும் ஐயமும் தவிர்க்கப்பட்டதாயிற்று. மறுபடியும் இதைக் காட்டிலும் ஒரு சிறப்பைக் கூறுகிறான்—(மாம் நமஸ்குரு) எல்லையற்ற இனிமைச் சிறப்பை உடைய எனதநுப₄வத்தினால் விளைந்ததான வர்ணிக்கமுடியாத அன்பினால் உண்டான எல்லாக் கைங்கர்யங்களையும் செய்வதோடு நில்லாமல்

कातिशयप्रियमदनुभवकारितात्यर्थप्रियाशेषशेषवृत्तावपर्यवस्यन् मयि अत्यन्तं (अन्तरात्मनि) अतिमात्रप्रह्वीभावव्यवसायं कुरु। मत्परायणः-अहमेव परमयनं यस्यासौ मत्परायणः, मया विनाऽऽत्मधारणासंभावनया मदाश्रय इत्यर्थः। एवमात्मानं युक्त्वा मत्परायणस्त्वमेवमनवधिकातिशयप्रीत्या

என்னிடம் உன்னுடைய ஸ்வரூபத்துக்குத் தகுந்ததாய், எல்லையற்ற இன்பமாயிருப்பதான (மனோவாக்காயங்களால்) வணங்கியிருத்தலில் உறுதியைக் கொள்வாயாக. "ணம ப்ரஹ்வீபா4வே" என்னும் தா4துவிலிருந்து தோன்றிய நமஸ்காரஶப்3த3ம் இங்கு மனோவாக்காயங்கள் மூன்றினாலும் வணங்கியிருத்தலைக் குறிக்கிறது. "ப்ரேக்ஷாவத: ப்ரவ்ருத்திர்யா ப்ரஹ்வீபா4வாத்மிகா ஸ்வத:। உத்க்ருஷ்டம் பரமுத்3தி3ஶ்ய தந்நம: பரிகீ3யதே ॥" [அஹிர்பு3த்4ந்ய ஸம்ஹிதை 52-10] [பேரறிவாளனான ஒருவன் உயர்ந்தவனான மற்றொருவனைக் குறித்து வணங்கியிருத்தலாகிற செயல் யாதொன்றுண்டோ அது 'நம:' எனப்படுகிறது] என்றல்லவோ நமஶ்ஶப்3த3ம் விவரிக்கப்பட்டுள்ளது. 'மந்மநா ப4வ' என்று சொல்லப்பட்ட ஜ்ஞானத்தின் சிறப்பைக் குறிக்கிறதாகையாலே இந்த நமஸ்கார ஶப்3த3ம் வணங்கியிருத்தலில் உறுதியைக் குறிப்பதாகப் பொருள்கொள்ளப்பட்டது.

இனி, ஶ்லோகத்தின் பிற்பாதியாலே, முற்பாதியில் சொன்ன ஸாத4னத்தை அநுவதி3த்துக்கொண்டு, அந்த ஸாத4னத்தினால் கிடைக்கும் பயனைக் காட்டுகிறான். (மத்பராயண:) என்னையே மேலான ப்ராப்யமாகக் கொண்டவன். "எவனுக்கு நானே மேலான அயநமோ (ப்ராப்யமோ) அவன் மத்பராயணன்" என்று வ்யுத்பத்தி. என்னைப் பிரிந்தால் உயிர்வாழ இயலாத அளவுக்கு என்னைப் பற்றியிருப்பவன் என்று கருத்து. 'நாராயணம்... பராயணம்' என்று உபநிஷத் ஓதியதை விளக்குகிறான். இந்த ஶப்3த3த்தால்—ஸாத4னப4க்தியானது, பிரிந்தால் உயிர்வாழமுடியாத அளவுக்கு ஸ்வயம்ப்ரயோஜனப4க்தியாகப் பரிணமிக்கவேண்டும் என்பதே எம்பெருமானுடைய திருவுள்ளம் என்று விளங்குகிறது. (ஏவம் ஆத்மாநம் யுக்த்வா) இவ்வண்ணமாக எல்லையற்ற சிறப்புடைய அன்பினாலே என்னை அநுப4விக்கவல்ல நெஞ்சையடைந்து. (யுக்த்வா) 'யுஜி' தா4துவானது யோக3ம் (அடைதல்), தியானம் என்னும் இரண்டு பொருள்கள் உடையதாயினும், முற்கூறியபடி ஸ்வயம்ப்ரயோஜன ப4க்தியை இவன் அடைவதிலேயே எம்பெருமானுக்குத் திருவுள்ளமாகையால் இங்கு 'தியானம்' என்னும் பொரு

मदनुभवसमर्थं मनः प्राप्य मामेवैष्यसि। आत्मशब्दो ह्यत्र मनोविषयः। एवंरूपेण मनसा मां ध्यात्वा मामनुभूय मामिष्ट्वा मां नमस्कृत्य मत्परायणो मामेव प्राप्स्यसीत्यर्थः। तदेवं लौकिकानि शरीरधारणार्थानि वैदिकानि च नित्यनैमित्तिकानि कर्माणि मत्प्रीतये मच्छेषतैकरसो मयैव कारित इति कुर्वन् सततं मत्कीर्तनयतननमस्कारादिकान् प्रीत्या कुर्वाणो मन्नियाम्यं निखिलजगन्मच्छेषतैकरसमिति चानुसन्दधानोऽत्यर्थ-

---

விலல்லாமல் 'அடைதல்' என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது என்றே கொள்ளவேண்டும். ஆத்மஶப்3த3ம் 'மந்மநா ப4வ' என்னும் தொடக்கத்தையொட்டி நெஞ்சைக் குறிக்கிறது. (மாமேவ ஏஷ்யஸி) இத்தகைய ஸ்வயம்ப்ரயோஜன ப4க்தியுடையவனாக நீ ஆனால், தன்னடையே என்னையடைவாய். முற்கூறிய எல்லையற்ற அன்புடைய நெஞ்சாலே என்னைத் தியானித்து, என்னை அநுப4வித்து, எனக்கு திருவாராத4னம் செய்து, என்னை வணங்கி, என்னையே பரமப்ராப்ய மாகக் கொண்டவனாய் என்னையே அடைவாய் என்பது ஶ்லோகத்தின் திரண்ட பொருள்.

இனி இந்த அத்தியாயத்தின் திரண்ட பொருள் பின்வருமாறு:- நீ துன்பம் நிறைந்த ஸம்ஸாரக்கடலிலே மூழ்கியவனாகையாலும், பரத்வம் ஸௌலப்4யம் முதலிய கு3ணங்களோடு கூடிய நான் எல்லாத் துன்பக்கடல்களிலிருந்தும் சேதனர்களைக் கரையேற்றி, வழிநடத்திச் செல்கின்றவனாகையாலும், உபாயமாகிற ப4க்தியோக3மும் மிகவும் செய்தற்கு எளிதாயிருக்கை முதலான பெருமைகள் பெற்றதாகையாலும், என்னால் 'யத்கரோஷி' [9-27] என்னும் ஶ்லோகத்தில் சொல்லப்பட்டபடி இவ்வுடல் உயிர்வாழ்வதற்காகச் செய்யவேண்டிய லௌகிககர்மங்களையும், வேத3ஶாஸ்த்ரங்களில் விதி4க்கப்பட்ட நித்ய நைமித்திக கர்மங்களையும்—என்னிடம் ஶேஷத்வத்தையே இயல்வாகக் கொண்டவனாய், என் உகப்பின்பொருட்டு என்னாலேயே செய்விக்கப் பட்டது என்னும் எண்ணத்துடன் செய்யவேண்டும்; மேலும், ''ஸததம் கீர்த்தயந்த:'' [9-14] என்று சொல்லிய ரீதியில் என் விஷயமான ஸங்கீர்த்தனம், அர்ச்சனம் முதலான முயற்சிகள், நமஸ்காரம் முதலான காரியங்களையும் உகப்புடன் செய்யவேண்டும். ''மயா ததம்'' [9.4] என்று சொல்லப்பட்டபடி என்னால் நியமிக்கப்படும் எல்லா உலகமும் எனக்கு இயல்வான உடைமையாயிருப்பது என்று அநுஸந்தி4ப்பவனாய், ''ஸமோऽஹம் ஸர்வபூ4தேஷு'' [9-29]

प्रियमद्गुणगणं चानुसन्धायाहरहरुक्तलक्षणमिदमुपासनमुपाददानो मामेव प्राप्स्यसि ॥ ३४ ॥

॥ इति श्रीभगवद्रामानुजविरचिते श्रीमद्गीताभाष्ये नवमोऽध्यायः ॥ ९ ॥

பகவத் கீதை வெண்பா

(ஒன்பதாம் அத்தியாயத்தின் ஸாரத்தைக் கூறும் பாசுரம்)

மன்னியசீர்க் கீதை மருவொன்ப தாமோத்துப்
பன்னியுரை செய்த பயில்பொருள்க—ளின்னே
யிறையுயர்த்தி ஞானிநல மேற்றியலும் பத்தி
முறைவிதிக்க லாய்ந்தோ முடிந்து.

வாதிகேஸரி ஜீயர் அருளிய பகவத் கீதை வெண்பாவில்
ஒன்பதாம் அத்தியாயம் நிறைவுபெற்றது.

மன்னிய சீர் கீதை—நிலைநின்ற பெருமையுடைய கீ₃தையில், **மருவு ஒன்பதாம் ஓத்து பன்னி உரைசெய்த பயில் பொருள்கள்**—பொருந்திநிற்கும் ஒன்பதாம் அத்தியாயத்தில் பலகால் சொல்லப்பட்ட நல்ல அர்த்த₂ங்களான (1) **இறை உயர்த்தி** — ஸர்வேஶ்வரனான நாராயணனின் பெருமை, (2) **ஞானிநலம்** — மஹாத்மாக்களின் சிறப்பு, (3) **ஏற்று இயலும் பத்தி முறை விதிக்கல்** — ஸாத₄னமாகக் கைக்கொண்டு ஒழுகும் ப₄க்தியின்முறையைக் கூறுதல் (ஆகிய மூன்றையும்) **இன்னே**—இவ்வண்ணமாக, **முடிந்து ஆய்ந்தோம்**—நிஷ்கர்ஷித்து விளக்கினோம்.

''பத்ரம் புஷ்பம்'' [9-26] முதலான இடங்களில் சொல்லியபடி மிகவும் இனிய என்னுடைய கு₃ணக₃ணங்களை அநுஸந்தி₄ப்பவனாய், '' மந்மநா ப₄வ '' [9-34] என்று இங்கும், '' இதி மத்வா ப₄ஜந்தே மாம் '' [கீ₃தை 10-8] என்று அடுத்த அத்தியாயத்திலும் விவரித்தபடி, வேறு பயன் கருதாத நமஸ்காரம் முதலானவற்றைச் செய்விப்பதாய், என்னையே த₄ாரகனாகக் கொள்ளும் நிலையை விளைப்பது வரையிலான எல்லையற்ற அன்பாயிருக்கும் இவ்வுபாஸனத்தை ஆயுளுள்ள வரையில் தினமும் அநுஷ்டி₂ப்பவனாய் இருப்பதன் மூலம் என்னையேயடைவாய் என்கை. இவ்வண்ணமாக, ப₄க்திஸ்வருபத்தை விவரித்து ஒன்பதாமத்தியாயம் நிறைவுறுத்தப்பட்டது. 34.

ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமிதா₃ஸன் இயற்றிய
கீ₃தார்த்த₂விவரணத்தில் ஒன்பதாமத்தியாயம் நிறைவுற்றது.

கீதார்த்த சங்கிரகம்

(ஸ்ரீவேத3ாந்ததே3சிகர் அருளியது)

ஒன்பதாமத்தியாயத்தின் ஸாரப்பொருள்

10. **தன்மேன்மை யுந்தன் பிறப்பிற் றளராத் தனிநிலையும்**
பன்மேனி நண்ணினன் பாற்பிரி யாவன்ப ராசைகளும்
புன்மேனி விண்ணவர் பாற்புரி யாததன் பத்திமையு(ம்)
நன்மேனி நாரணன் றுனர னுக்கு நவின்றனனே.

நல் மேனி—அப்ராக்ருதமான திருமேனியையுடைய, **நாரணன் தான்**-ஸ்ரீமந்நாராயணன் (கண்ணன்), **நரனுக்கு**-அர்ஜுநனுக்கு, **தன் மேன்மையும்** — (ஸர்வேஶ்வரனுன) தன்னுடைய பெருமையையும், **தன் பிறப்பில்**—தன் அவதாரங்களில், **தளராத் தனிநிலையும்**—குறையாத பரத்வத்தையும், **பல் மேனி**—(கார்யப் பொருள்களான) பலவகைச் சரீரங்களில், **நண்ணினன்பால்**—அந்தர்யாமியாயுள்ள தன் மீது, **பிரியா அன்பர் ஆசைகளும்** — பிரியாத அன்பை யுடைய மஹாத்மாக்கள் அன்பினுல் செய்யும் செயல்களும், **புல்மேனி**—அற்பமாய் அழியும் சரீரத்தையுடைய, **விண்ணவர்பால்**—தேவர்மீது, **புரியாத**—செலுத்தாத, **தன் பத்திமையும்** — தன்னைப் பற்றிய ப4க்தியோக3மும் (ஆகிய இவற்றை), **நவின்றனன்**—உபதேசித்தான்.

கீ3தாஶ்லோகார்த்த2ச் சுருக்கம்

ஒன்பதாமத்தியாயம்

ஶ்லோ	அர்த்த2ம்
1.	வேத3ாந்த ரஹஸ்யமான ஸாத4னப4க்தியை உபதே3ஶிப்ப தாகக் கண்ணன் ப்ரதிஜ்ஞை செய்தல்.
2.	கர்ம ஜ்ஞானயோக3ங்களைக் காட்டிலும் ப4க்தியோக3த்திற் குள்ள சிறப்பு.
3.	ஶ்ரத்3தை4யின்மையால் ப4க்தியோக3த்தை அநுஷ்டி2க்காத வர்கள் மோக்ஷமடையாமல் ஸம்ஸாரத்திலேயே உழல் கிருர்கள்.

4-10. பக்தியோகமாகிற உபாயத்தால் அடையப்படும் (ப்ராப்ய மாகிற) எம்பெருமானின் பெருமை. மனிதனாகப் பிறந்த நிலையிலும் பரத்வம்.

4, 5. பரமபுருஷன் மற்ற பொருள்களால் அறியப்படாமல் அவற்றை ஸங்கல்ப மாத்ரத்தாலே தரிப்பவனாய், நியமிப்பவனாய், படைப்பவனாய், அனைத்துக்கும் ஶரீரியாய், ஶேஷியாய் இருப்பவன்.

6. எல்லாப் பொருள்களின் ஸ்திதி ப்ரவ்ருத்திகளும் தனக்கு அதீனமானவை என்பதைக் கண்ணன் த்ருஷ்டாந்தம் காட்டி நிருபித்தல்.

7. அவற்றின் உத்பத்தி ப்ரளயங்களும் தன் அதீனமே என்று கூறல்.

8. ஸமஷ்டி வ்யஷ்டிரூபமாயுள்ள ஸ்ருஷ்டியின் முறையை விளக்குதல்.

9. ஏற்றத் தாழ்வுள்ள ஸ்ருஷ்டி முதலானவற்றால் தனக்கு வைஷம்ய நைர்க்ருண்யங்கள் (பக்ஷபாதம், கருணையின்மை) விளையமாட்டா என்று நிரூபித்தல்.

10. தலைவனான தன்னால் தூண்டப்பட்டே மூலப்ரக்ருதி உலகனைத்தையும் படைக்கிறது என்னல்.

11, 12. ஆஸுரஸ்வபாவமுள்ளவர்கள் முற்கூறிய தன் பெருமையை உணராத அறிவிலிகளாய் அழிந்து போகிறார்கள் என்று கூறல்.

13. ஸ்வயம்ப்ரயோஜன பக்திநிஷ்டர்களான மஹாத்மாக்களின் பெருமை.

14, 15. ஸாதனபக்திநிஷ்டர்களான உபாஸகஜ்ஞானிகளின் பெருமை.

16-19. உபாஸனத்திற்குறுப்பாக — ஒருவனே தானே கார்யநிலையில் இவ்வுலகிலுள்ள பல பொருள்களை ஶரீரமாகக்கொண்டிருப்பதையும், அவற்றின் ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்திகள் தன்னதீனம் என்பதையும் நிரூபித்தல்.

20, 21. ஜ்ஞானிகளுக்கு நேர் எதிர்த்தட்டானவர்களாய் தாழ்ந்த பலன்களை விரும்பும் அறிவிலிகளின் தன்மைகளை விவரித்தல்.

22. தன்னை நினைப்பது தவிர வேறொன்றறியாத மஹாத்மாக்களின் யோகக்ஷேமங்களைத் தானே வஹிப்பதாகக் கூறுதல்.

23. வேதாந்த விதிப்படி மற்ற தேவதைகளுக்கு அந்தர்யாமியாகத் தன்னை அறியாமல் அவர்களிடம் பக்தி செலுத்துகிறவர்களுக்கு அதனாலேயே மோக்ஷம் கிடைப்பதில்லை.

ஆளவந்தார் அருளிய
கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹம்
[பத்தாவது அத்தியாயத்தின் சுருக்கம்]

स्वकल्याणगुणानन्त्यकृत्स्नस्वाधीनतामतिः ।
भक्त्युत्पत्तिविवृद्ध्यर्था विस्तीर्णा दशमोदिता ॥ १४ ॥

14. ஸ்வகல்யாணகு₃ணாநந்த்யக்ருத்ஸ்நஸ்வாதீ₄நதாமதி: ।
பு₄க்த்யுத்பத்திவிவ்ருத்₃த்₄யர்த்தா₂ விஸ்தீர்ணா
த₃ஶமோதி₃தா ॥

ப₄க்த்யுத்பத்திவிவ்ருத்₃த்₄யர்த்தா₂—ஸாத₄னப₄க்தி உண்டாகி வளர்வதன் பொருட்டு, **ஸ்வகல்யாணகு₃ணாநந்த்ய க்ருத்ஸ்நஸ்வாதீ₄நதாமதி:** — தனது கல்யாணகு₃ணங்களின் அளவின்மைபற்றியும், அனைத்தும் தனக்கு அதீ₄னமாயிருப்பதுபற்றியும் உள்ள அறிவு, **விஸ்தீர்ணா**—விரிவாக, **த₃ஶமோதி₃தா**—பத்தாமத்தியாயத்தில் சொல்லப்பட்டது.

---

24. தே₃வதைகளைக் குறித்த யாக₃ங்கள் பரமபுருஷனுக்கே ஆராத₄னமாகின்றன என அறிந்தவர்களுக்கு மோக்ஷமும், அப்படி அறியாதவர்களுக்கு அல்பாஸ்தி₂ர ப₂லன்களுமே கிடைக்கும்.

25. முற்கூறியபடி பலனில் வேறுபாடு அவரவர்களின் ஸங்கல்பத்தின் வேறுபாட்டாலே விளைகிறது.

26. தான் ஆராத₄னைக்கு மிக எளியவன் என நிரூபித்தல்.

27. ப₄க்தியோக₃த்திற்கு அங்க₃மான அநுஸந்த₄ானம்.

28. அவ்வநுஸந்த₄ானத்தின் ப₂லன்.

29, 30. ஜன்மம், ஆகாரம், ஸ்வப₄ாவம், ஜ்ஞானம், ஒழுக்கம் ஆகியவற்றால் எத்தனை தாழ்ந்தவனாயினும் ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்தியைச் செய்தானாகில் அவனிடம் கண்ணனின் ஈடுபாடு.

31. ஒழுக்கத்தில் குறைந்தவனானாலும் ப₄க்தி செய்தால் விரைவில் த₄ர்மாத்மாவாகி நற்பேறு பெறுவான்.

32, 33. முற்பிறப்புக்களில் செய்த பாப மிகுதியாலே தாழ்ந்த பிறவியை எடுத்தவர்களும் தன்னை ஆஶ்ரயிப்பதாலேயே மோக்ஷமடையும்போது, உயர்பிறவியினர் தன்னை ஆஶ்ரயித்து மோக்ஷமடைவது நிச்சயம் என்று கூறி அர்ஜுனனை ப₄க்தி செய்யும்படி விதி₄த்தல்.

34. ஸாத₄னப₄க்தியின் தனித்தன்மைகளை விவரித்தல்.

ஒன்பதாம் அத்தியாயத்தின் கீ₃தாஶ்லோகார்த்த₂ச் சுருக்கம் நிறைவுற்றது.

வாதிகேஸரி ஜீயர் அருளிய

பகவத்கீதை வெண்பா—அத்தியாயம் 10

விபூ4தியோக3ம்

அத்தியாயப் பொருளின் சுருக்கம்

அண்ண லுலகி லனைத்துந்தா னாய்நின்ற
வண்ணம் விரித்துரைத்த வண்மையினைத்—திண்ணமாங்
கன்புறவே யோங்க வருள்கீதை பத்தாமோத்
தின்புறவே யோது மெடுத்து.

அண்ணல்—ஸ்வாமியான கண்ணன், *திண்ணம்*—உறுதியாக, *ஆங்கு* — போர்க்களத்திலே, *அன்புறவே* — அன்புடன், *ஓங்க அருள் கீதை* — உலகெங்கும் பரவ அருளிய கீ3தையின், *பத்தாம் ஒத்து*—பத்தாவது அத்தியாயம், *உலகில் அனைத்தும்*—உலகிலுள்ள எல்லாப் பொருள்களும், *தானாய் நின்ற வண்ணம்*—தனக்கு அதீ4னமாய் நின்ற ப்ரகாரத்தை, (*அண்ணல்*) *விரித்து உரைத்த வண்மையினை*—(கண்ணன்) விரிவாகக் கூறிய வள்ளல் தன்மையை, *இன்புறவே*—(அனைவரும்) ஆனந்த3மடையும்படியாக, *எடுத்து ஓதும்*—விளங்கும்படி கூறும்.

ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி த3ாஸன் இயற்றிய

கீ3தார்த்த2 விவரணம்—பத்தாம் அத்தியாயம்

முன் அத்தியாயத்தோடு ஸங்க3தியும்,
இவ்வத்தியாயார்த்த2ச் சுருக்கமும்.

இரண்டாவது ஷட்கத்தில் ஏழு, எட்டு, ஒன்பது அத்தியாயங்களில் ப4க்தியோக3ம், அதற்கு உறுப்பான பல அர்த்த2ங்களோடு கூடச் சொல்லப்பட்டது. பத்தாவதான இந்த அத்தியாயத்தில் அந்த ப4க்தியானது உண்டாகி வளர்வதன் பொருட்டு—எல்லாக் கல்யாணகு3ணங்களும் நிறைந்து, தே3ாஷமற்று விளங்குகையாலே ப4க3வான் எனப்படும் தன்னுடைய தடையற்ற ஐஶ்வர்யம் முதலான கல்யாணகு3ணங்கள் கணக்கற்றவை என்பதையும், எல்லாவுலகமும் தனக்கு ஶரீரமாயிருக்கையால், தன்னை அந்தர்யாமியாகக்கொண்டு, தனக்கு அதீ4னமான ஸ்வரூப ஸ்தி2தி ப்ரவ்ருத்திகளையுடையதாயிருக்கிறது என்பதையும் கண்ணன் விரிவாக நிரூபிக்கிறான். முன் அத்தியாயங்களிலும் ப4க்தியோக3த்துக்கு உறுப்பானவையாகையாலே இவ்விஷயங்கள் சுருக்கமாகச் சொல்லப்பட்டன. இப்போது ப4க்தி உண்டாகி வளருவதற்காக விரிவுபடுத்தப்படுகின்றனவாகையாலே புநருக்தியில்லை.

श्रीः

अथ दशमोऽध्यायः ॥

॥भा॥ भक्तियोगस्सपरिकर उक्तः। इदानीं भक्त्युत्पत्तये तद्विवृद्धये च भगवतो निरङ्कुशैश्वर्यादिकल्याणगुणगणानन्त्यम्, कृत्स्नस्य जगतस्तच्छरीरतया तदात्मकत्वेन तत्प्रवर्त्यत्वं च प्रपञ्चयते—

श्रीभगवानुवाच—

भूय एव महाबाहो शृणु मे परमं वचः।
यत्तेऽहं प्रीयमाणाय वक्ष्यामि हितकाम्यया॥ १ ॥

ஶ்ரீப₄க₃வாநுவாச—

1. பூ₄ய ஏவ மஹாபா₃ஹோ ஶ்ருணு மே பரமம் வச:।
யத்தேऽஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா॥

மஹாபா₃ஹோ—தடக்கையனே!, **ப்ரீயமாணாய தே**—(என் பெருமையைக் கேட்டு) உகக்கும் உனக்கு, **ஹித காம்யயா**—(என் விஷயமான ப₄க்தி உண்டாவதும் வளரு வதுமாகிற) நன்மையின் பொருட்டு **பூ₄ய:**—மறுபடியும், **யத் பரமம் வச: ஏவ**—(என் பெருமையை விரித்துரைக்கும்) யாதொரு மேலான வார்த்தையையே, **அஹம் வக்ஷ்யாமி**—நான் கூறுகிறேனே, **(தத்) மே (பரமம் வச:)**—அந்த என்னுடைய மேலான வார்த்தையை, **ஶ்ருணு**—(கவனமாகக்) கேட்பாயாக.

---

1. முன்னமுகந் தென்னை முகஞ்செய்து கேட்டவுனக்
**கின்னமுமென் மேன்மை யியம்புவன்கேள்—உன்னதிதம்
வேண்டியுரை செய்யுமென்றன் மிக்கவுரை வெல்புயத்தா
யீண்டியன்று கேணமையலற் றிங்கு.**

வெல்புயத்தாய்! — வெற்றியைத்தரும் கைகளையுடையவனே! **முன்னம் உகந்து**—கேட்பதற்கு முன்னமே உகப்படைந்து, **என்னை**—என்னிடம், **முகம் செய்து கேட்ட**

॥ भा ॥ मम माहात्म्यं श्रुत्वा प्रीयमाणाय ते मद्भक्त्युत्पत्ति-

---

உனக்கு—முகங்கொடுத்துக் கேட்ட உனக்கு, உன்னது இதம் வேண்டி — (என் விஷயமான ப₄க்தி உண்டாவதும் வளருவதுமாகிற) உனது நன்மையின் பொருட்டு, இன்னமும்—மறுபடியும், என் மேன்மை இயம்புவன் கேள்—என்னுடைய பெருமையைச் சொல்லுகிறேன், கேட்பாயாக. (எப்படிக் கேட்பது? எனில்) இங்கு உரை செய்யும் என்றன்—போர்க்களத்தில் உபதே₃ரிக்கும் என்னுடைய, மிக்க உரை—மேலான வார்த்தையை, ஈண்டு இயன்று—இவ்விஷயத்தில் கவனமுள்ளவனாய், மையல் அற்று—மயக்கம் அற்றவனாய், கேள்—கேட்பாயாக.

---

1. இந்த அத்தியாயத்தில் சொல்லப்போகும் அர்த்த₂த்தைக் கேட்பதற்கு அர்ஜுனனுக்குள்ள தகுதியையும், அவ்வர்த்த₂ம் பரம ஹிதத்தை விளைப்பது என்பதையும் கூறி, அர்ஜுனனைப் பாராட்டி, சொல்லப்போகும் அர்த்த₂த்தைக் குறிக்கொண்டு கேளாய் என்கிருன். (ப்ரீயமாணாய தே) உகந்திருக்கும் உனக்கு. என் பெருமையைச் சொன்னால் பொருமைகொண்டு முகம்சிவப்பவர்கள் நிறைந்திருக்கும் இவ்வுலகில், அப்படியல்லாமல் உகந்திருக்கும் உன்னை ஶ்ரோதாவாகப் பெற்றமையாலேயே, நீ கேளாமல் இருக்கச்செய்தே உனக்கு இந்த மேலான அர்த்த₂த்தைச் சொல்லுகிறேன் என்று கருத்து. (மஹாபா₃ஹோ!) தடக்கையனே! தோள்வலியுடையவர்கள் பொதுவாகப் பிறர் பெருமையைக் கேட்கப் பொறுக்கமாட்டார்கள். கேட்பார் செவிசுடும் கீழ்மை வசவுகளை வையவும் தொடங்குவார்கள். சிசுபாலன் போன்ற இத்தகையவர்கள் நிறைந்த இவ்வுலகில், தலைசிறந்த தோள்வலியைப் பெற்றிருந்தும் என் பெருமையைக்கேட்டு உகக்கும் பேறுபெற்றவனாகையாலே உனக்குச் சொல்லுகிறேன் என்று கருத்து. அன்றிக்கே, "மஹாபா₃ஹோ, ப்ரீயமாணாய" என்னும் இரண்டு பத₃ங்களாலும் தோள்வலியாலே வெளிஎதிரிகளை வென்றிருப்பதுபோலே, என்னிடம் அன்பின் வலிமையால் பொருமை முதலான உள் எதிரிகளும் உன்னால் ஜயிக்கப்பட்டன என்று உணர்த்துவதாகவும் கொள்ளலாம். (ஹிதகாம்யயா) உனக்கு நன்மையை விரும்பி. சென்ற அத்தியாயத்தில் சொல்லப்பட்ட ப₄க்தியோக₃ம் தொடங்கி வளர்வதாகிற நன்மையின் பொருட்டு என்று கருத்து.

विवृद्धिरूपहितकामनया भूयो मन्माहात्म्यप्रपञ्चविषयमेव परमं वचो यद्वक्ष्यामि ; तदवहितमनाश्शृणु ॥ १ ॥

न मे विदुस्सुरगणाः प्रभवं न महर्षयः।
अहमादिर्हि देवानां महर्षीणां च सर्वशः॥

2. ந மே விது3ஸ்ஸுரக3ணா: ப்ரப4வம் ந மஹர்ஷய: |
அஹமாதி3ர்ஹி தே3வாநாம் மஹர்ஷீணாம் ச ஸர்வஶ: ||

ஸுரக3ணா: — தே3வகணங்கள், மே ப்ரப4வம் — எனது பெருமையை, ந விது3: — அறியார்கள். மஹர்ஷய:— மஹரிஷிகளும், ந விது3:—(அதை) அறியார்கள். ஹி—

மேலே மூன்ருவது ஶ்லோகத்தில் "ஸர்வபாபை: ப்ரமுச்யதே" என்று ப4க்தி உண்டாவதற்குத் தடையான பாபங்கள் போவதையும், ஏழாவது ஶ்லோகத்தில் "ஸோऽவிகம்ப்யேந யோகே3ந யுஜ்யதே" [அவன் அசைக்கமுடியாத ப4க்தியோக3த்தை உடையவனுகிருன்] என்று ப4க்தி வளர்ந்து அசைக்கமுடியாதபடி ஆவதையும் அருளினனன்றே. (பூ4ய ஏவ பரமம் வச:) மறுபடியும் மேலான வார்த்தையை. சென்ற அத்தியாயங்களிலும் சொல்லப்பட்ட என் பெருமை இங்கு மறுபடியும் ப4க்தி உண்டாகி வளர்வதற்காக விரிவாகச் சொல்லப்படுகிறது; அதனலேயே அது மேலான வார்த்தையாகவும் ஆகிறது என்று கருத்து. (பரமம் வச: யத் அஹம் வக்ஷ்யாமி (தத்) ஶ்ருணு) மேலானயாதொரு இவ்வார்த்தையைக் கூறுகிறேனே, அதைக் குறிக்கொண்டு கேளாய். ஏற்கனவே கேட்டுக்கொண்டிருப்பவனே 'ஶ்ருணு' (கேளாய்) என்பது—சொல்லப்போகும் அர்த்த2ம் மிகச் சீரியதாகையாலே நெஞ்சை வேறுவிஷயத்தில் செலுத்தாமல் குறிக்கொண்டு கேட்கவேணும் என்னும் கருத்தையுடையது. சென்ற அத்தியாயத்தின் தொடக்கத்தில் "ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே" என்று பொருமையாகிற தோ3ஷமில்லாமலிருந்த உனக்குச் சிறந்ததொரு அர்த்த2த்தைச் சொன்னேன். இங்கு 'ப்ரீயமாணய தே பரமம் வச:' என்று பொருமையின்மைக்கும் மேலே நான் சொல்லுவதைக்கேட்டு உகப்பையும் அடையும் பெருமைபெற்ற உனக்கு முன் சொன்னதைக் காட்டிலும் மேலானதொரு அர்த்த2த்தைச் சொல்லப் போகிறேன். ஆகையால் நீ மிகவும் கவனமாகக் கேட்கவேண்டும்—என்பது ஶ்லோகத்தின் திரண்ட பொருள். 1.

ஏனெனில், **தே₃வாநாம்** — தே₃வர்களுக்கும், **மஹர்ஷீணும் ச**—மஹரிஷிகளுக்கும, **அஹம்**—நான், **ஸர்வஶ:**—எல்லாப் படியாலும், **ஆதி₃:**—காரணமாயிருப்பவனன்றே.

**2. ஏய்ந்தென் பெருமை யிமையோ ரெழின்முனிவ
ராய்ந்தங் கிறையு மவரறியார்—வாய்ந்தியலுஞ்
சாதிசேர் பூதங்க ளுக்குந் தவத்தோர்க்கு
மாதிநான் யார்க்கு மமைந்து.**

அவர்—அறிய ஒண்ணுத பெருமைகளையுடைய, **இமையோர்**—தேவர்களும், **எழில் முனிவர்**—ஜ்ஞானத்தில் அழகு பெற்ற முனிவர்களும், **என் பெருமை** — என்னுடைய சிறப்பை, **ஏய்ந்து**—பொருந்திநின்று, **ஆய்ந்து**—ஆராய்ந்து, **அங்கு இறையும்**—அதில் சிறிதும், **அறியார்**—அறியமாட்டார்கள். **வாய்ந்து இயலும் சாதிசேர் பூதங்களுக்கும்**—(இந்த லீலாவிபூ₄தியில்) பொருந்திவாழும் நாலுவகை யோனிகளுள் உயர்ந்தஜாதியைச் சேர்ந்த சேதனரான தேவர்களுக்கும், **தவத்தோர்க்கும்**—மஹரிஷிகளுக்கும், **யார்க்கும்**—பெருமை பெற்ற மற்றவர்களுக்கும், **அமைந்து** — பொருத்தமான, **ஆதி**—காரணமாயிருப்பவனன்றே, **நான்**—நான்.

---

2. இவ்வத்தியாயத்தில் தான் சொல்லப்போகும் ஜ்ஞானத்தில் பேரார்வம் உண்டாவதற்காக அது மிகவும் கிடைத்தற்கரிது என்று கூறுகிருன். (ஸுரக₃ணு: மஹர்ஷயஶ்ச) தே₃வஸமூஹங்களும் மஹரிஷிகளும், ''யாருமோர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமான்'' [திருவாய் 1-3-4] என்கிற ரீதியில் இந்த்₃ரியங்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களையும் அறியவல்ல தலைசிறந்த ஜ்ஞானத்தையும், ஶக்தியையும் உடையவர்களான பிரமன், உருத்திரன் முதலான தே₃வர்களையும், ஸநகர், ஸநந்த₃னர், ஸநத்குமாரர் முதலான ரிஷிகளையும் இங்கு சொன்னது இந்த்₃ரியங்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களைக் காணவல்ல அனைவர்க்கும் உபலக்ஷணம். (மே ப்ரப₄வம் ந விது₃:) தலைசிறந்த ஞானத்தை உடையவர்களும் எனது ப்ரப₄ாவத்தை (பெருமையை) அறியமாட்டார்கள். என்னுடைய திருநாமங்கள், செயல்கள், ஸ்வரூபம், ஸ்வப₄ாவம் முதலானவற்றை அறியமாட்டார்கள் என்றபடி.

॥ भा ॥ सुरगणा महर्षयश्चातीन्द्रियार्थदर्शिनोऽधिकतरज्ञाना अपि मे प्रभवं—प्रभावं न विदुः—मम नामकर्मस्वरूपस्वभावादिकं न जानन्ति; यतस्तेषां देवानां महर्षीणां च सर्वशोऽहमादिः—तेषां स्वरूपस्य ज्ञान

"ப்ரப4வ ஶப்3த3ம் உத்பத்தி என்னும் பொருளிலேயே பிரஸித்3த4மானது. அப்படியிருக்க, இங்கு அப்ரஸித்3த4மான ப்ரப4ாவம் (பெருமை) என்னும் பொருளைக் கொள்வது பொருந்தாதே. ஆகையால் 'கர்மம் காரணமான பிறப்பு தனக்கு இல்லை என்று சொல்லுகிறான்' என்றோ, 'அவதாரரூபமான பிறப்பின் பெருமையை எவரும் அறியார்கள் என்று சொல்லுகிறான்' என்றோ கொண்டுவிடலாமே" என்னும் ஆக்ஷேபம் இங்கு எழுகிறது. இதற்கு ஸமாத4ானம் பின் வருமாறு:— கர்மாதீ4னமான பிறப்பே இல்லாமலிருக்கும்போது அதை அறியமாட்டார்கள் என்று நிஷேதி4ப்பது பொருந்தாது. பிறப்பு இல்லை என்று சொல்லவேண்டிய இடத்தில் 'பிறப்பை அறியமாட்டார்கள்' என்று சொல்லுவது கௌ3ரவமும் (அனாவசியமாக அதிகப்படி பேசுதலும்) ஆகும். அடுத்த ஶ்லோகத்தில் "யோ மாம் அஜம்" என்று தன் பெருமையையே கூறுகின்றான். 'அஜம்' என்று பிறப்பின்மையைக் கூறுகிறானேயொழிய தன் பிறப்பைப் பற்றிய அறிவைக் கூறவில்லை. ஆகையால் இப்பொருள் ப்ரகரணத்துக்கும் பொருந்தாது. ஶ்லோகத்தின் அடுத்த பாதியில் தான் அனைவர்க்கும் காரணமாயிருப்பதை முற்பாதியில் சொன்ன அர்த்த2த்துக்கு ஹேதுவாகக் கூறியதும் இப்பொருளில் பொருந்தாது. இதே காரணத்தினாலே— நாலாவது அத்தியாயத்தில் விளக்கப்பட்டதாய், இந்த ப்ரகரணத்தில் இல்லாததான அவதார ரஹஸ்யத்தைப் பற்றி இங்கு பேசுவதாகக் கொள்வதும் பொருந்தாது. ஆகையால் 'ப4வ' ஶப்3த3ம் ஸத்தையைக் குறிப்பதாகக் கொண்டு 'ப்ரகர்ஷேண ப4வ: ப்ரப4வ:' என்னும் வ்யுத்பத்தியாலே சிறந்த ஸத்தையான ப்ரப4ாவத்தை ப்ரப4வ ஶப்3த3ம் கூறுவதாகக் கொள்வதே பொருந்தும். இனி ஶ்லோகத்தின் அடுத்த பாதியாலே முற்பாதியில் சொன்ன அர்த்த2த்துக்குக் காரணத்தைக் காட்டுகிறான். (ஹி) ஏனெனில், (அஹம் தே3வாநாம் மஹர்ஷீணாம் ச ஸர்வஶ: ஆதி3:) தே3வர்கள், மஹரிஷிகள் முதலான அனைவரது ஸ்வரூபத்துக்கும், ஜ்ஞானம் ஶக்தி முதலிய கு3ணங்களுக்கும் நானே காரணமாயிருப்பவன். 'தே3வாநாம் மஹர்ஷீணாம்' என்னும் பன்மையாலேயே தே3வர்கள், மஹர்ஷிகள் ஆகிய அனைவர்க்கும் காரணம் என்று ஸித்3தி4த்து விடுகிறபடியால் 'ஸர்வஶ:'

शक्त्यादेश्चाहमादिः ; तेषां देवत्वदेवर्षित्वादिहेतुभूतपुण्यानुगुणं मया दत्तं ज्ञानं परिमितम् ; अतस्ते परिमितज्ञाना मत्स्वरूपादिकं यथावन्न जानन्ति ॥ २ ॥

என்னும் பதமும் ஸ்வரூபத்துக்கும், ஜ்ஞானம், ஶக்தி முதலான எல்லா ஸ்வபாவங்களுக்கும் காரணம் என்று காட்டுகிறது. இப்படி இவன் அனைவர்க்கும் ஸ்வரூபம், ஸ்வபாவம் முதலான எல்லாப் படிகளாலும் காரணனாயிருப்பது அவர்கள் இவனது பெருமையை அறிய முடியாமைக்கு எப்படிக் காரணமாகும்? எனில்: அவர்களுடைய தேவத்வம், மஹர்ஷித்வம் முதலானவற்றுக்குக் காரணமான புண்யங்களுக்கு அநுகுணமாக என்னால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அறிவு அளவுபட்டதாகும். ஆக இப்படி அளவு பட்ட அறிவையுடையவர்களாயிருக்கையாலே, அவர்கள் எனது ஸ்வரூபம் முதலானவற்றை உள்ளபடி அறியமாட்டார்கள் என்றபடி. ''கோ அத்தா வேத க இஹ ப்ரவோசத்। குத ஆஜாதா குத இயம் விஸ்ருஷ்டி:। அர்வாக்தேவா அஸ்ய விஸர்ஜநாய। அதா கோ வேத யத ஆபபூவ। இயம் விஸ்ருஷ்டிர்யத ஆபபூவ। யதி வா ததே யதி வா ந। யோ அஸ்யாத்யக்ஷ: பரமே வ்யோமந்। ஸோ அங்க வேத யதி வா ந வேத ॥'' [யஜு- அஷ்ட 2-8-9-76] [(ஜகத்காரணப்பொருளை) எவன் (உள்ளபடி) அறிவான்? எவன் அதை உள்ளபடி பேசுவான்? 'படைக்கப்பட்டுக் காட்சியளிக்கும் இந்தப் பொருள்களெல்லாம் எதை உபாதானமாகவும், எதை நிமித்தமாகவும் கொண்டு உண்டாயின?' என்பதை ஸ்ருஷ்டிக்குப் பிறகு ஏற்பட்ட தேவர்களிலேயே எவரும் அறியமாட்டாதபோது வேறு எவன் ஜகத்காரணப் பொருளை அறியமுடியும்? இப்பொருள்களையெல்லாம் அப்பரம்பொருள் தரித்து நிற்கிறதா, அல்லவா என்பதை எவன் அறிவான்? இப்பொருள்களுக்கெல்லாம் தலைவனாகப் பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் பரமாத்மாவே (தன் அளவற்ற பெருமையை) அறிவானோ, மாட்டானோ?] என்று வேதங்களிலும், 'யந்ந தேவா ந முநயோ ந சாஹம் ந ச ஶங்கர:। ஜாநந்தி பரமேஶஸ்ய தத்விஷ்ணோ: பரமம் பதம்'' [வி பு 1-9-55] [தேவர்களும், முனிவர்களும், (பிரமனாகிய) நானும், ஶங்கரனும் எதை அறியமாட்டோமோ, அதுவே பரமேஸ்வரனான விஷ்ணுவின் பரம ப்ராப்யமான ஸ்வரூபம்] முதலான உபப்ருஂஹணங்களிலும் இவ்வர்த்தம் சொல்லப்பட்டதன்றோ. ஆக, சொல்லப்போகும் ஜ்ஞானம் மிகவும் ஆசைப்படத்தக்கது என்று காட்டுவதற்காக அது மிகுந்த

॥ भा ॥ तदेतद्देवाद्यचिन्त्यस्वयाथात्म्यविषयज्ञानं भक्त्युत्पत्तिविरोधिपापविमोचनोपायमाह—

यो मामजमनादिं च वेत्ति लोकमहेश्वरम्।
असंमूढस्स मर्त्येषु सर्वपापैः प्रमुच्यते ॥

3. யோ மாமஜமநாதி₃ம் ச வேத்தி லோகமஹேஶ்வரம் ।
அஸம்மூட₄ஸ்ஸ மர்த்யேஷு ஸர்வபாபை: ப்ரமுச்யதே ॥

மர்த்யேஷு அஸம்மூட₄: ய:—மனிதர்களுக்குள், என்னை மற்றவர்களோடு ஒத்தவனாக எண்ணும் மயக்கமற்றவனான எவனொருவன், **மாம்**—என்னை, **அஜம்**—பிறப்பற்றவனாகவும், (அதிலும்) **அநாதி₃ம்**—அநாதி₃காலமாகப் பிறப்பற்றவனாகவும், **லோகமஹேஶ்வரம் ச**—லோகேஶ்வரர்களுக்கும் ஈஶ்வரனாகவும், **வேத்தி** — அறிகிறானோ, **ஸ:** — அவன், **ஸர்வபாபை:**—(ப₄க்தி உண்டாவதற்குத் தடையான) எல்லாப் பாபங்களிலிருந்தும், **ப்ரமுச்யதே**—விடுபடுகிறான்.

**3. ஆதி யிலனா யயனா மெனையுலகின்
மீதறியு மீசனா மெய்யறிவோன்—தீதின்
மதிக்கலக்க மற்றவவன் மானிடரிற் பாவக்
கதிக்கலப்பெல் லாங்கழிந்தான் காண்.**

ஆதி இலனாய் அயனும்—பிறப்பற்றவனாகவும், (அதிலும்) அநாதி₃காலமாகப் பிறப்பற்றவனாகவும், **உலகின் மீதறியும் ஈசனும்**—உலகில் ஈஶ்வரர்களாயிருப்பவர்களுக்கும் ஈசனாக அறியப்படும், **எனை**—என்னை, **மானிடரில்**—மனிதர்களுக்குள்ளே, **மெய்யறிவோன்** — உள்ளபடி அறிகிறவனாய், **தீதில் மதிக்கலக்கமற்ற அவன்** — தீதற்ற அறிவிலே என்னையும், மற்றவர்களையும் ஒன்றாக மயங்கும் கலக்கமற்றவனான அவன், **பாவக் கதிக்கலப்பு எல்லாம் கழிந்தான் காண்**-(எனது ப₄க்தி உண்டாவதற்கு விரோதி₄யாகக்) கலந்து நிற்கும் பாவங்களனைத்தும் கழியப்பெற்றவனாவான்.

ஜ்ஞான ஶக்தியுடையவர்களாலும் பெறற்கரிது என்று நிரூபிக்கப் பட்டதாயிற்று. 2.

॥भा॥ न जायत इत्यजः; अनेन विकारिद्रव्यादचेतनात्तत्संसृष्टसंसारिचेतनाच्च विसजातीयत्वमुक्तम्; संसारिचेतनस्य हि कर्मकृताचित्संसर्गो जन्म। * अनादिमित्यनेन पदेनादिमतोऽजात् मुक्तात्मनो विसजातीयत्वमुक्तम्। मुक्तात्मनो ह्यजत्वमादिमत्, तस्य हेयसंबन्धस्य

---

3. தே₃வர் முனிவர் முதலானவர்களாலும் அறிதற்கரிய தன்னைப் பற்றிய உண்மையறிவு ப₄க்தியோக₃ம் உண்டாவதற்குத் தடையாயிருக்கும் பாபங்களைப் போக்கும் உபாயமாகும் என்று காட்டுகிறான். (அஜம்) பிறப்பற்றவன். 'ந ஜாயதே இத்யஜ:' [பிறக்காதவனாகையாலே அஜன் எனப்படுகிறான்] என்று வ்யுத்பத்தி. இத்தால் ஸ்வரூப விகாரத்தை அடையும் அசேதனத்தையும், அத்தோடு சேர்ந்தவனாய், கர்மம் காரணமாகத் தாழ்ந்த ஸ்வப₄ாவ விகாரங்களையடையும் ஸம்ஸாரி (ப₃த்₃த₄) சேதனனையும் காட்டிலும் தான் மிகவும் வேறுபட்டவன் என்று காட்டிக்கொண்டானாயிற்று. ''அஜோ நித்யஶ் ஶாஶ்வத:'' [கட 1-2-18] [பிறப்பற்றவனாய், மரணமற்றவனாய், தன்னை உண்டாக்குமவனில்லாதவனாயிருப்பவன் ஜீவன்] என்கிறபடியே ஸம்ஸாரி சேதனனுடைய ஸ்வரூபம் நித்யமாயினும், கர்மத்தினால் ஏற்பட்ட ஶரீரஸம்ப₃ந்த₄மாகிற பிறப்பு அவனுக்கு உண்டன்றோ. எம்பெருமானுக்குச் சேதநாசேதனங்கள் ஶரீரமாயினும், அந்த ஶரீரம் கர்மத்தினால் ஏற்பட்டதல்லவாகையாலே ஜீவனுடைய ஶரீர ஸம்ப₃ந்த₄ம் போலே தாழ்வை விளைக்காது. முக்தாத்மாவுக்கும் பிறப்பு இல்லாவிடினும் அவனுக்கு ஒரு காலத்தில் பிறப்பு இருந்ததையிட்டு, அவனைக் காட்டிலும் தனக்குள்ள சிறப்பைக் காட்டுகிறான்—(அநாதி₃ம் அஜம்) அநாதி₃காலமாகப் பிறப்பற்றவன். இத்தால், நெடுங்காலம் பிறப்புடையவனாயிருந்து ஒரு காலத்தில் முக்தியடைந்த பின்பே பிறப்பற்றவனாகும் முக்தாத்மாவைக் காட்டிலும் சிறப்பு காட்டப்படுகிறது. அநாதி₃ ஶப்₃த₃த்தாலே ப₄க₃வத்ஸ்வரூபம் அநாதி₃யானது என்று கொண்டால், 'அஜ' ஶப்₃த₃த்தோடே புநருக்தி வருமாகையாலே, அநாதி₃ ஶப்₃த₃ம் அஜ ஶப்₃த₃த்துக்கு விஶேஷணமாகக் கொள்ளப் பட்டது. முக்தனுக்கு ஒரு காலத்திலிருந்த ஶரீரஸம்ப₃ந்த₄ம் கழிந்திருப்பது ப₃த்₃த₄னைக் காட்டிலும் அவனுக்கு வேறுபாட்டைக் காட்டுமேயொழிய, அசித் ஸம்ப₃ந்த₄ம் கழிந்த முக்தஸ்வரூபத்தைக்காட்டிலும் ப₄க₃வத்ஸ்வரூபத்துக்கு வேறுபாடு எப்படி ஸித்₃தி₄க்கும் எனில்: முக்தனுக்கு ஏற்கனவே ஶரீரஸம்ப₃ந்த₄ம் இருந்தமையால் அந்த ஶரீர ஸம்ப₃ந்த₄ம் ஏற்படத் தகுதியுண்டு. அப்படி ஏற்படக் கூடாது என்று

पूर्वंवृत्तत्वात्तदर्हताऽस्ति ; अतोऽनादिमित्यनेन तदनर्हतया तत्प्रत्यनीकता उच्यते ; * निरवद्यम् (श्वे. ६. १९) इत्यादिश्रुत्या च। एवं हेयसंबन्धप्रत्यनीकस्वरूपतया तदनर्हं मां लोकमहेश्वरम् — लोकेश्वराणामपि ईश्वरं मर्त्येष्वसंमूढो यो वेत्ति ; इतरसजातीयतयैकीकृत्य मोहस्संमोहः, तद्रहितोऽसंमूढः, स मद्भक्त्युत्पत्तिविरोधिभिस्सर्वैः पापैः प्रमुच्यते।

ப4க3வான் ஸங்கல்பித்து வைத்திருக்கையாலே ஏற்படுவதில்லையித்தனே. ஸர்வேஸ்வரனுக்குக் கர்மம் காரணமாக ஶரீரஸம்ப3ந்த4ம் ஏற்படத்தகுதியேயில்லையாகையால் அநாதி3 ஶப்3த3ம் முக்தஸ்வரூபத்தைக் காட்டிலும் ப4க3வத்ஸ்வரூபத்துக்குச் சிறப்பைக் காட்டத் தடையில்லை. ''நிரவத்3யம்'' [ஶ்வே 6-19] [முக்காலத்திலும் ஶரீர ஸம்ப3ந்த4ம் முதலிய குற்றமற்றவன்] என்று ஶ்ருதியிலும் இவ்வர்த்த2ம் முழங்கப்பட்டது. (மாம் லோகமஹேஶ்வரம் மர்த்யேஷு அஸம்மூட4: ய: வேத்தி) முற்கூறியபடி தாழ்ந்த ஶரீரஸம்ப3ந்த4த்துக்கு எதிர்த்தட்டாயிருக்கையாலே அதற்குத் தகுதியேயில்லாத என்னை லோகேஶ்வரர்களுக்கும் ஈஶ்வரனாக மனிதர்களில் மயக்கமற்றவனான எவன் அறிகிறானோ. நாலாவது பாத3த்தில் பாபங்கள் நீங்குவதாகிற ப2லனைக் கூறுகையால், மூன்றாவது பாத3த்திலுள்ள அஸம்மூட4மர்த்ய ஶப்3த3ங்களை அதோடு கூட்டுவது பொருந்தாது. தே3வர்களுக்கும் மஹரிஷிகளுக்கும் கிடைக்க அரிதான இந்த அறிவு மனிதர்களில் பா4க்3யஶாலியான எவனோ ஒருவனுக்கே ஏற்படுமாகையாலே ''மர்த்யேஷு அஸம்மூட4: ய: வேத்தி' '' என்று முன்பாதியோடே கூட்டிப் பொருள்கொள்வதே பொருத்தமாகும். ''யோ மாமேவமஸம்மூட4: ஜாநாதி புருஷோத்தமம் ' [கீதை 15-19] என்று கீ3தையில் மேலே சொல்லப்போவதோடும் ஒட்டியிருக்கும். (அஸம்மூட4:) பிரமன் உருத்திரன் முதலான மற்ற தே3வர்களோடும், மனிதர்களோடும் ஒத்தவனாகக் கண்ணை நினைத்து மயங்குகை ஸம்மோஹமாகும். அந்த மயக்கமற்றவன் அஸம்மூட4னாகிறான். இத்தகைய மயக்கமற்ற மனிதன் ப3த்3த4ர்கள், முக்தர்கள், லோகேஶ்வரர்கள் ஆகிய அனைவரைக் காட்டிலும் வேறுபட்டவனாகத் தன்னை அறிவதற்குப் ப2லனைக் கூறுகிறான்—(ஸ: ஸர்வ பாபை: ப்ரமுச்யதே) அவன் என் விஷயமான ப4க்தியோக3ம் உண்டாவதற்குத் தடையான எல்லாப் பாபங்களினின்றும் நீங்கப் பெறுகிறான். இது ப4க்தியோக3ம் உண்டாவது பற்றிய ப்ரகரணமாகையாலும், அடுத்துள்ள ஏழாவது ஶ்லோகத்தில் ''எனது ஐஶ்

एतदुक्तं भवति — लोके मनुष्याणां राजा इतरमनुष्यसजातीयः, केनचित्कर्मणा तदाधिपत्यं प्राप्तः; तथा देवानामधिपतिरपि; तथा अण्डाधिपतिरपि इतरसंसारिसजातीयः, तस्यापि भावनात्रयान्तर्गतत्वात्,

---

வர்யத்தையும், கு₃ணங்களையும் உள்ளபடி அறிந்தவன் அசையாத ப₄க்தியோக₃த்தை உடையவனாகிறான்'' என்று கூறுகையாலும், இங்கு ப₄க்தியோக₃த்துக்குத் தடையான பாபங்கள் நீங்குவதே கூறப்படுகிறது என்று கொள்ளவேண்டும்.

இங்கு சில ஐயங்கள் எழுகின்றன:—(1) லோகமஹேஶ்வரனாகப் பரமாத்மாவை அறிந்தவனுக்கு ஸம்மோஹத்துக்கு இடமேயில்லை. ஆகையால் மனிதர்களுள் ஸம்மோஹமற்றவன் என்று நிஷேதி₄க்க வேண்டிய அவசியமில்லை. (2) பிரமன், உருத்திரன், ஸநகாதி₃கள் ஆகியவர்களும் லோகமஹேஶ்வரர்களாகப் புகழ்பெற்றிருக்கும்போது, பரமபுருஷன் ஒருவனே லோகமஹேஶ்வரன் என்பது எப்படிப் பொருந்தும்? (3) அஜம், அநாதி₃ம் என்னும் ஶப்₃த₃ங்களால் ப₃த்₃த₄ முக்தர்களைக் காட்டிலும் சிறப்பு கூறப்பட்டதுபோலே, லோகமஹேஶ்வரஶப்₃த₃த்தால் நித்யர்களைக் காட்டிலும் சிறப்பு கூறப்படுகிறது என்று கொள்வது பொருத்தமல்லவா—என்பவை அவ்வையங்கள். சேதனர் பரமபுருஷனை மற்றவர்களோடு ஒன்றாக நினைத்து மயங்கும் முறையையும், அந்த மயக்கம் நீங்கும் வழியையும் ஆலோசித்தால் இவ்வையங்களுக்குப் பரிஹாரம் ஏற்படும். உலகில் மனிதர்களுக்கு அரசனாயிருப்பவன் மற்ற மனிதர்களோடு ஒரே ஜாதியில் சேர்ந்தவனாயினும் ஒரு கர்மத்தால் அவர்களுக்கு அரசனாகியிருக்கிறான். இவ்வண்ணமாகவே, தே₃வர்களுக்குத் தலைவனான இந்திரனும் தேவ ஜாதியைச் சேர்ந்தவனாயினும், நூறு அஶ்வமேத₄ம் செய்தலாகிற கர்மத்தால் அவர்களுக்குத் தலைவனாகிறான். அவ்வண்ணமே இவ் வண்ட₃த்துக்கு அதி₄பதியான பிரமனும் ப்₃ரஹ்மபா₄வனை, கர்ம பா₄வனை எனும் உப₄யபா₄வனைகளையும் உடையவனாகையாலே மற்ற ஸம்ஸாரி சேதனர்களை ஒத்தவனாயினும், விஶேஷமான ஒரு ஸாத₄னாநுஷ்டா₂னத்தால் அண்டா₃தி₄பதியாயிருக்கிறான். ''யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄₂ாதி பூர்வம்'' [ஶ்வே 6-8] [எவன் பிரமனை முதலில் படைக்கிறானோ] என்னும் ஶ்ருதியாலும் பிரமன் படைக்கப்பட்டவனே என்று விளங்குகிறது. ''அணிமா மஹிமா சைவ க₃ரிமா லகி₄மா தத₂ா। ப்ராப்தி: ப்ராகாம்யம் ஈஶித்வம் வஶித்வம் சாஷ்டஸித்₃த₄ய: ||'' ''அணிமா மஹிமா ச தத₂ா லகி₄மா க₃ரிமா வஶித்வமைஶ்வர்யம்।

* यो ब्रह्माणं विदधाति (श्वे. ६, ८) इति श्रुतेश्च। तथाऽन्येऽपि येकेचन अणिमाद्यैश्वर्यं प्राप्ताः। अयं तु लोकमहेश्वरः—कार्यकारणावस्थादचेतनात् बद्धान्मुक्ताच चेतनात् ईशितव्यात् सर्वस्मान्निखिलहेयप्रत्य-

---

ப்ராப்தி: ப்ராகாம்யம் சேத்யஷ்டைஶ்வர்யாணி யோக₃யுக்தஸ்ய||'' [(1) அணிமா (மிகச்சிறிதாகை) (2) மஹிமா (மிகப்பெரிதாகை) (3) லகி₄மா (மிகக்குறைந்த எடையை உடையவனுகை) (4) க₃ரிமா (மிக அதி₄கமான எடையை உடையவனுகை) (5) ப்ராப்தி: (எதையும் அடைகை) (6) ப்ராகாம்யம் (தடையற்ற விருப்பம்) (7) ஈஶித்வம் (அனைவரையும் நியமிக்கை) (8) வஶித்வம் (அனைவரையும் வஶப்படுத்துகை) என்பவை அஷ்டைஶ்வர்யங்களாகும்] என்னும் அஷ்டமஹா ஸித்₃தி₄களையுடைய உருத்திரன் ஸநகாதி₃கள் முதலானவர்களும் முற்கூறியபடியே பல விஷயங்களில் ஸம்ஸாரி ஜீவர்களை ஒத்தவர்களாயினும் கர்மவிஶேஷத்தால் அந்த ஸித்₃தி₄களைப் பெற்றிருக்கிருர்கள். அதுபோல் லோகமஹேஶ்வரனை பரமபுருஷனும் ஒரு கர்மவிஶேஷத்தால் லோகமஹேஶ்வரனுயினும் பல விஷயங்களில் ஸம்ஸாரிஜீவர்களை ஒத்தவனுயிருக்கலாம் என்னும் ஸம்மோஹம் ஏற்பட இடமுண்டு. இது முதல் ஐயத்துக்குப் பரிஹாரம். இனி, இரண்டாவது ஐயத்திற்குப் பரிஹாரம் பின்வருமாறு:— பிரமன் முதலானுரை நாராயணனுல் படைக்கப்பட்டு, ரக்ஷிக்கப்பட்டு, ஸம்ஹரிக்கப் படுபவர்களாகப் பல ப்ரமாணங்கள் பறைசாற்றுகின்றன. ப்₃ரஹ்மத்தை உபாஸிக்கையாகிற ப்₃ரஹ்மபா₄வனை, பரமனுல் நியமிக்கப் பெற்று லோகஸ்ருஷ்டி முதலானவற்றைச் செய்கையாகிற கர்மபா₄வனை, இரண்டும் கலந்திருக்கையாகிற உப₄யபா₄வனை ஆகிய பா₄வநாத்ரயத்தில் ஏதாவதொன்றை உடையவர்களாகவும் முழங்குகின்றன. இத்தாழ்வுகள் நாராயணனுக்கு உள்ளதாகச் சொல்லாததோடன்றியில் இல்லையென்றும் அவை கோ₄ஷிக்கின்றன: ''நாராயணுத் ப்₃ரஹ்மா ஜாயதே நாராயணுத்₃ருத்₃ரோ ஜாயதே' ''ப்₃ரஹ்மா நாராயண: ஶிவஶ்ச நாராயண:' [நாராயணேபநிஷத்] ''ஸ ப்₃ரஹ்மா ஸ ஶிவ'' [தை-நா 11] 'ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்₃ரஹ்மா நேஶாந:'' [மஹோபநிஷத்] என்று உபநிஷத்துக்கள் நாராயணனே பிரமனையும், உருத்திரனையும் உண்டாக்குவதாகவும் ரக்ஷிப்பதாகவும், ஸம்ஹரிப்பதாகவும் முழங்குகின்றன. இப்படிப் பிரமருத்திரர்கள் நாரணனைப் படைத்தளித்து அழிப்பதாக எந்த உபநிஷத் வாக்யமும் கூறவில்லை. பிரமன் உருத்திரன் முதலான தே₃வர்களை ப்ரஸ்தாபித்து, ''அஜாத்₃த₄ாஸ்தே ஸமஸ்தாஸ்து தே₃வாத்₃யா: கர்மயோநய:'' [வி-பு

नीकानवधिकातिशयासंख्येयकल्याणगुणैकतानतया नियमनैकस्वभावतया च विसजातीय इति इतरसजातीयतामोहरहितो यो मां वेत्ति, स सर्वैः पापैः प्रमुच्यते इति॥ ३॥

6-7-77] [தே3வர்கள், மனிதர், திர்யக், ஸ்த2ாவரம் என்னும் நால்வகை யோனிகளும் (பிறப்புகளும்) கர்மம் காரணமாகப் பிறந்தவர்களாகை யாலே அஶுத்3த4ர்கள்] என்றார் பராஶரர். "ஆப்3ரஹ்ம ஸ்தம்ப3பர்யந்தா ஜக3த3ந்தர் வ்யவஸ்தி2தா:| ப்ராணிந: கர்மஜநித ஸம்ஸார வஶவர்த்திந: ||" [விஷ்ணுத4ர்மம் 104-22] [பிரமன் முதல் புல் ஈறாக வுள்ள உலகிலுள்ள ஜீவராஶிகள் அனைவரும் கர்மத்தினால் உண்டான ஸம்ஸார வாழ்க்கை நடத்துகிறவர்களே.] என்றார் சௌனகர். "ப்3ரஹ்மாணம் ஶிதிகண்ட2ம் ச யாஶ்சாந்யா தே3வதா: ஸ்ம்ருதா:| ப்ரதிபு3த்3த4ா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் ப2லம்||" [பா4ரதம்-மோக்ஷத4ர்மம் 350-36] [பிரமனையும், சிவனையும், இந்திரன் முதலான மற்ற தே3வர்களையும், அவர்களிடமிருந்து கிடைக்கும் ப2லன் அளவுபட்டிருக்கையால் அறிவாளிகள் ஸேவிப்பதில்லை] "ஏதௌ த்3வௌ விபு3த4ஶ்ரேஷ்டௌ2 ப்ரஸாத3க்ரோத4ஜௌ ஸ்ம்ருதௌ| தத3ா த3ர்ஶித பந்தா2நௌ ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரகௌ ||" [பா4ர-மோக்ஷ 169-19] [பிரமனும், உருத்திரனுமாகிற இவ்விரு தே3வர்தலைவர்களும். (முறையே) நாராயணனின் அருளாலும், கோபத்தாலும் உண்டானவர்களாகவும், அவனால் வழிகாட்டப்பெற்று. (முறையே) ஸ்ருஷ்டி ஸம்ஹாரத் தொழிலைச் செய்பவர்களாகவும் கூறப்படுகிறார்கள்] என்றார் பா4ரதத்தில் வியாஸர். 'ருத்3ர! யத்தே ஜநிம சாரு சித்ரம்" [ருக்-அஷ்டகம் 3-8-26] என்று ருக்3வேத3ம் உருத்திரனின் அழகிய செல்வம் அவனுக்கு ப4க3வத்ஸம்ப3ந்த4த்தினால் பிறவி தொடங்கி ஏற்பட்டது என முழங்கிற்று. "மஹாதே3வ: ஸர்வமேதே4 மஹாத்மா ஹுத்வாத்மாநம் தே3வதே3வோ ப3பூ4வ" [பா4ர-ராஜத4ர்மம் 20-12] [மஹாதே3வனாகிற சிவன் ஸர்வமேத4யாக3த்தில் தன்னையே ஹோமம் செய்து தே3வதே3வனானான்] என்றார் வியாஸரும். ஆகையால் பிரமன், உருத்திரன் முதலானார் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு ஈஶ்வரர்களாயினும் லோகமஹேஶ்வரரல்லர்; நாராயணன் ஒருவனே லோகமஹேஶ்வரன் என்பதே ஸகல ப்ரமாணஸித்3த4ம். இது இரண்டாவது ஐயத்திற்குப் பரிஹாரம். லோகமஹேஶ்வர ஶப்3த3த்தில் லோகஶப்3த3ம் பிரமன். உருத்திரன் முதலானாரையும், அவர்களிலும் சிறந்த ஈஶ்வரத்வத்தையுடைய நித்யர்களையும் காட்டுமாகையால், இந்த ஶப்3த3த்தால் நித்யர்களைக் காட்டிலும் வேறுபாடும் காட்டப்படுகிறது. இது மூன்றாவது ஐயத்திற்குப் பரிஹாரம்.

இனி, இரண்டாவது ஐயத்திற்குப் பரிஹாரம் பின்வருமாறு :— பிரமன் முதலானோரை நாராயணனால் படைக்கப்பட்டு, ரக்ஷிக்கப்பட்டு, ஸம்ஹரிக்கப்படுபவர்களாகப் பல ப்ரமாணங்கள் பறைசாற்றுகின்றன. ப்₃ரஹ்மத்தை உபாஸிக்கையாகிற ப்₃ரஹ்மபா₄வனை, பரமனால் நிய மிக்கப்பெற்று லோகஸ்ருஷ்டி முதலானவற்றைச் செய்கையாகிற கர்ம பா₄வனை, இரண்டும் கலந்திருக்கையாகிற உப₄யபா₄வனை ஆகிய பா₄வநாத்ரயத்தில் ஏதாவதொன்றை உடையவர்களாகவும் முழங்கு கின்றன. இத்தாழ்வுகள் நாராயணனுக்கு உள்ளதாகச் சொல்லாத தோடன்றியில், இல்லையென்றும் கோ₄ஷிக்கின்றன. **"நாராயணாத் ப்₃ரஹ்மா ஜாயதே நாராயணாத்₃ருத்₃ரோ ஜாயதே" "ப்₃ரஹ்மா நாராயண: ஶிவஶ்ச நாராயண:"** [நாராயணோபநிஷத்] **"ஸ ப்₃ரஹ்மா ஸ ஶிவ:"** [தை-நா 11] **"ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்₃ரஹ்மா நேஶாந:"** [மஹோபநிஷத்] என்று உபநிஷத்துக்கள்— நாராயணனே பிரமனையும், உருத்திரனையும் உண்டாக்குவதாகவும், ரக்ஷிப்பதாகவும், ஸம்ஹரிப்பதாகவும் முழங்குகின்றன. இப்படிப் பிரமருத்திரர்கள் நாரணனைப் படைத்தளித்து அழிப்பதாக எந்த உபநிஷத்₃வாக்யமும் கூறவில்லை. பிரமன் உருத்திரன் முதலான தே₃வர்களை ப்ரஸ்தாவித்து, **"அஶுத்₃த₄ாஸ்தே ஸமஸ்தாஸ்து தே₃வாத்₃யா: கர்மயோநய:"** [வி-பு 6-7-77] [தே₃வர்கள், மனிதர், திர்யக், ஸ்த₂ாவரம் என்னும் நால்வகை யோனிகளும் (பிறப்புகளும்) கர்மம் காரணமாகப் பிறந்தவர்களாகையாலே அஶுத்₃த₄ர்கள்] என்றார் பராஶரர். **"ஆப்₃ரஹ்ம ஸ்தம்ப₃பர்யந்தா ஜக₃த₃ந்தர் வ்யவஸ்தி₂தா: | ப்ராணிந: கர்மஜநித ஸம்ஸார வஶவர்த்திந: ||"** [விஷ்ணு த₄ர்மம் 104-22] [பிரமன் முதல் புல் ஈறாகவுள்ள உலகிலுள்ள ஜீவராஶிகள் அனைவரும் கர்மத்தினால் உண்டான ஸம்ஸார வாழ்க்கை நடத்துகிறவர்களே.] என்றார் சௌனகர். **"ப்₃ரஹ்மாணம் ஶிதி கண்ட₂ம் ச யாஶ்சாந்யா தே₃வதா: ஸ்ம்ருதா: | ப்ரதிபு₃த்₃த₄ா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் ப₂லம் ||"** [பா₄ரதம் - மோக்ஷத₄ர்மம் 350-36] [பிரமனையும், சிவனையும், இந்திரன் முதலான மற்ற தே₃வர்களையும், அவர்களிடமிருந்து கிடைக்கும் ப₂லன் அளவு பட்டிருக்கையால் அறிவாளிகள் ஸேவிப்பதில்லை] **"ஏதௌ த்₃வௌ விபு₃த₄ஶ்ரேஷ்டௌ₂ ப்ரஸாத₃க்ரோத₄ஜௌ ஸ்ம்ருதௌ | தத₂ா த₃ர்ஶிதபந்த₂ாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரகௌ ||"** [பா₄ர-மோக்ஷ 169-19] [பிரமனும், உருத்திரனுமாகிற இவ்விருதே₃வர் தலைவர்களும் முறையே நாரணனின் அருளாலும், கோபத்தாலும் உண்டானவர்க ளாகவும், அவனால் வழிகாட்டப்பெற்று (முறையே) ஸ்ருஷ்டிஸம்ஹாரத்

॥भा॥ एवं स्वस्वभावानुसन्धानेन भक्त्युत्पत्तिविरोधिपापनिरसनम्, विरोधिनिरसनादेवार्थतो भक्त्युत्पत्तिं च प्रतिपाद्य स्वैश्वर्यस्वकल्याणगुणगणप्रपञ्चानुसन्धानेन भक्तिविवृद्धिप्रकारमाह—

बुद्धिर्ज्ञानमसंमोहः क्षमा सत्यं दमश्शमः।
सुखं दुःखं भवोऽभावो भयं चाभयमेव च॥४॥
अहिंसा समता तुष्टिस्तपो दानं यशोऽयशः।
भवन्ति भावा भूतानां मत्त एव पृथग्विधाः॥५॥

தொழிலைச் செய்பவர்களாகவும் கூறப்படுகிறுர்கள்] என்றுர் ப₄ாரதத்தில் வியாஸர். 'ருத்₃ர யத்தே ஜநிமசாரு சித்ரம் [ருக்-அஷ்டகம் 3-8-16] என்று ருக்₃வேத₃மும் உருத்திரனின் அழகிய செல்வம் அவனுக்கு ப₄க₃வத் ஸம்ப₃ந்த₄த்திஞல் பிறவி தொடங்கி ஏற்பட்டது என முழங்கிற்று. "மஹாதே₃வ: ஸர்வமேதே₄ மஹாத்மா ஹுத்வாத்மாநம் தே₃வ தே₃வோ ப₃பூ₄வ" [ப₄ார-ராஜத₄ர்மம் 20-12] [மஹாதே₃வனுகிற சிவன் ஸர்வமேத₄யாக₃த்தில் தன்னையே ஹோமம்செய்து தே₃வதே₃வ ஞனன்] என்றுர் வியாஸரும், ஆகையால் பிரமன், உருத்திரன் முதலானுர் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு ஈஶ்வரர்களாயினும் லோகமஹேஶ்வரரல்லர்; நாரணன் ஒருவனே லோகமஹேஶ்வரன் என்பதே ஸகலப்ரமாணஸித்₃த₄ம். இது இரண்டாவது ஐயத்திற்குப் பரிஹாரம். லோகமஹேஶ்வரஶப்₃த₃த்தில் லோகஶப்₃த₃ம் பிரமன், உருத்திரன் முதலானுரையும், அவர்களிலும் சிறந்த ஈஶ்வரத்வத்தை யுடைய நித்யர்களையும் காட்டுமாகையால், அதஞல் நித்யர்களைக் காட்டிலும் வேறுபாடும் உணர்த்தப்படுகிறது. இது மூன்றுவது ஐயத் திற்குப் பரிஹாரம். ஆக, தன்ஞல் நியமிக்கப்படுபவையாய், கார்ய நிலையிலும், காரண நிலையிலுமுள்ளவையான எல்லா அசேதனத்தை யும், ப₃த்₃த₄ன், முக்தன், நித்யன் எனும் எல்லாச் சேதன வர்க்₃கத்தை யுங்காட்டிலும்,—எல்லாத் தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாயிருப்பவனுய், எல்லையற்ற பெருமையையுடைய கணக்கற்ற கல்யாணகு₃ணங்களுக்கு ஒரே இருப்பிடமானவனுகையாலும், அனைத்தையும் நியமிப்பதையே இயல்வாகக்கொண்டவனுகையாலும் சிறப்புற்றவனுய், லோகமஹேஶ்வர ஶப்₃த₃த்துக்கு முக்₂யார்த்₂மான நாரணனை மற்றவர்களோடு ஒத்த வனுக மயங்காமலிருப்பவனுக்கே ப₄க்தி உண்டாவதற்குத் தடையான எல்லாப் பாபங்களும் நீங்கும் என்றதாயிற்று. 3.

4. பு₃த்₃தி₄ர்ஜ்ஞாநமஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் த₃மஶ்ஶம: |
ஸுக₂ம் து₃:க்க₂ம் ப₄வோऽப₄ாவோ ப₄யம் சாப₄யமேவ ச ||

5. அஹிம்ஸா ஸமதா துஷ்டி: தபோ தா₃நம் யஶோऽயஶ: |
ப₄வந்தி ப₄ாவா பூ₄தாநாம் மத்த ஏவ ப்ருத₂க்₃வித₄ா: ||

பு₃த்₃தி₄:—மனத்தின் ஆராயும் திறமை, **ஜ்ஞாநம்**—(சித், அசித் ஆகியவற்றின் வேறுபாடுகளைப் பற்றிய) உறுதி, **அஸம்மோஹ:**—(ஒன்றை மற்றொன்றாக நினைக்கும்) மயக்கத்தின் நீக்கம், **க்ஷமா**—(கோபத்துக்குக் காரணமிருக்கும்போதும்) பொறுமையோடிருத்தல், **ஸத்யம்**—உண்மையுரைக்கும் மனப்பான்மை, **த₃ம:**—வெளி இந்த்₃ரியங்களை (தாழ்ந்த விஷயங்களில் செல்லாதபடி) அடக்குதல், **ஶம:**-மனத்தை (அவ்வாறு) அடக்குதல், **ஸுக₂ம்**—ஆத்மாவுக்கு அநுகூலமான அநுப₄வம், **து₃:க்க₂ம்**—ஆத்மாவுக்கு ப்ரதிகூலமான அநுப₄வம், **ப₄வ:**—(அநுகூலாநுப₄வத்தினால் ஏற்படும் மனத்தின்) இன்பமிகும் நிலை. **அப₄ாவ:**—(ப்ரதிகூலாநுப₄வத்தினால் ஏற்படும் மனத்தின்) துன்பமிகும் நிலை. **ப₄யம்**—(வரப்போகிற துன்பத்தின் காரணத்தைக் காண்பதனால் உண்டாகும்) துன்பம், **அப₄யம்**—(முற்கூறிய) துன்பம் நீங்கியிருத்தல், **ஏவ ச**-ஆகியவையும், **அஹிம்ஸா**—பிறர் துன்பத்துக்குக்காரணமாயிராமை, **ஸமதா**-(பொருள் வரவு செலவு பற்றித் தன் விஷயத்திலும் பிறர் விஷயத்திலும்) ஸமமான பு₃த்₃தி₄ உடையவனாயிருக்கை, **துஷ்டி:**—(எந்த ஆத்மாவைக் கண்டாலும்)இன்புறும் இயல்வுடையவனாதல், **தப:**—(ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டபடி) போ₄க₃த்தைச் சுருக்கி உடலை வருத்துதல், **தா₃நம்**—தனது போ₄க்₃யப்பொருள்களைப் பிறர்க்கு அளித்தல், **யஶ:**—கு₃ணமுடையவன் என்னும் புகழ், **அயஶ:**—தோ₃ஷமுள்ளவன் என்னும் பிரஸித்₃தி₄, (ஆகியவையும் முதலான) **பூ₄தாநாம் ப்ருத₂க்₃வித₄ா: ப₄ாவா:**-எல்லா ஜீவராஶிகளின் பல வகைப்பட்ட மனநிலைகள், **மத்த: ஏவ ப₄வந்தி**—என் ஸங்கல்பத்தாலேயே உண்டாகின்றன.

4. **புத்தி யறிவு மயக்கறுதல் பூண்பொறைதான்
சத்திய மைம்புலன்கள் சார்ந்தடக்க—லத்தியல்பிற்
சாந்திசுகந் துக்கந் தகுமுண்மை யின்மைபய
மேந்திதனில் லாமை யிவை.**

5. **கொல்லாமை யொப்புகப்பு குன்றுத் தவந்தானஞ்
சொல்லார் புகழ்பழியாந் தொல்பொருள்க—ளெல்லாந்தா
னென்னாலே யெவ்வுயிர்க்கு மேய்ந்த பல்வகையா
முன்னாலே வாதியலு மூண்டு.**

புத்தி—மனத்தின் ஆராயும் திறமை, **அறிவு**—(சித் அசித் ஆகியவற்றின் வேறுபாடுகளைப் பற்றிய) உறுதி, **மயக்கறுதல்**—(ஒன்றை மற்றொன்றாக நினைக்கும்) மயக்கத்தின் நீக்கம், **பூண்பொறைதான்**—(கோபத்துக்குக் காரணமிருக்கும்போதும்) பொறுமை கொள்ளுதலாகிற அணிகலன், **சத்தியம்**—உண்மையுரைக்கும் மனப்பான்மை, **ஐம்புலன்கள் சார்ந்து அத்தியில்பில் அடக்கல்**—வெளி இந்த்₃ரியங்களைத் தாழ்ந்த விஷயங்களில் செல்லாதபடி அடக்குதல், **சாந்தி**—மனத்தை அவ்வாறு அடக்குதல், **சுகம்**—ஆத்மாவுக்கு அநுகூலமான அநுப₄வம், **துக்கம்**—ஆத்மாவுக்கு ப்ரதிகூலமான அநுப₄வம் **தகும் உண்மை**—(அநுகூலாநுப₄வத்தினால் ஏற்படும் மனத்தின்) இன்பமிகுநிலை; **இன்மை**—(ப்ரதிகூலாநுப₄வத்தினால் ஏற்படும் மனத்தின்) துன்பமிகுநிலை, **ஏந்து பயம்**—(வரப்போகிற துன்பத்தின் காரணத்தைக் காண்பதனால் உண்டாகும்) துன்பம் **இதன் இல்லாமை** - (முற்கூறிய) துன்பம் நீங்கியிருத்தல், **இவை**—ஆகிய இந்த மனநிலைகளும், **கொல்லாமை**—பிறர் துன்பத்துக்குக் காரணமாயிராமை, **ஒப்பு**—(பொருள் வரவு செலவு பற்றித் தன் விஷயத்திலும் பிறர் விஷயத்திலும்) ஸமமான பு₃த்₃தி₄ உடையவனாயிருக்கை, **உகப்பு** - (எந்த ஆத்மாவைக் கண்டாலும்) இன்புறும் இயல்வுடையவனாதல், **குன்றுத் தவம்**—(ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டபடி பே₄ாக₃த்தைச் சுருக்கி உடலை வருத்துதலாயிருப்பதாய்,) அழியாத பலனையுடையதான தவம், **தானம்**—தனது பே₄ாக்₃யப் பொருள்களைப் பிறர்க்கு அளித்தல், **சொல்லார்**

॥भा॥ बुद्धिः—मनसो निरूपणसामर्थ्यम्, ज्ञानम्—चिदचिद्वस्तुविशेषविषयो निश्चयः, असंमोहः—पूर्वगृहीताद्रजतादेर्विसजातीये शुक्ति-

---

புகழ்—கு₃ணமுடையவன் என்று அனைவரும் சொல்லும் புகழ், **பழியாம்**—தோ₃ஷமுள்ளவன் என்னும் பிரஸித்₃தி₄, ஆகிய **எவ்வுயிர்க்கும்**—எல்லா ஜீவராஶிகளுக்கும், **பல்வகையாம் தொல்பொருள்கள் எல்லாம்தான்**—பலவகைப்பட்ட தொன்மையான மனநிலைகள் எல்லாமும், **என்னாலே ஏய்ந்த**—என் ஸங்கல்பத்தாலேயே உண்டாகின்றன. **உன்னாலே**—ஜீவனான உன் ஸங்கல்பத்தாலே, **ஆது**—எந்த மனநிலை, **மூண்டு இயலும்?**—நன்கு செயல்படும்?

4, 5. "ப₄க்த்யுத₃பத்திவிவ்ருத்₃த்₄யர்த்த₂" [ப₄க்தி உண்டாவதற்காகவும், வளர்வதற்காகவும் சொல்லப்பட்டது.] என்று இந்த அத்தியாயத்தின் கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் சொல்லப்பட்ட இரு விஷயங்களில் தன்னை தே₃வாதி₃தே₃வனாக அநுஸந்தி₄ப்பதால் ப₄க்தி உண்டாவதற்குத் தடையான பாபங்கள் நீங்கும் என்று சென்ற ஶ்லோகம் ஈருக நிரூபித்து, இப்படித் தடை நீங்கியதால் ப₄க்தி உண்டாகிறது என்பதையும் அர்த்த₂ாத் விளக்கி, மேலே விரிவாகச் சொல்லப்படும் தனது ஐஶ்வர்யம், கல்யாணகு₃ணங்கள் ஆகியவற்றை அநுஸந்தி₄ப்பதால் ப₄க்தி வளரும் வகையைக் காட்டுகிறான் நாலு முதல் பதினோராவது ஶ்லோகம் ஈருக. இவன் பிரமன், சிவன் முதலான தே₃வர்களுக்கும் மேற்பட்டவன் என்று உணராமல் அவர்களை இவனுக்கு மேற்பட்டவர்களாகவோ, சமமானவர்களாகவோ, இவனோடு ஒன்றானவர்களாகவோ நினைத்தால், இவனிடத்தில் ஏகாந்தமான அநந்யப₄க்தி உண்டாகாது என்பதும், இவனுடைய ஒப்பற்ற ஐஶ்வர்யத்தையும் கல்யாண கு₃ணங்களையும் அநுஸந்தி₄ப்பதாலேயே உண்டான அந்த ப₄க்தி வளரும் என்பதும் சொல்லாமலே விளங்குமன்றே. (பு₃த்₃தி₄:) மனத்தின் ஆராயும் திறமை. இதற்கு 'அறிவு' என்று பொருள் கொள்ளக்கூடாதோ? எனில்: அப்படிக் கொண்டால் அடுத்துள்ள ஜ்ஞான ஶப்₃த₃த்தோடு புநருக்தி (கூறியது கூறல்) எனும் தோ₃ஷம் வரும், ஆகையால் அந்த ஜ்ஞானத்துக்குக் காரணமான (மனத்தின்) ஆராயும் திறமையை இங்கு பு₃த்₃தி₄ ஶப்₃த₃த்துக்குப் பொருளாகக் கொள்வது பொருந்தும். 'பு₃த்₃தி₄ஶாலியாயிருப்பதால் அறிகிறான்' என்னும் உலக வழக்கையொட்டி, இங்கு 'பு₃த்₃தி₄' ஶப்₃த₃ம் லக்ஷணையாலே ஆராயும் ஶக்தியைக் குறிக்கிறது.

कादिवस्तुनि सजातीयताबुद्धिनिवृत्तिः; क्षमा—मनोविकारहेतौ सत्यप्यविकृतमनस्त्वम्; सत्यम्—यथादृष्टविषयं भूतहितरूपं वचनम्; तदनु-

"பு₃த்₄யதே அநயா" [எதனுல் அறியப்படுகிறதோ அது புத்தியாகிறது.] என்னும் கரணவ்யுத்பத்தியால் அறிவுக்குக் காரணமான திறமையைக் குறிப்பதாகவும் கொள்ளலாம், (ஜ்ஞாநம்) அறிவு. முற்கூறிய ஆராயும் திறமையினுல் ஏற்படும் உறுதியான அறிவைக் குறிக்கிறது. அடுத்து 'அஸம்மோஹ:' எனப்படும் மயக்கமின்மைக்கு இவ்வறிவு காரணமாக விளங்குகையால், ப்ரகரணத்தையொட்டி, சேதநாசேதநப் பொருள்கள் விஷயமான உறுதியான அறிவு இந்த ஜ்ஞாந ஶப்₃த₃த்தால் சொல்லப்படுவதாகக் கொள்வது பொருத்தம். பு₃த்₃தி₄ ஶப்₃த₃த்துக்கு உறுதியான அறிவு என்றும், ஜ்ஞாநஶப்₃த₃த்துக்கு மோக்ஷவிஷயமான அறிவு என்றும் சிலர் பொருள் கொண்டார்கள். இரண்டு ஶப்₃த₃ங்களையும் முறையே ஒரு குறிப்பிட்ட பு₃த்₃தி₄யையும், குறிப்பிட்ட ஜ்ஞானத்தையும் சொல்லுவதாகக் குறுக்கிப் பொருள் கொள்ளவேண்டியிருப்பதால் இவ்வர்த்த₂ம் அநாத₃ரிக்கப்பட்டது. (அஸம்மோஹ:) ஒன்றை மற்றென்ருக நினைக்கும் மயக்கத்தின் நீக்கம். கடைவீதி முதலானவற்றில் அறியப்பட்ட வெள்ளி முதலானவற்றிலும் வேறுபட்ட சிப்பி முதலான பொருள்களை அவற்ருேடு ஒரே ஜாதியைச் சேர்ந்ததாக அறிவதே மயக்கமாகும். இது நீங்குதலே மயக்கமின்மையாகும். இது முதலிலெடுக்கப்பட்ட சேதநாசேதந வஸ்துவிஶேஷ விஷயமான அறிவினுல் ஏற்படுகிறதாகையாலே, அஸம்மோஹ ஶப்₃த₃ம் சேதநாசேதந வஸ்துக்களிடையே முற்கூறிய மயக்கமின்மையைக் காட்டுகிறது. (க்ஷமா) கோபத்துக்குக் காரணமிருக்கும்போதும் பொறுமையோடிருத்தல், கோபமின்மையை க்ஷமா (பொறுமை) என்னும் ஶப்₃த₃த்துக்குப் பொருளாகக் கொண்டால் தூங்கும்போதும் கோபமின்மையிருப்பதாலே அப்போதும் பொறுமையிருப்பதாகக் கொள்ள வேண்டிவரும். அதைத் தவிர்ப்பதற்காக, கோபமாகிற மனோவிகாரத்திற்குக் காரணமிருந்தபோதிலும் மனோவிகாரம் அடையாமலிருக்கை என்று க்ஷமாலக்ஷணம் பா₄ஷ்யத்தில் அருளப்பெற்றது. கோபத்துக்குக் காரணமான வசவு, அடி முதலானவையிருந்தபோதிலும் கோபப்படாமலிருக்கை பொறுமை என்றவாறு. இதன்மேல் பின்வருமாறு ஓர் ஆக்ஷேபம் எழுகிறது. கோபத்துக்குக் காரணமிருக்கும்போது எப்படிக் கார்யமான கோபம் ஏற்படாமலிருக்க முடியும்? அப்படி ஏற்படாவிடில் அது காரணமாகவே ஆக முடியாதே

गुणा मनोवृत्तिरिहाभिप्रेता, मनोवृत्तिप्रकरणात् ; दमः—बाह्यकरणानामनर्थविषयेभ्यो नियमनम्; शमः— अन्तःकरणस्य तथा नियमनम् ; सुखम्—

என்பது அவ்வாக்ஷேபம். இதற்குப் பரிஹாரமாவது—காரணமிருக்குமிடமெல்லாம் கார்யம் உண்டாகியே தீரவேண்டும் என்னும் நியமம் கொள்ளமுடியாது. காரணமும் இருந்து, கார்யம் ஏற்படத்தடையுமில்லாமலிருந்தால்தான் கார்யமேற்படும். தடையோடு கூடிய காரணமிருந்தாலும் கார்யம் ஏற்படுவதாகக்கொண்டால் காரணம் நித்யவிபுவாயிருக்குமிடங்களில் கார்யம் எப்போதும் எங்கும் ஏற்படவேண்டிவரும். தடையினாலேயே கோபமாகிற காரியம் ஏற்படவில்லையானால் பொறுமைக்கு என்ன பெருமை? எனில்: உடலில் நெருப்புப்பட்டால் உடல் கொப்பளிக்கிறது, மணி, மந்த்ரம் முதலான தடையிருக்கும் போது நெருப்பினால் உடல்கொப்பளிப்பதில்லை. அதுபோலவே வலிமைமிக்க விவேகம் என்னும் தடையினால் கோபத்துக்குக் காரணங்கள் தடுக்கப்பட்டு விடுவதால் கோபம் ஏற்படுவதில்லை. விவேகத்தினால் உண்டான பொறுமையாகிற குணமும் பெருமைபெறுகிறது என்று கண்டுகொள்வது. (ஸத்யம்) ஜீவராசிகளுக்கு நன்மை பயப்பதாய், கண்ணால் கண்டதாயிருக்கும் விஷயத்தைப்பேசுதல். **'ஸத்யம் பூதஹிதம் ப்ரோக்தம்'** [வ்யாஸஸ்ம்ருதி] [ஜீவராசிகளுக்கு நன்மை பயப்பதே ஸத்யமாகும்] என்று 'பூதங்களுக்கு ஹிதமாயிருக்கும் வார்த்தையே 'ஸத்யம்' என்று லக்ஷணம் உரைக்கப்பட்டது. பொய் வார்த்தையும் சில சமயங்களில் பூதஹிதமாயிருப்பதுண்டாகையால் அதைத் தவிர்ப்பதற்காக **'யதா த்ருஷ்ட விஷயம்'** [கண்ணால் கண்டதாயிருப்பதாய்] என்று பாஷ்யத்தில் விசேஷிக்கப்பட்டது. உள்ளதை உள்ளபடி கண்டு, கண்டபடி சொல்லும் விஷயமே உண்மையாயிருந்தபோதிலும், கண்டதைச் சொல்லுவதே உண்மையுரைத்தலுக்குப் போதுமானதாகையால், 'உள்ளதை உள்ளபடிகண்டு உரைத்தல்' என்று ஸத்யலக்ஷணம் சொல்லப்படவில்லை. தான் கண்டதை ஒருவன் சொல்லி, அதுவேறு காரணங்களால் தவறாயிருந்தாலும், அவன் சொன்னது உண்மை வார்த்தையேயன்றோ. உண்மை உரைத்தலாகிற க்ரியையையே ஸத்யசப்தமும் குறிக்குமாயினும் **''பவந்தி பாவா:''** என்று அடுத்த ச்லோகத்தில் இவற்றையெல்லாம் மனோநிலைகளாகக் குறிக்கையாலே, இங்கு ஸத்யசப்தமும் மேற்கூறியபடி உண்மையுரைக்கும் மனப்பான்மையையே குறிக்கிறது. (தம:) வெளி இந்த்ரியங்களைத் தாழ்ந்த விஷயங்களில் செல்லாமல் அடக்குதல். (சம:) உள்ளிந்த்ரியமான மனத்தை அவ்வாறு

आत्मानुकूलानुभवः; दुःखम्-प्रतिकूलानुभवः; भवः-भवनम्; अनुकूलानु-भवहेतुकं मनसो भवनम्; अभावः —प्रतिकूलानुभवहेतुको मनसोऽवसादः;

அடக்குதல். கீ3தை 16-1,2 முதலானவிடங்களில் த3மஶப்3த3த்தை மனத்தை அடக்குதலாகவும், ஶமஶப்3த3பர்யாயமான ஶாந்தியை வெளி இந்த்3ரியங்களை அடக்குதலாகவும் அந்த ப்ரகரணத்திற்கு அநுகு3ணமாக பா4ஷ்யத்தில் பொருள்கொள்ளப்பட்டபோதிலும், இந்த ப்ரகரணத்திற்கு அநுகு3ணமாக முதலில் வெளி இந்த்3ரியங்களை அடக்கிய பின்பே உள் இந்த்3ரியமான மனத்தை அடக்குவது முறையாகையால் இவ்வாறு பொருள்கொள்ளப்பட்டது, இப்படி விஷயம் வேறுபடுவதால் இவ்விரு ஶப்3த3ங்களிடையே புநருக்தியுமில்லை. ஶாஸ்த்ரங்களில் விதி4க்கப்பட்ட விஷயங்களிலிருந்து இந்த்3ரியங்களை அடக்குவது தவறாகையால் 'தாழ்ந்த விஷயங்களிலிருந்து அடக்குதல்' என்று இரண்டிடத்திலும் விஶேஷிக்கப்பட்டது. (ஸுக2ம்) ஆத்மாவுக்கு அநுகூலமான அநுப4வம். (து3:க்க2ம்) ஆத்மாவுக்கு ப்ரதிகூலமான அநுப4வம். அநுகூலமாயிருக்கை என்று ஸுக2த்துக்கும், ப்ரதிகூலமாயிருக்கை என்று து3:க்க2த்துக்கும் லக்ஷணமாயிருந்தபோதிலும், அடுத்த ஶ்லோகத்திலுள்ள பா4வ ஶப்3த3த்திலிருந்து இவையெல்லாம் மநோவ்ருத்திரூபமாயிருப்பவை என்று விளங்குகையால், 'அநுகூலாநுப4வம்', 'ப்ரதிகூலாநுப4வம்' என்று ஸுக2து3:க்க2ங்களுக்கு லக்ஷணம் உரைக்கப்பட்டது. இந்த ஸுக2து3:க்கா2நுப4வங்களால் ஏற்படும் மனத்தின் இரு நிலைகளைக் காட்டுகின்றன அடுத்த இரண்டு ஶப்3த3ங்களும் (ப4வ:) ப4வனம். அதாவது முற்கூறிய அநுகூலாநுப4வத்தினுல் விளையும் பெருமகிழ்ச்சியாகிற மனத்தின் நிலை. (அபா4வ:) முற்கூறிய ப்ரதிகூலாநுப4வத்தினுல் விளைந்த பெருந்துன்பமாகிற மனத்தின் நிலை. சிலர் ப4வஶப்3த3த்துக்கு "ப4வ்யதா" [ப4வ்யமாயிருக்கை] என்றும், பா4வ ஶப்3த3த்துக்கு அபி4ப்ராயம் என்றும் பொருள்கொண்டனர். ஸுக2ம் து3:க்க2ம் என்று முன்பும், ப4யம் அப4யம் என்று பின்பும் எதிர்த்தட்டான இரட்டைகளைப் படித்திருப்பதையொட்டி, இடையிலுள்ள "ப4வோऽபா4வ:" என்பதையும், "ப4வ: அபா4வ:" என்று பிரித்து எதிர்த்தட்டான இரட்டைகளைக் குறிப்பதாகக் கொள்வதே உசிதமாகையால் அப்பொருள் பொருந்தாது. இந்த ப4வாபா4வஶப்3த3ங்களும் மனோவ்ருத்தியாயிருக்கவேண்டுகையாலும், முதலில் படிக்கப்படும் ஸுக2து3:க்க2ங்கள் இவற்றுக்குக் காரணமாயிருப்பது உசிதமாகையாலும் ஸுகம் எனப்படும் அநுகூலாநுப4வத்தால் விளையும் பெருமகிழ்ச்சி (உத்3த4ர்ஷம்) ப4வ ஶப்3த3த்தாலும், து3:க்க2ம் எனப்படும் ப்ரதிகூலாநுப4வத்தால் விளையும் பெருவருத்தம் (அவஸாத3ம்) அபா4வ ஶப்3த3த்தாலும் சொல்லப்படுவதாகக் கொள்ளப்பட்டது.

भयम्—आगामिनो दुःखस्य हेतुदर्शनजं दुःखम्; तन्निवृत्तिः—अभयम्; अहिंसा—परदुःखाहेतुत्वम्; समता—आत्मनि सुहृत्सु विपक्षेषु चार्था-

---

''தல்லப்₃தி₄ர் **விவேகவிமோகாப்₄யா ஸக்ரியாகல்யாணுநவஸாத₃நா-நுத்₃த₄ர்ஷேப்₄ய:**'' [வாக்யகா₃ரந்த₂ம்] [1. ஶுத்₃த₄மான அன்னத்தால் ஏற்படும் ஶரீரஶுத்₃தி₄யாகிற விவேகம். 2. காமத்தில் பற்றின்மையாகிற விமோகம். 3. உபாஸ்ய வஸ்துவை இடைவிடாமல் தியானிப்பதாகிற அப்₄யாஸம். 4. இயன்றவரையில் பஞ்சமஹாயஜ்ஞம் முதலானவைகளை அநுஷ்டி₂ப்பதாகிற க்ரியை. 5. உண்மையுரைத்தல், நேர்மை, கருணை, தா₃னம் அஹிம்ஸை, அநபி₄த்₄யை (பிறர்க்குக் கேடு நினையாமை) எனும் கு₃ணங்களாகிற கல்யாணங்கள். 6. தே₃ஶகாலங்கள் விபரீதமாவதாலும், வருத்தம்தரும் பொருள்களை நினைப்பதாலும் மனத்துக்கு ஏற்படும் தீ₃னத்தன்மையும், ஒளியின்மையுமாகிற அவஸாத₃த்திற்கு எதிர்த்தட்டான அநவஸாத₃ம். 7. அவஸாத₃த்திற்குக் காரணமாகச் சொல்லப்பட்டவற்றிற்கு நேர்மாருனவற்ருல் ஏற்படும் பெருமகிழ்ச்சியாகிற உத்₃த₄ர்ஷத்தின் இன்மையாகிற அநுத்₃த₄ர்ஷம் என்கிற ஏழு காரணங்களாலும் உபாஸனம் விளைகிறது] என்று வாக்யகாரரும் இந்தப் பெருவருத்தமின்மையை அநவஸாத₃ ஶப்₃த₃த்தாலும் பெருமகிழ்ச்சியின்மையை அநுத்₃த₄ர்ஷ ஶப்₃த₃த்தாலும் குறித்தாரன்ருே. (ப₄யம்) வரப்போகும் துன்பத்தின் காரணத்தைக் காண்பதால் உண்டாகும் துன்பம். (அப₄யம்) முற்கூறிய துன்பமில்லாமை. வரப்போகும் துன்பத்தை முன்னதாகக் காணுதல் ப₄யம் என்று ப₄யலக்ஷணத்தைச் சொல்லுவதுண்டானுலும், அத்தகைய காட்சி ப்ரதிகூல ரூபமாயிருப்பதால் துன்பமேயாகிறது. இது தவிர துன்பம் என்னும் தனிக்கு₃ணத்தை நம் தரிசனத்தில் ஒப்புக்கொள்ளுவதில்லை. இவ்வெண்ணமாக ப₄யாப₄ய ஶப்₃த₃ங்கள் குறிப்பிட்ட ஸுக₂து₃:க்க₂ங்களையே குறிப்பதால் ஸுக₂து₃:க்க₂ ஶப்₃த₃ங்களோடு அவற்றுக்குப் புநருக்தி இல்லை. (அஹிம்ஸா) பிறருக்குத் தீங்கை விளைக்கும் துன்பத்துக்குக் காரணமாயிராமை. ''வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால் மாளாத காதல் நோயாளன்போல்'' [பெருமாள் திரு 5-4] என்கிறபடியே வைத்தியன் வியாதி நீங்குவதாகிற நன்மையின் பொருட்டு விளைக்கும் துன்பங்கள் ஹிம்ஸையாகாதாகையாலே, **பிறருக்குத் தீங்கை விளைக்கும்** என்று துன்பம் விஶேஷிக்கப்பட்டது.

नर्थयोस्समतित्वम्; तुष्टिः — सर्वेष्वात्मसु दृष्टेषु तोषस्वभावत्वम्; तपः — शास्त्रीयो भोगसङ्कोचरूपः कायक्लेशः; दानम् — स्वकीयभोग्यानां

அபா4வரூபமாயிருக்கும் அஹிம்ஸையும், அப4யமும் எப்படி மனோவ்ருத்தியாக முடியும்? எனில்: நம்முடைய ஸித்3தா4ந்தத்தில் ஒவ்வொரு அபா4வப்பொருளும் மற்றொரு பா4வப்பொருளாயிருப்பதாகவே கொள்கிறோம். உதாரணமாக, அப4யம் என்பது குறிப்பிட்ட துன்பத்தின் இல்லாமையைக் காட்டுவதானாலும் அது ஒருவகை இன்பமாகவே இருக்கிறது என்று கொள்கிறோம். ஆகையால் அப4யத்தையும் அஹிம்ஸையையும் மனோவ்ருத்திகளாகக் கொள்ளக் குறையில்லை. (ஸமதா) பொருள் வரவு செலவு பற்றித் தன் விஷயத்திலும் நண்பர்கள் விஷயத்திலும், எதிரிகள் விஷயத்திலும் ஸமமான பு3த்3தி4 உடையவனாயிருக்கை. 'ஸமமதிராத்மஸுஹ்ருத்3விபக்ஷபக்ஷே [வி-பு 3-7-20] [(பொருள் விஷயத்தில்) தான், தன் நண்பர்கள், தன் எதிரிகள் ஆகிய அனைவரிடமும் ஸமமான பு3த்3தி4யை உடையவனாயிருப்பவன் வைஷ்ணவன்] என்று வைஷ்ணவ லக்ஷணத்தில் 'ஸமதா' என்னும் இதுவும் சேர்ந்தது என்று காட்டினாரன்றோ பராஶர மஹரிஷி. இன்பதுன்பங்கள் முதலான இரட்டைகளில் ஒத்த மனத்தினனாயிருக்கை முதலிய பொருள்களை 'ஸமதா' ஶப்3த3த்திற்குக் கொள்ளலாமாயினும், இதற்கு முந்திய 'அஹிம்ஸா' ஶப்3த3த்தால் ஹிம்ஸையை விளைக்கும் எதிரியின் நினைவு ஏற்படுமாகையாலே, ஶத்ருமித்ராதி3 ஸாம்யம் இங்கு பொருளாகக் கொள்ளப்பட்டது. 'தனக்குப் பொருள் வந்தால் உகப்பது போலே பிறருக்குப் பொருள் வந்தாலும் உகப்பது; தனக்கு நஷ்டம் ஏற்பட்டால் வருந்துவது போலே பிறருக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் வருந்துவது' முதலானவை 'ஸமதா' ஶப்3த3த்தின் பொருள் என்று கருத்து. (துஷ்டி:) எந்த ஆத்மாவைக் கண்டாலும் இன்புறும் இயல்வுடையவனாதல். 'ஸமதா' ஶப்3த3த்தில் ப்ரஸ்தாவம் ஏற்பட்ட நண்பர்கள், எதிரிகள் முதலான எந்த ஆத்மாவைக் கண்டாலும் இன்புறும் இயல்வுடையவனாயிருக்கை என்றபடி. 'இயல்வுடையவன்' என்றதால் எந்தப் பொருளைக் கண்டாலும் இன்புறுவதே ஆத்மாவுக்கு இயல்வு என்றும், விரோத4ம், வெறுப்பு முதலானவை ஒவ்வொரு காரணத்தால் செயற்கையாய் ஏற்படுபவை என்றும் உணர்த்தப்படுகிறது. "மைத்ரீ கருணா முதி3தோபேக்ஷாணாம் .... பா4வநாதஶ்சித்தப்ரஸாத3நம்" [பாதஞ்ஜல யோக3ஸூத்ரம் 1-33] [அனைவரிடமும் நட்பு, த3யை, இன்புறுதல், பற்றற்றிருத்தல் ஆகியவற்றைப் பழகுவதால் மனத்தெளிவு உண்டா

परस्मै प्रतिपादनम्; यशः—गुणवत्ताप्रथा; अयशः—नैर्गुण्यप्रथा; एतच्चोभयं तदनुगुणमनोवृत்तिद्वयं मन्तव्यम्, तत्प्रकरणात्; तपोदाने

கிறது] என்கிற யோக₃ஸூத்ரத்தின்படியே மனத்தெளிவை ஏற்படுத்தும் மைத்ரீ முதலான நான்கு கு₃ணங்களில் 'முதி₃தா' எனப்படும் மூன்ருவது கு₃ணமே இங்கு 'துஷ்டி' எனப்படுகிறது. (தப:) ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டபடி போ₄க₃த்தைச் சுருக்கி உடலை வருந்துதல். "ஊன்வாட உண்ணுது உயிர் காவலிட்டு உடலில் பிரியாப் புலனைந்தும் நொந்து, தாம் வாடவாடத் தவம் செய்ய" [பெரிய திரு 3-2-1] என்று திருமங்கையாழ்வார் தவத்தை விரித்தருளினரன்ருே. பௌ₃த்₃த₄ம் முதலான புறச்சமயிகளின் நூல்களிலும் உடலை வருத்துதலாகிற தவம் சொல்லப்பட்டிருக்கிறதாயினும், அவை வேத₃த்துக்குப் புறம்பானவையாகையாலே தவமாகமாட்டா. ஆகையால் தபோலக்ஷணத்தில் 'ஶாஸ்த்ரீயமான காயக்லேஶம்' (ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டபடி உடலை வருத்துதல்) என்று விஶேஷிக்கப்பட்டது. ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட போ₄க₃ஸங்கோசம் வியாதி முதலானவற்ருலும் ஏற்படலாம். அப்போது அது தவமாகாது. அதைத் தவிர்ப்பதற்காகவே 'காயக்லேஶம்' (முயன்று உடலை வருத்துதல்) என்னும் பத₃ம் இடப்பட்டது. (தா₃நம்) தனது போ₄க்₃யப் பொருள்களைப் பிறர்க்கு உரிமையாக்குதல். பிறர் சொத்தை எடுத்துக்கொடுப்பதும், தனக்குத் தேவையில்லை என்று கழிந்த தாழ்ந்த பொருள்களைக் கொடுப்பதும் தா₃நமாகாதாகையாலே 'தனது' 'போ₄க்₃யப்பொருள்களை' என்னும் பத₃ங்கள் இடப்பட்டன. (யஶ:) கு₃ணமுடையவன் என்னும் புகழ். (அயஶ:) தோ₃ஷமுள்ளவன் என்னும் பிரஸித்₃தி₄. 'அயஶ:' என்பதற்கு 'புகழ் இன்மை' என்று பொருள் கொள்ளாமல், 'புகழுக்கு நேர் எதிர்த்தட்டான குற்றங்களுடையவன் என்னும் பிரஸித்₃தி₄' பொருளாகக் கொள்ளப்பட்டது. உலகில் 'அயஶ:' என்னும் ஶப்₃த₃ம் இப்பொருளிலேயே மிகுதியாக வழங்கப்படுகிறதன்ருே. விரோதி₄ என்னும் பொருளிலே 'நஞ்' வழங்கப்படுகிறது. 'யஶஸ்' 'அயஶஸ்' என்னும் இவ்விரண்டு பத₃ங்களும், முன்னேயுள்ள 'தப:' 'தா₃நம்' என்னும் பத₃ங்களும் முன் ஶ்லோகத்திலுள்ள 'ஸத்ய' ஶப்₃த₃ம் போலே அவ்வவற்றிற்குரிய மனப்பான்மையையே குறிக்கின்றன; அடுத்து இவையனைத்தையும் 'பா₄வ' ஶப்₃த₃த்தால் எடுக்கையாலே. (ப்ருத₂க்₃விதா₄: பூ₄தாநாம் பா₄வா:) முற்கூறியவை போன்ற ஜீவராஶிகளின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்குக் காரணமான பலவகைப்

च तथा। एवमाद्यास्सर्वेषां भूतानां भावाः—प्रवृत्तिनिवृत्तिहेतवो मत्त एव—मत्सङ्कल्पायत्ता भवन्ति ॥ ४ ॥ ५ ॥

பட்ட மநோவ்ருத்திகள். இருபது மனநிலைகளை எடுத்தது ஜீவ ராசிகளின் பலவகைப்பட்ட மனநிலைகள் அனைத்துக்கும் உபலக்ஷணம். 'பாவ' பதம் அபிப்ராயத்தையும் குறிக்குமானாலும், கீழ் ஒன்றரை ச்லோகங்களில் எடுக்கப்பட்டவை பெரும்பாலும் மனநிலைகளாயிருக்கையால் இப்படிப் பொருள் கொள்ளப்பட்டது. ஸத்யம், தவம், தானம் முதலிய கிரியைகளைக் குறிக்கும் பதங்களும் அக்கிரியைகளுக்கு அநுகுணமான மனநிலைகளைக் குறிப்பதாகப் பொருள் கொள்ளப்பட்டது. (மத்த: ஏவ) ஜீவராசிகளின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்குக் காரணமான இந்த மனநிலைகள் எல்லாம் என் ஸங்கல்பத்தாலேயே உண்டாகின்றன. எல்லாப் பொருள்களின் ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் அனைத்துமே என் ஸங்கல்பத்தால் உண்டாகின்றனவையாயிருக்கும்போது, இந்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்குக் காரணமான மனநிலைகள் என் ஸங்கல்பத்தால் உண்டாகின்றன என்பதைச் சொல்லவும் வேண்டுமோ என்று கருத்து. மனநிலைகள் தன் அதீனம் என்று இங்குக் கூறுவதற்குக் காரணம் என்ன? எனில்: இந்த ப்ரகரணத்தில் விதிக்கப்படும் பக்தி ரூபமான மனநிலையும் தன்னாலேயே உண்டாகிறது என்று உணர்த்துவதற்காகக் கூறுகிறான். "**அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா**" [தை ஆர 3-11] [ஸர்வாந்தர்யாமியான பரமபுருஷன் எல்லா ஜீவராசிகளையும் உள்நுழைந்து நியமிக்கிறான்] என்று வேதம் ஓதுகையாலே இங்கு 'மத்த ஏவ' (என் அதீனம்) என்றது 'என் ஸங்கல்பாதீனம்' என்று பொருள் கொள்ளப்பட்டது. இத்தால் ஸந்நிதி மாத்ரத்தாலே பரம்பொருள் காரணமாவதாகச் சொல்லும் பக்ஷங்கள் தள்ளுண்டன. ஏவகாரத்தால் பயம் அபயம், ஸுகம் து:க்கம் முதலான ஒன்றுக்கொன்று முரண்பட்ட மனநிலைகளுக்கும் தான் ஒருவனே ஹேது என்று காட்டுகிறான். '**நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய் வெல்பகையும் நட்பும விடமும் அமுதமுமாய் பல்வகையும் பரந்த பெருமான்**" என்று தொடங்கும் (6-3) திருவாய்மொழியில் இதையடியொற்றி எம்பெருமான் விருத்தவிபூதிகன் என்பதைக் காட்டினாரன்றோ நம்மாழ்வார். ஆக, இவ்விரண்டு ச்லோகங்களால் பலவகைப்பட்ட மனநிலைகளனைத்தும் தன் அதீனம் என்று காட்டினானாயிற்று. 4,5.

॥भा॥ सर्वस्य भूतजातस्य सृष्टिस्थित्योः प्रवर्तयितारश्च मत्सं-
कल्पायत्तप्रवृत्तय इत्याह--

महर्षयस्सप्त पूर्वे चत्वारो मनवस्तथा।
मद्भावा मानसा जाता येषां लोक इमाः प्रजाः॥६॥

6. மஹர்ஷயஸ்ஸப்த பூர்வே சத்வாரோ மநவஸ்ததா₂ ।
மத்₃பா₄வா மாநஸா ஜாதா யேஷாம் லோக இமா: ப்ரஜா: ॥

பூர்வே — முதல் மந்வந்தரத்திலிருந்த, **மாநஸா:**— (பிரமனால்) மனத்தால் படைக்கப்பட்ட, **ஸப்த மஹர்ஷய:**— (ப்₄ருகு₃ முதலான) ஏழு மஹரிஷிகளும், **ததா₂**—அவ்வண்ணமே, **சத்வார: மநவ:**—நான்கு மநுக்களும், **மத்₃பா₄வா:**—என் ஸங்கல்பத்தைப் பின்பற்றி நிற்பவர்களே. **யேஷாம் லோகே**—எவர்களுடைய ஸந்ததியில், **இமா: ப்ரஜா: ஜாதா:**—இப்போது காணப்படும் ஜீவராஶிகளனைத்தும் உண்டாயினவோ (அந்த மஹரிஷிகளும், மநுக்களும் என்னைப் பின்பற்றி நிற்பவர்கள் என்று கீழோடு கூட்டிக் கொள்வது)

---

6 முன்னேழ் முனிகள் முகஞ்சேர் மனுநால்வ
ரென்னேய் நினைவா லியல்வுறுவ—ரின்னேதாம்
மானசராய்த் தோன்றியிந்த மண்ணுலகி லெவ்வுயிர்க்குந்
தானசைவில் மெய்யளிப்பர் தக்கு.

முன் ஏழ் முனிகள்—முதல மந்வந்தரத்தில் இருந்த (ப்₄ருகு₃ முதலான) ஏழு மஹரிஷிகளும் **முகம் சேர் மனு நால்வர்**—முககியத்துவத்தையுடைய நாலு மநுக்களும், **என் ஏய் நினைவால் இயல்வுறுவர்**—எனது பொருந்திய ஸங்கல்பத்தால செயலை புரிவார்கள் **இன்னே**—இப்படி என்னதீ₄னமாயிருநது **தாம் மானசராய் தோன்றி**—தாம் (ப்₃ரஹ்மாவின்) மாநஸபுத்ரர்களாய் உண்டாகி, **இந்த மண்ணுலகில் எவ்வுயிர்க்குந்தான்**—இந்நிலவுலகில் காணப்படும் எலலா ஜீவராஶிகளுக்கும், **தக்கு**—தம் ஸந்ததிகளின் மூலம், **அசைவில்**—இடைவிடாமல், **மெய் அளிப்பர்**—ஶரீரத்தைக் கொடுப்பர்.

॥ भा ॥ पूर्वे सप्त महर्षयः—अतीतमन्वन्तरे ये भृग्वादयस्सप्त महर्षयो नित्यसृष्टिप्रवर्तनाय ब्रह्मणो मनस्संभवाः, नित्यस्थितिप्रवर्तनाय

---

6. எல்லா ஜீவராசிகளின் ஸ்ருஷ்டி ஸ்திதிகளை நடத்திச் செல்லும் ஸப்தரிஷிகளும், நாலு மநுக்களும் என் ஸங்கல்பத்தாலேயே தொழில் புரிகிறார்கள் என்கிறான். இதிஹாஸ புராணங்களில் ஸப்தப்ரஹ்மாக்கள் என்று பிரஸித்தி பெற்று ஸ்ருஷ்டியை நடத்திச் செல்லும் ஸப்தரிஷிகளும், ரக்ஷணத்தை நடத்திச்செல்லும் நாலு மநுக்களும் ஸ்வதந்த்ரமாக ஸ்ருஷ்டி ஸ்திதிகளைச் செய்கிறார்கள் என்று எண்ணிவிடவேண்டா. அவர்களுக்கு அந்தர்யாமியாயிருந்து நானே அச்செயல்களைச் செய்கிறேன் என்கிறான். (பூர்வே ஸப்த மஹர்ஷய:) முதலாவதான ஸ்வாயம்புவ மந்வந்தரத்திலிருந்த ஏழு மஹரிஷிகளும். "மஹர்ஷீணாம் ப்ருகுரஹம்" என்று இவ்வத்தியாயத்திலேயே 25-வது ஶ்லோகத்தில் ப்ருகுமஹரிஷியைத் தன் அம்ஶமாகச் சொல்லப்போகிறானகையாலே அந்த ப்ராதான்யத்தைவிட்டு 'ப்ருகு முதலான ஏழு மஹரிஷிகள்' என்று பாஷ்யப்படப்பட்டது. (மாநஸா: ஸப்த மஹர்ஷய:) பிரமனின் மாநஸபுத்ரர்களான ஏழு மஹரிஷிகள். "ப்ரஹ்மண: ஸப்த வை புத்ரா மஹாத்மாந: ஸ்வயம்புவ: । மரீசிரத்ர்யங்கிரஸௌ புலஸ்த்ய: புலஹ: க்ரது: ॥ வஸிஷ்டஶ்ச மஹாபாக: ஸத்ருஶோ வை ஸ்வயம்புவா । ஸப்த ப்ரஹ்மாண இத்யேதே புராணே நிஶ்சயம் கதா:" [பார-ஶாந்தி-மோக்ஷ 207-3...5] [எம்பெருமானிடமிருந்து அவன் ஸங்கல்பத்தாலுண்டான பிரமனுக்குச் சிறந்தவர்களான ஏழு புத்ரர்கள் உண்டு — (1) மரீசி,(2) அத்ரி,(3)அங்கிரஸ்,(4)புலஸ்த்யர்,(5) புலஹர்,(6) க்ரது, (7) பிரமனையொத்த பெருமையையுடைய வஸிஷ்டர் என்னும் இந்த எழுவரும் ஏழு ப்ரஹ்மாக்கள் என்று புராணத்தில் அறுதியிடப்பட்டுள்ளார்கள்] என்று மஹாபாரதத்தில் சொல்லப்பட்டதன்றோ. இவர்கள், உலகைப் படைத்து ரக்ஷிப்பதில் உதவி புரிவதற்காக ப்ரஹ்மாவினால் மனத்தினால் படைக்கப்பட்டு, தங்கள் பெயரில் வழங்கும் பல கோத்ரங்களை உண்டாக்கியவர்கள் என்பது ஸகல ஶாஸ்த்ர ப்ரஸித்தமன்றோ. (மாநஸா:) "ஸ மாநஸாந் ஸப்த புத்ராந் அஸ்ருஜத்" [அந்தப் பிரமன் தன் மனத்தினால் (ஸங்கல்பத்தால்) ஏழு புத்ரர்களைப் படைத்தான்] என்று ஸுபாலோபநிஷத்திலும் சொல்லப்பட்டதன்றோ. எம்பெருமான் மஹாப்ரளயத்துக்குப் பின் ஆதிஸ்ருஷ்டிகாலத்தில் ஸமஷ்டி ஸ்ருஷ்டியைச் செய்பவன். பிரமன் அதற்குப்பின் வ்யஷ்டி ஸ்ருஷ்டியையும், நைமித்திக ப்ரள

ये च सावर्णिका नाम चत्वारो मनवः स्थिताः, येषां सन्तानमये लोके जाता इमास्सर्वाः प्रजाः प्रतिक्षणमाप्रलयादपत्यानामुत्पादकाः पालकाश्च

யத்துக்குப் பின் நைமித்திக ஸ்ருஷ்டியையும் செய்பவன். இவர்கள் தினமும் நடக்கும் நித்யஸ்ருஷ்டியைச் செய்வதற்காகப் பிரமனின் மாநஸபுத்ரர்களாகப் பிறந்தவர்கள். (சத்வாரோ மநவஸ் ததா) அவ்வண்ணமே தினந்தோறும் நடக்கும் ரக்ஷணமாகிற ஸ்திதியை நடத்துவைப்பதற்காகப் படைக்கப்பட்ட 'ஸாவர்ணிகர்கள்' எனப்படும் நான்கு மனுக்களும். ப்ரஹ்ம ஸாவர்ணர், ருத்ரஸாவர்ணர், தர்மஸாவர்ணர், தக்ஷஸாவர்ணர் என்னும் நால்வராலே தக்ஷனுடைய பெண்ணிடம் மனத்தாலே உண்டாக்கப்பட்டு, அதனாலேயே 'ஸாவர்ணிகர்கள்' எனப்படும் நான்கு மனுக்கள் இங்கு குறிக்கப்படுகின்றனர். ப்ரஹ்மாவின் ஒரு பகலில் பதினாலு மந்வந்தரங்கள் உள்ளதாகவும், அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மனு ஆட்சி புரிவதாகவும் புராணங்களில் கூறப்படுகிறது. அவர்களில் இதுவரை ஸ்வாயம்புவ ஸ்வாரோசிஷ ரைவத உத்தம தாமஸ சாக்ஷுஷர் எனப்படும் ஆறு மனுக்கள் ஆட்சி புரிந்திருப்பதாகவும், இப்போது வைவஸ்வத மனுவின் ஆட்சி நடப்பதாகவும், வருங்காலத்தில் ஏழு மனுக்களின் ஆட்சி நடக்கப்போவதாகவும் புராணங்கள் கூறுகின்றன. அப்படியிருக்க, இங்கு நான்கு மனுக்கள் என்பது எப்படியெனில்: இதுவரை ஆட்சி புரிந்த மனுக்கள் அறுவராயிருக்கையாலே அவர்களில் நால்வரை மட்டும் இங்கு குறிப்பதாகக் கொள்வது பொருந்தாது. அதனாலேயே முதலாவதான ஸ்வாயம்புவமந்வந்தரத்தில் பின்னால்வரும் ஸ்ருஷ்டி ஸ்திதிகளுக்கெல்லாம் மூலமாக தக்ஷனின் பெண் மூலம் உண்டான நான்கு ஸாவர்ணிக மனுக்களைக் குறிப்பதாகக் கொள்வதே பொருத்தம். இவ்வர்த்தத்தையே இந்த ச்லோகத்தின் கடைசிப் பகுதியாலே காட்டுகிறான் கண்ணன். அதை விளக்கும்போது நாம் எடுக்கப்போகும் பாகவத ச்லோகங்களும் இதை வலியுறுத்துகின்றன. (யேஷாம் லோகே ஜாதா: இமா: ப்ரஜா:) எவர்களுடைய புத்ர பௌத்ர ஸந்ததி ரூபமான உலகில் முக்காலத்திலுமுள்ள இந்த எல்லா ஜீவராசிகளும் உண்டாகி, பிரளயம் வரையில் க்ஷணந்தோறும் பிரஜைகளை உண்டாக்கி, ரக்ஷித்து வருகின்றார்களோ. இந்த ஸப்தரிஷிகள், நான்கு மனுக்களுடைய ஸந்ததிகளாலேயே நித்யஸ்ருஷ்டி ரக்ஷணங்கள் நடக்கின்றன என்று கருத்து. "தக்ஷாய ப்ரஹ்மபுத்ராய ப்ரஸூதிம பகவான் மநு: । ப்ராயச்சத் யத்கருதஸ் ஸர்க்கஸ் த்ரிலோக்யாம் விததோ மஹான் ॥" [பாகவதம் 4-1.11]

भवन्ति; ते भृग्वादयो मनवश्च मद्भावाः—मम यो भावः स एव येषां भावः ते मद्भावाः, मन्मते स्थिताः, मत्सङ्कल्पानुवर्तिन इत्यर्थः ॥ ६ ॥

[ப₄க₃வாந் மனு ப்₃ரஹ்மாவின் புத்ரனை த₃க்ஷனுக்கு ஸந்ததியை அளித்தார். அதிலிருந்தே மூவுலகங்களிலும் பெரிய ஸ்ருஷ்டிகள் பரவின.] **"தேப்₄யஸ்தஸ்யாமபூ₄த் ராஜந்! த₃க்ஷ: ப்ராசேதஸ: கில। யஸ்ய ப்ரஜாவிஸர்க்கே₃ண லோகா ஆபூரிதாஸ்த்ரய: ॥ யதா₂ ஸ ஸர்ஜ பூ₄தாநி த₃க்ஷோ து₃ஹித்ருவத்ஸல:। ரேதஸா மநஸா சைவ தந்மமாவஹித: ஶ்ருணு ॥"** [பா₄க₃வதம் 6-4-17, 18] [அரசனே! ப்ரசேதஸ்ஸின் புத்ரர்களான அவர்களுக்கு அவளிடம் ப்ரசேதஸ்ஸின் பௌத்ரனை த₃க்ஷன் உண்டானன். இந்த த₃க்ஷனுடைய ஸந்ததிகளாலே மூவுலகும் நிறைந்துள்ளன. பெண்ணிடம் அன்புகொண்ட த₃க்ஷன் தன் வீர்யத்தாலும், மனத்தாலும் ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்த ப்ரகாரத்தை நான் கூறப்போவதைக் குறிக்கொண்டு கேட்பாயாக] முதலான புராணவசனங்கள் இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கவை. **"ஜநோ லோக: ப்ரோக்த:"** என்று லோகஶப்₃த₃ம் ஸந்ததியைக் குறிக்கும். 'இமா: ப்ரஜா:' என்றது முக்காலத்திலுமுள்ள அனைவருக்கும் உபலக்ஷணம். முக்காலத்திலுமுள்ளவர்களையும் நேரே காணவல்லவனன்றோ ஸர்வேஶ்வரனான கண்ணன். (தே மாநஸா மஹர்ஷய: ததா₂ மநவ: மத்₃பா₄வா:) முற்கூறியபடி நித்யஸ்ருஷ்டிக்குக் காரணமாய், ப்₃ரஹ்ம மாநஸ புத்ரர்களான ஏழு மஹரிஷிகளும், நித்யரக்ஷணத்துக்குக் காரணமான நான்கு மனுக்களும் என்நினைவைப் பின்செல்கின்றவர்கள். **"மம யோ பா₄வ: ஸ ஏவ யேஷாம் பா₄வ: தே மத்₃பா₄வா:"** [என் நினைவே தம் நினைவாகக் கொண்டவர்கள் மத்₃பா₄வர்கள்] என்று வ்யுத்பத்தி. **'மத்₃பா₄வ பா₄வா:'** என்று வரவேண்டியது மத்₄யமபத₃லோபிஸமாஸமாகையாலே **'மத்₃பா₄வா:'** என்று இருக்கிறது. அன்றிக்கே, இருவர் பா₄வத்தையும் ஒன்றாகப் படிப்பதின் தாத்பர்யம் இது என்றும் கொள்ளலாம். 'அரசனின் நினைவே கிங்கரனின் நினைவு' என்பதுபோலே தன் கருத்தைப் பின்செல்கின்றவர்கள் இவ்வனைவரும் என்றதாகிறது; ரிஷிகள் மனுக்களுக்குள்ள இக்கருத்தொற்றுமை—அவர்களுடைய ஸ்வாதந்த்ர்யத்தினால் ஏற்பட்டது என்றோ, வேலைக்காரர்கள் எஜமானனிடம் பு₃த்₃தி₄பூர்வகமாக அடங்கிநடப்பது போன்றது என்றோ கருதிவிடக் கூடாது; என் ஸங்கல்பத்தினாலேயே இந்த ரிஷிகளும் மனுக்களும் ஸ்ருஷ்டி ஸ்தி₂திகளை நடத்துகின்றனர் என்னும் கருத்திலேயே இங்கு 'மத்₃பா₄வா:' என்னும் பத₃ம் வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. ஆக, எல்லா ஜீவராஶிகளின் நித்ய ஸ்ருஷ்டி ஸ்தி₂திகளை நடத்திவைப்பவர்களும் என் ஸங்கல்பத்தினாலேயே செயல்படுகிறார்கள் என்றதாயிற்று. 6.

एतां विभूतिं योगं च मम यो वेत्ति तत्त्वतः।
सोऽविक[म्पे]म्प्येन योगेन युज्यते नात्र संशयः॥ ७॥

7. ஏதாம் விபூ₄திம் யோக₃ம் ச மம யோ வேத்தி தத்த்வத꞉ ।
ஸோऽவிக(ம்பே)ம்ப்யேந யோகே₃ந யுஜ்யதே நாத்ர ஸம்ஶய꞉ ॥

ஏதாம் மம விபூ₄திம்—(எல்லாப் பொருள்களும் எனக்கு அதீ₄னமாயிருக்கையாகிற) இந்த என் செல்வத்தையும், **மம யோக₃ம் ச**-தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டானவனுய், கல்யாண கு₃ணங்களோடு கூடியவனுயிருக்கும் என் பெருமையையும், **ய꞉**-எவனொருவன், **தத்த்வத꞉வேத்தி**-உள்ளபடி அறிகிருனே, **ஸ꞉**—அவன், **அவிகம்பேந யோகே₃ந**—எதனுலும் அசைக்க முடியாத ப₄க்தியோக₃த்தோடு, **யுஜ்யதே**-கூடப்பெறுகிருன். **அத்ர**—இவ்விஷயத்தில், **ந ஸம்ஶய꞉**—ஐயமில்லை.

---

7. இந்த விபூதியையும் யோகத் தையுமெவனென்
சந்த மெனவறியுந் தத்துவமா—யிந்தவவன்
காதலமர் பத்தியுடன் கம்பியா மற்கூடு
மாதலிலோர் சங்கையில்லை யாங்கு.

இந்த விபூதியையும்—(எல்லாப் பொருள்களும் எனக்கு அதீ₄னமாயிருக்கையாகிற) இந்தச் செல்வத்தையும், **யோகத்தையும்** — தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டானவனுய், கல்யாணகு₃ணங்களோடுகூடினவனுயிருக்கும் பெருமையையும், **எவன்** — எவனொருவன், **என் சந்தமென**—எனக்கே உரியதென்று, **தத்துவமாய் அறியும்**-உள்ளபடி அறிவானே, **இந்த அவன்**—இத்தகைய அவன், **காதல் அமர் பத்தியுடன்**-என்விஷயத்தில் காதல் பொருந்திய ப₄க்தியோக₃த்தோடு, **கம்பியாமல் கூடும் ஆதலில்**—அசைக்கமுடியாதபடி கூடப் பெறுவானுகையால், **ஆங்கு**—இவ்விஷயத்தில், **ஓர் சங்கை இல்லை**—எந்த ஐயமும் இல்லை.

॥भा॥ विभूतिः—ऐश्वर्यम्, एतां सर्वस्य मदायत्तोत्पत्तिस्थिति-प्रवृत्तितारूपां विभूतिं, मम हेयप्रत्यनीककल्याणगुणगणरूपं योगं च

---

7. ' ஸ்வகல்யாணகு3ணாநந்த்யக்ருத்ஸ்நஸ்வாதீ4நதாமதி:" [கீ3தார்த்த2ஸங்க்3ரஹம் 14] [தன்னுடைய கல்யாணகு3ணங்கள் அளவற்றவை என்பதும், எல்லாப் பொருள்களும் தன் அதீ4நமானவை என்பதும் (ப4க்தியோக3ம் உண்டாகி வளர்வதற்காகப் பத்தாவது அத்தியாயத்தில் கூறப்படுகின்றன)] என்று ஆளவந்தார் அருளிய இரண்டு பெருமைகளும் கடந்த மூன்று ஶ்லோகங்களிலும் விளக்கப்பட்டன. மூன்று ஶ்லோகங்களிலும் இவ்விரண்டு அர்த்த2ங்களும் இருந்தபோதிலும், 4, 5 ஶ்லோகங்களில் பரமகருணையாலும், வாத்ஸல்யாதி3கு3ணங்களாலும் ஜீவராஶிகளைத் திருத்தித் தனக்காக்குவதற்காக அவர்களுடைய மனநிலைகளையெல்லாம் தன்னதீ4னமாகக் கொண்டிருக்கும் கல்யாணகு3ணப் பெருமை பிரத4ானமாக வெளியிடப்பட்டது. ஆருவது ஶ்லோகத்தில், எல்லாப் பொருள்களையும் தன் அதீ4நமாகக்கொண்டிருக்கும் செல்வச் சிறப்பு பேசப்பட்டது. இவ்விரண்டையும் உள்ளபடி அறிபவன் அசையாத ப4க்தியோக3த்தைப் பெறுகிருன் என்று இந்த ஶ்லோகத்தில் கூறப்படுகிறது. (ஏதாம் மம விபூ4திம் யோக3ம் ச) ஆருவது ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட என்விபூ4தியாகிற செல்வத்தையும், 4,5வது ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட எனது கல்யாணகு3ணயோக3த்தையும். முன் மூன்று ஶ்லோகங்களில் சொன்ன இரண்டு அர்த்த2ங்களையும் பு3த்3தி4ஸ்த2 க்ரமத்தில் அநுவாத3ம் செய்கிருன். (விபூ4திம்) செல்வத்தை, "விபூ4திர் பூ4திரைஶ்வர்யம்" [அமர 1-1-36] என்கிற நிக4ண்டுவின் படியே 'விபூ4தி' ஶப்3த3ம் செல்வத்தைக் குறிக்கும். 'விபு4' ஶப்3த3ம் நியமிப்பவனைக்குறிக்கும். இவ்விடத்தில் விபு4வின் கார்யமான நியமனம் விபூ4தி எனப்படுகிறது. இது ப4ாவப்ரத4ானமான ப்ரயோக3ம். இங்கு எல்லாப்பொருள்களும் ஈஶ்வரனை தனக்கு அதீ4னமான உத்பத்தி ஸ்தி2தி ப்ரவ்ருத்திகளை உடைத்தாயிருக்கையாகிற செல்வத்தையே கண்ணன் விபூ4தி ஶப்3த3த்தால் குறிக்கிருன். ஒரு பொருள் ப்ரத2மக்ஷணத்தோடு ஸம்ப3ந்த4ப்படுவது உத்பத்தி எனப்படுகிறது. இரண்டாவது மூன்ருவது முதலான க்ஷணங்களோடு ஸம்ப3ந்த4ப்படுவது ஸ்தி2தி அல்லது ரக்ஷணம் எனப்படுகிறது. உத்பத்தியும், ஸ்தி2தியும் ப4க3வத்ஸங்கல்பத்தாலேயே ஏற்படுகின்றன என்பது ஶாஸ்த்ர ப்ரஸித்3த4ம். ப்ரவ்ருத்தி என்பது ஜீவராஶிகள் தத்தம் காரியங்

களின் பொருட்டுத் தொழில்புரிவது. ஜீவனால் அதி₄ஷ்டிக்கப்படாத அசேதனப்பொருளுக்கு ப்ரவ்ருத்தி கிடையாது. ஜீவனுடைய ப்ரவ்ருத்தியும் உத்பத்தி ஸ்தி₂திகளைப்போலே எம்பெருமானுக்கு அதீ₄னமானது என்று இங்கு சொல்லப்படுகிறது. 19 வது ஶ்லோகம் முதலானவிடங்களில் விபூ₄தி ஶப்₃த₃ம் நியமனத்துக்கு விஷயமான பொருள்களைக் குறித்தும் பிரயோகி₃க்கப்படுகிறது. அவையும் எம்பெருமானுடைய செல்வங்களேயன்றோ. செல்வங்களாகிற அப்பொருள்களில்லாவிடில் இவன் செல்வமுடையவனாகமுடியாதாகையாலே 21-வது ஶ்லோகம் தொடங்கி அப்பொருள்களெல்லாம் இவனோடு ஒரே வேற்றுமையில் படிக்கப்படுகின்றன. (யோக₃ம் ச) தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாய், கல்யாணகு₃ணங்களோடு கூடியிருக்கையாகிற யோக₃த்தையும். ''யுஜ்யதே இதி யோக₃:'' [எது கூடியிருக்கிறதோ அது யோக₃மாகிறது] என்கிற வ்யுத்பத்தியின்படியே எம்பெருமானோடு கூடியிருக்கும் ஹேயப்ரத்யநீகத்வம் (தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாயிருக்கை), கல்யாணகு₃ணாகரத்வம் (கல்யாணகு₃ணங்களுக்குக் கொள்கலமாயிருக்கை) என்னும் உப₄யலிங்க₃ங்களும் (பரம்பொருளுக்கே உரிய முக்கியமான இரு அடையாளங்களும்) இங்கு யோக₃ ஶப்₃த₃த்தால் குறிக்கப்படுகின்றன. (ய: தத்த்வத: வேத்தி) (இந்த என் விபூ₄தியையும், யோக₃த்தையும்) எவன் உள்ளபடி அறிகிறானோ. ஸர்வேஶ்வரனை இவனைப் பிறர்க்குப் பரதந்த்ரனாக அறிவது, தாழ்ந்த துன்பம், அஜ்ஞானம் முதலானவற்றை உடையவனாக அறிவது, எம்பெருமானால் நியமிக்கப்பட்டுச் செயல்படும் பிரமன் உருத்திரன் முதலானவர்களை ஸ்வதந்த்ரமாகத் தொழில்புரிபவர்களாக நினைப்பது முதலான மயக்கங்களைக் கைவிட்டு, எம்பெருமானையே உப₄யவிபூ₄தியையும் தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தாவாக அறிவதே உள்ளபடி அறிகையாகும். (ஸ: அவிகம்பேந யோகே₃ந யுஜ்யதே) அவன் எதனாலும் அசைக்கமுடியாத ப₄க்தியோக₃த்தோடு கூடப்பெறுகிறான், 'அவிகம்பேந' என்றதற்கு 'அசையாதது' என்று மாத்திரம் பொருளல்ல, நூற்றுக்கணக்கான இடையூறுகள் ஏற்பட்டாலும் அசைக்க இயலாதபடி உறுதியானது என்றே பொருள் என்பதை 'அப்ரகம்ப்யேந' என்னும் பத₃த்தாலே பா₄ஷ்யகாரர் காட்டினார். ''அவிகம்ப்யேந'' என்றும் மூலபாட₂ம் காண்கிறது. ஶ்லோகத்தின் முற்பாதியில் 'மம யோக₃ம்' என்னுமிடத்தில், எம்பெருமானோடு தொடர்புடையதாகையாலே கல்யாணகு₃ணயோக₃ம் யோக₃ஶப்₃த₃த்திற்குப் பொருளாயிற்று. 'யோகே₃ந யுஜ்யதே'

नात्र संशयः; मद्विभूतिविषयं कल्याणगुणविषयं च ज्ञानं भक्तियोगवर्धनमिति स्वयमेव द्रक्ष्यसीत्यभिप्रायः॥७॥

॥भा॥ विभूतिज्ञानविपाकरूपां भक्तिवृद्धिं दर्शयति —

अहं सर्वस्य प्रभवो मत्तस्सर्वं प्रवर्तते।
इति मत्वा भजन्ते मां बुधा भावसमन्विताः॥८॥

8. அஹம் ஸர்வஸ்ய ப்ரப$_4$வோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே।
இதி மத்வா ப$_4$ஜந்தே மாம் பு$_3$த$_4$ா ப$_4$ாவஸமந்விதா: ॥

அஹம் — நான, **ஸர்வஸ்ய** — எல்லா உலகிற்கும், **ப்ரப$_4$வ:** - உத்பத்திகாரணமாகிறேன். **மத்த:** - என்னுலேயே, **ஸர்வம்** — பொருள்களனைத்தும், **ப்ரவர்த்ததே** — செயல்படுகிறது. **இதி** — என்கிற இந்த என்னுடைய இயல்வான தடையற்ற செல்வத்தையும், கல்யாணகு$_3$ணயோக$_3$த்தையும், **மத்வா** — அநுஸந்தி$_4$த்து, **பு$_3$த$_4$ா:** — ஜ்ஞானிகள், **ப$_4$ாவஸமந்விதா:** — பேரன்புடையவர்களாய், **மாம்** — (எல்லாக் கல்யாணகு$_3$ணங்களோடும் கூடிய) என்னை, **ப$_4$ஜந்தே** - உபாஸிக்கிருர்கள்.

என்று உபாஸகனேடு தொடர்புடையதாகையாலும், முன்பின் ப்ரகரணங்களில் ப$_4$க்தியோக$_3$மே கூறப்படுகிறதாகையாலும், இங்கு யோக$_3$ஶப்$_3$த$_3$ம் ப$_4$க்தியோக$_3$த்தையே குறிக்கிறது. (அத்ர ந ஸம்ஶய:) இதில் ஐயமில்லை. என் விபூ$_4$தியைப்பற்றியதும், கல்யாணகு$_3$ணங்களைப் பற்றியதுமான அறிவு ப$_4$க்தியோக$_3$த்தை வளர்ப்பது என்பதை நீயே காணப்போகிருய் என்று கருத்து. ஶாஸ்த்ரஸித்$_3$த$_4$மான அர்த்த$_2$த்தையும் நேரில் காணும்போதே ஐயங்கள் நீங்கும் என்பது ப்ரஸித்$_3$த$_4$மன்ருே. ''சி$_2$த்$_3$யந்தே ஸர்வ ஸம்ஶயா:........தஸ்மிந் த்$_3$ருஷ்டே பராவரே'' [முண்ட$_3$கம் 2-2-9] [பரம்பொருள் காணப்பட்டவுடன் எல்லா ஐயங்களும் அறுபட்டுவிடும்] என்று உபநிஷத்தும் ஓதிற்றன்ருே. ஆக, எம்பெருமானுடைய ஸர்வநியந்த்ருத்வத்தையும், ஹேயப்ரத்யநீகனுய் (தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாய்), கல்யாணகு$_3$ணங்களோடு கூடியிருக்கும் பெருமையையும் உள்ளபடி அறிபவனுக்கு அசைக்கமுடியாதபடி ப$_4$க்தியோக$_3$ம் வளர்ந்துவிடும் என்று சொல்லிற்றுயிற்று. 7.

॥भा॥ अहम्, सर्वस्य—विचित्रचिदचित्प्रपञ्चस्य, प्रभवः—उत्पत्तिकारणम्, सर्वं मत्त एव प्रवर्तत इतीदं मम स्वाभाविकं निर-

---

8. ஏதுக்குந் தோற்றநா னென்ன னடப்பதிதென்
றீதை யறிந்தே யெனையடைவர்—மீதுற்ற
ஞானியரா யென்பா னலஞ்சேர் மனத்துடனே
தானியல்வ ரானவர்க டாம்.

நான்—நான், **ஏதுக்கும் தோற்றம்**—எல்லா உலகிற்கும் உத்பத்தி காரணமாகிறேன். **என்னல்** — என்னாலேயே, **இது**—பொருள்கள் அனைத்தும், **நடப்பது**—செயல்படுகிறது. **என்று ஈதை** — என்கிற இந்த என்னுடைய இயல்வான தடையற்ற செல்வத்தையும், கல்யாணகு₃ணயோக₃த்தை யும், **அறிந்தே**—அநுஸந்தி₄த்தே, **மீதுற்ற ஞானியராய்**—தலைசிறந்த ஜ்ஞானிகளாய், **என்பால் நலம் சேர் மனத் துடனே தான் இயல்வர் ஆனவர்கள் தாம்** — என்னிடம் பேரன்புகொண்ட நெஞ்சோடு செயல்புரிகின்றவர்கள், **எனை** — (எல்லாக் கல்யாணகு₃ணங்களோடும்) கூடிய என்னை, **அடைவர்**—உபாஸிப்பர்.

---

8. விபூ₄தியோக₃ங்களை உள்ளபடி அறிபவன் ப₄க்தியோக₃ம் வளரப் பெறுகிறான் என்றான் சென்ற ச்லோகத்தில். அதற்கு உதா₃ ஹரணம் காட்டும் முக₂த்தாலே விபூ₄திஜ்ஞானத்தின் பரிணாமமான ப₄க்திவ்ருத்₃தி₄யை இந்த ச்லோகத்தில் காட்டுகிறான். (அஹம்) உப₄யவிபூ₄திக்கும் தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தாவாய், உயர்வற உயர்நலமுடையவனான நான். (ஸர்வஸ்ய) ஆச்சர்யமான சேதநாசேதநங்களடங்கிய அனைத்துலகிற்கும். ஸர்வசப்₃த₃த்திற்கு வரம்பில்லாமையாலே, பிரமன் முதலான எல்லாச் சேதநர்களையும், அசேதனங்களையும் குறிக்கிறது அந்த சப்₃த₃ம். (ப்ரப₄வ:) உத் பத்திகாரணம். ப்ரப₄வசப்₃த₃ம் உத்பத்திக்ரியை முதலானவற் றையும் குறிக்குமாயினும் அவை ப்ரகரணத்திற்குப் பொருந்தாவாகை யாலே உத்பத்திக்குக் காரணம் என்று பொருள்படுகிறது. பிரமன் முதலானாரும் அண்ட₃த்தினுள்ளிருக்கும் பொருள்களுக்கு உத்பத்தி காரணமாக சாஸ்த்ரங்களில் சொல்லப்படுகின்றனரேயெனில்—(மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே) பிரமன் முதலான எல்லா ஜீவராசிகளும்

कृशैश्वर्यं, सौशील्यसौन्दर्यवात्सल्यादिकल्याणगुणगणयोगं च मत्वा बुधाः—ज्ञानिनः भावसमन्विताः माम्—सर्वकल्याणगुणान्वितं भजन्ते। भावः—मनोवृत्तिविशेषः। मयि स्पृहयालवो मां भजन्त इत्यर्थः॥ ८॥

॥ भा॥ कथम्?

मच्चित्ता मद्गतप्राणा बोधयन्तः परस्परम्।
कथयन्तश्च मां नित्यं तुष्यन्ति च रमन्ति च॥ ९॥

என்னலேயே செயல்படுகிருர்களாகையாலே நானே உத்பத்தி காரண மாகிறேன் என்று கருத்து. இத்தால், சென்ற ஶ்லோகத்தில் விபூ₄தி ஶப்₃த₃த்தால் சொல்லப்பட்ட ஸர்வநியந்த்ருத்வமும், யோக₃ஶப்₃த₃த் தால் சொல்லப்பட்ட ஸர்வகல்யாண கு₃ணகரத்வமும் உணர்த்தப்பட்ட தாயிற்று. (இதி) ஶ்லோகத்தின் முற்பாதியில் சொல்லப்பட்ட இந்த என்னுடைய இயல்வானதாய், தடையற்றதான நியந்த்ருத்வமாகிற செல்வத்தையும், பெரியவன் மிகத்தாழ்ந்தவர்களோடு ஒரு நீராகக் கலந்து பரிமாறுகையாகிற ஸௌஶீல்யம், திருமேனி அழகாகிற ஸௌந்த₃ர்யம், அடியார்கள் செய்த குற்றம் நற்றமாகவே கொள்கை யாகிற வாத்ஸல்யம் முதலான ஸ்வரூப தி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹங்களின் கல்யாண கு₃ணங்களின் சேர்த்தியையும். (மத்வா) அநுஸந்தி₄த்து. இவனுடைய நியந்த்ருத்வம் இயல்வானதாகவும், தடையற்றதாகவு மிருக்கையால், ப₄க₃வத்ஸங்கல்பத்தால் உண்டானதாய், எல்லையுள்ள தான ப்₃ரஹ்மாதி₃களின் நியந்த்ருவத்தைக் காட்டிலும் சிறப்புற்ற தாகையாலும், அவர்களுக்கில்லாத கல்யாண கு₃ண யோக₃ம் இவ னுக்கு இருப்பதாலும் இவனிடமே ஜ்ஞானிகள் பேரன்புகொள்ள முடியும் என்று கருத்து. (பு₃த₄ா:) உண்ணுஞ்சோறு பருகும்நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன் எனும் மஹாத்மாக்களான ஜ்ஞாநிகளன்றோ இவர்கள். (பா₄வஸமந்விதா:) பேரன்புகொண்ட வர்களாய். வகுத்ததாய், தலைசிறந்த விஷயமாகையால் இவனிடமே பேரன்புகொள்ளமுடியும் என்று கருத்து. விபூ₄திஜ்ஞானமே பேரன் பாகிற ப₄க்தியாகப் பரிணமிக்கிறது என்று தாத்பர்யம். பா₄வஶப்₃ த₃ம் பல பொருள்களை உடையதாயினும் ப்ரகரணத்தையொட்டி இங்கு மநோவ்ருத்தி விஶேஷமான பேரன்பைக் குறிக்கிறது. (மாம் ப₄ஜந்தே) உபாஸிக்கும்போது அநுஸந்தி₄க்கவேண்டிய எல்லாக் கல்யாண கு₃ணங்களோடும் கூடிய என்னை உபாஸிக்கிருர்கள். ஆக, முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட விபூ₄தியோக₃ஜ்ஞானமே ப₄க்தி யாக வளர்கிறது என்றதாயிற்று. 8.

9. மச்சித்தா மத்$_3$க$_3$தப்ராணா பே$_3$ாத$_4$யந்த: பரஸ்பரம் ।
கத$_2$யந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச ॥

மச்சித்தா:—என்னிடம் நெஞ்சு செலுத்தியவர்களாய், **மத்$_3$க$_3$தப்ராணா:** — என்னிடம் அமைந்த வாழ்வையுடைய வர்களாய்,**பரஸ்பரம் பே$_3$ாத$_4$யந்த:**—(தாம் தாம் அநுப$_4$வித்த என்னுடைய கு$_3$ணங்களை) ஒருவர்க்கொருவர் அறிவிப்ப வர்களாய், **மாம் நித்யம் கத$_2$யந்த: ச**—என்னையும், எனது திவ்ய சேஷ்டிதங்களையும எப்போதும் பேசுகின்றவர்களாய், **துஷ்யந்தி ச** — (பேசுகிறவர்கள் ஸ்வயம்ப்ரயோஜனமான பேச்சாலே) இன்புறுகின்றனர்; **ரமந்தி ச**—(கேட்கிறவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லாலே) இன்புறுகின்றனர்.

---

9. என்னிலைய சிந்தையா ரென்பா லுயிரினர்
தன்னிலையிற் றம்மிற்றஞ் சார்வுணர்த்திப்—பின்னிய
சொல்லியென்னை யென்றுஞ் சுகிப்பர் மிகவுகப்பர் [லாற்
எல்லிபக லொன்றின்றி யேய்ந்து.

என்னிலைய சிந்தையார் — என்னிடம் நெஞ்சு செலுத்திய வர்களாய்,**என்பால் உயிரினர்** — என்னிடம்அமைந்தவாழ்வை யுடையவாகளாய்,**தன் நிலையில் தம் சார்வு தம்மில் உணர்த்தி**- தாம் தாம் அநுப$_4$வித்த எனது இயல்வான கு$_3$ணங்களை ஒரு வர்கொருவர் அறிவிப்பவர்களாய்,**பின்னியலால்**-எனது அவ தாரசேஷ்டிதங்களோடு, **எனை**—என்னை, **என்றும் சொல்லி**— எப்போதும் பேசி, **எல்லி பகல் ஒன்றின்றி ஏய்ந்து**—இரவு பகல் என்னும் வாசியில்லாமல் பொருந்தி, **சுகிப்பர்**—(பேசு கிறவர்கள் ஸ்வயம் ப்ரயோஜனமான பேச்சாலே) இன்புறு கின்றனர். **மிக உகப்பர்**—(கேட்கிறவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லாலே) இன்புறுகின்றனர்.

---

9. ''ப$_4$ாவ ஸமந்விதா: ப$_4$ஜந்தே'' என்று சென்ற ஶ்லோகத்தில் சொன்னதை விவரிப்பதன்மூலம் உபாஸகஜ்ஞானிகளின் பரிபக்குவ நிலையையடைந்த ஸ்வயம்ப்ரயோஜன ப$_4$க்திநிஷ்ட$_2$ர்களான மஹாத் மாக்களையே தான் கருத்தில் கொண்டிருப்பதைக் காட்டுகிறான் கண்ணன் இந்த ஶ்லோகத்தில். திருநெடுந்தாண்டகம் முப்பது பாசுரங்களும் இந்த ஶ்லோகத்திற்கு விளக்கம்போலே அமைந்திருக் கின்றன என்று பட்டர் நிர்வஹிப்பர். ஆழ்வார் தாமான பாசுரமான

॥ भा ॥ मच्चित्ताः — मयि निविष्टमनसः, मद्गतप्राणाः — मद्गतजीविताः, मया विना आत्मधारणमलभमाना इत्यर्थः ;

முதல் பத்துப் பாசுரங்கள் 'மச்சித்தா:' என்றதையும், திருத்தாயார் பாசுரமான இரண்டாவது பத்துப் பாசுரங்கள் 'மத்$_3$க$_3$தப்ராணா:' என்றதையும், நாயகியான பெண்பிள்ளை பாசுரமான மூன்றாவது பத்துப் பாசுரங்கள் 'பே$_3$ாத$_4$யந்த: பரஸ்பரம்' என்றதையும் விளக்குகின்றன என்று வ்யாக்$_2$யானங்களில் உள்ளது. (மச்சித்தா:) என்னிடமே நெஞ்சு செலுத்தியவர்கள். "தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு" [முதல்திருவ 67] என்கிறபடியே மற்ற தே$_3$வதைகள், மற்ற விஷயங்கள் ஆகிய எதுவும் கலக்காமல் என்னை ஒருவனையே நெஞ்சிற்கொண்டவர்கள் என்றபடி. இவ்வர்த்த$_2$த்தைத் திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் "இமையவர் தம் திருவுரு வேறெண்ணும்போது ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ ஒன்று மாகடலுருவம் ஒத்துநின்ற மூவுருவும் கண்டபோது ஒன்றும் சோதி முகிலுருவம் எம் அடிகள் உருவம் தானே"[திருநெடு 2] "அந்தணனை அந்தணர் மாட்டந்திவைத்த மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும் வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே" [திருநெடு 4] "மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை மலர்புரையும் திருவடியே வணங்கினேனே" [திருநெடு 5] "பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே" [திருநெடு 6, 7] "நீரகத்தாய்...பேரகத்தாய் பேராது என்னெஞ்சினுள்ளாய் பெருமான் உன் திருவடியே பேணினேனே" [திருநெடு 8] "வங்கத்தால்...எங்குற்றாய் எம்பெருமான் உன்னை நாடி ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே"[திருநெடு9] "பொன்னானாய்... என்னானாய் என்னானாய் என்னலல்லால் என்னறிவன் ஏழையேன்" [திருநெடு 10] என்று பாசுரந்தோறும் விளக்கியருளினார். மற்ற ஆழ்வார்களின் நூற்றுக்கணக்கான தாமான தன்மைப் பாசுரங்களும் இங்கு அநுஸந்தி$_4$க்கத்தக்கவை. (மத்$_3$க$_3$தப்ராணா:) என்னிடம் அமைந்த வாழ்வையுடையவர்கள். என்னைப் பிரிந்தால் த$_4$ரிக்கமாட்டார்கள் என்றபடி. திருநெடுந்தாண்டகத்தில் பரகாலநாயகி பிரிவிலே மயங்கி, திருத்தாயார் பாசுரமாகப் பாடும் பத்துப் பாசுரங்களும் இந்நிலையை விவரிக்கின்றன. "பட்டுடுக்கும் அயர்த்திரங்கும் பாவை பேணாள்" [திருநெடு 11] "நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும் சோரும்" [திருநெடு 12] "துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே" [திருநெடு 13,16] "இதுவன்றோ நிறைவழிந்தார் நிற்குமாறே" [திருநெடு 18] "அற்றாள் தன்நிறையழிந்தாள் ஆவிக்கின்றாள்" [திருநெடு 19] என்னும் பாசுரங்கள் காண்க. நம்மாழ்வார் திருத்தாயார் பாசுரமாக அருளிச்செய்தவையும் இப்பத$_3$த்துக்கு விளக்கமேயாகையால் அவையும் இங்கு அநுஸந்தி$_4$க்கத்தக்கவை.

स्वैस्स्वैरनुभूतान् मदीयान् गुणान् परस्परं बोधयन्तो मदीयानि दिव्यानि

"ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டி$_2$த:।
ப$_4$க்திஶ்ச நியதா வீர பா$_4$வோ நாந்யத்ர க$_3$ச்ச$_2$தி ॥"
[ரா-உ 40-16]

[அரசரே! எனக்கு மிகச்சிறந்த அன்பானது தேவரீரிடத்தில் எப்போதும் நிலைநிற்கிறது. ப$_4$க்தியும் நித்யமாயிராநின்றது. வீரனே! (என்) நினைவு வேறொரு இடத்தில் செல்கின்றதில்லை] என்னும் திருவடியின் நிலை '**மச்சித்தா:**' என்பதற்கு விளக்கமாகவும்,

"பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச த$_4$நாநி ச।
ப$_4$வத்$_3$க$_3$தம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுக$_2$ாநி வை ॥"
[ரா-யு 19-5]

[என்னாலே இலங்கையரசும் கைவிடப்பட்டது. நண்பர்களும், செல்வங்களும் கைவிடப்பட்டன. என்னுடைய அரசும், உயிரும், ஸுக$_2$ங்களும் தேவரீரிடம் அடங்கியுள்ளன.] என்னும் விபீ$_4$ஷணனின்நிலை '**மத்$_3$க$_3$தப்ராணா:**' என்பதற்கு விளக்கமாகவும் கொள்ளத்தக்கது. (மாம் நித்யம் போ$_3$த$_4$யந்த: பரஸ்பரம்) அவரவர்களால் அநுப$_4$விக்கப்பெற்ற எனது கு$_3$ணங்களை ஒருவர்க்கொருவர் எப்போதும் உணர்த்துகின்றவர்கள். "பரஸ்பரம்" என்கையாலே, அறியாத அர்த்த$_2$ங்களை ஒருவர்க்கொருவர் சொல்லுவதென்பதில்லை. உயிர் த$_4$ரிப்பதற்காகச் சிலர் சொல்ல, சிலர் கேட்டுப் போதுபோக்குகிறார்கள் என்று கருத்து. "**தரித்திருந்தேனாகவே......தெரித்து** எழுதி வாசித்தும் **கேட்டும்** வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன்போது" [நான்-திருவ 63] என்றார் திருமழிசைப்பிரானும். "புல்லாணி எம்பெருமான் பொய்கேட்டு இருந்தேனே" [பெரியதிரு 9-4-5] என்று கேட்டு த$_4$ரித்தல், "கோவிந்தன் குணம்பாடி ஆவிகாத்திருப்பேனே"[நாச்-திரு 8-3] என்று சொல்லி த$_4$ரித்தலாம்படியாயிருக்கை—என்று பெரியவாச்சான் பிள்ளை திருநெடுந்தாண்டகம் 21-வது பாசுரவ்யாக்$_2$யானத்தில் இதை விவரிப்பர். திருநெடுந்தாண்டகம் மூன்றாவது பத்துப்பாசுரங்களில் "அவ்வண்ணத்தவர் நிலைமை கண்டும் தோழீ"[21] என்றும், "வரையுருவில் மாகளிற்றைத் தோழீ! என்தன் பொன்னிலங்கு முலைக்குவட்டில் பூட்டிக்கொண்டு" [28] என்றும் சொல்லுகையாலே இவை 'போ$_3$த$_4$யந்த: பரஸ்பரம்' என்றதற்கு விளக்கம் என்று ப$_4$ட்டர் நிர்வாஹம். மற்ற ஆழ்வார்களருளிய தோழியோடு உசாவும் பாசுரங்கள், பக்ஷிகளைத் தூதனுப்பும் பாசுரங்கள் முதலியவையும் இப்பத$_3$த்துக்கு விளக்கமேயாகையால் அவையும் இங்கு அநுஸந்தி$_4$க்கத்தக்கவை.

रमणीयानि कर्माणि च कथयन्तः तुष्यन्ति च रमन्ति च — वक्तारः

(பரஸ்பரம் கத$_2$யந்தஶ்ச மாம் நித்யம்) என்னுடைய அற்புதமான அழகிய செயல்களை ஒருவர்க்கொருவர் எப்போதும் சொல்லுகின்ற வர்கள். 'பே$_3$ாத$_4$யந்த:' 'கத$_2$யந்த:' என்னும் இரண்டு ஶப்$_3$த$_3$ங் களுக்கும் 'மாம்' என்னும் பத$_3$ம் ஒன்றே விஷயத்தைக் காட்டுவதாக ஶ்லோகத்திலிருந்தாலும், புநருக்தி ஏற்படுமாகையாலே விஷயபே$_4$த$_3$ம் கொள்ளவேண்டியது அவசியம். அப்படிக்கொள்ளும்போது 'பே$_3$ாத$_4$ யந்த:' என்னும் பத$_3$ம் அறிந்ததை ஞாபகப்படுத்துவது என்று பொருள்படுமாகையாலே, ஏற்கனவே அநுப$_4$வித்த கு$_3$ணவிஷய மானது என்றும், 'கத$_2$யந்த:' என்னும் பத$_3$ம் ஏற்கனவே நடந்த தைச் சொல்லுவது என்று பொருள்படுமாகையாலே, எம்பெருமானு டைய அற்புத சேஷ்டிதங்கள் விஷயமானது என்றும் கொள்வது ஸ்வரஸமானது. எம்பெருமானுடைய சேஷ்டிதங்கள் "கர்ம ச மே தி$_3$வ்யம்" [கீ$_3$தை 4-9] "என்னை உன் செய்கை நைவிக்கும்" [திருவாய் 5-10-2] என்று பரமாத்$_3$பு$_4$தமாகவும், பரமபே$_4$ாக்$_3$யமாகவும் அவனாலும், பிறராலும் பேசப்பட்டவையாகையாலே அவற்றையே 'கத$_2$யந்த:' என்பதற்கு விஷயமாகக்கொள்வது மிகப்பொருத்தம். அவைதான் எவையெனில்: "**தேட்டருந்திறல்**" [பெருமாள்திரு 2] என்ற பதிகத்தில் "தோடுலாமலர்மங்கை தோளிணை தோய்ந் ததும், சுடர்வாளியால் நீடுமாமரம் செற்றதும் நிரைமேய்த்ததும்" "ஏறடர்த்ததும் ஏனமாய் நிலங்கீண்டதும் முன்னிராமனாய் மாறடர்த்ததும் மண்ணளந்ததும்" "தோய்த்ததண் தயிர் வெண் ணெய் பாலுடனுண்டலும்" "பொய்சிலைக் குரலேற்றெருத்த மிறுத்துப் போரரவீர்த்தகோன்" என்று குலசேகராழ்வாரும், "**பிறந்தவாறும்**" [திருவாய் 5-10] என்ற பதிகத்தில் "பிறந்தவாறும் வளர்ந்தவாறும் பெரியபாரதம் கைசெய்து, ஐவர்க்குத் திறங்கள் காட்டியிட்டுச் செய்துபோன மாயங்களும்" "வதுவை வார்த்தையுள் ஏறு பாய்ந்ததும் மாயமாவினை வாய்பிளந்ததும், மதுவை வார்குழ லார் குரவை பிணைந்தகுழகும், அதுவிதுஉது என்னலாவனவல்ல என்னை உன் செய்கை நைவிக்கும்" "பெய்யும் பூங்குழல் பேய்முலை யுண்ட பிள்ளைத் தேற்றமும், பேர்ந்தோர் சாடிறச் செய்ய பாத மொன்றால் செய்த நின் சிறுச்சேவகமும்" "கள்ளவேடத்தைக் கொண்டுபோய்ப் புறம்புக்கவாறும் கலந்து அசுரரை உள்ளம் பேதம் செய்திட்டு உயிருண்ட உபாயங்களும்" "உண்ண வானவர்கோ னுக்கு ஆயரொருப்படுத்த அடிசிலுண்டதும், வண்ணமால் வரையை எடுத்து மழைகாத்ததும்" "நின்றவாறு மிருந்தவாறும் கிடந்தவாறும்

तद्वचनेनानन्यप्रयोजनेन तुष्यन्ति; श्रोतारश्च तच्छ्रवणेनानवधिकातिशयप्रियेण रमन्ते ॥ ९ ॥

நினைப்பரியன, ஒன்றலா உருவாய் அருவாய நின் மாயங்கள்" "ஒண் சுடரோடு இருளுமாய் நின்றவாறும்" "திருவுருவு கிடந்தவாறும் கொப்பூழ்ச் செந்தாமரைமேல் திசைமுகன் கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும்" "அடியை மூன்றை இரந்தவாறும் அங்கே நின்று ஆழ்கடலும் மண்ணும் விண்ணும் முடிய, ஈரடியால் முடித்துக்கொண்ட முக்கியமும்" "கூடிநீரைக் கடைந்தவாறும் அமுதம் தேவருண்ண, அசுரரை வீடும் வண்ணங்களே செய்துபோன வித்தகமும்" என்று நம்மாழ்வாரும், "நிலையிடம்" [பெரியதிருமொழி 11-4] என்னும் அவதார மகிமைப்பதிகத்திலும், "இரக்கமின்றி" [ஷ 10-2] "ஏத்துகின்றோம்" [10-3] என்னும் இராமாவதார மகிமைப்பதிகத்திலும், "சந்த மலர்" [10-4] தொடங்கி, "புள்ளுருவாகி" [10-9] ஈருகவுள்ள கிருஷ்ணவதாரமகிமைப் பதிகத்திலும் திருமங்கையாழ்வாரும், பெரியாழ்வார்திருமொழியில் பிள்ளைத்தமிழ்ப் பாசுரங்கள் பலவற்றில் பெரியாழ்வாரும், "நாமமாயிரம்" [2] "கோழியழைப்பதன்" [3] "பட்டிமேய்ந்து" [14] திருமொழிகளில் நாச்சியாரும், மற்றும் பலவிடங்களில் மற்ற ஆழ்வார்களும் அநுஸந்தி₄த்தவையே அவை. (துஷ்யந்தி ச ரமந்தி ச) "பே₃ாத₄யந்த:" "கத₂யந்த:" என்றவிடங்களில் கு₃ணசேஷ்டிதங்களைச் சொல்லுகிறவர்களாகக் குறிக்கப்பெற்றவர்கள் ஸ்வயம்ப்ரயோஜனமான தமது பேச்சாலே இன்புறுகிறார்கள்; அப்பேச்சைக் கேட்கும் ஶ்ரோதாக்கள் எல்லையற்ற ஆனந்த₃த்தை விளைக்கும் அந்த கு₃ணசேஷ்டிதஶ்ரவணத்தாலே பேரானந்த₃மடைகிறார்கள். "துஷ்யந்தி" "ரமந்தி" என்னும் இரண்டையுமே சொல்லுகிறவர்கள் விஷயமாகக் கொண்டால், இரு சப்தங்களுக்கிடையே பொருள் வேறுபாடு அதி₄கமில்லாமையால் ஸ்வாரஸ்யமில்லாமற்போய்விடும்; ஆகையால், ஒன்றைச் சொல்லுகிறவர்கள் விஷயமாகவும், மற்றொன்றை அச்சொல்லைக் கேட்கிறவர்கள் விஷயமாகவும் கொள்வது பொருத்தம். அதில் "துஷ்யந்தி" என்னும் பதம் திருப்தியோடு கூடிய ஆநந்த₃த்தைக் குறிக்குமாகையால், உலகிற்காணும் உபந்யாஸகர்களைப்போலே க்₂யாதிலாப₄பூஜைகளுக்காக உபந்யஸிக்காமல், ஸ்வயம்ப்ரயோஜனமாக அநுப₄வம் வழிந்து புறப்பட மூலைக்கடுப்பாலே தரையிலே பீச்சுவாரைப்போலே பேசும் வக்தாக்களின் ஆநந்த₃த்தையும், "ரமந்தி" என்னும் பத₃ம் அப்பேச்சைக்கேட்கும் ஶ்ரோதாக்களின் பேரானந்

तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम्।
ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते॥१०॥

10. தேஷாம் ஸததயுக்தாநாம் ப$_4$ஜதாம் ப்ரீதிபூர்வகம்।
த$_3$த$_3$ாமி பு$_3$த்$_3$தி$_4$யோக$_3$ம் தம் யேந மாமுபயாந்தி தே॥

ஸதத யுக்தாநாம்—(என்னிடம்) எப்போதும் சேர்ந்திருக்கையை விரும்புகிறவர்களும், **ப$_4$ஜதாம்** — என்னிடம் (ஸ்வயம்ப்ரயோஜந) ப$_4$க்தி செலுத்துகிறவர்களுமான, **தேஷாம்** — அவர்களுக்கு, **யேந தே மாம் உபயாந்தி தம் பு$_3$த்$_3$தி$_4$யோக$_3$ம்**—என்னை அடைவதற்கு உறுப்பான (பரஜ்ஞானமாகிற) அந்த பு$_3$த்$_3$தி$_4$யின் யோக$_3$த்தை, **ப்ரீதி பூர்வகம் த$_3$த$_3$ாமி**—மிக உகப்புடன் (நான்) அளிக்கிறேன்.

10. என்றுமெனைக் கூடு மியல்வினரா யென்னுகந்து
நின்றுமிகச் சேவித்து நேர்படுவார்க் —கொன்றியசீர்ப்
பத்தியோ கத்திற் பயின்றே யெனையடையும்
புத்தியோ கங்கொடுப்பன் பூண்டு.

த$_3$த்தையும் குறிப்பதாகக் கொள்வதே பொருத்தம். "போ$_3$த$_4$யந்த:" "கத$_2$யந்த:" என்ற இரண்டு இடங்களிலும் அந்வயிக்கும்படி இடையே இடப்பெற்ற "பரஸ்பரம்" என்னும் பத$_3$ஸ்வாரஸ்யத்தைப் பார்க்கும்போது, ஒரு காலத்தில் கு$_3$ணசேஷ்டிதங்களைச் சொல்லுகிறவர்களும், கேட்கிறவர்களும், மற்றொரு காலத்தில் (முறையே) கேட்கிறவர்களும், சொல்லுகிறவர்களுமாகிவிடுவார்களாகையால் எல்லா வகையான ஆநந்த$_3$மும் எல்லாருக்குமே ஸித்$_3$தி$_4$த்துவிடும் என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. "**துஷ்யந்தி**" என்னும் பத$_3$த்தின் ஸ்வாரஸ்யத்தை நோக்கி "அநந்யப்ரயோஜநேந" என்று ப$_4$ாஷ்யகாரர் அருளியிருப்பதிலிருந்து, கண்ணன் மோக்ஷப$_2$லனில் குறியுடைய உபாஸகப$_4$க்தனும் அநந்யப்ரயோஜந ப$_4$க்தனுகப் பரிணமிக்கவேண்டும் என்றே திருவுள்ளம் பற்றுகிறுன் என்னும் ப$_4$ாஷ்யகாரருடைய திருவுள்ளம் தெளிவாக விளங்குகிறது. முன்னும் பின்னும் பலவிடங்களில் ஸ்லோக ப$_4$ாஷ்யங்களில் அநந்யப்ரயோஜந ப$_4$க்தியின் பெருமையே பேசப்பட்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. ஆக இவ்வளவால் ப$_4$க$_3$வானுடைய கு$_3$ணவிபூ$_4$திசேஷ்டிதஜ்ஞானங்களால் ப$_4$க்தி உண்டாகி வளரும் வகை விவரிக்கப்பட்டதாயிற்று. 9.

॥ भा ॥ तेषां सततयुक्तानाम्—मयि सततयोगमाशंसमानानां मां

என்றும் எனைக் கூடும் இயல்வினராய் — எப்போதும் என்னிடம் சேர்ந்திருக்கையை விரும்புகிறவர்களாய், **என்னுகந்துநின்று மிகச்சேவித்து நேர்படுவார்க்கு** — என்னிடம் ஸ்வயம்ப்ரயோஜநப₄க்தியை மிகவும் செய்யும் அவர்களுக்கு, **ஒன்றிய சீர் பத்தியோகத்தில் பயின்றே**— (பயன்கருதாமல்) என் கு₃ணங்களிலேயே பொருந்தி அனுப₄விக்கையாகிற ப₄க்தியோக₃த்தில் நீண்டநாள் பழகி, **எனை அடையும் புத்தியோகம்** — என்னை அடைவதற்கு உறுப்பான (பரஜ்ஞாநமாகிற) பு₃த்₃தி₄யின் சேர்த்தியை, **பூண்டு கொடுப்பன்**—அன்புபூண்டு கொடுப்பேன்.

---

10. இதுவரையில் சொல்லப்பெற்ற பரப₄க்தி எனப்படும் பரிபூர்ணப₄க்தியை உடையவர்களுக்கு—என்னை அடைவதற்கு முன் ஏற்படுவதாய், பரஜ்ஞாநம் எனப்படுவதாய், என் விஷயமான மிகத் தெளிவான ஸாக்ஷாத்காரத்தை நானே அளிக்கிறேன் என்கிறான் இந்த ஶ்லோகத்தில். (ஸதத யுக்தாநாம்) என்னிடம் எப்போதும் சேர்ந்திருக்கையை விரும்புகிறவர்களுக்கு. தூங்கும் சமயம் முதலான காலங்களில் ஸமாதி₄நிலை கூடாதாகையால், 'எப்போதும் ஸமாதி₄ நிலையிலிருப்பவர்களுக்கு' என்று இதற்குப் பொருள்கொள்ள முடியாது. அதற்காக 'தினந்தோறும் ஸமாதி₄நிலையிலிருப்பவர்களுக்கு' என்று கொள்ளப்பார்த்தால், எப்போதும் எனும் பொருளுடைய ஸதத ஶப்₃த₃த்திற்கு அஸ்வாரஸ்யம் ஏற்படுகிறது. ''எப்போதும் என்னோடு சேர்ந்திருப்பவர்களுக்கு'' என்னும் பொருள் அவ்விபூ₄தியிலிருப்பவர்களுக்குப் பொருந்துமேயொழிய இவ்விபூ₄தியிலிருப்பவர்களுக்குப் பொருந்தாது. ஆகையால் 'ஆஶம்ஸை' [விருப்பம்] எனும் பொருளிலே க்தப்ரத்யயம் வந்திருப்பதாகக்கொண்டு, 'என்னோடு எப்போதும் சேர்ந்திருக்கையை விரும்புகிறவர்களுக்கு' என்று பொருள்கொள்வதே பொருத்தம். (ப₄ஜதாம் தேஷாம்) முற்கூறியபடி ஸ்வயம்ப்ரயோஜந ப₄க்தியைச் செய்யும் அவர்களுக்கு. (தம் பு₃த்₃தி₄ யோக₃ம் ப்ரீதிபூர்வகம் த₃தா₃மி) அவர்களிடமுள்ள பரப₄க்தியின் முற்றிய நிலையாயிருப்பதாய், ஸததயுக்த ஶப்₃த₃த்தில் சொல்லப்பட்ட விருப்பத்திற்கு விஷயமான நித்யயோக₃த்தில் அடங்கியதாய்,

भजमानानामहं तमेव बुद्धियोगं विपाकदशापन्नं प्रीतिपूर्वकं ददामि ; येन ते मामुपयान्ति ॥ १० ॥

மிகத் தெளிவாக என்னை ஸாக்ஷாத்கரிப்பதாயிருக்கும் பரஜ்ஞானம் எனப்படும் பு3த்3தி4யின் சேர்த்தியை உகப்புடன் நிர்ஹேதுகமாக அளிக்கிறேன். 'தம்'என்னும் பத3த்தால்—அவர்கள் ஆசைப்படும் நித்ய யோக3த்தில் அடங்கியதாயிருப்பது இந்த பு3த்3தி4 என்று உணர்த்தப்படுகிறது. "**ஸ்நேஹ பூர்வமநுத்4யாநம் ப4க்தி:**" [உகப்புடன் தியானிப்பது ப4க்தியாகும்] என்னும் ப4க்திலக்ஷணத்திலேயே உகப்பு சேர்ந்திருக்கையாலும், சேதனன் பரமனிடம் காட்டும் உகப்பைக்காட்டிலும், பரமன் சேதனனிடம் காட்டும் உகப்பு மிகவிஞ்சியதாகையாலும், "**ப்ரீதிபூர்வகம் ப4ஜதாம்**" என்று அந்வயிக்காமல், "**ப்ரீதிபூர்வகம் த3தா3மி**" என்று அந்வயிக்கப்பெற்றது. (த3தா3மி) 'த3ானம்' என்னும் பொருளுடைய த4ாதுவாகையாலே, நிர்ஹேதுகமாக அளிக்கிறேன் என்று பொருள். அவன் மோக்ஷத்தையும் தன் ப4க்திக்குப் பயனாகக் கருதாமல் ஸ்வயம் ப்ரயோஜநப4க்திசெய்கையாலே, நான் மோக்ஷத்திற்கு உறுப்பான இப்பரஜ்ஞானத்தை அவனுக்கு நிர்ஹேதுகமாக அளிக்கிறேன் என்கிறான் கண்ணன். "**வெறிதே அருள் செய்வர் செய்வார்கட்கு உகந்து**"[திருவாய் 8-7-8] [தான் செய்ய வேணுமென்று நினைக்கிறவர்களுக்கு எம்பெருமான் உகந்து நிர்ஹேதுகமாக அருளுவான்] என்று நம்மாழ்வார் இதை விளக்கியருளினார். (யேந தே மாம் உபயாந்தி) இந்தப் பரஜ்ஞானத்தைப் பெற்றவுடன், அது—என்னை ஒருகணம் பிரியிலும் த4ரியாமையாகிற பரமப4க்தியை விளைத்துவிடுமாகையாலே, இந்தப் பரஜ்ஞாநமே அவர்களுக்கு என்னை அடைவித்துவிடும் என்று கருத்து. ஆக, உபாஸகன் ஸ்வயம் ப்ரயோஜந ப4க்திநிஷ்ட2னாகிவிட்டால், அவனுக்கு ப்ராரப்3த4கர்மம் முடியும்வரையில் மேன்மேலே பிறப்புக்களை அளிக்காமல், அந்த ஜன்மத்திலேயே நிர்ஹேதுகமாகப் பரஜ்ஞானத்தை அளித்து என்னை அடையும்படி செய்துவிடுவேன் என்றதாயிற்று. இப்படி ஸ்வயம் ப்ரயோஜன ப4க்திநிஷ்ட2னாகாத உபாஸகஜ்ஞானி விஷயத்தில், அவனும் அப்படி ஆவதற்கு ப்ராரப்3த4கர்மம் முடியும் ஜன்மம் வரையில் அவனது ப4க்தியை வளரச்செய்து, கடைசி வரையில் அப்படி ஆகாவிடில் அந்திமஸ்ம்ருதியில் பரஜ்ஞானத்தையும் அளித்து, உடனே அவன் விரும்பும் ஸ்வார்த்த2மோக்ஷத்தையும் அவன் ஸாத4னமாக அனுஷ்டி2த்த ப4க்திக்குப் ப2லமாக அளித்துவிடுகிறான் என்று கண்டுகொள்வது. இவன் விஷயத்தில் பரப4க்தி வரையில் சேதனனின் முயற்சியும் உண்டு. அதனால் உகந்த எம்பெருமான் பரஜ்ஞானத்தை

।। भा ।। किञ्च,

तेषामेवानुकम्पार्थमहमज्ञानजं तमः ।
नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता ।। ११ ।।

11. தேஷாமேவாநுகம்பார்த்த$_{2}$மஹமஜ்ஞாநஜம் தம: ।
நாஶயாம்யாத்மப$_{4}$ாவஸ்த$_{2}$: ஜ்ஞாநதீ$_{3}$பேந ப$_{4}$ாஸ்வதா ॥

தேஷாம் — அந்த ஸ்வயம் ப்ரயோஜன ப$_{4}$க்திநிஷ்ட$_{2}$ர்களிடம், **அநுகம்பார்த்த$_{2}$ம் ஏவ**—அருளினாலேயே, **ஆத்ம ப$_{4}$ாவஸ்த$_{2}$:**—அவர்களுடைய நெஞ்சுக்கு விஷயமானவனாய், (எனது கல்யாணகு$_{3}$ணங்களை வெளிப்படுத்தி), **ப$_{4}$ாஸ்வதா ஜ்ஞாநதீ$_{3}$பேந** - என் விஷயமான ஜ்ஞானமெனும் ஒளி மிக்க விளக்காலே. **அஜ்ஞாநஜம் தம:**—ஜ்ஞானத்துக்கு விரோதி$_{4}$யான பண்டைவினைகளால் உண்டான (**ஶப்$_{3}$** த$_{3}$ாதி$_{3}$ விஷயப்ராவண்யமாகிற) இருளை, **அஹம் நாஶயாமி**—நான் அழிக்கிறேன்.

---

11. ஆங்கவர்க்கே சால வனுகம்பை மேவியே
யோங்கிவளர் ஞான வொளிவிளக்காற்—பாங்காக
நெஞ்சகத்தே நின்றுநா னேரே மதிமயக்கும்
வஞ்சவிருண் மாய்ப்பன் மகிழ்ந்து.

ஆங்கு அவர்க்கே — அந்த ஸ்வயம் ப்ரயோஜன ப$_{4}$க்திநிஷ்ட$_{2}$ர்களிடம், **சால அனுகம்பை மேவியே** — பேரருளாலேயே, **பாங்காக நெஞ்சகத்தே நின்று** — அவர்களுடைய நெஞ்சுக்கு விஷயமானவனாய் (எனது கல்யாணகு$_{3}$ணங்களை வெளிப்படுத்தி), **ஓங்கி வளர் ஞான ஒளி விளக்கால்**—

விளைத்து ஸ்வப்ராப்தியையும் அளிக்கிறான் என்று கண்டு கொள்வது. ஆக, ஸ்வயம்ப்ரயோஜந ப$_{4}$க்தியுடையவனுக்கு எம்பெருமான் தன்னை அடைவதற்கு முன் விளையவேண்டிய பரஜ்ஞானம் எனும் தன் ஸாக்ஷாத்காரத்தை உகப்புடன் நிர்ஹேதுகமாக அளிக்கிறான் என்றதாயிற்று. 10.

॥ भा ॥ तेषामेव अनुग्रहार्थमहम् , आत्मभावस्थः — तेषां मनोवृत्तौ विषयतयाऽवस्थितो मदीयान् कल्याणगुणगणांश्चाविष्कुर्वन्

என் விஷயமான ஜ்ஞானமெனும் ஓங்கிவளரும் ஒளிமிக்க விளக்காலே, **நேரே மதிமயக்கும் வஞ்ச இருள்**—ஜ்ஞானத்துக்கு விரோதி₄யான பண்டை வினைகளால் உண்டான (ஶப்₃த₃ாதி₃ விஷயப்ராவண்யமாகிற) அறிவை மயக்கும் இருளை, **நான் மகிழ்ந்து மாய்ப்பன்** — நான் உகப்புடன் அழிப்பேன்.

---

11. தன் விஷயமான தெளிவான ஸாக்ஷாத்காரமாகிற பரஜ்ஞானத்தை ஸ்வயம் ப்ரயோஜனப₄க்தி நிஷ்ட₂ர்களுக்கு விளைப்பதாகச் சென்ற ஶ்லோகத்தில் கூறப்பட்டது. 'அனாதி₃காலமாக மூண்டுநிற்கும் புண்யபாபகர்மங்களால் உண்டாகும் ஶப்₃த₃ாதி₃ விஷயப்ராவண்யமாகிற பேரிருள் அவர்களுடைய நெஞ்சிலே மண்டியிருக்கும்போது, உன்விஷயமான தெளிவான ஸாக்ஷாத்காரம் அவர்களுக்கு எப்படி ஏற்படமுடியும்?' என்னும் கேள்வியெழ, 'நானே எனது பேரருளால் அவர்களது நெஞ்சுக்கு எனது கல்யாண கு₃ணங்களை விஷயமாக்கி, ஜ்ஞாநமாகிற ஒளிவிளக்கை ஏற்றி, பண்டைவினைகளாலே உண்டான விஷயப்ராவண்யமாகிற பேரிருளை அழிக்கிறேன்' என்கிறான். இது செய்வதும், அவர்களிடம் ஒரு ஸாத₄னத்தை எதிர்பார்த்து அல்ல; நிர்ஹேதுக க்ருபையாலேயே இதைச் செய்கிறேன் என்கிறான்—(தேஷாம் அநுகம்பார்த்த₂ம் ஏவ) அவர்களிடம் எனக்குள்ள பேரருளினாலேயே எந்தக் கைம்முதலையும் எதிர்பாராமல் இதைச் செய்கிறேன் என்று கருத்து. 'அநுகம்பா' ஶப்₃த₃ம் ஸாமான்யமான இரக்கத்தைக் குறிக்குமாயினும், '**மத₃நுக்₃ரஹாய**' [கீ₃தை 11-1] என்று மேலே அர்ஜுனன் இதை விவரித்திருக்கிறபடியாலும், 'அர்த்த₂'ஶப்₃த₃ஸ்வாரஸ்யத்தாலும் அந்த ஶப்₃த₃ம் இங்கு அநிஷ்டநிவ்ருத்தியை முன்னிட்டுக்கொண்டு இஷ்டப்ராப்தியை விளைக்கும் அநுக்₃ரஹத்தைக் காட்டுகிறது. ஏவகாரத்தாலே ஸஹேதுகக்ருபையைக் காட்டிலும் வேறுபட்ட நிர்ஹேதுக க்ருபையே இது என்று தெளிவுபடுத்தப்படுகிறது. 'அநுகம்பாயை' என்று கூறாமல் 'அநுகம்பார்த்த₂ம்' என்று 'அர்த்த₂' ஶப்₃த₃த்தை பிரயோகி₃த்ததால் இந்த நிர்ஹேதுகக்ருபையைக் கண்ணன் தன் பேறாக நினைத்திருக்கிறான் என்று விளங்குகிறது.

मद्विषयज्ञानाख्येन भास्वता दीपेन ज्ञानविरोधिप्राचीनकर्मरूपाज्ञानजं मद्व्यतिरिक्तपूर्वाभ्यस्तविषयप्रावण्यरूपं तमो नाशयामि ॥ ११ ॥

இவ்வநுக்$_3$ரஹத்தைச் செய்வது யாரெனில்; — (அஹம்) இத்தகைய நிர்ஹேதுக க்ருபையைச் செய்வதற்கு உறுப்பான ஜ்ஞானம், ஶக்தி, ஸ்வாமித்வம் எனப்படும் உறவு (ப்ராப்தி), அவாப்தஸமஸ்தகாமத்வ மாகிற பூர்த்தி (நிறைவு) முதலிய கல்யாணகு$_3$ணங்களோடும் இவர்களை அநுக்$_3$ரஹிப்பதற்காகவே எடுக்கப்பட்ட அவதாரரூபத்தோடும் கூடிய நானே இந்த நிர்ஹேதுகக்ருபையைச் செய்கிறேன் என்கிறான். எங்கிருந்துகொண்டு இச்செயலைச் செய்வது? எனில் — (ஆத்மப$_4$ாவஸ்த$_2$:) அவர்களுடைய மனோவ்ருத்தியில் இருந்துகொண்டு செய்கிறேன். எனது கல்யாணகு$_3$ணங்களையும், தி$_3$வ்யமங்க$_3$ள விக்$_3$ரஹத்தையும் அவர்களது நெஞ்சுக்கு விஷயமாக்கி அநுக்$_3$ரஹத்தைச் செய்கிறேன் என்று கருத்து. 'ஆத்மப$_4$ாவ' ஶப்$_3$த$_3$த்தை 'ஆத்மத்வம்' என்றோ 'தன் தன்மை' என்றோ பொருள்கொள்வதில் ஸ்வாரஸ்யமில்லை. சென்ற ஶ்லோகத்தில் அவர்களுக்கு பு$_3$த்$_3$தி$_4$யோக$_3$த்தை அளிப்பதாகக் கூறியிருக்கையாலும், நெஞ்சுக்கு விஷயமாயிருந்து பு$_3$த்$_3$தி$_4$யோக$_3$த்தை அளிப்பதே உசிதமாகையாலும் 'ஆத்மப$_4$ாவ' ஶப்$_3$த$_3$ம் மனோவ்ருத்தியைக் குறிக்கிறது என்று கொள்வதே தக்கது. எப்போதுமே ஸர்வவ்யாபியான இவன் இப்போது மனோவ்ருத்தியில் இருப்பதாக இங்கு கூறுவதில் பொருத்தமென்ன? எனில்: மனோவ்ருத்திக்கு அந்தர்யாமியாயிருப்பதை இங்கு கூறவில்லையாகையாலும், மனோவ்ருத்திக்கு விஷயமாவதையே கூறுகையாலும் பொருந்துகிறது. தானே தன் அருளாலே தனது கு$_3$ணங்களையும், திருமேனியையும் இவர்களுக்குக் காட்டுகிறான் என்று கருத்து. இவர்களுக்குச் செய்யும் அருள்—ஞானமென்னும் சுடர் விளக்காலே ஶப்$_3$த$_3$ாதி$_3$விஷயங்களில் ஈடுபாடாகிற இருளைப்போக்குவதே என்று ஶ்லோகத்தின் எஞ்சிய பகுதியாலே காட்டுகிறான்—[ப$_4$ாஸ்வதா ஜ்ஞாந தீ$_3$பேந) என் விஷயமான ஞானமென்னும் ஒளிமிக்க விளக்காலே. 'ஒளிமிக்க' என்று விளக்கை விஶேஷிக்கையாலே தனது ரூபகு$_3$ணங்கள் இந்த ஞானச்சுடர்விளக்காலே தெளிவாகக் காட்டப்படுகின்றன என்று உணர்த்தப்படுகிறது. இந்த விளக்காலே அழிக்கப்படும் இருள் எது? எனில்: (அஜ்ஞாநஜம் தம: நாஶயாமி) ஜ்ஞானத்துக்கு விரோதி$_4$யான அநாதி$_3$புண்யபாபகர்மங்களால் உண்டான ஶப்$_3$த$_3$ாதி$_3$விஷய ஈடுபாடாகிற இருளைப் போக்குகிறேன். இங்கு

அஜ்ஞானத்தால் உண்டாவதாகக் கூறப்படும் இருள் அதைக் காட்டிலும் வேறுபட்டதாயிருக்கவேண்டும். "**அவித்$_3$யா கர்மஸம்ஜ்ஞாந்யா**" [வி பு 6-7-61] [ஜ்ஞானத்துக்கு விரோதி$_4$யாயிருக்கையாலே புண்யபாபகர்மங்கள் அவித்$_3$யை (அஜ்ஞானம்) எனப்படுகின்றன] என்கிறபடியே புண்யபாபகர்மங்களை ஜ்ஞான விரோதி$_4$யாயிருப்பதையிட்டு அஜ்ஞானம் என்று கூறுவதுண்டு. அந்தக் கர்மங்களால் உண்டாவதாய், எம்பெருமானை ஸாக்ஷாத்கரிப்பதாகிற காட்சிக்குத் தடையாயிருப்பதான இருள் அநாதி$_3$காலமாகச் சேதனனிடம் மண்டியிருக்கும் ஶப்$_3$த$_3$ாதி$_3$விஷயப்ராவண்யம் என்று கொள்வதே பொருத்தம். "**தவாம்ருதஸ்யந்தி$_3$நி பாத$_3$பங்கஜே நிவேஶிதாத்மா கத$_2$மந்யதி$_3$ச்ச$_2$தி। ஸ்தி$_2$தேऽரவிந்தே$_3$ மகரந்த$_3$நிர்ப$_4$ரே மது$_4$வ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே ||**" [ஸ்தோ-ர 27] [உனது அமுதமொழுகும் திருவடித்தாமரையில் ஈடுபட்ட எனது மனம் வேறொன்றை எப்படி விரும்பும்? தேன் நிறைந்த தாமரைப்பூ இருக்கும்போது வண்டு முள்ளிப்பூவைக் கண்ணெடுத்தும் பாராதன்றோ.] என்கிறபடியே எல்லையற்ற இனிமையை உடைய ப$_4$க$_3$வத்$_3$விஷயஜ்ஞானமே ஶப்$_3$த$_3$ாதி$_3$விஷயங்களில் ஈடுபாட்டைப் போக்கடிக்க முடியும். ஆக "புண்யபாபங்களால் உண்டான ஶப்$_3$த$_3$ாதி$_3$விஷய ப்ராவண்யமாகிற இருளை என்விஷயமான ஜ்ஞானமாகிற ஒளிமிக்க விளக்காலே அழிக்கிறேன்" என்று பொருள்கொள்வதே பொருத்தமாகும். ஆகையால் தமஶ்ஶப்$_3$த$_3$ம் தமோவ்ருத்தியை லக்ஷணையாலே குறிக்கிறது என்று சிலர் கொள்வது பொருந்தாது. இத்தால் "ஸ்வயம்ப்ரயோஜன ப$_4$க்திநிஷ்ட$_2$ர்கள் தமது முயற்சியாலே விஷயப்ராவண்யத்தைப் போக்கிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு உபாயமான நானே எனது நிர்ஹேதுக க்ருபையாலே எனது ஸ்வரூப ஸ்வப$_4$ாவங்களைக் காட்டித் தந்து அவர்களுடைய விஷயப்ராவண்யமாகிற இருளைப் போக்குகிறேன்" என்று கூறினதாயிற்று. இந்த ஶ்லோகத்தை ஸாத$_4$ன ப$_4$க்திநிஷ்ட$_2$ர்கள் விஷயமாகக்கொண்டால் "விஷயங்களில் ஈடுபாடு நீங்கிய பின்பே ஸாத$_4$னப$_4$க்தி உண்டாகிறது என்று முன் அத்தியாயங்களில் கூறியிருக்க, இங்கு ப$_4$க்தியால் உகந்த எம்பெருமான் விஷயப்ராவண்யத்தைப் போக்குவதாகக் கூறுவது பொருந்தாதே" என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு பதில்—"கர்மஜ்ஞான யோக$_3$ங்களை அநுஷ்டி$_2$த்து, விஷயப்ராவண்யம் பெரும்பாலும் நீங்கிய பின்பே ஸாத$_4$னப$_4$க்தி உண்டாகிறது. இருந்தபோதிலும் அநாதி$_3$ வாஸனையாலே தொடர்ந்துவரும் ஸூக்ஷ்மமான விஷயப்ராவண்யம் ப$_4$க்தியினாலேயே போக்கடிக்கப்படுவதாகக் கூறப்படுகிறதாகையாலே

॥भा॥ एवं सकलेतरविसजातीयं भगवदसाधारणं शृण्वतां निरतिशयानन्दजनकं कल्याणगुणगणयोगं तदैश्वर्यविततिं च श्रुत्वा तद्विस्तारं श्रोतुकामोऽर्जुन उवाच—

अर्जुन उवाच—

परं ब्रह्म परं धाम पवित्रं परमं भवान्।

அர்ஜுந உவாச —

12. பரம் ப்$_3$ரஹ்ம பரம் தா$_4$ம பவித்ரம் பரமம் ப$_4$வாந்।

அர்ஜுந உவாச—அர்ஜுனன் கூறினான்:—

பரம் ப்$_3$ரஹ்ம — பரப்$_3$ரஹ்மமாகவும், **பரம் தா$_4$ம** — பரஞ்ஜோதியாகவும், **பரமம் பவித்ரம்** —பரமபாவனமாகவும், (ஶ்ருதிகளில்) சொல்லப்படுபவர், **ப$_4$வாந்**—தேவரீரே.

---

12. மாய னிசைத்த வளர்பெருமை கேட்டதின்னே
யாய விசைய னதுவிரும்பி—யேயவன்பான்
மிக்க பெருமை விரித்தறிய வேண்டியே
தக்க பரிசுரைத்தான் ருன்.

இன்னே ஆய விசையன் தான் — இத்தகையவனான அர்ஜுனன், **மாயன் இசைத்த வளர் பெருமை அது கேட்டு**— மாயனாகிற கண்ணன் பாடிய அவனுடைய வளராநிற்கும் அந்த வைப$_4$வத்தைக்கேட்டு, **அது விரும்பி** — அதை விரும்பி, **ஏய அன்பால்** — பொருந்திய அன்பால், **மிக்க பெருமை** — அக்கண்ணனுடைய மிகுந்த பெருமையை, **விரித்து அறிய வேண்டியே** — விரிவாக அறியவேண்டியே, **தக்க பரிசு உரைத்தான்**—தகுந்த வார்த்தைகளைக் கூறினான்.

அந்யோந்யாஶ்ரயதோ$_3$ஷம் இல்லை" என்று தாத்பர்யசந்த்$_3$ரிகையில் காட்டப்பட்டது. 11.

*12. இவ்வண்ணமாக—"யோ மாமஜம்"[10-3] என்று தொடங்கி, மற்ற சேதனர்களுடையதைக் காட்டிலும் மிகவும் வேறுபட்டதாய், ஸர்வேஶ்வரனுக்கே உரியதாய், "துஷ்யந்தி ச ரமந்தி ச" [10.9] என்கிறபடியே கேட்பவர்களுக்கு எல்லையற்ற ஆனந்த$_3$த்தை விளைப்ப

॥भा॥ परं ब्रह्म परं धाम परमं पवित्रमिति यं श्रुतयो वदन्ति, स हि भवान्। *यतो वा इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति यत्प्रयन्त्यभिसंविशन्ति तद्विजिज्ञासस्व तद्ब्रह्मेति (भृ) * ब्रह्मविदाप्नोति

தான கல்யாணகு$_3$ணச்சேர்த்தியையும், செல்வச் சிறப்பையும் சுருக்கமாகக் கண்ணனிடமிருந்து கேட்டு, அதன் விரிவைக் கேட்க விரும்பி, இந்த ஶ்லோகம் முதல் பதினெட்டாம் ஶ்லோகம் ஈருகக் கூறுகிருன் அர்ஜுனன். "விஸ்தரேண கத$_2$ய" [விரிவாகச் சொல்லுவாய்] என்று 18-ம் ஶ்லோகத்தில் அர்ஜுனனும், "நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே" [என் செல்வத்தின் விரிவுக்கு எல்லேயில்லே] என்று 19-வது ஶ்லோகத்தில் கண்ணனும் கூறப்போகிருர்களன்ரே. இவ்வேழு ஶ்லோகங்களில் முதல் நான்கு ஶ்லோகங்களாலே கண்ணன் இதுவரையில் சுருங்கச் சொன்ன அர்த்த$_2$ங்களில் தனக்குள்ள நம்பிக்கையையும், அதை உண்மை என்று நம்புகையால் தனக்கு அந்த அர்த்த$_2$த்தில் அஸூயை இல்லாமலிருப்பதையும் காட்டுகிருன், 12, 13 ஶ்லோகங்களில் முதல் அர்த்த$_4$ம் முதல் வேற்றுமையில் அமைந்துள்ளதாய் ஓர் அர்த்த$_2$த்தைச் சொல்லுகிறது என்றும், "புருஷம் ஶாஶ்வதம்... ஆஹு:" என்று இரண்டாவது வேற்றுமையில் தொடங்கும் பின் ஒன்றரை ஶ்லோகம் மற்ருெரு அர்த்த$_2$த்தைச் சொல்லுகிறது என்றும் விளங்குகிறது. அதில் "பரம் ப்$_3$ரஹ்ம" என்று தொடங்கும் பூர்வார்த்த$_4$த்தில் "பரம் ப்$_3$ரஹ்ம" "பரம் தா$_4$ம" "பரமம் பவித்ரம்" என்னும் மூன்று தொடர்களும் சொல்லாலும், பொருளாலும் ஶ்ருதியில் பிரஸித்$_3$த$_4$மான தொடர்களாகையாலே இப்படி ஶ்ருதிகளில் ஓதப்படும் பரம்பொருள் தேவரீரே என்று பூர்வார்த்த$_4$த்திற்குப் பொருளுரைப்பதே பொருந்தும். அந்த ஶ்ருதிகள்தான் எவையெனில்: (பரம் ப்$_3$ரஹ்ம ப$_4$வாந்) "யதோ வா இமானி பூ$_4$தானி ஜாயந்தே. யேந ஜாதானி ஜீவந்தி. யத்ப்ரயந்த்யபி$_4$ஸம்விஶந்தி. தத்$_3$விஜிஜ்ஞாஸஸ்வ, தத்$_3$ப்$_3$ரஹ்மேதி" [தை-ப்$_4$ருகு$_3$ 1] [எதனிடமிருந்து இந்த ஜீவராஶிகள் உண்டாகின்றவோ, உண்டானவை எதனுல் வாழ்கின்றனவோ, ப்ரளயகாலத்தில் எதை அடைகின்றனவோ அதையே ப்$_3$ரஹ்மம் என்று அறிவாய்] என்னும் வேத$_3$வாக்கியம் ப்$_3$ரஹ்மத்தின் லக்ஷணம் ஜக$_3$த்காரணத்வமே என்று முழங்கிற்று. அந்த ப்$_3$ரஹ்மத்தை எடுத்து, "ப்$_3$ரஹ்மவிதா$_3$ப்நோதி பரம்" [தை-ஆ 1.1] [ப்$_3$ரஹ்மத்தை உபாஸிப்பவன் மேலான ப$_2$லனே அடைகிருன்] என்னும் வாக்கியம் அதையே மேலான ப்ராப்யமாகப் பேசி, "பரம் ப்$_3$ரஹ்ம" என்று அதைக் குறிப்பதிலுள்ள பொருத்தத்தைக் காட்டிற்று.

परम् (आ) * स यो ह वैतत्परमं ब्रह्म वेद ब्रह्मैव भवति (मु. ३. २. ९) इति। तथा परं धाम ; धामशब्दो ज्योतिर्वचनः; परं ज्योतिः—*अथ

"ஸ யோ ஹ வைதத் பரமம் ப்₃ரஹ்ம வேத₃ ப்₃ரஹ்மைவ ப₄வதி" [முண்ட₃க 3-2-9] [எவனொருவன் இந்தப் பரப்₃ரஹ்மத்தை உபாஸிக்கிறனே அவன் பரப்₃ரஹ்மத்தை ஒத்தவனுகிறன்] என்னும் வாக்கியம் பரப்₃ரஹ்மத்தை எடுத்து, அதை ஒத்தவனுவதே மேலான மோக்ஷப₂லன் என்று காட்டிற்று. இங்கு "ப்₃ரஹ்மைவ ப₄வதி" என்று கூறியது ப்₃ரஹ்மஸ்வரூபமாகவே ஆகிறன் என்று பொருள்படாது. ஒருநாள் ஒரு பசுவைப் பார்த்தபின், மற்றொரு நாள் அதே ஜாதியைச் சேர்ந்த மற்றொரு பசுவைப் பார்க்கும்போது "ஸோயம் கௌ₃ள:" [அன்று பார்த்த பசுவே இது] என்று சொல்லுமிடத்தில் ஸ்வப₄ாவம் ஒன்றயிருப்பதைக்கொண்டு வேறு வஸ்துக்களை ஒன்றக வழங்குவதைக் காண்கிறேம். வேத₃த்திலும் "**வைஷ்ணவம் வாமநமாலபே₄த ஸ்பர்த்த₄மாநோ விஷ்ணுரேவ பூ₄த்வேமாந் லோகாந் அபி₄ஜயதி**" [யஜுஃ 2-1-3-16] [பிறரைக் காட்டிலும் சிறந்தவனுவதற்கு விரும்புகிறவன் விஷ்ணுவைக் குறித்து வாமநயாக₃த்தைச் செய்யக் கடவன். இந்த யாக₃த்தைச் செய்தவன் விஷ்ணுவாகவே ஆகி இவ்வுலகங்களை வெல்கிறன்] என்கிற வேத₃வாக்கியத்தில் இவ்வுலகில் பிறரைக்காட்டிலும் சிறப்படைவதற்குச் செய்யப்படும் யாக₃த்தின் ப₂லனைச் சொல்லும்போது, 'விஷ்ணுவாகவே ஆகி இவ்வுலகங்களை ஜயிக்கிறன்' என்று கூறியிருக்குமிடத்தில், யாக₃த்தைச் செய்பவன் எவனும் விஷ்ணுவாக ஆகமுடியாதாகையாலும், ஆகவில்லையாகையாலும், விஷ்ணுவைப் போன்ற பராக்ரமம் முதலான கு₃ணங்களை உடையவனுகி இவ்வுலகங்களை ஜயிக்கிறன் என்றே பொருள்கொள்ளவேண்டியிருப்பதும் இங்கு காணத்தக்கது. ஆகையால் 'ப்₃ரஹ்மத்தை உபாஸிப்பவன் ப்₃ரஹ்மமாகவே ஆகிறன்' என்ற முண்ட₃க வாக்யத்திற்கும் 'ப்₃ரஹ்மத்தை ஒத்தவனுகவே ஆகிறன்' என்று பொருள் கொள்வதே பொருந்தும். இந்த முண்ட₃கத்திலேயே "பரமம் ஸாம்யமுபைதி" [முண்ட₃க 3-1-3] [பரம்பொருளோடு மேலான ஒற்றுமையை அடைகிறன்] என்று மோக்ஷத்தில் ஜீவனுக்குப் பரம்பொருளோடு ஸாம்யம் சொல்லப்பட்டதேயொழிய ஐக்யம் சொல்லப்படவில்லை. "மம ஸாத₄ர்ம்யம் ஆக₃தா:" [கீ₃தை 14-2] [என்னேடு ஒற்றுமையடைந்த முக்தர்கள்] என்று கீ₃தையில் கண்ணனும் முக்தர்களுக்கு ஸாம்யத்தையே சொல்லியிருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது. (பரம் த₄ாம ப₄வாந்) அவ்வண்ணமே மேலான

यदतः परो दिवो ज्योतिर्दीप्यते (छा. ३. १३. ७) *परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते (छा. ८. १२. २) * तं देवा ज्योतिषां ज्योतिः (बृ ६. ४. १६) इति। तथा च परमं पवित्रम्—परमं पावनम्; स्मर्तुः

சோதியாக உபநிஷத்துக்களில் கூறப்படுபவரும் தேவரீரே. த₄ாம ஶப்₃த₃ம் ஸ்த₂ானத்தைக் குறிப்பதுண்டாயினும், இங்கு 'ப₄வாந்' (தேவரீர்) என்னும் சொல்லே அத்துடன் ஒரே வேற்றுமையில் படித்திருக்கையாலும், ஶரீரஶரீரிப₄ாவத்தையிட்டு எம்பெருமானோடு ஒரே வேற்றுமையில் வேறு எதையும் இந்த அர்ஜுன வாக்யத்தில் படிக்காமையாலும் இங்கு த₄ாமஶப்₃த₃த்திற்கு அப்பொருள் பொருந்தாது. ஆகையால், த₄ாமஶப்₃த₃ம் 'சோதி' என்னும் பொருளுடையதாய், பரஞ்ஜோதியான எம்பெருமானை 'பரம் த₄ாம' என்னும் தொடர் குறிக்கிறது என்று கொள்வதே பொருந்தும். இவ்வண்ணம் பரஞ்சோதி என்று எந்தஶ்ருதிகள் குறிப்பிடுகின்றன? எனில்: "**அத₂ யத₃த: பரோ தி₃வோ ஜ்யோதிர்தீ₃ப்யதே**" [ச₂ாந் 3-13-7] [பரமபத₃த்தின் மேலே யாதொரு பரஞ்சோதியானது விளங்காநிற்கிறதோ] என்னும் வேத₃வாக்கியம் அதற்கு முன் உள்ள "**பாதோ₃ ऽஸ்ய ஸர்வா பூ₄தாநி த்ரிபாத₃ஸ்யாம்ருதம் தி₃வி**" [ச₂ாந் 3-12-6] என்னும் புருஷஸூக்த மந்த்ரத்தோடு ஒரே பொருளையுடையதாய், பரமபத₃நிலயனை பரம புருஷனையே காட்டுகிறது. "**பரம் ஜ்யோதிருபஸம்பத்₃ய ஸ்வேந ரூபேணாபி₄நிஷ்பத்₃யதே**" [ச₂ாந் 8-12-2] [பரஞ்சோதியை அடைந்து, முக்தியடையும் ஜீவன் ஸ்வரூபாவிர்ப₄ாவம் பெறுகிறான்] என்கிற வேத₃வாக்கியம், இப்பரமாத்மாவைப் பரஞ்சோதி என்றே குறித்து, அவனை முக்தர்களால் அடையத்தக்கவனாகவும் காட்டிற்று. "**தம் தே₃வா ஜ்யோதிஷாம் ஜ்யோதி:...உபாஸதே**" [ப்₃ருஹ 6-4-16] [சோதிகளுக்கெல்லாம் சோதியான அப்பரமாத்மாவை தே₃வர்கள் உபாஸிக்கிறார்கள்] என்னும் வேத₃வாக்கியம் சோதிகளுக்கெல்லாம் சோதியாகக் கூறுவதின்மூலமும், தே₃வர்களால் உபாஸிக்கத்தக்கவனாகக் கூறுவதின்மூலமும் பரஞ்ஜ்யோதிஶ்ஶப்₃த₃த்தை விவரித்தது. "**விஷ்ணுஸம்ஜ்ஞம் ஸர்வாத₄ாரம் த₄ாம**" [மைத்ராயணீயம்] [அனைத்துக்கும் ஆத₄ாரமாய் விஷ்ணு எனப்படும் சோதி] என்னும் உபநிஷத் பரந்த₄ாம ஶப்₃த₃த்தின் பொருளை "ஸர்வா த₄ாரம் த₄ாம' என்று காட்டி, அப்பரஞ்சோதியை விஷ்ணு என்று விஶேஷித்ததும் இங்கு குறிக்கொள்ளத்தக்கது. (பரமம் பவித்ரம் ப₄வாந்) அவ்வண்ணமே அனைவரையும் பரிஶுத்₃த₄ப்படுத்தும் பரமபாவனராக ஶ்ருதிகளில் ஓதப்படுபவரும் தேவரீரே. இங்கு

अशेषकल्मषाश्लेषकरं, विनाशकरं च। *यथा पुष्करपलाश आपो न श्लिष्यन्त एवमेवंविदि पापं कर्म न श्लिष्यते (छा. ४. १४. ३) *तद्यथेषीकतूलमग्नौ प्रोतं प्रदूयेतैवं हास्य सर्वे पाप्मानः प्रदूयन्ते

பவித்ரஶப்3த3ம் அந்த ஶப்3த3த்தால் பிரஸித்3தி4பெற்ற த3ர்ப்ப4த்தாலான பவித்ரம் முதலானவற்றைக் குறிப்பதில் ஸ்வாரஸ்யமில்லையாகையால் பரிஶுத்3த4ப்படுத்தும் பாவனப்பொருளைக் குறிப்பதாகக் கொள்வதே பொருந்தும். பரமபாவனத்வமாவது—தன்னை ப்ராப்ய ப்ராபகங்களாக நினைப்பவனுடைய ப்ராசீன பாபங்களாகிற போய பிழைகளைத் தீயினில் தூசுபோலே போக்கடித்து, இனி வரக்கூடும் பாபங்களாகிற புகுதருவான் நின்றனவற்றையும் ஒட்டாதபடி செய்கை. **"யதா2 புஷ்கரபலாஶ ஆபோ ந ஶ்லிஷ்யந்த ஏவமேவம்விதி3 பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே"** [சா2ந் 4-14-3] [எப்படி தாமரை இலையில் நீர் ஒட்டுவதில்லையோ அவ்வண்ணமே பரமபுருஷனை இவ்வண்ணமாக உபாஸிப்பவனிடம் (வரப்போகும்) பாபகர்மம் ஒட்டாது.] எனும் ஶ்ருதி வாக்கியம் புகுதருவான் நின்றனவான பாபங்கள் ஒட்டமாட்டா என்பதைக்காட்டிற்று; **"தத் யதே2ஷீகதூலமக்3நௌ ப்ரோதம் ப்ரதூ3யேத ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூ3யந்தே"** [சா2ந்5-24-3] [நெருப்பிலிட்ட பஞ்சு எப்படிப் பொசுங்கிவிடுமோ அப்படி இவனுடைய ப்ராசீன பாபங்களெல்லாம் அழிந்து விடுகின்றன] எனும் வேத3 வாக்கியம் போய பிழைகள் தீயினில் தூசாவதைக் காட்டிற்று. இவ்விரண்டையும் **"தத3தி4க3ம உத்தரபூர்வாக4யோரஶ்லேஷ விநாஶௌ தத்3வ்யபதே3ஶாத்"** [ப்3ர ஸூ 4-1-13] [ப்3ரஹ்மவித்3யையை அடைந்தவுடன் (அந்த வித்3யாமாஹாத்ம்யத்தாலேயே) உபாஸகனுடைய வரப்போகும் பிழைகளின் ஒட்டாமையும், பழைய பாபங்களின் அழிவும் கூடுகின்றன ; வேத3வாக்கியங்கள் அப்படிக் கூறுகையால்] என்னும் ப்3ரஹ்மஸூத்ரம் உரைத்தது. தத்வநிர்ணயத்துக்காக ஏற்பட்டதாய், எல்லா வேதா3ந்த வாக்கியங்களின் நிக3மனமான (முடிவுப் பகுதியான) நாராயணாநுவாகம் **"நாராயண பரம் ப்3ரஹ்ம தத்த்வம் நாராயண: பர:, நாராயண பரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர:"** [தை-நா 11] [பரப்3ரஹ்மம் நாராயணனே, பரதத்துவம் நாராயணனே, பரஞ்சோதி நாராயணனே, பரமாத்மா நாராயணனே] என்று பரப்3ரஹ்மம், பரஞ்சோதி, பரதத்துவம், பரமாத்மா முதலான பரம்பொருளைக் குறிக்கும் தனித்தொடர்கள் நாராயணனையே காட்டும் என்று உத்3கோ4ஷித்தது இங்கு முக்கியமாகக் குறிக்கொள்ளத்தக்கது. இந்த வாக்கியத்தில் **'தத்த்வம்**

(छा ५. २४. ३) * नारायण परं ब्रह्म तत्त्वं नारायणः परः। नारयण परो ज्योतिरात्मा नारायणः परः (ना) इति हि श्रुतयो वदन्ति ॥ १२ ॥

पुरुषं शाश्वतं दिव्यमादिदेवमजं विभुम् ॥ १२ ॥

புருஷம் ஶாஶ்வதம் தி₃வ்யமாதி₃தே₃வமஜம் விபு₄ம் ॥ 12

आहुस्त्वामृषयस्सर्वे देवर्षिर्नारदस्तथा।
असितो देवलो व्यासस्स्वयं चैव ब्रवीषि मे ॥ १३ ॥

13. ஆஹுஸ்த்வாம்ருஷயஸ்ஸர்வே தே₃வர்ஷிர்நாரத₃ஸ் தத₂ா ।
அஸிதோ தே₃வலோ வ்யாஸஸ்ஸ்வயம் சைவ ப்₃ரவீஷி மே॥

நாராயண: பர:' 'ஆத்மா நாராயண: பர:' என்று படித்திருப்பதை யொட்டி "நாராயண பரம் ப்₃ரஹ்ம" "நாராயண பரோ ஜ்யோதி:" எனும் இடங்களிலும் 'நாராயண:' எனும் முதல் வேற்றுமைப் பத₃த்தில் "ஸுபாம்ஸு லுக்" என்னும் வ்யாகரண ஸூத்ரப்படி விஸர்க₃ம் மறைந்திருப்பதாகவே கொள்ளவேணும். 'நாராயண: பரம் ப்₃ரஹ்ம' 'நாராயண: பரோ ஜ்யோதி:' என்றே மஹோபநிஷத்தில் பாட₂ம் இருப்பதாகத் தாத்பர்யசந்த்₃ரிகையிலும், வேத₃ாந்த கௌஸ்துப₄த்திலும் எடுக்கப்பட்டது. இதிலிருந்து, 'நாராயண பரம் ப்₃ரஹ்ம' என்பதற்கு 'நாராயணனைக் காட்டிலும் வேறுபட்டது ப்₃ரஹ்மம்' என்று பஞ்சமீஸமாஸத்தைக்கொள்ளும் நாராயணத்₃வேஷியின் வ்யாக்₂யானம் நாராயணாநுவாகத்தின் முன்பின் மந்திரங்களுக்கெல்லாம் பொருந்தாதாகையாலும், குறிப்பாக, அடுத்துள்ள "யச்ச கிஞ்சித் ஜக₃த்யஸ்மிந் த்₃ருஶ்யதே ஶ்ரூயதேऽபி வா । அந்தர் ப₃ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:॥" [இவ்வுலகில் காண்பனவும், கேட்பனவுமான எல்லாப் பொருள்களின் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான் நாராயணன்] எனும் வாக்யத்திற்கு அடியோடு பொருந்தாதாகையாலும், மற்றுமுள்ள எல்லா ஶ்ருதி ஸ்ம்ருதி ந்யாயங்களோடும் முரண்படுமாகையாலும் எவ்வகையிலும் பொருந்தாது என்று அறியத்தக்கது. இதன் விரிவை நமது விஷ்ணு சித்த விஜயத்திலே காணலாம். ஆக, அர்ஜுனன் — பரப்₃ரஹ்மமாகவும், பரஞ்சோதியாகவும் பரமபவித்ரமாகவும் ஶ்ருதிகளில் ஓதப் படுபவன் கண்ணனே எனக் கூறினானாயிற்று. *12.

ஸர்வே ரிஷய: – எல்லா ரிஷிகளும், **தத₂ா**—அவ்வண்ணமே, **தே₃வர்ஷி: நாரத₃:** —தே₃வரிஷியான நாரத₃ரும், **அஸித:** — அஸிதரும், **தே₃வல:** —தே₃வலரும், **வ்யாஸ:** — வியாஸரும், **த்வாம்**—உன்னையே, **ஶாஶ்வதம் தி₃வ்யம் புருஷம்** — என்றுமிருக்கும் தி₃வ்யபுருஷனாகவும், **ஆதி₃தே₃வம்** — ஆதி₃தே₃வனாகவும், **அஜம்**—(கர்மத்தால் ஏற்பட்ட) பிறப்பில்லாதவனாகவும், **விபு₄ம்**—எங்கும் வியாபித்திருப்பவனாகவும், **ஆஹு:** — கூறுகிறார்கள், **ஸ்வயம் சைவ** — நீ தானும், **மே** —எனக்கு, **ப்₃ரவீஷி** —(இப்படிச்) சொல்லுகிறாய்.

---

13. பரமாம் பிரமம் பரமாகுந் தாமம்
பரமாம் பவித்திரநீ தானாய்—திரமான
வான்பிறங்கு பூருடனாய் மன்னுமுதற் றேவனாய்த்
தான்பிறவா தான்விபுவுந் தான்.

14. என்றுமறை நூன்முனிவ ரெல்லா மிசைக்கின்றார்
நன்றியமர் நாரதன்று னல்லசித—னன்றிபுனை
தேவலனுஞ் சீரார் வியாதனுமுன் றேர்ந்தெனக்குக்
கோவலநீ யும்பணித்தாய் கூர்ந்து.

"**பரமாம் பிரமம்** — பரப்₃ரஹ்மமாகவும், **பரமாகும் தாமம்** — பரஞ்சோதியாகவும், **பரமாம் பவித்திரம்** — பரம பாவனமாகவும், **நீதானாய்** — நீயேயாய், **திரமான**—என்றுமுள்ள, **வான் பிறங்கு**—பரமபத₃த்தில் விளங்காநிற்கும், **பூருடனாய்** – புருஷனாய், **மன்னு முதல் தேவனாய்**—நிலையான ஆதி₃தே₃வனாய், **தான் பிறவாதான்** — தான் (கர்மத்தால்) பிறவாதவனாய், **விபுவும் தான்** — தானே ஸர்வவ்யாபியாகவும் இருக்கிறாய்" **என்று**—என்று, (முறையே) **மறைநூல்**—வேத₃ஶாஸ்த்ரமும், **முனிவரெல்லாம்** — முனிவரனைவரும், **இசைக்கின்றார்** — கூறுகின்றார்கள்; **நன்றி அமர் நாரதன் தான்**—தே₃வரிஷியாகிற நன்மையையுடைய நாரத₃ப₄க₃வானும், **நல் அசிதன்**—நன்மைமிக்க அஸிதரும், **நன்றி புனை தேவலனும்** — நன்மையுடைய தே₃வலனும், **சீரார் வியாத**

னும்—சிறப்புமிக்க வியாஸரும், **முன் இசைக்கின்றார்**—முன்னமே கூறியிருக்கின்றார்கள். **கோவல!**—ஆயனே! **தேர்ந்து**—ஆராய்ந்து, **கூர்ந்து**—குறிக்கொண்டு, **நீயும்**—நீயும், **எனக்குப் பணித்தாய்**—எனக்கு உரைத்தாய்.

12*,13. முற்கூறியபடி ஶ்ருதியினால் தேறிய அர்த்த₂ம் ஸ்ம்ருதீதிஹாஸ புராணரூபமான மஹரிஷி வசனங்களாலும், வேத₃ம்போலே இயல்வான ப்ரமாணமான-எல்லாமறிந்த கண்ணனின் வசனத்தாலும் ஸித்₃தி₄க்கிறது என்கிறான். (ஸர்வே ரிஷய:) பரதத்வமும், தாழ்ந்த தத்துவங்களும் பற்றிய உண்மையறிவையுடைய எல்லா ரிஷிகளும். உள்ளதை உள்ளபடி அறிந்து கூறும் ஆப்ததமர்களான ரிஷிகள் அனைவர்க்கும் இதில் கருத்துவேற்றுமையே இல்லை என்றபடி. (த்வாம் ஆஹு:) "ஸர்வம் வாக்யம் ஸாவதா₄ரணம்" [எல்லா வாக்யங்களும் ஏகாரத்தை உள்ளடக்கியவை] என்கிற நியாயத்தின்படி — உன்னையே பின்வரும் பெருமைகளையுடைய பரம்பொருளாகக் கூறுகிறார்கள் என்று ஏகாரத்தைக் கூட்டிப் பொருள்கொள்ளவேண்டும். இத்தால் பிரமன் உருத்திரன் முதலானோர்க்கு இப்பெருமைகள் இல்லை என்று உணர்த்தப்படுகிறது. அன்றிக்கே, கண்ணனாக அவதரித்து எளிமையுடனிருக்கும் இந்நிலையிலும் உன்னையே இப்படிப் பரத்வம் உடையவனாகக் கூறுகிறார்கள் என்றும் கொள்ளலாம். எத்தகையவனாகக் கூறுகிறார்கள் என்பதை முதல் அரை ஶ்லோகம் விளக்குகிறது—(ஶாஶ்வதம் புருஷம்) நித்ய புருஷனாகக் கூறுகிறார்கள். "ஶஶ்வத் ப₄வ: ஶாஶ்வத:" [எப்போதும் இருப்பவன் ஶாஶ்வதன்] என்று வ்யுத்பத்தி. (தி₃வ்யம் புருஷம்) பரமபத₃த்திலிருக்கும் புருஷனாகக் கூறுகிறார்கள். 'தி₃வி ப₄வ: தி₃வ்ய:' [மேலான உலகத்தில் இருப்பவன் தி₃வ்யன்] என்று வ்யுத்பத்தி. (புருஷம்) "பராத்பரம் புரிஶயம் புருஷம் ஈக்ஷதே" [ப்ரஶ்நோபநிஷத் 5-5] [மேலானவர்களைக் காட்டிலும் மேலானவனும், ஹ்ருத₃யத்தில் வாழ்பவனுமான புருஷனைக் காண்கிறான்.] என்கிறபடியே ஹ்ருத₃யமாகிற புரத்தில் வாழும் புருஷனாகக் கூறுகிறார்கள். (ஶாஶ்வதம் தி₃வ்யம் புருஷம்) கண்ணனாயிருக்கும் அவதாரநிலையில் என்றுமிருப்பவனாக இல்லாவிடிலும், பரமபத₃த்திலிருக்கும் பரநிலையில் என்றும் இருப்பவன் என்று கருத்து. (ஆதி₃தே₃வம்) 'ஆதி₃ஶ்சாஸௌ தே₃வஶ்ச ஆதி₃தே₃வ:' என்கிற வ்யுத்பத்தியாலே, ஜக₃த்காரணமாய், உலகைப் படைத்தளித்தழிப்பதை விளையாட்டாகக் கொண்டவனாயிருப்பவன் என்று கூறுகிறார்கள். 'தி₃வு க்ரீடா₃' என்னும் தா₄துவி

।। भा ।। ऋषयश्च सर्वे परावरतत्त्वयाथात्म्यविदस्त्वामेव शाश्वतं दिव्यं पुरुषमादिदेवमजं विभुमाहुः ; तथैव देवर्षिर्नारदः असितो

லிருந்து தோன்றியதாலே 'தே₃வ' ஶப்₃த₃ம் விளையாடுகிறவன் என்று பொருள்படுகிறது. 'க்ரீட₃தோ ப₃ாலகஸ்யேவ சேஷ்டாம் தஸ்ய நிஶாமய' [வி-பு 1-2-18] [விளையாடும் சிறுவனுடையது போன்ற அவனுடைய ஜக₃த்₃வ்யாபாரத் தொழிலைக் காண்பாய்] "க்ரீட₃ா ஹரேரித₃ம் ஸர்வம்" [ப₄ார-ஶாந்தி 206-58] [இவையெல்லாம் எம்பெருமானுக்கு விளையாட்டுக் கருவிகள்] "ப₃ால: க்ரீட₃ந கைரிவ" [ப₄ார-ஸப₄ா 61-31] [குழந்தை விளையாட்டுக் கருவிகளைக் கொண்டு விளையாடுவதுபோல் (எம்பெருமான் விளையாடுகிருன்).] முதலான பிரமாணங்கள் இங்கு அநுஸந்தி₄க்கத் தக்கவை. "லோகவத்து லீலாகைவல்யம்" [2-1-33] என்று ப்₃ரஹ்மஸூத்ரத்திலும் இவ்விஷயம் சொல்லப்பட்டது. இதனுல் பிரமன், உருத்திரன் முதலான தே₃வர்களும் பரமபுருஷனுக்கு விளையாட்டுக் கருவிகளாகவும், அவனுல் படைக்கப்படுபவர்களாகவும் இருக்கிருர்கள் என்று உணர்த்தப்படுகிறது. "நாராயணுத் ப்₃ரஹ்மா ஜாயதே, நாராயணுத் ருத்₃ரோ ஜாயதே" [நாராயணேபநிஷத்] [நாராயணனிடமிருந்து பிரமன் பிறக்கிருன்; நாராயணனிடமிருந்து உருத்திரன் உண்டாகிருன்] "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத், ந ப்₃ரஹ்மா நேஶாந:" [மஹோபநிஷத் 1-1] [நாராயணன் ஒருவனே (பிரளய காலத்தில்) இருந்தான். பிரமனுமில்லை, உருத்திரனுமில்லை] "தஸ்மாச்ச தே₃வா ப₃ஹுதா₄ ஸம்ப்ரஸூதாஸ்ஸாத்₄யா மநுஷ்யா: பஶவோ வயாம்ஸி" [முண்ட₃க 2-1-7] [அந்தப் பரமபுருஷனிடமிருந்து பலவகைப்பட்டவர்களாய், (அந்தந்த லோகங்களில்) அடையத்தக்கவர்களான தே₃வர்களும், மனிதர்களும், விலங்குகளும், பறவைகளும் (தாவரம் முதலானவையும்) உண்டாயின] முதலான உபநிஷத்துக்களிலும், "ஏதௌ த்₃வௌ விபு₃த₄ஶ்ரேஷ்டௌ₂ ப்ரஸாத₃க்ரோத₄ஜௌ ஸ்ம்ருதௌ। தத₃ா த₃ர்ஶிதபந்த₂ாநௌ ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரகௌ ॥" [ப₄ார. ஶாந்தி 350-19] [நாராயணனுடைய அருளால் உண்டான பிரமனும், கோபத்தினுல் உண்டான உருத்திரனுமாகிய இரு தே₃வர்தலைவர்களும் அவனுல் காட்டப்பட்ட வழியில் முறையே படைத்தல் தொழிலையும், அழித்தல் தொழிலையும் செய்கிருர்கள்] "க இதி ப்₃ரஹ்மணோ நாம ஈஶோऽஹம் ஸர்வதே₃ஹிநாம்। ஆவாம் தவாங்கே₃ ஸம்பூ₄தௌ தஸ்மாத் கேஶவநாமவாந்॥" [ஹரிவம்சம் ப₄விஷ்யபர்வம் 88-48] ['க:' என்று பிரமனின் பெயர். தே₃ஹத்

देवलो व्यासश्च। *ये च वेदविदो विप्रा ये चाध्यात्मविदो जनाः। ते वदन्ति महात्मानं कृष्णं धर्मं सनातनम्। पवित्राणां

தில் பற்றுள்ள அனைவர்க்கும் நான் ஈசன். நாங்களிருவரும் உனது அங்க₃த்திலிருந்து பிறந்தவர்கள். ஆகையால் நீ கேஶவன் என்னும் பெயரை உடையவனுகிறுய்.] முதலான இதிஹாஸ புராண வாக்யங்களிலும் காட்டப்பெற்ற காரணவாக்யங்களின் பொருள் ஆதி₃ தே₃வன் என்னும் இப்பத₃த்தால் கூறப்பட்டதாயிற்று. (அஜம்) கர்மத்தால் ஏற்பட்ட பிறப்பில்லாதவனுகக் கூறுகிறுர்கள். அன்றிக்கே, ஸ்வரூபத்தில் பிறப்பு இறப்பு முதலான விகாரமில்லாதவனுகக் கூறுகிறுர்கள் என்றும் கொள்ளலாம். இத்தால் (ஸ்வரூப) ஶோத₄க வாக்யங்களின் பொருள் உணர்த்தப்பட்டதாயிற்று. (விபு₄ம்) **''ஆகாஶவத் ஸர்வக₃தஶ்ச நித்ய:''** [ஆகாஶத்தைப்போலே எங்குமிருப்பவனுகவும், என்றுமிருப்பவனுகவும் உள்ளவன் பரமாத்மா] என்று சொல்லப்பட்ட ரீதியில் வியாபித்திருப்பவனுகவும், அனைத்தையும் நியமிப்பவனுகவும் கூறுகிறுர்கள். இத்தால் அந்தர்யாமி ப்₃ராஹ்மணம் முதலானவற்றில் முழங்கப்பெற்றவையாய், காரணத்வம் முதலான முற்கூறிய கு₃ணங்களுக்கு அநுகு₃ணமான வ்யாப்தி முதலான கு₃ணங்கள் உணர்த்தப்பெற்றன. ஆக, இந்த ஶ்லோகார்த்த₄த்தில் **''ஏஷ ஸர்வபூ₄தாந்தராத்மா அபஹதபாப்மா தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:''** [ஸு-ப₃ால7] [நாராயணனுகிற இவன் ஒருவனே எல்லாப் பொருள்களுக்கும் அந்தர்யாமியாய், குற்றமற்றவனுய், பரமபத₃த்தில் இருப்பவன்] என்னும் உபநிஷத்₃வாக்யம் உணர்த்தப்பட்டதாயிற்று. 'ரிஷய: ஸர்வே' என்று 'எல்லா ரிஷிகளும் இவ்வர்த்த₂த்தைக் கூறியிருக்கிறுர்கள்' என்று பொதுவாகச் சொன்னபோதிலும், ஆப்தர்களில் தலைசிறந்தவர்களாகையாலே சில மஹரிஷிகளைப் பெயரிட்டு எடுத்துக் காட்டுகிறுன் மேலே—(தே₃வர்ஷி: நாரத₃:) தே₃வரிஷியான நாரத₃ர். தே₃வரிஷி என்று விஶேஷித்தமையாலே தே₃வஜாதியைச் சேர்ந்தவராகையாலே ஸத்வகு₃ணம் மிக்கவர் என்றும், ரிஷியாகையாலே உள்ளதை உள்ளபடி அறிந்து கூறுபவர் என்றும் உணர்த்தப்படுகிறது. அதிலும் **''தே₃வர்ஷீணாம் ச நாரத₃:''** [10-26] [தே₃வரிஷிகளுக்குள் நான் நாரத₃ராயிருக்கிறேன்] என்று கண்ணனே இங்கு அருளிச்செய்யப்போகும் சிறப்பையுடையவர் இவர். (அஸித: தே₃வல:) அஸித மஹரிஷி, அவரது தந்தையான தே₃வல மஹரிஷி ஆகியவர்களும் இவ்வர்த்த₂த்தைக் கூறியிருக்கிறுர்கள். (வ்யாஸ:) **''ஸ ஹோவாச வ்யாஸ: பாராஶர்ய:''** [தை-ஆர 1-9] [பராஶர புத்ரரான வியாஸ

हि गोविन्दः पवित्रं परमुच्यते। पुण्यानामपि पुण्योऽसौ मङ्गलानां च मङ्गलम्। त्रैलोक्यं पुण्डरीकाक्षो देवदेवस्सनातनः। आस्ते हरिर-

ஏன்றே சொன்னார்] என்று வேத₃த்தாலும் புகழப்பட்ட வியாஸரும் இவ்வர்த்த₂ங்களைக் கூறியிருக்கிறார். இப்படி எங்கு கூறியிருக்கிறார்கள் எனில்: பின்வரும் பிரமாணங்களில் கூறியிருக்கிறார்கள்—1. "**யே ச வேத₃விதோ₃ விப்ரா: யே சாத்₄யாத்மவிதோ₃ ஜநா:। தே வத₃ந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் த₄ர்மம் ஸநாதநம்॥**" [ப₄ார-வந 86-26] [வேத₃த்தின் பூர்வப₄ாக₃த்தை அறிந்தவர்களும், வேதா₃ந்தத்தின் பொருளை உணர்ந்தவர்களுமான அந்தணர்கள் கண்ணனைப் பரமாத்மா -என்றும், பழமையான த₄ர்மமாக (மோக்ஷஸாத₄னமாக) இருப்பவன் என்றும் கூறுகிறார்கள்] என்னும் ப₄ாரதவாக்யத்தில் "**ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மா**" [ப்₃ருஹ 6-4-22] [அத்தகைய இவனே பிறப்பற்றவனான பரமாத்மா] முதலான உபநிஷத்₃வாக்யங்களில் முழங்கப்படும் பரமாத்மா கண்ணனே என்று ஜ்ஞானிகள் அனைவரும் முடிவு கட்டியிருப்பதாகக் கூறப்பட்டது. "யாக₃ம், தா₃னம் முதலான த₄ர்மங்கள் தே₃ஶம், காலம் முதலானவற்றால் அளவுபட்ட ப₂லனையே அளிக்கக் கூடியவை; தாம் அநித்யமாகவும் இருப்பவை. கண்ணனோவெனில், நித்யமாய், ஒப்பற்றதான மோக்ஷ ப₂லனையே அளிப்பவன். தானும் நித்யனாயிருப்பவன்" என்னும் காரணத்தாலே கண்ணன் இங்கு ஸநாதனத₄ர்மம் என்று கூறப் பட்டான். 2. "**பவித்ராணாம் ஹி கோ₃விந்த₃: பவித்ரம் பரமுச்யதே। புண்யாநாமபி புண்யோ ऽஸௌ மங்க₃ளாநாம் ச மங்க₃ளம்॥**" [ப₄ார-வந 86-27] [பரிஶுத்₃த₄ப்படுத்தும் பாவனப்பொருள்களில் கோ₃விந்த₃ன் மேலான பாவனமாகச் சொல்லப்படுகிறான். உயர்க₃திக்கு அழைத்துச் செல்லும் புண்யங்களில் இவன் மேலான புண்யமாயிருப்பவன். சிறப்பைத் தரும் மங்க₃ளங்களில் மேலான மங்க₃ளமாயிருப்பவன்.] என்னும் ஶ்லோகத்தில் பாபங்களைப்போக்கிப் பரிஶுத்₃த₄ப்படுத்தும் பாவனப்பொருள்கள், உயர்க₃திக்கு அழைத்துச்செல்லும் ஸாத₄னங்கள், தம் ஸந்நிதி₄யாலே சிறப்பைத்தரும் மங்க₃ளங்கள் ஆகிய அனைத்திலும் தலைசிறந்தவனாயிருப்பவன் கண்ணனே என்று முழங்கப்பெற்றது. 3. "**த்ரைலோக்யம் புண்ட₃ரீகாக்ஷ: தே₃வதே₃வஸ்ஸநாதந:। ஆஸ்தே ஹரிரசிந்த்யாத்மா தத்ரைவ மது₄ஸூத₃ந:॥**" [ப₄ார-வந 86-28] [மூவுலகத்திற்கும் அந்தர்யாமியாயிருப்பவனாய், தாமரைக்கண்ணனாய், தே₃வதே₃வனாய், பழையவனாய், நினைக்க வொண்ணாத ஸ்வரூபத்தையுடையவனாய், மது₄வை அழித்தவனான

चिन्त्यात्मा तत्रैव मधुसूदनः ॥ * एष नारायणः श्रीमान् क्षीरार्णवनिकेतनः । नागपर्यङ्कमुत्सृज्य ह्यागतो मधुरां पुरीम् ॥ पुण्या द्वारवती तत्र यत्रास्ते मधुसूदनः । साक्षाद्देवः पुराणोऽसौ स हि धर्मस्सनातनः ॥ (भा. व. (८६·२४·२८) तथा * यत्र नारायणो देवः परमात्मा सनातनः । तत्र कृत्स्नं

ஹரி அங்கேயே எழுந்தருளியிருக்கிருன்] என்னும் ஶ்லோகத்தில் ப₃த்₃த₄முக்த நித்யர்களாகிற மூவகையான சேதஂாவர்க்க₃த்திற்கும், பூ₄மி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்க₃ம் எனப்படும் மூவுலகுக்கும் அந்தர்யாமியாய்,அந்தராதி₃த்ய வித்₃யையில்''**தஸ்ய யதூ₂ா கப்யாஸம் புண்டரீ₃கம் ஏவமக்ஷிணீ**'' [ச₂ாந் 1-6-7] [அப்பரமனுக்கு சூரியனுல் மலர்ந்ததாய், பருத்த தண்டையுடையதாய், ஆழமுள்ள நீரில் முளைத்ததான தாமரைபோன்ற இருகண்கள் உள] என்று தாமரைக்கண்ணனுகச் சொல்லப்பட்ட பரமாத்மா கண்ணனே என்று உத்₃கோ₄ஷிக்கப் பட்டது. 4. ''**ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந: । நாக₃பர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாக₃தோ மது₄ராம் புரீம் ॥**'' [ப₄ார-வந 86-24] [பரமபத₃த்திலுள்ள இந்த ஸ்ரீமந்நாராயணனே பாற்கடலில் பள்ளிகொண்டவனுகி, அங்கு திருவநந்தாழ்வானுகிற படுக்கையை விட்டு, கண்ணனுய் மது₄ராபுரியை அடைந்திருக்கிருன்] என்னும் ஶ்லோகத்தில், நாராயணநுவாகத்தில் பரமாத்மாவான நாராயணன் என்று முழங்கப்பட்டவனுய், புருஷஸூக்தத்தில் ஸ்ரிய: பதியாக உத்₃கோ₄ஷிக்கப்பட்டவனுய், ''**அம்ப₄ஸ்யபாரே**'', ''**யமந்தஸ் ஸமுத்₃ரே**''[தை-நா] என்று க்ஷீராப்₃தி₄நாத₂னுகக் கூறப்பெற்றவனே கண்ணனுக அவதரித்தவன் என்று காட்டப்பட்டது. 5. ''**புண்யா த்₃வாரவதீ தத்ர யத்ராஸ்தே மது₄ஸூத₃ந: । ஸாக்ஷாத்₃தே₃வ: புராணோऽஸௌ ஸ ஹி த₄ர்மஸ் ஸநாதந: ॥**'' [ப₄ார-வந 86-25] [எங்கு மது₄ஸூத₃னன் எழுந்தருளியிருக்கிருனே, அதுவே புண்யமான த்₃வாரகையாகும். அவனே இயற்கையான தே₃வத்தன்மையை உடையவன். பழமையானவன். ஸநாதனமான த₄ர்மமாயிருப்பவன் அவனேயன்றே.] என்னும் ஶ்லோகத்தில் பரமாத்மாவின் ஸங்கல்பத்தால் தே₃வத்தன்மையை அடைந்த பிரமன், உருத்திரன் முதலானவர்களைப் போலல்லாமல், கண்ணன் இயல்வான தே₃வத்தன்மையை உடையவன் என்று காட்டப்பட்டது. 6. ''**யத்ர நாராயணோ தே₃வ: பரமாத்மா ஸநாதந: । தத்ர க்ருத்ஸ்நம் ஜக₃த்பார்த்த₂ தீர்த்தா₂ந்யாயதநாநி ச ॥ தத்புண்யம் தத்பரம் ப்₃ரஹ்ம தத்தீர்த்த₂ம் தத்தபோவநம் । தத்ர தே₃வர்ஷயஸ்ஸித்₃தா₄: ஸர்வே சைவ தபோத₄நா: ॥........ஆதி₃**

जगत्पार्थ तीर्थान्यायतनानि च॥ तत्पुण्यं तत्परं ब्रह्म तत्तीर्थं तत्तपोवनम्।...तत्र देवर्षयस्सिद्धास्सर्वे चैव तपोधनाः॥ आदिदेवो महायोगी यत्रास्ते मधुसूदनः। पुण्यानामपि तत्पुण्यं माभूत्ते संशयोऽत्र वै॥ (भा. व. ८८. २७-३१)/ * कृष्ण एव हि लोकानामुत्पत्तिरपि चाप्ययः। कृष्णस्य हि कृते भूतमिदं विश्वं चराचरम्॥ (भा. स. ४१. २३) इति। तथा स्वयमेव ब्रवीषि च * भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च। अहंकार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा॥ (७. ४) इत्यादिना, * अहं सर्वस्य प्रभवो मत्तस्सर्वं प्रवर्तते (१०. ८) इत्यन्तेन॥ १२॥ १३॥

தே$_3$வோ மஹாயோகீ$_3$ யத்ராஸ்தே மது$_1$ஸூத$_3$ந: | புண்யாநாமபி தத்புண்யம் மாபூ$_4$த்தே ஸம்ஶயோऽத்ர வை ||" [ப$_4$ார-வந 88-27-31] [குந்தீபுத்ரனே! எந்த இடத்தில் பரமாத்மாவாய், பழையவனான நாராயணன் எனும் தே$_3$வன் எழுந்தருளியிருக்கிறானோ, அவ்விடத்திலேயே எல்லா உலகங்களும், தீர்த்த$_2$ங்களும், கோயில்களும் உள்ளன. அவ்விடமே புண்யஸ்த$_2$லமாகவும், மிக்க பெருமைபெற்றதாகவும், பாவனமான தீர்த்த$_2$மாகவும், தபோவனமாகவும் உள்ளது.......அவ்விடத்திலேயே தே$_3$வரிஷிகளும், ஸித்$_3$த$_4$ர்களும், எல்லாத் தபஸ்விகளும் எழுந்தருளியிருக்கிறார்கள். ஆதி$_3$தே$_3$வனாய், மஹாயோகி$_3$யான மது$_4$ஸூத$_3$னன் எவ்விடம் எழுந்தருளியிருக்கிறானோ அதுவே புண்யஸ்த$_2$லங்களுக்குள் தலைசிறந்த புண்யஸ்த$_2$லமாகும். உனக்கு இதில் ஐயம் வேண்டா.] என்னும் ஶ்லோகங்களில் கண்ணன் எழுந்தருளியிருக்கும் இடமும் மிகச் சிறப்புற்றது என்று காட்டப்பட்டது.

7. **"க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம் உத்பத்திரபி சாப்யய: | க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூ$_4$தமித$_3$ம் விஶ்வம் சராசரம் ||'** [பார-ஸப$_4$ா 41-23] [கண்ணனே உலகங்களுக்கு ஸ்ருஷ்டி ஸ்தி$_2$தி ஸம்ஹாரங்களைச் செய்பவன். சராசரங்கள் அடங்கிய இவ்வுலகம் முழுவதும் கண்ணனுக்காகவே ஏற்பட்டது.] என்னும் ஶ்லோகத்தில் ஸகல ஜக$_3$த்காரணனாய், ஸர்வஶேஷியாயிருப்பவன் கண்ணனே என்று காட்டப்பட்டது. (ஸ்வயம் சைவ ப்$_3$ரவீஷி மே) முற்கூறியபடி வேத$_3$ங்களும் ரிஷிகளும் கூறும் உன் பெருமைகளை—இயல்பாகவே எல்லாமறிந்தவனாய், பிரமன் முதலான அனைவரையும் படைத்த நீயே எனக்குச் சோதிவாய் திறந்து அருளிச்செய்துள்ளாய். "பூ$_4$மிராப:" [கீ$_3$தை 7-4]

/ இங்கு கொடுக்கப்பட்டுள்ள ஆகரங்கள் க்ருஷ்ணாசார்யர் நாகரப் பதிப்பின்படி. க்$_3$ரந்த$_2$ப் பதிப்பில் அத்$_4$யாயங்கள் வேறுபடுகின்றன. சில ஶ்லோகங்கள் இல்லை.

सर्वमेतदृतं मन्ये यन्मां वदसि केशव!।
न हि ते भगवन्! व्यक्तिं विदुर्देवा न दानवाः॥ १४॥

14. ஸர்வமேதத்$_3$ருதம் மந்யே யந்மாம் வத$_3$ஸி கேஶவ! ।
ந ஹி தே ப$_4$க$_3$வந்! வ்யக்திம் விது$_3$ர்தே$_3$வா ந த$_3$ாநவா:॥

கேஶவ—கேஶவனே! **மாம்** — என்னைக்குறித்து, **யத் வத$_3$ஸி**—யாதொரு உனது ஐஶ்வர்யத்தையும், கல்யாண கு$_3$ணங்களையும் கூறுகிருயோ, **ஸர்வம் ஏதத்**—அந்த இவ வனைத்தும், **ருதம் மந்யே** — உண்மை என்றே நினைக் கிறேன். **(ஆகையால்) ப$_4$க$_3$வந்**—ஜ்ஞாநம், ஶக்தி முதலிய கு$_3$ணங்களை உடையவனே! **தே வ்யக்திம்**—உன்னைப்பற்றிச் சொல்லக்கூட, **தே$_3$வா:**—தே$_3$வர்கள், **ந ஹி விது$_3$:**—அறிய மாட்டார்களன்ருே; **த$_3$ாநவா:** — அஸுரராக்ஷஸர்களும, **ந ஹி விது$_3$:**—அறியமாட்டார்களன்ருே.

---

15. என்னை நீ நோக்கி யியம்பியருள் கின்றனமை
தன்னை நான் மெய்யாத் தகவறிவன்—முன்னையாம்
வானவர்க டானவர்கண் மாயவனே! நின்ருேற்றந்
தானறியா ரெப்படியுந் தான்.

நீ என்னை நோக்கி—நீ என்னைக்குறித்து, **இயம்பி யருள்கின்றனமை தன்னை**-சொல்லும் உனது பெருமைகளை, **நான் மெய்யா தகவு அறிவன்**—நான் மெய்யான பெருமை களே என அறிவேன்; **மாயவனே!**—ஆச்சரியமான ஞானம் சக்தி முதலானவற்றை உடையவனே! **முன்னையாம்** — ஆதிகாலத்திலிருந்து வாழும், **வானவர்கள்** - தே$_3$வர்களும், **தானவர்கள்**—அஸுரராக்ஷஸர்களும், **எப்படியுந்தான்**—எந்த வகையிலும், **நின் தோற்றம்தான் அறியார்**-உனனைப்பற்றிச் சொல்லவும் அறியார்கள்.

என்று தொடங்கி "**அஹம் ஸர்வஸ்ய ப்ரப$_4$வ:**" [10-8] என்பதீருக கீ$_3$தையில் கண்ணனே தனது ஸர்வஶேஷித்வம், ஸர்வகாரணத்வம், ஸர்வஶரீரித்வம் முதலானவற்றைக் கூறினனன்ருே. ஆக, இவ்விரண்டு ஶ்லோகங்களாலும் — வேத$_3$ங்களாலும், ரிஷிகளாலும், கண்ணன் தன்னுலும் கண்ணனே பரம்பொருள் என்று நிலைநாட்டப்பட்டுள்ளது என்று அர்ஜுனனுல் நிரூபிக்கப்பட்டதாயிற்று. 12*,13.

॥ भा ॥ अतस्सर्वमेतद्यथावस्थिततत्त्वस्तुकथनं मन्ये, न प्रशंसाद्यभिप्रायम् ; यन्मां प्रत्यनन्यसाधारणमनवधिकातिशयं स्वाभाविकं तवैश्वर्यं

---

14. அபௌருஷேயமாய், எக்குற்றமும் அற்ற வேத₃ங்களாலும், பரமாப்தர்களான மஹரிஷிகளாலும், இயற்கையிலேயே எல்லாம் அறிந்தவனை உன்னாலும் சொல்லப்பட்டதாகையால் உன் பெருமை உண்மையானதே என்றும், இதை வெளிப்படுத்துவது எவராலும் இயலாது என்றும் சொல்லுகிறான் அர்ஜுனன். (ஸர்வமேதத் ருதம் மந்யே) இதுவரையில் நீ சொன்ன உனது கல்யாணகு₃ணப் பெருமையும், ஐஶ்வர்யப் பெருமையும் உள்ளதை உள்ளபடி சொல்லுவதேயொழிய, புகழுக்காகச் சொல்லுவதோ ஒரு கார்யார்த்த₂மாகச் சொல்லுவதோ அல்ல என்று உறுதியாக அறிகிறேன். "அந்யத்ராதத்₃கு₃ணோக்திர் ப₄க₃வதி ந தது₃த்கர்ஷசௌர்யை: பரேஷாம் ஸ்துத்யத்வாத்" [ர-ஸ்த 1-19] [எம்பெருமான் தவிர்ந்த மற்றவர்கள் விஷயத்தில் அவர்களுக்கில்லாத கு₃ணங்களைச் சொல்லிப் புகழ்வதே துதியாகும். எம்பெருமான் விஷயத்தில் அப்படியன்று. எம்பெருமானுடைய பெருமையைத் திருடியன்றோ மற்றவர்களைத் துதிக்கவேண்டியிருக்கிறது] என்று ப₄ட்டர் அருளிச்செய்தது இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கது. (யந்மாம் வத₃ஸி) "ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி₄ மாம் த்வாம் ப்ரபந்நம்" [கீ₃தை 2-7] [நான் உனக்கு ஶிஷ்யனாகிறேன். உன்னை ஶரணமடைந்த எனக்கு உபதே₃ஶிப்பாயாக.] என்கிறபடியே, உன்னைச் சரணமடைந்த எனக்குச் சொல்லுவதாகையால் இதில் அணுவளவும் மிகையாயிருக்க இடமில்லை என்று கருத்து. (யத் வத₃ஸி) வேறெவர்க்கும் உரித்தாயிராததாய், எல்லையற்ற பெருமையையுடையதாய், இயல்வானதான உனது செல்வத்தையும், கணக்கற்ற கல்யாணகு₃ணங்களையும் நீயே எனக்கு உபதே₃ஶிப்பதால் இது உண்மையென்பதில் ஐயமில்லை என்று கருத்து. இவ்வண்ணமாக, செல்வத்திலும் கல்யாணகு₃ணங்களிலும் இவனை ஒத்தாரும் மிக்காரும் இல்லாமையாலும், இவனுடைய செல்வமும் கு₃ணங்களும் இயல்வானவையாகையால், வேறெவராலும் உண்டானவையல்லாமையாலும், சிறந்த ஜ்ஞானஶக்திகளையுடைய தே₃வாஸுரர்களும் இவனைப்பற்றிப் பேசவும் அறியார்கள் என்கிறான் ஶ்லோகத்தின் எஞ்சிய பகுதியாலே — (கேஶவ!) "க இதி ப்₃ரஹ்மணோ நாம ஈஶோऽஹம் ஸர்வதே₃ஹிநாம்। ஆவாம் தவாங்கே₃ ஸம்பூ₄தௌ தஸ்மாத் கேஶவநாமவாந் ॥" [ஹரிவம்சம் ப₄விஷ்யபர்வம் 88-48]

कल्याणगुणानन्त्यं च वदसि। अतो भगवन् —निरतिशयज्ञानशक्तिबलै-

['க:' என்பது பிரமனின் பெயர். தே₃ஹத்தில் பற்றுடைய அனை வர்க்கும் ஶிவனுகிற நான் ஈஶனுவேன். நாங்களிருவரும் உனது அங்க₃த்திலிருந்து உண்டானவர்கள். ஆகையால் நீ கேஶவன் எனும் பெயரை உடையவனுகிருய்.] என்கிறபடியே உன்னிடமிருந்து உண்டானவர்கள் உனது பெருமையை அறியமுடியாது என்று கருத்து. "நான்முகன் செஞ்சடையான் என்றிவர்கள், எம்பெருமான் தன்மையை யார் அறிகிற்பார்" [திருவாய் 8-3-9] என்ருர் நம்மாழ்வார். (ப₄க₃வந்!) **"ஜ்ஞாந ஶக்திப₃லைஶ்வர்ய வீர்ய தேஜாம்ஸ்யஶேஷத: । ப₄க₃வச்ச₂ப்₃த₃வாச்யாநி விநா ஹேயைர் கு₃ணதி₃பி₄:॥"**[வி பு 6-5-79] [ஜ்ஞானம், ஶக்தி, ப₃லம், ஐஶ்வர்யம், வீர்யம், தேஜஸ் எனும் ஆறு கு₃ணங்களுக்கும் கொள்கலம் என்னும் பொருளும், தாழ்ந்த கு₃ணங்கள் எதுவும் இல்லை என்னும் அர்த்த₂மும் 'ப₄க₃வான்' என்னும் ஶப்₃த₃த்திற்குப் பொருளாகும்] என்கிறபடியே தாழ்வுகள் எதுவுமில்லாமல், எல்லையற்ற ஜ்ஞானம், ஶக்தி, ப₃லம், ஐஶ்வர்யம், வீர்யம், தேஜஸ் எனும் கு₃ணங்களுக்குக் கொள்கலமான உன்னை, அஜ்ஞானம் அஶக்தி முதலானவற்றையுடைய தே₃வத₃ானவர்கள் அறிய முடியுமோ? என்று கருத்து. (தே வ்யக்திம் ந ஹி விது₃:) உன்னைச் சொல்லவும் அறியார்களன்ருே. **"கிமாத்மிகைஷா ப₄க₃வதோ வ்யக்தி:? யதா₃த்மகோ ப₄க₃வாந்; கிமாத்மகோ ப₄க₃வாந்? ஜ்ஞாநாத்மகோ ப₄க₃வாந்"** [ரஹஸ்யாம்நாய ப்₃ராஹ்மணம்] [ப₄க₃வானுடைய இத்திருமேனி எதனுலானது? ப₄க₃வான் எதனு லானவனே அதனுலானது. ப₄க₃வான் எதனுலானவன்? ப₄க₃வான் ஜ்ஞானத்தாலானவன்] முதலானவிடங்களில் 'வ்யக்தி' ஶப்₃த₃ம் திருமேனியைக் குறிப்பதைக் காண்கிருேம். இப்ரகரணத்தில் திரு மேனியைப் பற்றிப் பேச்சு இல்லாமையாலும், மேலே அர்ஜுனன் திருமேனியைப் பற்றிக் கேளாமையாலும் இங்கு வ்யக்தி ஶப்₃த₃த் துக்குத் திருமேனியைப் பொருளாகக் கொள்வது பொருந்தாது. ஆகையால், மேலே '**வக்தும் அர்ஹஸ்யஶேஷேண**' [16] [உனது விபூ₄திகளனைத்தையும் நீயே சொல்லவேண்டும்] என்று அர்ஜுனன் கேட்கப் போவதையொட்டி "மற்றவர்கள் உன்னைப்பற்றிச் சொல்ல வும் அறியார்கள். அவர்கள் உன்னை நேரே கண்டு வெளிப்படுத்து வது எப்படி இயலும்?" என்னும் பொருளே இங்கு தேவையான தாகையால், வ்யக்தி ஶப்₃த₃த்துக்கு 'வ்யஞ்ஜன ப்ரகாரம்' (வெளிப்படுத்தும் முறை) என்று பொருள்கொள்ளப்பட்டது. **'அக்ஷரக்ஷரயோர் வ்யக்திம் இச்சா₂ம்யரிநிஷூத₃ந। உபலப்₃து₄ம்"**

श्वर्यवीर्यतेजसां निधे, ते व्यक्ति—व्यञ्जनप्रकारम्, नहि परिमितज्ञाना देवा दानवाश्च विदुः॥ १४॥

स्वयमेवात्मनाऽऽत्मानं वेत्थ त्वं पुरुषोत्तम!।
भूतभावन! भूतेश! देवदेव! जगत्पते!॥ १५॥

15.ஸ்வயமேவாத்மநாऽऽத்மாநம் வேத்த$_2$ த்வம் புருஷோத்தம!।
பூ$_4$தப$_4$ாவந! பூ$_4$தேஶ! தே$_3$வதே$_3$வ! ஜக$_3$த்பதே!॥

புருஷோத்தம ! — புருஷோத்தமனே! **பூ$_4$தப$_4$ாவந!**— எல்லாப் பொருள்களையும் உண்டாக்கினவனே! **பூ$_4$தேஶ!**— எல்லாப் பொருள்களையும் நியமிப்பவனே! **தே$_3$வதே$_3$வ!**— தே$_3$வர்களுக்கும் தே$_3$வனுயிருப்பவனே! **ஜக$_3$த்பதே !**— லோகஸ்வாமியே! **த்வம்**—நீ, **ஸ்வயமேவ ஆத்மநா**— உனது ஜ்ஞானத்தாலேயே, **ஆத்மாநம்** — உன்னை, **வேத்த$_2$**—அறிகிருய்.

16, பூதங்கட் காதியாய்ப் பூதங்க ளுயகனுய்
மீதேவ தேவனுய் மிக்குலகி—ளுதா
புருடோத்த மாவுன்னை நீயேநின் புத்தி
தெருடோற்ற லுற்றிருத்தி தீர்ந்து.

[ப$_4$ார-மோக்ஷ 308-2] [எதிரிகளை அழிப்பவனே! அக்ஷரம், க்ஷரம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் முறையை அறிய விரும்புகிறேன்] என்று வ்யக்தி ஶப்$_3$த$_3$ம் வ்யஞ்ஜனப்ரகாரம் என்னும் பொருளில் வழங்கப்பட்டதன்றோ. (தே வ்யக்திம் தே$_3$வா: ந ஹி விது$_3$; த$_3$ாநவா: ந ஹி விது$_3$:) அளவுபட்ட அறிவையுடைய தே$_3$வர்களோடு, அறிவிற்குறைந்த அஸுரராக்ஷஸர்களோடு வாசியற எவருமே உன்னைப்பற்றிப் பேசவும் அறியார்கள். அஸுரராக்ஷஸர்களைக் காட்டிலும் தே$_3$வர்கள் அறிவில் மிக்கவர்களாயினும், எல்லையற்ற பெருமையை உடைய உனது பெருமையைப் பேச இயலாமையில் இருவரும் ஒத்தவர்களே என்று கருத்து. 'ஹி' ஶப்$_3$த$_3$ம் அளவு பட்ட அறிவையுடைய இவர்களால் எம்பெருமானது பெருமையைப் பேச இயலாது என்பது ஸகல ப்ரமாணப்ரஸித்$_3$த$_4$ம் என்று காட்டுகிறது. 14.

॥भा॥ हे पुरुषोत्तम!, आत्मना आत्मानम्—त्वां स्वयमेव—स्वेनैव ज्ञानेन वेत्थ। भूतभावन—सर्वेषां भूतानामुत्पादयितः! भूतेश—

பூதங்கட்கு—எல்லாப் பொருள்களுக்கும், **ஆதியாய்**—காரணனுய், **பூதங்கள் நாயகனுய்**—எல்லாப் பொருள்களை யும் நியமிப்பவனுய், **மீதேவ தேவனுய்**—பெரிய தே₃வர்க ளுக்கும் தே₃வனுய், **மிக்கு**—சிறப்புற்று, **உலகின் நாதா!**—உலகத்துக்கு ஸ்வாமியாயிருப்பவனே! **புருடோத்தமா!**—புருஷோத்தமனே! **உன்னே**—உன்னே, **நீயே தீர்ந்து நின் புத்தி தெருள் தோற்றல் உற்றிருத்தி**—நீயே உனது தெளிந்த அறிவாலேயே பரிபூர்ணமாக அறிகிருய்.

15. சென்ற ஶ்லோகத்தில் தே₃வர்கள் முதலான எவருமே எம்பெருமானுடைய பெருமையைப் பேசவும் முடியாது என்று கூறப் பட்டது. இந்த ஶ்லோகத்தில் ப₄க₃வான் ஒருவனே தன் பெருமையைப் பேசமுடியும் என்று கூறுகிருன். (புருஷோத்தம!) உலகிலுள்ள ப₃த்₃த₄ முக்த நித்யர்களாகிற மூவகைப் புருஷர்களைக் காட்டிலும் சிறந்தவனே! இந்தப் புருஷோத்தம ஶப்₃த₃ம் கீ₃தையில் 15-வது அத்தியாயம் 16, 17, 18-வது ஶ்லோகங்களில் விளக்கப்படவிருக்கிறது. **"ஹரிர் யதை₂க: புருஷோத்தம: ஸ்ம்ருத:"** [ரகு₄வம்சம் 3-49] [எப்படி ஹரி ஒருவனே புருஷோத்தமன் எனப்படுகிருனே] என்று ஶிவப₄க்தனுன காளிதா₃ஸனுலும் இது ப₄க₃வந்நாமமாக முழங்கப்பட்டது குறிக் கொள்ளத்தக்கது. (ஆத்மநா ஆத்மாநம் த்வம் ஸ்வயமேவ வேத்த₂) வேறு எவருடைய உதவியும் இல்லாமல் உன்னே உனது ஜ்ஞானத்தி னுலேயே நீ அறிகிருய். **"த்வமேவ த்வாம் வேத்த₂ யோऽஸி ஸோऽஸி"** [காட₂க1-3-1] [நீ அளவிறந்தவனுயிருக்கிருய் என்னும் பெருமையோடு கூடிய உன்னே நீயே அறிவாய்] என்று வேத₃ம் ஓதியது இவன் விஷயமானதே என்று காட்டப்படுகிறது. (ஆத்மநா) வேருெருவரது உதவியில்லாமல் உன்னே நீ அறிகிருய் என்று கருத்து. **"மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநம்"** [கீ₃தை 15-15] [என்னிடமிருந்தே நினைவு, அறிவு முதலானவை உண்டாகின்றன] என்று மற்றவர்களுக்கு உன்னிடமிருந்து அறிவு உண்டாவதுபோல் உனது அறிவு மற்ற வர்களிடமிருந்து உண்டானதல்ல என்று கருத்து. (ஆத்மாநம்) உன்னே. (ஸ்வயமேவ வேத்த₂) உனது அறிவினுலேயே அறி கிருய். இது 'ஸ்வயமேவ' என்பதன் தாத்பர்யார்த்த₂ம். அன் றிக்கே, 'ஆத்மநா' என்னும் பத₃ம் 'உனது அறிவினுல்' என்று

सर्वेषां भूतानां नियन्तः!, देवदेव—दैवतानामपि परमदैवत!, यथा मनुष्यमृगपक्षिसरीसृपादीन् सौन्दर्यसौशील्यादिकल्याणगुणगणैर्दैवतानि

காட்டுவதாகவும் கொள்ளலாம். "**ஆத்மா ஜீவே த்4ருதௌ தே3ஹே ஸ்வபா4வே பரமாத்மநி। யத்நேऽர்க்கேऽக்3நௌ மதௌ வாதே**" [வைஜயந்தீ-த்3வ்யக்ஷரகாண்ட3ம் 1-6] [ஆத்மா என்னும் பத3ம் ஜீவனிடமும், தை4ர்யத்திலும், தே3ஹத்திலும், ஸ்வப4ாவத்திலும், பரமாத்மாவினிடத்திலும், யத்னத்திலும், ஸூர்யனிடத்திலும், அக்3நியிடத்திலும், பு3த்3தி4யிலும், காற்றினிடத்திலும் வழங்கப்படுகிறது.] என்று நிக4ண்டுவிலே ஆத்3மஶப்3த3த்திற்கு அறிவு என்னும் பொருளும் வழங்கப்படுகிறதன்றோ. இனி, உத்தரார்த்த4த்தாலே 'புருஷோத்தம' என்னும் திருநாமத்தின் பொருளை வலியுறுத்தும் பெருமைகளைக்காட்டும் நாமங்களாலே கண்ணனை அர்ஜுனன் அழைக்கிறான். (பூ4தப4ாவந!) "**பூ4தாநி ப4வந்தி அஸ்மாதி3தி பூ4தப4ாவந:**" [எல்லாப் பொருள்களும் இவனிடமிருந்து உண்டாகை யாலே இவன் பூ4தப4ாவனன் எனப்படுகிறான்] என்னும் வ்யுத்பத்தியாலே, எல்லாப் பொருள்களையும் உண்டாக்கினவனே! என்று பொருள்படுகிறது. ப்ரகரணத்திற்குப் பொருந்தாதாகையாலே 'ப4ாவந' ஶப்3த3த்திற்கு 'சிந்தை' முதலான பொருள்கள் கொள்ளத்தக்கவையன்று. (பூ4தேஶ!) எல்லாப் பொருள்களையும் நியமிப்பவனே! (தே3வதே3வ!) தே3வர்களுக்கும் மேலான தே3வனாயிருப்பவனே! "**தம் தை3வதாநாம் பரமம் ச தை3வதம்**" [ஶ்வே6-7] [தே3வர்களுக்கும் மேலான தே3வனை அவனை] என்று உபநிஷத் ஓதிற்றன்றோ. மனிதர்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வனவாகிய பாம்பு முதலியவை ஆகியவற்றைக் காட்டிலும் அழகு முதலான தே3ஹகு3ணங்களிலும், நீர்மை எளிமை முதலான ஆத்மகு3ணங்களிலும் எப்படி தே3வர்கள் சிறந்து விளங்குகிறார்களோ, அப்படியே அந்தந்த கு3ணங்களில் எல்லா தே3வதைகளைக் காட்டிலும் சிறந்து விளங்குமவன் இவனே என்று கருத்து. இதையே நம்மாழ்வாரும் "மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவாவோ" [திருவாய் 8.1.5] என்று அருளிச்செய்தார். தே3வர்களுக்கும் புழுக்களுக்கும் எவ்வளவு வாசி உண்டோ அவ்வளவு வாசி பரமாத்மாவுக்கும் தே3வர்களுக்கும் உண்டு என்று கருத்து. "**கீடா: ஸமஸ்தா: ஸுரா: த்3ருஷ்டே யத்ர**" [முகுந்த3மாலை 19] [எவனைக் காணும்போது எல்லா தே3வர்களும் புழுக்களை ஒத்தவர்களோ] என்று சொல்லப் பட்டதன்றோ. (ஜக3த்பதே!) லோகஸ்வாமியே! 'பூ4தேஶ' 'ஜக3த்பதே' எனும் பத3ங்களுக்குப் புனருக்தி ஏற்படாமைக்காக அவை முறையே உலகை நியமிப்பவன், உலகத்திற்கு ஸ்வாமி என்று

अतीत्य वर्तन्ते, तथा तानि सर्वाणि दैवतान्यपि तैस्तैर्गुणैरतीत्य वर्तमान!, जगत्पते — जगत्स्वामिन् ! ॥ १५ ॥

वक्तुमर्हस्यशेषेण दिव्या ह्यात्मविभूतयः ।
याभिर्विभूतिभिर्लोकानिमांस्त्वं व्याप्य तिष्ठसि ॥

16. **வக்துமர்ஹஸ்யஶேஷேண தி₃வ்யா ஹ்யாத்மவிபூ₄தய: ।
யாபி₄ர்விபூ₄திபி₄ர்லோகாநிமாம்ஸ்த்வம் வ்யாப்ய
திஷ்ட₂ஸி ॥**

யாபி₄: விபூ₄திபி₄:—எந்த நியமன விஶேஷங்களோடு கூடியவனாய், **இமாந் லோகாந்** — இந்த உலகங்களை, **த்வம்** — நீ, **வ்யாப்ய திஷ்ட₂ஸி** — வியாபித்து விளங்குகிறாயோ, **தி₃வ்யா: ஆத்மவிபூ₄தய: (யா:)**—எந்த அற்புதமான நியமனவிஶேஷங்கள் உனக்கே உரியவையோ, **(தா:)**—அவைகளை, **அஶேஷேண வக்தும் அர்ஹஸி ஹி**— ஒன்றொழியாமல் நீயே வெளிப்படுத்தவேணும்.

---

17. **எந்த விபூதிகளா லிவ்வுலகெங் கும்பரந்தே
பந்தமுற நிற்கின்ற பண்பினை நீ—யந்தவகை
திவ்வியமா கச்சேர் விபூதிகளைத் தீர்ந்தனைத்துஞ்
செவ்வியுட னேயெனக்குச் செப்பு.**

பொருள்கொள்ளப்பட்டது. 'பதி' ஶப்₃த₃ம் 'ரக்ஷகன்' என்று காட்டுமானாலும் 'ஸ்வாமி' என்னும் பொருளில் ரூடி₄யை (பிரஸித்₃தி₄யை) உடையது. "பூ₄தப₄ாவந பூ₄தேஶ தே₃வதே₃வ ஜக₃த்பதே" என்னும் நாலு சொற்களும் "ஸ காரணம் கரணாதி₄பாதி₄ப:" [ஶ்வே 6-8] [அந்த ஜக₃த்காரணனே இந்த்₃ரியங்களுக்கு அதி₄பதியான ஜீவனுக்கு அதி₄பதி.] "தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் தம் தை₃வதாநாம் பரமம் ச தை₃வதம்। பதிம் பதீநாம் பரமம் பரஸ்தாத் விதா₃ம தே₃வம் பு₄வநேஶமீட்₃யம் ॥" [ஶ்வே 6-7] [ஈஶ்வரர்களுக்கெல்லாம் மேலான மஹேஶ்வரனும், தே₃வதைகளுக்கெல்லாம் மேலான தே₃வனும், ஸ்வாமிகளுக்கெல்லாம் மேலான ஸ்வாமியும், தனக்கு மேலில்லாதவனும், லோகநியந்தாவும், துதிக்கத்தக்கவனும், ப்ரக்ருதிமண்ட₃லத்திற்கு அப்பாற்பட்டவனுமான தே₃வனை அறியக்கடவோம்.] என்று ஶ்வேதாஶ்வதர உபநிஷத்தில் காட்டப்பட்ட நாலு பெருமைகளும் கண்ணனுக்கே உரியவை என்று விளக்குகின்றன. ஆக, இவ்விரண்டு ஶ்லோகங்களாலும் எவராலும் கண்ணனின் பெருமையை அறியமுடியாது என்றும், புருஷோத்தமனான கண்ணன்தன்னாலேயே தன் பெருமையை அறியமுடியும் என்றும் காட்டப்பட்டதாயிற்று. 15.

॥ भा ॥ दिव्याः त्वदसाधारण्यो विभूतयो याः, तास्त्वमेवाशेषेण वक्तुमर्हसि—त्वमेव व्यञ्जयेत्यर्थः। याभिरनन्ताभिर्विभूतिभिः—

எந்த விபூதிகளால்—எந்த நியமன விசேஷங்களால், **இவ்வுலகெங்கும் பரந்தே** — இவ்வுலகெங்கும் வியாபித்து, **பந்தம் உற நிற்கின்ற பண்பினை நீ**—இவ்வுலகோடு உனக்குள்ள உறவு தோற்றும்படி நிற்கும் தன்மையுடையவனாய் நீ விளங்குகிறாயோ. **அந்த வகை**—அத்தகைய பெருமையை உடையவையாய், **திவ்வியமாகச் சேர் விபூதிகளை அனைத்தும்** — அற்புதமாயிருக்கும் நியமனவிசேஷங்களனைத்தையும், **தீர்ந்து செவ்வியுடனே எனக்குச் செப்பு**—உறுதியுடன் நன்றாக எனக்குச் சொல்லுவாயாக.

---

16. நீ உலகனைத்தையும் வியாபித்து நிற்பதற்கு உறுப்பான அற்புதமான உனது நியமன விசேஷங்களனைத்தையும் எனக்குச் சொல்லுவாய் என்கிறான். (தி₃வ்யா: யா: ஆத்மவிபூ₄தய:) அற்புதமானவையாய் உனக்கே உரியவையான எந்த நியமனவிசேஷங்கள் உள்ளனவோ. (தா: அசேஷேண வக்தும் அர்ஹஸி ஹி) அவைகளை ஒன்றொழியாமல் ஸர்வஜ்ஞனான நீயே சொல்லவேணும். 'ஆத்ம விபூ₄தய:' என்பது முதல்வேற்றுமையாயிருக்கையாலே 'யா:' 'தா:' என்னும் பத₃ங்களை வருவித்துக்கொண்டு பொருளுரைக்கப்பட்டது. அன்றிக்கே, (ஆத்மவிபூ₄தய: தி₃வ்யா ஹி) உனது நியமன விசேஷங்கள் அற்புதமானவையன்றோ. ஆகையால் அவை அவசியம் சொல்லத்தக்கவை. அதனால் நீ அவற்றை ஒன்றொழியாமல் சொல்ல வேணும் என்று வாக்யபே₄த₃ம் செய்தும் பொருள்கொள்ளலாம். (வக்தும் அர்ஹஸி) நீயே வெளிப்படுத்தவேணும். ஈஶ்வரனாயிருந்த போதிலும் முழுவதும் உன்னால் சொல்லுவதற்கும், என்னால் கேட்பதற்கும் இயலாதாகையால், வார்த்தைகளாலும் உன் அருளாலும் நான் அறியலாம்படி நீ எனக்குக் காட்டவேணும் என்று கருத்து. (யாபி₄: விபூ₄திபி₄:) எந்த அளவற்ற நியமனவிசேஷங்களோடு கூடியவனாய். 'விபூ₄தய:' 'விபூ₄திபி₄:' என்னும் பன்மையாலும், 'அசேஷேண' என்னும் பத₃த்தினாலும் இவனுடைய நியமன விசேஷங்கள் அளவற்றவை என்று உணர்த்தப்படுகிறது. **''நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே''** [19] என்று அடுத்தபடி தனது விபூ₄திகளுக்கு எல்லையில்லை என்று இவனே கூறப்போகிறானன்றோ. (விபூ₄திபி₄:) நியமன விசேஷங்களாலே. ஏழாவது ஶ்லோகத்தின் வியாக்கியானத்தில் (பக்கம் 594, 595) விபூ₄திஶப்₃த₃ம் நியமனத்தைக் காட்டும் என நிரூபிக்கப்பட்டது. மேல் ஶ்லோகங்களிற்

यैर्नियमनविशेषैर्युक्तः इमान् लोकांस्त्वं नियन्तृत्वेन व्याप्य तिष्ठसि ॥ १६ ॥

போலே விபூ4திகளைக் குறிக்கும் பத3ங்களோடு ப4க3வானுடைய திருநாமங்களை ஒரே வேற்றுமையில் படி2க்காததால், அங்கு போலே இங்கு நியமிக்கப்படும் பொருள்களை விபூ4திஶப்3த3ம் குறிக்க இடமில்லை. நியமிக்கப்படும் பொருள்கள் பலவற்றை அறிய வேண்டும் எனும் ஆசை அர்ஜுனனுக்கு மிக்கிருப்பதால், இங்கு விபூ4திஶப்3த3த்திற்கு நியமன விஶேஷம் (நியமனமிகுதி) என்று பொருள் கொள்ளப்பட்டது. (யாபி4ர் விபூ4திபி4:) எந்த நியமன விஶேஷங்களோடு கூடியவனாய். உபகரணங்களை எதிர்பாராமல் அனைத்தையும் வியாபிப்பவனாக எம்பெருமான் இருக்கையாலே, இங்கு 'விபூ4திபி4:' என்றவிடத்தில் மூன்றாவது வேற்றுமைக்குக் கரணம் முதலான பொருள்கள் பொருந்தமாட்டா; ஆகையால், "**இத்த2ம் பூ4த லக்ஷணே த்ருதீயா**" [இத்துடன் கூடியது என்னும் பொருளில் மூன்றாவது வேற்றுமை வழங்கத்தக்கது] எனும் இலக்கண வழக்கையொட்டி, "நியமன விஶேஷங்களோடு கூடியவனாய்"என்று பொருள்கொள்ளப்பட்டது. (யாபி4ர் விபூ4திபி4: த்வம் இமாந் லோகாந் வ்யாப்ய திஷ்ட2ஸி) எந்த நியமன விஶேஷங்களோடு கூடியவனாய் இவ்வுலகங்கள் அனைத்தையும் நீ வியாபித்து விளங்குகிறாயோ; இங்கு விபூ4திஶப்3த3த்திற்கு 'நியமிக்கப்படும் பொருள்கள்' என்று பொருள்கொள்ளப் பார்த்தால், அரசமரம் முதலான அப்பொருள்கள் எம்பெருமான் வியாபித்திருப்பதற்கு உறுப்பானவையல்லவாகையால் பொருந்தாது. அரசமரம் முதலானவற்றோடு கூடிய எம்பெருமான் பொருள்களை வியாபிக்கிறான் என்றும் கூறமுடியாது. அரசமரம் முதலான நியாம்யப் பொருள்கள் விஷயத்தில் "**இத்த2ம் பூ4த லக்ஷணே த்ருதீயா**" எனும் இலக்கண வழக்கும் ஒட்டாது; அப்படிப் பொருள்கொள்வதில் பயனில்லையன்றோ. "நியமனவிஶேஷங்களோடு கூடியவனாய் எம்பெருமான் அனைத்தையும் வியாபிக்கிறான்" எனக்கூறுவதில், "ஆகாஶம் முதலானவற்றைப் போன்ற வெறும் வியாப்தியன்று இது; நியமிப்பதற்காக ஏற்பட்ட வியாப்தியே இது" எனும் விஶேஷார்த்த2ம் ஸித்3தி4க்கையாகிற பெரும்பயன் உள்ளது. "**அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம்**" [யஜு-ஆரண்ய 3-10] [பரமபுருஷன் அனைத்தையும் உள்நுழைந்து நியமிக்கிறான்] "**அந்தரோ யமயதி; அந்தர்யாம்யம்ருத:**" [ப்3ருஹ 5-7] என்று இவ்வர்த்த2ம் வேத3ங்களிலும் கூறப்பட்டதன்றோ. (வ்யாப்ய திஷ்ட2ஸி) வியாபித்துநிற்கிறாய். இத்தால் "**யச்ச கிஞ்சித் ஜக3த்யஸ்மிந் த்3ருஶ்யதே ஶ்ரூயதேऽபி வா। அந்தர்ப3ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி2த:**" [இவ்வுலகில் காண்பனவும், கேட்பனவுமான எல்லாப்பொருள்களிலும் உள்ளும்புறமும் வியாபித்து நிற்கிறான் நாராயணன்] என்று உபநிஷத்தில் ஓதப்பெற்றவன் இக்கண்ணனே எனக் காட்டுகிறான் அர்ஜுனன். 16.

कथं विद्यामहं योगी त्वां सदा परिचिन्तयन्।
केषु केषु च भावेषु चिन्त्योऽसि भगवन्मया॥१७॥

17. கத2ம் வித்3யாமஹம் யோகீ3 த்வாம் ஸதா3 பரிசிந்தயந்।
கேஷு கேஷு ச ப4ாவேஷு சிந்த்யோऽஸி ப4க3வந் மயா॥

ப4க3வந்—நற்கு3ணக்கடலான எம்பெருமானே! **யோகீ3 அஹம்**—ப4க்தியோக3நிஷ்ட2னான நான், **த்வாம்**—உன்னை, **ஸதா3**—எப்போதும், **பரிசிந்தயந்**—சிந்திக்கமுற்பட்டவனாய், **(த்வாம்**—உன்னை**) கத2ம் வித்3யாம்**—எப்படி அறிவேன்? **கேஷு கேஷு ச ப4ாவேஷு**—(முன் சொல்லாத**)** எந்த எந்தப் பொருள்களில், **மயா**—என்னால், **சிந்த்யঃ அஸி**—**(**அவற்றை நியமிப்பவனாக**)** நினைக்கத்தக்கவனாகிறாய்?

---

18. எவ்வாறு யோகியெனக் குன்னை நினைந்துநினைந்
தவ்வாறு நானறிவ னாதியா—யிவ்வாறு
மெவ்வெவையா நற்பொருளி லெக்குணமு மிக்கவுனைச்
செவ்வழியாற் சிந்திப்பன் சேர்ந்து.

ஆதியாய்—ஆதிப்பிரானே! **யோகி எனக்கு**—ப4க்தி யோக3த்தை அநுஷ்டி2க்கும் எனக்கு (விளங்கும்படியாக) **உன்னை நினைந்து நினைந்து**—உன்னை எப்போதும் சிந்திக்க முற்பட்டவனாய், **அவ்வாறு உன்னை எவ்வாறு நான் அறிவன்**-அத்தகைய பெருமையுடைய உன்னை எப்படி நான் அறிவேன்? **இவ்வாறும் எவ்வெவையாம் நற்பொருளில்**—முன் சொன்ன சில பொருள்களைப்போன்ற எந்த **எந்த உண்மை**யான பொருள்களில், **எக்குணமும் மிக்க உனை**—எல்லாக் கல்யாணகு3ணங்களும் நிறைந்த **உன்னை**, **செவ்வழியால் சேர்ந்து சிந்திப்பன்** — ப4க்தியோக3மாகிற நல்ல **வழியால்** பொருந்திச் சிந்திப்பேன்?

---

17. ப4க்தியோக3நிஷ்ட2னான நான் உன்னை எப்போதும் சிந்திக்கின்றவனாய், எந்த எந்தப் பொருள்களில் அந்தர்யாமியாக இருப்பவனாக உன்னைச் சிந்திக்கவேண்டும் என்று கேட்கிறான். (அஹம் யோகீ3) நான் ப4க்தியோக3த்தை அநுஷ்டி2யாநிற்பவனாய்.

॥भा॥ अहं योगी—भक्तियोगनिष्ठस्सन् भक्त्या त्वां सदा परिचिन्तयन्—चिन्तयितुं प्रवृत्तः चिन्तनीयं त्वां परिपूर्णैश्वर्यादि-

---

இந்த ப்ரகரணம் ப₄க்தியோக₃த்தைப் பற்றியதாகையாலும், '**த்வாம் ஸதா₃ பரிசிந்தயந்**' என்று எம்பெருமானை எப்போதும் சிந்திப்பதாகிற ப₄க்தியே அடுத்தபடி சொல்லப்படுகிறதாகையாலும் இங்கு 'யோகி₃' ஶப்₃த₃ம் ப₄க்தியோக₃நிஷ்ட₂னைக் குறிக்கிறது. எம்பெருமானைச் சிந்திக்கின்றவனாக அர்ஜுனன் அடுத்தபடி தன்னைக் கூறுகையாலே, ப₄க்தியோக₃ம் நிறைவடையப் பெற்றவனல்லன் இவன் என்றும் விளங்குகிறது. அதனாலேயே 'யோகீ₃' என்ற சொல்லுக்கு '**ப₄க்தியோக₃நிஷ்ட₂ஸ் ஸந்**' [ப₄க்தியோக₃த்தை அநுஷ்டி₂யாநிற்பவனாய்] என்று பா₄ஷ்யமிடப்பட்டது. இங்கு '**யோகிந்**' (யோகி₃யாகிய கண்ணனே!) என்று சிலர் பாட₂ம் கொள்வது கீ₃தை ப்ரதிகளில் இல்லாதது (அநார்ஷம்) என்று தாத்பர்யசந்த்₃ரிகை. (த்வாம் ஸத₃ா பரிசிந்தயந்) ப₄க்தியோடு உன்னை எப்போதும் சிந்திக்கத் தொடங்கியவனாய். எப்போதும் சிந்திப்பதாகக் கூறுகையாலே ப₄க்தியுடன் சிந்திக்கிறான் என்று விளங்குகிறது. அறிவதற்கு முன்னால் சிந்திக்கமுடியாதாகையால் '**கத₂ம் வித்₃யாம்**' (எப்படி அறிவேன்) என்று சொல்லப்பட்ட அறிவு சிந்தனத்துக்கு ஹேதுவாகிறது. அதனாலேயே ''**லக்ஷணஹேத்வோ: க்ரியாயா:**'' [அஷ்டா 3-2-126] என்கிற பாணினிஸூத்ரத்தின்படி ஹேதுப்பொருளில் 'ஶத்ரு' ப்ரத்யயம் வந்திருக்கிறதாகையால் 'பரிசிந்தயந்' என்றதற்கு 'சிந்திக்கத் தொடங்கியவனாய்' என்று பொருள்கொள்ளப்பட்டது. (த்வாம் கத₂ம் வித்₃யாம்) நிறைந்த ஐஶ்வர்யம் முதலான கல்யாணகு₃ணக₃ணங்களையுடைய உன்னை எப்படி அறிவேன்? உன்னை எப்படி அறிந்தால், உன்னை எப்போதும் சிந்திக்கையாகிற ப₄க்தியோக₃த்தைப் பயின்று, அந்த யோக₃ம் நிறைவடையப் பெற்றவனாகமுடியும் என்று கருத்து. ''**த்வாம் கத₂ம் வித்₃யாம்**'' (உன்னை எப்படி அறிவேன்?) என்னும் தொடரில் '**த்வாம்**' எனப்படும் கண்ணன் அறியப்பட்டவனாகையாலே, இங்கு கேள்வி அவனது கல்யாணகு₃ணங்களைப் பற்றியதேயாகவேண்டும். அதனாலேயே ''**பரிபூர்ணைஶ்வர்யாதி₃கல்யாணகு₃ணக₃ணம் கத₂ம் வித்₃யாம்**'' [நிறைந்த ஐஶ்வர்யம் முதலான கல்யாணகு₃ணக₃ணங்களை உடைய உன்னை எப்படி அறிவேன்?] என்று பா₄ஷ்யமிடப்பட்டது. (கேஷு கேஷு ச பா₄வேஷு மயா சிந்த்யோஸி) எந்த எந்தப் பொருள்களில் அவற்றை நியமிப்பவனாக நீ என்னால் நினைக்கத்

कल्याणगुणगणं कथं विद्याम्? पूर्वोक्तबुद्धिज्ञानादिभावव्यतिरिक्तेष्वनुक्तेषु केषु केषु च भावेषु मया नियन्तृत्वेन चिन्त्योऽसि॥१७॥

विस्तरेणात्मनो योगं विभूतिं च जनार्दन।
भूयः कथय तृप्तिर्हि शृण्वतो नास्ति मेऽमृतम्॥१८॥

18. விஸ்தரேணுத்மநோ யோக$_3$ம் விபூ$_4$திம் ச ஜநார்த்த$_3$ந ।
பூ$_4$ய: கத$_2$ய த்ருப்திர்ஹி ஶ்ருண்வதோ நாஸ்தி
மே஽ம்ருதம் ॥

ஜநார்த்த$_3$ந ! — ஜனர்த்த$_3$னனே ! **ஆத்மந:** — உன்னுடைய, **யோக$_3$ம்** — கல்யாணகு$_3$ணச் சேர்த்தியையும், **விபூ$_4$திம் ச** — நியமனத்தையும், **பூ$_4$ய:** — மறுபடியும், **விஸ்தரேண கத$_2$ய** —விரிவாகச் சொல்லுவாய். **அம்ருதம் ஶ்ருண்வத:**—உன்னுடைய பெருமையாகிற அமுதைக் கேட்கின்ற, **மே** —எனக்கு, **த்ருப்தி:**—கேட்டது போதும் என்னும் எண்ணம், **நாஸ்தி ஹி**—இல்லையன்றே.

---

19. உன்னுடைய யோகத் தியல்வும் விபூதியதும்
பன்னிவிரித் தீசா பகரின்ன(ம்)—நின்னியலுஞ்
சீரமுத வெள்ளஞ் செவியாற் பருகுமெனக்
காரவிர கில்லை யமைந்து.

தக்கவனுகிருய். "பு$_3$த்$_3$தி$_4$ர்ஜ்ஞாநமஸம்மோஹ:.........ப$_4$வந்தி ப$_4$ாவா பூ$_4$தாநாம் மத்த ஏவ ப்ருத$_2$க்$_3$வித$_4$ா:" [10-4,5] என்று இவ்வத்தியாயத்தில் ஏற்கனவே சொல்லப்பட்ட பொருள்களைத் தவிர மேலும் எந்த எந்தப் பொருள்களில் அவற்றை நியமிப்பவனுக நீ சிந்திக்கத் தக்கவனுகிருய் என்று கருத்து. கேள்வியானது—தெரியாத விஷயத்தைப் பற்றித்தானே இருக்கவேண்டும். "ப$_4$ாவேஷு சிந்த்ய:" "ப$_4$வந்தி ப$_4$ாவா:" என்று இரண்டு இடங்களிலும் 'ப$_4$ாவ' ஶப்$_3$த$_3$ம் வழங்கப்பட்டிருப்பதால் இரண்டும் ஒரே பொருளைப்பற்றிப் பேசுகின்றன என விளங்குகிறது. 'ப$_4$ாவேஷு' என்ற ஏழாம் வேற்றுமையிலிருந்தும், ப்ரகரணத்திலிருந்தும் 'நியமிப்பவனுகச் சிந்திக்கத் தக்கவனுகிருய்' என்னும் பொருள் தேறுகிறது. (ப$_4$க$_3$வந்) தாழ்வுகள் எதுவும் அற்றவனுய், ஜ்ஞானம் முதலான எல்லாக் கல்யாணகு$_3$ணங்களையும் உடைய நீயே அறிவொன்றுமில்லாத எனக்கு இதை உணர்த்தவேண்டும் என்று கருத்து. 17.

॥भा॥ *अहं सर्वस्य प्रभवो मत्तस्सर्वं प्रवर्तते (१०. ८) इति संक्षेपेणोक्तं तव स्रष्टृत्वादियोगं, विभूति—नियमनं च, भूयो

ஈசா!—எம்பெருமானே! **உன்னுடைய யோகத்து இயல்வும்**—உன்னுடைய கல்யாணகு₃ணச்சேர்த்தியின் பெருமையையும், **விபூதி அதும்**—முற்கூறப்பட்ட நியமனத்தையும், **பன்னி விரித்து இன்னம் பகர்**—மிக விரிவாக மறுபடியும் சொல்லுவாய். **நின் இயலும் சீர் அமுதவெள்ளம்**—உன்னுடைய கு₃ணப்பெருமைகளாகிற அமுதவெள்ளத்தை, **செவியால் பருகும் எனக்கு**—காதால் பருகுகின்ற எனக்கு, **அமைந்து ஆர விரகில்லை**—திருப்தியுடன் இருக்க வழியில்லை.

---

18. ஏற்கனவே சுருங்கச் சொன்ன கல்யாண கு₃ணச்சேர்த்தியையும், நியமனத்தையும் விரிவாகச் சொல்லும்படி வேண்டுகிறுன் அர்ஜுனன். (ஜநார்த்த₃ந!) அநுகூலஜனங்களால் தத்தம் விருப்பங்களைத் தரும்படி யாசிக்கப்படுகிறவனே! என்று பொருள். இங்கு தன்னுடைய விருப்பமும் நிறைவேறவேண்டும் என்னும் கருத்திலே அர்ஜுனன் இச்சொல்லை வழங்கியிருப்பதாகக் கொள்ளலாம். ப்ரதிகூல ஜனங்களுக்கு நரகம் முதலானவற்றை அடைவிப்பவனே! என்னும் பொருளும் இதற்கு உண்டு. எனது தடைகளைப் போக்கவேண்டும் என்று கருத்து. (ஆத்மந: யோக₃ம் விஸ்தரேண பூ₄ய: கத₂ய) உனது கல்யாண கு₃ணச்சேர்த்தியை விரிவாக மறுபடி சொல்லுவாய். "**அஹம் ஸர்வஸ்ய ப்ரப₄வோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே**" [கீ₃தை 10-8] [நானே எல்லாப் பொருள்களுக்கும் உத்பத்தி காரணமாயிருக்கிறேன். என்னுலேயே எல்லாம் செயல்படுகிறது.] என்று சுருக்கமாகச் சொல்லப்பட்ட என்னுடைய ஸ்ரஷ்ட்ருத்வம், ஈஶ்வரத்வம், ஸௌஶீல்யம், வாத்ஸல்யம், ஸௌந்த₃ர்யம் முதலான கல்யாண கு₃ணங்களின் சேர்த்தியாகிற யோக₃த்தை மறுபடியும் விரிவாகச் சொல்லுவாய் என்று கருத்து. (ஆத்மந: விபூ₄திம் ச பூ₄ய: விஸ்தரேண கத₂ய) உனது நியமனமாகிற விபூ₄தியையும் (செல்வத்தையும்) ஏற்கனவே சொல்லப்பட்டதைக் காட்டிலும் விரிவாக மறுபடியும் சொல்லுவாய். விரிவாகக் கேட்கைக்குக் காரணத்தைக் கூறுகிறுன் ஶ்லோகத்தின் எஞ்சிய பகுதியாலே: (அம்ருதம் ஶ்ருண்வத: மே) நீ திருவாய்மலர்ந்து அருளிச்செய்யும் அமுதில் இனிய உன் பெருமைகளைக் கேட்கும் எனக்கு. (அம்ருதம்) அமுதகிரணுன

विस्तरेण कथय। त्वयोच्यमानं त्वन्माहात्म्यामृतं शृण्वतो मे तृप्तिर्नास्ति हि; ममातृप्तिस्त्वयैव विदितेत्यभिप्रायः॥ १८॥

श्रीभगवानुवाच—

हन्त ते कथयिष्यामि विभूतीरात्मनश्शुभाः।
प्राधान्यतः कुरुश्रेष्ठ नास्त्यन्तो विस्तरस्य मे॥ १९॥

ஶ்ரீப₄க₃வாநுவாச—

19. ஹந்த தே கத₂யிஷ்யாமி விபூ₄தீராத்மநஶ்ஶுப₄ா:।
ப்ராத₄ாந்யத: குருஶ்ரேஷ்ட₂ நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே ॥

குருஶ்ரேஷ்ட₂!—குருகுலத்தலைவனே! **ஆத்மந:**—என்னுடைய, **ஶுப₄ா:**—மங்க₃ளமான, **விபூ₄தீ:**—செல்வங்களை, **ப்ராத₄ாந்யத:**—குறிப்பாகச் சிறப்புடையவற்றை, **தே**—உனக்கு, **கத₂யிஷ்யாமி ஹந்த!**—சொல்லுகிறேன் கேளாய்! **மே**—எனது செல்வங்களின், **விஸ்தரஸ்ய**—விரிவுக்கு, **அந்த: நாஸ்தி**—முடிவு இல்லை.

சந்திரனிடமிருந்து வெளிப்படும் அமுதத்தைக் காட்டிலும் உனது திருமுகச்சந்திரனிடமிருந்து வெளிவரும் சொற்களாகிய அமுதம் மிகச் சிறந்ததன்றோ என்று கருத்து. (த்ருப்திர் நாஸ்தி ஹி) இவ்வமுதத்தைச் செவிகளாலே பருகுவதில் எனக்கு த்ருப்தியில்லையன்றோ. ''**செவிகளாலார நின் கீர்த்திக் கனி என்னும் கவிகளே, காலப்பண்தேன் உறைப்பத்துற்று, புவியின்மேல் பொன்னெடுஞ் சக்கரத்து உன்னையே, அவிவின்றி ஆதரிக்கும் எனதாவியே**'' [திருவாய் 3-8-6] என்ற அருளிச்செயல் இங்கு அநுஸந்தி₄க்கத் தக்கது. 'ஹி' ஶப்₃த₃ம் ''உன்னுடைய பெருமைகளாகிற அமுதத்தைப் பருகுவதில் எனக்கு த்ருப்தியில்லை என்பது உனக்கே தெரியுமன்றோ'' என்னும் கருத்தையுடையது. ஆக, 12 முதல் 18 ஈறான இவ்வேழு ஶ்லோகங்களில் முதல் நான்கு ஶ்லோகங்களாலே கண்ணன் ஏற்கனவே சுருங்கச் சொன்ன அர்த்த₂ங்களில் தனக்குள்ள நம்பிக்கையையும், அஸூயையின்மையையும் காட்டி, பின்மூன்று ஶ்லோகங்களாலே அவ்வர்த்த₂ங்களை விரிவாகச் சொல்லும்படி அர்ஜுனன் வேண்டிக் கொண்டானாயிற்று. 18.

॥भा॥ हे कुरुश्रेष्ठ! मदीयाः कल्याणीर्विभूतीः प्राधान्यतस्ते कथयिष्यामि। प्राधान्यशब्देन उत्कर्षो विवक्षितः; *पुरांधसां च मुख्यं

20. இன்னே விசய னியம்ப விறையுரைத்தான்
மன்னே யுனக்கு மகிழ்ந்துரைக்கே—னென்னேர்
பரப்பிற்கோ ரெல்லையில்லை பாரவி பூதி
நிரப்பிற் றரத்தவைகே ணீ.

இன்னே விசயன் இயம்ப — இவ்வாருக அர்ஜுனன் கூற, **இறை** — கண்ணன், **உரைத்தான்** — சொன்னுன்— **மன்னே** — குருகுலத்தரசனே! **உனக்கு மகிழ்ந்து உரைக்கேன்**— உனக்கு மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். **பார விபூதி நிரப்பில் தரத்தவை** — சிறந்த செல்வங்களில் மிகச்சிறப்புற்ற பெருமையையுடைய சிலவற்றை, **நீ கேள்**-நீ கேட்பாயாக. **என் நேர் பரப்பிற்கு** — எனக்குப் பொருந்தியுள்ள செல்வங்களுக்கு. **ஓர் எல்லை இல்லை**—ஓர் எல்லை கிடையாது.

19. இவ்வண்ணமாக, ஆராவமுதான தன்னுடைய பெருமைகளைப் பருகவேண்டும் என்று ஆசையை அறிவித்த அர்ஜுனனைக் குறித்து மிகவுகந்த கண்ணன் அவனது குலப்பெருமையைக் கூறி விளிப்பதன்மூலம் அவனுடைய தகுதியைக் காட்டிக்கொண்டு, தனது விபூ$_4$திகளை ஒவ்வொன்ருக விரிவாக வர்ணிப்பதும், கேட்பதும் இயலாதாகையால் முக்கியமானவற்றைச் சுருக்கமாக வகைப்படுத்திக் கூறுவதாக ப்ரதிஜ்ஞைசெய்கிருன். (குருஶ்ரேஷ்ட$_2$!) குருகுலத் தலைவனே! இவனது நற்குடிப்பிறப்பு இந்த விஷயத்தைக் கேட்பதற்குரிய தகுதியைக் காட்டுகிறது என்று கருத்து. (தே) உனக்கு. நற்குடிப்பிறப்போடு நில்லாமல், எனது பெருமையில் பொருமையில்லாமை, அதில் ஈடுபடுகை, அதை எவ்வளவு அநுப$_4$வித்தாலும் திருப்தியில்லாமை முதலான கு$_3$ணங்களாலும் நிறைந்திருக்கும் உனக்கு என்று கருத்து. (ஆத்மநः ஶுப$_4$ாः விபூ$_4$தீः ப்ராத$_4$ாந்யதः கத$_2$யிஷ்யாமி) என்னுடைய மங்க$_3$ளமான விபூ$_4$திகளில் உயர்வாலே முக்கியத்துவம் பெற்ற சிலவற்றைக் கூறுகிறேன். 'ப்ராத$_4$ாந்ய' ஶப்$_3$த$_3$த்துக்குத் தலைமைபெற்றிருக்கை முதலான பொருள்கள் மேலே எடுக்கப்போகும் எல்லாவிஷயங்களுக்கும் பொருந்தாவாகையால் உயர்வால் ஏற்பட்ட முக்கியத்துவத்தையே இங்கு ப்ராத$_4$ாந்ய

माम् (२४) इति हि वक्ष्यते। जगत्युत्कृष्टाः काश्चन विभूतीर्वक्ष्यामि, विस्तरेण वक्तुं श्रोतुं च न शक्यते, तासामानन्त्यात्। विभूतित्वं नाम नियाम्यत्वम्, सर्वेषां भूतानां बुद्ध्यादयः पृथग्विधा भावा मत्त एव भवन्तीत्युक्त्वा * एतां विभूतिं योगं च मम यो वेत्ति तत्त्वतः (७)

ஶப்3த3ம் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். "**புரோத4ஸாம் ச முக்2யம் மாம் வித்3தி4 பார்த்த2 ப்3ருஹஸ்பதிம்**" [10-24] [பார்த்த2னே! புரோஹிதர்களுள் உயர்வுபெற்றவரான ப்3ருஹஸ்பதியாக என்னை அறிவாய்] என்று உயர்வாலே முக்கியத்துவம் பெற்றவர்களையே இங்கு விபூ4திகளாகக் காட்டினானன்றோ. "இவ்வுலகில் உயர்வு பெற்ற சில விபூ4திகளை (செல்வங்களை)க் கூறுகிறேன். அவற்றைத் தனித்தனியாக விரிவாகச் சொல்லுவதற்கும் கேட்பதற்கும் இயலாது" என்று திரண்டபொருள். "விரிவாகச் சொல்லுவாய்" என்று கேட்கிற அர்ஜுனனைக் குறித்து "முக்கியமானவற்றைக் கூறுகிறேன்" என்று சொல்லலாமோ? என்னும் ஶங்கைக்குப் பரிஹாரத்தைக் கடைசிப் பாத3ம் கூறுகிறது—(நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே) என்னுடைய விபூ4திகளின் விரிவுக்கு எல்லையில்லையன்றோ. ஆகவே முக்கியமானவற்றையே கூறமுடியும் என்று கருத்து. "**நாந்தோऽஸ்தி ..... விபூ4தேர் விஸ்தரோ மயா**" [10-40] என்று இவ்வத்தியாயத்தின் இறுதிப் பகுதியிலுள்ள ஶ்லோகத்திலும் இதையே கூறுகிறானன்றோ. இந்த ஶ்லோகத்தில் உள்ள 'விபூ4தி' ஶப்3த3ம் எம்பெருமானால் நியமிக்கப்படும் பொருள்களைக் கூறுகிறது. மேல் ஶ்லோகங்களில் எடுக்கப்படும் பொருள்களும் நியமிக்கப்படும் வஸ்துக்களாகவே இருக்கின்றனவன்றோ. விஷ்ணுபுராணத்திலும் "**ப்3ரஹ்மா த3க்ஷாத3ய: கால:**" [வி.பு 1-22-31], "**விஷ்ணுர் மந்வாத3ய: கால:**" [ஷை 32], "**ருத்3ர: காலாந்தகாத்3யாஶ்ச**" [ஷை 33] என்று தொடங்கும் மூன்று ஶ்லோகங்களில் முறையே ஸ்ருஷ்டி ஸ்தி2தி ஸம்ஹாரங்களுக்கு உறுப்பாக எம்பெருமானால் நியமிக்கப்படும் பொருள்களைக் கூறி, "**ஜநார்த்த3ந விபூ4தய:**" [ஷை 33] என்று இவையனைத்தைக் குறித்தும் 'விபூ4தி' ஶப்3த3ம் வழங்கப்பட்டதன்றோ. கீ3தையில் இவ்வத்தியாயத்திலும் 4, 5, 6 ஶ்லோகங்களில் பு3த்3தி4, ஜ்ஞானம் முதலான பலவகைப்பட்ட பொருள்கள் அனைத்தும் தன்னிடமிருந்தே உண்டாகின்றன என்று கூறி, அடுத்துள்ள ஶ்லோகத்தில் "**ஏதாம் விபூ4திம் யோக3ம் ச மம யோ வேத்தி தத்த்வத:**" [10-7] என்று ப4க3வானால் நியமிக்கப்படும் முற்கூறிய பொருள்களை 'ஏதத்' ஶப்3த3த்தாலே எடுத்து அவை விஷயத்தில் 'விபூ4தி' ஶப்3த3ம் வழங்கப்

इति प्रतिपादनात्। तथा तत्र योगशब्दनिर्दिष्टं स्रष्टृत्वादिकं विभूतिशब्द-निर्दिष्टं तत्प्रवर्त्यत्वमिति ह्युक्तम्। (पुनश्च) * अहं सर्वस्य प्रभवो मत्तस्सर्वं प्रवर्तते। इति मत्वा भजन्ते मां बुधा भावसमन्विताः॥ (८) इति॥ १९॥

பட்டதன்றோ. அவ்விடத்தில்—அனைத்தையும் படைப்பவனாயிருக்கை, ஸௌசீல்யம், வாத்ஸல்யம் முதலான தி$_3$வ்யாத்மகு$_3$ணங்களையும், ஸௌந்த$_3$ர்யம் முதலான தி$_3$வ்யமங்க$_3$ளவிக்$_3$ரஹகு$_3$ணங்களையும் 'யோக$_3$' ஶப்$_3$த$_3$த்திற்குப் பொருளாகவும், எம்பெருமானால் நியமிக்கப் படும் செல்வங்களை 'விபூ$_4$தி' ஶப்$_3$த$_3$த்திற்குப் பொருளாகவும் வ்யாக்$_2$யானம் செய்யப்பட்டதன்றோ. அடுத்துள்ளதான "**அஹம் ஸர்வஸ்ய ப்ரப$_4$வோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே। இதி மத்வா ப$_4$ஜந்தே மாம் பு$_3$த$_4$ா பா$_4$வஸமந்விதா: ॥**" [8] என்னும் ஶ்லோகத்திலும் இவ்வர்த்த$_2$ம் வலியுறுத்தப்பட்டதன்றோ. இங்குள்ள ஶ்லோகங்கள் சிலவற்றில் யோக$_3$ஶப்$_3$த$_3$த்துக்கு ஸ்ரஷ்ட்ருத்வம் முதலானவற்றையும், மற்றும் சிலவற்றில் ஸௌசீல்யம், வாத்ஸல்யம், ஸௌந்த$_3$ர்யம் முதலான கல்யாணகு$_3$ணங்களையும் பொருளாகக்கொண்டிருந்தபோதிலும், தாழ்வுகள் எதுவும் கலக்காத எல்லாக் கல்யாணகு$_3$ணங்களுமே எல்லா ஶ்லோகங்களிலும் யோக$_3$ஶப்$_3$த$_3$த்துக்குப் பொருளாகக்கடவது. 'ஏதாம் விபூ$_4$திம்' [7] முதலானவிடங்களில் விபூ$_4$திஶப்$_3$த$_3$த்திற்கு நியமனத்தைப் பொருளாகக்கொண்டிருக்க, இங்கு நியமிக்கப்படும் பொருள்களைப் பொருளாகக் கூறுவது எப்படிப் பொருந்தும்? எனில்: "**யாபி$_4$ர் விபூ$_4$திபி$_4$: லோகாந் இமாம் ஸ்த்வம் வ்யாப்ய திஷ்ட$_2$ஸி**" [16] என்னும் ஶ்லோகத்தில் விபூ$_4$திஶப்$_3$த$_3$த்திற்கு நியமிக்கப்படும் பொருள்களை அர்த்த$_2$மாகக் கொள்ள முடியாதாகையால், அந்த ஶ்லோகத்திலும், அதற்கு முன்பின் (7,18) ஶ்லோகங்களிலும் விபூ$_4$திஶப்$_3$த$_3$த்திற்கு நியமனவிஶேஷங்களே பொருளாகக் கொள்ளப்பட்டது. இனிவரும் ஶ்லோகங்களில் நியமிக்கப்படும் பொருள்களையே விபூ$_4$திகளாகக் குறிக்கையால், இந்த ஶ்லோகத்தில் அவைகளையே விபூ$_4$திஶப்$_3$த$_3$த்திற்குப் பொருளாகக் கொள்ளப்படுகிறது. கேள்வி [18] பதில் [19] ஶ்லோகங்களில் விபூ$_4$திஶப்$_3$த$_3$த்துக்கு இப்படிச் சிறிது பொருள் வேறுபாடுஇருந்தபோதிலும், "'வி' என்னும் உபஸர்க்க$_3$த்தோடு கூடிய 'பூ$_4$' தா$_4$துவிலிருந்து தோன்றியது விபூ$_4$திஶப்$_3$த$_3$ம்; ஸம்ருத்$_3$தி$_4$ முதலான வேறு பொருள்கள் இதற்குக்கிடையாது" என்று காட்டுவதிலேயே நோக்காகையால் கேள்வி பதில்களில் விபூ$_4$திஶப்தத்திற்குச் சிறிது பொருள் வேறுபாடு இருப்பதைப் பொறுத்துக் கொள்ளவேண்டியதே. நியமிக்கப்படும் பொருள்களைக் கூறுவது நியமநவிஶேஷங்களைக் கூறுவதேயாகுமன்றோ. 19.

॥भा॥ तत्र सर्वभूतानां प्रवर्तनरूपं नियमनमात्मतयाऽवस्थाय इतीममर्थं, योगशब्दनिर्दिष्टं सर्वस्य स्रष्टृत्वं पालयितृत्वं संहर्तृत्वं चेति सुस्पष्टमाह—

अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थितः।
अहमादिश्च मध्यं च भूतानामन्त एव च॥२०॥

20. அஹமாத்மா கு₃டா₃கேஶ ஸர்வபூ₄தாஶயஸ்தி₂த:।
அஹமாதி₃ஶ்ச மத்₄யம் ச பூ₄தாநாமந்த ஏவ ச॥

கு₃டா₃கேஶ! — தூக்கத்தை வென்ற அர்ஜுந! **அஹம்**—நான், **ஸர்வபூ₄தாஶயஸ்தி₂த:**—எல்லா ஜீவராஶிகளின் ஹ்ருத₃யத்திலும் இருக்கும், **ஆத்மா**—அந்தர்யாமியாயிருக்கிறேன். **அஹம்**—நான், **பூ₄தாநாம்**—எல்லா ஜீவராஶிகளுக்கும், **ஆதி₃: ச**—முதலில் நடைபெறும் படைப்புக்குக் காரணமாகவும், **மத்₄யம் ச**—இடையில் நடைபெறும் ரக்ஷணத்துக்குக் காரணமாகவும், **அந்த: ஏவ ச**-கடைசியில் நடைபெறும் ஸம்ஹாரத்துக்குக் காரணமாகவுமிருப்பவன்.

---

21. எப்பொருட்கு முள்ளே யிருக்கின்ற வின்னுயிர்நா
னப்பொருளுக் காதிநடு வந்தமுநா—னிப்படியி
லெல்லாமு நானு யியன்ற பரிசிதனைச்
சொல்லாரக் கேளாய் தொகுத்து.

எப்பொருட்கும்—எல்லா ஜீவராஶிகளுக்கும், **உள்ளே**—ஹ்ருத₃யத்தில், **இருக்கின்ற** — வாழ்கின்ற, **இன்னுயிர்**—இனிய ஆத்மாவாயிருப்பவன், **நான்**—நானே. **அப்பொருளுக்கு** — அந்த ஜீவராஶிகளுக்கு, **ஆதி** — முதலில் நடைபெறும் படைப்புக்குக் காரணமாய், **நடு**—இடையில் நடைபெறும் ரக்ஷணத்துக்கும் காரணமாய், **அந்தமும்**—கடைசியில் நடைபெறும் ஸம்ஹாரத்துக்கும் காரணமாயிருப்பவன், **நான்**—நானே. **இப்படியில்**—இவ்வுலகில், **எல்லாமும் நானுய் இயன்ற பரிசு இதனை**—எல்லாப் பொருள்களும் நானுக இருக்கும் இப்பெருமையை, **தொகுத்து சொல்**—(நான்) தொகுத்துச் சொல்லுவதை, **ஆரக்கேளாய்**—(நீ) முழுவதும் கேட்பாயாக.

॥भा॥ सर्वेषां भूतानां मम शरीरभूतानाम् आशये—हृदये अहमात्मतयाऽवस्थितः। आत्मा हि नाम शरीरस्य सर्वात्मना आधारः;

---

20. "விஸ்தரேண ஆத்மனோ யோகம் விபூ₄திம் ச ஜநார்த₃ந பூ₄ய: கத₂ய" [10-18] [உன்னுடைய கல்யாணகு₃ணயோக₃த்தையும், நியமனத்தையும் மறுபடியும் விரிவாகச் சொல்லுவாய்.] என்று விரிவாகச் சொல்லும்படி கேட்கப்பட்ட இரு கேள்விகளுக்கு இந்த ஶ்லோகத்தின் இரண்டு பாதிகளாலே பதிலைச் சுருங்கக் கூறுகின்றவனாய், 'எல்லா ஜீவராஶிகளையும் நடத்திச் செல்லுகையாகிற நியமனம் (விபூ₄தி), தான் ஆத்மாவாய் (அந்தர்யாமியாய்) இருந்து செய்வதே' என்னும் விஷயத்தையும், 'யோக₃ஶப்₃த₃த்தால் குறிக்கப்படுவது—அனைத்தையும் படைக்கை, ரக்ஷிக்கை, அழிக்கை முதலான பெருமைகளே' என்னும் விஷயத்தையும் மிகத் தெளிவாகக் கூறுகிறான். இதனால்—இதற்கு முன் ஶ்லோகங்களிலும், அடுத்துள்ள ஶ்லோகங்களிலும் மற்ற பொருள்களைத் தன்னோடு ஒரே வேற்றுமையில் படித்திருப்பதற்குக் காரணம் (1) அவை தனக்கு ஶரீரமாகவும், தான் அவற்றுக்கு ஆத்மாவாகவும் இருப்பது; (2) அவை தனக்குக் கார்யமாகவும், தான் அவற்றுக்குக் காரணமாகவும் இருப்பது என்னும் இரண்டுமே என்று சொல்லப்பட்டதாயிற்று. (அஹம் ஸர்வபூ₄தாஶயஸ்தி₂த: ஆத்மா) நானே என்னுடைய ஶரீரமாயிருக்கும் எல்லா ஜீவராஶிகளுடைய ஹ்ருத₃யத்திலும் ஆத்மாவாக இருப்பவன். ஆத்மஶப்₃த₃த்துக்குப் பல பொருள்கள் உண்டாயினும், ஶரீரத்தை நியமிக்கும் அறிவுடைய சேதனன் விஷயத்திலேயே அதற்கு ப்ரஸித்₃தி₄ அதி₄கமாகையாலும், முன்பின் ப்ரகரணங்களில் அனைத்தையும் எம்பெருமானுக்கு ஶரீரமாகவும், அனைத்துக்கும் அவனை அந்தர்யாமியாகவும் சொல்லியிருக்கையாலும் அப்பொருளே இங்கு பொருந்தும். "ஜீவனுடைய ஶரீரங்கள் அவனுக்கே ஶரீரங்களாகப் பிரஸித்₃தி₄பெற்றவை. ஜீவனும் தன் ஶரீரத்துக்கு ஆத்மாவாகப் பிரஸித்₃தி₄பெற்றவனேயொழிய, வேறொருவனுக்கு ஶரீரமாகப் பிரஸித்₃தி₄பெற்றவனல்லன். அப்படியிருக்கும்போது ஜீவஶரீரங்களையும், ஜீவனையும் பரமாத்மாவுக்கு ஶரீரங்களாகச் சொல்லுவது எப்படிப் பொருந்தும்?" எனில்: இதற்கு ஸமாதா₄னம் பின்வருமாறு,—ஶாஸ்த்ரங்களிலும், உலகிலும் ஶரீரங்களாகவும், அவற்றுக்கு ஆத்மாக்களாகவும் காணப்படும் எல்லா இடங்களையும் ஆராயும்போது "ஶரீரத்துக்கு எல்லா வகையிலும் ஆதா₄ரமாகவும், அதை நியமிப்பவனாகவும், அதனால் பயன் கொள்ளும் ஶேஷியாகவும் இருப்பவன் எவனோ அவனே ஆத்மா" என்பதே ஆத்ம

नियन्ता, शेषी च। तथा वक्ष्यते— * सर्वस्य चाहं हृदि सन्निविष्टो मत्तस्स्मृतिर्ज्ञानमपोहनं च (१५. १५), * ईश्वरस्सर्वभूतानां हृद्देशेऽर्जुन

லக்ஷணமாகக் கொள்ளத்தக்கது. ஶரீரத்துக்கு எல்லா வகையிலும் ஆத$_4$ாரமாயிருப்பவன், அதை நியமிப்பவன், அதற்கு ஶேஷியாயிருப்பவன் என்னும் மூன்றையும் தனித்தனி ஆத்ம லக்ஷணங்களாகக் கூறலாம். "ஶரீரத்துக்கு ஆத$_4$ாரமாயிருப்பவன் இவனானாலும் நியமிப்பவரும், ஶேஷியும் வேறு சிலரோ?" முதலான ஶங்கைகளைத் தவிர்ப்பதற்காக மூன்றையும் சேர்த்து ஒரே லக்ஷணமாகவும் கூறுவதுண்டு. "**யஸ்ய சேதநஸ்ய யத்$_3$த்$_3$ரவ்யம் ஸர்வாத்மநா ஸ்வார்த்தே$_2$ நியந்தும் த$_4$ாரயிதும் ச ஶக்யம், தச்சே$_2$ஷதைகஸ்வருபஞ்ச, தத் தஸ்ய ஶரீரம்**" [ஸ்ரீப$_4$ாஷ்யம் 2-1-4] [எந்தச் சேதனனுக்கு எந்த த்$_3$ரவ்யம் தானிருக்கும் வரையில் அந்தச் சேதனனின் பயனுக்காக அவனால் நியமிக்கவும், த$_4$ரிக்கவும் தக்கதாயிருக்கிறதோ, அவனுக்கு ஶேஷமாயிருக்கையையே இயல்வாகக் கொண்டதாகவுமிருக்கிறதோ அந்த த்$_3$ரவ்யம் அந்தச் சேதனனுக்கு ஶரீரமாகும்.] என்று ஸ்ரீப$_4$ாஷ்யத்தில் காட்டப்பட்ட ஶரீர லக்ஷணமும் இங்கு அநுஸந்தி$_4$க்கத்தக்கது. ஶரீரத்துக்குப் பிற மதத்தவர்களால் சொல்லப்படும் மற்ற லக்ஷணங்கள் ஸ்ரீப$_4$ாஷ்யாதி$_3$களில் விரிவாகக் க$_2$ண்டி$_3$க்கப் பெற்றுள்ளன. "அறிவுடைய ஒருவனுக்கு அவனை விட்டுப்பிரியாத விஶேஷணமாயிருக்கும் த்$_3$ரவ்யம் ஶரீரமாகும்" என்பது முற்கூறிய ஸ்ரீப$_4$ாஷ்யத்தில் சொல்லப்பட்ட ஶரீரலக்ஷணத்தின் தேர்ந்த பொருளாகும். இங்குள்ள '**ஸர்வபூ$_4$த**' ஶப்$_3$த$_3$மும் ஶரீரமாத்ரத்தையல்லாமல் ஶரீரத்தோடு கூடிய ஜீவராஶிகளையும் குறிக்கிறது என்பதும், இங்குள்ள '**ஆஶய**' ஶப்$_3$த$_3$ம் '**ஹ்ருத$_3$யம்**' என்னும் பொருளையுடையது என்பதும், ஆத$_4$ாரமாகவும், நியமிப்பவனாகவும், ஶேஷியாகவும் இருப்பவனே ஆத்மா என்பதும் கீ$_3$தையிலேயே பல ஶ்லோகங்களைக் கொண்டு நிர்ணயிக்கத்தக்கது. அவையாவன:—

(1) "**ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி$_3$ ஸந்நிவிஷ்ட: மத்தஸ்ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநம் ச**" [கீ$_3$தை 15-15] [நானே எல்லா ஜீவராஶிகளுடைய ஹ்ருத$_3$யத்திலும் (அவர்களை நியமித்துக் கொண்டு) இருப்பவன். என்னிடமிருந்தே அவர்களுக்கு நினைவு, வஸ்து நிஶ்சயமாகிற அறிவு, அவ்வறிவின் இன்மையாகிற மறதி ஆகியவை ஏற்படுகின்றன.] என்னும் ஶ்லோகத்தில் எல்லா ஜீவராஶிகளின் ஹ்ருத$_3$யத்திலும் தான் அவற்றை நியமித்துக் கொண்டு இருப்பதாகக் கூறினான் கண்ணன். ஆகையால் இங்குள்ள 'ஆஶய'

तिष्ठति। भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया॥ (१८. ६१)
इति। श्रूयते च * यस्सर्वेषु भूतेषु तिष्ठन्सर्वेभ्यो भूतेभ्योऽन्तरो यं

ஶப்3த3த்துக்கு 'ஹ்ருத3யம்' என்று பொருள் கொள்ளுவதே பொருத்தம் என்று விளங்குகிறது. இதற்கு அடுத்த ஶ்லோகத்தில் "க்ஷரஸ் ஸர்வாணி பூ4தாநி" [15-16] என்று அசேதன ஶரீரத்தோடு கூடிய ஜீவர்களை ஸர்வபூ4த ஶப்3த3த்தால் எடுக்கையாலே இங்குள்ள ஸர்வபூ4த ஶப்3த3த்தின் பொருள் அதுவே என்று விளங்குகிறது. அதையடுத்துள்ள "உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதா3ஹ்ருத:। யோ லோகத்ரயமாவிஶ்ய பி3ப4ர்த்யவ்யய ஈஶ்வர:॥" [15-17] [முற்கூறிய க்ஷராக்ஷர புருஷர்களான ப3த்3த4 முக்த ஜீவர்களைக் காட்டிலும், பரமாத்மா என்று ஶ்ருதிகளில் ஓதப்படும் உத்தம புருஷன் வேறுபட்டவன். அவன் அசேதனம், அதோடு கூடிய ப3த்3த4ஜீவன், அதில் நின்றும் நீங்கிய முக்த ஜீவன் என்னும் மூன்றினுள்ளும் ஆத்மாவாக நுழைந்து அவற்றை த4ரிக்கிறான். அவன் அழிவற்றவனாகவும், அவற்றை நியமிப்பவனாகவும் இருக்கிறான். ஆகையால் அவன் முற்கூறிய மூன்றைக் காட்டிலும் வேறுபட்டவனே.] என்னும் ஶ்லோகத்தில் 'பி3ப4ர்த்தி' என்கையால் 'எல்லா பூ4தங்களுக்கும் ஆதா4ரமாயிருப்பவன்' என்றும், 'ஈஶ்வர:' என்கையால் நியமிப்பவனாகவும், ஸ்வாமியாகவும் (ஶேஷியாகவும்) இருப்பவன் என்றும் ஆத்மலக்ஷணம் சொல்லப்பட்டதாயிற்று. நியமனத்தை மாத்திரம் செய்பவனை ஈஶ்வரன் என்பது பொருத்தமல்ல. பாம்பு முதலானவற்றை நியமிக்கும் க3ருட3ன் முதலானவற்றை அவற்றுக்கு ஈஶ்வரனாகச் சொல்லுவதில்லையன்றோ. ஆகையால் ஸ்வாமியாயிருந்து நியமிப்பவனே ஈஶ்வரன் என்பது தெளிவு. (2) "ஈஶ்வரஸ் ஸர்வபூ4தாநாம் ஹ்ருத்3தே3ஶேऽர்ஜுந திஷ்ட2தி। ப்4ராமயந் ஸர்வபூ4தாநி யந்த்ராரூடா4நி மாயயா" [18-61] [அர்ஜுந! எல்லா பூ4தங்களுக்கும் ஈஶ்வரனான வாஸுதே3வன் தன்னால் நிர்மிக்கப்பட்ட ஶரீரமாகிற யந்த்ரத்தில் ஏறியிருக்கும் எல்லா ஜீவர்களையும் ஸத்வ ரஜஸ்தமோ கு3ணங்கள் நிறைந்த ப்ரக்ருதியாகிற தன் மாயையினாலே அந்த கு3ணங்களுக்கு அநு-கு3ணமாக நடத்திக்கொண்டு அந்த பூ4தங்களின் ஹ்ருத3யத்திலிருக்கிறான்] என்னும் ஶ்லோகத்தில், முன் ஶ்லோகத்தில் 'அஹம்' என்று தொடங்கித் தனக்குச் சொன்ன பெருமையை இங்கு 'ஈஶ்வரன்' என்று தொடங்கிச் சொல்லுகையாலே தானே ஈஶ்வரன் என்று காட்டினான். இந்த ஶ்லோகத்திலும் 'ஸர்வபூ4த' 'ஹ்ருத்3தே3ஶ' என்னும் சொற்களால் 'ஸர்வபூ4தாஶய' ஶப்3த3த்தை விளக்கி

सर्वाणि भूतानि न विदुः यस्य सर्वाणि भूतानि शरीरं यस्सर्वाणि भूतान्यन्तरो यमयत्येष त आत्माऽन्तर्याम्यमृतः (बृ. ५. ७. १५) इति, * य आत्मनि तिष्ठन्नात्मनोऽन्तरो यमात्मा न वेद यस्यात्मा शरीरं य आत्मानमन्तरो यमयति स त आत्माऽन्तर्याम्यमृतः (शत.

ஞன். 'யந்த்ரத்தில் ஏறியிருக்கும் ஸர்வபூ₄தங்களையும் மாயையால் நடத்திக்கொண்டு' என்று கூறுகையால் 'ஸர்வபூ₄த' ஶப்₃த₃ம் ப₃த்₃த₄ஜீவர்களைக் குறிப்பது என்றும் காட்டினன். 'ப்₄ராமயந்' என்ற சொல்லால் தான் அனைத்தையும் நியமிப்பவன் என்று ஆத்ம லக்ஷணத்தை உணர்த்தினன். ஹ்ருத₃யத்திலிருப்பதாகக் கூறுகையால் கீ₃தை 7-7 முதலான பலவிடங்களில் காட்டப்பட்ட த₄ாரகத்வம், ஶேஷித்வம் எனும் ஆத்மலக்ஷணங்களும் உணர்த்தப்பட்டன. இவ் வண்ணம், இவ்விஷயம் கீ₃தையில் மாத்திரம் சொல்லப்பட்டதல்ல. ஶ்ருதியிலும் பல வாக்கியங்களில் சொல்லப்பட்டது. சில வாக்கி யங்கள் பின்வருமாறு — (1) ''யஸ்ஸர்வேஷு பூ₄தேஷு திஷ்ட₂ந், ஸர்வேப்₄யோ பூ₄தேப்₄யோऽந்தர:, யம் ஸர்வாணி பூ₄தாநி ந விது₃:, யஸ்ய ஸர்வாணி பூ₄தாநி ஶரீரம், யஸ்ஸர்வாணி பூ₄தாந்யந்தரோ யமயத்யேஷ த ஆத்மாऽந்தர்யாம்யம்ருத:'' [ப்₃ருஹ 5-7-15] [எவ னொருவன் எல்லா பூ₄தங்களின் வெளியிலும், உள்ளேயும் இருக்கி ருனே, எவனை எல்லா பூ₄தங்களும் அறிவதில்லையோ, எவனுக்கு எல்லா பூ₄தங்களும் ஶரீரமோ, எவன் எல்லா பூ₄தங்களையும் உள் நுழைந்து நியமிக்கிருனே, ஆத்மாவாகவும், அழிவற்றவனுகவும் இருக்கும் அவனே உனக்கு அந்தர்யாமி] எனும் வேத₃வாக்யம், ஸர்வபூ₄த ஶப்₃த₃த்தால் சேதநாசேதநங்களனைத்தையும் எடுத்து, அவற்றை இவனுக்கு ஶரீரமாகவும், இவனை அவற்றுக்கு ஆத்மாவாகவும் முழங்கிற்று. (2) ''ய ஆத்மநி திஷ்ட₂ந், ஆத்மநோऽந்தர:, யமாத்மா ந வேத₃, யஸ்யாத்மா ஶரீரம், ய ஆத்மாநமந்தரோ யமயதி, ஸ த ஆத்மாऽந்தர்யாம்யம்ருத:'' [ஶதபத₂ 14-5-30] [எவனொருவன் ஆத்மா வின் வெளியிலும், உள்ளேயும் இருக்கிருனே, எவனை ஆத்மா அறிவ தில்லையோ, எவனுக்கு ஆத்மா ஶரீரமோ, எவன் ஆத்மாவை உள் நுழைந்து நியமிக்கிருனே, ஆத்மாவாகவும், அழிவற்றவனுகவுமிருக்கும் அவனே உனக்கு அந்தர்யாமி] எனும் வேத₃வாக்யம் சேதனன் எம்பெருமானுக்கு ஶரீரமாகவும், அவனை இவனுக்கு ஆத்மாவாகவும் முழங்கிற்று. ஆகையால், ஜீவனும், ஜீவனுடைய ஶரீரங்களும் பரமாத்மாவுக்கு ஶரீரமாகின்றன என்பது பொருத்தமே. ஆக

१४. ५. ३०) इति च। एवं सर्वभूतानामात्मतयाऽवस्थितोऽहं तेषामादिर्मध्यं चान्तश्च; तेषामुत्पत्तिस्थितिप्रलयहेतुरित्यर्थः ॥ २०॥

ஶ்லோகத்தின் முற்பாதியில், தன்னை மற்ற பொருள்களோடு ஓரே வேற்றுமையில் படிப்பதற்குக் காரணம் அவை தனக்கு ஶரீரமாகவும், தான் அவற்றுக்கு ஆத்மாவாகவும் இருப்பதே என்று காட்டப்பட்டது. தனது நியமனமாகிற விபூ₄தி (செல்வம்) அனைத்துக்கும் ஆத்மாவாயிருந்து செய்யப்படுவது என்றும் காட்டப்பட்டது. இனி, உத்தரார்த்த₄த்தாலே — அனைத்தையும் படைத்தளித்தழிப்பவனுயிருக்கை முதலான கல்யாணகு₃ணங்களே யோக₃ஶப்₃த₃த்தால் சொல்லப்படுபவை என்றும், அடுத்துள்ள ஶ்லோகங்களில் தன்னை மற்ற பொருள்களோடு ஓரே வேற்றும்மயில் படிப்பதற்கு, அவை கார்யப்பொருள்களாகவும், தான் அவற்றுக்குக் காரணமாகவும் இருப்பது மற்றொரு ஹேதுவாகும் என்றும் காட்டுகிறன். (அஹம் பூ₄தாநாம் ஆதி₃ஶ்ச மத்₄யம் ச அந்த ஏவ ச) முற்கூறியபடி எல்லாச் சேதநாசேதநங்களுக்கும் ஆத்மாவாயிருக்கும் நான், அவர்களுக்கு ஆதி₃யில் நடைபெறும் படைப்புக்குக் காரணமாகவும், நடுவில் நடைபெறும் ரக்ஷணத்துக்குக் காரணமாகவும், கடைசியில் நடைபெறும் ஸம்ஹாரத்துக்குக் காரணமாகவும் இருக்கிறேன். அனைத்துக்கும் ஆத்மாவாயிருக்கையால் நானே நிமித்த காரணமாயிருப்பதும், உபாத₃ாந காரணமாயிருப்பதும் பொருந்துகிறது. ஸ்ருஷ்டிக்கு முன் எனது ஸூக்ஷ்ம ஶரீரமாயிருக்கும் இவ்வுலகம் ஸ்ருஷ்டிக்குப்பின் ஸ்தூ₂ல ஶரீரமாகப் பரிணமிக்கிறதாகையாலே என் ஸ்வரூபம் விகாரமற்றதாயிருந்தபோதிலும், ஶரீரத்தோடு கூடிய நான் உலகிற்கு உபாத₃ாந காரணமாயிருப்பதிலும் குறையில்லை என்று கருத்து. 'தே₃ஶத்தாலோ காலத்தாலோ முதலும் நடுவும் முடிவுமாயிருப்பவன் நானே' என்று பொருள் கூறுவது பொருந்தாதாகையால், 'முதலிலும் நடுவிலும் கடைசியிலும் நடைபெறும் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் தொழில்களும் நானே' என்னும் பொருத்தமான பொருள் இங்கு கொள்ளப்பட்டது. (கு₃டா₃கேஶ!) 'கு₃டா₃கா' என்பது தூக்கத்தைக் குறிக்கும். 'கு₃டா₃கேஶன்' என்னும் பெயர் 'தூக்கத்தை வென்றவன்' என்று பொருள்படும். இது அர்ஜுனனுடைய பெயர்களில் ஒன்று. நீ போர்புரியும் காலங்களில் தூக்கத்தை வென்றிருப்பதுபோலே, நான் உலகிற்கு எப்போதும் ஸ்ருஷ்டி ஸ்தி₂தி ஸம்ஹாரங்களைச் செய்துகொண்டிருக்கையாலே, எல்லாக் காலங்களிலும் ஜீவராஶிகளின் ஹ்ருத₃யத்திலே விழித்துக்கொண்டிருந்து,

।भा॥ एवं भगवतस्स्वविभूतिभूतेषु सर्वेष्वात्मतयाऽवस्थानं तत्तच्छब्दसामानाधिकरण्यनिर्देशहेतुं प்ரतिपाद्य विभूतिविशेषान् सामानाधिकरण्येन व्यपदिशति। भगवत्यात्मतयाऽवस्थिते हि सर्वे

"ய ஏஷ ஸுப்தேஷு ஜாகர்த்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண:" [கட₂ 2-5-8] [எல்லா ஜீவராசிகளும் தூங்கிக்கொண்டிருக்கையில் எந்தப் பரமபுருஷன் விழித்திருந்து, வேண்டுமவற்றை அந்த ஜீவ ராசிகளுக்கு அளிக்கிறானே] என்கிறபடியே செயல்புரிகிறேன் என்று கருத்து. 20.

21. இந்த ஶ்லோகம் முதலாக 39-வது ஶ்லோகத்தின் முற்பாதி ஈறாக பற்பல பொருள்களோடு தன்னை ஒரே வேற்றுமையில் படிக்கிறான் கண்ணன். ஜ்ஞாநாதி₃ கு₃ணபூர்ணனான தான் தனது செல்வங்களான எல்லாப் பொருள்களிலும் ஆத்மாவாய் நிற்பதே, இப்படி எல்லாப் பொருள்களோடும் தன்னை ஒன்றாகப் படிப்பதற்கு முக்கியமான காரணம் என்று சென்ற ஶ்லோகத்தில் காட்டினான். சிலர்—சென்ற ஶ்லோகத்திலேயே கண்ணன் மற்ற பொருள்களோடு தன்னை ஒரே வேற்றுமையில் படிப்பதைத் தொடங்கி விட்டான் என்றும், எல்லா பூ₄தங்களின் ஹ்ருத₃யத்திலிருக்கும் ஜீவாத்மா, ஆதி₃, மத்₄யம், அந்தம் என்னும் நாலு பொருள்களோடு தன்னை ஒரே வேற்றுமையில் படிக்கிறான் என்றும் கூறுகிறார்கள். ஒரே வேற்றுமையில் படிப்பதன் காரணத்தைச் சொல்ல வேண்டியது அவசியமாகையாலும், யோக₃ம், விபூ₄தி என்னும் இரண்டு பற்றியும் அர்ஜுனன் கேட்டிருக்கையாலே, முன் ஶ்லோகத்தில் இரு பாதிகளாலும் அவ்விரண்டையும் சுருங்கக் கூறுகிறான் என்று கொள்வதே உசிதமாகையாலும் அவர்கள் கூறுவது பொருந்தாது. ஆகையால் "ப்ராதா₄ந்யத:" என்று 19-வது ஶ்லோகத்தில் சொன்ன ரீதியில், தன்னால் நியமிக்கப்படும் செல்வங்களாகிற விபூ₄திகளை இந்த ஶ்லோகத்திலிருந்து ஒரே வேற்றுமையில் படிக்கிறான் என்று கொள்வதே பொருத்தம். இவ்விடத்தில் "ஶரீரத்தைச் சொல்லும் ஶரீரம் முதலான ஶப்₃த₃ங்கள் ஆத்மாவைக் குறிப்பதில்லை என்பதைக் காண்கிறோம். அதுபோலவே இங்கு ஶரீரங்களை ஆத்மாவாகிற தன்னோடு ஒரே வேற்றுமையில் படிக்கும்போது, ஶரீரத்தைக் கூறும் ஶப்₃த₃ங்கள் ஆத்மாவான எம்பெருமானை நேரே குறிக்கமாட்டாவாகையால், லக்ஷணையாலே அவனைக் குறிக்கின்றன என்று கொள்ள வேணுமேயொழிய, ஶரீரத்தைக் கூறும் ஶப்₃த₃ங்களுக்கு ஆத்மாவை

शब्दाः तस्मिन्नेव पर्यवस्यन्ति; यथा देवो मनुष्यः पक्षी वृक्षः इत्यादयः शब्दाः शरीराणि प्रतिपादयन्तः तत्तदात्मनि पर्यवस्यन्ति।

யும் குறிக்கும் ஶக்தி உண்டென்று கல்பிக்கக் கூடாது" என்னும் ஆக்ஷேபம் எழக்கூடும். இதற்கு ஸமாத₄ானம் பின்வருமாறு:— உலகில் தே₃வன், மநுஷ்யன், பக்ஷி, மரம் முதலான ஶப்₃த₃ங்கள் அந்தந்த உடல்களை முக்கியமாகக் குறிக்கும் என்பது அனைவரும் அறிந்தது. ஆயினும், 'தே₃வன் அருளுகிறான்,' 'மநுஷ்யன் அறிகிறான்', 'பக்ஷி பார்க்கிறது', 'மரம் தளிர்க்கிறது' முதலான ப்ரயோக₃ங்களிலிருந்து தே₃வன் முதலான ஶப்₃த₃ங்கள் அந்தந்த உடல்களோடு கூடிய அறிவுடைய ஆத்மாவையும் குறிக்கின்றன என்று விளங்குகிறது. அந்தந்த உடல்களில் ஆத்மா இருந்தால் தானே தே₃வனால் அருளவோ, மனிதனால் அறியவோ, பக்ஷியால் பார்க்கவோ, மரத்தால் தளிர்க்கவோ முடியும். அதுபோலவே, எம்பெருமான் எல்லா சேதநாசேதநப் பொருள்களுக்கும் ஆத்மாவாயிருக்கிறான் என்பது ப்ரமாணங்களால் ஸித்₃தி₄த்தவளவில், அவனை விட்டுப் பிரியாத விஶேஷணமாயிருக்கும் எல்லாப் பொருள்களைக் கூறும் ஶப்₃த₃ங்களும் விஶேஷ்யமான அவனையும் நேரே குறிக்கும் என்று கொண்டே தீரவேண்டும். 'இந்தக் குடம் கறுப்பு' முதலான வழக்குகளில், குடத்தை விட்டுப் பிரியாத கு₃ணத்தைச் சொல்லும் ஶப்₃த₃ங்கள் கு₃ணியையும் குறிப்பதைக் காண்கிறோம். க₄டத்தை விட்டுப்பிரியாத க₄டத்வம் முதலான ஜாதியைக் குறிக்கும் ஶப்₃த₃ங்கள் அப்பொருள்களைக் குறிப்பதைக் காண்கிறோம். ஆகையால், விட்டுப்பிரியாத ஜாதி, கு₃ணம் முதலானவை த்₃ரவ்யத்தையும் குறிப்பதுபோலவும், ஶரீரத்தைச் சொல்லும் ஶப்₃த₃ங்கள் ஶரீரியையும் சொல்லுவதுபோலவும் எம்பெருமானுக்கு ஶரீரமாய் அவனை விட்டுப் பிரியாதிருக்கும் எல்லாப் பொருள்களைக்கூறும் ஶப்₃த₃ங்களும் அவனையும் நேரே குறிக்கக் குறையில்லையாகையால் ஶக்தியைக் கல்பிக்கவேண்டிய 'கௌ₃ரவம்' என்னும் குறையில்லை. ஶரீரம் முதலான மற்ற சில ஶப்₃த₃ங்கள் கு₃ணம் முதலான மற்ற சில ஶப்₃த₃ங்களைப்போலே அவ்வவற்றை மாத்திரம் குறிக்கும் நிஷ்கர்ஷகஶப்₃த₃ங்களாகையாலே, அவை த₄ர்மியைக் குறிக்கமாட்டாவானாலும் தே₃வன், மநுஷ்யன், பக்ஷி, மரம் முதலான மற்ற (அநிஷ்கர்ஷக) ஶப்₃த₃ங்கள் விஶேஷணத்தை மாத்திரமல்லாமல் விஶேஷ்யத்தையும் நேரே குறிக்கும் என்று கண்டுகொள்வது.

भगवतस्तत्तदात्मतयाऽवस्थानमेव तत्तच्छब्दसामानाधिकरण्यनिबन्धनमिति विभूत्युपसंहारे वक्ष्यति * न तदस्ति विना यत्स्यान्मया भूतं चराचरम्

இந்த ப்ரகரணத்தின் தொடக்கமான முன் ஶ்லோகத்தில் தன்னை மற்ற பொருள்களோடு ஒரே வேற்றுமையில் படிப்பதற்குக் காரணம் ஶரீராத்ம ப₄ாவமே என்று குறித்ததுபோலே, இந்த ப்ரகரணத்தின் முடிவிலும் "**ந தத₃ஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூ₄தம் சராசரம்**" [10-39] [அசைவனவும், அசையாதனவுமான எப்பொருளினுள்ளும் என்னை விட்டுப் பிரிந்திருக்கும் பொருள் எதுவுமில்லை] என்று எல்லாப் பொருள்களும் தன்னை என்றும் விட்டுப் பிரியாதிருப்பதாலேயே அவை தன்னோடு ஒரே வேற்றுமையில் படிக்கப்பட்டன என்று காட்டுகிறான் கண்ணன். ஆகையால், ஒரே வேற்றுமையில் படிப்பதைக்கொண்டு கண்ணனோடு அவற்றுக்கு ஸ்வரூபைக்யம் சொல்லுவது, 'எல்லாப் பொருள்களும் பொய், ப்₃ரஹ்மம் ஒன்றே மெய்' என்று கூறுவது முதலான பக்ஷங்கள் இந்த ப்ரகரணத்திற்குப் பொருந்தாவாகையாலே ஏற்கத் தக்கவையன்று என்று விளங்குகிறது. ஸ்வரூபைக்யத்தை ஒப்புக்கொண்டால் மற்ற பொருள்களிலுள்ள தாழ்வுகளையெல்லாம் பரம்பொருளுக்கும் உண்டென்று ஒப்புக்கொள்ளவேண்டிவருமாகையாலே அது எவ்வகையிலும் பொருந்தாது. ஆகையால் யாத₃வப்ரகாஶமதமும் ப₄ாஸ்கர மதமும் தள்ளப்பட்டன. "என்னைவிட்டுப் பிரிந்து எந்தப் பொருளும் இல்லை" என்று இங்கு கண்ணன் கூறுவது "ஆத்மாவாகிற தன்னை விட்டுப் பிரிந்து ஶரீரமாகிற மற்ற பொருள்கள் உளவாக மாட்டா" என்று பொருள்படுமேயொழிய, சங்கரர் கூறுவதுபோல் 'தன்னைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களும் பொய்' என்று பொருள்படாது. 'நெருப்பை விட்டுப்பிரிந்து புகை இருக்காது' என்றால், 'புகையும் நெருப்பும் ஒன்று' என்றோ, 'நெருப்பே மெய், புகை பொய்யானது' என்றோ தேறுதன்றோ. இதற்குமேல் அத்₃வைதிகள் பின்வருமாறு ஒராக்ஷேபம் செய்கிறார்கள்:— "யஜ்ஞத₃த்தனைத் தவிர்த்து மற்றவர்கள் வீட்டிலில்லை" "கயிற்றைத் தவிர பாம்பு, பூ₄மிவெடிப்பு முதலானவை இல்லை" என்னும் வாக்யங்களில் முறையே யஜ்ஞத₃த்தன், கயிறு ஆகிய ஒரு பொருளே உள்ளதென்றும், மற்றவை இல்லையென்றும் ஸித்₃தி₄ப்பதுபோலே இங்கும் "என்னைத்தவிர வேறுபொருள் இல்லை" என்று கண்ணன் கூறுவதாகக் கொள்ளலாமே என்பது அவ்வாக்ஷேபம். பூர்வமீமாம்ஸையில் உபக்ரமாதி₄கரணத்தில் நிர்ணயிக்கப்பட்ட மீமாம்ஸாந்யாயத்

(३९) इति सर्वेषां स्वेनाविनाभाववचनात्। अविनाभावश्च नियाम्यतयेति * मत्तस्सर्वं प्रवर्तते (८) इत्युपक्रमोदितम्।

தைக்கொண்டு இந்த ஆக்ஷேபத்திற்கு பதிலுரைக்கப்படுகிறது. அந்த ந்யாயம் பின்வருமாறு:— (1) ஒரு ப்ரகரணத்தின் உபக்ரமத்தில் (தொடக்கத்தில்) ஒரு வாக்யமும், உபஸம்ஹாரத்தில் (முடிவில்) ஒரு வாக்யமும் காணப்பட்டால் தொடக்க வாக்யத்தை ஒட்டியே முடிவு வாக்யத்திற்குப் பொருள்கொள்ளவேண்டும். (2) தொடக்கத்திலுள்ள வாக்யத்திற்கு விரோத4ம் ஏற்பட்டிருந்தால், அதைத் தள்ளியே உபஸம்ஹாரவாக்யம் எழவேண்டுமாகையால், அவ்விடத்தில் உபஸம்ஹாரவாக்யமே வலிமைமிக்கதாகும். (3) ஆக, விரோத4மில்லாதவிடத்தில் உபக்ரமவாக்யமே வலிமைமிக்கதாகும் — என்பது உபக்ரமாதி4கரண ந்யாயத்திலிருந்து தேறுகிறது. இந்த ப்ரகரணத்தில் "மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே" [கீ3தை 10.8] [என்னாலேயே எல்லாப்பொருள்களும் இயக்கப்படுகின்றன] என்று உபக்ரமத்தில் கண்ணன் தன்னை நியாமகனாகவும், மற்ற பொருள்களை நியாம்யமாகவும் காட்டியுள்ளான். இதற்கு முரணாக இப்ரகரணத்தில் எதுவும் இல்லை. ஆக, உபக்ரமாதி4கரண ந்யாயத்தைக்கொண்டு பார்க்கும்போது எல்லாப் பொருள்களும் உண்மையானவை, கண்ணனால் இயக்கப்படுபவை என்னும் முதல்வாக்யத்திற்கு அநுகு3ணமாகவே "ந தத3ஸ்தி விநா" [10-39] என்னும் உபஸம்ஹார வாக்யத்திற்குப் பொருள்கொள்ளப்படவேண்டுமாகையால், அத்3வைதிகள் கூறுகிறபடி உபக்ரம வாக்யத்திற்கு முரணாக 'கண்ணனைத் தவிர எல்லாப் பொருள்களும் பொய்' என்று இங்கு பொருள்கொள்ள முடியாது. ஆகையால், 'என்னைவிட்டுப் பிரிந்த பொருள் எதுவுமில்லை' என்றே அவ்வாக்யத்திற்குப் பொருள்கொள்ளவேண்டும். மற்ற பொருள்களுக்கும், கண்ணனுக்கும் தொடர்பு நியாம்யநியாமகத் தன்மையாலே என்று முற்கூறிய (10.8) உபக்ரமவாக்யத்திலிருந்து தேறுகிறபடியால், "நெருப்பைவிட்டுப் பிரிந்து புகையிருக்காது" என்னுமிடத்தைக் காட்டிலும் வாசியும் குறிக்கொள்ளத் தக்கது. நெருப்புக்கும் புகைக்கும் நியாம்யநியாமகபா4வம் இல்லையன்றோ. ஆக, இவ்வளவால் "அஹமாத்மா கு3டா3கேஶ! ஸர்வபூ4தாஶயஸ்தி2த:" என்று சென்ற ஶ்லோகத்தில் 'எல்லா ஶரீரத்திலுள்ளுமிருக்கும் ஜீவாத்மாவோடு கண்ணனுக்கு ஸ்வரூபைக்யம் சொல்லப்படுகிறது' என்னும் அத்3வைதிகளின் வாத3ம் பொருந்தாது என நிரூபிக்கப்பட்டதாயிற்று.

आदित्यानामहं विष्णुर्ज्योतिषां रविरंशुमान्।
मरीचिर्मरुतामस्मि नक्षत्राणामहं शशी॥ २१॥

21. ஆதி₃த்யாநாமஹம் விஷ்ணுர் ஜ்யோதிஷாம் ரவிரம்
மரீசிர் மருதாமஸ்மி நக்ஷத்ராணுமஹம் ஶஶீ ॥ [ஶு²மாந்|

ஆதி₃த்யாநாம் — பன்னிரு ஆதி₃த்யர்களுக்குள் ; **விஷ்ணு:** — (சிறந்தவனுன) விஷ்ணுவெனும் பெயருடைய ஆதி₃த்யன், **அஹம்** — நானே; **ஜ்யோதிஷாம்** — சோதிகளுக்குள், **அம்ஶு²மாந் ரவி:**—கிரணங்களையுடைய ஸூர்யனுகிற சோதி, (அஹம்—நானே) ; **மருதாம்**—மருத்துக்களுக்குள், **மரீசி:** — (உயர்ந்த மருத்தான) மரீசியாக, **அஸ்மி**—(நான்) ஆகிறேன்; **நக்ஷத்ராணும்**—நக்ஷத்திரங்களுக்குத் தலைவனுன, **ஶஶீ**—சந்திரன், **அஹம்**—நானே.

---

22. ஆதித்தர் தம்மி லதிகனும் விட்டுநான்
சோதிப் பகலிரவிச் சோதிநான்—மீது
மருத்துவரின் மன்னு மரீசிநா னுனேன்
திருத்துமதி தாரகையிற் சேர்ந்து.

ஆதித்தர் தம்மில்—பன்னிரு ஆதி₃த்யர்களுக்குள், **அதிகனும்** — சிறந்தவனுன, **விட்டு** — விஷ்ணு எனும் பெயருடைய ஆதி₃த்யன், **நான்**—நானே; **சோதி**—சோதிகளுக்குள், **பகல்** — பகலில் ஒளிவீசும், **இரவி சோதி**—ஸூர்யனுகிற சோதி, **நான்**—நானே ; **மருத்துவரின்**—மருத்துக்களில். **மீது மன்னு**—மிகச் சிறந்த மருத்தான, **மரீசி நான் ஆனேன்** — மரீசி எனும் மருத்து நானுயிருக்கிறேன் ; **தாரகையில்** — நக்ஷத்திரங்களோடு, **சேர்ந்து**—தலைவனுகச் சேர்ந்து, **திருத்து மதி**—சிறந்துள்ள சந்திரன் (நான் ஆனேன்—நானேயாயிருக்கிறேன்).

(ஆதி₃த்யாநாம்) அதி₃தியின் பிள்ளைகளான பன்னிரு ஆதி₃த்யர்களுக்குள். (விஷ்ணு: அஹம்) "அஜக₄ந்யோ ஜக₄ந்யஜ:" [கடைசியில் பிறந்தவன் மிகச்சிறந்தவன்] என்கிறபடியே சிறந்தவனுய், கடைசிப்பிள்ளையான 'விஷ்ணு' எனும் ஆதி₃த்யன் நானே.

॥भा॥ द्वादशसंख्यासंख्यातानामादित्यानां द्वादशो य उत्कृष्टो विष्णुर्नामादित्यः, सोऽहम्। ज्योतिषां-जगति प्रकाशकानां योंशुमान् रविः-आदित्यगणः, सोऽहम्। मरुतामुत्कृष्टो मरीचिर्यः, सोऽहमस्मि।

"புரோத₄ஸாம் ச முக்₂யம்" [10-24] என்னும் ஶ்லோகத்திலுள்ள முக்₂யஶப்₃த₃ம் இப்ரகரணத்தில் 'நிர்த்த₄ாரணேஷஷ்டீ₂' [நிர்த்த₄ாரணப்பொருளில் ஆரும் வேற்றுமை] பிரயோகி₃க்கப்பட்டுள்ள அவஶ்யமான இடங்களில் சேர்த்துக்கொள்ளத்தக்கதாகையால், 'ஆதி₃த்யர்களுள் சிறந்தவனான விஷ்ணு' என இங்கு பொருள் கொள்ளப்பட்டது. 'இங்கு தன்னோடு ஒரே வேற்றுமையில் படிக்கப் படும் பொருள்களில் ஸூர்யன்போன்ற சிலவற்றின் சிறப்பு ப்ரத்யக்ஷமாகவும், விஷ்ணு, மரீசி போன்ற சிலவற்றின் சிறப்பு சாஸ்திரங் கொண்டும் அறியத்தக்கது. ராமனைத் தானாகச் சொல்லுமிடம் போன்ற சிலவிடங்களில் நேராகவும், சிவன், ஸ்கந்தன் முதலானோரைத் தானாகக் குறிக்குமிடங்களில் அந்தந்த ஜீவர்களை இடையிட்டும் ஒரே வேற்றுமை படிக்கப்படுகிறது என்று கண்டுகொள்வது. (ஜ்யோதிஷாம்) உலகில் ஒளிவீசும் சோதிகளுக்குள். இங்கு ஜ்யோதிஶ்ஶப்₃த₃த்தாலே நக்ஷத்ரங்களை மாத்திரம் எடுத்தால் நிர்த்த₄ாரணப்பொருள் ஒட்டாது. ஸூர்யன் நக்ஷத்ரஜாதியில் சேர்ந்ததாகவோ, அவற்றோடு தொடர்புள்ளதாகவோ எங்கும் கூறப்படுவதில்லையன்றோ. ஆகையால் 'ஒளிவிடும் சோதிகளுக்குள்' என்று ஜ்யோதிஶ்ஶப்₃த₃த்திற்குப் பொருள்கொள்ளப்பட்டது. பரஞ்சோதியான பரம்பொருளோடு ஒப்பிடும்போது ஸூர்யன் மின்மினிபோன்றவனாகையால், 'உலகில் ஒளிவிடும் சோதிகளுக்குள்' என்று விஶேஷணமிடப்பட்டது. (அம்ஶுமாந் ரவி: அஹம்) ஒளிமிக்க கிரணங்களையுடைய ஆதி₃த்யக₃ணம் நானே. நிர்த்த₄ாரணத்திற்கு உறுப்பான சிறப்பை 'அம்ஶுமாந்' என்னும் பத₃த்திலுள்ள 'மதுப்' ப்ரத்யயம் காட்டுகிறது. ஆகையாலே ரவிஶப்₃த₃த்தோடு புனருக்தியில்லை. ரவிஶப்₃த₃ம் பன்னிரு ஆதி₃த்யர்களுக்கும் பொதுவானதாகையால், ஏகவசநம் (ஒருமை) ஆதி₃த்யக₃ணத்தைக் குறிக்கிறது. (மருதாம் மரீசிரஸ்மி) மருத்துக்கள் எனப்படும் வாயுக்களில் சிறப்புற்ற 'மரீசி' எனும் மருத்து நானே. தி₃தியின் புத்திரர்களாய் எழுவர்கொண்ட ஏழுக₃ணங்களாக அமைந்த நாற்பத்தொன்பது மருத்துக்களில் மரீசி சிறப்புற்றவன் என்பது ஶாஸ்த்ரஸித்₃த₄ம். (நக்ஷத்ராணாம் ஶஶீ அஹம்) நக்ஷத்திரங்களின் தலைவனான சந்திரன் நானே. சந்திரன் நக்ஷத்ரக் கூட்டத்தில் சேர்ந்தவனல்லவாகையால், இங்கு நிர்த்த₄ாரணப்

नक्षत्राणामहं शशी; नेयं निर्धारणे षष्ठी, *भूतानामस्मि चेतना (२२) इतिवत्। नक्षत्राणां पतिर्यश्चन्द्रः, सोऽहमस्मि॥ २१॥

वेदानां सामवेदोऽस्मि देवानामस्मि वासवः।
इन्द्रियाणां मनश्चास्मि भूतानामस्मि चेतना॥ २२॥

பொருள் பொருந்தாது. ஆகையால், "ப்ராத₄ாந்யத:" [10-19] என்றதையொட்டி, "நக்ஷத்திரங்களின் தலைவனான சந்திரன்" என்று இங்கு பொருள் கொள்ளப்பட்டது. இதற்குமேல் பின்வரும் ஆக்ஷேபம் எழுகிறது. முன்னும் பின்னும் நிர்த்த₄ாரணப்பொருளாயிருக்கும் போது, நடுவில் நக்ஷத்திரங்களுக்கும் சந்திரனுக்கும் மாத்திரம் தலைவன் என்று ஸம்ப₃ந்த₄ப்பொருளைக் கூறுவது பொருந்த வில்லையே. ஆகையால் இரவில் பிரகாசிக்கும் வானச்சோதிகளான சந்திரன் நக்ஷத்திரங்கள் அனைத்தையுமே ச₂த்ரி ந்யாயத்தாலே நக்ஷத்திர ஶப்₃த₃த்தாலே குறிப்பதாகக் கொள்ளலாமே. அல்லது, "ஸுக்ருதாம் வா ஏதானி ஜ்யோதீம்ஷி யந்நக்ஷத்ராணி"[யஜு 5-4-1-3] "யோ வா இஹ யஜதே அமும் ஸ லோகம் நக்ஷதே தந்நக்ஷத்ராணாம் நக்ஷத்ரத்வம்; தே₃வக்₃ருஹா வை நக்ஷத்ராணி" [அஷ் 1-5-2-10] என்னும் வேத₃வாக்கியங்கள் இங்கு யாக₃ம் முதலான புண்ய கார்யங்களைச் செய்பவர்களுக்கு போ₄க₃ஸ்த₂ானமாக நக்ஷத்ரங்களைப்போலே சந்திரனையும் எடுத்து, சந்திரனுக்கும் நக்ஷத்ர ஶப்₃த₃த்தை வழங்கியிருக்கை யாலே நிர்த்த₄ாரணப்பொருளே இங்கும் பொருந்தலாம் என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத₄ானம் பின்வருமாறு—முக்கியமான பொருளைக்கொண்டே நிர்வஹிக்க வழியிருக்கும்போது, லக்ஷணை யால் பொருள்கூறுவது சரியல்ல. இந்த ப்ரகரணத்தில் "பூ₄தானாமஸ்மி சேதனா" (22) "ஸர்க்கா₃ணாமாதி₃ரந்தஶ்ச மத்₄யம் சைவாஹமர்ஜுந" (32) "வாத₃: ப்ரவத₃தாமஹம்" (33) "அஹமேவாக்ஷய: கால:" (33) "உத்₃ப₄வஶ்ச ப₄விஷ்யதாம்" (34) "த்₃யூதம் ச₂லயதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம்। ஜயோऽஸ்மி வ்யவஸாயோऽஸ்மி।" (36) முதலானவிடங்களிற்போல் இங்கும் நிர்த்த₄ாரணப் பொருள் கொள்ளமுடியாதாகையாலே, நக்ஷத்ரஜாதியைச் சேராத சந்திரன் நக்ஷத்ரங்களுக்குத் தலைவனாயிருக்கும் ஸம்ப₃ந்த₄த்தை யிட்டே 'ஸம்ப₃ந்த₄ ஸாமாந்யே ஷஷ்டீ₂' என்ற இலக்கண வழக்குப்படி 'நக்ஷத்ராணாம்' என்று ஆறும்வேற்றுமை படிக்கப்பட்டுள்ளது என்று கொள்ளுவதே பொருத்தமானது. 21.

22. வேத₃ாநாம் ஸாமவேதோ₃ऽஸ்மி தே₃வாநாமஸ்மி வாஸவ: ।
இந்த்₃ரியாணும் மநஶ்சாஸ்மி பூ₄தாநாமஸ்மி சேதநா ॥

வேத₃ாநாம்—வேத₃ங்களுக்குள், **ஸாமவேத₃: அஸ்மி**—(சிறந்ததான) ஸாமவேத₃மாகிறேன். **தே₃வாநாம்** — தே₃வதைகளுக்குள், **வாஸவ: அஸ்மி**—(தலைசிறந்தவனான) இந்திரனாகிறேன். **இந்த்₃ரியாணும்**—பதினொரு இந்திரியங்களுக்குள், **மந: ச அஸ்மி**—(சிறந்ததான) மனம் என்னும் இந்திரியமாகவும் ஆகிறேன். **பூ₄தாநாம்** — அறிவுடைய ஜீவராஶிகளுடைய, **சேதநா அஸ்மி** — அறிவாக நான் ஆகிறேன்.

---

23. வேதங்க ளிற்சாம வேதநான் விண்ணவரில்
நாதன் சதக்கிருது நானுவன்—போதஞ்சேர்
நெஞ்சாவ னெப்பொறிக்கு நின்றியலும் பூதங்கட்
கெஞ்சா வறிவாவன் யான்.

வேதங்களில்-நான்கு வேத₃ங்களில், **சாமவேதம் நான்**-(உயர்ந்ததான) சாமவேதம் நானே. **விண்ணவரில்**—தே₃வர்களுள், **நாதன் சதக்கிருது** — தலைவனுகையாலே உயர்ந்த இந்திரன், **நான் ஆவன்**—நான் ஆகிறேன். **எப்பொறிக்கும்**—எல்லா இந்த்₃ரியங்களுக்குள்ளும், **போதம் சேர் நெஞ்சு ஆவன்**—ஜ்ஞானம் வெளிப்படும் வழியாகையாலே சிறந்ததான மனமாக ஆகிறேன். **நின்று இயலும் பூதங்கட்கு**-(இவ்வுலகில்) நின்று நடையாடும் ஜீவராஶிகளுக்கு, **எஞ்சா அறிவு ஆவன் யான்**—அழியாத அறிவாக ஆகின்றவனும் நானே.

---

22. (வேத₃ாநாம் ஸாமவேதோ₃ऽஸ்மி) ருக், யஜுஸ், ஸாமம், அத₂ர்வணம் எனும் நான்கு வேத₃ங்களுக்குள் சிறந்ததான ஸாமவேத₃ம் நானேயாகிறேன். (1) க₃ானத்தை முக்கியமாகக் கொண்டதாயிருக்கை, (2) ஆயிரம் ஶாகை₂களை உடையதாயிருக்கை முதலான பெருமைகளால் ஸாமவேத₃த்திற்கு உயர்வும், அவையில்லாமையால் மற்ற வேத₃ங்களுக்குத் தாழ்வும் இங்கு சொல்லப்படுகிறது என்பதும்,

॥भा॥ वेदानाम्—ऋग्यजुस्सामाथर्वणां य उत्कृष्टस्सामवेदः; सोऽहम्। देवानामिन्द्रोऽहमस्मि। एकादशानामिन्द्रियाणां यदुत्कृष्टं

ப்ராமாண்யத்தில் வேத₃ங்களிடையே உயர்வுதாழ்வு இங்கு கருதப் படவில்லை என்பதும் குறிக்கொள்ளத் தக்கது. "ருக் ச வா இத₃ மக்₃ரே ஸாம சாஸ்தாம் ஸைவ நாம ருகா₃ஸீத₃மோ நாம ஸாம ஸா வா ருக்ஸாமோ பாவத₃ர்மிது₂நம் ஸம்ப₄வாவ ப்ரஜாத்யா இதி நேத்யப்₃ரவீத் ஸாம ஜ்யாயாந்வா அதோ மம மஹிமா" [ஐதரேய ப்₃ராஹ்மணம்] என்கிற வேத₃வாக்கியத்தில் கூறியபடி க₃ாநரூபமான ஸாமத்திற்கு முக்கியத்துவமுண்டாகையால், ஸாமவேத₃த்திற்கு முக்கியத்துவம் ஶ்ருதிஸித்₃த₄ம். "ருக்₃ப்₄யோ ஜாதம் வைஶ்யம் வர்ணமாஹு: யஜுர்வேத₃ம் க்ஷத்ரியஸ்யாஹுர்யோநிம்। ஸாம வேதோ₃ ப்₃ராஹ்மணாநாம் ப்ரஸூதி: ॥" [காட₂கம் 3-9-50] [வைஶ்ய வர்ணத்தை ருக்₃வேத₃த்திலிருந்து பிறந்ததாகவும், யஜுர் வேத₃த்தை க்ஷத்ரியவர்ணத்திற்குக் காரணமாகவும், ஸாமவேத₃ம் அந்தணர்களுக்குக் காரணமென்றும் கூறுகின்றனர்.] என்னும் வேத₃ வாக்கியத்தின்படி உயர்ந்த வர்ணமான ப்₃ராஹ்மணவர்ணத்திற்குக் காரணமாகையால் ஸாமவேத₃ம் உயர்ந்தது என்றும் கொள்ளலாம். (தே₃வாநாம் வாஸவ: அஸ்மி) ஸ்வர்க்க₃வாஸிகளான தே₃வர்களுள் அவர்களுக்குத் தலைவனான இந்திரனாகிறேன் நான். பிரமன், சிவன் முதலான தே₃வர்கள் இந்திரனைக் காட்டிலும் உயர்ந்தவர்களாகை யாலே, அவர்களை இங்கு தே₃வஶப்₃த₃த்திற்குப் பொருளாகக் கொள்ளமுடியாது; ஆகையால் ஸ்வர்க்க₃த்திலுள்ள தே₃வர்களே தே₃வஶப்₃த₃த்திற்குப் பொருளாகக் கொள்ளப்பட்டனர். 'வாஸவன்' எனப்படும் இந்திரன் 'இதி₃-பரமைஶ்வர்யே' என்னும் தா₄துவின்படி இவர்களைக்காட்டிலும் மேலான ஐஶ்வர்யமுடையவனாகையால் இவர்க ளுக்குள் உயர்வுபெற்றவனாகிறான். (இந்த்₃ரியாணாம் மநஶ்ச அஸ்மி) ஞானம் வெளிப்படும் வழியாகையாலே இந்திரியங்களுள் சிறந்த தான மனமெனும் இந்திரியமும் நானே. இங்கு ஓர் ஆக்ஷேபம் எழு கிறது:— "இந்த்₃ரியேப்₄ய: பரா ஹ்யர்த்தா₂ அர்த்தே₂ப்₄யஶ்ச பரம் மந:" [கட₂ 3-10] [(வசீகரிக்கத்தக்கவைகளுள்) இந்திரியங்களைக் காட்டிலும் விஷயங்கள் மேலானவை; விஷயங்களைக் காட்டிலும் மனம் மேலானது] "ஏதஸ்மாத் ஜாயதே ப்ராண: மந: ஸர்வேந்த்₃ரி யாணி ச" [முண்ட₃ 2-1-3] [பரமாத்மாவிடமிருந்து ப்ராணனும், மனமும், எல்லா இந்திரியங்களும் உண்டாகின்றன.] முதலான வாக்யங்களிலிருந்து மனம் இந்திரியங்களைக் காட்டிலும் வேறுபட்டது என விளங்கும்போது இங்கு மனத்தை இந்திரியங்களுள் சிறந்ததாகக் கூறுவது எப்படிப் பொருந்தும் என்பது அவ்வாக்ஷேபம். "இந்த்₃ரி யாணி த₃ஶைகம் ச" [கீ₃தை 13-5] [பதினொரு இந்திரியங்கள்] "ஏகாத₃

मनइन्द्रियम्, तदहमस्मि। इयमपि न निर्धारणे —भूतानां चेतनावतां या चेतना, साऽहमस्मि ॥ २२ ॥

ஶம் மாஶ்சாத்ர" [வி-பு 1-2-47] [மனம் பதினோராவது இந்திரியம்] முதலான ப்ரமாணங்களில் மனமும் ஓரிந்திரியமாக எடுக்கப்பட்டிருக்கையால், 'பத்து இந்திரியங்கள்' என்று கூறுமிடங்கள், ஜ்ஞாநம் வெளிப்படும் வழியாகையாலே தலைமைபெற்ற மனத்தைவிட்டு, மற்ற கர்மஜ்ஞாநேந்திரியங்கள் பத்தை மாத்திரம் கூறுவதாகக் கொள்ள வேண்டும். (பூ₄தாநாமஸ்மி சேதநா) அறிவுடைய ஜீவராஶிகளின் அறிவு நானே. "தேஜஸ்தேஜஸ்விநாம்—ஸத்வம் ஸத்வவதாம்" [10-36] என்றவிடங்களிற்போலே, "சேதநாவதாம் பூ₄தாநாம் சேதநா" என்று கொள்ளவேண்டும். (பஞ்ச) பூ₄தங்களில் 'சேதநா' என்று ஒரு பூ₄தமில்லையாகையால், இங்கு பூ₄தஶப்₃த₃ம் அறிவுடைய ஜீவராஶிகளையும், சேதநாஶப்₃த₃ம் அவர்களது அறிவையும் குறிப்பதாகவுமே கொள்ளவேண்டும். ஆகையால் இங்கும் ஷஷ்டி₂ நிர்த்த₄ாரணப்பொருளில் வழங்கப்படவில்லை. இங்கும் ஓராக்ஷேபம் எழுகிறது:-"மஹாபூ₄தாநி க₂ம் வாயுரக்₃நிராபஸ்தத₂ா மஹீ। ஷஷ்ட₂ஸ்து சேதநாத₄ாது: ஆத்மா ஸப்தம உச்யதே ॥ அஷ்டமம் து மநோ ஜ்ஞேயம்" [பா₄ர-மோக்ஷ 337-46] [ஆகாயம், வாயு, அக்₃னி, நீர், நிலம் ஆகியவை (பஞ்ச) பூ₄தங்கள். சேதநாத₄ாது ஆறுவது (பூ₄தம்), ஆத்மா ஏழாவது, மனம் எட்டாவதாக அறியத்தக்கது] என்றும், "ஷஷ்ட₂ஸ்து சேதநாத₄ாது: மந இத்யுபதி₃ஶ்யதே" [பா₄ர-ஆர 214-19] [சேதநாத₄ாது ஆறுவது (பூ₄தம்); அது (மனத்தை அதி₄ஷ்டி₂ப்பதால்) மனம் என்றும் கூறப்படுகிறது.] என்றும் சேதநாத₄ாது என்று ஒரு தத்துவம் பூ₄தங்களில் சேர்ந்ததாக மஹாபா₄ரதத்தில் கூறப்படுவதால் அதை இங்கு 'சேதநா' என்று குறிப்பதாகக் கொண்டு, நிர்த்த₄ாரணப் பொருளே கொள்ளலாமே என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத₄ானமாவது:— இங்கு ஏழாவதாகக் காட்டப்பட்ட ஆத்மாவும், எட்டாவதாகக் காட்டப்பட்ட மனமும் பூ₄தங்களில் சேர்ந்தவையல்ல என்பது அனைவரும் அறிந்தது. அவற்றைப்போலே சேதநாத₄ாதுவும் பூ₄தங்களில் சேராததாகிலும் வேறொரு வகையில் ஆறுவதாகக் கணக்கிடப்படுகிறது என்று கொள்ளலாம். ஆகையால் அப்ரஸித்₃த₄மான சேதநாத₄ாதுவை இங்கு சேதநாஶப்₃த₃த்திற்குப் பொருளாகக்கொள்வதைக் காட்டிலும், ஸுப்ரஸித்₃த₄மான அறிவைப் பொருளாகக் கொள்வதே பொருத்தமாகும். ஆகவே இங்கும் "நக்ஷத்ராணாமஹம் ஶஶீ" என்றவிடத்திற்போலே நிர்த்த₄ாரணப் பொருளைக்கொள்ளாமல் ஸம்ப₃ந்த₄ஸாமாந்யப் பொருள் கொள்ளப் படுகிறது. 22.

रुद्राणां शङ्करश्चास्मि वित्तेशो यक्षरक्षसाम्।
वसूनां पावकश्चास्मि मेरुश्शिखरिणामहम्॥ २३॥

23. ருத்$_3$ராணாம் ஶங்கரஶ்சாஸ்மி வித்தேஶோ யக்ஷரக்ஷஸாம் ।
வஸூநாம் பாவகஶ்சாஸ்மி மேருஶ் ஶிக$_2$ரிணாமஹம் ॥

ருத்$_3$ராணாம்—பதினொரு உருத்திரர்களுக்குள், **ஶங்கர ச அஸ்மி**—(தலைவனான) ஶிவனாகவும் இருக்கிறேன். **யக்ஷரக்ஷஸாம்**—யக்ஷராக்ஷஸர்களுள், **வித்தேஶ: (அஸ்மி)**—(பணத்துக்கு அதி$_4$பதியான)குபேரனாகிறேன். **வஸூநாம்**—எட்டு வஸுக்களுள், **பாவக: ச அஸ்மி**—(தலைசிறந்தவனான) பாவகன் என்ற வஸுவாகிறேன். **ஶிக$_2$ரிணாம்**—ஆஶ்சர்யமான சிகரங்களையுடைய மலைகளுள், **மேரு: அஹம் (அஸ்மி)**—நான் மேருவாகிறேன்.

---

24. வேறு முருத்திரரிற் சங்கரனான் வித்தேசன்
கூறு மியக்கர் கொலையரக்கர்க்—காறாத
பாவகனான் பண்பார் வசுக்களுக்குள் பல்கிரிக்குள்
மேவவுயர் மேருவுநான் மிக்கு.

வேறும் உருத்திரரில்—சிறப்புற்றவர்களான பதினொரு உருத்திரர்களுக்குள், **சங்கரன் நான்**—(தலைவனான) சிவன் நானே; **கூறும் இயக்கர் கொலை அரக்கர்க்கு**—நெருங்கினவர்களான யக்ஷர்கள், கொடுந்தொழிலைப் புரியும் ராக்ஷஸர்களுக்குள், **வித்தேசன் நான்**—பணத்துக்கு அதிபதியான குபேரன் நானே, **பண்பு ஆர் வசுக்களுக்குள்**—நற்குணம் நிறைந்த எட்டு வஸுக்களுக்குள், **ஆறாத பாவகன் நான்**—(நற்பண்புகளில் என்றும்) தாழ்வுறாத பாவகன் என்னும் வஸுவாகிறேன். **மேவ உயர் பல் கிரிக்குள்**—சிகரங்களால் மிகவும் உயர்ந்திருக்கும் பல மலைகளுக்குள், **மிக்கு மேருவும் நான்**—தலைசிறந்த மேருவும் நானே.

॥ भा ॥ रुद्राणामेकादशानां शङ्करोऽहमस्मि। यक्षरक्षसां वैश्रवणोऽहम्। वसूनामष्टानां पावकोऽहम्। शिखरिणाम्—शिखरशोभि[ता]नां पर्वतानां मध्ये मेरुरहम्॥ २३॥

---

23. (ருத்₃ராணும் ஶங்கரஶ்ச அஸ்மி) ஏகாத₃ஶருத்₃ரர்களில் தலைமைபெற்ற சங்கரனும் நானே. அவனும் எனக்கு ஶரீரமாயிருந்து ஸத்தை பெற்றவனே என்று கருத்து. இதையே நம்மாழ்வாரும் "பரன் திறமன்றிப் பல்லுலகீர்! தெய்வம் மற்றில்லை" [திருவாய் 4-10-3] "வெள்ள நீர்ச்சடையானும் நின்னிடை வேறலாமை விளங்கநின்றதும்" [திருவாய் 5-10-4] "உரைக்கின்ற முக்கட்பிரான் யானே என்னும்" [திருவாய் 5-6-8] என்று அருளிச் செய்தார். சங்ககாலத் தமிழரும் "ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல் மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ" [பரிபாடல் 1] [ஐந்து தலைகளை உடையவனாய், தெய்வத்தன்மை உடையவனாய், சிறந்த ப₃லத்தையும் சக்தியையும் உடையவனான சிவனும், அவன் செய்யும் ஸம்ஹாரத்தொழிலும் திருமாலாகிய நீயே] என்று ஶிவனையும், அவன் செய்யும் ஸம்ஹாரத் தொழிலையும் திருமாலோடு ஒரே வேற்றுமையில் படிப்பதன்மூலம் 'இங்கு ஸ்வரூபைக்யம் கருதப்படவில்லை, திருமால் ப்ரகாரியாகவும், மற்றவையனைத்தும் அவனுக்கு ப்ரகாரமாகவும் இருப்பதாலே அனைத்தும் திருமாலே என்று கூறப்படுகிறது' என்று காட்டினார்கள். (வித்தேஶோ யக்ஷரக்ஷஸாம்) யக்ஷர்கள் ராக்ஷஸர்களுக்குள் பணத்துக்கு அதி₄பதியாகையாலே தலைசிறந்தவனான குபே₃ரன் நானே. யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் நெருங்கிய ஜாதியாகையாலே சேர்த்து எடுக்கப்படுகிறார்கள். ஆகையால் குபே₃ரன் ராக்ஷஸஜாதியைச் சேர்ந்தவன் என்று நினைக்க இடமில்லை. பணத்துக்குப் பதியாயிருப்பவன் என்னும் 'வித்தேஶ' பத₃த்தால் யக்ஷ ராக்ஷஸர்களுக்குள் குபே₃ரனுக்குள்ள சிறப்பு உணர்த்தப்படுகிறது. இப்படி நிர்த்₄தாரணே ஷஷ்டி₂யைக்கொள்ளாமல் ஸம்ப₃ந்த₄ஸாமாந்யப் பொருளில் ஆறும் வேற்றுமை வழங்கப்பட்டிருப்பதாகக்கொண்டு 'நக்ஷத்ராணும் அஹம் ஶஶீ'(21) என்றவிடத்திற்போலே யக்ஷராக்ஷஸ ஜாதி இரண்டுக்கும் தலைவனான குபே₃ரன் நானே என்று கூறுவதாகவும் கொள்ளலாம். (வஸூநாம் பாவகஶ்ச அஸ்மி) எட்டு வஸுக்களுள் தலைமைபெற்றவனான பாவகன் என்னும் வஸு நானே. (மேருः ஶிக₂ரிணும் அஹம்) பொன், இரத்தினம் முதலானவற்றாலான சிக₂ரங்களையுடைய மலைகளுக்குள் நான் சிறப்புற்ற மேரு மலையாகி

पुरोधसां च मुख्यं मां विद्धि पार्थ बृहस्पतिम्।
सेनानीनामहं स्कन्दः सरसामस्मि सागरः ॥ २४ ॥

24. புரோத$_4$ஸாம் ச முக்$_2$யம் மாம் வித்$_3$தி$_4$ பார்த்த$_2$ ப்$_3$ருஹஸ்பதிம் ।
ஸேநாநீநாமஹம் ஸ்கந்த$_3$: ஸரஸாமஸ்மி ஸாக$_3$ர: ॥

பார்த்த$_2$!—குந்தீபுத்ரனே! **புரோத$_4$ஸாம்**—புரோஹிதர்களுள், **முக்$_2$யம்**—சிறப்புற்றவரான, **ப்$_3$ருஹஸ்பதிம் ச**—ப்$_3$ருஹஸ்பதியாகவும், **மாம் வித்$_3$தி$_4$**—என்னை அறிவாயாக; **ஸேநாநீநாம்**—ஸேனைத் தலைவர்களுக்குள், **ஸ்கந்த$_3$:**—(சிறப்புற்ற) முருகன், **அஹம்**—நானே, **ஸரஸாம்**—குளங்களுக்குள், **ஸாக$_3$ர:**—(சிறப்புற்ற) கடல், **அஹமஸ்மி**—நானேயாகிறேன்.

---

25. முற்றும் புரோகிதர்க்குள் முன்னும்பிர கற்பதியென்
றுற்று விசயா வுணரென்னை—மற்றுத்தான்
சேனைத் தலைவரிற் சீர்க்கந்தன் சாகரநான்
ஏனைப் புனற்றடங்கட் கிங்கு.

விசயா—விஜயனே! **முற்றும் புரோகிதர்க்குள்**—அறிவால் நிறைந்த புரோஹிதர்களுக்குள், **முன்னும் பிரகற்பதி என்று**—முக்கியமானவனை ப்$_3$ருஹஸ்பதி என்று, **என்னை உற்று உணர்**—என்னை நன்கு அறிவாய், **மற்றுத் தான்**—மேலும், **சேனைத்தலைவரில்**—ஸேனைத்தலைவர்களுக்குள், **சீர்க்கந்தன் (நான்)**—சிறப்புற்ற முருகன் நானே, **ஏனை**—மேலும், **இங்கு**—இவ்வுலகில், **புனல் தடங்கட்கு**—குளங்களுக்குள், **சாகரம் நான்**—சிறப்புற்ற கடலும் நானே.

றேன். 'ஶிக$_2$ரி' ஶப்$_3$த$_3$த்திலே 'இநிச்' ப்ரத்யயம் 'பூ$_4$மநிந்தா$_3$ ப்ரஶம்ஸாஸு' என்று தொடங்கும் இலக்கண விதி$_4$ப்படி ப்ரஶம்ஸைப் பொருளிலேயாய், பொன், இரத்தினம் முதலானவற்ருலான சிகரங்களை உடையவையாகையாலே கவிகளால் புகழப்படும் மலைகளைக் குறிக்கிறது. இக்காரணத்தாலேயே இத்தகைய ஶிக$_2$ரங்களில்லாத ஹிமாலயம் முதலான மலைகளை 25-வது ஶ்லோகத்தில் '**ஸ்தா$_2$வராணும் ஹிமாலய:**' என்று கூறியதோடு புநருக்தியில்லை.

॥ भा ॥ पुरोधसामुत्कृष्टो बृहस्पतिर्यः, सोऽहमस्मि। सेनानीनां— सेनापतीनां स्कन्दोऽहमस्मि। सरसां सागरोऽहमस्मि ॥ २४ ॥

महर्षीणां भृगुरहं गिरामस्म्येकमक्षरम्।
यज्ञानां जपयज्ञोऽस्मि स्थावराणां हिमालयः ॥ २५ ॥

---

24. (புரோத$_4$ஸாம் ச முக்$_2$யம் ப்$_3$ருஹஸ்பதிம் மாம் வித்$_3$தி$_4$) புரோஹிதர்களுள் முக்கியமானவரான ப்$_3$ருஹஸ்பதியாக என்னை அறிவாய். ப்$_3$ருஹத்துக்கள் எனப்படும் ஆசார்ய ஸ்த$_2$ானத்தை வகிக்கும் புரோகிதர்களுள் இவர் தலைமைபெற்றவர் என்பதை 'ப்$_3$ருஹஸ்பதி' என்னும் பெயரே காட்டுகிறது. அறிவில் சிறந்தவர்களை 'ப்$_3$ருஹஸ்பதி' என்று அழைக்கும் உலகவழக்கும் இவரது சிறப்பைக் காட்டுகிறது. 'வாசஸ்பதி' என்று இவருக்கு வழங்கும் மற்றொரு பெயரும் இவரது வாக்குவன்மையைக் காட்டுகிறது. இச்சிறப்புக்களையெல்லாம் முக்$_2$யஶப்$_3$த$_3$த்தாலே உணர்த்துகிறான் கண்ணன். இந்த முக்$_2$யஶப்$_3$த$_3$த்தை—கண்ணன் தன்னோடு ஒரே வேற்றுமையில் படிக்கும் எல்லா ஶப்$_3$த$_3$ங்களோடும் சேர்த்துக் கொள்ளவேண்டும். (ஸேநாநீநாம் அஹம் ஸ்கந்த$_3$:) ஸேனைத் தலைவர்களுக்குள் சிறப்புற்ற கந்தனாகவும் நான் ஆகிறேன். க்ரௌஞ்சமலையைத் துளைத்தது, சூர்மாவைத் தடிந்தது, தே$_3$வ ஸேனாதி$_4$பதியாயிருந்து பல வெற்றிகளை தே$_3$வர்களுக்குத் தந்தது முதலான இவனது சிறப்புகள் இதிஹாஸபுராணங்களிலும், சங்க இலக்கியங்களிலும் ப்ரஸித்$_3$த$_4$ம். கர்மத்துக்கு வசப்பட்ட சேனைத்தலைவர்களே இங்கு 'ஸேநாநீ' ஶப்$_3$த$_3$த்தால் எடுக்கப்படுகிறார்கள். அப்ராக்ருத லோகத்திலிருப்பவராகையாலே ப்ராக்ருத விலக்ஷணரான விஷ்வக்ஸேநராகிற ஸேனைமுதலியார் இங்குள்ள 'ஸேநாநீ' ஶப்$_3$த$_3$த்தால் கருதப்படவில்லை. (ஸரஸாம் ஸாக$_3$ர: அஸ்மி) குளங்களுக்குள் சிறப்புற்ற கடலாயிருக்கிறேன் நான். இங்கு 'ஸரஸ்' என்று நீரோட்டம் இல்லாதவையாய், நிலையாயிருக்கும் நீருக்கு இருப்பிடமாயிருக்கும் நீர்நிலைகள் குறிக்கப்படுகின்றன. கடலும் அத்தகையதொரு நீர்நிலையாயிருக்கையாலே பெரியதொரு ஸரஸ்ஸாகிறது. நீரோட்டமுள்ள நீருக்கு இருப்பிடமான நதிகள் 31-வது ஶ்லோகத்தில் 'ஸ்ரோதஸாமஸ்மி ஜாஹ்நவீ' என்று குறிக்கப்படுகையாலே இங்கு நீரோட்டமில்லாத நீர்நிலைகளையே 'ஸர:' எனும் ஶப்$_3$த$_3$த்தால் குறிப்பது பொருத்தம். (பார்த்த$_2$) என் அத்தையான குந்தியின் பிள்ளையாகையாலே எனது இப்பெருமைகளை உகக்கக்கூடிய உனக்குக் கூறுகிறேன் என்று கருத்து. 24.

25. மஹர்ஷீணும் ப்$_4$ருகு$_3$ரஹம் கி$_3$ராமஸ்ம்யேகமக்ஷரம் ।
யஜ்ஞாநாம் ஜபயஜ்ஞோऽஸ்மி ஸ்த$_2$ாவராணும் ஹிமாலய:॥

மஹர்ஷீணும்—மரீசி முதலான மஹரிஷிகளுக்குள், **அஹம்**—நான், **ப்$_4$ருகு$_3$:**—(சிறந்தவரான) ப்$_4$ருகு$_3$வாகிறேன். **கி$_3$ராம்**—பொருளுடைய ஶப்$_3$த$_3$ங்களுக்குள், **ஏகமக்ஷரம் அஸ்மி**—ஒற்றை எழுத்தாகிற ப்ரணவமாகிறேன். **யஜ்ஞாநாம்**—யஜ்ஞங்களுக்குள், **ஜபயஜ்ஞ: அஸ்மி**—(சிறந்ததான) ஜபயஜ்ஞமாக ஆகிறேன். **ஸ்த$_2$ாவராணும்** — ஸாமாந்ய மலைகளுக்குள், **ஹிமாலய: — (** சிறந்ததான **)** இமயமலையாகிறேன்.

---

26. மாமுனிவர் தம்மிற் பிருகுநான் வண்சொற்கு
ளோமென்று சொல்லுமோ ரக்கரநான்—சேமமுறு
மெச்சங்க ளிற்செபமா மெச்சநா னிற்பவற்று
ளுச்சந் திகழிமவா னுற்று.

மாமுனிவர் தம்மில்—மஹரிஷிகளுக்குள், **பிருகு நான்**—நான் ப்$_4$ருகு$_3$வாகிறேன். **வண் சொற்குள்**—பொருளுடைய சொற்களுக்குள், **ஓம் என்று சொல்லும் ஓர் அக்கரம் நான்**—ஓம் என்று சொல்லப்படும் (சிறந்ததான) ஒற்றை எழுத்து நானே. **சேமம் உறும் எச்சங்களில்** — லோக க்ஷேமத்தைச் செய்யும் யஜ்ஞங்களில், **செபமாம் எச்சம் நான்**—ஜபயஜ்ஞமும் நானே. **உற்று நிற்பவற்றுள்**—நிலையாயிருக்கும் ஸாமாந்ய மலைகளுக்குள், **உச்சம் திகழ் இமவான்(நான்)**—உயர்வு பெற்றிருக்கும் இமவான் நானே.

---

25. (மஹர்ஷீணும் ப்$_4$ருகு$_3$ரஹம்) ஸப்தப்$_3$ரஹ்மாக்கள், ஸப்தரிஷிகள் எனப்படும் மரீசி முதலான மஹரிஷிக$_3$ணங்களுக்குள் சிறந்தவரான ப்$_4$ருகு$_3$மஹரிஷி நானே. '**தே$_3$வர்ஷீணும் ச நாரத$_3$:**' [26] '**முநீநாமப்யஹம் வ்யாஸ:**' [37] என்று தே$_3$வரிஷிகளையும் முனிவர்களையும் தனியே எடுக்கையாலே இங்கு மரீசி முதலான மஹரிஷிக$_3$ணம் குறிக்கப்படுகிறது. பாத்$_3$மோத்தரத்தில் கூறியபடி. மற்ற மஹரிஷிகளுக்கும் பரதத்துவ நிர்ணயம் செய்து, விஷ்ணுவே பரமஸாத்விகமான பரம்பொருள் என்று நிரூபித்தவரா

॥ भा ॥ महर्षीणां मरीच्यादीनां भृगुरहम्। अर्थाभिधायिनश्शब्दा गिरः; तासामेकमक्षरं प्रणवोऽहमस्मि। यज्ञानामुत्कृष्टो जपयज्ञोऽस्मि। पर्वतमात्राणां हिमवानहम्॥ २५ ॥

கையாலும், அர்ச்சாஸ்த₂லங்கள் பலவற்றை ஸ்த₂ாபித்தவராகை யாலும் ப்₄ருகு₃மஹரிஷி மஹரிஷிகளுக்குள்ளே சிறப்புற்றவரா கிறார். (கி₃ராம் ஏகமக்ஷரம் அஸ்மி) ஓர் அர்த்த₂த்தைச் சொல்லும் ஶப்₃த₃ங்களுள் ஒற்றை எழுத்தாகிற ஓங்காரமாகிறேன். 'கி₃ராம்' என்று வெறும் ஶப்₃த₃த்தைச் சொல்லுவதன்று. ஸமுத்₃ரகே₄ாஷம் முதலான பொருளற்ற ஓசைகளைக் குறித்து அச்சொல்லை வழங்கு வதில்லையன்றோ. ஆகையால் அது பொருளுடைய ஶப்₃த₃ங்களையே குறிக்கிறது. **'அக்ஷராணும் அகாரோஸ்மி'** [33] என்று எழுத்துக் களைத் தனியே எடுக்கையாலும், எழுத்துக்கள் அனைத்துக்கும் பொருளில்லையாகையாலும், 'கி₃ராம்' என்பது எழுத்துக்களை மாத்திரம் குறிக்காது. ஆகையால் இங்கு 'கி₃ராம்' என்று பொருளு டைய ஶப்₃த₃ங்களைக் குறிக்கிறது. **'அக்ஷராணும் அகாரோஸ்மி'** என்று அகாரத்தைத் தனியே எடுக்கையால் 'ஏகமக்ஷரம்' என்பது அகாரத்தைக் குறிக்காது. ஆகையால் **'ஓமித்யேகாக்ஷரம் ப்₃ரஹ்ம'** [கீ₃தை 8-13] என்றவிடத்தில் ஏகாக்ஷரமாகக் குறிக்கப்பட்ட ஓங்கா ரமே இங்கு 'ஏகமக்ஷரம்' என்று குறிக்கப்படுவதாகக் கொள்வதே பொருந்தும். பொருளைக் குறிக்கும் ஶப்₃த₃ங்களுக்குள்ளே 'அகார வாச்யனான திருமாலுக்கே அடிமைப்பட்டவன் மகாரவாச்யனான ஜீவன்' எனும் தலைசிறந்த பொருளைக்குறிக்கும் ஓங்காரம் சிறப்புற்றது என் பது வெளிப்படை. "இலைகளைத் தைக்கும் குச்சி போலே, எல்லா வேத₃வாக்கியங்களையும் ப்ரணவம் இணைக்கிறது" என்று ஒரு வேத₃வாக்கியத்தில் ப்ரணவத்துக்கு மற்ற வேத₃ஶப்₃த₃ங் களைக் காட்டிலும் மற்றொரு வகையில் சிறப்பும் காட்டப்பட்டது. (யஜ்ஞாநாம் ஜபயஜ்ஞோऽஸ்மி) யஜ்ஞங்களுக்குள் சிறப்புற்ற ஜபயஜ்ஞமாகிறேன். **"விதி₄யஜ்ஞாத் ஜபயஜ்ஞோ விஶிஷ்டோ த₃ஶபி₄ர்கு₃ணை:"** [மநு 2-85] [வேத₃ங்களில் விதி₄க்கப்பட்ட யாக₃ங்களாகிற யஜ்ஞங்களைக் காட்டிலும் ஜபயஜ்ஞம் பத்துமடங்கு சிறந்தது] என்று கூறப்பட்டது. யாக₃ங்களில் பசுஹிம்ஸை விதி₄க்கப்பட்டுள்ளது. ஜபயஜ்ஞத்தில் அது இல்லை. இது யாக₃ங் களைக் காட்டிலும் ஜபயஜ்ஞத்துக்குள்ள முக்கியமான சிறப்பு. ஹிம்ஸையற்ற ஜபயஜ்ஞத்திலும், ப்ரபத்திரூபமான ஜ்ஞானயஜ்ஞத் திலும் ஈடுபடத் தகுந்த பக்குவமில்லாதவர்களுக்கே ஹிம்ஸையோடு

கூடிய யாக₃ங்கள் ஸ்வர்க்க₃ம் முதலான ப₂லன்களைப் பெறுவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த யாக₃ங்களிலும் பசுஹிம்ஸை வேத₃ விதி₄யினால் செய்யப்படுகிறது. அந்தப் பசுவுக்குத் தீங்கிழைக்க வேண்டும் எனும் எண்ணத்துடன் ஹிம்ஸிக்கப்படுவதில்லை. அந்தப் பசுவிற்கு ஸ்வர்க்க₃ம் கிடைக்கிறது என்று ஶ்ருதி கூறுகிறது. அந்த யாக₃ம் தேவதைகளை உகப்பிப்பதாகவும் ஆகிறது. ஆகையால் யாக₃த்தைச் செய்வதிலும் தோ₃ஷமில்லை. ஆயினும் உபரிசரவஸு முதலான ஸாத்வதத₄ர்மநிஷ்ட₂ர்கள் அஹிம்ஸாத்மகமான ஜபயஜ்ஞம் முதலானவையே எம்பெருமானை மிகவும் உகப்பிப்பவை, மோக்ஷத்தை எளிதில் பெறுவிப்பவை என்று அறுதியிட்டு, அவற்றில் ஈடுபட்டார்கள். இவ்விஷயங்கள் பின்வரும் ப்ரமாணங்களிலும் காட்டப்பட்டன—"குர்யாத்₃ க்₄ருதபஶும் ஸங்கே₃ குர்யாத் பிஷ்டபஶும் தத₂ா। ந த்வேவ து வ்ருத₂ா ஹந்தும் பஶுமிச்சே₂த் கத₃ஞ்சந॥" [மநு 5-37] [ப்ராணிமாம்ஸத்தைப் புசிக்க நினைவுண்டானால் (யாக₃த்தில்) நெய்யினாலாவது, மாவினாலாவது ப்ராணியைப்போல் செய்து சாப்பிடலாம். பசுவை வீணாகக்கொல்ல விரும்பவும் கூடாது.] "பஶுயஜ்ஞை: கத₂ம் ஹிம்ஸ்ரை: மாத்₃ருஶோ யஷ்டுமர்ஹதி" [ப₄ார-மோக்ஷ] [பஶு ஹிம்ஸையைச் செய்யும் பஶுயஜ்ஞங்களைக்கொண்டு என்னைப்போன்றவன் எப்படி யாக₃ம் செய்யமுடியும்?] "ஹிம்ஸாத்மகைஸ்து கிம் தஸ்ய யஜ்ஞை: கார்யம் மஹாத்மந। ப்ரஸ்வாபே ச ப்ரபோ₃தே₄ ச பூஜிதோ யேந கேஶவ:॥" [ப₄ார-மோக்ஷ] [மஹாத்மாவாய், தூங்கும்போதும் விழித்திருக்கும்போதும் கேஶவனைப் பூஜித்த அவனுக்கு ஹிம்ஸையைச் செய்யும் யஜ்ஞங்களால் என்ன பயன்?] இவ்வண்ணமாக மற்ற யாக₃ங்களில் ஹிம்ஸை ஏற்படுகிறதே என்னும் கேள்வியும், அது பக்குவமற்ற அதி₄காரிகளுக்கே எனும் பதிலும் சொல்லவேண்டிய பெரிய இடர்ப்பாடு உள்ளது; ஜபயஜ்ஞத்தில் இக்கேள்விக்கே இடமில்லை; ஜபிக்கப்படும் மந்திரத்தின் பொருள் தடையற விளங்குகிறது; பீ₃ஜம், அங்க₃ ந்யாஸகரந்யாஸங்கள் முதலானவற்றின்மூலம் விரைவில் ஸமாதி₄நிலை கிட்டுகிறது. இக்காரணங்களால் ஜபயஜ்ஞம் மற்ற யஜ்ஞங்களைக் காட்டிலும் சிறப்புற்றது. மற்ற யஜ்ஞங்கள் அக்₃நிகார்யத்தில் அதி₄காரமுள்ள க்₃ருஹஸ்த₂னே அநுஷ்டி₂க்கக்கூடியவை; ஜபயஜ்ஞம் அப்படியல்லாமல் எல்லா ஆஶ்ரமத்தைச் சேர்ந்தவர்களும் அநுஷ்டி₂க்கக்கூடியது; "ஜப்யேநைவ து ஸம்ஸித்₃த்₄யேத் ப்₃ராஹ்மணோ நாத்ர ஸம்ஶய:। குர்யாத₃ந்யந் ந வா குர்யாத் மைத்ரோ ப்₃ராஹ்மண உச்யதே॥" [மநு 2-87] [ப்₃ராஹ்மணன் ஜபயஜ்ஞத்தில் ஜபிப்பதாலேயே ஸித்₃தி₄யடைவான்; இதில் ஐயமில்லை; மற்ற

अश्वत्थस्सर्ववृक्षाणां देवर्षीणां च नारदः।
गन्धर्वाणां चित्ररथस्सिद्धानां कपिलो मुनिः॥ २६॥

26. அஶ்வத்த₂ஸ்ஸர்வவ்ருக்ஷாணும் தே₃வர்ஷீணும் ச நாரத₃: ।
க₃ந்த₄ர்வாணும் சித்ரரத₂ஸ்ஸித்₃த₄ாநாம் கபிலோ முநி:॥

उच्चैश्श्रवसमश्वानां विद्धि माममृतोद्भवम्।
ऐरावतं गजेन्द्राणां नराणां च नराधिपम्॥ २७॥

27. உச்சைஶ்ஶ்ரவஸமஶ்வாநாம் வித்₃தி₄ மாமம்ருதோத்₃ப₄வம் ।
ஐராவதம் க₃ஜேந்த்₃ராணும் நராணும் ச நராதி₄பம் ॥

आयुधानामहं वज्रं धेनूनामस्मि कामधुक्।
प्रजनश्चास्मि कन्दर्पः सर्पाणामस्मि वासुकिः॥ २८॥

28. ஆயுத₄ாநாமஹம் வஜ்ரம் தே₄நூநாமஸ்மி காமது₄க்।
ப்ரஜநஶ்சாஸ்மி கந்த₃ர்ப்ப: ஸர்ப்பாணுமஸ்மி வாஸுகி: ॥

யாக₃ங்களைச் செய்தாலும் செய்யலாம் (பூ₄ததயையிஞலே) செய்யாமல் விட்டாலும் விடலாம்; எல்லா ஜீவராஶிகளிடமும் நட்புக்கொண்டவனே ப்₃ராஹ்மணனுகிருன்.] என்கிறபடியே நாலு ஆஶ்ரமத்திலும் சேராமல் மனைவியையிழந்து ஸந்யாஸியாகாமலிருக்கும் விது₄ரன் முதலானுர்க்கும் ஜபயஜ்ஞத்தால் ஸித்₃தி₄ ஏற்படுகிறது. இந்தச் சிறப்புகளால் 'யஜ்ஞங்களுக்குள் ஜபயஜ்ஞம் நானே' என்கிருன் கண்ணன். (ஸ்த₂ாவராணும் ஹிமாலய:) நிலையாயிருக்கும் ஸாத₄ாரணமலைகளில் நான் இமயமலையாகிறேன். ஶிக₂ரிகளான மேரு முதலான மலைகளைப் பற்றி முன்னமே கூறப்பட்டது; ஸ்த₂ாவரஶப்₃த₃ம் மரங்களைக் குறிக்குமாயினும் "அஶ்வத்த₂: ஸர்வவ்ருக்ஷாணும்"என்று மரங்கள் அடுத்துச் சொல்லப்படவிருக்கின்றனவாகையாலும், இமயமலை மலைகளில் சேர்ந்ததேயொழிய மரங்களில் சேர்ந்ததல்லவாகையாலும், இங்கு ஸ்த₂ாவரஶப்₃த₃ம் பொன் முதலிய முடிகளற்ற ஸாமாந்ய மலைகளைக் குறிக்கிறது. அம்மலைகளில் நீளத்தாலும், உயரத்தாலும் பெருமை பெற்றிருக்கையாலும், பிரிதி, பதரி முதலானவிடங்களில் எம்பெருமானும், கைலாஸத்தில் சிவனும், மற்றும் பல தேவர்களும், ரிஷிகளும், யோகி₃களும் வாழுமிடமாகையாலும் இமயமலைக்குள்ள சிறப்பு வெளிப்படையானது. 25.

अनन्तश्चास्मि नागानां वरुणो यादसामहम्।
पितॄणामर्यमा चास्मि यमस्संयमतामहम्॥ २९॥

29. அநந்தஶ்சாஸ்மி நாக$_3$ாநாம் வருணோ யாத$_3$ஸாமஹம் ।
பித்ரூணாமர்யமா சாஸ்மி யமஸ்ஸம்யமதாமஹம் ॥

ஸர்வ வ்ருக்ஷாணாம் — எல்லா மரங்களுக்குள்ளும், **அஶ்வத்த$_2$:**—அரசமரமாகிறேன்; **தே$_3$வர்ஷீணாம் ச**—தே$_3$வரிஷிகளுக்குள்ளும், **நாரத$_3$:**—நாரதனாகிறேன்; **க$_3$ந்த$_4$ர்வாணாம்**—க$_3$ந்த$_4$ர்வர்களுக்குள், **சித்ரரத$_2$:**—சித்திரரத$_2$னாகிறேன; **ஸித்$_3$த$_4$ாநாம்** — அணிமாதி$_3$ஸித்$_3$தி$_4$பெற்றவர்களுக்குள், **கபில: முநி:**—கபிலமுனியாகிறேன்; **அஶ்வாநாம்**-குதிரைகளுக்குள், **அம்ருதோத்$_3$ப$_4$வம்** — திருப்பாற்கடலமுதத்திலுண்டான, **உச்சைஶ்ஶ்ரவஸம்**-உச்சைஶ்ஶ்ரவஸ் என்னும் குதிரையாக, **மாம் வித்$_3$தி$_4$**—என்னை அறிவாய். **க$_3$ஜேந்த்$_3$ராணாம்** — சிறந்த யானைகளுள், **ஐராவதம்** — ஐராவதமாகவும் (என்னையறிவாய்); **நராணாம் ச**—மனிதர்களுக்குள்ளும், **நராதி$_4$பம்**—அரசனாக (என்னை அறிவாய்); **ஆயுத$_4$ாநாம்**—ஆயுத$_4$ங்களுக்குள், **அஹம் வஜ்ரம் அஸ்மி**—நான் வஜ்ராயுத$_4$மாகிறேன்; **தே$_4$நூநாம்**—பசுக்களுக்குள், **காமது$_4$க் அஸ்மி**—காமதே$_4$னு ஆகிறேன்; **ப்ரஜந:**—ப்ரஜைகள் உண்டாவதற்குக் காரணமான, **கந்த$_3$ர்ப்ப: ச அஸ்மி**—மன்மத$_2$னாகவும் ஆகிறேன்; **ஸர்ப்பாணாம்**—ஒரு தலைப்பாம்புகளில், **வாஸுகி: அஸ்மி**—வாஸுகியாகிறேன். **நாக$_3$ாநாம்** — பலதலைப்பாம்புகளில், **அநந்த: ச அஸ்மி**—அனந்தனாகவும் இருக்கிறேன்; **யாத$_3$ஸாம்** — ஜலத்துள் வஸிப்பவர்களுக்குள், **வருண: அஹம்**—நான் வருணனாகிறேன்; **பித்ரூணாம்**—பித்ருக்களுக்குள், **அர்யமா ச அஸ்மி**—அர்யமாவாகவுமாகிறேன்; **ஸம்யமதாம்** — தண்டிப்பவர்களுக்குள், **யம: அஹம்**—நான் யமனாகிறேன்.

27. சீரரசிங் கெம்மரத்துந் தெய்வ முனிவர்களிற்
பேரறிவ ஞாரதனும் பேசிஞன் றாரமருங்
கந்திருவர்க் காவலஞன் கண்ணூர் கபிலமுனி
முந்தியலுஞ் சித்தர்க்கு முன்.

இங்கு எம்மரத்தும் — இவ்வுலகிலுள்ள எல்லா மரத்துள்ளும், **சீர் அரசு**—சிறப்புற்ற அரசமரமாகிறேன்; **பேசில்**—பேசப்புக்கால், **தெய்வமுனிவர்களில்**—தேவரிஷிகளில், **பேர் அறிவன் நாரதனும் நான்**—பேரறிவாளஞன நாரதனும் நானே; **தார் அமரும் கந்திருவர் காவலன் நான்**—மாலே தரித்த கந்தர்வராஜாவான சித்ரரதன் நானே, **முந்து இயலும் சித்தர்க்கு**-பழையவர்களான ஸித்த புருஷர்களுக்குள், **முன் கண் ஆர் கபிலமுனி நான்**—முற்பட்டவராய், அறிவு நிறைந்தவரான கபிலமுனி நானே.

28. என்னைப் பரிக ளிவற்றி லமுதுதித்த
முன்னைப் பரியாக முற்றுணர்நீ—யன்னவகை
யைரா வதமா வணிகளிற்றுக் காங்குநரர்க்
கேரார் நராதிபஞ வெண்.

பரிகள் இவற்றில்—குதிரைகளுக்குள், **அமுது உதித்த முன்னைப் பரியாக** — திருப்பாற்கடலமுதத்தில் உண்டான பழங்குதிரையான உச்சைஶ்ஶ்ரவஸ்ஸாக, **என்னை** — என்னை, **நீ**—நீ, **முற்று உணர்**—நன்கு உணர்வாயாக; **அணி களிற்றுக்கு**—அலங்கரிக்கப்பட்ட யானைகளுக்குள், **அன்ன வகை**—முற்கூறியபடி திருப்பாற்கடலமுதத்தில் உதித்த, **ஐராவதமா** — ஐராவதமென்னும் யானையாக (என்னை அறிவாய்); **ஆங்கு**— இவ்வுலகில், **நரர்க்கு**-மனிதர்களுக்குள், **ஏர்ஆர் நராதிபஞ** — சிறப்புடைய அரசனுக, **எண்**— (என்னை) நினைப்பாயாக.

29. வல்லா யுதங்களில் வச்சிரநான் வண்கோவி
லெல்லாஞ் சுரக்கு மெழிற்கோநான்—சொல்லாரு
முற்பத்திக் கந்தற் பனுநா னுயர்காளச்
சற்பத்தில் வாசுகிநான் ருன்.

வல் ஆயுதங்களில் வலிமைமிக்க ஆயுத₄ங்களில், **நான் வச்சிரம்**—நான் வஜ்ராயுத₄மாகிறேன்; **வண் கோவில்**— வண்மைமிக்க பசுககளில், **எல்லாம் சுரக்கும்**—கேட்டதை யெல்லாம் கொடுக்கும், **எழில் கோ நான்**—அழகிய காம தே₄நு நானே; **சொல் ஆரும் உற்பத்தி**—அனைவராலும் புகழப்படும் ப்ரஜோத்பத்தியைச் செய்யும், **கந்தற்பனும் நான்**—மன்மத₂னும் நானே; **உயர் காளச் சற்பத்தில்**—உயர்வுடைய (ஒருதலை) காலசர்ப்பங்களில், **வாசுகி**—வாசுகி எனனும் பாம்பு, **நான் தான்**—நானே.

30. பன்முகத்து நாகத்துப் பண்பா ரனந்தனுன்
றென்முகத்துக் கோவருணன் றோயத்தார்க்—கின்
லான பிதுக்கட் கரியமா தண்டிப்பார்க் [முகத்தி
கூன மறயமனு முற்று.

பல் முகத்து நாகத்து—பலதலைகளையுடைய பாம்புகளுக்குள், **பண்பு ஆர்** — ப₄க₃வச்சேஷத்வம் நிறைந்த, **அனந்தன் நான்**—ஆதி₃சேஷன் நானே; **தோயத்தார்க்கு**— ஜலவாஸிகளுக்குள், **தொல் முகத்து கோ வருணன்**— அநாதி₃காலமாக முக்₂யத்வத்தையுடைய கடலரசனுன வருணன் நானே. **இன் முகத்தில் ஆன பிதுக்கட்கு**—இனிய முக₂த்தையுடைய பித்ருக்களுக்குள், **அரியமா** — அர்யமா நானே. **ஊனமற முற்று தண்டிப்பார்க்கு** — பக்ஷபாதமில்லாமல் அனைவரையும் தண்டிப்பவர்களுக்குள், **யமனும்**— நான் யமனுகிறேன்.

---

26. (அர்வத்த₂ஸ்ஸர்வவ்ருக்ஷாணும்) பூஜிக்கத்தக்க மரங்கள் அனைத்துக்குள்ளும் அரசமரமாகிறேன் நான். அரசமரத்தைக் காட்டிலும் பாரிஜாதம் முதலான மரங்கள் பலவகையில் சிறப்புற்றவையானுலும், ப₄க₃வத்ஸாந்நித்₄யமுள்ளதாகையால் பூஜிக்கத்தக்க அரசமரமே பாரிஜாதம் முதலானவற்றைக் காட்டிலும் சிறப்புற்றது என்று கருத்து. (தே₃வர்ஷிணும் ச நாரத₃:) தே₃வரிஷிகளுக்குள் நான் நாரத₃னுகிறேன். ரிஷிஶப்₃த₃ம் 'வேத₃மந்த்ரத்தைக் கண்டவர்' என்னும் பொருளையுடையது. தே₃வராகவும் இருந்து ரிஷியாகவுமிருப்பவர்

॥भा॥ वृक्षाणां पूज्योऽश्वत्थोऽहम्। देवर्षीणां नारदोऽहम्। कामधुक्—दिव्या सुरभिः। जननहेतुः कन्दर्पश्चाहमस्मि। सर्पाः—

தே$_3$வரிஷி. மஹாப$_4$ாரதம் முதலானவற்றில் பல இடங்களில் பரம விஷ்ணுப$_4$க்தராயிருக்கை முதலான பல பெருமைகள் நாரத$_3$ருக்குச் சொல்லப்பட்டிருப்பது இங்கு அநுஸந்தி$_4$க்கத்தக்கது. (க$_3$ந்த$_4$ர்வாணாம் சித்ரரத$_2$:) க$_3$ந்த$_4$ர்வர்களுக்குள் க$_3$ந்த$_4$ர்வராஜனான சித்ரரத$_2$ன் நானே. (ஸித்$_3$த$_4$ாநாம் கபிலோ முநி:) ஸித்$_3$த$_4$ புருஷர்களுள் கபிலமுனி நானே. முற்பிறவிகளில் செய்த புண்யத்தின் பயனாகப் பிறந்தது முதல் 1 அணிமா, 2 மஹிமா, 3 க$_3$ரிமா, 4 லகி$_4$மா, 5 ப்ராப்தி, 6 ப்ராகாம்யம், 7 ஐஶ்வர்யம், 8 வஶித்வம் என்னும் அஷ்டமாஸித்$_3$தி$_4$களையுடையவர்கள் ஸித்$_3$த$_4$ர்கள். "**ஆதி$_3$ வித்$_3$வான் ஸித்$_3$த$_4$:**" என்று கபிலர் ஆதி$_3$ஸித்$_3$த$_4$ராகக் கூறப்படுகிறார் — "**ரிஷிம் ப்ரஸூதம் கபிலம் மஹாந்தம்**" [ஶ்வே 5-2] என்று உபநிஷத்திலும் "**த$_3$த்$_3$ருஶு: கபிலம் தத்ர வாஸுதே$_3$வம் ஸநாதநம்**" [ரா-பா$_3$ 40-24] [பழமையான வாஸுதே$_3$வனின் அவதாரமான கபிலமுனியை அங்கு கண்டார்கள்.] என்று ஸ்ரீராமாயணத்திலும் இவர் எம்பெருமானுடைய அம்ஶம் என்று கூறப்பட்டது. இவரை ஸித்$_3$த$_4$புருஷராக எடுக்கையாலே, பரஶுராமன் முதலானவர்களைப்போலே இவரையும் ஒரு ஜீவனை இடையிட்ட ஆவேஶாவதாரம் என்று கொள்ளவேண்டும். 26.

27. (அஶ்வாநாம் அம்ருதோத்$_3$ப$_4$வம் உச்சைஶ்ஶ்ரவஸம் மாம் வித்$_3$தி$_4$) குதிரைகளுக்குள் திருப்பாற்கடலமுதத்திலிருந்து உண்டான உச்சைஶ்ஶ்ரவஸ் என்னும் குதிரையாக என்னை அறிவாயாக; இங்கு அம்ருதஶப்$_3$த$_3$ம் நீரைக் குறிக்கிறது. திருப்பாற்கடல் நீரிலிருந்து தோன்றியதன்றோ இக்குதிரை. அன்றிக்கே கடையப்படும் நிலையிலிருக்கும் அமுதத்திலிருந்தே தோன்றியது என்றும் கொள்ளலாம். "அமுதில் வரும் பெண்ணமுது" [பெரியதிரு 6-1-2] என்று பெரிய பிராட்டியாரைக் குறித்தார் திருமங்கைமன்னனும். (க$_3$ஜேந்த்$_3$ராணாம் அம்ருதோத்$_3$ப$_4$வம் ஐராவதம் மாம் வித்$_3$தி$_4$) தி$_3$க்$_3$க$_3$ஜங்களுக்குள் திருப்பாற்கடலமுதத்தில்நின்றும் தோன்றிய ஐராவதமென்னும் யானையாகவும் என்னை அறிவாய். "வித்$_3$தி$_4$ மாம் அம்ருதோத்$_3$ப$_4$வம்" என்னும் தொடர் மத்$_4$யமணிந்யாயத்தாலே முன்னும்பின்னும் அந்வயிக்கிறது. திருப்பாற்கடலமுதத்தில் பிறந்ததாயிருக்கும் பெருமை இந்த யானைக்கும் குதிரைக்கும் இதிஹாஸ புராணங்களில் படிக்கப்படும் பிறப்பால் வந்த பெருமை. து$_3$ர்வாஸரின் ஶாபத்தாலே

एकशिरसः ; नागाः—बहुशिरसः। यादांसि—जलवासिनः, तेषां वरुणोऽहम्। दण्डयतां वैवस्वतोऽहम्॥ २६—२९॥

திருப்பாற்கடலில் மறைவதற்கு முன்பு இந்த யானை ரத₃ந்தரஸாமத்திலிருந்து தோன்றியதாகவும் பிரமாணங்கள் கூறும். தே₂வேந்திரனின் வாஹனமாயிருப்பதையிட்டும், பிறப்பால்வரும் இந்த ஏற்றத்தையிட்டும் கண்ணன் இந்தக் குதிரையையும் யானையையும் தன் அம்ஶமாகச் சொல்லுகிறான். (நராணும் ச நராதி₄பம்) மனிதர்களுக்குள் தலைவனை அரசனாயிருப்பவன் நானே. மற்ற மனிதர்களுக்குத் தலைவனாயிருப்பதையிட்டு அரசனைத் தன் அம்ஶமாகக் கூறுகிறான். இதையிட்டே "நாவிஷ்ணு: ப்ருதி₂வீபதி:" [அரசன் விஷ்ணுவைக் காட்டிலும் வேறுபடாதவன்] என்னும் வடமொழி நூல் வழக்கு ஏற்பட்டுள்ளது. "திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்"[திருவாய் 4-4-8] என்றார் நம்மாழ்வாரும். 27.

28. (ஆயுத₄ாநாமஹம் வஜ்ரம்) ஆயுத₄ங்களுக்குள் நான் வஜ்ராயுத₄மாயிருக்கிறேன். இந்த்₃ரனுடைய ஆயுத₄மாயிருப்பதையிட்டு இதற்குச் சிறப்பு. இங்கு ஆயுத₄ங்கள் என்றது ப்ராக்ருதமான ஆயுத₄ங்களையே குறிக்கிறது. அப்ராக்ருதமான ஸுத₃ர்ஶனம் முதலான பரமபுருஷனின் ஆயுத₄ங்களைக் காட்டிலும் த₃தீ₄சி முனிவரின் எலும்பிலிருந்து உண்டான வஜ்ரம் மிகத் தாழ்ந்ததன்றோ. (தே₄நூநாமஸ்மி காமது₄க்) பசுக்களுக்குள் கேட்டதையெல்லாம் கொடுக்கும் காமதே₄நு என்னும் தே₃வலோகப்பசு நானே. கேட்டதையெல்லாம் கொடுப்பதாயிருக்கை இதற்கு மற்ற பசுக்களைக் காட்டிலும் சிறப்பு. (ப்ரஜநஶ்சாஸ்மி கந்த₃ர்ப்ப:) உலகில் குழந்தைகள் உண்டாவதற்குக் காரணமாயிருக்கும் மன்மத₂னும் நானே. மன்மத₂னுக்குள்ள இந்தச் சிறப்பு என் அதீ₄நமே என்று கருத்து. அன்றிக்கே, மன்மதன் குழந்தைகளை உண்டாக்கும்போது, மற்ற ஸமயங்களைக் காட்டிலும் என் அம்ஶத்தைச் சிறப்பாகப் பெற்றிருக்கிறான் என்று கருத்தாகவுமாம். (ஸர்ப்பாணும் வாஸுகி: அஸ்மி) ஒருதலைப்பாம்புகளுக்குள் வாஸுகி நானே. அடுத்தபடி பலதலைப்பாம்புகளை நாக₃ஶப்₃த₃த்தாலே எடுக்கையாலே, இங்கு ஸர்ப்பஶப்₄த₃ம் ஒருதலைப்பாம்புகளைக் குறிக்கிறது. அமுதம் கடைந்தபோது கடைகயிறாயிருந்தமை முதலான பெருமைகள் வாஸுகிக்குப் புராணஸித்₃த₄மானது. 28.

29. (நாக₃ாநாம் அநந்தஶ்ச அஸ்மி) பலதலைப்பாம்புகளில் நான் ஆதி₃ஶேஷனாகிறேன். "க₃ந்த₄ர்வாப்ஸரஸஸ்ஸித்₃தா₄:

प्रह्लादश्चास्मि दैत्यानां कालः कलयतामहम्।
मृगाणां च मृगेन्द्रोऽहं वैनतेयश्च पक्षिणाम्॥ ३०॥

**30. ப்ரஹ்லாத₃ஶ்சாஸ்மி தை₃த்யாநாம் கால: கலயதாமஹம்।
ம்ருக₃ாணாம் ச ம்ருகே₃ந்த்₃ரோऽஹம் வைநதேயஶ்ச
பக்ஷிணாம் ॥**

தை₃த்யாநாம் — அஸுரர்களுக்குள், **ப்ரஹ்லாத₃: ச அஸ்மி**-ப்ரஹ்லாத₃னாகவும் ஆகிறேன்; **கலயதாம்** –(துன்பம் விளைக்க) எண்ணுகிறவர்களுக்குள், **கால: அஹம்** — (மரணத்துன்பத்தை விளைக்கும்) காலனாகிறேன் நான்; **ம்ருக₃ாணாம்**—விலங்குகளுக்குள், **ம்ருகே₃ந்த்₃ர: ச அஹம்**-விலங்கரசனாகிற சிங்கமாகிறேன் நான்; **பக்ஷிணாம்**—பறவைகளுக்குள், **வைநதேய: ச**—க₃ருட₃னாகவும் ஆகிறேன் நான்.

கிந்நரோரக₃சாரணா: । நாந்தம் கு₃ணாநாம் க₃ச்ச₂ந்தி தேநாநந்தோऽயமுச்யதே ॥" [வி-பு 2-5-24] [க₃ந்த₄ர்வர்கள், அப்ஸரஸ்ஸுக்கள், ஸித்₃த₄ர்கள், கிந்நரர்கள், பாம்புகள், சாரணர்கள் ஆகிய அனைவரும் இவருடைய கு₃ணங்களின் எல்லையைக் காணாமையால் இவர் அநந்தன் எனப்படுகிறார்] என்பது அநந்தஶப்₃த₃த்தாலேயே ஸித்₃த₄மான குணச்சிறப்பு. ஆதி₃ஶேஷன் என்னும் இவருடைய மற்றொரு திருநாமமும் "சென்றால் குடையாம்" [முதல்-திருவ 53] "நிவாஸஶய்யாஸந" [ஸ்தோ-ர 40] என்கிற ப்ரமாணங்களின்படியே இவருடைய ஶேஷத்வச் சிறப்பைக் காட்டுகிறது. (வருணோ யாத₃ஸாமஹம்) ஜலத்தில் வஸிப்பவர்களுக்குள் நான் வருணனாகிறேன். வருணனையும் ஜலத்தில் வஸிப்பவனாகக்கொள்ளும்போது இது 'நிர்த்த₄ாரணே ஷஷ்டி₂'யாகும். மற்ற ஜலவாஸிகளுக்குத் தலைவனாயிருக்கை அவனுக்குச் சிறப்பு. அன்றிக்கே, 'யாத₃ஸாம்' என்று ஜல ஜந்துக்களைமாத்திரம் குறிப்பதாகக்கொண்டால், இந்த ஆறும் வேற்றுமையை 'ஸம்ப₃ந்த₄ஸாமாந்யே ஷஷ்டி₂'யாகக்கொண்டு 'அவர்களுக்குப் பதியான வருணனாகிறேன் நான்' என்று பொருள்கொள்ள வேண்டும். (பித்ரூணாமர்யமா சாஸ்மி) பித்ருக்களுக்குள் சிறப்புற்றவனான அர்யமா ஆகிறேன் நான். 'பித்ருக்களுக்கு ராஜாவாயிருப்பவன் அர்யமா' என்று தாத்பர்யசந்த்₃ரிகை. (யம: ஸம்யமதாமஹம்) தண்டிப்பவர்களுக்குள் ஸூர்யபுத்ரனான யமனாகிறேன் நான். தண்டிப்பவர்களுக்குள் தலைமைபெற்று நிற்பவன் த₄ர்மராஜனாகிற யமனே என்பது ஸர்வலோக ப்ரஸித்₃த₄ம். 29.

॥ भा ॥ अनर्थप्रेप्सुतया गणयतां मध्ये कालः—मृत्युरहम् ॥ ३० ॥

31. **தைத்தியரிற் பொன்னன் புதல்வனுன் றன்னியத்திற்**
கோத்தியலுங் காலனுங் கூற்றுவனுன் - பார்த்தியலும்
சிங்கநான் சேர மிருகத்திற் செல்பறவைக்
கங்கருடன் ருனுநா னங்கு.

தைத்தியரில் - அஸுரர்களுக்குள், **பொன்னன் புதல்வன் நான்**—ஹிரண்யன் பிள்ளையாகிற ப்ரஹ்லாதன் நான்; **தன் இயத்தில்**—தன் இதயத்தில், **கோத்து இயலும்**—(மரண காலத்தை) எண்ணிக்கொண்டிருந்து செயல்புரியும், **காலனும் கூற்றுவன் நான்**—மரணத்தை விளக்கும் காலன் நான்; **மிருகத்தில்**—விலங்குகளுக்குள், **சேர**—அனைத்தையும், **பார்த்து இயலும்**—(தனக்கு அடங்கியதாக) எண்ணித் தொழில்புரியும், **சிங்கம் நான்**—சிங்கமநானே; **அங்கு செல் பறவைக்கு** -ஆகாசத்தில் பறக்கும் பறவைகளுக்குள், **அம் கருடன் தானும் நான்**-அழகிய கருடனயிருப்பவனும் நானே.

30. (ப்ரஹ்லாதஶ் சாஸ்மி தைத்யாநாம்) அஸுரர்களுக்குள் நான் ப்ரஹ்லாதனகிறேன். "உபமாநமஶேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாऽபவத்" [விபு 1-15-156] [எல்லா ஸாதுக்களுக்கும் எப்போதும் எவன் உபமாநமானனே] என்று ஸாதுக்கள் அனைவர்க்கும் உதாஹரணமாயிருக்கை ப்ரஹ்லாதனுக்குள்ள சிறப்பு. (கால: கலயதாம் அஹம்) தீங்குவிளைக்க எண்ணுகிறவர்களுக்குள் நான் காலனகிறேன். "அஹமேவாऽக்ஷய: கால:" [33] என்று நித்யமான காலதத்வத்தைப்பற்றி மேல் ஶ்லோகத்தில் சொல்லவிருக்கிறதாகையால், இங்கு காலஶப்தம் அதைக் குறிக்காது. யமனைப்பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டபடியால், காலஶப்தம் அவனையும் குறிக்காது. ஆகையால் யமனுடைய அதிகாரிகளிலொருவனய், மரணத்தை விளைப்பவனகப் புராணங்களில் ப்ரஸித்தனா காலன் எனப் படுமவனே இங்கு குறிக்கப்படுகிறன் என்று கொள்வதே பொருத்த மானது. 'கலயதாம்' என்னும் பதம் பொதுவாக அறிகிறவர்களைக் குறிப்பதாகக்கொண்டால், அவர்களுக்குள் காலனுக்கு நிர்த்தாரணப் பொருள் பொருந்தாது, ஆகையால் காலஶப்தத்தின் பொருளையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, இங்கு 'கலயதாம்' என்றது—தீங்குவிளைக்க எண்ணுகிறவர்களைக் குறிக்கிறது என்றே கொள்ள

पवनः पवतामस्मि रामश्शस्त्रभृतामहम्।
झषाणां मकरश्चास्मि स्रोतसामस्मि जाह्नवी॥ ३१ ॥

31. பவநः பவதாமஸ்மி ராமஶ்ஶஸ்த்ரப்₄ருதாமஹம்।
ஜ₂ஷாணும் மகரஶ்சாஸ்மி ஸ்ரோதஸாமஸ்மி ஜாஹ்நவீ ॥

பவதாம்-அசையுமியல்வுடையவற்றுள், **பவநः அஸ்மி**-காற்றுகிறேன் நான்; **ஶஸ்த்ரப்₄ருதாம்**—ஆயுத₄மேந்தியவர்களுள், **அஹம் ராமः**—நான் (சக்ரவர்த்தித் திருமகனுன) ராமனுகிறேன். **ஜ₂ஷாணும்**—நீரில் வாழும் பெரிய மீன்களுக்குள், **மகரः ச அஸ்மி** — மகரமீனுகிறேன் நான்; **ஸ்ரோதஸாம்**—ஓடும் நதிகளுள், **ஜாஹ்நவீ அஸ்மி**—கங்கையாகிறேன் நான்.

---

32. ஓடுமவை தம்மி லுயர்பவன ஞெண்படைசீ
ரீடுடையார் தம்மி லிராமன்ஞ—னீடுவளர்
வண்புனன்மீன் றம்மின் மகரநான் யாறுகளில்
நன்புனல்சேர் சான்னவியு நான்.

வேண்டும். மரணமாகிற தீங்கை விளைக்க எண்ணுகிருனுகையாலே காலன் தீங்குவிளைக்க எண்ணுகிறவர்களுக்குள் தலைமைபெற்றவனுகிருன். மரணத்தைக் காட்டிலும் மேலான தீங்கு இல்லையன்றே! 'கலயதாம்' என்று எண்ணுகிறவர்களைக் கூறுகையாலும் இங்கு காலஶப்₃த₃த்தாலே அசேதனமான காலத்தைப் பொருளாகக்கொள்ள முடியாது. ஆகையால் மரணத்தை விளைக்கும் கூற்றுவனே பொருளாகவேண்டும். (ம்ருக₃ாணும் ச ம்ருகே₃ந்த்₃ரோऽஹம்) விலங்குகளுக்குள் விலங்கரசனுன சிங்கம் நானே. விலங்குகளுக்கு அரசன் என்று காட்டும் ம்ருகே₃ந்த்₃ரஶப்₃த₃மே சிங்கத்திற்கு மற்ற விலங்குகளைக் காட்டிலும் சிறப்பைத் தெரிவிக்கிறது. (வைநதேயஶ்ச பக்ஷிணும்) பறவைகளுக்குள் க₃ருட₃னுகிறேன் நான். மற்ற பறவைகளைக் காட்டிலும் மிகுந்த வேக₃முள்ளவனுகையாலும், பரம்பொருளான விஷ்ணுவின் வாஹனமாகையாலும், "ஸுபர்ணோऽஸி க₃ருத்மாங்" [யஜுஸ்ஸம்ஹிதை 4-1-42] என்னும் வேத₃வாக்யத்திலே வேத₃வடிவினனுகக் கூறப்பட்டிருக்கையாலும் விநதையின் பிள்ளையாகப் பிறந்த க₃ருட₃னுக்கு மற்ற பறவைகளைக் காட்டிலும் சிறப்பு ஸுப்ரஸித்₃த₄மானது. 30.

॥ भा ॥ पवताम् — गमनस्वभावानां पवनोऽहम्। शस्त्रभृतां रामोऽहम्। शस्त्रभृत्त्वमत्र विभूतिः, अर्थान्तराभावात्। आदित्यादयश्च

ஓடும் அவை தம்மில்—அசையும இயல்வுடையவற்றுள், **உயர் பவனன் நான்** — சிறப்புற்ற காற்ருகிறேன் நான். **ஒண் சீர் படை ஈடு உடையார் தம்மில்**—ஒளி பொருந்திய சிறப்புடைய ஆயுத₄த்தை நன்கு ஏந்தியவர்களுக்குள், **இராமன் நான்** — (சக்கரவர்த்தித் திருமகனுன) இராமன் நானே. **நீடு வண்புனல் வளர் மீன்தம்மில்**—நீண்டநாள் கடல்நீரில் வளரும் பெரிய மீன்களுக்குள். **மகரம் நான்**— மகர மீன் நானே; **யாறுகளில்**—ஓடும நதிகளுக்குள், **நன் புனல் சேர் சாந்நவியும் நான்** — சிறப்புற்ற நீரையுடைய க₃ங்கை₃யும் நானே.

31. (பவதாம் பவந: அஸ்மி) அசையும் இயல்வுடையவற்றுள் காற்ருகிறேன் நான்; இங்கு 'பவதாம்' என்னும் பத₃த்திற்கு "ப்ரஸ்பே₂ாடநம் து பவநம்" [வைஜயந்தீ-பாதாள-புரா-66] என்கிற நிக₄ண்டுவின்படி புடைப்பதாகிற க்ரியையைப் பொருளாகக் கொண்டால், புடைப்பவர்களில் காற்று சேராதாகையாலே நிர்த்₄தாரணப் பொருள் ஒட்டாது. ஆகையால் 'எப்போதும் அசைவதையே இயல்வாகக் கொண்டவைகளுள்' என்று இப்பத₃த்துக்குப் பொருள் கொள்ளப்பட்டது. காற்றினுல் உந்தப்பட்டே இவ்வுலகில் பல பொருள்கள் அசைவதை நாம் ப்ரத்யக்ஷமாகக் காண்கின்ருேமாகை யாலே அசைகின்றவற்றுள் காற்றே மிகச்சிறந்தது என்று தேறுகிறது. (ராம: ஶஸ்த்ரப்₄ருதாம் அஹம்) ஆயுத₄ம் ஏந்தியவர்களுள் நானு சக்ரவர்த்தித் திருமகனுன ராமனுகிறேன். பரஶுராமனும் ப₃லராமனுன் ஒருசேதனனே இடையிட்ட அவதாரங்களேயாகையாலும், பரஶுராம னையும் வென்ற ராமனே ஆயுத₄மேந்தியவர்களில் தலைசிறந்தவன் என்பது ராவணன் முதலான எண்ணிறந்த அரக்கர்களைக்கொன்றதி லிருந்தே விளங்குகையாலும், இங்கு ராமப்₃த₃த்தாலே த₃ாஶரதி₂ ராமனைக் கொள்வதே உசிதம். கண்ணனும் ராமனும் ஒருவரேயா யிருக்க, கண்ணன் ராமனை இங்கு தன் விபூ₄தியாகக் குறிப்பிடுவது பொருந்துமோ? எனில், இங்கு ராமனை விபூ₄தியாகக்கொள்ளாமல், ஆயுத₄மேந்தி நிற்கும் தன்மையை விபூ₄தியாகக்கொண்டால்

क्षेत्रज्ञा आत्मत्वेनावस्थितस्य भगवतश्शरीरतया धर्मभूता इति शस्त्रभृत्त्व-स्थानीयाः ॥ ३१ ॥

सर्गाणामादिरन्तश्च मध्यं चैवाहमर्जुन! ।
अध्यात्मविद्या विद्यानां वादः प्रवदतामहम् ॥ ३२ ॥

32. ஸர்க்க$_3$ாணமாதி$_3$ரந்தஶ்ச மத்$_4$யம் சைவாஹமர்ஜுந! ।
அத்$_4$யாத்மவித்$_3$யா வித்$_3$யாநாம் வாத$_3$: ப்ரவத$_3$தாமஹம் ॥

அர்ஜுந—அர்ஜுனா! **ஸர்க்க$_3$ாணம்** — ஸ்ருஷ்டிக்கப் படுமவைகளுக்கு, **ஆதி$_3$:**—காரணமான படைப்பவர்களும், **அந்த:**—(கடைசியில் அவற்றை) அழிப்பவர்களும், **மத்$_4$யம்**

பொருந்திவிடும். இப்படிக்கொண்டால் ரீதிப$_4$ங்க$_3$ம் ஏற்படுகிறதே எனில்: ஆதி$_3$த்யன் (21), ஶங்கரன் (22) முதலான ஜீவர்களும் தமக்கு ஆத்மாவாயிருக்கும் பரமபுருஷனுக்கு ஶரீரமாயிருந்துகொண்டு அவனைவிட்டுப் பிரியாத ப்ரகாரமாய் (த$_4$ர்மமாய்) இருப்பவர்களாகை யாலேயே எம்பெருமானுக்கு விபூ$_4$தியாக இங்கு சொல்லப்படுகிறார்கள். எம்பெருமானுடைய ப்ரகாரமான ஶஸ்த்ரப்$_4$ருத்த்வம் (ஆயுத$_4$மேந்தி நிற்கும் தன்மை) போன்றவர்களே அவர்கள். ஆகையாலே ரீதி ப$_4$ங்க$_3$ம் இல்லை. சில இடங்களில் நிர்த்த$_4$ாரணப்பொருளும், சில இடங்களில் ஸம்ப$_3$ந்த$_4$ஸாமான்யப் பொருளும் கொள்வதுபோலே இவ்விடத்திலும் ''ஆதி$_3$த்யாநாமஹம் விஷ்ணு:'' (21) ''வ்ருஷ்ணீ நாம் வாஸுதே$_3$வோऽஸ்மி'' (37) என்றவிடங்களிலும் விபூ$_4$தியாக எடுக்கப்படுமவன் இவனுடைய மற்றோரவதாரமேயாகையாலே, அவ் வவதாரத்தின் தனிப்பெருமை விபூ$_4$தியாகக் கொள்ளப்படுகிறது. இப்படி முக$_2$பே$_4$த$_3$மாத்ரமேயாகையாலே விரோத$_4$மில்லை. (ஜ$_2$ஷாணாம் மகரஶ்சாஸ்மி) நீரில் வாழும் பெரிய மீன்களுக்குள் நான் மகரமீனாகிறேன். மகரமீன் மீன்களுக்கு அரசன் என்பது சிறப்பு. (ஸ்ரோதஸாமஸ்மி ஜாஹ்நவீ) ஓடும் நதி$_3$களுக்குள் க$_3$ங்கை$_3$ யாகிறேன் நான். சதுர்முக$_2$ன் கையில் கமண்ட$_3$லத்தில் த$_4$ர்மஜலமா யிருந்து, சதுர்பு$_4$ஜனான எம்பெருமான் திரிவிக்ரமனாய் வளர்ந்தபோது அவன் திருவடி விளக்கப் பயன்பட்டு, விஷ்ணுவின் பாத$_3$த்திலிருந்து உண்டானதென்று புகழ்பெற்றதாயிருக்கை, சங்கரன் சடையில் தங்கியதாயிருக்கை, மூவுலகங்களிலும் பெருகுகை, கங்கை கங்கை யென்ற வாசகத்தாலே கடுவினைகளை நீந்திடுகை முதலான பெருமைகள் மற்ற நதி$_3$களைக்காட்டிலும் க$_3$ங்கை$_3$க்குள்ள தனிச் சிறப்புகள். 31.

ச — இடையில் (அவற்றை) ரக்ஷிப்பவர்களும், **அஹம் ஏவ** — நானே; **வித்$_3$யாநாம்** — வித்$_3$யைகளுக்குள், **அத்$_4$யாத்ம வித்$_3$யா** — (ஆத்ம பரமாத்மாக்களைப் பற்றிய அறிவை உணர்த்தும்) அத்$_4$யாத்மவித்$_3$யை, **அஹம் ஏவ** — நானே. **ப்ரவத$_3$தாம்** — (ஜல்பம், விதண்டை$_3$, வாத$_3$ம் என்று மூவகைப்பட்ட) வாத$_3$ங்களைப் புரிபவர்களுடைய (வாத$_3$ வகைகளுள்), **அஹம்** — நான், **வாத$_3$:** — (தத்வநிர்ணயத்தின் பொருட்டு ஏற்பட்ட) வாத$_3$மாகிறேன்.

---

33. உண்டா மவற்றுக் குளவாதி யந்தநடு
கண்டாயே பார்த்தாநான் காணிதுதான்—கொண்டாடு
மேலான்ம வித்தைநான் வித்தைகளில் வாதநான்
தூலாக்குந் தார்க்கியரிற் றுப்பு,

பார்த்தா — குந்தீபுத்ரனே!, **உண்டாமவற்றுக்கு உள** — உண்டாகின்ற பொருள்களுக்கு அமைந்த, **ஆதி** — காரணமான படைப்பவர்களும், **அந்தம்** — (அவற்றை) அழிப்பவர்களும், **நடு** — இடையில் (அவற்றை) ரக்ஷிப்பவர்களும், **நான் கண்டாயே** - நானேயென்பதை அறிவாயாக; **வித்தைகளில்** — வித்$_3$யைகளுக்குள், **கொண்டாடும் மேல் ஆன்மவித்தை இதுதான்** — (ஜ்ஞானிகள்) கொண்டாடுகின்ற மேலான, (ஆத்ம பரமாத்மாக்களைப் பற்றிய) ஆத்மவித்$_3$யையாகிற இவ்வித்$_3$யைதான், **நான்காண்** — நானேயாகிறேன். **துப்பு** — வலிமையுடைய வாதி$_3$களையும், **தூலாக்கும்** — பஞ்சுபோல் பறக்கடிக்கும், **தார்க்கியரின்** — (ஜல்பம், விதண்டை$_3$, வாத$_3$ம் என்ற மூன்று வகைப்பட்ட வாத$_3$ங்களைப் புரியும்) தார்க்கியரின் வாத$_3$வகைகளுள், **வாதம் நான்** — (தத்வ நிர்ணயத்தின் பொருட்டு ஏற்பட்ட) வாத$_3$ம் நானே.

---

32. (ஸர்க்க$_3$ாணும் ஆதி$_3$: அந்தஶ்ச மத்$_4$யம் ச அஹமேவ) படைக்கப்படும் பொருள்களை முதலில் படைப்பவர்களும், கடைசியில் அழிப்பவர்களும், நடுவில் ரக்ஷிப்பவர்களும் நானே. ஸர்க்க$_3$ாப்$_3$த$_3$ம் மற்ற இடங்களிற்போலே ஸ்ருஷ்டியையே குறிப்பதாகில், 'அதற்கு முதல், கடை, நடு நானே' என்பது பொருளற்றதாகையால், "ஸ்ருஜ்

॥भा॥ सृज्यन्त इति सर्गाः, तेषाम् आदिः—कारणम्; सर्वदा सृज्यमानानां सर्वेषां प्राणिनां तत्रतत्र स्रष्टारोऽहमेवेत्यर्थः। तथाऽन्तः—सर्वदा संह्रियमाणानां तत्रतत्र संहर्तारोऽप्यहमेव। तथा

யந்த இதி ஸர்க்கா:" என்னும் கர்மணிவ்யுத்பத்தியாலே ஸர்க்க ஶப்தம் படைக்கப்படுமவற்றைக் குறிப்பதாகக் கொள்ளவேணும். அவற்றுக்கு "முதல் கடை நடு" என்று அவற்றின் அவயவவிஶேஷம் முதலியவற்றைக் குறிப்பதாகக் கொண்டால், அவற்றைக் காட்டிலும் வேறுபடாமையால் நிர்த்தாரணம் முதலான பொருள்கள் பொருந் தாது. "அஹமேவாக்ஷய: கால:" என்று அடுத்த ஶ்லோகத்தில் (33) காலத்தைச் சொல்லப்போகிறதாகையால் இங்கு 'முதல் கடை நடு' என்று காலத்தைக் குறிப்பதாகக் கொள்வதும் பொருந்தாது. "உத்பவஶ்ச பவிஷ்யதாம்" (34) என்று உத்பத்திக்ரியையைத் தனியே சொல்லப்போகிறபடியால், ஆதிமுதலானவை உத்பத்தி க்ரியை முதலானவற்றைக் குறிக்கமுடியாது. ஸர்வேஶ்வரனுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார காரணத்வமே இங்கு கூறப்படுவதாகக் கொள்ளலாமேயெனில், "அஹமாதிஶ்ச மத்யம் ச பூதாநாம் அந்த ஏவ ச" (20) என்று இந்த ப்ரகரணத்தின் தொடக்கத்திலேயே அதைச் சொல்லிவிட்டபடியால் மறுபடியும் அதைச் சொல்லவேண்டியதில்லை. அதையே பொதுவாக இங்கு நிகமனம்செய்கிறது எனில்: இதற்கு மேலும் பல ஶ்லோகங்கள் இருக்கையாலே இதை நிகமநவாக்யம் என்பதும் பொருந்தாது. ஆகையால், உலகில் படைக்கப்படும் பொருள்களையெல்லாம் முதலில் படைப்பவர்களாகவும், கடைசியில் அழிப்பவர்களாகவும், நடுவில் ரக்ஷிப்பவர்களாகவும் உள்ளவர்களையே இந்தப் பதங்கள் லக்ஷணையாலே காட்டுகின்றன என்று கொள்வதே பொருந்தும். அந்த ஸ்ருஷ்டிஸ்திதிலயகாரணங்களில் உபாதானகாரணம் "யச்சாபி ஸர்வபூதாநாம் பீஜம் ததஹம்" (39) என்று மேலே சொல்லப்படவிருக்கிறதாகையால், இங்கு ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு நிமித்தகாரணமாயிருப்பவர்களைக் கூறுவதே பொருந்தும். அதிலும் 'ஸர்க்காணாம்' என்று படைக்கப்படும் பொருள்களைப் பொதுவாகக் கூறுகையால், எல்லாக் காலத்திலும் படைத்து அழித்து அளிக்கப்படும் எல்லா ப்ராணிகளுக்கும் ஆங்காங்கு படைப்பவர்களாகவும், அழிப்பவர்களாகவும், ரக்ஷிப்பவர்களாகவும் இருப்பவர்களை 'ஆதி, அந்த:, மத்யம்" என்னும் மூன்று பதங்களும் முறையே குறிப்பதாகக் கொள்வதே பொருந்தும். (அத்யாத்ம வித்யா வித்யாநாம்) வித்யைகளுக்குள் ஜீவ

च मध्यं पालनम्; सर्वदा पाल्यमानानां पालयितारश्चाहमेवेत्यर्थः। जल्पवितण्डादि कुर्वतां तत्त्वनिर्णयाय प्रवृत्तो वादो यस्सोऽहम्॥ ३२॥

अक्षराणामकारोऽस्मि द्वन्द्वस्सामासिकस्य च।
अहमेवाक्षयः कालः धाताऽहं विश्वतोमुखः॥ ३३॥

33. அக்ஷராணுமகாரோऽஸ்மி த்$_3$வந்த்$_3$வஸ்ஸாமாஸிகஸ்ய ச।
அஹமேவாக்ஷயः காலः த$_4$ாதாஹம் விஶ்வதோமுக$_2$ः॥

அக்ஷராணும்—எழுத்துக்களுக்குள், **அகாரः அஸ்மி**—(நான்) அகாரம ஆகிறேன்; **ஸாமாஸிகஸ்ய ச**—ஸமாஸ ஸமூஹத்தினுள்ளும், **த்$_3$வந்த்$_3$வः அஸ்மி**—த்$_3$வந்த்$_3$வஸமாஸ

பரமாத்மாக்களின் ஸ்வரூபத்தைப் பற்றிய உண்மையைக் கூறும் அத்$_4$யாத்மவித்$_3$யை நானே. சொல்லப்படும் விஷயத்தாலும், இதற்குத் தலைசிறந்த மோக்ஷமே ப$_2$லமாகக் கிடைக்கையாலும் மற்ற வித்$_3$யைகளைக் காட்டிலும் சிறப்பு வெளிப்படை. (வாத$_3$: ப்ரவத$_3$தாம் அஹம்) தர்க்கம் புரியும் தார்க்கிகர்கள் செய்யும் தர்க்கவாத$_3$ங்களுக்குள் தத்வ நிர்ணயத்துக்காக ஏற்பட்ட வாத$_3$மாகிறேன் நான். தர்க்கவாத$_3$ங்கள் பின்வருமாறு பலவகைப்படும். 1. **ஜல்பம்** — வாதி$_3$யோ அல்லது ப்ரதிவாதி$_3$யோ தன் பக்ஷத்திற்கு ஸாத$_4$கங்களையும், எதிரிபக்ஷத்திற்கு தோ$_3$ஷங்களையும் சொல்லித் தான் வெற்றியடையவேண்டும் என்னும் விருப்பத்துடன் செய்யும் சொற்போருக்கு **ஜல்பம்** என்று பெயர். 2. **விதண்டா$_3$**—தன் பக்ஷத்தை ஸ்தா$_2$பிக்கமுயலாமல், எதிரிபக்ஷத்திற்குக் குற்றத்தையே கூறும் வாத$_3$ம் **விதண்டா$_3$** எனப்படும். 3. **ச$_2$லம்**:—எதிரி கருதாத விஷயத்தை அவனுடைய வார்த்தைக்குப் பொருளாக ஏற்றிட்டு வாத$_3$ம்செய்வது **ச$_2$லம்** எனப்படும். 4. **வாத$_3$ம்**:—வாதி$_3$ப்ரதிவாதி$_3$பக்ஷங்களில் எதிலும் பக்ஷபாதமில்லாமல், 'உண்மையை அறியவேண்டும்' என்னும் ஒரே நோக்குடன் செய்யப்படும் ஆராய்ச்சிக்கு **வாத$_3$ம்** என்று பெயர். இப்படிப் பலவகைப்பட்ட தர்க்கவாத$_3$ங்களுள், உண்மையை நிர்ணயிப்பதற்காக ஏற்பட்டதாகையாலே சிறப்புற்றதான வாத$_3$ம் என்னுடைய அம்ஶமாகும் என்று கருத்து. ஜல்பம் முதலானவற்றினால் தாற்காலிகப் புகழ் முதலான அல்பப$_2$லங்களையே அடையலாம்; உண்மையறிவதற்காகச் செய்யப்படும் வாத$_3$மோ எனில், மோக்ஷபர்யந்தமான நிரந்தரப$_2$லன்களைக் கொடுக்கவல்லதாகையாலே அவற்றைக் காட்டிலும் சிறப்புற்றது என்பது வெளிப்படை. (அர்ஜுந) வெள்ளை மனத்தினனாகையாலே இவ்வரும் பொருள்களை உனக்கு நான் கூறுகிறேன் என்று கருத்து. 32.

மாகிறேன். **அக்ஷய: கால:**—அழிவற்ற காலம், **அஹம் ஏவ**—நானே, **விஶ்வதோமுக$_2$:**—நாலு புறமும் முகங்களை யுடையவனாய், **த$_4$ாதா**-(அண்ட$_3$த்தினுள்ளிருக்கும் பொருள்களைப்) படைப்பவனான நான்முகனும், **அஹம்**—நானே.

34. சந்தமா ரக்கரங்கட் சார வகாரநான்
தொந்தநான் சொற்சேர்த்திச் சொல்லிடத்தி—லந்தமி
காலமுநான் றானே கலைசேர் சதுமுகனாய் [லாக்
மேலவனாந் தாதாநான் மிக்கு.

சந்தம் ஆர் அக்கரங்கள் — வேத$_3$த்திலே பெருமை பெற்ற எழுத்துக்களுக்குள், **சார அகாரம் நான்**— (அவற்றுக்கு மூலகாரணமாகையாலே) ஸாரமான அகாரம் நானே. **சொற்சேர்த்திச் சொல்லிடத்தில்** — சொற்களின் சேர்த்தியைச் சொல்லும் ஸமாஸங்களுக்குள், **தொந்தம்**— த்$_3$வந்த்$_3$வஸமாஸம், **நான்**—நானே; **அந்தம் இலா**— அழிவில்லாத, **காலமும்**—காலமும், **நான் தானே**— நானேயாவேன். **சதுமுகனாய்** — நாலு முக$_2$த்தையுடையவனாய், **மிக்கு மேல் அவனும்**—(ஜீவர்கள் அனைவர்க்குள்ளும்) மிக உயர்ந்தவனான, **கலை சேர்**—ஸரஸ்வதியோடு கூடிய, **தாதா**—படைப்புக்கடவுள், **நான்**—நானே.

---

33. (அக்ஷராணாம் அகாரோऽஸ்மி) எழுத்துக்களுக்குள் அகாரமாகிறேன் நான். "அகாரோ வை ஸர்வாவாக்; ஸைஷா ஸ்பர்ஶோஷ்மபி$_4$ர் வ்யஜ்யமாநா ப$_3$ஹ்வீ நாநாரூபா ப$_4$வதி" [ ] [அகாரமே எல்லா வாக்கும் ஆகிறது; அத்தகைய இவ்வகாரம் 'ஸ்பர்ஶம்' எனப்படும் ('க'முதல்'ம'வரையிலுள்ள இருபத்தைந்து) எழுத்துக்களாலும், 'ஊஷ்மா' எனப்படும் (ஶஷஸஹ என்னும் நாலு) எழுத்துக்களாலும் வெளிப்படுத்தப்பட்டு பலவாகவும் பல உருவங்களையுடையதாகவும் ஆகிறது.] என்று அகாரம் மற்ற எழுத்துக்களுக்கெல்லாம் மூலகாரணமாகின்றது என்று உபநிஷத்திலேயே தெளிவாகக் காட்டப்பட்டது. "யத்$_3$வேதா$_3$தௌ$_3$ ஸ்வர: ப்ரோக்தோ வேதா$_3$ந்தே ச ப்ரதிஷ்டி$_2$த:| தஸ்ய ப்ரக்ருதி லீநஸ்ய ய: பரஸ்ஸ மஹேஶ்வர:||" [தை நா-10-24] [வேத$_3$த்தின் ஆதி$_3$யிலும் முடிவிலும் ஓதப்படுவதாய், தனக்கு மூலகாரணமான அகாரத்தில் ஒடுங்கியதான ஓங்காரத்துக்கு எவன் பொருளோ அவனே ஸர்வேஶ்வரன்] என்று நாராயணவல்லியும் இதையே காட்டிற்று. இதனாலேயே மற்றோர் உபநிஷத்தும் "அ இதி ப்$_3$ரஹ்ம"

॥भा॥ अक्षराणां मध्ये *अकारो वै सर्वा वाक् इति श्रुति-सिद्धसर्ववर्णानां प्रकृतिरकारोऽहम्। सामासिकः—समाससमूहः, तस्य

[ப$_3$ஹ்வ்நச] [சொற்களுக்கு மூலகாரணமான அகாரமே பொருள்களுக்கு மூலகாரணமான ப்$_3$ரஹ்மமாகிறது] என ஓதிற்று. இதையே திருவள்ளுவரும் தம் திருக்குறளில் முதற்பாட்டில் "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்று பாடினர். இப்படி எல்லா எழுத்துக்களுக்கும் மூலகாரணமாயிருக்கும் சிறப்பையிட்டு ஸர்வஜக$_3$த்காரணனை எம்பெருமான் 'அக்ஷரங்களில் அகாரம் நானே' என்கிறான். (த்$_3$வந்த்$_3$வஸ்ஸாமாஸிகஸ்ய ச) ஸமாஸஸமூஹங்களுக்குள் த்$_3$வந்த்$_3$வஸமாஸமாகிறேன் நான். நிர்த்த$_4$ாரணப்பொருளுக்கு உறுப்பாகப் பல வஸ்துக்கள் ஸித்$_3$தி$_4$க்கவேண்டுகையாலே "ஸாமாஸிகஸ்ய" என்னும் பத$_3$த்தில் ப்ரத்யயம் ஸமூஹார்த்த$_2$த்தில் வந்திருப்பதாகக்கொண்டு 'ஸமாஸஸமூஹம்' என்று பொருள் உரைக்கப்பட்டது. ஸமாஸங்களுள் 'உபநதி$_3$' (நதிக்கு அருகில்) முதலானவற்றில் வரும் அவ்யயீப$_4$ாவஸமாஸம் (உப முதலான) முதல் பத$_3$த்தின் பொருளை முக்$_2$யமாகக்கொண்டது. இதையே "பூர்வபத$_3$ார்த்த$_2$ ப்ரத$_4$ாநம் அவ்யயீப$_4$ாவ ஸமாஸம்" என்று வையாகரணர் வழங்குவர். "ராஜபுருஷ:" [ராஜாவின் ஆள்] முதலான இடங்களில் வரும் தத்புருஷஸமாஸம் இரண்டாவது பத$_3$த்தின் பொருளையும், "கல்யாண கு$_3$ணக$_3$ண:" [நற்குண மூடையவன்] முதலான இடங்களில் வரும் ப$_3$ஹுவ்ரீஹி ஸமாஸம் இரண்டிலும் வேறுபட்டதொரு பத$_3$த்தின் பொருளையும் முக்$_2$யமாகக்கொண்டவை. இதையே "உத்தரபத$_3$ார்த்த$_2$ப்ரத$_4$ாநம் தத்புருஷஸமாஸம்" "அந்யபத$_3$ார்த்த$_2$ப்ரத$_4$ாநம் ப$_3$ஹுவ்ரீஹி ஸமாஸம்" என்று வையாகரணர் வழங்குவர். "ராமலக்ஷ்மணௌ' [ராமனும் லக்ஷ்மணனும்] முதலான இடங்களில் வரும் த்$_3$வந்த்$_3$வஸமாஸம் இரண்டு பத$_3$ங்களின் பொருளையும் முக்$_2$யமாகக்கொண்டது. இதையே "உப$_4$யபத$_3$ார்த்த$_2$ப்ரத$_4$ாநம் த்$_3$வந்த்$_3$வஸமாஸம்" என்று வையாகரணர் வழங்குவர். இவ்வண்ணமாக இரண்டு பத$_3$ப் பொருளுக்கும் முக்$_2$யத்வத்தைக் கொண்டிருக்கையாகிற சிறப்பையிட்டு. "ஸமாஸங்களுள் நான் த்$_3$வந்த்$_3$வஸமாஸமாகிறேன்" என்கிறான் கண்ணன். (அஹமேவாக்ஷய: கால:) அழிவற்ற காலம் நானேயாகிறேன். "கலாமுஹூர்த்தா: காஷ்ட$_2$ாஶ்ச அஹோராத்ராஶ்ச ஸர்வஶ:" [தை. நா 1-8] "கலாமுஹூர்த்தாதி$_3$மயஶ்ச கால:" [வி-பு 4-1-84] என்று ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் கூறப்பட்ட கலை, முஹூர்த்தம், காஷ்டை$_2$, பகல், இரவு முதலான லோகக்ஷய ஹேதுக்களான பல அவயவங்களை உடையதாயிருந்தபோதிலும் காலமானது ஸ்வரூபத்திலே ஆதி$_3$யந்தமற்றதாகையாலே 'அக்ஷய:' (அழிவற்றது) என்று விஶேஷிக்கப்படுகிறது. "அநாதி$_3$ர்ப$_4$க$_3$வாந் கால: நாந்தோऽஸ்ய த்$_3$விஜ வித்யதே" [வி-பு 1-2-26] [அந்தணரே! சிறப்புமிக்கதான காலம் ஆதி$_3$யும் அந்தமும் அற்றது] "காலோऽஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்த: நாந்தோ ந

मध्ये द्वन्द्वसमासोऽहम् ; स ह्युभयपदार्थप्रधानत्वेनोत्कृष्टः। कलामुहूर्तादि-
मयोऽक्षयः कालोऽहमेव। सर्वस्य स्रष्टा हिरण्यगर्भश्चतुर्मुखोऽहम्। ३३ ॥

சாதி$_3$ர் ந ச மேऽஸ்தி மத்$_4$யம்" [ ] [உலகத்துக்கு அழிவை விளைப்பதற்காக ஏற்பட்ட காலமாகிறேன் நான். காலவிஶிஷ்டனான எனக்கு இறுதியோ, தொடக்கமோ, நடுவோ கிடையாது] என்று எம்பெருமான் காலத்தை அதி$_4$ஷ்டி$_2$த்து நிற்பவன் என்றும், காலத்துக்கு ஆதி$_3$மத்$_4$யாந்தங்கள் கிடையாதென்றும் காட்டப்பட்டது. இதனாலேயே 'அழிவற்ற காலமாகிறேன் நான்' என்கிறான் கண்ணன். (தா$_4$தாऽஹம் விஶ்வதோமுக$_2$:) நாலு வேத$_3$ங்களையும் ஓதுவதற்கு உறுப்பாக நாலு திசையிலும், நாலு முக$_2$ங்களையுடையவனாகை யாலே 'நான்முகன்' என்று பெயர்பெற்றவனாய், அண்ட$_3$த்தின் உள்ளிருக்கும் பொருள்களைப் படைப்பவனாகையாலே 'தா$_4$தா' எனப்படும் ஹிரண்யக$_3$ர்ப்ப$_4$ன் (பிரமன்) நானே. தா$_4$த்ருஶப்$_3$த$_3$ம் அமரம் முதலான நிக$_4$ண்டுக்களிலே பிரமனைப் பற்றிய பெயராகப் படிக்கப் பட்டிருக்கையால், 'விஶ்வதோமுக$_2$:' என்னும் ஶப்$_3$த$_3$ம் நாலு திசையிலும் முக$_2$ங்களைக் கொண்ட நான்முகனைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது. கர்மப$_2$லங்களையளிப்பவன் ஸர்வேஶ்வரனே யாகையாலும், இது ஸர்வேஶ்வர விபூ$_4$தியைச் சொல்லும் ப்ரகரண மாகையாலும் தா$_4$த்ருஶப்$_3$த$_3$த்துக்கு 'கர்மப$_2$ல விதா$_4$தா' என்று சிலர் பொருள் கொள்வது பொருந்தாது. "**தா$_4$தாऽஹம்**" என்ற இதனாலும், '**ருத்$_3$ராணாம் ஶங்கரஶ்சாऽஸ்மி**' [23] என்றதனாலும் மும்மூர்த்திகளில் மற்ற இருமூர்த்திகளும் தன் விபூ$_4$திகளே என்று காட்டினானாயிற்று. நடுநிலைநிற்கும் சங்ககாலச் சான்றோரும் "**ஐந்தலை யுயரிய அணங்குடை அருந்திறல் மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ**" [ஐந்துதலைகளையுடையவனாய், இந்த்$_3$ரன் முதலான தே$_3$வர்களிலும் உயர்ந்தவனாய், அச்சத்தை விளைப்பவனாய், அரிய ப$_3$லத்தையும் ஶக்தியையுமுடையனான உருத்திரனும், அவன்செய்யும் ஸம்ஹாரத்தொழிலும் நீயே (உன் அதீ$_4$னமே)] என்றும், "**பூவனும் நாற்றமும் நீ**" [பூவில் பிறந்த பிரமனும், அவன் செய்யும் படைப்புத் தொழிலும் நீயே (உன் அதீ$_4$னமே)] என்றும் திருமாலைப்பற்றிய முதல்பாடலில் இதையே முழங்கினர். "**சிவனாய் அயனாய்**" [திருவாய் 6-9-1] "**அயனை அரனை**" [திருவாய் 10-10-11] என்றார் ஆழ்வாரும். இவை எல்லாவற்றுக்கும் அடியாக உபநிஷத்துக்களிலும் "**ப்$_3$ரஹ்மா நாராயண: ஶிவஶ்ச நாராயண:**" [நாராயண உபநிஷத்] [பிரமனும் நாராயணனே; ஶிவனும் நாராயணனே] "**ஸ ப்$_3$ரஹ்மா ஸ ஶிவ:**" [தை-நா 11] [அந்த நாராயணனே பிரமனும் ஶிவனுமாகிறான்] என்று ஓதப்பெற்றது. 33.

मृत्युस्सर्वहरश्चाहम् उद्भवश्च भविष्यताम्।
कीर्तिश्श्रीर्वाक्च नारीणां स्मृतिर्मेधा धृतिः क्षमा ॥ ३४ ॥

34.ம்ருத்யுஸ்ஸர்வஹரஶ்சாஹம் உத்$_3$ப$_4$வஶ்ச ப$_4$விஷ்யதாம்।
கீர்த்திஶ்ஶ்ரீர்வாக்ச நாரீணும் ஸ்ம்ருதிர்மேத$_4$ா த்$_4$ருதிः க்ஷமா ॥

ஸர்வஹரः — அனைவரது உயிரையும் அபஹரிக்கும், **ம்ருத்யுः ச அஹம்** – ம்ருத்யுவும் நானே; **ப$_4$விஷ்யதாம்**—உண்டாகின்ற பொருள்களுக்கு, **உத்$_3$ப$_4$வः ச**—உத்பத்தியாகிற க்ரியையும், **அஹம்**—நானே; **நாரீணும்**—பெண்களுக்குள், **ஶ்ரீः** — (தலைமை பெற்றவளான) ஶ்ரீதே$_3$வியும், **கீர்த்திः**—கீர்த்திதே$_3$வியும். **வாக்**—வாக்$_3$தே$_3$வியும், **ஸ்ம்ருதிः**—ஸ்ம்ருதி தே$_3$வியும், **மேத$_4$ா**—மேத$_4$ாதே$_3$வியும், **த்$_4$ருதிः**—த்$_4$ருதி தே$_3$வியும், **க்ஷமா ச**—க்ஷமாதே$_3$வியும், **அஹம்**—நானே.

---

35. கண்பாரா தெல்லாங் கவர்ந்துண்ணுங் கூற்றநா
ஞெண்பாங்கி லாமவற்றுக் குற்பவநான்—பெண்பாலில்
கீர்த்திதிரு வாக்குக் கிளர்நினைவு மேதையுடன்
சீர்த்திருதி நான்பொறைநான் றேர்.

கண்பாராது — இரக்கமில்லாமல், **எல்லாம் கவர்ந்து உண்ணும் கூற்றம்** — எல்லாவுயிர்களையும் கவர்ந்து கைக்கொள்ளும் ம்ருத்யு நானே; **ஒண் பாங்கில் ஆமவற்றுக்கு**—அழகிய அமைப்புடன் உண்டாகின்ற பொருள்களுக்கு, **உற்பவம்** — உத்பத்திக்ரியை, **நான்** — நானே ; **பெண் பாலில்**—ஸ்த்ரீகளுள், **திரு**—ஶ்ரீதே$_3$வியும், **கீர்த்தி**—கீர்த்தி தே$_3$வியும், **வாக்கு**—வாக்$_3$தே$_3$வியும், **கிளர் நினைவு**—கிளர்ந்தெழும் நினைவுக்கு அபி$_4$மாநிநியான ஸ்ம்ருதிதே$_3$வியும், **மேதையுடன்**—மேத$_4$ாதே$_3$வியும், **சீர் திருதி** – சீர்மைமிக்க த்$_4$ருதிதே$_3$வியும், **நான்**—நானே; **பொறை**—பொறுமைக்கு அபி$_4$மாநிநியான க்ஷமை எனப்படும் பூ$_4$தே$_3$வியும், **நான்**—நானே; **தேர்**—(இதனைத்) தெரிந்து கொள்வாயாக.

।। भा ।। सर्वप्राणहरो मृत्युश्चाहम्। उत्पत्स्यमानानामुद्भवाश्च

34. (ம்ருத்யுஸ்ஸர்வஹரஶ்சாஹம்) அனைவரது பிராணன்களையும் எடுத்துச் செல்லும் ம்ருத்யுவும் நானே. இருபத்தொன்பதாவது ஶ்லோகத்தில் "யமஸ்ஸம்யமதாமஹம்" என்று கர்மாநுகு₃ணமாக த₃ண்ட₃னையளிக்கும் த₄ர்மராஜாவான யமன் சொல்லப்பட்டான். முப்பதாவது ஶ்லோகத்தில் "கால: கலயதாமஹம்" என்று ஒவ்வொருவனுக்கும் எப்போது மரணம் ஏற்படும் என்று அறுதியிட்டு மரணத்தை விளைக்கும் காலன் சொல்லப்பட்டான். இவன் யமனுடைய வேலையாட்களில் ஒருவன். இப்படி இருவரைப் பற்றிச் சொல்லிவிட்டபடியால் "ஸர்வஹர: ம்ருத்யு:" என்று இங்கு சொல்லப்படுபவன் யமனுடைய மற்றொரு வேலையாளாய் அனைவரது உயிர்களையும் எடுத்துச் செல்பவன் என்றே கொள்ளவேண்டும். "ப்ரளயகாலத்தில் அனைவரையும் அழிக்கும் ஈஶ்வரன் இங்கு ம்ருத்யு எனப்படுகிறான்" என்று சிலர் உரையிடுவது அஸ்வரஸமானது. இருபதாவது ஶ்லோகத்தில் தான் ஸர்வஸம்ஹார காரணமாவதைச் சொல்லிவிட்டானன்றோ. அடுத்தபடி 'உத்₃ப₄வ:' என்று உத்பத்தியைக் கூறப்போகிறதாகையாலே இங்கு அதையொட்டிப் படிக்கப்படும் ம்ருத்யு மரணத்தைக் குறிக்கும் என்றார்கள் சிலர். 'ஸர்வஹர:' என்று விஶேஷணமிட்டிருப்பது அப்போது தேவையற்றதாகும். ஆகையால் யமப₄டனை ம்ருத்யுவைப் பொருளாகக் கொள்வதே தக்கது. (உத்₃ப₄வஶ்ச ப₄விஷ்யதாம்) உண்டாகின்ற பொருள்களுக்கு உத்பத்தியாகிற க்ரியையும் நானே. உத்₃ப₄வஶப்₃த₃ம் உத்பத்திரூபமான க்ரியையையே ஸ்வரஸமாகக் குறிக்கும். உத்பத்திஸ்த₂ாநம் முதலானவையும், நிமித்தம், உபாத₃ாநம் முதலான காரணங்களும் 32, 39 ஶ்லோகங்களில் கூறப்படுகிறபடியால் இங்கு 'உத்₃ப₄வ' ஶப்₃த₃ம் உத்பத்திக்ரியையைக் குறிப்பதே உசிதம். (நாரீணாம் ஶ்ரீ: கீர்த்தி: வாக் ஸ்ம்ருதி: மேத₄ா த்₄ருதி: க்ஷமா ச அஹம்) பெண்களுக்குள் செல்வத்துக்கு அதி₄தே₃வதையான ஶ்ரீதே₃வியும், புகழ், வாக்கு, நினைவு, பேரறிவு, தை₄ர்யம், பொறுமை ஆகியவற்றுக்கு முறையே அதி₄தே₃வதைகளான கீர்த்திதே₃வியும், வாக்₃தே₃வியும், ஸ்ம்ருதிதே₃வியும், மேத₄ாதே₃வியும், த்₄ருதிதே₃வியும், க்ஷமாதே₃வியும் நானே. 'கீர்த்தி' முதலானவற்றை அந்தந்த கு₃ணங்களாகவே கொள்ளக்கூடாதோ, அப்படியன்றோ ப்ரஸித்₃தி₄ இருக்கிறது? எனில்: இந்த கு₃ணங்கள் புருஷர்களிடமும் காணப்படுகையாலே இங்கு கு₃ணங்களைப் பொருளாகக் கொண்டால் 'நாரீணாம்' என்று விஶேஷித்திருப்பது பொருந்தாது. இங்கு

कर्म चाहम्। श्रीरहम् नारीणां ; कीर्तिश्चाहम् ; वाक् चाहम् ; स्मृतिश्चाहम् ; मेधा चाहम् ; धृतिश्चाहम् ; क्षमा चाहम् ॥ ३४ ॥

'நாரீணும்' என்னும் ஶப்3த3த்துக்கு ஸ்த்ரீலிங்க3மாயிருக்கும் பொருள்களுக்குள் என்று பொருள்கொண்டு கீர்த்தி முதலான கு3ணங்களையே குறிப்பதாகக் கொள்ளலாமே? எனில்: நாரீ ஶப்3த3த்துக்கு ஸ்த்ரீகளே முக்2யார்த்த2ம். செல்வம் முதலானவற்றுக்கு அதி4தே3வதைகளாக ஸ்ரீதே3வி, க்ஷமாதே3வி, வாக்3தே3வி முதலான ஸ்த்ரீதே3வதைகளை ஶாஸ்த்ரங்கள் படிக்கின்றன. இப்படி 'ஸ்த்ரீகளுக்கிடையே' என்று முக்2யப் பொருளையே கொள்ள இடம் இருக்கும்போது 'ஸ்த்ரீலிங்க3த்தையுடைய பொருள்களுக்கிடையே' என்ற அமுக்2யப் பொருளைக்கொள்வது உசிதமன்று. இங்கு ஸ்ரீ:, க்ஷமா என்று ஸ்ரீபூ4மிதே3விகளை எடுத்திருக்கையால் கீர்த்தி முதலான ஶப்3த3ங்களால் பரமபத3த்தில் அந்தந்த கு3ணங்களுக்கு அபி4மானினிகளாய் விளங்கும் பரமபுருஷபத்னிகள் குறிக்கப்படுகின்றனர் என்று விளங்குகிறது. "தே3வி! த்வாமநு நீளயா ஸஹ மஹீதே3வ்யஸ் ஸஹஸ்ரம் தத2ா" [ஸ்ரீகு3ண 26] என்று ஸ்ரீபராஶரப4ட்டரும் பரமபத3த்தில் ஸ்ரீதே3விக்குப் பரிகரங்களாய் அளவற்ற தே3விமார் இருப்பதாக எடுத்தாரன்றோ. இவர்கள் அனைவருக்கும் ஸ்ரீதே3வியே தலைவி என்பது ஸ்ரீஸூக்தத்தில் "ஈஶ்வரீம் ஸர்வபூ4தாநாம்" என்று வேத3த்திலேயே படிக்கப்பட்டிருக்கையாலும், ஸ்ரீராமாயணம், ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலான உபப்3ரும்ஹணங்களிலும் இது ப்ரஸித்3த4மாகையாலும் இங்கு "கீர்த்தி: ஸ்ரீ:" என்று படித்திருந்தபோதிலும், அர்த்த2 க்ரமத்தையிட்டுப் பாட2க்ரமத்தை மாற்றி ஸ்ரீதே3வியை முதலில் வைத்தார் ஸ்ரீபா4ஷ்யகாரர். "தஸ்ய பா4ர்யாஸு திஸ்ருஷு ஹ்ரீஸ்ரீகீர்த்த்யுபமாஸு ச" [ரா-பா3 15-21] என்று த3ஶரத2னுடைய பத்னிகள் மூவருக்கும் ஹ்ரீ:, ஸ்ரீ:, கீர்த்தி: என்னும் மூன்று தே3விகளை உபமானமாகச் சொன்னார் வால்மீகி. ஸ்ரீபூ4மிநீளாதே3விகள் என்று சேர்த்துக் கூறப்படுபவர்களும், புருஷஸூக்தத்திலும் நீளாஸூக்தத்திலும் விஷ்ணுபத்னிகளாகக் குறிக்கப்படுபவர்களுமான தேவியர் மூவருமே வால்மீகியால் ஹ்ரீ ஸ்ரீ கீர்த்தி ஶப்3த3ங்களால் குறிக்கப்படுகிறார்கள் என்று கொள்வது பொருத்தமானது. 'ஹ்ரீ: ஸ்ரீ:' என்னும் பத3ங்கள் புருஷஸூக்தத்தில் "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்று குறிக்கப்பட்ட பூ4மிதே3வியையும் லக்ஷ்மிதே3வியையுமே குறிக்கின்றன என்பது வெளிப்படை. 'க்4ருதவதீ ஆதி4பத்யை: பயஸ்வதீ' என்று நெய்,

बृहत्साम तथा साम्नां गायत्री छन्दसामहम् ।
मासानां मार्गशीर्षोऽहमृतूनां कुसुमाकरः ॥ ३५ ॥

35. ப்3ருஹத்ஸாம தத2ா ஸாம்நாம் க3ாயத்ரீ ச2ந்த3ஸாமஹம் ।
மாஸாநாம் மார்க்க3ஶீர்ஷோऽஹம் ருதூநாம் குஸுமாகர: ॥

தத2ா — அவ்வண்ணமே, **ஸாம்நாம்** — ஸாமங்களில், **ப்3ருஹத்ஸாம** — ப்3ருஹத்ஸாமம் (நானே); **ச2ந்த3ஸாம்** — ச2ந்த3ஸ்ஸுக்களுக்குள், **க3ாயத்ரீ அஹம்** — க3ாயத்ரீச் ச2ந்த3ஸ்ஸு நானே; **மாஸாநாம்** — மாதங்களுக்குள், **மார்க்க3ஶீர்ஷ: அஹம்** — மார்கழி நானே; **ருதூநாம்** — ருதுக்களுக்குள், **குஸுமாகர:** — வஸந்தருது (நானே);

பால், ஆதி4பத்யம் முதலானவற்றை உண்டாக்குகிறவளாகவும், "த்4ருவா தி3ஶாம்" என்று புருஷகாரம் செய்பவர்களில் நிலையான வளாகவும், 'அகோ4ரா' என்று மிகக் குளிர்ந்த தன்மையுடையவளாகவும் நீளாஸூக்தத்தில் பல வகையான புகழ்களுக்கு இருப்பிடமாகக் காட்டப்பட்டிருக்கும் நீளாதே3வியே வால்மீகியினுல் கீர்த்தி ஶப்3த3த்தால் குறிக்கப்படுகிருள் என்று எளிதில் உணரலாம். க்ருஷ்ணுவதாரத்தில் நப்பின்னைப் பிராட்டியாக அவதரித்த இந்த நீளாதே3விக்கே ப்ராத4ாந்யமாகையாலே, கண்ணன் அவளைக் கீர்த்திஶ3ப்3த3த்தாலே முதலிலிட்டுப் பேசுகிருன் என்றும் கொள்ளலாம். ஸ்ரீபூ4மிதே3விகளைக் காட்டிலும், இந்த நீளாதே3விக்குள்ள பலவிதமான கு3ணச்சிறப்பைக் கருத்தில் கொண்டு நம்மாழ்வாரும், "குழற்கோவலர் மடப்பாவையும் மண்மகளும் திருவும்" [திருவிருத்தம் 3] "பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல் பிறந்திட்டாள்" [திருவாய் 6-5-10] என்று இவளை மூவரிலும் முதலில் படித்தாரன்ருே. வாக்3தே3வி என்பவள் ஹயக்3ரீவரின் பத்னி என்பது இதிஹாஸ புராண ப்ரஸித்3த4ம். பிரமனின் பத்னியான ஸரஸ்வதியும் இவளுடைய அம்ஶமானவளே. இவ்விஷயங்கள் விஷ்ணுசித்தவிஜயத்திலும் முதலத்தியாயம் இரண்டாம் ப4ாக3த்தில் (1018 to 1025 பக்கங்களில்) விவரிக்கப்பட்டன. "**க்ஷமயா ப்ருதி2வீஸம:**" [ரா-பா3 1-18] என்று வால்மீகியால் பொறுமைக்கு உதா3ஹரணமாகப் போற்றப்பெற்றவளாய், உலகிலும், ஶாஸ்த்ரங்களிலும் க்ஷமாதே3வியென்றே அழைக்கப்படுபவளான பூ4தே3வியே கடைசியில் எடுக்கப்படும் க்ஷமாதே3வி என்பது தெளிவு. 34.

॥ भा ॥ साम्नां बृहत्सामाहम्। छन्दसां गायत्र्यहम्। कुसुमाकरः- वसन्तः ॥ ३५॥

---

36. சாமங் களிற்பெரிய சாமநான் சந்தத்திற்
சேமஞ்செய் காயத் திரிதாணு – ஞமஞ்சேர்
மாதத்து மார்கழிநான் வாய்ந்திருது வானவற்றுண்
மீதத் தினிவசந்தன் மிக்கு.

சாமங்களில் — ஸாமங்களில், **பெரிய சாமம் நான்**— ப்₃ருஹத்ஸாமம் நானே; **சந்தத்தில்**—ச₂ந்த₃ஸ்ஸுக்களில், **சேமம் செய் காயத்திரிதான் நான்** — நன்மை செய்யும் கு₃ாயதரீச் ச₂ந்த₃ஸ் நானே; **மாதத்து** —மாதங்களில், **நாமம் சேர் மார்கழி நான்**—புகழ்பெற்ற மார்கழி நானே; **இனி வாய்ந்த இருதுவானவற்றுள்** — வாய்ப்புடைய ருதுக்களுக்குள், **மிக்கு மீது(அத்து) வசந்தன்**.— மிகவும் சிறந்த வஸந்த ருதுவும் நானே.

---

35. (ப்₃ருஹத்ஸாம ததா₂ ஸாம்நாம்) ஸாமங்களில் ப்₃ருஹத்ஸாமம் நானே. "ப்₃ருஹச்ச வா இத₃மக்₃ரே ரத₂ந்தரம் ச ஆஸ்தாம் வாக் ச வை தந்மநஶ்சாஸ்தாம் வாக்₃வை ரத₂ந்தரம் மநோ ப்₃ருஹத் தத்₃ ப்₃ருஹத் பூர்வம் ஸஸ்ருஜாநம் ரத₂ந்தரமத்யமந்யத, தத்₃ரத₂ந்தரம் க₃ர்ப்ப₄மத₄த்த" [ஐதரேய ப்₃ராஹ்மணம் 4-19-6] [ஆதி₃காலத்தில் ப்₃ருஹத்ஸாமமும், ரத₂ந்தரஸாமமும் இருந்தன. வாக்கும் மனமும் இருந்தன, ரத₂ந்தரஸாமம் வாக்குக்கு அபி₄மாநியாகவும், ப்₃ருஹத்ஸாமம் மனத்துக்கு அபி₄மாநியாகவும் இருந்தன. முதலில் ஸ்ருஷ்டி செய்ய நினைத்த ப்₃ருஹத்ஸாமம் ரத₂ந்தரத்தை ஸ்ருஷ்டிக்க நினைத்தது. அது ரத₂ந்தரத்தை க₃ர்ப்ப₄மாக த₄ரித்தது] என்று ஸாமங்களுக்குள் ப்₃ருஹத்ஸாமத்துக்குச் சிறப்பு வேத₃ங்களிலேயே சொல்லப்பட்டது. (க₃ாயத்ரீ ச₂ந்த₃ஸாம் அஹம்) க₃ாயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், ப்₃ருஹதீ, பங்க்தீ, த்ரிஷ்டுப், ஜக₃தீ என்னும் ச₂ந்த₃ஸ்ஸுக்களுக்குள் நான் க₃ாயத்ரீச் ச₂ந்த₃ஸ்ஸாகிறேன். "(க₃ாயத்ரீம்) ச₂ந்த₃ஸாம் மாத:"[தை-நா26][ச₂ந்த₃ஸ்ஸுக்களுக்குத் தாயான க₃ாயத்ரியே!] என்று உபநிஷத்துக்களிலும் ச₂ந்த₃ஶ்ஶாஸ்த்ரங்களிலும் க₃ாயத்ரிக்கு மற்ற ச₂ந்த₃ஸ்ஸுக்களைக்காட்டிலும் சிறப்பு கூறப்பட்டது. ப₃ஹ்வ்ருசோபநிஷத்திலும் "அக்₃ரம் வை

द्यूतं छलयतामस्मि तेजस्तेजस्विनामहम् ।
जयोऽस्मि व्यवसायोऽस्मि सत्त्वं सत्त्ववतामहम् ॥ ३६ ॥

36. த்$_3$யூதம் ச$_2$லயதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம் ।
ஜயோऽஸ்மி வ்யவஸாயோऽஸ்மி ஸத்த்வம்
ஸத்த்வவதாமஹம் ॥

ச$_2$லயதாம் — வஞ்சனை புரிபவர்களுடைய வஞ்சனைச் செயல்களுக்கு இருப்பிடமானவற்றுள், **த்$_3$யூதம் அஸ்மி**— சூதாட்டம் நானே ஆகிறேன்; **தேஜஸ்விநாம்**—தேஜஸ்ஸை உடையவர்களுடைய, **தேஜ: அஹம்** – தேஜஸ் நானே; **ஜய: அஸ்மி**-(ஜயிப்பவர்களின்) வெற்றி நானே ஆகிறேன்; **வ்யவஸாய: அஸ்மி**—(உறுதி கொள்பவர்களின்) உறுதி நானே

ச$_2$ந்த$_3$ஸாம் க$_3$ாயத்ரீ " [ச$_2$ந்த$_3$ஸ்ஸுக்களுக்குள் க$_3$ாயத்ரீ முதன்மை பெற்றது] என்று இவ்விஷயம் சொல்லப்பட்டது. (மாஸாநாம் மார்க்க$_3$ஶீர்ஷ: அஹம்) மாதங்களுள் மார்கழி மாதம் நானே. வருஷத்தில் க$_3$ர்ப்ப$_4$ாத$_4$ாநம் (க$_3$ர்ப்போ$_4$ட்டம்) நடைபெறும் மாதமாகை யாலும், பயிர்கள் முளைவிடும் மாதமாகையாலும், தே$_3$வர்களுக்கு ப்$_3$ராஹ்மமுஹூர்த்தமாய், ஸத்வம் நிறைந்த காலமாகையாலும், மாஸத்துக்கு அதி$_4$தே$_3$வர்களான கேஶவாதி$_3$களில் முதல்வனை கேஶவனின் மாதமாகையாலும், ருதுக்களில் முதலாவதான ஹேமந்த ருது தொடங்கும் மாதமாகையாலும், மாதங்களுள் மார்கழி மாதத் துக்குச் சிறப்பு ஸுப்ரஸித்$_3$த$_4$ம். அதனாலேயே "மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாளால்"என்று ஆண்டாள் திருப்பாவையைத் தொடங்கி னாள். மார்கழிக்கு இன்னும் பல சிறப்புக்களும் ப்ரத்யக்ஷஸித்$_3$த$_4$ம். (ருதூநாம் குஸுமாகர:) ருதுக்களுக்குள் பூத்துக்குலுங்கும் வஸந்தம் நானே. "குஸுமாகர:" (பூக்களுக்கு இருப்பிடம்) என்னும் ஶப்$_3$த$_3$த் தாலேயே எல்லாப் பிராணிகளுக்கும் ஸுக$_2$த்தை விளைக்கும் பூக்கள் நிறைந்திருக்கையாகிற பிரத்யக்ஷமான பெருமை வஸந்தத்துக்கு உணர்த்தப்பட்டது. "**வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத**" [ஆபஸ்தம்ப$_3$ஶ்ரௌத ஸூத்ரம்] [ஒவ்வொரு வஸந்தத்திலும் ஜ்யோதிர் யாக$_3$ம் செய்யவேண்டும்] "**வஸந்தே தீ$_3$க்ஷயேத்$_2$விப்ரம் க்$_3$ரீஷ்மே ராஜந்யமேவ ச**"[ ] [வஸந்தத்தில் அந்தணர்க் கும், க்$_3$ரீஷ்மத்தில் ராஜாவுக்கும் யாக$_3$தீ$_3$க்ஷை அளிக்கவேண்டும்] என்று வஸந்தத்தின் சிறப்பு ஶாஸ்த்ரங்களில் காட்டப்பட்டது. "**சைத்ர: ஸ்ரீமாநயம் மாஸ: புண்ய: புஷ்பிதகாநந:**" [ரா-அ 3-4] என்று வால்மீகியும் காடுபூமுடிசூடும் சிறப்பும், புண்யமும் மிக்கது என வஸந்தத்தின் முதல்மாதமான சித்திரையைச் சிறப்பித்தார். 35.

॥ भा ॥ छलं कुर्वतां छलास्पदेष्वक्षादिलक्षणं द्यूतमहम् । जेतॄणां

ஆகிறேன்; **ஸத்த்வவதாம்**-விசாலமன முடையவர்களுடைய, **ஸத்த்வம் அஹம்**— அத்தகைய மனமுடைமை நானே;

37. சலம்பயில்வார் சூதுநான் சாயாத தேசி
னலம்பயில்வார் தேசதுவு நானே—வலஞ்செய்
சயமுந் துணிவுநான் றம்மனத்துத் திண்மை
யியலுமவர்க் காங்கதுவும் யான்.

சலம்பயில்வார் வஞ்சனைபுரிபவர்களுடைய வஞ்சனைச் செயல்களுக்கு இருப்பிடமானவற்றுள், **சூது நான்**-சூதாட்டம் நானே; **சாயாத தேசின் நலம் பயில்வார்**— அழியாத தேஜஸ்ஸாகிற சிறப்பைப் பெற்றவர்களுடைய, **தேசு அதுவும் நானே**— அந்தத் தேஜஸ்ஸும் நானே; **வலம் செய் சயமும்** —(வெற்றிகொள்பவர்களுடைய)பலத்தினல் ஏற்படும் வெற்றியும், **துணிவும்** — (துணிவுடையவர்களுடைய) உறுதியும், **நான்**—நானே; **தம் மனத்து திண்மை இயலுமவர்க்கு**—தம் மனத்தில் வலிமை உடையவர்களுக்கு, **ஆங்கு அதுவும் யான்**—அந்த மனவலிமையும் நானே.

36. (த்$_3$யூதம் ச$_2$லயதாம் அஸ்மி) வஞ்சனை புரிபவர்களுடைய வஞ்சனைச் செயல்களுக்கு இருப்பிடமானவற்றுள் சூதாட்டம் நானே. (ச$_2$லயதாம்) "**தத்கரோதி**" [அஷ்டாத்$_4$யாயீ வார்த்திகம் 3-2-25] என்னும் இலக்கணவிதி$_4$யின்படி '**ணிச்**' வந்திருக்கிறதாகையால் 'வஞ்சனை புரிபவர்களுடைய' என்று பொருள்படுகிறது. "வஞ்சனைச் செயல்களுக்கு இருப்பிடமானவற்றுள்" என்பதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். "**தேஜஸ் தேஜஸ்விநாம்**" முதலானவிடங்களிற் போலே "**தீ$_3$வ்யதாம் த்$_3$யூதம்**" [சூதாடுபவர்களின் சூதாட்டம்] என்று கூறுமையால், சூதாட்டம்போலே வஞ்சனைச்செயல்களுக்கு இருப்பிடமான க்ரயவிக்ரயங்கள், கடன் வாங்குதல், வாரிசுரிமை, "யார் அறிவிற் சிறந்தவர்" என்று நிர்ணயிப்பதற்காக நடத்தப்படும் அறிவுப்போர் முதலானவற்றுக்குள் சிறப்புமிக்கதான சூதாட்டம் நானே என்றே பொருள் உரைக்கவேண்டும். சூதாட்டமானது ஆயாஸமில்லாதது; க்ஷத்திரியர் முதலான சிலருக்கு சூதாட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கையாலே அறத்துக்கும் முரண்படாமல் இருதரப்பு ஒப்பந்தத்தின் மூலமே எல்லாப் பொருளையும் பறிப்பதற்கு வழிவகுப்பது; ஆகையால் சூதாட்டம் முற்கூறிய மற்றவற்றைக் காட்டிலும் சிறப்புற்றது. பா$_4$ஷ்யத்தில் 'அக்ஷாதி$_3$லக்ஷணம்' (பகடைக்காய் முதலான

जयोऽस्मि। व्यवसायिनां व्यवसायोऽस्मि। सत्त्ववतां सत्त्वम्—महामनस्त्वम् ॥ ३६ ॥

வற்றை உறுப்பாகக் கொண்ட) என்று சூதாட்டத்துக்கு விஶேஷண மிடப்பட்டது. பகடைக்காயை உருட்டுவதனுல் மாத்திரமே வெற்றி தோல்விகள் ஏறிடப்படுவதால் வஞ்சனை என்ற பொருளுடைய ச2ல ஶப்3த3ம் இதற்குப் பொருந்துகிறது. "அக்ஷாதி3 என்னும் ஆதி3 ஶப்3த3த்தாலே ஸஜீவத்3யூதம், நிர்ஜீவத்3யூதம் என்னும் எல்லா வகைச் சூதாட்டமும் கருதப்படுகிறது. அல்லது நிர்ஜீவத்3யூதத்தை மாத்திரமே அக்ஷாதி2லக்ஷணம் என்று கருதியதாகவும் கொள்ளலாம்" என்று தாத்பர்யசந்த்3ரிகை. உயிருள்ள குதிரை முதலான பொருள்களைக்கொண்டு விளையாடப்படும் குதிரைப்பந்தயம் முதலானவை ஸஜீவத்3யூதம் என்றும், பகடைக்காய் முதலான உயிரற்ற பொருள்களைக் கொண்டு விளையாடப்படுவது நிர்ஜீவத்3யூதம் என்றும் கண்டுகொள்வது. ஆயாஸம் சிறிதுமில்லாமையால் ஸஜீவத்3யூதத்தைக் காட்டிலும், நிர்ஜீவத்3யூதமே சிறப்புற்றது என்னும் திருவுள்ளத்தால் 'அக்ஷாதி3 லக்ஷணம்' என்று அதையே குறித்தார் ப4ாஷ்யகாரர் என்றபடி. (தேஜஸ் தேஜஸ்விநாம் அஹம்) தேஜஸ்ஸுள்ளவர்களுடைய தேஜஸ்ஸும் நானே. தேஜஸ்ஸாவது பராபி4ப4வந ஸாமர்த்2யம் (பிறரை வெற்றிகொள்ளும் திறமை). (ஜயோ஽ஸ்மி) ஜயிப்பவர்களின் ஜயமும் நானே. (வ்யவஸாயோ஽ஸ்மி) துணிவுடையவர்களின் உறுதியும் நானே. முன்னும் பின்னும் தேஜஸ்ஸுடையவர்களும், ஸத்வமுடையவர்களும் 'தேஜஸ்விநாம்' 'ஸத்வவதாம்' என்று எடுக்கப்படுகையாலும், இடையிலுள்ள ஜயத்தையும் துணிவையும் அவர்களோடு இணைக்கமுடியாதாகையாலும், 'ஜயிப்பவர்களின் ஜயம்' 'துணிவுடையவர்களின் துணிவு' என்று அர்த்த2ப3லத்தாலே முன்னும் பின்னும் போலே வருவித்துப் பொருள் கொள்ளப்பட்டது. (ஸத்த்வம் ஸத்த்வவதாம் அஹம்) விசால மனமுடையவர்களின் அத்தகைய மனமுடைமையும் நானே. "ஸத்த்வம்-மஹாமநஸ்த்வம்" என்று ப4ாஷ்யம், 'திண்ணிய மனமுடையவர்களின் மனத்திண்மை நானே' என்று பொருள் கொண்டார் வாதி3கேஸரிஜீயர் வெண்பாவில். "த்3ரவ்யாஸுவ்யவஸாயேஷு ஸத்த்வமஸ்த்ரீ து ஜந்துஷு"[அமரகோசம் 3-3-213] "ஸத்த்வோ஽ஸ்த்ரீ ஜந்துஷு க்லீ து வ்யவஸாயே பராக்ரமே। ஆத்மபா4வே பிஶாசாதௌ3 த்ரவ்யே ஸத்தா ஸ்வப4ாவயோ: ॥" [வைஜயந்தீ-த்3வ்யக்ஷர-நாநாலிங்க3:-93] என்று நிக4ண்டுக்களில் ஸத்வ ஶப்3த3த்துக்குப் பல பொருள்கள் படிக்கப்பட்டிருக்கின்றன. 'வ்யவஸாயம்' (உறுதி) முன்னமே எடுக்கப்பட்டுவிட்டது. ஆகையால் இங்கு ஸத்வஶப்3த3த்துக்கு மனத்தின் சிறப்பைப் பொருளாகக்கொள்வதே உசிதம். 36.

वृष्णीनां वासुदेवोऽस्मि पाण्डवानां धनञ्जयः।
मुनीनामप्यहं व्यासः कवीनामुशना कविः॥ ३७॥

37. வ்ருஷ்ணீநாம் வாஸுதே₃வோऽஸ்மி பாண்ட₃வாநாம் த₄நஞ்ஜய:।
முநீநாமப்யஹம் வ்யாஸ: கவீநாமுஶநா கவி:॥

வ்ருஷ்ணீநாம்—வ்ருஷ்ணிகுலத்தைச் சேர்ந்த யாத₃வர்களுக்குள், **வாஸுதே₃வ: அஸ்மி**—வாஸுதே₃வனாகிறேன்; **பாண்ட₃வாநாம்** — பாண்ட₃வர்களுக்குள், **த₄நஞ்ஜய:**— அர்ஜுனனாகிறேன்; **முநீநாம் அபி** — முனிவர்களுக்குள்ளும், **அஹம் வ்யாஸ:**— நான் வ்யாஸராகிறேன்; **கவீநாம்**—கவிகளுக்குள், **உஶநா கவி:** — ஶுக்ராசார்யரான கவியாகிறேன்.

---

38. மன்னியசீர் யாத வரில்வாசு தேவனான்
பன்னியசீர்ப் பாண்டவரி னீயுநான் — தன்னிகரில்
முன்னும் வியாதன் முனிவரினான் முற்கவிகட்
குன்னு கவியுசன வுற்று,

மன்னியசீர் யாதவரில் — நிலைநின்ற சிறப்பையுடைய யாத₃வர்களுக்குள், **வாசுதேவன் நான்** — வாஸுதே₃வன் நானே; **பன்னியசீர் பாண்டவரில்**— புகழப்படும் கு₃ணங்களையுடைய பாண்ட₃வர்களுக்குள், **நீயும்** — அர்ஜுனனாகிற நீயும், **நான்** — நானே; **முனிவரில்** — முனிவர்களுக்குள், **தன்னிகரில் முன்னும் வியாதன் நான்** — ஒப்பற்ற மனனஶீலரான வியாஸமுனிவர் நானே; **முன் கவிகட்கு**— பழைய கவிகளுக்குள், **உற்று உன்னு உசனகவி நான்**— உற்றுணரும் ஶுக்ராசார்யராகிற கவி நானே.

---

37. (வ்ருஷ்ணீநாம் வாஸுதே₃வோऽஸ்மி) வ்ருஷ்ணிகுலத்தைச் சேர்ந்த யாத₃வர்களுக்குள் வாஸுதே₃வன் நானே. "ராமஶ்ஶஸ்த்ரப்₄ருதாமஹம்" (31) என்ற ராமனைப்போலே வாஸுதே₃வனாகிற இவனும் ஸாக்ஷாத₃வதாரமாகையாலே, அங்கு விஸ்லேந்தி

॥ भा ॥ वसुदेवसुनुत्वमत्र विभूतिः, अर्थान्तराभावादेव ।

நிறமும் தன்மையை விபூ₄தியாகக் கொண்டதுபோலே, இங்கும் வஸுதே₃வனின் பிள்ளையாயிருக்கும் பெருமையை விபூ₄தியாகக் கொள்ளவேண்டும். இவ்விடத்தில் பின்வருமாறு ஆக்ஷேபம் எழக்கூடும்—'வஸுதே₃வனின் பிள்ளையாயிருக்கை' என்பது எப்படி விபூ₄தி (செல்வம்) ஆகும்? ஒருவனுக்குப் பிள்ளையாயிருப்பதைச் செல்வமாகக் கொண்டால், ஒவ்வொருவனுக்குப் பிள்ளையாயிருக்கும் அனைவருக்குமே இப்பெருமையைச் சொல்லவேண்டிவரும். சிறப்புடைய வஸுதே₃வனின் பிள்ளை என்பது செல்வமேயாகும் எனில்: வஸுதே₃வனுக்கு ப₃லராமன் முதலான மற்றும் பல பிள்ளைகள் உளராகையாலே, இது கண்ணனுக்கே உரிய பெருமையாகாது. 'வாஸுதே₃வன்' என்ற ஶப்₃த₃ம் கண்ணனிடமே ப்ரஸித்₃தி₄ பெற்றதாயிற்றே எனில்: இந்த ப்ரஸித்₃தி₄ மாத்திரம் பெருமைக்கு உறுப்பாகாது. மேலும், அர்ஜுனனுக்கு ஏற்கனவே தெரிந்த வஸுதே₃வஸூநுத்வத்தை இங்கு உபதே₃ஶிக்கவேண்டிய அவஶ்யமுமில்லை. ஆகையால் "இந்த க்ருஷ்ணாவதாரம் ஸாக்ஷாத₃வதாரமன்று; ஒரு சேதனனை இடையிட்ட அம்ஶாவதாரமே" என்று கொண்டுவிட்டால் இதுவே விபூ₄தியாவது பொருந்திவிடும். 'வ்ருஷ்ணிகளுக்குள் நான்' என்று கூறாமல் 'வாஸுதே₃வன்' என்று படர்க்கையில் கூறியிருப்பதும் இதை வலியுறுத்துகிறது — என்பது அவ்வாக்ஷேபம். இதற்குப் பரிஹாரம் பின்வருமாறு—இங்கு வாஸுதே₃வஶப்₃த₃ம் லக்ஷணையாலே கண்ணனுடைய திருமேனியைக் குறிக்கிறது. வஸுதே₃வனின் க்₃ருஹத்தில் சதுர்பு₄ஜத்தோடு அவதரித்தது தொடங்கி, அதிமாநுஷமான கு₃ணங்களையும், பராக்ரமச் செயல்களையும் இடையர்களுக்கும் காட்டிக்கொண்டு விளங்கிய பெருமையே இங்கு விபூ₄தியாகக் குறிக்கப்படுகிறது. 'நான்' 'நீ' என்று சொல்லுவதைக் காட்டிலும் வாஸுதே₃வன், த₄நஞ்ஜயன் என்று சொல்லுவதால் பெருமைகள் விளங்கிநிற்குமாகையாலே, படர்க்கையில் குறிப்பிடுவதிலும் குறையில்லை. (பாண்ட₃வாநாம் த₄நஞ்ஜய:) பாண்ட₃வர்களுக்குள் அர்ஜுனன் நானே. த₄ர்மத்தில் யுதி₄ஷ்டி₂ரரும், ப₃லத்தில் பீ₄மஸேனனும், அழகு முதலானவற்றில் நகுலஸஹதே₃வர்களும் தலைசிறந்த பெருமை பெற்றவர்களாயினும், ஶௌர்யவீர்யபராக்ரமங்கள், வில்வித்₃யை, அழகு, கண்ணனின் நண்பனாயிருக்கை, ஜிதேந்த்₃ரியத்வம் முதலான தலைசிறந்த பல பெருமைகளை உடையவனாகையாலே அர்ஜுனனைத் தன் விபூ₄தியாகக் குறிப்பிடுகிறான் கண்ணன். (முநீநாமப்யஹம்

पाण्डवानां धनञ्जयः—अर्जुनोऽहम्। मुनयः—मननेनात्मयाथात्म्यदर्शिनः, तेषां व्यासोऽहम्। कवयः—विपश्चितः ॥ ३७ ॥

வ்யாஸ:) மனனத்திஞல் ஆத்மபரமாத்மாக்களை உள்ளபடி அறிந்த முனிவர்களுள் நான் வியாஸராகிறேன். இருபத்தைந்து இருபத்தாருவது ஶ்லோகங்களில் மஹர்ஷிகளும், தே₃வர்ஷிகளும் எடுக்கப்பட்டார்கள். ரிஷிபத₃ம் தவவலிமையாலே புலன்களுக்கு எட்டாத பொருள்களைக் காண்பவர்களைக் குறிக்கும். மனனஶீலர்கள் முனிவர்கள் எனப்படுகையாலே இங்கு இப்பொருள் கொள்ளப்பட்டது. "ஏதமேவ விதி₃த்வா முநிர்ப₄வதி" [ப்₃ருஹ-6-4-22] [இந்தப் பரமாத்மாவை அறிந்து முனியாகிருன்] என்னும் உபநிஷத்₃வாக்யமும் இப்பொருளையே காட்டிற்று. வியாஸர் ஆத்மபரமாத்மாக்களின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்தவர் என்பது "ஆலோட்₃ய ஸர்வ ஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந:। இத₃மேகம் ஸுநிஷ்பந்நம் த்₄யேயோ நாராயண: ஸதா₃॥" [கா₃ருட₃-பூர்வ 222.1] [எல்லா ஶாஸ்த்ரங்களையும் ஆராய்ந்து மறுபடியும் மறுபடியும் விசாரம் செய்தபின்பும் 'நாராயணன் ஒருவனே எப்போதும் த்₄யானிக்கத்தக்கவன்' என்னுமிதுவே நன்கு தேறிநிற்கும்.] "தபோவிஶிஷ்டாத₃பி வை வஸிஷ்டா₂ந்முநிஸத்தமாத்। மந்யே ஶ்ரேஷ்ட₂தமம் த்வாத்₃ய ரஹஸ்யஜ்ஞாநவேத₃நாத்॥" [ப₄ாரத-ஆதி₃ 1-96] [தவத்தில் சிறந்த முனிவர்தலைவரான வஸிஷ்ட₂ரைக்காட்டிலும் ஆத்மபரமாத்ம ரஹஸ்ய ஜ்ஞானத்தையுடையவராகையாலே நீர் இன்று சிறந்தவராகிறீர்.] முதலான பல இடங்களில் தெளிவாகிறது. இவர் ஓர் ஆவேஶாவதாரம் என்பது "வேத₃வித்₃ ப₄க₃வாந் கல்கி பாதாளஶயந: ப்ரபு₄:" [அஹிர் 5-56] என்று அஹிர்பு₃த்₄ந்யஸம்ஹிதையில் அவதாரங்களைச் சொல்லி வரும்போது "வேத₃வித்₃ ப₄க₃வாந்" என்று வேத₃வ்யாஸரைக் குறிப்பதிலிருந்து தெரிகிறது. ஆகையாலேயே இவர் இங்கு முனிவர்களில் தலைசிறந்தவராகவும், ப₄க₃வத்₃ விபூ₄தியாகவும் எடுக்கப்படுகிருர். (கவிநாம் உஶநா கவி:) கவிகளுக்குள் நான் உஶநஸ் எனப்படும் ஶுக்ராசார்யர் ஆகிறேன். இங்கு கவிகள் என்று காவ்யம் எழுதுபவர்களைக் குறிப்பதாகக்கொண்டால், வால்மீகி முதலானவர்களையே அவர்களில் தலைசிறந்தவர்களாகச் சொல்லியிருக்கவேண்டும். அப்படிச் சொல்லாமையால், 'க்ராந்த த₃ர்ஶீ கவி:' என்னும் வழக்கையொட்டி, எதையும் ஊடுருவிப் பார்ப்பவர்களைக் கவிகள் என்பதாகக் கொள்ளவேண்டும். அத்தகைய கவிகளுள் ஶுக்ராசார்யருக்குச் சிறப்பு 'ஶுக்ரநீதி' முதலான

दण्डो दमयतामस्मि नीतिरस्मि जिगीषताम्।
मौनं चैवास्मि गुह्यानां ज्ञानं ज्ञानवतामहम्॥ ३८॥

38. த₃ண்டோ₃ த₃மயதாமஸ்மி நீதிரஸ்மி ஜிகீ₃ஷதாம் ।
மௌநம் சைவாஸ்மி கு₃ஹ்யாநாம் ஜ்ஞாநம்
ஜ்ஞாநவதாமஹம் ॥

த₃மயதாம்—(வரம்பை மீறுகிறவர்களை) தண்டிப்பவர்களுடைய, **த₃ண்ட₃: அஸ்மி** — தண்டனை ஆகிறேன் ; **ஜிகீ₃ஷதாம்** – வெல்லவிரும்புகிறவர்களுடைய, **நீதி: அஸ்மி** - (வெல்வதற்குறுப்பான) நீதியாகிறேன்; **கு₃ஹ்யாநாம் ச**— மறைக்கும் உபாயங்களிலும், **மௌநம் ஏவ அஸ்மி** — மௌனமாகவே ஆகிறேன் ; **ஜ்ஞாநவதாம்** – அறிவுடையவர்களுடைய, **ஜ்ஞாநம்**—அறிவு, **அஹம்**—நானே.

---

39. தாந்தீமை செய்வாரைத் தண்டிப்பார் தண்டநான்
வேந்தமர்வெல் வார்கட்கு நீதிநா—ளுய்ந்தமைந்த
மௌனநான் ருனே மறைப்பவற்றில் ஞானியர்தம்
ஞானநான் ருனே நயந்து.

தாம் தீமை செய்வாரை—தாமே தீய செயல்களைச் செய்கின்றவர்களை, **தண்டிப்பார்** — தண்டிப்பவர்களுடைய, **தண்டம் நான்** – தண்டனை நானே; **வேந்து அமர் வெல்வார் கட்கு** — அரசர்களைப் போரிலே வெல்கின்றவர்களுடைய, **நீதி நான்**—(வெல்வதற்குறுப்பான) நீதி நானே ; **மறைப்ப வற்றில்**—மறைக்கும் உபாயங்களில், **ஆய்ந்து அமைந்த மௌனம் நான் தானே** — ஆராய்ந்து கைக்கொள்ளப்பட்ட மௌனம் நானேயாவேன் ; **ஞானியர் தம்**— அறிவுடையவர்களுடைய, **ஞானம்**— அறிவு, **நயந்து** —விருப்பத்துடன், **நான் தானே**—நானே ஆகிறேன்.

வற்றில் எல்லா வகையான நீதிகளையும் ஊடுருவிப்பார்த்து விளக்கியிருப்பதிலிருந்து வெளிப்படுகிறது. "ந கஶ்சிந்நோபநயதே புமாநந்யத்ர பா₄ர்க₃வாத் | ஶேஷஸம்ப்ரதிபத்திஸ்து பு₃த்₃தி₄மத்ஸ்வவதிஷ்டதே ||" [பா₄ர-ஆதி₃] [ப்₄ருகு₃புத்ரரான ஶுக்ராசார்யரைத் தவிர வேறெவரையும் எந்த மனிதனும் ஆசார்யனாக வரிப்பதில்லை. அறிவாளிகள் அனைவரிடமும் 'அவருக்கு தா₃ஸன்' என்னும் எண்ணமே நிலைநிற்கிறது] என்று அவருடைய சிறப்பு சொல்லப்பட்டது. 37.

॥ भा ॥ नियमातिक्रमणे दण्डं कुर्वतां दण्डोऽहम्। विजिगीषूणां जयोपायभूता नीतिरस्मि। गुह्यानां संबन्धिषु गोपनेषु मौनमस्मि। ज्ञानवतां ज्ञानं चाहम् ॥ ३८ ॥

---

38. (த₃ண்டே₃ா த₃மயதாமஸ்மி) ஶாஸ்த்ரவரம்பை மீறுகையாலே தண்டிக்கத் தக்கவர்களை தண்டிப்பவர்களுடைய தண்டனை நானே. 'த₃மயதாம' என்பதற்கு 'தண்டிப்பவர்கள்' என்றே பொருளாயிருந்த போதிலும், தண்டிக்கத் தகாதவர்களை தண்டிப்பது கொடிய நரகத் துக்கே காரணமாகுமாகையாலே, 'ஶாஸ்த்ரவரம்பை மீறுகையாலே தண்டிக்கத் தக்கவர்களை தண்டிப்பவர்கள்' என்று விஶேஷித்துப் பொருள்கொள்ளப்பட்டது. (நீதிரஸ்மி ஜிகீ₃ஷதாம்) எதிரிகளை வெல்ல நினைப்பவர்களுடைய வெல்வதற்குறுப்பான நீதி நானே. "நீதிர்நீதி மதாமஸ்மி" [நீதியுடையவர்களின் நீதி நானே] என்று சொல்லாமல் "நீதிரஸ்மி ஜிகீ₃ஷதாம்" என்று சொல்லுகையாலே, இவ்வண்ணம் பொருள் கொள்ளப்பட்டது. இங்கு நீதி என்றது பு₃த்₃தி₄யின் செயற்பாட்டைக் குறிக்கிறது. (மௌநம் சைவாஸ்மி கு₃ஹ்யாநாம்) மறைக்கும் உபாயங்களில் நான் மௌனமாகிறேன். 'கு₃ஹ்யம்' என்பதற்கு ரஹஸ்யம் என்றே பொருளாயினும், பேசாதிருத்தலாகிற மௌனம் ரஹஸ்யங்களில் ஒன்றல்லவாகையால், 'ரஹஸ்யங்களுள் நான் மௌனமாகிறேன்' என்று பொருள் கொள்ள இயலாது. மௌனஶப்₃த₃ம் அதிரஹஸ்யமான ஆத்மவித்₃யையைக் குறிக்கிறது என்று பொருள் கொள்ளப்பார்த்தால், உலகிலோ ஶாஸ்த்ரங்களிலோ அப்படி ப்ரஸித்₃தி₄யில்லை. ஆகையால் கு₃ஹ்ய ஶப்₃த₃த்திற்கு ரஹஸ்யங்களோடு தொடர்புடையவையாய், அவற்றை மறைக்கும் உபாயங்கள் பொருளாகக் கொள்ளப்பட்டன. இருவரே அறிந்ததாய், மூவர் அறியாததாக ரஹஸ்யங்களை மறைக்கும்போது, அவற்றை அஷட்கர்ண (ஆறு காதுகளில் படாத) ரஹஸ்யங்கள் என்று கூறுவதுண்டு. அத்தகைய ரஹஸ்யங்களும் அவ்விருவர்மூலம் ப₃ஹிரங்க₃மாவதற்கு இடமுண்டு. ஆகையால் மறைக்கும் உபாயங் களில் அஷட்கர்ணமாக வைத்துக்கொள்ளுதல் இதைக் காட்டிலும் சிறந்தது—ரஹஸ்யத்தை ஒருவனே தனக்குள் வைத்துக்கொண்டு மௌனமாயிருப்பதேயாகும். இதனாலேயே "மறைக்கும் உபாயங்களுள் தலைசிறந்ததான மௌனம் நான்" என்று கூறுகிறான். (ஜ்ஞாநம் ஜ்ஞாநவதாமஹம்) அறிவுடையவர்களுடைய அறிவு நானே. "பூ₄தாநாமஸ்மி சேதநா" [22] என்னுமிடத்தில் ஜீவராசிகளுக்குள்ள

यच्चापि सर्वभूतानां बीजं तदहमर्जुन!।
न तदस्ति विना यत्स्यान्मया भूतं चराचरम्॥ ३९॥

39. யச்சாபி ஸர்வபூ₄தாநாம் பீ₃ஜம் தத₃ஹமர்ஜுந!।
ந தத₃ஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூ₄தம் சராசரம்॥

அர்ஜுந — அர்ஜுனா! **ஸர்வபூ₄தாநாம்** — எல்லாப் பொருள்களுக்கும், **யத் பீ₃ஜம்** —(ஆங்காங்கு) யாதொன்று உபாதா₃ன காரணமாக உள்ளதோ, **தத் அபி ச அஹம்** — அதுவும் நானே; **சராசரம் பூ₄தம்** — அசைவனவும் அசையாதனவுமான பொருள்களில், **மயா விநா** —(அந்தர்யாமியான) என்னைவிட்டுப் பிரிந்து, **யத் ஸ்யாத்** — ஒன்று இருக்குமோ என்று பார்த்தால், **தத் ந அஸ்தி** — அத்தகைய பொருள் ஒன்றும் இல்லை.

---

40. எல்லாப் பொருளுக்கும் யாதுமுதல் வித்தாகு(ம்)
மல்லாருந் தோள்விசையா மற்றதுநா—னல்லாது
மீங்கிதுகே ளென்னை யொழிந்திச் சராசரத்தி
லாங்குளதொன் றில்லை யது.

பொதுவான அறிவு முன்னமே சொல்லப்பட்டுவிட்டபடியால், இங்கு ஜ்ஞானமென்று சிறந்த புருஷார்த்த₂த்துக்குறுப்பான தலைசிறந்த ஜ்ஞானத்தைச் சொல்லுவதாகவே கொள்ளவேண்டும்.

"ஸம்ஜ்ஞாயதே யேந தத₃ஸ்தே₃தோ₃ஷம்
ஶுத்₃த₄ம் பரம் நிர்மலமேகரூபம்।
ஸந்த்₃ருஶ்யதே வாப்யதி₄க₃ம்யதே வா
தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யது₃க்தம்॥"

[வி-பு 6-5-87]

[எந்த அறிவினால், தோ₃ஷமற்றதும் ஶுத்₃த₄மானதும், மிகவும் மலமற்றதும், ஒப்புயர்வற்றதுமான அந்தப் பரவஸ்து அறியப்படுகிறதோ, பார்க்கப்படுகிறதோ, அடையப்படுகிறதோ, அதுவே ஜ்ஞானம்; அதைக்காட்டிலும் வேறானது அஜ்ஞானம்.] என்று பராஶரர் காட்டிய மோக்ஷோபாயமான ஜ்ஞானமே இங்கு கருதப் படுகிறது. 38.

॥भा॥ सर्वभूतानां सर्वावस्थावस्थितानां तत्तदवस्थाबीजभूतं प्रतीयमानमप्रतीयमानं च यत्, तदहमेव। भूतजातं मया आत्मतयाऽवस्थि-

மல் ஆரும் தோள் விசையா — மல்லர்களை வெற்றி கொண்ட தோளேயுடைய அர்ஜுனா! **எல்லா பொருளுக்கும்** — (உலகிலுள்ள) எல்லாப் பொருள்களுக்கும், **யாது முதல் வித்தாகும்** — (ஆங்காங்கு) யாதொன்று உபாதா₃ந காரணமாயிருக்கின்றதோ, **மற்று அது நான்**— அந்தப் பொருள் நானே; **அல்லாதும்**—மேலும், **ஈங்கு இது கேள்**—இங்கு இவ்வார்த்தையைக் கேட்பாயாக; **இச்சராசரத்தில்** -அசைவனவும் அசையாதனவும் நிறைந்த இப் பொருள்களில், **என்னை ஒழிந்து உளது ஒன்று** -என்னைப் பிரிந்திருக்கும் ஒருபொருள் (உண்டோ என்று பார்த்தால்), **ஆங்கு அது இல்லை**—அத்தகைய பொருள் இல்லை.

39. (யச்சாபி ஸர்வபூ₄தாநாம் பீ₃ஜம் தத் அஹம்) எல்லா நிலைகளிலுமுள்ள எல்லாப் பொருள்களுக்கும் அந்தந்த நிலையில் உபாதா₃நகாரணமாக ப்ரத்யக்ஷத்தாலும், அனுமாநாப்₃த₃ங்களாலும் அறியப்படும் பொருள் யாதொன்றுண்டோ அது நானே. 'எல்லாப் பொருள்களுக்கும் உபாதா₃நகாரணம்' என்று இங்கு மூலப்ரக்ருதியைக் கூறலாகாதோ? எனில்: உலகில் உள்ள பொருள்களனைத்துக்கும் மூலப்ரக்ருதி நேரே உபாதா₃நகாரணமாகாதாகையாலே இப்பொருள் பொருந்தாது. பீ₃ஜம் என்று நெல் முதலான விதைகளைப் பொருளாகக் கொள்ளலாமென்று பார்த்தால், ஸர்வபூ₄தப₃த₃த்தால் எடுக்கப்படும் ஜங்க₃மப் பொருள்களுக்கு அவை உபாதா₃நகாரணமாகமாட்டாவாகையாலே இப்பொருளும் பொருந்தாது. ஆகையால் அந்தந்தக் கார்யநிலையிலிருக்கும் த்₃ரவ்யங்களுக்கு அந்தந்தக் காரணநிலையிலிருக்கும் த்₃ரவ்யங்களே பீ₃ஜபப₃த₃த்தால் குறிக்கப்படுகின்றன என்று கொள்வதே பொருத்தம். "அஹம ஆத்₃மா" [20] என்னும் ச்லோகத்தில் ப்ராக்ருத ப்ரளயத்திலும் நைமித்திகப்ரளயத்திலும் செய்யப்படும் ஸ்ருஷ்டிகள் கூறப்பட்டுவிட்டபடியால், இங்கு நித்யஸ்ருஷ்டிக்குக் காரணமான அந்தந்த உபாதா₃நத்₃ரவ்யங்கள் தனக்கு சரீரமாயுள்ளன என்பதைக் காட்டுவதன்மூலம் தானே நித்யஸ்ருஷ்டிக்கும் காரணம் எனக் கூறுவதாகக் கொள்ளவேணும். 'யச்சாபி' என்னும் இரண்டு உம்மையாலே ப்ரத்யக்ஷத்தாலும் அனுமானம் முதலானவற்றாலும் அறியப்படும் இருவகையான உபாதா₃நப் பொருள்களும் காட்டப்

तेन विना यत्स्यात्, न तदस्ति। *अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थितः (२०) इति प्रक्रमात् '*न तदस्ति विना यत्स्यान्मया भूतं चराचरम्' इत्यत्राप्यात्मतयाऽवस्थानमेव विवक्षितम्। सर्वं वस्तुजातं सर्वावस्थं मया आत्मभूतेन युक्तं स्यादित्यर्थः। अनेन सर्वस्यास्य सामानाधिकरण्यनिर्देशस्यात्मतयाऽवस्थितिरेव हेतुरिति [प्रकटितम्] प्रकटयति। ३९॥

படுகின்றன. (சராசரம் பூ₄தம் மயா விநா யத் ஸ்யாத் தத் ந அஸ்தி) அசைவனவும் அசையாதனவுமான பொருள்களில் என்னைவிட்டுப் பிரிந்து ஏதாவதொரு பொருள் இருக்குமோ என்று பார்த்தால், அத்தகைய பொருள் இல்லை. ஸர்வபூ₄தாஶப்₃த₃த்தால் ஶ்லோகத்தில் தொடக்கத்தில் எடுக்கப்பட்டவையே சராசரம் பூ₄தம் என்று ஶ்லோகத்தின் முடிவில் எடுக்கப்படுகின்றன; இப்படிப் பல பொருள்களையும், அவற்றுக்கு உபாதா₃நகாரணங்களையும் தொடக்கத்திலும் முடிவிலும் எடுத்திருக்கும் கண்ணன் இடையிலே "ந தத₃ஸ்தி விநா யத் ஸ்யாந் மயா" என்னும் தொடராலே 'என்னைத்தவிர வேறு பொருளே இல்லை' என்று கூறுகிறான் என்று பொருள் உரைப்பது பொருந்தாது. ஆகையால் 'அந்தர்யாமியாயிருக்கும் என்னைவிட்டுப் பிரிந்து எப்பொருளுமில்லை' என்று கூறுவதாகவே கொள்ளவேண்டும். இந்த ப்ரகரணத்தின் தொடக்கத்திலும் "அஹமாத்மா கு₃டா₃கேஶ ஸர்வபூ₄தாஶயஸ்ஸ்தி₂த:" [20] என்று தான் அனைத்துக்கும் அந்தர்யாமியாயிருப்பதைக் கூறுவது இப்படிப் பொருள் கூறுவதே பொருத்தம் என்று காட்டுகிறது. ஆகையால் 'எல்லா நிலையிலுள்ள எல்லாப் பொருள்களும் அந்தர்யாமியான என்னோடு கூடியேயிருக்கின்றன' என்றே இதற்குப் பொருள்கொள்ளவேண்டும். இப்படி ப்ரகரணத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் உலகிற்கும் தனக்கும் ஶரீரஶரீரிப₄ாவத்தைக் காட்டுகையாலே, இடையிலே பற்பல பொருள்களோடு தன்னை ஒரே வேற்றுமையில் படித்ததற்கும் தான் அனைத்துக்கும் அந்தர்யாமியாயிருப்பதே காரணம் என்று வெளிப்படுத்துகிறான் கண்ணன். த்₃ரவ்யமல்லாதவற்றோடு தன்னை ஒரே வேற்றுமையில் படித்திருக்குமிடங்களில், அவற்றுக்கு ஆஶ்ரயமான த்₃ரவ்யங்கள் பரமபுருஷனுக்கு ஶரீரமாயிருப்பதையிட்டு அவையும் அவனுக்கு ப்ரகாரமாயிருக்கின்றனவாகையாலே ஒரே வேற்றுமையில் படிக்கப்படுகின்றன என்று கொள்ளவேண்டும். (அர்ஜுன) வெள்ளையுள்ளத்தினனே! "ஸிதமநஸம் தமவேஹி விஷ்ணுப₄க்தம்" [வி-பு 3-7-20] [வெள்ளை மனத்தினனாயிருப்பவனை விஷ்ணுப₄க்தனாக அறி] என்கிறபடியே நீ வெள்ளை மனத்தினனானபடியாலே விஷ்ணுப₄க்தனான உனக்கு இவ்வரும் பொருள்கள் என்னால் கூறப்பட்டது. 39.

नान्तोऽस्ति मम दिव्यानां विभूतीनां परन्तप।
एष तूद्देशतः प्रोक्तो विभूतेर्विस्तरो मया॥ ४०॥

40. நாந்தோ஽ஸ்தி மம தி₃வ்யாநாம் விபூ₄தீநாம் பரந்தப।
ஏஷ தூத்₃தே₃ஶத: ப்ரோக்தோ விபூ₄தேர்விஸ்தரோ மயா॥

பரந்தப — எதிரிகளை வருத்துமவனே!. **மம** — என்னுடைய, **தி₃வ்யாநாம்** — மங்க₃ளமான, **விபூ₄தீநாம்** — செல்வங்களுக்கு, **அந்த:** — எல்லை. **ந அஸ்தி** — இல்லை. **ஏஷ:** — இது வரையில் நான் சொன்ன, **விபூ₄தே: விஸ்தர: து** — செல்வங்களின் விரிவோவெனில், **மயா** — என்னால், **உத்₃தே₃ஶத: ப்ரோக்த:** — ஓரளவுக்கு வகைப்படுத்திச் செல்வங்களைக் கூறுவதன் மூலம் சுருக்கமாகச் சொல்லப்பட்டது.

---

41. ஏற்குமென் றிவ்வியவி பூதிகளுக் கெல்லைதான்
பார்க்குமள வில்லை பரந்தபனே - சீர்க்கவன
வுத்தேசத் துன்னி யுரைத்தேன் விபூதியிது
மெய்த்தேசுற் றேய்ந்த விரிவு.

பரந்தபனே — எதிரிகளை வருத்துகின்றவனே! **பார்க்குமளவு** — ஆலோசித்துப் பார்த்தால், **ஏற்கும் என் திவ்விய விபூதிகளுக்கு** — எனக்குத் தக்கதான எனது மங்க₃ளமான செல்வங்களுக்கு, **எல்லை தான் இல்லை** — எல்லை அடியோடு இல்லை. **விபூதி இது** — இந்தச் செல்வங்களின், **மெய்த்தேசுற்று ஏய்ந்த விரிவு** — உண்மையான பெருமை பொருந்திய விஸ்தரத்தை, **சீர்க்கவன உத்தேசத்து உன்னி உரைத்தேன்** — பெருமைமிக்கவைகளை ஆராய்ந்து வகைப்படுத்தி ஓரளவுக்குச் சுருக்கமாக உரைத்தேன்.

---

40. தனது செல்வங்களுக்கு எல்லை இல்லை என்றும், இது வரை சொன்னது சுருக்கமாகச் சொன்னதே என்றும் கூறி, ஏற்கனவே பத்தொன்பதாவது ஶ்லோகத்தில் சொன்னதை நினைவுபடுத்துகிறான். (மம தி₃வ்யாநாம் விபூ₄தீநாம் அந்த: நாஸ்தி) எனது மங்க₃ளமான செல்வங்களுக்கு எல்லையில்லை. (தி₃வ்யாநாம்) இங்கு ப்ராக்ருதமான

॥भा॥ मम दिव्यानां—कल्याणीनां विभूतीनामन्तो नास्ति ; एष तु विभूतेर्विस्तरो मया कैश्चिदुपाधिभिः संक्षेपतः प्रोक्तः॥ ४०॥

यद्यद्विभूतिमत्सत्त्वं श्रीमदूर्जितमेव वा।
तत्तदेवावगच्छ त्वं मम तेजोंऽशसंभवम्॥ ४१॥

41. யத்₃யத்₃விபூ₄திமத்ஸத்த்வம் ஶ்ரீமதூ₃ர்ஜிதமேவ வா।
தத்ததே₃வாவக₃ச்ச₂ த்வம் மம தேஜோம்ஶஸம்ப₄வம்॥

யத் யத் ஸத்த்வம்—எந்தெந்த ஜீவராசி, **விபூ₄திமத்**—தன்னால் நியமிக்கப்படும் செல்வங்களை உடையதாய் உள்ளதோ, **ஶ்ரீமத்**—ஒளி உடையதாய் உள்ளதோ, **ஊர்ஜிதம் ஏவ வா**—மங்க₃ளமான கார்யங்களைத் தொடங்குவதில் ஊற்றமுடையதாய் விளங்குகின்றதோ, **தத் தத்**—அந்தந்த ஜீவராஶியை, **த்வம்**—நீ, **மம**—(அளப்பரிய சக்தியுள்ள) என்னுடைய, **தேஜோம்ஶஸம்ப₄வம் ஏவ அவக₃ச்ச₂**—நியமன ஶக்தியின் ஒரு பகுதியினால் உண்டானது என்றே அறிவாயாக.

பல செல்வங்களையும் கூறுகையாலே, 'தி₃வ்யாநாம்' என்பதற்கு "பரமபத₃த்திலுள்ள அப்ராக்ருதமான" என்று பொருள்கொள்ள முடியாது. ஆகையால், 'மங்க₃ளமான செல்வங்கள்' என்று பொருள் கொள்ளப்பட்டது. "**விபூ₄தீராத்மநஶ்ஶுப₄ா:**" [19] [எனது மங்க₃ளமான செல்வங்கள்] என்று தொடக்கத்திலும் ஶுப₄மான விபூ₄திகள் என்றல்லவோ சொல்லப்பட்டது. அப்படியானால் இதுவரை நீ சொன்னது எப்படி? எனில் — (ஏஷ து விபூ₄தேர் விஸ்தர: மயா உத்₃தே₃ஶத: ப்ரோக்த:) இதுவரையில் நான் சொன்ன செல்வங்களின் விரிவோவெனில், என்னால் ஓரளவுக்கு வகைப்படுத்திச் செல்வங்களைக் கூறுவதன் மூலம் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. (பரந்தப!) எனது விபூ₄தியில் ஒன்றான உனது எதிரிகளை வருத்தும் தன்மைக்கே எல்லையில்லாமலிருக்கும்போது, அநந்தமான எனது விபூ₄திகளுக்கு எல்லை இல்லை என்பதை நீ எளிதில் உணரலாம் என்று கருத்து. 40.

॥भा॥ यद्यद्विभूतिमत्—ईशितव्यसंपन्नं भूतजातं श्रीमत्—कान्तिमत्, धनधान्यसमृद्धं वा ऊर्जितं—कल्याणारम्भेषूद्युक्तम्; तत्तन्मम

---

42. **ஏது விபூதியுடைத் தேது திருவுடைய**
தேது மிகவுயர்த்தி யேதுபொரு—ளேததுதான்
என்னுடைய தேசதனி லேகதே சத்துளதா
வுன்னுடைய நெஞ்சா லுணர்.

ஏது ஏது பொருள் விபூதி உடைத்து—எந்தெந்த ஜீவராசி தன்னால் நியமிக்கப்படும் செல்வங்களை உடையதாய் விளங்குகின்றதோ, **ஏது ஏது திருவுடையது**—எந்தெந்த ஜீவராசி ஒளியுடையதோ, **ஏது ஏது மிக உயர்த்தி**—எந்தெந்த ஜீவராசி மங்களமான கார்யங்களைத் தொடங்குவதில் ஊற்றமுடையதாய் விளங்குகின்றதோ, **அதுதான்**—அந்த ஜீவராசி, **என்னுடைய**—(அளவற்ற சக்தியுடைய) என்னுடைய, **தேசு அதனில் ஏகதேசத்து உளதா**—ஶக்தியில் ஒருபகுதியிலிருந்து உண்டானதாக, **உன்னுடைய நெஞ்சால் உணர்**—உன்னுடைய நெஞ்சால் நினைப்பாயாக.

---

41. "**ப்ராத$_4$ாந்யத:**" [19] [முக்$_2$யமான விபூ$_4$திகளை] என்று தொடங்கி இதுவரையில் சொல்லப்பட்ட விபூ$_4$திகள், சொல்லப்படாதவையும், அவஶ்யம் சொல்லவேண்டியவையுமான மற்றும் பல முக்$_2$யவிபூ$_4$திகளுக்கு எடுத்துக்காட்டேயாகும் என்று கூறி இந்த ப்ரகரணத்தை நிறைவுபடுத்துகிறான். (யத் யத் ஸத்த்வம்) எந்த எந்த ஜீவராசி இங்கு விபூ$_4$தியுடையதாகக் கூறுகையாலே ஸத்வ ஶப்$_3$த$_3$த்துக்கு ஜீவராசி என்று பொருள் கூறுவதே பொருந்தும். (விபூ$_4$திமத்) தன்னால் நியமிக்கப்படும் செல்வங்களை உடையதாய் விளங்குகின்றதோ. (ஶ்ரீமத்) எது எது ஒளியுடையதாய் விளங்குகின்றதோ. "விபூ$_4$திமத்" என்னும் பத$_3$த்தில் செல்வங்களைச் சொல்லிவிட்டபடியால் இங்கு 'ஶ்ரீ' ஶப்$_3$த$_3$த்துக்குச் செல்வங்களைப் பொருளாகக் கொள்ளாமல் 'ஒளி' பொருளாகக் கொள்ளப்பட்டது. கோ$_3$ப$_3$லீவர்த்த$_3$ந்யாயத்தாலே — விபூ$_4$திஶப்$_3$த$_3$த்தாலே உயிருள்ள ஆடு மாடு முதலான செல்வங்களையும், ஶ்ரீஶப்$_3$த$_3$த்தாலே உயிரற்ற த$_4$நம் த$_4$ாந்யம் முதலான செல்வங்களையும் குறிப்பதாகவும்

तेजोंशसंभवमित्यवगच्छ। तेजः—पराभिभवनसामर्थ्यम्, ममाचिन्त्यशक्तेर्नियमनशक्त्येकदेशसंभवमित्यर्थः ।। ४१ ।।

கொள்ளலாம். ஆகையாலே விபூ$_4$தி ஸ்ரீஶப்$_3$த$_3$ங்களிடையே புநருக்தி யில்லை. (ஊர்ஜிதமேவ வா) எந்தெந்த ஜீவராசி மங்க$_3$ளமான கார்யங் களைத் தொடங்குவதில் ஊற்றமுடையதாய் விளங்குகின்றதோ. ' ஊர்ஜிதம் ' என்பதற்குப் பொதுவாக ' உயர்வுடையது ' என்று பொருள்கொண்டால், ''விபூ$_4$திமத், ஸ்ரீமத்'' என்று ஓவ்வொரு வகை யான உயர்வுடையனவற்றைக் குறிக்கும் பத$_3$ங்கள் தேவையில்லை என்று ஆகிவிடுமாகையால் இப்படிப் பொருள்கொள்ளப்பட்டது. 'ஊர்ஜா' ஶப்$_3$த$_3$ம் சோர்வடையாத முயற்சியுடைமையைக் குறிக்குமன்றோ. இங்கு மூன்றைச் சொன்னது ப$_3$லம் முதலானவற்றை உடைய மற்ற ஜீவராசிகளுக்கும் உபலக்ஷணம். (தத் தத்) அந்தந்த ஜீவ ராஶியை. (த்வம்) நீ. (மம தேஜோம்ஶஸம்ப$_4$வம் ஏவ அவக$_3$ச்ச$_2$) அளப்பரிய ஶக்தியுள்ள என்னுடைய நியமன சக்தியின் ஒரு பகுதி யினுல் உண்டானது என்றே அறிவாயாக. இங்கு தேஜஶ்ஶப்$_3$த$_3$ம் திருமேனியின் ஒளியாகிற தேஜஸ்ஸைக் குறிக்கிறதாகக்கொண்டால், அதின் ஒரு பகுதியிலிருந்து ஜீவராசிகள் உண்டாவது என்பது பொருந்தாது, ஆகையால் இங்கு தேஜஶ்ஶப்$_3$த$_3$ம் பராபி$_4$ப$_4$வந ஸாமர்த்$_2$யம் (பிறரை வெற்றிகொள்ளும் திறமை) எனப்படும் நியமன சக்தியாகிற ஆத்மகு$_3$ணத்தைக் குறிப்பதென்று கொள்வதே பொருந் தும். ''தேஜஸோऽம்ஶ: ஸம்ப$_4$வ: யஸ்ய தத் தேஜோம்ஶஸம்ப$_4$வம்'' என்னும் வ்யுத்பத்தியாலே இந்த ஶப்$_3$த$_3$ம் ''அந்தத் தேஜஸ்ஸின் ஒரு பகுதியைக் காரணமாகக் கொண்டது'' என்று பொருள்படுகிறது. இதையே **'' யஸ்யாயுதாயுதாம்ஶாம்ஶே விஶ்வஶக்திரியம் ஸ்தி$_2$தா ''** [வி-பு 1-9-53] [எவனுடைய ஶக்தியின் பல்லாயிரத்தின் ஒரு பகுதி யில் இவ்வுலகமாகிற ஶக்தி நிலைநிற்கிறதோ] என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் பராஶர மஹர்ஷி அருளிச்செய்தார். இதையொட்டி 'மம' என்னும் பத$_3$ம் ''நினைத்தற்கரிய ஶக்தியையுடைய என்னுடைய'' என்று பொருள்படுகிறது. இந்த ஶக்தியானது உப$_4$யவிபூ$_4$தியை யும் விஷயமாகக் கொண்டது என்பதும், தடைபடாதது என்பதும், சேராததையும் சேர்ப்பிக்கவல்லது என்பதும் **'' பராஸ்ய ஶக்திர் விவிதை$_4$வ ஶ்ரூயதே ஸ்வாப$_4$ாவிகீ ''** [ஶ்வேதாஶ்வதர 6-8] [இந்தப் பரமாத்மாவுக்கு மேலானதாய், பலவித$_4$மானதாய், இயல்வானதான ஶக்தி ஓதப்படுகிறது] முதலான ப்ரமாணங்களில் உத்$_3$கே$_4$ாஷிக்கப் பட்டது. மலையையே பெயர்த்துக்கொண்டு செல்லவல்ல சண்ட$_3$

अथवा बहुनैतेन किं ज्ञानेन तवार्जुन।
विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत्॥ ४२॥

॥ इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु **विभूतिविस्तरयोगो** नाम दशमोऽध्यायः॥ १०॥

42. அத$_{2}$வா ப$_{3}$ஹுநைதேந கிம் ஜ்ஞாநேந தவார்ஜுந।
விஷ்டப்$_{4}$யாஹமித$_{3}$ம் க்ருத்ஸ்நமேகாம்ஶேந ஸ்தி$_{2}$தோ ஜக$_{3}$த் ॥

இதி ஶ்ரீமத்$_{3}$ப$_{4}$க$_{3}$வத்$_{3}$கீ$_{3}$தாஸு உபநிஷத்ஸு
விபூ$_{4}$திவிஸ்தரயோகோ$_{3}$ நாம த$_{3}$ஶமோऽத்$_{4}$யாய: ||

அர்ஜுந!—அர்ஜுனா!, **அத$_{2}$வா**—அன்றிக்கே, **ப$_{3}$ஹுநா ஏதேந ஜ்ஞாநேந**—பலவித$_{4}$மாகச் சொல்லப்பட்ட இந்த ஜ்ஞானத்தினலே, **தவ கிம்**—உனக்கு என்ன பயன்? **அஹம்**—நான், **இத$_{3}$ம் க்ருத்ஸ்நம் ஜக$_{3}$த்**—இவ்வுலகு முழுமையையும், **ஏகாம்ஶேந**—(என் சக்தியின்) ஒரு சிறு பகுதியாலே, **விஷ்டப்$_{4}$ய ஸ்தி$_{2}$த:**—த$_{4}$ரித்து நிற்கிறேன்.

---

43. இந்தப் பலவா வியம்பியமெய்ஞ் ஞானத்தா
லெந்தப் பயனு மிகல்விசயா—முந்தையெனம்
சத்திலே சத்தாய்ச் சகத்தனைத்தும் பற்றிநா
னத்திலே நிற்ப னமர்ந்து.

இகல் விசயா—போரில் வெற்றியே காணும் அர்ஜுனா!, **இந்த பலவா இயம்பிய மெய் ஞானத்தால்**—இப்படிப் பலவாருக என்னுல் சொல்லப்பட்ட உண்மையறிவாலே, **எந்த பயன் ஆம்**—என்ன பயன் உண்டாகும்? **முந்தை**—அனுதிகாலமாக, **என் அம்சத்திலே**—எனது சக்தியின் சிறுபகுதியாலே, **சகத்து அனைத்தும் பற்றி**—உலகனைத்தையும் த$_{4}$ரித்து நின்று, **நான்**—நான், **அத்திலே**—அவ்வுலகனைத்திலும், **சத்தாய் அமர்ந்து நிற்பன்**—விகாரமற்றவனைப் பொருந்தி நிற்கிறேன்.

மாருதத்திற்கு ஒரு துரும்பை அடித்துச்செல்வது அதன் ஶக்தியின் ஒரு சிறுபகுதியாலேயே நடப்பதுபோலே, நினைத்தற்கரிய ஶக்தியையுடைய தன்னுடைய ஶக்தியின் ஒரு சிறு பகுதியையே எல்லாப் பொருள்களும் காரணமாகக்கொண்டவை என்றதாகிறது. 41.

॥ भा ॥ बहुनैतेनोच्यमानेन ज्ञानेन किं प्रयोजनम्। इदं चिदचिदात्मकं कृत्स्नं जगत्कार्यावस्थं कारणावस्थं स्थूलं सूक्ष्मं च स्वरूपसद्भावे, स्थितौ, प्रवृत्तिभेदे च यथा मत्सङ्कल्पं नातिवर्तेत ; तथा मम

---

42. "ப்ராத4ாந்யத:" [19] என்று முக்2யமான விபூ4திகளைச் சொல்லுவதாகத் தொடங்கிய ப்ரகரணத்தைச் சென்ற ஶ்லோகத்தோடு நிறைவுபடுத்தினான். இந்த ஶ்லோகத்தில் முக்2யமானவை அமுக்2யமானவை என்னும் வாசியில்லாமல், விபூ4திகள் அனைத்தையும் சுருங்கக் கூறுகிறான். (அத2வா) முன்வாக்யத்தில் சொன்ன ப்ரகரணபே4த3த்தைக் காட்டுகிறது. (ப3ஹுநா ஏதேந ஜ்ஞாநேந தவ கிம்) இதுவரையில் என்னால் சொல்லப்பட்ட முக்2யவிபூ4திகளைப் பற்றிய அறிவால் உனக்கு என்ன பயன்? எவ்வளவு சொன்னாலும் என்னுடைய முக்2யவிபூ4திகளின் எல்லையை அறிவதாகிற பயன் உனக்கு ஸித்3தி4க்காது என்று கருத்து. 'ஏதத்' எனும் ஶப்3த3ம் "ஏதோ சில சொன்னேனேயொழிய முழுவதும் சொல்லிமுடிக்க முடியாது" என்று காட்டுகிறது. இனி உத்தரார்த்த4த்தாலே, முக்2யாமுக்2யவிப4ாக3மற உலகிலுள்ள எல்லா நிலையிலுள்ள எல்லாப் பொருள்களும்—எனது பெருமையின் சிறு திவலையாலே ஸத்தா ஸ்தி2தி ப்ரவ்ருத்திகளைப் பெற்று என் ஸங்கல்பத்தை மீறமாட்டாமலிருக்கும் விபூ4திகளே எனக் காட்டுகிறான். (இத3ம் க்ருத்ஸ்நம் ஜக3த்) "இத3ம்" என்று அந்தந்த ப்ரமாணங்களால் அறியப்படும் விசித்ரமான பொருள்களை உணர்த்துகிறதாகையாலே, ப3த்3த4 முக்த நித்யரூபமான த்ரிவித4 சேதனரும், ஶுத்3த4ஸத்வ ப்ரக்ருதி காலரூபமான த்ரிவித4 அசேதனங்களும் அடங்கிய உப4யவிபூ4தியையும் காட்டுகிறது. "க்ருத்ஸ்நம் ஜக3த்" என்று காரணநிலையில் ஸூக்ஷ்மமாகவும், கார்யநிலையில் ஸ்தூ2லமாகவும் இருக்கும் உலகனைத்தையும் காட்டுகிறது. (அஹம் ஏகாம்ஶேந விஷ்டப்4ய ஸ்தி2த:) முற்கூறிய உலகனைத்தையும், ஸத்தா ஸ்தி2தி ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளில் என் ஸங்கல்பத்தை மீறமுடியாதபடி எனது பெருமையின் பல்லாயிரத்தின் ஒரு பகுதியாலே நான் த4ரித்துநிற்கிறேன். த4ரித்துநிற்பதற்குப் பயன், உலகனைத்துக்கும் ஸத்தா ஸ்தி2தி ப்ரவ்ருத்தி முதலியவற்றை அளிப்பதே என்று கருத்து. அநித்யமான பொருள்களுக்கு ஸத்தையாவது—அவற்றின் உற்பத்தி. நித்யமான பொருள்களுக்கு ஸத்தையாவது—அஸத்தைக் காட்டிலும் (இல்லாத பொருளைக்காட்டிலும்) வேறுபட்டிருக்கை. நித்யமான பொருள்களுடைய ஸ்வரூபம் எம்பெருமானுடைய நித்யேச்சை2யால் ஸித்3தி4ப்பது என்பது முன்னமே விளக்கப்பட்டது. 'ஏகாம்ஶேந' என்னும் பத3ம் — முன் ஶ்லோகத்தில்

महिम्नोऽयुतायुतांशेन विष्टभ्याहमवस्थितः। यथोक्तं भगवता पराशरेण—
* यस्यायुतायुतांशांशे विश्वशक्तिरियं स्थिता (वि.१.९.५३) इति॥ ४२॥
॥ इति श्रीभगवद्रामानुजविरचिते श्रीमद्गीताभाष्ये दशमोऽध्यायः॥ १०॥

பகவத் கீதை வெண்பா

(பத்தாமத்தியாயத்தின் ஸாரத்தைக் கூறும் பாசுரம்)

முத்தியருண் மாயன் முழுதருளுஞ் சீர்க்கீதை
பத்தி வளர்த்துயர் பத்தாமோத் – தொத்திசையி
லெப்பொருளுந் தாஞ யிசைந்த படிவிரித்த
திப்பொருளாய்ந் தேமுடிந்த திங்கு.

வாதிகேஸரிஜீயர் அருளிய பகவத்கீதை வெண்பாவில்
பத்தாமத்தியாயம் நிறைவுபெற்றது.

''தேஜோம்ஶ ஸம்ப$_4$வம்'' என்னுமிடத்தில் சொன்னதுபோலே ''எனது நியமன ஶக்தியாகிற பெருமையின் ஒரு திவலையாலே'' என்று பொருள்படுகிறது. ஏகாம்$_3$த$_3$ம் பல்லாயிரத்தில் ஒரு பகுதியைக் காட்டுகிறது. 'விஷ்டப்$_4$ய' என்றதால், அப்பொருள்கள் ஸ்வதந்த்ர மாகத் தொழில்புரியமுடியாதபடி அவற்றை த$_4$ரித்துநிற்கின்றமை காட்டப்படுகிறது. அன்றிக்கே, தன் வசப்படுத்துகையாகிற அதி$_4$ஷ்ட$_2$ா னத்தைக் கூறுவதாகவும் கொள்ளலாம். சென்ற ஶ்லோகத்தில் **''தேஜோம்ஶஸம்ப$_4$வம்'** என்றும், இங்கு **''ஏகாம்ஶேந விஷ்டப்$_4$ய ஸ்தி$_2$த:''** என்றும் கூறுவதையே பராஶரமுனிவரும் **''யஸ்யாயுதா யுதாம்ஶாம்ஶே விஶ்வஶக்திரியம் ஸ்தி$_2$தா''** [வி-பு 1-9-53] [எவனுடைய ஶக்தியின் பல்லாயிரத்தின் ஒருபகுதியாலே இவ்வுலகமாகிற ஶக்தி த$_4$ரிக்கப்பட்டுநிற்கிறதோ] என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் அருளிச்செய்தார். அந்த ஶ்லோகத்தையும் கீ$_3$தையின் இந்த ஶ்லோகத்தையும் திருவுள்ளம்பற்றியே, பரமாசார்யரான ஆளவந்தார் தமது ஸ்தோத்ரரத்னத்தில் **''கஸ்யாயுதாயுதஶதைககலாம் ஶகாம்ஶே விஶ்வம் விசித்ர சித$_3$சித் ப்ரவிப$_4$ாக$_3$ வ்ருத்தம்''** [ஸ்தோ-ர 12] [விசித்ரமான சேதநுசேதனப் பிரிவுகளையுடைய இவ்வுலகம் எவனுடைய ஶக்தியின் பல்லாயிரத்தின் ஒரு பகுதியாலே த$_4$ரிக்கப்படுகிறது?] என்று கேள்விகேட்டுப் பரதத்வநிர்ணயம் செய்தருளினர். (அர்ஜுன!) நீ வெள்ளை மனத்தினனை வைஷ்ணவனுகையாலே உனக்கு இப்பரமஸாரமான அர்த்த$_2$த்தைச் சொன்னேன் என்று கருத்து. 42.

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி த$_3$ாஸன் இயற்றிய கீ$_3$தார்த்த$_2$விவரணத்தில்
பத்தாமத்$_4$யாயம் நிறைவுபெற்றது.

முத்தி அருள் மாயன் — மோக்ஷத்தை அருளுகின்ற மாயப்பிரானான கண்ணன், **முழுது அருளும் சீர்க்கீதை**— முழுமையாக அருளிச்செய்த சிறப்புடைய கீதையின், **பத்தி வளர்த்து உயர் பத்தாம் ஓத்து அது**—பக்தியோகத்தின் வளர்ச்சியைக் காட்டுகையாலே உயர்வுபெற்ற பத்தாமத்தியாயம், **எப்பொருளும் தானாய் இசைந்தபடி விரித்து**—எல்லாப் பொருள்களும் (தன் செல்வமாகையாலே) தான் என்று சொல்லும்படி பொருந்திநிற்கின்றமையை விளக்கி, **இப்பொருள் ஆய்ந்தே**—இவ்வர்த்தத்தை ஆராய்ந்து முடிவுகட்டி, **இசையில் ஒத்து**—(மற்ற அத்யாயங்களுடன்) இசையிலும் புகழிலும் ஒத்ததாய், **இங்கு முடிந்தது**—இப்போது நிறைவுபெற்றது.

கீதார்த்த சங்கிரகம்

(ஸ்ரீ வேதாந்ததேசிகர் அருளியது)

பத்தாமத்தியாயத்தின் ஸாரப்பொருள்

11. எல்லை யிலாததன் சீலமா மின்னமு தக்கடலு
மெல்லை யிலாத விபூதி யெலாந்தன தானமையு
மெல்லையில் பத்தி தனையெழு விக்கத் திருவருளா
லெல்லையி லீச னியம்பின னிந்திரன் மைந்தனுக்கே.

உரை:— எல்லையில் ஈசன்—அளவற்ற (சக்தியுள்ள) ஸர்வேஶ்வரன், **இந்திரன் மைந்தனுக்கு**—இந்திரனுடைய புத்திரனான அர்ஜுனனுக்கு, **எல்லையில் பத்திதனை எழுவிக்க**—அளவற்ற பக்தியையுண்டாக்கி வளர்ப்பதற்காக, **எல்லை யிலாத**—அளவற்ற, **தன் சீலமாம்**—தன் திருக்கல்யாண குணங்களாகிய, **இன் அமுதக் கடலும்**—இனிய அமுதமயமான ஸமுத்ரமும், **எல்லையிலாத விபூதி எலாம்**—அளவிட்டுக் கூறமுடியாத உலகம் முழுவதும், **தனது ஆனமையும்**—தன் நியமனத்துக்குட்பட்டதாயிருத்தலும் (ஆகிய இவற்றை), **திரு அருளால்**—சிறந்த கருணையோடு, **இயம்பினன்**—உபதேசித்தான்.

கீ₃தாஶ்லோகார்த்த₂ச் சுருக்கம்

பத்தாமத்தியாயம்

ஶ்லோ அர்த்த₂ம்

1-3. தன்னை தே₃வாதி₃தே₃வனாக அநுஸந்தி₄ப்பதால், ப₄க்தி உண்டாவதற்குத் தடையான பாபங்கள் நீங்கி, ப₄க்தியுண்டாகும் என்று கண்ணன் அர்ஜுனனுக்கு நிரூபித்தல்.

4-8. தனது ஐஶ்வர்யம், கல்யாணகு₃ணங்கள் ஆகியவற்றை அநுஸந்தி₄ப்பதால், உண்டான ப₄க்தி வளரும் என்று கண்ணன் அர்ஜுனனுக்கு நிரூபித்தல்.

9-11. ப₄க்தியின் உச்சநிலையை அடைந்த ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்திநிஷ்ட₂னின் பெருமையை விளக்குதல்.

12-18. கண்ணனுடைய கல்யாண கு₃ணச்சேர்த்தியையும், செல்வச் சிறப்பையும் சுருக்கமாகக் கேட்ட அர்ஜுனன் அதன் விரிவைக் கேட்கவிரும்பி வார்த்தை சொல்லுதல்.

12-15. கண்ணன் முன் ஶ்லோகங்களில் சுருங்கச்சொன்ன அர்த்த₂ங்களில் தனக்குள்ள நம்பிக்கையையும் அந்த நம்பிக்கையால் அதில் அஸூயை இல்லாமலிருப்பதையும் அர்ஜுனன் காட்டுதல்.

16-18. விபூ₄திகளை விரிவாகச் சொல்லவேண்டுமென்று அர்ஜுனன் கண்ணனை வினவுதல்.

19. கண்ணன் தனது விபூ₄திகளை ஒவ்வொன்றாக விரிவாக வர்ணிப்பதும் கேட்பதும் இயலாதாகையால் முக்₂யமானவற்றைச் சுருக்கமாக வகைப்படுத்திக் கூறுவதாக ப்ரதிஜ்ஞை செய்தல்.

20. ஶ்லோகத்தின் முற்பாதியில்—தன்னைத் தன் விபூ₄தியான மற்ற பொருள்களோடு அடுத்துள்ள ஶ்லோகங்களில் ஒரே வேற்றுமையில் படிப்பதற்குக் காரணம் - அவை தனக்கு ஶரீரமாகவும் தான் அவற்றுக்கு ஆத்மாவாகவும் இருப்பதே என்று காட்டி, பிற்பாதியாலே—அனைத்தையும் படைத்தளித்தழிப்பவனாயிருக்கை முதலான கல்யாணகு₃ணங்களே யோக₃ஶப்₃த₃த்தால் சொல்லப்படுகின்றன என்றும், அடுத்துள்ள ஶ்லோகங்களில் தன்னை மற்ற பொருள்களோடு ஒரே வேற்றுமையில் படிப்பதற்கு அவை கார்யப்பொருளாகவும், தான் அவற்றுக்குக் காரணமாகவுமிருப்பது மற்றொரு ஹேதுவாகும் என்றும் கண்ணன் காட்டுதல்.

21-*39. பற்பல பொருள்களோடு கண்ணன் தன்னை ஒரே வேற்றுமையில் படித்தல்.

ஆளவந்தார் அருளிய
கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹம்
[பதினேராமத்தியாயத்தின் சுருக்கம்]

एकादशे स्वयाथात्म्यसाक्षात्कारावलोकनम् ।
दत्तमुक्तं विदिप्राप्त्योर्भक्त्येकोपायता तथा ॥ १५ ॥

15. ஏகாத₃ஶே ஸ்வயாத₂ாத்ம்யஸாக்ஷாத்காராவலோகநம்।
த₃த்தமுக்தம் விதி₃ப்ராப்த்யோர்ப₄க்த்யேகோபாயதா
ததா₂ ॥

ஏகாத₃ஶே — பதினேராமத்தியாயத்தில், **ஸ்வ யாத₂ாத்ம்ய ஸாக்ஷாத்காராவலோகநம்**—தன்னை உள்ளபடி காண்பதற்குரிய தி₃வ்யமான கண், **த₃த்தம் உக்தம்**— (அர்ஜுனனுக்குக் கண்ணனல்) கொடுக்கப்பட்டதெனச் சொல்லப்பட்டது; **ததா₂**—அவ்வண்ணமே, **விதி₃ப்ராப்த்யோ:**—(பரம்பொருளை) அறிவது, (காண்பது), அடைவது ஆகியவை, **ப₄க்த்யேகோபாயதா** — ப₄க்தியொன்றையே காரணமாகக் கொண்டவை (என்றும்), **உக்தம்**—சொல்லப் பட்டது.

39*. தன்னைப் பற்பல பொருள்களோடு ஒரே வேற்றுமையில் படித்ததற்குத் தான் அனைத்துக்கும் அந்தர்யாமியாயிருப்பதே காரணம் என்று நிக₃மநம் செய்தல்.

40. தன் விபூ₄திகளுக்கு எல்லையில்லாமையால் ஓரளவுக்கே அவற்றைச் சொன்னேன் என்று கூறல்.

41. இதுவரையில் சொல்லப்பட்ட விபூ₄திகள்—சொல்லப்படாத வையும் அவஶ்யம் சொல்லவேண்டியவையுமான மற்றும் பல முக்₂யவிபூ₄திகளுக்கு எடுத்துக்காட்டே என்று கூறி ப்ர கரணத்தை நிறைவுபடுத்தல்.

42. முக்₂யமானவை, அமுக்₂யமானவை என்னும் வாசியில்லாமல் பார்க்கும்போது, எல்லா உலகமும் தன்னுடைய ஸங்கல்பத் தின் ஒரு சிறு பகுதியாலே த₄ரிக்கப்படும் விபூ₄தியே என்று கூறி அத்₄யாயத்தை முடித்தல்.

பத்தாமத்தியாயத்தின் கீ₃தாஶ்லோகார்த்த₂ச் சுருக்கம் நிறைவுற்றது.

வாதிகேஸரி ஜீயர் அருளிய
பகவத்கீதை வெண்பா—அத்தியாயம் 11
விசுவரூபதர்சனம்
அத்தியாயப் பொருளின் சுருக்கம்

பார்த்தனுக்கு மாயனருள் கீதைப் பதினொன்று
மோத்திவ் வுலகெல்லா முடம்பதனிற்—கோத்தபடி
காட்டுமது தன்னறிவு கண்டடைத றன்பத்தி
கூட்டுமதுஞ் சொல்லுங் குறித்து.

பார்த்தனுக்கு— அர்ஜுனனுக்கு, *மாயன் அருள்* — மாயப் பிரானாகிய கண்ணன் அருளிய, *கீதை பதினொன்றும் ஒத்து*— கீதையின் பதினொன்றும் அத்தியாயம், *இவ்வுலகெல்லாம்*— இவ்வுலகனைத்தையும், *உடம்பதனில்*—தன் சரீரத்தில், *கோத்த படி காட்டுமது*—(கண்ணன் ஒரு பகுதியாகக்) கோத்துக் கொண்டிருக்கும்படியைக் காட்டுவதாகும். *தன் அறிவு கண்டு அடைதல்*—தன்னை அறிவதும், காண்பதும், அடைவது மாகிற பயன்களை, *தன்பத்தி கூட்டுமதும்*—தன் விஷயமான பக்தியோகம் கூட்டிவைப்பதையும், *குறித்துச் சொல்லும்*— குறிக்கொண்டு கூறும்.

ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி த₃ாஸன் இயற்றிய
கீ₃தார்த்த₂ விவரணம்—பதினோராம் அத்தியாயம்
முன் அத்தியாயத்தோடு ஸங்க₃தியும், இவ்வத்தியாயார்த்த₂ச் சுருக்கமும்.

முந்தின பத்தாமத்தியாயத்தில்—ப₄க்தியோக₃ம் உண்டாவதற்காகவும், அது வளர்வதற்காகவும், மற்றுள்ள அனைவருடைய கு₃ணங்களைக் காட்டிலும் சிறப்புற்றதாய், இயல்வானதாய், எம்பெருமானுக்கே உரியதான கல்யாணகு₃ணக்கூட்டத்தோடு கூட, எம்பெருமான் அனைத்துக்கும் ஆத்மாவாயிருக்கிறான் என்னும் உண்மையும், அக்காரணத்தாலேயே அவனைக்காட்டிலும் வேறுபட்டதாய், சேதனப் பொருள்களும் அசேதனப்பொருள்களும் நிறைந்ததான எல்லா உலகும் அவனுக்கு சரீரமாயிருக்கையாலே தமது ஸ்வரூபஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளனைத்தையும் அவனுக்கு அதீ₄னமாகக்கொண்டுள்ளன என்னும் உண்மையும் கூறப்பட்டன. எம்பெருமானுக்கே உரிய

श्रीः

अथ एकादशोऽध्यायः ॥

॥भा॥ एवं भक्तियोगनिष्पत्तये तद्विवृद्धये च सकलेतरविलक्षणेन स्वाभाविकेन भगवदसाधारणेन कल्याणगुणगणेन सह भगवतस्सर्वात्मत्वं तत एव तद्व्यतिरिक्तस्य कृत्स्नस्य चिदचिदात्मकस्य वस्तुजातस्य तच्छरीरतया तदायत्तस्वरूपस्थितिप्रवृत्तित्वं चोक्तम्। तमेतं भगवदसाधारणं स्वभावं कृत्स्नस्य तदायत्तस्वरूपस्थितिप्रवृत्तितां च भगवत्सकाशादुप-

---

இப்படிப்பட்ட ஒப்புயர்வற்ற பெருமையையும், உலகனைத்தும் அவனுக்கு அதீ₄நமான ஸ்வரூபஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளை உடைத்தாயிருக்கையையும் எம்பெருமானிடமிருந்தே கேட்டு 'இது உண்மையானதே' என்று உறுதிபூண்டு, அத்தகைய பெருமையுடைய எம்பெருமானை நேரே காண விரும்பிய அர்ஜுனன் இப்பதினோராமத்தியாயத்தின் தொடக்கத்தில் விஶ்வரூபத்தைக் காட்டும்படி கண்ணனைக் கேட்கிறான். அவ்வண்ணமே மேல் ஶ்லோகங்களில் எம்பெருமானுடைய அருளினாலே அந்த விஶ்வரூபத்தைக் காணும் ப்ரகாரம் விவரிக்கப்படுகிறது. இவ்வத்தியாயத்தில் "ஸர்வாஶ்சர்யமயம் தே₃வம் அநந்தம் விஶ்வதோமுக₂ம்।" (11) [எல்லா ஆஶ்சர்யங்களும் நிறைந்தவனும், ஒளிவீசுகின்றவனும், அளவற்றவனும், எல்லாத் திசைகளிலும் முக₂ங்களை உடையவனுமான அப்பெருமானை அர்ஜுனன் கண்டான்)] என்று தொடங்கி, "தத்ரைகஸ்த₂ம் ஜக₃த் க்ருத்ஸ்நம் ப்ரவிப₄க்தமநேகதா₄। அபஶ்யத்" (13) [அப்பெருமானின் தி₃வ்ய ஶரீரத்தில் பலவகையான பிரிவுகளையுடைய உலகனைத்தையும் அர்ஜுனன் கண்டான்] என்பதீறாக இவ்விஷயம் விளக்கப்படுகிறதன்றோ. இந்த விஶ்வரூபத₃ர்ஶநத்துக்குப் பிறகு இவ்வத்தியாயத்தின் கடைசியில் "ப₄க்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோ₄ऽர்ஜுந। ஜ்ஞாதும் த்₃ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப।" (54) [எதிரிகளை வெல்லும் அர்ஜுனா! அநந்யப₄க்தியினாலேயே நான் இவ்வண்ணமாக அறிவதற்கும் காண்பதற்கும் உள்ளபடி அடைவதற்கும் தக்கவன் ஆவேன்] என்னும் ஶ்லோகத்தில் தன் விஷயமான ஜ்ஞான த₃ர்ஶந ப்ராப்திகளை அநந்ய ப₄க்தியாகிற உபாயத்தினாலேயே அடையலாம் என்னும் விஷயமும் விளக்கப்பட்டது.

श्रुत्यैवमेवेति निश्चित्य तथाभूतं भगवन्तं साक्षात्कर्तुकामोऽर्जुन उवाच। तथैव भगवत्प्रसादादनन्तरं द्रक्ष्यति। * सर्वाश्चर्यमयं देवमनन्तं विश्वतोमुखम्...तत्रैकस्थं जगत्कृत्स्नं प्रविभक्तमनेकधा॥ (११. १३) इति हि वक्ष्यते।

अर्जुन उवाच—

मदनुग्रहाय परमं गुह्यमध्यात्मसंज्ञितम्।
यत्त्वयोक्तं वचस्तेन मोहोऽयं विगतो मम॥ १॥

1. மத₃நுக்₃ரஹாய பரமம் கு₃ஹ்யமத்₄யாத்மஸம்ஜ்ஞிதம்।
யத்த்வயோக்தம் வசஸ்தேந மோஹோऽயம் விக₃தோ மம॥

அர்ஜுன உவாச—அர்ஜுனன் சொன்னான் — **மத₃நு க்₃ரஹாய**—எனக்கு அருள்புரிவதற்காகவே, **பரமம் கு₃ஹ்யம்**—பரமரஹஸ்யமாய், **அத்₄யாத்மஸம்ஜ்ஞிதம் வச:**— ஆத்மாவைப் பற்றிச் சொல்லவேண்டியதெல்லாம் அடங்கிய (முதல் ஆறு அத்தியாயங்களாகிற) வார்த்தை, **யத் த்வயா உக்தம்**—யாதொன்று உன்னால் கூறப்பட்டதோ, **தேந**—அவ்வார்த்தையால், **மம அயம் மோஹ:**—என்னுடைய இந்த ஆதமவிஷயமான மயக்கம், **விக₃த:**— முழுவதும் அடியோடு நீங்கிற்று.

---

1. மாயன் பெருமை வகைகேட் டகமகிழ்ந்து
தூய விசயனித் தொல்லுலக—மேயவகை
காணவிருப் புற்ற கருத்தா லவனெஞ்சம்
பூணவுரை செய்தான் புகழ்ந்து.

மாயன் பெருமை வகைகேட்டு-மாயனாகிற கண்ணனுடைய பல வகைப்பட்ட பெருமைகளைக் கேட்டு, **அக மகிழ்ந்து** — தன் நெஞ்சு மகிழ்ச்சியுற்று, **தூய விசயன்**— குற்றமற்ற அர்ஜுனன், **இத் தொல் உலகம் மேய வகை காண விருப்புற்ற கருத்தால்**—பிரத்யக்ஷமாயுள்ள இப்பழமையான உலகம் (கண்ணனின் சரீரத்தில்) பொருந்தி நிற்

॥ भा ॥ देहात्माभिमानरूपमोहेन मोहितस्य ममानुग्रहैकप्रयोजनाय परमं गुह्यम्—परमं रहस्यमध्यात्मसंज्ञितम्—आत्मनि वक्तव्यं वचः *न

கும் வகையை நேரே காண விரும்பிய எண்ணத்தால், **அவன் நெஞ்சம் பூண** — கண்ணனுடைய நெஞ்சத்தில் பொருந்தும்படி, **புகழ்ந்து உரை செய்தான்** — கண்ணனைப் புகழ்ந்து பேசலுற்றான்.

2. என்பா லிரக்கத்தா லீரு மறைபொருளா
நின்பா லறிவமர நீயுரைத்த—வின்பாருஞ்
சொல்லாலென் மோகந் துவக்கியுட னில்லாதே
யெல்லாங் கழிந்த தெனக்கு.

என்பால் இரக்கத்தால்-எனக்கு அருள்புரிவதற்காகவே, **ஈரும் மறை பொருளாம்** — மேலான ரஹஸ்யார்த்த₂மாய், **நின் பால் அறிவு அமர** — உனக்கு ப்ரகாரமான அறிவுமயமான ஆத்மாவைப்பற்றி, **நீ உரைத்த**—நீ கூறிய, **இன்பாரும் சொல்லால்** — இன்பம் நிறைந்த (முதல் ஆறு அத்₄யாயங்களாகிற) வார்த்தையால், **என் மோகம் எல்லாம்**—என்னுடைய மயக்கம் எல்லாம், **துவக்கி உடன்** — வாஸனையோடு, **நில்லாதே**—என்னிடம் நில்லாமல், **எனக்கு கழிந்தது**— எனக்குக் கழிந்துவிட்டது.

---

1. இவ்வத்தியாயத்தில் மேல் நாலாம் ஶ்லோகத்திலே கண்ணனின் விஶ்வரூபத்தை நேரே காண வேண்டும் என்று பிரார்த்தி₂ப்பதன் பொருட்டு, முதல் மூன்று ஶ்லோகங்களாலே தனது நன்றியையும், ஆஸ்திக்யத்தையும், க்ருஷ்ணப₄க்தியையும் காட்டுகிறான் அர்ஜுனன். அதில் முதல் ஶ்லோகத்தில் **'அத்₄யாத்ம ஸம்ஜ்ஞிதம்'** என்னும் பத₃ம் வழங்கப்பட்டிருக்கையாலும், இரண்டாவது ஶ்லோகம் ஏழாவது அத்தியாயத்தின் பொருளைத் தெளிவாகச் சொல்லுகையாலும் முதல் ஶ்லோகத்தில்—முதல் ஆறு அத்தியாயங்களின் அர்த்த₂த்தை அநுவதி₃த்து அதன் ப₂லனாகத் தனது தே₃ஹாத்ம மயக்கம் நீங்கிற்று என்று அர்ஜுனன் கூறுகிறான் என விளங்குகிறது. (மத₃நுக்₃ரஹாய) தே₃ஹத்தையே ஆத்மாவாக எண்ணி மயங்கும் மயக்கத்தை உடைய எனக்கு அருள்புரிவதற்காகவே. ஶ்லோகத்தின் பிற்பாதியில்

त्वेवाहं जातु नासम् (२.१२) इत्यादि, तस्माद्योगी भवार्जुन (६.४६) इत्येतदन्तं यत्त्वयोक्तम्, तेनायं ममात्मविषयो मोहस्सर्वो विगतः— दूरतो निरस्तः॥ १॥

தனது மயக்கம் நீங்கிற்று என்று கூறுகையால், இங்கு மச்சஃப்₃த₃ம் தே₃ஹாத்ம மயக்கத்தோடு கூடிய தன்னைக் குறிப்பதே உசிதம். அர்ஜுனன் வேறு எந்தப் பயனையும் கண்ணனிடமிருந்து எதிர் பாராமையால் ''மத₃நுக்₃ரஹாய'' என்பதற்கு '' மம அநுக்₃ரஹைக ப்ரயோஜநாய '' என்று ப₄ாஷ்யமிடப்பட்டது. இதிலிருந்து தன்னைப் போர்புரியத் தூண்டுவதற்காகக் கண்ணன் இதெல்லாம் சொல்லு கிறனல்லன் என்பதை அர்ஜுனன் உணர்ந்திருக்கிறன் என விளங்குகிறது. (பரமம் கு₃ஹ்யம்) பரமரஹஸ்யம். ''மௌநம் சைவாஸ்மி கு₃ஹ்யாநாம்'' [கீ₃தை 10-38] என்கிற இடத்திற்போலே கு₃ஹ்யஶப்₃த₃ம் மௌநம் முதலான கோ₃பநங்களைக் குறிப்பது இப்ரகரணத்துக்குப் பொருந்தாது. மௌனத்தில் மேலானது கீழா னது முதலான பே₄த₃மில்லாமையால் பரம ஶப்₃த₃த்தால் விஶேஷித் திருப்பது அப்பொருளில் அடியோடு பொருந்தாது. ஆகையால் இங்கு 'பரமகு₃ஹ்யம்' என்பது 'பரமரஹஸ்யம்' என்னும் பொரு ளுடையதேயாகவேணும். '' ஸர்வகு₃ஹ்யதமம் '' [கீ₃தை 18-64] [அனைத்திலும் மிக மிக ரஹஸ்யமானது] என்று மேலே சொல்லப் போகும் ப₄க்தியோக₃த்துக்கு அங்க₃மாகையால், இங்கு ஆத்ம ஜ்ஞாநம் பரமரஹஸ்யமாகக் கூறப்படுகிறது. (அத்₄யாத்மஸம்ஜ்ஞிதம் வச:) ஆத்மாவைப் பற்றிச் சொல்லவேண்டியதனைத்தையும் சொன்ன வார்த்தை. ''ந த்வேவாஹம்'' [கீ₃தை 2-12] என்று தொடங்கி, ''தஸ்மாத்₃ யோகீ₃ ப₄வார்ஜுந'' [கீ₃தை 6-46] என்பதீருக ஆத்மா வைப் பற்றி விரிவாகச் சொன்ன வார்த்தை. இரண்டாமத்தியாயம் பன்னிரண்டாவது ஶ்லோகத்துக்கு முந்திய பகுதி உபோத்₃க₄ாத ரூபமானதாகையாலும், ஆறுமத்தியாயம் கடைசி ஶ்லோகம், மத்₄யம ஷட்கத்தில் சொல்லப்போகும் ப₄க்தியோக₃த்தைப் பற்றியதாகை யாலும் இடையிலுள்ள ஆத்மாவைப் பற்றிய ஶ்லோகங்களனைத்தும் இங்கு கருதப்படுகின்றன என்று கொள்வதே பொருத்தம். மேலே தன மயக்கம் நீங்குவதாகக் கூறுகையாலே, இது தன் ஆத்மாவையும் பற்றியது என அர்ஜுனன் உணர்ந்துகொண்டான் என்று விளங்கு கிறது. (யத் த்வயா உக்தம் தேந மம அயம் மோஹ: விக₃த:) ஆத்மாவைப் பற்றிய யாதொரு வார்த்தை உன்னல் சொல்லப் பட்டதோ, அவ்வார்த்தையால் எனக்கு ஆத்மாவைப்பற்றி ஏற்பட்டி

॥ भा ॥ तथा च—

भवाप्ययौ हि भूतानां श्रुतौ विस्तरशो मया।
त्वत्तः कमलपत्राक्ष माहात्म्यमपि चाव्ययम् ॥ २ ॥

2. ப$_4$வாப்யயௌ ஹி பூ$_4$தாநாம் ஶ்ருதௌ விஸ்தரஶோ மயா ।
த்வத்த: கமலபத்ராக்ஷ! மாஹாத்ம்யமபி சாவ்யயம் ॥

கமலபத்ராக்ஷ—தாமரை இதழ்போன்ற திருக்கண்களை யுடையவனே! **த்வத்த:** — (பரமாத்மாவான) உன்னிட மிருந்தே (விளையும்), **பூ$_4$தாநாம்**—எல்லாப் பொருள்களுக் கும், **ப$_4$வாப்யயௌ**—உத்பத்தி ப்ரளயங்கள். **விஸ்தரஶ:**— விரிவாக, **மயா**—என்னால், **ஶ்ருதௌ ஹி**—கேட்கப்பட்டன வன்றோ. **அவ்யயம்**-எல்லையற்றதான, **மாஹாத்ம்யம் அபி ச**- (உன்னுடைய பலவகையான) பெருமையும் கேட்கப்பட்ட தன்றோ.

---

3. பூத மவைபிறந்து போகும் வகையுன்பா
லேத மறவிரிப்ப யான்கேட்டேன்—மீதறிந்தேன்
இங்களவி லுன்பெருமை யேதுமொழி யாமனுன்
செங்கமலக் கண்ணு தெளிந்து.

செங்கமலக்கண்ணு—செந்தாமரைக்கண்ணனே! **உன் பால்** — (பரமாத்மாவான) உன்னிடமிருந்தே, **பூதமவை பிறந்து போகும் வகை**—எல்லாப் பொருள்களும் உத்பத்தி யையும் லயத்தையும் அடையும் வழியை, **ஏதம் அற விரிப்ப**—குறைவில்லாமல் (நீயே) கூற, **யான் கேட்டேன்**— நான் கேட்டேன்; **இங்கு**—இப்போர்க்களத்தில், **அளவில் உன் பெருமை**-உன்னுடைய அளவற்ற பெருமைகளை, **ஏதும் ஒழி யாமல்**—ஒன்றுவிடாமல், **தெளிந்து**—தெளிவாக, **நான்**— நான், **மீது அறிந்தேன்**—மிகவும் அறியப்பெற்றேன்.

ருந்த இந்த மயக்கம் அடியோடு நீங்கிற்று. "**விக$_3$த:**" என்னும் பத$_3$த்தில் 'வி' என்னும் உபஸர்க்க$_3$த்தாலே மயக்கம் முழுவதும் வாஸனையோடு கூட, மறுபடியும் முளைக்காதபடி அழிந்தமை காட்டப்படுகிறது. 1.

।।भा।। (तथा) सप्तमप्रभृति दशमपर्यन्ते त्वद्व्यतिरिक्तानां सर्वेषां भूतानां त्वत्तः—परमात्मनो भवाप्ययौ—उत्पत्तिप्रलयौ विस्तरशो मया श्रुतौ हि। कमलपत्राक्ष! तवाव्ययं—नित्यं सर्वचेतनाचेतनवस्तुशेषित्वं

---

2. இந்த ஶ்லோகத்தாலே—ஏழு முதல் பத்து அத்தியாயங்களில் சொல்லப்பட்ட விஷயங்களை நெஞ்சில்கொண்டு "உனது ஜக$_3$த் காரணத்வமும், மற்றுமுள்ள பல பெருமைகளும் உன்னிடமிருந்தே என்னால் கேட்கப்பட்டன" என்று கூறுகிறான் அர்ஜுனன். (பூ$_4$தாநாம் த்வத்த: ப$_4$வாப்யயௌ விஸ்தரஶ: மயா ஶ்ருதௌ ஹி) "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜக$_3$த: ப்ரப$_4$வ: ப்ரளயஸ்தத$_2$ா" [கீ$_3$தை 7-6] [நான் உலகம் முழுவதற்கும் உத்பத்திக்கும் லயத்துக்கும் காரணமாகிறேன்] முதலான இடங்களில் "எல்லா பூ$_4$தங்களும் பரமாத்மாவான உன்னிடமிருந்தே உண்டாகி லயமடைகின்றன" என்னும் விஷயம் (நீ சொல்ல) என்னால் விரிவாகக் கேட்கப்பட்டது. "த்வத்த: ப$_4$வாப்யயௌ" என்பதற்கு (உன்னிடமிருந்து உத்பத்தி ப்ரளயங்கள்) என்று பொருள்கொள்ளும்போது **உன்னிடமிருந்து** ப்ரளயம் என்னும் ஐந்தாம் வேற்றுமை ஒட்டாமையால், ப$_4$வாப்யயஶப்$_3$த$_3$த்துக்கு ஸம்ஸாரமும் மோக்ஷமும் உன்னிடமிருந்து உண்டாகின்றன என்று பொருள் கொள்ளலாமேயெனில்: "ப்ரப$_4$வ: ப்ரளயஸ்தத$_2$ா" [7-6] என்னும் ஶ்லோகமே இங்கு அநுவதி$_3$க்கப்படுகிறதாகையாலே, உத்பத்தி ப்ரளயங்களைக் கூறுவதே பொருந்தும். ஐந்தாம் வேற்றுமை நிமித்தோபாத$_3$ாந ஸாத$_4$ாரண ஹேதுமாத்ரத்தைக் குறிக்குமாகையால், 'உன்னிடமிருந்து லயம்' என்பதும் பொருந்திவிடுகிறது. "த்வத்த: ஶ்ருதௌ" என்று அந்வயித்து 'உன்னிடமிருந்து கேட்கப்பட்டன' என்று பொருள்கொள்வதைக் காட்டிலும் "த்வத்த: ப$_4$வாப்யயௌ" என்று 'உன்னிடமிருந்து உத்பத்தி ப்ரளயங்கள்' என்று பொருள் கொள்வதிலே ஸ்வாரஸ்யம் அதி$_4$கம். '**பூ$_4$தாநாம்**' என்பதில் பன்மை அஸங்கோசந்யாயத்தாலே "**க்ருத்ஸ்நஸ்ய ஜக$_3$த:**" (7-6) என்று முன் எடுக்கப்பட்ட எல்லா பூ$_4$தங்களையும் காட்டுகிறது. (கமலபத்ராக்ஷ! தவ அவ்யயம் மாஹாத்ம்யம் ச ஶ்ருதம்) செந்தாமரை இதழ்போன்ற கண்ணையுடையவனே! உனது அழிவற்ற பெருமையும் கேட்கப்பட்டது. (கமலபத்ராக்ஷ!) செந்தாமரைக்கண்ணா! "தஸ்ய யதா$_2$ கப்யாஸம் புண்ட$_3$ரீகம் ஏவம் அக்ஷிணீ" [சா$_2$ந் 1-6-7] [ஸூர்யனின் நடுவிலுள்ள அந்தப் பரமாத்மாவுக்கு ஸூர்யனால்

ज्ञानबलादिकल्याणगुणगणैस्तवैव परतरत्वं सर्वाधारत्वं चिन्तितनिमिषितादिसर्वप्रवृत्तिषु तवैव प्रवर्तयितृत्वमित्याद्यपरिमितं माहात्म्यं च श्रुतम्। हिशब्दो वक्ष्यमाणदिदृक्षाद्योतनार्थः ॥ २ ॥

एवमेतद्यथाऽऽत्थ त्वमात्मानं परमेश्वर।
द्रष्टुमिच्छामि ते रूपमैश्वरं पुरुषोत्तम ॥ ३ ॥

3. ஏவமேதத்$_3$யதா$_2$ऽऽத்த$_2$ த்வமாத்மாநம் பரமேஶ்வர ।
த்$_3$ரஷ்டுமிச்ச$_2$ாமி தே ரூபமைஶ்வரம் புருஷோத்தம ॥

பரமேஶ்வர — ஸர்வேஶ்வரனே !, **புருஷோத்தம** — புருஷோத்தமனே !, **யதா$_2$ த்வம் ஆத்மாநம் ஆத்த$_2$**—நீ

மலர்ந்த தாமரைபோன்ற இரு கண்கள் உள] என்று உபநிஷத்து செந்தாமரைக் கண்ணனையே ஸூர்யமண்ட$_3$ல மத்$_4$யவர்த்தியான பரமாத்மா என்று காட்டி, "**ஸ ஏஷ யே சாமுஷ்மாத் ப்ராஞ்சோ லோகா: தேஷாம் ச ஈஷ்டே தே$_3$வகாமாநாம் ச**"[ச$_2$ாந்1-6-8] [ஸூர்ய மண்ட$_3$லத்துக்கும் மேலேயுள்ள உலகங்களையும், அங்கு தே$_3$வர்கள் விரும்பும் பே$_4$ாக்$_3$யம் முதலானவற்றையும் அவன் நியமிக்கிறான்]என்று அவனே ஸர்வலோக நியந்தா என்னும் பெருமையையும் கூறிற்றன்றோ. "**த்வத்த:**" என்பதை '**தவ**' என்றும் "**ஶ்ருதௌ**" என்பதை '**ஶ்ருதம்**' என்றும் வேற்றுமையையும், வசனத்தையும் மாற்றியமைத்துக்கொள்ளவேணும். மாஹாத்ம்யமாவது—"**பூ$_4$மிராப:**" [7-4, 5] என்னுமிடத்தில் சொல்லப்பட்ட ஸகல சேதநாசேதந ஶேஷித்வம், "**மத்த: பரதரம் நாந்யத்**" [7-7] என்னுமிடத்தில் சொல்லப்பட்ட ஜ்ஞானம் ப$_3$லம் முதலிய கல்யாணகு$_3$ணங்களாலே மிக மிக உயர்ந்திருக்கை, "**மயி ஸர்வம்**"[7-7] என்னுமிடத்தில் சொல்லப்பட்ட ஸர்வாத$_4$ாரத்வம், "**பு$_3$த்$_3$தி$_4$ர் ஜ்ஞாநம்**" [10-4] முதலான இடங்களில் சொல்லப்பட்ட ஸர்வசேதன ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஹேதுத்வம் ஆகியவை ஆகும். 'அவ்யயம்' என்று விஶேஷித்திருப்பதால், இந்த மாஹாத்ம்யமானது நித்யமானதென்றும் அளவற்றது என்றும் காட்டப்படுகின்றது. '**ஹி**' ஶப்$_3$த$_3$த்துக்கு ப்ரஸித்$_3$தி$_4$, ஹேதுத்வம் முதலான பொருள்கள் இங்கு ஸ்வரஸமல்லவாகையால், அடுத்தபடியாக விஶ்வரூபத்தை நேரே காணும் விருப்பம் அர்ஜுனனுக்கு விளைந்திருப்பதை அப்பத$_3$ம் உணர்த்துகிறது. **2.**

॥ भा ॥ हे परमेश्वर! एवमेतदित्यवधृतम्, यथाऽऽत्थ त्वम्—आत्मानं ब्रवीषि। पुरुषोत्तम—आश्रितवात्सल्यजलधे! तवैश्वरं त्वद-

---

உன்னைப்பற்றி எப்படிச் சொன்னயோ, **ஏவம் ஏதத்**—அது அப்படியே (என்று என்னால் அறியப்பட்டது.) **ஐஶ்வரம்** — ஸர்வநியந்த்ருத்வம் முதலான பெருமைகளையுடைய, **தே ரூபம்**—உனது ரூபத்தை, **த்$_3$ரஷ்டும் இச்ச$_2$ாமி**—(நான்) ஸாக்ஷாத்கரிக்க விரும்புகிறேன்.

---

4. நீசொன்ன வண்ண நிகரில் பரமேசா
மாசொன்ரு வண்ண மருவியதே—தேசொன்று
மேலா மிறையுருவை மெய்க்காண விச்சிப்பன்
மாலே புருடோத்த மா.

நிகரில் பரமேசா — ஒப்பற்ற பரமேஶ்வரனே! **புருடோத்தமா மாலே** — புருஷோத்தமனை திருமாலே! **நீ சொன்ன வண்ணம்** — நீ சொன்னபடியே, **மாசு ஒன்ரு வண்ணம் மருவியதே**—குறையில்லாதபடி பொருந்தியிருக்கிறது; **தேசு ஒன்றும்**—அனைத்தையும் நியமிக்கை முதலான பெருமைகள் பொருந்திய, **மேலாம் இறையுருவை**—மேலான இறைவனுகிற உன் உருவத்தை, **மெய் காண இச்சிப்பன்**—நேரே காண விரும்புகிறேன்.

---

3. கண்ணன் சொன்னதில் தனது நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு, விஶ்வரூபத்தைக் காண்பதில் விருப்பத்தை வெளிப்படுத்துகிருன் அர்ஜுனன். (ஆத்மாநம் யத$_2$ா த்வம் ஆத்த$_2$ ஏவம் ஏதத்) உன்னைப்பற்றி நீ எவ்வண்ணம் சொல்லிக்கொண்டாயோ அது அவ்வண்ணமேயானது என்று அறியப்பட்டது. (பரமேஶ்வர) நீ உலகனைத்துக்கும் எல்லா வகை உறவையுமுடைய ஸர்வேஶ்வரனுகையாலே, பரம ஆப்தனுகவும், ஸர்வஜ்ஞனுகவுமுள்ள உனது வாக்யத்தில் அவநம்பிக்கை கொள்ள இடமில்லை என்று கருத்து. (புருஷோத்தம) தன்னை ஆஶ்ரயித்தவனிடத்தில் தே$_3$ாஷத்தைக் காண்பவன் அத$_4$மபுருஷன்; நீயோ தே$_3$ஹாத்ம மயக்கம் முதலான பல தே$_3$ாஷங்களுக்குக் கொள்கலமான என்னிடம் தே$_3$ாஷத்தைக்

साधारणं सर्वस्य प्रशासितृत्वे, पालयितृत्वे, स्रष्टृत्वे, संहर्तृत्वे,

---

காணாததோடன்றியில், பசுவானது அன்றீன்ற கன்றின் தோ$_3$ஷத்தையே போ$_4$க்$_3$யமாகக் கொள்வதுபோலே, எனது தோ$_3$ஷங்களையே பச்சையாகக்கொண்டு மேல்விழுந்து எனக்கு உபதே$_3$ஶிக்கையாலே, ஆஶ்ரிதவாத்ஸல்ய கு$_3$ணத்துக்கே ஒரு கடலாயிருக்கும் புருஷோத்தமன் என்று விளங்குகிறது. "புரு ஸநோதீதி புருஷ:; புருஷேஷு உத்தம: புருஷோத்தம:" [அதி$_4$கமாகக் கொடுப்பவன் புருஷன்; புருஷர்களில் சிறந்தவன் புருஷோத்தமன்] என்னும் வ்யுத்பத்தியாலே புருஷோத்தம ஶப்$_3$த$_3$ம் அடியானின் தகுதிக்கு மேற்பட உதவும் வாத்ஸல்யத்தை உடையவன் என்று பொருள்படுவதாகவும் கொள்ளலாம். "பூர்ணத்வாத் புருஷ:" என்கிறபடியே தோ$_3$ஷமுடைய வஸ்துக்களிலும் நிறைந்திருப்பவனாய், "ந ததோ விஜுகு$_3$ப்ஸதே" [கடோ$_2$பநிஷத் 2-4-12] [ஜீவனுடைய உடலிலிருக்கும் தோ$_3$ஷத்தைக்கண்டு அந்தர்யாமி அருவருப்பதில்லை] என்கிறபடியே அவற்றின் தோ$_3$ஷங்களில் அருவருப்படையாமலிருக்கையாலே புருஷோத்தம ஶப்$_3$த$_3$ம் வாத்ஸல்யகு$_3$ணத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். கீ$_3$தையில் புருஷோத்தம ஶப்$_3$த$_3$த்தை நிர்வசனம் செய்யும்போதும், "லோகத்ரயமாவிஶ்ய பி$_3$ப$_4$ர்த்தி" [கீ$_3$தை 15-17] [லோகத்ரயத்தையும் உள்நுழைந்து த$_4$ரிக்கிறான்] என்று இவ்வர்த்த$_2$ம் அநுஸந்தி$_4$க்கப்பட்டது. ஆக, பரமேஶ்வரஶப்$_3$த$_3$த்தால் பரத்வமும், புருஷோத்தம ஶப்$_3$த$_3$த்தால் ஸௌலப்$_4$யமும் அநுஸந்தி$_4$க்கப்பட்டன. (தே ஐஶ்வரம் ரூபம் த்$_3$ரஷ்டும் இச்ச$_2$ாமி) உன்னுடைய நியந்த்ருத்வம் முதலானவற்றில் நிலைநிற்கும் உருவத்தை நேரே காண விரும்புகிறேன். (ஐஶ்வரம் ரூபம்) அனைவரையும் நியமிப்பது, ரக்ஷிப்பது, படைப்பது, அழிப்பது, த$_4$ரிப்பது, கல்யாணகு$_3$ணங்களுக்குக் கொள்கலமாயிருப்பது, மிக மேலாயிருப்பது, மற்ற அனைத்தையுங்காட்டிலும் மிக வேறுபட்டிருப்பது முதலான ஈஶ்வரனுக்கு உரிய கு$_3$ணங்களில் நிலைநிற்கும் உருவம் என்றபடி. அனைவரையும் நியமிப்பது முதலானவற்றில் உருவம் நிலைநிற்பதாவது—அந்தந்தக் கார்யங்களுக்குரிய கு$_3$ணம், முயற்சி, செயல்கள் ஆகியவற்றின் மூலம் அவற்றை வெளிப்படுத்துகையேயாகும். அன்றிக்கே, உருவம் அனைவரையும் நியமிப்பதிலே நிலைநிற்கையாவது—"யதா$_2$ர்ஹம் கேஶவே வ்ருத்திம் அவஶா: ப்ரதிபேதி$_3$ரே" [பா$_4$ர ஸபா$_4$ 39-38] [அனைவரும் தன் வசமிழந்தவர்களாய், கேஶவனிடத்தில் உரிய மரியாதையைச் செலுத்தினர்] என்கிறபடியே

भर्तृत्वे, कल्याणगुणाकरत्वे, परतरत्वे, सकलेतरविसजातीयत्वेऽवस्थितं रूपं द्रष्टुं—साक्षात्कर्तुमिच्छामि ॥ ३ ॥

தன்னைக் கண்டவுடன் எதிரிகளும் ப்ராதிகூல்ய உறுதியைக் கைவிட்டு நன்னடத்தையுடையவராகையேயாகும். கல்யாண கு$_3$ணங்களைக் கொள்கலமாகக்கொண்டிருக்கையில் உருவம் நிலைநிற்கையாவது—அவதார விக்$_3$ரஹத்தைப்போலே அறியாமை முதலானவற்றை அபி$_4$நயிக்காமல் இருக்கை. ரக்ஷணத்தில் உருவம் நிலைநிற்கையாவது—ஸத்வகு$_3$ணத்தைத் தூண்டுகை முதலானவற்றாலே. படைக்கையில் உருவம் நிலைநிற்கையாவது—தனது உந்தியிலிருந்து பிரமனையும், முகம் தோள்கள் துடை கால்கள் ஆகியவற்றிலிருந்து நாலு வர்ணங்களையும் படைக்கையேயாகும். அழிக்கையில் உருவம் நிலைநிற்கையாவது—மேலே விஶ்வரூபம் காட்டும்போது சொல்லுகிறபடியே அனைத்தையும் விழுங்குகையேயாகும். த$_4$ரிப்பதில் உருவம் நிலைநிற்கையாவது—"**தத்ரைகஸ்த$_2$ம்**" (13) முதலான ஶ்லோகங்களில் தெளிவாகப் போகிறது. பரம்பொருளாக சங்கிக்கப்படும் பிரமன் உருத்திரன் முதலானவர்களைத் தனது அவயவங்களாகக் கொண்டிருக்கையை "**ப்$_3$ரஹ்மாணமீஶம்**" (15) என்று மேலே காட்டப்போகிறதாகையாலே உருவம் மிக மிக மேலாயிருப்பதில் நிலைநிற்கிறது என்றும் விளங்குகிறது. இதுவரையில் கூறின எல்லாவற்றையும் உட்கொண்டு பார்க்கும்போது, மற்றனைத்தையுங்காட்டில் வேறுபட்டிருப்பதில் உருவம் நிலைநிற்கிறது என்பதும் தேறுகிறது. அன்றிக்கே, பரமேஶ்வர புருஷோத்தம ஶப்$_3$த$_3$ங்களால் விளிப்பதன் கருத்தாகவும் இதைக்கொள்ளலாம். அன்றிக்கே, கண்ணன் விஶ்வரூபத்தைக் காட்டத்தொடங்கும்போது "**பஶ்ய மே யோக$_3$ம் ஐஶ்வரம்**" (8 [எனது ஈஶ்வரத் தன்மைக்குரிய கல்யாண கு$_3$ணயோக$_3$த்தையும் விபூ$_4$தியோக$_3$த்தையும் காண்பாய்] என்று கூறியிருப்பதில் யோக$_3$ ஶப்$_3$த$_3$த்தைப்போல் ரூபஶப்$_3$த$_3$மும் ஸ்வரூபத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அப்போது "**ஐஶ்வரம் ரூபம்**" [ஈஶ்வரனுக்குரிய ஸ்வரூபப்] என்றது "**ராஹோ: ஶிர:**" என்றதுபோலே ஔபசாரிக ப்ரயோக$_3$மாகும். அனைவரையும் நியமிப்பதில் நிலைநிற்கை முதலானவை அனைத்தும் முக்$_2$யப்ரயோக$_3$மாகின்றன. ஸ்வரூபத்தோடு சேர்ந்ததாகையாலே திருமேனியைக் காண்பதில் விருப்பமும் அதிலேயே அடங்கும். ரூபஶப்$_3$த$_3$ம் ப்ரகாரத்தையும் குறிக்குமாகையாலே, ஸ்வரூபம், ரூபம் முதலான ஈஶ்வரனுக்குரிய எல்லா ஆகாரங்களையும் குறிப்பதாகவும் கொள்ளலாம். (த்$_3$ரஷ்டும் இச்ச$_2$ாமி) நேரே காண

मन्यसे यदि तच्छक्यं मया द्रष्टुमिति प्रभो!।
योगेश्वर! ततो मे त्वं दर्शयात्मानमव्ययम्॥ ४॥

4. மந்யஸே யதி₃ தச்ச₂க்யம் மயா த்₃ரஷ்டுமிதி ப்ரபே₄ா!।
யோகே₃ஶ்வர! ததோ மே த்வம் த₃ர்ஶயாத்மாநமவ்யயம்॥

யோகே₃ஶ்வர — கல்யாண கு₃ணங்களையுடையவனே!, **ப்ரபே₄ா**—ஸர்வேஶ்வரனே!, **தத்**—உனது ரூபம், **மயா**—என்னால், **த்₃ரஷ்டும் ஶக்யம் இதி**—காணக்கூடியது என்று, **யதி₃ மந்யஸே** — நீ நினைத்தாயாகில். **தத:**—அக்காரணத்தாலே, **த்வம்**—நீ, **ஆத்மாநம்**—உன்னை, **மே**—எனக்கு, **அவ்யயம் த₃ர்ஶய**—குறைவறக் காட்டுவாயாக.

---

5. என்னாலே காணலா மென்றிறைவா! வெண்ணுதியேன்
மன்னு! குணயோக மாயவனே!—நன்றாக
வோங்கியசீ ருன்வடிவை யொன்றொழியா மேயெனக்குப்
பாங்கிசையக் காட்டு பயின்று.

இறைவா!—ஸர்வேஶ்வரனே, **மன்னு!**—(அனைவர்க்கும்) அரசனே! **குணயோக மாயவனே**—கல்யாண கு₃ணங்களையுடைய மாயப்பிரானே! **நன்றாக ஓங்கிய சீர் உன் வடிவை**—சிறப்பாக ஓங்கி நிற்கும் பெருமைகளையுடைய உன் ரூபத்தை, **என்னாலே காணலாம் என்று எண்ணுதியேல்**—என்னால் பார்க்கக்கூடும் என்று எண்ணுவாயாகில், (அதை) **ஒன்று ஒழியாமே**—முழுவதும், **எனக்கு**—எனக்கு, **பாங்கு இசைய பயின்று காட்டு**—நன்றாக (என் நெஞ்சில்) பொருந்தும்படி தெளிவாகக் காட்டுவாயாக.

விரும்புகிறேன். த்₃ரஷ்டும் என்னும் ஶப்₃த₃ம் த₃ர்ஶநஸமாநாகாரமான ப₄க்தி முதலானவற்றையும் குறிக்குமானாலும், இது விஶ்வரூப த₃ர்ஶந ப்ரகரணமாகையாலேஅவற்றைக் குறிக்காமல் நேரே காண்கையாகிற ஸாக்ஷாத்காரத்தைக் குறிக்கிறது. 3.

4. முன் ஶ்லோகத்தில் கூறப்பட்ட ரூபத்தைக் காட்டும்படி பிரார்த்தி₂க்கிறான் அர்ஜுனன். (தத்) அனைத்தையும் படைப்பதாய்,

॥ भा ॥ तत्—सर्वस्य स्रष्टृ, सर्वस्य प्रशासितृ, सर्वस्याधारभूतं त्वद्रूपं मया द्रष्टुं शक्यमिति यदि मन्यसे, ततो योगेश्वर—योगो ज्ञानादिकल्याणगुणयोगः ; पश्य मे योगमैश्वरम् (८) इति हि वक्ष्यते; त्वद्व्यतिरिक्तस्य कस्याप्यसंभावितानां ज्ञानबलैश्वर्यवीर्यशक्तितेजसां निधे!

அனைத்தையும் நியமிப்பதாய், அனைத்துக்கும் ஆத₄ாரமாயிருப்பதாய், "ஐஶ்வரம் தே ரூபம்" என்று சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்டதான உன்னுடைய ரூபம். சென்ற ஶ்லோகத்திற்போலே இந்த ஶப்₃த₃ம் ஸ்வரூபத்தைக் குறித்ததாகில், ஸ்ரஷ்ட்ருத்வம் முதலானவை முக்₂யமாகப் பொருந்தி விடுகின்றன. திருமேனியையோ, ஸ்வரூபம் ரூபம் முதலான எல்லா ப்ரகாரங்களையோ குறித்ததாகில், முற்கூறிய ரீதியில் கௌ₃ணமாகப் பொருந்தி விடுகின்றன என்று கண்டு கொள்வது. (மயா த்₃ரஷ்டும் ஶக்யம் இதி யதி₃ மந்யஸே) என்னால் காணக்கூடியது என்று நீ நினைத்தாயாகில். இத்தால் எத்தனையேனும் ஜ்ஞானஶக்திகளையுடையவர்களும் அவனுடைய ஸ்வரூபரூபாதி₃களை அவன் காட்டக்கண்டால் காணலாமேயொழிய தமது முயற்சியால் காண்பது அரிது என்று உணர்த்தப்படுகிறது. இதையே "யாருமோர் நிலைமையனென அறிவரிய எம்பெருமான், யாருமோர் நிலைமையனென அறிவெளிய எம்பெருமான்" [திருவாய் 1-3-4] என்று நம்மாழ்வாரும் அருளிச்செய்தார். நினைத்தால் காட்டிவிட முடியுமோ? எனில் (ப்ரபோ₄ா) ஸர்வேஶ்வரனாகையால் உன்னால் முடியாததொன்றில்லை என்று கருத்து. (யோகே₃ஶ்வர) கல்யாணகு₃ணங்களையுடையவனே! இங்கு விஶ்வரூபத்தைக் காணவேணுமெனும் விருப்பத்தையுடைய அர்ஜுனனின் பேச்சாகையாலே, "யோகே₃ஶ்வரன்" என்றது யோக₃த்தை நிர்வஹிப்பவன் என்று பொருள்படமுடியாது. அர்ஜுனனுக்கு அஷ்டாங்க₃யோக₃ம் முதலானவற்றைக் கண்ணன் இங்கு காட்டவில்லையாகையால் யோக₃ஶப்₃த₃த்துக்கு அவற்றைப் பொருளாகக் கொள்ளமுடியாது. ஆகையால் "பஶ்ய மே யோக₃ம் ஐஶ்வரம்"(8) [ஈஶ்வரனுக்குரிய எனது கல்யாண கு₃ணச் சேர்த்தியைக் காண்பாயாக] என்று மேலே கூறியிருப்பதையொட்டி யோக₃ஶப்₃த₃ம் கல்யாணகு₃ணச் சேர்த்தியைக் குறிப்பதாகக் கொள்வதே உசிதம். ஆக, யோகே₃ஶ்வர ஶப்₃த₃ம் 'அஶ்வபதி', 'த₄நபதி' என்பதுபோலே ஏராளமான கல்யாணகு₃ணங்களையுடையவன் என்று பொருள்படுகிறது. அன்றிக்கே கல்யாணகு₃ணங்களை நியமிப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். ஆக, "ப்ரபோ₄! யோகே₃ஶ்வர!" என்னும் இரண்டு

आत्मानं त्वामव्ययं मे दर्शय। अव्ययमिति क्रियाविशेषणम्। त्वां सकलं मे दर्शयेत्यर्थः॥ ४॥

॥ भा॥ एवं कौतूहलान्वितेन हर्षगद्गदकण्ठेन पार्थेन प्रार्थितो भगवानुवाच—

श्रीभगवानुवाच—

पश्य मे पार्थ रूपाणि शतशोऽथ सहस्रशः।
नानाविधानि दिव्यानि नानावर्णाकृतीनि च। ५॥

5. பஶ்ய மே பார்த்த₂ ரூபாணி ஶதஶோऽத₂ ஸஹஸ்ரஶ:।
நாநாவித₄ாநி தி₃வ்யாநி நாநாவர்ணாக்ருதீநி ச॥

ஸ்ரீ ப₄க₃வாந் உவாச — ப₄க₃வானுன கண்ணன் கூறினுன்; **பார்த்த₂** — குந்தீபுத்திரனே! **மே** — என்னுடைய, **ரூபாணி**—(எங்குமுள்ள) உருவங்களை, **பஶ்ய**— காண்பாய், **அத₂**—மேலும், **ஶதஶ: ஸஹஸ்ரஶ: ச**— நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் இருப்பவையாய், **நாநாவித₄ாநி**— பலவகைப்பட்டவையாய், **தி₃வ்யாநி**—ஆஶ்சர்யமானவையாய், **நாநாவர்ணாக்ருதீநி** — பல நிறங்களையும் ஆகாரங்களையும் உடையவையான (ஶரீரங்களையும்) காண்பாய்.

விளிகளாலும் தன்னையொழிந்த எவரிடமும் காணமுடியாத ஜ்ஞானம், ப₃லம், ஐஶ்வர்யம், வீர்யம், ஶக்தி, தேஜஸ் முதலான அளவற்ற கல்யாணகு₃ணங்களுக்கு இருப்பிடமானவன் இவன் என்று காட்டப்பட்டதாகிறது. (ததோ மே த்வம் ஆத்மாநம் த₃ர்ஶய) இப்படிப்பட்டவனுகையாலே, நீயே எனக்கு உன்னைக் காட்டியருளவேணும் என்று கருத்து. (அவ்யயம் த₃ர்ஶய) குறைவறக் காட்டியருளவேணும். முழுவதும் காட்டியருளவேண்டும் என்று கருத்து. "**ஆத்மாநம்**" என்று இவனுடைய ஸ்வரூபம், ரூபம் முதலானவற்றைக் குறிக்கிறதாகையாலே, அழியக்கூடிய இவ்வுலகமாகிற ரூபவிஷயத்தில் அவ்யய ஶப்₃த₃ம் பொருந்தாது. ஆகையால் 'அவ்யயம் த₃ர்ஶய'என்று க்ரியாவிஶேஷணமாகக் கொண்டு பொருள்கொள்ளப்பட்டது. எல்லா கு₃ணங்கள், விபூ₄திகள், விக்₃ரஹங்கள் முதலானவற்றோடு கூடிய ஸ்வரூபத்தைக் காட்டவேண்டும் என்றபடி. 4.

6. என்றிசைக்கப் பார்த்த னெழின்மாய னீதுரைத்தான்
வென்றிவிசை யாவென்றன் மேனிகளை—யொன்றியநீ
பாரா யிரம்பலவாய்த் திவ்வியமாம் பல்வகையா
வேரார் நிறத்துருவ மிங்கு.

என்று பார்த்தன் இசைக்க-இவ்வண்ணமாக அர்ஜுனன் கூற, **எழில் மாயன்**—அழகிய கண்ணன், **ஈது உரைத்தான்**—பின்வருமாறு உரைக்கலுற்றான்; **வென்றி விசையா**—(போரில்) வெற்றியே காணும் அர்ஜுனா! **ஒன்றிய நீ**—ஒருமனப்பட்டவனான நீ, **என் தன் மேனிகளை**—எனது (எங்குமுள்ள) உருவங்களை, **பார்**—காண்பாய்; **இங்கு**—இப்போர்க்களத்திலேயே, **ஆயிரம் பலவாய் திவ்வியமாம் பல்வகையா ஏரார் நிறத்துருவம்**—ஆயிரக்கணக்கானவையாய், ஆஶ்சர்யமானவையாய், பலவகைப்பட்டவையாய், பல நிறங்களையும், ஆகாரங்களையும் உடைய ஶரீரங்களையும் காண்பாய்.

---

5. இவ்வண்ணமாகப் பேரார்வங்கொண்டவனாய், ஆனந்தத்தாலே தழதழத்த குரலையுடையவனான பார்த்தனாலே பிரார்த்திக்கப் பெற்ற கண்ணன் நாலு ஶ்லோகங்களாலே பதிலளிக்கிறான். (பஶ்ய மே ரூபாணி) ஸூர்யமண்டலம் முதலான கணக்கற்ற இடங்களில் உள்ள என் உருவங்களைப்பார். எல்லாவிடங்களிலுமிருக்கும் பலவகையான ரூபங்களைக் காட்டப்போகிறானுகையால் பாஷ்யத்தில் 'ரூபாணி' என்றதற்கு "ஸர்வாஶ்ரயாணி" என விஶேஷணமிடப்பட்டது. (ஶதஶோऽத ஸஹஸ்ரஶ:) பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை எனும் ஐந்துவகைகளிலும் அடங்கிய அளவற்ற அப்ராக்ருத திவ்யமங்களவிக்ரஹங்களைக் குறிக்கிறது. இவ்வண்டத்தில் ஆதித்யமண்டலத்தினுள் "த்யேய: ஸதா" என்னும் ஶ்லோகத்தில் வர்ணிக்கப்பட்ட ரூபத்துடன் எழுந்தருளியிருப்பதுபோல், அளவற்ற ப்ரஹ்மாண்டங்களிலும் எழுந்தருளியிருக்கிறானுகையாலும், விபவம் முதலானவையும் — கணக்கற்றவையாகையாலும் இவனுடைய உருவங்கள் எண்ணமுடியாதவை என்பது வெளிப்படை. "பஹுதா விஜாயதே' [பு-ஸூ 2-3] [பலபடியாகப்

॥ भा ॥ पश्य मे सर्वाश्रयाणि रूपाणि; अथ शतशस्सहस्रशश्च नानाविधानि—नानाप्रकाराणि, दिव्यानि—अप्राकृतानि, नानावर्णाकृतीनि—शुक्लकृष्णादिनानावर्णानि, नानाकाराणि च पश्य ॥ ५ ॥

பிறக்கிருன்] என்றது வேத₃ம். ''ப₃ஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி'' [கீ₃தை 4-5] [எனக்குப் பல பிறப்புகள் நடந்துவிட்டன] என்ருன் கீ₃தையில் கண்ணனும். ''சன்மம் பல பல செய்து'' [திருவாய் 3-10-1] என்ருர் ஆழ்வார். ''இனைத்தென எண்வரம்பறியா யாக்கையை'' [பரிபாடல் 3] என்றனர் சங்ககாலத் தமிழரும், ''ரூபம் ரூபம் ப்ரதி ரூபோ ப₃பூ₄வ'' [கட₂ 5-9] என்னும் வேத₃வாக்யத்திலும் இவ் வர்த்த₂மே சொல்லப்பட்டது என்று கீ₃தைக்கு உரையிட்ட சிலர் உரைப்பதாகத் தாத்பர்யசந்த்₃ரிகை. (பஶ்ய) 'பார்' என்று இதன் பொருளாயினும், தி₃வ்யசக்ஷுஸ்ஸை இனிமேல்தான் கொடுக்கப் போகிருனுகையால், ''நீ பார்க்கவல்லவனும்படி செய்கிறேன்'' என்று பொருள் கொள்ளவேண்டும். (நாநாவித₄ாநி) ஒவ்வோருருவத் திலும் திருவாப₄ரணம், ஆயுத₄ம், அடையாளம், திருக்கைகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் பே₄த₃த்தினுல் பலவகைப்பட்டிருப்பவை. (தி₃வ்யாநி) அப்ராக்ருதமானவை; ஶுத்₃த₄ஸத்வமயமானவை என்றபடி. ''தி₃வி ப₄வம் தி₃வ்யம்'' எனும் வ்யுத்பத்தியால் 'பரம பத₃த்தில், அல்லது ஸ்வர்க்க₃த்தில், அல்லது ஆகாயத்தில் இருப்பது' என்று பொருள்கொள்வது இங்கு பொருந்தாது; பூ₄மி முதலானவற்றையும் இந்த விஶ்வரூபம் வியாபித்திருப்பதாகக் கூறு கிறபடியால். திருமேனியின் த்₃ரவ்யம், தாழ்வு எதுவும் அற்றதாய், மிகச்சிறப்புற்றதான ஶுத்₃த₄ஸத்வத்₃ரவ்யம் என்று சொல்லவேண் டியதும் அவசியமாகையாலும் 'அப்ராக்ருதம்' என்று பொருள்கொள் வதே பொருந்தும். (நாநா வர்ணாக்ருதீநி ச) வாஸுதே₃வன் முதலான வியூஹங்களில் நாலுயுக₃ங்களிலும் முறையே வெண்மை, பொன்னிறம், பசுமை, கருமை எனப் பலநிறங்களையும் மாறிமாறி உடைத்தாயிருப் பதையும், மற்ற அவதாரங்களிலும் அவ்வப்ப₂லன்களை விரும்புகிற வர்கள் த்₄யானிப்பதற்காகப் பல நிறங்களை உடைத்தாயிருப்பதையும் ''நாநா வர்ண'' ஶப்₃த₃ம் காட்டுகிறது. தே₃வர், மனிதர், விலங்கு முதலான எல்லா யோனிகளிலும் மீன், ஆமை, வராஹம் முதலான பலவகைப்பட்ட உருவங்களோடு பிறந்ததை 'நாநாக்ருதி' ஶப்₃த₃ம் காட்டுகிறது. (பார்த்த₂) என் அத்தைபிள்ளையாகையாலே உனக்கு இவற்றைக் காட்டப்போகிறேன் என்று கருத்து. 5.

पश्यादित्यान्वसून् रुद्रानश्विनौ मरुतस्तथा।
बहून्यदृष्टपूर्वाणि पश्याश्चर्याणि भारत ॥ ६॥

6. பஶ்யாதி$_3$த்யாந் வஸூந் ருத்$_3$ராநஶ்விநௌ மருதஸ்ததா$_2$।
ப$_3$ஹூந்யத்$_3$ருஷ்டபூர்வாணி பஶ்யாஶ்சர்யாணி பா$_4$ரத ॥

பா$_4$ரத — ப$_4$ரதகுலத்துதித்தவனே! **ஆதி$_3$த்யாந்**—(பன்னிரு) ஆதி$_3$த்யர்களையும், **வஸூந்**—(எட்டு) வஸுக்களையும், **ருத்$_3$ராந்**—(பதினொரு) உருத்திரர்களையும், **அஶ்விநௌ**—இரு அஶ்விநீதே$_3$வதைகளையும், **ததா$_2$ மருத:**—(நாற்பத்தொன்பது) மருத்துக்களையும், **பஶ்ய**—(எனது ஓர் உருவில்) பார்; **ப$_3$ஹூநி**—(காணப்படும்) பலவற்றையும், **அத்$_3$ருஷ்ட பூர்வாணி**—(இதுவரை எங்கும் யாராலும்) இதற்குமுன் காணப்படாதவையான, **ஆஶ்சர்யாணி**—அற்புதமானவற்றையும், **பஶ்ய**—பார்.

---

7. ஆதித் தியர்வசுக்க ளங்கரர்க ளச்சுனிகள்
சாதித் திரள்மருத்துத் தங்களைப்பார்—மீதுற்றுப்
பல்வகையாய் முன்காணுப் பாராய்நீ பார்த்தனே
நல்வகையா லாச்சரிய நன்கு.

பார்த்தனே! — அர்ஜுந! **அங்கு** — அவ்வுருவில், **ஆதித்தியர்**—(பன்னிரு) ஆதி$_3$த்யர்கள், **வசுக்கள்**—(எட்டு) வஸுக்கள், **அரர்கள்**—(பதினொரு) உருத்திரர்கள், **அச்சுனிகள்**—(இரு) அஶ்விநீ தே$_3$வர்கள், **மருத்து**—(நாற்பத்தொன்பது) வாயுதே$_3$வதைகள், **சாதித்திரள் தங்களை**-(என்று) வகைவகையாகத் திரண்டிருப்பவர்களை, **பார்**—காண்பாய்; **மீதுற்று**—மிகுந்தவையாய், **பல்வகையாய்**—(காணப்படும்) பலவகைப்பட்ட பதா$_3$ர்த்த$_2$ங்களையும், **முன் காணு நல்வகையால் ஆச்சரியம்** — இதுவரை எங்கும் எவரும் காணாத நன்மைகளையுடைய ஆஶ்சர்ய ரூபங்களையும், **நீ**—நீ, **நன்கு பாராய்**—நன்ருகப் பார்ப்பாயாக.

---

6. முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட தனக்கேயுரிய கணக்கற்ற உருவங்களில் ஓர் உருவத்தை விரிவாகக்காட்டத் திருவுள்ளம்பற்றி,

॥ भा ॥ ममैकस्मिन् रूपे पश्यादित्यान् द्वादश, वसूनष्टौ, रुद्रानेकादश, अश्विनौ द्वौ, मरुतश्चैकोनपञ्चाशतम्। प्रदर्शनार्थमिदम्; इह जगति प्रत्यक्षदृष्टानि शास्त्रदृष्टानि च यानि वस्तूनि, तानि सर्वाण्यन्यान्यपि सर्वेषु लोकेषु सर्वेषु च शास्त्रेष्वदृष्टपूर्वाणि बहून्याश्चर्याणि पश्य ॥ ६ ॥

அதில் உள்ள அதிஶயங்களைக் காண்பாயாக என்கிறான். "மம தே₃ஹே இஹைகஸ்த₂ம்" [இங்கு எனது ஓர் உருவில் ஓர் பகுதியில் உள்ள] என்று அடுத்த ஶ்லோகத்தில் உள்ளதை இங்கும் வருவித்துக் கொள்ளவேண்டும். (பஶ்யாதி₃த்யாந் வஸூந் ருத்₃ராந் அஶ்விநௌ) "எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓரிருவர்" [முதல் திருவ 52] என்று பொய்கையாழ்வாராலும், "விதியின் மக்களும், மாசில் எண்மரும், பதினொரு கபிலரும், தாமா இருவரும்......மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர" [பரிபாடல் 3] [மாயோனே! கஶ்யபப்ரஜாபதியின் மக்களான பன்னிரு ஆதி₃த்யர்களும், குற்றமற்ற அஷ்டவஸுக்களும், கபில நிறமுள்ள ஏகாத₃ஶருத்₃ரர்களும், தாவும் குதிரைக்குப் பிறந்த அஶ்விநீதே₃வர்கள் இருவரும் மற்றுமுள்ள உலகனைத்தும் உன்னிடமிருந்தே பிறந்தவை என்பதை அழியாத வேத₃ம் கூறுகையாலே நாங்கள் சொல்லுகிறோம்.] என்று சங்கத்தமிழ்ச் சான்றோராலும் குறிக்கப்பெற்ற பன்னிரு ஆதி₃த்யர்கள், எட்டுவஸுக்கள், பதினொரு உருத்திரர், அஶ்வினிகள் இருவர் ஆக முப்பத்துமூவரான முக்கிய தேவர்களை முதலில் சொல்லுகிறான். (மருதஸ்ததா₂) முப்பத்து மூவரான அமரரோடன்றியில், மருத்துக்கள் என்னும் நாற்பத்தொன்பது வாயுதே₃வதைகளையும் பார். இவன் பார்ப்பவை எவராலும் அறியப்படாத பல பொருள்களுக்கு ஓர் எடுத்துக்காட்டேயாகும் என உணர்த்த 'மற்றும் கணக்கற்ற ஆஶ்சர்யங்களைப் பார்' என்கிறான் உத்தரார்த்த₄த்தாலே, — (ப₃ஹூநி) இவ்வுலகில் ப்ரத்யக்ஷத்தாலும், ஶாஸ்த்ரங்கொண்டும் அறியப்படும் வஸ்துக்கள் எவையுண்டோ, அவை அனைத்தையும் பார்; "அத்₃ருஷ்டபூர்வாணி" என்று எவராலும் காணப்படாதவற்றை அடுத்தபடி குறிக்கையாலே, "ப₃ஹூநி" என்னும் பத₃ம் காணப்படும் பொருள்களைச் சொல்லுகிறது. (அத்₃ருஷ்டபூர்வாணி ஆஶ்சர்யாணி பஶ்ய) முற்கூறியவற்றிலும் வேறுபட்டவையாய், எல்லாவுலகிலும், எல்லா ஶாஸ்த்ரங்களிலும் இதற்குமுன் எங்கும் எவராலும் காணப்படாதவையான பல ஆஶ்சர்ய

इहैकस्थं जगत्कृत्स्नं पश्याद्य सचराचरम्।
मम देहे गुडाकेश यच्चान्यद् द्रष्टुमिच्छसि ॥७॥

7. இஹைகஸ்த₂ம் ஜக₃த் க்ருத்ஸ்நம் பஶ்யாத்₃ய ஸசராசரம்।
மம தே₃ஹே கு₃டா₃கேஶ யச்சாந்யத்₃ த்₃ரஷ்டுமிச்ச₂ஸி ॥

கு₃டா₃கேஶ தூக்கத்தை வென்ற அர்ஜுன! **இஹ மம தே₃ஹே**—இங்க எனது ஓர் உருவில், **ஏகஸ்த₂ம்**—ஒரு பகுதியில், **ஸசராசரம் க்ருத்ஸ்நம் ஜக₃த்**—அசைவனவும், அசையாதனவும் அடங்கிய உலகு அனைத்தையும், **அத்₃ய பஶ்ய**—இப்போது பார்; **யத் ச அந்யத் த்₃ரஷ்டும் இச்ச₂ஸி**—மேலும் வேறு எந்தப் பொருளை நீ காண விரும்புகிருயோ, (அதையும்), **(மம தே₃ஹே ஏகஸ்த₂ம் பஶ்ய)**—எனது ஒரு தே₃ஹத்தின் ஒரு பகுதியில் காண்பாயாக.

---

8. இங்கே குடாகேசா வென்னுடம்பி லோரிடத்தி
லங்கோர் சராசரங்க ளாகத்துத்--தங்குநெறி
தேறியே யெல்லாந் தெரியக்கா ணென்காண்பான்
வேறுதா னிச்சித்தாய் மிக்கு.

குடாகேசா—தூக்கத்தை வென்ற அர்ஜுன! **இங்கே என் உடம்பில் ஓர் இடத்தில்**—இங்கு எனது ஓர் உருவில் ஒரு பகுதியில், **அங்கு ஓர் சராசரங்கள்**—உலகில் காணப்படும் அசைவனவும், அசையாதனவுமான அனைத்தும், **ஆகத்து தங்கும் நெறி தேறியே**—அதனுள் தங்கியிருக்கின்றன என்பதை அறுதியிட்டு, **எல்லாம் தெரிய காண்**—எல்லாவற்றையும் நன்கு காண்பாயாக; **வேறு தான் என் காண்பான் மிக்கு இச்சித்தாய்**—மேலும் வேறு எப்பொருளை நீ காண மிக விரும்புகிருயோ, (அதையும் எனது ஓர் உருவில் ஒரு பகுதியில் காண்பாய்).

மான பொருள்களையும் இந்த எனது உருவில் காண்பாய். (ப₄ாரத) இவ்வுருவைக் கண்டபின்பே நீ ப₄ாரதகுலத்தில் உதி₃த்ததற்குரிய பேறுபெற்றவனுவாய் என்று கருத்து. 6.

॥ भा ॥ इह ममैकस्मिन् देहे, तत्राप्येकस्थम्—एकदेशस्थं सचराचरं कृत्स्नं जगत्पश्य; यच्चान्यद्द्रष्टुमिच्छसि, तदप्येकदेहैकदेश एव पश्य । ७॥

न तु मां शक्ष्यसे द्रष्टुमनेनैव स्वचक्षुषा ।
दिव्यं ददामि ते चक्षुः पश्य मे योगमैश्वरम् ॥ ८ ॥

8. ந து மாம் ஶக்ஷ்யஸே த்₃ரஷ்டுமநேநைவ ஸ்வசக்ஷுஷா ।
தி₃வ்யம் த₃தா₃மி தே சக்ஷு: பஶ்ய மே யோக₃மைஶ்வரம் ॥

அநேந ஏவ ஸ்வசக்ஷுஷா—இந்த உனது கண்ணால், **மாம் த்₃ரஷ்டும் து ந ஶக்ஷ்யஸே**—என்னைக் காண உன்னால்

---

7. (இஹ மம தே₃ஹே ஏகஸ்த₂ம்) இங்கு எனது ஓர் உருவில் ஒரு பகுதியில். 'தே₃ஹே' எனும் ஒருமையாலே ஓர் உருவிலேயே இவை காட்டப்படுகின்றன என விளங்குகிறது. 'ஏகஸ்த₂ம்' என்று அந்த தே₃ஹத்தில் ஒரு பகுதியிலேயே இவை காட்டப்படுகின்றன என விளங்குகிறது. "இஹ ஏகஸ்த₂ம்" என்றதற்கு, "ஓர் அவயவிக்கு அவயவபூ₄தமாயிருந்தது உலகனைத்தும்" என்று சிலர் பொருள்கொண்டனர். "தி₃வ்யம்" என்று உருவை அப்ராக்ருதமாகக் கூறுகையால், இப்பொருள் இங்கு பொருந்தாது. (ஸசராசரம் ஜக₃த் க்ருத்ஸ்நம் பஶ்ய) அசைவனவும் அசையாதனவுமான உலகனைத்தையும் காண்பாய். (யச்சாந்யத் த்₃ரஷ்டுமிச்ச₂ஸி) மேலும் வேறு எந்த விஷயத்தை நீ காணவிரும்புகிறாயோ, அதையும் எனது ஒரு தே₃ஹப்பகுதியிலேயே காண்பாய். "இஹ மம தே₃ஹே ஏகஸ்த₂ம் பஶ்ய" என்பது இரண்டுக்கும் பொது. அல்லது, "இஹ ஏகஸ்த₂ம் பஶ்ய" என்று பூர்வார்த்த₄த்திலும், "மம தே₃ஹே (பஶ்ய)" என்று உத்தரார்த்த₄த்திலும் கூட்டிப் பொருள்கொள்ளலாம். அப்போதும் ஒரு தே₃ஹத்தில் ஒரு பகுதியில் என்பது இரண்டிலும் தாத்பர்யார்த்த₂மாகத்தேறும். "யச்சாந்யத்" என்றதால், 'பாண்ட₃வர்கள் திருதராஷ்டிரபுத்திரர்களை வெல்லப் போவதையும் நீ விரும்பினால் காணலாம்' என உணர்த்தப்படுகிறது. (கு₃டா₃கேஶ பஶ்ய) தூக்கத்தை வென்றவனே! காண்பாய். எனது விஶ்வரூபத்தைக் கண்டால்தான் நீ தூக்கத்தை வென்றவனாயிருப்பதின் முழுப்பயனையும் அடையலாம் என்று கருத்து. 'கு₃டா₃கா' என்பது தூக்கத்தைக் குறிக்கும்; "கு₃டா₃காயா: ஈஶ:" என்று தூக்கத்தை வென்ற அர்ஜுனனுக்குப் பெயர். 7.

॥ भा ॥ अहं मम देहैकदेशे सर्वं जगद्दर्शयिष्यामि; त्वं त्वनेन नियतपरिमितवस्तुग्राहिणा प्राकृतेन स्वचक्षुषा, मां—तथाभूतं सकले-

---

இயலாது; **தி₃வ்யம் சக்ஷு:**-ப்ராக்ருதக் கண்ணைக்காட்டிலும் வேறுபட்ட கண்ணை, **தே த₃தா₃மி**-உனக்குக் கொடுக்கிறேன். (அதைக்கொண்டு), **மே ஐஶ்வரம் யோக₃ம் பஶ்ய**—ஐஶ்வரனை எனக்கே உரிய கல்யாணகு₃ண விபூ₄திச் சேர்த்தியைக் காண்பாய்.

---

9. உன்னுடைய விக்கண்ணு லொன்றுமெனைக் காண்பரிதா
மென்னுமது தன்ணுலே யானுனக்கு—மன்னியசீர்த்
திவ்வியமாங் கண்டருகேன் சீர்பிறங்கு மென்பெருமை
செவ்வியுறக் காணதனுற் சேர்ந்து.

உன்னுடைய இக்கண்ணுல்—உனது இந்த ப்ராக்ருதமான கண்ணுல், **எனை ஒன்றும் காண்பு அரிதாம்**—என்னை ஒரு சிறிதும் காண இயலாது; **என்னுமது தன்ணுலே**—இக்காரணத்தாலே, **யான்**—நான், **உனக்கு**—உனக்கு, **மன்னிய சீர் திவ்வியமாம் கண் தருகேன்**—கு₃ணம் பொருந்திய அப்ராக்ருதமான கண்ணைத் தருகிறேன்; **அதனுல் சேர்ந்து**—அக்கண்ணைக்கொண்டு, **சீர் பிறங்கும் என் பெருமை**—கு₃ணவிபூ₄திச் சேர்த்தியோடு கூடிய எனது பெருமையை, **செவ்வியுற காண்**—நன்கு காண்பாயாக.

---

8. ஊனக்கண்ணுல் தன் விஶ்வரூபத்தைக் காணமுடியாதாகையால், அவனுக்கு அதைக்காண அப்ராக்ருதமான கண்ணைத் தருவதாகக் கூறுகிறன் கண்ணன். (அநேநைவ ஸ்வசக்ஷுஷா மாம் த்₃ரஷ்டும் து ந ஶக்யஸே) இந்த உன்னுடைய ப்ராக்ருதமான ஊனக்கண்ணினுல் என்னைக்காண உன்னுல் இயலாது. நானே எனது தே₃ஹத்தின் ஒரு பகுதியில் உலகனைத்தையும் காட்டப் போகிறேன். எப்போதுமே அளவுபட்ட பொருள்களையே காணவல்ல ப்ராக்ருதமான இந்த உனது ஊனக்கண்ணுல் அத்தகைய உருவையுடைய என்னைக் காணமுடியாது. 'து' ஶப்₃த₃த்தாலே ஊனக்கண்ணின் அஶக்திக்குக் காரணம் அது ப்ராக்ருதமாய், அளவுபட்ட ஶக்தியுடையதாயிருப்பதே என உணர்த்துகிறன். (மாம்) முன் சொன்னபடி—என்னைக்காட்டிலும் வேறுபட்ட அனைவரிலும் சிறப்புற்றவனுய்,

तरविसजातीयमपरिमेयं द्रष्टुं न शक्यसे। तव दिव्यम्—अप्राकृतं मद्दर्शनसाधनं चक्षुर्ददामि। पश्य मे योगमैश्वरम्—मदसाधारणं योगं पश्य; ममानन्तज्ञानादियोगमनन्तविभूतियोगं च पश्येत्यर्थः॥८॥

सञ्जय उवाच—

एवमुक्त्वा ततो राजन् महायोगेश्वरो हरिः।
दर्शयामास पार्थाय परमं रूपमैश्वरम्॥९॥

9. ஏவமுக்த்வா ததோ ராஜந் மஹாயோகே₃ஶ்வரோ ஹரி꞉।
த₃ர்ஶயாமாஸ பார்த்த₂ாய பரமம் ரூபமைஶ்வரம் ॥

ராஜந்! — அரசனான திருதராஷ்ட்ரனே! **மஹாயோகே₃ஶ்வர꞉ ஹரி꞉**—பேராச்சரியமான யோகங்களின் (சேர்த்திகளின்) ஈஶ்வரனான கண்ணன், **ஏவம் உக்த்வா**—இவ்வண்ணம் உரைத்து, **தத꞉**—அதற்குப்பின், **பார்த்த₂ாய**—குந்தீபுத்திரனுக்கு, **பரமம்** — ஒப்பற்றதாய், **ஐஶ்வரம்**—ஈஶ்வரனான தனக்கே உரியதான, **ரூபம்**—விஶ்வரூபத்தை, **த₃ர்ஶயாமாஸ**—காண்பித்தான்.

அளவிட்டுக்காண அரியனான என்னை உன் ஊனக்கண்ணால் காண முடியாது என்றபடி. பின் என்செய்வது? எனில்,—(தவ தி₃வ்யம் சக்ஷு꞉ த₃த₃ாமி) என்னைக் காண்பதற்கு உறுப்பாக உனக்கு அப்ராக்ருதமான கண்ணைத் தருகிறேன். தி₃வ்யஶப்₃த₃ம்—ஊனக் கண்ணுக்கு எதிர்த்தட்டாக, இக்கண் அப்ராக்ருதமானது எனக் காட்டுகிறது. அத்தகைய கண்ணே தன்னைக் காணமுடியும் என்று கருத்து. (மே ஐஶ்வரம் யோக₃ம் பஶ்ய) ஈஶ்வரனான எனக்கேயுரிய அளவற்ற அறிவு முதலான கல்யாணகு₃ணச்சேர்த்தியையும், உப₄ய விபூ₄திகளாகிற ஐஶ்வர்யயோக₃த்தையும் காண்பாயாக. 'ஐஶ்வரம்' என்பது ஈஶ்வரனுக்கே உரியது; ஈஶ்வரத்வமாவது நியமநஶக்தி; அதற்குரிய யோக₃ம் (சேர்த்தி) இப்ரகரணத்தில் அடிக்கடி காட்டப்பட்ட கல்யாணகு₃ணயோக₃மும், ஐஶ்வர்யயோக₃முமேயாகும். இக்கண் அப்ராக்ருதமாகையால் ஜ்ஞாநம் முதலான கு₃ணங்களையும், உப₄ய விபூ₄தியையும் காணலாம் என்று கருத்து. "அநந்தவீர்யம் பஶ்யாமி" [19] முதலான ஶ்லோகங்களில் அர்ஜுனன் இவற்றைக் காண்பதாகக் கூறப்போவதும் இதை வலியுறுத்துகிறது. 8.

॥ भा ॥ एवमुक्त्वा सारथ्येऽवस्थितः पार्थमातुलजो महायोगेश्वरो हरिः—महाश्चर्ययोगानामीश्वरः परब्रह्मभूतो नारायणः परमैश्वरं—

---

10. இவ்வகை சொல்லி யிறையான யோகேச
னவ்வகையாற் பார்த்த னவன்காண—மெய்வகையா
லேசமெனு மவ்வடிவை யாங்கனைத்துங் காட்டினன்
றேசமரு மேன்மை சிறந்து.

இறையான யோகேசன் — ஸர்வேஶ்வரனுய், கு₃ண விபூ₄திச்சேர்த்தியுடையவனுன கண்ணன், **இவ்வகை சொல்லி**—இவ்வண்ணமாகச் சொல்லி, **அவ்வகையால்**—தான் சொன்னபடியே, **பார்த்தன் அவன் காண**—அந்த அர்ஜுனன் காணும்படியாக, **தேசு அமரும்**—ஒளி மிகுந் திருப்பதாய், **மேன்மை சிறந்து**—பெருமையால், சிறப்புற்ற தாய், **ஐசம் எனும் அவ்வடிவை**—(ஈஶனுன தனக்கேயுரிய தாகையால்) ஐஶம் எனப்படும் அந்த விஶ்வரூபத்தை, **ஆங்கு** — அப்போர்க்களத்தில், **அனைத்தும்** — முழுவதும், **மெய்வகையால் காட்டினன்**—உள்ளபடி காட்டினன்.

---

9. இனி ஐந்து ஶ்லோகங்களாலே கண்ணன் அர்ஜுனனுக்குக் காட்டிய விஶ்வரூபத்தைச் சுருக்கமாக வர்ணித்து, ஆருவது ஶ்லோகத்தில் அர்ஜுனன் கண்ணனைத் துதிக்கத்தொடங்கியதைக் கூறுகிருன் ஸஞ்ஜயன். (ராஜந்!) அரசனுன த்₄ருதராஷ்ட்ரனே! (ஏவம் உக்த்வா) முன் நான்கு ஶ்லோகங்களில் விவரித்தபடி கண்ணன் கூறி. (ததோ த₃ர்ஶயாமாஸ) அதற்குப்பின் காட்டினன். காட்டினவன் யாரெனில்—(மஹாயோகே₃ஶ்வரோ ஹரி:) இதுவரையில் அர்ஜுன னுல் தனக்கு மாமன்மகனுகவும், தன்னுடைய ஸாரதி₂யாயிருப்பவனுகவும் நினைக்கப்பட்டவனுய், ஸௌலப்₄யஸௌஶீல்யவாத்ஸல்யாதி₃கு₃ணங் களுக்குக் கொள்கலமாயிருந்தபோதிலும் பேராஶ்சர்யமான யோக₃ங் களின் (சேர்த்திகளின்) ஈஶ்வரனுன கண்ணன். இவ்விரண்டு பத₃ங்களும் விஶ்வரூபத்தைக் காட்டுவதற்குறுப்பான எம்பெருமானது பரத்வத்தைக் கூறுகின்றன. முற்கூறிய ஸௌலப்₄யாதி₃கு₃ணங் களும் விஶ்வரூபத்தைக் காட்டுவதற்குறுப்பானவையேயன்றே. இப்படி கு₃ணங்களைக் காட்டவேண்டியது அவஶ்யமாகையால்

स्वासाधारणं रूपं पार्थाय—पितृष्वसुः पृथायाः पुत्राय दर्शयामास, तद्विविधविचित्रनिखिलजगदश्रायं विश्वस्य प्रशासितृ च रूपम्॥९॥

॥भा॥ तच्चेदृशम्—

अनेकवक्त्रनयनमनेकाद्भुतदर्शनम्।
अनेकदिव्याभरणं दिव्यानेकोद्यतायुधम्॥१०॥

'மஹாயோகே3ஶ்வர:' என்ற பத3த்தில் மஹச்ச2ப்3த3த்தை யோகே3ஶ்வரனை கண்ணனுக்கு விஶேஷணமாகக் கொள்வதைக் காட்டிலும், யோக3ங்களாகிற கு3ணச்சேர்த்திகளுக்கு விஶேஷணமாகக் கொள்வது பொருத்தமானது. ஆக, மஹாயோக3பத3ம் பேராஶ்சர்யமான பரத்வத்துக்குறுப்பான கு3ணச்சேர்த்திகளைக் காட்டுகிறது. ஆஶ்சர்யமான கு3ணச்சேர்த்திகளையுடையவர்கள் வேறு சிலரும் இருந்தபோதிலும் இவன் அவர்கள் அனைவர்க்கும் தலைவன் என்பதையும், அவர்களுடைய ஆஶ்சர்யமான கு3ணச்சேர்த்திகளும் இவனது ஸங்கல்பத்தால் வந்தது என்பதையும் ஈஶ்வரஶப்3த3ம் உணர்த்துகிறது. ''மஹாயோகே3ஶ்வர:'' என்னும் பத3ம் பரம்பொருளைக் குறித்த பரம் ப்ரஹ்ம, பரமாத்மா, பரஞ்சோதி, பரதத்வம் முதலான ஸாமான்யஶப்3த3ங்களையும், ''ஹரி'' ஶப்3த3ம் நாராயணன் முதலான விஶேஷஶப்3த3ங்களையும் உணர்த்துவதன்மூலம் ஸாமான்ய விஶேஷ ந்யாயத்தாலே இவனே பரம்பொருள் என்று காட்டப்படுகிறது என்று திருவுள்ளம்பற்றி பா4ஷ்யகாரர் இவற்றுக்கு ''பரப்3ரஹ்மபூ4த: நாராயண:'' என்று பா4ஷ்யமிட்டார். காட்டியது எதை? எனில் (பரமம் ஐஶ்வரம் ரூபம்) ஈஶ்வரனுகிற தனக்கேயுரிய மிக மேலான விஶ்வரூபத்தை. (பரமம் ஐஶ்வரம்) பலவிதமானதாய், ஆஶ்சர்யமான எல்லா உலகுக்கும் ஆஶ்ரயமானதாய், உலகனைத்தையும் நியமிப்பதான உருவம். இங்கு ரூபம் என்றது ஸ்வரூபத்தையும், ரூபத்தையும், ஸ்வரூபம் முதலான எல்லா ஆகாரங்களையும் குறிக்கும் என்று மூன்று வகையாக நிர்வஹிக்கலாம். இவ்விஷயம் இவ்வத்தியாயத்தில் மூன்ருவது ஶ்லோகத்தில் 'ரூபம் ஐஶ்வரம்' என்றவிடத்தில் விவரிக்கப்பட்டது. விஶ்வரூபத்தைக் காட்டியது யாருக்கு? எனில்—(பார்த்த2ாய) தனது தகப்பனுரான வஸுதே3வரின் ஸஹோத3ரியான ப்ருதை2 எனப்படும் குந்தியின் பிள்ளையான அர்ஜுனனுக்குக் காட்டினுன். அத்தையான குந்தி பரமஜ்ஞானியாகவும் இருந்தவளாகையாலே அவளுடைய பிள்ளைக்கும் அந்த ஜ்ஞானத்தை ஊட்டுவதற்காகக் காட்டினுன் என்று கருத்து. 9.

दिव्यमाल्याम्बरधरं दिव्यगन्धानुलेपनम्।
सर्वाश्चर्यमयं देवमनन्तं विश्वतोमुखम्॥११॥

10. **அநேகவக்த்ரநயநமநேகாத்$_3$பு$_4$தத$_3$ர்ஶநம் ।
அநேகதி$_3$வ்யாப$_4$ரணம் தி$_3$வ்யாநேகோத்$_3$யதாயுத$_4$ம் ॥**

11. **தி$_3$வ்யமால்யாம்ப$_3$ரத$_4$ரம் தி$_3$வ்யக$_3$ந்த$_4$ாநுலேபநம் ।
ஸர்வாஶ்சர்யமயம் தே$_3$வமநந்தம் விஶ்வதோமுக$_2$ம் ॥**

அநேகவக்த்ரநயநம் — பல முகங்களையும் கண்களையும் உடையதும், **அநேகாத்$_3$பு$_4$தத$_3$ர்ஶநம்**—எல்லையற்ற பெருமைபெற்ற ஆஶ்சர்யமான காட்சியையுடையதும், **அநேகதி$_3$வ்யாப$_4$ரணம்** — அப்ராக்ருதமான பல பல ஆப$_4$ரணங்களையுடையதும், **தி$_3$வ்யாநேகோத்$_3$யதாயுத$_4$ம்**— அப்ராக்ருதமான பற்பல ஆயுத$_4$ங்களை ஏந்தியதும், **தி$_3$வ்யமால்யாம்ப$_3$ரத$_4$ரம்** — அப்ராக்ருதமான மாலைகளையும் வஸ்த்ரங்களையும் த$_4$ரித்ததும், **தி$_3$வ்யக$_3$ந்த$_4$ாநுலேபநம்**—அப்ராக்ருதமான நறுமணத்தையுடைய சந்த$_3$னம் முதலானவற்றால் பூசப்பெற்றதும், **ஸர்வாஶ்சர்யமயம்**—ஆஶ்சர்யமான எல்லாத் தத்துவங்களுக்கும் இருப்பிடமாயுள்ளதும், **தே$_3$வம்** - பிரகாஶிப்பதும், **அநந்தம்**— தே$_3$ஶத்தாலும் காலத்தாலும் அளவில்லாததும், **விஶ்வதோமுக$_2$ம்** — எல்லா தி$_3$க்குகளிலும் இருக்கும் முக$_3$ங்களையுடையதுமான, (விஶ்வரூபத்தைக் காட்டினான்).

---

11. **பலபலவாங் கண்முகங்கள் பண்பார் வியப்புப்
பலபலவாம் பார்க்கும் பரிசு— பலபலவாம்
பூண்சிறந்த வான்கலன்கள் போற்றிப் பலபலவா
மாண்சிறந்த வாயுதங்கண் மற்று.**

12. **மாலை பரியட்ட மன்னுமவை திவ்வியமாய்க்
கோலநறும் பூச்சதின் கோளுடைத்தாய்—மேலான
வாச்சரிய மெல்லா மமர்ந்தே யனந்தமா
யோச்சமிகு மெம்முகமு முற்று.**

பலபலவாம் கண்முகங்கள் -பலபலவான கண்களையும் முகங்களையும், **பண்பு ஆர் வியப்பு பலபலவாம் பார்க்கும் பரிசு**—எல்லையற்ற பெருமைபெற்ற ஆஶ்சர்யமான காட்சியையும், **பலபலவாம் பூண் சிறந்த வான்கலங்கள்**—அப்ராக்ருதமாய், அணிவதற்குச் சிறந்த பல பல ஆப₄ரணங்களையும், **மற்று**—மேலும், **போற்றிப் பலபலவாம் மாண் சிறந்த ஆயுதங்கள்**—போற்றத்தக்கவையாய், பல பலவான சிறந்த மாட்சிமைபெற்ற ஆயுத₄ங்களையும், **மாலை பரியட்டம் மன்னுமவை திவ்வியமாய்**—அப்ராக்ருதமாய் விளங்கும் மாலைகளையும் வஸ்த்ரங்களையும், **கோல நறும் பூச்சதின் கோளுடைத்தாய்** — அழகிய மணம்மிக்க பூச்சுக்களும் ஆகிய இவற்றைக்கொண்டதாய், **மேலான ஆச்சரியம் எல்லாம் அமர்ந்தே**—மேலான ஆஶ்சர்யமுடைய பொருள்கள் அனைத்துக்கும் இருப்பிடமாய், **அனந்தமாய்**—தே₃ஶத்தாலும் காலத்தாலும் அளவுபடாததாய், **ஓச்சம் மிகும் எம்முகமும் உற்று**—எல்லா திசைகளிலும் முகங்களையுடையதுமான (விஶ்வரூபத்தைக் காட்டினன்.)

10,11. "பரமம் ரூபம் ஐஶ்வரம்" என்று சென்ற ஶ்லோகத்தில் குறிக்கப்பட்ட விஶ்வரூபத்தை இவ்விரு ஶ்லோகங்களிலும் வர்ணிக்கிறான் ஸஞ்ஜயன். (அநேக வக்த்ர நயநம்) பல முக₂ங்களையும், கண்களையும் உடையதை. சென்ற ஶ்லோகத்திலிருந்து "ரூபம் த₃ர்ஶயாமாஸ" என்பதைக் கூட்டிக்கொண்டு இத்தகைய ரூபத்தைக் காட்டினான் என்று பொருள்கொள்ளவேண்டும். "அநேகவக்த்ர" என்று சொன்னதிலிருந்து அநேகமான கண்களும் உள்ளன என்பது ஸித்₃தி₄க்கக் கூடியதாயிருக்க, அவற்றையும் சேர்த்துச் சொன்னதால், முக₂ங்கள் பலவாயிருந்ததோடன்றியில் பல ஜாதியைச் சேர்ந்தவையாகவும் இருக்கின்றன என்று உணர்த்தப்படுகிறது. பாஞ்சராத்ரம் முதலான ஶாஸ்த்ரங்களில் விஶ்வரூபத்தை வர்ணிக்கும்போதும் மனிதன், வராஹம், சிங்கம் முதலான பல ஜாதியைச் சேர்ந்த முகங்கள் இருப்பதாக வர்ணிக்கப்பட்டது. இதுபோலவே மேலே வர்ணிக்கப்படும் ஆப₄ரணங்களும், ஆயுத₄ங்களும் பல பலவாயிருப்பதோடன்றியில் பல ஜாதியைச் சேர்ந்தவையாகவும் இருக்கின்றன என்று கொள்ளவேண்டும். "ஸஹஸ்ரஶீர்ஷா புருஷஸ் ஸஹஸ்ராக்ஷ:" [பு-ஸூ 1] என்று வேதத்திலும் "தோள்களாயிரத்

॥ भा ॥ देवं—द्योतमानम्, अनन्तम्—कालत्रयवर्तिनिखिल-

தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க்கண்களாயிரத்தாய்" [திருவாய் 8.1.10] "பல பலவே ஆபரணம்" [திருவாய் 2-5.6] "ஒண்சங்கதை வாளாழியான் ஒருவன்" [திருவாய் 8.8.1] முதலான பாசுரங்களில் ஆழ்வார்களாலும் இவ்வர்த்த₂ம் வெளிப்படுத்தப்பட்டது. (அநேகாத்₃பு₄த த₃ர்ஶநம்) எல்லையற்ற பெருமைபெற்ற ஆஶ்சர்யமான காட்சியை உடையதை. (அநேக தி₃வ்யாப₄ரணம்) அப்ராக்ருதமான பல பல ஆப₄ரணங்களையுடையதை. "தி₃வ்யம்" என்பது மற்ற தெ₃ய்வங்களுக்குள்ள ப்ராக்ருதமான ஆப₄ரணங்களைக் காட்டிலும் வேறுபட்டவையாய் ஶுத்₃த₄ஸத்வமயமாயிருப்பவை இவனுடைய ஆப₄ரணங்கள் என்று காட்டுகிறது. (தி₃வ்யாநேகோத்₃யதாயுத₄ம்) அப்ராக்ருதமான பல ஜாதியைச் சேர்ந்த பல பல ஆயுத₄ங்களை த₄ரித்து நிற்பதை. (தி₃வ்யமால்யாம் ப₃ரத₄ரம்) அப்ராக்ருதமான வைஜயந்தி முதலான மாலைகளையும் பீதாம்ப₃ரம் முதலான வஸ்த்ரங்களையும் உடையதை. (தி₃வ்யக₃ந்த₄ாநுலேபநம்) அப்ராக்ருதமான நறுமணத்தையுடைய சந்த₃னம் முதலான பூச்சுக்களையுடையதை. (ஸர்வாஶ்சர்யமயம்) ஆஶ்சர்யமாயிருக்கும் எல்லாத் தத்துவங்களுக்கும் இருப்பிடமாயுள்ளதை. இப்படிப் பொருள்கொள்வதால், 'அநேகாத்₃பு₄த த₃ர்ஶநம்' என்பதோடு புனருக்தியில்லை. "ஜக₃தே₃தந் மஹாஶ்சர்யம் ருபம் யஸ்ய மஹாத்மந:" [வி பு 5.19-7] [இந்தப் பேராஶ்சர்யமான உலகம் எந்த மஹாபுருஷனுக்கு உருவமாயுள்ளதோ] முதலான ப்ரமாணங்கள் இவ்வர்த்த₂த்தை முழங்கின. (தே₃வம்) "தி₃வு காந்தி" என்னும் த₄ாதுவிலிருந்து தோன்றியதாகையாலே 'ஒளியுடையதை' என்று பொருள்படுகிறது. இவ்விஶேஷணங்களனைத்தாலும் மேலே 'விஶ்வதோ முக₂ம்' என்பதாலும் தி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹத்தோடு கூடியது இந்த விஶ்வரூபம் என்று காட்டப்படுகிறது. தே₃வஶப்₃த₃த்துக்கு தே₃வஜாதியைச் சேர்ந்தவன் என்று பொருள்கொள்வதில் பொருட்சுவையில்லை. (அநந்தம்) முக்காலத்திலுமுள்ள உலகனைத்துக்கும் இருப்பிடமாயிருப்பதால் தே₃ஶத்தாலும் காலத்தாலும் அளவுபடாததை. (ஸர்வாஶ்சர்யமயம்) என்ற பத₃த்தால் எல்லாவுலகுக்கும் இருப்பிடமாயிருப்பது என்று கூறியிருப்பதால், முக்காலத்திலுமுள்ள எல்லாப்பொருள்களுக்கும் இருப்பிடமானது என்று தேறுகிறது. இவ்விரண்டிலிருந்து தே₃ஶத்தாலும் காலத்தாலும் அளவுபடாதது விஶ்வரூபம் என விளங்குகிறது. இது விக்₃ரஹத்₃வாரமாகவும் அத்₃வாரகமாகவும் பொருந்தும். அநந்தமாயிருக்கும் தன்மை பொதுவாக ஸ்வரூபத்துக்கே உண்டா

जगदाश्रयतया देशकालपरिच्छेदानर्हम्, विश्वतोमुखम् — विश्वदिग्वर्तिमुखम्, स्वोचितदिव्याम्बरगन्धमाल्याभरणायुधान्वितम् ॥ १० ॥ ११ ॥

யினும் இங்கு திருமேனியைக் குறித்த விஶேஷணங்களுக்கு நடுவில் படிக்கப்படுவதால் இங்கு அநந்தஶப்3த3மும் விக்3ரஹவிஶேஷணமே என்பது பொருந்தும். "த்3ருஷ்ட்வாத்3பு4தம்" (20) என்று தொடங்கும் ஶ்லோகத்தில் 'அநந்தர்யாமவிஸ்தாரம் அத்யத்3பு4தம் அத்யுக்3ரம்' என்று ரூபவிஷயமாகவே பா4ஷ்யம் இட்டிருப்பதும் இதை வலியுறுத்துகிறது. ரூபத்தை அநந்தமென்பது மிகவும் பெரிது என்னும் கருத்திலேயே என்பது சிலர் கருத்து, பதின்மூன்றும் ஶ்லோகத்தின் பா4ஷ்யத்தில் 'அநந்தாயாம விஸ்தாரே' என்று அருளியிருப்பதும் இதே கருத்தை உடையது. எங்கும் வ்யாபித்திருந்தபோதிலும் எம்பெருமானுடைய திருமேனி தனது ஶக்தியாலே எங்கும் தடைபடாமலிருப்பதும் பொருத்தமே. அணிமா முதலான எட்டுவிதமான ஸித்3தி4களைப் பெற்ற யோகி3களும், தடையற எங்கும் ஸஞ்சரிப்பதைக் காண்கிறோம். ஆகையால் அப்ராக்ருதமான தி3வ்யமங்க3ள விக்3ரஹத்துக்கு அஸ்த்ரபூ4ஷணாத்4யாயத்தில் சொன்னபடி ப்ரக்ருதி முதலான உலகனைத்துக்கும் ஆஶ்ரயமாயிருப்பதில் பொருந்தாமையில்லை. இப்படி எங்கும் பரவி நிற்கும் தி3வ்யமங்க3ளவிக்3ரஹத்தையே 'அநந்தம்' எனும் பத3ம் குறிக்கையாலே அஸ்த்ரபூ4ஷண வடிவில் திருமேனி அனைத்துக்கும் ஆஶ்ரயமாயிருக்கிறது என்று இங்கு கூறப்படுகிறது என்று சங்கிக்கவும் இடமில்லை. பதின்மூன்றுவது ஶ்லோகத்தில் 'தே3வதே3வஸ்ய ஶரீரம்' என்பதை வ்யாக்2யானம் செய்யும்போது 'அநந்தாயாம விஸ்தாரே' முதலான ஶரீர விஶேஷணங்களை பா4ஷ்யகாரர் இட்டிருப்பதிலிருந்து இது விளங்குகிறது. வடபத்ரஶாயி விக்3ரஹம் போலே அக4டிதக4டநா ஶக்தியினால் மிகச் சிறியவடிவில் ஸூக்ஷ்மமாக எல்லாவுலகையும் அடக்கிநிற்கை இங்கு கூறப்படுகிறது என்பதும் பொருந்தாது. இங்கு அப்படிச் சொல்லவில்லையாகையாலும் 'அநந்தம்' என்று மிகப் பெரியவடிவாகவே இங்கு படித்திருக்கையாலும் இது தெளிவு. ஆகையால் திருமேனி தேஶகாலங்களால் அளவுபடாதது என்று கூறுவதே பொருத்தமான பொருளாகும். கீ3தாபா4ஷ்யத்தின் ப்ரவேஶத்திலேயே விக்3ரஹத்துக்கு 'அசிந்த்ய' என்று விஶேஷணமிடுவதன்மூலம் பா4ஷ்யகாரர் இதை நிலைநிறுத்தியுள்ளார். (விஶ்வதோமுக2ம்) எல்லா தி3ஶைகளிலும் இருக்கும் முக2த்தையுடையதை. 'அனேக வக்த்ரநயநம்' என்று தொடங்கிய

॥भा॥ तामेव देवशब्दनिर्दिष्टां द्योतमानतां विशिनष्टि—
दिवि सूर्यसहस्रस्य भवेद्युगपदुत्थिता।
यदि भास्सदृशी सा स्याद्भासस्तस्य महात्मनः॥ १२॥

12. தி$_{3}$வி ஸூர்யஸஹஸ்ரஸ்ய ப$_{4}$வேத்$_{3}$யுக$_{3}$பது$_{3}$த்தி$_{2}$தா।
யதி$_{3}$ ப$_{4}$ாஸ்ஸத்$_{3}$ருஶீ ஸா ஸ்யாத்$_{3}$ப$_{4}$ாஸஸ்தஸ்ய மஹாத்மந:॥

ஸூர்யஸஹஸ்ரஸ்ய ப$_{4}$ா: — ஆயிரம் ஸூர்யர்களின் ஒளி, **தி$_{3}$வி** — ஆகாயத்தில், **யுக$_{3}$பத்** — ஒரே ஸமயத்தில், **யதி$_{3}$ உத்தி$_{2}$தர ப$_{4}$வேத்** — தோன்றிற்றாகில், **ஸா** — அந்த ஒளி, **தஸ்ய மஹாத்மந: ப$_{4}$ாஸ:** — அந்த மஹாபுருஷனுடைய ஒளிக்கு, **ஸத்$_{3}$ருஶீ ஸ்யாத்** — ஒத்ததாக இருக்கும்.

---

13. வானில் வளரிரவி யாயிரமா வந்தொருமித்
தான வொளியெழுவ தாமாகிற் — றனப்
பெரியோன் வடிவிற் பிறங்குமொளிக் கொக்கும்
பரிசா மெனலாம் பயின்று.

தையே முக$_{2}$பே$_{4}$தே$_{3}$ந 'விஶ்வதோமுக$_{2}$ம்' என்று விஶேஷிக்கிறார். "**விஶ்வதஶ்சக்ஷுருத விஶ்வதோமுக$_{2}$:**" என்னும் தைத்திரீய நாராயணவல்லீ மந்த்ரத்தில் எல்லாவிடத்திலும் முக$_{2}$ம் கண்கள் ஆகியவற்றை உடையவன்போல் கார்யம் செய்பவன் என்று பொருள் கொள்வதுபோல் இங்கும் பொருள்கொள்வது பொருத்தமல்ல; இங்கு விக்$_{3}$ரஹத்தை நேரே சொல்லும் ப்ரகரணமாகையால். எல்லாவிடத்திலும் முக$_{2}$முடையவன் என்று சிலர் உரையிட்டார்கள். கால்கை முதலான இடத்தில் முக$_{2}$மில்லையாகையால் இப்பொருளும் பொருந்தாது. இங்கு ப$_{4}$ாஷ்யத்தில் பாட$_{2}$க்ரமத்தை அநாத$_{3}$ரித்து தெளிவில்லாத 'தே$_{3}$வம், அநந்தம், விஶ்வதோமுக$_{2}$ம்' என்னும் பதங்களுக்கு வ்யாக்$_{2}$யானம் செய்து பிறகு தெளிவான வஸ்த்ரம் மாலை முதலானவை காட்டப்பட்டது. மேலும் 'தே$_{3}$வம் அநந்தம்' முதலானவை ஸ்வரூப நிரூபக த$_{4}$ர்மங்கள்; மாலை முதலானவை திருமேனியில் தனியாகச் சாத்தப்படும் த்$_{3}$ரவ்யங்கள். இதனாலும் பாட$_{2}$க்ரமத்தை மாற்றிப் பொருள்கொள்ளப்பட்டது. அதிலும் 'அம்ப$_{3}$ர' என்று அந்தரங்க$_{3}$மான வஸ்த்ரத்தை முதலில் சொல்லி, அடுத்தபடி மாலையையும், அடுத்தபடி ஆப$_{4}$ரணங்களையும், அடுத்தபடி ஆயுத$_{4}$ங்களையும் அந்தரங்க$_{3}$ பஹிரங்க$_{3}$க்ரமத்தையொட்டி நிர்தே$_{3}$ஶிக்கப்பட்டது. 10,11.

॥ भा ॥ तेजसोऽपरिमितत्वदर्शनार्थमिदम्; अक्षयतेजस्स्वरूपमित्यर्थः ॥ १२ ॥

तत्रैकस्थं जगत्कृत्स्नं प्रविभक्तमनेकधा।
अपश्यद्देवदेवस्य शरीरे पाण्डवस्तदा॥ १३॥

13. **தத்ரைகஸ்த₂ம் ஜக₃த்க்ருத்ஸ்நம் ப்ரவிப₄க்தமநேகத₄ா।
அபஶ்யத்₃தே₃வதே₃வஸ்ய ஶரீரே பாண்டவஸ்தத₃ா॥**

வானில் வளர் இரவி—ஆகாயத்தில் வளர்ந்து வரும் ஸூர்யர்கள், **ஆயிரமா வந்து**—ஆயிரக்கணக்கில் வந்து, **ஒருமித்து ஆன ஒளி எழுவதாமாகில் தான்**—ஒரே ஸமயத்தில் அவற்றின் ஒளி எழுவதாயிருந்தால், **அப்பெரியோன் வடிவில்**—அம்மஹாபுருஷனின் திருமேனியில், **பயின்று பிறங்கும் ஒளிக்கு**—பொருந்தி பிரகாசிக்கும் ஒளிக்கு, **ஒக்கும் பரிசாம் எனலாம்**—ஒப்பான பெருமையுடையது என்று கூறலாம்.

---

12. முன் ஸ்லோகத்தில் "தேவன்" என்னும் பத₃த்தால் காட்டப்பட்ட திருமேனியின் ஒளியை இந்த ஸ்லோகத்தில் விவரிக்கிறான். அதாவது அந்த ஸ்லோகத்தில் குறிப்பிடப்பட்ட ஒளி ஒப்பற்றது என்று இங்கு விசேஷிக்கிறான். (ஸூர்யஸஹஸ்ரஸ்ய ப₄ா: தி₃வி யதி₃ யுக₃பது₃த்தி₂தா ப₄வேத்) ஆயிரம் ஸூர்யர்களுடைய ஒளி ஆகாயத்தில் ஒரே ஸமயம் கிளர்ந்தெழுமாகில். இங்கு 'ஸஹஸ்ரம்' என்பது ஆயிரம் என்னும் எண்ணிக்கையைக் குறிப்பதல்ல. கணக்கற்றது என்னும் பொருளுடையது. ஆக, அவ்வொளி ஒப்பற்றது என்று காட்டப்படுகிறது. (ஸா தஸ்ய மஹாத்மந: ப₄ாஸ: ஸத்₃ருஶீ ஸ்யாத்) அந்த ஒளி அந்த மஹாபுருஷனுடைய ஒளிக்கு ஸமானமானதாகும். இதிலிருந்து என்றும் குறையாத ஒப்பற்ற ஒளியுடையது விஶ்வரூபம் என்று காட்டப்படுகிறது. "இருநாயிரமிரம் மலர்ந்தன்ன" [திருவாசிரியம் 5] "கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடியன்" [பெரியாழ்திரு 4-1-1] "சோதிவெள்ளத்தினுள்ளே எழுவதோருரு" [திருவாய் 5-5-10] என்று அருளிச்செயல்களும் "நீலதோயத₃ மத்₄யஸ்த₂ா வித்யுல்லேகே₂வ ப₄ாஸ்வரா" [தை-நா 11] [நீளமேக₃த்தை நடுவில் கொண்ட மின்னல்கொடிபோல் ஒளிவிடுவது] "ப₄ாரூப:" [ ] [ஒளிமயமாயிருப்பவன் பரமாத்மா] முதலான உபநிஷத்₃வாக்யங்களும் அறுதியிட்டன. 12.

॥ भा ॥ तत्रानन्तायामविस्तारे, अनन्तबाहूदरवक्त्रनेत्रे, अपरिमिततेजस्के, अपरिमितदिव्यायुधोपेते, स्वोचितापरिमितदिव्यभूषणे,

---

தத்ர தே₃வ தே₃வஸ்ய ஶரீரே—தே₃வதே₃வனுடைய அந்தத் திருமேனியில், **அநேகதா₄ ப்ரவிப₄க்தம்**—பல வகையாகப் பிரிவுபட்ட, **க்ருத்ஸ்நம் ஜக₃த்**—உலகு அனைத்தையும், **ஏகஸ்த₂ம்** — ஒரு பகுதியில் இருப்பதாக, **பாண்ட₃வ:**—அர்ஜுனன், **தத₃ா**—அப்போது, **அபஶ்யத்**—பார்த்தான்.

---

14. அவ்விடத்தி லப்பொழுது பார்த்த னனைத்துலகு
மெவ்வுறுப்பும் வேறு யிருக்கின்ற — விவ்வகையே
தேவதே வன்றன் றிருவுருவி லோரிடத்தே
யாவதெனக் கண்டா னவன்.

அவ்விடத்தில் தேவதேவன் தன் திருவுருவில் — அவ்விடத்தில் காட்சியளித்த தே₃வதே₃வனுடைய திருமேனியில், **எவ்வுறுப்பும் வேருயிருக்கின்ற இவ்வகையே**—ஒவ்வொரு அவயவமும் வெவ்வேருகப் பிரிந்திருக்கின்ற இம்முறையில், **உலகு அனைத்தும்**—எல்லா உலகத்தையும், **ஓரிடத்தே ஆவது என**—ஒரு பகுதியிலிருப்பதாக, **பார்த்தன் அவன்**—(தி₃வ்யமான கண்ணைப்பெற்ற) அந்த அர்ஜுனன், **அப்பொழுது கண்டான்**—அப்பொழுதே பார்த்தான்.

---

13. தி₃வ்யமான கண்ணைப்பெற்ற அர்ஜுனன் எம்பெருமானுடைய திருமேனியின் ஒரு பகுதியில் உலகனைத்தையும் பார்த்தான் என்கிறது. (தத்ர தே₃வதே₃வஸ்ய ஶரீரே) அங்கு காட்சியளித்த தே₃வதே₃வனுடைய திருமேனியில். (தே₃வதே₃வஸ்ய) "**தம் தே₃வதாநாம் பரமம் ச தை₃வதம்**" [ஶ்வே 6] [தேவர்கள் அனைவருக்கும் மேலான தே₃வதையாயிருக்கும் அப்பரமபுருஷனை] என்று ஶ்வேதாஶ்வதர உபநிஷத்தில் காட்டப்பட்ட தே₃வதே₃வன் இவனே என உணர்த்துகிருன். "மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவாவோ" [திருவாய் 8-1-5] என்று நம்மாழ்வாரும் "தேவாதி தேவனை" [திருப்பாவை-8] என்று ஆண்டாளும் இதை விவரித்

दिव्यमाल्याम्बरधरे, दिव्यगन्धानुलेपने, अनन्ताश्चर्यमये, देवदेवस्य दिव्ये शरीरे अनेकधा प्रविभक्तं—ब्रह्मादिविविधविचित्रदेवतिर्यङ्मनुष्यस्थावरादिभोक्तृवर्गपृथिव्यन्तरिक्षस्वर्गपातालातलवितलसुतलादिभोगस्थान-

---

தார்கள். 'தே$_3$வதே$_3$வனின் திருமேனி' என்றதால்– இத்திருமேனியானது அளவற்ற பரப்பையுடையதென்றும், அளவற்ற கைகள் வயிறுகள் முகங்கள் கண்கள் ஆகியவற்றையுடையது என்றும், அளவற்ற தி$_3$வ்யாயுத$_4$ங்களையுடையதென்றும், ஸர்வலோக சக்ரவர்த்தியான தனக்கு உசிதமான கணக்கற்ற தி$_3$வ்யாப$_4$ரணங்களையுடையதென்றும், அப்ராக்ருதமான மாலைகளையும் வஸ்த்ரத்தையும் த$_4$ரித்ததென்றும், அப்ராக்ருதமான நறுமணத்தையுடைய சந்த$_3$னம் முதலானவற்றால் பூசப்பட்டதென்றும், அளவற்ற ஆச்சர்யத்தை உடையதென்றும் முன்பின் ச்லோகங்களில் இத்திருமேனிக்குச் சொல்லப்பட்ட பெருமைகள் இங்கும் உணர்த்தப்படுகின்றன. "ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்" என்று புருஷஸூக்தம் முதலான வேத$_3$ப$_4$ாக$_3$ங்களில் இவனுக்கு நிலைநாட்டப் பெற்ற இப்பெருமைகளை ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்கள் பலவிடங்களில் உபப்$_3$ரும்ஹணம் செய்தன. "தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க்கண்களாயிரத்தாய் தாள்களாயிரத்தாய்" [திருவாய்8-1-10] "கண்கள் சிவந்து பெரியவாய் வாயும் சிவந்து கனிந்து. உள்ளே வெண்பல் இலகு சுடரிலகுவிலகு மகரகுண்டலத்தன், கொண்டல் வண்ணன் சுடர்முடியன் நான்குதோளன் குனிசார்ங்கன், ஒண்சங் கதை வாளாழியான் ஒருவன்" [திருவாய் 8-8-1] "உடையார்ந்த வாடையன் கண்டிகையன் உடை நாணினன், புடையார் பொன் னூலினன் பொன்முடியன் மற்றும் பல்கலன், நடையாவுடைத் திருநாரணன்" [திருவாய் 3-7-4] முதலான பாசுரங்களில் ஆழ்வார் களும் இவ்வர்த்த$_2$த்தை அநுஸந்தித்திட்டனர். (அநேகத$_4$ா ப்ரவிப$_4$க்தம் க்ருத்ஸ்நம் ஜக$_3$த்) பலவகையாகப் பிரிவுபட்டிருக்கும் உலகனைத்தும்; இங்கு 'பலவகை' என்றது போ$_4$க்தாக்களையும், போ$_4$க$_3$ஸ்த$_2$ானங் களையும், போ$_4$க்$_3$யங்களையும், போ$_4$கோ$_3$பகரணங்களையும் நினைத்துக் கூறியதாகும். பிரமன் முதலாக, புல்லெறும்பு ஈறாக போ$_4$க்தாக்கள் தே$_3$வர், மனிதர், திர்யக், ஸ்த$_2$ாவரம் என்று நான்குவகைப்பட்டு, ஒவ்வொரு வகையிலும் கணக்கற்ற பிரிவுகள் உள்ளவர்களாய், அதி விசித்ரமானவர்களாயிருப்பர். அவ்வண்ணமே போ$_4$க$_3$ஸ்த$_2$ானங் களும் இவ்வுலகமாகிற பூ$_4$மியும், மேலுலகங்களாகிற அந்தரிக்ஷம் ஸ்வர்க்க$_3$ம் முதலானவையும்,கீழுலகங்களாகிற பாதாளம், அதலம், வித

भोग्यभोगोपकरणभेदभिन्नं प्रकृतिपुरुषात्मकं कृत्स्नं जगत् * अहं सर्वस्य प्रभवो मत्तस्सर्वं प्रवर्तते (१०. ८) * हन्त ते कथयिष्यामि विभूती-रात्मनश्शुभाः (१९) * अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थितः (२०) * आदित्यानामहं विष्णुः (२१) इत्यादिना * न तदस्ति विना यत्स्यान्मया भूतं चराचरम् (३९) * विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत् (४२) इत्यन्तेनोदितम्, एकस्थम्—एकदेशस्थम्; पाण्डवो भगवत्प्रसादलब्धतद्दर्शनानुगुणदिव्यचक्षुरपश्यत् ॥ १३ ॥

லம், ஸ்தலம் முதலானவையுமாகப் பலவகைப்பட்டிருக்கின்றன. அவ்வண்ணமே போ$_4$க்தாக்களால் அநுப$_4$விக்கப்படும் போ$_4$க்$_3$யங்களும், அவற்றை அவர்கள் அநுப$_4$விப்பதற்குறுப்பான போ$_4$கோ$_3$பகரணங்களும் பலவகைப்பட்டிருக்கும். "க்ருத்ஸ்நம் ஜக$_3$த்" (உலகனைத்தும்) என்றது ப்ரக்ருதியும் அதன் கார்யங்களாகிற அசேதனப்பொருள்களும், ஜீவஸமஷ்டியும் அடங்கிய லீலாவிபூ$_4$தி முழுவதையும் குறிக்கும். "அஹம் ஸர்வஸ்ய ப்ரப$_4$வோ மத்தஸ் ஸர்வம் ப்ரவர்த்ததே" [10-8] [நான் அனைத்துலகுக்கும் காரணம்; என்னாலேயே எல்லாம் செயல்படுகிறது] "ஹந்த தே கத$_2$யிஷ்யாமி விபூ$_4$தீராத்மநஶ்ஶுப$_4$ா:" [10-19] [என்னுடைய மங்க$_3$ளமான செல்வங்களை உனக்குக் கூறுகிறேன்] "அஹமாத்மா கு$_3$டா$_3$கேஶ ஸர்வபூ$_4$தாஶயஸ்தி$_2$த:" [10-20] [அர்ஜுன! எல்லா ஜீவராசிகளின் ஹ்ருத$_3$யத்தில் வீற்றிருக்கும் நானே அவற்றுக்கு அந்தர்யாமியாகவும் இருக்கிறேன்] "ஆதி$_3$த்யாநாமஹம் விஷ்ணு:" [10-21] [பன்னிரு ஆதி$_3$த்யர்களுக்குள் நானே விஷ்ணுவாகிறேன்] என்று தொடங்கி, "ந தத$_3$ஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூ$_4$தம் சராசரம்" [10.39] [அசைவனவும் அசையாதனவுமான எல்லாப்பொருள்களிலும் என்னைவிட்டுப் பிரிந்திருப்பது எதுவுமில்லை] "விஷ்டப்$_4$யாஹமித$_3$ம் க்ருத்ஸ்நம் ஏகாம்ஶேந ஸ்தி$_2$தோ ஜக$_3$த்" [10-42] [நான் உலகனைத்தையும் எனது ஓரம்சத்தாலே த$_4$ரித்துநிற்கிறேன்] என்பதீறாகச் சொல்லப்பட்ட உலகனைத்தும் இங்கு "ஜக$_3$த் க்ருத்ஸ்நம்" என்று குறிக்கப்படுகிறது. (ஏகஸ்த$_2$ம் தத$_3$ா அபஶ்யத்) அத்திருமேனியின் ஒரு சிறுபகுதியில் அடங்கியிருப்பதாக அப்போது கண்டான். கண்டவன் யாரெனில்—(பாண்ட$_3$வ:) பாண்டு$_3$ புத்திரனான அர்ஜுனன் கண்டான். உறவையும் அன்பையுமுடையவனாகையாலே கண்ணனாலே அருளப்பெற்ற தி$_3$வ்யமான கண்ணையுடைய அர்ஜுனன் கண்டான் என்று கருத்து.13.

ततस्स विस्मयाविष्टो हृष्टरोमा धनञ्जयः।
प्रणम्य शिरसा देवं कृताञ्जलिरभाषत॥ १४॥

14. ததஸ்ஸ விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா த₄நஞ்ஜய:
ப்ரணம்ய ஶிரஸா தே₃வம் க்ருதாஞ்ஜலிரப₄ாஷத ॥

தத:-அதற்குப்பின், **ஸ: த₄நஞ்ஜய:**-அந்த அர்ஜுனன், **விஸ்மயாவிஷ்ட:** —(முன் ஶ்லோகங்களில் சொன்னபடி கண்ணனின் திருமேனியில் உலகனைத்தையும் கண்டதனால்) வியப்பு நிரம்பப்பெற்றவனாய், **ஹ்ருஷ்டரோமா**—மயிர்க் கூச்செறியப் பெற்றவனாய், **தே₃வம்**—(விஶ்வரூபம் காட்டிய) கண்ணனை, **ஶிரஸா ப்ரணம்ய**—தலையாலே வணங்கி, **க்ருதாஞ்ஜலி:**—கைகூப்பியவனாய், **அப₄ாஷத**—பின்வருமாறு கூறினான்.

---

15. தாராரு மந்தத் தனஞ்சயன்றான் சாலவியந்
தேரா ருடன்மயிர்க்கோ ளெய்தியே—சீரார்
முடியாற் பணிந்திறையை முன்றொழுது நின்றிப்
படியா லுரைசெய்தான் பார்த்து.

தார் ஆரும் அந்த தனஞ்சயன் தான்—(அரசர்க்குரிய) மாலையை த₄ரித்திருந்த அந்த அர்ஜுனன், **சால வியந்து**—மிகவும் வியப்புற்று, **ஏரார் உடல் மயிர்க்கோள் எய்தியே**—(தனது) சிறந்த உடலில் மயிர்க்கூச்செறியப்பெற்றவனாய், **இறையை**—இறைவனான கண்ணனை, **சீரார் முடியால் பணிந்து** — பெருமைமிக்க முடிதரித்த தனது தலையாலே வணங்கி, **முன் தொழுது நின்று**—(கண்ணனுக்கு) முன்னால் கைகூப்பி நின்று, **பார்த்து** — அக்கண்ணனைக் குறித்து, **இப்படியால் உரை செய்தான்**—இவ்வண்ணமாகப் பேசத் தொடங்கினான்.

---

14. முற்கூறியபடி விஶ்வரூபம் கண்ட அர்ஜுனன் வியப்புற்றவனாய், மயிர்க்கூச்செறியப்பெற்றவனாய், கண்ணனைத் தலையாலே வணங்கிக் கைகூப்பிநின்று பேசத்தொடங்கினான் என்கிறான் ஸஞ்ஜயன். (தத:) முற்கூறியபடி விஶ்வரூபத்தைக் கண்டபின்பு. (ஸ: த₄நஞ்

॥ भा ॥ ततो धनंजयो महाश्चर्यस्य कृत्स्नस्य जगतः स्वदेहैकदेशेनाश्रयभूतं कृत्स्नस्य प्रवर्तयितारं चाश्चर्यतमानन्तज्ञानादिकल्याणगुणगणं देवं दृष्ट्वा विस्मयाविष्टो हृष्टरोमा शिरसा दण्डवत्प्रणम्य कृताञ्जलिरभाषत ॥ १४ ॥

अर्जुन उवाच—

पश्यामि देवांस्तव देव देहे सर्वांस्तथा भूतविशेषसङ्घान् ।
ब्रह्माणमीशं कमलासनस्थमृषींश्च सर्वानुरगांश्च दीप्तान् [दिव्यान्] ॥१५॥

15. **பஶ்யாமி தேவாம்ஸ்தவ தே$_{3}$வ தே$_{3}$ஹே**
ஸர்வாம்ஸ்தத$_{2}$ா பூ$_{4}$தவிஶேஷஸங்க$_{4}$ாந் ।
ப்$_{3}$ரஹ்மாணமீஶம் கமலாஸநஸ்த$_{2}$ம்ருஷீம்ஶ்ச
ஸர்வாநுரக$_{3}$ாம்ஶ்ச தீ$_{3}$ப்தாந் [தி$_{3}$வ்யாந்] ॥

அர்ஜுன உவாச—அர்ஜுனன் (பின்வருமாறு) கூறினன்:— **தே$_{3}$வ** — தே$_{3}$வனே ! **தவ தே$_{3}$ஹே** — உனது தே$_{3}$ஹத்தில், **ஸர்வாந் தே$_{3}$வாந் பஶ்யாமி**—எல்லா தே$_{3}$வர்களையும் காண்கிறேன். **தத$_{2}$ா**— அவ்வண்ணமே, (**ஸர்**

ஜய:) அந்த த$_{4}$நஞ்ஜயன். இந்த விஶ்வரூபத்தைக் கண்டபின்பே அர்ஜுனனுக்குள்ள 'த$_{4}$நஞ்ஜயன்' (செல்வங்கள் அனைத்தையும் ஜயித்தவன்) என்னும் பெயர் நிறைவுபெற்றது என்று கருத்து. (விஸ்மயாவிஷ்ட:) எல்லா உலகும் தனது தே$_{3}$ஹத்தின் ஒரு பகுதியிலே அடக்கியவனாய், அனைத்தையும் செயல்படவைப்பவனாய், அத்யாஶ்சர்யமான அளவற்ற ஜ்ஞானம், ஶக்தி முதலான கல்யாண கு$_{3}$ணங்களையுடையவனான அந்த தே$_{3}$வனைக்கண்டு வியப்புற்றவனாய். (ஹ்ருஷ்டரோமா) மயிர்க்கூச்செறியப்பெற்றவனாய்; பெருவியப்பின் விளைவு இது. (தே$_{3}$வம் ஶிரஸா ப்ரணம்ய) உலகனைத்துக்கும் ஸ்வாமியான அப்பெருமானை, தன் ஸ்வரூபத்துக்குப் பொருத்தமாகத் தரையிலே தலைபடும்படி தடிபோலே விழுந்துவணங்கி. (க்ருதாஞ்ஜலி:) மறுபடியும் எழுந்தவுடன் கண்ணனுக்கு முன்னே கைகூப்பிநின்று. (அப$_{4}$ாஷத) கண்ணனைத் துதித்தும், விஶ்வரூபத்தை வர்ணித்தும் பின்வருமாறு (51-வது ஶ்லோகம் வரையில்) பேசத்தொடங்கினன் என்கிறன் ஸஞ்ஜயன். 14.

अनेकबाहूदरवक्त्रनेत्रं पश्यामि त्वां सर्वतोऽनन्तरूपम्।
नान्तं न मध्यं न पुनस्तवादिं पश्यामि विश्वेश्वर विश्वरूप ॥ १६ ॥

16. அநேகபா₃ஹூத₃ரவக்த்ரநேத்ரம்
பஶ்யாமி த்வாம் ஸர்வதோऽநந்தரூபம் ।
நாந்தம் ந மத்₄யம் ந புநஸ்தவாதி₃ம்
பஶ்யாமி விஶ்வேஶ்வர விஶ்வரூப ॥

அநேகபா₃ஹூத₃ர வக்த்ரநேத்ரம்-கணக்கற்ற கைகள், வயிறுகள், வாய்கள், கண்கள் ஆகியவற்றை உடைய வனாய், **அநந்த ரூபம்** — அளவற்ற உருவங்களையுடைய வனாய், **த்வாம்**—உன்னை, **ஸர்வத:**—எல்லாப் புறத்திலும், **பஶ்யாமி**—காண்கிறேன். **விஶ்வேஶ்வர**—அனைத்தையும் நியமிப்பவனே! **விஶ்வரூப** — அனைத்தையும் ஶரீரமாகக் கொண்டவனே! (நீ எல்லையற்றவனாகையாலே), **தவ**— உனக்கு, **ந அந்தம் பஶ்யாமி**—முடிவையும் காண்கின்றி லேன். **ந மத்₄யம் (பஶ்யாமி)**—நடுவையும் காண்கின்றி லேன். **ந புந: ஆதி₃ம் (பஶ்யாமி)**—தொடக்கத்தையும் காண்கின்றிலேன்.

---

17. ஆன வனந்த வுருவா முனைத்தோள்க
ளூனு முகமுதர நான்காண்பன்—றூனார்ந்துன்
னந்தநடு வாதியுங் காணேனா னுங்கனைத்தின்
முந்தையிறை யெவ்வுருவா முற்று.

ஆன அனந்த உருவாம் உனை-எல்லாப்புறத்திலும் எல்லை யற்ற உருவத்தையுடைய உன்னை, **தோள்கள் நாநாமுகம் உதரம் நான் காண்பன்**—பல தோள்களையும், வாய்களையும், வயிறுகளையும் உடையவனாக நான்காண்கிறேன்; **அனைத்தின் முந்தை இறை!**—எல்லாவற்றுக்கும் ஆதி₃நியந்தாவாய், **எவ் வுருவா!**—அனைத்தையும் உருவாகக் கொண்டவனே! **தான் ஆர்ந்த உன்**—தான் எங்கும் நிறைந்திருக்கும் உன்னுடைய, **அந்தம் நடு ஆதியும்**-எல்லையையும், நடுவையும், தொடக்கத் தையும், **ஆங்கு**—அந்த விஶ்வரூபத்தில், **நான் முற்று காணேன்**—நான் முழுவதையும் காணவில்லை.

॥ भा ॥ अनेकबाहूदरवक्त्रनेत्रम् अनन्तरूपं त्वां सर्वतः पश्यामि; विश्वेश्वर — विश्वस्य नियन्तः, विश्वरूप — विश्वशरीर, यतस्त्वमनन्तः, अतस्तव नान्तं न मध्यं न पुनस्तवादिं च पश्यामि । १६ ॥

---

16. உன்னுடைய விஸ்வரூபத்தை எல்லாப் புறங்களிலும் காண்கிறேன் என்கிறான் அர்ஜுனன். (அநேகபா₃ஹூத₃ரவக்த்ர நேத்ரம்) பல கைகளையும், வயிறுகளையும், முக₂ங்களையும், கண்களையும் உடையவனாய். (அநந்தரூபம் த்வாம்) எல்லையற்ற உருவத்தை யுடைய உன்னை. (ஸர்வத: பஶ்யாமி) எல்லாப் புறங்களிலும் காண்கிறேன். "**ஸர்வத: அநந்தரூபம்**" (எல்லாப் புறங்களிலும் அளவற்ற உருவத்தையுடைய உன்னை) என்று அந்வயித்தால் "ஸர்வத:" என்னும் ஶப்₃த₃ம் பயனற்றதாகும். '**அநந்தரூபம்**' என்னும் பத₃த்தாலேயே எல்லாப்புறங்களிலும் உருவம் வியாபித்திருப்பது ஸித்₃தி₄க்குமன்றோ. ஆகையால் '**ஸர்வத: பஶ்யாமி**' என்று அந்வயித்துப் பொருள்கொள்ளப்பட்டது. அர்ஜுனன் தி₃வ்ய சக்ஷுஸ்ஸை அடைந்தவனாகையாலே, இப்பொருளே பொருத்தமாயுள்ளது. (விஶ்வேஶ்வர) உலகனைத்தையும் நியமிப்பவனே! (விஶ்வரூப) இப்படி உலகனைத்தையும் நியமிக்கையாலே உலகனைத்தையும் உருவமாகக் கொண்டவனே! வியாபித்து நியமிக்கப்படுவது ஶரீரமாகும்; வியாபித்து நியமிப்பவன் ஶரீரி (ஆத்மா) ஆவான். (தவ ந அந்தம் பஶ்யாமி, ந மத்₄யம் பஶ்யாமி, ந புந: ஆதி₃ம் பஶ்யாமி) நீ அநந்த ரூபனாய் விஸ்வரூபனாயிருக்கையாலே, உனக்கு முதல், நடு, முடிவு கிடையாதாகையாலே, அவற்றை நான் காணவில்லை. '**விஶ்வரூப**' என்று விளித்து, '**அநந்தரூபம்**' என்று விஶேஷிக்கையால் "உன்னுடைய ஆதி₃மத்₄யாந்தங்களைக் காணவில்லை" என்று இருந்தபோதிலும், 'அவை முயற்கொம்பு முதலானவற்றைப்போல் இல்லையாகையால் அவற்றை நான் காணவில்லை' என்றே பொருள் கொள்ளவேண்டும். தே₃ஶத்தாலும், காலத்தாலும், உனக்கு முதல் நடு முடிவுகள் இல்லை என்று தாத்பர்யம். முதலும் முடிவும் இருந்தால்தான் நடுவுண்டு. அவையில்லையாகையால் நடுவும் இல்லை என்று ஸித்₃தி₄க்கிறது. ஒரு திருமேனியில் பல வயிறு முதலானவை எப்படி இருக்கமுடியும்? என்னும் கேள்விக்கு 19-வது ஶ்லோக பா₄ஷ்ய வ்யாக்₂யானங்களில் பரிஹாரம் காணலாம். 16.

किरीटिनं गदिनं चक्रिणं च तेजोराशिं सर्वतो दीप्तिमन्तम्।
पश्यामि त्वा दुर्निरीक्ष्यं समन्ताद्दीप्तानलार्कद्युतिमप्रमेयम्॥ १७॥

17. கிரீடிநம் க₃தி₃நம் சக்ரிணம் ச
தேஜோராஶிம் ஸர்வதோ தீ₃ப்திமந்தம்।
பஶ்யாமி த்வா து₃ர்நிரீக்ஷம்
ஸமந்தாத்₃தீ₃ப்தாநலார்க்கத்₃யுதிமப்ரமேயம்॥

தேஜோராஶிம் — பேரொளிக்குவியலாயிருப்பவனாய், **ஸர்வத: தீ₃ப்திமந்தம்**—எல்லாப் புறத்திலும் ஒளியுடையவனாய், **ஸமந்தாத் து₃ர்நிரீக்ஷம்**—ஒவ்வொரு அவயவமும் காண்பதற்கு அரியவனாய், **தீ₃ப்தாநலார்க்கத்₃யுதிம்** — கொழுந்துவிட்டெரியும் அக்₃னியைப்போலவும் ஸூர்யனைப் போலவும் கிரணங்களை உடையவனாய், **அப்ரமேயம்**— அளவிட்டு அறியமுடியாதவனான, **த்வா**—உன்னை, **கிரீடிநம்**—கிரீடத்தை உடையவனாகவும், **க₃தி₃நம்** – க₃தை₃யை உடையவனாகவும், **சக்ரிணம் ச** — ஸுத₃ர்ஶனசக்ரத்தை உடைய வனாகவும், **பஶ்யாமி** – காண்கிறேன்.

---

18. மிக்கவொளி ராசியாய் மீதெங்குந் தேசமர்ந்து
பக்கமுறக் காண்பரிதாய்ப் பார்ப்பனுன்—றொக்கவன
லர்க்கனொளி மிக்களவற் றாங்குமுடி நேமிகதை
யொற்கமற மேவுமுனை யுற்று.

மிக்க ஒளி ராசியாய்-பேரொளிச்குவியலாயிருப்பவனாய், **எங்கும் மீது தேசு அமர்ந்து**—எல்லாப்புறத்திலும் பேரொளியுடையவனாய், **பக்கம் உற காண்பு அரிதாய்**—ஒவ்வொரு அவயவமும் காண்பதற்கு அரியவனாய், **தொக்க அனல் அர்க்கன் ஒளிமிக்கு**—கொழுந்துவிட்டெரியும் அக்₃னியைப் போலவும் ஸூர்யனைப்போலவும் கிரணங்களையுடையவனாய், **அளவற்று** — அளவற்றவனாய் உள்ள, **உனை** — உன்னை, **ஆங்கு** — விஶ்வரூபம் காண்பதற்கு முன்போலவே, **முடி நேமி கதை ஒற்கம் அற மேவும் உனை** – கிரீடம், சக்ரம், க₃தை ஆகியவை குறைவறச் சேர்ந்திருக்கின்றவனாக, **நான்**— நான், **உற்று பார்ப்பன்**—நன்கு காண்கிறேன்.

॥ भा ॥ तेजोराशिं सर्वतो दीप्तिमन्तं समन्तात् दुर्निरीक्ष्यं दीप्तानलार्कद्युतिमप्रमेयं त्वां किरीटिनं गदिनं चक्रिणं च पश्यामि ॥ १७॥

---

17. விச்வரூபம் வேறொருவனுடையதோ என்று ஶங்கிக்க முடியாதபடி நாராயணனுக்கே அஸாத₄ாரணமான கிரீடம், க₃தை₃, ஸுத₃ர்ஶன சக்ரம் முதலானவற்றைக் காண்கையால், இவ்விச்வரூபம் திருமாலாகிற கண்ணனுடையதே என்று நிர்ணயிக்கிறான். இப்படிக் கூறுவதில் ஸ்வாரஸ்யம் இருக்கையால் "தேஜோராஶிம்......த்வா" என்று ஶ்லோகத்தின் பிற்பகுதியிலுள்ளவற்றை உத்₃தே₃ஶ்யமாகக் கொண்டு "கிரீடிநம் க₃தி₃நம் சக்ரிணம் ச பஶ்யாமி" என்று முற்பகுதியிலுள்ளது விதே₄யமாகக் கொள்ளப்படுகிறது. பிற்பகுதியில் முன்முன் பத₃ங்கள் முதலில் காணப்படும் ஸாமான்யாகாரத்தையும், பின்பின் பத₃ங்கள் பிறகு காணப்படும் விஶேஷாகாரத்தையும் காட்டுகின்றன. (தேஜோராஶிம்) பேரொளிக்குவியலாயிருப்பவனை. இதனால் முதன்முதலில் காணப்படும் த₄ர்மிஸ்வரூபம் சொல்லப்படுகிறது. (ஸர்வதோ தீ₃ப்திமந்தம்) எல்லாப்புறங்களிலும் பேரொளியையுடையவனை. இது த₄ர்மபூ₄தமான ஒளியைக் காட்டுகிறது. "ந தத்ர ஸூர்யோ பா₄தி ந சந்த்₃ரதாரகம் நேமா வித்₃யுதோ பா₄ந்தி குதோऽயமக்₃நி: । தமேவ பா₄ந்தமநுபா₄தி ஸர்வம் தஸ்ய பா₄ஸா ஸர்வமித₃ம் விபா₄தி ॥" [கட₂ 5-15] [அப்பரம்பொருளின் முன்னே ஸூர்யன், சந்த்₃ரன், நக்ஷத்ரங்கள், மின்னல்கள் ஆகியவை ஒளிவீச மாட்டா. அக்₃னியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஒளிவிடும் அப்பரம்பொருளைப் பின்பற்றியே இவ்வனைத்தும் ஒளிவிடுகின்றன. அவனுடைய ஒளியாலேயே இவையெல்லாம் ஒளிவீசுகின்றன] என்று உபநிஷத்திலும் முழங்கப்பட்டதன்றோ. "சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு" [திருவாய் 5.5-10] என்று இதை ஆழ்வாரும் அருளிச்செய்தார். (ஸமந்தாத் து₃ர்நிரீக்ஷம்) விச்வரூபத்தின் ஒவ்வொரு அவயவமும் அளவிட்டுக் காணவொண்ணாததாயிருக்கும் பெருமையைக் காட்டுகிறது. இதற்குக் காரணத்தைக் காட்டுகிறார் மேலே—(தீ₃ப்தாநலார்க்கத்₃யுதிம்) கொழுந்துவிட்டெரியும் அக்₃னி ஸூர்யர்களுடையது போன்ற கிரணங்களையுடையவனை. 'த்₃யுதி' ஶப்₃த₃ம் கிரணரூபமான ஒளியைக் குறிக்கிறதாகையாலே பொதுவான ஒளியைக் காட்டும் 'தீ₃ப்திமந்தம்' என்னும் பத₃த்தோடு புநருக்தியில்லை. அன்றிக்கே, 'ஸர்வதோ தீ₃ப்திமந்தம்' என்று இவனுடைய ஒளி எல்லாவிடத்திலும் பரவியிருப்பது என்பதையும், இங்கு மிகக் கடுமையாயிருப்பதால் காண அரியதாயுள்ளது என்ப

त्वमक्षरं परमं वेदितव्यं त्वमस्य विश्वस्य परं निधानम् ।
त्वमव्ययश्शाश्वतधर्मगोप्ता सनातनस्त्वं पुरुषो मतो मे ॥ १८ ॥

18. த்வமக்ஷரம் பரமம் வேதி3தவ்யம்
த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நித4ாநம்।
த்வமவ்யயஶ்ஶாஶ்வதத4ர்மகோ3ப்தா
ஸநாதநஸ்த்வம் புருஷோ மதோ மே ॥

தையும் காட்டுகையாலே புநருக்தி இல்லை என்றும் கொள்ளலாம். (அப்ரமேயம்) இக்காரணங்களாலே "இன்னவஸ்துவைப் போன்றது; இவ்வளவுபட்டது" என்று அளவிடவொண்ணாதவனை. (த்வா) உன்னை. இதுவரையில் ஸாமான்யமாகக் காணப்படும் ஆகாரங்களோடு கூடிய விஶ்வரூபம் விளக்கப்பட்டது. இனி இத்தகைய விஶ்வரூபத்தையுடைய எம்பெருமான் தனக்கேயுரிய கிரீடக3த3ா சக்ரங்களையுமுடையவனாயிருக்கிறான் என்று காட்டப்படுகிறது. (கிரீடிநம்) "ஆதி4ராஜ்யமதி4கம் பு4வநாநாம் ஈஶ! தே பிஶுநயந் கில மௌலி:" [வரத3-ஸ்த25] [உலகங்களுக்கெல்லாம் ஈஶனே! நீ உலகனைத்துக்கும் சக்ரவர்த்தி என்பதை உனது கிரீடமே காட்டித்தருகிறதன்றோ] "கிரீடம் ஶ்ரீரங்கேஶயிது: உபதா4ரீக்ருதபு4ஜ: விதி4ஶாதி4ஶத்வாத்3 கூ4டத இதி ஸம்ஸ்ப்ருஶ்ய வத3தி" [ர-ஸ்த 1-110] [திருவரங்க3த்தில் பள்ளிகொள்ளும் பெருமான் தலைக்கு அணையாக வைத்துக்கொண்டிருக்கும் வலது திருக்கை கிரீடத்தைத் தொட்டுக்காட்டி "பிரமனுக்கும், ஶிவனுக்கும் தலைவனாயிருக்கையால் இது தகும்" என்று கூறுகிறது] என்று இவனே ஸர்வலோக சக்ரவர்த்தி என்று காட்டித்தரும் கிரீடத்தையுடையவனாய்; (க3தி3நம்) கௌமோத3கி என்னும் க3தை3யை உடையவனாய்; (சக்ரிணம் ச பஶ்யாமி) ஸுத3ர்சன சக்ரத்தையுமுடையவனாய்க் காண்கிறேன். கிரீடம் எல்லா ஆப4ரணங்களுக்கும், க3த3ாசக்ரங்கள் மற்ற தி3வ்யாயுத4ங்களுக்கும் உபலக்ஷணம். "கிரீடம் என்றும் கரண்டி3கா என்றும் மகுடம் இருவகைப்படும். அதில் கிரீடம் சக்ரவர்த்திகளாலேயே த4ரிக்கத்தகுந்தது" என்று தாத்பர்யசந்த்3ரிகை. ஆக, 'பேரொளிக்குவியலாய், எல்லாப்புறங்களிலும் பேரொளியையுடையவனாய், அவயவம் ஒவ்வொன்றும் காணவரியவனாய், கடுமையான கிரணங்களையுடையவனாய், அளவிட்டறியவொண்ணாதவனான உன்னை ஏற்கனவே நான் உனக்கேயுரியவையாகக் கண்ட கிரீடம், க3தை3, சக்ரம் ஆகியவற்றோடு காண்கையாலே இந்த விஶ்வரூபம் உன்னுடையதே' என்று அர்ஜுனன் நிர்ணயித்தானாயிற்று. 17.

வேதி₃தவ்யம் பரமம் அக்ஷரம் — (உபநிஷத்துக்களில்) அறியத்தக்கதான மேலான அக்ஷரமாக ஓதப்படுபவன், **த்வம்**—நீயே; **அஸ்ய விஶ்வஸ்ய** — இவ்வுலகிற்கு, **பரம் நித₄ாநம்**—மேலான ஆத₄ாரமாயிருப்பவன், **த்வம்**—நீயே; **அவ்யய:**—(எவ்வகையிலும்) அழிவற்றவன், **த்வம்**—நீயே; **ஶாஶ்வத த₄ர்ம கோ₃ப்தா**—நித்யமான வைதி₃க த₄ர்மத்துக்கு ரக்ஷகன், **த்வம்**—நீயே; **ஸநாதந: புருஷ:**— (உபநிஷத்துக்களில்) பழையோனான புருஷனாக ஓதப்படுபவன், **த்வம்**—நீயே; **மே மத:** — (இவ்வண்ணமாக நீ) என்னால் அறியப்பட்டாய்.

---

19. ஆய்வறிவு சேர்பரமா மக்கரநீ யாங்கனைத்துஞ்
சாய்வறவே மேலாய்த் தரிப்பவன்நீ— வீய்வறவே
நிற்பவன்நீ நிற்குமறங் காப்பான்நீ நித்தனு
நற்புருட னீயறிவ னான்.

ஆய்வறிவு சேர் பரமாம் அக்கரம் —(உபநிஷத்துக்களில்) அறியத்தக்கதான மேலான அக்ஷரமாக ஓதப்படுபவன், **நீ**—நீயே; **ஆங்கு அனைத்தும்**—இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருளையும், **சாய்வு அறவே மேலாய் தரிப்பவன்**—ஸ்வரூப நாசம் இல்லாதபடி மேலான ஆத₄ாரமாயிருப்பவன், **நீ**—நீயே; **வீய்வு அறவே நிற்பவன்** — (எவ்வகையிலும்) அழிவில்லாமல் நிற்பவன், **நீ**—நீயே; **நிற்கும் அறம் காப்பான்**—நித்யமான வைதி₃க த₄ர்மத்துக்கு ரக்ஷகன், **நீ**—நீயே; **நித்தனும் நறபுருடன்** — (உபநிஷத்துக்களில்) பழையோனான பரமபுருஷனாக ஓதப்படுபவன், **நீ**—நீயே; **நான் அறிவன்**—(இவ்வண்ணமாக) நான் அறிகிறேன்.

---

18. உபநிஷத்துக்களில் அக்ஷரம், வேதி₃தவ்யம், அவ்யயம், ஸநாதநபுருஷன் முதலான பற்பல பத₃ங்களால் குறிக்கப்படும் பரமபுருஷன் நீயே என்று நான் நேரே காண்கிறேன் என்கிறான் அர்ஜுனன். (வேதி₃தவ்யம் பரமம் அக்ஷரம் த்வம்) உபநிஷத்துக்களில்—அறியத்தக்கதான மேலான அக்ஷரமாக ஓதப்படுபவன் நீயே. முண்ட₃கோபநிஷத்தில் "**த்₃வே வித்₃யே வேதி₃தவ்யே**" [1-1-4]

॥भा॥ उपनिषत्सु *द्वे विद्ये वेदितव्ये (मु. १-१-४) इत्यादिषु वेदितव्यतया निर्दिष्टं परममक्षरं त्वमेव; अस्य विश्वस्य परं निधानम्—विश्वस्यास्य परमाधारभूतस्त्वमेव; त्वमव्ययः--व्ययरहितः;

[இரண்டு வித்3யைகள் அறியத்தக்கவை] என்று தொடங்கி, "அத2 பரா யயா தத3க்ஷரம் அதி4க3ம்யதே"[1-1-5] [மேலான வித்3யையான உபாஸனத்தால் அக்ஷரம் எனப்படும் பரம்பொருள் அடையப்படுகிறது] என்றும், நாராயணுநுவாகத்தில் "அக்ஷரம் பரமம் நாராயணம்" [தை-நா 11] [மேலான அக்ஷரமாயுள்ளவன் நாராயணனே] "மஹாஜ்ஞேயம் நாராயணம்" [தை-நா 11] [அறியத்தக்கவற்றில் மேலானவனுயிருப்பவன் நாராயணனே] என்றும் ஓதப்பட்டதன்றோ. (அஸ்ய விஶ்வஸ்ய பரம் நித4ாநம் த்வம்) இவ்வுலகிற்கு மேலான ஆத4ாரமாயிருப்பவன் நீயே. "நிதீ4யதே அஸ்மிந் இதி நித4ாநம்" [எதில் அனைத்தும் வைக்கப்பட்டிருக்கிறதோ அது நித4ாநம்] என்னும் வ்யுத்பத்தியாலே நித4ாநஶப்3த3ம் ஆத4ாரத்தைக் காட்டுகிறது. "ஆத4ாரபூ4தம் விஶ்வஸ்ய"[வி-பு1 2-5] [எல்லா அசேதனப்பொருளுக்கும் ஆத4ாரமாயிருப்பவன் ஜீவன்] முதலான பிரமாணங்களில் ஜீவனும் ஆத4ாரமாகக் கூறப்படுகையால் அவனுக்கும் ஆத4ாரமான இவன் "பரம் நித4ாநம்" என்னப்படுகிருன். "பூ4தமாத்ரா: ப்ரஜ்ஞாமாத்ராஸ்வர்ப்பிதா:, ப்ரஜ்ஞாமாதரா: ப்ராணே அர்ப்பிதா:" [கௌஷீதகி 3-2] [அசேதனப் பொருள்கள் அறிவுடைய ஜீவர்களால் தாங்கப்படுகின்றன; ஜீவர்கள் ப்ராணன் எனப்படும் பரமாத்மாவால் தாங்கப்படுகிருர்கள்] என்று இவ்விஷயம் ஓதப்பட்டதன்ருே. "விஷ்ணுஸம்ஜ்ஞம் ஸர்வாத4ாரம் தா4ம" [மைத்ராயணீயம்] [அனைத்துக்கும் ஆத4ாரமாயிருப்பது விஷ்ணுவென்னும் பெயருடைய பரம்பொருள்] என்று மைத்ராயணீயத்திலும், "விஶ்வாத்மாநம் நாராயணம்" [தை-நா 11] [அனைத்துக்கும் ஆத்மாவாய் ஆத4ாரமாயிருப்பவன் நாராயணன்] என்று நாராயணுநுவாகத்திலும் இவ்வர்த்த2ம் ஓதப்பட்டது. "ஆத்மேஶ்வரம் நாராயணம்" [தை-நா 11] என்று இவனுக்கு ஆத4ாரமான ஈஶ்வரன் எவனுமில்லை என்றும் காட்டப்பட்டது. இதனலேயே "பரமாத4ாரபூ4த:" என்று பா4ஷ்யத்தில் பரஶப்3த3த்துக்கு விளக்கமாகப் பரமஶப்3த3ம் வழங்கப்பட்டது. (அவ்யய: த்வம்) (எவ்வகையிலும்) அழிவற்றவன் நீயே. எத்தகைய ஸ்வரூபத்தையுடையவனுய், எத்தகைய கு3ணத்தையுடையவனுய், எத்தகைய செல்வத்தையுடையவனுயிருக்கிருயோ அத்தகைய ஸ்வரூப கு3ணச் செல்வங்களையுடையவனுய்

यत्स्वरूपो यद्गुणो यद्विभवश्च त्वं तेनैव रूपेण सर्वदाऽवतिष्ठसे। शाश्वतधर्मगोप्ता—शाश्वतस्य-नित्यस्य वैदिकस्य धर्मस्य एवमादिभिरवतारैस्त्वमेव गोप्ता। सनातनस्त्वं पुरुषः [मतो मे]—* वेदाहमेतं

எப்போதுமே இருக்கிறாய் என்று கருத்து. ஸ்வரூபத்துக்கோ, கு3ணத்துக்கோ, செல்வத்துக்கோ எப்போதாவது அழிவு ஏற்படுவது 'வ்யய'மெனப்படுகிறது. எப்போதும் அந்தகைய அழிவில்லாதவன் 'அவ்யய'னாகிறான். ஸ்வரூபநித்யத்வத்தையிட்டு ஜீவன் முதலானாரும் 'அவ்யய' ஶப்3த3த்தால் சில இடங்களில் குறிக்கப்பட்டபோதிலும் இப்படி எல்லாவகையிலும் அழிவற்றவனாயிருப்பவன் எம்பெருமான் ஒருவனே என்பதை "த்வம்" (நீயே) என்னும் ஶப்3த3ம் காட்டுகிறது. இங்கு செல்வம் என்று நித்யமான செல்வமான நித்யவிபூ4தியைக் குறிக்கிறது. லீலாவிபூ4தி தோன்றிமறைவதன்றோ. ப்ரவாஹரூபேண நித்யமாயிருப்பதையொட்டி லீலாவிபூ4தியும் இங்கு செல்வத்தில் அடங்கியதாகவும் கொள்ளலாம். ஒவ்வொருபடைப்பின் போதும் லீலாவிபூ4தி ஏற்றத்தாழ்வில்லாமல் ஒருபடிப்பட்டதாயிருக்கிறது என்றபடி. "தத3வ்யயம்" [முண்ட3க 1-1-6] [அழிவற்ற அப்பரம்பொருள்] "அநந்தமவ்யயம்" [தை-நா 11] [அழிவற்றவனாகையால் அவ்யயமெனப்படுபவன் அநந்தனான நாராயணனே] என்று இவ்வர்த்த2ம் உபநிஷத்துக்களில் உத்3கோ4ஷிக்கப்பட்டதன்றோ. (ஶாஶ்வதத4ர்மகோ3ப்தா த்வம்) நித்யமான வைதி3கத4ர்மத்தை ரக்ஷிப்பவன் நீயே. "ஶஶ்வத்ப4வ: ஶாஶ்வத:" [எப்போதும் உள்ளது ஶாஶ்வதம் எனப்படும்] என்னும் வ்யுத்பத்தியால் ஶாஶ்வத ஶப்3த3ம் நித்யமானதைக் குறிக்கிறது. நித்யமான வேத3த்தை மூலமாகக்கொண்டதாகையால் வைதி3கத4ர்மம் ஶாஶ்வதத4ர்மம் எனத்தக்கது. "நாராயண: ஶாஶ்வதத4ர்மகோ3ப்தா" [பா4ரதம் மோக்ஷத4ர்மம் 33-65] [நாராயணனே நித்யமான வைதி3கத4ர்மத்தை ரக்ஷிப்பவன்] முதலான ப்ரமாணங்களிலும் இவ்வர்த்த2ம் காட்டப்பட்டது. கீ3தையில் கண்ணனாலும் "த4ர்மஸம்ஸ்தா2பநார்த்தா2ய" [கீ3தை 4-8] என்று தான் அவதாரங்கள் எடுப்பதற்கு த4ர்மரக்ஷணம் முக்2யமான காரணங்களில் ஒன்று என்று காட்டப்பட்டது. இது ஶாஸ்த்ரங்களால் மாத்திரம் அல்லாமல் அர்ஜுனனால் நேரே அறியப்பட்ட விஷயமன்றோ. (ஸநாதந: புருஷ: த்வம்) உபநிஷத்துக்களில் பழையோனான புருஷனாக ஓதப்படுபவன் நீயே. "வேதா3ஹமேதம் புருஷம் மஹாந்தம்" [பு-ஸூ] [இந்த மஹாபுருஷனை நான் உபாஸிக்கிறேன்.] என்று புருஷஸூக்தத்தில் உபாஸிக்கத்தக்கவன்

पुरुषं महान्तं (पु) * परात्परं पुरुषम् (मु. ३. २. ८) इत्यादिषूदितः सनातनपुरुषस्त्वमेवेति मे मतः—ज्ञातः। यदुकुलतिलकस्त्वमेवंभूत इदानीं साक्षात्कृतो मयेत्यर्थः॥ १८॥

अनादिमध्यान्तमनन्तवीर्यमनन्तबाहुं शशिसूर्यनेत्रम्।
पश्यामि त्वा दीप्तहुताशवक्त्रं स्वतेजसा विश्वमिदं तपन्तम्॥ १९॥

19. அநாதி3மத்4யாந்தமநந்தவீர்ய-
மநந்தபா3ஹும் ஶஶிஸூர்யநேத்ரம்।
பஶ்யாமி த்வா தீ3ப்தஹுதாஶவக்த்ரம்
ஸ்வதேஜஸா விஶ்வமித3ம் தபந்தம்॥

---

20. ஆதிநடு வந்தமிலா னங்கனந்த வீரியனாய்
மீதிதனிற் றோளனந்த மேவியகண் — சோதிமதி
தீமுகமா யெல்லாமுன் றேசாற் றபிப்பிக்க
யாமுகமாய்க் காண்பனுனை யாங்கு.

இப்பரமபுருஷனே என்று காட்டப்பட்டது. "யேநாக்ஷரம் புருஷம் வேத3 ஸத்யம்" [முண்ட3க 3-2-13] [எந்த ப்3ரஹ்மவித்3யையால் ஸநாதனபுருஷனை உபாஸிக்கிறானோ] என்று இவ்வர்த்த2ம் முண்ட3கோபநிஷத்திலும் உணர்த்தப்பட்டது. "பராத்பரம் புருஷம்" [முண்ட3க 3-2-8] [(அசேதனத்தைக்காட்டிலும்) மேலான சேதனனைக் காட்டிலும் மேலான புருஷனை] என்று இவனே பரமப்ராப்யனாய் அனைவரைக்காட்டிலும் மேலான ஸநாதன (நித்ய) புருஷன் என்றும் ஓதப்பட்டது. ஸநாதநஶப்3த3ம் "புருஷம் வேத3 ஸத்யம்" [முண்ட3 3-2-13] "ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம்" [தை-ஆந 1] என்று ஓதப்பட்ட ஸத்யஶப்3த3த்தின் விளக்கமாகும். (மே மத:) முற்கூறியபடியெல்லாம் என்னால் நேரே அறியப்படுகிறாய், (த்வம்) யது3குலதிலகனான நீயே இவ்வண்ணமாக ஸாக்ஷாத்கரிக்கப்படுகிறாய் என்று கருத்து. "மே மத:" என்பதற்கு என்னுடைய அபி4ப்ராயம் என்று பொருள்கொள்வது நேரே காணும் இந்த ப்ரகரணத்துக்கு முரணானது. ஆகையால் என்னால் அறியப்படுகிறாய் என்றே கொள்ளவேண்டும். 'த்வம்' ஶப்3த3ம் ஏற்கனவே அறியப்பட்ட யது3குலதிலகனான கண்ணனைக்காட்டுகிறது. மற்ற பத3ங்கள் உபநிஷத்ப்ரஸித்3த4மான அவன் பெருமைகளை அர்ஜுனன் தி3வ்யசக்ஷுஸ்ஸாலே நேரே கண்டமையைக் காட்டுகின்றன. 18.

அநாதி₃மத்₄யாந்தம் — முதல் நடு முடிவு இல்லாதவனாய், **அநந்த வீர்யம்** — எல்லையற்ற வீர்யத்தை உடையவனாய், **அநந்த ப₃ாஹும்** — கணக்கற்ற கைகளையுடையவனாய், **ஶஶி ஸூர்ய நேத்ரம்** — சந்த்₃ரன்போல் குளிர்ந்தும் ஸூர்யன் போல் சுடுவதாகவும் இருக்கும் திருக்கண்களையுடையவனாய், **தீ₃ப்த ஹுதாஶ வக்த்ரம்** — கொழுந்து விட்டெரியும் ஊழி காலத்தீயைப்போல் அனைத்தையும் விழுங்கும் வாய்களை யுடையவனாய், **ஸ்வதேஜஸா** — தனது தேஜஸ்ஸாலே, **இத₃ம் விஶ்வம் தபந்தம்** — உலகனைத்தையும் கொதிப் படையச் செய்பவனான, **த்வா** — உன்னை, **பஶ்யாமி** — காண்கிறேன்.

ஆதி நடு அந்தம் இலா — முதல் நடு முடிவு இல்லாத வனாய், **அங்கு** — போர்க்களத்தில், **அனந்த வீரியனாய்** — எல்லையற்ற வீர்யத்தை உடையவனாய், **இதனில்** — தன் திருமேனியில், **மீது தோள் அனந்தம் மேவிய** — வலிமை மிக்க தோள்கள் கணக்கற்றவை உடையவனாய், **கண் சோதி மதி** — ஸூர்யன்போல் சுடுவதாகவும், சந்த்₃ரன்போல் குளிர்ந்தும் இருக்கும் திருக்கண்களையுடையவனாய், **தீ முக மாய்** — கொழுந்துவிட்டு எரியும் ஊழிக்காலத் தீயைப் போல் அனைத்தையும் விழுங்கும் வாய்களை உடையவனாய், **உன் தேசால் எல்லாம் தபிப்பிக்க** — தனது தேஜஸ்ஸாலே உலகனைத்தையும் கொதிப்படையச் செய்பவனான, **உனை** — உன்னை, **ஆங்கு** — அந்த விஶ்வரூபக்காட்சியில், **யாம் முக மாய் காண்பன்** — நான் எனது முக₂த்தாலே காண்கிறேன்.

---

19. விஶ்வரூபத்தின் மற்றும் சில பெருமைகளைப் பேசுகிறான். (அநாதி₃மத்₄யாந்தம்) முதல் நடு முடிவு இல்லாதவனை. "அநாதி₃" என்பதில் "நஞ்" வேறுபாட்டைக் காட்டுவதாய், "ஆதி₃மத்₄யாந்தங் களைக் காட்டிலும் வேறுபட்டவன்" என்று பொருள்கொள்ளப் பார்த் தால், "ஸர்க்கா₃ணாம் ஆதி₃ரந்தஶ்ச மத்₄யஞ்சைவாஹமர்ஜுந" [10.32] [ஸ்ருஷ்டிக்கப்படும் பொருள்களுடைய ஆதி₃மத்₄யாந்தங் கள் தானே] "அஹமாதி₃ஶ்ச மத்₄யஞ்ச பூ₄தாநாமந்த ஏவ ச"

॥ भा ॥ अनादिमध्यान्तम्—आदिमध्यान्तरहितम्। अनन्तवीर्यम्—अनवधिकातिशयवीर्यम्; वीर्यशब्दः प्रदर्शनार्थः; अनवधिकातिशयज्ञानबलैश्वर्यवीर्यशक्तितेजसां निधिमित्यर्थः। अनन्तबाहुम्—असंख्येयबाहुम्; सोऽपि प्रदर्शनार्थः; अनन्तबाहूदरपादवक्त्रादिकम्। शशिसूर्यनेत्रम्—शशिवत्सूर्यवच्च प्रसादप्रतापयुक्तसर्वनेत्रम्। देवादी-

---

[10-20] [நானே பூ4தங்களுக்கு ஆதி3மத்4யாந்தமாகிறேன்] என்று சொன்னதோடு விரோதி4க்கும். ஆகையால் 'நஞ்'ஞுக்கு நிஷேத4ப் பொருளைக்கொண்டு 'ஆதி3மத்4யாந்தமில்லாதவன்' என்றே பொருள் கொள்ளவேண்டும். பதினொருவது ஶ்லோகத்தில் "நாந்தம் ந மத்4யம் ந புநஸ்தவாதி3ம் பஶ்யாமி" என்று ஸ்வரூபத்துக்கு ஆதி3மத்4யாந்தங்களில்லை என்று சொல்லுவதாகவும் இங்கு விக்3ரஹத்துக்கு ஆதி3மத்4யாந்தங்கள் இல்லை என்று சொல்லுவதாகவும் கொள்ளலாமாகையாலே புநருக்தி இல்லை. அல்லது ஓரிடத்தில் உத்பத்தி, ஸ்தி2தி, நாஶம் ஆகிய விகாரங்கள் இல்லை என்றும், மற்றோரிடத்தில் அந்த விகாரங்களுக்குக் காரணங்கள் இல்லை என்றுச் சொல்லுவதாகக் கொண்டு புநருக்தி பரிஹாரம் செய்யலாம். அன்றிக்கே "அநாதி3ர் ப4க3வாந் கால: நாந்தோऽஸ்ய த்3விஜ வித்3யதே" [வி॰பு 1-2-26] [அந்தணரே! பெருமைபெற்ற காலத்துக்கு ஆதி3யுமில்லை, அந்தமுமில்லை] என்கிற காலரூபமான ஶரீரத்துக்கு அந்தர்யாமியான எம்பெருமானை இங்கு பேசுவதாகவும் கொள்ளலாம். (அநந்தவீர்யம்) எல்லையற்ற பெருமைபெற்ற வீர்யத்தை உடையவனை. வீர்யத்துக்கு எல்லையில்லாமையாவது - அதன் பெருமைக்கு எல்லையில்லாமையே யாகும். இங்கு வீர்யஶப்3த3த்தை இட்டது—ஜ்ஞானம், ப3லம், ஐஶ்வர்யம், (வீர்யம்), ஶக்தி, தேஜஸ் என்ற ஷட்3கு3ணங்களையும் உபலக்ஷண முறையாலே காட்டுகிறது. ஆக 'அநந்தவீர்யம்' என்றது "எல்லையற்ற பெருமையுடைய ஜ்ஞானம், ப3லம், ஐஶ்வர்யம், வீர்யம், ஶக்தி, தேஜஸ் எனும் கு3ணங்களுக்குக் கொள்கலமாயிருப்பவன்" என்றபடி. (அநந்தபா3ஹும்) எண்ணமுடியாத கைகளையுடையவனை. "அநேகபா3ஹும்" என்று பதினொருவது ஶ்லோகத்தில் கைகள் பல என்று மாத்திரம் காட்டப்பட்டது. இங்கு அவற்றுக்கு எண்ணிக்கை இல்லை என்று காட்டப்படுகிறது. ஆகையாலே புநருக்தியில்லை. இங்கு 'பா3ஹும்' என்று கைகளை எடுத்தது வயிறு, கால்கள், வாய்கள் முதலானவற்றுக்கும் உபலக்ஷணம். (ஶஶிஸூர்யநேத்ரம்) சந்த்3ரன்போலும் ஸூர்யன்போலுமுள்ள திருக்கண்களையுடையவனை.

ननुकूलान् नमस्कारादि कुर्वाणान्प्रति प्रसादः; तद्विपरीतानसुरराक्षसादीन् प्रति प्रतापः; * रक्षांसि भीतानि दिशो द्रवन्ति सर्वे नमस्यन्ति च सिद्धसंघाः (३६) इति हि वक्ष्यते। दीप्तहुताशवक्त्रम्—प्रदीप्तकालानलवत्संहारानुगुणवक्त्रम्। स्वतेजसा विश्वमिदं तपन्तम्—तेजः

"சந்த்$_3$ரஸூர்யௌ ச நேத்ரே" முதலானவிடங்களிற்போலே இங்கு சந்த்$_3$ரஸூர்யர்களை எம்பெருமானுடைய கண்களாக உருவகப்படுத்துவதாகக்கொள்வது பொருந்தாது; இது உருவகப்படுத்தும் ப்ரகரணமல்லவன்றே. மேலும், இந்த விச்வரூபத்தில் கணக்கற்ற கண்கள் இருக்கையாலும் உருவகப்படுத்துவதாகக்கொள்ள இயலாது. ஆகையால் "சந்த்$_3$ரஸூர்யர்களின் தன்மைகளையுடைய திருக்கண்களைக் கொண்டவன்" என்றே பொருள்கொள்ளவேண்டும். அதிலும் சில கண்கள் சந்த்$_3$ரனையும், சில கண்கள் ஸூர்யனையும் போன்றவை என்று பிரிப்பதற்குக் காரணமில்லையாகையால், எல்லாக் கண்களுமே சந்த்$_3$ரனையும் ஸூர்யனையும் போன்றவை என்றே பொருள்கொள்ள வேண்டும். அதாவது எல்லாக் கண்களுமே—நமஸ்காரம் முதலானவற்றைச் செய்யும் அனுகூலர்களான தே$_3$வர்களுக்குக் குளிர்ந்தவையாகவும், எதிரிடும் அஸுரராக்ஷஸர்களுக்குச் சுட்டெரிப்பவையாகவும் உள்ளன என்று கருத்து. "ரக்ஷாம்ஸி பீ$_4$தானி தி$_3$சோ த்$_3$ரவந்தி ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்$_3$த$_4$ஸங்க$_4$ா:" [36] [ப$_4$யங்கொண்ட ராக்ஷஸர்கள் எல்லாத் திசைகளிலும் ஓடுகிறார்கள்; ஸித்$_3$த$_4$ர் கூட்டங்கள் முழுவதும் வணங்குகின்றன] என்று கூறப்படுகிறதன்றே. இதே கருத்து — "கதிர்மதியம்போல் முகத்தான்" [திருப்பாவை 1] என்று ஆண்டாளால் அருளிச்செய்யப்பட்டது இங்கு அநுஸந்தி$_4$க்கத்தக்கது. (தீ$_3$ப்தஹுதாசவக்த்ரம்) ஊழிகாலத்துத் தீயைப்போலே அனைத்தையும் விழுங்கும் வாய்களையுடையவனை. "தீ$_3$ப்தாநலார்க்கத்$_3$யுதிம்" [17] என்று இவனுடைய ஒளி கொழுந்துவிட்டெரியும் ஊழிகாலத்துத் தீயைப்போன்றது என்ற விஷயம் சொல்லப்பட்டது. 'தீ$_3$ப்தஹுதாசவக்த்ரம்' என்று இங்கே "ஊழிகாலத் தீயைப்போலே அனைத்தையும் விழுங்குகிறது இவனுடைய வாய்" என்று கூறப்படுகிறது. அக்$_3$நியே வாயாக உருவகப்படுத்தப்படுகிறது என்று சிலர் கூறுவதும், உருவகப்படுத்தும் ப்ரகரணமல்லாமையாலே பொருந்தாது. இங்கு 'ஹுதாச' என்று பொதுவாக அக்$_3$நியைச் சொன்னபோதிலும் "காலாநலஸந்நிபா$_4$நி"[25] என்று மேலே சொல்லப்போகிறபடியால், இங்கும் ஊழிகாலத்தீயைக் குறிப்பதாகக் கொள்வதே

पराभिभवनसामर्थ्यम्; स्वकीयेन तेजसा विश्वमिदं तपन्तं त्वां पश्यामि—एवंभूतं सर्वस्य स्रष्टारं, सर्वस्याधारभूतम्, सर्वस्य प्रशासितारम्, सर्वस्य संहर्तारम्, ज्ञानाद्यपरिमितगुणसागरम्, आदिमध्यान्तरहितमेवंभूतदिव्यदेहं त्वां यथोपदेशं साक्षात्करोमीत्यर्थः।

உசிதம். (ஸ்வதேஜஸா விஶ்வமித3ம் தபந்தம்) தன்னுடைய தேஜஸ்ஸாலே உலகனைத்தையும் கொதிப்படையச் செய்பவனை. தேஜஶ்ஶப்3த3ம் எவரையும் எதிர்பாராமையாகிற அந்யாநபேக்ஷத்வத்தையும், அனைவரையும் வெற்றிகொள்ளும் திறமையாகிற பராபி4ப4வந ஸாமர்த்2யத்தையும் குறிக்கும். இங்கு 'உலகனைத்தையும் கொதிப்படையச் செய்பவனை' என்று தேஜஸ்ஸின் கார்யம் சொல்லப்படுகிறபடியாலே, 'பிறரை எதிர்பாராமை' என்ற பொருள் பொருந்தாது. ஆகையால், அனைவரையும் வெற்றிகொள்ளும் திறமை என்றே இங்கு தேஜஶ்ஶப்3த3த்திற்குப் பொருள் கொள்ளவேண்டும். "காலம் ஸ பசதே யத்ர ந காலஸ்தத்ர வை ப்ரபு4:" [காலத்தை எம்பெருமான் எங்கிருந்துகொண்டு ஆட்சிசெய்கிறானோ, அங்கு காலம் ஆட்சி செய்யமுடியாது] "கால: பசதி பூ4தாநி" [பா4ர-மோக்ஷ 239-16] [காலம் பூ4தங்களை விகாரமடையச் செய்கிறது] என்று ப்ரமாணங்கள் கூறுகையாலே, தனது தேஜஸ்ஸாலே இவன் உலகனைத்தையும் விகாரமடையச் செய்கிறான் என்று தேறுகிறது. (த்வா பஶ்யாமி) இப்படிப்பட்டவனான உன்னைக் காண்கிறேன். இவ்வண்ணமாக அனைத்தையும் ஸ்ருஷ்டிப்பவனாய், அனைத்துக்கும் ஆதா4ரமாயிருப்பவனாய், அனைத்தையும் நியமிப்பவனாய், அனைத்தையும் ஸம்ஹரிப்பவனாய், ஜ்ஞானம் முதலான எல்லையற்ற கு3ணங்களுக்குக் கடலாயிருப்பவனாய், முதல் நடு முடிவில்லாதவனாய், இத்தகைய பெருமைகளுடைய தி3வ்யதே3ஹத்தை உடையவனான உன்னை நீ உபதே3ஶித்தபடியே காண்கின்றேன் என்கை. இனி ஒரு கேள்வி எழுகின்றது. ஒரு தே3ஹத்தில் பல கைகள், முக2ங்கள் முதலானவை இருப்பது ஶாஸ்த்ரங்களினாலும் ப்ரத்யக்ஷத்தினாலும் பலர் அறிந்த விஷயம். ஒரு தே3ஹத்தில் பல வயிறுகள் இருப்பதாகக் கேள்விப்பட்டதில்லையே. இது எப்படி இருக்கமுடியும்? என்பது அக்கேள்வி. இதற்கு பதில் பின்வருமாறு:— எல்லையற்ற அளவைக்கொண்ட ஒரு இடையை ஆதா4ரமாகக்கொண்டு மேலே பல வயிறுகளும், கைகளும், முக2ங்களும் உடையதாகவும், கீழே பல கால்கள் உடையதாகவும் இருப்பதே விஶ்வரூபமாகையாலே, ஓரே தே3ஹத்தில் பல வயிறுகள் இருப்பதில்

एकस्मिन् दिव्यदेहे अनेकोदरादिकं कथम् ? इत्थमुपपद्यते — एकस्मात्कटिप्रदेशादनन्तपरिमाणादूर्ध्वमुद्गता यथोदितोदरादयः, अधश्च यथोदितदिव्यपादाः ; तत्रैकस्मिन्मुखे नेत्रद्वयमिति च न विरोधः ॥ १९ ॥

॥ भा ॥ एवंभूतं त्वां दृष्ट्वा देवादयोऽहं च प्रव्यथिता भवाम इत्याह--

द्यावापृथिव्योरिदमन्तरं हि व्याप्तं त्वयैकेन दिशश्च सर्वाः ।
दृष्ट्वाऽद्भुतं रूपमुग्रं तवेदं लोकत्रयं प्रव्यथितं महात्मन् ॥ २० ॥

குறையில்லை. "அநேக பா ஹூதர வக்த்ரநேத்ரம்" என்று அவயவங்களையே பலவாகக் கூறுகையால் தேஹம் ஒன்றே என விளங்குகிறது. முன்பின் ஸ்லோகங்களிலும் விஸ்வரூபம் ஒரு திருமேனியே எனக் காட்டப்பட்டுள்ளது."பஸ்ய மே பார்த்த ரூபாணி" [11-5] என்று தொடக்கத்தில் பல உருவங்கள் இருப்பதாகக் கூறுகிறதேயெனில்? அப்போது அனேகம் திருமேனிகள் என்று கூறினாலே போதும்; பல கைகள் கால்கள் என்று தனியாகக் கூறவேண்டிய அவச்யமில்லை. பாஞ்சராத்ரம் முதலான ஸாஸ்த்ரங்களில் பல வயிறுகள் உள்ள உருவம் காணப்படவில்லையே? எனும் கேள்வியும் எழுகிறது. அந்த ஸாஸ்த்ரம் முழுவதும் இப்போது நடைமுறையில் இல்லை. நாரதர் முதலானோரால் காணப்பட்ட விஸ்வரூபத்தையும் நாம் இப்போது அதில் காணவில்லை. அர்ஜுனன் கண்டதைக் காட்டிலும் வேறு விஸ்வரூபத்தையே நாரதர் கண்டிருக்கிறார். அதிலும் வேறுபட்ட விஸ்வரூபத்தையே த்ருதராஷ்ட்ரன் கண்டிருக்கிறான். ஆகையால் வெவ்வேறு பாஞ்சராத்ரஸம்ஹிதைகளில் வராஹம், நரஸிம்ஹம் முதலான உருவங்கள் வெவ்வேறு அமைப்பு, நிறம், கைகள் முதலானவற்றை உடையவையாக வர்ணிக்கப்பட்டிருப்பதுபோலே, விஸ்வரூபத்திலும் வசனபலத்தாலேயே ஆங்காங்கு வேறுபாடுகள் ஒப்புக்கொள்கிறோம். ஆகையால், மேலே கிளைகளும் கீழே வேர்களும் பலவாயிருந்தபோதிலும் அடிமரம் ஒன்றாயிருக்கையால் ஒருமரம் என்று கொள்ளப்படுவதுபோலே, மேலே வயிறுகள் கைகள் தலைகள் முதலானவையும், கீழே கால்களும் பலவாயிருந்தபோதிலும் இடை ஒன்றாயிருக்கிறபடியால் விஸ்வரூபம் ஒன்றே என்று கொள்ளத்தடையில்லை. இது நாராயணனுடைய ரூபமாகையாலே ஒவ்வொரு முகத்திலும் இரண்டு கண்கள் என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. ஆகையால் இந்த விஸ்வரூப விஷயத்தில் ஆக்ஷேபிப்பதற்கு எதுவுமில்லை. 19.

20. த்₃யாவாப்ருதி₂வ்யோரித₃மந்தரம் ஹி
வ்யாப்தம் த்வயைகேந தி₃ஶஶ்ச ஸர்வா: ।
த்₃ருஷ்ட்வாऽத்₃பு₄தம் ரூபமுக்₃ரம் தவேத₃ம்
லோகத்ரயம் ப்ரவ்யதி₂தம் மஹாத்மந் ! ॥

த்₃யாவாப்ருதி₂வ்யோ: இத₃ம் அந்தரம்—மேலுலகங்களுக்கும் கீழுலகங்களுக்கும் நடுவிலுள்ள இந்த இடைவெளியும், **ஸர்வா: தி₃ஶ: ச**—எல்லா தி₃க்குகளும், **த்வயா ஏகேந**—உன் ஒருவனுலேயே, **வ்யாப்தம் ஹி**—வ்யாபிக்கப்பட்டுள்ளதன்றோ; **மஹாத்மந்**—எல்லையற்ற ஸங்கல்பத்தை உடையவனே! **தவ**—உன்னுடையதான, **இத₃ம் உக்₃ரம் அத்₃பு₄தம் ரூபம் த்₃ருஷ்ட்வா**—இந்தக் கடுமையான ஒளியுடைய ஆஶ்சர்யமான திருமேனியைக்கண்டு, **லோகத்ரயம்**—மூவகைப்பட்ட ஜனங்களும், **ப்ரவ்யதி₂தம்**—மிகவும் அச்சமடைந்துள்ளனர்.

---

21. ஓங்குவிசும் பொண்புவியி னுள்ளிதுவு மெத்திசையு
மாங்குயர்வாய் நின்னொருவ னுனிறைத்த—பாங்குடனே
யற்புதமாய் நீள்கொடிதா யாருருக்கண் டெவ்வுலகு
நிற்பதிலை தானடுங்கு நின்று.

ஓங்கு விசும்பு ஒண்புவியினுள் இதுவும்—உயர்ந்துள்ள ஆகாசம் முதலான மேலுலகங்களுக்கும், ஒளி பொருந்திய பூ₄மி முதலான கீழுலகங்களுக்கும் நடுவே உள்ள இந்த இடைவெளியும், **எத்திசையும்**—எல்லா தி₃க்குகளும்(ஆகிய), **ஆங்கு உயர்வாய் நின் ஒருவனுல் நிறைத்த பாங்குடனே**—அனைத்தும் சிறப்பாக உன் ஒருவனுலேயே வ்யாபிக்கப்பெற்றிருக்கும் பெருமையோடு, **அற்புதமாய்**—ஆஶ்சர்யமானதாய், **நீள்கொடிதாய்**—மிகவும் கடுமையான ஒளியுடையதாய், **ஆர் உருக்கண்டு**—நிறைந்துள்ள உன் விஶ்வரூபத்தைக்கண்டு, **எவ்வுலகும்**—மூவகைப்பட்ட ஜனங்களும், **நிற்பது இலை**—தம் வசத்தில் நிற்பதில்லை, **தான் நின்று நடுங்கும்**—தாம் எப்போதுமே நடுங்குவர்.

॥भा॥ द्युशब्दः पृथिवीशब्दश्चोभावुपरितनानामधस्तनानां च लोकानां प्रदर्शनार्थौ। द्यावापृथिव्योरन्तरम्—अवकाशः, यस्मिन्नवकाशे सर्वे लोकास्तिष्ठन्ति; सर्वोऽयमवकाशो दिशश्च सर्वास्त्वयैकेन व्याप्ताः। दृष्ट्वाऽद्भुतं रूपमुग्रं तवेदम् —अनन्तायामविस्तारमत्यद्भुत-

---

20. இத்தகைய கடுமையான ஒளியுடைய உன்னைக்கண்டு தே₃வர் முதலானோரும், தானும் நடுங்குவதைக்கூறுகிருன். (த்₃யாவா ப்ருதி₂வ்யோ: இத₃ம் அந்தரம்) மேலுலகங்களுக்கும், கீழுலகங்களுக்கும் நடுவில் உள்ள இந்த இடைவெளியும். கண்ணனுடைய உருவம் எல்லையற்றது என்று கூறியிருக்கையாலே, "த்₃யு" ஶப்₃த₃ம் தே₃வலோகங்கள் முதலான மேலுலகங்கள் அனைத்தையும், "ப்ருதி₂வீ" ஶப்₃த₃ம் பூ₄மி முதலான கீழுலகங்கள் அனைத்தையும் குறிக்கிறது என்று கொள்ளவேண்டும். "அந்தரமவகாஶாவதி₄ பரித₄ாநாந்தர்த்₃தி₄பே₄த₃தாத₃ர்த்₃யே" [அமர 3 நா 347] என்கிற அமரகோஶத்தின்படி பல பொருள்களையுடைய அந்தரஶப்₃த₃த்துக்கு இங்கு 'அவகாஶம்' (இடைவெளி) என்னும் பொருளே பொருந்தும். எவ்விடத்தில் எல்லா உலகங்களும் நிற்கின்றனவோ, அந்த இடைவெளியில் என்று கருத்து. (ஸர்வா: தி₃ஶ: ச) எல்லா தி₃க்குகளும். (த்வயா ஏகேந வ்யாப்தம் ஹி) உன் ஒருவனுலேயே வியாபிக்கப்பட்டுள்ளதன்றே. "அந்தரம் வ்யாப்தம் ஹி தி₃ஶஶ்ச ஸர்வா: வ்யாப்தா: ஹி" என்று லிங்க₃வசநங்களை மாற்றிக்கொள்ளவேண்டும். 'ஹி'ஶப்₃த₃ம் ப்ரஸித்₃தி₄யைக் காட்டுகிறது. (மஹாத்மந்!) எல்லையற்ற ஸங்கல்பத்தை உடையவனே! 'ஆத்ம' ஶப்₃த₃ம் மனத்தைக் குறிப்பது; இங்கு அதன் செயலாகிற ஸங்கல்பத்தைக் குறிக்கிறது. எல்லாவிடங்களிலும் திருமேனியால் வியாபித்திருத்தல்—இவனுடைய ஸங்கல்பமாத்ரத்தால் நடக்கக்கூடியது என்று கருத்து. அன்றிக்கே 'மஹாத்ம' ஶப்₃த₃மே க₃ம்பீ₄ரமான அறிவுடையவர்களை ரூடி₄யாலே குறிப்பதாகக்கொண்டு திருமேனி உக்₃ரமாயிருப்பதுபோல், இவனுடைய கருத்தும் ஆழ்ந்ததாயிருக்கையால், ஶ்லோகத்தில் பிற்பாதியில் சொன்னபடி அனைவரும் நடுங்குகிருர்கள் என்றும் கருத்துரைக்கலாம். (அத்₃பு₄தம் உக்₃ரம் தவ இத₃ம் ரூபம் த்₃ருஷ்ட்வா) முன் கூறியபடி எல்லையற்ற நீள அகலங்களையுடையதாய், மிக ஆஶ்சர்யமாயிருப்பதாய், மிகக் கடுமையான ஒளியுடையதான உன்னுடைய இந்த உருவத்தைக்கண்டு. முன்பின் வாக்யங்கள் விஶ்வரூபத் திருமேனியைப் பற்றியே பேசுகிறபடியால், நடுவில் உள்ள

अत्युग्रं च रूपं दृष्ट्वा लोकत्रयं प्रव्यथितम्- युद्धदिदृक्षया आगतेषु ब्रह्मादिदेवासुरपितृगणसिद्धगन्धर्वयक्षराक्षसेषु प्रतिकूलानुकूलमध्यस्थरूपं लोकत्रयं एवं प्रव्यथितम्— अत्यन्तभीतम्। महात्मन्-अपरिच्छेद्य-मनोवृत्ते!। एतेषामप्यर्जुनस्येव विश्वाश्रयरूपसाक्षात्कारसाधनं दिव्यं

இந்த ஶ்லோகம் ஸ்வரூபவ்யாப்தியைக் கூறுவதாகக்கொள்வது பொருத்தமற்றது. விஶ்வரூபத் திருமேனி மிகப்பெரியது என்று ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கிறபடியால் இங்கு சொல்லப்பட்டிருக்கும் வ்யாப்தி 'விக்3ரஹவ்யாப்தி' என்றே கொள்ளவேண்டும். (லோக த்ரயம் ப்ரவ்யதி2தம்) மூவகைப்பட்ட உலகினரும் மிகவும் நடுங்கு கின்றனர். நடுங்குவதாகக் கூறுகையாலே, இங்கு 'லோகத்ரய' ஶப்3த3ம் அசேதனமான பூ4மி முதலான மூவுலகங்களைக் குறிக்க முடியாது. அவ்வுலகங்களிலுள்ள சேதனர்களையே லக்ஷணையாகக் குறிக்கின்றது என்று சொல்லுவதைக்காட்டிலும், "லோகஸ்து பு4வநே ஜநே" [அமர 3 நா நா 2] என்று 'லோக' ஶப்3த3மே ஜனங்களைக் குறிக்கக் கூடியதாகையாலே 'லோகத்ரய' ஶப்3த3ம் மூவகைப்பட்ட ஜனங்களைக் குறிப்பதாகக்கொள்வது பொருத்தமுடையது. ஜனங்களும், ஶத்ருக் கள், மித்ரர், உதா3ஸீனர் என்று மூவகைப்பட்டிருப்பது ஸுப்ர ஸித்3த4ம். யுத்3த4த்தைப் பார்ப்பதற்காக அனுகூலர்களான தே3வர் முதலானோரும், ப்ரதிகூலர்களான அஸுரர் முதலானோரும், இரண்டுவகை யிலும் சேராத உதா3ஸீனர்களான பலரும் இங்கு அவஶ்யம் வந்தி ருப்பார்கள், 'லோகத்ரய' ஶப்3த3ம் மூவுலகினரையும் குறிப்பதாகக் கொண்டால், இங்கு வராதவர்களும் நடுங்குகின்றனர் என்று கொள்ளவேண்டிவருவது பொருத்தமற்றது. அதற்காக, மூவுலகி னரில் இங்கு வந்திருக்கும் சிலரையே குறிக்கிறது 'லோகத்ரய'ஶப்3த3ம் என்று கொள்ளவேண்டிய அருமையும் ஏற்படும். இங்கு வந்தவர்கள் நடுங்குவதைக் காண்கையாலே, மூவுலகினரும் நடுங்கிக்கொண்டே இருக்கவேண்டும் என்று அர்ஜுனன் உத்ப்ரேக்ஷிக்கிறான் என்று கூறுவதும் பொருந்தாது. விஶ்வரூபத்தைக் காணாதவர்கள் நடுங்கக் காரணமில்லாமையாலே அர்ஜுனன் இப்படி உத்ப்ரேக்ஷிக்க இட மில்லை. கண்டதையே கூறுவதாகவன்றோ அர்ஜுனன் பலகாலும் கூறுகிறான். ஆகையால் 'லோகத்ரய' ஶப்3த3ம் யுத்3த4த்தைக் காண வந்த பிரமன் முதலான தே3வர்கள், அஸுரர்கள், பித்ருக3ணங்கள், ஸித்3த4ர்கள், க3ந்த4ர்வர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள் ஆகியவர் களில் ப்ரதிகூலர், அனுகூலர், உதா3ஸீனர் என்று மூவகைப்பட்ட ஜனங்களையே குறிக்கும் என்று கொள்வதே பொருந்தும்.

चक्षुर्भगवता दत्तम्। किमर्थमिति चेत्; अर्जुनाय स्वैश्वर्यं सर्वं प्रदर्शयितुम्; अत इदमुच्यते-* दृष्ट्वाऽद्भुतं रूपमुग्रं तवेदं लोकत्रयं प्रव्यथितं महात्मन्निति॥ २०॥

अमी हि त्वा सुरसङ्घा विशन्ति
केचिद्भीताः प्राञ्जलयो गृणन्ति।
स्वस्तीत्युक्त्वा महर्षिसिद्धसङ्घाः
स्तुवन्ति त्वां स्तुतिभिः पुष्कलाभिः॥ २१॥

''த₃ர்ஶயாமாஸ பார்த்த₂ாய'' [11.9] என்று அர்ஜுனனுக்கு தி₃வ்யசக்ஷுஸ்ஸைக் கொடுத்துத் தன் விஶ்வரூபத்தைக் காட்டினான் என்றே தொடக்கத்தில் உள்ளது. அப்படியிருக்கும்போது மனிதர் களைப்போலே ப்ராக்ருதமான கண்களையுடைய தே₃வர் முதலானோர் எப்படி இந்த விஶ்வரூபத்தைக் காணமுடியும்? என்னும் கேள்வி எழுகிறது. இவர்களுக்கும் அர்ஜுனனுக்குப்போலே விஶ்வரூபத் தைக் காணவல்ல தி₃வ்யசக்ஷுஸ் கொடுக்கப்பட்டுள்ளது என்பதே இதற்குப் பதில். ஶிஷ்யனாய், மிகவும் நெருங்கியிருப்பவனாய், மிகவும் ப₄க்தியுடையவனாயிருக்கும் அர்ஜுனனுக்கு தி₃வ்யசக்ஷுஸ்ஸைக் கொடுத்துத் தன் விஶ்வரூபத்தைக் காணவைத்தது பொருத்தமே. ''**தே₃வா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் த₃ர்ஶநகாங்க்ஷிண:**'' [11.52] [தே₃வர்களும் இவ்வுருவத்தை எப்போதும் காணவிரும்புகிறார்கள்] என்று மேலேயும் தே₃வர்களைக் காணவிரும்புகிறவர்களாகச் சொல் லிற்றேதவிரக் காண்பவர்களாகச் சொல்லவில்லை. ஆகையால் இங்கு அதற்கு முரணாக எப்படிப் பேச முடியும்? எனில்: அர்ஜுன னுக்குத் தனது பெருமை முழுவதையும் காட்டுவதற்காக, யுத்₃த₄த் தைக் காணவந்த தே₃வர் முதலானவர்களில் சிலருக்கு எம்பெருமான் தி₃வ்யசக்ஷுஸ்ஸைக் கொடுத்து விஶ்வரூபத்தைக் காண்பித்து அவர்கள் நடுங்கி ஓடுவதைக் காட்டுகிறான் என்றே கொள்ள வேண்டும். இப்படிக் கொள்ளாவிடில் ''**லோகத்ரயம் ப்ரவ்யதி₂தம்**'' என்று இங்கு கூறியதும், மேல் ஶ்லோகங்களில் தேவர்கள் முதலானோர் இவனைத் துதிப்பதாகவும், வியப்புடன் பார்ப்பதாகவும், அனைவரும் நடுங்குவதாகவும் கூறுவதும் பொருந்தாமல் போய்விடும். 20.

21. அமீ ஹி த்வா ஸுரஸங்கா$_4$ விஶந்தி
கேசித்$_3$பீ$_4$தா: ப்ராஞ்ஜலயோ க்$_3$ருணந்தி ।
ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷிஸித்$_3$த$_4$ஸங்கா$_4$:
ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி$_4$: புஷ்கலாபி$_4$: ॥

அமீ ஸுரஸங்கா$_4$:—இந்த தே$_3$வர் கூட்டங்கள், **த்வா விஶந்தி ஹி** — உனது அருகில் வருகின்றனவன்றோ, **கேசித்**—அவர்களில் சிலர், **பீ$_4$தா:**—(மிகக் கடுமையான ஒளியுடைய உனது உருவத்தைக் கண்டு) ப$_4$யந்தவர்களாய், **ப்ராஞ்ஜலய:**—கைகூப்பி நின்று, **க்$_3$ருணந்தி**—(தங்களது அறிவுக்குத் தக்கவாறு) உன்னைத் துதிக்கிறார்கள். **மஹர்ஷி ஸித்$_3$த$_4$ ஸங்கா$_4$:**—வேறு சில மஹர்ஷிக் கூட்டங்களும், ஸித்$_3$த$_4$ர் கூட்டங்களும், **ஸ்வஸ்தி இதி உக்த்வா**—'மங்க$_3$ளம் உண்டாகுக' என்று கூறி, **த்வாம்**—உன்னை, **புஷ்கலாபி$_4$: ஸ்துதிபி$_4$:**—(உனக்குப் பொருத்தமான) நிறைந்த துதிகளாலே, **ஸ்துவந்தி**—துதிக்கிறார்கள்.

---

22. இந்தச் சுரகணங்க ளெய்தியிடு மீங்குன்னைச்
சிந்தைப் பயத்தாற் சிலர்தொழுது - வந்துரைப்பர்
நன்முனிவர் சித்தரெல்லா நன்றாக வென்றுரைத்து
முன்னைவரத் தாற்றுதிப்பர் மூண்டு.

இந்த சுரகணங்கள்—இந்த தே$_3$வர் கூட்டங்கள், **ஈங்கு உன்னை எய்தியிடும்**—இங்கு உனது அருகில் வருகிறார்கள்; **சிலர்**—இவர்களிலேயே சிலர், **சிந்தைப் பயத்தால்**—நெஞ்சில் ப$_4$யத்தாலே, **தொழுது வந்து**—கைகூப்பி நின்று, **உன்னை உரைப்பர்**—(தங்களது அறிவுக்குத் தக்கவாறு) உன்னைத் துதிப்பார்கள். **நன் முனிவர் சித்தர் எல்லாம்**—நல்ல முனிவர் கூட்டங்களும், ஸித்$_3$த$_4$ர் கூட்டங்களும், **'நன்று ஆக' என்று உரைத்து** — 'மங்க$_3$ளம் உண்டாகட்டும்' என்று கூறி, **முன்னை வரத்தால்**—தமது பூர்வபுண்யத்தாலே, **மூண்டு துதிப்பர்** — உனக்குப் பொருத்தமான நிறைந்த துதிகளாலே துதிக்கிறார்கள்.

॥ भा ॥ अमी सुरसंघाः-उत्कृष्टाः त्वां विश्वाश्रयमवलोक्य हृष्टमनसस्त्वत्समीपं विशन्ति। तेष्वेव केचिदत्युग्रमत्यद्भुतं च तवा-

---

21. தே$_3$வர்களும், மஹர்ஷிகள் ஸித்$_3$த$_4$ர்கள் கூட்டங்களும் எம்பெருமானிடம் நடந்துகொள்ளும்படியை விவரிக்கிறான். (அமீ ஹி த்வா ஸுரஸங்க$_4$ா விஶந்தி) இந்த தே$_3$வர் கூட்டங்கள் உனது அருகில் வருகின்றனவன்றோ; "த்வா விஶந்தி" என்பதற்கு "உன்னால் ஸம்ஹரிக்கப்பட்டவர்களாய் உன்னுள் நுழைகிறார்கள்" என்று சிலர் பொருள் கொண்டார்கள். இந்த ஶ்லோகத்தில் மேலே ஸ்துதி, அஞ்ஜலி செய்தல் ஆகியவையே கூறப்படுகையால், இங்கு ஸம்ஹாரத்தைக் கூறுவது அவற்றோடு சேராது. து$_3$ர்யோத$_4$நாதி$_3$யரைப் போலே தே$_3$வர்களுக்கு இங்கு ஸம்ஹாரம் நேரப்போவதில்லை. தே$_3$வலோகத்திலிருந்து இறங்கி வந்திருக்கும் தே$_3$வர்களும் விஶ்வ ரூபத்தின் தேஜஸ்ஸாலே ஸம்ஹரிக்கப்படுகிறார்கள் என்று கொள்ளுவதும், அடுத்த ஶ்லோகத்தில் "வீக்ஷந்தே" என்று அவர்கள் விஶ்வ ரூபத்தைக் காண்பதாகக் கூறுவதோடு பொருந்தாது. ஆகையால் இங்கு 'த்வாவிஶந்தி' என்றது அருகில் வருகிறார்கள் என்றே பொருள் படும். அடுத்த பாத$_3$த்தில் தே$_3$வர்களிலேயே சிலரை ப$_4$யந்த வர்களாகக் கூறுகையாலே, ப$_4$யமில்லாதவர்களாய் 'எம்பெருமானை அருகில் சென்று ஸேவிக்கவேண்டும்' என்னும் அசைக்கமுடியாத ஆசையால் அருகில்சென்று அனைத்துக்கும் ஆஶ்ரயமான விஶ்வ ரூபத்தை ஸேவித்து உகந்த நெஞ்சினர்களான பிரமன் முதலான உயர்ந்த தே$_3$வர்களை 'ஸுரஸங்க$_4$ா:' என்று கூறுவதாகக் கொள்ள வேண்டும். (கேசித் பீ$_4$தா: ப்ராஞ்ஜலயோ க்$_3$ருணந்தி) அவர்களில் சிலர் மிகக் கடுமையான ஒளியுடையதாய், ஆஶ்சர்யமானதான உனது உருவத்தைக்கண்டு ப$_4$யந்தவர்களாய், கைகூப்பிநின்று தங்களது அறிவுக்குத் தக்கவாறு உன்னைத் துதிக்கிறார்கள். 'கேசித்' (சிலர்) என்னும் பத$_3$ம் எந்த ஸமுதா$_3$யத்தில் சிலர் என்னும் கேள்விக்குப் பதிலை எதிர்பார்க்கிறது. முதல் பாத$_3$த்தில் 'ஸுரஸங்க$_4$ா:' என்று குறிப்பிடப்பட்ட தே$_3$வஸமுதா$_3$யத்தில் சிலர் என்று கொள்வதே உசிதம். வேறு ஸமுதா$_3$யத்தைப்பற்றி இங்கு பேச்சில்லையன்றோ. 'பீ$_4$தா:' என்று இவர்களை ப$_4$யந்தவர்களாகச் சொல்லுவதற்குக் காரணம் மிகக்கடுமையானதாய், மிக ஆஶ்சர்யமானதான விஶ்வரூபத்தைக் கண்டமையேயாகவேண்டும். 'க்$_3$ருணந்தி' (துதிக்கிறார்கள்) என்று சொல்லப்பட்ட ஸ்துதிகர்த்தாக்கள் முற் கூறியபடி தே$_3$வர்களில் தாழ்ந்தவர்களாகையாலே, ஶ்லோகத்தின் பிற்

कारमालोक्य भीताः प्राञ्जलयस्स्वज्ञानानुगुणं स्तुतिरूपाणि वाक्यानि गृणन्ति — उच्चारयन्ति। अपरे महर्षिसंघास्सिद्धसंघाश्च परावरतत्त्व-

---

பாதியில் 'மஹர்ஷிஸித்3த4ஸங்க4ங்கள் நிறைந்த துதிகளாலே துதிக்கிறார்கள்' என்று விசேஷணமிட்டதுபோலே இங்கு இடாமையாலும், "அவரவர் தாம் தாம் அறிந்தவாறேத்தி" [முதல்திரு 14] என்கிற ரீதியிலே தத்தமறிவுக்குத் தக்கவாறு இவர்கள் துதிப்பதைச் சொல்லுவதாக 'க்3ருணந்தி' என்னும் பத3த்துக்குப் பொருள்கொள்ள வேண்டும். 'ப்ராஞ்ஜலய:' என்றது ப4யத்தினால் அஞ்ஜலி செய்ததைக் காட்டுகிறது. (க்3ருணந்தி) 'கூறுகிறார்கள்' என்றே பொருள்படுமாயினும், இது ஸ்துதி ப்ரகரணமாகையாலும், 'ப்ராஞ்ஜலய:' என்று கைகூப்பி நிற்பதாகக் கூறுகையாலும் 'ஸ்துதி வாக்யங்களைக் கூறுகிறார்கள்' என்று பொருள்கொள்ளவேண்டும். அதிலும் ப4யந்தவர்களான இவர்கள் தாங்களாக அந்த ஸமயத்தில் துதிகளை இயற்றிப் பாடுவதாகக் கூறுவது பொருந்தாதாகையாலே வேத3ம் முதலான ஶாஸ்த்ரங்களில் காணப்படும் துதிகளை உச்சரிக்கிறார்கள் என்று கொள்வதே உசிதம். இப்படித் துதிகளை உச்சரிப்பதாகக் கூறுகையாலும் 'கேசித்' என்று எடுக்கப்பட்ட இவர்கள் தே3வர்களே என விளங்குகிறது. 36-வது ஶ்லோகத்தில் "ரக்ஷாம்ஸி பீ4தானி தி3ஶோ த்3ரவந்தி" என்று ராக்ஷஸர்கள் முதலான ப்ரதிகூலர்கள் பயந்து ஓடுவதாகவன்றோ குறிப்பிடப்பட்டது. இரண்டாம் பாத3த்தில் சொல்லப்பட்டவர்களுக்கு நேர் எதிர்த்தட்டான மஹர்ஷிக் கூட்டங்களும், ஸித்3த4ர் கூட்டங்களும் தங்கள் ஸ்வரூபஜ்ஞானத்துக்கு ஏற்ப எம்பெருமானுக்கு மங்க3ளாஶாஸனம் செய்து நிறைந்த ஸ்துதிகளாலே துதிக்கிறார்கள் என்று கூறுகிறது ஶ்லோகத்தின் பிற்பாதி. (மஹர்ஷி ஸித்3த4ஸங்க4ா:) முற்பாதியில் கூறப்பட்ட தே3வர்களைக் காட்டிலும் வேறுபட்டவர்களான மஹர்ஷிக் கூட்டங்களும், ஸித்3த4ர் கூட்டங்களும். மஹர்ஷிக் கூட்டங்களாவார் ப்4ருகு3 முதலானவர்கள். ஸித்3த4ர் கூட்டங்களாவார் ஸநகர், ஸநந்த3னர் முதலானவர்கள். இவர்கள் மஹர்ஷிகளாகையாலும், ஸித்3த4ர்களாகையாலும் பரதத்வமான எம்பெருமானைப் பற்றியும், தாழ்ந்த தத்வங்களான சேதநாசேதனங்களைப் பற்றியும் உண்மையறிவு படைத்தவர்கள் என்று விளங்குகிறது. இந்த உண்மையறிவின் விளைவைப் பிற்பாதியில் எஞ்சிய பகுதி காட்டுகிறது. (ஸ்வஸ்தீத் யுக்த்வா) "ஜிதந்தே" என்பதுபோலே ப4க்தியின் மிகுதியினாலே மங்க3ளாஶாஸனம்செய்து. அன்றிக்கே "ஸேவிக்கத் தக்கவனைக்

याथात्म्यविदः स्वस्तीत्युक्त्वा पुष्कलाभिर्भगवदनुरूपाभिः स्तुतिभिः स्तुवन्ति ॥ २१ ॥

रुद्रादित्या वसवो ये च साध्या
विश्वेऽश्विनौ मरुतश्चोष्मपाश्च ।
गन्धर्वयक्षासुरसिद्धसङ्घा
वीक्षन्ते त्वां विस्मिताश्चैव सर्वे ॥ २२ ॥

22. ருத்3ராதி3த்யா: வஸவோ யே ச ஸாத்4யா:
விஶ்வேऽஶ்விநௌ மருதஶ்சோஷ்மபாஶ்ச ।
க3ந்த4ர்வயக்ஷாஸுரஸித்3த4ஸங்க4ா:
வீக்ஷந்தே த்வாம் விஸ்மிதாஶ்சைவ ஸர்வே ॥

ருத்3ராதி3த்யா:—(பதினெரு) உருத்திரர்களும், (பன்னிரு) ஆதி3த்தியர்களும், **வஸவ:**—(எட்டு) வஸுக்களும், **யே ச விஶ்வே ஸாத்4யா:**—ஸாத்4யதே3வர்கள் அனைவரும், **அஶ்விநௌ**—(இரு) அஶ்வினீதே3வர்களும், **மருத: ச**—(நாற்பத்தொன்பது) மருத்துக்களும், **ஊஷ்மபா: ச**—பித்ருக்களும், **க3ந்த4ர்வயக்ஷாஸுரஸித்3த4ஸங்க4ா:**-க3ந்த4ர்வர்கள் யக்ஷர்கள் அஸுரர்கள் ஸித்3த4ர்களின் கூட்டங்களான,

---

கண்டவுடன் ஸேவிப்பவன் சொல்லவேண்டிய '**ஸ்வஸ்தி**' என்னும் வசனத்தைச் சொல்லி" என்றும் பொருள் கொள்ளலாம். 'மஹாமதிகளுக்கும் ஞானம் கனிந்த நலமான ப4க்தியின் மிகுதியாலே அஸ்த2ாநே ப4யஶங்கை ஏற்பட்டு, எம்பெருமானுக்கும் மங்க3ளாஶாஸனம் செய்வது கூடும்' என்று உணராத சிலர் "கே3ாப்3ராஹ்மணர்களுக்கும் உலகத்துக்கும் மங்க3ளம் உண்டாகுக" என்று எம்பெருமானைப் பிரார்த்தி2ப்பதாக ப4ாஷ்யமிட்டது ப்ரகரணத்துக்குப் பொருந்தாது. (புஷ்கலாபி4: ஸ்துதிபி4: த்வாம் ஸ்துவந்தி) தங்களுடைய அறிவுக்கேற்ப உனக்கே பொருந்தும் நிறைந்த துதிகளாலே உன்னைத் துதிக்கிறார்கள். "கு3ணிநிஷ்ட2 கு3ணாபி4த4ாநம் ஸ்துதி:" [கு3ணங்கள் நிறைந்துள்ளவனிடமுள்ள கு3ணங்களைச் சொல்லுவதே துதியாகும்] எனப்படும் ஸ்துதி ஸகல கல்யாண கு3ணங்களையுடைய எம்பெருமான் விஷயத்திலேயே நிறைவுடையதாகுமன்றே. 21.

ஸர்வே ஸைவ — இவர்கள் அனைவருமே, **விஸ்மிதா:** — வியப்புற்றவர்களாய், **த்வாம்** — உன்னை, **வீக்ஷந்தே** — பார்க்கிறார்கள்.

---

23. உன்னை யரர்க ளருக்கர்வசு சாத்தியர்கள்
பின்விச்சு வாச்சுவிகள் பேசுமருத் — தன்னபிதுக்
கந்திருவர் யக்கர் கலந்தசுரர் சித்தரெல்லாம்
வந்துவியந் தேபார்ப்பர் மற்று.

மற்று — மேலும், **அரர்கள்** — (பதினொரு) உருத்திரர்களும், **அருக்கர்** — (பன்னிரு) ஆதி₃த்தியர்களும், **வசு** — (எட்டு) வஸுக்களும், **சாத்தியர்கள்** — ஸாத்₄யதே₃வர்களும், **பின் விச்சுவாச்சுவிகள்** - அடுத்துவரும் விஶ்வேதே₃வர்களும், அஶ்விநீதே₃வர்களும், **பேசு மருத்து** — (நாற்பத்தொன்பதாகப்) பேசப்படும் மருத்துக்களும், **அன்னபிது** — தே₃வர்களோடு ஒத்த தன்மையுடைய பித்ருக்களும், **கந்திருவர்** — க₃ந்த₄ர்வர்களும், **யக்கர்** — யக்ஷர்களும், **கலந்தசுரர்** — இவர்களோடு கலந்திருக்கும் அஸுரர்களும், **சித்தர்** — ஸித்₃த₄ர்களும், **எல்லாம் வந்து** — ஆகிய இவர்கள் அனைவரும் (இங்கு) வந்து, **வியந்தே** — வியப்புற்றவர்களாய், **உன்னை பார்ப்பர்** — உன்னைப்பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள்.

---

22. முப்பத்து முக்கோடிதே₃வர்களும், பித்ருக்களும், க₃ந்த₄ர்வர்கள் முதலானோரும் உன்னை வியப்புடன் காண்கிறார்கள் என்கிறான். (ருத்₃ரா ஆதி₃த்யா வஸவ: அஶ்விநௌ) பதினொரு ருத்₃ரர்களும், பன்னிரு ஆதி₃த்யர்களும், எட்டு வஸுக்களும், இரு அஶ்விநீதே₃வர்களும். இந்த முப்பத்துமூவரும் முப்பத்துமுக்கோடி தே₃வர்களுக்கும் தலைவர்கள். ''எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓர் இருவர்'' [முதல் திரு52] என்று பொய்கையாழ்வாரும், ''முப்பது மூவர்''[திருப்பாவை20] என்று ஆண்டாளும் ''விதியின் மக்களும் மாசில் எண்மரும் பதினொரு கபிலரும் தாமா இருவரும்''[பரிபாடல் 3] [கஶ்யப ப்ரஜாபதியின் மக்களான பன்னிரு ஆதி₃த்யர்களும், குற்றமற்ற எட்டு வஸுக்களும், பதினொரு உருத்திரர்களும், தாவும் பெண் குதிரைக்கு ஸூர்யனிடமிருந்து பிறந்த அஶ்விநீதே₃வதைகள் இருவரும்] என்று சங்ககாலத்தமிழரும் இந்த முப்பத்து மூவரைப்பற்றிப் பேசினர். (யே ச விஶ்வே ஸாத்₄யா:) '' யத்ர பூர்வே ஸாத்₄யாஸ் ஸந்தி தே₃வா: '' [பு·ஸூ] என்று

॥ भा ॥ ऊष्मपाः—पितरः, * ऊष्मभागा हि पितरः (अष्ट. १.३.१०.६१) इति श्रुतेः। एते सर्वे विस्मयमापन्नास्त्वां वीक्षन्ते ॥ २२ ॥

रूपं महत्ते बहुवक्त्रनेत्रं महाबाहो बहुबाहूरुपादम्।
बहूदरं बहुदंष्ट्राकरालं दृष्ट्वा लोकाः प्रव्यथितास्तथाऽहम् ॥ २३ ॥

23. ரூபம் மஹத்தே ப₃ஹுவக்த்ரநேத்ரம்
மஹாபா₃ஹோ ப₃ஹுபா₃ஹூருபாத₃ம் ।
ப₃ஹூத₃ரம் ப₃ஹுத₃ம்ஷ்ட்ராகராளம்
த்₃ருஷ்ட்வா லோகா: ப்ரவ்யதி₂தாஸ்ததா₂ऽஹம் ॥

மஹா பா₃ஹோ—நெடுந்தடக்கையனே! **ப₃ஹுவக்த்ர நேத்ரம்**—பல வாய்களையும், கண்களையும் உடையதாய், **ப₃ஹு பா₃ஹூருபாத₃ம்**—பல கைகளையும், துடைகளையும், கால்களையும் உடையதாய், **ப₃ஹூத₃ரம்** — பல வயிறுகளையுடையதாய், **ப₃ஹுத₃ம்ஷ்ட்ராகராளம்**—பல பற்களை

பரமபத₃த்தில் ப்ராப்யர்களாக ஓதப்பெற்ற நித்யஸூரிகளைக் கூறுகிறதாகவுமாம். ஆக்கரான தே₃வர்களிலேயே ஒருவகையினரைக் கூறுகிறதாகவுமாம். (மருதச்ச) "மரீசிர் மருதாமஸ்மி" [10-21] என்ற ஸ்லோகத்தின் வ்யாக்₂யானத்தில் விவரிக்கப்பெற்ற நாற்பத்தொன்பது மருத்துக்களாகிற வாயுக்களும். (ஊஷ்மபாஶ்ச) பித்ருக்களும். "ஊஷ்மபா₄கா₃ ஹி பிதர:" [யஜு. அஷ்ட 1-3-10-61] [ஆவியைப் பங்காகக்கொண்டவர்களன்றோ பித்ருக்கள்] என்று வேத₃ம் ஓதுகிறபடியே இப்பத₃ம் பித்ருக்களைக் குறிக்கிறது. தே₃வஜாதியோடு சேர்த்துப்படிக்கையாலே "ஊஷ்மபா:" என்னும் பத₃ம் இவ்வுலகில் ஆவியைப் பருகுகிறவர்களைக் குறிக்காமல் பித்ருலோகத்தில் வாழும் பித்ருக்களைக் குறிப்பதாகக்கொள்வதே உசிதம். (க₃ந்த₄ர்வயக்ஷாஸுரஸித்₃த₄ஸங்கா₄:) க₃ந்த₄ர்வர்கள், யக்ஷர்கள், அஸுரர்கள், ஸித்₃த₄ர்கள் ஆகியவர்களின் கூட்டங்கள். (ஸர்வே சைவ) முற்கூறிய இவர்கள் அனைவருமே. (விஸ்மிதா: த்வாம் வீக்ஷந்தே) அத்யாஶ்சர்யமான உனது விஶ்வரூபத்தைக் காண்கையாலே வியப்புற்றவர்களாய், வைத்த கண்வாங்காமல் உன்னைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறார்கள். 'விஶ்வே' என்னும் பத₃ம் விஶ்வேதே₃வர்களைக் குறிப்பதாக வெண்பாவில் வாதிகேஸரி ஜீயர் திருவுள்ளம்பற்றுகிறார். 22.

॥ भा ॥ बह्वीभिर्दंष्ट्राभिरतिभीषणाकारं लोकाः पूर्वोक्ताः प्रतिकूलानुकूलमध्यस्थास्त्रिविधाः सर्व एवाहं च तवेदमीदृशं रूपं दृष्ट्वा अतीव व्यथिता भवामः ॥ २३ ॥

யுடையதாகையால் மிக ப₄யங்கரமானதாய், **மஹத்**—மிகப் பெரியதான, **தே ரூபம்**—உனது உருவத்தை, **த்₃ருஷ்ட்வா**-பார்த்து, **லோகா:**—உலகினர் அனைவரும், **ப்ரவ்யதி₂தா:**—மிகவும் ப₄யந்திருக்கின்றனர், **தத₂ா அஹம்**—அப்படியே நானும் ப₄யந்திருக்கிறேன்.

---

24. உன்பெரிய ரூப மொளிர்முகங்கண் டோடுடைதாள்
வன்பல் வயிறெயிறு மாய்ப்பயமா—முன்படிகண்
டோங்குபுயத் தாயுலக முண்ணடுங்கு நானதிற்
ருங்குபயஞ் சார்வன் றளர்ந்து.

ஓங்கு புயத்தாய்—நெடுந்தடக்கையனே! **உன் பெரிய ரூபம் ஒளிர்முகம் கண் தோள் துடை தாள் வன் பல் வயிறு எயிறுமாய்** — உனது பெரிய உருவத்தில் விளங்கும் முகஙங்கள், கண்கள், தோள்கள், துடைகள், கால்கள், பலம்மிக்க பலவயிறுகள், பற்கள் ஆகியவற்றைக்கொண்டதாய், **பயமாம்**—மிக ப₄யங்கரமாயிருக்கும், **உன்படி கண்டு**—உனது விஶ்வரூபத்தைக்கண்டு, **உலகம்**—உலகினர், **உள் நடுங்கும்**—நெஞ்சு நடுங்குவர்; **அதிற்றுங்கு**—அதுபோலவே, **நான்**—நானும், **தளர்ந்து பயம் சார்வன்**—தளர்வடைந்து பயப்படுகிறேன்.

---

23. முந்தின ஶ்லோகத்தில் 'அனைவரும் வியப்புறுகின்றனர்கள்' என்று கூறப்பட்டது. இந்த ஶ்லோகத்தில் 'அனைவரும் ப₄யப்படுகின்றனர்கள்' என்று கூறப்படுகிறது. (மஹாப₃ாஹோ) "அலம் புரிந்த நெடுந்தடக்கை" [திருநெடு 6] என்கிறபடியே நீண்டு உருண்டு திரண்டு, பரமபுருஷத் தன்மையைக்காட்டும் கையை உடையவனே! (ப₃ஹுவக்த்ரநேத்ரம்) பல வாய்களையும் கண்களையும் உடையதாய். (ப₃ஹுப₃ாஹூருபாத₃ம்) பல கைகள் துடைகள் கால்கள் ஆகியவற்றை உடையதாய். (ப₃ஹூத₃ரம்) பல வயிறுகளையுடையதாய். ஒரே ரூபத்தில் பல வயிறுகள் கால்கள் முதலானவை எப்படியிருக்கமுடியும்? என்னும் கேள்விக்கு ஸமாத₄ானம் பத்தொன்பதாவது ஶ்லோக வ்யாக்₂யானத்தில் காட்டப்பெற்றது.

नभःस्पृशं दीप्तमनेकवर्णं
व्यात्ताननं दीप्तविशालनेत्रम्।
दृष्ट्वा हि त्वा प्रव्यथितान्तरात्मा
धृतिं न विन्दामि शमं च विष्णो॥ २४॥

24. நப$_4$ஸ்ஸ்ப்ருஶம் தீ$_3$ப்தமநேகவர்ணம்
வ்யாத்தாநநம் தீ$_3$ப்தவிஶாலநேத்ரம்।
த்$_3$ருஷ்ட்வா ஹி த்வா ப்ரவ்யதி$_2$தாந்தராத்மா
த்$_4$ருதிம் ந விந்த$_3$ாமி ஶமம் ச விஷ்ணோ॥

விஷ்ணோ — விஷ்ணுவே! **நப$_4$ஸ்ஸ்ப்ருஶம்** — பரமபத$_3$த்தைத் தொட்டு நிற்பவனாய், **தீ$_3$ப்தம்** — ஒளிவீசுகிறவனாய், **அநேக வர்ணம்**—பல நிறமுடையவனாய் **வ்யாத்தாநநம்**— விரியத்திறந்த வாயுடையவனாய், **தீ$_3$ப்தவிஶால நேத்ரம்**— ஒளிவீசும் பரந்த கண்களையுடையவனான, **த்வா**— உன்னை, **த்$_3$ருஷ்ட்வா** — கண்டு, **ப்ரவ்யதி$_2$தாந்தராத்மா**— மிகவும் பயந்த நெஞ்சுடையவனான நான், **த்$_4$ருதிம்**— தே$_3$ஹத$_4$ாரணத்தையும், **ஶமம் ச** — மனம் இந்த்$_3$ரியம் ஆகியவற்றின் த$_4$ாரணத்தையும், **ந விந்த$_3$ாமி ஹி** — அடையவில்லையன்றோ.

(ப$_3$ஹுத$_3$ம்ஷ்ட்ராகராளம்) பலபற்களையுடையதாகையாலே அதிப$_4$யங்கரமாயிருப்பதாய். (மஹத்) மிகப் பெரிதான. (தே ரூபம்) உனது ரூபத்தை. (த்$_3$ருஷ்ட்வா) பார்த்து. (லோகா: ப்ரவ்யதி$_2$தா:) இருபதாவது ஸ்லோகத்தில் "லோகத்ரயம் ப்ரவ்யதி$_2$தம்" என்றவிடத்திற்போலே ப்ரதிகூலர், அநுகூலர், இரண்டுமில்லாத நடுநிலை நிற்பவர் என்று மூன்றுவகைப்பட்ட உலகினர் அனைவரும் மிகவும் நடுங்குகின்றனர். (ப்ரவ்யதி$_2$தா:) "ப்ரஸ்த$_2$ாநம், ப்ரஸ்மரணம்" முதலானவிடங்களில் 'ப்ர' என்னும் உபஸர்க்க$_3$த்துக்கு எதிர்மறைப் பொருளும் உண்டாயினும், அப்பொருள் இங்கு பொருந்தாதாகையால், அவ்வுபஸர்க்க$_3$த்துக்கு மிகுதியாக என்னும் பொருளைக்கொண்டு 'மிகவும் ப$_4$யப்படுகிறார்கள்' என்று பொருள்கொள்ளப்பட்டது. (தத$_2$ா அஹம்) அவ்வண்ணமே நானும் மிகவும் ப$_4$யப்படுகிறேன். 23.

।।भा।। नभश्शब्दः * तदक्षरे परमे व्योमन् (ना) *आदित्यवर्णं तमसः परस्तात् (ना) * क्षयन्तमस्य रजसः पराके (यजु २. २. १२. ६८) *यो अस्याध्यक्षः परमे व्योमन् (अष्ट. २. ८. ९. ६)

---

25. வான்றடவி மேல்விளங்கி மன்னுபல வண்ணமாய்
ஆன்றமுக மங்காந் தவிரொளிசேர்ந்—தேன்றவிழித்
தோற்றுமுனைக் கண்டே துளங்கியுளந் திண்மையுட
னாற்றலுறே னாதா வமர்ந்து.

நாதா—ஸ்வாமியான விஷ்ணுவே! **மேல் வான் தடவி**—பரமபத₃த்தைத் தொடுகின்றவனாய், **விளங்கி**—ஒளிவீசுகின்றவனாய், **மன்னு பல வண்ணமாய்**—நிலைநின்ற பல நிறங்களையுடையவனாய், **ஆன்ற முகம் அங்காந்து**—ஆ என்று விரியத் திறந்த வாயையுடையவனாய், **அவிர் ஒளி சேர்ந்து ஏன்ற விழி தோற்றும்**—ஒளிவீசும் பரந்த கண்களுடன் காட்சியளிப்பவனான, **உனை**—உன்னை, **கண்டு**—பார்த்து, **உளம் துளங்கி**—பயந்த நெஞ்சையுடையவனாய், **திண்மையுடன்** — தே₃ஹத₄ாரணத்துடன், **அமர்ந்து**—இந்த்₃ரியங்கள் ஒருமுகப்பட்டு, **ஆற்றல் உறேன்**—த₄ரிக்க இயலாதவனாயிருக்கிறேன்.

---

24. சென்ற ஶ்லோகத்தில் "அனைவரும் ப₄யப்படுகிறார்கள். நானும் அப்படியே" என்று கூறினான். 'நானும் அப்படியே' என்பதை விவரிக்கின்றவனாய், இந்த ஶ்லோகத்தில் "நான் பயந்த நெஞ்சினனாய் ஶரீரேந்திரியங்கள் த₄ரிக்கப்பெறுகின்றிலேன்" என்கிறான் அர்ஜுனன். (நப₄ஸ்ஸ்ப்ருஶம்) பரமபத₃த்தைத் தொடுகின்றவனை. நப₄ஶ்ஶப்₃த₃ம் ஆகாஶத்தைக் குறிக்குமேயல்லது பரமபத₃த்தைக் குறிக்குமோ? எனில், "**தத₃க்ஷரே பரமே வ்யோமந்**" [தை-நா 1-2] [அப்பரப்பொருள் அழியாததான பரமாகாஶத்தில் எழுந்தருளியிருக்கிறது.] "**யோ அஸ்யாத்₄யக்ஷ: பரமே வ்யோமந்**" [யஜு அஷ்டக 2-8-9-6] [எந்தப் பரமாத்மா பரமாகாஶமாகிற பரமபத₃த்தில் எழுந்தருளியிருந்து இந்த லீலாவிபூ₄தியை ஆட்சிபுரிகின்றானோ] என்னும் ஶ்ருதிகளில் ஆகாஶத்தைச்சொல்லும் 'வ்யோம' ஶப்₃த₃ம் பரமாகாஶமாகிற பரமபத₃த்தைக் குறிப்பதைக் காண்

इत्यादिश्रुतिसिद्धत्रिगुणप्रकृत्यतीतपरमव्योमवाची, सविकारस्य प्रकृतितत्त्वस्य, पुरुषस्य च सर्वावस्थस्य, कृत्स्नस्याश्रयतया नभस्स्पृशमिति वचनात्, * द्यावापृथिव्योरिदमन्तरं हि व्याप्तमिति पूर्वोक्तत्वाच्च।

கின்றோம். அதுபோலவே நப₄ஸ்ஸ்ப்ருஶம் இங்கு பரமபத₃த்தைக் குறிக்கின்றது என்று கண்டுகொள்வது. நப₄ஸ்ஸ்ப்ருஶம் ப்ரஸித்₃த₄மான ப்ராக்ருதமான ஆகாஶத்தைச் சொல்லுகிறது என்றோ, க₃ார்க்கி₃வித்₃யையில் ஆகாஶமெனப்படும் மூலப்ரக்ருதியைக் குறிக்கிறது என்றோ கொள்வதில் குறையென்ன? எனில்: இந்த விஶ்வரூபம் "இஹைகஸ்த₂ம் ஜக₃த் க்ருத்ஸ்னம்" [11-7] என்று தொடங்கும் ஶ்லோகத்தில் கூறியபடி ஆகாஶம் முதலான எல்லா விகாரப்பொருள்களையும், அவற்றுக்கு மூலமான ப்ரக்ருதியையும், விழிப்பு முதலான எல்லா நிலைகளிலுமுள்ள ஜீவனையும் தன்னுள் அடக்கியது. "ப₃ஹூன்யத்₃ருஷ்டபூர்வாணி பஶ்ய" [11-6] என்கிறபடியே இந்த லீலாவிபூ₄தியில் நாம் காணாத பல பொருள்களையும் தன்னுள் அடக்கியிருப்பது. அப்படிப்பட்ட இந்த விஶ்வரூபம் ஆகாஶத்தைத் தொடுவதாயுள்ளது என்று சொல்லும்போது அந்த ஆகாஶம் அந்த உருவத்தினுள் அடங்கியிருக்கும் ப்ராக்ருதாகாஶமாயிருக்கமுடியாது. முக்குணமயமான இந்த லீலாவிபூ₄திக்கு அப்பாற்பட்ட பரமாகாஶமாகவே இருக்கமுடியும். "ஆதி₃த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" [பு.ஸூ 2-2] [தமோகு₃ணமுள்ள தமஸ்ஸுக்கு (மூலப்ரக்ருதிக்கு) அப்பாற்பட்ட பரமபத₃த்தில் ஸூர்யன்போல் ஒளிவீசுகிறவனாய் எழுந்தருளியிருக்கும் பரமபுருஷனை] "க்ஷயந் தமஸ்ய ரஜஸ: பராகே" [யஜு 2-2-12-68] [இந்த ரஜோகு₃ணமுள்ள ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்ட பரமபத₃த்தில் எழுந்தருளியிருப்பவனை] என்னும் வேத₃வாக்யங்கள் ரஜஸ்தமோகு₃ணங்கள் நிறைந்த இந்த ப்ரக்ருதிமண்ட₃லத்துக்கு அப்பாற்பட்ட பரமாகாஶம் என்னும் பரமபத₃ம் இருப்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆகையால் இந்த ஶுத்₃த₄ஸத்வமயமான பரமாகாஶமே இங்கு நப₄ஸ்ஸ்ப்ருஶ₃த்தினால் சொல்லப்படுகிறது என்று கொள்ளவேண்டும். மேலும் "த்₃யாவாப்ருதி₂வ்யோரித₃மந்தரம் ஹி வ்யாப்தம்" [11-20] என்னும் ஶ்லோகத்தில் மேலுலகங்களுக்கும் கீழுலகங்களுக்கும் இடையிலுள்ள இடைவெளியாகிற ஆகாஶம் விஶ்வரூபத்தால் வியாபிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அந்த விஶ்வரூபம் ஓர் ஆகாஶத்தைத் தொடுகிறது என்று சொல்லும்போது அவ்வாகாஶம் வியாபிக்கப்பட்ட ப்ராக்ருதாகாஶத்தைக் காட்டிலும் வேறுபட்ட பரமாகாஶ

दीप्तमनेकवर्णं व्यात्ताननं दीप्तविशालनेत्रम् त्वां दृष्ट्वा प्रव्यथितान्त-रात्मा—अत्यन्तभीतमनाः धृतिं न विन्दामि—देहस्य धारणं न लभे; मनसश्चेन्द्रियाणां च शमं न लभे। विष्णो—व्यापिन्। सर्वव्यापिनं

மாகவே இருக்கவேண்டும். (தீ$_3$ப்தம்) ஒளிவீசுகின்றவனை. ''தி$_3$வி ஸூர்ய ஸஹஸ்ரஸ்ய'' [11-12] என்னும் ஶ்லோகத்தில் இந்த விஶ்வரூபத்தின் ஒளி ஆயிரக்கணக்கான ஸூர்யர்களின் ஒளியை ஒத்தது என்று சொல்லப்பட்டதன்றே. (அநேகவர்ணம்) செந்தாமரைத் தடங்கண் செங்கனிவாய்ச் செங்கமலம் செந்தாமரையடிகளை யும், நீலமேனியையும், உள்ளே வெண்பல் இலகு சிவந்தவாயையும், திருமார்பில் ஹிரண்யவர்ணையான ஸ்ரீதே$_3$வியையும், பல பல ஆப$_4$ரணங்களையும், வைஜயந்தீ வநமாலையையும்கொண்ட இந்த விஶ்வரூபம் பல நிறங்களையுடையதாகவே இருக்குமன்றே. வேறிடங்களிலும் விஶ்வரூபத்தை வர்ணிக்கும்போது அது பல நிறங்களையுடையது என்று சொல்லப்பட்டதன்றே. (வ்யாத்தாநநம்) ''பொங்கார் கடலும் பொருப்பும் நெருப்பும் நெருக்கிப் புகப்பொன்மிடறத்தனைபோது அங்காந்தவன்'' [பெரியதிரு 10-6-1] என்கிறபடியே ப்ரளயகாலத்திற் போலே விரியத்திறந்த வாயையுடையவனை. (தீ$_3$ப்தவிஶாலநேத்ரம்) ''தஸ்ய யதா$_2$ கப்யாஸம் புண்ட$_3$ரீகமேவமக்ஷிணீ'' [ச$_2$ாந் 1.6.7] [அப்பரமபுருஷனுக்கு ஸூர்யனால் மலர்ந்த தாமரைபோன்ற இரு கண்கள் உள] ''கண்கள் சிவந்து பெரியவாய்'' [திருவாய் 8-8-1] ''கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரிய வாய கண்கள்'' [அமலனாதி 8] என்று உப$_4$யவேத$_3$ங்களாலும் முழங்கப்பெற்ற ஒளிவீசும் பரந்த கண்களையுடையவனை. (த்வா த்$_3$ருஷ்ட்வா) அப்படிப்பட்ட உன்னைக்கண்டு. (ப்ரவ்யதி$_2$தாந்தராத்மா) மிகவும் பயந்த நெஞ்சையுடையவனாய். இவ்வந்தராத்மஶப்$_3$த$_3$ம் ஜீவஸ்வரூபத்தைச் சொல்லுவதாகாதோ? எனில் 'ப்ரவ்யதி$_2$த:' என்பதாலேயே அப்பொருள் ஸித்$_3$தி$_4$க்குப்போது 'அந்தராத்ம' ஶப்$_3$த$_3$ம் பயனற்றதாகிவிடும். ஆகையால் கீ$_3$தையில் மற்றும் பல இடங்களிற்போலே 'ஆத்ம'ஶப்$_3$த$_3$ம் மனத்தைக் குறிக்கிறது என்றே கொள்ளவேண்டும். அந்நமய ப்ராணமயங்களைக் காட்டிலும் மனோமயம் நுண்ணியதாய், அவற்றிற்கு உள்ளிருப்பதாகையாலே, மனஸ்ஸை 'அந்தராத்மா' என்றும் கூறலாம். ஆக 'ப்ரவ்யதி$_2$தாந்தராத்மா' என்றது மிகவும் பயந்த நெஞ்சுடையவனாய் என்றதாகிறது. அசேதனமான நெஞ்சை ப$_4$யந்ததாகக்கூறுவது சேதனஸமாதி$_4$யாலே. இப்படிச் சைதன்யத்தை ஏறிட்டுச்

अतिमात्रमत्यद्भुतमतिघोरं च त्वां दृष्ट्वा प्रशिथिलसर्वावयवो व्याकुलेन्द्रियश्च भवामीत्यर्थः ॥ २४ ॥

दंष्ट्राकरालानि च ते मुखानि
दृष्ट्वैव कालानलसन्निभानि ।
दिशो न जाने न लभे च शर्म
प्रसीद देवेश जगन्निवास ॥ २५ ॥

சொல்லுவது ப$_4$யத்தின் மிகுதியைக் காட்டுகிறது. (த்$_4$ருதிம் ந விந்த$_3$ாமி) தே$_3$ஹத$_4$ாரணத்தை உடையவனாகின்றேனல்லேன். த்$_4$ருதிஶப்$_3$த$_3$ம் ப்ரீதியையும் குறிக்குமாயினும், "ந லபே$_4$ ச ஶர்ம" [11.25] என்று அடுத்த ஶ்லோகத்தில் தான் ஸுக$_2$த்தை அடையவில்லை என்று கூறுகிறானாகையாலே, இங்கு த்$_4$ருதிஶப்$_3$த$_3$ம் ஸுக$_2$த்தின் ஒருவகையான ப்ரீதியைக்குறிக்கமாட்டாது. ஆகையால் த்$_4$ருதிஶப்$_3$த$_3$த்துக்கு இங்கு 'த$_4$ாரணம்' என்னும் பொருளையே கொள்ளவேண்டும். எதனுடைய த$_4$ாரணம் என்று சொல்லாவிடிலும், ப்ரகரணத்தாலும் அர்த்த$_2$ஸ்வப$_4$ாவத்தாலும் தே$_3$ஹத$_4$ாரணமே இங்கு த்$_4$ருதிஶப்$_3$த$_3$த்தால் குறிக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். (ஶமம் ச ந விந்த$_3$ாமி) ஶமஶப்$_3$த$_3$ம் மனமும் இந்த்$_3$ரியங்களும் அடங்கியிருத்தலைக்குறிக்கும். தே$_3$ஹத$_4$ாரணத்தைச் சொன்ன பிறகு மனம் இந்த்$_3$ரியங்களை த$_4$ரித்துநிற்றலை ஶமஶப்$_3$த$_3$த்துக்குப் பொருளாகக் கொள்வதே உசிதம். ஆக, மனமும் இந்த்$_3$ரியங்களும் த$_4$ரித்துநிற்கப்பெற்றிலேன் என்றதாகிறது. இப்படிக் கொள்ளாவிடில் புநருக்தி ஏற்படும். (விஷ்ணோ!) ஸர்வவ்யாபியானவனே! வெறும் பேரைக் குறிப்பதாகக்கொள்வதைக் காட்டிலும் "விஷ்லு வ்யாப்தௌ" என்னும் த$_4$ாதுவிலிருந்து ஸித்$_3$தி$_4$க்கும் ஸர்வவ்யாபித்வம் குறிக்கப்படுகிறது என்பதே பொருத்தமானது. ஸர்வவ்யாபியான விஶ்வரூபத்தை வர்ணிக்கும் இந்த ப்ரகரணத்துக்கு இப்பொருள் மிகப்பொருத்தமன்றோ. ஆக, இந்த ஶ்லோகத்தால் "அனைத்தையும் வியாபித்திருப்பவனும், பேரளவுடையவனும், அத்யாஶ்சர்யமானவனும், அதிகோ$_4$ரமானவனுமான உன்னைக் கண்டு எல்லா அவயவங்களும் மிகவும் தளர்ந்தவனாய், இந்த்$_3$ரியங்கள் அனைத்தும் கலங்கியவனாகிறேன்" என்று சொல்லப்பட்டதாகிறது. 24.

25. த₃ம்ஷ்ட்ராகராளாநி ச தே முக₂ாநி
த்₃ருஷ்ட்வைவ காலாநலஸந்நிப₄ாநி।
தி₃ஶோ ந ஜாநே ந லபே₄ ச ஶர்ம
ப்ரஸீத₃ தே₃வேஶ ஜக₃ந்நிவாஸ ॥

தே₃வேஶ—தேவர் தலைவனே! **ஜக₃ந்நிவாஸ!**—உலகங்கட்கெல்லாம் இருப்பிடமாயிருப்பவனே!, **த₃ம்ஷ்ட்ராகராளாநி**—பற்களால் ப₄யங்கரமாயிருப்பவையாய், **காலாநல ஸந்நி₄பாநி ச**—ஊழிகாலத் தீயைப் போன்றவையுமான, **தே**—உன்னுடைய, **முக₂ாநி** — முக₂ங்களை, **த்₃ருஷ்ட்வா ஏவ**—பார்ப்பதாலேயே, **தி₃ஶ:**—தி₃க்குகளை, **ந ஜாநே**—அறிகின்றேனல்லேன்; **ந ச ஶர்ம லபே₄**—ஸுக₂த்தையுமடைகின்றேனல்லேன். **ப்ரஸீத₃**—(என்னைக் குறித்து) உகந்தருளுவாயாக.

---

26. மேலா மெயிற்றுன் மிகுபயமா முன்முகங்கள்
காலா னலன்போலே கண்டேநான்—மாலாகித்
திக்கறியே னின்பமுறேன் றேவேசா விச்சகத்துத்
தக்கவிருப் பேயருணீ தான்,

தேவேசா!—தே₃வர் தலைவனே! **இச்சகத்துத் தக்க இருப்பே**—இந்த உலகத்திற்குப் பொருத்தமான இருப்பிடமே! **மேலாம் எயிற்றால்** — உறுதியான பற்களால் **காலாநலன்போலே**—ஊழிக்காலத்தீயைப் போலே, **மிகு பயமாம்**—மிகுந்த ப₄யங்கரமாயிருக்கும், **உன் முகங்கள்**—உனது முக₂ங்களை, **கண்டே** — காண்பதாலேயே, **நான்** — நான், **மாலாகி**—மயங்கி, **திக்கு அறியேன்**—தி₃க்குகளை அறிகின்றேனல்லேன். **இன்பமும் உறேன்** — ஸுக₂த்தையுமடைகிறேனல்லேன். **நீ தான் அருள்** —நீயே உகந்தருளவேணும்.

---

25. "உன்னுடைய மற்ற அவயவங்களைக் காட்டிலும் முக₂ங்கள் மிகவும் ப₄யங்கரங்களாய் இருக்கின்றன. அவற்றைக்கண்டு மிகவும் ப₄யந்திருக்கும் எனது ப₄யத்தை நீயே உகந்து போக்கியருளவேணும்" என்கிறான் அர்ஜுனன். (காலாநலஸந்நிப₄ாநி) ஊழிகாலத் தீயைப்போன்றவை. அவற்றைப்போலே இந்த யுத்₃த₄களத்

॥ भा ॥ युगान्तकालानलवत्सर्वसंहारे प्रवृत्तान्यतिघोराणि तव मुखानि दृष्ट्वा दिशो न जाने; सुखं च न लभे। जगतां निवास! देवेश!—ब्रह्मादीनामीश्वराणामपि परममहेश्वर! मां प्रति प्रसन्नो भव। यथाहं प्रकृतिं गतो भवामि, तथा कुर्वित्यर्थः ॥ २५ ॥

தில் உள்ள பெரும்பான்மையினரைக் கொல்லுவதற்கு முற்பட்டு நிற்பவை என்று கருத்து. எம்பெருமானே காலத்துக்கு அபி₄மானியாகையாலே, ஊழிகாலத்தின் செயலான ஸம்ஹாரத்தைச் செய்ய முற்பட்டுவிட்டான் என்று கருத்து. (த₃ம்ஷ்ட்ராகராளாநி ச) பற்களாலே மிகவும் ப₄யங்கரமாகவுமிருப்பவை. கராளஶப்₃த₃ம் பற்கள் நிறைந்திருப்பதையோ, விகாரமுடையதாயிருப்பதையோ, ப₄யங்கரமாயிருப்பதையோ காட்டும். இத்தால் மிகவும் கோ₄ரமாயிருப்பவை என்றதாயிற்று. இப்படியிருப்பவை எவை? எனில்: (தே முக₂ாநி) உனது விஶ்வரூபத்திலுள்ள முக₂ங்களே இப்படியிருக்கின்றன. (த்₃ருஷ்ட்வா ஏவ தி₃ஶோ ந ஜாநே) அவற்றைப் பார்ப்பதாலேயே எனக்கு தி₃சைகள் தெரியவில்லை. (ஶர்ம ச ந லபே₄) அவற்றைப் பார்ப்பதாலேயே நான் ஸுக₂த்தையும் அடையவில்லை; பெருந்துன்பத்தையே அடைகிறேன் என்று கருத்து. "த்₃ருஷ்ட்வைவ" [பார்ப்பதாலேயே] என்கிறவிடத்தில் ஏவகாரத்தாலே உனது முக₂த்தால் தீண்டப்பட்டிருந்தால் அழிந்தேபோயிருப்பேன் என்னும் கருத்து உணர்த்தப்படுகிறது. (ஜக₃ந்நிவாஸ) உலகிற்கெல்லாம் இருப்பிடமாயிருப்பவனே! அந்யபத₃ார்த்த₂ப்ரத₄ானமான ப₃ஹுவ்ரீஹிஸமாஸத்தைக் காட்டிலும் உத்தரபத₃ார்த்த₂ ப்ரத₄ானமான தத்புருஷஸமாஸம் ஏற்புடையதாகையாலே, 'ஜக₃தாம் நிவாஸ' என்று ப₄ாஷ்யத்தில் அதுவே கைக்கொள்ளப்பட்டது. "இஹைகஸ்த₂ம்" என்று தொடங்கும் ஏழாம் ஶ்லோகத்தின் பொருளான ஸர்வாத₄ாரத்வமும் தத்புருஷஸமாஸத்தைக் கொள்ளும்போது விவரிக்கப்பட்டதாகும். (தே₃வேஶ) தே₃வர் தலைவனே! "தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் தம் தே₃வதாநாம் பரமம் ச தை₃வதம்" [ஶ்வே 6-7] [ஈஶ்வரர்களுக்கு மேலான மஹேஶ்வரனும், தே₃வதைகளுக்கு மேலான தே₃வதையுமானவனை] என்று உபநிஷத்துக்களில் 'பிரமன் ஶிவன் முதலான ஈஶ்வரர்களுக்கும் மேலான மஹேஶ்வரனாய், மேலான தே₃வதையாயிருப்பவன் பரமபுருஷனே' என்று கூறியிருப்பதை நேரே காண்கின்றேன் என்று கருத்து. இதனால் பிரமன் முதலானவர்களே உன்னைக்காண இயலாதவர்களாயிருக்கும்போது

॥ भा ॥ एवं सर्वस्य जगतः स्वायत्तस्थितिप्रवृत्तित्वं दर्शयन् पार्थसारथी राजवेषच्छद्मनाऽवस्थितानां धार्तराष्ट्राणां यौधिष्ठिरेष्वनुप्रविष्टानां चासुरांशानां संहारेण भूभारावतरणं स्वमनीषितं स्वेनैव करिष्यमाणं पार्थाय दर्शयामास। स च पार्थो भगवतः स्रष्टृत्वादिकं सर्वैश्वर्यं साक्षात्कृत्य तस्मिन्नेव भगवति सर्वात्मनि धार्तराष्ट्रादीनामुपसंहारमनागतमपि तत्प्रसादलब्धेन दिव्येन चक्षुषा पश्यन्निदं [चो] प्रोवाच—

अमी [च त्वा] सर्वे धृतराष्ट्रस्य पुत्राः
सर्वैस्सहैवावनिपालसङ्घैः।
भीष्मो द्रोणस्सूतपुत्रस्तथाऽसौ
सहास्मदीयैरपि योधमुख्यैः॥ २६ ॥

वक्त्राणि ते त्वरमाणा विशन्ति
दंष्ट्राकरालानि भयानकानि।
केचिद्विलग्ना दशनान्तरेषु
संदृश्यन्ते चूर्णितैरुत्तमाङ्गैः॥ २७॥

நான் எம்மாத்திரம்? என்னும் கருத்து உணர்த்தப்படுகிறது. (ப்ரஸீத₃) இப்படி மிகத் தாழ்ந்தவனுகையாலே மிகவும் ப₄யந்திருக்கும் என்னிடம் உகந்தருளவேணும் என்றபடி. இதற்குமுன் கண்ணனுக்கு அர்ஜுனனிடம் கோபமிருந்தால்தானே 'உகந்தருளவேணும்' என்று பிரார்த்தி₂க்கலாம்; அப்படிக்கோபம் இருந்ததாகத் தெரியவில்லையே? எனில்: இங்கு 'ப்ரஸீத₃' (உகந்தருளவேணும்) என்றது "உனது ப₄யங்கரமான உருவத்தைக் கண்டு மிகவும் ப₄யந்திருக்கும் நான் அந்த ப₄யம் தெளிந்து இயற்கைநிலையை அடையும்படி செய்தருளவேணும்" என்றே பொருள்படுகிறது. "கோபத்தை ஆற்றியருளவேணும்" என்று பொருள்படவில்லை. ஆகையாலே குறையில்லை. 25.

26. அமீ[ச த்வா]ஸர்வே த்4ருதராஷ்ட்ரஸ்ய புத்ராஃ
ஸர்வைஸ்ஸஹைவாவநிபாலஸங்கை4ஃ ।
பீ4ஷ்மோ த்3ரோணஸ்ஸூதபுத்ரஸ்தத2ாஸௌ
ஸஹாஸ்மதீ3யைரபி யோத4முக்2யைஃ ॥

27. வக்த்ராணி தே த்வரமாணு விஶந்தி
த3ம்ஷ்ட்ராகராளாநி ப4யாநகாநி ।
கேசித்3விலக்3நா த3ஶநாந்தரேஷு
ஸந்த்3ருஶ்யந்தே சூர்ணிதைருத்தமாங்கை3ஃ ॥

26, 27. இருபத்தாறுமுதல் முப்பதிருக உள்ள ஶ்லோகங்களில் மஹாப4ாரத யுத்3த4த்தில் கௌரவபக்ஷத்தில் இருக்கும் பெரும் பாலானவர்களையும், பாண்ட3வபக்ஷத்திலும் அஸுராவேஶமுள்ள சிலரையும் தானே அழிக்கப்போவதைக் காட்டுவதன்மூலம் அர்ஜுனனைப் போர்செய்யத் தூண்டுவதற்காக விஶ்வரூபத்தின் வாயில் நுழைந்து அவர்கள் அழிகிறபடியைக் காட்டுகிருன் கண்ணன். இதுவரையில் நடந்த கீ3தைப் பகுதியாலே "உலக னைத்தும் தனக்கு அதீ4னமான ஸத்தா ஸ்தி2தி ப்ரவ்ருத்திகளை உடையது" என்று கண்ணன் விளக்கியதும், ப4ாரதப்போரில் இவர் களை ஸம்ஹாரம் செய்யப்போகிறவன் தானே; அர்ஜுனன் வெறும் நிமித்த மாத்திரமே என்று உணர்த்துவதற்காகவே என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்து பார்த்த2னுக்கு ஸாரதி2யாயிருக்கும் கண்ணன் அரசர் உருக் கொண்டு பிறந்து போர்க்களத்திலே நிற்கும் அஸுரர்களான த்4ருத ராஷ்ட்ர புத்ரர்கள் நூற்றுவரையும், யுதி4ஷ்டி2ரர் ஸேனையிலிருக்கும் அத்தகைய சிலரையும் அழிப்பதன்மூலம் பூ4மிப4ாரத்தைக் குறைப்ப தாகிற தன் திருவுள்ளக் கருத்தைத் தானே நடத்திவைக்கப்போவதைப் பார்த்த2னுக்குக் காட்டுகிருன் இந்த ஶ்லோகங்களில். அந்தப் பார்த் த2னும் உலகனைத்தையும் படைத்து அளித்து அழித்தல் முதலான எல்லாப் பெருமைகளையும் உடையவன் ப4க3வானன கண்ணனே என்று நேரே கண்டு, அத்தகைய ஸர்வாந்தர்யாமியாய், அதனுலேயே எல்லாமாயிருப்பவனுய், ஸத்யஸங்கல்பனை அவனே த்4ருதராஷ்ட்ர புத்ரர்கள் முதலான அனைவரும் அழிவதற்கு எல்லாவகைக் காரண மாகவுமிருப்பவன் என்பதையும், உலகினரால் காண்பரியதான விஶ்வரூபத்தைக்கொண்டு அனைத்தையும் விழுங்கும் அவனே அந்த

அமீ ஸர்வே த்$_4$ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா:—எதிரே காட்சியளிக்கும் த்$_4$ருதராஷ்ட்ரனுடைய புத்ரர்கள் நூற்றுவரும், **பீ$_4$ஷ்ம:**—பீ$_4$ஷ்ம பிதாமஹரும், **த்$_3$ரோண:**—(ஆசார்யரான) த்$_3$ரோணரும், **தத$_2$ா அஸௌ ஸூதபுத்ர:**—அவ்வண்ணமே எதிரே காட்சியளிக்கும் கர்ணனும் (ஆகியவர்கள்), **அவநிபாலஸங்கை$_4$: ஸர்வை: ஸஹ**—(அவர்களைச் சேர்ந்த) அரசர் கூட்டங்களோடும், **அஸ்மதீ$_3$யை: அபி யோத$_4$முக்$_2$யை: ஸஹ**—நம்மைச் சேர்ந்த சில வீரர்தலைவர்களோடும் கூட, **த$_3$ம்ஷ்ட்ராகராளாநி**—வளைந்த பற்களை உடையவையாய், **ப$_4$யாநகாநி**—மிகவும் ப$_4$யங்கரமாயிருப்பவையான, **தே வக்த்ராணி**—உனது வாய்களுக்குள்ளே, **த்வரமாணா: ஏவ விஶந்தி**—(அழிவின் பொருட்டு) விரைவுடனே நுழைகின்றார்கள். **கேசித்**—அவர்களில் சிலர், **சூர்ணிதை: உத்தமாங்கை$_3$:**—துண்டு துண்டாக்கப்பட்ட தலைகளோடு கூடியவர்களாய், **த$_3$ஶநாந்தரேஷு விலக்$_3$நா:**—பற்களின் இடைவெளிகளில் தொங்குகின்றவர்களாக, **ஸந்த்$_3$ருஶ்யந்தே**—காணப்படுகிறார்கள்.

---

27. அந்தன் புதல்வரிவ ரல்லா நிருபருடன்
பந்தமுறு பாட்டன் றுரோணன்தான்—முந்துற்றுக்
கன்னனிவ னம்படையிற் காவலரோ டெல்லாருந்
துன்னவுனைச் சேர்ந்திடுவர் தொக்கு.

அந்தன் புதல்வர் இவர்—குருடனான த்$_4$ருதராஷ்ட்ரனின் புத்திரர்களான இவர்கள், **பந்தமுறு பாட்டன்**—

ஸம்ஹாரத்துக்கு மிக முக்$_2$யமான ஹேது என்பதையும், அர்ஜுனனாகிற தன் கையில் அம்புகள்போலவே தானும் காக்கை உட்காரப் பனம்பழம் விழுமிடத்திற்போலே இவர்களது அழிவிற்கு ஒரு வியாஜமாத்ரமாகவே இருப்பவன் என்பதையும், இனிமேல் நடக்கப்போவதாயினும் இவற்றையெல்லாம் கண்ணன் அருளாலே பெற்ற தி$_3$வ்யசக்ஷுஸ்ஸாலே கண்டு பின்வருமாறு கூறினான். நடக்கப்போவதையும் நேரே காண்கையால் நடப்பதுபோலவே கூறுகின்றான் என்றும் கொள்ளலாம். ஆகையால் கண்ணெதிரே நிற்பவர்களை அழிகின்றவர்களாகக்காண்பது இந்த்$_3$ரஜாலம் போன்றதோ

॥ भा ॥ अमी धृतराष्ट्रस्य पुत्राः दुर्योधनादयस्सर्वे भीष्मो

(பேரர்களிடம்) பாசமுள்ள பாட்டனை பீ$_4$ஷ்மன், **துரோணன் தான்**—துரோணுசார்யர், **முந்துற்று கன்னன் இவன்**—முன்னே நிற்கும் கர்ணனுகிற இவன், (ஆகிய வர்கள்) **அல்லா நிருபருடன்**—(அவர்களைச் சேர்ந்த) அரசர் கூட்டங்களோடு, **நம் படையில் காவலரோடு**—நம் படை யைச் சேர்ந்த (சில) அரசர்களோடு, **எல்லாரும்**—அனை வரும், **தொக்கு** — ஒன்றுசேர்ந்து, **துன்ன** — நெருக்கிக் கொண்டு, **உனை சேர்ந்திடுவர்**—உன்னிடம் வருகிறுர்கள்.

23. ஆங்கவர்க ளுன்ற னதிபயமாம் வல்லெயிற்
றேங்கு முகங்களிடை யுற்றுவிரை ந்—தீங்கடைவர்
நின்சினத்தாற் பல்லிடையி னின்றுசிலர் பல்பொடியா
மன்சிரத்தாற் றேன்றுவர்கண் மற்று.

ஆங்கு அவர்கள்—அத்தகைய அவர்கள், **உன் தன்**—உன்னுடைய, **அதிபயமாம்**—மிகவும் ப$_4$யங்கரமாயிருக்கும், **வல் எயிற்று**—உறுதியான பற்களையுடைய, **ஓங்கு முகங்க ளிடை உற்று**—உயர நிற்கும் வாய்களுக்குள்ளே நுழைந்து, **ஈங்கு விரைந்து அடைவர்** — அவற்றின் உள்ளே விரை வாகச் செல்வர், **மற்று** — மேலும், **நின் சினத்தால்**— உனது கோபத்தாலே, **சிலர்**—இவர்களில் சிலர், **பல் இடையில் நின்று**—பற்களுக்கு நடுவில் தொங்குகின்றவர்க ளாய், **பல்பொடியாம் மன்சிரத்தால் தோன்றுவர்கள்**—தங்க ளுடைய சிறந்த தலைகள் பல பொடிகளாக ஆக்கப்பட்டுக் காட்சியளிக்கிறுர்கள்.

என்னும் ஐயம் தவிர்க்கப்படுகிறது. (அமீ ஸர்வே த்$_4$ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா:) த்$_4$ருதராஷ்ட்ரனின் புதல்வர்களான து$_3$ர்யோத$_4$னன் முதலான இந்த நூற்றுவரும். (பீ$_4$ஷ்ம:) பாண்ட$_3$வருக்கும் கௌர வருக்கும் பாட்டனரான பீ$_4$ஷ்மரும். அனைவரிலும் பெருவீரராகை யாலும், முதலில் விழப்போகும் ஸேனைத்தலைவராகையாலும் ஸேனைத் தலைவர்களுக்குள் முதலில் படிக்கிறுன். (த்$_3$ரோண:) பாண்ட$_3$வ கௌரவர்களுக்கு ஆசார்யரான த்$_3$ரோணரும். விரத்தில் பீ$_4$ஷ்ம

द्रोणस्सूतपुत्रः—कर्णश्च तत्पक्षीयैरवनिपालसमूहैस्सर्वैरस्मदीयैरपि कैश्चिद्यो-

ருக்கே அடுத்தபடியானவராய் அவருக்கு அடுத்தபடி விழப்போகும் ஸேனைத்தலைவராகையாலே இரண்டாவதாகப் படிக்கிறான். (தத$_2$ா அஸௌ ஸூத புத்ர:) அவ்வண்ணமே இந்தத் தேர்ப்பாகன் மகனான கர்ணனும். கௌரவஸேனையில் த்$_3$ரோணருக்கு அடுத்தபடி பெரிய வீரனாய் அவருக்கு அடுத்தபடி விழ இருக்கும் ஸேனைத்தலைவனாகை யாலே கர்ணனை மூன்றாவதாகப் படிக்கிறான். (ஸர்வை: அவநிபால ஸங்கை$_4$: ஸஹைவ) கௌரவஸேனையைச் சேர்ந்த எல்லா அரசர் கூட்டங்களோடும் கூடவே. நாலாவது பாத$_3$த்தில் "அஸ்மதீ$_3$யை: யோத$_4$முக்$_2$யைஸ் ஸஹ" என்று பாண்ட$_3$வ பக்ஷத்தில் உள்ள போர்த்தலைவர்களைத் தனியே எடுக்கையால் "அவநிபாலஸங்கை$_4$:" என்று இங்கே கௌரவபக்ஷத்திலுள்ள போர்த்தலைவர்களை எடுப்ப தாகக் கொள்ளவேண்டும். கௌரவர் நூற்றுவரையும்போலே அவர் களைச் சார்ந்திருந்த போர்த்தலைவர்கள் அனைவருமே அழியப் போகிறார்கள் என்பதை "ஸர்வை:" என்னும் பத$_3$ம் காட்டுகிறது. (அஸ்மதீ$_3$யை: யோத$_4$முக்$_2$யை: ஸஹ) நம்முடைய பக்ஷத்தைச் சேர்ந்த சில போர்த்தலைவர்களோடு கூட. இரண்டாவது பாத$_3$த் தில் உள்ளதுபோலே இங்கு "ஸர்வை:" என்னும் பத$_3$ம் இல்லாத தாலும், "யோத$_4$முக்$_2$யை:" என்று குறிக்கையாலும் பாண்ட$_3$வ பக்ஷத்தில் அனைவரும் அழிக்கப்படவில்லை என்றும், சில போர்த் தலைவர்களே அழிக்கப்பட்டார்கள் என்றும் உணர்த்தப்படுகிறது. (வக்த்ராணி தே த்வரமாணா: விஶந்தி) உனது வாய்களுக்குள்ளே விரைவாக அழிவின் பொருட்டு நுழைகிறார்கள். எவர்கள் ப$_4$க$_3$வத்$_3$ பா$_4$க$_3$வதாபசாரங்களை எவ்வளவு விரைவாகச் செய்கிறார்களோ, அவர்கள் உன்னால் அவ்வளவு விரைவாக அழிக்கப்பட இருக்கிறார்கள் என்று 'த்வரமாணா' பத$_3$த்தின் கருத்து. அன்றிக்கே, போர்புரிவதில் அவர்கள் காட்டும் வேக$_3$மெல்லாம் அவர்களது அழிவுக்கே காரணமாகின்றது என்றும் கருத்துரைக்கலாம். அந்த வாய்கள் எப்படி இருக்கின்றன? எனில் (த$_3$ம்ஷ்ட்ராகராளாநி ப$_4$யாநகாநி) இடைவெளியோடு கூடிய பற்களையுடையனவாய், ப$_4$யங்கரமா யிருப்பவை. ப$_4$யங்கரமானவை என்று தனியாகச் சொல்லுகையால் "கராள" ஶப்$_3$த$_3$ம் இடைவெளியோடு கூடியிருக்கையையும் வளைந்தி ருக்கையையும் கூறுகிறது. மேடுபள்ளங்களுடன் (த$_3$ந்துரமாய்) இருக் கையைக் கூறுவதாகவும் கொள்ளலாம். "கராலம் த$_3$ந்துரே வக்ரே" என்னும் நிக$_4$ண்டு காணத்தக்கது. பா$_4$ஷ்யத்தில் "து$_3$ர்யோத$_4$ நாத$_3$யஸ்ஸர்வே" என்று பாட$_2$ம் இருக்கையாலும், இரண்டு

अमुरुर्वैस्सह त्वरमाणा दंष्ट्राकरालानि भयानकानि तव वक्त्राणि विनाशाय विशन्ति ; तत्र केचिच्चूर्णितैरुत्तमाङ्गैर्दशनान्तरेषु विलग्नाः संदृश्यन्ते ॥ २६ ॥ २७ ॥

ஶ்லோகங்களையும் ஒரே அந்வயமாகக் கொள்ளுகையாலும் "அமீ ஸர்வே" என்பதே பா₄ஷ்ய பாட₂ம் என விளங்குகிறது. "அமீ ச த்வா" என்று பாட₂மாகில், அடுத்த ஶ்லோகத்தில் உள்ள "விஶந்தி" என்பதை முதல் ஶ்லோகத்திலும் சேர்த்துக்கொண்டோ, அல்லது அதே பொருளுள்ள வேறொரு வினைச்சொல்லை அத்₄யாஹாரம் செய்துகொண்டோ, அல்லது இருபத்துநாலாவது ஶ்லோகத்திலுள்ள பத₃ங்களின் வசனத்தை ப₃ஹுவசனமாக மாற்றிக்கொண்டு "த்₃ருஷ்ட்வா ப்ரவ்யதி₂தாந்தராத்மானோ த்₄ருதிம் ந விந்த₃ந்தி" [உன்னைக்கண்டு கலங்கிய மனமுடையவர்களாய் த₄ரிக்கமாட்டாதவர்கள் ஆகின்றனர்] என்று கூட்டியோ முதல் ஶ்லோகத்தைத் தனி அந்வயமாகக் கொள்ளவேண்டும். "அமீ ச த்வா, வக்த்ராணி தே" என்று இரண்டு ஶ்லோகங்களும் தொடங்குகையாலே, இரண்டையும் ஒரே அந்வயமாகக் கொள்ளமுடியாது. ஒன்றரை ஶ்லோகத்தாலே—அழிவின்பொருட்டு எம்பெருமான் வாயில் நுழையுமவர்களைச் சொல்லி, இனி அரை ஶ்லோகத்தாலே அவ்விஶ்வரூப எம்பெருமானின் பல்லிடுக்குகளிலே தலை நசுங்கிச் சிலர் அழிந்து கிடக்கிறார்கள் என்று கூறுகிறது. (கேசித்) கௌரவஸேனையிலுள்ள சிலர். விஶ்வரூப எம்பெருமானின் வாயிலுள்ள சிலர் என்றுமாம். (த₃ஶநாந்தரேஷு லக்₃நா:) பல்லிடுக்குகளிலே தொங்குகின்றவர்களாய் (சூர்ணிதை: உத்தமாங்கை₃: ஸந்த்₃ருஶ்யந்தே) நசுங்கிய தலைகளையுடையவர்களாய்க் காணப்படுகின்றார்கள்.

"செற்றெழுந்து தீவிழித்துச் சென்றவிந்த ஏழுலகும்
மற்றிவை ஆவென்று வாயங்காந்து – முற்றும்
மறையவர்க்குக் காட்டிய மாயவனையல்லால்
இறையேனும் ஏத்தாதென் நா" [முதல்திருவ 94]

என்று பொய்கையாழ்வார் இந்த ஶ்லோகங்களை அடியொற்றிக் கண்ணன் பா₄ரதப்போரிலே காட்டின விஶ்வரூபத்தைக் கூறுவதாக அப்பிள்ளை உரையிலே பொருளுரைத்தார். மறையவர்க்கு என்பது பீ₄ஷ்மத்₃ரோணாதி₃களைக் குறிக்கிறது. அவர்களும் இந்த விஶ்வரூபத்தைக் கண்டனர் என விளங்குகிறது.

யாத₃வ ப்ரகாஶமதத்தைச் சேர்ந்தவர்கள் கீ₃தையில் சில இடங்களில் அதி₄கஶ்லோகங்களைப் படிக்கிறார்கள் என்று இங்கு தாத்பர்ய சந்த்₃ரிகையில் ஸ்ரீதே₃சிகனால் காட்டப்பட்டது. அவையாவன:— (1)"காம ஏஷ க்ரோத₄ ஏஷ:" [3-37] என்னும் ஶ்லோகத்துக்குப் பிறகு—

அர்ஜுந உவாச—

"ப₄வத்யேஷ கத₂ம் க்ருஷ்ண கத₂ம் சைஷ விவர்த்த₄தே |
கிமாத்மக: கிமாசார: தந் மமாசக்ஷ்வ ப்ருச்ச₂த: ||

ஸ்ரீப₄க₃வாந் உவாச—

ஏஷ ஸூக்ஷ்ம: பரஶ்ஶத்ரு: தே₃ஹிநாம் இந்த்₃ரியைஸ்ஸஹ |
ஸுக₂ம் தத்ர இவாஸீநோ மோஹயந் பார்த₂ திஷ்ட₂தி ||
காமக்ரோத₄மயோ கோ₄ர: ஸ்தம்ப₄ஹர்ஷ ஸமுத்₃ப₄வ: |
அஹங்காரோऽபி₄மாநாத்மா து₃ஸ்தர: பாபகர்மபி₄: ||
ஹர்ஷமஸ்ய நிவர்த்யைஷ ஶோகமஸ்ய த₃தா₃தி ச |
ப₄யம் சாஸ்ய கரோத்யேஷ மோஹயம்ஶ்ச முஹுர் முஹு: ||
ஸ ஏஷ கலுஷ: க்ஷுத்₃ர: சி₂த்₃ராபேக்ஷீ த₄நஞ்ஜய |
ரஜ:ப்ரவர்த்திதோ மோஹாத் மாநுஷாணாம் உபத்₃ரவ: ||"

[அர்ஜுனன் கூறினான்— கண்ணனே! க்ரோத₄மாகப் பரிணமிக்கும் இந்தக் காமம் எப்படி உண்டாகிறது? எப்படி வளர்கிறது? எந்த ஸ்வரூபமாயிருக்கிறது? எந்தச் செயலைச் செய்கிறது? கேட்கும் எனக்கு இதைக் கூறுவாயாக. ஸ்ரீப₄க₃வான் உரைத்தான்— பார்த₂னே! இந்த்₃ரியங்களோடு கூடிய ஶரீரமுடையவர்களுக்கு இது நுண்ணியதாய் மேலானதான எதிரியாகும். அந்த ஶரீரத்திலேயே இனிதாக இருந்துகொண்டு ஜீவாத்மாவை மயக்கிக் கொண்டிருக்கிறது. காமக்ரோத₄மயமான பெரிய இந்த எதிரி க₃ர்வத்தினாலும் விஷயஸுக₂த்தினாலும் உண்டாகிறது. தே₃ஹத்தையே ஆத்மாவாக அபி₄மானிக்கும் அஹங்காரரூபமாயிருக்கிறது. தீவினைகளால் இது கடக்க அரிதாயிருக்கிறது. இந்த ஜீவனுக்கு இன்பத்தைப் போக்கித் துன்பத்தை இது தருகிறது. இவனுக்கு ப₄யத்தையும் விளைக்கிறது. அடிக்கடி இவனை மயங்கவும் செய்கிறது த₄நஞ்ஜயனே! இவ்வெதிரி கலங்கியதாய், தாழ்ந்ததாய், ஸ்வரூப நாஶத்தை விளைப்பதற்கு ஸமயம் பார்த்திருப்பதாயுள்ளது. ரஜோகு₃ணத்தால் உண்டாவதாய் மனிதர்களுக்கு மயக்கத்தாலே விளையும் உபத்₃ரவமாய் (தொல்லையாய்) இருக்கிறது.] என்னும் ஶ்லோகங்களும், (2) கீ₃தை பதினோராவது அத்தியாயத்தில் இருபத்தேழு, இருபத்தெட்டு ஶ்லோகங்களுக்கு இடையில் அதாவது இவ்விடத்தில்—

"நாநாரூபை: புருஷைர்வத்₄யமாநா:
விஶந்தி தே வக்த்ரமசிந்த்யரூபம் |
யௌதி₄ஷ்டி₂ரா தா₄ர்த்தராஷ்ட்ராஶ்ச யோதா₄:
ஶஸ்த்ரை: க்ருத்தா விவிதை₄ஸ்ஸர்வ ஏவ ||

தி₃வ்யாநி கர்மாணி தவாத்₃பு₄தாநி
பூர்வாணி பூர்வேப்ய்ருஷயஸ்ஸ்துவந்தி |
நாந்யோ ऽஸ்தி கர்த்தா ஜக₃தஸ் த்வமேகோ
தா₄தா விதா₄தா ச விபு₄ர் பு₄வஶ்ச ||

தவாத்₃பு₄தம் கிந்நு ப₄வேதா₃ஸஹ்யம்
கிம் வா ஶக்யம் பரத: கீர்த்தயிஷ்யே |
கர்த்தாஸி லோகஸ்ய யதஸ் ஸ்வயம் விபோ₄
த்வத்தஸ் ஸர்வம் த்வயி ஸர்வம் த்வமேவ ||

அத்யத்₃பு₄தம் கர்ம ந து₃ஷ்கரம் தே
கர்மோபமாநம் ந ச வித்₃யதே தே |
ந தே கு₃ணாநாம் பரிமாணமஸ்தி
ந தேஜஸோ நாபி ப₃லஸ்ய நர்த்₃தே₄: ||"

[பல ரூபங்களுடைய புருஷர்களாலே கொல்லப்படுகிறவர்களான பாண்ட₃வ கௌரவஸேனையில் சேர்ந்த போர்வீரர்கள் அனைவரும் பலவித₄மான ஆயுத₄ங்களால் வெட்டப்பட்டு நினைத்தற்கரிய உருவையுடைய உனது வாயில் நுழைகின்றனர். அத்₃பு₄தமாய் பழைமையான உனது தி₃வ்யசேஷ்டிதங்களை முன்னோர்களான ரிஷிகளும் துதிக்கின்றனர். இவ்வுலகுக்குக் கர்த்தாவும், அதை த₄ரிப்பவனும், அதற்கு அனைத்தையும் விதி₁ப்பவனும், அதை வியாபிப்பவனும், அதுக்கு ஸத்தையையளிப்பவனும் நீ ஒருவனே; வேறொருவருமில்லை. எந்த அற்புதச் செயல்தான் உனக்குப் பொருந்தாததாய் உள்ளது? எச்செயல்தான் உனக்குப் பிறரைக்கொண்டு செய்யவேண்டியிருக்கிறது? உன் பெருமைகளைச் சொல்லுகிறேன். ஸர்வேச்வரனே! நீ உலகனைத்தையும் படைக்கிறவனகையாலே உன்னிடமிருந்தே அனைத்தும் உண்டாகிறது. உன்னிடமே அனைத்தும் அடங்கி நிற்கிறது. (ஆகையால்) நீயே அனைத்துமாயிருக்கிறாய். மிக ஆச்சர்யமான செயலும் உனக்கு செயற்கரியதல்ல. உனது செயல்களுக்கு ஓரளவுமில்லை. உனது கு₃ணங்களுக்கும், தேஜஸ்ஸுக்கும், ப₃லத்துக்கும், செல்வத்திற்கும் ஓர் அளவில்லை.] என்றும் ஶ்லோகங்களும் உள்ளனவாக எடுக்கப்பட்டன. இங்குள்ள 'தி₃வ்யாநி' என்று தொடங்கும் மூன்று ஶ்லோகங்களும் நாராயணார்யராலும் எழுதப்பட்டுள்ளது.

यथा नदीनां बहवोऽम्बुवेगाः
समुद्रमेवाभिमुखा द्रवन्ति ।
तथा तवामी नरलोकवीराः
विशन्ति वक्त्राण्यभिविज्वलन्ति ॥ २८ ॥

यथा प्रदीप्तज्वलनं पतङ्गाः
विशन्ति नाशाय समृद्धवेगाः ।
तथैव नाशाय विशन्ति लोकाः
तवापि वक्त्राणि समृद्धवेगाः ॥ २९ ॥

28. யத₂ா நதீ₃நாம் ப₃ஹவோऽம்பு₃வேக₃ா:
ஸமுத்₃ரமேவாபி₄முக₂ா த்₃ரவந்தி ।
தத₂ா தவாமீ நரலோகவீரா
விஶந்தி வக்த்ராண்யபி₄விஜ்வலந்தி ॥

29. யத₂ா ப்ரதீ₃ப்தஜ்வலநம் பதங்க₃ா:
விஶந்தி நாஶாய ஸம்ருத்₃த₄வேக₃ா: ।
ததை₂வ நாஶாய விஶந்தி லோகா:
தவாபி வக்த்ராணி ஸம்ருத்₃த₄வேக₃ா: ॥

---

(3) இப்பதினொராவது அத்தியாயத்தில் 39-வது ஶ்லோகத்தில் 'ப்ரபிதாமஹஶ்ச' என்று முடியும் பூர்வார்த்த₄த்தையொட்டி — ''அநாதி₃மாநப்ரதிமப்ரப₄ாவ: ஸர்வேஶ்வரஸ் ஸர்வ மஹாவிபூ₄தி: । ந ஹி த்வத₃ந்ய: கஶ்சித₃ஸ்தீஹ தே₃வ லோகத்ரயே த்₃ருஶ்யதேऽசிந்த்ய கர்மா ॥'' [நீ ஆதி₃யற்றவன்; ஒப்பற்ற பெருமையுடையவன்; அனைவரையும் நியமிப்பவனுயிருப்பவன்; அனைத்தையும் பெருஞ் செல்வமாகக் கொண்டவன்; தே₃வனே! இம்மூவுலகிலும் நினைத் தற்கரிய செயல்களையுடையவன் உன்னைக் காட்டிலும் வேருெருவனு மில்லை. காணப்படவுமில்லை.] என்னும் ஶ்லோகமும் அவரால் எழுதப் பட்டது. ''இந்த ஶ்லோகங்கள் கீ₃தையில் உள்ளனவா இல்லையா என்பதை தே₃வனே அறிவான். (சங்கரர் முதலான) முன் வ்யாக்₂யா தாக்களால் எடுக்கப்படாமையாலும், கீ₃தை ஓதுபவர்களிடம் ப்ர ஸித்₃தி₄ இல்லாமையாலும் ஸ்ரீப₄ாஷ்யகாரர் இவற்றை ஆதரிக்கவில்லை. கீ₃தாஶாஸ்த்ரத்தில் இவ்வளவு ஶ்லோகங்கள் உள்ளன என்று வ்யாஸர் முதலானுரால் எண்ணிக்கை சொல்லப்படவில்லை. பின் புள்ளார் சொல்லியிருப்பது நம்பத்தக்கதல்ல'' என்று இங்கு தாத் பர்யசந்த்₃ரிகையில் அருளியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. 26, 27.

ப₃ஹவ:—பலவாயிருக்கும். **நதீ₃நாம் அம்பு₃வேக₃ா:**—ஆறுகளின் நீர்ப்பெருக்குகள், **ஸமுத்₃ரம் ஏவ அபி₄முக₂ா:**—கடலையே நோக்கியவைகளாக **யதா₂ த்₃ரவந்தி**—எப்படி ஓடுகின்றனவோ, **ததா₂**—அப்படியே, **அமீ நரலோக வீரா:**—இந்த ராஜஸமூஹவீரர்கள், **தவ அபி₄விஜ்வலந்தி வக்த்ராணி**—உனது பிரகாசிக்கும் வாய்களுக்குள்ளே, **விஶந்தி**—நுழைகிறார்கள், **ஸம்ருத்₃த₄வேக₃ா:**—வளரும் வேகத்தை உடையவைகளான **பதங்க₃ா:**—விட்டில்கள், **ப்ரதீ₃ப்த ஜ்வலநம்**—எரியும் நெருப்பிலே, **யதா₂ நாஶாய விஶந்தி**—எப்படி தம் அழிவின் பொருட்டு நுழைகின்றனவோ, **ததை₂வ**—அப்படியே, **ஸம்ருத்₃த₄ வேக₃ா: லோகா: அபி**—வளரும் வேகத்தையுடைய ராஜலோகவீரர்களும், **தவ**—உன்னுடைய, **அபி₄விஜ்வலந்தி வக்த்ராணி**—எரியும் வாய்களுக்குள்ளே, **நாஶாய விஶந்தி**—தம் அழிவின் பொருட்டு நுழைகிறார்கள்.

---

29. ஆற்றின் புனல்வேக மாழியிடை நோக்கிப்போ
யூற்றத் தடையுமா றொக்குமே—சீற்றத்துத்
தீயமரு நின்முகங்கள் சென்றுலக வீரரெல்லாம்
போயடையு மாறு புகுந்து.

சீற்றத்து—கோபத்தினாலே, **தீ அமரும் நின் முகங்கள்**—கொழுந்துவிட்டு எரியும் உனது முகங்களை, **போய்ச் சென்று**—போயடைந்து, **புகுந்து**—அவற்றினுள் புகுந்து, **உலக வீரர் எல்லாம்**—ராஜலோகவீரர்கள் அனைவரும், **அடையுமாறு**—அடைகின்ற தன்மை, **ஆற்றின் புனல் வேகம்**—ஆறுகளின் நீர்ப்பெருக்குகள், **ஆழியிடை நோக்கிப் போய்**—கடலைக் குறித்துச்சென்று, **ஊற்றத்து**—வேகமாக, **அடையுமாறு**—சேரும் தன்மையை, **ஒக்குமே**—ஒத்திருக்கும்.

॥भा॥ एते राजलोका बहवो नदीनामम्बुप्रवाहाः समुद्रमिव,

30. ஓங்கி யெரிமுகத்தி லோடியே விட்டிலெல்லா
மாங்கு விழுமா றதுபோல—வீங்குலக
முன்முகங்க டன்னிடையி லுற்றே விழுங்கண்டாய்
தன்முகஞ்செய் நாசத்தைச் சார்ந்து.

விட்டில் எல்லாம்—விட்டில்கள் அனைத்தும், **ஓங்கி எரி முகத்தில்**—கொழுந்துவிட்டு எரியும் நெருப்பை நோக்கி, **ஓடியே**—ஓடிச்சென்று, **ஆங்கு**—அதிலேயே, **விழுமாறு அதுபோல**—விழுகின்றதுபோலே, **ஈங்கு**—இப்போர்க்களத்தில், **உலகம்**—ராஜலோகவீரர்கள், **தன்முகம் செய் நாசத்தை சார்ந்து** — தமது அழிவைத்தேடி, **உன் முகங்கள் தன் இடையில் உற்றே**—உன் வாய்களுக்கு நடுவிலே நுழைந்து, **விழும் கண்டாய்**—விழுகிறுர்கள்.

28, 29. உப₄யஸேனையிலும் உள்ளவர்கள் எம்பெருமானுடைய வாயில் விழுகின்றமைக்கு நதீ₃ப்ரவாஹங்கள் ஸமுத்₃ரத்தில் விழுவதையும், விட்டில்கள் விளக்கில் விழுவதையும் முறையே இரண்டு ஶ்லோகங்களில் த்₃ருஷ்டாந்தமாகக் காட்டுகிறுன். நதி₃களும் தம் வேக₃த்தாலேயே கடலில் விழுந்து தத்தம் நாமரூபங்களை இழக்கின்றன. விட்டில்களும் தம் வேக₃த்தாலேயே விளக்கில் விழுந்து அழிகின்றன. அதுபோல் ஸேனை வீரர்களும் தம்முடைய போர் முயற்சி வேக₃த்தாலேயே எம்பெருமானின் வாயில் விழுந்து அழிகின்றுர்கள். எல்லா நதி₃களும் கடல் ஒன்றிலேயே விழுகின்றன. எல்லா விட்டில்களும் விளக்கிலேயே விழுகின்றன. அதுபோல் ஸேனை வீரர்களும் எம்பெருமானது வாயிலேயே விழுகிறுர்கள். கடலும் விளக்கும் ஒரு செயலைச் செய்யாமலிருக்கும்போதே முறையே நதிகளும் விட்டில்களும் அழிவதற்குக் காரணமாய் நிற்கின்றன. அதுபோலவே எம்பெருமானும் வெளிப்படையாக எச்செயலையும் செய்யாமல் ஸேனை வீரர்கள் அழிவதற்குக் காரணமாய் நிற்கின்றுன் — என்னும் ஒற்றுமைகள் குறிக்கொள்ளத்தக்கன. (ப₃ஹவ: நதீ₃நாம் அம்பு₃வேக₃ா: ஸமுத்₃ரம் ஏவ அபி₄முக₂ா: யத₂ா த்₃ரவந்தி) பல நதிகளுடைய நீர்ப்பெருக்குகள் கடலைக் குறித்தே எப்படி ஓடுகின்றனவோ. 'அம்பு₃வேக₃ா:' என்னுமிடத்தில் வேக₃ஶப்₃த₃ம் வேக₃த்தையுடைய ப்ரவாஹத்தைக் குறிக்

प्रदीप्तज्वलनमिव च शलभाः तव वक्त्राण्यभिविज्वलन्ति स्वयमेव त्वरमाणा आत्मनाशाय विशन्ति ॥ २८ ॥ २९ ॥

கிறது. "வேக$_3$ம் கடலைக்குறித்து ஓடுகிறது" என்பது பொருந்தாதன்றே. (தத$_2$ா அமீ நரலோகவீரா: தவ வக்த்ராணி விஶந்தி) அவ்வண்ணமே இரு ஸேனைகளிலுமுள்ள ராஜஸமூஹவீரர்கள் உனது வாய்களிலே நுழைகின்றுர்கள். அந்த வாய்கள் எப்படிப்பட்டவை? எனில் (அபி$_4$விஜ்வலந்தி) நதி$_3$களெல்லாம் தம்மிடம் சேரப்பெற்ற கடல்போலே பிரகாஶிக்கின்றன என்று கருத்து. (ஸம்ருத்$_3$த$_4$வேக$_3$ா: பதங்க$_3$ா: ப்ரதீ$_3$ப்தஜ்வலநம் யத$_2$ா நாஶாய விஶந்தி) வளரும் வேக$_3$த்தையுடைய விட்டில்கள் கொழுந்துவிட்டெரியும் விளக்கிலே தம் அழிவின்பொருட்டு எப்படி விழுகின்றனவோ. பதங்க$_3$ஶப்$_3$த$_3$ம் பொதுவாகப் பறவைகளைக் குறிக்குமாயினும் இங்கு விளக்கில் விழுகின்றவையாகக் கூறுகையாலே விட்டில்களைக் குறிக்கின்றது. (ப்ரதீ$_3$ப்தஜ்வலநம் நாஶாய விஶந்தி) விட்டில்களின் இறக்கை வேக$_3$த்தாலே சிறிய விளக்காயிருந்தால் அணைந்தும்போகலாம். 'ப்ரதீ$_3$ப்தஜ்வலநம் நாஶாய' என்பதால் தான் அணையாமல் விட்டில்களின் அழிவுக்கே காரணமாகிறது என உணர்த்தப்படுகிறது. (ததை$_2$வ ஸம்ருத்$_3$த$_4$வேக$_3$ா: லோகா: தவ அபி$_4$விஜ்வலந்தி வக்த்ராணி நாஶாய விஶந்தி) அவ்வண்ணமே வளரும் போர் முயற்சி வேக$_3$த்தையுடைய ராஜஸமூஹவீரர்கள் கொழுந்துவிட்டெரியும் ப$_4$க$_3$வானது வாயில் விழுகின்றனர். இங்கு "லோகா:"என்று படித்திருந்தபோதிலும் எல்லா உலகங்களையும் இப்பத$_3$ம் சொல்லாது. முதல் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட நரலோக வீரர்களையே குறிக்கும். பாண்ட$_3$வஸேனையில் சிலரே அழியப் போகிறுர்களாகையாலும், அடுத்த ஶ்லோகத்தில் "ஜக$_3$த் ப்ரதபந்தி" [உமது கிரணங்கள் உலகனைத்தையும் தபிக்கச்செய்கின்றன] என்று ஸர்வலோகங்களுக்குத் தாபம் சொல்லப்படுகிறதேயொழிய விநாஶம் சொல்லப்படவில்லையாகையாலும் இந்த லோகஶப்$_3$த$_3$ம் உப$_4$யஸேனையிலும் அழியப்போகும் ராஜஸமூஹத்தையே குறிக்கிறது. "அபி$_4$விஜ்வலந்தி" என்னும் பத$_3$ம் முந்தின ஶ்லோகத்தில் "வக்த்ராணி" என்னும் பத$_3$த்துக்கு விஶேஷணமாகப் படிக்கப்பட்டபோதிலும் இங்குள்ள 'வக்த்ராணி' என்னும் பத$_3$த்துக்கும் விஶேஷணமாகக் கொள்ளத்தக்கது. 'ப்ரதி$_3$ப்தஜ்வலநம்' (கொழுந்துவிட்டெரியும் விளக்கு) என்னும் த்$_3$ருஷ்டாந்தத்துக்குப் பொருத்தமாயிருக்கும். "ஸம்ருத்$_3$த$_4$வேக$_3$ா:" என்னும் பத$_3$ம் 27-ம் ஶ்லோகத்திலுள்ள "த்வரமாணு:"

लेलिह्यसे ग्रसमानस्समन्ताल्लोकान् समग्रान्वदनैर्ज्वलद्भिः ।
तेजोभिरापूर्य जगत्समग्रं भासस्तवोग्राः प्रतपन्ति विष्णो ॥ ३० ॥

30. லேலிஹ்யஸே க்₃ரஸமாநஸ்ஸமந்தாத்
லோகாந் ஸமக்₃ராந் வத₃நைர்ஜ்வலத்₃பி₄: ।
தேஜோபி₄ராபூர்ய ஜக₃த்ஸமக்₃ரம்
ப₄ாஸஸ்தவோக்₃ரா: ப்ரதபந்தி விஷ்ணோ! ॥

விஷ்ணோ !—விஷ்ணுவே !, **ஸமக்₃ராந் லோகாந்** — ராஜஸமூஹம் முழுவதையும், **ஜ்வலத்₃பி₄: வத₃நை:**— ஒளிவீசும் வாய்களாலே, **க்₃ரஸமாந:**—விழுங்குகின்றவனாய், **ஸமந்தாத் லேலிஹ்யஸே** — (உதடு முதலானவற்றை)

என்னும் பத₃த்தின் விளக்கமாகும். கடலில் விழுந்து நதீ₃ப்ரவாஹம் அழிவதாவது—அவைகளின் நாமரூபங்களும் ஆகாரங்களும் மாறுவதே யாகும். நீருக்கு அழிவில்லையன்றோ. விட்டில்கள் அழிவதாவது சாம்ப லாகிற வேறு த்₃ரவ்யமாக மாறுகையேயாகும். ஸேனைவீரர்கள் எம் பெருமான் வாய்களில் விழுந்து அழிவதிலும் இப்படி இரண்டு வகையுமுண்டு என்பதை உணர்த்துவதற்காக இரண்டு த்₃ருஷ் டாந்தங்களைக் கூறுவதாகக்கொள்ளலாம். அன்றிக்கே ப்ரவாஹ த்₃ருஷ்டாந்தத்தினல் "தொக்கிலங்கு யாறெல்லாம் பரந்தோடித் தொடு கடலே புக்கன்றிப் புறம்நிற்கமாட்டாத மற்றவைபோல்" [பெருமாள் திரு 5-8] "பெயரும் கருங்கடலே நோக்கும் ஆறு" [முதல்திருவ 67] என்கிறபடியே ஆறுகள் தாம் கடலைச்சேருவதைத் தடுத்துக்கொள்ள முடியாததுபோல் இந்த நரலோக வீரர்கள் எம்பெருமான் வாயில் விழுவதைத் தாம் தடுத்துக்கொள்ளமுடியாது என்பதைக் காட்டு வதற்காக முதல் த்₃ருஷ்டாந்தமும், விட்டில்கள் தாமே விரும்பித் தம் முயற்சியால் விளக்கில் விழுவதுபோலே இந்த நரலோகவீரர் களும் தாமே போரை விரும்பித் தமது முயற்சியாலேயே எம்பெருமான் வாயில் விழுகிறுர்கள் என்று காட்டுவதற்காக இரண்டாவது த்₃ருஷ் டாந்தமும் எடுத்துக்கொள்ளப்பட்டது என்றும் கொள்ளலாம். எவ்வளவு நதிகள் விழுந்தாலும் நிறைந்துவிடாத கடல்போலே எம்பெருமான் இருக்கின்றுன் என்று காட்டுவதற்காக முதல் த்₃ருஷ் டாந்தமும், விளக்கில் விட்டில்கள்போலே விழுந்து விரர்கள் சடக் கென அழிகிறுர்கள் என்று காட்டுவதற்காக இரண்டாவது த்₃ருஷ் டாந்தமும் எடுக்கப்பட்டதாகவும் கொள்ளலாம். 28,29.

॥भा॥ राजलोकान् समग्रान् ज्वलद्भिर्वदनैर्ग्रसमानः कोपवेगेन तद्रुधिरावसिक्तमोष्ठपुटादिकं लेलिह्यसे—पुनः पुनर्लेहनं करोषि। तव

எல்லாப்புறமும் பலமுறை நக்கிக்கொடுக்கிறாய்; **தவ**—உன்னுடைய, **உக்$_3$ரா: ப$_4$ாஸ:**—கடுமையான கிரணங்கள், **தேஜோபி$_4$:**—(தம்முடைய) ஒளியினாலே, **ஸமக்$_3$ரம் ஜக$_3$த்**—உலகனைத்தையும், **ஆபூர்ய**—நிறைத்து, **ப்ரதபந்தி**—வாட்டுகின்றன.

31. ஓங்கு மெரிமுகங்க ளாலே யுலகனைத்தும்
வாங்கி விழுங்கிப்பின் வாய்நக்கு—மாங்குனது
பேரொளிதந் தேசாற் பெருகத் தபிப்பிக்கும்
பாருலக மெங்கும் பரந்து.

உலகு அனைத்தும் — ராஜஸமூஹம் முழுவதையும், **ஓங்கும் எரிமுகங்களாலே** — கொழுந்துவிட்டெரியும் வாய்களாலே, **வாங்கி விழுங்கி**—உள்ளிழுத்து விழுங்கி, **பின்**—அதற்குப்பின், **ஆங்கு வாய்நக்கும்**—வாயிலுள்ள உதடுகள் முதலானவற்றை நக்கிக்கொடுக்கும், **உனது**—உன்னுடைய, **பேர் ஒளி**—மிகக்கடுமையான கிரணங்கள், **தம் தேசால்**—தமது ஒளியாலே, **பார் உலகம் எங்கும் பரந்து**—உலகனைத்தையும் வியாபித்து, **பெருக தபிப்பிக்கும்**—மிகவும் வாட்டும்.

30. ஆறுகள் அனைத்தையும் தன்னுட்கொள்ளும் கடல்போலவும், விட்டில்கள் அனைத்தையும் தன்னிடம் இழுக்கும் தீவட்டி போலவும் எம்பெருமான் இருக்கிறான் என்றும், கடலில் விழும் ஆறுகள் போலவும், தீவட்டியில் விழும் விட்டில்கள் போலவும் ராஜஸமூஹங்கள் தாங்களே வேக$_3$மாக எம்பெருமான் வாயில் விழுகிறார்கள் என்றும் சென்ற இரு சுலோகங்களில் கூறுகையாலே இவர்களை அழிக்கும் விஷயத்தில் அவன் செயலற்றிருக்கிறானே என்னும் ஐயமெழுக் கூடும். இவன் செய்யும் செயலைக்காட்டி அந்த ஐயத்தைத் தவிர்க்கிறது இந்த ச்லோகம். அரசர்களுடைய அழிவுக்கு அவரவர் செய்யும் போர்முயற்சி முதலான செயல்களே காரணமாகின்றன. அச்செயல்களால் விளைந்த கோபம் முதலானவற்றோடு

अतिघोरा भासः—रश्मयः तेजोभिः—स्वकीयैः प्रकाशैर्जगत्समग्रमापूर्य प्रतपन्ति ॥ ३० ॥

கூடிய எம்பெருமான் அவர்களை அழிக்கிறான் என்கிறது. (ஸமக்3ராந் லோகாந்) ராஜஸமூஹம் அனைத்தையும். இங்கு ஸர்வலோகங்களையும் ஸம்ஹரிக்கும் ப்ரகரணமல்லாமையாலே, சென்ற சுலோகத்தில் போலே இங்கும் லோகஶப்3த3ம் ராஜஸமூஹத்தைக் குறிக்கிறது. ஸமக்3ரஶப்3த3ம் போர் புரியக்கூடியிருக்கும் அரசர்களில் அழியப்போகும் அனைவரையும் காட்டுகிறது. (ஜ்வலத்3பி4: வத3நை: க்3ரஸமாந:) கொழுந்துவிட்டெரியும் வாய்களாலே விழுங்குகின்றவனாய். (லேலிஹ்யஸே) கோபவேக3த்தாலே—அவ்வரசர்களின் ரத்தத்தாலே நனைந்திருக்கும் உதடுகள் முதலானவற்றை மறுபடியும் மறுபடியும் நக்கிக்கொடுக்கிறாய். நக்கிக் கொடுப்பதற்கு விஷயம் வேண்டுமாகையாலே "அரசர்களின் ரத்தத்தால் நனைந்துள்ள உதடுகள் முதலானவற்றை" என்ற தொடர் வருவித்துக்கொள்ளப்பட்டது. விழுங்குவதாகவும் நக்குவதாகவும் கூறுகையாலே த்3ரௌபதீ3மானப4ங்க3ம் போன்ற பல தீச்செயல்கள் புரிந்த அவ்வரசர்களின் மேலுள்ள கோபவேக3ம் அவர்களை அழித்தபின்பும் அடங்கவில்லை என்று விளங்குகிறது. "க்ரியா ஸமபி4ஹாரே யங்" என்னும் இலக்கண விதி4ப்படி 'லேலிஹ்யஸே' என்னும் பத3த்திலுள்ள 'யங்' ப்ரத்யயம் மறுபடியும் மறுபடியும் (உதடுகளை) நக்கிக்கொடுத்தலாகிற க்ரியா ஸமபி4ஹாரத்தைக்காட்டுகிறது. ஆக ஶ்லோகத்தின் முற்பாதியால் அழியவிருக்கும் அரசர்கள் விஷயத்தில் இவன் செயல் காட்டப்பட்டது. இனி, பிற்பாதியால் வெளியுலகத்தைக் குறித்த இவனுடைய செயல் விளக்கப்படுகிறது. (தவ உக்3ரா: ப4ாஸ:) உனது கடுமையான கிரணங்கள். (தேஜோபி4: ஸமக்3ரம் ஜக3த் ஆபூர்ய) தமது ஒளிகளாலே உலகனைத்தையும் வியாபித்து. 'ப4ாஸ:' 'தேஜோபி4:' என்னும் பத3ங்களிடையே புநருக்தி இல்லாமைக்காக முதல் பத3ம் எம்பெருமானுடைய கிரணங்களையும் இரண்டாவது பத3ம் அக்கிரணங்களின் ஒளிகளையும் சொல்லுவதாகப் பொருள்கொள்ளப்பட்டது. (ப்ரதபந்தி) மிகவும் தபிக்கச்செய்கின்றன. அவைகளையும் விழுங்க நினைத்து வாட்டுவது போலே தோற்றுகின்றன. அன்றிக்கே "இந்த ராஜஸமூஹங்களை விழுங்குவதைப் பார்த்துக்கொண்டிருக்கும் வெளியுலகில் உள்ள பிரமன் முதலானவர்களுக்கும் அக்காட்சி பொறுக்கவொண்ணாததாயிருக்கிறது" என்றும் கருத்துரைக்கலாம். (ப4ாஸ: தேஜோபி4ராபூர்ய ப்ரதபந்தி விஷ்ணோ!) நீ எங்கும் வியாபித்திருக்கும் விஷ்ணுவாகையாலே உனது கிரணங்கள் தம் ஒளியாலே உலகெங்கும் வியாபித்து வாட்டுவது வியப்பல்ல என்று கருத்து. 30.

आख्याहि मे को भवानुग्ररूपो नमोऽस्तु ते देववर प्रसीद।
विज्ञातुमिच्छामि भवन्तमाद्यं नहि प्रजानामि तव प्रवृत्तिम्॥ ३१॥

31. ஆக்₂யாஹி மே கோ ப₄வாநுக்₃ரரூபோ
நமோऽஸ்து தே தே₃வவர ப்ரஸீத₃।
விஜ்ஞாதுமிச்ச₂ாமி ப₄வந்தமாத்₃யம்
நஹி ப்ரஜாநாமி தவ ப்ரவ்ருத்திம்॥

தே₃வவர!—தே₃வர்களில் தலைசிறந்தவனே!, **உக்₃ர ரூப: ப₄வாந்**—மிகக் கடுமையான உருவத்தையுடைய தேவரீர், **க:**—என்ன செய்ய விரும்புகிறீர்? (என்று) **அத்₃யம் ப₄வந்தம்**—ஆதி₃ காரணரான தேவரீரைப் பற்றி, **விஜ்ஞாதும்**—அறிந்துகொள்ள, **இச்ச₂ாமி**—விரும்புகிறேன். **தவ ப்ரவ்ருத்திம்**—நீர் செய்ய விரும்புவதை, **நஹி ப்ரஜாநாமி**-அறிகின்றேனல்லேன். **மே**-எனக்கு, **ஆக்₂யாஹி**-அதைச் சொல்லுவீராக. **தே நம: அஸ்து**—உமக்கு எனது வணக்கம் உரித்தாகுக. **ப்ரஸீத₃**—அருள் புரிவீராக.

---

32. இக்கொடிய ரூபா வெவனீ யெனக்கியம்பாய்
தக்குனக்கு நான்பணிந்தேன் றண்ணளிசெய்-மிக்கமுத
லானவுனை யிச்சிப்ப னாய்ந்தறிவான் றேவவரா
நானறியே னுன்செய்தி நன்கு.

தேவவரா!—தேவர்களில் தலைசிறந்தவனே! **இக்கொடிய ரூபா!**—இத்தகைய கொடுமையான உருவத்தை உடையவனே! **நீ எவன்**—நீ என்ன செய்ய விரும்புகிறாய் (என்று) **மிக்க முதலான உனை**—ஆதி₃காரணமான உன்னை, **ஆய்ந்து அறிவான் இச்சிப்பன்**—ஆராய்ந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன். **உன் செய்தி**—நீ செய்யவிரும்புவதைப் பற்றி, **நான்**—நான், **நன்கு அறியேன்**—தெளிவாக அறிகின்றேனல்லேன், **எனக்கு இயம்பாய்**—எனக்கு அதைச் சொல்லுவாயாக, **உனக்கு**—உனக்கு, **நான்**—நான், **தக்கு**—தக்கபடி, **பணிந்தேன்**—வணங்கினேன், **தண்ணளிசெய்**—அருள்புரிவாயாக.

। भा ।। दर्शयात्मानमव्ययम् (४) इति तवैश्वर्यं निरङ्कुशं साक्षात्कर्तुं प्रार्थितेन भवता निरङ्कुशमैश्वर्यं दर्शयताऽतिघोररूपमिद-माविष्कृतम्। अतिघोररूपः को भवान् - किं कर्तुं प्रवृत्त इति भवन्तं ज्ञातुमिच्छामि। तवाभिप्रेतां प्रवृत्तिं न जानामि। एतदाख्याहि मे।

---

31. இவ்வண்ணமாக மிகவும் கடுமையான விஸ்வரூபத3ர்ஶநத்தைப் பொறுக்கவல்லமையற்ற அர்ஜுனன், தனது எல்லா ஐஸ்வர்யங்களையும் வெளியிடத்தொடங்கிய கண்ணன் அத்தகைய கடுமையான திருமேனியைக் காட்டுவதற்கான கருத்தைக் கூறி, மறுபடியும் அருள்பொழியும் திருமேனியை ஏற்றுக்கொள்வதற்குறுப்பான அருளைக் கைக்கொள்ளவேண்டும் என்று விண்ணப்பித்துக்கொள்கிறுன் இந்த ஶ்லோகத்தில். (உக்3ரரூப: ப4வாந் க: - விஜ்ஞாதும் இச்ச2ாமி) "த3ர்ஶயாத்மாநமவ்யயம்" [11-4] என்று உனது எல்லையற்ற ஐஸ்வர்யத்தை நேரில் காணவேண்டும் என்று நான் பிரார்த்தி2த்தேன். அதன்படி உனது எல்லையற்ற ஐஸ்வர்யத்தைக்காட்டும் நீ மிகக்கோரமான இந்த உருவத்தை வெளிப்படுத்தினுய். இத்தகைய கடுமையான உருவத்தையுடைய நீ என்ன செய்ய முற்பட்டிருக்கிருய் என்று நான் உன்னிடமிருந்து அறியவிரும்புகிறேன். "கோ ப4வாந்" [நீயார்] என்னும் கேள்விக்கு அவனுடைய பெயர் முதலானவற்றைக் கேட்பதில் கருத்து இருக்கமுடியாது. இவன் ஸர்வேஶ்வரனுன கண்ணனே என்பதை அர்ஜுனன் நேரேயும் அறிவான். பலர் உபதே3ஶித்தும் இருக்கிருர்கள். ஆகையால் இந்தக் கேள்விக்கு "ப4க்தனுன எனக்கு இந்த ப4யங்கரமான உருவத்தைக் காட்டுவதற்குக் கருத்தென்ன?" என்று கேட்பதிலேயே தாத்பர்யம் கொள்ளவேண்டும். "விஜ்ஞாதும் இச்ச2ாமி" என்பதை "ந ஹி ப்ரஜாநாமி தவ ப்ரவ்ருத்திம்" [உனது செயலை நான் அறிகின்றேனல்லேன்] என்று கடைசிப் பாத3த்தாலே விளக்கியிருக்கையாலே, "நீ என்ன செய்யவிரும்புகிருய்" என்று அறிவதற்காகவே "நீ யார்" என்னும் கேள்வி கேட்கப்படுகிறது என்று தெரிகிறது. (ஆத்3யம் ப4வந்தம்) என்னும் பகுதியாலே 'கண்ணன் ஆதி3காரணன்' என்னும் தெரிந்த அம்ஶத்தையும் "விஜ்ஞாதுமிச்ச2ாமி" என்னும் பகுதியாலே அவன் என்ன செய்யவிரும்புகிருன் என்னும் தெரியாத அம்ஶத்தையும் குறிப்பிடுகிருன். (ஆக்2யாஹி மே) எனக்கு இதைச் சொல்லுவாயாக. பதில் சொல்லும்போதும் கண்ணன் தான் செய்ய முற்பட்டிருக்கும் காரியத்தையே கூறுகிருனுகையால் இப்படியே பொருள்கொள்ளவேண்டும்.

नमोऽस्तु ते देववर प्रसीद—नमस्तेऽस्तु सर्वेश्वर!। एवं कर्तुमनेनाभिप्रायेणेदं संहृतं रूपमाविष्कृतमित्युक्त्वा प्रसन्नरूपश्च भव॥ ३१॥

"கண்ணனது உருவில் ஓர் அசுரனே அரக்கனே இப்படி வந்து கோரவுருவைக் காட்டுகிருனே என்று ஐயமுற்று 'நீ யார்' என்று அர்ஜுனன் கேட்கிருன்" என்று சிலர் உரையிட்டது பொருந்தாது என்பது இதிலிருந்தே விளங்கும். பதிலில் 'நான் அசுரனே அரக்கனே அல்ல' என்று சொல்லாமல், தான் செய்ய முற்பட்டிருக்கும் காரியத்தையேயன்ருே சொல்லுகிருன் கண்ணன். பதிலில் கண்ணன் விஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டபின்னும் தான் செய்யப்போகும் காரியத்தையே விளக்கமாகக் கூறுகிருனுகையால், (ந ஹி ப்ரஜாநாமி தவ ப்ரவ்ருத்திம் விஜ்ஞாதும் இச்ச$_2$ாமி) என்றதற்கு விஸ்வரூபத்தோடு கண்ணன் செய்ய முற்பட்டிருக்கும் காரியத்தைக் கேட்பதில் அர்ஜுனனுக்கு நோக்கில்லை. "நீ காலக்ரமத்தில் செய்ய விரும்பியிருக்கும் காரியம் யாதென்று அறிகின்றேனல்லேன்; அதை அறிய விரும்புகிறேன்" என்றே பொருள்கொள்ளவேண்டும். (தே$_3$வவர) பிரமன் உருத்திரன் முதலான எல்லாத் தே$_3$வர்களைக் காட்டிலும் சிறந்த ஸர்வேஸ்வரனே! (நமோऽஸ்து தே) உலகனைத்தையும் உடையவனுன உனக்கு, உனது உடைமையான நான் எனது ஶேஷத்வ ஸ்வரூபத்துக்குத் தக்க வணக்கத்தைச் செலுத்துகிறேன். "**நந்தவ்ய: பரம: ஶேஷீ ஶேஷா நந்தார ஈரிதா:। நந்த்ருநந்தவ்யப$_4$ாவோऽயம் ந ப்ரயோஜந பூர்வக:॥**" [மேலான ஶேஷியான நாராயணனே வணங்கத்தக்கவன்; மற்ற அனைவரும் அவனுக்கு அடிமைப்பட்டவர்களாகையாலே அவனை வணங்க உரியவர்களாகவே சொல்லப்படுகின்றனர். இப்படி இவர்கள் வணங்குகிறவர்களாகவும், அவன் வணங்கத்தக்கவனுகவுமிருப்பது ஒரு பயன் கருதியன்று.] என்று அஹிர்பு$_3$த்$_4$ந்யஸம்ஹிதையிலும் [52.7] சொல்லப்பட்டதன்ருே. (ப்ரஸீத$_3$) உனது விஸ்வரூபத்தைக் கண்டு நடுங்கும் என்னிடம் அருள்கூர்ந்து பழையபடி உனது அருள் வடிவத்தை ஏற்றுக்கொள்வாயாக. ஆக, இந்த ஸ்லோகத்தால், "நான் இன்னது செய்வதற்காக, இன்ன கருத்தாலே அனைவரையும் அழிக்கும் இந்த விஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டிருக்கிறேன் எனக் கூறிவிட்டு, பழைய அருளுருவத்தைக் கொள்வாய்" என அர்ஜுனன் கண்ணனைப் பிரார்த்தித்தானாயிற்று. 31.

॥ भा ॥ आश्रितवात्सल्यातिरेकेण विश्वैश्वर्यं दर्शयतो भवतो घोररूपाविष्कारे कोऽभिप्राय इति पृष्टो भगवान् पार्थसारथिस्स्वाभिप्रायमाह—पार्थोद्योगेन विनाऽपि धार्तराष्ट्रप्रमुखमशेषं राजलोकं निहन्तुमहमेव प्रवृत्त इति ज्ञापनाय मम घोररूपाविष्कारः, तज्ज्ञापनं च पार्थमुद्योजयितुमिति।

श्रीभगवानुवाच—

कालोऽस्मि लोकक्षयकृत्प्रवृद्धो
लोकान् समाहर्तुमिह प्रवृत्तः।
ऋतेऽपि त्वा न भविष्यन्ति सर्वे
येऽवस्थिताः प्रत्यनीकेषु योधाः॥ ३२॥

ஸ்ரீப₄க₃வாந் உவாச—

32. காலோऽஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்₃தோ₄
லோகாந் ஸமாஹர்த்துமிஹ ப்ரவ்ருத்தः।
ருதேऽபி த்வா ந ப₄விஷ்யந்தி ஸர்வே
யேऽவஸ்தி₂தாः ப்ரத்யநீகேஷு யோதா₄ः॥

ஸ்ரீப₄க₃வாந் உவாச—ஸ்ரீ ப₄க₃வான் பின்வருமாறு கூறலுற்ருன்:— **லோகக்ஷய க்ருத்**—(இங்குள்ள ஆஸுரமான) ராஜலோகத்தை அழிக்கின்றவனுய், **ப்ரவ்ருத்₃த₄ः**—இந்த கே₄ாரரூபத்துடன் வளர்ந்திருக்கும் நான், **காலः அஸ்மி**—(இந்த ராஜலோக வீரர்களின் ஆயுள் முடிவைக் கணக்கிடும்) காலனுயிருக்கிறேன். **லோகாந்**—இந்த ராஜலோகத்தை, **ஸமாஹர்த்தும்**—நானே முன்னின்று அழிப்பதற்கு, **இஹ**—இந்தப் போர்க்களத்தில், **ப்ரவ்ருத்தः**—முற்பட்டிருக்கிறேன்; **ப்ரத்யநீகேஷு**—(உனக்கு) எதிர்ப்படையில், **யே யோதா₄ः அவஸ்தி₂தாः**—யாவர் சில வீரர்கள் (போர்புரிய) நிற்கிருர்களோ, **ஸர்வே**—அவர்கள் அனைவரும், **த்வா ருதே அபி**—நீ இல்லாவிடினும், **ந ப₄விஷ்யந்தி**—(எனது ஸங்கல்பத்தாலேயே) அழியத்தான் போகிருர்கள்.

33. இத்தகவு பார்த்த னியம்ப விறையுரைத்தான்
மெய்த்தகவில் காலன் மிகுந்துலகை—யொத்தொழிக்க
லுற்றே னுனையொழிந்திங் கொன்னலராய் நின்ருர்கள்
மற்ருரு முய்யார் மடிந்து.

இத்தகவு பார்த்தன் இயம்ப — இவ்வண்ணமாக அர்ஜுனன் கூற, **இறை**—ஸர்வேஶ்வரனை கண்ணன், **உரைத்தான்**—(பின்வருமாறு) கூறலுற்றுன் :—**மெய்த் தகவில் காலன்**—உண்மையிலேயே (கொடியவர்களின் ஆயுள் முடிவைக் கணக்கிடும்) கருணையற்ற காலன் நான். **உலகை ஒத்து**-இந்த ராஜலோகத்திலுள்ள அனைவரையும், **மிகுந்து**—விஶ்வரூபமெடுத்து வளர்ந்து, **ஒழிக்கல் உற்றேன்**—அழிக்க முற்பட்டிருக்கிறேன். **இங்கு**—இப்போர்க்களத்தில், **ஒன்னலராய் நின்ருர்கள் மற்று ஆரும்**—(உனக்கு) எதிரிகளாய் நின்றவர்கள் அனைவரும், **உனை ஒழிந்து**—நீ இல்லாவிடிலும், **மடிந்து**—(எனது ஸங்கற்பத்தாலேயே) அழிந்து, **உய்யார்**—உயிர் வாழாமற் போவார்கள்.

---

32. இனி மூன்று ஶ்லோகங்களாலே கண்ணன் அர்ஜுனனுக்கு பதிலுரைக்கிருன். "அடியவனை என்னிடம் வாத்ஸல்யமிகுதியாலே, உமது ஐஶ்வர்யம் முழுவதையும் காட்டிய தேவரீர் கே$_4$ாரமான இந்த விஶ்வரூபத்தைக் காட்டியது என்ன கருத்தாலே என்பது எனக்கு விளங்கவில்லை. தேவரீர் என்ன செய்ய விரும்புகிறீர் என்றும், என்ன கருத்தாலே இந்த அழிக்கும் ரூபத்தைக் காட்டினீர் என்றும் விளக்கவேண்டும்" என்பது அர்ஜுனனின் கேள்வி. இதற்கு இந்த மூன்று ஶ்லோகங்களில் ஜ்ஞானம் ஶக்தி முதலான கு$_3$ணங்கள் நிறைந்தவனை பார்த்த$_2$ஸாரதி$_2$ பதில் கூறுகிருன். "அர்ஜுனு! உன் முயற்சியில்லாமலேயே து$_3$ர்யோத$_4$னுதி$_3$யர் முதலான ராஜலோக வீரர்களை நானே கொல்ல முற்பட்டுவிட்டேன் என்று அறிவிப்பதற்காகவே இந்த கே$_4$ாரரூபத்தைக் காட்டினேன். அப்படி அறிவித்ததும் உன்னைப் போர்புரியவைக்கவேண்டும் என்னும் கருத்தாலேயே" என்பது பதிலின் ஸாரம். (காலோऽஸ்மி) நான் காலமாகிறேன். இங்கு கலா முஹூர்த்தம் முதலானவையாயிருக்கும் காலத்தை மாத்திரம் சொல்லுவதாகக்கொண்டால், "நான் காலமாகிறேன்" என்று எம்பெருமான் சொல்லுவது பொருந்தாது; ஆகையால் இந்த்$_3$ர

॥ भा ॥ कलयति—गणयतीति कालः ; सर्वेषां धार्तराष्ट्रप्रमुखानां राजलोकानामायुरवसानं गणयन्नहं तत्क्षयकृत् घोररूपेण प्रवृद्धो राजलोकान् समाहर्तुम्—आभिमुख्येन संहर्तुमिह प्रवृत्तोऽस्मि। अतो मत्संकल्पादेव त्वामृतेऽपि—त்வदुद्योगमृतेऽपि एते धार्तराष्ट्रप्रमुखास्तव

ப்ராணுதி₄கரணத்திற்போலே காலத்திற்கு அந்தர்யாமியாகிறேன் என்றே கொள்ளவேண்டும். அல்லது ஆகாஶப்ராணுதி₄கரணங்களிற் போலே "கலயதி—க₃ணயதி இதி கால:" என்று 'எதிரிகளின் ஆயுள்முடிவைக் கணக்கிடும் காலனுகிறேன்' என்று யௌகி₃கமான பொருளைக்கொள்ளவேண்டும். அல்லது, ஸ்ருஷ்டிஸ்தி₂தி காலங்களிலும் வேறுபட்ட ஸம்ஹாரகாலத்திற்கு அபி₄மானியான ஊழிமுதல்வனுனவனுடைய கறுத்த திருமேனியோடு கூடிய ஸ்வரூபத்தைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். எப்படிக்கொண்டாலும், "கலயதி-க₃ணயதி இதி கால:" [எதிரிகளின் ஆயுள்முடிவைக் கணக்கிடுவது காலம்] என்னும் வ்யுத்பத்தியினுல் தேறும் பொருள் ப்ரகரணத்திற்குப் பொருந்தியதாகையால் கைக்கொள்ளத்தக்கது. 'கல'தா₄துவுக்கு ஶப்₃த₃ம் முதலான மற்றும் பல பொருள்கள் இருந்தபோதிலும், ஸம்ஹாரப்ரகரணத்திற்குப் பொருந்திய 'க₃ணநம்' [கணக்கிடுதல்] என்னும் பொருள் கொள்ளப்பட்டது. திருதராஷ்ட்ர புத்திரர்கள் முதலான ராஜலோகவீரர்கள் அனைவரது ஆயுள்முடிவு காலத்தைக் கணக்கிடும் காலமாகிறேன் என்பது திரண்டபொருள். (லோகக்ஷயக்ருத்) அந்த ராஜலோகவீரர்களின் அழிவைச் செய்பவனுகிறேன். 'லோக'ஶப்₃த₃ம் 29-வது ஶ்லோகத்திற்போலே ராஜலோக வீரர்களைக் குறிக்கிறது. (ப்ரவ்ருத்₃த₄:) அனைவரையும் வாயிலிட்டுக் கொள்ளுகையாலே கோ₄ரமான விஶ்வரூபத்தோடு வளர்ந்தவனுய். (லோகாந் ஸமாஹர்த்துமிஹ ப்ரவ்ருத்த:) ராஜலோகத்தை நானே முன்னின்று அழிக்கமுற்பட்டிருக்கிறேன். "ஸமாஹர்த்தும்" என்னும் பத₃த்திற்கு 'ஒன்றுகச் சேர்ப்பது'முதலான பொருள்கள் ஸம்ஹாரப்ரகரணத்திற்குப் பொருந்தாது. வெறும் ஸம்ஹாரத்தை அப்பத₃த்திற்குப் பொருளாகக்கொண்டால், "லோகக்ஷயக்ருத்" என்னும் பத₃த்தோடு புநருக்தி ஏற்படும். ஆகையால், "ஸம்" "ஆ" என்னும் இரு உபஸர்க்க₃ங்களுக்கும்சேர "ஆபி₄முக்₂யத்தோடு (நானே முன்னின்று) ஸம்ஹாரம்செய்ய முற்பட்டிருக்கிறேன்" என்று பொருள்கொள்வதே பொருந்தும். எனது ஆட்களைக்கொண்டு இவர்களை அழிக்காமல் நானே நேரே அழிக்கமுற்பட்டிருக்கிறேன் என்று கருத்து. எனது

प्रत्यनीकेषु येऽवस्थिता योधाः, ते सर्वे न भविष्यन्ति—विनङ्क्ष्यन्ति ॥ ३२ ॥

तस्मात्त्वमुत्तिष्ठ यशो लभस्व
जित्वा शत्रून् भुङ्क्ष्व राज्यं समृद्धम्।
मयैवैते निहताः पूर्वमेव
निमित्तमात्रं भव सव्यसाचिन् ॥ ३३ ॥

33. தஸ்மாத் த்வமுத்திஷ்ட$_2$ யஶோ லப$_4$ஸ்வ
ஜித்வா ஶத்ரூந் பு$_4$ங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்$_3$த$_4$ம் ।
மயைவைதே நிஹதா꞉ பூர்வமேவ
நிமித்தமாத்ரம் ப$_4$வ ஸவ்யஸாசிந் ॥

ஸங்கல்பத்தாலே அழிக்கமுற்பட்டிருக்கிறேன் என்றும் பொருள் கொள்ளலாம். "மநஸைவ ஜக$_3$த்ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரஞ்ச கரோதி ய꞉। தஸ்ய அரிபக்ஷக்ஷபணே கியாந் உத்$_3$யம விஸ்தர꞉॥" [வி-பு 5-22-15] [மனத்தாலேயே உலகைப் படைப்பதையும் அழிப்பதையும் செய்பவனுக்கு எதிரிகளை அழிப்பதற்குப் பெரிய முயற்சி தேவையில்லை.] என்று சொல்லப்பட்டதன்றே. முற்பாதியில் சொன்ன அர்த்த$_2$த்தால் தேறப்போகும் நிகழ்ச்சியைப் பிற்பாதியால் சொல்லுகிறான்—(யே யோத$_4$ா꞉ ப்ரத்யநீகேஷு அவஸ்தி$_2$தா꞉-(தே) ஸர்வே த்வா ருதே அபி ந ப$_4$விஷ்யந்தி) எந்த வீரர்கள் உனக்கு எதிர்ப்பக்ஷத்தில் உள்ளனரோ அவர்கள் அனைவரும் உனது போர் முயற்சியில்லாவிட்டாலும் எனது ஸங்கல்பத்தாலேயே அழியப் போகிறவர்களே. உன் கையில் வில் நீ ஆட்டியபடி ஆடுவதுபோல் என்னால் நீ ஆட்டிவைக்கப்பட்டு, இவர்களை அழிக்கும் கருவியாகக் கொள்ளப்பட்டிருக்கிறாய். ஆகையால் உனது போர்முயற்சியில்லாவிடினும் நான் என் விருப்பத்தை வேறுவழியில் நிறைவேற்றிக் கொள்வேன் என்று கருத்து. 'ந ப$_4$விஷ்யந்தி' என்றதற்கு 'இவர்கள் உண்டாகப்போவதில்லை' என்று பொருள்கொள்வது ஸம்ஹார ப்ரகரணத்திற்குப் பொருந்தாதாகையால் 'உயிரிழப்பார்கள்' என்றே பொருள்கொள்ளவேண்டும். 32.

தஸ்மாத்—முற்கூறிய காரணத்தால், **த்வம்**—நீ, **உத்திஷ்ட₂**—(போர் புரிய) எழுந்திருப்பாய்; **ஶத்ரூந் ஜித்வா யஶ: லப₄ஸ்வ**—எதிரிகளை வென்று புகழ் பெறுவாய்; **ஸம்ருத்₃த₄ம் ராஜ்யம் பு₄ங்க்ஷ்வ**—செழிப்புள்ள ராஜ்யத்தை அநுப₄விப்பாய்; **மயா ஏவ ஏதே பூர்வமேவ நிஹதா:**—(அநீதிச் செயல் புரிந்த) இவர்கள் என்னாலேயே முன்னமே அழிக்கப்பட வேண்டியவர்களாக ஸங்கல்பிக்கப்பட்டுவிட்டார்கள். **ஸவ்யஸாசிந்**—இடது கையாலும் அம்பெய்யவல்ல அர்ஜுநா! **நிமித்த மாத்ரம் ப₄வ**—(அம்பு முதலானவற்றைப் போலே என் கையில்) ஒரு கருவியாயிருப்பாயாக.

---

34. ஆதலா லிங்கெழுநீ யாங்குப் பெறுபுகழை
யேதலரை வென்றே யெழிலரசின் மீதமர்வாய்
என்னாலே முன்னே யிவர்கள் கொலையுண்டார்
மன்னா நீ யேதுவா மற்று.

ஆதலால் இங்கு நீ எழு—முற்கூறிய காரணத்தால் இப்போர்க்களத்தில் நீ போர்புரிய எழுவாயாக; **ஏதலரை வென்றே**—எதிரிகளை வெற்றிகொண்டு, **ஆங்கு புகழை பெறு**—அப்போர்க்களத்தில் புகழ்பெறுவாய்; **எழில் அரசின் மீது அமர்வாய்**—செழிப்புள்ள அரசை அநுப₄விப்பாய்; **இவர்கள்**—எதிர்த்தலையிலுள்ள வீரர்கள், **என்னாலே முன்னே கொலையுண்டார்**—என்னால் கொலைபுரியத்தக்கவர்களாக நிச்சயிக்கப்பட்டார்கள்; **மன்னா!**—(இரு கையாலும் அம்பெய்ய வல்ல) அரசனே! **நீ**—நீ, **மற்று ஏதுவா**—(என் கையில்) ஓர் கருவியாக ஆவாயாக.

---

33. "எனது முயற்சியில்லாமலே து₃ர்யோத₄நாதி₃யர் அழிவர் எனில்: என்னைப் போர்புரியும்படி ஏன் தூண்டுகிறாய்?" என்று அர்ஜுனனுக்குக் கருத்தாகக்கொண்டு, இந்த ஶ்லோகத்தில் பதில் உரைக்கிறான் **கண்ணன்**. "எனது ப₄க்தனான உனக்கு வெற்றி, புகழ், அரசு ஆகியவை கிடைப்பதற்காகவே உன்னைத் தூண்டுகிறேன்" என்பது பதிலின் ஸாரம். (தஸ்மாத் த்வம் உத்திஷ்ட₂) இப்படி ஏற்கனவே நான் எதிரிவீரர்களை அழியத்தக்கவர்களாக நிச்சயித்து

॥ भा ॥ तस्मात्त्वं तान् प्रति युद्धायोत्तिष्ठ, तान् शत्रून् जित्वा यशो लभस्व; धर्म्यं राज्यं च समृद्धं भुङ्क्ष्व। मयैवैते कृतापराधाः पूर्वमेव निहताः—हनने विनियुक्ताः; त्वं तु तेषां हनने निमित्तमात्रं

விட்டபடியால் நீ அவர்களோடு போர்புரிய எழுந்திருப்பாயாக. (ஶத்ரூந் ஜித்வா யஶோ லப$_4$ஸ்வ) எதிரிகளை வென்று புகழை அடைவாய். (ஶத்ரூந் ஜித்வா ஸம்ருத்$_3$த$_4$ம் ராஜ்யம் பு$_4$ங்க்ஷ்வ) எதிரிகளை வென்று செழிப்புள்ளதாய், க்ஷத்ரியத$_4$ர்மப்படி உனக்குச் சேரவேண்டியதான அரசை அநுப$_4$விப்பாய். "ஶத்ரூந் ஜித்வா" என்பது மத்$_4$யமணி ந்யாயத்தாலே முன்னும் பின்னும் அந்வயிக்கிறது. (மயைவ ஏதே பூர்வமேவ நிஹதா:) திரௌபதியைச் சபை நடுவே மானப$_4$ங்க$_3$ப் படுத்திய அன்றே என்னாலேயே இவர்கள் அழிக்கத்தக்கவர்கள் என்று நிச்சயிக்கப்பட்டு விட்டார்கள். "முன்னமே கொல்லப்பட்டு விட்டார்கள்" என்று இங்கு சொல்லப்பட்டிருந்தபோதிலும், இவர்கள் அனைவரும் காண உயிருடன் இருக்கையாலும், இவர்கள் முன்பே அழிந்துவிட்டார்களெனில், "போர்புரிய எழுந்திருப்பாய்" என்று கண்ணன் அர்ஜுனனைப் போர்புரியத் தூண்டுவது பொருந்தாதாகையாலும், "நிஹதா:" என்பதற்கு "அழிக்கத்தக்கவர்கள் என்று நிச்சயிக்கப்பட்டுவிட்டார்கள்" என்றே பொருள்கொள்ள வேண்டும். கண்ணனின் ஸங்கல்பம் பழுதுபடாதாகையாலே, நிச்சயமாக அழியப்போவதையிட்டு 'அழிந்துவிட்டார்கள்' என்று கூறப்படுகிறது. (ஏதே) என்றதால்—து$_3$ர்யோத$_4$னாதி$_3$யர் அபசாரம் செய்தவர்களாகையாலே, அவர்களை அழிக்கத்தக்கவர்களாக நிச்சயித்ததால் எனக்கு வைஷம்யம் (பக்ஷபாதம்) நைர்க்$_4$ருண்யம் (கருணையின்மை) எனும தோ$_3$ஷங்கள் வரமாட்டா என்னும் கருத்தும் உணர்த்தப்படுகிறது. அவர்கள் செய்த அபசாரங்கள் அனைத்திலும் கொடியது—கண்ணனைச் சரணடைந்தவளான திரௌபதியைச் சபைநடுவே மானப$_4$ங்க$_3$ம் செய்ய முற்பட்டதேயாகையாலே, "பூர்வமேவ" என்பது அக்காலத்தைக் குறிக்கிறது. (நிமித்தமாத்ரம் ப$_4$வ) அவர்களை அழிப்பதில், உனக்கு உன் கையில் அம்புபோலே, எனக்கு நீ ஓர் கருவியாக ஆவாயாக. நிச்சயமாக என்னால் அழிக்கப்படப்போகிற இவர்களை அழிப்பதில் நீ உன்னை ஓர் கருவியாகவே கருதினாயாகில், 'இதனால் பாபம் ஏற்படுமோ? கருணையற்றவன் எனும் அபவாத$_3$ம் ஏற்படுமோ? தோல்வி ஏற்படுமோ' முதலான ஐயங்கள் உனக்கு விளையமாட்டா. ப்ரகரணத்திற்குப் பொருந்தாதாகையாலே நிமித்த

भव; मया हन्यमानानां शस्त्रादिस्थानीयो भव। सव्यसाचिन्; षच-समवाये; सव्येन शरसचनशीलस्सव्यसाची; सव्येनापि करेण शर-समवायकरः; करद्वयेन योद्धुं समर्थ इत्यर्थः॥ ३३॥

द्रोणं च भीष्मं च जयद्रथं च
कर्णं तथाऽन्यानपि योध [वीरान्] मुख्यान्।
मया हतांस्त्वं जहि मा व्यथिष्ठाः
युध्यस्व जेतासि रणे सपत्नान्॥ ३४॥

34. த்$_3$ரோணம் ச பீ$_4$ஷ்மம் ச ஜயத்$_3$ரத$_2$ம் ச
கர்ணம் தத$_2$ாऽந்யாநபி யோத$_4$ [வீராந்] முக்$_2$யாந்।
மயா ஹதாம்ஸ்த்வம் ஜஹி மா வ்யதி$_2$ஷ்ட$_2$ா:
யுத்$_4$யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்நாந்॥

ஶப்$_3$த$_3$ம் உபாத$_3$ாநத்தைக்காட்டிலும் வேறுபட்ட நிமித்தகாரணத்தை இங்கு குறிப்பதல்ல. ஆகையால், 'முக்கியகாரணமான என்னைக் காட்டிலும் வேறுபட்ட அமுக்கியகாரணமாவாயாக' என்றே பொருள் கொள்ளவேண்டும். (ஸவ்யஸாசிந்) இடதுகையாலும் அம்பெய்யவல்ல அர்ஜுநு! இரு கைகளாலும் போர்புரிய வல்லவனே! என்றபடி. "ஸவ்ய" ஶப்$_3$த$_3$ம் 'இடது' என்னும் பொருளுடையதாய், இங்கு ப்ரகரணத்திற்குப் பொருந்தியதாகையாலே இடதுகையைக் குறிக்கும். "ஷச - ஸமவாயே" என்னும் த$_4$ாதுவிலிருந்து தோன்றிய 'ஸாசி' ஶப்$_3$த$_3$ம் 'அம்பெய்வதை இயல்வாகக்கொண்டவன்' எனப் பொருள் படும். வில்லாளிகளில் சிறந்தவனான அர்ஜுநன் மற்றவர்களைப் போலே வலது கையால் அம்பெய்பவன் என்பது சொல்லாமலே விளங்கும். ஆகையால், 'ஸவ்யஸாசி' என்னும் அர்ஜுநனுடைய பெயர், "(மற்றவர்களைப்போல வலது கையால் மாத்திரமன்றிக்கே) இடது கையாலும் அம்பெய்வதை இயல்வாகக்கொண்டவன்" என்று பொருள்படுகிறது. "மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்த நான், அவ்விஷயத்தில் எனக்குத் துணைபுரிவதற்காகவே உனக்கு இத்தகைய திறமையைப் படைத்திருக்கிறேன்; ஆகையால் நீ போர்புரிய எழுந்து, எதிரிகளை வென்று அரசைப்பெற்றுப் புகழடைவதன் மூலம் நான் கொடுத்த திறமையைப் பயனுடையதாக்குவாயாக" என்று கருத்து. 33.

த்₃ரோணம் ச—து₃ரோணர், **பீ₄ஷ்மம் ச**—பீ₄ஷ்மர், **ஜயத்₃ரத₂ம் ச**—ஜயத்₃ரத₂ன், **கர்ணம் (ச)**—கர்ணன், **தத₂ா**—அவ்வண்ணமே, **அந்யாந் யோத₄முக்₂யாந் அபி**—மற்ற போர்த்தலைவர்கள் (ஆகிய), **மயா**—என்னால், **ஹதாந்**—(ஏற்கனவே) கொல்ல நிச்சயிக்கப்பெற்ற அனைவரையும், **த்வம்**—நீ, **ஜஹி**—கொல்வாய்; **மா வ்யதி₂ஷ்ட₂ா:**—(தகாத கருணை அன்பு முதலானவற்ருலே 'இவர்களை எப்படிக் கொல்வது' என்று) துன்புருதே; **யுத்₄யஸ்வ**—(ஐயமில்லாமல்) போர்புரிவாயாக; **ரணே**—போரில், **ஸபத்நாந்**—எதிரிகளை, **ஜேதாஸி**—ஜயிப்பாய்.

---

35. தேரார் துரோணன் செயத்திரதன் காங்கேய
னேரார் கன்னனுமற் றிங்கிகலிற் —பேராளர்
யான்செகுத்தார் தம்மை யிகற்செகுத்துத் துன்பெய்தேல்
தான்செயித்தி யொன்னுரைச் சாய்த்து.

தேரார்-தேரில் வீற்றிருக்கும், **துரோணன்**-துரோணன், **செயத்திரதன்**—ஜயத்₃ரத₂ன், **காங்கேயன்**—கங்காபுத்திரனை பீ₄ஷ்மன், **ஏர் ஆர் கன்னனும்**—சிறப்புமிக்க கர்ணன், **மற்று**—மேலும், **யான் செகுத்தார்**—(ஏற்கனவே) என்னால் கொல்ல நிச்சயிக்கப்பெற்ற, **இங்கு இகலில் பேராளர் தம்மை**—இங்குள்ள போர்த்தலைவர்கள் அனைவரையும், **இகல் செகுத்து**-போரில் கொன்று, **துன்பு எய்தேல்**—துன்பமடையாமலிரு. **ஒன்னுரை தான் சாய்த்து**—எதிரிகளை நீயே கொன்று, **செயித்தி**—வெற்றியை அடைவாய்.

---

34. "கத₂ம் பீ₄ஷ்மம்" [2-4] என்று தொடங்கும் ஶ்லோகத்தில் அர்ஜுனன் தகாத இடத்தில் அன்பினாலும், கருணையாலும், த₄ர்மத்தை அத₄ர்மம் என்று மருண்டதாலுண்டான ப₄யத்தாலும், "த்₃ரோணர் பீ₄ஷ்மர் முதலானுரை நான் எப்படிக்கொல்லுவேன்?" என்று கேட்ட கேள்விக்கு நேரே பதில் அளிக்கிருன் இந்த ஶ்லோகத்தில். ஶரணமடைந்த த்₃ரௌபதி₃க்கு அவமானம் ஏற்படக் காரணமாயிருந்தது முதலான காரணங்களையிட்டு அபசாரத்தின் கனத்துக்குத் தக்கவாறு

॥भा॥ द्रोणभीष्मकर्णादीन् कृतापराधतया मयैव हनने विनियुक्तान् त्वं जहि—त्वं हन्याः। एतान् गुरून् बन्धूंश्चान्यानपि भोगसक्तान् कथं हनिष्यामीति मा व्यथिष्ठाः—तानुद्दिश्य धर्माधर्मभयेन बन्धुस्नेहेन कारुण्येन च मा व्यथां कृथाः। यतस्ते कृतापराधा

அவர்களை வரிசைப்படுத்திச் சொல்லுகிறுன் முதற்பாதியில். (த்3ரோணம் ச) துரோணரையும். கௌரவர்களுக்கு ஆசார்யரா யிருந்தும் ஶரணமடைந்த த்3ரௌபதி3யைக் கௌரவர்கள் அவ மானம் செய்யப் பார்த்திருந்தமையால் அபசாரத்தின் மிகுதியைப்பற்ற துரோணரை முதலில் எடுக்கிறுன். (பீ4ஷ்மம் ச) பீ4ஷ்மரையும். கௌர வர்களைத் திருத்தவேண்டிய பாட்டனராயிருந்தும் து3ஶ்ஶாஸனன் த்3ரௌபதி3யைத் துகிலுரிவதைப் பார்த்திருந்த பெருங்குற்றம்கருதி பீ4ஷ்மரை அடுத்தபடி எடுக்கிறுன். (ஜயத்3ரத2ம் ச) ஜயத்3ரத2னையும். இளைஞனை அபி4மன்யுவைப் பலரோடு சேர்ந்து சூழ்ந்துநின்று கொல்லப்போகிற மகாபாபியாகையாலே ஜயத்3ரத2னை அடுத்தபடி எடுக்கிறுன். (கர்ணம்) கர்ணனையும். த்3ரௌபதி3 அவமானப் படுவதற்குத் துணைபுரிந்தவனுகையாலும், செஞ்சோற்றுக் கடனுகிற மேலெழுந்தவாரியான த4ர்மத்தைப் பார்த்து ஸஹோத3ரர்களைக் கொல்லமுயல்பவனுகையாலும் கர்ணனை அடுத்தபடி எடுக்கிறுன். (தத2ா அந்யாந் அபி யோத4முக்2யாந்) அவ்வண்ணமே து3ர்யோத4 னன் முதலான மற்ற போர்த்தலைவர்களையும். த்3ரௌபதி3யை அவமானப்படுத்தியவர்களாகையாலே கடைசியாக இவர்களைச்சேர்த்து எடுக்கிறுன். "த்3ரௌபதீ3பரிப4வம் கண்டிருந்தது க்ருஷ்ணுபி4ப்ரா யத்தாலே ப்ரத4ாந தே3ாஷம்" [ஸ்ரீவசனபூ4ஷணம் ஸூத்ரம் 20] "அர்ஜுனனுக்கு தூ3த்யஸாரத்2யங்கள் பண்ணிற்றும் ப்ரபத்த்யுப தே3ஶம் பண்ணிற்றும் இவனுக்காக" [ஷை 22] என்று பிள்ளை லோகாசார்யர் அருளியது இங்கு அனுஸந்தி4க்கத்தக்கது. (மயா ஹதாந்) என்னுல் கொல்ல நிச்சயிக்கப்பட்டவர்களை. (த்வம் ஜஹி) நீ கொல்லுவாயாக. சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்டது போலே "என்னுடைய ஸங்கல்பத்தாலே இவர்கள் அழியவே போகிறுர்கள். நீ ஒரு கருவியாயிருந்து பேறுபெறுவாயாக" என்று கருத்து. (மா வ்யதி2ஷ்ட2ா:) "பெரியோர்களாய் மரியாதைக்குரிய வர்களான இவர்களை எப்படிக் கொல்லுவது?" என்று க்ஷத்ரிய த4ர்மமான யுத்3த4த்தில் அத4ர்மம் என்னும் பயக்கத்தாலும், "உறவி னர்களாகிற இவர்களை எப்படிக்கொல்லுவேன்?" என்று உறவினரிடம்

मयैव हनने विनियुक्ताः; अतो निर्विशङ्को युध्यस्व। रणे सपत्नान् जेतासि—जेष्यसि। नैतेषां वधे नृशंसतागन्धः; अपितु जय एव लभ्यत इत्यर्थः ॥ ३४ ॥

सञ्जय उवाच—

एतच्छ्रुत्वा वचनं केशवस्य
कृताञ्जलिर्वेपमानः किरीटी।
नमस्कृत्वा भूय एवाह कृष्णं
सगद्गदं भीतभीतः प्रणम्य ॥ ३५ ॥

ஸஞ்ஜய உவாச—

35. ஏதச்ச்$_2$ருத்வா வசநம் கேஶவஸ்ய
க்ருதாஞ்ஜலிர்வேபமாநঃ கிரீடீ।
நமஸ்க்ருத்வா பூ$_4$ய ஏவாஹ க்ருஷ்ணம்
ஸக$_3$த்$_3$க$_3$த$_3$ம் பீ$_4$தபீ$_4$தঃ ப்ரணம்ய ॥

அன்பாலும், "இவ்வுலகபோ$_4$ாக$_3$ங்களில் ஈடுபட்டிருக்கும் இவர்களை எப்படிக்கொல்லுவேன்?" என்று கருணையாலும் துன்புருதே. "இவற்ருல் துன்புருவிட்டாலும் ஆசார்யரான துரோணர், பிதாமஹரான பீ$_4$ஷ்மர் முதலானவர்கள் என்னால் ஜயிக்கமுடியாத எதிரிகளாயிற்றே; யுத்$_3$த$_4$த்தில் வெற்றி நிலையில்லாததாயிற்றே" என்று அர்ஜுனனுக்குக் கருத்தாகக்கொண்டு பதிலளிக்கிருன் கடைசிப் பாத$_3$த்தாலே. (யுத்$_4$யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்நாந்) இப்படி அபசாரம் செய்தவர்களாகையாலே என்னாலேயே கொல்ல நிச்சயிக்கப் பட்டுவிட்டவர்களாகையால் நீ வெற்றியில் ஐயமின்றிப் போர்புரிவாயாக. போரில் எதிரிகளை ஜயிப்பாய். (ஜேதாஸி) 'க$_3$ந்தாஸி' (2-52) என்றவிடத்தில்போலே இதுவும் எதிர்காலப் பொருளையுடைய ஒரே சொல். (ஸபத்நாந்) அனுகூலர்களாயிருந்தால் இவர்களிடம் இரக்கம் காட்டவேண்டியதே. இவர்களோ எதிரிகளாயிருப்பதால் இரங்கத் தக்கவர்களல்லர் என்று கருத்து. ஆக, "துரோணர் முதலான எதிரிகளைக் கொல்லுவதால் கொடியவன் என்னும் அவப்பெயர் உனக்கு ஏற்பட இடமேயில்லை. ஆனால் நீ ஜயித்துப் புகழடைவதே உறுதியாக நடைபெறும். ஆகையால் துன்புறவேண்டா" என்பது ஶ்லோகத்தின் திரண்ட கருத்து. 34.

ஸஞ்ஜய உவாச—ஸஞ்ஜயன் கூறலுற்ருன்:— **கேஶவஸ்ய**—கண்ணனுடைய, **ஏதத் வசநம்**—இந்த வார்த்தையை, **ஶ்ருத்வா**—கேட்டு, **கிரீடீ**—அர்ஜுனன், **நமஸ்க்ருத்வா**—(கண்ணனை) வணங்கி, **பீ₄தபீ₄த:**—மிகவும் ப₄யந்தவனுய், **பூ₄ய ஏவ க்ருஷ்ணம் ப்ரணம்ய**—மறுபடியும் கண்ணனை வணங்கி, **க்ருதாஞ்ஜலி:**—கைகூப்பினவனுய், **வேபமாந:** — நடுங்குகின்றவனுய், **ஸக₃த்₃க₃த₃ம் ஆஹ**—தழுதழுத்த குரலையுடையவனுய்க் கூறினுன்.

---

36. கேசவன்ற னிவ்வசனங் கேட்ட கிரீடிதா
னேசமுடன் கைதொழுது நின்றிறைஞ்சி—மாசறுசீர்க்
கண்ணனைப்பின் னும்பகர்ந்தான் கற்கதமாங் கண்டத்தா
லுண்ணடுக்க மெய்திவணக் குற்று.

கேசவன் தன் இவ்வசனம் கேட்ட கிரீடிதான்—கேஶவனுடைய இந்த வார்த்தையைக் கேட்ட அர்ஜுனன், **நேசமுடன் (கண்ணனை) கைதொழுது நின்று** — அன்புடன் கண்ணனைக் குறித்துக் கைகூப்பி நின்று, **இறைஞ்சி**—துதித்து, **உள் நடுக்கம் எய்தி**—நெஞ்சம் நடுங்கப்பெற்றவனுய், **மாசறு சீர் கண்ணனை** — குற்றமற்ற கு₃ணங்களையுடைய கண்ணனை, **பின்னும் வணக்குற்று**—மறுபடியும் வணங்கி, **கற்கதமாம் கண்டத்தால் பகர்ந்தான்**— தழுதழுத்த குரலினுல் கூறினுன்.

---

35. கண்ணனுடைய வாக்யத்தைக் கேட்டவுடன் அர்ஜுனன் செய்ததைக் கூறுகிருன் ஸஞ்ஜயன் இந்த ஶ்லோகத்தில். (ஏதத் கேஶவஸ்ய வசநம் ஶ்ருத்வா) கேஶவனுடைய இந்த வார்த்தையைக் கேட்டு. (கேஶவஸ்ய) ஆய்ப்பாடியிலுள்ள தன்னடியார்களை ரக்ஷிப்பதற்காக, அவர்களை நலியக் குதிரை வடிவில்வந்த 'கேஶீ' என்னும் அஸுரனைக் கொன்று அடியார்களிடம் தன் வாத்ஸல்யத்தை வெளிப்படுத்தியவன், நான் கேட்ட மாத்திரத்தில் விஶ்வரூபத்தைக் காட்டியதோடல்லாமல் தன் கருத்தையும் தெரிவித்ததன்மூலம் தான் வாத்ஸல்யக் கடலாயிருப்பவன் என்று நிலைநிறுத்தினுன் என்று கருத்து. 'க:' என்று பிரமனையும் 'ஈஶ:' என்று ஶிவனையும் குறித்து, அவர்கள்

॥भा॥ एवदाश्रितवात्सल्यजलधेः केशवस्य वचनं श्रुत्वा अर्जुनस्तस्मै नमस्कृत्य भीतभीतो भूयस्तं प्रणम्य कृताञ्जलिर्वेपमानः किरीटी सगद्गदमाह॥ ३५॥

अर्जुन उवाच—

स्थाने हृषीकेश तव प्रकीर्त्या जगत्प्रहृष्यत्यनुरज्यते च।
रक्षांसि भीतानि दिशो द्रवन्ति सर्वे नमस्यन्ति च सिद्धसङ्घाः॥ ३६ ॥

இருவரையும் படைத்துக் காக்கும் பரம்பொருளான கண்ணன் கேசவனாகிறான் என்று கைலாஸயாத்ரையின்போது ஶிவனே கூறிய கேஶவநாம நிர்வசனப்படியும் பொருள்கொள்ளலாம். (கிரீடீ நமஸ்க்ருத்வா) கிரீடத்தை உடையவனாகையால் அர்ஜுனனுக்கு ஏற்பட்ட கிரீடீ என்னும் பெயர் ஓங்கி உலகளந்த உத்தமனாகிற கண்ணனை வணங்கியதும் பொருள்படைத்ததாயிற்று என்று கருத்து. "ப$_4$ார: பரம் பட்ட கிரீட ஜுஷ்டமப்யுத்தமாங்க$_3$ம் ந நமேந்முகுந்த$_3$ம்" [ப$_4$ாக$_3$வதம் 2-3-21] [எந்தத் தலை பட்டத்தாலும் கிரீடத்தாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தபோதிலும் முகுந்த$_3$னை வணங்கவில்லையோ அது உடலுக்குச் சுமையே] என்று சொல்லப்பட்டதன்றோ. (பீ$_4$தபீ$_4$த: பூ$_4$ய ஏவ ப்ரணம்ய) மிகவும் பயந்தவனாய் மறுபடியும் கண்ணனை வணங்கி. (க்ருதாஞ்ஜலி:) அகாரத்தால் சொல்லப்படும் கண்ணனை நீர்ப் பண்டமாக உருக்கும் அஞ்ஜலியைச் செய்தவனாய். "அம் ஜலயதீதி அஞ்ஜலி:" என்று அஞ்ஜலி ஶப்$_3$த$_3$வ்யுத்பத்தி. (வேபமாந:) விஶ்வரூபத்தைக் கண்ட ப$_4$யத்தாலே நடுங்குகின்றவனாய். (ஸ்ருஷ்ணாம் ஸக$_3$த்$_3$க$_3$த$_3$ம் ஆஹ) அக்காரணத்தாலேயே தழுதழுத்த குரலையுடையனாய், கண்ணனை நோக்கிப் பின்வருமாறு கூறினான். இங்கு அர்ஜுனன் இருமுறை வணங்கியதற்குக் காரணம் என்ன? எனில், "கண்ணனுடைய வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் தன் வயமிழந்தவனாய் முதலில் வணங்கினான். நடுக்கத்தாலும் சொல்லப்போகும் வார்த்தையைத் தொடங்குவதற்காகவும் மறுபடியும் ப்ரணாமாஞ்ஜலிகளைப் பண்ணினான்" என்று தாத்பர்யசந்த்$_3$ரிகையில் தே$_3$ஶிகன் காரணத்தை அருளினார். (க்ருஷ்ணம்) அடியார்களாகிற நிலத்தில் ப$_4$க்தியாகிற பயிர் விளையும்படி உழுகின்ற "பத்தி உழவன்" [நான்திருவ 23] என்றும், அடியார்களின் ஸம்ஸாரத்தைக் கர்ஷணம் செய்து அழிப்பவன் என்றும் க்ருஷ்ண பத$_3$த்திற்குப் பொருள்கொள்ளலாம். 35.

அர்ஜுன உவாச—

36. ஸ்தா₂நே ஹ்ருஷீகேஶ தவ ப்ரகீர்த்யா
ஜக₃த் ப்ரஹ்ருஷ்யத்யநுரஜ்யதே ச।
ரக்ஷாம்ஸி பீ₄தாநி தி₃ஶோ த்₃ரவந்தி
ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்₃த₄ஸங்க₄ா:॥

ஹ்ருஷீகேஶ!—இந்த்₃ரியங்களை நியமிக்கும் தலைவனே! **தவ ப்ரகீர்த்யா**—உன்னுடைய புகழைக் கண்டு, **ஜக₃த்**—(இப்போரைக் காணவந்திருக்கும்) தேவர், க₃ந்த₄ர்வர் முதலிய உலகனைத்தும், **ப்ரஹ்ருஷ்யதி**—மிகவும் உகக்கின்றது; **அநுரஜ்யதே ச**—ஈடுபடவும் செய்கின்றது; **ரக்ஷாம்ஸி**—அரக்கர்கள், **பீ₄தாநி**—பயந்தவர்களாய், **தி₃ஶ: த்₃ரவந்தி**—எல்லா தி₃க்குகளிலும் ஓடுகிறார்கள்; **ஸர்வே ஸித்₃த₄ஸங்க₄ா:**—ஸித்₃த₄ர் கூட்டங்களனைவரும், **நமஸ்யந்தி ச**—வணங்கவும் செய்கின்றார்கள்; **ஸ்தா₂நே**—(இது அனைத்தும்) பொருத்தமே.

---

37. பாங்காக நாதாவுன் பண்பாருங் கீர்த்தியா
லோங்கா ருகப்புற் றுலகுநல—மீங்கார்ந்த
வல்லரக்க ரஞ்சி மறைந்தார் திசையெய்தித்
தொல்லமரர் தாம்பணிந்தார் தொக்கு.

நாதா!—தலைவனே! **பாங்காக**—மிகப் பொருத்தமாக, **உன் பண்பு ஆரும் கீர்த்தியால்**—உன்னுடைய கல்யாண கு₃ணங்கள் நிறைந்திருக்கும் புகழைக்கண்டு, **உலகு**—தேவர், க₃ந்த₄ர்வர் முதலான உலகம், **ஈங்கு**—இப்போர்க்களத்தில், **ஓங்கு ஆர் உகப்புற்று**—ஓங்கிய நிறைந்த ஆனந்த₃த்தையடைந்து, (போரைக் காணவந்திருக்கும்) **நலம் ஆர்ந்த(து)**—உன்னிடம் ஈடுபாடு நிறையப்பெற்றது; **வல் அரக்கர்**—வலிமைமிக்க அரக்கர்கள், **அஞ்சி**—உன்னைக் கண்டு பயந்து, **திசை எய்தி மறைந்தார்**—எல்லா தி₃க்குகளிலும் ஓடி மறைந்தார்கள்; **தொல் அமரர் தாம்**—பழமையானவர்களான ஸித்₃த₄ர்கள் முதலான தேவ க₃ணங்கள், **தொக்கு**—ஒன்று சேர்ந்து, **பணிந்தார்**—வணங்கினார்கள்.

॥ भा ॥ स्थाने—युक्तम्; यदेतद्युद्धदिदृक्षयाऽऽगतमशेषदेव-गन्धर्वसिद्धयक्षविद्याधरकिन्नरकिंपुरुषादिकं जगत्; त्वत्प्रसादात् त्वां सर्वेश्वरमवलोक्य, तव प्रकीर्त्या सर्वं प्रहृष्यति, अनुरज्यते च।

---

36. இதுமுதல் பதினொரு ஶ்லோகங்கள் அர்ஜுனனுடைய வாக்கியங்கள். அதில் இந்த ஶ்லோகத்தாலே தே$_3$வர் முதலான நல்லோர்கள் அனைவரும் கண்ணனைக் கண்டு ஈடுபடுவதும், அரக்கர் முதலான தீயவர்கள் கண்ணனைக் கண்டு ஓடுவதும் பொருத்தமே என்கிறான். ஸ்ரீவிஷ்ணு பஞ்ஜரம் முதலான துதிகளில் இந்த ஶ்லோகம் ஒரு மந்த்ரமாகப் படிக்கப்பட்டிருக்கிறது. (ஸ்த$_2$ாநே) இது பொருத்தமே; இந்த ஶ்லோகத்தில் மேலே சொல்லப்படுகிற விஷயம் பொருத்தமே என்றபடி. ஸ்த$_2$ாநஶப்$_3$த$_3$ம் இடத்தைக் குறிப்பது ப்ரகரணத்துக்குப் பொருந்தாதாகையால், இங்கு இப்படியே பொருள்கொள்ளவேண்டும். பொருத்தமானது எது என்பதை மேலே விளக்குகிறான்—(தவ ப்ரகீர்த்யா ஜக$_3$த் ப்ரஹ்ருஷ்யதி) உனது விஶ்வரூபத்தினாலும் கு$_3$ணங்களாலும் உண்டான பெரும்புகழைக் கண்டு இப்போரைக் காணவந்திருக்கும் உலகனைத்தும் ஆனந்தம் அடைகிறது. (அநுரஜ்யதே ச) உன்னிடம் ஈடுபடவும் செய்கிறது. (ஜக$_3$த்) இங்கு தே$_3$வர், க$_3$ந்த$_4$ர்வர், ஸித்$_3$த$_4$ர், இயக்கர், வித்$_3$யாத$_4$ரர், கிந்நரர், கிம்புருஷர் முதலான நல்லவர்களுடைய ஸமூஹம் முழுவதையும் குறிக்கிறது. (ப்ரஹ்ருஷ்யதி அநுரஜ்யதே ச) இனிய விருந்தாளி வந்தால் கண்ணுக்கும் மனத்துக்கும் உண்டாவதுபோன்ற ஆனந்தம் 'ப்ரஹ்ருஷ்யதி' என்னும் சொல்லாலும், தந்தை முதலான பெரியவர்களிடத்தில் தனயன் முதலான சிறுவர்களுக்கு உண்டாவதுபோன்ற அன்பு 'அநுரஜ்யதே' என்னும் சொல்லாலும் உணர்த்தப்படுகையாலே புநருக்தியில்லை. இதிலிருந்து கண்ணனுடைய விஶ்வரூபத்தை அவனது அருளாலே அர்ஜுனனைப்போலே அங்கு வந்திருந்த நல்லோர்கள் அனைவரும் கண்டார்கள் என்று விளங்குகிறது. நல்லவர்கள் மட்டுமல்ல, மிக்க தீயவர்களும் கண்டு ஓடுகிறார்கள் என்கிறது மூன்றும்பாத$_3$ம். (ரக்ஷாம்ஸி பீ$_4$தாநி தி$_3$ஶோ த்$_3$ரவந்தி) அரக்கர் முதலான தீயவர்களும் உன்னைக் கண்டு பயந்து எல்லா தி$_3$க்குகளிலும் ஓடுகின்றார்கள். இருபத்திரண்டாவது ஶ்லோகத்தில் தே$_3$வர் அஸுரர் முதலான அனைவருமே விஶ்வரூபத்தைக் கண்டார்கள் என்று கூறியது இங்கு குறிக்கொள்ளத்தக்கது. ஆகையால் அரக்கர்கள் பயந்ததற்குக்

यच्च त्वामवलोक्य रक्षांसि भीतानि सर्वा दिशः प्रद्रवन्ति। सर्वे सिद्धसंघाः—सिद्धाद्यनुकूलसंघाः नमस्यन्ति च। तदेतत्सर्वं युक्तमिति पूर्वेण संबन्धः ॥ ३६ ॥

॥ भा ॥ युक्ततामेवोपपादयति—

कस्माच्च ते न नमेरन् महात्मन्
गरीयसे ब्रह्मणोऽप्यादिकर्त्रे।

37. கஸ்மாச்ச தே ந நமேரந் மஹாத்மந்
க$_3$ரீயஸே ப்$_3$ரஹ்மணோऽப்யாதி$_3$கர்த்ரே।

காரணம் விஶ்வரூபத்தைக் கண்டதே என்றே கொள்ளவேண்டும். தே$_3$வர்கள் உகப்பதற்குக் காரணத்தைச் சொல்லும் 'ப்ரகீர்த்யா' என்னும் முதல் பாத$_3$த்தில் உள்ள பத$_3$ம்அரக்கர் பயப்படுவதற்குக் காரணத்தைச் சொல்லமாட்டாதாகையால் அப்பத$_3$த்தை இங்கு கூட்டிக்கொள்வது பொருந்தாது. 'ப்ரகீர்த்யா' என்பதற்குப் பிறர் செய்யும் ஸங்கீர்த்தனம் என்று பொருள்கொண்டு அதனால் அரக்கர்கள் பயப்படுகிறார்கள் என்று கொள்வதில் கல்பநாகௌ$_3$ரவம் (அதி$_4$கமான கற்பனை) என்னும் தோ$_3$ஷம் வருகிறதாகையால் இருபத்திரண்டாவது ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட விஶ்வரூபத$_3$ர்ஶனத்தால் ப$_4$யப்படுகிறார்கள் என்று கொள்வதே பொருத்தமானது. (ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்$_3$த$_4$ ஸங்க$_4$ா:) இரண்டாம் பாத$_3$த்தில் ஜக$_3$ச்ச$_2$ப்$_3$த$_3$த்தாலே சொல்லப்பட்ட ஸித்$_3$த$_4$ர் முதலான நல்லோர்களின் கூட்டம் முழுவதும் அங்கு சொல்லப்பட்ட ஆனந்த$_3$த்தாலும்,ஈடுபாட்டாலும் உன்னை நமஸ்கரிக்கவும் செய்கின்றனர். இங்கு ஸித்$_3$த$_4$ர் என்றது தே$_3$வர், க$_3$ந்த$_4$ர்வர் முதலான நல்லோர்கள் அனைவருக்கும் உபலக்ஷணம். 'இந்தப் பெருமைகள் 'அனைத்தும் உனக்குப் பொருத்தமே' என்று 'ஸ்த$_2$ாநே' என்னும் முதல் பத$_3$த்தோடு கூட்டிப்பொருள்கொள்வது. (ஹ்ருஷீகேஶ) நீ அனைவரது மனம் முதலான எல்லா இந்த்$_3$ரியங்களையும் நியமிக்கின்றவனாகையாலே நல்லோர்களின் மனம் உன்னைக்கண்டு இன்புற்று ஈடுபட்டு அவர்களை வணங்கச் செய்வதும், தீயவர்களின் மனம் உன்னைக் கண்டு பயந்து நடுங்கி அவர்களை ஓடச்செய்வதும் பொருத்தமே என்று கருத்து. 'ஹ்ருஷீக'ஶப்$_3$த$_3$ம் இந்த்$_3$ரியங்களைக் குறிக்கும். 36.

॥ भा ॥ महात्मन्, ते—तुभ्यं गरीयसे ब्रह्मणो—हिरण्यगर्भस्यापि आदिभूताय कर्त्रे हिरण्यगर्भादयः कस्माद्धेतोर्न नमस्कुर्युः ॥ ३६ ॥

மஹாத்மந் — மஹாபுருஷனே! **க3ரீயஸே** — பெரியவனும், **ப்3ரஹ்மண: அபி ஆதி3கர்த்ரே**—பிரமனுக்கும் எல்லாவகைக் காரணமாகவும் இருப்பவனுமான, **தே** — உன் பொருட்டு, **கஸ்மாத் ச ந நமேரந்**—என்ன காரணத்தால் (அவர்கள்) நமஸ்காரம் செய்யாமலிருக்க முடியும்?

*37. முன் ஸ்லோகத்தில் பொருத்தம் என்று சொல்லப்பட்டதை விவரிக்கிறான் அர்ஜுனன் இந்த அரை ஸ்லோகத்தில், (மஹாத்மந்) மஹாபுருஷனே! "ஆத்மா ஜீவே த்4ருதௌ தே3ஹே ஸ்வபா4வே பரமாத்மனி யத்னேऽர்க்கேऽக்3னௌ மதௌ வாதே" [வைஜயந்தீ] என்று ஆத்மஶப்3த3த்துக்குப் பல பொருள்கள் உண்டு. அந்த எல்லாப் பொருள்களும் இவன் விஷயத்தில் பொருந்தும் எனக்காட்டி, ஸ்ரீராமாயண தனிஸ்லோகம் முதல் ஸ்லோகமான "அஹம் வேத்3மி மஹாத்மானம்" என்னும் ஸ்லோகத்தின் வ்யாக்2யானத்தில் மஹாத்மஶப்3த3த்தை விவரிக்கும்போது பெரியவாச்சான்பிள்ளை அருளியிருக்கும் பொருள்கள் அனைத்தும் இங்கு அனுஸந்தி4க்கத்தக்கது. (க3ரீயஸே ப்3ரஹ்மண: அபி ஆதி3கர்த்ரே தே) மிகப்பெரியவனாய், பிரமனுக்கும் ஆதி3கர்த்தாவான உனக்கு. 'க3ரீயஸே' என்னும் சொல் ஸ்வரூப ரூப கு3ண விபூ4திகளால் மிகப்பெரியவன் என்று காட்டுகிறது. 'ப்3ரஹ்மணோऽப்யாதி3கர்த்ரே' என்னும் தொடர் பிரமனுக்கும் உபாத3ானம், நிமித்தம் என்னும் இரண்டு காரணமுமாயிருப்பவன் இவன் என்று காட்டுகிறது. "பிரமனுக்கும் ஆதி3கர்த்தாவாயிருப்பவன்" என்று பொருள்கொண்டால், பிரமனுக்கு வேறொரு கர்த்தா உண்டு என்று த்4வனிக்குமாகையாலே இப்படியே பொருள்கொள்ளவேணும். 'கர்த்தா' என்னும் பத3ம் நிமித்த காரணமாயிருப்பவனையே குறிக்குமாகையால் ஆதி3பத3ம் உபாத3ான காரணத்தைக் குறிக்கிறது. அல்லது, தான் பிரமன் முதலானார் அனைவருக்கும் காரணமாயிருப்பதுபோலே தனக்கு ஒரு காரணம் இல்லை என்று காட்டுவது ஆதி3ஶப்3த3ம் என்றும் கொள்ளலாம். மிகப்பெரியவனாய், பிரமனுக்கும் ஆதி3கர்த்தாவாயிருப்பவன் இவனே என்பது சொல்லவேண்டுவதொன்றாகையாலே 'தே' என்னும் பத3த்தை அவ்விரண்டு பத3ங்களுக்கும் விஶேஷ்யமாக்கி 'உனக்கு' என்று

अनन्त देवेश जगन्निवास
त्वमक्षरं सदसत्तत्परं यत् ॥ ३७ ॥
त्वमादिदेवः पुरुषः पुराणः
त्वमस्य विश्वस्य परं निधानम्।

அநந்த தே₃வேஶ ஜக₃ந்நிவாஸ
த்வமக்ஷரம் ஸத₃ஸத்தத்பரம் யத் ॥ **37.**
38. த்வமாதி₃தே₃வ: புருஷ: புராண:
த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நித₄ாநம் ।

அநந்த!—மூவகையான அளவுகளும் இல்லாதவனே! **தே₃வேஶ!**—தே₃வர்களுக்கு ஈஶனே! **ஜக₃ந் நிவாஸ!**—உலகனைத்தையும் வியாபித்திருப்பவனே! **அஸத்**—நாமரூபங்களற்றதாய், காரண நிலையிலுள்ள மூலப்ரக்ருதியும், **ஸத்**—நாமரூபங்களையுடையதாய்,' கார்யநிலையிலுள்ள மூலப்ரக்ருதியும், **அக்ஷரம்**—(இந்த மூலப்ரக்ருதியோடு கூடிய) ப₃த்₃த₄ஜீவஸ்வரூபமும், **யத் தத்பரம்**—இவையனைத்துக்கும் மேற்பட்டதான முக்தாத்ம ஸ்வரூபமும், **த்வம்**—நீயே; (ஆகையால்) **த்வம்**—நீயே, **ஆதி₃தே₃வ:**—ஆதி₃தே₃வனாய்,

---

பொருள் கொள்ளப்பட்டது. "கஸ்மாத் ந நமேரந்" என்னும் தொடரோடு 'தே' என்பதைச் சேர்த்து "ஏன் அவர்கள் உன்னை நமஸ்கரிக்கமாட்டார்கள்" என்று பொருள்கொள்வதைக் காட்டிலும் 'தே' என்பதை முற்கூறியபடி விஶேஷ்யமாக்கி 'உனக்கு' என்று பொருள்கொள்வதே பொருத்தமானது. "ந நமேரந்' என்னும் க்ரியாபத₃த்திலிருந்தே 'தே' (அவர்கள்) என்பது ஆர்த்த₂மாக ஸித்₃தி₄க்கும். (கஸ்மாத் ந நமேரந்) ஏன் நமஸ்கரிக்கமாட்டார்கள்? நீ ஸ்வரூப ரூப கு₃ண விபூ₄திகளால் பெரியவனுயிருப்பதைப் பார்த்தாலும் உன்னை நமஸ்கரித்தே தீரவேண்டும். நீ பிரமன் முதலான அனைவருக்கும் எல்லாவகைக் காரணமாயிருப்பதைப் பார்த்தாலும் உன்னை நமஸ்கரித்தே தீரவேண்டும் என்று கருத்து. "தே நம:" என்று வருவதுபோலே "தே நமஸ்குர்யு:"[உனக்கு நமஸ்கரிப்பார்கள்] என்னும் வழக்கும் வருவதுண்டு. "பஞ்சஶிக₂ாய ஈஶ்வரக்ருஷ்ணாய நமஸ்யாம:" [ஸாங்க்₂யதத்வ கௌமுதீ₃] முதலான வழக்குகளைக் காணலாம். *37.

புராண: புருஷ: — புராண புருஷனுயிருப்பவன்; **அஸ்ய விஶ்வஸ்ய** — இந்த உலகுக்கு, **பரம் நிதா₄நம்** — மேலான ஆதா₄ரமாயிருப்பவனும், **த்வம்** — நீயே.

---

38. எத்தாலே நின்வணங்கா ரீங்கவர்கண் மாலவனே
யத்தா பெரியோ யயன்றனக்கும்—வித்தே
யளவிறே வேசநீ யாங்குலகில் வைப்பே
யுளதிலதவ் வக்கரமே லுற்று.

மாலவனே !—மஹாபுருஷனே! **அத்தா**—ஸ்வாமியே! **பெரியோய்**—(ஸ்வரூப ரூப கு₃ண விபூ₄திகளில்) பெரியவனே! **அயன் தனக்கும் வித்தே!**—பிரமனுக்கும் காரணமே! **ஈங்கு**—நீ இப்படிப்பட்டவனுயிருக்கும்போது, **அவர்கள்** — அந்த தே₃வர்கள், **எத்தாலே நின் வணங்கார்**—ஏன் உன்னை வணங்கமாட்டார்கள்? **அளவில் தேவேச** — மூவகையான அளவு இல்லாத தே₃வர் தலைவனே! **ஆங்கு உலகில் வைப்பே**—உலகம் முழுவதிலும் உறைபவனே! **இலது**—நாமரூபங்களற்றதாய், காரணநிலையிலுள்ள மூலப்ரக்ருதியும், **உளது**—நாமரூபங்களையுடையதாய், கார்யநிலையிலுள்ள மூலப்ரக்ருதியும், **அவ் அக்கரம்**—(இந்த மூலப்ரக்ருதியோடு கூடிய) ஜீவாத்மஸ்வரூபமும், **மேல் உற்று** — இவற்றுக்கு மேல் உள்ள முக்தஸ்வரூபமும், **நீ**—நீயே.

37*-*38. இதுதொடங்கி இரண்டு ஶ்லோகங்களாலே உலகிலுள்ள பல பொருள்களையும் பரம்பொருளான கண்ணனோடு ஒரே வேற்றுமையில் படித்து இப்படி ஒன்றுகச் சொல்லுவதற்குக் காரணம் கண்ணன் அனைத்தையும் வியாபித்திருக்கையேயாகும் என்று தெளிவு படுத்துகிறன். 40-வது ஶ்லோகத்தின் கடைசிப் பாத₃த்தாலும் இதை மிகத் தெளிவாகக் கூறுகிறன். (அநந்த) தே₃ஶத்தாலும், காலத்தாலும், வஸ்துவாலும் அளவுபடாதவனே! இவன் இன்ன தே₃ஶத்தில் இல்லையென்றும், இன்ன காலத்தில் இல்லையென்றும், இன்ன வஸ்துவாக இல்லையென்றும் கூறமுடியாது என்று கருத்து. (தே₃வேஶ) தே₃வர்தலைவனே! முற்கூறியபடி மூவகையளவில்லாத தே₃வன் வேறெருவன் இல்லாமையாலே இவனே தே₃வர்தலைவன் என்று கருத்து. (ஜக₃ந்நிவாஸ) உலகனைத்தையும் வியாபித்திருப்ப

॥भा॥ अनन्त! देवेश! जगन्निवास! त्वमेवाक्षरम्, न क्षरतीत्यक्षरं जीवात्मतत्त्वम्। * न जायते म्रियते वा विपश्चित् (क. २. १८) इत्यादिश्रुतिसिद्धो जीवात्मा हि न क्षरति। सदसच्च त्वमेव—सदसच्छब्दनिर्दिष्टं कार्यकारणभावेनावस्थितं प्रकृतितत्त्वम्, नामरूपविभागवत्तया कार्यावस्थं सच्छब्दनिर्दिष्टं तदनर्हतया कारणावस्थमसच्छब्द-

---

வனே! இப்படி இவன் உலகனைத்தையும் வியாபித்திருப்பதனாலேயே இவனுக்கு வஸ்துவினால் அளவுபட்டிருத்தல் இல்லையென்றும், இவ்விரண்டு ஶ்லோகங்களிலும் இவன் மற்ற பொருள்களோடு ஒரே வேற்றுமையில் படிக்கப்படுகிறான் என்றும் உணர்த்தப்படுகிறது. இனி அடுத்த பாத3த்தாலே சேதனாசேதனங்களை வகைப்படுத்தி அவையனைத்தையும் கண்ணனோடு ஒரே வேற்றுமையில் படிக்கிறான். (த்வம் அக்ஷரம்) "ந க்ஷரதீதி அக்ஷரம்" [அழியாததாகையால் அக்ஷரம் எனப்படுகிறது] என்னும் வ்யுத்பத்தியாலே அக்ஷரஶப்3த3ம் ஜீவாத்ம தத்துவத்தைக் குறிக்கிறது. "ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித்" [கட2 2-18] [அறிவையுடையவனான ஜீவன் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை] என்று ஜீவாத்மாவுக்கு அழிவில்லை என்பதை உபநிஷத் ஓதிற்றன்றோ. "த்வம் அக்ஷரம் பரமம்" என்று 12-வது ஶ்லோகத்தில் பரமாத்மதத்துவம் அக்ஷரஶப்3த3த்தால் குறிக்கப்பட்டுவிட்டதாகையால் இங்கு ஜீவாத்மாவைக் குறிப்பதே உசிதம். இப்பாத3த்தின் கடைசியில் தத்பரம் என்று முக்தாத்மஸ்வரூபமும், இடையில் 'ஸத3ஸத்' என்று அசித்தத்துவமும் குறிக்கப்படுகிறதாகையாலே இங்கு அக்ஷரஶப்3த3த்தாலே அசித்தத்துவத்தோடு கூடிய காரணநிலையிலுள்ள ஸம்ஸாரி ஜீவதத்துவம் சொல்லப்படுகிறது என்று கொள்ளவேண்டும்; ஆக, காரணநிலையிலுள்ள ப3த்3த4ஜீவதத்துவத்துக்கு அந்தர்யாமியாயிருப்பவனும் நீயே என்றபடி. (ஸத3ஸத்) ஸத், அஸத் என்னும் ஶப்3த3ங்களாலே சேதனாசேதனங்களைக் குறிப்பதுண்டாயினும், அக்ஷரஶப்3த3த்தாலே சேதனதத்துவத்தைச் சொல்லிவிட்டபடியால் இங்கு 'ஸத3ஸத்' ஶப்3த3ங்களாலே முறையே கார்யநிலையிலுள்ள மூலப்ரக்ருதியும், காரணநிலையிலுள்ள மூலப்ரக்ருதியுமே கூறப்படுகின்றது என்று கொள்வதே உசிதம். காரணநிலையில் நாமரூபமற்றிருக்கையாலே 'அஸத்' என்றும், கார்யநிலையில் நாமரூபங்களோடு கூடியிருக்கையாலே 'ஸத்' என்றும் மூலப்ரக்ருதியை உபநிஷத் குறித்ததன்றோ. "அஸத்3வா இத3மக்3ர ஆஸீத் ததோ வை ஸத3 ஜாயத" [தை. ஆந 7] [நாமரூபமற்ற அஸத்தாகவே இவ்வுலகம்

निर्दिष्टं च त्वमेव। तत्परं यत् — तस्मात्प्रकृतेः प्रकृतिसंबन्धिनश्च जीवात्मनः परम् — अन्यन्मुक्तात्मतत्त्वं यत्, तदपि त्वमेव। अतस्त्वमादिदेवः, पुरुषः पुराणः, त्वमस्य विश्वस्य परं निधानम् — निधीयते त्वयि विश्वमिति त्वमस्य विश्वस्य परं निधानम्; विश्वस्य शरीरभूतस्यात्मतया परमाधारभूतस्त्वमेवेत्यर्थः ॥ ३७-८ ॥

முதலில் இருந்தது. அதிலிருந்து நாமரூபமுடைய 'ஸத்' உண்டாயிற்று] என்ற உபநிஷத்3வாக்யம் காண்க. (ஸத3ஸத் த்வம்) இருவகைப்பட்ட அசேதனதத்துவத்துக்கும் அந்தர்யாமி நீயே என்று கருத்து. (தத்பரம் யத் த்வம்) முற்கூறியதுக்கு மேற்பட்டது யாதொன்றுண்டோ அதுவும் நீயே. இதற்குமுன் அசேதனதத்துவமும் ப3த்3த4சேதனதத்துவமும் எடுக்கப்பட்டுவிட்டமையாலே, இங்கு அவற்றுக்கு மேற்பட்ட முக்தாத்மதத்துவத்தை எடுப்பதாகக்கொள்வதே உசிதம். எள்ளும் எண்ணெயும்போலவும், அரணிக்கட்டையும் நெருப்பும்போலவும் ஒன்றோடொன்று கலந்திருக்கும் சேதனாசேதனங்களுக்கு மேற்பட்ட தத்துவம் முக்தாத்மஸ்வரூபமேயன்றோ. முக்தாத்ம தத்துவத்துக்கும் அந்தர்யாமி நீயே என்று கருத்து. இப்படி ப்ரக்ருதி புருஷர்களையும், முக்தாத்மாவையும் தனக்கு ஶரீரமாகவும் பரதந்த்ரமாகவும் கொண்டிருப்பதனால் தேறும் அர்த்த2த்தை அடுத்தபடி காட்டுகிறான். (த்வம் ஆதி3தே3வ:) இப்படி எல்லாத் தத்துவமாகவும் நீ இருக்கையாலே நீயே ஜக3த்காரணனான தே3வன். (புருஷ: புராண:) அதனாலேயே புராணபுருஷனாயிருப்பவன். எப்பொழுதும் நாள்திங்கள் ஆண்டூழியூழிதொறும் அப்பொழுதைக்கப்பொழுது ஆராவமுதமாயிருப்பவன். "புராபி நவ: புராண:" [பழையவனாயிருந்தபோதிலும் புதிது புதிதாயிருப்பவன்] என்று வ்யுத்பத்தி. (த்வம் அஸ்ய பரம் நித4ாநம்) இந்த உலகத்துக்கு மேலான ஆத4ாரமாயிருப்பவன் நீயே. ஜக3ந்நிவாஸ ஶப்3த3த்தாலே அனைத்தையும் வியாபித்திருப்பவன் என்று சொல்லப்பட்டுவிட்டபடியால், இங்கு 'அனைத்துக்கும் ஆத4ாரமாயிருப்பவன்' என்றே பொருள் கொள்ளவேண்டும். "நிதீ4யதே அஸ்மிந் இதி நிதா4நம்" என்னும் வ்யுத்பத்தியாலே நித4ாநஶப்3த3ம் ஆத4ாரத்தைக் காட்டுகிறது. உனக்கு ஶரீரமாயிருக்கும் உலகனைத்துக்கும் நீயே ஆத4ாரமாயிருப்பவன் என்று கருத்து. நித4ாநஶப்3த3த்தால் அவ்யக்தத்தைச் சொல்லுகிறது என்று சிலர் பொருள் கொண்டது நித4ாநஶப்3த3த்துக்கு அவ்யக்தத்தைக் குறிப்பதாக ப்ரஸித்3தி4யில்லாமையால் பொருந்தாது. 37*-*38.

वेत्ताऽसि वेद्यं च परं च धाम
त्वया ततं विश्वमनन्तरूप! ॥ ३८ ॥

வேத்தாऽஸி வேத்₃யம் ச பரம் ச த₄ாம
த்வயா ததம் விஶ்வமநந்தரூப! ॥ 38.

அநந்தரூப — அளவற்ற உருவங்களையுடையவனே ! **வேத்தா அஸி**—(உலகில் உள்ள எல்லா) அறிபவனும் நீயே; **வேத்₃யம் ச அஸி**—அறியப்படும் பொருளும் நீயே; **பரம் ச த₄ாம அஸி**—மேலான பரமபத₃மும் நீயே; **விஶ்வம்**—இவ்வுலகனைத்தும், **த்வயா ததம்**—உன்னுல் வியாபிக்கப்பட்டுள்ளது.

---

39. துங்கமுதற் றேவனீ தொல்புருட னிவ்வுலகுக்
கங்குநிதி நீயறிவோ னவ்வறிவிற்—றங்குபொருண்
மேலுயருந் தாமமுநீ மிக்கனந்த ரூபாநின்
பாலுலகி னின்ருய் பரந்து.

துங்க முதல் தேவன் நீ—மிகப்பெரிய ஆதி₃தே₃வன் நீயே; **தொல் புருடன் நீ**—புராண புருஷன் நீயே; **அங்கு இவ்வுலகுக்கு நிதி நீ**—அத்தகைய இவ்வுலகுக்கு ஆத₄ாரம் நீயே; **அறிவோன்**—(உலகிலுள்ள எல்லா) அறிபவனும், **அவ் அறிவில் தங்கு பொருள்**—அந்த அறிவினுல் அறியப்படும் பொருளும், **மேல் உயரும் தாமமும்** — மேல் உள்ள பரமபத₃மும், **நீ**—நீயே, **அநந்தரூபா**—அளவற்ற உருவங்களையுடையவனே! **நின்பால் உலகில்**—உன்னிடம் தங்கி நிற்கும் உலகில், **மிக்கு பரந்து நின்ருய்** — மிகவும் வியாபித்து விளங்குகிருய் **நீ**.

38*. ஒரே வேற்றுமையில் மற்றும் சில பொருள்களைப் படித்து இப்படிப் படிப்பதற்குக் காரணத்தைப் பிற்பாதியில் உணர்த்துகிருன் அர்ஜுனன். (வேத்தா அஸி) உலகிலுள்ள அறிபவர்கள் அனைவரும் நீயே. (வேத்₃யம் ச) அவர்களால் அறியப்படும் பொருள்கள் அனைத்தும் நீயே. பரமாத்மாவையே அறிபவனுகவும், அறியப்படும் பொருளாகவும் 'வேத்தாऽஸி வேத்₃யம் ச' என்னும் பத₃ங்களாலே சொல்லுவதாகக்கொள்வது முன்னும் பின்னும் உள்ள ஸாமாநாதி₄கரண்ய ப்ரயோக₃ங்களோடு ஒத்துவராது. முன்

॥ भा ॥ जगति सर्वो वेदिता वेद्यं च सर्वं त्वमेव, एवं सर्वात्मतयाऽवस्थितस्त्वमेव परं च धाम—स्थानं प्राप्यस्थानमित्यर्थः।

ச்லோகத்தில் 'த்வம் அக்ஷரம் ஸத₃ஸத்' என்று காரண நிலையி லிருக்கும் சேதநாசேதனங்களுக்கு அந்தர்யாமியாயிருக்கும் பெருமை சொல்லப்பட்டுவிட்டதாகையால், அவற்றுக்குக் கார்யமான அண்ட₃த்திற்கும், அதற்குள்ளிருக்கும் சேதநாசேதநங்களுக்கும் அந்தர்யாமியாயிருக்கும் பெருமை இங்கு சொல்லப்படுவதாகக் கொள் வதே பொருத்தம். (பரம் ச தா₄ம த்வம்) இப்படி அனைத்துக்கும் அந்தர்யாமியாயிருக்கையால் மேலான ப்ராப்ய ஸ்தா₂னமாயிருப்பவ னும், அதாவது அடையுமிடமாயிருப்பவனும் நீயே. இப்படிப் பொருள் கொள்வது ஸாமாநாதி₄கரண்ய ப்ரயோக₃ம் செய்யும் முன் பின் ச்லோகங்களுக்கு ஒட்டாமையாலே "மேலான ப்ராப்யஸ்தா₂ன மாயிருக்கும் பரமபத₃த்துக்கு அந்தர்யாமியாயிருப்பவனும் நீயே" என்றும் பொருள்கொள்ளலாம். இந்த அப்ராக்ருத ஸ்தா₂னத்தை "அரச்ச ஹவை ண்யச்ச அர்ணவௌ ப்₃ரஹ்மலோகே த்ருதீயஸ்யா மிதோ தி₃வி। ததை₃ரம்மதீ₃யம் ஸர: தத₃ச்வத்த₂ஸ்ஸோம ஸவநஸ்தத₃பராஜிதா பூர்ப்₃ரஹ்மண: ப்ரபு₄விமிதம் ஹிரண்மயம்" [சா₂ந் 8-5-3] [இந்த பூ₁லோகத்தையிட்டுக் கணக்கிடும்போது மூன்றாவதான பரமபத₃த்தில் 'அரம்' என்றும் 'ண்யம்' என்றும் இரண்டு கடல்கள் உள்ளன. அங்கு 'ஐரம்மதீ₃யம்' என்னும் பெயருள்ள அம்ருதமயமான ஒரு குளம் இருக்கிறது. சந்திரன்போல் இனியதாகையாலே "ஸோமஸவநம்" என்னும் அரசமரமும் அங்கு உள்ளது. பரம்பொருளையறியாதவர்களால் நுழையமுடியாததாகை யாலே 'அபராஜிதா' என்னும் (வைகுண்ட₂) நக₃ரமும் உள்ளது. மிகப்பெரியதாய், பொன்மயமான திருமாமணி மண்டபமும் உள்ளது.] "ஸஹஸ்ரஸ்தூ₂ணே விமிதே த்₃ருட₄ உக்₃ரே யத்ர தே₃வாநாம் அதி₄தே₃வ ஆஸ்தே" [தலவகாரச்ருதி] [ஆயிரம் தூண்களை யுடையதும், மிகப்பெரியதும், உறுதியானதும், ஒளிமிக்கதுமான மண்டபத்தில் தே₃வர்களுக்கெல்லாம் மேலான தே₃வன் எழுந்தருளி யிருக்கிறான்] "ஹிரண்மயே பரே லோகே விரஜம் ப்₃ரஹ்ம நிஷ்கலம்" [முண்ட₃க 2-2-10] [பொன் மயமான மேலான உலகில் ரஜோ கு₃ணம் முதலானவை அற்றதாய், அவயவமற்றதான ப்₃ரஹ்மம் எழுந் தருளியிருக்கிறது.] முதலான உபநிஷத்₃ வாக்யங்களிலும், கௌஷீதகி உபநிஷத்திலும் இப்பரமபத₃ம் விரிவாக வர்ணிக்கப் பட்டிருக்கிறதன்றோ. இனி அடுத்த பாத₃த்தில்—இங்கு பொதுவாகப்

त्वया ततं विश्वमनन्तरूप—त्वयाऽऽत्मत्वेन विश्वं—चिदचिन्मिश्रं जगत् ततं—व्याप्तम् ॥ ३८ ॥

॥ भा ॥ अतस्त्वमेव वाय्वादिशब्दवाच्य इत्याह—

वायुर्यमोऽग्निर्वरुणश्शशाङ्कः
प्रजापतिस्त्वं प्रपितामहश्च ।

39. வாயுர்யமோSக்₃நிர்வருணஶ்ஶஶாங்க:
ப்ரஜாபதிஸ்த்வம் ப்ரபிதாமஹஶ்ச ।

ப்ரபிதாமஹ: த்வம்—பாட்டனான பிரமனுக்கும் தந்தையான நீயே, **வாயு:**—வாயுவாகவும், **யம:**—யமனாகவும், **அக்₃நி:** — அக்₃னியாகவும், **வருண:** — வருணனாகவும், **ஶஶாங்க:**—சந்திரனாகவும், **ப்ரஜாபதி: ச**—ப்ரஜாபதிகளாகவும், அவர்களுக்கும் தந்தையான பிரமனாகவும் ஆகிறாய்.

படிக்கப்பட்ட ஸாமாநாதி₄கரண்ய ப்ரயோக₃ங்களுக்கும் அடுத்த ஶ்லோகத்தின் முற்பாதியில் குறிப்பிட்டுச் சிலரை எடுத்து அவர்களோடு ஸாமாநாதி₄கரண்ய ப்ரயோக₃ம் செய்ததற்கும் காரணம் ஶரீராத்மபா₄வம் என்று காட்டுகிறான் — (த்வயா விஶ்வம் ததம்) முன்னும் பின்னும் உன்னோடு ஒரே வேற்றுமையில் படிக்கப்படும் சேதனாசேதனங்களைக்கொண்ட உலகனைத்தும் உன்னால் வியாபிக்கப் பட்டுள்ளது. (அநந்தரூப) அதனாலேயே நீ அளவற்ற ரூபங்களை உடையவன் என்று ஶாஸ்த்ரங்களில் புகழ்பெற்றிருக்கிறாய். இப்படி நீ உனது ஶரீரமான உலகனைத்துக்கும் ஆத்மாவாயிருந்து வியாபிக்கையாலேயே அவையனைத்தும் உன்னோடு ஒன்றாகப் படிக்கப் படுகின்றன என்று கருத்து. 38*.

* 39. இப்படி உலகனைத்தையும் வியாபித்திருக்கையாலே வாயு தொடங்கி, பிரமன் ஈறாகவுள்ள எல்லா தே₃வர்களையும் சொல்லும் ஶப்₃த₃ங்களாலும் முப்பாட்டனான நீயே சொல்லப்படுகிறாய் என்கிறான் அர்ஜுனன். (வாயு: யம: அக்₃னி: வருண:, ஶஶாங்க: ப்ரஜாபதி: ச த்வம்) வாயு, யமன், அக்₃னி, வருணன், சந்திரன், உலகிற்குத் தந்தையராகையாலே ப்ரஜாபதி எனப்படும் த₃க்ஷன் முதலானோர், அவர்களுக்கும் தந்தையாகையாலே பிதாமஹன் எனப்படும் பிரமன் ஆகிய அனைவர்க்கும் அந்தர்யாமியாகையாலே அவர்களைக் குறிக்கும் சொற்களால் நீயே சொல்லப்படுகிறாய். ‘ச’காரத்தாலே ப்ரஜாபதிகளுக்குத் தந்தையாய், பிதாமஹனான பிரமன் ஸமுச்சயிக்கப்படுகிறான்.

॥भा॥ सर्वेषां प्रपितामहस्त्वमेव, पितामहादयश्च; सर्वासां प्रजानां पितरः प्रजापतयः, प्रजापतीनां पिता हिरण्यगर्भः प्रजानां पितामहः, हिरण्यगर्भस्यापि पिता त्वं प्रजानां प्रपितामहः; पितामहादीनामात्मतया तत्तच्छब्दवाच्यस्त्वमेवेत्यर्थः॥ *३९॥

नमो नमस्तेऽस्तु सहस्रकृत्वः
पुनश्च भूयोऽपि नमो नमस्ते॥ ३९॥
नमः पुरस्तादथ पृष्ठतस्ते
नमोऽस्तु ते सर्वत एव सर्व।

(ப்ரபிதாமஹ:, இப்படிப் பிதாமஹனுக்கும் தந்தையாகையாலே நீயே ப்ரபிதாமஹனுகிருய். பிரமனைப் படைத்த ப்ரபிதாமஹன் நாராயணனைத் தவிர வேறெவரும் இல்லாமையால் ப்ரபிதாமஹ ஶப்3த3த்தை ஸாமாநாதி4கரண்ய ப்ரயோக3மாகக் கொள்ளக்கூடாது. "இந்த்3ரம் மித்ரம் வருணம் அக்3நிமாஹு: அதோ2 தி3வ்யஸ் ஸுபர்ணோ க3ருத்மாந்" [ருக்-அஷ்டக 2-3-22] [இந்த்3ரன், மித்ரன், வருணன், அக்3நி, பரமபத3த்திலிருக்கும் அழகிய இறக்கைகளையுடைய க3ருட3ன் என்னும் அனைவருக்கும் அந்தர்யாமியாகையாலே இந்த எல்லா ஶப்3த3ங்களாலும் ஜ்ஞானிகள் பரமாத்மாவைச் சொல்லுகின்றனர். "ஏகம் ஸத்3விப்ரா ப3ஹுதா4 வத3ந்தி அக்3நிம் யமம் மாதரிஶ்வாநமாஹு:" [ருக்-அஷ்டக 2-3-46] [பரமாத்மா ஒருவனே; (அவன் அனைவருக்கும் அந்தர்யாமியாகையால் அவரவரைக் குறிக்கும்) அக்3னி, யமன், வாயு முதலான பத3ங்களால் ஜ்ஞானிகள் பலபடியாக அவனைச் சொல்லுகின்றனர்] —"ததே3வாக்3நிஸ் தத்3வாயுஸ்தத் ஸூர்யஸ்தது3 சந்த்3ரமா:, ததே3வ ஶுக்ரமம்ருதம் தத்3ப்3ரஹ்ம ததா3பஸ்ஸ ப்ரஜாபதி:" [தை·நா 1-7] [அந்தப் பரம்பொருளே (அனைத்துக்கும் அந்தர்யாமியாகையாலே) அக்3னி, வாயு, ஸூர்யன், சந்த்3ரன் முதலான ஶப்3த3ங்களால் சொல்லப்படுகிறது. அதுவே ஒளியிருந்தது. ஸம்ஸாரஸம்ப3ந்த4மற்றது. அப்பரம்பொருளே ப்3ரஹ்மம். அதுவே நீருக்கும் ப்ரஜாபதிக்கும் அந்தர்யாமியாகையாலே ஆப:, ப்ரஜாபதி: என்றும் சொல்லப்படுகிறது.] முதலான வேத3வாக்யங்களை இந்த ஶ்லோகம் விளக்குகிறது. *39.

நமோ நமஸ்தேऽஸ்து ஸஹஸ்ரக்ருத்வ:
புநஶ்ச பூ₄யோऽபி நமோ நமஸ்தே ॥

40. நம:புரஸ்தாத₃த₂ ப்ருஷ்ட₂தஸ்தே
நமோऽஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ ।

ஸர்வ!-எல்லாமாயிருப்பவனே!, **தே**-உனக்கு, **ஸஹஸ்ர க்ருத்வ: —** ஆயிரக்கணக்கான முறைகள், **நமோ நம: அஸ்து—**நமஸ்காரங்கள் ஆகுக. **தே—**உனக்கு, **புநஶ்ச—** மறுபடியும், **பூ₄ய: அபி—**மறுபடியும், **நமோ நம: (அஸ்து)—** நமஸ்காரங்கள் ஆகுக. **தே புரஸ்தாத்—**உனக்கு முன்புறம், **நம: (அஸ்து) —** நமஸ்காரம் ஆகுக. **அத₂ ப்ருஷ்ட₂த:—** பின்புறமும், **நம: (அஸ்து)—**நமஸ்காரம் ஆகுக. **ஸர்வத: ஏவ—**எல்லாக்காலத்திலும் எல்லாப்புறத்திலும், **நம: அஸ்து—**நமஸ்காரம் அமையட்டும்.

---

40. வாயுநம னங்கி வருணன் சசாங்கன்ருன்
ஆயுமுல காக்குவோ னங்கவனுக்—கேயுமுத
லானவுனக் காகநம வாயிரங்காற் பின்பின்னு
நானமவுன் மேன்மே னலம்.

வாயு—வாயுவாகவும், **நமன்—**யமனுகவும், **அங்கி—** அக்₃னியாகவும், **வருணன்—**வருணனுகவும், **சசாங்கன் தான்**-சந்திரனுகவும், **உலகு ஆக்குவோன் ஆயும்**-உலகைப் படைக்கும் (ப்ரஜாபதிகளாகவும், அவர்களுக்கும் தந்தை யான) பிரமனுகவும் ஆகி. **அங்கு அவனுக்கு ஏயும் முதலான உனக்கு—**அத்தகைய பிர்மனுக்கும் பொருந்திய தகப்பனுன உனக்கு, **நம ஆக**—வணக்கம் ஆகுக. **ஆயிரங்கால் (நம ஆக)—**ஆயிரம்முறை வணக்கமாகுக. **பின் பின்னும்—**

39*-*40. எம்பெருமானுடைய பரத்வத்தையும் ஸௌலப்₄யத்தை யும் கண்டு பரத்வத்தால் ப₄யத்தையும், ஸௌலப்₄யத்தால் ஆனந் த₃த்தையும் அடைந்து அதுகாரணமாகவே பலகால் வணங்குகிருன் அர்ஜுனன். (ஸர்வ!) முன் ஶ்லோகங்களில் சொன்னபடி எல்லாமா யிருப்பவனே! அனைத்துக்கும் அந்தர்யாமியே! என்று கருத்து. (நமோ நமஸ்தேऽஸ்து............ஸர்வத ஏவ) ''ப்ரஶம்ஸாயாம் ப்ரதி

॥ भा ॥ अत्यद्भुताकारं भगवन्तं दृष्ट्वा हर्षोत्फुल्लनयनोऽत्यन्तसाध्वसावनतस्सर्वतो नमस्करोति ॥ ३९ ॥

अनन्तवीर्यामितविक्रमस्त्वं
सर्वं समाप्नोषि ततोऽसि सर्वः ॥ ४० ॥

அநந்தவீர்யாமிதவிக்ரமஸ்த்வம்
ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸி ஸர்வः ॥

அநந்த வீர்ய!—அளவற்ற வீர்யத்தை உடையவனே!, **அமித விக்ரமः த்வம்**—அளவற்ற பராக்ரமத்தையுடைய நீ, **ஸர்வம்** — உன்னையொழிந்த எல்லாப் பொருள்களையும், **ஸமாப்நோஷி**—(ஆத்மாவாய்) வியாபித்திருக்கிருய். **ததः**—ஆகையால், **ஸர்வः அஸி**—அந்த எல்லாப்பொருள்களையும் சொல்லும் சொற்களாலும் சொல்லப்படுபவனுகிருய்.

மறுபடியும் மறுபடியும், **நான்**—நான், **உன்**—உனக்கு, **மேன்மேல்**—மேலேமேலே, **நலம் நம**—நல்ல வணக்கங்களைச் செய்கிறேன்.

ஜ்ஞாயாம் ப்ரலாபே தர்ஜநேऽபி ச । ப₄யே ச விஜயே சைவ பௌந: புந்யமலங்க்ருதி: ॥'' [புகழும்போதும், ஆணையிடும்போதும், அழும்போதும், ப₄யமுறுத்தும்போதும், ப₄யப்படும்போதும், வெற்றியடையும்போதும் மறுபடியும் மறுபடியும் ஒரே சொல்லைச் சொல்லுவது அலங்காரமாகும்] என்று ஸ்தோத்ரரத்ந (21) பா₄ஷ்யத்தில் தே₃ஶிகன் எடுத்த ப்ரமாணத்தின்படி அத்யத்₃பு₄தமான அமைப்பையுடைய விஶ்வரூபத்தைக் கண்ட ஆனந்த₃த்தால் மலர்ந்த கண்களையுடையவனுய், ப₄யத்தால் மிகுந்த பரபரப்புடன் நடுங்கித் தலைகவிழ்ந்தவனுயிருக்கையாலே அர்ஜுனன் பல நமஸ்காரங்களைச் செய்கிருன் என்று கொள்ளலாம். பரத்வத்துக்கும் ஸௌலப்₄யத்துக்கும்தோற்று ''நமோ நம:'' என்கிருன். முன்னழகைப் பார்த்தவுடன் அதற்குத்தோற்று ''நம:'' என்கிருன். முன்னழகிலும் மிக்க பின்னழகைப் பார்த்தவுடன் அதற்குத்தோற்று ''நம:'' என்கிருன். பக்க அழகையும் விடமுடியாமையாலே ப்ரதக்ஷிணம்செய்து ஒவ்வொரு புறமுள்ள அழகுக்குந் தோற்று ''நம:'' என்கிருன். 39*-*40.

॥ भा ॥ [अनन्तवीर्य—] अ[परि]मितवीर्य, अपरिमितपराक्रमस्त्वं सर्वमात्मतया समाप्नोषि, ततस्सर्वोऽसि—यतस्त्वं सर्वं चिदचिद्वस्तुजातमात्मतया समाप्नोषि, अतः सर्वस्य चिदचिद्वस्तुजातस्य त्वच्छरीर-

41. **முன்னே நமப்பிறகு மொய்த்தே நமவுனக்கிங்**
கெந்நேரஞ் சூழ்ந்துநம வெல்லாமா — மன்னேதான்
வீயாத வீரியஞ்சேர் விக்கிரம மிக்கெல்லா
நீயாத லாலெல்லா நீ.

எல்லாம் ஆம் மன்னே!—எல்லாப் பொருள்களாகவும் ஆகும் பரம்பொருளே!, **உனக்கு**—உனக்கு, **இங்கு முன்னே நம**—இந்த விஶ்வரூபத்தின் முன்புறத்தில் வணக்கம்; **பிறகும் மொய்த்தே நம**-பின்புறமும் அணுகிநின்று வணக்கம். **எந்நேரம் சூழ்ந்து நம**—எல்லாக்காலத்திலும், எல்லாப் புறத்திலும் வணக்கம், **தான் வீயாத வீரியம் சேர் விக்கிரமம் மிக்கு**—அழியாத வீரியத்தோடுகூடிய பராக்கிரமம் மிகுந்து, **எல்லாம் நீ ஆதலால்**—எல்லாப்பொருள்களிலும் நீ பரந்து நிற்கையால், **எல்லாம் நீ**-எல்லாப்பொருள்களையும் சொல்லும் சொல்லாலும் சொல்லப்படுபவனாகிறாய்.

40*. இந்த ப்ரகரணத்தில் பல இடங்களில் சேதநாசேதனங்களை எம்பெருமானோடு ஒரே வேற்றுமையில் படித்ததற்குக் காரணம் அவன் ஸர்வவ்யாபியாயிருக்கையே என்று காட்டுகிறான். விஶிஷ்டாத்₃வைத ஶ்ரீவைஷ்ணவமதமே கீ₃தையின் கருத்து என்று தெளிவாகக் காட்டும் பற்பல ஶ்லோகங்களில் இது முக்கியமானதாகும். (அனந்த வீர்ய!) அளவற்ற வீர்யத்தையுடையவனே! (அமித விக்ரம: த்வம்) அளவற்ற பராக்கிரமத்தை உடையவனை நீ. 'அமித' என்னும் சொல்லுக்கு அறியமுடியாதது என்று பொருள்கொண்டால் ஶாஸ்த்ரத்தால் அறியப்படுவதாயிருக்கும் பெருமையோடு முரண்படுவதால், அச்சொல்லுக்கு 'அளவிடமுடியாத' என்றே பொருள்கொள்ள வேண்டும். (ஸர்வம் ஸமாப்நோஷி) நீ அனைத்தையும், ஆத்மாவாய் வியாபித்திருக்கிறாய். அளவற்ற வீர்யத்தையும், பராக்ரமத்தையும் உடையவனாகையாலே நீ எல்லாப்பொருள்களையும் வியாபித்திருப்பது வியப்பல்ல என்று கருத்து (ததோஸி ஸர்வ:) ஆதனாலேயே நீ

तया स्वप्रकारत्वात्सर्वप्रकारस्त्वमेव सर्वशब्दवाच्योऽसीत्यर्थः, * त्वमक्षरं सदसत् (३७) * वायुर्यमोऽग्निः (३९) इत्यादिसर्व-सामानाधिकरण्यनिर्देशस्यात्मतया व्याप्तिरेव हेतुरिति सुव्यक्तमुक्तं — * त्वया ततं विश्वमन्तरूप (३८) * सर्वं समाप्नोषि ततोऽसि सर्वः इति च ॥ ४० ॥

எல்லாமாகிருய். "அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா" [யஜு-ஆ 3-11-21] [ஸர்வாந்தர்யாமியான நாராயணன் எல்லாப் பொருள்களின் உள்ளும்நுழைந்து அவற்றை நியமிக்கிருன்] என்று வேத3ம் ஓதியபடியே உன்னுடைய வ்யாப்தி ஆகாஶத்தினுடைய வ்யாப்தியைப் போலல்லாமல் அனைத்தையும் உள்நுழைந்து நியமிக்கும் வ்யாப்தியாயிருக்கையாலே அவை அனைத்தும் உனக்கு ஶரீரமாய் நீ ஆத்மாவாகிருய். இக்காரணத்தாலேயே ஶரீரத்தைச் சொல்லும் சொற்கள் ஆத்மாவையும் குறிக்கும் முறையில் சேதனு சேதனங்கள் அனைத்தையும் குறிக்கும் சொற்கள் உன்னைக் குறிக்கின்றன என்று கருத்து. "புருஷ ஏவேத3ம் ஸர்வம்" [பு-ஸூ 1-2] "ஆத்மைவேத3ம் ஸர்வம்" [சா2ந் 7-2-22] "நாராயண ஏவேத3ம ஸர்வம்" [நாராயணேபநிஷத்] முதலான வேத3வாக்யங்களில் உலகனைததும் பரமாத்மாவான நாராயணனே என்று கூறியிருப்பதற்கும், சென்ற ஶ்லோகத்தில் "ஸர்வ!" என்று இவனை எல்லாமாக இருப்பவனுகக் கூறியிருப்பதற்கும் இதுவே காரணம் என்று காட்டப்படுகிறது. உலகிலுள்ள எல்லாச் சேதனுசேதன த்3ரவ்யங்களையும் நீ ஆத்மாவாய்நின்று வியாபிக்கிருய். அதனுல் அந்த த்3ரவ்யங்கள் அனைத்தும் உன்னைவிட்டுப்பிரிய முடியாத ஶரீரங்களாயுள்ளன. அந்த த்3ரவ்யங்களின் கு3ணங்களும் அந்த த்3ரவ்யங்களை விட்டுப்பிரிய முடியாதவையாயிருக்கையாலே, உனக்கு உன்னைவிட்டுப் பிரியமுடியாத ப்ரகாரங்களாகின்றன. இப்படி அனைத்தையும் ப்ரகாரமாகக் கொண்டவனுகையாலே நீ அவற்றைச் சொல்லும் சொற்களால் சொல்லப்படுகிருய் என்று கருத்து. இத்தால் "ஜீவர்களுக்கும் ப்3ரஹ்மத்துக்கும் ஸ்வரூபைக்யத்தைச் சொல்லுவதற்காகவும், அசேதனப் பொருள்களை இல்லை என்று சொல்லுவதற்காகவும் சேதனுசேதனங்களைச் சொல்லும் சொற்களோடு ப்3ரஹ்மத்தை ஒரே வேற்றுமையில் படிக்கிறது ஶாஸ்த்ரம்' என்று கூறும் அத்3வைதிகளின் வாத3ம் தள்ளப்பட்டதாகிறது. "த்வமக்ஷரம் ஸத3ஸத்" [37] "வாயுர்யமோऽக்3நி:" [39] முதலான இடங்களில் சேதனுசேதனங்களையும்

सखेति मत्वा प्रसभं यदुक्तं
हे कृष्ण हे यादव हे सखेति।
अजानता महिमानं तवेमं
मया प्रमादात्प्रणयेन वाऽपि ॥ ४१ ॥

41. ஸகே₂தி மத்வா ப்ரஸப₄ம் யது₃க்தம்
ஹே க்ருஷ்ண! ஹே யாத₃வ ஹே ஸகே₂தி ।
அஜாநதா மஹிமாநம் தவேமம்
மயா ப்ரமாத₃ாத் ப்ரணயேந வாऽபி ॥

यच्चापहासार्थमसत्कृतोऽसि
विहारशय्यासनभोजनेषु।
एकोऽथवाऽप्यच्युत तत्समक्षं
तत्क्षामये त्वामहमप्रमेयम् ॥ ४२ ॥

42. யச்சாபஹாஸார்த்த₂மஸத்க்ருதோऽஸி
விஹாரஶய்யாஸந போ₄ஜநேஷு ।
ஏகோऽத₂வாப்யச்யுத தத்ஸமக்ஷம்
தத்க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம் ॥

அச்யுத!—அடியாரை நழுவவிடாதவனே! **தவ**—உன்னுடைய, **இமம் மஹிமாநம்**—இந்தப் பெருமையை, **அஜாநதா மயா**—அறியாத என்னால், **ப்ரமாத₃ாத்**—மயக்கத்

பரமாத்மாவையும் ஒரே வேற்றுமையில் படித்ததற்கு, பரமாத்மா அவற்றை ஆத்மாவாய் வியாபித்திருப்பதே காரணம் என்று இந்த ஶ்லோகத்திலும், "த்வயா ததம் விஶ்வமநந்தரூப" [38] என்னும் ஶ்லோகத்திலும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டது குறிக்கொள்ளத் தக்கது. இங்கு சேதநாசேதனங்கள் இரண்டையும் ஸர்வஶப்₃த₃த்தாலே எடுத்து, அவையிரண்டையும் ப்₃ரஹ்மத்தோடு ஒரே வேற்றுமையில் படித்ததற்கு ஶரீராத்மத்தன்மையாகிற ஒரே காரணத்தைக் கூறியிருப்பதால் ஜீவர்கள் விஷயத்தில் ஸ்வரூபைக்யத்தையும் அசேதன விஷயத்தில் ப₃ாத₄ார்த்த₂ம் (இல்லைசெய்வதற்காக) என்றும் இரு காரணங்களைச் சொல்லும் அத்₃வைதமதம் அடியோடு பொருந்தாது என்று விளங்குகிறது. 40*.

தாலோ, **ப்ரணயேந வாபி**—நெடுநாள் பழகியதாலோ, **ஸக₂ா இதி மத்வா** — எனது தோழன் என்று எண்ணி, **ஹே க்ருஷ்ண!**—ஏ கிருஷ்ணு! **ஹே யாத₃வ**—ஏ யாத₃வனே! **ஹே ஸகே₂**—ஏ நண்பனே, **இதி**—என்று, **ப்ரஸப₄ம் யத் உக்தம்**—(உன் விஷயத்தில்) அடக்கமில்லாத யாதொரு சொல் சொல்லப்பட்டதோ, **அபஹாஸார்த்த₂ம்**—பரிஹாஸத்தின்பொருட்டு, **யத் ச அஸத்க்ருதோ 5ஸி**—நீ (என்ஞல்) அவமதிக்கப்பட்டாய் என்பது யாதொன்றுண்டோ, **விஹாரஸய்யாஸந போ₄ஜநேஷு** — விளையாடும்போதும், படுத்திருக்கும்போதும், வீற்றிருக்கும்போதும், உண்ணும்போதும் உன்னேடு சேர்ந்திருக்கையிலும், **அத₂வா ஏகோபி**—அல்லது நான் தனியேயிருக்கையிலும், **தத்ஸமக்ஷம்**—பிறர் முன்னிலையிலும், **யத் அஸத்க்ருதோ 5ஸி**—நீ (என்ஞல்) அவமதிக்கப்பட்டாய் என்பது யாதொன்றுண்டோ, **தத்**—அவையனைத்தையும், **அஹம்**—நான், **அப்ரமேயம் த்வாம்**—அளவிடவொண்ணுத உன்னை, **க்ஷாமயே** — மன்னிக்க வேண்டுகிறேன்.

---

42. உன்பெருமை தன்னை யுணராதே தோழனேன்
முன்பயிலு நெஞ்சான் முயன்றுநா—னன்பதஞு
லேகண்ணு வேதோழா வேயாத வாவென்பன்
மோகந்தன் ஞலே முனிந்து.

43. மேவுவிளை யாட்டில் விகாரங் கிடையிருப்பூண்
ஓவுதலுற் றுன்னே டுடன் கூடித்—தேவனே
யுன்னைத் தனியிற் றிரளி லுயர்வழித்தல்
தன்னைப் பொறுப்பிப்பன் தாழ்ந்து.

உன் பெருமை தன்னை—உன்னுடைய பெருமையை, **உணராதே**—அறியாமல், **தோழனேன்**—உனக்கு நண்பன் என்பதையே கருதி, **அன்பதஞல் முன்பயிலும் நெஞ்சால்**—அன்போடு நீண்டநாள் பழகிய நெஞ்சாலும், **மோகம் தன்ஞலே**—மயக்கத்தாலும், **முயன்று**—முயற்சிசெய்து, **முனிந்து** — கோபித்து, **நான்** — நான், **ஏ கண்ணு** — ஏ கண்ணனே! **ஏ தோழா**—ஏ தோழனே! **ஏ யாதவா**

॥ भा ॥ तवानन्तवीर्यत्वामितविक्रमत्वसर्वान्तरात्मत्वस्रष्टृत्वादिको यो महिमा, तमिममजानता मया प्रमादान्मोहात्प्रणयेन चिरपरिचयेन वा, सखेति — मम वयस्य इति मत्वा

என்பன்—ஏ யாதவனே! என்று கூறுவேன். **தேவனே**—பரமாத்மாவே!, **விகாரம் மேவு விளையாட்டில்**—இங்குமங்கும் ஸஞ்சரிக்கும் விளையாட்டுக்களிலும், **கிடை**—படுத்திருக்கும் போதும், **இருப்பு**—வீற்றிருக்கும்போதும், **ஊண்**—உண்ணும் போதும், **உன்னோடு உடன்கூடி ஒவுதல் உற்று**—உன்னோடு கூடிச் சேர்ந்திருக்கும்போதும், **தனியில்**—தனியே இருக்கும் போதும், **திரளில்** — பிறரோடு கூடியிருக்கும்போதும், **உன்னை உயர்வழித்தல் தன்னை**—உன்னை அவமதித்ததை, **தாழ்ந்து பொறுப்பிப்பன்** — அடிவணங்கி மன்னிப்பு வேண்டுகிறேன்.

41-42. இத்தகைய பெருமையுடைய கண்ணனை, அவனுடைய பெருமையை உணராமல் முன் பலகால் அவமதித்ததற்கு மன்னிப்பு வேண்டுகிறுன் இந்த இரண்டு ஶ்லோகங்களாலும். (தவ இமம் மஹிமாநம் அஜாநதா மயா) அளவிடமுடியாத வீர்யத்தையும், பராக்ரமத்தையும் உடையவனுயிருக்கை, அனைத்துக்கும் அந்தராத்மாவாயிருக்கை, அனைத்தையும் படைத்து அளித்து அழிப்பவனுயிருக்கை முதலான இதுவரையில் சொன்ன உன் பெருமையை அறியாத என்னால், (ப்ரமாத₃ாத்) மயக்கத்தாலோ. ப்ரமாத₃ஶப்₃த₃த்துக்கு அறியாமை என்று பொருள்கொண்டால் 'அஜாநதா' என்பதோடு புநருக்தி ஏற்படுமாகையால் 'மயக்கத்தால்' என்னும் பொருளே பொருந்தும். ப்ரணயேந வாபி) நீண்டநாள் பழகியதாலோ. 'ப்ரணய'ஶப்₃த₃த்துக்கு 'அன்பு' என்றே பொருளாயினும் 'ஸகே₂தி மத்வா' என்று இதனல் நண்பன் என்னும் எண்ணம் உண்டாகிறது என்று கூறுகையால், இங்கு ப்ரணயஶப்₃த₃ம் அவ்வெண்ணத்துக்கு உறுப்பான நீண்டநாள் பழக்கத்தை ஔபசாரிகமாகக் கூறுகிறது என்று கொள்ளவேண்டும். (ஸகே₂தி மத்வா) எனது நண்பன் என்று எண்ணி. "ஸயுஜா ஸகா₂யா" [முண்ட₃க 3-1-1] என்னுமிடத்தில் ஸகா₂ என்னும் ஶப்₃த₃த்துக்கு சேர்ந்து வாழ்பவன் என்று பொருள்கொள்ளப்பட்டது. இங்கு 'ஸகா₂' என்னும் எண்ணம் மயக்கத்தால் உண்டாவதாகக் கூறுகையாலே அப்பொருள் பொருந்தாது. ஆகையால் 'உலகநடையில் நண்பன் என்று எண்ணி' என்றே இவ்விடத்தில் பொருள்கொள்ளவேண்டும்.

हे कृष्ण, हे यादव, हे सखे इति त्वयि प्रसभं—विनयापेतं यदुक्तम्; यच्च परिहासार्थं सर्वदैव सत्कारार्हस्त्वमसत्कृतोऽसि; विहारशय्यासन-भोजनेषु च सहकृतेष्वेकान्ते वा समक्षं वा यदसत्कृतोऽसि; तत्सर्वं त्वामप्रमेयमहं क्षामये॥४१॥४२॥

(ஹே க்ருஷ்ண ஹே யாத₃வ ஹே ஸகே₂ இதி ப்ரஸப₄ம் யத் உக்தம்) ஏகண்ணு! ஏயாத₃வா! ஏநண்பனே! என்று அடக்கமில்லாமல் யாதொன்று சொல்லப்பட்டதோ. இங்கு மன்னிக்கவேண்டியதாகக் கூறப் படுகையால் 'ப்ரஸப₄'ஶப்₃த₃ம் அடக்கமின்மையையே குறிக்கிறது. (யச்ச அபஹாஸார்த்த₂ம் அஸத்க்ருதோऽஸி) எப்போதும் பூஜிக்கப்பட வேண்டிய நீ பரிஹாஸத்திற்காக என்னுல் அவமதிக்கப்பட்டாய் என்பது யாதொன்றுண்டோ; சகாரத்தாலே 'யத் அஸத்க்ருதோऽஸி' என்பதை மேல்வரும் பத₃ங்களிலும் கூட்டிக்கொள்ளவேண்டும் என்று உணர்த்தப்படுகிறது. (விஹார ஶய்யாஸந போ₄ஜநேஷு யத் அஸத்க்ருதோஸி) விளையாடும்போதும், படுத்திருக்கும்போதும், வீற்றிருக்கும்போதும், உண்ணும்போதும் உன்னேடு கூடியிருக்கும்போது என்னுல் அவமதிக்கப்பட்டாய் என்பது யாதொன்றுண்டோ. (அத₂வா ஏகோऽபி யத் அஸத்க்ருத: அஸி) அல்லது தனியேயிருக்கும் போது நீ என்னுல் அவமதிக்கப்பட்டாய் என்பது யாதொன்றுண்டோ. (தத்ஸமக்ஷம் யத் அஸத்க்ருதோஸி) பிறர் முன்னிலையில் நீ என்னுல் அவமதிக்கப்பட்டாய் என்பது யாதொன்றுண்டோ. (தத்) அது அனைத் தையும். (அஹம் அப்ரமேயம் த்வாம் க்ஷாமயே) நான் அளவிட வொண்ணுத உன்னை மன்னிக்கவேண்டுகிறேன். (அச்யுத) நீ அடியவரை நழுவவிடாதவன் என்று பெயர் படைத்தவனுகையாலே தவறுசெய்த என்னை அவசியம் மன்னித்தருளவேண்டும். "நாஹம் தே₃வோ ந க₃ந்த₄ர்வோ ந யக்ஷோ ந ச ராக்ஷஸ:। அஹம் வோ பா₃ந்த₄வோ ஜாத: நைதச்சிந்த்யம் இதோऽந்யதா₂॥" [வி-பு-5-13-12] [நான் தே₃வனே, க₃ந்த₄ர்வனே, யக்ஷனே, அரக்கனே அல்லன்; உங்களோடு உறவினனுகப் பிறந்திருப்பவன். நீங்கள் வேறுவிதமாக எண்ணலாகாது] என்று கண்ணன் திருவுள்ளம் பரத்வத்திலேயல்லாமல் ஸௌலப்₄யத்திலேயே ஊன்றியிருப்பது என்று அறிந்தவளாகையாலே "அறியாத பிள்ளைகளோம் அன்பினுல் உன்தன்னைச் சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே" [திருப்பாவை 28] என்று பரத்வத்தைக் காட்டும் நாராயண நாமத்தை முதற்பாட்டில்

पिताऽसि लोकस्य चराचरस्य
त्वमस्य पूज्यश्च गुरुर्गरीयान् ।
न त्वत्समोऽस्त्यभ्यधिकः कुतोऽन्यो
लोकत्रयेऽप्यप्रतिमप्रभाव! ॥ ४३ ॥

43. பிதாऽஸி லோகஸ்ய சராசரஸ்ய
த்வமஸ்ய பூஜ்யஶ்ச கு$_3$ருர்க$_3$ரீயாந்।
ந த்வத்ஸமோऽஸ்த்யப்$_4$யதி$_4$க: குதோऽந்யோ
லோகத்ரயேऽப்யப்ரதிமப்ரப$_4$ாவ!॥

அப்ரதிமப்ரப$_4$ாவ — ஒப்பற்ற பெருமையுடையவனே! **த்வம்**—நீ, **அஸ்ய சராசரஸ்ய லோகஸ்ய**—இந்த அசைவனவும் அசையாதனவும் அடங்கிய உலகுக்கு, **பிதா அஸி**—தந்தையாகிருய்; (ஆகையாலே) **(அஸ்ய**—இவ்வுலகிற்கு**)**, **பூஜ்ய: ச**—வழிபடத்தக்கவனுமாகிருய்; **க$_3$ரீயாந் கு$_3$ரு: ச**—(தந்தையைவிடச்) சிறந்தவனுன ஆசார்யனுகவுமாகிருய்; **லோகத்ரயே அபி** மூவுலகிலும்,**த்வத்ஸம: அந்ய: ந அஸ்தி**—(கருணை முதலான எந்த கு$_3$ணத்தாலும்) உன்னை ஒத்தவன் வேருெருவன் இல்லை. **அப்$_4$யதி$_4$க: குத:**—உன்னைக் காட்டிலும் மேற்பட்டவன் எப்படி இருக்கமுடியும்?

---

44. நீயுலவி நிற்கின்ற நீடுலகுக் கேய்ந்தபிதா
வாயுமா ராததியனும் வண்குருவு—மாயுமுனக்
கொப்பதுமீ தொன்றில்லை யுன்பெருமை மூவுலகிற்
செப்பவெதி ரில்லாய் சிறந்து.

உன்பெருமை சிறந்து செப்ப எதிரில்லாய்—உன் பெருமைக்குச் சிறப்பான உவமை காட்ட உவமானமில்லாதவனே! **நீ** நீ, **உலவி நிற்கின்ற நீடு உலகுக்கு ஏய்ந்த பிதா**—

சொன்னதற்கு மன்னிப்பு வேண்டினுள் ஆண்டாள். பரத்வத்தைக் காட்டும் விஶ்வரூபத்தைக் கண்ட ப$_4$யத்தாலே கண்ணன் விரும்பியிருக்கும் எளிமையைச் சொல்லும் 'யாத$_3$வா' முதலான பத$_3$ங்களைக் கூறியதற்கு மன்னிப்பு வேண்டுகிருன் அர்ஜுனன் என்னும் வாசி காணத்தக்கது. 41-42.

॥भा॥ अप्रतिमप्रभाव! त्वमस्य सर्वस्य चराचरस्य लोकस्य पिताऽसि। अस्य लोकस्य गुरुश्चासि ; अतस्त्वमस्य चराचरस्य लोकस्य गरीयान् —पूज्यतमः। न त्वत्समोऽस्त्यभ्यधिकः कुतोऽन्यो लोक-

---

அசைவனவும் அசையாதனவும் அடங்கிய நீண்டகாலம் இருக்கும் உலகிற்குப் பொருந்திய தந்தையாவாய்; **வாயும் ஆராத்தியனும்**—தகுந்த வழிபடத்தக்கவனும் (நீயே); **வண் குருவும்**— தந்தையிலும் சிறந்த ஆசாரியனும் (நீயே); **ஆயும் உனக்கு** — ஆராயப்படும் உனக்கு, **ஒப்பது** — ஒப்பதோ, **மீது**—மிக்கதோ, **மூவுலகில்** — மூவகைப்பட்ட உலகில், **ஒன்று இல்லை** — எதுவுமில்லை.

---

43. 'என் குற்றத்தை மன்னிக்கவேண்டுகிறேன்' என்ருன் முன்னிரண்டு ஸ்லோகங்களில். 'உன்னை நான் மன்னிக்கவேண்டிய அவஶ்யமென்ன ?' என்று கண்ணனுக்குத் திருவுள்ளமாகக் கொண்டு இனி இரண்டு ஸ்லோகங்களாலே கண்ணன் தன்னை மன்னிக்கவேண்டிய அவஶ்யத்தைக் காட்டுகிருன் அர்ஜுனன். (அப்ரதிமப்ரப4ாவ) ஒப்பற்ற கருணையுடையவனே ! மன்னிக்க வேண்டும் ப்ரகரணமாகையாலே இங்கு ப்ரப4ாவஶப்3த3ம் கருணை கு3ணத்தையும், மன்னிப்பதற்கு வேண்டிய ஸௌலப்4யம், வாத்ஸல்யம் முதலான மற்ற கு3ணங்களையும் காட்டுகிறது ஸ்லோகத்தின் எஞ்சிய பகுதிகள் இப்பத3த்தை விவரிக்கின்றன. (அஸ்ய சராசரஸ்ய லோகஸ்ய த்வம் பிதாஸி) இந்த அசைவனவும் அசையாதனவுமடங்கிய உலகுக்கு நீ தந்தையாகிருய். தனயனின் பிழை பொறுத்தல் தந்தைக்குக் கடனன்ருே. இந்தப் பிதாபுத்ரஸம்ப3ந்த4த்தை நினைத்தே அடுத்த ஸ்லோகத்தில் 'பிதேவ புத்ரஸய ஸோடு4ம் அர்ஹஸி'' என்கிருன் அர்ஜுனன். (பூஜ்யஃ ச) இப்படித் தந்தையாயிருக்கையாலே நீ இவ்வுலகிற்கு வழிபடத்தக்கவனுமாகிருய். வழிபடுகின்றவனின் குற்றத்தை வழிபடத்தக்கவன் பொறுப்பது தக்கதன்ருே என்று கருத்து. (க3ரீயாந் கு3ருஃ ச அஸி) உண்டாக்கின பிதாவைக் காட்டிலும் சிறந்த அறிவளித்த ஆசார்யனும் நீயே. 'உத்பாத3க ப்3ரஹ்மபித்ரோ: க3ரீயாந் ப்3ரஹ்மத3: பிதா' '[பிறப்பித்த தந்தைக்கும், ப்3ரஹ்மோபதே3ஶம் செய்த தந்தையான ஆசார்யனுக்கும் இடையே ப்3ரஹ்மோபதே3ஶம் செய்த தந்தையான ஆசார்யனே சிறந்தவன்] என்று சொல்லப்படுகிறதன்ருே. ஆகை

त्रयेऽपि—त्वदन्यः कारुण्यादिना केनापि गुणेन न त्वत्समोऽस्ति, कुतोऽभ्यधिकः ॥ ४३ ॥

யால் இவ்வுலகனைத்துக்கும் மிகவும் வழிபடத்தக்கவனை ஆசார்யனை யிருப்பவனும் நீயே என்று கருத்து. ஶிஷ்யனின் பிழை பொறுத்தல் ஆசார்யனுக்கே கடமை என்று உணர்த்தப்படுகிறது. "ஶிஷ்ய ஸ்தேऽஹம்" [கீ₃தை 2-7] என்று தொடக்கத்திலேயே சொன்னானன்றோ. "கருணை முதலான இக்கு₃ணங்களில் என்னை ஒத்தவனோ, மிக்கவனோ இருக்கலாமே; அவர்களை நீ அடையலாமே" என்று கண்ணனுக்குக் கருத்தாகக்கொண்டு ஶ்லோகத்தின் பிற்பாதியைக் கூறுகிறான் அர்ஜுனன்—(லோகத்ரயேऽபி அந்ய: த்வத்ஸம: ந அஸ்தி) மூவுலகிலும் வேறொருவன் உன்னை ஒத்தவனில்லை. கருணை முதலான எந்த ஒரு கு₃ணத்தாலும் உனக்கு நீயே ஒப்பாவாய் என்று கருத்து. லோகத்ரயஶப்₃த₃ம் க்ருதகம், அக்ருதகம், க்ருதகாக்ருதகம் என்னும் மூன்றுவகை உலகங்களைக் குறிக்கிறது. நைமித்திக ப்ரளயத்தில் அழியும் பூ₄:, பு₄வ:, ஸுவ: என்னும் மூன்று உலகங்களும் க்ருதகம் எனப்படும். நைமித்திகப்ரளயத்தில் அழியாமலிருக்கும் ஜந:, தப:, ஸத்யம் என்னும் மூன்று லோகங்களும் அக்ருதகம் எனப்படும். அப்போது அழிந்தும் அழியாமலுமிருக்கும் மஹர்லோகம் க்ருதகாக்ருதகம் எனப்படும். அன்றிக்கே "லோக்யதே அநேந இதி லோக:" என்ற வ்யுத்பத்தியால் மற்ற ப்ரமாணங்களால் அறியப்படாத அர்த்த₂ங்களை அறிவிக்கும் வேத₃த்தை லோகஶப்₃த₃ம் குறிக்கிறது என்று கொண்டு, லோகத்ரயஶப்₃த₃ம் ருக்₃ யஜுஸ் ஸாமங்களாகிற மூன்று வேத₃ங்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். (அப்₄யதி₄க: குத:) உனக்கு ஒத்தவனே இல்லாதபோது உனக்கு மேற்பட்டவன் எப்படி இருக்கமுடியும்? உனக்கு மேற்பட்டவன் இல்லை என்பது கிம்புநர்ந்யாயஸித்₃த₄ம். 'அப்ரதிமப்ரப₄ாவ' என்றாலே இவனுடைய பெருமை எவ்வுலகிலும் ஒப்பற்றது என்று ஸித்₃தி₄க்குமாகையாலும், இந்த லீலாவிபூ₄தியிலேயே பிரமன் ஶிவன் முதலானவர்களை எம்பெருமானை ஒத்தவராகவும் மிக்கவராகவும் கூறுவார் உளராகையாலும், "லோகத்ரயேऽபி அப்ரதிமப்ரப₄ாவ" என்று கூட்டாமல், "லோகத்ரயேபி த்வத்ஸம: அந்யோ நாஸ்தி அப்₄யதி₄க: குத:" என்று கூட்டிப்பொருள் கொள்ளப்பட்டது. "த்வத₃ந்ய:, குத:" என்னும் பத₃ங்களாலே—படைக்கப்படுபவர்களாகவும், ரக்ஷிக்கப்படுபவர்களாகவும், ஸம்ஹரிக்கப்படுபவர்களாகவும், கர்மவஶப்பட்டவர்களாகவும், காணிலும் உருப்பொலாதவர்களாகவும்,

செவிக்கினாத கீர்த்தியாராகவும், பேணிலும் வரந்தர மிடுக்கிலாத தே3வராகவும், எம்பெருமானைக் காட்டிலும் வேறுபட்டவர்களாகவும், வேத3ஶாஸ்த்ரங்களில் ஸுப்ரஸித்3த4ரான பிரமன், ஶிவன் முதலான தே3வர்கள் எம்பெருமானை ஒத்தவர்களோ? மிக்கவர்களோ? என்று ஐயமுறவும் தகாதவர்கள் என்று உணர்த்தப்படுகிறது. "ஹிரண்ய க3ர்ப்ப4ஸ் ஸமவர்த்ததாக்3ரே" [யஜு 4-1-8-31] "அஜஸ்ய நாப4ாவ த்4யேகமர்ப்பிதம்" [யஜு4-6-2-8] "யத3ா தமஸ்தந்ந தி3வா ந ராத்ரி: ந ஸந்ந சாஸத் ஶிவ ஏவ கேவல:" [ஶ்வே 4-18] முதலான ஜக3த் காரணப்பொருளைக் குறிக்கும் வேத3வாக்யங்களில் ஹிரண்ய க3ர்ப்ப4 அஜ ஶப்3த3ங்களால் பிரமனுக்கும், ஶிவஶப்3த3த்தால் ஶிவ னுக்கும் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது ஜக3த்காரணத்வம் உண்டு என்று தோற்றுகையாலே, 'இவர்களும் ஜக3த்காரணனான நாராயணனோடு ஒத்தவர்களோ? அல்லது மிக்கவர்களோ?' என்று மந்த3மதிகள் ஐயமுற இடமுண்டாயினும், "ஆகாஶஸ்தல்லிங்கா3த்" [ப்3ர ஸூ 1-1-23] என்னும் ஸூத்ரத்தில் ஆகாஶஶப்3த3மும், "ப்ராணஸ்தத2ானுக3மாத்" [ஷை 1-1-29] என்னும் ஸூத்ரத்தில் ப்ராணஶப்3த3மும் ஜக3த்காரணப்பொருளைக் குறித்து வேத3ாந்த வாக்யங்களில் வழங்கப்பட்டிருந்தபோதிலும், இவையெல்லாம் பரம் பொருளாக முடியாதாகையாலே, "ஶாஸ்த்ர த்3ருஷ்ட்யா தூபதே3ஶோ வாமதே3வவத்" [ஷை 1-1-31] என்னும் ஸூத்ரத்திற்போலே, ஆகாஶத்துக்கும், ப்ராணனுக்கும் அந்தர்யாமியான பரமாத்மாவையே அந்தந்த ஶப்3த3ங்கள் சொல்லுகின்றன என்றே, "ஸாக்ஷாத3ப்ய விரோத4ம் ஜைமினி:" [ஷை 1-2-29] என்னும் ஸூத்ரத்தில் சொல்லியபடி ஆகாஶப்ராணாதி3 ஶப்3த3ங்களை வ்யுத்பத்தியாலே பரமாத்ம விஷய மாகக் கொள்ளவேண்டுமென்றே காட்டியதுபோலே இந்த வாக்யங்க ளுக்கும் ஹிரண்யக3ர்ப்ப4ஶிவாதி3 ஶப்3த3ங்கள் வ்யுத்பத்தியாலே நாராயணனைக் குறிக்கின்றன என்றே, அல்லது பிரமனுக்கும் ஶிவனுக் கும் அந்தர்யாமியான நாராயணனைக் குறிக்கின்றன என்றே பொருள் கொள்வதே ஸர்வஶாக2ாப்ரத்யந்யாயத்தாலும், ஸர்வவேத3ாந்தப்ரத்யய ந்யாயத்தாலும் பொருந்துகிறது. இப்படி எல்லா வேத3வாக்யங்களையும் முன்னுக்குப்பின் முரணில்லாது பொருள்கொள்ளும்போது, ஆகாஶம், ப்ராணன், ப்3ரஹ்ம, ஆத்மா, இந்த்3ரன், ஶிவன், ஹிரண்ய க3ர்ப்ப4ன், அஜன், முதலான ஜக3த்காரணப்பொருளைக்கூறும் ஶப்3த3ங்கள் "ஏஷ ஸர்வபூ4தாந்தராத்மா அபஹதபாப்மா தி3வ்யோ தே3வ ஏகோ நாராயண:" [ஸுபா3ல 7] [எல்லா பூ4தங்களுக்கும் அந்தராத்மாவாய், பாபமற்றவனாய், பரமபத3த்தில் எழுந்தருளியிருப் பவன் இந்த நாராயணனாகிற தே3வன் ஒருவனே] "ஏகோ ஹவை

तस्मात्प्रणम्य प्रणिधाय कायं
प्रसादये त्वामहमीशमीड्यम् ।
पितेव पुत्रस्य सखेव सख्युः
प्रियः प्रियायार्हसि देव सोढुम् ॥ ४४ ॥

44. தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதா₄ய காயம்
ப்ரஸாத₃யே த்வாமஹமீஶமீட்₃யம் ।
பிதேவ புத்ரஸ்ய ஸகே₂வ ஸக்₂யு:
ப்ரிய: ப்ரியாயார்ஹஸி தே₃வ ஸோடு₄ம் ॥

தஸ்மாத்—முற்கூறிய காரணத்தால், **ஈஶம்**—அனைவரையும் நியமிப்பவனும், **ஈட்₃யம்**—அனைவராலும் துதிக்கத் தக்கவனுமான, **த்வாம்**—உன்னை, **அஹம்**—நான், **ப்ரணம்ய**—வணங்கி, **காயம் ப்ரணிதா₄ய**—உடலை ஒடுக்கி நின்று, **ப்ரஸாத₃யே**—அருளவேண்டுகிறேன். **தே₃வ**—தேவனே!, **பிதா புத்ரஸ்ய இவ**—தந்தை மகனுடைய குற்றத்தைப் போலவும், **ஸகா₂ ஸக்₂யு: இவ**—நண்பன் நண்பனுடைய குற்றத்தைப் போலவும், **ப்ரிய:**—எனக்கு இனியவனான நீ, **ப்ரியாய**—உனக்கு இனியவனான என்னுடைய குற்றமனைத்தையும், **ஸோடு₄ம் அர்ஹஸி** — பொறுத்தருள வேண்டுகிறேன்.

நாராயண ஆஸீத் ந ப்₃ரஹ்மா நேஶாந:" [மஹோபநிஷத் 1.1] [ப்ரளயகாலத்தில் நாராயணன் ஒருவனே இருந்தான். பிரமனுமில்லை சிவனுமில்லை] முதலான வாக்யங்களிலே ஸர்வாந்தர்யாமியாகவும் தாழ்வுகளற்றவனாகவும் கூறப்படும் ஜக₃த்காரணப் பொருளான நாராயணனிடத்திலேயே முடிந்து நிற்கையாலே, பிரமன், சிவன் முதலானோரை நாராயணனோடு ஒத்தவராகவோ, மிக்கவராகவோ எண்ணுவதற்கு இடமேயில்லை எனவிளங்குகிறது. 'அப்ரதிமப்ரபா₄வ' என்றதாலே—கருணை முதலான ஒவ்வொரு கு₃ணத்தாலேயே இவனை ஒத்தவரில்லாதபோது, அளவற்ற ஸகல கல்யாண கு₃ணங்களாலும், ஜக₃த்காரணத்வம், மோக்ஷப்ரத₃த்வம் முதலானவற்றாலும் இவனை ஒத்தவரோ மிக்கவரோ எவருமேயில்லை என்பது தெளிவு. இந்த ச்லோகத்தால்—ஆத்மாக்கள் அனைவரும் ஒன்றென்பது, தே₃வதைகள் அனைவரும் ஒன்றென்பது, மும்மூர்த்திகளும் ஒத்தவர்

॥ भा ॥ यस्मात् त्वं सर्वस्य पिता, पूज्यतमो गुरुश्च, कारुण्यादि-गुणैश्च सर्वाधिकोऽसि; तस्मात् त्वामीशमीड्यं प्रणम्य प्रणिधाय

---

45. **ஆதலா னின்வணங்கி யாங்குடலந் தாஞெடுக்கி**
மீதுகப்பிப் பானிரப்பன் மேலிறையா—வோதுமுனைத்
தாதை மகற்குச் சகிசகிக்கன் பற்கன்பன்
போது நலம்போற் பொறு.

ஆதலால்—முற்கூறிய காரணத்தால், **மேல் இறையா ஓதும் உனை**—அனைவரையும் நியமிக்கும் மேலான இறைவனாக வேத$_3$ங்கள் ஓதும் உன்னை, **மீது உகப்பிப்பான்**—மிகவும் உகக்கச் செய்வதற்காக, **நின் வணங்கி**—உன்னை வணங்கி, **ஆங்கு**—வணங்கியவுடன், **உடலம் தான் ஒடுக்கி**—உடம்பை ஒடுக்கிக்கொண்டு, **இரப்பன்**—யாசிப்பேன்; **தாதை மகற்கு போல்**—தந்தை மகனின் குற்றத்தைப்போலவும், **சகி சகிக்கு போல்**—தோழன் தோழனுடைய குற்றத்தைப் போலவும், **அன்பன்**—என்னிடம் அன்புடைய நீ, **அன்பற்கு**—உன்னிடம் அன்புடைய என் குற்றத்தை, **போதுநலம்**—மிக்க கருணையால், **பொறு**—பொறுத்தருள்வாய்.

என்பது, ஒருவரே என்பது, மும்மூர்த்திகளுக்கு மேற்பட்ட ஒன்று பரம்பொருள் என்பது முதலான பக்ஷங்கள் நிரஸிக்கப்பட்டன என அறியத்தக்கது. 43.

44. சென்ற ஶ்லோகத்தில் கூறியபடி ஒழிக்கவொண்ணாத உறவிருக்கையாலே, ஒழிக்கவொண்ணாத உறவையுடைய தந்தை தனயனுடைய குற்றத்தைப்போலவும், நண்பன் நண்பனுடைய குற்றத்தைப் போலவும், இனியவனை தன் குற்றத்தை இனியவனை கண்ணன் பொறுத்தருளவேண்டுமென்கிறான். சென்றஶ்லோகமும், இந்த ஶ்லோகமும் ஸ்ரீப$_4$ாஷ்யகாரராலே ஶரணாக$_3$திக$_3$த்$_8$யத்தில் ஶரணமடையும் ப்ரகரணத்தில் ஸ்வவாக்யமாக அநுஸந்தி$_4$க்கப்பட்டன. பெரியவாச்சான் பிள்ளையாலே ப்ரகரணபே$_4$த$_3$த்தைத் திருவுள்ளத்தில் கொண்டு ரஸக$_4$னமான சில அர்த்த$_2$பே$_4$த$_3$ங்களும் காட்டப்பட்டன. இனி ஶ்லோகத்தின் பொருளைக் காண்போம். (தஸ்மாத்) ஆகையால். முன் ஶ்லோகத்தில் நீ அனைவருக்கும் பிதா என்றும், மிகவும் வழிபடத்

च कार्यं प्रसादये; तथा कृतापराधस्यापि पुत्रस्य, यथा च सख्युः प्रणामपूर्वं प्रार्थितः पिता वा सखा वा प्रसीदति; तथा त्वं परम-कारुणिकः प्रियः प्रियाय मे सर्वं सोढुमर्हसि ॥ ४४ ॥

தக்க ஆசார்யன் என்றும், கருணை முதலான கு3ணங்களாலே அனைவரிலும் பெரியவன் என்றும் கூறினேன். அக்காரணத்தாலேயே உன்னைக் கருணைவேண்டி ஶரணமடைகிறேன் என்று கருத்து. (த்வாம் ஈஶம் ஈட்3யம் ப்ரணம்ய ப்ரஸாத3யே) அனைவரையும் நியமிக்கும் இறைவனும், அனைவராலும் துதிக்கத்தக்கவனுமான உன்னை மன்னிப்பு வேண்டி ஶரணமடைகிறேன். "ப்ரணம்ய ப்ரஸாத3யே" என்றது "ப்ரஸாத3ார்த்த2ம் ப்ரணமாமி" என்றபடியாய், அர்ஜுனன் மன்னிப்பு வேண்டி ஶரணமடைந்ததைக் குறிக்கிறது. நமஶ்ஶப்3த3மும், ஶரணஶப்3த3மும் *ஸ்த2ாந ப்ரமாணத்தாலே ஒரே பொருளைக் குறிப்பவை என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதன்றோ. (ப்ரணித4ாய காயம்) என்று தன் உடலை ஒடுக்கியிருப்பதைக் கூறுகிறது. இங்கு காயிகமான செயலைச் சொன்னது "யத்3தி4 மநஸா த்4யாயதி, தத்3வாசா வத3தி, தத் கர்மணா கரோதி" [யஜுர் 6-1-7-38] [எதை ஒரு மனிதன் மனத்தால் சிந்திக்கிறானோ அதையே வாக்கால் கூறுகிறான், அதையே செயலால் செய்கிறான்] என்கிறபடியே முக்கரணங்களாலும் அர்ஜுனன் ப்ரபத்தி செய்ததைக் காட்டுகிறது. "தஸ்மாத், அஹம்" என்னும் பத3ங்களாலே ப்ரபந்நனுக்கு இருக்கக்கூடிய ஆநுகூல்யஸங்கல்பம் முதலான தன்மைகள் தன்னிடம் இருப்பது காட்டப்பட்டது. சென்ற ஶ்லோகத்தில் கருணை முதலான கு3ணங்களும், இங்கு "ஈஶம்" என்று ஜ்ஞானம், ஶக்தி முதலான கு3ணங்களும் உணர்த்தப்படுகையாலே, ஶரணமடையப்படும் கண்ணன் ஶரணாக3தனை ரக்ஷிக்கலாம்படியான ஸமர்த்த2னாகவும் காருணிகனாகவும் இருக்கின்றமை காட்டப்பட்டது.

***"க3ச்ச2த்4வமேநம் ஶரணம்**
ஶரண்யம் புருஷர்ஷப4ா:" [ப4ார-ஆரண்ய]
[புருஷர் தலைவர்களே! இக்கண்ணனை ஶரணமடையுங்கள்] என்று மார்க்கண்டே3யர் பாண்ட3வர்களுக்கு உபதே3ஶிக்க, அவர்கள் ஶரணமடைந்ததைக் காட்டும் ஶ்லோகத்தில், "**நமஶ்சக்ருர் ஜநார்த்த3நம்**" என்று ஶரணஶப்3த3 ஸ்த2ாநத்தில் நமஶ்ஶப்3த3த்தை இட்டிருக்கையால், இரு ஶப்3த3ங்களும் ஸ்த2ாநப்ரமாணத்தால் ஒரே பொருளுடையவை என்றபடி.

இனி உத்தரார்த்த₄த்தாலே சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட உறவை முன்னிட்டுக்கொண்டு அதற்கு முன் இரண்டு ஶ்லோகங்களிலே கூறிய அபசாரங்களுக்கு க்ஷாமணம் வேண்டுகிருன். (பிதேவ புத்ரஸ்ய) "பிதாஸி லோகஸ்ய" என்று சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்டபடி நீ அனைத்துலகுக்கும் தந்தையாகையாலே, மகன் குற்றத்தைச் செய்தாலும் தந்தை அவன் குற்றத்தைப் பொறுப்பது போலே எனக்கு இயற்கைத் தந்தையான நீ என் குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும். "பிதா நாராயண:" [ஸுபா₃ல] என்று இவ்வுறவு உபநிஷத்திலும் ஓதப்பட்டதன்றே. (ஸகே₂வ ஸக்₂யு:) குற்றம் செய்தவனுயினும் நண்பனுடைய குற்றத்தை நண்பன் பொறுப்பதுபோலே எனக்கு நண்பனுன நீ பொறுத்தருளவேணும். "ஸுஹ்ருத் நாராயண:" [ஸுபா₃ல] என்று இவ்வுறவு உபநிஷத்திலும் ஓதப்பட்டதன்றே. "குற்றம் செய்தபின் அதற்கு அனுதாபமும் மன்னிப்புவேண்டி பிரார்த்த₂னையும் இல்லாவிட்டால் எப்படி மன்னிப்பது?" என்று கண்ணனுக்குக் கருத்தாகக்கொண்டு கூறுகிருன்—(ப்ரிய: ப்ரியாய ஸோடு₄ம் அர்ஹஸி) நான் அனுதாபத்துடன் மன்னிப்புவேண்டி அடிவணங்கி உடலையொடுக்கிப் பிரார்த்தித்தேனுகையால் உனக்கு இனியனுகவே இருக்கிறேன். நீயும் எனக்கு இனியவனுயிருக்கிருய். ஆகையால் அடிவணங்கிப் பிரார்த்திக்கப்பட்ட தந்தையைப்போலவும் நண்பனைப்போலவும் என்னுடைய எல்லாக் குற்றங்களையும் பொறுத்தருளவேணும். "செய்கிற தப்பைச் செய்துவிட்டு அடிவணங்கிப் பிரார்த்திப்பதால் மாத்திரம் மன்னித்துவிட முடியுமோ?"என்று கண்ணனுக்குக் கருத்தாகக்கொண்டு கூறுகிருன்—(தே₃வ) நீ பரமகாருணிகனன்றே. ஆகையால் என் குற்றத்தை மன்னித்தே தீரவேண்டும். "அப்ரதிம ப்ரபா₄வ"[43] என்னும் பத₃ம் போலே இங்கு தே₃வஶப்₃த₃மும் ப்ரகரணப₃லத்தாலே கருணை, வாத்ஸல்யம் முதலான மன்னிப்பதற்கு உறுப்பான கு₃ணங்களையுடையவன் என்று காட்டுகிறது. இந்த ஶ்லோகத்தையும் முந்தின ஶ்லோகத்தையும் எம்பெருமானுர் ஶரணாக₃திக₃த்₃யத்தில் எல்லாவற்றையும்விட்டு எம்பெருமானைச் சரணம் பற்றின இடத்திலே 8-வது, 9-வது சூர்ணைகளாக அனுஸந்தி₄க்கிருர். மேலே 10, 11-வது சூர்ணைகளில் தாம் செய்த அபசாரங்கள், அதற்குக் காரணமான விபரீதாசாரம் முதலானவற்றைப் பொறுக்கும்படி வேண்டுகிருர். ஆகையால் 9-வது சூர்ணையில் அவர் க்ஷாமணம் வேண்டியது அபசாரங்களையும் விபரீதாசாரங்களையும் தவிர்ந்த வேருென்றைப்பற்றி

अदृष्टपूर्वं हृषितोऽस्मि दृष्ट्वा भयेन च प्रव्यथितं मनो मे।
तदेव मे दर्शय देव रूपं प्रसीद देवेश जगन्निवास॥ ४५॥

45. **அத்$_3$ருஷ்டபூர்வம் ஹ்ருஷிதோऽஸ்மி த்$_3$ருஷ்ட்வா**
ப$_4$யேந ச ப்ரவ்யதி$_2$தம் மநோ மே।
தத்$_3$வ மே த$_3$ர்ஶய தே$_3$வ ரூபம்
ப்ரஸீத$_3$ தே$_3$வேஶ ஜக$_3$ந்நிவாஸ॥

தே$_3$வ!—பரமகாருணிகனே! **தே$_3$வேஶ**—(பிரமன் முதலான) தேவர்களுக்கும் ஈஶனே!, **ஜக$_3$ந்நிவாஸ**—உலகனைத்துக்கும் ஆதா$_4$ரமாயிருப்பவனே! **அத்$_3$ருஷ்டபூர்வம்**—இதுவரை காணப்படாத உன் அத்யத்$_3$பு$_4$தரூபத்தை, **த்$_3$ருஷ்ட்வா**—கண்டு, **ஹ்ருஷித: அஸ்மி**—ஆனந்த$_3$முடையவனயிருக்கிறேன். **ப$_4$யேந**—(அத்யுக்$_3$ரமான அந்த உருவத்தைக் கண்ட) ப$_4$யத்தினல், **மே மந:**—எனது நெஞ்சு, **ப்ரவ்யதி$_2$தம் ச**—கலங்கியுமிருக்கிறது; (ஆகையால்), **தத் ரூபம் ஏவ**—(விஶ்வரூபத்தை எடுத்துக்கொள்வதற்கு) முன்னுல் உள்ள அருள்பொழியும் உருவத்தையே, **மே த$_3$ர்ஶய**—எனக்குக் காட்டுவாயாக. **ப்ரஸீத$_3$**—அருள் புரிவாயாக.

யதேயாகவேண்டும். அது யாதென்று ஆராயும்போது, 6-வது சூர்ணை முதல் செய்யப்பட்ட ஶரணாக$_3$திக்காக க்ஷாமணம் வேண்டுகிறர் என்றே கொள்ளவேண்டும், ஆழ்வார் (2-3-4) திருவாய்மொழியிலும், ஆளவந்தார் "மம நாத$_2$"[ஸ்தோ-ர 53] என்ற ஶ்லோகத்திலும் இதைச் செய்தனரன்றே. க$_3$த்$_3$யத்தில் இந்த ப்ரகரணபே$_4$த$_3$த்தைத் திருவுள்ளம்பற்றியே பெரியவாச்சான்பிள்ளை அவ்வண்ணமாக வ்யாக்$_2$யானம் செய்தார். ப$_4$ாஷ்யகாரர் ஆழ்வார்கள் வழிவந்தவராகையாலே நாயகீப$_4$ாவத்தை உடையவர் என்னும் திருவுள்ளத்தாலே, இந்த அர்த்த$_2$ஸ்வாரஸ்யத்தைக் கருதி ஶப்$_3$த$_3$த்தை நலிந்து "ப்ரிய: ப்ரியாயா:" [காதலன் காதலியின் குற்றத்தைப் பொறுப்பதுபோலே பொறுத்தருளவேணும்] என்று ஸந்தி$_4$பிரித்துப் பொருள்கொண்டார் பெரியவாச்சான்பிள்ளை. அர்ஜுனன் அத்தகைய நாயகீப$_4$ாவத்தை உடையவன் அல்லாமையாலும், அவன் 'யாத$_3$வா! நண்பனே!' என்று தான் கூப்பிட்டதற்கே மன்னிப்பு வேண்டுகிறுனகையாலும் இங்கு அவ்வண்ணம் பொருள்கொள்ளவேண்டிய அவஶ்யமில்லை. 44.

॥ भा ॥ अदृष्टपूर्वमत्यद्भुतमत्युग्रं च तव रूपं दृष्ट्वा हृषितोऽस्मि—प्रीतोऽस्मि। भयेन प्रव्यथितं च मे मनः। अतस्तदेव

46. முன்காணு வவ்வடிவை முற்றுங்கண் டுற்றுகப்ப
னின்காத லுண்ணடுங்கு மென்பயத்தா—னன்கார
மேவல் வடிவினையே மீண்டெனக்குக் காட்டியரு
டேவே சகத்திருப்பே சேர்ந்து.

தேவே! — பரமகாருணிகனே! **சகத்திருப்பே** — அனைத்துலகுக்கும் ஆத$_4$ாரமாயிருப்பவனே! **முன் காணு அவ் வடிவை** — இதுவரையில் காணப்படாத அந்த விஶ்வரூபத்தை, **முற்றும் கண்டு**—முழுவதும் கண்டு, **நின் காதல் உற்று** — உன்னிடம் அன்புபூண்டு, **உகப்பன்**— ஆனந்த$_3$ம் அடைவேன்; **பயத்தால்**—(கடுமையான உருவத்தைக் கண்ட) ப$_4$யத்தாலே, **என் உள்**—எனது நெஞ்சு, **நடுங்கும்**—நடுக்கத்தை அடையும்; **மேவல் வடிவினையே**— (விஶ்வரூபத்தை எடுத்துக்கொள்வதற்கு முன்) பொருந்தியிருந்த அழகிய வடிவையே. **மீண்டு சேர்ந்து**—மறுபடியும் அடைந்து, **எனக்கு**—எனக்கு, **நன்கு ஆர காட்டி அருள்**—நன்ருகவும் பரிபூர்ணமாகவும் காட்டியருள்வாயாக.

---

45. விஶ்வரூபத்தைக் கண்டதால் உகப்போடு ப$_4$யமும் விளைகையால், 'உகப்பையே விளக்கும் பழைய உருவையே காட்டியருளவேணும்' என்று வேண்டுகிருன் அர்ஜுனன். (அத்$_3$ருஷ்டபூர்வம்) ஏற்கனவே காணப்பட்ட உருவம் ஆஶ்சர்யமாயிருப்பதுண்டு. இது ஆஶ்சர்யமாகவும் ஏற்கனவே காணப்படாததாகவுமிருப்பதால் அத்யத்$_3$பு$_4$தமாயிருக்கிறது. (த்$_3$ருஷ்ட்வா ஹ்ருஷிதோஸ்மி) ஆகையால் அதைக்கண்டு அன்பும் ஆனந்த$_3$மும் உடையவனுயிருக்கிறேன் நான். (அத்$_3$ருஷ்டபூர்வம் த்$_3$ருஷ்ட்வா) உலகில் காணப்படும் சூரியன் முதலான கடுமையான உருவங்களைக் காட்டிலும் மிகக் கடுமையானதாய் இதுவரை காணப்படாததாயிருக்கையாலே அத்யுக்$_3$ரமான உன் உருவைக்கண்டு. (ப$_4$யேந மே மந: ப்ரவ்யதி$_2$தம் ச) ப$_4$யத்திஞல் என் மனம் நடுக்கத்தையும் அடைகிறது. "ஆக்$_2$யாஹி மே கோ ப$_4$வாந் உக்$_3$ரரூப:" [31] என்று இவனே இவ்வுருவத்தைப் பார்த்துக் கூறியிருக்கிருனன்றே. இனி ஶ்லோகத்தின் பிற்பாதியாலே 'உகப்போடு

तव सुप्रसन्नं रूपं मे दर्शय। प्रसीद देवेश जगन्निवास—मयि प्रसादं कुरु, देवानां ब्रह्मादीनामपीश, निखिलजगदाश्रयभूत ॥ ४५ ॥

किरीटिनं गदिनं चक्रहस्तमिच्छामि त्वां द्रष्टुमहं तथैव।
तेनैव रूपेण चतुर्भुजेन सहस्रबाहो भव विश्वमूर्ते॥ ४६॥

46. கிரீடிநம் க₃தி₃நம் சக்ரஹஸ்த-
மிச்ச₂ாமி த்வாம் த்₃ரஷ்டுமஹம் ததை₂வ।
தேநைவ ரூபேண சதுர்பு₄ஜேந
ஸஹஸ்ரபா₃ஹோ ப₄வ விஶ்வமூர்த்தே ॥

நடுக்கத்தையும் விளைக்கும் விஶ்வரூபத்தை மறைத்துக்கொண்டு உகப்பையே விளைக்கும் பழைய உருவைக்காட்டியருளவேணும்' என்று ப்ரார்த்திக்கிறான் அர்ஜுனன். (தத் ரூபம் ஏவ மே த₃ர்ஶய) ஏற்கனவே யுள்ள மிக அழகிய உருவத்தையே ப்ரபன்னனான எனக்குக் காட்டுவாயாக. (ப்ரஸீத₃) உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலேயே இதைச் செய்யவேண்டும். அப்படிப்பட்ட நிர்ஹேதுக க்ருபையை உடையவனோ? எனில் (தே₃வ) பரமகாருணிகனன்றோ நீ. சென்ற ஶ்லோகத்திற்போலே இங்கும் தே₃வஶப்₃த₃ம் பரமகாருணிகன் என்று பொருள்படுகிறது. 'தே₃வர்கள் என்று பெயர் படைத்தவர்கள் பிரமன் முதலான மற்றும் சிலரும் இருக்கிறார்களே' என்று கருத்தாகக் கொண்டு கூறுகிறான்—(தே₃வேஶ) பிரமன் முதலான தே₃வர்களுக்கும் ஈஶனே! அவர்கள் உன் ஸங்கல்பத்தாலேயே தே₃வர்கள் ஆனவர்களாகையாலே அவர்களுடைய கருணை அளவுபட்டது; அவர்களுக்கும் தலைவனாய் நிறைந்த தே₃வத் தன்மையுடையவனான உன்னுடைய கருணையே அளவற்றது. **"தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் தம் தே₃வதாநாம் பரமம் ச தை₃வதம்"** [ஶ்வே 6-7] [ஈஶ்வரர்களுக்கும் மேலான ஈஶ்வரனும் தே₃வர்களுக்கும் மேலான தே₃வனுமான அவனை] என்று உபநிஷத்தும் ஓதிற்றன்றோ. நான் கருணைகாட்டவேண்டிய அவஶ்யம் என்ன? எனில்—(ஜக₃ந்நிவாஸ) உலகுக்கெல்லாம் ஆத₄ாரமாயிருப்பவனன்றோ நீ; நீ கருணை காட்டாவிடில் இவ்வுலகிற்கு வேறு புகல் ஏது? என்று கருத்து. **"தத்ரைகஸ்த₂ம் ஜக₃த் க்ருத்ஸ்நம் ப்ரவிப₄க்தம் அநேகத₄ா"** [13] என்று இவன் ஜக₃ந்நிவாஸனாயிருப்பதை நேரே கண்டவனன்றோ அர்ஜுனன். 45.

ஸஹஸ்ரபா$_3$ஹோ! — எண்ணிறந்த கைகளையுடையவனே! **விஶ்வமூர்த்தே!** — உலகனைத்தையும் உடலாகக் கொண்டவனே! **தத$_2$ா ஏவ**—முன்னேய வண்ணமே, **கிரீடிநம்**—ஒரே கிரீடத்தையுடையவனாய், **க$_3$தி$_3$நம்**—க$_3$தை$_3$யையுடையவனாய், **சக்ரஹஸ்தம்** — சக்கரத்தைக் கையிலேந்தியவனாய் **த்வாம்**—உன்னை, **அஹம்**—நான், **த்$_3$ரஷ்டும் இச்ச$_2$ாமி** - காணவிரும்புகிறேன். **தேந ஏவ**—முன்பிருந்த தான, **சதுர்பு$_4$ஜேந ரூபேண**—நாலு திருக்கைகளையுடைய திருமேனியோடு கூடியவனாக, **ப$_4$வ**—ஆவாயாக.

---

47. நீண்முடியுந் தண்டுடனே நேமியுஞ்சே ருன்னைநான்
காணலுற்றிங் கப்படியே காதலிப்பன்—பூண்மருவு
மந்நான்கு தோளுருவோ டாயிரந்தோ ளவ்வுருவா
மன்னுநீ மன்னு மகிழ்ந்து.

ஆயிரம் தோள் அவ்வுருவா! — கணக்கற்ற தோள்களையுடைய விஶ்வரூபத்தையுடையவனே! **மன்னு! —** (உலகனைத்துக்கும்) அரசனே! **அப்படியே**—முன்னையவண்ணமே; **நீள் முடியும்** — ஒரே நீண்ட முடியும், **தண்டுடனே —** க$_3$தை$_3$யோடு, **நேமியும் சேர்**—சக்கரமும் சேர்ந்துள்ள (திருக்கைகளையுடைய), **உன்னை**—உன்னை, **நான்**—நான், **இங்கு காணல் உற்று**—இவ்விடத்திலேயே காணவிரும்பி, **காதலிப்பன்**— அன்பு பூண்டிருப்பேன்; **பூண் மருவும் அந் நான்கு தோள் உருவோடு** - ஆப$_4$ரணங்கள் அணிந்த அந்த நான்கு தோள்களையுடைய திருமேனியோடு, **நீ மகிழ்ந்து மன்னு** - நீ உகப்புடன் காட்சி அளிப்பாய்.

---

46. சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட அழகிய உருவை விவரிக்கிறன் இதில். (ஸஹஸ்ரபா$_3$ஹோ) கணக்கற்ற திருக்கைகளையுடையவனே! ஸஹஸ்ரஶப்$_3$த$_3$ம் 'கணக்கற்றது' என்றும் பொருளை உடையது. (விஶ்வமூர்த்தே) உலகனைத்தையும் உருவமாகக்கொண்டவனே! இவ்விரண்டு விளிகளும் அப்போது காட்சிதரும் விஶ்வ

॥भा॥ तथैव पूर्ववत् किरीटिनं, गदिनं, चक्रहस्तं त्वां द्रष्टुमिच्छामि। अतस्तेनैव पूर्वसिद्धेन चतुर्भुजेन रूपेण युक्तो भव। सहस्रबाहो विश्वमूर्ते—इदानीं सहस्रबाहुत्वेन विश्वशरीरत्वेन दृश्यमानरूपस्त्वं तेनैव रूपेण युक्तो भवेत्यर्थः॥ ४६॥

श्रीभगवानुवाच—

मया प्रसन्नेन तवार्जुनेदं रूपं परं दर्शितमात्मयोगात्।
तेजोमयं विश्वमनन्तमाद्यं यन्मे त्वदन्येन न दृष्टपूर्वम्॥ ४७॥

ரூபத்தைக் குறிக்கின்றன. இவ்வுருவம் ப$_4$யத்தோடு கலந்த உகப்பை விளைக்கையாலே, இவன் காணவிரும்பும் உகப்பையே விளைக்கும் உருவை விரிவாக வர்ணிக்கிறான்—(கிரீடிநம்) ஒரே கிரீடத்தை உடையவனாய். விஶ்வரூபத்தில் கணக்கற்ற தலைகளில் கணக்கற்ற கிரீடங்கள் இருப்பதை வேறுபடுத்துகிறது. (க$_3$தி$_3$நம்) ஒரே க$_3$தை$_3$யை உடையவனாய். விஶ்வரூபத்தில் கணக்கற்ற க$_3$தை$_3$களை ஏந்தியிருப்பதை வேறுபடுத்துகிறது. (சக்ரஹஸ்தம்) ஒரே சக்கரத்தைத் திருக்கையில் ஏந்தியிருப்பவனாய். விஶ்வரூபத்தில் கணக்கற்ற சக்கரங்களை ஏந்தியிருப்பதை வேறுபடுத்துகிறது. (த்வாம் அஹம் தத$_2$ா ஏவ த்$_3$ரஷ்டும் இச்ச$_2$ாமி) உன்னை நான் முன்னையவண்ணமே காணவிரும்புகிறேன். இங்கு க$_3$தை$_3$யையும், சக்கரத்தையும் சொன்னது ஶங்க$_2$ம், ஶார்ங்க$_3$ம், நாந்த$_3$கம் என்னும் மற்ற ஆயுத$_4$ங்களுக்கும் உபலக்ஷணம். விஶ்வரூபத்திற்போலே கணக்கற்ற ஆயுத$_4$ங்களை த$_4$ரித்து அப்பூச்சி காட்டாமல், எனக்கு ஆப$_4$ரணமாகக் காட்சியளிக்கும் கூராராழி வெண்சங்கையும், கோலார்ந்த நெடும் சார்ங்கம் கொடுந்தண்டு கொற்ற ஒள்வாளையும் உடையவனாக உருவெடுக்கவேணும் என்று கருத்து. (தேநைவ சதுர்பு$_4$ஜேந ரூபேண ப$_4$வ) முன் இருந்த திருமேனிபோன்றதான நான்கு தோள்களையுடைய திருமேனியோடு கூடியவனாகக் காட்சியளிப்பாயாக. கணக்கற்ற தோள்களையுடைய விஶ்வரூபத்தை வேறுபடுத்துகிறது. இப்போது கணக்கற்ற தோள்களோடும் ஆயுத$_4$ங்களோடும் காட்சி அளிக்கும் நீ விரைவில் நால்தோளமுதாய் ஆப$_4$ரணமாகப் பொலியும் ஒண்சங்(கு) கதை வாளாழியோடும் குனிசார்ங்கத்தோடும் காட்சி அளிக்கவேண்டும் என்று கருத்து. 46.

ஸ்ரீப₄க₃வான் உவாச—

47. மயா ப்ரஸந்நேந தவார்ஜுநேத₃ம்
ரூபம் பரம் த₃ர்ஸிதமாத்மயோக₃ாத்।
தேஜோமயம் விஸ்வமநந்தமாத்₃யம்
யந்மே த்வத₃ந்யேந ந த்₃ருஷ்டபூர்வம்॥

ஸ்ரீப₄க₃வாந் உவாச — ஸ்ரீப₄க₃வான் கூறினன். **அர்ஜுந** — அர்ஜுனு! **தேஜோமயம்**—ஒளிக்குவியலாயிருப்பதாய், **விஸ்வம்** — உலகனைத்தையும் வியாபித்ததாய், **அநந்தம்**— அளவற்றதாய், **ஆத்₃யம்**—(என்னையொழிந்த) அனைத்துக்கும் ஆதி₃யாயிருப்பதாய், **த்வத₃ந்யேந**— உன்னைத்தவிர வேறு எவராலும், **ந த்₃ருஷ்டபூர்வம்**—காணப்படாததாய், **யத் இத₃ம் மே பரம்ரூபம் (தத்)**-என்னுடைய மேலான இந்த விஸ்வரூபம் யாதொன்றுண்டோ அது, **ஆத்மயோக₃ாத்**- என்னுடைய ஸத்யஸங்கல்பச் சேர்த்தியாலே, **ப்ரஸந்நேந மயா** — உகந்த என்னலே, **தவ**—என் அன்பனுன உனக்கு, **த₃ர்ஸிதம்**—காட்டப்பட்டது.

---

48. ஈதுரைக்கப் பார்த்த னிறையுரைத்தா னென்னுகப்பான்
மீதுனக்குக் காட்டினேன் மேலுருவந்—தீதிலொளி
சேரனந்த மாதியாஞ் சீருருவை நின்னெழிந்தா
ராரிதனைக் காண்பா ரமர்ந்து.

பார்த்தன் ஈது உரைக்க—அர்ஜுனன் இதைச்சொல்ல, **இறை உரைத்தான்**—கண்ணன் கூறலுற்றுன்: **மேல் மீதுருவம்**—மேலான விஸ்வரூபத்தை, **என் உகப்பால்**— என்னுடைய உகப்பாலே, **உனக்கு காட்டினேன்** — உனக்குக் காண்பித்தேன். **தீதில் ஒளிசேர் அனந்தம் ஆதியாம் சீர் உருவை இதனை** —குற்றமற்ற ஒளியையுடையதும் அளவற்றதும், (என்னையொழிந்த அனைத்துக்கும்) ஆதி₃யாயிருப்பதுமான பெருமைபெற்ற இவ்வுருவை, **நின்னெழிந்தார் ஆர்**— உன்னைத்தவிர வேறு எவர், **அமர்ந்து காண்பார்**—நன்ருகக் காணமுடியும்?

॥ भा ॥ यन्मे तेजोमयं—तेजसां राशिं, विश्वं—विश्वात्मभूतम्, अनन्तम्—अन्तरहितम्; प्रदर्शनार्थमिदम्; आदिमध्यान्तरहितम्; आद्यम्—मद्व्यतिरिक्तस्य कृत्स्नस्यादिभूतम्, त्वदन्येन केनापि न दृष्टपूर्वं रूपम्, तदिदं प्रसन्नेन मया मद्भक्ताय ते दर्शितम्; आत्मयोगात्—आत्मनस्सत्यसंकल्पत्वयोगात् ॥ ४७ ॥

---

47. அர்ஜுனனுடைய இந்தப் பிரார்த்த2னையைக் கேட்ட கண்ணன் இனி மூன்று ஶ்லோகங்களாலே அவனுடைய பிரார்த்த2னையைத் தலைக்கட்டுவதாகக் கூறி அப4யம் அளிக்கிறான். இந்த ஶ்லோகத்தாலும் அடுத்த ஶ்லோகத்தாலும் தான் காட்டிய விஶ்வரூபத்தின் பெருமையைக் கூறுகிறான். (தேஜோமயம்) ஒளிக்குவியலாயிருப்பது. "சோதிவெள்ளத்தினுள்ளே எழுவதோருரு" [திருவாய் 5-5-10] என்றார் ஆழ்வாரும். திருமேனி வேறாகவும் அதன் சோதி வேறாகவும் இருக்கையாலே, இங்கு மயட் ப்ரத்யயம் 'ப்ராசுர்யம்' (மிகுதி) என்னும் பொருளில் வந்துள்ளதாகக் கொள்ளவேண்டும். (விஶ்வம்) உலகனைத்துமாயிருப்பது; உலகனைத்தையும் வியாபித்திருப்பது என்று கருத்து. (அநந்தம்) முடிவற்றது. இங்கு முடிவைச் சொன்னது, முதல் நடுவுகளுக்கும் உபலக்ஷணமாகையாலே முதலும், நடுவும், முடிவுமற்றது என்று உணர்த்தப்படுகிறது. "அநாதி3மத்4யாந்தம்" [19] என்று இந்த விஶ்வரூபத்தைப் பற்றி முன்னமே சொல்லப்பட்டதன்றோ. (ஆத்3யம்) என்னையொழிந்த அனைத்துக்கும் ஆதி3யாயிருப்பது. இன்னதற்கு ஆதி3 என்று எடுக்காமையாலே, அனைத்துக்கும் ஆதி3 என்று தேறுகிறது. ப4க3வத் ஸ்வரூபத்துக்கு விக்3ரஹம் ஆதி3யல்லாமையாலே அதையொழிந்த அனைத்துக்கும் ஆதி3 யென்றதாகிறது. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில்(1-22)அஸ்த்ரபூ4ஷணாத்4யாயத்தில், திருமேனியிலுள்ள ஆயுத4ங்களும் ஆப4ரணங்களும் ஒவ்வொரு தத்துவத்தை த4ரித்து நிற்கின்றது என்று கூறுகையாலே, திருமேனி அவை அனைத்துக்கும் ஆதி3யாகிறது. (த்வத3ந்யேந ந த்3ருஷ்டபூர்வம் யத்) உன்னைத்தவிர வேறு ஒருவனால் இதற்கு முன்னம் காணப்படாத யாதொரு உருவம் உண்டோ. (மே பரம் ரூபம்) என்னுடைய அந்த மேலான விஶ்வரூபம். "யத்" என்னும் ஶப்3த3த்துக்கு ப்ரதிஸம்ப3ந்தி4யாக 'தத்' என்னும் பத3த்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இரு பத3மும் சேர்ந்தே வருமன்றோ.

॥ भा ॥ अनन्यभक्तिव्यतिरिक्तैस्सर्वैरप्युपायैर्यथावदवस्थितोऽहं द्रष्टुं न शक्य इत्याह—

न वेदयज्ञाध्ययनैर्न दानैर्न
च क्रियाभिर्न तपोभिरुग्रैः।
एवंरूपश्शक्य अहं नृलोके
द्रष्टुं त्वदन्येन कुरुप्रवीर ॥ ४८ ॥

48. ந வேத₃யஜ்ஞாத்₄யயநைர்ந த₃ாநைர்
ந ச க்ரியாபி₄ர்ந தபோபி₄ருக்₃ரை:।
ஏவம்ரூபஶ்ஶக்ய அஹம் ந்ருலோகே
த்₃ரஷ்டும் த்வத₃ந்யேந குருப்ரவீர ॥

குருப்ரவீர! — குருகுலப் பெருவீரனே!, **ஏவம்ரூப: அஹம்** — இவ்வண்ணமான திருமேனியையுடைய நான், **ந்ருலோகே** — இவ்வுலகில், **த்வத₃ந்யேந** — (என்னிடம் ப₄க்தியுடைய) உன்னைக்காட்டிலும் வேறுபட்ட ஒருவனால், **வேத₃யஜ்ஞாத்₄யயநை:** — (ப₄க்தியில்லாமல்) வேத₃த்தைக் கேட்பதாலோ, யஜ்ஞங்களைச்செய்வதாலோ, வேத₃மோதுவதாலோ, **த்₃ரஷ்டும் ந ஶக்ய:** — காண முடியாதவன். **த₃ாநை: ச த்₃ரஷ்டும் ந ஶக்ய:** — த₃ானங்களாலும் காண

(இத₃ம் ரூபம்) இப்போது நீ காணும் விஶ்வரூபம். (ப்ரஸந்நேந மயா தே த₃ர்ஶிதம்) உன்னிடம் அருளுடைய என்னாலே என் அருளுக்குத் தகுதியுள்ள அன்புடையவனாக உனக்குக் காட்டப்பட்டது. இப்படி விஶ்வரூபத்தைக் காட்டியது இந்த்₃ரஜாலம்போன்ற வித்தையாலோ? எனில்—(ஆத்மயோக₃ாத்) தடையற்ற ஸங்கல்பத்தை நான் உடையவனாயிருக்கையாலே; நினைத்ததையெல்லாம் தலைக்கட்டவல்ல எனது ஸங்கல்பத்தாலேயே இது காட்டப்பட்டது. யோக₃ஶப்₃த₃ம் த்₄யானம் முதலான மற்ற பொருள்களைக் குறிப்பது பொருத்தமற்றதாகையால், இங்கு ஸத்யஸங்கல்பத்வமாகிற கு₃ணச்சேர்த்தியைக் குறிக்கிறது. (அர்ஜுந!) நீ கபடமற்ற வெள்ளை மனத்தினனாகையாலே உனக்கு என் விஶ்வரூபம் காட்டப்பட்டது என்று கருத்து. 47.

முடியாதவன். **க்ரியாபி₄: ச த்₃ரஷ்டும் ந ஶக்ய:—(**ஹோமம் முதலான**)** கிரியைகளினாலும் காணமுடியாதவன். **உக்₃ரை: தபோபி₄: ச த்₃ரஷ்டும் ந ஶக்ய:** — கடும் தவங்களாலும் காணமுடியாதவன்.

---

49. ஓதுமறை வேள்வி யுரைதான மோர்கிரியை
மீதுதவந் தன்னான் மிகவென்னைப்—பூதலத்து
நின்னலரிங் கிவ்வாறு நேர்காண மாட்டார்காண்
மன்ன! குரு வீரனே! மற்று.

மன்ன !—அரசனே !, **குருவீரனே** — குருகுலவீரனே !, **மற்று ஓதுமறை வேள்வி உரைதானம் ஓர் கிரியை மீது தவம் தன்னால்**—ப₄க்தியில்லாமல் வேத₃த்தைக் (கேட்டு) ஓதுவதாலும், வேள்விகளைச் செய்வதாலும், (சிறப்பாகச்) சொல்லப்படும் தானங்களையும், ஒப்பற்ற கிரியைகளையும், கடுமையான தவங்களையும் செய்வதாலும். **இங்கு பூதலத்து**— இப்பூவுலகில், **நின்னலர்** — உன்னைப் போன்ற ப₄க்தியில்லாதவர்கள், **இவ்வாறு**—நீ கண்டதுபோல், **என்னை மிக நேர் காணமாட்டார் காண்** — என்னைச் சிறப்பாக நேருக்குநேர் காணமாட்டார்கள்.

---

48. "என்னைத் தவிர எவராலும் இவ்வுருவைக் காணமுடியாது என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? வேறு உபாயங்களாலும் எவராவது இதைக் கண்டிருக்கலாமே" என்று அர்ஜுனனுக்குக் கருத்தாகக்கொண்டு "ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்தியில்லாத எல்லா உபாயங்களாலும் நீ கண்டதுபோல் நான் உள்ளபடி காண அரியவன்" என்கிறான் இந்த ஶ்லோகத்தில். (ஏவம் ரூப: அஹம்) ப்ராக்ருதமான மனுஷ்யரூபத்தைக் காட்டிலும் வேறுபட்டதாய், அப்ராக்ருதமான திருமேனியையுடைய நான். இங்கு எம்பெருமானுடைய திருமேனியானது எவராலும் காண்பரிது என்று கொண்டால் கிருஷ்ணாவதாரரூபத்தை அனைவரும் காண்பது பொருந்தாமல் போய்விடும். விஶ்வரூபம் என்று பொருள்கொண்டாலும் அவ்வுருவத்தைத் தேவர் முதலான பலர் கண்டிருப்பதாக இவ்வத்தியாயத்திலே சொல்லியிருப்பது பொருந்தாது. ஆகையால் மனித உருவம் முதலானவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாய் அப்ராக்ருதமான உருவத்தையே இங்கு சொல்லுவதாகக் கொள்ளவேண்டும். ஏகாந்த

॥भा॥ एवंरूपो यथावदवस्थितोऽहं मयि भक्तिमतस्त्वत्तोऽन्येन [एकान्त]ऐकान्तिकात्यन्तिकभक्तिरहितेन केनापि पुरुषेण वेदयज्ञादिभिः केवलैर्द्रष्टुं न शक्यः॥४८॥

ப$_4$க்தியற்றவர்கள் அவதாரரூபத்தைக் காண்பது "மனிதன் முதலான ப்ராக்ருத உருவங்களில் இது ஒன்று" என்னும் எண்ணத்துடனே யாகையால், அது உள்ளபடி காண்பதாகாதன்றே. (ந்ருலோகே த்வத$_3$ந்யேந த்$_3$ரஷ்டும் ந ஶக்ய:) இப்பூவுலகில் என்னிடம் ப$_4$க்தியுடைய உன்னைக் காட்டிலும் வேறுபட்டவனாய், என்னை ஒருவனையே விஷயமாகக்கொண்ட நித்யப$_4$க்தியற்றவனான எவனாலும் காணமுடியாதவன். "அர்ஜுனனைத் தவிர வேறு எவனாலும் காணமுடியாதவன்" என்று பொருள்கொண்டால் மேலே 54-வது ஸ்லோகத்தில் "அநந்ய ப$_4$க்தியுடையவனாலே காணமுடியும்" என்று கூறியிருப்பது பொருந்தாதாகையால் இங்கு "த்வத$_3$ந்யேந" என்றது "அர்ஜுனனைப் போன்ற ப$_4$க்தியற்ற எவனாலும்" என்றே பொருள்படும். இனி, **"தமேதம் வேதா$_3$நுவசநேந ப்$_3$ராஹ்மணா விவிதி$_3$ஷந்தி யஜ்ஞேந தா$_3$நேந தபஸா அநாஶகேந"** [ப்$_3$ருஹ 6-4-22] [அந்தப் பரமாத்மாவை வேத$_3$மோதுதலாலும், வேள்வியாலும், தா$_3$னத்தாலும் அழிவற்ற தவத்தாலும் அறிய விரும்புகிறார்கள்] என்று உபநிஷத்தில் கூறியிருக்கும்போது 'எவனாலும் காணமுடியாது' என்று கூறுவது எப்படியெனில்—ப$_4$க்தியோடுகூடிய இவற்றால் அறியமுடியுமே தவிர ப$_4$க்தியில்லாத வேத$_3$மோதுதல் முதலானவற்றாலே தன்னைக் காணமுடியாது என்று ஸ்லோகத்தின் முற்பாதியாலே காட்டுகிறான். (வேத$_3$யஜ்ஞாத்$_4$யயநை: ந த்$_3$ரஷ்டும் ஶக்ய:) ப$_4$க்தியில்லாமல் வேத$_3$த்தைக் கேட்பதாலும், வேள்விகள் புரிவதாலும், வேத$_3$ம் ஓதுதலாலும் நான் காண்பரியவன். அத்$_4$யயனத்தைத் தனியாகச் சொல்லியிருக்கையால் இங்கு வேத$_3$ஶப்$_3$த$_3$ம் கேட்கப்பட்ட வேத$_3$த்தைக் குறிப்பதாய், "ஶ்ரோதவ்ய:" [ப்$_3$ருஹ 4-4-5] என்று உபநிஷத்தில் சொல்லப்பட்ட ஶ்ரவணத்தாலும் இவனைக் காணமுடியாது என்று பொருள்படுகிறது. (தா$_3$நைந த்$_3$ரஷ்டும் ந ஶக்ய:) ப$_4$க்தியில்லாத தா$_3$னங்களாலும் நான் காண்பரியவன். (க்ரியாபி$_4$: ந த்$_3$ரஷ்டும் ஶக்ய:) ப$_4$க்தியில்லாத ஹோமம் முதலான கிரியைகளாலும் நான் காண அரியவன். வேத$_3$த்தைக்கேட்டல், ஓதுதல், வேள்விபுரிதல், தா$_3$னம் செய்தல் முதலான கிரியைகளை முன்னமே எடுத்துவிட்டபடியால், இங்கு அவைகளைக் காட்டிலும் வேறுபட்ட ஹோமம் முதலான கிரியைகளைச் சொல்வதாகக் கொள்ளவேண்டும். (உக்$_3$ரை: தபோபி$_4$: ச ந

मा ते व्यथा मा च विमूढभावो
दृष्ट्वा रूपं घोरमीदृङ्ममेदम्।
व्यपेतभीः प्रीतमनाः पुनस्त्वं
तदेव मे रूपमिदं प्रपश्य ॥ ४९ ॥

49. மா தே வ்யத2ா மா ச விமூட4ப4ாவோ
த்3ருஷ்ட்வா ரூபம் கே4ாரமீத்3ருங்மமேத3ம்।
வ்யபேதபீ4: ப்ரீதமநா: புநஸ்த்வம்
ததே3வ மே ரூபமித3ம் ப்ரபஶ்ய॥

மம — என்னுடைய, **ஈத்3ருக்** — இத்தகைய, **இத3ம் கே4ாரம் ரூபம்**—இந்த ப4யங்கரமான உருவத்தை, **த்3ருஷ்ட்வா** — கண்டதினால், **தே** — உனக்கு (உண்டாயிருக்கும்), **வ்யத2ா**—துன்டம், **மா(பூ4த்)**—போகட்டும், **விமூட4ப4ாவ: ச**—நின்னுடைய அழிவும், **மா(பூ4த்)**-போகட்டும், **வ்யபேதபீ4:**—ப4யம் நீங்கப்பெற்றவனாய், **ப்ரீதமநா:**—உகந்த நெஞ்சினனாய், **த்வம்**—நீ, **தத் ஏவ மே இத3ம் ரூபம்**— உனக்குப் பழகியதான எனது இந்த அழகிய ரூபத்தை, **புந: ப்ரபஶ்ய**—மறுபடியும் காண்பாயாக.

---

50. என்கொடிய ரூப மிதுகண் டுளங்கலங்கா
துன்கொடிய துன்ப மொழிந்திடுநீ— நன்குடைய
நெஞ்சாற் பயந்துரந்து நீயந்த வென்வடிவை
யெஞ்சாது காண யினி.

என் கொடிய ரூபம் இது கண்டு—என்னுடைய ப4யங்கரமான இந்த விஶ்வரூபத்தைக் கண்டு, **உளம் கலங்காது**—

த்3ரஷ்டும் ஶக்ய:) ''ஊன்வாட உண்ணாது உயிர்காவலிட்டு உடலில் பிரியாப் புலனைந்தும் நொந்து தாம் வாடவாட......காயோடு நீடு கனியுண்டு வீசுகடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து தீயோடு நின்றுதவம்'' [பெரியதிரு 3-2-1,2] என்று சொல்லப்படும் கடுமையான தவங்களாலும். (ப4க்தியில்லாவிடில்) என்னைக் காணமுடியாது. (குருப்ரவீர) நீ ப4க்திமிக்கவர்களான குருக்கள் வம்சத்தில் உதித்த பெருவீரனாகையாலே என்னை இவ்வண்ணம் கண்டது வியப்பல்ல என்று கருத்து.

॥भा॥ ईदृशघोररूपदर्शनेन ते या व्यथा, यश्च विमूढभावो वर्तते, तदुभयं माभूत्; त्वयाऽभ्यस्तपूर्वमेव सौम्यं रूपं दर्शयामि; तदेवेदं मम रूपं प्रपश्य ॥ ४९ ॥

நெஞ்சம் கலக்கம் அடையாமல், **நீ**—நீ, **உன் கொடிய துன்பம் ஒழிந்திடு** — உனது மிகுதியான துக்கம் நீங்கப் பெறுவாய்; **நன்கு உடைய நெஞ்சால்** — உகப்பையுடைய நெஞ்சாலே, **பயம் துரந்து**—ப₄யத்தைவிட்டு, **நீ அந்த என் வடிவை** — ஏற்கனவே நீ கண்ட எனது அழகிய திருமேனியை, **இனி எஞ்சாது காணுய்**—இனி முழுவதும் காணுய்.

---

49. 45, 46-வது ஸ்லோகங்களில் அர்ஜுனன் விரும்பியபடி "எனது பழையதான நான்கு திருக்கைகளோடுகூடிய திருமேனியைக் காட்டுகிறேன். நீ துன்புறவேண்டா" என்கிருன் கண்ணன். (மம ஈத்₃ருக் இத₃ம் கோ₄ரம் ரூபம் த்₃ருஷ்ட்வா தே வ்யத₂ா மா) எனது இத்தகைய ப₄யங்கரமான விஸ்வரூபத்தைக் கண்டதனுல் உனக்கு ஏற்பட்டிருக்கும் துன்பம் நீங்கட்டும். (தே விமூட₄ப₄ாவ: ச மா) உனக்கு ஏற்பட்டிருக்கும் மனக்கலக்கமும் நீங்கட்டும். இங்கு ஸ்லோகத்தின் அமைப்பு "ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் துன்பமும் மனக்கலக்கமும் இந்த ப₄யங்கரமான ரூபத்தைக் காண்பதினுல் நீங்கட்டும்" என்று பொருள்கொள்ள இடம் அளிக்கிறதாயினும், ப்ரகரணத்துக்குப் பொருந்தாதாகையால் "கோ₄ரரூபத்தைக் கண்டதனுல் உனக்கு உண்டான துன்பமும், மனக்கலக்கமும் நீங்கட்டும்" என்றே பொருள்கொள்ளவேண்டும். ஸ்லோகத்தின் முற்பாதியில் துன்பத்திற்கும் மனக்கலக்கத்துக்கும் காரணம் என்னுடைய கோ₄ரரூபத்தைக் கண்டதே என்று கூறிவிட்டு, பிற்பாதியால் அவையிரண்டும் நீங்குவதற்கு உறுப்பாகத் தனது இனிய ரூபத்தைக் காண்பாயாக என்கிருன்—(தத் ஏவ இத₃ம் மே ரூபம்) ஏற்கனவே நீ பழகியதான என்னுடைய இந்த அழகிய திருமேனியை. நான் உடனடியாகக் காட்ட இருக்கிற திருமேனியை என்றபடி. 'இத₃ம் ரூபம்' என்று அப்போதிருக்கும் கோ₄ரரூபத்தைக் குறித்தால் அதனுல் துன்பமும் மனக்கலக்கமும் நீங்காதாகையாலே "வர்த்தமாந ஸாமீப்யே வர்த்தமாநவத் வா" [நிகழ்காலத்துக்கு அருகிலிருக்கும் பொருளையும் நிகழ்காலத்திலிருப்பதுபோல் வழங்குவதுண்டு] என்னும்

सञ्जय उवाच—
इत्यर्जुनं वासुदेवस्तथोक्त्वा
स्वकं रूपं दर्शयामास भूयः।
आश्वासयामास च भीतमेनं
भूत्वा पुनस्सौम्यवपुर्महात्मा॥ ५०॥

ஸஞ்ஜய உவாச—
50. இத்யர்ஜுநம் வாஸுதே₃வஸ்ததே₂ாக்த்வா
ஸ்வகம் ரூபம் த₃ர்ஶயாமாஸ பூ₄ய:।
ஆஶ்வாஸயாமாஸ ச பீ₄தமேநம்
பூ₄த்வா புநஸ்ஸௌம்யவபுர்மஹாத்மா॥

ஸஞ்ஜய உவாச—ஸஞ்ஜயன் கூறினன். **இதி**—இவ்வண்ணமாக, **அர்ஜுநம்**—அர்ஜுனனைக் குறித்து, **வாஸுதே₃வ:**—கண்ணன், **ததா₂ உக்த்வா**—முற்கூறிய முறையில் சொல்லி, **ஸ்வகம் ரூபம்**—நால்தோளமுதான தனது திருமேனியை, **பூ₄ய: த₃ர்ஶயாமாஸ**—மறுபடியும் காட்டினன். **பீ₄தம் ஏநம்**—(விஶ்வரூபத்தைக்கண்டு) பயந்த இவனை, **மஹாத்மா**—ஸத்யஸங்கல்பனன கண்ணன், **புந: ஸௌம்யவபு: பூ₄த்வா**—மறுபடியும் அழகிய திருமேனியை உடையவனுக ஆகி, **ஆஶ்வாஸயாமாஸ ச** — ஆறுதலும் சொன்னன்.

---

51. இன்னே யிறைவ னியம்பி விசயனுக்குத்
தன்னே ருருமீண்டு தான்காட்டி—முன்னேநின்
ருற்றியவ னச்சங் கெடுத்தா னழகினுற்
றேற்றியெழின் மேனியுடன் சேர்ந்து.

வழக்கையொட்டி இத₃ம்ஶப்₃த₃ம் காட்ட இருக்கும் சதுர்பு₄ஜ ரூபத்தைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். (த்வம் வ்யபேதபீ₄: ப்ரீதமநா: புந: ப்ரபஶ்ய) நீ ப₄யம் நீங்கப்பெற்றவனுய் உகந்த நெஞ்சினனுய் மீண்டும் காண்பாயாக. பூர்வார்த்த₄த்தில் சொன்ன வ்யதை₂ (துன்பம்) நீங்குவதை "வ்யபேதபீ₄:" என்னும் பத₃த்தாலும், விமூட₄பா₄வம் (மனக்கலக்கம்) நீங்குவதை "ப்ரீதமநா:" என்னும் பத₃த்தாலும் உணர்த்துகிருன். 49.

॥ भा ॥ एवं पाण्डुतनयं भगवान् वसुदेवसूनुरुक्त्वा भूयः स्वकीयमेव चतुर्भुजं रूपं दर्शयामास; अपरिचितस्वरूपदर्शनेन भीतमेनं पुनरपि परिचितसौम्यवपुर्भूत्वा आश्वासयामास च, महात्मा—सत्य-

---

இன்னே—இவ்வண்ணமாக, **இறைவன்**—கண்ணன், **விசயனுக்கு இயம்பி**—அர்ஜுனனுக்குக் கூறி, **தன் ஏர் உரு**—தனது அழகிய உருவத்தை, **தான் மீண்டு காட்டி**—தானே மறுபடியும் காட்டி, **எழில் மேனியுடன் சேர்ந்து முன்னே நின்று**—அழகிய திருமேனியோடு கூடி அவனுக்கு முன்னே நின்று, **அழகினுல் தேற்றி**—தன் அழகைக் காட்டி ஆறுதல் அளித்து, **அவன் அச்சம் ஆற்றிக் கெடுத்தான்**—அவனது ப₄யத்தைப் (படிப்படியாகத்) தணித்துப் போக்கினுன்.

---

50. தான் சொன்னபடியே அழகிய சதுர்பு₄ஜரூபத்தை எடுத்துக் கொண்டு கண்ணன் அர்ஜுனனைத் தேற்றியதைக் கூறுகிறது இந்த ஶ்லோகம். (இதி அர்ஜுநம் வாஸுதே₃வ: தத₂ா உக்த்வா) இவ்வண்ணமாகப் பாண்டுவின் பிள்ளையான அர்ஜுனனைக் குறித்து அவனது மாமனை வஸுதே₃வனின் பிள்ளையான கண்ணன் கூறி. இப்படி நெருங்கின உறவுமுறையாயிருக்கையாலே இருவருக்கும் இயல்வான பிரீதி உள்ளதென்று உணர்த்தப்படுகிறது. இந்தப் பிரீதியினுலே கண்ணன் செய்த செயலைக் கூறுகிறது ஶ்லோகத்தின் எஞ்சியபகுதி — (ஸ்வகம் ரூபம் த₃ர்ஶயாமாஸ பூ₄ய:) அர்ஜுனன் வேண்டினபடியும், தான் வாக்களித்தபடியும் தன்னுடைய தான சதுர்பு₄ஜ ரூபத்தையே மறுபடியும் அர்ஜுனனுக்குக் காட்டினுன். (பீ₄தம் ஏநம்) முன் ஶ்லோகங்களில் சொன்னபடி விஶ்வரூபத்தைக் கண்டு பயந்த அர்ஜுனனை. (புந: ஸௌம்யவபு: பூ₄த்வா ஆஶ்வாஸயாமாஸ ச) மறுபடியும் தனது அந்த அழகிய திருமேனியை உடையவனுகி ஆஶ்வாஸப்படுத்தவும் செய்தான். அர்ஜுனனுக்கு ஆறுதல் சொன்னுன் என்றபடி. நினைத்தவுடன் பலவிதமான திருமேனிகளை இவன் எடுத்துக்கொள்வது எப்படிக்கூடும்? என்னும் கேள்விக்கு பதில் உரைக்கிறது—(மஹாத்மா) இவன் ஸத்யஸங்கல்பனுகையாலே கூடும் என்று கருத்து. ஆத்மஶப்₃த₃ம் ஸங்கல்பரூபமான ஸ்வபா₄வத்தைக் குறிக்கிறது. 'மஹத்' என்னும் ஶப்₃த₃ம் அந்த ஸங்கல்பம் தடையற்றது என்று காட்டுகிறது. இங்கு ஓர் ஐயம் எழுகிறது: கண்ணனுடைய சதுர்பு₄ஜரூபம் அவனுக்கே உரியது

संकल्पः। अस्य सर्वेश्वरस्य परमपुरुषस्य परस्य ब्रह्मणो जगदुपकृति-मर्त्यस्य वसुदेवसूनोश्चतुर्भुजमेव स्वकीयं रूपम्; कंसाद्भीतवसुदेवप्रार्थनेन आकंसवधाद्भुजद्वयमुपसंहृतं, पश्चादाविष्कृतं च। * जातोऽसि देव देवेश शङ्खचक्रगदाधर। दिव्यं रूपमिदं देव प्रसादेनोपसंहर॥... उपसंहर विश्वात्मन् रूपमेतच्चतुर्भुजम् (वि.५.३.११,३) इति हि प्रार्थितम्।

என்று இங்கு சொல்லப்படுகிறது. ஆனால் அவன் திருவாய்ப்பாடியிலே இரண்டு கைகளுடனேயே வாழ்ந்துவந்தான் என்று இதிஹாஸபுராணங்கள் கூறுகின்றன. அப்படியிருக்கும்போது நாலு கைகளோடு கூடியதே அவனுடைய இயல்வான திருமேனி என்று எப்படிக் கூறமுடியும்? என்பது அவ்வையம். இதற்கு ஸமாதாநம் பின்வருமாறு:-இக்கண்ணன் உலகனைத்துக்கும் ஈஸ்வரனுயிருப்பவன்; பரமபுருஷன் என்றும், பரப்ரஹ்மம் என்றும் புகழ்பெற்றவன்; இப்படிப் பரத்வ (மேன்மைக்)குணம் நிறைந்தவனுயிருந்தபோதிலும், உலகினரை உய்விப்பதற்காக மனித உருவில் வஸுதேவனின் பிள்ளையாக அவதரித்தானுகையாலே ஸௌலப்யம் முதலான நீர்மைக் குணங்களும் நிறைந்தவன். அவதரிக்கும்போது நான்கு திருக்கைகளுடன் கூடியவனுய் அவதரித்தான் என்றே புராணங்கள் கூறுகின்றன. கம்ஸனிடமிருந்து பயந்து வஸுதேவரும் தேவகியும் பிரார்த்தித்தபடியால் அவற்றில் இரண்டு கைகளை மறைத்துக்கொண்டு இரண்டு கைகளோடேயே திருவாய்ப்பாடியில் வாழ்ந்துவந்தான். கம்ஸனைக்கொல்லும் வரையில் இப்படி இரண்டு கைகளுடனேயே இருந்த அவன் அதற்குப்பின் தனக்கு இயல்வான நான்கு கைகளையும் கொண்டே வாழ்ந்தான் என்றும் இதிஹாஸ புராணங்களிலிருந்து விளங்குகிறது. "ஜாதோऽஸி தேவதேவேஸ! ஸங்கசக்ர கதாதர!। திவ்யம் ரூபம் இதம் தேவ ப்ரஸாதேந உபஸம்ஹர ॥" [விஷ்ணுபுராணம் 5-3-11] [தேவதேவர்களுக்கும் ஈஸனே! ஸங்கசக்ரகதைகளை தரிப்பவனே! தேவனே! இந்த உனது திவ்யரூபத்தை அருள்கூர்ந்து மறைத்துக்கொள்வாயாக] என்று வஸுதேவரும் "உபஸம்ஹர விஸ்வாத்மந்! ரூபமேதத் சதுர் புஜம் ॥" [ஷை 5-3-13] [ஸர்வவ்யாபியே! இந்த உன்னுடைய நாலு திருக்கைகளையுடைய உருவத்தை மறைத்துக்கொள்] என்று தேவகியும் பிரார்த்தித்ததிலிருந்து கண்ணனது இயல்வான ரூபம் நாலு கைகளுடன் கூடினதே என்று விளங்குகிறது.

शिशुपालस्यापि द्विषतोऽनवरतभावनाविषयश्चतुर्भुजमेव वसुदेवसूनोः रूपम् *उदारपीवरचतुर्बाहुं शङ्खचक्रगदाधरम् (वि. ४. १५. १३) इति। अतः पार्थेनात्र *तेनैव रूपेण चतुर्भुजेनेत्युच्यते॥५०॥

अर्जुन उवाच—

दृष्ट्वेदं मानुषं रूपं तव सौम्यं जनार्दन।
इदानीमस्मि संवृत्तस्सचेताः प्रकृतिं गतः॥ ५१ ॥

அர்ஜுந உவாச—

51. த்₃ருஷ்ட்வேத₃ம் மாநுஷம் ரூபம்
தவ ஸௌம்யம் ஜநார்த்த₃ந!।
இத₃ாநீமஸ்மி ஸம்வ்ருத்தः
ஸசேதாः ப்ரக்ருதிம் க₃தः॥

அர்ஜுந உவாச—அர்ஜுனன் கூறினன்:— "**ஜநார்த்த₃ந**—ஜனார்த்தனனே!, **இத₃ம் தவ ஸௌம்யம் மாநுஷம் ரூபம்**—உன்னுடைய இந்த அழகிய மனித உருவை, **த்₃ருஷ்ட்வா**—பார்த்து, **இத₃ாநீம்**—இப்போது, **ஸசேதாः**—நெஞ்சம் நிலைபெற்றவனாய், **ஸம்வ்ருத்தः அஸ்மி**—இன்புற்றிருக்கிறேன். **ப்ரக்ருதிம் க₃தः அஸ்மி**—தன் நிலைபெற்றவனாகவும் இருக்கிறேன்."

எப்போதும் கண்ணனை த்₃வேஷித்து, கேட்பார் செவிசுடும் கீழ்மை வசவுகளை வைபவனாய், அவனையே இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருந்த சிசுபாலனும் அவனை நாலு கைகளை உடையவனாகவே நினைத்து வந்தான் என்பது "**உத₃ாரபீவர சதுர்பா₃ஹும் ஶங்க₂ சக்ரக₃தா₃த₄ரம்**" [வி-பு 4-15-13] [நீண்டு பருத்த நான்கு திருக்கைகளையுடையவனாய், ஶங்க₂சக்ரக₃தை₃களை த₄ரித்தவனான கண்ணனை] என்று விஷ்ணுபுராண வாக்யத்திலிருந்து விளங்குகிறது. அதனாலேயே இங்கு அர்ஜுனன் "**தேனைவ ரூபேண சதுர்பு₄ஜேந**" [46] என்று சதுர்பு₄ஜ ரூபத்தையே காட்டவேண்டுமென்று பிரார்த்தி₂க்க, கண்ணனும் தனது இயல்வான அந்த உருவத்தையே காட்டினன் என்று சொல்லப்படுகிறது. 50.

॥भा॥ अनवधिकातिशयसौन्दर्यसौकुमार्यलावण्यादियुक्तं तवैवासाधारणं मनुष्यत्वसंस्थानसंस्थितमतिसौम्यमिदं तव रूपं दृष्ट्वा इदानीं सचेतास्संवृत्तोऽस्मि, प्रकृतिं गतश्च ॥ ५१ ॥

---

52. தானிறையைப் பார்த்தன் றகவுரைத்தான் மாயனே!
மானிடமா நின்னழகார் மாமேனி—யானெனது
கண்ணாரக் கண்டு கருத்தமர்ந்தேன் றன்மையினிற்
றிண்ணாரச் சேர்ந்தேன் சிறந்து.

பார்த்தன் தான் — அர்ஜுனனனவன், **இறையை**— கண்ணனைப் பார்த்து, **தகவு உரைத்தான்**—தக்க வார்த்தையைச் சொன்னான்— "**மாயனே** — மாயப்பிரானே! **மானிடமாம் நின் அழகார் மாமேனி** — மனித உருவை யுடைய உன்னுடைய அழகு பொருந்திய திருமேனியை, **யான்**—நான், **எனது கண்ணாரக் கண்டு**—எனது கண்கள் நிறையக் கண்டு, **கருத்து அமர்ந்தேன்**—நினைவில் அமைதி பெற்றேன். **சிறந்து**—இன்புற்று, **தன்மையினில் திண் ஆரச்சேர்ந்தேன்**—தன் நிலையைஉறுதியாக அடைந்தேன்."

---

51. சதுர்பு₄ஜ ரூபத்தைக் கண்ட அர்ஜுனன் தான் நெஞ்சம் நிலைபெற்று இன்புற்றுத் தன்னிலைபெற்றதைக் கூறுகிறான். (இத₃ம் தவ ஸௌம்யம் மாநுஷம் ரூபம்) உன்னுடைய இந்த அழகிய மனித உருவை. 'மானுஷம்' என்று மனித உருவாயிருந்தபோதிலும், மற்ற மனிதர்களுடைய உருவைப்போல் கர்மத்தினால் ஏற்பட்டதாய், பிராகிருதமாயிராமல், எல்லையற்ற பெருமையையுடைய ஸௌந்த₃ர்யம் என்னும் அவயவசோபை₄, ஸௌகுமார்யம் என்னும் மென்மை, லாவண்யமெனப்படும் ஸமுத₃ாயசோபை₄ ஆகிய தி₃வ்ய மங்க₃ள விக்₃ரஹகு₃ணங்களோடு கூடியதாய், கர்மம் காரணமாக வல்லாமல் தன் விருப்பத்தாலேயே எடுத்துக்கொள்ளப்படுவதாய், உனக்கேயுரிய அப்ராக்ருதத் திருமேனியாய், மிக அழகாயிருப்பதாய், மனித உருவில் அமைந்திருப்பதாயுள்ளது எம்பெருமானின் திருமேனி என்பதை "தவ இத₃ம் ஸௌம்யம் ரூபம்" என்னும் பத₃ங்களாலே உணர்த்துகிறான். (இத₃ாநீம் ஸசேதா: அஸ்மி) விஶ்வரூபத்தைக் கண்டு நெஞ்சழிந்திருந்த நிலைபோய் இப்போது நெஞ்சு நிலை பெற்றவனானேன். (ஸம்வ்ருத்த: அஸ்மி) விஶ்வரூபத்தைக்கண்டு

श्रीभगवानुवाच—
सुदुर्दर्शमिदं रूपं दृष्टवानसि यन्मम।
देवा अप्यस्य रूपस्य नित्यं दर्शनकाङ्क्षिणः॥ ५२॥

ஸ்ரீப₄க₃வாந் உவாச—
52. ஸுது₃ர்த்த₃ர்ஶமித₃ம் ரூபம் த்₃ருஷ்டவாநஸி யந்மம।
தே₃வா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் த₃ர்ஶநகாங்க்ஷிண:॥

ஸ்ரீப₄க₃வாந் உவாச—கண்ணன் உரைத்தான்— **மம இத₃ம் யத் ரூபம்**—என்னுடைய இந்த யாதொரு ரூபத்தை, **த்₃ருஷ்டவாந் அஸி**—நீ கண்டிருக்கிறாயோ, **(தத்) ஸுது₃ர்த்த₃ர்ஶம்**—அது எவராலும் காண்பரிது. **அஸ்ய ரூபஸ்ய**—இந்த உருவத்தை, **தே₃வா: அபி**—தே₃வர்களும், **நித்யம்**—எப்போதும், **த₃ர்ஶநகாங்க்ஷிண:** — காணவிருப்பத்தை யுடையவர்களாகவே இருக்கின்றார்கள்.

---

53. **முன்னியம்பும் பார்த்தனுக்கு மூதிறைவன் செப்பினு**
னென்னியலு மேனி யிதுகண்டா—யந்நிலைதான்
காண்பரிதிம் மேனிதனைக் காண்பான் கணிசிப்பர்
சேண்பயிலும் வானவர்கள் சேர்ந்து.

முன் இயம்பும்—முற்கூறியபடி சொன்ன, **பார்த்தனுக்கு**—அர்ஜுனனைக் குறித்து, **மூது இறைவன்**—அனாதி₃ புருஷனான கண்ணன், **செப்பினன்**—கூறினன்:— **என் இயலும் மேனி இது கண்டாய்**—என்னுடைய இயல்பான இந்த யாதொரு திருமேனியைக் கண்டாயோ, **அந்நிலைதான்**—

பயந்து துன்புற்றிருந்த நிலைபோய் இன்புற்றவனானேன். (ப்ரக்ருதிம் க₃த: அஸ்மி) விஸ்வரூபத்தைக் கண்டு தன்னிலை அழிந்துகிடந்த நிலை நீங்கப்பெற்று, தன்னிலைபெற்றவனுமானேன். (ஜநார்த்த₃ந) 'ஜநி' எனப்படும் பிறவித்துன்பத்தை அழிப்பவனே! பிறவித் துன்பத்தால் நெஞ்சம் நிலைகெட்டுத் துன்புற்றுத் தன்னிலையழிந்து கிடக்கும் ஜீவர்களை அத்துன்பத்தையழித்து நெஞ்சம் நிலைபெற்று இன்புற்றுத் தன்னிலையடையச்செய்யும் நீ எனக்கு இவற்றை விளைத்தது வியப்பல்ல என்று கருத்து. 51.

॥भा॥ ममेदं सर्वस्य प्रशासनेऽवस्थितं सर्वाश्रयं सर्वकारणभूतं रूपं यद्दृष्टवानसि ; तत्सुदुर्दर्शं—न केनापि द्रष्टुं शक्यम्। अस्य रूपस्य देवा अपि नित्यं दर्शनकाङ्क्षिणः, नतु दृष्टवन्तः ॥५२॥

அத்திருமேனி, **காண்பரிது**—காண்பதற்கு அரியதாகும். **சேண் பயிலும் வானவர்கள்**—உயரேயுள்ள உலகங்களில் வாழும் தே₃வர்கள், **இம்மேனிதனை காண்பான்** — இந்தத் திருமேனியைக் காண்பதற்காக, **சேர்ந்து கணிசிப்பர்**— வாசியில்லாமல் விரும்பியிருப்பார்கள்.

---

52. இனி நான்கு ஶ்லோகங்களாலே கண்ணன் அர்ஜுனனுக்கு ப₄க்தியோக₃த்தின் பெருமையைப் பேசுகிறான். அதில் இந்த முதல் ஶ்லோகத்தாலே ப₄க்திநிஷ்ட₂ர்களுக்கு ஸுப₄ாஶ்ரயமாயிருக்கும் தன் திருமேனியின் பெருமையைக் கூறுகிறான். (மம இத₃ம் யத் ரூபம் த்₃ருஷ்டவாநஸி) என்னுடைய யாதொரு இந்த ரூபத்தை (நீ) கண்டிருக்கிறாயோ. (இத₃ம் ரூபம்) ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் அஸ்த்ர பூ₄ஷணத்₄யாயத்தில் சொன்னபடி உலகனைத்தையும் நியமிப்பதாய், அனைத்துக்கும் இருப்பிடமாயிருப்பதாய், அனைத்துக்கும் காரணமாயிருப்பதான திருமேனி என்று கருத்து. (தத் ஸுது₃ர்த்த₃ர்ஶம்) அத்திருமேனி மிகவும் காண்பரிது. யச்ச₂ப்₃த₃த்தோடு சேர்ந்தே வருமாகையால் தச்ச₂ப்₃த₃ம் வருவித்துக்கொள்ளப்பட்டது. (அஸ்ய ரூபஸ்ய தே₃வா: அபி நித்யம் த₃ர்ஶந காங்க்ஷிண:) இந்தத் திருமேனியை தே₃வர்களும் காண்பதில் எப்போதும் விருப்பத்தை உடையவர்களாயிருக்கிறார்கள்; ஆனால் கண்டதில்லை என்று கருத்து. நித்யஶப்₃த₃த்தை த₃ர்ஶநஶப்₃த₃த்தோடு கூட்டினால் ஏகதே₃ஶாந்வயம் என்னும் தோ₃ஷம் வரும். வேறுவழியில்லாமல் போனால்தான் ஏகதே₃ஶாந்வயத்தைக் கொள்வது வழக்கம். பற்பல காரியங்களிலும் ஈடுபட்டிருக்கும் அதி₄காரி புருஷர்களான தே₃வர்கள் எம்பெருமான் திருமேனியை நித்யத₃ர்ஶனம் செய்யவிரும்புகிறார்கள் என்று கூறுவதும் பொருந்ாது. ஆகையால் நித்ய ஶப்₃த₃த்தைக் காங்க்ஷா ஶப்₃த₃த்தோடு கூட்டி, எம்பெருமானுடைய திருமேனியைக் காண்பதில் தே₃வர்கள் எப்போதும் விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்று பொருள்கொள்வதே பொருத்தமாகும். ஆனால் இவர்கள் கண்டதில்லை என்பது இதிலிருந்து தேறுகிறது. "பெண்ணுலாம் சடையினானும் பிரமனும் உன்னைக்காண்பான், எண்ணிலா ஊழி

॥ भा ॥ कुत इत्यत्राह—

नाहं वेदैर्न तपसा न दानेन न चेज्यया।
शक्य एवंविधो द्रष्टुं दृष्टवानसि मां यथा ॥ ५३ ॥
भक्त्या त्वनन्यया शक्य अहमेवंविधोऽर्जुन।
ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परन्तप ॥ ५४ ॥

53. **நாஹம் வேதை₃ர்ந தபஸா ந தா₃நேந ந சேஜ்யயா ।**
ஶக்ய ஏவம்விதோ₄ த்₃ரஷ்டும் த்₃ருஷ்டவாநஸி மாம் யதா₂॥
54. **ப₄க்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோ₄ऽர்ஜுந।**
ஜ்ஞாதும் த்₃ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப॥

பரந்தப! அர்ஜுந! — எதிரிகளைத் தவிக்கச்செய்யும் அர்ஜுனனே! **மாம் யதா₂ த்₃ருஷ்டவாந் அஸி**—(நீ) என்னை எப்படிக் கண்டிருக்கிருயோ, **ஏவம்வித₄:**—அவ்வண்ணம் உள்ளபடி, **அஹம**—நான், **வேதை₃: த்₃ரஷ்டும் ந ஶக்ய:**— வேத₃ங்களைக்கொண்டும் காணமுடியாதவன்; **தபஸா த்₃ரஷ்டும் ந ஶக்ய:**—தவத்தைக் கொண்டும் காணமுடியாதவன், **தா₃நேந த்₃ரஷ்டும் ந ஶக்ய:**—தா₃னத்தைக் கொண்டும் காணமுடியாதவன், **இஜ்யயா ச த்₃ரஷ்டும் ந ஶக்ய:** — யாக₃த்தைக் கொண்டும் காணமுடியாதவன், **அஹம்**—நான், **அநந்யயா ப₄க்த்யா து**—ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்தியாலேயே, **ஏவம்வித₄:** — இவ்வண்ணமாக, **தத்த்வேந**—உள்ளபடி, **ஜ்ஞாதும்**—(ஶாஸ்த்ரங்களால்) அறிவதற்கும், **த்₃ரஷ்டும் ச**—காண்பதற்கும், **ப்ரவேஷ்டும் ச**— அடைவதற்கும், **ஶக்ய:**—கூடியவன்.

ஊழி தவஞ்செய்தார் வெள்கிநிற்ப" [திருமாலை 44] என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்தார். மஹாபா₄ரதத்திலும். "ந ஸ ஶக்ய: த்வயா த்₃ரஷ்டும் மயாऽந்யைர்வாபி ஸத்தம। ஸர்வேஷாம் ஸாக்ஷிபூ₄தோऽஸௌ ந க்₃ராஹ்ய: கேநசித் க்வசித்॥" [உருத்திரனே! உன்னாலும் (பிரமனுை) என்னாலும் மற்றவர்களாலும் அந்தப் பரமபுருஷன் காணமுடியாதவன். அனைவர்க்கும் அவன் ஸாக்ஷியாய் (காண்பவனுய்) இருப்பவன். எவனாலும் எதனாலும் (அளவிட்டு) அறியமுடியாதவன்.] என்று பிரமன் உருத்திரனைப் பார்த்துக் கூறினனன்ருே. 52.

54. வேததவந் தானத்தான் மிக்கசீர் யாகத்தால்
மீதிங்கிவ் வண்ண மிகமேவிப்—போதத்துக்
காணலுற லாகேனுன் கண்டென்னை நீபற்ற
நீணிலத்துக் கேற்க நிகழ்ந்து.

நீணிலத்துக்கு—நீண்ட இவ்வுலகிற்கு (வந்திருக்கும்), **என்னைப்பற்ற நிகழ்ந்து நீ கண்டு ஏற்க**—என்னைப் பற்றுவதற்காக இப்போது நீ கண்டதுபோலே, **நான்**—நான், **வேத தவம் தானத்தால்**—வேத₃த்தைக்கொண்டும், தவத்தைக் கொண்டும், தா₃னத்தைக்கொண்டும், **மிக்க சீர் யாகத்தால்**—மிகச் சிறப்புடைய வேள்வியைக்கொண்டும், **இங்கு**—இவ்வுலகில், **இவ்வண்ணம்**—இவ்வண்ணமாக, **மிக மேவி**—மிகப் பொருந்தி, **போதத்து**—அறிவினால், **மீது காணலுறல் ஆகேன்**—நன்ருகக் காணமுடியாதவன்.

55. அத்தியா தேது மனன்னியமா யென்னமர்ந்த
பத்தியா லாவன் பரந்தபனே!—யித்திறத்தா
லாங்குணர்ந்து கண்டே யடைதற் கருகனே
பாங்குணர்ந்து மெய்யே பயின்று.

பரந்தபனே!—எதிரிகளைத் தவிக்கச்செய்யும் அர்ஜுநு! **ஏதும் அத்தியாது**—வேறு எப்பலனையும் விரும்பாமையால், **அனன்னியமாய்**-அனன்யம் என்னப்படுவதாய், **என் அமர்ந்த**-என் விஷயமான, **பத்தியால்**—ப₄க்தியாலே, **இத்திறத்தால்**—இவ்வண்ணமாக, **பாங்கு உணர்ந்து**—உள்ளபடி உணர்ந்து, **மெய்யே பயின்று**—பொய் கலவாமல் பழகி, **ஆங்கு உணர்ந்து**—சாத்திரத்தால் அறிந்து; **கண்டே**—நேரில் கண்டு, **அடைதற்கு அருகனே ஆவன்**—அடைவதற்குத் தக்கவனுவேன்.

53,54. இவ்விரு ஸ்லோகங்களாலும் தான் வேத₃ங்கள், தவம், தா₃னம், யாக₃ம் முதலானவற்ருல் காண்பரியன் என்றும், அநந்ய ப₄க்தியினுலேயே உள்ளபடி அறியவும் காணவும் அடையவும் தக்கவன் என்றும் கூறுகிருன். 48-வது ஸ்லோகத்தில் கூறியிருப்பதோடு, இங்கு 53-வது ஸ்லோகத்தில் கூறியிருப்பது புநருக்தி (கூறியது கூறல்) என்னும் தோ₃ஷத்தின்பாற்படுகிறதே

।। भा ।। वेदैरध्यापनप्रवचनाध्ययनश्रवणजपविषयैर्यागदानहोमतपोभिश्च, मद्भक्तिविरहितैः केवलैः यथावदवस्थितोऽहं द्रष्टुमशक्यः। अनन्यया

எனில்: முந்தியதான 52-வது ஶ்லோகத்துக்கு இந்த 53-வதுஶ்லோகம் விவரணமாகையாலே புநருக்திதோ₃ஷம் இல்லை என்று கண்டுகொள்வது. அதாவது—முன் ஶ்லோகத்தில் தே₃வர்களும் தன் திருமேனியைக் காண முடியாது என்று கூறினன்; அதற்குக் காரணம் தான் வேத₃தா₃ன தவயாக₃ ஹோமாதி₃களால் காணமுடியாதவனுயிருக்கையும், அநந்ய ப₄க்தி ஒன்றினலேயே காணக்கூடியவனுயிருக்கையுமேயாகும் என்று கூறி, இவ்விரு ஶ்லோகங்களாலும் முன் ஶ்லோகத்தை விளக்குகையால் 48, 53 ஶ்லோகங்களிடையே புநருக்தியில்லை என்று கருத்து. (மாம் யதா₂ த்₃ருஷ்டவாந் அஸி ஏவம்வித₄: அஹம்) நீ என்னை எப்படி உள்ளபடி கண்டிருக்கிருயோ அவ்வண்ணம் உள்ளபடியிருக்கும் நான். (வேதை₃: த்₃ரஷ்டும் ந ஶக்ய:) வேத₃ங்களைக்கொண்டு காண்பதற்கு இயலாதவன். வேத₃ஸ்வரூபத்தைக்கொண்டு எம்பெருமானைக் காண்பதற்கு இடமே இல்லையாதலால் "வேதை₃:" என்பதற்கு ஓதுவித்தல், பொருள் விளக்குதல், ஓதுதல், கேட்டல், ஜபித்தல் இவற்றின்மூலம் வேத₃ங்களைக்கொண்டு அறியமுடியாதவன் என்று கருத்துக்கொள்ளவேண்டும். (தபஸா த்₃ரஷ்டும் ந ஶக்ய:) தவத்தைக் கொண்டும் காண இயலாதவன். (தா₃நேந த்₃ரஷ்டும் ந ஶக்ய:) தா₃னத்தைக்கொண்டும் காண இயலாதவன். (இஜ்யயா ச த்₃ரஷ்டும் ந ஶக்ய:) வேள்வியைக்கொண்டும் காண இயலாதவன். இங்கு யாக₃தா₃னங்களைச் சொன்னது 'யாக₃தா₃ன ஹோமங்கள்' என்று அவற்றோடு சேர்த்தே எடுக்கப்படும் ஹோமத்துக்கு உபலக்ஷணம். "தமேதம் வேதா₃நுவசநேந ப்₃ராஹ்மணா விவிதி₃ஷந்தி யஜ்ஞேந தா₃நேந தபஸா(அ)நாஶகேந" [ப்₃ருஹ 6.4-22] [அத்தகைய இந்தப் பரமாத்மாவை வேதமோதுதலாலும், யஜ்ஞத்தாலும், தா₃னத்தாலும், உண்ணுவிரதமாகிற தவத்தாலும் அறியவிரும்புகின்றனர்] என்னும் வேத₃வாக்யத்தில் வேதா₃த்₄யயன யாக₃தா₃ன தபஸ்ஸுக்கள் ப₄க்தியை விளைப்பதன்மூலம் எம்பெருமானை அடைய உதவுகின்றன என்று கூறியிருப்பதோடு முரண்படாமைக்காக இங்கு ப₄க்தியற்ற கேவல வேதா₃த்₄யயன யாக₃ தா₃ந ஹோம தபஸ்ஸுக்களாலே அடையமுடியாதவன் என்று சொல்லுவதாகக் கொள்ளவேண்டும். அடுத்த ஶ்லோகத்தில் ப₄க்தியாலேயே அடையத்தக்கவன் என்று கூறுகையாலும் இங்கு ப₄க்தியற்ற யாகா₃தி₃களாலே அடையமுடியாதவன் எனப் பொருள்கொள்வதே பொருந்தும். (ஏவம்வித₄: அஹம்) எம்பெருமானை மனிதன் என்று நினைக்கும் மயக்கத்துக்கு

तु भक्त्या तत्त्वतश्शास्त्रैर्ज्ञातुं, तत्त्वतस्साक्षात्कर्तुं, तत्त्वतः प्रवेष्टुं च शक्यः।

இடமில்லாமல் அப்ராக்ருதனை உள்ளபடி உணர்கையைச் சொல்லு கிறது. இனி இரண்டாவது ஶ்லோகத்தாலே தன்னைக்காண்பது மாத்திரமல்லாமல் அதற்குமுன் ஏற்படும் ஜ்ஞாநமும், அதற்குப்பின் ஏற்படும் ப்ராப்தியும் அநந்யப4க்தியினாலேயே உண்டாகும் என்று காட்டுகிறான். (ஏவம்வித4: அஹம்) இத்தகைய நான். (அநந்யயா ப4க்த்யா து தத்த்வேந ஜ்ஞாதும் ஶக்ய:) ஸ்வயம்ப்ரயோஜன ப4க்தியாலேயே சாஸ்திரங்கொண்டு உள்ளபடி அறியக்கூடியவன். **"மாயாம் ந ஸேவே ப4த்3ரம் தே ந வ்ருதா2 த4ர்மமாசரே | ஶுத்3த4பா4வம் க3தோ ப4க்த்யா ஶாஸ்த்ராத்3வேத்3மி ஜநார்த்த3நம் ||"** [ப4ாரத உத்3யோக3 68-5] [நான் வஞ்சனையைக் கடைப்பிடிப்பவன் அல்லேன். உனக்கு மங்க3ளமுண்டாகட்டும்; ஆட3ம்ப3ரமான த4ர்மங்களையும் நான் பின் பற்றுவதில்லை. பரிஶுத்3த4மான மனோபா4வத்தையுடையவனான நான் ப4க்தியினாலே ஶாஸ்த்ரங்கொண்டு ஜநார்த்த3னனை அறிகிறேன்] என்று த்4ருதராஷ்ட்ரனைக் குறித்து ஸஞ்ஜயன் சொன்னானன்றோ. (அநந்யயா ப4க்த்யா து தத்த்வேந த்3ரஷ்டும் ஶக்ய:) ஸ்வயம் ப்ரயோஜனப4க்தியினாலேயே உள்ளபடி காணக்கூடியவன். (அநந்யயா ப4க்த்யா து தத்த்வேந ப்ரவேஷ்டும் ச ஶக்ய:) ஸ்வயம் ப்ரயோஜன ப4க்தியினாலேயே உள்ளபடி அடையவும் கூடியவன். முதல் ஶ்லோகத்தில் சொன்ன த3ர்ஶனமாகிற ஸாக்ஷாத்காரத்துக்கு மாத்திரமல்லாமல் அதற்குமுன் ஏற்படும் ஶாஸ்த்ரஜ்ஞானத்துக்கும், அதற்குப்பின் ஏற்படும் ப்ராப்திக்குங்கூட ப4க்தி அவஶ்யம் வேண்டும் என்று காட்டுகிறான். மேலே மேலே விளையும் இந்த ஜ்ஞான த3ர்ஶன ப்ராப்திகளுக்கு ப4க்தியொன்றே எப்படிக் காரணமாகமுடியும்? எனில்: மேலே மேலே முதிர்ந்த ப4க்தியின் நிலைகள் இவற்றுக்கு முறையே காரணமாகக் கூடுமாகையாலே குறையில்லை. "முற்பிறப்பிற் செய்த புண்யத்தால் ஏற்படும் ஸாத்விகஜன ஸஹவாஸத்தாலுண்டாவதாய், ப4க3வத்3விஷயத்தை உள்ளபடி கேட்பதற்குறுப்பான சிறிது ஆநுகூல்யமாயிருக்கும் ப4க்தியின் தொடக்கநிலையே ஶாஸ்த்ர ஜ்ஞானத்துக்குத் துணையாகிறது. எம்பெருமானைக் காணவேண்டும் என்னும் உத்கடமான விருப்பத்தையுடைய பரப4க்தி ஸாக்ஷாத்காரத்துக்குக் காரணமாகிறது. ஸாக்ஷாத்கரித்த பின் பரிபூர்ணாநுப4வத்தில் அபி4நிவேஶமாய் (பேராவலாய்) இருக்கும் பரமப4க்தி ப்ராப்திக்குக் காரணமாகிறது" என்று தாத்பர்ய சந்த்3ரிகை. இங்கு அநந்யப4க்தி என்றது—வேறு பயன் ஏதும் கருதாத ஸ்வயம்ப்ரயோஜன ப4க்தி என்றே பொருள்படும்.

ஜீவப்$_3$ரஹ்மைக்யாநுஸந்த$_4$ானத்தைச் சிலர் அநந்யஶப்$_3$த$_3$த்துக்குப் பொருளாகக் கூறியது கீ$_3$தாஸ்லோகங்கள் முழுவதற்கும் பொருந்தாது. ப்ரத்யக்ஷம் முதலான பிரமாணங்களோடும் முரண்படும். "தத்த்வேந" என்று ஜ்ஞான த$_3$ர்ஶந ப்ராப்திகளுக்கு இடையேயிட்டது மத்$_4$யமணி ந்யாயத்தாலே மூன்றிலும் அந்வயிக்கும். மூன்றுக்கும் அவஶ்யமானது மாகும். "தத்த்வேந ப்ரவேஷ்டும்" என்று பரிபூர்ணப்ராப்தியாகிற ஸாயுஜ்யத்தைச் சொல்லுகிறது. மோக்ஷத்திலும் கைவல்யநிஷ்ட$_2$னுக்கு ஸாலோக்யமும் ஸ்வாத்மாநுப$_4$வமும், ஸாத$_4$நப$_4$க்திநிஷ்ட$_2$னுக்கு ஸாமீப்யமும் ஸ்வார்த்த$_2$ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வமும், ஸ்வக$_3$தஸ்வீகார நிஷ்ட$_2$னுக்கு ஸாரூப்யமும் ஸ்வார்த்த$_2$ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வகைங்கர்யங்களும், பரக$_3$தஸ்வீகாரநிஷ்ட$_2$னான ஸ்வயம்ப்ரயோஜன ப$_4$க்திநிஷ்ட$_2$னுக்கு ஸாயுஜ்யமும் பரார்த்த$_2$ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வகைங்கர்யங்களும் ஸ்ரீவசனபூ$_4$ஷணாதி$_3$களிலே ப$_2$லமாகச் சொல்லப்படுகையாலே இங்கு அந்த ஸாயுஜ்யத்தை "தத்த்வேந ப்ரவேஷ்டும்" என்று கூறுகிறான். தே$_3$ஶிகன் இதை ஒப்புக்கொள்ளாமையால் "தத்த்வேந ப்ரவேஷ்டும்—என்பதால் வ்யூஹவிப$_4$வாதி$_3$மாத்ர ப்ராப்தியை வேறுபடுத்துகிறது" என்று கொண்டார். "லோகேஷு விஷ்ணோ: நிவஸந்தி கேசித், ஸமீபம் ருச்ச$_2$ந்தி ச கேசித$_3$ந்யே। அந்யே து ருபம் ஸத்$_3$ருஶம் ப$_4$ஜந்தே, ஸாயுஜ்யமந்யே ஸ து மோக்ஷ உக்த:॥" [விஷ்ணுலோகங்களில் சிலர் வஸிக்கின்றார்கள்; (இது ஸாலோக்யம்), சிலர் அவனுக்கு ஸமீபத்தில் வாழ்கிறார்கள்; (இது ஸாமீப்யம்). மற்றும் சிலர் எம்பெருமானோடொத்த திருமேனியை அடைகின்றனர்; (இது ஸாரூப்யம்). சிலர் அவன் திருவுள்ளத்தையொட்டி அவனுகந்த கைங்கர்யம் செய்கின்றனர்; (இது ஸாயுஜ்யம்). இதுவே முக்$_2$யமோக்ஷம்.] என்னும் பிரமாணமும் தே$_3$ஶிகனால் எடுக்கப்பட்டுள்ளது. கீ$_3$தை (6-42) வ்யாக்$_2$யானத்தில் யாத$_3$வப்ரகாஶரால் "இத$_3$மல்பீயஸீம் யோக$_3$ஸித்$_3$தி$_4$ம் க$_3$தஸ்ய ம்ருதஸ்ய ப$_2$லம்; யதி$_3$ ப்ரத$_2$மாம் யோக$_3$ஸித்$_3$தி$_4$ம் க$_3$தோ ம்ரியதே, த்யஜதி வா யோக$_3$ம் ஶ்வேதத்$_3$வீபே ஜாயதே; ப$_4$க$_3$வத் ஸாலோக்யம் வா யாதி; யதி$_3$ ததோऽப்யதி$_4$காம் யோக$_3$ஸித்$_3$தி$_4$ம் க$_3$தோ ம்ரியதே,-விஷ்ணு பார்ஷதே$_3$ா ப$_4$வதி; யதி$_3$ ததோப்யதி$_4$காம், பார்ஷதே$_3$ஶ்வரோ ப$_4$வதி; யதி$_3$ ததோப்யதி$_4$காம், த்$_3$வாரபாலோ ப$_4$வதி; யதி$_3$ ததோப்யதி$_4$காம், ப$_4$க$_3$வதோऽங்க$_3$ஸம்வாஹகோ ப$_4$வதி; யதி$_3$ ததோப்யதி$_4$காம், மந்த்ரிஸ்த$_3$ாநீய: ப்ருத$_2$கை$_3$ஶ்வர்யயுக்தோ ப$_4$வதி; யதி$_3$ பூர்ணாம் யோக$_3$ஸித்$_3$தி$_4$ம் க$_3$தோ ம்ரியதே, ப$_4$க$_3$வத்ஸாயுஜ்யம் க$_3$தோ முக்த: பரமைஶ்வர்யயுக்தோ ப$_4$வதி - இதி வைஷ்ணவேஷு யோக$_3$ஶாஸ்த்ரேஷு மர்யாத$_3$ா; ததே$_3$தத் ஸர்வம் இஹ ஸூசிதம் ப$_4$க$_3$வதா-

तथा च श्रुतिः—* नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन। यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम्॥ (क. २. २३) इति॥५३॥५४॥

அத₂வா யோகி₃நாம் (கீ₃தா 6-42) இத்யாதி₃நேதி'' [இது மிகக் குறைந்த யோக₃ஸித்₃தி₄யையடைந்து இறந்தவன் அடையும் பயன்; (இதற்கு மேற்பட்ட) யோக₃ஸித்₃தி₄யின் முதல்நிலையையடைந்து இறந்தவனோ, யோக₃த்தைவிட்டவனோ ஶ்வேதத்₃வீபத்தில் பிறக்கிறான்; எம்பெருமானோடு ஸாலோக்யத்தையாவது அடைகிறான்; அதற்கு மேற்பட்ட யோக₃ஸித்₃தி₄யையடைந்து இறந்தவன், விஷ்ணு கிங்கரனாகிறான்; அதற்கு மேற்பட்ட யோக₃ஸித்₃தி₄யையடைந்து இறந்தவன், விஷ்ணு கிங்கரர் தலைவனாகிறான். அதற்கு மேற்பட்ட யோக₃ஸித்₃தி₄யையடைந்து இறந்தவன் த்₃வாரபாலனாகிறான்; அதற்கு மேற்பட்ட யோக₃ஸித்₃தி₄யையடைந்து இறந்தவன், ப₄க₃வானின் திருவடியைப் பிடிப்பவனாகிறான்; அதற்கு மேற்பட்ட யோக₃ஸித்₃தி₄யையடைந்து இறந்தவன், மந்திரிஸ்த₂ானத்தில் இருப்பவனாய், தனக்கெனச் செல்வங்களையுடையவனாகிறான். நிறைந்த யோக₃ஸித்₃தி₄யையடைந்து இறந்தவன்,எம்பெருமானோடு ஸாயுஜ்யம் பெற்று மோக்ஷமடைந்தவனாய் மேலான செல்வத்தையடைகிறான்—என்று வைஷ்ணவயோக₃ஶாஸ்த்ரங்களில் ப₂லனில் பே₄த₃ங்கள் கூறப்பட்டுள்ளன. இவையனைத்தையும் எம்பெருமான் இந்த ஶ்லோகத்தில் உணர்த்துகிறான்] என்று தொடங்கிக் கூறப்பட்டுள்ளதையும் தே₃ஶிகன் எடுத்துக் காட்டியுள்ளார். இங்கு ஜ்ஞாந த₃ர்ஶந ப்ராப்திகளைப்பற்றிக் கூறப்பட்டுள்ள அர்த்த₂ங்களைத் திருவுள்ளம்பற்றியே ஆளவந்தார் கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் ''ஏகாந்த₃ஶே ஸ்வயாத₂ாத்ம்ய ஸாக்ஷாத்காராவலோகநம்। த₃த்தமுக்தம் விதி₃ப்ராப்த்யோ: ப₄க்த்யேகோபாயதா தத₂ா ॥'' [கீ-ஸம் 15] [தன்னைப்பற்றிய உண்மையான காட்சிக்குக் காரணமான தி₃வ்யமான கண்ணைக் கண்ணன் அர்ஜுனனுக்குக் கொடுத்ததும் ஜ்ஞாநத₃ர்ஶநப்ராப்திகள் ப₄க்தியையே காரணமாகக் கொண்டவை என்பதும் பதினோராமத்₄யாயத்தில் கூறப்பட்டது] என்று அருளிச்செய்தார். இவ்விஷயத்தையே ''நாயமாத்மா ப்ரவசநேந லப்₄ய: ந மேத₄யா ந ப₃ஹுநா ஶ்ருதேந। யமேவைஷ வ்ருணுதே தேந லப்₄ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்॥'' [கட₂ 2-23] [இந்தப் பரமாத்மா (ப₄க்தியில்லாத) ஶ்ரவணமநநத்₄யானங்

मत्कर्मकृन्मत्परमो मद्भक्तस्सङ्गवर्जितः ।
निर्वैरस्सर्वभूतेषु यस्स मामेति पाण्डव ॥ ५५ ॥

॥ इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु विश्वरूपसंदर्शनयोगो नाम एकादशोऽध्यायः॥११॥

55. மத்கர்மக்ருந்மத்பரமோ மத்₃ப₄க்தஸ்ஸங்க₃வர்ஜிதঃ।
நிர்வைரஸ்ஸர்வபூ₄தேஷு யஸ்ஸ மாமேதி பாண்ட₃வ॥

இதி ஸ்ரீமத்₃ப₄க₃வத்₃கீ₃தாஸு உபநிஷத்ஸு
விஶ்வரூபஸந்த₃ர்ஶநயோகோ₃ நாம ஏகாத₃ஶோऽத்₄யாய:॥

களாலே அடையத்தக்கவனல்லன் (ப₄க்தியுடைய) எவனை இந்தப் பரமாத்மா வரிக்கிறானோ அவனுக்கே இவன் தனது ஸ்வரூபரூபங்களைக் காட்டுகிறான்] என்னும் உபநிஷத்₃வாக்யம் தெளிவாகச் சொல்லிற்று. எம்பெருமான் வரிப்பதற்குக் காரணமான கு₃ண விஶேஷம் ப₄க்தியே என்பது அர்த்த₂ ஸ்வபா₄வத்தாலும் (பொருளமைதியாலும்) இதிஹாஸபுராணங்களின் ப₃லத்தாலும் ஸித்₃தி₄க்கிறது. இந்த ப₄க்தி ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்தியாகவுமாகலாம். உபாஸனரூபமான ப₄க்தியாகவும் ஆகலாம். ஸ்வயம்ப்ரயோஜன ப₄க்தியாகக் கொள்ளும்போது இவன் பரக₃தஸ்வீகாரநிஷ்ட₂னான முக்₂யப்ரபன்னனே ஆகிறானாகையாலேயே "உபபத்தேஶ்ச" [ப்₃ர-ஸூ 3-2-34] என்னும் ஸூத்ரத்தின் பா₄ஷ்யத்தில் 'எம்பெருமானே உபாயம்' என்னும் அர்த்த₂த்துக்கு ப்ரமாணமாக இந்த உபநிஷத்₃ வாக்யத்தை எடுத்தார். இந்த ஶ்லோகபா₄ஷ்யத்திலும் ஜிஜ்ஞாஸாதி₄கரணத் தொடக்கத்திலும் இந்த ஶ்ருத்யர்த்த₂த்தை ப₄க்திபரமாக விவரித்திருப்பது — அதி₄காரிகளுக்கு அநுகு₃ணமாக ஸ்வயம் ப்ரயோஜன ப₄க்தியைச் சொல்லுவதாகவோ அல்லது உபாஸனப₄க்தியைச் சொல்லுவதாகவோ கொள்ளத்தக்கது. 'யம்' என்கிற ஶப்₃த₃த்தால் இவ்வர்த்த₂ம் காட்டப்பட்டது. 'தநு' ஶப்₃த₃ம் விக்₃ரஹத்தையோ ஸ்வரூபத்தையோ குறிக்கும். ஒன்றைக் குறிக்கும்போது மற்றொன்றுக்கு உபலக்ஷணமாகும். (பரந்தப) உள்ளிந்த்₃ரியங்களாகிற எதிரிகளை வென்றிருக்கும் நீ இத்தகைய ப₄க்தியைப் பெறவேண்டுமென்று கருத்து. ஆக இவ்விரு ஶ்லோகங்களாலும் தன்னைப்பற்றிய ஜ்ஞானத₃ர்ஶநப்ராப்திகளை ப₄க்தியொன்றாலேயே அடையமுடியும் என்றும், யாக₃ம், தா₃நம், ஹோமம், தவம் முதலான எதனாலும் அடையமுடியாது என்றும் கூறிற்றாயிற்று. 53,54.

பாண்ட$_3$வ!—பாண்டு புத்திரனே!, **மத்கர்மக்ருத்**—என்னுடைய ஆராத$_4$னமாகக் கர்மங்களைச் செய்பவனாய், **மத்பரம:**—என்னையே தன் செயல்களுக்கு மேலான உத்$_3$தே$_3$ஶ்யமாகக் கொண்டவனாய், **மத்$_3$ப$_4$க்த:**—என்னிடம் ப$_4$க்தியில்லாமல் உயிர்த$_4$ரிக்கமுடியாமையாலே என்னையே பயனாகக் கொண்டவனாய் அவற்றைச் செய்பவனாய், **ஸங்க$_3$வர்ஜித:** — மற்ற பயன்களைப் பொருது விலக்கியவனாய், **ஸர்வபூ$_4$தேஷு நிர்வைர: ய:**—(காரணமில்லாமையாலே) எல்லா ஜீவராசிகளிடமும் விரோத$_4$மற்றவனாயிருப்பவன் எவனோ, **ஸ:**—அவன், **மாம் ஏதி**—என்னை உள்ளபடி அடைகிறான்.

---

56. என்பாற் றொழில்செய்தே யெற்பரனா யென்னலனாய்
வன்பாருஞ் சங்கமற வைரந்தான்—றன்பாலற்
றெவ்வகைய பூதத்து மேலுமவன் பாண்டவனே
யிவ்வகைவந் தென்னடையு மிங்கு.

பாண்டவனே!—பாண்டு புத்திரனே! **என்பால் தொழில் செய்தே** — என்னுடைய ஆராத$_4$னமாகக் கர்மங்களைச் செய்பவனாய், **எற்பரனாய்**—என்னையே தன் செயல்களுக்கு மேலான உத்$_3$தே$_3$ஶ்யமாகக் கொண்டவனாய், **என்னலனாய்**-என்னிடம் ப$_4$க்தியில்லாமல் உயிர்த$_4$ரிக்கமாட்டாமையாலே என்னையே பயனாகக் கொண்டவனாய் அவற்றைச் செய்பவனாய், **வன்பு ஆரும் சங்கமற**—மற்ற பயன்களில் செல்லும் பற்றைப் பொருது விலக்கியவனாய், **எவ்வகைய பூதத்தும் வைரம் தான் தன்பாலற்று**—(காரணமில்லாமை யாலே) எல்லா ஜீவராசிகளிடமும் விரோத$_4$த்தைத் தன்னிடம் கொள்ளாதவனாய், **ஏலும் அவன்**—வாழ்கின்றவன், **இங்கு**—இவ்வுலகத்தில், **இவ்வகை வந்து**—இவ்வண்ணமாக என்னிடம் ஈடுபட்டு, **என் அடையும்**—என்னை அடைவான்.

---

55. **''நாஹம் வேதை$_3$:''** [53] என்னும் ஶ்லோகத்தில் கர்மங்களால் தன்னைக் காணமுடியாது என்று கூறியதற்கும், **''வேதா$_3$நுவசநேந.........விவிதி$_3$ஷந்தி''** [ப்$_3$ருஹ 6-4-22] என்னும் உபநிஷத்$_3$ வாக்யத்தில் கர்மங்களாலே தன்னையறியமுடியும் என்று கூறியதற்கும்

॥भा॥ वेदाध्ययनादीनि सर्वाणि कर्माणि मदाराधनरूपाणीति यः करोति, स मत्कर्मकृत्। मत्परमः—सर्वेषामारम्भाणामहमेव परमोद्देश्यो यस्य स मत्परमः। मद्भक्तः—अत्यर्थमत्प्रियत्वेन मत्कीर्तन-स्तुतिध्यानार्चनप्रणामादिभिर्विना आत्मधारणमलभमानो मदेकप्रयोजन-

---

விரோத₄த்தைப் பரிஹரித்துக்கொண்டு "ப₄க்த்யா த்வநந்யயா" [54] என்னும் ஶ்லோகத்தில் தன்னையடைவதற்குக் காரணமாகக் கூறப்பட்ட ப₄க்தியின் நிலையை விளக்குகிறன். (மத்கர்மக்ருத்) என்னுடைய ஆராத₄னங்களாகக் கர்மங்களைச் செய்பவனாய்; வேத₃ாத்₄யயனம், யஜ்ஞ தா₃னதபஸ்ஸுக்கள் முதலான எல்லாக்கருமங்களையும் எனக்கு ஆராத₄னமாக இவன் செய்கையாலே 'மத்கர்மக்ருத்' என்று சொல்லத் தக்கவனுகிறன் என்று கருத்து. இதனுல் "நாஹம் வேதை₃:" [53] என்று கேவலகர்மங்களை த₃ர்ஶனேபாயமன்று என்று கூறியதோடு ஶ்ருதிவிரோத₄மில்லை என்று கருத்து. எம்பெருமானைக்காண உபாயமல்லாத கருமங்களே அவனுக்கு ஆராத₄னமாகச் செய்யப் பட்டால், எம்பெருமானைக் காண்பதற்கு ஸாத₄னமாகின்றன என்றபடி. (மத்பரம:) என்னையே தன் செயல்களுக்கு மேலான உத்₃ தே₃ஶ்யமாகக் கொண்டவனாய். முற்கூறிய எல்லாச் செயல்களுக்கும் என்னையே மேலான ப₂லனுகக் கொண்டவன் என்று கருத்து. (மத்₃ ப₄க்த:) என்னிடம் ப₄க்தியில்லாமல் உயிர்த₄ரிக்க முடியாமையாலே என்னையே பயனுகக் கொண்டவனாய்க் கர்மங்களைச் செய்பவனாய்; என்னிடம் அளவுகடந்த அன்புடையவனுகையாலே, என்னை ஸங்கீர்த் தனம் செய்வது, துதிப்பது, தியானிப்பது, அர்ச்சனம் செய்வது, வணங்குவது முதலானவற்றைச் செய்யாமல் தன் உயிர் த₄ரிக்க மாட்டாதவனுகையாலே என்னையே பயனுகக்கொண்டவனாய் எப் போதும் அக்கர்மங்களைச் செய்பவனே என் ப₄க்தன் என்று கருத்து. "ஸததம் கீர்த்தயந்த:.........நமஸ்யந்த: ச" [9-14] "மச்சித்தா மத்₃ க₃தப்ராணு: போ₃த₄யந்த: பரஸ்பரம்। கத₂யந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச॥" [10-9] முதலானவிடங்களில் சொல்லப்பட்ட ப₄க்தர்களின் இலக்கணங்கள் இங்கு அனுஸந்தி₄க்கத்தக்கவை. மற்ற வர்க்கு த₄ாரகபோஷகபோ₄க்₃யங்கள் ப்ராக்ருதங்களான அன்ன பானுதி₃களாயிருக்க, "உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" [திருவாய் 6-7-1] என்று ஆழ்வார் அனுஸந்தி₄த்தது இங்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளத்தக்கது. இனி இத்தகைய ப₄க்தியின் எல்லைநிலத்தையடையும்போது மற்ற விஷயங்களில் பற்று இவனுக்குத் தன்னடையே விட்டுப்போகும்

तया यस्सततं तानि करोति, स मद्भक्तः। सङ्गवर्जितः—मदेक-प्रियत्वेनेतरसङ्गमसहमानः। निर्वैरस्सर्वभूतेषु—मत्संश्लेषवियोगैकसुख-दुःखस्वभावत्वात्स्वदुःखस्य स्वापराधनिमित्तत्वानुसंधानाच्च, सर्वभूतानां परमपुरुषपरतन्त्रत्वानुसंधानाच्च सर्वभूतेषु वैरनिमित्ताभावात्तेषु निर्वैरः।

என்கிறான்—(ஸங்க$_3$வர்ஜித:) என்னையே இனியவனாக நினைக்கையால் மற்ற பயன்களைப்பொருது விலக்கியவன். "ஸ்தி$_2$தே அரவிந்தே$_3$ மகரந்த$_3$நிர்ப$_4$ரே மது$_4$வ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே" [ஸ்தோத்ர ரத்னம் 27] [தேன் நிறைந்த தாமரை இருக்கும்போது தேனீ கள்ளிப் பூவைக் கண்ணாலும் காணாதன்றோ] என்றாரன்றோ ஆளவந்தார். "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்ட சதிர்கண்டு ....ஐங்கருவி கண்ட இன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்தேன்" [திருவாய் 4-9-10] என்கிறபடியே த$_3$ாஹங்கொண்டு அமுதநீர்ப் பெருக்கைக் குடிப்பவனுக்குத் தண்ணீர்த் துரும்புபோலே மற்ற பயன்கள் இருக்கையாலே, அவை தன்னடையே இவனை விட்டுப் போம்படி அவற்றை வெறுப்புடன் விலக்கியிருப்பவன் என்று கருத்து. (ஸர்வபூ$_4$தேஷு நிர்வைர:) ஶாஸ்த்ரம் நிஷேதி$_4$க்கிறது என்பதற்காக வல்லாமல் எவரிடமும் விரோத$_4$மேயில்லாமையாலே எல்லா ஜீவராசிகளிடமும் விரோத$_4$மற்றவன். எம்பெருமானோடு சேர்வதே இவனுக்கு இன்பம். எம்பெருமானைவிட்டுப் பிரிவதே இவனுக்குத் துன்பம். இந்த இன்பதுன்பங்கள் எம்பெருமானால் வருகின்றவை. ப்ராக்ருதமான இன்ப துன்பங்களோவெனில் தான் செய்த புண்யபாபங்கள் காரணமாக எம்பெருமான் சிலரை ஏவிவிட்டு இவனுக்குத் துன்பத்தையோ இன்பத்தையோ அளிப்பதாலோ, போக்குவதாலோ வருகின்றன. பரமபுருஷனுக்குப் பரதந்த்ரமான ஜீவராசிகளால் வரும் இன்பத்தடைகள் துன்பங்கள் குறித்து இக்காரணத்தாலேயே அவர்களிடம் விரோத$_4$ம் ஏற்பட இடமில்லையாகையாலே எல்லா ஜீவராசிகளிடமும் இவன் விரோத$_4$மற்றிருக்கிறான்; தன் பாபத்தால் இவை ஏற்படுகின்றன என்று அறிந்தவன் பிறரை எப்படி விரோதி$_4$யாக நினைக்கமுடியும்? எய்தவையான தன் பாபங்கள் இருக்கும்போது அம்புபோன்ற பிறரிடம் அறிவாளியானவன் கோபம் அடைவானா? தன்னைப்போலே பிறரும் விஶ்வரூபனான எம்பெருமானுடைய உருவம் என்று அனுஸந்தி$_4$த்தால் இவனுக்கு விரோத$_4$ம் எப்படி ஏற்படும்? என்று கருத்து. "ஸர்வபூ$_4$தாத்மகே தாத ஜக$_3$ந்நாதே$_2$ ஜக$_3$ந்மயே। பரமாத்மநி கே$_3$ாவிந்தே$_3$ மித்ரா மித்ர கத$_2$ா குத:॥"[வி.பு 1-19-37] [எந்தையே! எல்லா ஜீவராசிகளுக்கும் அந்தர்யாமியாயிருக்கையாலே உலகமயமாயிருப்பவனாய், உலகின்

य एवंभूतस्स मामेति — मां यथावदवस्थितं प्राप्नोति ; निरस्ताविद्याद्यशेषदोषगन्धो मदेकानुभवो भवतीत्यर्थः ॥ ५५ ॥

॥ इति श्रीभगवद्रामानुजविरचिते श्रीमद्गीताभाष्ये
एकादशोऽध्यायः ॥ ११ ॥

பகவத் கீதை வெண்பா

(பதிஞேராமத்தியாயத்தின் ஸாரத்தைக் கூறும் பாசுரம்)

அத்த னருள்கீதை யான்றபதி ஞென்ருமோத்
தொத்த வுலகனைத்து மோருடம்பா — யித்தகவு
பன்னவே தான்காட்டிப் பத்திப் பயன்வகையு
மன்னவே முற்றியதே வாய்ந்து.

வாதி$_3$கேஸரி ஜீயர் அருளிய ப$_4$க$_3$வத்$_3$கீ$_3$தை வெண்பாவில்
பதிஞேராமத்தியாயம் முற்றிற்று.

தலைவனைய், பரமாத்மாவாய் கோ$_3$விந்த$_3$ன் இருக்கும்போது நமக்கு நண்பன் என்றும் எதிரி என்றும் எப்படிப் பேசமுடியும் ?] என்று இரணியனைக்குறித்துப் பிரகலாதாழ்வான் கேட்டானன்ருே. (ய:) எவன் இவ்வண்ணமாயிருக்கிருனே. (ஸ: மாம் ஏதி) ''தத்த்வேந ப்ரவேஷ்டும்''[54] என்று சொன்ன ரீதியில் அவன் என்னை உள்ளபடி அடைகிருன்; அவித்$_3$யை (அஜ்ஞானம்), கர்மம், வாஸநை, ருசி, ப்ரக்ருதிஸம்ப$_3$ந்த$_4$ம் முதலான தோ$_3$ஷங்கள் முழுவதும் அடியோடு வாஸநையுமில்லாமல் நீங்கப்பெற்றவனுய் என்னையே அநுப$_4$விப்பவனுகிருன். ''ஸர்வம் ஹ பஶ்ய: பஶ்யதி'' [ச$_2$ாந் 7-26-2] [ஜ்ஞான விரிவுபெற்ற முக்தாத்மா எல்லாமாயிருக்கும் பரமாத்மாவையே காண்கிருன்.] ''தே ஸர்வக$_3$ம் ஸர்வத: ப்ராப்ய தீ$_4$ரா: யுக்தாத்மாந: ஸர்வமேவாऽऽவிஶந்தி'' [முண்ட$_3$கம் 3-2-5] [அறிவு விரியப்பெற்ற அந்த முக்தர்கள் ப்$_3$ரஹ்மரூபத்தோடு கூடியவர்களாய், எல்லாப் பொருள்களிலுமிருக்கும் பரமாத்மாவை எல்லா ப்ரதே$_3$ஶங்களிலும் அடைந்து எல்லாவற்றையும் அநுப$_4$விக்கிருர்கள்] என்கிறபடியே முக்தாத்மாவின் ப்$_3$ரஹ்மகு$_3$ணவிபூ$_4$த்யநுப$_4$வமனைத்தும் ப்$_3$ரஹ்மாநுப$_4$வத்திலேயே அடங்கிவிடுகிறதாகையால் இவன் ப்$_3$ரஹ்மத்தையே அநுப$_4$விக்கிருன் என்பதத்தட்டில்லை. (பாண்ட$_3$வ) பாண்டுபுத்திரனே! உன் தந்தையாகிற பாண்டு இத்தகைய ப$_4$க்தனுயிருந்ததுபோலே நீயும் ஆகவேண்டும் என்று கருத்து. 55.

கீ$_3$தார்த்த$_2$விவரணத்தில் ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி தா$_3$ஸன் இயற்றிய
பதிஞேராமத்தியாயம் நிறைவுபெற்றது.

அத்தன் அருள் கீதை ஆன்ற பதினென்றும் ஓத்து— ஸ்வாமியான கண்ணன் அருளிச்செய்த சிறப்புமிக்க பதினென்ருமத்தியாயம், **ஒத்த உலகு அனைத்தும் ஓர் உடம்பாம் இத்தகவு பன்னவே தான் காட்டி** — (ஸர்வேஶ்வரனுக்கு ப்ரகாரமாயிருக்கும் விஷயத்தில்) ஒத்திருக்கும் எல்லா உலகமும் எம்பெருமானுக்கு ஒரே உடம்பாயிருக்கும் இத்தன்மையை அர்ஜுனன் அநுஸந்தி₄ப்பதற்காகக் காட்டி, **பத்தி பயன் வகையும் மன்னவே ஆய்ந்து** — ப₄க்தியின் பயன்களான ஜ்ஞானத₃ர்ஶநப்ராப்திகளை நன்ருக ஆராய்ந்து, **முற்றியதே**— முடிவுற்றதே.

கீதார்த்த சங்கிரகம்
(ஸ்ரீ வேத₃ாந்ததே₃சிகர் அருளியது)
பதினேராமத்தியாயத்தின் ஸாரப்பொருள்

12. எல்லாந் தனக்குரு வாயிலங் கும்வகை தானுரைத்துச்
சொல்லா லறிந்தது சோராமற் கண்டிட வேண்டுமென்ற
வில்லாள னுக்கன்று மெய்க்கண் கொடுத்திது
வேறுமுண்டோ
நல்லார்கள் காண்பரென் றுந்நவின் ருனங்க ணுயகனே.

நங்கள் நாயகன்—நம்முடைய தலைவனுன கண்ணன், **எல்லாம்**—எல்லாப் பொருள்களும், **தனக்கு உருவாய்**— (பரம்பொருளாகிய) தனக்குச் சரீரமாய், **இலங்கும் வகை**— விளங்கும் விதத்தை, **தான் உரைத்து**—தான் உபதேசித்து, **சொல்லால் அறிந்தது** — (தன்னுடைய) உபதேசத்தால் அறிந்துகொண்ட (தன் செல்வத்)தை, **சோராமல்**—குறைவுபடாமல் (முழுவதையும்), **கண்டிட வேண்டும் என்ற**— நேரே காணவேணும் என்று ஆசைகொண்ட, **வில்லாளனுக்கு**—(சிறந்த) வில்லாளியான அர்ஜுநனுக்கு, **அன்று**— அப்பொழுதே, **மெய்க் கண் கொடுத்து** — (தன் விச்வரூபத்தை) உள்ளவாறு காணும்படியான (தெய்விகக்) கண்ணைக் கொடுத்து, **இது**—இவ்வாறு (தன்னைக் காண்பதற்கு) ஸாதநம், **வேறும் உண்டோ**—(பக்தியைத் தவிர) வேறு ஏதாவது உண்டோ? (ஒன்றுமில்லை), **நல்லார்கள்**— (பக்தியுடைய) ஞானிகள், **காண்பர் என்றும்**—(என்னைக்) காணப்பெறுவார்கள் என்றும், **நவின்ருன்**—உபதேசித்தான்.

ஆளவந்தார் அருளிய
கீதார்த்த ஸங்க்ரஹம்
[பன்னிரண்டாமத்தியாயத்தின் சுருக்கம்]

भक्तेः श्रैष्ठ्यमुपायोक्तिरशक्तस्याऽऽत्मनिष्ठता ।
तत्प्रकारास्त्वतिप्रीतिर्भक्ते द्दश उच्यते ॥ १६ ॥

கீதாஶ்லோகார்த்தச் சுருக்கம்
பதினோராமத்தியாயம்

ஶ்லோ	அர்த்தம்
1-3.	அர்ஜுனன் தனது நன்றியையும் ஆஸ்திக்யத்தையும் க்ருஷ்ணபக்தியையும் காட்டுகிறான்.
4.	விஶ்வரூபத்தைக் காட்டும்படி அர்ஜுனனுடைய பிரார்த்தனை.
5-8.	திவ்யசக்ஷுஸ்ஸை அர்ஜுனனுக்கு அளித்துத் தன் விஶ்வரூபத்தைக் கண்ணன் அவனுக்குக் காட்டுதல்.
9-13.	விஶ்வரூபவர்ணனை.
14-30.	அர்ஜுனன் விஶ்வரூபத்தின் பெருமைகளைக் கூறித் துதித்தல்.
31.	அர்ஜுனனின் கேள்வி.
32-34.	அர்ஜுனனுக்குக் கண்ணனின் பதில்.
35-46.	அர்ஜுனனின் துதியும், மன்னிப்பு வேண்டுதலும், பிரார்த்தனையும்.
47-49.	கண்ணனின் அபயப்ரதானம்.
50.	கண்ணன் இயல்வான நான்கு தோள் திருமேனியை எடுத்துக்கொண்டு அர்ஜுனனைத் தேற்றியது.
51.	அவ்வுருவைக் கண்ட அர்ஜுனன் தான் இன்புற்றுத் தன் நிலை பெற்றதைக் கூறுதல்.
52-55.	கண்ணன் அர்ஜுனனுக்கு பக்தியோகத்தின் பெருமையையும் ஶுபாஶ்ரயமாயிருக்கும் திருமேனியின் பெருமையையும் பேசுதல்.

பதினோராம் அத்தியாயத்தின் கீதாஶ்லோகார்த்தச் சுருக்கம் நிறைவுற்றது.

16. ப₄க்தே: ஶ்ரைஷ்ட்₂யமுபாயோக்திரஶக்தஸ்யாத்ம
நிஷ்ட₂தா ।
தத்ப்ரகாராஸ்த்வதிப்ரீதிர் ப₄க்தே த்₃வாத₃ஶ உச்யதே ॥

ப₄க்தே: ஶ்ரைஷ்ட்₂யம் — (ஆத்மோபாஸனத்தைக் காட்டிலும்) ப₄க₃வது₃பாஸனமாகிற ப₄க்தியின் சிறப்பும், **உபாயோக்தி:**—அந்த ப₄க்திக்கு உபாயத்தைத் தெரிவித்தலும், **அஶக்தஸ்ய** — ப₄க்தியில் ஶக்தியில்லாதவனுக்கு, **ஆத்மநிஷ்ட₂தா** — ஆத்மோபாஸனமும், **தத்ப்ரகாரா:**— கர்மயோக₃ம் முதலானவற்றுக்கு வேண்டியவைகளான கு₃ணங்களின் வகைகளும், **ப₄க்தே அதிப்ரீதி: து**—தன் ப₄க்தனிடம் மிகுந்த ப்ரீதியும், **த்₃வாத₃ஶே**—பன்னிரண்டாமத்தியாயத்தில், **உச்யதே**—கூறப்படுகிறது.

வாதி₃கேஸரி ஜீயர் அருளிய

ப₄க₃வத்₃கீ₃தை வெண்பா—அத்தியாயம் 12

ப₄க்தியோக₃ம்

அத்தியாயப் பொருளின் சுருக்கம்

பத்தி யறிவாற் கடக்கும் பலவகையு
மத்தி லுகப்பி னதிசயமு—முத்திதரும்
பண்பி னருள்கீதை பன்னிரண்டா மோத்துரைக்குந்
திண்பயிலுஞ் சொல்லாற் செறிந்து.

முத்திதரும் பண்பின் அருள் கீதை—வீடு பேற்றைத் தரும் இயல்பால் (கண்ணன்) அருளிய கீதையின், *பன்னிரண்டாமோத்து*—பன்னிரண்டாவது அத்தியாயம், *பத்தியறிவாற்கு*—ப₄க்தியோக₃த்தை அறிபவனுக்கு, *அடக்கும் பல வகையும்*—கைக்கொள்ளவேண்டிய பல கு₃ணங்களும், *அத்தில்*—அந்த ப₄க்தியோக₃த்தில், *உகப்பின் அதிசயமும்* — (எம்பெருமானுக்குள்ள) அன்பின் மிகுதியும், *திண் பயிலும் சொல்லால் செறிந்து உரைக்கும்* — உறுதியானதாய் அனைவராலும் அனுஸந்தி₄க்கத்தக்கதான சொற்களால் நன்றாகக்கூறும்.

श्रीः

अथ द्वादशोध्यायः ॥

॥ भा ॥ भक्तियोगनिष्ठानां प्राप्यभूतस्य परस्य ब्रह्मणो भगवतो नारायणस्य निरङ्कुशैश्वर्यं साक्षात्कर्तुकामायार्जुनायानवधिकातिशय-कारुण्यौदार्यसौशील्यादिगुणसागरेण सत्यसंकल्पेन भगवता स्वैश्वर्यं यथावदवस्थितं दर्शितम्; उक्तं च तत्त्वतो भगवज्ज्ञानदर्शनप्राप्ती-नामैकान्तिकात्यन्तिकभगवद्भक्त्येकलभ्यत्वम्। अनन्तरमात्मप्राप्तिसाधन-

---

ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி த$_3$ாஸன் இயற்றிய கீ$_3$தார்த்த$_2$ விவரணம்—பன்னிரண்டாம் அத்தியாயம்

முன் அத்தியாயத்தோடு ஸங்க$_3$தியும், இவ்வத்தியாயார்த்த$_2$ச் சுருக்கமும்.

முந்தின அத்தியாயத்தின் கடைசியில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ப$_4$க்தியோக$_3$த்தின் சிறப்பையும், ப$_4$க்தியோடு தொடர்புள்ள விஷயங்களையும் இவ்வத்தியாயத்தில் கூறுகிறான். எம்பெருமானுடைய விச்வரூபஸாக்ஷாத்காரம் ஏற்பட்டால்தான் பூர்ணமான உபாஸனம் செய்ய முடியுமாகையாலே ப$_4$க்தியோக$_3$நிஷ்ட$_2$ர்களுக்கு ப்ராப்யமாயிருப்பவனாய், பரப்$_3$ரஹ்மமாய், ஜ்ஞானம் முதலான கு$_3$ணங்கள் நிறைந்த ப$_4$க$_3$வானான நாராயணனுடைய தடையற்ற ஐச்வர்யத்தை நேரே காண விரும்பிய அர்ஜுனனுக்கு எல்லையற்ற மேன்மையையுடைய த$_3$யை, வண்மை, நீர்மை முதலான கு$_3$ணங்களுக்குக் கடலாயிருப்பவனாய், தடையற்ற ஸங்கல்பத்தையுடையவனான ப$_4$க$_3$வான் தன்னுடைய ஐச்வர்யத்தை உள்ளபடி காட்டினான். கருணை வண்மை நீர்மைகளையுடையவனாகையாலே தன்னைத்தானே காட்டினான். தடையற்ற ஸங்கல்பத்தையுடையவனாகையாலே அவன் காட்டுவதற்குத் தடையேதுமில்லை. சென்ற அத்தியாயத்தின் கடைசியில் ப$_4$க$_3$வானை உள்ளபடி அறிந்து கண்டு அடைவதற்கு எல்லையற்ற அநந்யப$_4$க்தியே உபாயம் என்று கூறப்பட்டது. இப்படி உபாயத்தையும் ப$_2$லத்தையும் சென்ற அத்தியாயத்தின் இறுதியில் கூறிய பின்பு, இவ்வுபாயம் இப்ப$_2$லனை விரைவிலும் அருமைப்பாடில்லாமலும் ஸாதி$_4$த்துத்தரும் என்று காட்டுவதற்காக ஆத்மாவை அடைவதற்கு ஸாத$_4$னமாயிருக்கும் ஆத்மோபாஸனத்தைக் காட்டி

भूतादात्मोपासनात् भक्तिरूपस्य भगवदुपासनस्य स्वसाध्यनिष्पादने शैघ्र्यात्सुसुखोपादानत्वाच्च श्रैष्ठ्यम्, भगवदुपासनोपायश्च, तदशक्तस्याक्षरनिष्ठता, तदपेक्षिताश्चोच्यन्ते। भगवदुपासनस्य प्राप्यभूतोपास्यश्रैष्ठ्यात् श्रैष्ठ्यं तु *योगिनामपि सर्वेषां मद्गतेनान्तरात्मना। श्रद्धावान् भजते यो मां स मे युक्ततमो मतः॥ (६. ४७) इत्यत्रोक्तम्।

अर्जुन उवाच—

एवं सततयुक्ता ये भक्तास्त्वां पर्युपासते।
ये चाप्यक्षरमव्यक्तं तेषां के योगवित्तमाः॥ १॥

அர்ஜுந உவாச—

1. ஏவம் ஸததயுக்தா யே ப$_4$க்தாஸ்த்வாம் பர்யுபாஸதே।
யே சாப்யக்ஷரமவ்யக்தம் தேஷாம் கே யோக$_3$வித்தமா: ॥

அர்ஜுநः உவாச—அர்ஜுனன் கூறினன்:— **ஏவம்**—முன் ஶ்லோகத்தில் சொன்னபடியே, **ஸததயுக்தாः**—உன்னோடு எப்போதும் கூடியிருக்க நினைப்பவர்களாய்,

லும் ப$_4$க்திரூபமான ப$_4$க$_3$வது$_3$பாஸனம் தனது பலனைச் சாதித்துத் தருவதில் விரைவாகவும் அருமைப்பாடில்லாமலும் ஸாதி$_4$த்துத்தரும் என்று இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் காட்டப்படுகிறது. அதற்குமேல் ப$_4$க$_3$வது$_3$பாஸனத்துக்கு உபாயமும், ப$_4$க$_3$வது$_3$பாஸனத்தில் ஶக்தியில்லாதவன் ஆத்மாவை உபாஸிப்பான் என்னும் விஷயமும், கர்மயோக$_3$ம் முதலானவற்றுக்கு வேண்டிய கு$_3$ணங்களின் வகைகளும், ஆத்மோபாஸகனைக் காட்டிலும் ப$_4$க்தியோக$_3$நிஷ்ட$_2$னுடைய சிறப்பும் கூறப்படுகின்றன. ப$_4$க்தியோக$_3$த்தினால் அடையப்படும் ப்ராப்யமான எம்பெருமான் ஆத்மோபாஸனத்தால் அடையப்படும் ஜீவாத்மாவைக் காட்டிலும் சிறப்புற்றவனாயிருப்பதையிட்டு ப$_4$க$_3$வது$_3$பாஸனத்துக்கு ஆத்மோபாஸனத்தைக் காட்டிலும் உள்ள சிறப்பு ''யோகி$_3$நாமபி'' [கீ$_3$தை 6-47] என்று தொடங்கும் ஶ்லோகத்திலேயே கூறப்பட்டதாகையால் இங்கு அவ்விஷயம் அர்ஜுனனால் கேட்கப்படவில்லை.

யே ப₄க்தா:— எந்த ப₄க்தர்கள், **த்வாம்**—உன்னை, **பர்யுபாஸதே**—பரிபூர்ணமாக உபாஸிக்கிறார்களோ, **யே சாபி**—எவர்களோவெனில், **அவ்யக்தம்**—இந்த்₃ரியங்களால் அறியப்படாத, **அக்ஷரம்** — ஜீவாத்மஸ்வரூபத்தை (உபாஸிக்கிறார்களோ), **தேஷாம்** — இவ்விருவர்களுக்குள், **கே**—எவர், **யோக₃வித்தமா:** — தமது ப₂லனை விரைவில் அடைபவர்?

॥ भा ॥ एवम्—* मत्कर्मकृत् (११. ५५) इत्यादिनोक्तेन प्रकारेण, सततयुक्ताः—भगवन्तं त्वामेव परं प्राप्यं मन्वानाः, ये

---

1. **என்றுமுனைக் கூடநினைந் திவ்வாறு பத்தராய்**
நின்றுமிகச் சேவிப்பார் நேர்நுண்மை—யென்றுமுயிர்
தன்னடைவார் தம்மிலெவர் தானதிக யோகியரென்
றுன்னவுரைத் தான்விசய னுற்று.

"**என்றும் உனை கூட நினைந்து**—எப்போதும் உன்னோடு கூடியிருக்க எண்ணி, **இவ்வாறு பத்தராய் நின்று**—முன் ஶ்லோகத்தில் சொன்னபடியே ப₄க்தியோக₃த்தில் ஊற்றமுடையவராய் நின்று, **மிக (உனை) சேவிப்பார்**—உன்னைப் பரிபூர்ணமாக உபாஸிப்பவர்களும், **நேர் நுண்மை உயிர்**—மிகவும் நுண்ணியதான ஜீவாத்மாவை (உபாஸித்து), **என்றும் தன் அடைவார்** — என்றும் தன் ஆத்மாவையே அடைபவர்களும், **தம்மில்**—ஆகிய இருவரில், **எவர்தான் அதிக யோகியர்**—எவர் தன் ப₂லனை விரைவில் பெறுபவர்கள்?" **என்று உன்ன**—என்று அறிய, **விசயன்**—அர்ஜுனன், **உற்று**—கண்ணனை அணுகி, **உரைத்தான்**—கேட்டான்.

---

1. முன் அத்தியாயங்களில் கூறப்பட்ட ப₄க₃வது₃பாஸகர்கள் ஆத்மோபாஸகர்கள் என்னும் இருவரில் எவர் தம் ப₂லனை விரைவில் அடைவார்கள் என்று கேட்கிறான் அர்ஜுனன். (ஏவம்) "மத்கர்மக்ருத்" [11-55] என்று தொடங்கும் முன் ஶ்லோகத்தில் சொன்ன ரீதியில். "ப₄க்தாஸ்த்வாம் பர்யுபாஸதே" என்று அடுத்தபடி ப₄க₃வது₃

भक्ताः, त्वाम् — सकलविभूतियुक्तमनवधिकातिशयसौन्दर्यसौशील्य-सार्वज्ञ्यसत्यसंकल्पत्वाद्यनन्तगुणसागरं परिपूर्णमुपासते; ये चाप्य-क्षरम् — प्रत्यगात्मस्वरूपं, तदेव चाव्यक्तं — चक्षुरादिकरणानभिव्यक्त-

---

பாஸகர்களையே எடுக்கையால் முந்தின ஶ்லோகத்தில் கூறப்பட்ட ப₄க்தியோக₃நிஷ்ட₂ர்களை இங்கு 'ஏவம்' என்று அநுவதி₃ப்பது உசிதம். (ஸததயுக்தா: யே ப₄க்தா:) ப₄க₃வானான உன்னையே எப்போதும் சேர்ந்திருக்கவேண்டும் என்று நினைக்கும் எந்த ப₄க்தர்கள். 'யுக்தா:' என்ற இடத்தில் க்தப்ரத்யயம். 'ஆஶம்ஸை' (விருப்பம்) என்னும் பொருளிலே வந்தது. ஸாத₄னத₃ஶையோடு ஸாத்₄ய த₃ஶையோடு வேறுபாடில்லாமல் இவர்கள் எப்போதும் எம்பெருமானோடு கூடியிருக்கவேண்டும் என்று விரும்புகிறார்களன்றோ. இத்தால் ஶ்லோகத்தின் பிற்பாதியில் சொல்லப்படும் ஆத்மோபாஸகர்கள் ஸாத₄னத₃ஶையில் எம்பெருமானோடு கூடியிருப்பதை விரும்பினாலும், ஸாத்₄யத₃ஶையில் எம்பெருமானோடு கூடியிருப்பதை விரும்பாதவர்கள் என்று விளங்குகிறது. இப்படி இவனை இவர்கள் ப்ராப்யமாகவும் நினைப்பதற்குக் காரணம் என்னவெனில் (த்வாம்) முன் உபதேஶித்தபடியும், விஶ்வரூபத்தில் காட்டியபடியும் நித்யவிபூ₄தி, லீலாவிபூ₄தி என்னும் உலகங்களாகிற இருபெருஞ்செல்வங்களையுடையவனாய், எல்லையற்ற மேன்மையையுடைய அழகு, நீர்மை, அனைத்தையும் அறியும் தன்மை, தடைபடாத ஸங்கல்பம் முதலான கல்யாண கு₃ணங்களுக்குக் கடலாக நீயிருக்கையாலே உன்னோடு எப்போதும் கூடியிருக்க விரும்புகிறார்கள் என்று கருத்து. "மத்பரம:" என்று முன் ஶ்லோகத்தில் சொன்னபடியே "உன்னையே பரமப்ராப்யமாக நினைப்பவர்கள்" என்று திரண்டபொருள். (யே த்வாம் பர்யுபாஸதே) எவர்கள் இவ்வண்ணமாக உன்னைப் பரிபூர்ணமாக உபாஸிக்கிறார்களோ. (யே சாபி அக்ஷரம் அவ்யக்தம்) எவர்கள் கண் முதலான இந்திரியங்களால் காணப்பெறாத தமது ஆத்மஸ்வரூபத்தை உபாஸிக்கிறார்களோ. (அக்ஷரம்) அக்ஷரஶப்₃த₃ம் பரமாத்ம விஷயத்திலும் அசேதனமான ப்ரக்ருதி விஷயத்திலும் வழங்கப்பட்டபோதிலும் இங்கு ப்ரகரணத்தாலும் ஔசித்யத்தாலும் ஜீவஸ்வருபத்தையே குறிக்கிறது. (அவ்யக்தம்) "அவ்யக்தமக்ஷரே லீயதே" [ஸுபா₃ல] முதலான வாக்யங்களில் அக்ஷரஶப்₃த₃த்தோடுகூடப் படிக்கப்படும் அவ்யக்தஶப்₃த₃ம் அசேதனத்தையே குறிக்கிறதானாலும் இங்கு "யே யே" என்று இருமுறையே யச்ச₂ப்₃த₃ம் படிக்கப்பட்டிருக்கையால் மூன்றுவதான அசேதனத்தின் உபாஸனத்தை இங்கு

स्वरूपमुपासते ; तेषामुभयेषां के योगवित्तमाः—के स्वसाध्यं प्रति शीघ्रगामिन इत्यर्थः। * भवामि न चिरात्पार्थ (७) इत्युत्तरत्र योगवित्तमत्वं शैघ्र्यविषयमिति हि व्यञ्जयिष्यते ॥ १ ॥

श्रीभगवानुवाच—

मय्यावेश्य मनो ये मां नित्ययुक्ता उपासते।
श्रद्धया परयोपेतास्ते मे युक्ततमा मताः ॥ २ ॥

**2. மய்யாவேஶ்ய மநோ யே மாம் நித்யயுக்தா உபாஸதே।
ஶ்ரத்$_3$த$_4$யா பரயோபேதாஸ்தே மே யுக்ததமா மதா: ॥**

கொள்ளமுடியாது. ஆகையால் அக்ஷரஶப்$_3$த$_3$த்துக்கு விஶேஷண மாகவே அவ்யக்தஶப்$_3$த$_3$த்தைக் கொள்ளவேண்டும். கண் முதலான இந்த்$_3$ரியங்களுக்குப் புலப்படாத அக்ஷரம் (ஜீவன்) என்று பொருள் தேறுகிறது. **'பஞ்சவிம்ஶகமவ்யக்தம் ஷட்$_3$விம்ஶ: புருஷோத்தம:। ஏதத் ஜ்ஞாத்வா விமுச்யந்தே யதய: ஶாந்த பு$_3$த்$_3$த$_4$ய: ॥''** [இருபத்தைந்தாவது தத்துவமான ஜீவன் அவ்யக்தம் எனப்படுகிறுன். இருபத்தாறுவது தத்துவமான பரமாத்மா புருஷோத்தமனே. இதை அறிந்து புலனடக்கமுள்ள துறவிகள் மோக்ஷமடைகிருர்கள்] என்று யமஸ்ம்ருதியிலும் அவ்யக்தஶப்$_3$த$_3$ம் புருஷோத்தமனுக்குக் கீழ்ப்பட்ட ஜீவனைக் குறித்தே வழங்கப்பட்டதன்றே. (தேஷாம் கே யோக$_3$வித்தமா:) ப$_4$க$_3$வது$_3$பாஸகர்கள் ஆத்மோபாஸகர்கள் என்னும் இருவகையினருள் எவர் தமது பயனை விரைவில் அடைகிருர்கள்? உபாஸிக்கப்படும் பொருளையிட்டு உபாஸகர்களுக்குள்ள சிறப்பு ஆரும் அத்தியாயத்தின் கடைசி ஸ்லோகத்திலேயே தெரிவிக்கப்பட்டுவிட்டது. ஆகையால் அதைக் குறித்து இங்கு கேள்வி கேட்க வேண்டிய அவஶ்யமில்லை. ஆகையால் விரைவில் பயனை அடைவதாகிற சிறப்பைக் குறித்தே இங்கு கேள்வி கேட்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். **''ப$_4$வாமி ந சிராத் பார்த்த$_2$''** [7] என்று ஏழாவது ஸ்லோகத்தில் பதில் சொல்லும்போது விரைவில் பயனடைபவர்கள் தன் உபாஸகர்களே என்று கண்ணன் காட்டுவதும் இதை வலியுறுத்துகிறது. ஐந்தாவது ஶ்லோகத்தில் **''க்லேஶோऽதி$_4$கதரஸ்தேஷாம் அவ்யக்தாஸக்தசேதஸாம்''** என்று ஆத்மோபாஸகர்கள் ப$_4$க$_3$வது$_3$பாஸகர்களைப்போலே விரைவில் எளிதாகத் தம் பயனையடைவதில்லை என்று கூறுவதும் இதையே காட்டுகிறது. 1.

ஸ்ரீப₄க₃வாந் உவாச—பகவான் கூறுகிறான்:— **மந:**—தமது நெஞ்சை, **மயி**—என்னிடம், **ஆவேஶ்ய**—வைத்து, **பரயா ஶ்ரத்₃த₄யா உபேதா:**—மேலான ஶ்ரத்₃தை₄யோடு கூடியவர்களாய், **நித்யயுக்தா:** — என்னோடு எப்போதும் சேர்ந்திருக்க விரும்புகிறவர்களாய், **யே மாம் உபாஸதே**—எவர்கள் என்னை (ப்ராப்யமாக) உபாஸிக்கிறார்களோ, **தே**—அவர்கள், **மே யுக்ததமா: மதா:**—என்னால் சிறந்த யோகி₃களாக எண்ணப்படுகிறார்கள்.

।। भा ।। अत्यर्थमत्प्रियत्वेन मनो मय्यावेश्य श्रद्धया परयोपेताः नित्ययुक्ताः—नित्ययोगं काङ्क्षमाणाः ये मामुपासते—

---

2. அண்ண லுரைசெய்தா னவனுக்கென் பானெஞ்சைத்
திண்ணமிகச் சேர்த்துச் சிரத்தைமிகுத்—தெண்ணத்தா
லுற்றென்று மென்னை யுபாசிப்பார் யோகியராய்
மற்றெற் கதிகரவர் வாய்ந்து.

அண்ணல் அவனுக்கு உரைசெய்தான் — ஸ்வாமியான கண்ணன் அர்ஜுனனுக்குக் கூறினான்:— "**என் பால் நெஞ்சை திண்ணம் மிகச் சேர்த்து**—என்னிடம் நெஞ்சை உறுதியாக மிகவும் ஈடுபடுத்தி, **சிரத்தை மிகுத்து**—மிகுந்த ஶ்ரத்₃தை₄யுடையவர்களாய், **எண்ணத்தால்** — அடையத் தக்கவன் என்னும் நினைவால், **என்றும் என்னை உற்று**—எப்போதும் என்னை அணுகி, **உபாசிப்பார் அவர்**—உபாஸிக்கின்றவர்கள், **மற்று வாய்ந்து**—மிகப் பொருந்தி, **எற்கு**—எனக்கு, **யோகியராய் அதிகர்**—சிறந்த யோகி₃கள் ஆவர்.

---

2. என்னையே ப்ராப்யமாக நினைத்து உபாஸிப்பவர்களே ஆத்மோபாஸகர்களைக் காட்டிலும் சிறந்தவர் என்கிறான். (மயி மந: ஆவேஶ்ய) தமது நெஞ்சை என்னையே ப்ராப்யமாக நினைக்கும்படி செய்து ஈடுபடுத்தி. ஆத்மோபாஸகனும் எம்பெருமானை உபாயமாக நினைத்து நெஞ்சை ஈடுபடுத்துவதுண்டாகையாலே அவனைக் காட்டிலும் சிறந்த இவன் விஷயத்தில், அவ்வளவு மாத்திரமல்லாமல் 'என்னை ப்ராப்யமாகவும் நினைத்து நெஞ்சை ஈடுபடுத்தி' என்னுமளவும் பொருள் கொள்ளவேண்டும். (பரயா ஶ்ரத்₃த₄யா உபேதா:)

प्राप्यविषयं मनो मय्यावेश्य ये मामुपासत इत्यर्थः। ते युक्ततमाः मे मताः—मां सुखेनाचिरात्प्राप्नुवन्तीत्यर्थः॥ २॥

ये त्वक्षरमनिर्देश्यमव्यक्तं पर्युपासते।
सर्वत्रगमचिन्त्यं च कूटस्थमचलं ध्रुवम्॥ ३॥
सन्नियम्येन्द्रियग्रामं सर्वत्र समबुद्धयः।
ते प्राप्नुवन्ति मामेव सर्वभूतहिते रताः॥ ४॥
क्लेशोऽधिकतरस्तेषामव्यक्तासक्तचेतसाम्।
अव्यक्ता हि गतिर्दुःखं देहवद्भिरवाप्यते॥ ५॥

3. யே த்வக்ஷரமநிர்தே₃ஶ்யமவ்யக்தம் பர்யுபாஸதே।
ஸர்வத்ரக₃மசிந்த்யம் ச கூடஸ்த₂மசலம் த்₄ருவம்॥

4. ஸந்நியம்யேந்த்₃ரியக்₃ராமம் ஸர்வத்ர ஸமபு₃த்₃த₄ய:।
தே ப்ராப்நுவந்தி மாமேவ ஸர்வபூ₄தஹிதே ரதா:॥

5. க்லேஶோऽதி₄கதரஸ்தேஷாமவ்யக்தாஸக்தசேதஸாம்।
அவ்யக்தா ஹி க₃திர்து₃:க்க₂ம் தே₃ஹவத்₃பி₄ரவாப்யதே॥

அநிர்தே₃ஶ்யம்—(தே₃ஹத்தைக் காட்டிலும் வேறுபட்டிருக்கையால் தே₃வர் முதலான ஶப்₃த₃ங்களாலே) குறிப்பிடத்தகாததாய், **அவ்யக்தம்**—(கண் முதலான இந்த்₃ரியங்க

என்னை அடையவேண்டும் என்னும் துடிப்பாலே மிகுந்த ஶ்ரத்₃தை₄யோடு கூடியவர்களாய் ப₄க்தியோக₃ாநுஷ்ட₂ானம் செய்கிறார்கள் என்று கருத்து. (நித்ய யுக்தா:) உபாயத₃ஶையில் மாத்திரமல்லாமல் ப்ராப்யத₃ஶையிலும் என்னோடு சேர்ந்திருக்கவேண்டும் என்று விரும்பியவர்களாய். சென்ற ஶ்லோகத்தில் ஸததயுக்த ஶப்₃த₃ம்போலே இந்த நித்யயுக்தஶப்₃த₃மும் ஸாத₄னத₃ஶையில் மாத்திரம் எம்பெருமானோடு கூடியிருக்க விரும்பும் ஆத்மோபாஸகர்களைக்காட்டிலும் வேறுபாட்டைக் காட்டுகிறது. (யே மாம் உபாஸதே) எவர்கள் என்னை உபாஸிக்கிறார்களோ. (தே யுக்ததமா: மே மதா:) அவர்கள் ஆத்மோபாஸகர்களைக் காட்டிலும் சிறந்த யோகியராக என்னால் எண்ணப்படுகிறார்கள். ஸுக₂மாக (அருமைப்பாடில்லாமல்) விரைவிலேயே என்னை அடைகிறார்கள் என்று கருத்து. **2.**

ளால் காணப்படாததாய், **ஸர்வத்ரக₃ம்**—எல்லா தே₃ஹங் களிலும் இருந்தபோதிலும், **அசிந்த்யம் ச**—(அந்தந்த தே₃ஹஸ்வரூபமாக) நினைத்தற்கரியதாய், **கூடஸ்த₂ம்**—எல்லா தே₃ஹங்களுக்கும் பொதுவாயிருப்பதாய், **அசலம்**—தன் ஸ்வரூபத்திலிருந்து நழுவாததாய், **த்₄ருவம்**—நித்யமான தான, **அக்ஷரம்**—(தம்) ஜீவாத்மஸ்வரூபத்தை, **இந்த்₃ரிய க்₃ராமம் ஸந்நியம்ய**—கண் முதலான இந்திரியங்களைத் தத்தம் தொழில்களில் ஈடுபடாதபடி நன்கு அடக்கி, **ஸர்வத்ர ஸமபு₃த்₃த₄ய:**—எல்லா தே₃ஹங்களிலுமிருக்கும் ஆத்மாக் களிடமும் (ஜ்ஞானத்தால்) ஒத்தவை என்னும் நினைவுடைய வர்களாய், **ஸர்வபூ₄தஹிதே ரதா:**—எல்லா ஜீவராசிகளுக்கும் தீங்கிழைப்பதில் ஈடுபடாதவர்களாய், **யேது பர்யுபாஸதே**—எவர்கள் ப்ராப்யமாக உபாஸிக்கிறார்களோ, **தே**—அவர்களும், **மாம் ப்ராப்நுவந்தி ஏவ**-என்னோடு ஸமானமான ஜ்ஞானஸ்வ ரூபத்தையுடைய (தம்) முக்தாத்மஸ்வரூபத்தை அடையவே செய்கிறார்கள். **அவ்யக்தாஸக்தசேதஸாம் தேஷாம்**—(தம்) ஜீவாத்மஸ்வரூபத்தில் ஈடுபட்ட அந்தக் கைவல்ய நிஷ்டர் களுக்கு,**க்லேஶ:**—சிரமம், **அதி₄கதர:**—ஜ்ஞானிக்குள்ளதைக் காட்டிலும் மிகுந்தது; **அவ்யக்தா க₃தி:**—ஜீவாத்ம ஸ்வ ரூபத்தில் ஈடுபடும் மனநிலை, **தே₃ஹவத்₃பி₄:**—தே₃ஹாத் மாபி₄மானிகளாலே, **து₃:க்க₂ம் அவாப்யதே ஹி**—மிகுந்த சிரமப்பட்டு அடையப்படுகிறதன்றோ.

---

3. சொல்லரிதாய் நுண்ணியதா யெங்குந் தொடர்புடைத்தா யல்லவைபோற் சிந்திப் பரிதாகிப்—பல்லவற்றுக் கொத்துச் சலியா துறுதியுறு மக்கரத்தில் வைத்துப் பயில்வார் மனம்.

சொல்லரிதாய் — (தே₃ஹத்தைக் காட்டிலும் வேறு பட்டிருக்கையால் தே₃வர் முதலான ஶப்₃த₃ங்களாலே) குறிப்பிடத்தகாததாய், **நுண்ணியதாய்**—(கண் முதலான இந்திரியங்களால்) காணப்படாத ஸூக்ஷ்மப்பொருளாய், **எங்கும் தொடர்புடைத்தாய்**—எல்லா தேகங்களிலும் தொடர்

புடையதாய், **அல்லவைபோல் சிந்திப்பரிதாகி**— (ஆயினும்) அந்சந்த தேஜஹஸ்வரூபமாக நினைத்தற்கரியதாய், **பல் அவற்றுக்கு ஒத்து** — எல்லாத் தேகங்களுக்கும் பொதுவா யிருப்பதாய், **சலியாது**—தன் ஸ்வரூபத்திலிருந்து நழுவாத தாய், **உறுதியுறும்** —நித்தியமானதான, **அக்கரத்தில்**—(தம்) ஜீவாத்மஸ்வரூபத்தில், **மனம் வைத்து** — நெஞ்சை ஈடு படுத்தி, **பயில்வார்** — (அதை அடைவதற்கு) உபாஸிப் பார்கள் (கைவல்ய நிஷ்டர்கள்).

4. வன்புலன்கள் செற்றெங்கும் வாய்ந்தசம புத்தியரா
யின்புறுநன் கெப்பொருட்கு மேலுமவ—ரன்புடனே
யென்னுமெ னின்னுயிரி னின்பமே யெய்துவர்கள்
மன்னுகே ளிங்கருமை மற்று.

வன்புலன்கள் செற்று — கண் முதலான வலிமைமிக்க இந்திரியங்களைத் தம்தம் தொழில்களில் ஈடுபடாதபடி நன்கு அடக்கி, **எங்கும் வாய்ந்த சமபுத்தியராய்**—எல்லாத் தேகங் களிலுமிருக்கும் ஆத்மாக்களிடமும்(ஜ்ஞானத்தால்)ஒத்தவை என்னும் நினைவுடையவர்களாய், **இன்புறும் எப்பொருட்கும் நன்கு ஏலுமவர்**—ஶப்₃த₃ாதி₃ விஷயங்களில் இன்பமடையும் எல்லா ஜீவராசிகளுக்கும் நன்மையை விரும்புமவர்களாய் உள்ள கைவல்ய நிஷ்டர்கள், **அன்புடனே** — என்னிடம் ப₄க்திசெய்து, **என்னும் என் இன்னுயிர் இன்பமே எய்து வர்கள்**—என்னையொத்த ஜ்ஞானஸ்வரூபத்தையுடையதாய் எனக்கு இனியதான ஜீவாத்மாவை அநுப₄விக்கும் ஆனந் தத்தையே அடைவார்கள்; **மன்னு!**—அரசனான அர்ஜுனா! **மற்று**—மேலும், **இங்கு** — இவ்வாத்ம ப்ராப்தி விஷயத்தி லுள்ள, **அருமை கேள்**— சிரமத்தைக் கேட்பாயாக.

5. ஆங்கவர்க்கு நுட்பஞ்சே ரவ்வுயிரிற் சித்தத்தா
லோங்க வரும்வருத்த முற்றுமிகும்—பாங்கதனிற்
றேன்று வுயிர்க்கதிதான் றுக்க மிகுத்துடலி
லேன்றருக் கெய்தவரி திங்கு.

॥ भा ॥ ये त्वक्षरम्—प्रत्यगात्मस्वरूपम्, अनिर्देश्यम्—देहादन्यतया देवादिशब्दानिर्देश्यम्, [अ]तत एव चक्षुरादिकरणानभि·

ஆங்கவர்க்கு—அந்தக் கைவல்யநிஷ்டர்களுக்கு, **நுட்பம் சேர் அவ்வுயிரின் சித்தத்தால்**—மிகவும் நுண்ணியதான அந்த ஜீவாத்மாவில் நெஞ்சு செலுத்துவதால், **முற்று மிகும் வருத்தம் ஓங்க வரும்**—மிக அதிகமான வருத்தம் மேன்மேலும் வரும், **உடலில் ஏன்றுருக்கு**—உடலில் பற்றுள்ளவர்களுக்கு, **பாங்கு அதனில் தோன்ரு உயிர்க்கதி தான்**—மிக நுண்ணியதாயிருக்கையாலே அறிய அரிதாயிருக்கிற ஜீவாத்மாவைப் பற்றிய மனநிலே, **இங்கு**—இவ்வுலகில், **துக்கம் மிகுத்து எய்த அரிது**—மிகுந்த சிரமப்பட்டும் அடைய அரிதாயிருக்கும்.

3, 4, 5. ஜ்ஞானியின் சிறப்பைச் சொன்னுன் சென்ற ஶ்லோகத்தில். அந்த ஜ்ஞானியைக் காட்டிலும் கைவல்யநிஷ்டனுக்குள்ள தாழ்வை இனி மூன்று ஶ்லோகங்களாலே கூறுகிருன். (அநிர்த்தேஶ்யம்) தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டிருக்கையால், தேஹத்தைக் குறிக்கும் தேவர் மனிதர் முதலான ஶப்தங்களால் குறிப்பிடத்தகாதது. எல்லாப்படியாலும் குறிப்பிடத்தகாதது என்று கூறினல், தான் குறிப்பிட்டிருப்பதும், வேதஶாஸ்த்ரங்கள் இவ்வாத்மாவைக் குறிப்பிடுவதும் பொருந்தாமல் போய்விடுமாகையால் இவ்வாறு பொருள்கொள்வதே பொருத்தம். தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மாவையும், தேஹத்தைக் குறிக்கும் சொற்கள் கூறுமாயினும், இங்குப் பிரித்துக் கூறப்படும் ப்ரக்ருதி ஸம்பந்தமற்ற முக்தாத்மஸ்வரூபத்துக்கு தேஹம் கிடையாதாகையால் தேஹத்தைக் குறிக்கும் சொல்லால் அதைக் கூறமுடியாது என்பது குறிக்கொள்ளத் தக்கது. (அவ்யக்தம்) இப்படி தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்டதாகையாலேயே கண் முதலான இந்த்ரியங்களால் அறியப்படாதது. 'அடியோடு அறியப்படாதது' என்று பொருள்கொண்டால் மேலே 'பர்யுபாஸதே' என்று இவ்வாத்மாவை உபாஸிப்பதாகக் கூறுவது பொருந்தாமல் போய்விடுமாகையால் இப்படியே பொருள் கொள்ளவேண்டும். (ஸர்வத்ரகம்) தேவர், மனிதர், திர்யக், ஸ்தாவரம் என்னும் நால் வகைப்பட்ட தேஹங்களிலும் இருப்பது. அணுவான ஆத்மா எல்லா இடங்களிலும் ஒரே காலத்தில் இருப்பது பொருந்தாதாகையால்

कारकम्, सर्वत्रगमचिन्त्यं च – सर्वत्र—देवादिदेहेषु वर्तमानमपि तद्विसजातीयतया तेनतेन रूपेण चिन्तयितुमनर्हम्, तत एव कूटस्थम्—सर्वसाधारणम्, तत्तद्देवाद्यसाधारणाकारासंबद्धमित्यर्थः, अपरिणामित्वेन

ஒவ்வொரு காலத்தில் எல்லா வகைப்பட்ட தேஹத்திலும் இருப்பது என்றே பொருள்கொள்ள வேண்டும். அன்றிக்கே மேல் (அசிந்த்யம்) என்று கூறியிருப்பதையொட்டி அதற்குப் ப்ரதிகோடியான சிந்த்ய வஸ்துக்களான தே₃வாதி₃தே₃ஹங்களை 'ஸர்வத்ர' ஶப்₃த₃த்தால் எடுப்பதாகவும் கொள்ளலாம். (அசிந்த்யம் ச) இப்படி எல்லா தே₃ஹங்களிலும் இருந்தபோதிலும் அவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாகையாலே அந்தந்த தே₃ஹமாக நினைப்பதற்குத்தகாதது. 'அசிந்த்யம்' என்றதற்கு 'எல்லாப்படியாலும் நினைக்க அரிது' என்று பொருள்கொண்டால் ஆத்மாவைச் சிந்திக்கும்படி விதி₄க்கும் வேத₃ வாக்யங்கள் விரோதமாகையால் இப்படியே பொருள்கொள்ளவேண்டும். (கூடஸ்த₂ம்) இப்படி அந்தந்த தே₃ஹங்களைக் காட்டிலும் வேறுபட்டிருக்கையால் எல்லா தே₃ஹங்களுக்கும் பொதுவாயிருப்பது. ஒரு ஸந்ததியிலுள்ள மனிதர்களுக்குப் பொதுவான மூல புருஷன் 'கூடஸ்த₂ன்' எனப்படுகிறன். இங்கு கூடஸ்த₂ ஶப்₃த₃ம் லக்ஷணையாலே பொதுவாயிருக்கையைக் குறிக்கிறது. சிலர் கூடஸ்த₂ ஶப்₃த₃த்₃திற்கு 'மாயை' என்று பொருள்கொண்டு கூடஸ்த₂ ஶப்₃த₃ம் மாயாத்₄யக்ஷமான நிர்விஶேஷ சிந்மாத்ரத்தைக் குறிக்கிறது என்று கொண்டார்கள். சிலர் கூடஶப்₃த₃த்திற்கு ராசி (குவியல்) என்று பொருள் கொண்டு, கூடஸ்த₂ஶப்₃த₃த்திற்குக் குவியல் போலிருப்பது என்று பொருள் கொண்டார்கள். கூடஸ்த₂ ஶப்₃த₃த்துக்கு ப்ரஸித்₃த₄மான அர்த்த₂த்தைக் கைவிட்டபடியாலும், ப்ரமாணத்துக்கு முரண்பட்ட விஷயங்களைப் பேசுகையாலும் இப்பொருள்கள் கைவிடத்தக்கவை. கூடஶப்₃த₃த்துக்கு இரும்பையடிக்க ஆதாரமான உலைக்கூடம் (*Anvil*) என்று பொருள்கொண்டு அதைப் போலே அசையாததாய், வளர்வதும் தேய்வதும் இல்லாதது என்று பொருள்கொள்வதும் கூடஸ்த₂ஶப்₃த₃த்தின் ப்ரஸித்₃த₄ார்த்த₂த்தைக் கைவிட்டபடியால் இங்கு பொருத்தமுடையதல்ல. ''ஒரே சமயத்தில் எல்லா தே₃ஹங்களுக்கும் பொதுவாயிருப்பது ஒட்டாது. கால பே₄த₃த்தால் நால்வகைப்பட்ட ஶரீரங்களையும் எடுத்துக்கொண்டாலும் ஒவ்வொரு வகையிலுமுள்ள எல்லா ஶரீரங்களையும் ஒவ்வொரு சேதனனும் எடுத்துக்கொள்வதாகக் கூறுவது பொருந்தாது. ஆகையால் எல்லா ஶரீரங்களுக்கும் பொதுவாயிருப்பது ஆத்மவஸ்து

स्वासाधारणाकारान्न चलति न च्यवत इत्यचलम्, तत एव ध्रुवम् — नित्यम्। सन्नियम्येन्द्रियग्रामम् — चक्षुरादिकमिन्द्रियग्रामं सर्वं स्वव्यापारेभ्यस्सम्यङ्नियम्य, सर्वत्र समबुद्धयः — सर्वत्र देवादिविषमाकारेषु

என்று கூறுவது எப்படியொட்டும்?" எனில்: 'ஒவ்வொரு சேதனனும் எடுத்துக்கொள்ளக் கூடிய அந்தந்த தே₃வர், மனிதர் முதலான ஶரீரங்களால் தொடப்படாதது இந்த முக்தாத்ம ஸ்வரூபம்' என்றே தாத்பர்யமாகையால் குறையில்லை. (அசலம்) பரிணாமமற்றதாகை யாலே தனக்கேயுரிய ஸ்வரூபத்தில்நின்றும் நழுவாதது. 'ஜீவன் மேலுலகங்களுக்கும், கீழுலகங்களுக்கும் செல்கிறான்' என்று ஶாஸ்த்ரங்கள் கூறுகையாலே அதற்கு முரணில்லாமல் தன் ஸ்வரூபத்தில் நின்றும் நழுவாதது என்று பொருள்கொள்ளப்பட்டது. (த்₄ருவம்) இப்படிப் பரிணாமமில்லாமலிருப்பதாலேயே நித்யமானதும். பரிணாமமுடைய வஸ்துவன்றோ அநித்யமாயிருக்கமுடியும். 'அசலம்' என்று ஸ்வரூபத்தில் நின்றும் நழுவாமையையும் 'த்₄ருவம்' என்று நித்யத்துவத்தையும் குறிப்பிடுகையாலே புநருக்தி (கூறியது கூறல்) இல்லை. (இந்த்₃ரிய க்₃ராமம் ஸந்நியம்ய) கண் முதலான இந்திரியங்களனைத்தையும் தத்தம் தொழில்களில் ஈடுபடாதபடி நன்குஅடக்கி. 'பர்யுபாஸதே' என்னும் பத₃த்தாலேயே மனத்தின் நியமனம் தேறுகிறதாகையால், அதற்குறுப்பான வெளி இந்த்₃ரியங்களைக் கட்டுப்படுத்துவதே இங்கு சொல்லப்படுவதாகக் கொள்ள வேண்டும். நன்கு கட்டுப்படுத்துதலாவது — "அஹிம்ஸா ஸத்யம் அஸ்தேயம் ப்₃ரஹ்மசர்யாபரிக்₃ரஹ:" [விஷ்ணுத₄ர்மம் 104-3] [எந்த ஜீவராசிக்கும் தீங்கிழைக்காமல் இருத்தல், உண்மையுரைத்தல், திருடாமை, ப்₃ரஹ்மசர்யம், யாசிக்காமை] முதலான ஆத்ம கு₃ணங்கள் ஏற்படுமளவுக்கு இந்திரியங்களை அடக்குதல் என்று கருத்து. (ஸர்வத்ர ஸமபு₃த்₃த₄ய:) தே₃வர் மனிதர் முதலான வேறுபட்ட அமைப்புள்ள தே₃ஹங்களனைத்திலும் இருக்கும் ஆத்மாக்கள் அனைவரும் ஜ்ஞானம் ஒன்றையே ஸ்வரூபமாகக்கொண்டிருப்பவர்களாகையாலே அவர்களிடம் ஒத்த பு₃த்₃தி₄யையுடையவர்கள். "ஶுநி சைவ ஶ்வபாகே ச பண்டி₃தாஸ்ஸமத₃ர்ஶிந:" [கீ₃தை 5-18] என்று கீ₃தையிலேயே இவ்வர்த்த₂ம் விவரிக்கப்பட்டதன்றோ. (ஸர்வபூ₄தஹிதே ரதா:) இப்படி எல்லா ஆத்மஸ்வரூபமும் ஒத்தது என்னும் நினைவுடையவர்களாயிருக்கையாலேயே எந்த ஜீவராசிக்கும் தீங்கிழைப்பதில் நின்றும் நீங்கியிருப்பவர்கள். தே₃வர், மனிதர் முதலான ஶரீரங்களையே ஆத்மாக்களாக நினைப்பதாலேயன்றோ ஒரு மனிதன்

देहेष्ववस्थितेष्वात्मसु ज्ञानैकाकारतया समबुद्धयः, तत एव सर्वभूतहिते रताः -- सर्वभूताहितरतित्वान्निवृत्ताः, सर्वभूताहितरतित्वं ह्यात्मनो देवादिविषमाकाराभिमाननिमित्तम् ; य एवमक्षरमुपासते, तेऽपि मां प्राप्नुवन्त्येव — मत्समानाकारमसंसारिणमात्मानं प्राप्नुवन्त्येवेत्यर्थः। *मम साधर्म्यमागताः (१४.२) इति हि वक्ष्यते। श्रूयते च *निरञ्जनः परमं साम्यमुपैति (मु. ३.१.३) इति। तथा अक्षरशब्दनिर्दिष्टात्कूटस्था-

---

மற்றொரு பனிதனுக்குத் தீங்கிழைக்கிருன். (யே து அக்ஷரம் பர்யுபாஸதே) எவர் இவ்வண்ணமாகத் தம் ஆத்மாவை ப்ராப்யமாக நிஸ்சயித்து, பரமாத்மாவை அந்த ஆத்மப்ராப்திக்கு ஸாத₄னமாக உபாஸிக்கிருர்களோ, 'து' ஶப்₃த₃ம் கீழ் ஸ்லோகத்தில் சொல்லப் பட்ட ஜ்ஞானியைக் காட்டிலும் வேறுபாட்டைக் காட்டுகிறது. 'பரி' என்னும் உபஸர்க்க₃த்தோடு கூடிய 'உபாஸதே' என்னும் பத₃ம் ப்ராப்யமாக நிஸ்சயித்து உபாஸிப்பதைக் காட்டுகிறது. (தே) என்னைக்காட்டிலும் வேறுபட்ட பொருளை விரும்பும் ப்ரயோஜநாந்தர பரரான அவர்களும். "உதா₃ராஸ் ஸர்வ ஏவைதே" [கீ₃தை 7-18] என்று என்னிடம் ஏதேனுமொன்றைப் பெறுகிறவர்களும் எனக்கு ஸகலப₂லப்ரத₃த்வமாகிற பெருமையை அளிப்பவர்களாக நினைக்கை யாலே, அவர்களுக்கும் அவர்கள் விரும்பியதை நான் அளிக்கிறேன் என்று கருத்து. (மாம் ப்ராப்நுவந்தி ஏவ) என்னையொத்த ஜ்ஞாநாகாரத்தையுடையதாய், ஸம்ஸாரஸம்ப₃ந்த₄மற்ற தம் ஆத்ம ஸ்வரூபத்தை அடையவே செய்கிருர்கள். "விஷ்ணுநாக்தி: பரா ப்ரோக்தா" [வி-பு 6-7-61] என்றும், "அவிப₄ாகே₃ந த்₃ருஷ்டத்வாத்" [ப்₃ரஹ்மஸூத்ரம் 4-4-4] என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமானை விட்டுப்பிரியாத விஶேஷணமாக முக்தஸ்வரூபம் இருக்கையாலே '(மாம்) என்னை' என்றே அதை வழங்குகிருன். "தே மாமேவ ப்ராப்நுவந்தி" என்று ஸ்லோகம் அமைந்திருப்பதையொட்டி 'கைவல்யநிஷ்ட₂னுக்கும் ப₄க₃வத்ப்ராப்தி பிறிதொரு காலத்தில் ஏற்பட இடமுண்டு' என்று பொருள்கொள்ள இடமிருந்தபோதிலும் பா₄ஷ்யகாரர் அப்படிக்கொள்ளாமல் அவர்கள் தமது முக்த ஸ்வரூபத்தையே அடைவதாகப் பொருள்கொண்டிருப்பதிலிருந்து "கைவல்யாநுப₄வத்துக்குப் பிறகு ப₄க₃வத் ப்ராப்தி ஏற்படுகிறது" என்னும் பக்ஷம் அவர் உகந்ததல்ல என்று விளங்குகிறது. இப்படி கைவல்யநிஷ்ட₂ன் தனது முக்தாத்மஸ்வரூபத்தை ப்ராப்யமாக அடைகிருன் என்பதை" மம ஸாத₄ர்ம்யம் ஆக₃தா:" [கீ₃தை 14.2] என்று கண்ணனே அருளிச்செய்யப் போகிருனன்ருே" "நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" [முண்ட₃க 3-1.3] என்று ஸ்ருதியிலும் இவ்வர்த்த₂ம் ஓதப்பட்டது. "கூடஸ்தோ₂க்ஷர உச்யதே, உத்தம: புருஷஸ்த்

दन्यत्वं परस्य ब्रह्मणो वक्ष्यते *कूटस्थोऽक्षर उच्यते। उत्तमः पुरुषस्त्वन्यः (१५. १६) इति। *अथ परा यया तदक्षरमधिगम्यते (मु. १.१.५.) इत्यक्षरविद्यायां तु अक्षरशब्दनिर्दिष्टं परमेव ब्रह्म, भूतयोनित्वादेः। तेषामव्यक्तासक्तचेतसां क्लेशस्त्वधिकतरः। अव्यक्तविषया मनोवृत्तिः, देहवद्भिः—देहात्माभिमानयुक्तैः, दुःखेनावाप्यते; देहवन्तो हि देहमेवात्मानं [मन्यते] मन्यन्ते॥ ३—५॥

வந்ய:" [கீ₃தை 15-16] என்னுமிடத்தில் அக்ஷர ஶப்₃த₃த்தால் சொல்லப்படும் முக்தஸ்வரூபத்தை கூடஸ்த₂ஶப்₃த₃த்தால் எடுத்து, அவனைக் காட்டிலும் பரப்₃ரஹ்மம் வேறுபட்டது என்று கீ₃தையில் கூறியிருப்பதும் இங்கு காணத்தக்கது. "அத₂ பரா யயா தத₃க்ஷரமதி₄க₃ம்யதே" [முண்ட₃ 1-1-5] என்னும் வேத₃வாக்யத்திலும் "அக்ஷரமம்ப₃ராந்தத்₄ருதே" [ப்₃ரஹ்ம-ஸூ 1-3-9] என்று ப்₃ரஹ்ம ஸூத்ரத்திலும் பரப்₃ரஹ்மத்தை அக்ஷரஶப்₃த₃த்துக்குப் பொருளாகக் கொள்கிறோமே. இங்கு ஜீவாத்மாவைப் பொருளாகக் கொள்வது எப்படி? எனில்: அங்கு அக்ஷரத்துக்கு "பூத₄யோநித்வம" [ஜக₃த்காரணத்வம்] முதலான பெருமைகளைக் கூறுகையால் பரப்₃ரஹ்மமே அக்ஷரஶப்₃த₃த்தால் கூறப்படுவதாகக் கொள்ளவேண்டும். இங்கு அத்தகைய பெருமைகள் இல்லாமையாலும் பரமாத்மோபாஸகனைக் காட்டிலும் அக்ஷரோபாஸகனை வேறாக எடுக்கையாலும் "அம்ருதாக்ஷரம் ஹர:" [ஶ்வே-1-9] "கூடஸ்தோ₂க்ஷர உச்யதே" [கீ₃தை 15-16] முதலான இடங்களில் போல் அக்ஷரஶப்₃த₃ம் இங்கு ஜீவனைக் குறிக்கிறதென்றே கொள்ளவேண்டும். (அவ்யக்தாஸக்த சேதஸாம் தேஷாம்) முதல் ஶ்லோகத்தில் அவ்யக்தஶப்₃த வ்யாக்₂யானத்தில் காட்டப்பட்ட யமஸ்ம்ருதியின்படி அவ்யக்தமெனப்படும் ஜீவஸ்வரூபத்தில் ஈடுபட்ட அவர்களுக்கு (க்லேஶஸ்த்வதி₄கதர:) ஞானி தன் பயனைப் பெறுவதற்குப்படும் சிரமத்தைக் காட்டிலும் மிகுந்த சிரமம் உள்ளது. ஏனெனில்: (அவ்யக்தா ஹி க₃தி: தே₃ஹவத்₃பி₄: து₃:க்க₂ம் அவாப்யதேஹி) ஜீவஸ்வரூபத்தில் ஈடுபடும் மனநிலை தே₃ஹமே ஆத்மா என நினைக்கும் ஸம்ஸாரிக்கு மிகுந்த சிரமப்பட்டே அடையப்படுமன்றோ. தே₃ஹத்தில் பற்றுள்ளவர்களுக்கு எல்லா இந்திரியங்களையும் நன்கு அடக்குவதன்மூலம் ஏற்படும் ஜீவஸ்வரூபசிந்தனம் மிகவும் அடைய அரிது என்பது கருத்து. (தே₃ஹவத்₃பி₄:) தே₃ஹத்தில் பற்றற்ற ஸநகாதி₃களுக்கே இம்மனநிலை ஏற்படுமாகையால், அதில் பற்றுள்ளவர்களுக்கு எளிதில் ஏற்படாது என்றபடி. ஆக ஞானியைக் காட்டிலும் கைவல்யநிஷ்ட₂னுக்குள்ள தாழ்வு சொல்லப்பட்டதாயிற்று. 3, 4, 5.

॥ भा ॥ भगवन्तमुपासीनानां युक्ततमत्वं सुव्यक्तमाह—

ये तु सर्वाणि कर्माणि मयि संन्यस्य मत्पराः।
अनन्येनैव योगेन मां ध्यायन्त उपासते॥ ६ ॥

तेषामहं समुद्धर्ता मृत्युसंसारसागरात्।
भवामि नचिरात्पार्थ मय्यावेशितचेतसाम्॥ ७ ॥

**6. யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸந்ந்யஸ்ய மத்பரா:।
அநந்யேநைவ யோகே$_3$ந மாம் த்$_4$யாயந்த உபாஸதே ॥**

**7. தேஷாமஹம் ஸமுத்$_3$த$_4$ர்த்தா ம்ருத்யுஸம்ஸாரஸாக$_3$ராத்।
ப$_4$வாமி நசிராத் பார்த்த$_2$ மய்யாவேஶிதசேதஸாம்॥**

பார்த்த$_2$! — அர்ஜுநு! **யே து**—எவர்களோவெனில், **ஸர்வாணி கர்மாணி**—(உண்ணல், யாக$_3$ம் செய்தல் முதலிய) எல்லாக் கர்மங்களையும், **மயி ஸந்ந்யஸ்ய**—என்னிடத்தில் ஸமர்ப்பித்து, **மத்பரா:**—என்னையே பயனுகக் கொண்டவர்களாய், **அநந்யேந யோகே$_3$ந ஏவ**—வேறு பயன் கருதாத யோக$_3$த்தினுல், **மாம் த்$_4$யாயந்த: உபாஸதே**—என்னைக்குறித்து த்$_4$யானம், அர்ச்சனம் முதலானவற்றைச் செய்துகொண்டு உபாஸிக்கிருர்களோ, **மயி ஆவேஶித சேதஸாம் தேஷாம்**—என்னிடத்தில் செலுத்தப்பட்ட நெஞ்சையுடைய அவர்களுக்கு, **அஹம்**—நான், **ம்ருத்யு ஸம்ஸார ஸாக$_3$ராத்**—(என்னை அடையத் தடையாயிருக்கையாலே) ஆத்ம நாஶத்தை விளைக்கும் ஸம்ஸாரம் எனும் கடலிலிருந்து, **நசிராத்** — விரைவிலேயே, **ஸமுத்$_3$த$_4$ர்த்தா ப$_4$வாமி**—கைதூக்கி விடுபவனுகிறேன்.

---

6. ஏவர் தொழிலனைத்து மென்னிடைவைத் தெற்பரராய்
மேவி யனன்னியமா மெய்யோகச்—சேவையினு
லென்றுந் தியானித் தியன்ருே ரெனைமருவி
நின்றிங் குபாசிப்பார் நேர்ந்து.

7. அன்புடனென் பாலே யமர்ந்தமனத் தாரவரைத்
துன்புயரு மிப்பவமாஞ் சூழ்கடனின்—றின்புடனே
வென்றியமர் பார்த்தனே மேலா வெடுப்பன்கா
ணன்றியன்று தாழாது நான்.

வென்றி அமர் பார்த்தனே! — வெற்றியே பொருந்திய அர்ஜுனா!, **ஏவர் தொழில் அனைத்தும் என்னிடை வைத்து** — எவர்கள் (உண்ணல், யாகஹ்ம் செய்தல் முதலான) எல்லாக் கர்மங்களையும் என்னிடத்தில் சமர்ப்பித்து, **எற்பரராய் மேவி** — என்னையே பயனாகக் கொண்டவர்களாகப் பொருந்தி, **அனன்னியமாம் மெய்யோகச் சேவையினால்** — வேறு பயன்கருதாத உண்மையான யோகத்தை அநுஷ்டித்து, **இங்கு என்றும் தியானித்து எனைமருவி நின்று இயன்றோர் நேர்ந்து உபாசிப்பார்** — இவ்வுலகில் என்னைக் குறித்து தியானம், அர்ச்சனம் முதலானவற்றை என்னோடு கூடிநின்று செய்பவர்களாய், பொருந்தி உபாசிக்கிறார்களோ, **அன்புடன் என்பாலே அமர்ந்த மனத்தார் அவரை** — என்னிடம் அன்போடு செலுத்தப்பட்ட நெஞ்சையுடைய அவர்களை, **துன்புயரும் இப்பவமாம் சூழ்கடல் நின்று** — துன்பம் மிகுந்த இந்த ஸம்ஸாரமாகிற கடலிலிருந்து, **தாழாது** — விரைவிலேயே, **நன்று இயன்று** — நன்கு செயல்பட்டு, **நான்** — நான், **இன்புடனே மேலா எடுப்பன் காண்** — ஆனந்தத்தோடு கைதூக்கி விடுவேன்.

6, 7. பகவானை தன்னை உபாஸிப்பவர்களே யோகியரில் தலைசிறந்தவர்கள் என்பதை இரண்டாவது ஸ்லோகத்திற் கூறியதைக் காட்டிலும் மிகத் தெளிவாகக் கூறுகிறான் இவ்விரு ஸ்லோகங்களில். (யே து) 3 முதல் 5 ஸ்லோகங்களிற் கூறப்பட்ட கைவல்ய நிஷ்டர்களைக் காட்டிலும் வேறுபட்டவர்களாய், இரண்டாவது ஸ்லோகத்திற் சொல்லப்பட்ட பகவதுபாஸகர்களைக் குறிக்கிறது. யச்சப்தம், இரண்டாவது ஸ்லோகத்தில் ஏற்கனவே குறிக்கப்பட்டவர்கள் என்றும், துகாரம், 3-5 ஸ்லோகங்களில் குறிககப்பட்டவர்களைக் காட்டிலும் வேறுபட்டவர்கள் இவர்கள் என்றும் காட்டுகின்றன. (ஸர்வாணி கர்மாணி) எல்லாக் கர்மங்களையும்;

॥भा॥ ये तु लौकिकानि देहयात्राशेषभूतानि देहधारणार्थानि चाशनादीनि कर्माणि, वैदिकानि च यागदानहोमतपःप्रभृतीनि सर्वाणि सकारणानि सोद्देश्यान्यध्यात्मचेतसा मयि संन्यस्य, मत्पराः—मदेक-प्राप्याः, अनन्येनैव योगेन—अनन्यप्रयोजनेन योगेन मां ध्यायन्त उपासते — ध्यानार्चनप्रणामस्तुतिकीर்तनादीनि स्वयमेवात्यर्थप्रियाणि

கர்மங்கள் லௌகிகங்கள் என்றும், வைதி3கங்கள் என்றும் இருவகைப்படும்; லௌகிகங்களும் தே3ஹயாத்திரைக்குரிய பயிர்செய்தல் முதலானவை என்றும், உயிர்த4ரிக்க அவசியமான உண்ணல் முதலானவை என்றும் இருவகைப்படும். வைதி3க கர்மங்களும் யாக3ம், தா3னம், ஹோமம், தவம் முதலானவையாகப் பலவகைப்படும். இக்கர்மங்கள் அனைத்தையும் குறிக்கிறது. இக்கர்மங்களைச் சொன்னது, இவற்றைச் செய்யத் தகுதியை விளைக்கும் ஸந்த்4யாவந்த3னம் முதலானவற்றுக்கும், இவற்றுக்கு உத்3தே3ஶ்யமான ஸ்வர்க்க3ம் முதலான ப2லன்களுக்கும் உபலக்ஷணம். (மயி ஸந்ந்யஸ்ய) தனக்கு ஆத்மாவான பரமாத்மாவிடம் செலுத்தப்பட்ட நெஞ்சோடு, அப்பரமாத்மாவாகிய என்னிடம் ஸமர்ப்பித்து. (மயி ஆவேஶித சேதஸாம்) என்று அடுத்த ஶ்லோகத்தின் கடைசியில் இப்பத3ங்கள் விவரிக்கப்படுகின்றன என்பதை "அத்4யாத்ம சேதஸா மயி ஸங்ந்யஸ்ய" என்னும் தொடரால் பா4ஷ்யகாரர் உணர்த்தினர். மூவகையான த்யாக3ங்களையும் (ஸந்ந்யஸ்ய) என்னும் பத3ம் உணர்த்துகிறது. (மத்பரா:) "அஹம் பர:—பரமப்ராப்யம் யேஷாம் தே மத்பரா:" என்கிற வ்யுத்பத்தியின்படி என்னையே பரமப்ராப்யமாகக் கொண்டவர்கள் என்று பொருள்படுகிறது. (அநந்யேநைவ யோகே3ந) வேறு பயன் கருதாத ப4க்தியோக3த்தினால். ப4க்தியோக3ம் மோக்ஷஸாத4னமாக விதி4க்கப்பட்டபோதிலும், மோக்ஷத்தையும் இதற்குப் பயனாகக் கருதாமல் ஸ்வயம்ப்ரயோஜனமாகக் கருதிச் செய்வதே எம்பெருமானுக்கு மிகவும் உகப்பு என்றும், உபாஸகனையும் ஸ்வயம்ப்ரயோஜன ப4க்திநிஷ்ட2னை ஸித்3தோ4பாயநிஷ்ட2னுக்குவதிலேயே ப4க்திவிதி4ஶாஸ்த்ரங்களுக்கு நோக்கு என்றும் உணர்த்துகிறான். (மாம் த்4யாயந்த: உபாஸதே) "ஸததம் கீர்த்தயந்தோ மாம்" [கீ3தை 9-14] முதலான ஶ்லோகங்களில் கூறியபடி தியானம், அர்ச்சனம், ப்ரணாமம், துதி, ஸங்கீர்த்தனம் முதலானவற்றை, மிக இனியவையாயிருக்கையாலே மோக்ஷத்தையும் இவற்றுக்குப் பயனாகக் கொள்ளாமல் ஸ்வயம்ப்ரயோஜனமாகச்

प्राप्यसमानि कुर्वन्तो मामुपासत इत्यर्थः। तेषां मत्प्राप्तिविरोधितया मृत्युभूतात्संसाराख्यात्सागरादहमचिरेणैव कालेन समुद्धर्ता भवामि ॥ ६ ॥ ७ ॥

मय्येव मन आधत्स्व मयि बुद्धिं निवेशय।
निवसिष्यसि मय्येव अत ऊर्ध्वं न संशयः ॥ ८ ॥

8. மய்யேவ மந ஆத$_4$த்ஸ்வ மயி பு$_3$த்$_3$தி$_4$ம் நிவேஶய।
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்$_4$வம் ந ஸம்ஶய: ॥

(இக்காரணத்தாலே) **மயி ஏவ** — என்னிடமே, **மந: ஆத$_4$த்ஸ்வ** — நெஞ்சைச் செலுத்து; **மயி** — என்னிடம், **பு$_3$த்$_3$தி$_4$ம் நிவேஶய** — (பரமப்ராப்யம் என்னும்) உறுதி

செய்துகொண்டு என்னை உபாஸிக்கிறார்கள் என்று கருத்து. "த்$_4$யாயந்த:" என்று தியானத்தைச் சொன்னது அர்ச்சனம் முதலான அனைத்துக்கும் உபலக்ஷணம். (மய்யாவேஶித சேதஸாம் தேஷாம்) "மயி ஸந்ந்யஸ்ய" என்றவிடத்தில் சொன்ன ரீதியில் என்னிடத்தில் செலுத்தப்பட்ட நெஞ்சையுடைய அவர்களுக்கு. (ம்ருத்யு ஸம்ஸார ஸாக$_3$ராத்) என்னை அடையத் தடையாயிருக்கையாலே ஆத்மாவுக்கு யமனைப்போலே ஸ்வரூபநாஶத்தை விளைக்கிற ஸம்ஸாரமாகிற கடலிலிருந்து. நிஷாத$_3$ஸ்த$_2$பதி ந்யாயத்தாலே, வேறு ஸமாஸங்களைக் கொள்ளாமல் "ம்ருத்யுவாயிருக்கும் ஸம்ஸாரமாகிற ஸாக$_3$ரம்" என்று ஸாமாநாதி$_4$கரண்ய ஸமாஸம் கொள்ளப்பட்டது. ஆத்மாவின் ஸ்வரூபநிரூபக த$_4$ர்மமான ஶேஷத்வத்தைக் குலைத்து, எம்பெருமானை அடையமுடியாதபடி செய்வதாகையாலே ஸம்ஸாரத்திற்கு 'ம்ருத்யு' [யமன்] என்று ஔபசாரிகமான அடைமொழி கொடுக்கப்பட்டது. (நசிராத் அஹம் ஸமுத்$_3$த$_4$ர்த்தா ப$_4$வாமி) விரைவிலேயே நான் அக்கடலிலிருந்து இவர்களைக் கைதூக்கி விடுபவனாகிறேன் என்றபடி. 'நசிராத்' என்பதில் நஞ்ஞைப் பிரித்துப் பொருள்கொண்டால் பொருந்தாதாகையால் ஒரே பத$_3$மாகக் கொள்ளப்பட்டு 'அசிரேண' [விரைவில்] என்று பொருள் உரைக்கப்பட்டது. (பார்த்த$_2$) என் அத்தை பிள்ளையான உன்னையும் இப்படிக் கைதூக்கிவிட விரும்பியே ப$_4$க்தியோக$_3$த்திற்கு அங்க$_3$மாக ஸ்வத$_4$ர்மமான யுத்$_3$த$_4$த்தை அநுஷ்டி$_2$க்கச் சொல்லுகிறேன் என்று கருத்து. 6, 7.

யைக் கொள்வாய்; **அத: ஊர்த்₄வம் ஏவ** — இப்படிக் கொண்டவுடனேயே, **மயி ஏவ நிவஸிஷ்யஸி** — என்னிடமே வாழ்வாய், **ந ஸம்ஶய:** — இதில் ஐயமில்லை.

।।भा।। अतोऽतिशयितपुरुषार्थत्वात्सुलभत्वादचिरलभ्यत्वाच्च मय्येव मन आधत्स्व — मयि मनस्समाधानं कुरु। मयि बुद्धिं निवेशय — अहमेव परमप्राप्य इत्यध्यवसायं कुरु। अत ऊर्ध्वं मय्येव निव-

---

8. என்னிடையே நெஞ்சையமர்ந் தென்பாற் றுணிவினைவை
பின்னிதன்மேற் சங்கையில்லை பீடுடனே — மன்னியமர்ந்
தென்பாலே யென்று மினிதா யிருப்புதிநீ
யன்பாலே சொன்னே னமர்ந்து.

என்னிடையே நெஞ்சை அமர்ந்து — என்னிடமே நெஞ்சைச் செலுத்தி, **என் பால் துணிவினை வை** — என்னிடமே மேலான பயன் என்னும் உறுதியைக் கொள்வாய்; **பின்** — இப்படிக் கொண்ட பின்பு, **பீடுடனே மன்னி அமர்ந்து என்பாலே என்றும் இனிதாய் நீ இருப்புதி** — பெருமையுடன் நிலைபெற்றுப் பொருந்தி என்னிடமே எப்போதும் இனிமையுடன் நீ வாழ்வாய்; **இதன்மேல் சங்கை இல்லை** — இதில் யாதொரு ஐயமும் இல்லை; **அன்பாலே அமர்ந்து சொன்னேன்** — (உன்னிடம்) அன்பாலே பரிவுடன் சொன்னேன்.

---

8. 'முற்கூறிய காரணங்களாலே என்னிடம் ப₄க்தி செய்வதே சிறந்ததாகையாலே நீ என்னிடம் ப₄க்தி செய்வாய்' என்று விதி₄க்கிறான் கண்ணன் (மயி ஏவ மந: ஆத₄த்ஸ்வ) ஆறும் அத்தியாயத்தின் கடைசியில் சொன்னபடி உன் ஆத்மாவைக் காட்டிலும் நானே சிறந்த புருஷார்த்த₂மாகையாலும், இங்கு சொன்னபடி எளிதில் பெறத்தக்கவனாகையாலும், விரைவில் அடையத்தக்கவனாகையாலும் என்னிடமே நெஞ்சைச் செலுத்துவாய். என்னைத் தியானிக்கத் தொடங்குவாய் என்றபடி. (மயி பு₃த்₃தி₄ம் நிவேஶய) நானே மேலான ப்ராப்யம் (பயன்) என்னும் துணிவைக் கொள்வாய். இப்படி இரண்டு தொடருக்கும் பொருள் வேறாகையாலே புனருக்தியில்லை. (அத: ஊர்த்₄வம் ஏவ) என்னையே பரமப்ராப்யமாகத் துணிவுகொண்டு என்னிடம் நெஞ்சு செலுத்தியவுடனேயே. ஏவ

सिष्यसि—अहमेव परमप्राप्य इत्यध्यवसायपूर्वकमनोनिवेशनानन्तरमेव मयि निवसिष्यसीत्यर्थः ॥ ८ ॥

अथ चित्तं समाधातुं न शक्नोषि मयि स्थिरम् ।
अभ्यासयोगेन ततो मामिच्छाप्तुं धनञ्जय ॥ ९ ॥

9. அத₂ சித்தம் ஸமாத₄ாதும் ந ஶக்நோஷி மயி ஸ்தி₂ரம் ।
அப்₄யாஸயோகே₃ந ததோ மாமிச்ச₂ாப்தும் த₄நஞ்ஜய! ॥

த₄நஞ்ஜய—அர்ஜுனு! **மயி**—என்னிடத்தில், **அத₂ ஸ்தி₂ரம் சித்தம் ஸமாத₄ாதும் ந ஶக்நோஷி** — உறுதியாக நெஞ்சை வைக்க இயலவில்லையாகில், **ததः** — அது காரணமாகவே, **அப்₄யாஸ யோகே₃ந** — (ஸகல கல்யாண கு₃ணங்களையுமுடைய என்னிடம்) ஒப்பற்ற அன்புடன் கூடிய நினைவைப் பழகுவதன்மூலம் (உறுதியாக நெஞ்சு செலுத்துதலைப்பெற்று), **மாம் ஆப்தும் இச்ச₂**—என்னை அடைய விரும்புவாய்.

காரத்தை மூன்றும் பாத₃த்திலேயே அந்வயித்தாலும், இங்கு அர்த்த₂ஸித்₃த₄மாக ஏகாரம் வரும். (மயி ஏவ நிவஸிஷ்யஸி) என்னிடமே வாழ்வாய். இங்கு எம்பெருமானிடம் வாழ்வதாவது,— அவனை ஆத₄ாரமாகக் கொண்டிருக்கை எனில், அது எப்போதும் உள்ளது. அதை அறிகையே வாழ்வது எனில்: அது கேட்ட வுடனேயே ஏற்பட்டுவிடும்; துணிவு வேண்டியதில்லை; ஆகையால் அப்பொருளும் பொருந்தாது. ஆகையால் இப்படித் துணிவுடன் நெஞ்சை வைத்தவுடன் நீ முக்தன் போன்றவனுக ஆவாய் என்றே கருத்துரைக்கவேண்டும். அல்லது, இம்மையிலும், மறுமையிலும் உன்னை எல்லாப்படியாலும் ரக்ஷிப்பவனுக நான் இருக்கையில், ஆசார்யனிடம் சீடன்போலவும், தந்தையிடம் தனயன்போலவும் இருக்கும் நீ உன் ரக்ஷணத்தைக் குறித்துக் கவலையில்லாதவனுய் வாழ்வாய் என்று கருத்தாகவுமாம். ஆக, ப₄க₃வது₃பாஸனம் தன் பயனை விளைப்பதில் ஆத்மோபாஸனத்தைக் காட்டிலும் விரைவில் விளைக்குமாகையாலும், எளிதாகையாலும், என்னைப் பரமப்ராப்ய மென்று துணிவுகொண்டு என்னிடம் நெஞ்சு செலுத்துவாய் என்று அர்ஜுனனைக் குறித்துக் கூறினுனயிற்று. 8.

॥ भा ॥ अथ सहसैव मयि स्थिरं चित्तं समाधातुं न शक्नोषि, ततोऽभ्यासयोगेन मामाप्तुमिच्छ — स्वाभाविकानवधिकातिशयसौन्दर्य-

9. உன்னெஞ்சை யென்பானீ யுற்றிருத்த மாட்டாயேற்
பின்னன்பி னிற்பயிலும் பெற்றிமைசேர் — நன்னெஞ்சுற்
றென்னை யடைந்தமர்வா னிச்சியாய் நிச்சயித்து
மன்னு தனஞ்சயனே மற்று.

மன்னு தனஞ்சயனே — அரசனுன அர்ஜுனு ! **மற்று இனி** — இனி, **உன் நெஞ்சை என்பால் உற்று நீ இருத்த மாட்டாயேல்** — உன் நெஞ்சை என்னிடம் நீ உறுதியாக வைக்க இயலவில்லையானுல், **பின்** — அப்போது, **அன்பினில் பயிலும் பெற்றிமை சேர் நல்நெஞ்சு உற்று** — (ஸகல கல்யாண கு₃ணங்களையுடைய என்னிடம்) ஒப்பற்ற அன்புடன் கூடிய நினைவை நல்ல நெஞ்சில் பழகுவதன்மூலம், **நிச்சயித்து** — உறுதியான மனஈடுபாட்டைப்பெற்று, **என்னை அடைந்து அமர்வான் இச்சியாய்** — என்னை அடைந்து பொருந்த விரும்புவாயாக.

9. இனி, "ஶப்₃த₃ம், ஸ்பர்ஶம் முதலான விஷயங்களிலேயே அநாதி₃காலமாகப் பழகி அவற்றில் இழுக்கப்பட்ட நெஞ்சையுடையவனுன நான் மிகவும் கண்டு பழக்கமேயில்லாத உன் விஷயத்தில் நெஞ்சை எப்படி உறுதியாகச் செலுத்தமுடியும்" என்னும் அர்ஜுனனுடைய ஐயத்தை அறிந்து அதற்குப் பரிஹாரம் கூறுகிருன் இந்த ஶ்லோகத்தில். (அத₂ மயி ஸ்தி₂ரம் சித்தம் ஸமாத₄ாதும் ந ஶக்நோஷி) இனி என்னிடத்தில் நெஞ்சைச் சடக்கென உறுதியாக வைக்க இயலவில்லையானுல். நெஞ்சை அடியோடு வைக்க இயலாதெனில் சென்ற ஶ்லோகத்தில் 'நெஞ்சை என்னிடம் வை' என்று கூறியது பொருந்தாமல் போய்விடுமாகையால் 'சடக்கென' என்னும் பத₃ம் வருவித்துக்கொள்ளப்பட்டது. நெஞ்சு சஞ்சலத்தன்மையுடையதாகையால் ஸ்தி₂ரம் (உறுதியான) என்னும் பத₃த்தை அதற்கு விஶேஷணமாக்க முடியாது. அதனுல் க்ரியாவிஶேஷணமாக்கி 'உறுதியாக நெஞ்சை வைக்க இயலவில்லையானுல்' என்று பொருள்கொள்ளப்பட்டது. 'அத₂' என்னும் ஶப்₃த₃த்தைக் கேள்விப் பொருளிலேயோ, அல்லது 'யதி₃' என்னும் ஶப்₃த₃த்தின் பொருளைக் கொண்டதாகவோ கொள்ள வேண்டும். (தத:) நேரே நெஞ்சை என்னிடம் வைக்க இயலவில்லை

सौशील्यसौहार्दवात्सल्यकारुण्यमाधुर्यगाम्भीर्यौदार्यशौर्यवीर्यपराक्रमसार्वज्ञ्य – सत्यकामत्वसत्यसंकल्पत्वसर्वेश्वरत्वसकलकारणत्वाद्यसंख्येयगुणसागरे निखिलहेयप्रत्यनीके मयि निरतिशयप्रेमगर्भस्मृत्यभ्यासयोगेन स्थिरं चित्तसमाधानं लब्ध्वा मां प्राप्तुमिच्छ ॥ ९ ॥

யாகையால். (அப்4யாஸ யோகே3ந மாம் ஆப்தும் இச்ச2) ஸகல கல்யாண கு3ணங்களையுமுடைய என்னிடம் ஒப்பற்ற அன்புடன் கூடிய நினைவைப் பழகுவதன் மூலம் என்னிடம் உறுதியாக நெஞ்சு செலுத்தப்பெற்று என்னையடைய விரும்புவாய். இங்கு அப்4யாஸயோக3ம் என்று பொதுவாகச் சொன்னபோதிலும் விஷயங்களில் ஈடுபடும் நெஞ்சை அவற்றிலிருந்து திருப்பி எம்பெருமானிடம் ஈடுபடுத்துவதற்கு அவனுடைய கல்யாண கு3ணங்களை அநுஸந்தி4ப்பதே எளிய வழியாகுமாகையால் அதுவே இங்கு அப்4யாஸயோக3ம் என்று கூறப்படுவதாகக் கொள்ளவேண்டும். எம்பெருமானுடைய கு3ணங்கள் மற்றவர்களுடைய கு3ணங்களைப்போலே செயற்கையாய் அளவுபட்டவையாயிராமல் இயல்வானவையாய் எல்லையற்ற பெருமையுடையவையாயிருக்கையாலே அனைவருடைய நெஞ்சையும் ஈர்க்கக்கூடியவை. அத்தகைய கு3ணங்களில் சில பின்வருமாறு – "குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில் எழுகமலப்பூவழகர்" [நாச்·திரு 11-2] என்கிற அவயவங்களின் அழகாகிற ஸௌந்த3ர்யம். 2. ஸுக்3ரீவனென்கிற குரங்கு, வேடனென்கிற கு3ஹன், வேடுவிச்சியாகிற ஶப3ரி, ஆய்ச்சியர் முதலான தாழ்ந்தவர்களோடு மிக உயர்ந்தவனான தான் ஒரு நீராகக் கலந்து பரிமாறுகையாகிற ஸௌஶீல்யம். 3. "ஸுஹ்ருந் நாராயண:" [ஸுபா3லோபநிஷத்] என்கிறபடியே அனைவருக்கும் நன்மையை விரும்புகையாகிற ஸௌஹார்த்த3ம். 4. "செய்த குற்றம் நற்றமாகவே கொள் ஞாலநாதனே" [திருச்சந்த 111] முதலான இடங்களில் சொல்லப்பட்டதாய், அடியார்களுடைய குற்றங்களையும் கு3ணமாகக் கொள்ளுகையாகிற வாத்ஸல்யம். 5. "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்4ருஶம் ப4வதி து3:க்கி2த:" [ரா-அ2-40] [மனிதர்கட்குத் துன்பம் ஏற்படும்பொழுது அவர்களைக் காட்டிலும் மிகுதியாகத் துன்புறுகிறான் ராமன்] என்று கூறப்பட்ட கருணை. 6. எல்லையற்ற இன்பமாயிருக்கையாகிற மாது4ர்யம். 7. "ஸமுத்3ர இவ கா3ம்பீ4ர்யே" [ரா-பா31-17] என்கிறபடியே கடல்போலே ஆழங்காணமுடியாத கருத்துடையனாயிருக்கையாகிற கா3ம்பீ4ர்யம். 8. "எனக்கே தன்னைத் தந்த கற்பகம்" [திருவாய் 2-7-11] என்கிறபடியே தன்னையும் தன் உடைமைகளையும் தமர்க்கு ஆக்கிவைக்கும் ஔதா3ர்யம்.

अभ्यासेऽप्यसमर्थोऽसि मत्कर्मपरमो भव।
मदर्थमपि कर्माणि कुर्वन् सिद्धिमवाप्स्यसि॥ १०॥

10. அப்$_4$யாஸேऽப்யஸமர்த்தோ$_2$ऽஸி மத்கர்மபரமோ ப$_4$வ।
மத$_3$ர்த்த$_2$மபி கர்மாணி குர்வந் ஸித்$_3$தி$_4$மவாப்ஸ்யஸி ॥

அப்$_4$யாஸே அபி அஸமர்த்த$_2$: அஸி—என்னிடம் நினைவைப் பழகுவதில் வல்லமையில்லாதவனாகில், **மத் கர்ம பரம: ப$_4$வ**—என் விஷயமான கர்மங்களைச் செய்வதில்

9. "சென்று கொன்று வென்றிகொண்ட வீரனே" [திருச்சந்த-59] என்கிறபடியே எதிரிகள் தன்மேல் படையெடுத்துவரப் பார்த்திராமல் அவர்கள் இருக்குமிடம் சென்று தன் இடத்தில் போலே அவர்கள் ஸேனையில் புகுந்து அந்த ஸேனையை வெற்றிகொள்ளுகையாகிற ஶௌர்யம் (சூரத்தன்மை). 10. இப்படி வெற்றிகொள்ளும்போது தனக்கு ஒரு விகாரமில்லாமல் விளையாட்டாக வெற்றிகொள்ளுகையாகிற வீர்யம். 11. மூலப$_3$லம் போன்ற பெருஞ்சேனைகளுள் புகுந்தாலும் அவற்றைச் சி$_2$ன்னபி$_4$ன்னமாக்கும் திறமையாகிற பராக்ரமம். 12. எல்லாவற்றையும் ஒரே காலத்தில் பிரத்யக்ஷமாக (நேரே) எப்போதும் தானே அறிகையாகிற ஸர்வஜ்ஞத்வம். 13. விரும்பப்படும் கல்யாண கு$_3$ணங்களையும் உப$_4$யவிபூ$_4$திகளையும் உடைத்தாயிருக்கையாகிற ஸத்யகாமத்வம். 14. நினைத்ததை ஸ்ருஷ்டிக்கவல்ல தடையற்ற ஸங்கல்பத்தையுடையவனாயிருக்கையாகிற ஸத்யஸங்கல்பத்வம். 15. தன்னையொழிந்த அனைத்தையும் நியமிக்கவல்லவனாயிருக்கையாகிற ஸர்வேஶ்வரத்வம். 16. தன்னையொழிந்த அனைத்துக்கும் எல்லாவகைக் காரணமுமாயிருக்கையாகிற ஸர்வகாரணத்வம். இத்தகைய கு$_3$ணங்கள் இருந்தபோதிலும் தோ$_3$ஷங்களுமிருந்தால் உள்ள கு$_3$ணங்களும் இல்லாததுபோல் ஆகிவிடும். அப்படியல்லாமல் தாழ்வுகளுக்கெல்லாம் எதிர்த்தட்டாயிருப்பவன் இவன். ஆக இப்படிப்பட்ட என்னுடைய கல்யாணகு$_3$ணங்களை அநுஸந்தி$_4$ப்பதாகிற அப்$_4$யாஸயோக$_3$த்தின் மூலம் என்னிடம் உறுதியாக நெஞ்சைச் செலுத்தி என்னையடைய விரும்புவாய் என்று கூறினாயிற்று. (த$_4$நஞ்ஜய) இந்த அப்$_4$யாஸயோக$_3$மே உண்மையான செல்வமாகும். அதை அடைவதில் வெற்றியடைந்தால்தான் த$_4$னஞ்ஜயன் என்ற உன் பெயர் பொருத்தமுற்றதாகும் என்று கருத்து. 9.

॥ भा ॥ अथैवंविधस्मृत्यभ्यासेऽप्यसमर्थोऽसि, मत्कर्मपरमो भव — मदीयानि कर्माण्यालयनिर्माणोद्यानकरणप्रदीपारोपणमार्जनाभ्यु·

பேரன்புடன் ஈடுபடுவாய். **மத₃ர்த்த₂ம் கர்மாணி குர்வந் அபி**—இவ்வண்ணமாக என் விஷயமான கர்மங்களைச் செய்வதாலும், **ஸித்₃தி₄ம் அவாப்ஸ்யஸி**—(விரைவிலேயே அப்₄யாஸ யோக₃த்தினுல் என்னிடத்தில் உறுதிபெற்ற நெஞ்சையடைந்து) என்னை அடைவாய்.

**10. வாய்ந்து பயிலவுநீ மாட்டாயே லென்னுடைய
வேய்ந்த தொழிலி னியல்வுறுதி—வாய்ந்தெனது
செய்யதொழின் மேவிச் சிறந்தியலுஞ் சிந்தையடைந்
துய்யுநலந் தான்செறிதி யுற்று.**

வாய்ந்து பயிலவும் நீ மாட்டாயேல் — என்னிடம் நினைவைப் பழகுவதற்கு நீ திறமையற்றவனுகில், **என்னுடைய ஏய்ந்த தொழிலின் இயல்வுறுதி** — என் விஷயமான கர்மங்களைச் செய்வதில் பேரன்புடன் ஈடுபடுவாய். **வாய்ந்து எனது செய்ய தொழில் மேவி**—இவ்வண்ணமாகப் பொருந்தி என் விஷயமான கர்மங்களைச்செய்வதாலும், **சிறந்து இயலும் சிந்தை அடைந்து** — (விரைவிலேயே அப்₄யாஸயோக₃த்தினுல்) என்னிடத்தில் உறுதிபெற்ற நெஞ்சையடைந்து, **உய்யும் நலம் தான் உற்று செறிதி**—மோக்ஷஸாத₄னமான ப₄க்தியோக₃த்தைப் பெற்று என்னை அடைவாய்.

---

10. "என் மனமோ நெடுங்காலம் பழகியவையாய், ப்ரத்யக்ஷமாயிருப்பவையாய், விரைவில் அடையத்தக்கவையாய், இந்த்₃ரியங்களுக்கு இனியவையான ஶப்₃த₃₃ாதி₃ விஷயங்களில் ஈடுபட்டு நிற்கிறது. தாழ்வுகளற்றவனுய், கு₃ணங்கள் நிறைந்தவனுமாய் நீ இருந்தபோதிலும் அந்த விஷயங்களிலிருந்து மனத்தை மீட்டு உன்னிடம் பழகமுடியவில்லையே; அவ்வக்கர்மங்களிலேயே எனது பழக்கம் இருக்கிறது. ஆகையால் கர்மங்களிலேயே என் நெஞ்சு செல்கின்றது" என்னும் அர்ஜுனனுடைய கருத்தறிந்து "என் விஷயமான கர்மங்களில் அன்புடன் ஈடுபட்டு அப்₄யாஸயோக₃த்தையடைந்து முற்கூறிய ரீதியில் என்னை அடைவாய்" என்று உப

क्षणोपलेपनपुष्पाहरणपूजाप्रवर्तननामसंकीर्तनप्रदक्षिणस्तुतिनमस्कारादीनि , तान्यत्यर्थप्रियत्वेनाचर ; अत्यर्थप्रियत्वेन मदर्थं कर्माणि कुर्वन्नपि अचिरादभ्यासयोगपूर्विकां मयि स्थिरां चित्तस्थितिं लब्ध्वा मत्प्राप्तिरूपां सिद्धिमवाप्स्यसि ॥ १० ॥

தே$_3$ஶிக்கிறான் இந்த ஶ்லோகத்தில். (அப்$_4$யாஸே அபி அஸமர்த்தோ$_2$ஸி) இனி ஒப்பற்ற அன்புடன் எனது நினைவைப்பழகுவதிலும் நீ வல்லமையற்றவனானால். சென்ற ஶ்லோகத்திலுள்ள 'அத$_2$' என்னும் சொல்லை இங்கும் வருவித்துக்கொள்ளவேண்டும். (மத் கர்ம பரமோ ப$_4$வ) ஆலயநிர்மாணம், நந்த$_3$வனம் அமைத்தல், திருவிளக்கெரித்தல், அர்ச்சாமூர்த்தி எழுந்தருளும் இடங்களைக் கூட்டுதல், நீர் தெளித்தல், மெழுகுதல், செம்மணிடுதல், கோலம்போடுதல், பூக்கொண்டுவருதல், திருவாராத$_4$னம் செய்வித்தல், திருநாமஸங்கீர்த்தனம் செய்தல், திருக்கோயிலை வலம்வருதல், துதித்தல், வணங்குதல் முதலான என்விஷயமான கர்மங்களைப் பேரன்புடன் செய்வாய். அடுத்த ஶ்லோகத்தில் "ஸர்வகர்ம" என்று தனக்குரிய வர்ணாஶ்ரமகர்மங்கள் இதற்குக்கீழ்ப்படியாகச் சொல்லப்படப்போகிறதாகையாலே, அதைக்காட்டிலும் வேறுபட்ட கர்மமே இங்கு "மத்கர்ம" என்று சொல்லப்பட்டதாகக் கொள்ளவேணும். அப்படிப்பட்ட கர்மம் யாதென்று ஆராயுமளவில் எம்பெருமானுக்கேயுரியதாய், ப$_4$க்திக்கு அந்தரங்க$_3$மாயிருப்பதாய், "ஸததம் கீர்த்தயந்த:" [9-14] என்று கீ$_3$தையில் முன்னமே விவரிக்கப்பட்டதாய், இதிஹாஸ புராணங்கள், ப$_4$க$_3$வச்சா$_2$ஸ்த்ரம் முதலானவற்றில் ப்ரஸித்$_3$த$_4$மானதான ஆலய நிர்மாணம், திருநாமஸங்கீர்த்தனம் முதலிய கர்மமே இங்கு "மத்கர்ம" என்று சொல்லப்படுகிறது என விளங்குகிறது. "மத்கர்மபரம:" என்றதால், அச்செயல்களைப் பேரன்புடன் இவன் செய்யவேண்டும் என்று விளங்குகிறது. (மத$_3$ர்த்த$_2$ம் கர்மாணி குர்வந்நபி) இவ்வண்ணமாக என் விஷயமான கர்மங்களைச் செய்வதாலும். 'அபி' ஶப்$_3$த$_3$த்தால் இக்கர்மங்கள் முன் ஶ்லோகங்களில் சொன்ன மேற்படிகளிலே ஏற்றிவிடும் என்று உணர்த்தப்படுகிறது. (ஸித்$_3$தி$_4$மவாப்ஸ்யஸி) என்னை அடைவாய். விரைவிலேயே முன் ஶ்லோகத்தில் சொன்ன அப்$_4$யாஸ யோக$_3$த்தினாலே என்னிடம் உறுதியாக நெஞ்சை வைப்பதாகிற ப$_4$க்தியோக$_3$த்தைப்பெற்று என்னை அடைவாய். சென்ற ஶ்லோகத்தில் நாலாவது பாத$_3$த்தில் "மாம் ஆப்தும் இச்ச$_2$" என்று சொல்லப்பட்ட

अथैतदप्यशक्तोऽसि कर्तुं मद्योगमाश्रितः ।
सर्वकर्मफलत्यागं ततः कुरु यतात्मवान् ॥ ११ ॥

11. அதை$_2$தத$_3$ப்யஶக்தோऽஸி கர்த்தும் மத்$_3$யோக$_3$மாஶ்ரித: ।
ஸர்வகர்மப$_2$லத்யாக$_3$ம் தத: குரு யதாத்மவாந் ॥

அத$_2$—இனி, **மத்$_3$யோக$_3$மாஶ்ரித:**—என் விஷயமான ப$_4$க்தியோக$_3$த்தைப் பற்றியவனாய், **ஏதத் அபி கர்த்தும் அஶக்த: அஸி** — (ப$_4$க்தியோக$_3$த்தின் தொடக்க நிலையான என் விஷயமான) இக்கர்மத்தையும் செய்ய இயலவில்லையானால். **தத:**—அப்போது, **யதாத்மவாந்**—(கர்மயோக$_3$த்தாலே) மனம் அடங்கப்பெற்றவனாய், **ஸர்வகர்மப$_2$லத்யாக$_3$ம் குரு** — (பரப$_4$க்தியை உண்டாக்குவதாய் ஆத்மாவைச் சிந்திப்பதாகிற ஜ்ஞானயோக$_3$த்தைச் செய்பவனாய் அதற்குறுப்பாக) ஸர்வகர்மப$_2$லத்யாக$_3$த்தைச் செய்வாய்.

---

11. என்பத்தி யோகத் திணைந்தித் தொழில்செய்ய
வுன்பக்கல் சத்தி யுளதன்றேல்—முன்புற்ற
வெல்லாக் கருமத் தியல்பய னிங்கொழிந்து
செல்லாய் மனமடக்கித் தீர்ந்து.

என் பத்தியோகத்து இணைந்து — என் விஷயமான ப$_4$க்தியோக$_3$த்தைப் பற்றியவனாய், **இத்தொழில் செய்ய உன் பக்கல் சத்தி உளதன்றேல்** — (ப$_4$க்தியோக$_3$த்தின்

ப$_4$க$_3$வத் ப்ராப்தியே இங்கு அதே நாலாவது பாத$_3$த்தில் 'ஸித்$_3$தி$_4$' ஶப்$_3$த$_3$த்தால் சொல்லப்படுகிறது என்று விளங்குகிறது. மேன்மேலே கீழ்ப்படிகளைச் சொல்லுகையாலே இங்கு சொல்லப்படும் ப$_4$க$_3$வத்கர்மமும் மேற்படிகளான அப்$_4$யாஸயோக$_3$ம் முதலானவற்றை விளைத்தே ப$_4$க$_3$வத்ப்ராப்திக்கு உறுப்பாகும் என்று விளங்குகிறது. அதிபவித்ரமான ப$_4$க$_3$வத்கர்மங்கள் பலவற்றை இவன் செய்கையாலும், ஒவ்வொரு கர்மத்தைச் செய்யும்போதும் எம்பெருமானை இவன் சிந்திக்கையாலும் எம்பெருமானைப்பற்றிய நினைவைப் பழகுவது இவனுக்கு விரைவிலேயே ஸித்$_3$தி$_4$க்கும் என்னும் கருத்தாலே பா$_4$ஷ்யத்தில் "அசிராத்" (விரைவில்) என்னும் பத$_3$ம் இடப்பட்டது. 10.

॥ भा ॥ अथ मद्योगमाश्रित्यैतदपि कर्तुं न शक्नोषि—मद्गुणानुसन्धानकृतमदेकप्रियत्वाकारं भक्तियोगमाश्रित्य भक्तियोगाङ्कुररूप-

---

தொடக்க நிலையான என் விஷயமான) இக்கர்மத்தையும் செய்ய உனக்கு இயலவில்லையானல், **மனம் அடக்கி தீர்ந்து**—(கர்மயோகத்தாலே) மனம் அடங்கப்பெற்ற வனய், **முன்பு உற்ற**—முதல் ஷட்கத்தில் சொல்லப் பட்டபடி. **எல்லா கருமத்து இயல்பயன் இங்கு ஒழிந்து செல் லாய்** — (பரபக்தியை உண்டாக்குவதாய் ஆத்மாவைச் சிந்திப்பதாகிற ஜ்ஞானயோகத்தைச் செய்பவனய் அதற் குறுப்பாக) எல்லாக் கர்மங்களின் பலன்களையும் என்னிடம் ஸமர்ப்பிப்பாய்.

---

11. "என் ஆனந்தத்துக்கேயான லௌகிககர்மங்களில் ஈடுபடும் நெஞ்சுடைய நான் உனக்கேயான கர்மங்களில் பேரன்புடன் ஈடுபட முடியவில்லையே" என்று அர்ஜுனனுக்குக் கருத்தாகக்கொண்டு பக்தியோகத்தின் தொடக்க நிலையான பகவத் கர்மத்துக்கும் இறுதியான காரணமான கர்மயோகத்தை அனுஷ்டிக்கச் சொல்லு கிருன் இந்த ஸ்லோகத்தில். (அத) இனி முன் ஸ்லோகங்களிற் போலே இச்சொல்லைக் கேள்விப்பொருளிலேயோ 'யதி' ஶப்தத்தின் பொருளைக் கொண்டதாகவோ கொள்ளவேண்டும். (மத்யோகமாஶ்ரித;) எனது குணங்களை அனுஸந்திப்பதால் என்னிடமே ஈடுபடுகையாகிற பக்தியோகத்தை ஸாதனமாகப் பற்றியவனய். "மத்யோகம்" (என்யோகம்) என்கையாலே, ஸ்லோகத்தின் பிற் பாதியில் சொல்லப்பட்ட அக்ஷரயோகத்திலும் வேறுபட்ட தன் விஷயமான பக்தியோகமே கூறப்படுகிறது என விளங்குகிறது. (ஏததபி கர்த்தும் அஶக்த: அஸி) என் குணங்களை அனுஸந் தித்து அதனலே என்னிடமே ஈடுபட்டு இக்கர்மங்களைச் செய்ய வேண்டியிருக்கையாலே, பக்தியோகத்தின் தொடக்கநிலையான இவற்றைச் செய்யவும் உனக்கு இயலவில்லையானல்; இனி ஸ்லோகத் தின் உத்தரார்த்தத்தாலே பக்தியோகத்தைப் பற்றிநின்று அதன் தொடக்க நிலையான பகவத்கர்மத்தைச் செய்ய இயலாதவன் ஜீவாத்மயோகத்தைப் பற்றிநின்று அதன் தொடக்கநிலையான கர்ம யோகத்தை அனுஷ்டிக்கக்கடவன் என்று கூறுகிருன். (தத:) பக்தியோகத்தின் தொடக்க நிலையான பகவத்கர்மத்தை அனுஷ்

मेतन्मत्कर्मापि कर्तुं न शक्नोषि, ततोऽक्षरयोगमात्मस्वभावानुसन्धानरूपं परभक्तिजननं पूर्वषट्कोदितमाश्रित्य तदुपायतया सर्वकर्मफलत्यागं कुरु।

டி$_2$க்க இயலாதபோது. (யதாத்மவாந்) நெஞ்சையடக்கியவனாய். ப$_2$லனில் விருப்பமற்றதாய் எனக்கு ஆராத$_4$னமாயிருப்பதான கர்ம யோக$_3$த்தை அனுஷ்டி$_2$ப்பதால் மனத்தை அடக்கியவனாய் என்று கருத்து. இப்படி கர்மயோக$_3$த்தை அனுஷ்டி$_2$ப்பதால் ஆத்மத்$_4$யானம் ஏற்படும். இதனால் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டிருப்பதையே இயல்பாகக் கொண்ட தன் ஆத்மாவை மறைக்கும் அவித்$_3$யை எனப்படும் அஜ்ஞானம், இருவினைகள், ஶப்$_3$த$_3$ாதி$_3$ விஷயங்களில் ருசி, அவற்றில் வாஸனை ஆகியவை அனைத்தும் நீங்கும். தன் ஆத்மாவின் ஸாக்ஷாத்காரம் ஏற்படும். அதனாலே எம்பெருமானிடம் பரப$_4$க்தி தானே உண்டாகும். இப்படிப் பரப$_4$க்தி உண்டாவதற்குக் காரணமானதாய், முதல் ஷட்கத்தில் சொல்லப்பட்டதாய், ஆத்ம ஸ்வப$_4$ாவத்தின் அனுஸந்த$_4$ானமாயிருப்பதான அக்ஷரயோக$_3$ம் எனப்படும் ஜ்ஞானயோக$_3$த்தைப் பற்றியவனாய் அதற்கு உபாயமாக எல்லாக் கர்மங்களின் ப$_2$லனை என்னிடம் ஸமர்ப்பிப்பாய் என்கிறான்— (ஸர்வகர்மப$_2$லத்யாக$_3$ம் குரு), எல்லாக் கர்மங்களின் ப$_2$லனை என்னிடம் ஸமர்ப்பிப்பாய். இங்கு ஸர்வகர்மப$_2$லத்யாக$_3$ம் சொல்லப்பட்டபோதிலும், அது நேரே ப$_4$க்தியோக$_3$த்தை உண்டாக்காதாகையால் ஆத்ம சிந்தனமாகிற ஜ்ஞானயோக$_3$த்துக்கு அங்க$_3$மாக ஸர்வ கர்மப$_2$ல த்யாக$_3$த்தைச் செய்வாய் என்றே கொள்ளவேண்டும். இந்த ஞானயோக$_3$மாகிற அக்ஷரயோக$_3$ம் முதல்ஷட்கத்தில் ப$_4$க்தியை உண்டாக்கும் உபாயமாகக் கூறப்பட்டதாகும். 7, 8 அத்$_4$யாயங்களில் கைவல்ய மோக்ஷத்திற்கு உறுப்பாகச் சொல்லப்பட்ட அக்ஷர யோக$_3$த்தைக் காட்டிலும் இது வேறுபட்டது. முதல் ஷட்கத்தில் சொன்னபடி மோக்ஷத்வானுஸந்த$_4$ானம், த்ரிவித$_4$பரித்யாக$_3$ம் ஆகியவற்றோடு கர்மயோக$_3$த்தை அனுஷ்டி$_2$த்து அது நிறைவடைந்தால் இவன் ப்$_3$ரஹ்மத்தைத் தவிர மற்றொன்றை ப்ராப்யமாக நினைப்பதற்குறுப்பான பாபம் கழிந்து ப்$_3$ரஹ்மத்திடம் ப்ராப்யத்வபு$_3$த்$_3$தி$_4$ ஏற்பட்டுவிடும். அப்போது இவன் ப்$_3$ரஹ்மத்தை அடைவிக்கும் ப$_4$க்தி யோக$_3$த்துக்கு உபாயமாய் ஆத்மசிந்தன ரூபமாயிருக்கும் ஜ்ஞான யோக$_3$த்தை அனுஷ்டி$_2$த்து அதனால் ஆத்மஸாக்ஷாத்காரம் ஏற்பட்டு, அதனால் ப$_4$க்தி உண்டாகப்பெற்று அந்த ப$_4$க்தி யோக$_3$ம் நிறைவடைந்தவுடன் ப்$_3$ரஹ்மத்தை அடைவான். கர்மயோக$_3$ம் நிறைவடையாதிருக்கும்போதே இவனுடைய

मत्प्रियत्वेन मदेकप्राप्यताबुद्धिर्हि प्रक्षीणाशेषपापस्यैव जायते। यतात्मवान् — यतमनस्कः। ततोऽनभिसंहितफलेन मदाराधनरूपेणानुष्ठि-

---

பாபத்தின் ப2லனாக இவனுக்குத் தன் ஆத்மாவையே மோக்ஷத்தில் அடைந்து அனுப4விக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுவிடுவதும் உண்டு. அப்போது இவன் அந்த எண்ணத்துக்கு அனுகு3ணமாக—மற்ற இரு யோக3ங்களை அங்க3மாகக் கொண்ட கர்மயோக3த்தையோ அல்லது ஜ்ஞானயோக3த்தையோ அல்லது ப4க்தியோக3த்தையோ தன் ஆத்மாவை அனுப4விப்பதாகிற கைவல்ய மோக்ஷத்துக்கு உபாயமாக அனுஷ்டி2ப்பான். இவனுடைய இவ்வெண்ணம் நீங்குவதற்காக எம்பெருமான் தன் திருமேனியைச்சிந்திப்பது, ஶேஷத்வாநுஸந்த4ானம், த்ரிவித4பரித்யாக3ம் ஆகியவற்றை இவனுடைய உபாயத்துக்கு அங்க3மாக விதி4த்திருக்கிறான். அந்திம ஸ்ம்ருதி வரையில் பல ஜன்மங்கள் இவ்வங்க3ங்களோடு கூடிய உபாயத்தை அனுஷ்டி2த்த பின்பும் இவனுக்குத் தன் ஆத்மாவில் ப்ராப்யத்வ பு3த்3தி4 நீங்காவிடில் எல்லாக்கருமங்களையும் கழித்து இவன் விரும்பிய கைவல்ய மோக்ஷத்தையே இவன் அனுஷ்டி2த்த ஸாத4னத்துக்குப் ப2லமாக அளித்து விடுகிறான் எம்பெருமான். முதல் ஷட்கத்தில் சொன்ன அக்ஷரயோக3த்துக்கும் 7, 8 அத்4யாயங்களில் சொன்ன அக்ஷரயோக3த்துக்கும் உள்ள இந்த வாசி குறிக்கொள்ளத் தக்கது. இவ்வத்4யாயத்தில் 5-வது ஸ்லோகம் வரையில் 7, 8 அத்4யாயங்களில் கூறப்பட்ட அக்ஷரயோக3மே கூறப்பட்டது. இந்த ஸ்லோகத்தில் முதல் ஷட்கத்தில் கூறப்பட்ட அக்ஷரயோக3மாகிற ஜ்ஞானயோக3ம் கூறப்படுகிறது என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. ஆறுவது ஸ்லோகத்திலிருந்து இதுவரையில் சொன்ன விஷயங்களின் ஸாரமாவது: ப2லனில் விருப்பமில்லாமல் எம்பெருமானுக்கு ஆராத4னமாக அனுஷ்டி2க்கப்படும் கர்மயோக3த்தினால் எம்பெருமானிடம் ப்ராப்யத்வபு3த்3தி4யும், அடுத்த ஸ்லோகத்தில் கடைசிப் பாத3த்தில் சொல்லப்படும் மனஶ்ஶாந்தியும் ஏற்படும். அதனால் ஆத்மசிந்தனரூபமான ஜ்ஞானயோக3ம் ஏற்பட்டு அதன் பயனாக "அவித்3யா கர்மஸம்ஜ்ஞாந்யா" [வி பு 6.7.61] என்று சொல்லப்பட்ட இருவினைகளும், "அநாத்மந்யாத்மபு3த்3தி4ர்யா அஸ்வே ஸ்வமிதி யா மதி:" [வி பு 6-7.11] [ஆத்மாவல்லாத தே3ஹத்தை ஆத்மாவாக நினைப்பதாகிற அஹங்காரமும், தன்னதல்லாதவற்றைத் தன்னதாக நினைப்பதாகிற மமகாரமும்] என்று சொல்லப்படும் தே3ஹாத்மப்ரமம், மமகாரம் முதலானவையும் நீங்கப்பெற்று ப4க3வச்சே2ஷத்வத்தையே இயல்வாகக் கொண்ட தன் ஆத்மாவின் ஸாக்ஷாத்காரம் ஏற்படும். அதனால் மோக்ஷ ஸாத4னமான பரப4க்தி தன்னடையே உண்டாகும். இதற்கு ஒரு த்3ருஷ்டாந்தம் பின்வருமாறு கூறுவதுண்டு. ஒரு ராஜகுமாரன் சிறு

तेन कर्मणा सिद्धेनात्मध्यानेन निवृत्ताविद्यादिसर्वतिरोधाने मच्छेषतैक-स्वरूपे प्रत्यगात्मनि साक्षात्कृते सति मयि परा भक्तिः स्वयमेवोत्पद्यते।

வயஸ்ஸில் விளையாடுவதற்காக அரண்மனையிலிருந்து வெளியே வந்து வழிதவறியபோது வேடர்களால் பிடிக்கப்பட்டு, அவர்களது சேரியிலே அவர்களைப்போலவே பல வருடங்கள் வாழ்ந்து வருகிறான். ஒருநாள் இவனைக்கண்ட ஆப்தனொருவன் இவனது உருவ அமைப்பிலிருந்து சிறுவயஸ்ஸில் காணாமற்போன ராஜகுமாரனே இவன் என்று உணர்ந்து, அவனை அரசன் முன்னிலைக்கு அழைத்துவந்து, 'இவனே உன் தந்தை' என்று உபதே₃ஶிக்கிறான். ராஜகுமாரனும் தன் தந்தையை நேரில் பார்த்துத் தந்தைக்கும் தனக்குமிருக்கும் உருவ ஒற்றுமைகளை ஆராய்ந்து, 'இது உண்மையே' என உணர்ந்து தந்தையிடம் பெருங்காதல் கொள்கிறான். அதுபோலவே இந்த உபாஸகனும் உபதே₃ஶத்தாலே தான் எம்பெருமானுக்கு ஶேஷபூ₄தன் என்றுணர்ந்து, எம்பெருமானைப்போலவே ஜ்ஞாநாநந்த₃மயமாயிருக்கும் தன் ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்தால் வேறு எதையும் எதிர்பாராமல் எம்பெருமானிடம் பெருங் காதலாகிற ப₄க்தி தன்னடையே உண்டாகப்பெறுவானன்றோ. இவ்விடத்தில் பின்வருமாறு ஓராக்ஷேபம் எழுகிறது:— ஒரு ஸாத₄னத்தில் சக்தியில்லாதவன் அதே ப₂லனை விளைக்கும் மற்றொரு ஸாத₄னத்தைச் செய்யவேண்டும் என்றுசாஸ்திரம் விதிப்பதைப் பலவிடங்களில் காண்கிறோம். உதா₃ஹரணமாக அவகா₃ஹண (நீர் நிலையில் குடைந்தாடுவது) ஸ்நாநத்திற்கு சக்தியில்லாதவன், மற்ற ஸ்நானங்களைச் செய்தாலும் அதே சுத்தியாகிற ப₂லன் விளையும்என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. கர்மயோக₃ம் நேரேமோக்ஷஸாத₄னமாகும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. உதா₃ஹரணமாக, ''மோக்ஷகாரணமவ்யக்தம் அசிந்த்யம் அபரிக்₃ரஹம்| ஸமாராத்₄ய ஜக₃ந்நாத₂ம் க்ரியாயோகே₃ந முச்யதே ||'' [விஷ்ணுத₄ர்மம் 1-54] [மோக்ஷகாரணமாய், தெளிவாக அறிய முடியாதவனாய், அளவிட்டு நினைக்கவும் அரியனாய், கைக்கொள்ளத்தகாதவனான ஜக₃ந்நாத₂னை ஆராதி₄த்துக் கர்மயோக₃த்தினால் முக்தியடைகிறான்] என்று கர்மயோக₃த்தினால் நேரேயே முக்தியடைவதாகச் சொல்லியிருக்கிறது. இப்படியிருக்கும்பொழுது, ''ப₄க்தியோக₃ம் செய்ய முடியாதவன் கர்மயோக₃த்தின் மூலம் ப₄க்தியோக₃த்தையடைந்து அதனால் முக்தியடைகிறான்'' என்பது எப்படிப் பொருந்தும்? என்னும் ஆக்ஷேபம் இங்கு எழுகிறது. இதற்கு ஸமாதா₄னம்:— இந்த கீ₃தை பதினெட்டாம் அத்தியாயத்தில் கர்மயோக₃த்தினால் ப₄க்தியோக₃த்தையடைந்து அதனால் முக்தியடைகிறான் என்று தெளிவாகச் சொல்லியிருக்கையாலும், விஷ்ணுத₄ர்மத்திலும் மேல் ப்ரகரணத்தில் இவ்விஷயம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கையாலும் இது பொருந்தும்.

तथा च वक्ष्यते * स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः (१८. ४६) इत्यारभ्य * विमुच्य निर्ममश्शान्तो ब्रह्मभूयाय कल्पते। ब्रह्मभूतः प्रसन्नात्मा न शोचति न काङ्क्षति। समस्सर्वेषु भूतेषु मद्भक्तिं लभते पराम् (५४) इति ॥ ११ ॥

அதாவது –'' ஸ்வகர்மணு தமப்₄யர்ச்ய ஸித்₃தி₄ம் விந்த₃தி மாநவ: " [கீ₃தை 18.46] [தனக்குரிய கர்மத்தாலே அந்தந்த தே₃வதைகளுக்கு அந்தர்யாமியான பரமாத்மாவை ஆராதி₄த்து அவனருளாலே மனிதன் பரமாத்மப்ராப்தியாகிற ஸித்₃தி₄யைப் பெறுகிறுன்] என்று தொடங்கி, '' விமுச்ய நிர்மம: ஶாந்தோ ப்₃ரஹ்ம பூ₄யாய கல்பதே। ப்₃ரஹ்மபூ₄த: ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி। ஸம: ஸர்வேஷு பூ₄தேஷு மத்₃ப₄க்திம் லப₄தே பராம் ||'' [கீ₃தை 18 53, 54] [காமம் க்ரோத₄ம் முதலானவற்றை விட்டு, மமகாரமற்றவனுய், ஆத்மாநுப₄வத்திலேயே இன்பம் காண்பவனுய், த்₄யானயோக₃த்தைச் செய்பவன் ஸம்ஸாரப₃ந்த₄த்திலிருந்து விடுபட்டு உள்ளபடியான ஆத்மாவின் அநுப₄வத்தையடைகிறுன். ஆத்மஸாக்ஷாத்காரம் பெற்றவனுய், க்லேஶம் கர்மம் முதலானவற்ருல் கலங்கப்பெருத ஸ்வரூபத்தையுடையவனுய், அவன் என்னைத் தவிர வேறு எதைப் பெறுவதற்காகவும் வருந்துவதில்லை. எதையும் விரும்புவதுமில்லை. என்னைத் தவிர எல்லா பூ₄தங்களையும் அநாத₃ரித்திருப்பதில் ஸமமாயிருப்பவன். இத்தகையவன் என் விஷயமான பரப₄க்தியையடைகிறுன்] என்று கீ₃தையில் கர்மயோக₃த்தால் ப₄க்தி யோக₃த்தையடைகிறுன் என்னும் விஷயம் சொல்லப்பட்டது.

''தத்ர சித்தம் ஸமாவேஷ்டும் ந ஶக்நோதி ப₄வாந் யதி₃ ।
தத₃ப்₄யாஸபரஸ்தஸ்மிந் குரு யோக₃ம் தி₃வாநிஶம் ॥
தத்ராப்யஸாமர்த்₂யவத: க்ரியாயோகே₃ா மஹாத்மந: ।
ப்₃ரஹ்மணு யஸ்ஸமாக்₂யாத: தத்பரஸ்ஸததம் ப₄வ ॥
கரோஷி யாநி கர்மாணி தே₃வதே₃வே ஜக₃த்பதௌ ।
ஸமர்ப்பயஸ்வ ப₄த்₃ரம் தே தத: கர்ம ப்ரஹாஸ்யஸி ॥
ப்ரத₄ாநம் காரணம் யோக₃: விமுக்தே: தி₃திஜேஶ்வர! ।
க்ரியாயோக₃ஶ்ச யோக₃ஸ்ய பரமம் தஸ்ய ஸாத₄நம் ॥''
[விஷ்ணுத₄ர்மம் 81.29]

श्रेयो हि ज्ञानमभ्यासाज्ज्ञानाद्ध्यानं विशिष्यते।
ध्यानात्कर्मफलत्यागस्त्यागाच्छान्तिरनन्तरम्॥ १२॥

12. ஶ்ரேயோ ஹி ஜ்ஞாநமப்₄யாஸாத்
ஜ்ஞாநாத்₃த்₄யாநம் விஶிஷ்யதே।
த்₄யாநாத்கர்மப₂லத்யாக₃ஸ்-
த்யாக₃ாச்ச₂ாந்திரநந்தரம்॥

அப்₄யாஸாத்—(அன்பில்லாத) கு₃ணாநுஸந்த₄ானத்தைக் காட்டிலும், **ஜ்ஞாநம்**—(அதற்கு உபாயமான) ஆத்மாவை நேரே காண்பதாகிற அறிவே, **ஶ்ரேய: ஹி**—சிறந்த தன்றோ. **ஜ்ஞாநாத்**—(நிறைவடையாத) அந்த ஆத்ம ஸாக்ஷாத்காரத்தைக் காட்டிலும், **த்₄யாநம்** — (அதற்கு உபாயமான) ஆத்மாவை த்₄யானிப்பது. **விஶிஷ்யதே (ஹி)** — சிறந்ததன்றோ. **த்₄யாநாத்** — (நிறைவடையாத) ஆத்மத்₄யானத்தைக் காட்டிலும், **கர்மப₂லத்யாக₃:** — (அதற்கு உபாயமான) ப₂லத்யாக₃த்தோடு அனுஷ்டி₂க்கப் படும்கர்மமே, **(விஶிஷ்யதே ஹி**—சிறந்ததன்றோ) **த்யாக₃ாத்**—ப₂லனில் விருப்பத்தைவிட்டு அனுஷ்டி₂க்கப்படும் கர்ம யோக₃த்திலிருந்து, **அநந்தரம்**—அடுத்தபடியாக, **ஶாந்தி:**— மனஶ்ஶாந்தி (உண்டாகிறது).

[அந்தப் பரம்பொருளிடம் நீர் நெஞ்சை வைத்து ப₄க்தி செய்ய இயலாவிடில் அப்பரம்பொருளுடைய கு₃ணங்களை இராப்பகலாகச் சிந்திப்பதாகிற அப்₄யாஸயோக₃த்தைச் செய்வீர். அதிலும் திறமை யற்ற உபாஸகனுக்குக் கர்மயோக₃மே அனுஷ்டி₂க்கத்தக்கது என்று பிரமனால் சொல்லப்பட்டது. நீரும் அதை எப்போதும் அனுஷ் டி₂ப்பீர். அஸுரர் தலைவனே! நீர் செய்யும் கர்மங்களையெல்லாம் தேவதேவனாய் லோகஸ்வாமியான பரமாத்மாவிடம் ஸமர்ப்பிப்பீராக. அதனால் உமக்கு மங்க₃ளம் உண்டாகும். அதுகாரணமாக நீர் புண்யபாபங்களிலிருந்து நீங்கப்பெறுவீர். முக்திக்கு ப₄க்தி யோக₃மே முக்₂யமான காரணம். அந்த ப₄க்தியோக₃த்துக்குக் கர்ம யோக₃ம் மேலான ஸாத₄னம்] என்று இவ்விஷயம் விஷ்ணுத₄ர்மத்தி லும் விரிவாக விளக்கப்பட்டது. ஆக, இந்த ஶ்லோகத்தால் ப₄க்தி யோக₃த்தில் ஶக்தியில்லாதவன் அதை ஸாதி₄த்துத்தரும் உபாய பரம்பரையின் எல்லைநிலமான கர்மயோக₃த்தை அனுஷ்டி₂க்கவேணும் என்று விதி₄த்தானாயிற்று. 11.

॥ भा ॥ अत्यर्थप्रीतिविरहितात्कर्कशरूपात् स्मृत्यभ्यासादक्षर-याथात्म्यानुसन्धानपूर्वकं तदापरोक्ष्यज्ञानमेवात्महितत्वे विशिष्यते ।

---

12. ஞான மனப்பயில்வி னன்றுமிக ஞானத்தி
லான தியான மதிசயிதந்—தியானத்திற்
கன்மபயன் விட்டியல்வு கட்டழகு விட்டியல்விற்
றன்னமருஞ் சாந்தி தலை.

மனப்பயில்வில் — (அன்பில்லாத) கு3ணாநுஸந்த4ானத்தைக் காட்டிலும், **ஞானம்** — (அதற்கு உபாயமான) ஆத்மாவை நேரே காண்பதாகிற அறிவே, **மிக நன்று**—மிகச் சிறந்தது. **ஞானத்தில்** — (நிறைவடையாத) அந்த ஆத்மஸாக்ஷாத்காரத்தைக் காட்டிலும், **ஆன தியானம்**—அதற்கு உபாயமான ஆத்மாவைத் தியானிப்பது, **அதிசயிதம்** - சிறப்புற்றது. **தியானத்தில்** — (நிறைவடையாத) அந்த ஆத்மத்4யானத்தைக் காட்டிலும், **கன்மபயம் விட்டு இயல்வு** — (அதற்கு உபாயமான) ப2லத்யாக3த்தோடு அனுஷ்டி2க்கப்படும் கர்மமே, **கட்டழகு**—மிகச் சிறந்தது, **விட்டு இயல்வில்**—ப2லத்தில் விருப்பத்தைவிட்டு அனுஷ்டி2க்கப்படும் கர்மத்திலிருந்து, **சாந்தி**—மனச்சாந்தி, **தலை தன் அமரும்**—அடுத்தபடியாக ஏற்படும்.

---

12. எட்டாவது ஶ்லோகத்தில் ப4க்தியை விதி4த்து. அதில் ஶக்தியில்லாதவனுக்கு ஒன்பதாவது ஶ்லோகத்தில் கு3ணாநுஸந்த4ானமாகிற அப்4யாஸயோக3த்தை விதி4த்து. அதிலும் ஶக்தியில்லாதவனுக்கு ப4க3வத் கர்மங்களைப் பத்தாவது ஶ்லோகத்தில் விதி4த்து. அதிலும் ஶக்தியில்லாதவனுக்குச் சென்ற ஶ்லோகத்தில் கர்மயோக3த்தை விதி4த்தான். இவற்றில் நேரான உபாயங்களில் அதி4காரம் (தகுதி) இல்லாமையாலே ஸாத4கனுக்கு ஏற்படக்கூடிய வருத்தத்தைப் போக்குவதற்காகவும், சந்திரனைப் பிடிக்க முயலும் கைக்குழந்தை போலே முடியாத கார்யத்தில் ஈடுபாட்டைத் தவிர்ப்பதற்காகவும், அவரவர் தகுதிக்குத்தக்கபடி பரம்பரையாக உபாயமாமவற்றையே ஸௌகர்யத்தின் மிகுதியையிட்டு அவரவர்க்குச் சிறந்ததென்று புகழ்ந்துகொண்டு சென்ற நாலு ஶ்லோகத்தில் சொன்னவற்றையே விளக்குகிறான். (ஶ்ரேயோ ஹி ஜ்ஞாநமப்4யாஸாத்) மிக்க அன்பில்

आत्मापरोक्ष्यज्ञानादप्यनिष्पन्नरूपात् तदुपायभूतात्मध्यानमेवात्महितत्वे विशिष्यते ; तद्ध्यानादप्यनिष्पन्नरूपात्तदुपायभूतं फलत्यागेनानुष्ठितं कर्मैव विशिष्यते। अनभिसंहितफलादनुष्ठितात् कर्मणोऽनन्तरमेव

லாத கு₃ணநுஸந்த₄ானத்தைக் காட்டிலும், அதற்கு உபாயமான ஆத்மாவை நேரே காண்பதாகிற அறிவே சிறந்ததன்றோ. பேரன்போடு கூடிய கு₃ணநுஸந்த₄ானம் அதற்குபாயமான ஆத்மஸாக்ஷாத்காரத்தைக் காட்டிலும் உண்மையில் சிறந்ததாகையாலே, இங்கு விபரீதமாகச் சொல்லியிருப்பது பொருந்ாது. ஆகையால், பழத்தைச் சாப்பிட விரும்பிக் காயைக் கடிக்கும் சிறுவனது முயற்சிபோலே, தகுதியற்றவனால் செய்யப்படும் கு₃ணநுஸந்த₄ானம் சுவையற்றதாகவேயாகுமாகையாலே, அதைக்காட்டிலும் பேரன்போடு கூடிய கு₃ணநுஸந்த₄ானத்தை விளைக்கும் ஆத்மஸாக்ஷாத்காரம் சிறந்தது என்று இங்கு கூறுவதாகவே கொள்ளவேண்டும். இந்த ஆத்மஸாக்ஷாத்காரமும் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை அனுஸந்தி₄ப்பதாகிற ஜ்ஞானயோக₃த்தாலே ஏற்படுவது என்பது முதல் ஷட்கத்திலேயே கூறப்பட்டது. ஜ்ஞானயோக₃த்தாலே ஆத்மஸாக்ஷாத்காரத்தை ஸாதி₄த்துக்கொண்டு அதனால் பாபம் நீங்கப் பெற்றவனுக்கு, பேரன்போடு கூடிய கு₃ணநுஸந்த₄ானம் ஏற்படும் என்று கருத்து. இங்கு ஜ்ஞானம் என்று பொதுவாகச் சொல்லியிருந்தபோதிலும், இது கு₃ணநுஸந்த₄ானத்துக்கு உபாயமாகக் கூறப்பட்டிருக்கையாலும், மேலே த்₄யானத்தால் உண்டாவதாகச் சொல்லப்பட்டிருக்கையாலும் ஜீவாத்மாவை உள்ளபடி அனுஸந்தி₄ப்பதாகிற த்₄யானத்தால் உண்டாவதாய், ப₄க்தியோக₃த்துக்குக் காரணமானதாக முதல் ஷட்கத்தில் சொல்லப்பட்ட ஆத்மஸாக்ஷாத்காரமே இங்கு ஜ்ஞானமென்று கூறப்படுகிறது என்று விளங்குகிறது. முதல் பாத₃த்தில் ''ஶ்ரேய:'' என்றும், இரண்டாம் பாத₃த்தில் ''விஶிஷ்யதே'' என்றும் கூறியிருப்பது ஒரே பொருளையுடையதாகவே இருக்கவேண்டுமாகையாலே 'ஶ்ரேய:' என்பது ஆத்மாவுக்கு நன்மை பயப்பதில் சிறப்புற்றது என்று பொருள்படுகிறது. பரம்பரையாக உபாயமாக இருப்பதும் ஸௌகர்யமிகுதியினாலே ஆத்மாவுக்கு முக்₂யோபாயத்தைக் காட்டிலும் நன்மைபயப்பதாகிறது. பரம்பரோபாயம் பற்றி இங்கு சொல்லப்பட்ட அனைத்தும் மேலே 2, 3-ம் பாத₃ங்களில் வரும் பரம்பரோபாயங்களுக்கும் பொருந்தும். (ஜ்ஞாநாத் த்₄யாநம் விஶிஷ்யதே) நிறைவடையாத அந்த ஆத்மஸாக்ஷாத்காரத்தைக் காட்டிலும் அதற்கு

निरस्तपापतया मनसश्शान्तिर्भविष्यति, शान्ते मनसि आत्मध्यानं संपत्स्यते, ध्यानाच्च तदापरोक्ष्यम्, तदापरोक्ष्यात् परा भक्तिरिति भक्तियोगाभ्यासाशक्तस्य आत्मनिष्ठैव श्रेयसी। आत्मनिष्ठस्याप्यशान्त-

---

உபாயமான ஆத்மாவை த்4யானிப்பது சிறந்தது. (த்4யாநாத் கர்மப2லத்யாக3:) நிறைவடையாத ஆத்மத்4யானத்தைக் காட்டிலும் அதற்கு உபாயமான ப2லத்யாக3த்தோடு அனுஷ்டி2க்கப்படும் கர்மமே சிறந்தது. இரண்டாம் பாத3த்திலுள்ள 'விஶிஷ்யதே' என்னும் பத3த்தை இங்கும் கூட்டிக்கொள்ளவேண்டும். 11-வது ஶ்லோகத்தில் ப2லத்யாக3த்தைச் சொன்னதைப் ப2ல த்யாக3த்தோடு கூட அனுஷ்டி2க்கப்படும் கர்மயோக3த்தைச் சொல்லுவதாகப் பொருள் கொண்டதுபோல் இங்கும் கொள்ளவேண்டும். (த்யாக3ாத் ஶாந்தி: அநந்தரம்) ப2லனில் விருப்பத்தைவிட்டு அனுஷ்டி2க்கப்படும் கர்மயோக3த்திலிருந்து அடுத்தபடியாக மனச்சாந்தி உண்டாகிறது கர்மத்தினல் பாபம் நீங்கப்பெற்று, அது காரணமாக ரஜஸ் தமோகு3ணங்கள் குறையப்பெற்று, அதனுலே விருப்பு வெறுப்பு முதலானவை அற்றிருக்கையாகிற மனஶ்ஶாந்தி ஏற்படுகிறது என்று கருத்து. மனஶ்ஶாந்தி ஏற்பட்டவளவில் ஆத்மத்4யானம் உண்டாகும்; அந்த த்4யானத்தினல் ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படும்; அந்த ஸாக்ஷாத்காரத்தினல் பரப4க்தி ஏற்படும். ஆகையால் ப4க்தியோக3த்தில் பழகுவதற்கு ஶக்தியில்லாதவன் ஆத்மத்4யானம் செய்வதே சிறந்தது. ஆத்மத்4யானம் செய்யும்போது மனஶ்ஶாந்தி ஏற்படவில்லை என்ருல் ஆத்மத்4யானம் ஸித்3தி4ப்பதற்காக ஆத்மஜ்ஞானத்தை உள்ளடக்கியதாய், ப2லனில் விருப்பமற்றதான கர்மயோக3த்தில் ஈடுபடுவதே சிறந்தது என்று கருத்து. இங்கு ஓர் ஆக்ஷேபம் எழுகிறது. அதாவது—'த்யாக3ாத் ஶாந்தி:' என்று தொடங்கும் நாலாவது பாத3த்திலும் முன் மூன்று பாத3ங்களிற்போலே "த்யாக3த்தைக் காட்டிலும் ஶாந்தி சிறந்தது" என்று பொருள்கொள்வதே உசிதம். வேறுவிதமாகப் பொருள்கொண்டால் ரீதிப4ங்க3ம் என்னும் தோ3ஷம் வருகிறது. த்4யானத்துக்கும் அதற்கு உபாயமான கர்மப2லத்யாக3த்துக்கும் இடையில் ஶாந்தியைப் புகுத்தினல் த்4யானத்தைக் காட்டிலும் கர்மப2லத்யாக3ம் சிறந்தது என்று கூறுவதும் பொருந்தாது என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத4ானம் பின்வருமாறு:— 'த்யாக3ாத் ஶாந்திர் விஶிஷ்யதே' என்று பத3ங்களையிடாமல் 'த்யாக3ாத் ஶாந்திரநந்தரம்' என்று பத3ங்களையிட்டிருப்பதிலிருந்தே

मनसो निष्ठाप्राप्तयेऽन्तर्गतात्मज्ञानानभिसंहितफलकर्मनिष्ठैव श्रेय-सीत्यर्थः ॥ १२ ॥

முன் மூன்று பாத₃ங்களில் பின்பற்றப்பெற்ற ரீதி இங்கு கைவிடப்பட்டது என்று விளங்குகிறது. 'அநந்தரம்' என்னும் பத₃த்திலிருந்து, கர்மப₂லத்யாக₃த்திஞல் மனஶ்ஶாந்தி ஏற்படு கிறதுஎன்றும் விளங்குகிறது. 3, 4 பாத₃ங்களைச் சேர்த்துப்பார்க்கும் போது கர்மப₂லத்யாக₃மானது மனஶ்ஶாந்தியை விளைப்பதன்மூலம் ஆத்மத்₄யானத்தை ஸாதி₄த்துத் தருகிறது என்று விளங்குகிறது. ஆகையாலே குறையில்லை. இங்கு பின்வருமாறு மற்ருேராக்ஷேபமும் எழுகிறது. இந்த ஶ்லோகத்தில் "அப்₄யாஸத்தைக் காட்டிலும் ஜ்ஞானம் சிறந்தது. ஜ்ஞானத்தைக் காட்டிலும் த்₄யானம் சிறந்தது. த்₄யானத்தைக் காட்டிலும் த்யாக₃ம் சிறந்தது" என்று மேன்மேலே சிறப்பைச் சொல்லுவதாகத் தெளிவாக விளங்கும்போது, அப்படிக் கொள்ளாமல் முக்₂யோபாயத்தைக் காட்டிலும் பரம்பரோபாயம் சிறந்தது என்று நலிந்து பொருள்கொள்ளக் காரணமென்ன? என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத₄ானம் பின்வருமாறு— 9-வது ஶ்லோகத்தில் தன்னிடத்தில் நெஞ்சை வைக்கையாகிற ப₄க்தி யோக₃த்தில் ஶக்தியில்லாதவனுக்கு அப்₄யாஸயோக₃த்தை விதி₄த் தான். 11-வது ஶ்லோகத்தில் அந்த அப்₄யாஸயோக₃த்துக்கும் காரணமாகப் பத்தாவது ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ப₄க₃வத் கர்மத்திலும் ஶக்தியில்லையாஞல் ஸர்வகர்மப₂லத்யாக₃த்தைச் செய்யவேண்டுமென்று விதி₄த்தான். இந்த ஶ்லோகத்தில் "ஶ்ரேயோ ஹி ஜ்ஞாநமப்₄யாஸாத்" என்று தொடங்கி, "த்யாநாத் கர்மப₂ல த்யாக₃:" என்று அவ்விஷயம் நினைவுபடுத்தப்படுகிறது. ஆக, 'அப்₄யாஸ யோக₃த்தில் ஶக்தியில்லாதவனுக்கே கர்மப₂லத்யாக₃ம்' என்று முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட விஷயமே இங்கு விளக்கபபடுகிறது என்று தெரிகிறது. இந்த ஶ்லோகத்தில் இவ்விரண்டுக்கும் நடுவில் படிக்கப்படும் ஜ்ஞானத்₄யானங்களும் அப்₄யாஸத்துக்கு முற்பட்டதாகவும், கர்மத்துக்குப் பிற்பட்டதாகவும் விளங்குகையால், அப்₄யாஸத்தில் அஶக்தனுக்கு ஜ்ஞானமும், அதில் அஶக்தனுக்கு த்₄யானமும், அதில் அஶக்தனுக்கு த்யாக₃ மும் சிறந்தது என்று இங்கு கூறுவதாகக் கொள்வதே பொருத்த மாகும். ஆக இதுவரையில் "அஶக்தஸ்யாத்மநிஷ்டா₂" [16] என்று கீ₃தார்த்த₂ஸங்க்₃ரஹத்தில் ப₄க்தியோக₃த்தில் ஶக்தியில்லாத வன் கர்மயோக₃த்தைக் கொண்டு ஆத்மநிஷ்டை₂யைப் பழக வேண்டும் என்று கூறிய அர்த்த₂ம் நிறைவுற்றது. 12.

॥ भा ॥ अनभिसंहितफलकर्मनिष्ठस्योपादेयान् गुणानाह—

अद्वेष्टा सर्वभूतानां मैत्रः करुण एव च।
निर्ममो निरहङ्कारस्समदुःखसुखः क्षमी ॥ १३ ॥
सन्तुष्टस्सततं योगी यतात्मा दृढनिश्चयः।
मय्यर्पितमनोबुद्धिर्यो मद्भक्तस्स मे प्रियः ॥ १४ ॥

13. அத்₃வேஷ்டா ஸர்வபூ₄தாநாம் மைத்ர꞉ கருண ஏவ ச।
நிர்மமோ நிரஹங்காரஸ் ஸமது₃꞉க்க₂ஸுக₂꞉ க்ஷமீ॥

14. ஸந்துஷ்டஸ்ஸததம் யோகீ₃ யதாத்மா த்₃ருட₄நிஶ்சய꞉।
மய்யர்ப்பிதமநோபு₃த்₃தி₄ர்யோ மத்₃ப₄க்தஸ்ஸ மே ப்ரிய꞉॥

ஸர்வபூ₄தாநாம் அத்₃வேஷ்டா—எல்லா ஜீவராஶிகளையும் வெறுக்காதவனாய், **மைத்ர꞉**—அவர்களிடத்து நட்புக் கொண்டவனாய், **கருண꞉ ஏவ ச** — (அவர்கள் துன்புறும் போது) கருணை காட்டுபவனாய், **நிர்மம꞉**—மமகாரமற்றவனாய், **நிரஹங்கார꞉**—அஹங்காரமற்றவனாய், **ஸம து₃꞉க்க₂ ஸுக₂꞉** — இன்பதுன்பங்களை ஒக்க நோக்குகின்றவனாய், **க்ஷமீ** — பொறுமையுடையவனாய், **ஸந்துஷ்ட꞉** — திருப்தி பெற்றவனாய், **ஸததம் யோகீ₃** — எப்போதும் ஆத்மஸ்வரூபத்தை அநுஸந்திப்பவனாய், **யதாத்மா** — மனத்தை அடக்கியவனாய், **த்₃ருட₄ நிஶ்சய꞉** — (ஶாஸ்த்ரங்களில் சொன்ன அர்த்தங்களில்) உறுதியான ஜ்ஞானத்தை யுடையவனாய், **மயி அர்ப்பிதமநோபு₃த்₃தி₄꞉**—என்னிடத்தில் செலுத்தப்பட்ட நெஞ்சையும் துணிந்த அறிவையும் உடையவனாய், **ய꞉ மத்₃ப₄க்த꞉** — (எவனொருவன் கர்மயோகத்தைச் செய்து) என்னிடம் அன்பு செலுத்துகிறானோ, **ஸ꞉**—அவன், **மே**—எனக்கு, **ப்ரிய꞉**—இனியவன்.

---

13. மற்றோ ரிடத்து மறமற்று மித்திரனா
யுற்றான் கருணை யுறுமமதை—செற்றா
னகங்கார மற்றா னமர்பொறையன் றுக்கஞ்
சுகங்காணி லொப்பான் றுணிந்து.

14. பெற்றதமைந் தென்றும் பிறங்குயிர்க்கண் யோகியா
யுற்றமன முள்ளொடுக்கி யோர்ந்துதெளிந்—தற்றமற
வென்னமர்ந்த நெஞ்சுதுணி வெய்தியான்ற னென்
றன்னமர்ந்து நானுகப்பன் ருன். [பத்தன்

மற்று ஓர் இடத்து மறம் அற்று — மற்ற எல்லா ஜீவ ராஶிகளையும் வெறுக்காதவனாய், **மித்திரனாய்**—அவர்களிடத்து நட்புக்கொண்டவனாய், **கருணை உற்றான்**—(அவர்கள் துன்புறும்போது) கருணை காட்டுபவனாய், **உறு மமதை செற்றான்**—மமகாரமற்றவனாய், **அகங்காரம் அற்றான்**—அஹங்காரம் அற்றவனாய், **அமர் பொறையன்**—பொறுமையுடையவனாய், **துக்கம் சுகம் காணில் துணிந்து ஒப்பான்**—இன்ப துன்பங்களை உறுதியாக ஒக்கநோக்குகின்றவனாய், **பெற்றது அமைந்து**—கிடைத்ததுகொண்டு திருப்தி பெற்றவனாய், **என்றும் பிறங்கு உயிர்க்கண் யோகியாய்** — எப்போதும் ஜ்ஞானமயமான ஆத்மஸ்வரூபத்தை அநுஸந்தி₄ப்பவனாய், **உற்ற மனம் உள் ஒடுக்கி**—மனத்தை வெளியில் திரியாமல் உள்ளே செலுத்தியவனாய், **அற்றம் அற ஓர்ந்து தெளிந்து** — (ஶாஸ்த்ரங்களில் சொன்ன அர்த்த₂ங்களில்) ஐயமற ஆராய்ந்து தெளிவு பெற்றவனாய், **என் அமர்ந்த நெஞ்சு துணிவு எய்தியான் தான்**—என்னிடத்தில் செலுத்தப்பட்ட நெஞ்சையும் துணிந்த அறிவையும் உடையவனாயிருக்கும், **என் பத்தன் தன் அமர்ந்து**—(கர்மயோக₃த்தைச் செய்து) என்னிடம் அன்பு செலுத்துகிறவனிடம் ஈடுபட்டு, **நான் உகப்பன் தான்**—நான் உகந்திருப்பேன்.

13-14. இவ்வத்₄யாயத்தின் தொடக்கத்திலிருந்து இதுவரையில் ''ப₄க்தே: ஶ்ரைஷ்ட்₂யம் உபாயோக்தி: அஶக்தஸ்யாத்மநிஷ்ட₂தா'' [16] என்று கீ₃தார்த்த₂ஸங்க்₃ரஹத்தில் சொல்லப்பட்ட மூன்று விஷயங்கள் விளக்கப்பட்டன. ''தத்ப்ரகாராஸ்து அதிப்ரீதிர் ப₄க்தே த்₃வாத₃ஶ உச்யதே'' [16] என்று இரண்டு விஷயங்கள் எஞ்சி நிற்கின்றன. அவற்றில் ப₄க்தனிடத்தில் அதிப்ரீதியாகிற கடைசி விஷயம் இவ்வத்தியாயத்தின் கடைசி ஶ்லோகமான 20-ம் ஶ்லோகத்தில் சொல்லப்பட இருக்கிறது. இதுமுதல் 19-வது ஶ்லோகம் ஈறாக ஏழு ஶ்லோகங்களாலே ''தத்ப்ரகாரா:'' என்று சொல்லப்பட்ட ப₂லனில் விருப்பமற்றுச் செய்யப்படும் கர்மயோக₃த்தில் ஊன்றி நிற்பவன் கைக்கொள்ளவேண்டிய கு₃ணங்கள் கூறப்படுகின்றன.

இவ்விடத்தில் பின்வருமாறு ஓர் ஆக்ஷேபம் எழுகிறது:— இங்கு கர்மயோக₃நிஷ்ட₂னுக்குக் கைக்கொள்ளத்தக்க கு₃ணங்களைச் சொல்லு கிறது என்பது எப்படிப் பொருந்தும்? 14, 16-வது ஶ்லோகங் களில் "மத்₃ப₄க்த:" என்றும், 17, 19-வது ஶ்லோகங்களில் "ப₄க்தி மாந்" என்றும் இவனை ப₄க்திநிஷ்ட₂னென்று கூறியிருக்கிறது. இந்த எல்லா ஶ்லோகங்களிலும் கண்ணன் அவனைத் தனக்கு ப்ரியனாகவும் காட்டியிருக்கிறான். ஆகையால், "ப்ரியோ ஹி ஜ்ஞாநி நோऽத்யர்த்த₂ம் அஹம் ஸ ச மம ப்ரிய:" [கீ₃தை 7-17] என்று சொல்லப்பட்ட ப்ரியனான ப₄க்திநிஷ்ட₂னே இங்கும் கூறப்படுவ தாகக் கொண்டு, "அத்₃வேஷ்டா" முதலான கு₃ணங்கள் ப₄க்தி நிஷ்ட₂ன் கைக்கொள்ளவேண்டியவை என்று கொள்வதன்றோ பொருத்தம்—என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத₄ானம் பின் வருமாறு— "த்₄யாநாத் கர்மப₂லத்யாக₃:" [12] என்று கர்ம யோக₃த்தைப் பற்றிப் பேசியவுடன் படிக்கப்படும் இக்குணங்கள் கர்மயோக₃த்துக்கு அங்க₃மானவையே என விளங்குகிறது. அங்க₃ மான இந்த கு₃ணங்களினால் ஏற்படும் உபகாரம் "த்யாக₃ாச் சா₂ந்திரநந்தரம்" [12] என்று காட்டப்பட்டது. இந்த கு₃ணங்கள் கர்மயோக₃த்துக்கு அங்க₃மாக முன்னமே காட்டப்பட்டுமிருக்கின்றன. இவனை ப₄க்தனாகக் குறிப்பிட்டிருப்பதும் கர்மயோக₃த்தில் அடங்கிய ப₄க்தியையிட்டே என்று ஆங்காங்கு வ்யாக்₂யானத்தில் விளக்கப் போகிறோம். ப₄க்தியில்லாத கர்மஜ்ஞான யோக₃ங்கள் இல்லையே. இதையே ஆளவந்தாரும், "த்ரயாணாமபி யோக₃ாநாம் த்ரிபி₄ர ந்யோந்யஸங்க₃ம: ||" [கீ-ஸம் 24] [கர்ம ஜ்ஞான ப₄க்தியோக₃ம் ஒவ் வொன்றிலும் மற்ற இரண்டும் கலந்திருக்கின்றன.] என்று காட்டி னார். 20 வது ஶ்லோகத்தில் ஸாக்ஷாத் ப₄க்தியோக₃நிஷ்ட₂ர்கள் கூறப்படுகிறார்கள். அந்த ஶ்லோகத்தில் 'து' ஶப்₃த₃த்தாலும், "மத்பரமா ப₄க்தா:" என்னும் விஶேஷணத்தாலும், "அதீவ மே ப்ரியா:" என்று மிக இனியவர்களாகக் காட்டுகையாலும் முன்னால் சொல்லப்பட்ட கர்மயோக₃நிஷ்ட₂ர்களாகிற ப₄க்தர்களைக் காட்டிலும் சிறந்த ப₄க்தியோக₃நிஷ்ட₂ர்களான ப₄க்தர்கள் இவர்கள் என்று உணர்த்தப்படுகிறது. ஆகையால் அதற்கு முன் ஏழு ஶ்லோகங் களில் சொல்லப்படும் ப₄க்தர்கள் ப₄க்தியோக₃நிஷ்ட₂ர்களைக் காட்டி லும் தாழ்ந்த கர்மயோக₃நிஷ்ட₂ர்களான ப₄க்தர்களே என்று விளங்குகிறது. (அத்₃வேஷ்டா ஸர்வபூ₄தாநாம்) நெஞ்சால் தன்னை வெறுப்பவர்களும் வாக்காலும் செயலாலும் தனக்குத் தீங்கு புரிபவர் களுமான எல்லா ஜீவராஶிகளைக் குறித்தும் வெறுப்பில்லாதவன்.

॥ भा ॥ अद्वेष्टा सर्वभूतानाम् — विद्विषतामपकुर्वतामपि सर्वेषां भूतानामद्वेष्टा— मदपराधानुगुणमीश्वरप्रेरितान्येतानि भूतानि द्विषन्त्यपकुर्वन्ति चेत्यनुसन्दधानः, तेषु द्विषत्स्वपकुर्वत्सु च सर्वभूतेषु मैत्रीं

தன்னை வெறுக்காதவர்களிடம் வெறுப்படையாமலிருப்பது நல்ல மனிதர் எவருக்குமேயுள்ளது. ஆகையால் கர்மயோக₃நிஷ்ட₂னுக்கு அது இங்கு சிறப்பாகக் கூறத்தக்கதன்று. ஆகையால் இங்கு ஸர்வபூ₄தம் தன் விஷயத்தில் மனத்தால் வெறுப்புடையவர்களாய், அது காரணமாக வாக்காலும் செயலாலும் தனக்குத் தீங்குபுரிபவர்களான ஜீவராசிகளையே காட்டுகிறது என்று கொள்ள வேண்டும். இவர்களிடமல்லவோ வெறுப்பு ஏற்பட இடமுள்ளது. இப்படி வெறுப்பு ஏற்படாமலிருப்பது மாத்திரமல்ல; அவர்களிடம் நட்புமுள்ளது என்கிறது அடுத்தபடியாக—(மைத்ர:) அவர்களுக்கும் நன்மையை விரும்புகிறவன் என்றபடி. இதற்குக் காரணமென்ன? எனில்: "நான் செய்த முன்வினைகள் காரணமாக எம்பெருமானால் தூண்டப்பட்டு இந்த ஜீவராசிகள் என்னிடம் த்₃வேஷத்தையும் அபகாரத்தையும் செய்கின்றன" என்று அனுஸந்தி₄க்கிறானாகையாலே தன்னிடம் வெறுப்புக்கொண்டு அபகாரம் செய்யும் ஜீவராசிகளிடத்தில் வெறுப்படையாதிருப்பதோடன்றியில் அவர்களுக்கு நன்மையையும் விரும்புகிறானன்றோ இவன். இப்படி அவர்களுக்கு நன்மையை விரும்புவதோடன்றியில் அவர்கள் துன்புறும்போது தானும் துன்புறுகையாகிற கருணையையும் காட்டுகிறான் என்கிறது. அடுத்தபடியாக—(கருண ஏவ ச) அவர்கள் விஷயத்தில் கருணையைச் செய்பவனாகவும் இருக்கிறான் என்றபடி. "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்₄ருஶம் ப₄வதி து₃:க்கி₂த:" [ரா-அ 2-40] [மனிதர்கள் துன்புறும்போது அவர்களைக் காட்டிலும் அதிகமாகத் துன்புறுகிறான் ராமன்] என்று வால்மீகி கருணாகுத்ஸ்த₂னின் கருணையை விளக்கியது இங்கு காணத்தக்கது. "மைத்ர: கருண ஏவ ச" என்னும் தொடரில் ஏவகாரத்தாலே முன் எடுத்த அபகாரிகள் விஷயத்திலும் இவன் நட்பையும் கருணையையும் காட்டுகிறான் என்று விளங்குகிறது. (நிர்மம:) தன்னுடையது என்று நினைக்க இடமுள்ள தே₃ஹத்திலும், இந்த்₃ரியங்களிலும் அவற்றோடு தொடர்புடைய உற்றார் உறவினர் செல்வம் முதலியவற்றிலும் தன்னுடையது என்னும் எண்ணமற்றவன், இதற்குக் காரணத்தைக் காட்டுகிறது அடுத்தபடியாக—(நிரஹங்கார:) தானல்லாத தே₃ஹத்தில் தான் என்னும் அபி₄மானமற்றவன். தே₃ஹத்தைத் தான்

मतिं कुर्वन् मैत्रः, तेष्वेव दुःखितेषु करुणां कुर्वन् करुणः, निर्ममः— देहेन्द्रियेषु तत्संबन्धिषु च निर्ममः, निरहङ्कारः—देहात्माभिमानरहितः, तत एव समदुःखसुखः—सुखदुःखागमयोः साङ्कल्पिकयोः हर्षोद्वेगरहितः,

---

என்று நினைப்பதால்தானே தே3ஹத்தோடு தொடர்புடையவற்றைத் தன்னுடையது என்று நினைக்கிறான், ''நிரஹங்கார'' ஶப்3த3த்திற்கு ''நிர்க3தாஹம்ப்ரத்யய:'' [அஹம் என்னும் நினைவு நீங்கப்பெற்றவன்] என்று ஶங்கரர் ப4ாஷ்யமிட்டது சரியல்ல என்று இதனால் காட்டப்பட்டது. 'அஹம்' ஶப்3த3த்தால் சொல்லப் படுவது ஆத்மா என்று பல ப்ரமாணங்களால் தேறுகிறதன்றோ.

''அநாத்மந்யாத்மபு3த்3தி4ர் யா சாஸ்வே ஸ்வமிதி யா மதி: |
ஸம்ஸாரதரு ஸம்பூ4தி பீ3ஜமேதத்3 த்3விதா4 ஸ்தி2தம் ||
பஞ்சபூ4தாத்மகே தே3ஹே தே3ஹீ மோஹதமோவ்ருத: |
அஹம்மமைததி3த்யுச்சை: குருதே குமதிர்மதிம் //''

[வி-பு 6-7-11, 12]

[ஆத்மாவல்லாததான தே3ஹத்தில் ஆத்மா என்னும் எண்ணமும், ஆத்மாவோடு தொடர்பற்ற புத்ர பௌத்ர க்3ருஹ க்ஷேத்ராதி3களில் தன்னுடையது என்னும் எண்ணமும் ஸம்ஸாரமாகிற மரம் வளர்வதற்குக் காரணமான இரு பகுதியுள்ள விதையாகும். ஐந்து பூ4தங்களாலான தே3ஹத்தில் மயக்கமாகிற இருளில் ஆழ்ந்திருக்கும் அறிவுகெட்ட ஜீவன். தான் என்றும், தன்னுடையது என்றும் உறுதியான எண்ணத்தைக் கொள்கின்றான்] என்று தொடங்கி ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும் அஹங்கார மமகாரங்களின் உண்மைப் பொருள் விளக்கப்பட்டது இங்கு அநுஸந்தி4க்கத்தக்கது. இந்த அஹங்கார மமகாரமற்றிருக்கையால் ஏற்படும் தன்மையை அடுத்தபடி கூறுகிறான்—(ஸமது3:க்க2 ஸுக2:) அஹங்கார மமகாரங்களால் இன்ப துன்பங்கள் விளைந்தால் அதனால் ஆனந்த3மோ ப4யமோ அடையாதவன். (க்ஷமீ) ஶீதோஷ்ணங்கள் முதலானவற்றால் விளையும் தவிர்க்கவொண்ணாத இன்பதுன்பங்கள் வந்தால் அவற்றாலும் ஆனந்த3மோ ப4யமோ அடையாதவன். ''க்ஷமீ'' என்றதற்கு அபகாரம் செய்பவர்களிடம் பொறுமையுடையவன் என்று பொருள் கொள்ளப்பார்த்தால் 'அத்3வேஷ்டா ஸர்வபூ4தாநாம்' என்பதோடு புநருக்தி ஏற்படும். ஆகையால் ''ஸமது3:க்க2ஸுக2:'' என்பதற்கு அஹங்கார மமகாரங்களாகிற ஸங்கல்பங்களால் ஏற்படும் ஸுக2 து3:க்க2ங்களைப் பொறுத்துக்கொள்கின்றவன் என்றும், 'க்ஷமீ'

क्षमी — स्पर्शप्रभवयोरवर्जनीययोरपि तयोर्विकाररहितः, संतुष्टः— यदृच्छोपनतेन येनकेनापि देहधारणद्रव्येण सन्तुष्टः। सततं योगी— सततं प्रकृतिवियुक्तात्मानुसन्धानपरः, यतात्मा—नियमितमनोवृत्तिः, दृढ-

என்பதற்கு "மாத்ராஸ்பர்ஶாஸ்து" [கீ₃தை 2-14] என்ற ஶ்லோகத்தில் சொன்ன ரீதியில் ஶீதோஷ்ணங்கள் முதலான ஸ்பர்ஶங்களால் ஏற்படும் தவிர்க்கவொண்ணாத இன்பதுன்பங்களையும் பொறுத்துக்கொண்டு அவற்றால் விகாரமடையாமலிருப்பவன் என்றும் பொருள்கொள்ளப்பட்டது. அஹங்காரமமகாரங்களைச் சொன்ன வுடன் 'ஸமது₃:க்க₂ஸுக₂:' என்று கூறியிருப்பதும் இப்படிப் பொருள் கொள்வதே பொருந்தும் என்று காட்டுகிறது. (ஸந்துஷ்ட:) தற் செயலாகக் கிடைக்கும், உயிர்வாழ உதவும் எந்தப் பொருளைக் கொண்டும் திருப்தி பெறுபவன். "ஸந்துஷ்டோ யேநகேநசித்" என்று 19-வது ஶ்லோகத்தில் சொல்லப்படுவதாய், "யத்₃ருச்ச₂ா லாப₄ஸந்துஷ்ட:" [கீ₃தை 4-22] என்று ஏற்கனவே சொல்லப்பட்ட தாயிருக்கையாலே, ஆத₃ரமிகுதியாலே அதுவே இங்கும் சொல்லப் படுகிறது என விளங்குகிறது.

"யேநகேநசிதா₃ச்ச₂ந்ந: யேநகேநசிதா₃ஶித: ।
யத்ரக்வசநஶாயீ ச தம் தே₃வா ப்₃ராஹ்மணம் விது₃:॥"
[பா₄ர. மோக்ஷ 251-12]

[தற்செயலாகக் கிடைத்த ஏதாவதொன்றை உடுத்துக்கொண்டு தற்செயலாகக் கிடைத்த ஏதாவதொன்றை உண்டு, தற்செயலாகப் போய்ச்சேரும் ஏதாவதொரு இடத்தில் படுப்பவன் எவனோ அவனையே தே₃வர்கள் ப்₃ராஹ்மணன் என்று அறிகின்றனர்.] 'ந ஸந்நிபதிதம் த₄ர்ம்யம் உபபோ₄க₃ம் யத்₃ருச்ச₂யா | ப்ரத்யாசக்ஷே ந சாப்யேநம் அநுருந்தே₄ ஸுது₃ர்லப₄ம் ||' [பா₄ர. மோக்ஷ 179 24] [தற்செயலாகக் கிடைத்ததாய் த₄ர்மவரம்பை மீறாததான போ₄க₃த்தை நான் தள்ளுவதில்லை. கிடைத்தற்கரிய போ₄க₃த் தைத்தேடி ஓடுவதுமில்லை] என்று பா₄ரதத்தில் சொல்லப்பட்டபடி ஶாஸ்த்ரங்களுக்கு முரண்படாதவையாய் முயற்சியில்லாமல் கிடைத்த வற்றில் "இது பெரியதா, சிறியதா? சுவையுடையதா, சுவையற்றதா?" என்னும் வேற்றுமை பாராட்டாமல் திருப்தியடையவேணும் என்று கருத்து. (ஸததம் யோகீ₃) ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மாவை எப்போதும் அநுஸந்தி₄த்துக்கொண்டிருப்பவன். யோக₃ஶப்₃த₃ம் ஆத்ம ஸாக்ஷாத்காரத்தையே குறிக்குமாயினும், தே₃ஹத்தோடிருக்கும்

निश्चयः —अध्यात्मशास्त्रोदितेष्वर्थेषु दृढनिश्चयः, मय्यर्पितमनोबुद्धिः— भगवान् वासुदेव एवानभिसंहितफलेनानुष्ठितेन कर्मणा आराध्यते, आराधितश्च ममात्मापरोक्ष्यं साधयिष्यतीति मय्यर्पितमनोबुद्धिः, य

கர்மயோக3 நிஷ்ட2ன் எப்போதும் ஆத்மஸாக்ஷாத்காரத்தைப் பெற்றிருப்பது இயலாதாகையாலே கணநேரம் ஏற்படும் ஆத்மஸாக்ஷாத்காரத்தை எப்போதும் அனுஸந்தி4த்துக்கொண்டிருப்பவன் என்றே பொருள் கொள்ளவேண்டும். இது ஆத்மஸாக்ஷாத்காரத்துக்குக் காரணமாகிறபடியால் இங்கு யோக3மெனப்படுகிறது. (யதாத்மா) ஆத்மாவல்லாத விஷயங்களில் செல்லாதபடி நெஞ்சை அடக்கியவன், எப்போதும் ஆத்மாவைச் சிந்திப்பதுபோலே, ஆத்மாவல்லாதவற்றைச் சிந்திப்பதிலிருந்து நீங்குவதும் ஆத்மஸாக்ஷாத்காரத்துக்கு உறுப்பாகிறதன்றோ. அது இங்கு சொல்லப்படுகிறது. (த்3ருட4 நிஸ்சய:) ஆத்மாவைப்பற்றிய ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட விஷயங்களில் உறுதியான நிர்ணயத்தோடிருப்பவன். பொதுவாக "த்3ருட4 நிஶ்சய:" என்று சொல்லியிருந்தபோதிலும் மற்றவர்களுக்கு ஸந்தே3ஹம் ஏற்படக்கூடிய இடத்திலேயே இவனுக்கு நிஶ்சயத்தைச் சொல்லவேண்டும். அதுவும் இவனது ஆத்மஸாக்ஷாத்காரத்துக்கு உறுப்பாயிருக்கவேணும். அத்தகையது ஆத்மாவைப்பற்றிய ஶாஸ்த்ரங்களில் நிஶ்சயமேயாகுமாகையால் இங்கு அப்பொருளே பொருந்தும். (மய்யர்ப்பிதமநோபு3த்3தி4:) "ப4க3வானான வாஸுதே3வனே ப2லனில் விருப்பமில்லாமல் என்னால் அநுஷ்டி2க்கப்பட்ட கர்மயோக3த்தினால் ஆராதி4க்கப்படுகிறான்; ஆராதி4க்கப்பட்டு எனக்கு ஆத்மஸாக்ஷாதகாரத்தை உண்டாக்கித்தருவான்" என்று என்னிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்ட மனத்தையும் புத்தியையுமுடையவன். "அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போ4க்தா ச ப்ரபு4ரேவ ச" [கீ3தை 9.23] என்று எல்லாக் கர்மங்களாலும் ஆராதி4க்கப்படுபவனாகவும், ப2லனை அளிப்பவனாகவும் தன்னைக் கண்ணன் கூறியிருக்கிறானாகையாலே கர்மயோக3நிஷ்ட2ன் அவனிடத்தில் மநோபு3த்3தி4களை ஸமர்ப்பிப்பதாவது—அவனையே கர்மங்களால் ஆராதி4க்கப்படுபவனாகவும், ப2லனை அளிப்பவனாகவும் அநுஸந்தி4க்கையேயாகும். ப4க3வச்ச2ப்3த3த்தால் சொல்லப்படும் கல்யாணகு3ணபூர்த்தியும் தோ3ஷமின்மையுமாகிற உப4யலிங்க3ம் இவனே கர்மங்களுக்குப் ப2லனை அளிக்கவல்லவன் என்று காட்டித் தருகிறது. இவன் எல்லா தே3வர்களுக்குள்ளும் அந்தர்யாமியாயிருக்கும் வாஸுதே3வனாகையாலே எல்லா தே3வரைக்குறித்த கர்மங்களும் இவனுக்கு

एवंभूतो मद्भक्तः—एवं कर्मयोगेन मां भजमानो यः, स मे प्रियः ॥ १३ ॥ १४ ॥

यस्मान्नोद्विजते लोको लोकान्नोद्विजते च यः ।
हर्षामर्षभयोद्वेगैर्मुक्तो यस्स च मे प्रियः ॥ १५ ॥

15. யஸ்மாந்நோத்₃விஜதே லோகோ
லோகாந்நோத்₃விஜதே ச ய:।
ஹர்ஷாமர்ஷப₄யோத்₃வேகை₃ர்முக்தோ
யஸ்ஸ ச மே ப்ரிய: ॥

யஸ்மாத்—எந்தக் கர்மயோக₃நிஷ்ட₂னிடம், **லோக:**—இவ்வுலகம், **ந உத்₃விஜதே**—அஞ்சி நடுங்காதோ, **ய:**—

ஆராத₄னமாகவேயாகின்றன என்று விளங்குகிறது. எல்லாக் கர்மங்களாலும் ஆராதி₄க்கப்படுபவனாக நினைப்பது இங்கு மனத்தை ஸமர்ப்பிப்பதாகும். அவனே ப₂லனையளிப்பவன் என்று உறுதி கொள்வது பு₃த்₃தி₄யை ஸமர்ப்பிப்பதாகும். அன்றிக்கே எல்லாக் கர்மங்களாலும் ஆராதி₄க்கப்படுமவனாகவும் அவற்றுக்குப் ப₂லனையளிப்பவனாகவும் நினைப்பதே மனத்தை ஸமர்பிப்பது என்றும், அப்படி உறுதி கொள்வதே பு₃த்₃தி₄யை ஸமர்ப்பிப்பது என்றும் கொள்ளலாம். அல்லது 'மநோபு₃த்₃தி₄:' என்னும் தொடர் மனத்தில் உறுதியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (யோ மத்₃ப₄க்த: ஸ மே ப்ரிய:) எவனொருவன் இவ்வண்ணமாகக் கர்மயோக₃த்தை அனுஷ்டி₂ப்பதின்மூலம் என்னிடம் அன்பு செலுத்துகிறானோ அவன் எனக்கு இனியவன். ப₄க்தியோக₃த்தில் ஶக்தியில்லாதவனுக்கு மேன்மேலே பரம்பரோபாயங்களை விதி₄க்கிற ப்ரகரணமாகையாலே இங்கு ப₄க்தியோக₃நிஷ்ட₂னைக் கூறுவதாகச் சொல்லமுடியாது. ஆகையால் கர்மயோக₃த்தின் மூலம் என்னிடம் அன்பு செலுத்துபவன் என்றே பொருள் கொள்ளவேண்டும். "ப₄க்த:" என்றே இங்கு விஶேஷ்யபத₃ம் இருந்தபோதிலும் விஶேஷணபத₃ங்கள் கர்மயோக₃நிஷ்ட₂ர்களைப் பற்றியவையே என விளங்குகையாலே விஶேஷ்யபத₃மும் அவனையே கூறுகிறது எனக் கொள்ளவேண்டும். (ஸ மே ப்ரிய:) அவன் என்னுடைய ப்ரீதிக்கு விஷயமாகிறான். அவனிடம் அன்பு கொண்ட நான் அவன் விரும்பியதைத் தருகிறேன் என்று கருத்து. 13, 14.

எந்தக் கர்மயோகநிஷ்டன், **லோகாத்**—இவ்வுலகத்திடம், **ந உத்₃விஜதே**—அஞ்சி நடுங்கமாட்டானோ, **யঃ**—எவன், **ஹர்ஷாமர்ஷ ப₄யோத்₃வேகை₃ঃ முக்தঃ**—(அதனாலேயே ஒருவனைக் குறித்து) ஆனந்த₃மும் (ஒருவனைக் குறித்துக்) கோபமும் (ஒருவனைக்குறித்து) ப₄யமும் (ஒருவனைக் குறித்து) நடுக்கமும் நீங்கப்பெற்றவனோ, **ஸঃ ச**—அவனும், **மே**—எனக்கு, **ப்ரியঃ**—இனியவன்.

---

15. **யாவனா லஞ்சா துலகுலகா லஞ்சாதா**
னேவனுகப் பாருமை யேய்ந்தபய—மேவுநடுக்
காங்கவைதாம் விட்டே யமர்வுற் றியல்பவனு
மீங்குகப்புக் கேய்ந்தா னெனக்கு.

யாவனால் உலகு அஞ்சாது—எந்தக் கர்மயோகநிஷ்டனால் உலகம் அஞ்சி நடுங்காதோ, **எவன் உலகால் அஞ்சாதான்**—எவனொருவன் உலகத்திடம் அஞ்சி நடுங்கமாட்டானோ, **உகப்பு**—(ஒருவனைக்குறித்து) ஆனந்த₃மும், **ஆருமை**—(ஒருவனைக் குறித்துக்) கோபமும், **ஏய்ந்த பயம்**—ஒருவனைக் குறித்து) நிலைநின்ற ப₄யமும், **மேவு நடுக்கு**—(ஒருவனைக் குறித்து) அப்பயத்தால்வரும் நடுக்கமும், **ஆங்கு அவைதாம் விட்டே**—ஆகிய இவற்றை விட்டே, **அமர்வுற்று இயல்பவனும்**—ஶாந்தியுடன் கர்மயோகத்தைச் செய்பவனாகிய அவனும், **ஈங்கு**—இவ்வுலகத்தில், **எனக்கு**—எனக்கு, **உகப்புக்கு ஏய்ந்தான்**—ப்ரீதிக்கு இலக்காயிருக்கிறான் (இனியவனாயிருக்கிறான்).

---

15 சென்ற இரண்டு ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட அஹங்காரமமகாரமின்மை முதலானவற்றின் விளைவாக, இவன் உலகத்தை பயந்து நடுங்கச் செய்யும் காரியங்களைச் செய்வதில்லை என்று காட்டி இந்த கு₃ணத்தின் ப₂லனையும் கூறுகிறான். (யஸ்மாத் லோகঃ ந உத்₃விஜதே) எந்தக் கர்மயோக₃நிஷ்ட₂னிடம் இவ்வுலகம் அஞ்சி நடுங்காதோ. உலகிலிருக்கும் அஞ்சிநடுங்காமையைக் கர்மயோக₃நிஷ்ட₂னைக் குறித்து விதி₄ப்பது பொருந்தாதாகையாலே, இந்தக் கர்மயோக₃நிஷ்ட₂ன் உலகம் அஞ்சி நடுங்கும் காரியம் எதை

॥ भा ॥ यस्मात् कर्मनिष्ठात् पुरुषान्निमित्तभूताल्लोको नोद्विजते, यो लोकोद्वेगकरं कर्म किञ्चिदपि न करोतीत्यर्थः, लोकाच्च निमित्तभूताद्यो नोद्विजते—यमुद्दिश्य सर्वलोको नोद्वेगकरं कर्म करोति, सर्वाविरोधित्वनिश्चयात्; अत एव कञ्चन प्रति हर्षेण, कञ्चन प्रत्यमर्षेण, कञ्चन प्रति भयेन, कञ्चन प्रत्युद्वेगेन मुक्तः; एवंभूतो यः, सोऽपि मम प्रियः ॥ १५ ॥

யும் செய்யமாட்டான் என்று கருத்துக்கொள்ளவேணும். ஆக, கர்மயோக3நிஷ்ட2ன் மனம் மெய் மொழிகளாலே உலகம் அஞ்சி நடுங்கும் எக்காரியத்தையும் செய்யக்கூடாது என்று தேறிற்று. "அத்3வேஷ்டா" என்று த்3வேஷமின்மை கூறப்பட்டது. இங்கு அஞ்சி நடுங்கும் காரியத்தைச் செய்யாமை கூறப்படுகிறது. ஆகையால் இரண்டுக்கும் புநருக்தியில்லை. 18 வது ஶ்லோகத்தில் "ஸமஶ்ஶத்ரௌ ச மித்ரே ச" என்று விதி4க்கப்பட்ட 'ஶத்ரு மித்ரர்களிடம் ஓத்தநெஞ்சினனாயிருக்கை'யைக் காட்டிலும் இங்கு சொல்லப்படும் 'உலகம் அஞ்சி நடுங்கும் காரியம் செய்யாமை' வேறுபட்டது என்பதும் தெளிவு. (யঃ லோகாத் ந உத்3விஜதே) எவன் உலகைக்கண்டு அஞ்சி நடுங்கமாட்டானோ. 'இவன் எவர்க்கும் எதிரியாயிராதவன்' என்று உலகம் நிஶ்சயித்திருக்கையாலே, இவனைக் குறித்து எல்லா உலகும் அஞ்சி நடுங்கும் காரியத்தைச் செய்யாது என்று கருத்து. அடுத்த பத3த்தில் "உத்3வேகை3ர் முக்த:" என்று அஞ்சி நடுங்காமை தனித்துக் கூறப்படுகிறதாகையால் அதைக்காட்டிலும் வேறுபாடு கொள்வதற்காக இங்கு இவ்வண்ணமாகத் தாத்பர்யார்த்த2ம் கொள்ளப்பட்டது. "உலகம் இவனைக் குறித்து அஞ்சி நடுங்கும் காரியத்தைச் செய்யாது" என்பதையும் இவனைக் குறித்து விதி4க்க இயலாதாகையால், 'இவன் எவர்க்கும் விரோதி4யல்லாதவன்' என்று உலகம் நினைக்கும்படி இவன் நடந்து கொள்ளவேண்டும் என்று கருத்துக்கொள்ளவேண்டும். இனி இவ்வண்ணமாக எவர்க்குமே இவன் விரோதி4யாயில்லாமையாலும், உலகம் அஞ்சி நடுங்கும் காரியத்தைச் செய்யாமையாலும் ஏற்படும் கு3ணங்களைக் கூறுகிறது அடுத்த பத3ம்—(ஹர்ஷ-அமர்ஷ-ப4ய-உத்3வேகை3: முக்த:) ஒருவனைக் குறித்து ஆனந்த3மும், ஒருவனைக் குறித்துக் கோபமும், ஒருவனைக் குறித்து ப4யமும், ஒருவனைக் குறித்து நடுக்கமும் நீங்கப்பெற்றவன் இக்கர்மயோக3நிஷ்ட2ன் என்று கருத்து.

अनपेक्षश्शुचिर्दक्ष उदासीनो गतव्यथः।
सर्वारम्भपरित्यागी यो मद्भक्तस्स मे प्रियः॥ १६॥

16. **அநபேக்ஷஶ்ஶுசிர்த₃க்ஷ உதா₃ஸீநோ க₃தவ்யத₂:।**
ஸர்வாரம்ப₄பரித்யாகீ₃ யோ மத்₃ப₄க்தஸ்ஸ மே ப்ரிய:॥

அநபேக்ஷ:—ஆத்மா தவிர்ந்த எல்லா வஸ்துக்களையும் விரும்பாதவனாய், **ஶுசி:**—ஆஹாரஶுத்₃தி₄யையுடையவனாய், **த₃க்ஷ:**—(ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட க்ரியைகளைச் செய்வதில்) வல்லவனாய், **உதா₃ஸீந:**—(மற்ற க்ரியைகள் விஷயத்தில்) உதா₃ஸீநனாய், **க₃தவ்யத₂:**—(ஶாஸ்த்ரீய க்ரியைகளைச் செய்வதனால் தவிர்க்கவொண்ணாமல் ஏற்படும் துன்பங்களினால்) துன்புறுதவனாய், **ஸர்வாரம்ப₄பரித்யாகீ₃** — (ஶாஸ்த்ரீய கர்மங்கள் தவிர்ந்த) மற்ற கர்மங்கள் அனைத்தையும் தொடங்காமலே விடுபவனாய், **ய:**—எந்த கர்மயோக₃நிஷ்ட₂ன், **மத்₃ப₄க்த:**—என்னிடம் அன்பு செலுத்துகிறானோ, **ஸ:**—அவன், **மே ப்ரிய:**—எனக்கு இனியவன்.

---

16. **வேண்டுதலி லான்றூயான் றக்கன் விருப்புறு**
னீண்டுபதைப் பற்றிருப்பா னெத்தொழிலு—மூண்டு
தேதியலா தேநிகழும் யோகத்தா னென்பத்தி [புறத்
யாதியல்வா னென்னுகப்பி னன்.

வேண்டுதலிலான்—ஆத்மா தவிர்ந்த எல்லா வஸ்துக்களையும் விரும்பாதவனாய், **தூயான்**—ஆஹாரஶுத்₃தி₄யையுடையவனாய், **தக்கன்**—(ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட

உத்₃வேக₃ஶப்₃த₃ம் ப₄யத்தையும் குறிக்குமாயினும் இங்கு ப₄யத்தைத் தனியாக எடுத்திருக்கையால் ப₄யத்தினால் விளையும் நடுக்கத்தையோ அருவருப்பையோ பொருளாகக் கொள்ளவேணும். (ஸ ச மே ப்ரிய:) முன் ஶ்லோகத்தில் சொன்ன நட்பு, கருணை முதலான கு₃ணங்கள் இல்லாவிடினும் உலகம் அஞ்சி நடுங்கும் காரியத்தைச் செய்யாதவனாயிருந்தால் அதுகொண்டே இவன் எனக்கு இனியவனாகிறான் என்று கருத்து. 15.

॥ भा ॥ अनपेक्षः—आत्मव्यतिरिक्ते कृत्स्ने वस्तुन्यनपेक्षः, शुचिः—शास्त्रविहितद्रव्यवर्धितकायः, दक्षः— शास्त्रीयक्रियोपादान-

---

க்ரியைகளைச் செய்வதில்) வல்லவனாய், **விருப்புறான்—** (மற்ற கார்யங்களில்) விருப்பமில்லாதவனாய், **ஈண்டு பதைப் பற்றிருப்பான்** — (ஶாஸ்த்ரீய க்ரியைகளைச் செய்வதனால் தவிர்க்கவொண்ணாமல் ஏற்படும் துன்பங்களினால்) துன் புறுதவனாய், **எத்தொழிலும் மூண்டு புறத்து ஏது இயலாதே நிகழும் யோகத்தான் —** (ஶாஸ்த்ரீய கர்மங்கள் தவிர்ந்த) மற்ற கர்மங்கள் அனைத்தையும் தொடங்காமலே விடுகின்ற கர்மயோக₃நிஷ்ட₂னாய், **என் பத்தி யாது இயல்வான்**—என்னிடம் அன்போடு எல்லாக் கர்மங்களையும் அனுஷ்டி₂ப்பவன், **என் உகப்பினான்**—எனக்கு இனியவன்.

---

16. ஆத்மா ஒன்றையே விரும்புகிறவனாகையாலே ஶாஸ்த்ரங்களையொட்டிய விஷயங்களில் குறிக்கொண்டிருப்பவனாய், அதற்கு முரணானவற்றில் அடியோடு பற்றற்றிருப்பவன் இவன் என்கிறான் இந்த ஶ்லோகத்தில். (அநபேக்ஷ:) ஆத்மாவைத்தவிர்ந்த எல்லாப் பொருள்களையும் விரும்பாதவன். இவன் ஆத்மாவைக் காண்பதற்காகக் கர்மயோக₃த்தை அனுஷ்டி₂ப்பவனாகையாலே, இது பொதுவாக 'அநபேக்ஷ:' (விரும்பாதவன்) என்றிருந்தபோதிலும் இப்படிப் பொருள்கொள்ளப்பட்டது. (ஶுசி:) ஆஹார ஶுத்₃தி₄யுடையவன். ஶுத்₃த₄மானவன் என்றே இதற்குப் பொருளாயினும் அந்த ஶுத்₃தி₄யை விதி₄க்கமுடியாதாகையாலே, அதை விளைப்பதாய், ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப்பட்ட த்₃ரவ்யங்களைக்கொண்டு உடம்பை வளர்க்கையாகிற ஆஹார ஶுத்₃தி₄ இங்கு பொருளாகக்கொள்ளப்பட்டது. (த₃க்ஷ:) ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட க்ரியைகளைச் செய்வதில் வல்லவன். மற்ற விஷயங்களில் வல்லமை ஆத்மாவைக் காண்பதற்கு இவனுக்கு உதவாதாகையாலே, அதற்கு உதவும் ஶாஸ்த்ரீய கர்மங்களில் வல்லமை இதற்குப் பொருளாகக்கொள்ளப்பட்டது. (உதா₃ஸீந:) மற்ற கர்மங்களில் பற்றில்லாதவனாயிருப்பவன். வல்லமையைச் சொன்னவுடன் அதற்கு நேர்மாறான ஔதா₃ஸீன்யத்தைச் சொன்னபடியால், எந்த விஷயங்களில் வல்லமை சொல்லப்பட்டதோ அதற்கு மாறான விஷயங்களிலேயே ஔதா₃ஸீன்யத்தைக் கொள்ளவேண்டியிருப்பதால் இப்படிப் பொருள்கொள்ளப்பட்டது. ஶாஸ்த்ரங்களில்

समर्थः, अन्यत्रोदासीनः, गतव्यथः—शास्त्रीयक्रियानिर्वृत्तावर्जनीयशीतोष्णपरुषस्पर्शादिदुःखेषु व्यथारहितः, सर्वारम्भपरित्यागी—शास्त्रीयव्यतिरिक्तसर्वकर्मारम्भपरित्यागी, य एवंभूतो मद्भक्तः, स मे प्रियः ॥ १६ ॥

விதி₄க்கப்படாதவையாயும் தள்ளப்படாதவையாயுமிருக்கும் க்ரியைகளில் பற்றற்றிருப்பவன் என்று கருத்து. "உதா₃ஸீந:" என்னும் சொல் பக்ஷபாதமில்லாமலிருக்கையைக் குறிக்கிறது என்று சிலர் உரையிட்டார்கள். பதினெட்டாவது ஶ்லோகத்தில் "ஸம: ஶத்ரௌ ச மித்ரே. ச" என்று பக்ஷபாதமின்மை தெளிவாகச் சொல்லப் படப்போகிறதாகையாலே இங்கு இவ்வண்ணமே பொருள்கொள்ள வேண்டும். (க₃தவ்யத₂:) ஶாஸ்த்ரீயமான கர்மங்களைச் செய்யும் போது தவிர்க்கவொண்ணுமல் ஏற்படும் குளிர்ந்தும், உஷ்ணமாயும், கொடியதாயுமிருக்கும் ஸ்பர்ஶம் முதலான துன்பங்களில் துன்பமடையாமலிருப்பவன். கர்மயோக₃ நிஷ்ட₂னுக்கு இந்த மனநிலை மிக அவஶ்யமானதென்று முதல் ஷட்கத்திலும் எடுக்கப்பட்டதன்றோ. (ஸர்வாரம்ப₄பரித்யாகீ₃) ஶாஸ்த்ரீய கர்மங்கள் தவிர்ந்த மற்ற கர்மங்கள் அனைத்தையும் தொடங்காமலே விடுபவன். 'ஸர்வாரம்ப₄' என்று பொதுவாகச் சொன்னபோதிலும், இவனுக்கு விதி₄க்கப்பட்ட கர்மயோக₃ாதி₃களைத் தொடங்குவதை இவன் விடமுடியாதாகையாலே விதி₄க்கப்படாத மற்ற கர்மங்கள் விஷயமாகவே இது கொள்ளப் பட்டது. "உதா₃ஸீந:" என்ற இடத்தில் அத்தகைய கர்மங்களில் பற்றற்றிருக்கை சொல்லப்பட்டது. இங்கு மனப்பூர்வமாக அவற்றைக் கைவிடுகை சொல்லப்படுகிறது. ஆகையால் புநருக்தியில்லை. அன்றிக்கே உதா₃ஸீநஶப்₃த₃த்தால் அத்தகைய கர்மங்களில் முயற்சியற்றிருக்கையும், இங்கு அதன் ப₂லனாக அவற்றைத் தொடங்காமலே கைவிடுகையும் சொல்லப்படுகிறதாகையால் புநருக்தியில்லை. இங்கு கர்மம் எனப்படுவது வாக்கினாலும், காயம் எனப்படும் உடம்பினாலும் விளையும் செயல். அச்செயலை தொடங்கும் நிலையில் இருக்கும் போது ஆரம்ப₄மெனப்படுகிறது. அச்செயலைக் கைக்கொள்ளுவது ஆரம்ப₄மெனப்படுகிறதாகவும் கொள்ளலாம். (யோ மத்₃ப₄க்த: ஸ மே ப்ரிய:) எவன் இப்படியிருந்துகொண்டு என்னிடம் அன்பு செலுத்துகிறானே அவன் எனக்கு இனியவன். இக்கு₃ணங்களனைத்தும் என்னிடம் அன்போடு கூடியிருக்கையாலேயே எனக்கு உகப்பைத் தருகிறது என்று கருத்து. 16.

यो न हृष्यति न द्वेष्टि न शोचति न काङ्क्षति ।
शुभाशुभपरित्यागी भक्तिमान् यस्स मे प्रियः ॥ १७ ॥

17. யோ ந ஹ்ருஷ்யதி ந த்₃வேஷ்டி ந ஶோசதி ந காங்க்ஷதி ।
ஶுப₄ாஶுப₄பரித்யாகீ₃ ப₄க்திமாந் யஸ்ஸ மே ப்ரிய: ॥

ய: ந ஹ்ருஷ்யதி—எந்தக் கர்மயோக₃நிஷ்ட₂ன் (இனிய விஷயங்களைப் பார்த்து) உகப்பதில்லையோ, **ந த்₃வேஷ்டி**—(இனியதல்லாதவற்றைப் பார்த்து) வெறுப்பதில்லையோ, **ந ஶோசதி**—(இனியவற்றை இழந்தபோது) வருந்துவதில்லையோ, **ந காங்க்ஷதி**—(இனியவற்றைப் புதிதாகப் பெற) விரும்புவதில்லையோ, **ய:**—எவன், **ஶுப₄ாஶுப₄ பரித்யாகீ₃**—புண்யபாபச் செயல்களைக் கைவிட்டவனாய், **ப₄க்திமாந்**—என்னிடம் அன்பு செலுத்துகிறானோ, **ஸ:**—அவன், **மே ப்ரிய:**—எனக்கு இனியவன்.

---

17. உகப்புவெறுப் பொன்றிலுமற் றுட்சோக மற்று
மிகப்பயிலு மாசை விடுத்துச்—சகத்தமரு(ம்)
நன்மையுடன் றீமை நசித்தியலும் பத்திமா
னென்மனத்தி லின்பத்தா னிங்கு.

ஒன்றிலும் உகப்பு வெறுப்பற்று—(இனியதான) எப்பொருளிலும் உகப்பற்று, (இனியதல்லாத) எப்பொருளிலும் வெறுப்பற்று, **உள் சோகமற்று**—(இனியவற்றை இழந்தபோது) மனவருத்தமில்லாமல், **மிகப் பயிலும் ஆசை விடுத்து**—(இனியவற்றைப் புதிதாகப் பெற) மிகவும் உண்டாகும் விருப்பத்தை விட்டு, **சகத்து அமரும் நன்மையுடன் தீமை நசித்து**—இவ்வுலகில் காணப்படும் புண்ணிய பாபச் செயல்களைக் கைவிட்டு, **இயலும் பத்திமான்**—கர்மயோக₃த்தை அனுஷ்டி₂க்கும் அன்புடையவன், **இங்கு**—இவ்வுலகத்தில், **என் மனத்தில் இன்பத்தான்**—என் மனத்துக்கு இனியவன்.

॥ भा ॥ यो न हृष्यति — यन्मनुष्याणां हर्षनिमित्तं प्रियजातं तत्प्राप्य यः कर्मयोगी न हृष्यति ; यच्चाप्रियम्, तत्प्राप्य न द्वेष्टि ; यच्च मनुष्याणां शोकनिमित्तं भार्यापुत्रवित्तक्षयादिकम्, तत्प्राप्य न

17. விதிவசத்தால் வந்தடைந்த இனிய விஷயங்களிலும், இனியதல்லாத விஷயங்களிலும் முறையே உகப்பையும் வெறுப்பையும் அடையாதவனும், ஶாஸ்த்ரங்களில் தள்ளப்படாத விஷயங்கள் கிடைக்காதபோது அவற்றை விரும்பாதவனும், இந்த உகப்பு வெறுப்பு விருப்பம் ஆகியவற்றுக்குக் காரணமான புண்ய பாபச் செயல்களைச் செய்யாதவன் இவன் என்கிறான் இந்த ஶ்லோகத்தில். (யோ ந ஹ்ருஷ்யதி) உலகத்திலுள்ள ப்ராக்ருத மனிதர்கள் எந்த இனிய விஷயத்தைப் பெற்று உகக்கிறார்களோ அந்த விஷயத்தைப் பெற்றுக் கர்மயோக₃நிஷ்ட₂னை இவன் உகப்பதில்லை என்று கருத்து. பதினைந்தாவது ஶ்லோகத்தில் "ஹர்ஷாமர்ஷ" என்று தொடங்கி, குறிப்பிட்ட புருஷனைக் குறித்து இவனுக்கு உகப்பில்லை என்று கூறப் பட்டது; இங்கு அசேதனமான ஶப்₃த₃ாதி₃ விஷயங்களைக் குறித்தும் செல்வம் முதலானவற்றைக் குறித்தும் இவனுக்கு உகப்பில்லை என்று காட்டப்படுகிறது. ஆகையாலே புநருக்தியில்லை. யச்ச₂ப்₃த₃த்தாலே கர்மயோக₃ நிஷ்ட₂னுகையாலே இவனுக்கு ஆத்மாவைத் தவிர்ந்த விஷயங்களில் உகப்பு, வெறுப்பு, வருத்தம் ஆகியவை இல்லை என்று உணர்த்தப்படுகிறது. (யः ந த்₃வேஷ்டி) உலகி லுள்ள பிராகிருத மனிதர்கள் எந்த இனியதல்லாத விஷயத்தை யடைந்து வெறுக்கிறார்களோ அந்த விஷயத்தையடைந்து கர்ம யோக₃ நிஷ்ட₂னை இவன் வெறுப்பதில்லை என்று கருத்து. 13வது ஶ்லோகத்தில் "அத்₃வேஷ்டா ஸர்வபூ₄தாநாம்" என்று சேதனர்களைக் குறித்து இவனுக்கு வெறுப்பில்லை என்று காட்டப் பட்டது. இங்கு இனியதல்லாத அசேதனப் பொருள்களைக்குறித்து வெறுப்பில்லை என்று காட்டப்படுகிறது. ஆகையாலே புநருக்தி யில்லை. (யः ந ஶோசதி) மற்ற மனிதர்கள் மனைவி மக்கள் செல்வம் முதலானவற்றை இழக்கும்போது வருந்துவதுபோலே இக்கர்ம யோக₃நிஷ்ட₂ன் அவற்றையிழந்து வருந்துவதில்லை என்று கருத்து. ஸாமான்ய ஜனங்களும் உகப்புக்கோ வெறுப்புக்கோ வருத்தத் துக்கோ காரணமில்லாதபோது அவற்றை அடைவதில்லை. காரண மிருக்கும்போதும் இவன் அவற்றையடைவதில்லை என்பது இவனுக்குச் சிறப்பு. "விகாரஹேதௌ ஸதி விக்ரியந்தே யேஷாம் ந சேதாம்ஸி த ஏவ தீ₄ரா:" [விகாரமடைவதற்குக் காரணமிருக்கும்போது எவர்

शोचति; तथाविधमप्राप्तं च न काङ्क्षति; शुभाशुभपरित्यागी—पापवत्पुण्यस्यापि बन्धहेतुत्वाविशेषादुभयपरित்यागी; य एवंभूतो भक्तिमान्, स मे प्रियः ॥ १७॥

களுடைய மனம் விகாரம் அடைவதில்லேயோ அவர்களே தீ4ரர்கள்] என்று சொல்லப்படுகிறதன்றே. கர்மயோக3 நிஷ்ட2ரான ஜனக சக்ரவர்த்தியும் "மிதி2லாயாம் ப்ரதீ3ப்தாயாம் ந மே கிஞ்சந த3ஹ்யதே" [ப4ாரத-ராஜத4ர்ம 17-19] [எரிகின்ற மிதி2லேயில் என்னுடையதொன்றும் எரியவில்லே] என்று கூறினாரன்றே. (யஃ ந காங்க்ஷதி) எப்பொருளை இழந்தால் சோகமுண்டாகுமோ அப்பொருள் கிடைக்காதபோது அதை விரும்புவதுமில்லே, இது கிடைத்தால் பிறிதொரு காலத்தில் இதையிழக்கும்போது வருந்தவேண்டிவரும் என்று அறிந்தவனாகையாலே அதை விரும்புவதில்லே என்று கருத்து. "யாவதஃ குருதே ஜந்துஃ ஸம்ப3ந்த4ாந் மநஸஃ ப்ரியாந் | தாவந்தோऽஸ்ய நிக2ந்யந்தே ஹ்ருத3யே ஶோகஶங்கவஃ ||" [விஷ்ணு புராணம் 1-17-66] [மனிதன் எந்த அளவுக்கு மனத்துக்கு இனிய ஸம்ப3ந்த4ங்களைச் செய்துகொள்ளுகிறானோ அந்த அளவுக்கு அவன் தன் நெஞ்சில் வருத்தத்துக்கு மூளை அடித்துக்கொள்ளுகிறான்] என்று பராஶரமஹர்ஷியும் கூறினாரன்றே. "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்" [திருக்குறள் 341] என்று திருவள்ளுவரும் இதை உரைத்தாரன்றே. ஆக விதி4வஶத்தால் வந்தடைந்த இனிய இன்னாத பொருள்களில் உகப்பும், வெறுப்பும், வருத்தமும், கிடைக்கப்பெறாத இனிய பொருள்களில் ஆசையும் இவனுக்கு இல்லே என்று காட்டப்பட்டது. இனி அடுத்த பத3த்தாலே இந்த விருப்பம், வெறுப்பு, வருத்தம், ஆசை ஆகியவை ஏற்படுவதற்குக் காரணமான புண்யபாபச் செயல்களை இவன் கைவிட்டிருப்பதைக் காட்டுகிறான்—(ஶுப4ாஶுப4பரித்யாகீ3) புண்யபாபச் செயல்களைக் கைவிட்டிருப்பவன். இவன் பாபச் செயலேச் செய்வதற்கு இடமேயில்லேயாகையால் இங்கு அதைக் கூறியது த்3ருஷ்டாந்தத்துக்காக. இரும்பு விலங்குபோன்ற பாபம்போலே, பொன் விலங்குபோன்ற புண்ணியமும் ஸம்ஸார ப3ந்த4த்துக்கு வாசியறக் காரணமாகிறதாகையாலே இரண்டு வகைச் செயல்களையும் கைவிட்டிருப்பவன் என்று கருத்து. பாபம்போலே புண்ணியமும் இவனுக்குக் கைவிடத்தக்கது என்னும் காரணத்தாலேயன்றே ச2ாந்தே3ாக்3யோபநிஷத்தும் "ந ஸுக்ருதம் ந து3ஷ்க்ருதம்" என்று புண்யபாபங்களிரண்டையும் தொடங்கி, "ஸர்வே பாப்மாநஃ அதோ நிவர்த்தந்தே" [ச2ாந் 8-4-1]

समश्शत्रौ च मित्रे च तथा मानावमानयोः।
शीतोष्णसुखदुःखेषु समस्सङ्गविवर्जितः॥ १८॥
तुल्यनिन्दास्तुतिर्मौनी संतुष्टो येनकेनचित्।
अनिकेतस्स्थिरमतिर्भक्तिमान्मे प्रियो नरः॥ १९॥

18. ஸமஶ்ஶத்ரௌ ச மித்ரே ச ததா₂ மாநாவமாநயோ:।
ஶீதோஷ்ணஸுக₂து₃:க்கே₂ஷு ஸமஸ்ஸங்க₃விவர்ஜித:॥
19. து₃ல்யநிந்த₃ாஸ்துதிர்மௌநீ ஸந்துஷ்டோ யேநகேநசித்।
அநிகேதஸ் ஸ்தி₂ரமதிர் ப₄க்திமாந் மே ப்ரியோ நர:॥

ஶத்ரௌ ச மித்ரே ச ஸம:—(அருகிலிருக்கும்) எதிரியிடமும் நண்பனிடமும் ஒத்த மனத்தையுடையவனாய், **ததா₂**—அவ்வண்ணமே, **மாநாவமாநயோ:** **(ஸம:)**—மதிப்பிலும் அவமதிப்பிலும் (ஒத்தமனத்தினனாய்), **ஶீதோஷ்ண ஸுக₂து₃:க்கே₂ஷு ஸம:**—குளிர், உஷ்ணம், இன்பம், துன்பம் ஆகியவற்றிலும் ஒத்தமனத்தினனாய், (இதற்குக் காரணம் யாதெனில்), **ஸங்க₃விவர்ஜித:**—எதிலும் பற்றற்றிருப்பவனாய், **துல்ய நிந்த₃ா ஸ்துதி:**—பழிப்பிலும் புகழிலும் ஒத்தமனத்தினனாயிருப்பவனாய், **மௌநீ**—(பிறர் புகழ்ந்தபோதும் இகழ்ந்தபோதும்) பதில் உரைக்காமலிருப்பவனாய், **யேநகேநசித் ஸந்துஷ்ட:**—தற்செயலாகக் கிடைத்த அற்பப்பொருள்களாலும் திருப்தியடைபவனாய், **அநிகேத:**—வீடு முதலானவற்றில் பற்றற்றவனாய், **ஸ்தி₂ரமதி:**—ஆத்மாவில் உறுதிப்பாட்டையுடையவனாய், **ப₄க்திமாந் நர:**—என்னிடம் அன்பு செலுத்தும் மனிதன், **மே ப்ரிய:**—எனக்கு இனியவன்.

{எல்லாப் பாபங்களும் இவனிடமிருந்து நீங்குகின்றன] என்று முடிப்பதன் மூலம் இவனுக்கு இஷ்டமான மோக்ஷத்துக்குத் தடையாகையாலே புண்யபாபங்கள் இரண்டையும் பாபமென்றே நிர்த்தேஶித்தது. (ய: ப₄க்திமாந் ஸ மே ப்ரிய:) இவ்வண்ணமிருந்துகொண்டு என்னிடம் அன்பு செலுத்துகிறவன் எவனோ அவன் எனக்கு இனியவன். 17.

॥ भा ॥ अद्वेष्टा सर्वभूतानाम् (१३) इत्यादिना शत्रु मित्रादिषु द्वेषादिरहितत्वमुक्तम् ; अत्र तेषु सन्निहितेष्वपि समचित्तत्वं

18. ஒன்னலர்க ளுற்றார் விருப்பிகழ்வோ டுற்றகுளிர்
பன்னழ லின்பதுன் பம்பழி—மன்னுபுகழ்க்
கொத்தமைந்து மௌனியா யூர்மனையற் றுற்றுணர்ந்த
பத்தனவ னென்னுகப்பின் பற்று.

ஒன்னலர்கள் உற்றார்—எதிரிகள் நண்பர்கள், **விருப்பு இகழ்வோடு**—மதித்தல், அவமதித்தல், **உற்ற குளிர் பன்னு அழல்**—கடுங்குளிர், கடுஞ்சூடு, **இன்ப துன்பம்**—இன்பம் துன்பம், **பழி மன்னு புகழ்க்கு**—பழித்தல் நன்கு புகழ்தல் ஆகிய இரட்டைகளுக்கு, **ஒத்து**—ஒத்த மனத்தினனாய், **அமைந்து**—பற்றற்றவனாய், **மௌனியாய்**—(புகழ்ந்தபோதும் இகழ்ந்தபோதும்) பதில் உரைக்காமலிருப்பவனாய், **ஊர் மனையற்று**—(தனக்கென)ஒரு ஊரோ வீடோ இல்லாதவனாய், **உற்று உணர்ந்த**—ஆத்மாவை உறுதியாக உணர்ந்த, **பத்தன் அவன்** — அந்தக் கர்மயோக₃ நிஷ்ட₂னான என் ப₄க்தன், **என் உகப்பின் பற்று**—எனது உகப்புக்கு விஷயமாவான்.

18, 19. இவ்விரு ஶ்லோகங்களிலும், நண்பர் எதிரிகள், மதிப்பு அவமதிப்பு, குளிர் உஷ்ணம், இன்பம் துன்பம், புகழ் பழி ஆகிய பலவகைப்பட்ட இரட்டைகளில் ஒத்த மனத்தினனாயிருக்கையும், அவற்றுக்குக் காரணமும் விளக்கப்படுகிறது. (ஸம: ஶத்ரௌ ச மித்ரே ச) அருகிலிருக்கும் நண்பர்கள் எதிரிகள் விஷயத்திலும் விருப்போ வெறுப்போ காட்டாமல் ஒத்த மனத்தினனாயிருப்பவன். "அத்₃வேஷ்டா ஸர்வபூ₄தாநாம்" [13] என்று தொடங்கி, பொதுவாக எதிரிகளிடம் வெறுப்பும் நண்பரிடம் விருப்புமில்லாதவன் என்று சொல்லப்பட்டது. இங்கு அருகிலிருக்கும் நண்பர் எதிரிகள் விஷயத்திலும் விருப்பு வெறுப்பில்லாமையாகிற சிறப்பு சொல்லப்படுகிறது. கண்காணாமலிருக்கும் இவர்கள் விஷயத்தில் பலருக்கு விருப்பு வெறுப்பு இல்லாமல் இருக்கக்கூடும். அருகிலிருக்கும் இவர்கள் விஷயத்தில் விருப்பு வெறுப்பு இல்லாமலிருப்பது அரிதன்றோ. அச்சிறப்பும் இவனிடம் உண்டு என்று கூறப்படுகிறது. ஆகையாலே 13-வது ஶ்லோகத்தோடு புநருக்தியில்லை.

"ஸம: ஶத்ரௌ ச மித்ரே ச" என்று இங்கு ஶத்ருமித்ரர்கள் பொதுவாக எடுக்கப்பட்டிருக்கும்போது அருகிலிருக்கும் ஶத்ருமித்ரர்களே குறிப்பிடப்படுவதாகக் கூறுவதெப்படி? எனில்: மதிப்பு அவமதிப்பு, குளிர் உஷ்ணம், இன்பம் துன்பம், புகழ் பழி ஆகிய நெருங்கியிருக்கும் இரட்டைகளோடு சேர்த்துப்படிக்கப்படுகையால் ஶத்ருமித்ர ஶப்₃த₃மும் நெருங்கியிருப்பவர்களையே குறிப்பது உசிதம். (தத₂ா மாநாவமாநயோ: ஸம:) அவ்வண்ணமே பிறர் தம்மை மதிப்பதிலும் அவமதிப்பதிலும் ஒத்த மனத்தினனுயிருப்பவன். (ஶீதோஷ்ண ஸுக₂து₃:க்கே₂ஷு ஸம:) குளிர் உஷ்ணம், இன்பம் துன்பம் ஆகியவற்றிலும் ஒத்த மனத்தினனுயிருப்பவன். இவையனைத்துக்கும் காரணத்தைச் சொல்லுகிறது மேல்பதம்—(ஸங்க₃விவர்ஜித:) ஆத்மாவைத் தவிர்ந்த மற்ற எப்பொருளிலும் பற்றற்றவன். ஶப்₃த₃₂ாதி₃ விஷயங்களில் பற்று இருந்தால் அவற்றையிட்டு ஶத்ரு மித்ரர்களிடமும், மானுவமானங்களிலும், ஶீதோஷ்ண ஸுக₂து₃:க்க₂ங்களிலும் அவன் ஒத்த மனத்தினனுயிராமற்போக இடமுண்டு. பற்றில்லாமையால் அதற்கு இடமில்லை என்று கருத்து. (துல்யநிந்த₃ாஸ்துதி:) பழிப்பிலும் புகழிலும் ஒத்த மனத்தினனுயிருப்பவன். ஒருவன் தன்னை நிந்திப்பதனுல் கோபமோ துதிப்பதனுல் ஆதரமோ இல்லாமையால் நிந்த₃ாஸ்துதிகளுக்குப் ப₂லமில்லாமலிருப்பதையிட்டு அவற்றில் ஒத்த மனத்தினனுயிருப்பவன் என்று கருத்து. இதனுல் விளைவதைச் சொல்லுகிறது அடுத்த பதம்—(மௌநீ) பிறர் புகழ்ந்தபோதும் இகழ்ந்தபோதும் பதிலுரைக்காமலிருப்பவன். லௌகிகர்கள் தன்னை நிந்திப்பவனை நிந்திக்கிறுர்கள். துதிப்பவனைத் துதிக்கிறுர்கள். நிந்தாஸ்துதிகளில் ஒத்த மனத்தினனுயிருப்பதால் இவன் அப்படிச் செய்வதில்லை என்று கருத்து. 'மௌநீ' என்னும் பத₃த்தால் ஆத்ம விஷயமான மனனத்தைக் கொள்ளலாமேயெனில்; மேலே 'ஸ்தி₂ரமதி:' என்னும் பத₃த்திறைலேயே அது ஸித்₃தி₄க்கப் போகிறதாகையால் இங்கு அதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. மேலும் "முநி: மநநஶீல:, தஸ்ய ப₄ாவ: மௌநம்" என்று மனனம் செய்யும் முனியின் தன்மையாக மௌனத்தைக்கொள்வது அப்ரஸித்₃த₄மான பொருள். எந்த வார்த்தையும் சொல்லாமலிருப்பதே இங்கு மௌனம் என்று குறிக்கப்படுகிறது என்று சொல்லலாமென்று பார்த்தால், அப்படிக் கொள்வதில் இங்கு அடியோடு பயனில்லை. ஸங்கீர்த்தனம் முதலானவற்றை இவனுக்கு விதி₄த்துமிருக்கிறது. சில தேச காலங்களில் அனுஷ்டி₂க்கப்படும் மௌன வ்ரதத்தைச் சொல்லுவதாகக் கொண்டால்

ततोऽप्यतिरिक्तो विशेष उच्यते। आत्मनि स्थिरमतित्वेन निकेतनादिष्वसक्त इत्यनिकेतः; तत एव मानावमानादिष्वपि समः; य एवंभूतो भक्तिमान्, स मे प्रियः॥ १८॥ १९॥

அதற்குப் பயனிருத்த போதிலும் முன்பின் பத₃ங்களோடு சேர்த்தியில்லை. ஆகையால் முன்பின் பத₃ங்களையொட்டி முன் கூறியபடியே பொருள்கொள்ள வேண்டும். இவன் மௌனியாயிருப்பதற்கு மற்றொரு காரணத்தைக் காட்டுகிறது அடுத்தபத₃ப—(ஸந்துஷ்டோ யேந கேநசித்) தற்செயலாகக் கிடைக்கும் அற்பப்பொருள்களாலும் திருப்தியடைபவன். இப்படித் திருப்தியடையாதவனன்றோ ஒரு பொருளை விரும்பி ஒருவனைத்துதித்து யாசிக்க முற்படுவான். கொடுக்காதவனை வெறுத்து நிந்திக்கவும் முற்படுவான். இப்படி இது முன் பத₃த்துக்குக் காரணத்தைக் காட்டுகிறதாகையால் "ஸந்துஷ்டஸ் ஸததம் யோகீ₃" என்று பதினாலாவது ஶ்லோகத்திற் சொன்னதோடு புநருக்தியில்லை. (அநிகேத:) இப்படி அற்பப் பொருளைக்கொண்டு திருப்தியுடையவனாயிருப்பதாலும், அடுத்த பத₃த்தில் சொல்லுகிறபடி ஆத்மாவில் நெஞ்சத்தை நிலையாக வைத்தவனாகையாலும் வீடு நிலம் முதலானவற்றில் பற்றற்றவனாயிருப்பவன். இப்பெருமைகள் அனைத்துக்கும் காரணத்தைச் சொல்லுகிறது அடுத்தபத₃ம்—(ஸ்தி₂ரமதி:) ஆத்மாவில் உறுதிப்பாட்டையுடையவன். இதனாலேயே இவன் வீடு முதலானவற்றில் பற்றற்றவனாகவும், அல்ப ஸந்துஷ்டனாகவும், மௌனியாகவும், நண்பர் எதிரிகள், மானம் அவமானம், குளிர் உஷ்ணம், இன்பம் துன்பம், புகழ் பழிப்பு ஆகியவற்றில் ஒத்த மனத்தினனாகவுமிருக்கிறான் என்று கருத்து. இவ்விரண்டு ஶ்லோகங்களையும் ஸந்யாஸி விஷயங்களென்று யாத₃வ ப்ரகாஶர் உரையிட்டதற்குப் பொருத்தமெதுவுமில்லை. இங்கு சொல்லப்பட்டிருக்கும் இரட்டைகளில் ஒத்த மனத்தினனாயிருக்கை மோக்ஷத்தை விரும்பும் க்₃ருஹஸ்த₂னுக்கும் வேண்டியவையேயன்றோ. 'அநிகேத:' என்று வீடற்ற ஸந்யாஸியையே கூறுகிறது என்று கூறுவதும் சரியல்ல. "ந சாபி ரம்யாவஸத₂ப்ரியஸ்ய" [ஆபஸ்தம்ப₃ த₄ர்ம] [அழகிய வீட்டில் பற்றுடையவனுக்கு (மோக்ஷமில்லை)] என்கிற ரீதியில் வீட்டில் பற்றில்லாதவனையும் அப்பத₃ம் குறிக்கலாம். இங்கு வீடில்லாமையைச் சொல்வதில் பயனொன்றுமில்லை. க்₃ருஹஸ்த₂ர்களுக்கு வீடு முதலியவை கர்மஜ்ஞான யோக₃ங்களுக்கு உதவியும் புரிகின்றன. ஆகையால் இங்கு அநிகேத ஶப்₃த₃த்தால் வீடு முதலானவற்றில் பற்றில்லாமையையே பொருளாகக்கொள்வது

॥ भा ॥ अस्मादात्मनिष्ठाद्भक्तियोगनिष्ठस्य श्रैष्ठ्यं प्रतिपादयन् यथोपक्रममुपसंहरति—

ये तु धर्म्यामृतमिदं यथोक्तं पर्युपासते।
श्रद्दधाना मत्परमा भक्तास्तेऽतीव मे प्रियाः॥ २० ॥

॥ इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु भक्तियोगो नाम द्वादशोऽध्यायः ॥ १२ ॥

**20. யே து த₄ர்ம்யாம்ருதமித₃ம் யதோ₂க்தம் பர்யுபாஸதே।
ஶ்ரத்₃த₃தா₄நா மத்பரமா ப₄க்தாஸ்தேऽதீவ மே ப்ரியா:॥**

இதி ஶ்ரீமத்₃ப₄க₃வத்₃கீ₃தாஸு உபநிஷத்ஸு
ப₄க்தியோகோ₃ நாம த்₃வாத₃ஶோऽத்₄யாய:॥

யே து—எவர்கள், **த₄ர்ம்யாம்ருதம் இத₃ம்**—ப்ராபகமாகவும் ப்ராப்யமாகவும் இருக்கும் இந்த ப₄க்தியோக₃த்தை, **யதோ₂க்தம்**—இந்த அத்₄யாயத்தின் இரண்டாவது ஶ்லோகத்தில் சொன்னபடி, **பர்யுபாஸதே**—நன்கு அனுஷ்டி₂க்கிறார்களோ, **ஶ்ரத்₃த₃தா₄நா:**—ஶ்ரத்₃தை₄யையுடையவர்களாய், **மத்பரமா:**—எப்போதும் என்னோடு சேர்த்தியை விரும்புகிறவர்களான, **தே ப₄க்தா:** — அந்த ப₄க்தர்கள், **மே**—எனக்கு, **அதீவ ப்ரியா:**—மிகவும் இனியவர்கள்.

**19. ஏவரித் தன்மியமா மின்னமுத யோகத்தை
மேவி யுரைத்தவகை மேவுவா—ராவலுட
னெற்பரம ராகு மெழிற்பத்தர் யானுகப்ப
நிற்பரவர் மேலாய் நிகழ்ந்து.**

பொருந்தும். இக்காரணத்தாலேயே பதின்மூன்றும் ஶ்லோகம் தொடங்கி இதுவரையுள்ள எல்லா ஶ்லோகங்களுமே அக்ஷரோபாஸகனை ஸந்யாஸியைப்பற்றியவை என்று ஶங்கரர் பா₄ஷ்யமிட்டதும் தள்ளப்படுகிறது. (ப₄க்திமாந் மே ப்ரியோ நர:) இவ்வண்ணமாக இருந்துகொண்டு கர்மயோக₃த்தினாலே என்னிடம் எவன் ப₄க்திசெலுத்துகிறானோ அவன் எனக்கு இனியவன். முன் ஶ்லோகங்களிற்போலே யத்தச்ச₂ப்₃த₃ங்களை அத்₄யாஹாரம் செய்துகொண்டு (வருவித்துக்கொண்டு) உத்₃தே₃ஶ்ய விதே₄யங்களை இவ்வண்ணமே கொள்ளவேண்டும். 18, 19.

ஏவர் — எவர்கள் **இத்தன்மியமாம் இன்னமுத யோகத்தை மேவி**—ப்ராபகமாகவும் ப்ராப்யமாகவும் இருக்கும் இந்த ப₄க்தியோக₃த்தைக் கைக்கொண்டு, **உரைத்த வகை மேவுவார்**—இந்த அத்₄யாயத்தின் இரண்டாவது ஶ்லோகத்தில் சொன்னபடி நன்கு அனுஷ்டி₂க்கிறார்களோ, **ஆவலுடன்**—ஆர்வத்துடன், **எற்பரமர் ஆகும்**—எப்போதும் என்னோடு சேர்த்தியை விரும்புகிறவர்களான, **எழில் பத்தரவர்**—சிறந்த ப₄க்தர்களான அவர்கள், **மேலாய் நிகழ்ந்து யானுகப்ப நிற்பர்**—மிகச் சிறப்புடன் நான் உகக்கும் படியாயிருப்பார்கள்.

---

20. இதுவரை ஏழு ஶ்லோகங்களாலே ஆத்ம நிஷ்ட₂ர்களின் தன்மைகள் கூறப்பட்டன. தொடக்கத்தில் கூறியதுபோலே இந்த ஆத்ம நிஷ்ட₂னைக்காட்டிலும் ப₄க்தியோக₃நிஷ்ட₂னின் சிறப்பைக் கூறிக்கொண்டு, இவ்வத்₄யாயத்தின் இரண்டாவது ஶ்லோகத்தில் சொன்னதுபோலவே இந்த ஶ்லோகத்திலும் கூறி அத்₄யாயத்தை நிறைவுபடுத்துகிறான். இடையில் ப்ராஸங்கி₃கமாகவே ப₄க்தி யோக₃த்தில் ஶக்தியில்லாதவனுக்கு ஆத்ம நிஷ்டை₂யானது ப₄க்தி யோக₃த்தை ஸாதி₄த்துக் கொடுக்கும் என்று கூறி, ஆத்ம நிஷ்ட₂னுக்கு வேண்டிய கு₃ணங்களையும் விளக்கினான் என்பது குறிக்கொள்ளத்தக்கது. இரண்டாவது ஶ்லோகத்தில் "நித்யயுக்தா:" என்று சொன்னதையே இங்கு "மத்பரமா:" என்று கூறுகிறான்; "ஶ்ரத்₃த₄யா பரயோபேதா:" என்று அங்கு கூறியதையே இங்கு "ஶ்ரத்₃த₃தா₄நா:" என்று கூறுகிறான், அங்கு "தே மே யுக்ததமா:" என்றதையே "ப₄க்தாஸ்தே அதீவ மே ப்ரியா:" என்று இங்கு விளக்குகிறான். ஆக, தொடக்கத்தில் சொன்னதையே இங்கு நிறைவுபடுத்துகிறான் என்று விளங்குகிறது. (யே து) எவர்களோவெனில். துஶப்₃த₃ம் முன்பு ஏழு ஶ்லோகங்களால் கூறப்பட்ட ஆத்ம நிஷ்ட₂னைக்காட்டிலும் வேறுபட்டவன் இவன் என்று காட்டுகிறது. மேலே இவனுக்கு இந்த ஶ்லோகத்தில் சொல்லியிருக்கும் பெருமைகளும் முன் சொல்லப்பட்ட ஆத்ம நிஷ்ட₂னைக் காட்டிலும் சிறந்த ப₄க்தி யோக₃ நிஷ்ட₂னே இவன் என்று தெளிவுபடுத்துகின்றன. நடு ஷட்கத்தில் கடைசி ஶ்லோகமாயிருக்கும் இது நடு ஷட்கத்தில் முக்கியமாகக் கூறப்படும் ப₄க்தியோக₃த்தின் உபஸம்ஹாரமுமாகிறது. (த₄ர்ம்யாம்ருதம் இத₃ம்) "த₄ர்ம்யம் ச அம்ருதம் ச த₄ர்ம்யாம்ருதம்" என்னும் கர்மத₄ாரயஸமாஸத்தாலே "ப்ராபகமாகவும் ப்ராப்யமாகவும்

॥ भा ॥ धर्म्यं चामृतं चेति धर्म्यामृतम्, ये तु प्राप्यसमं प्रापकं भक्तियोगम्, यथोक्तम्—* मय्यावेश्य मनो ये माम् (२) इत्यादिनोक्तेन प्रकारेण, उपासते; ते भक्ताः अतितरां मम प्रियाः ॥२०॥

॥ इति श्रीभगवद्रामानुजविरचिते श्रीमद्गीताभाष्ये द्वादशोऽध्यायः ॥१२॥

இருக்கும் இந்த ப₄க்தியோக₃ம்'' என்று பொருள்படுகிறது. ''த₄ர்மாத் அநபேதம் த₄ர்ம்யம்'' என்று த₄ர்மத்தை மீறாதது 'த₄ர்ம்யம்' எனப்படுகிறதாகையாலே இப்பத₃ம் ஸாத₄னத்தைக் குறிக்கிறது. ஆகையால் 'அம்ருதம்' என்னும் மற்ற பத₃ம் மோக்ஷ ஸாத₄னத்தைக் குறிக்காமல் அமுதம்போல் இனிய ப்ராப்யத்தைக் குறிக்கிறது. (யதோ₂க்தம் பர்யுபாஸதே) ''மய்யாவேஶ்ய மநோ யே மாம்'' என்று இரண்டாவது ஶ்லோகத்தில் சொன்ன ரீதியில் முற் கூறிய ப₄க்தியோக₃த்தை நன்கு அனுஷ்டி₂க்கிறார்களோ என்றபடி. இடையில் ஆத்ம நிஷ்டை₂ முதலானவை ப்ராஸங்கி₃கமாக வந்த வையேயாகையாலே 'யதோ₂க்தம்' என்று ப்ரத₄ானமாகச் சொல்லப் பட்ட ப₄க்தியோக₃த்தை எடுப்பதே உசிதம். (ஶ்ரத்₃த₃தா₄நா:) 'ஶ்ரத்₃த₄யா பரயோபேதா:'' என்று இரண்டாவது ஶ்லோகத்தில் சொன்னபடியே மேலான ஶ்ரத்₃தை₄யோடு கூடியவர்கள். (மத்பரமா:) ''நித்யயுக்தா:'' என்று இரண்டாவது ஶ்லோகத்தில் சொன்னபடி என்னோடு எப்போதும் சேர்ந்திருக்க விரும்புகிறவர்கள் என்று கருத்து. ஐஶ்வர்ய கைவல்ய நிஷ்ட₂ர்களைப்போலே எம்பெருமானை இவர்கள் ஸாத₄னமாக மாத்திரம் கொள்ளாமல் மோக்ஷத்தில் என்றும் அடையத்தக்க ப்ராப்யமாகவும் கொள்கிறார்களன்றோ. (தே ப₄க்தா:) முற்கூறிய ஆத்மநிஷ்ட₂ர்களுக்கும் ஐஶ்வர்யாதி₃நிஷ்ட₂ர்களுக்கும் ப₄க்தியிருந்தபோதிலும் இவர்களே முக்கியமான ப₄க்தர்கள். (மே அதீவ ப்ரியா:) எனக்கு மிகவும் இனியவர்கள். தங்களது ப்ராப் யத்துக்கு என்னை ஸாத₄னமாகக்கொண்டு ப₄க்தி செலுத்துகையாலே அவர்கள் எனக்கு இனியவர்கள். என்னை ப்ராப்யமாகவும் கொள்ளு கையாலே இவர்கள் எனக்கு மிக இனியவர்கள். ''உதா₃ராஸ்ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்'' [கீ₃தை 7-18] என்கிற படியே தங்கள் விருப்பத்தைப்பெற என்னை அடையும் உதா₃ரர்களா கையாலே அவர்கள் எனக்கு இனியவர்கள். என்னையல்லாது வேறொன்றை அறியாதவர்களாய் எனக்கே தா₄ரகர்களான ஆத் மாக்களாயிருக்கையாலே இவர்கள் எனக்கு மிக இனியவர்கள். ''ஸ மஹாத்மா ஸுது₃ர்லப₄:'' [கீ₃தை 7-19] என்று எனக்கும்

பகவத் கீதை வெண்பா

(பன்னிரண்டாமத்தியாயத்தின் ஸாரத்தைக் கூறும் பாட்டு)

வாய்ந்தவான் கீதை வளர்பன் னிரண்டாமோத்
தேய்ந்தநெறி பத்தி யியல்காட்டும் - வாய்ந்ததனிற்
சக்தியில்லார் தாமுயலச் சாருநற் பத்திவருஞ்
சித்த முயற்றியதுஞ் சேர்ந்து

வாதி₃கேஸரி அழகியமணவாள ஜீயரின் ப₄க₃வத்₃கீ₃தை வெண்பாவில் பன்னிரண்டாமத்தியாயம் முற்றிற்று.

வாய்ந்த வான் கீதை—பொருத்தமான சிறந்த கீ₃தையில், **வளர் பன்னிரண்டாமோத்து**—நிறைவடைந்த பன்னிரண்டாமத்தியாயம், **ஏய்ந்த நெறி**—பொருந்திய உபாயமான, **பத்தி**—ப₄க்தியின், **இயல்**—தன்மையையும், **அதனில் வாய்ந்து சக்தியில்லார்தாம்**—அந்த ப₄க்தியோக₃த்தை அனுஷ்டி₂ப்பதற்கு ஶக்தியில்லாதவர்கள், **முயலச் சாரும்**—முயன்று அனுஷ்டி₂ப்பதாய், **நல் பத்தி வரும்**—நல்ல ப₄க்தியை விளைப்பதான, **சித்த முயற்றி அதும்**—மனப்பழக்கங்களையும், **சேர்ந்து காட்டும்**—ஒருங்காகக் காட்டும்.

கிடைத்தற்கரியவர்களன்றோ இவர்கள் என்று கருத்து. இவ்வண்ணமாக 'து' ஶப்₃த₃த்தாலும் விஶேஷணங்களாலும் முன் ஏழு ஶ்லோகங்களால் கூறப்பட்டவர்களைக் காட்டிலும் இவர்கள் வேறுபட்டவர்கள் என்று விளங்குகையாலே 'முன் ஏழு ஶ்லோகங்களின் உபஸம்ஹாரமே இந்த ஶ்லோகம்' என்று சங்கரர் உரையிட்டது பொருந்தாது என்று விளங்குகிறது. 20.

ஆக இவ்வத்₄யாயத்தில் ஆத்மநிஷ்டை₂யைக் காட்டிலும் ப₄க்தியோக₃த்தின் சிறப்பும், ப₄க்தியோக₃த்தில் ஶக்தியில்லாதவன் கைக்கொள்ளவேண்டியவைகளும், அவற்றிலும் ஶக்தியில்லாதவன் கர்மயோக₃த்தால் ஆத்மத₃ர்ஶனத்துக்கு முயலவேண்டுமென்பதும், கர்மயோக₃த்தை அனுஷ்டி₂ப்பவன் கைக்கொள்ளவேண்டிய கு₃ணங்களும், ஆத்மநிஷ்ட₂னைக் காட்டிலும் ப₄க்திநிஷ்ட₂னிடமே எம்பெருமானுக்கு அன்பு மிகுதியென்பதும் சொல்லப்பட்டன. ஆக இவ்வண்ணமாக இந்த மத்₄யமஷ்ட்கத்தில் எம்பெருமானாகிற பரம்பொருளின் உண்மையான அனுப₄வம் உண்டாவதன் பொருட்டு ஜ்ஞானத்தோடு கூடிய கர்மயோக₃த்தால் உண்டாகும் ப₄க்தியோக₃ம் சொல்லப்பட்டதாயிற்று.

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி த₃ாஸன் இயற்றிய
கீ₃தார்த்த₂ விவரணத்தில் பனிரண்டாம் அத்தியாயம் நிறைவுபெற்றது.

மத்யம ஷட்கத்தின் ஸாரப்பொருள்

பத்திவகை யாங்கறிந்து சேரப் பரன்பெருமை
யெத்தியலு மாய்நித் ததுவடிவி—லொத்தியலக்
காட்டியது பத்திநலங் கண்ணன் றருகீதை
மாட்டிடையா றோத்தின் வகை.

கண்ணன்தரு கீதை மாட்டு—கண்ணன் அருளிச்செய்த கீ₃தையில், **இடை ஆறு ஒத்தின் வகை**—நடுவிலுள்ள ஆறத்தியாயங்கள். **எத்தியலுமாய்**—கர்மயோக₃ம் முழுவதையும் அனுஷ்டி₂த்து, **நித்தது வடிவிலொத்தியல**—நித்யமான ஆத்மஸ்வரூபத்தை நேரே காண்பதுபோன்ற காட்சியைக் கண்டு, **பத்திவகை ஆங்கு அறிந்து**-ப₄க்தியோக₃த்தின் தன்மைகளை அதன்பின் அறிந்து, **பரன் பெருமை சேர**—பரம்பொருளின் அனுப₄வத்தைப் பெறுவதற்காக, **பத்திநலம்**—ப₄க்தியோக₃த்தின் பெருமைகளை, **காட்டியது**—விளக்கிற்று.

கீதார்த்த சங்கிரகம்

(ஸ்ரீ வேத₃ாந்த தே₃சிகர் அருளியது)

பன்னிரண்டாமத்தியாயத்தின் ஸாரப்பொருள்

13. தன்கழ லிற்பத்தி தாழா ததுமதன் காரணமா
மின்குண சிந்தையு மீதறி யார்க்கவ் வடிமைகளும்
தன்கரு மங்க ளறியா தவர்க்கி லகுநிலையும்
தன்கழ லன்பர்க்கு நல்லவன் சாற்றினன் பார்த்தனுக்கே

உரை:—**தன் கழல் அன்பர்க்கு** - தன் திருவடிகளில் ப₄க்தியை அநுஷ்டி₂ப்பவருக்கு, **நல்லவன்** - அருளுடைய கண்ணன், **பார்த்தனுக்கு** - அர்ஜுநனுக்கு, **தன் கழலில் பத்தி** - (இறைவனை) தன் திருவடிகளிற் செய்யும் ப₄க்தியோக₃ம், **தாழாததும்** - (கைவல்ய நிஷ்டை₂யைப்போல பலன் கொடுக்கத்) தாமதியாமையும், **அதன் காரணமாம்** - அந்த ப₄க்தியோக₃த்திற்குக் காரணமாகின்ற, **இன் குண சிந்தையும்** - (எம்பெருமானுடைய இனிய கு₃ணாநுஸந்த₄ானமும் (அதாவது—இனிய குணங்களை நினைத்துப் பழகுதலும்), **ஈது அறியார்க்கு** - (இதைச் செய்ய) இயலாதவர்க்கு, **அவ்வடிமைகளும்**- அந்த ப₄க₃வத் கைங்கர்யங்களும், **தன் கருமங்கள்**-தனக்கு விதி₄த்த ப₄க₃வத் கைங்கர்யங்களை.

அறியாதவர்க்கு-(செய்ய) இயலாதவர்க்கு, **இலகு நிலையும்** - ஸுலப₄மான (ஆத்மத்₄யாநமாகிய) உபாயமும் (ஆகிய இவற்றை) **சாற்றினன்** - உபதேசித்தான்.

கீ₃தாஶ்லோகார்த்த₂ச் சுருக்கம்

பன்னிரண்டாமத்தியாயம்

ஶ்லோ	அர்த்த₂ம
1.	"ப₄க₃வது₃பாஸகர்கள், ஆத்மோபாஸகர்கள் என்னுமிருவரில் எவர் தம் பயனை விரைவில் அடைவார்கள்?" என்னும் அர்ஜுனனின் கேள்வி.
2.	"என்னையே ப்ராப்யமாக நினைத்து உபாஸிப்பவர்கள் ஆத்மோபாஸகர்களைக் காட்டிலும் சிறந்தவர்கள்" என்னும் கண்ணனின் பதில்.
3-5.	முற்கூறிய ஜ்ஞானியைக் காட்டிலும் கைவல்ய நிஷ்ட₂னின் தாழ்வைக் கண்ணன் விளக்குதல்.
6.7.	தன்னை உபாஸிப்பவர்கள் சிறந்தவர்கள் என்று முன்கூறியதைக் கண்ணன் மிகத் தெளிவாகக் கூறுதல்.
8.	"நீ என்னிடம் ப₄க்தி செய்வாய்" என்று அர்ஜுனனைக் குறித்து விதி₄த்தல்.
9.	"என்னிடம் உறுதியாக நெஞ்சைச் செலுத்த இயலவில்லையாகில் என் கல்யாண கு₃ணங்களை அனுஸந்தி₄ப்பதாகிற அப்₄யாஸ யோக₃த்தின் மூலம் ப₄க்தியையடையலாம்" என்று கூறல்.
10.	"அப்₄யாஸ யோக₃த்தில் ஶக்தியில்லையாகில் என் விஷயமான கர்மங்களைச் செய்வதில் ஈடுபடுவதால் விரைவில் அப்₄யாஸ யோக₃த்தைப்பெற்று ப₄க்தியைச் செலுத்தி என்னை அடையலாம்" என்று கூறல்.
11.	"ப₄க்தியோக₃த்தில் ஶக்தியில்லாதவன் அதை ஸாதி₄த்துத் தரும் உபாய பரம்பரையில் எல்லை நிலமான கர்மயோக₃த்தை அனுஷ்டி₂க்கவேண்டும்" என்று கூறல்.
12.	ஒன்பது, பத்து, பதினொன்று ஶ்லோகங்களை விளக்குதல்.
13-19.	ப₂லனில் விருப்பமற்றுச் செய்யப்படும் கர்மயோக₃த்தில் ஊன்றிநிற்பவன் கைக்கொள்ளவேண்டிய கு₃ணங்களை விவரித்தல்.
20.	ப₄க்திநிஷ்ட₂ன் தனக்கு மிக இனியவன் எனக்கூறல்.

பன்னிரண்டாமத்தியாயத்தின் கீ₃தாஶ்லோகார்த்த₂ச் சுருக்கம் நிறைவுற்றது.

ஶ்ரீ:

ஶ்ரீமத்3 ப4க3வத்3 கீ3தா

மத்4யமஷட்க பாத3ாநுக்ரமணிகை

[இதில் ஏழு முதல் பன்னிரண்டு அத்தியாயங்களில் உள்ள ஶ்லோகங்களின் பாத3ங்களின் அட்டவணை அத்4யாய ஶ்லோக எண்களுடன் தரப்பட்டுள்ளது. அந்த ஶ்லோகங்களின் முதல் பாத3ப்பகுதிகள் பருத்த எழுத்துக்களில் அவை தொடங்கும் பக்கங்களுடன் அச்சிடப்பட்டுள்ளன.]

ந

ய

ர

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வாராசார்யர்களின் அருளிச்செயல்களுக்கு
எளிய தமிழ் விரிவுரைகளுடன் வெளிவரும்
சிறந்த மாதப்பத்திரிகை

"ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்"

ஆழ்வார்களுடைய திவ்யப் பிரபந்தங்களுக்குப் பெரியவாச்சான்பிள்ளை முதலான ஆசார்யர்கள் அருளிச்செய்த மணிப்ரவாள நடை வியாக்கியானங்களை எளிய தமிழ்நடை விவரணங்களோடு வெளியிடுவதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்பத்திரிகை கடந்த முப்பத்தெட்டு வருடங்களாக நடைபெற்று வருகின்றது. தற்போது நாச்சியார் திருமொழி வியாக்கியானம் விவரணத்தோடு தொடர்ந்து அச்சிடப்படுகின்றது. இது தவிர, விரிவான கீதா வ்யாக்யானமும், ஆசார்யர்களின் சரித்திரத்தை விரிவாக விளக்கும் ஆசார்ய வைபவமஞ்ஜரியும், ஸ்ரீபாஷ்யஸாரமான (தமிழ் விவரணத்தோடு கூடிய) சாரீரக காரிகாவளியும், அன்பர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் ஸுதர்சனர் பதிலும், மற்றும் பல கட்டுரைகளும், கிரந்தங்களும் புத்தகமாக்கிக் கொள்ளலாம்படி தனித்தனி பாரங்களாகத் தொடர்ந்து வருகின்றன. விவரணத்தோடு கூடிய வார்த்தாமாலையும் ஸுதர்சனத்தில் வெளிவந்ததேயாகும். விளம்பரமேயில்லாமல் நல்ல காகிதத்தில் ஒவ்வொரு மாதமும் சுமார் அறுபது பக்கங்கள் தரமான விஷயங்களைக்கொண்டு வெளிவருவது இப்பத்திரிகையின் தனிச் சிறப்பாகும்.

ஆசிரியர்:—

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (ஸுதர்சனர்),
அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.

வருடச் சந்தா ரூ. 18 ✿ ஆயுள் சந்தா ரூ. 125.

தனிப்பிரதி ரூ. 1-50.

ஸர்வஜித் மார்கழி 28-உ (12—1—1948) முதல்
தொடர்ந்து நடைபெறுகிறது.